சீன இலக்கியம்

சோ. ந. கந்தசாமி



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

பஏ 7213

உலகச் செம்மொழிகள் இலக்கியம்

இரண்டாம் தொகுதி

சீனஇலக்கியம்

முற்காலம் முதல் பொற்காலம் வரை

முனைவர் சோ.ந. கந்தசாமி

இயக்குநர் (பொ.)

உலகச் செம்மொழிகள் உயராய்வு மையம்

தமிழ்ப்பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 010.

ISBN : 978-81-7090-436-6

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 393
திருவள்ளுவராண்டு 2044, ஆனி - சூலை, 2013

நூல்	:	சீன இலக்கியம்
ஆசிரியர்	:	சோ. ந. கந்தசாமி
மொழி	:	தமிழ்
பொருள்	:	இலக்கியம்
பதிப்பு	:	முதற் பதிப்பு, சூலை 2013
பக்கம்	:	717 + 16
அளவு	:	டெம்மி 1/8
தாள்	:	டி.என்.பி.எல். மேப்லித்தோ 16 கிலோ
நூற்கட்டுமானம்	:	சாதா கட்டுமானம்
படிகள்	:	1200
விலை	:	உரூ. 500/-
கணினியச்சு	:	பாமொழி கணிப்பொறி வடிவமைப்பகம் 1421 பாரதி நகர் மருத்துவக் கல்லூரிச் சாலை தஞ்சாவூர்-10
அச்சு	:	ஜப்பானிக்கா பிரிண்டிங் மீடியா எண் 17, ஸ்ரீபுரம் இரண்டாவது தெரு இராயப்பேட்டை சென்னை 600 014

உள்ளுறை

	அணிந்துரை	v - ix
	முன்னுரை	x - xvi
1.	சீனம் ஓர் அறிமுகம்	*1 - 29*
2.	சீன இலக்கியத்தின் தொடக்கம்	*30 - 49*
3.	சீனமொழி வளர்ச்சியும் செவ்வியல் இலக்கியமும் *(கி.மு.2,400-கி.மு.350*	*50 - 110*
4.	கன்பூசியசின் வரலாற்றுக் குறிப்புக்கள் *(கி.மு.551-கி.மு.479)*	*111 - 143*
5.	கன்பூசியசின் சிந்தனைப் போக்கு	*144 - 160*
6.	கன்பூசியசின் பனுவல்களில் விழுமியம்	*161 - 324*
7.	இலவோசியசின் தாவு மார்க்கம் *(கி.மு. 6ஆம் நூ. முற்பகுதி)*	*325 - 366*
8.	மோவியமும் சட்டவியமும் *(கி.மு.350 - கி.மு.250)*	*367 - 379*
9.	சீனமும் பௌத்தமும் *(கி.பி.60 - கி.பி.1200)*	*380 - 425*
10.	சீனச் செய்யுளின் தந்தை *(கி.மு.340 - கி.மு.278)*	*426 - 441*
11.	ஹன் காலத்து இலக்கியம் *(கி.மு.206 - கி.பி.220)*	*442 - 467*
12.	சீன இலக்கியம் *(கி.பி.220-கி.பி.618)*	*468 - 490*
13.	சீன இலக்கியத்தின் பொற்காலம் *(கி.பி.618-கி.பி.905)*	*491 - 567*

14. உரைநடை இலக்கியம்
(கி.மு.500-கி.பி.950) 568 - 608

15. கதை இலக்கியம்
(கி.பி.350 முதல்) 609 - 657

16. நாடக இலக்கியம்
(கி.பி.500 முதல்) 658 - 687

பின்னிணைப்புக்கள்

1. Select Bibliography 688 - 692

2. கன்பூசியசின் மாணவர்களும்
நெருங்கிய வட்டமும் 693 - 694

3. கன்பூசியசின் சிந்தனைப்பள்ளி 695 - 696

4. சீன வரலாற்றில் அரச மரபுகளும்
சில குறிப்புக்களும் 697 - 701

5. பொருளடைவு 702 - 717

முனைவர் ம. திருமலை **தமிழ்ப் பல்கலைக்கழகம்**
துணைவேந்தர் **தஞ்சாவூர் - 613 010.**

16.08.2012

அணிந்துரை

உலகில் வழங்கிவரும் பல்வேறு மொழிகளில் செம்மொழிக்குரிய தகுதிபெற்றவை கிரேக்கம், இலத்தீனம், எபிரேயம், அரபு என்ற மேலைநாடுகளுக்குரிய மொழிகள் நான்கும் செந்தமிழ், சமற்கிருதம், சீனம் என்ற கீழை நாடுகளுக்குரிய மொழிகள் மூன்றும் சேர்ந்து ஏழு மொழிகள் என்று மொழியியல் வல்லுநர்கள் முடிபு செய்துள்ளனர். இவற்றுள் இந்தியத் திருநாட்டிற்குரிய செந்தமிழ், சமற்கிருதம் ஆகிய இருபெரும் மொழிகளுக்குரிய செவ்வியல் இலக்கியங்களைப் பற்றிய ஆய்வு நூல், உலகச்செம்மொழிகள் இலக்கியம் - முதல்தொகுதி என்ற தலைப்பில் இரண்டாண்டு களுக்கு முன் இந்நூலாசிரியரால் எழுதப்பெற்றுத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. இவ்வரிசையில் இரண்டாம் தொகுதியாக இப்பொழுது வெளிவரும் இந்நூல், ***சீன இலக்கியத்தின் முற்காலம் முதல் பொற்காலம் வரை*** தோன்றி வளர்ந்துள்ள இலக்கியங்களைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி நூலாக விளங்குதல் குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திற்கும் சீன நாட்டிற்கும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அரசியல், வாணிக,

பண்பாட்டுத் தொடர்புகள் தழைத்திருந்த வரலாற்றுண்மையினை இந்நூலின் முதல் இயலில் நூலாசிரியர் தெளிவுறுத்தியுள்ளார். தமிழர்க்கு அறிமுகமாகியிருந்த பதினெட்டு மொழிகளில் சீனமொழியும் ஒன்று என்று எண்ணப்பெற்றமைக்குக் கி.பி.8ஆம் நூற்றாண்டில் தோன்றிய திவாகர நிகண்டினை ஆதாரமாகக் காட்டியுள்ளார் (ப.12). கி.மு.50 - கி.பி.50 என்ற காலப்பகுதியில் வாழ்ந்த சீன வரலாற்றறிஞர் பான் கௌ (Pan Kau) என்பார் தமிழகத்திற்கும் ஹன்அரசு மரபு (Han Dynasty கி.மு.202) ஆட்சி செய்த சீனத்திற்கும் நட்புறவு தழைத்திருந்த வரலாற்றுண்மையினைக் குறித்துள்ளார் (ப.16).

தமிழகத்துப் பௌத்தப் பேரறிஞர்கள் பலர் சீனம் சென்று புத்தர்பிரானின் புனித நெறியைப் பரப்பியுள்ளனர். அவர்களுள் தியான நெறியைப் பரப்பிய போதிதருமர் காஞ்சிமாநகரினைச் சேர்ந்தவர் ஆவர். முதலாம் இராசராசன் முதலாம் இராசேந்திரன் உள்ளிட்ட சோழப் பெருவேந்தர்களின் காலத்திலும் சீன நாட்டுடன் அரசியல், வாணிக, பண்பாட்டு உறவுகள் தொடர்ந்து வந்துள்ளன.

தமிழர்களைப் போலவே சீனப் பெருமக்கள் தொன்மைமிக்க நாகரிகமும் செவ்வியல் இலக்கியச் செல்வமும் படைத்தவர்கள். சீன இலக்கிய வரலாறு கி.மு.2,400 முதலாகத் தொடங்குகிறது என்று சீனவியலார் கருதுகின்றனர். செவ்வியல் பனுவல்களாக மதிக்கப்பெறும் வரலாற்றுப் பனுவல், பாடற்பனுவல், மாற்றப்பனுவல், சடங்குப்பனுவல், இளவேனிற் காலமும் இலையுதிர் காலமும் என்ற ஐந்து நூல்களையும் பழைய ஆவணங்களிலிருந்து

தொகை வகை செய்து வழங்கிய சிறப்புக்குரியவர் சீன ஞானி கன்பூசியசு ஆவர். இவர் கி.மு. ஆறாம் நூற்றாண்டினர். உலகச் சிந்தனையாளர் வரிசையில் வைத்து இவரை அறிஞர் பெருமக்கள் போற்றுகின்றனர். இவர் எழுதிய அனலெக்ட்சு என்ற விழுமிய நூல் திருக்குறள், தம்மபதம், விவிலியம் உள்ளிட்ட அறநூல்களைப் போல உலக அறிஞர்களால் உவந்து பாராட்டப்படுகின்றது. இவர் தொகுத்த பாடற்பனுவலின் பல பாடல்களை இந்நூலாசிரியர் அழகாக மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார். காதற் பொருண்மையில் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கிவரும் பாடல்கள் சங்க இலக்கியமாகிய கலித்தொகையின் தாழிசைகள்போல் அமைந்துள்ள சிறப்பினையும் தக்க சான்றுகளினால் நிறுவியுள்ளார் (பக்.72-98).

சீன இலக்கியம் என்பது கன்பூசியசு இலக்கியம் எனக் கூறும் அளவிற்கு அவருடைய தாக்கம் பிற்காலத்து எழுந்த சீனப் படைப்புக்களிலும் காணப்படுகிறது. இப்பெரும் ஞானியைப் பற்றிய வரலாறும், சிந்தனைப் போக்கும், இவர் படைப்புக்களில் காணப்படும் விழுமியங்களும், உயர்தகவுகளும் மிக விரிவாக இந்நூலில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன (பக்.111-324). இடையிடையே கன்பூசியச் சிந்தனைகளையும் தமிழ்ஞானி திருவள்ளுவரின் சிந்தனைகளையும் இந்நூலாசிரியர் ஒப்பிட்டுக் காட்டி இவை உலகப் பொதுமை வாய்ந்துள்ள உண்மையினையும் மனித மேம்பாட்டிற்கு உந்து சக்தியாக ஒளிரும் திறனையும் தெளிவுறுத்தியிருத்தல் பாராட்டத்தக்கது.

கி.மு.ஆறாம் நூற்றாண்டில் கன்பூசியசுக்கு மூத்த சமகாலத்தவராக ஒளி வீசிய மற்றொரு ஞானி

தாவு மார்க்கத்தினை நிறுவிய இலவோசியசு ஆவர். அறவியல், மெய்யியல் சார்ந்தனவும் உலகப் பொதுமை வாய்ந்தனவுமாகிய இவருடைய சிந்தனைகளையும் இந்நூலாசிரியர் விரிவாக ஆராய்ந்துள்ளார். தாவு நெறியாளர்க்குரிய கவிதைக் கோட்பாடுகளையும், குறியியல் (Symbolism) கொள்கையினையும் விளக்கியுள்ளார் (பக்.325-366).

சீனச் செய்யுளின் தந்தை என்று அறிஞர் பெருமக்களால் போற்றப்படும் பெருங்கவிஞர் சூ யூவன் (Ch'u Yuan) கி.மு.340 - கி.மு.278இல் வாழ்ந்தவர். இவர் பாடல் தொகுப்பு கன்பூசியசின் தொகை இலக்கியமாகிய பாடற்பனுவலுக்கு ஒப்பாக மதிக்கப்படுகிறது. சூ யூவனின் பாடல்கள் தன்மையினால் தன்னுணர்ச்சிப் பாக்களாகவும் (Lyrical Songs) உயிர்ப்பினால் புனைவியல் பாக்களாகவும் (Romantic Poems) விளங்குகின்றன (ப.428). காலந்தோறும் ஆட்சி செய்த அரச மரபுகளின் ஆதரவில் சீன இலக்கியங்கள் வளர்ச்சியும் வாழ்வும் பெற்று வந்துள்ள வரலாற்றினை உரிய தலைப்புக்களில் இந்நூலாசிரியர் விரிவாக ஆராய்ந்துள்ளார். ***சீன இலக்கியத்தின் பொற்காலம் தங்கு அரசு மரபினர் (Tang Dynasty) ஆட்சி செய்த கி.பி.618 - 906 ஆகும். இதனைத் தொடர்ந்து வரும் 200 ஆண்டுகளையும் இலக்கிய ஆக்கக் காலமாகச் சீனவியலார் எண்ணுகின்றனர்.*** இக்காலத்தில் கவிஞர்கள் வரிசையில் பேரரசர்கள், பேரரசிகள், படைத்தலைவர்கள், பாடாண்திணைப் பாவலர்கள், தாவு மார்க்கத்துத் துறவிகள், பௌத்தப் பிட்சுக்கள், பெண் கவிஞர்கள் பற்பலர் இடம்பெற்று ஒளிவீசினர். இவர்கள்தம் பெருங்கொடையால் சீன இலக்கியம் பொற்களஞ்சியமாகப் பொலிவுற்றது (ப.492).

சீன இலக்கியங்களின் வகைமைகளையும் இந்நூலாசிரியர் ஆராய்ந்துள்ளார். சீனப் படைப்பாளர்கள் பாடல்இலக்கியத்தினைப் பேணி வளர்த்ததைப் போலவே உரைநடை இலக்கியம், கதை இலக்கியம், நாடக இலக்கியங்களையும் வளர்த்துள்ள பாங்கினை இந்நூலின் இறுதியில் இடம்பெறும் இயல்கள் விரிவாக விளக்குகின்றன. போதிய மொழிபெயர்ப்புப் பகுதிகள் இந்நூலில் உரிய இடங்களில் இடம்பெற்றுச் சீன இலக்கியத்தின் சிறப்பினை உணர்ந்து கொள்ள உதவுகின்றன. சீன மக்களின் நம்பிக்கைகள், நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், வாழ்வியல், வீரதீரம், மகளிரின்மாட்சி, அரசியல், இலக்கிய ஈடுபாடு, சமுதாய மேம்பாடு உள்ளிட்ட பல கூறுகளையும் அறிந்துகொள்ள இந்நூல் பெரிதும் உதவும் என்று நம்புகின்றேன்.

இந்நூலாசிரியர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மலாயாப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் பேராசிரியராகப் பணியாற்றிய சிறப்புக்குரியவர். இலக்கியம், இலக்கணம், மொழியியல், மொழிபெயர்ப்பு, யாப்பியல், தத்துவம், வரலாறு முதலிய பொருண்மைகளில் ஐம்பத்தைந்து நூல்களை எழுதியவர். இவற்றில் பதினாறு நூல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பெற்றவை. தமிழ், வடமொழி, பாலி, பிராகிருதம், ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளிலும் புலமை பெற்றவர். சீன இலக்கியம் பற்றிய இவர்தம் நூல் இப்பொருண்மை பற்றித் தமிழில் வந்துள்ள முதல் விரிவான நூல் ஆகும். இச்சிறந்த நூலினை எழுதிய பேராசிரியர் ***முனைவர் சோ.ந. கந்தசாமி*** அவர்களைப் பாராட்டுகிறேன்.

ம. திருமலை

முன்னுரை

மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறையில் பணியாற்றிய காலத்தில் (1979-1985) சைவ சித்தாந்தக் கல்வியை ஆங்கிலத்தில் கற்பிக்கும் வாய்ப்பினை எனக்கு வழங்கியிருந்தனர். சைவ சித்தாந்தத்தினைத் தமிழ் மாணவர்களைப் போலவே சீன மாணவர்கள் பலரும் ஆண்டுதொறும் ஆர்வத்துடன் விரும்பிப் பயின்று வந்தனர் என்ற செய்தியை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். அதே பல்கலைக்கழகத்தில் சீன ஆய்வியல்துறைப் பேராசிரியரின் திருக்குறள் சீன மொழிபெயர்ப்பு கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத்தமிழ் மாநாட்டின் பொழுது (ஏப்ரல் 1966) வெளியிடப்பட்ட செய்தியும் இங்குச் சுட்டுதற்குரியது. பத்துமலை முருகன் கோயிலில் ஆண்டுதொறும் நடைபெறும் தைப்பூசத் திருநாளில் தமிழரைப் போலவே சீனரும் பக்திப் பரவசத்துடன் பால்காவடி எடுத்துத் தமிழ்த் தெய்வத்தினைப் பரவிய பாங்கினை எண்ணிப் பார்க்கிறேன். தமிழர் ஆலயங்களுக்குச் சீனர்கள் இன்றும் சென்று வழிபட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இலக்கியத் துறையின் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் (1985 - 1997) சீன மாணவர்கள் தமிழ் பயின்றனர். அவர்களில் திரு. ***சாங்-சீ-லின்*** என்பவர் குறிப்பிடத்தக்கவர். இவர் தமிழ் எழுத்துக்கள் முத்து முத்தாக இருக்கும். குறுந்தொகைப் பாக்கள் சிலவற்றைச் சீனமொழியில் இவர் மொழிபெயர்த்தவர். ***சீன மாணவி*** ஒருவர் தன் பெயரைக் ***கலையரசி*** என்று வைத்துக்கொண்டவர். இவர் இலக்கியத் துறையில் பயிற்சி பெற்ற பிறகு சீன வானொலியின் தமிழ்ப் பிரிவில் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றவர்.

இரண்டாண்டுகளுக்கு முன் சீனச் செவ்வியல் இலக்கியங்களில் ஒன்றான பாடற்பனுவலின் (Classic of Songs) சில பாடல்களைத் தமிழாக்கம் செய்து சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவரும் **அரிமா நோக்கு** இதழில் வெளியிட்டு வந்தேன். அப்பாடல்கள் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்த கலித்தாழிசைகளின் அமைப்புடையவை. பாடற் பொருண்மையினால் சங்கக் கலிப்பாடல்களும் சீனப் பாடல்களும் ஒத்திருப்பினும், பின்னவை யதார்த்தத் தன்மை மிக்கவை என்பதையும் குறிப்பிட்டிருந்தேன். இவற்றைப் படித்த அன்பர்கள் சீன இலக்கியம் பற்றி விரிவாகத் தமிழில் எழுதுதல் வேண்டும் என்று என்னிடம் கூறி வந்தனர். அவர்களின் அன்பு வேண்டுகோளும் இந்நூல் உருப்பெறுவதற்கு ஒரு காரணம் ஆகும்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் உலகச் செம்மொழிகள் உயராய்வு மையத்தின் இயக்குநராகப் பொறுப்பேற்றதும் (16.8.2010) செந்தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளின் செவ்வியல் இலக்கியங்களைப் பற்றிய ஒரு நூலினை விரைந்து எழுதும்படி அப்பொழுது துணைவேந்தராகப் பணியாற்றிய மதிப்பிற்குரிய ***முனைவர் ம. இராசேந்திரன்*** அவர்கள் கேட்டுக் கொண்டார். உலகச் செம்மொழிகள் இலக்கிய வரிசையின் முதல் தொகுதியாக எழுதப் பெற்ற அந்நூல் 20.9.2010இல் வெளியிடப்பெற்றது. அதன் தொடர்ச்சியாகச் **சீன இலக்கியம் - முற்காலம் முதல் பொற்காலம் வரை** என்ற தலைப்பில் எழுதப்பெற்ற இந்நூல் இப்பொழுது வெளிவருகிறது. சீன இலக்கியத்தின் தொடக்க காலம் முதல் கி.பி.10, 11ஆம் நூற்றாண்டு வரை தோன்றிய இலக்கியங்களைப் பற்றிய செய்திகளும் சிந்தனைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நூலினை எழுதுவதற்குமுன் ஆங்கிலத்தில் சீன இலக்கியம் பற்றி வந்துள்ள வரலாற்று நூல்களையும் ஆராய்ச்சி நூல்களையும், மொழிபெயர்ப்புக்களையும், கலைக்களஞ்சியங்களையும் பயின்று போதிய தரவுகளைத் தொகுத்துக்கொண்டேன். சீன நாட்டிற்கும் தமிழகத்திற்கும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நிலவி வந்துள்ள அரசியல், வாணிக, பண்பாட்டுத் தொடர்புகள் பற்றிப் புகழ்பெற்ற வரலாற்றுப் பேராசிரியர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள நூல்களையும் பயின்றேன். சீனச் செவ்வியல் இலக்கியங்களுக்கும் சங்க இலக்கியங்கள், திருக்குறள் முதலிய தமிழ்ப் பனுவல்களுக்கும் இடையே காணப்படும் பொதுமைக் கூறுகளையும் ஆராய்ந்து இவையாவும் இயல்பாக அமைந்தவை (Accidental Similarity) என்ற முடிபுக்கும் வந்தேன். இவற்றை மானுடப் பொதுமைக்குரியவை (They belong to the common stock of humanity) என்று கருதுதல் வேண்டும். சீனச் செவ்வியல் பாக்களைப் போதிய அளவில் தமிழாக்கம் செய்து உரிய விளக்கங்களையும் இந்நூலில் வழங்கியுள்ளேன். சீன ஞானிகள் கன்பூசியசு, இலவோசியசு ஆகியோரின் சிந்தனைகள் திருவள்ளுவர் சிந்தனைகளுடனும் தமிழ்ச் சித்தர்களின் சிந்தனைகளுடனும் ஒத்துள்ள திறத்தினையும் இந்நூலில் உரிய இடங்களில் குறித்துள்ளேன்.

இந்நூல் பதினாறு இயல்களில் விரிவாக எழுதப்பெற்றுள்ளது. முதல் இயல் சீனம் பற்றிய அறிமுகமாக அமைந்துள்ளது. இவ்வியல், சீனச் சமுதாய அமைப்பு, சீன மொழியின் அமைப்பு, தமிழகத்திற்கும் சீனத்திற்கும் அமைந்த நல்லுறவு பற்றி எடுத்துரைக்கிறது. இரண்டாம் இயலில் சீனப் பண்பாட்டில் கன்பூசியத்தின் ஆளுகை, பௌத்தத்தின் ஆளுகை, சீன நூலகப் பிரிவுகள், சீன இலக்கியத்தின் காவிய நீதிக்கொள்கை, சீன இலக்கிய வகைகள் (Lit-

erary genres), சீனப் பாடலின் சிறப்புக் கூறுகள், சீனக் கவிஞரின் வித்தகம் பற்றிய கருத்துக்கள் இடம்பெற்றன. மூன்றாம் இயலில் சீனமொழியின் வளர்ச்சியும் தொன்மைமிக்க செவ்வியல் இலக்கியங்கள் கி.மு.6ஆம் நூற்றாண்டில் சீனப் பேராசான் கன்பூசியசால் தொகைவகை செய்யப்பெற்ற சிறப்பும் வரலாறும் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன. கி.மு.2,400 முதலாகவே சீன இலக்கியங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. இந்நிலையில் தமிழிலக்கியங்களின் தொன்மை குறித்து இறையனார் களவியல் உரைதரும் செய்திகளில் ஓரளவேனும் உண்மையிருத்தல் வேண்டும் என்ற உணர்வு தோன்றுதல் இயல்புதான். சீன இலக்கிய வரலாற்றில் காலக்கணிப்பு முறையாகவும் ஒருமித்த முடிபுடையதாகவும் காணப்படுதல் சிறப்பாகச் சுட்டுதற்குரியது. செவ்வியல் இலக்கியங்கள் ஐந்தனுள் பாடற்பனுவல் (Classic of Songs) வளம்மிக்க படைப்பு. நாட்டுமக்களின் பாக்களாக வழங்கிய 3000 பாடல்களில் கன்பூசியசு பெருமகனார் 305 பாடல்களைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்துள்ளார். (இங்குச் சங்கப் பாக்கள் தொகைவகை செய்யப்பெற்ற வரலாற்றினையும் நாம் எண்ணிப் பார்க்கலாம்.) பாடற்பனுவல்களின் சிறப்புக் கூறுகளை மூன்றாம் இயல் விளக்குகிறது (பக்.63-66). காதற் பாடல்களில் காதலரின் இயற்பெயர் சுட்டப்படாமை சங்க அகப்பாடல்களின் தனிச்சிறப்பு. ஆனால், சீன அகப்பாடலில் பெயர் சுட்டப்பெறுதல் தனிச்சிறப்பு. சான்றாக, ***சோங்கு சீ அன்புகூர்ந்து கேள்*** (பக்.73-74) என்ற பாடலைக் குறிப்பிடலாம். சீனக் காதற் பாடல்களில் புலனெறி வழக்கினைவிட உலகியல் வழக்காகிய யதார்த்த நெறி சுடர்விடுதலைச் சிறப்பாகச் சுட்டுதல் வேண்டும்.

தமிழர்களுக்குத் தொல்காப்பியரையும் திருவள்ளுவரையும் போலச் சீனப் பெருமக்களுக்குக் கன்பூசியசும் இலவோசியசும் விளங்குகின்றனர். இவர்

இருவரிலும் கன்பூசியசின் செல்வாக்கு சீனமக்கள் வாழ்வியலிலும் இலக்கியத்திலும் கூடுதலாகக் காணப்படுகிறது. கன்பூசியசின் வரலாறு, சிந்தனைப் போக்கு, அவர் போதனை புரிந்த விழுமியங்கள், அறங்கள், தகவுகள், அரசியல், கல்விக் கொள்கை உள்ளிட்ட பலவும் விரிவாக இந்நூலின் 4, 5, 6ஆம் இயல்களில் விளக்கப்பெற்றுள்ளன. அடுத்துவரும் இயலில் சீனஞானி இலவோசியசின் தாவு மார்க்கம் பற்றிய அடிப்படைக் கருத்துக்களும் கவிதைக் கொள்கையும் குறியியல் படிமமும் தெளிவுறுத்தப்பட்டன. இலவோசியசின் சிந்தனைகளில் பல தமிழ்நாட்டுச் சித்தர்களின் சிந்தனைகளோடு ஒப்பிடத்தக்கவை. குறியியலுடன் தொடர்புடைய கருத்துக்கள் உலக இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. தொல்காப்பியர் கூறியுள்ள உள்ளுறையும் இறைச்சியும் பற்றிய கோட்பாடுகளும் திருமூலர் குறிப்பிடும் ஊமை மொழியும் தாவு மார்க்கத்தவர் சொல்லும் குறியியல் கொள்கையுடன் இயைபுபடுத்தி ஆராயத்தக்கவை. நவீன காலத்தில், பிரெஞ்சு மொழியியல் அறிஞர் ஃபெர்டினாண்ட் சசூர் (Ferdinand Saussure), பிரெஞ்சு இலக்கியத் திறனாய்வாளர் ரோலண்டு பார்த்தெசு (Roland Barthes), அமெரிக்கத் தத்துவமேதை சார்லசு சாண்டெர்சுபியர்சு (Charles Sanders Pierce) என்ற ஆராய்ச்சியாளர்கள் குறியியல் (Semiotics) குறித்து உளவியல் அடிப்படையிலும் சொற்பொருளியல் (Semantics) அடிப்படையிலும் நிகழ்த்தியுள்ள விரிவான ஆய்வுகளின் வெளிச்சத்தில் மேலே குறிப்பிடப்பட்ட குறியியல் கொள்கைகளை ஆராய்வதற்குப் போதிய வாய்ப்பு இருக்கிறது.

எட்டாம் இயலில் கி.மு.350 - கி.மு.250 என்ற கால அளவில் சீனத்தில் பிரபலம் அடைந்திருந்த தத்துவ ஞானி மோ-தி நிறுவிய மோவியம் பற்றியும், ஹுவான் கோமகனிடம் முதலமைச்சராக விளங்கிய

குவான்-சூ நிறுவிய சட்டவியம் (Legalism) பற்றியும் விளக்கப்பெற்றுள்ளது. ***கி.பி.1949இல் உதயமான நவசீனத்தின் அரசியல் கொள்கையினை வடிவமைப்பதில் புரட்சியாளர் மாசே துங்கிற்கு மார்க்சியத்துடன் இவ்விரு தத்துவச் சிந்தனைகளும் பெரிதும் பயன்பட்டுள்ளன*** என்பது சுட்டுதற்குரியது.

ஒன்பதாம் இயல் சீனத்தில் பௌத்தம் பரவிய வரலாற்றினை விரித்துக் கூறுகிறது. குமாரசீவர், பரமார்த்தர், போதிதருமர் உள்ளிட்ட பௌத்த ஞானிகள் சீனம் சென்று பௌத்தத்தினைப் பரப்பியதுடன் மகாயான பௌத்த நூல்கள் பலவற்றைச் சீனத்தில் மொழிபெயர்த்துள்ளனர். இந்திய நாட்டிற்கு வந்த சீனப் பயணிகளில் யுவான் சுவாங்கு காஞ்சிபுரத்தில் தங்கிப் பௌத்தப் பேரறிஞர்களிடம் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பத்தாம் இயல் சீனச் செய்யுளின் தந்தை (Father of Chinese Poetry) எனப் போற்றப்படும் சூ யூவன் (கி.மு.340-கி.மு.278) பாடல்களைப் பற்றிய ஆய்வாக விளங்குகிறது. அடுத்து வரும் இயல் ஹன் அரச மரபு (Han Dynasty) ஆட்சிக் காலத்தில் தோன்றிய சீன இலக்கியங்களைப் பற்றியும் பன்னிரண்டாம் இயல் கி.பி.220-618 என்ற காலப் பகுதியில் எழுதப்பெற்ற இலக்கியங்களைப் பற்றியும் எடுத்தியம்புகின்றன. இக்காலத்தினைச் சீன இலக்கிய வரலாற்றாசிரியர் இருண்ட காலம் (Dark Age) என்று கூறினும் குறிப்பிடத்தக்க நல்ல நூல்கள் சில தோன்றியுள்ளன. தமிழிலக்கிய வரலாற்றிலும் இந்தக் காலப் பகுதியை இருண்ட காலம் என்பர். எனினும் சிறந்த அற நூல்கள் இக்காலப் பகுதியில் தோன்றியுள்ளன. சீனமொழியில் இந்த இருண்ட காலத்தில்தான் இலக்கியத் திறனாய்வு நூல்கள் தோன்றியுள்ளன என்பது ஒருதனிச் சிறப்பு. தொடர்ந்து வரும் இயல் சீன இலக்கியத்தின் மிகச்சிறந்த

பொற்காலத்தில் படைக்கப்பட்ட சீன இலக்கியங்களின் சிறப்பினையும் தனித்தன்மையினையும் விளக்குகிறது. பின்னர் இடம்பெறும் மூன்று இயல்கள் சீனமொழியின் உரைநடை இலக்கியம், கதை இலக்கியம், நாடக இலக்கியம் பற்றிய ஆய்வாக அமைந்துள்ளன. கவிதை, உரைநடை, கதை, நாடகம் ஆகிய இலக்கிய வகைகளை விளங்கிக் கொள்ளும் வகையில் போதிய மொழிபெயர்ப்புக்கள் கொடுக்கப்பெற்றுள்ளன. இந்நூலின் பின்னிணைப்புக்கள் பயில்பவர்க்குப் போதிய உதவியாக அமையும் என்று எண்ணுகிறேன்.

கடந்த இரண்டாண்டுகளில் உருவாகியுள்ள இந்த நூலினை வெளியிடுவதில் ஆர்வம் காட்டி அன்புடன் அணிந்துரை வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மதிப்பிற்குரிய துணைவேந்தர் ***முனைவர் ம. திருமலை*** அவர்களுக்கு என் நன்றியைப் புலப்படுத்துகிறேன். இந்நூல் சிறந்த முறையில் வெளிவருவதற்கு உதவிய பதிவாளர் (பொ.) ***முனைவர் ம.செகதீசன்*** அவர்களுக்கு என் நன்றி உரியது. இந்நூல் எழுதுவதற்குத் தேவையான நூல்களை அன்புடன் வழங்கியுதவிய நூலக இயக்குநர் (பொ.) ***முனைவர் ஆ. குணசேகரன்*** அவர்களுக்கும் உடன்பணிபுரியும் ஏனைய நூலகர்களுக்கும் என் நன்றி. இந்நூலினை வனப்புற வெளியிட்டுதவும் பதிப்புத்துறை இயக்குநர் (பொ.) ***திரு. வை. கண்ணபுரக்கண்ணன்*** அவர்களுக்கு என் நன்றி உரியது. இத்தகைய ஆய்வுகள் நிகழ்வதற்கும் அவற்றின் பயனாக உருவாகும் நூல்களை வெயியிடுவதற்கும் வேண்டிய நிதியினை வழங்கிவரும் ***பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவினர்க்கு*** நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

16.8.2012

தஞ்சாவூர் - 613 010. **சோ.ந. கந்தசாமி**

1. சீனம் ஓர் அறிமுகம்

சீன நாட்டின் அமைப்பியல்

உலகில் தொன்மைமிக்க நாகரிகங்களைப் படைத்த நாடுகளில் சீனமும் (China) ஒன்றாகும். சோவியத்து ஒன்றியம், கனடா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடி அளவினால் பெரியது சீன மக்கள் குடியரசு (The People's Republic of China) ஆகும். இப்பெருநாடு கிழக்கு மேற்கில் 5,000 கி.மீ. வடக்குத் தெற்கில் 5,500 கி.மீ. கொண்டது. சீன நாட்டின் வடபால் மங்கோலிய மக்கள் குடியரசும் (The Mangolian People's Republic), வடகிழக்கில் சோவியத்துக் குடியரசும் (-இப்பொழுது உருசியா) உள்ளன. கீழ்பால் மஞ்சள் கடலும் (The Yellow sea), கிழக்குச் சீனக்கடலும் (East China-Sea), தென்கிழக்கில் தென்சீனக் கடலும் திகழ்கின்றன. தெற்கில் வியட்நாம், இலாவோசு, பர்மா, இந்தியா, பூடான், நேப்பாளம் ஆகிய நாடுகள் இலங்குகின்றன. தென்மேற்கில் பாகிஸ்தானும், மேற்கில் ஆப்கனிஸ்தானமும் சோவியத்துக் குடியரசும் (-உருசியா) விளங்குகின்றன.

சீனர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். உலகில் மக்கள் தொகைப் பெருக்கமுள்ள முதல் நாடாகச் சீனம் திகழ்கிறது. மனித ஆற்றலிலும், அறிவியல் தொழில் நுட்பத்திலும் சீனம் மேம்பட்டுள்ளது. சீனதேசம் நான்காயிரம் ஆண்டுகட்குக் குறையாத வரலாறு படைத்த பெருநாடாகும். இந்நாட்டில் பீட பூமிகள், மலைகள், சமவெளிகள் எங்கும் காட்சி தருகின்றன. வடசீனப் பகுதியில்

மஞ்சள் ஆறும் (Huang Ho= Yellow River), தென்சீனப் பகுதியில் யாங்குச்சே ஆறும் (Yangstze) பாய்கின்றன. இவை திபெத்திய பீடபூமியில் தோன்றிச் சீன நாட்டினை வளப்படுத்துகின்றன. சீனத்தில் சிறிதும் பெரிதுமாக ஐயாயிரம் ஆறுகள் ஓடுகின்றன.

இந்தியரைப் போலவே சீனர்களும் வேளாண்மைத் தொழிலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள். நெல், கோதுமை, பருத்தி, நிலக்கடலை, சோயா பீன்சு, ஒருவகை எண்ணெய் வித்து, பழவகைகள் என்பன சீனர் விளைவிக்கும் பொருள்களில் குறிப்பிடத்தக்கவை. பட்டுப்பூச்சி வளர்த்தலும் சுட்டத்தக்கது. சீனத்தில் ஈராயிரத்துக்கும் மேற்பட்ட மர வகைகள் காட்சி அளிக்கின்றன. கோபி (Gobi) பாலை வனமும் உண்டு. சதுப்பு நிலங்களும் உள்ளன. ஒரு சிற்றூரில் ஐந்நூற்றுவர் முதல் எழுநூற்றுவர் வரை வாழ்கின்றனர். இருபது அல்லது முப்பது சிற்றூர்களை உள்ளடக்கியது ஓர் ஊராகிய நகரமாகும்.[1] உலகவியப்புக்களில் சீனப்பெருஞ்சுவர் ஒன்றாக எண்ணப்படுகிறது.

சீனச் சமுதாய அமைப்பு

சீனச் சமுதாயம் நால்வகைப் பகுப்புக்களைக் கொண்டது. முதல் வகையில் அறிஞர்களும் (Scholars), இரண்டாம் வகையில் உழவர்களும், அடுத்துக் கைத்தொழில் வினைஞரும் (Artisans), வணிகரும் இடம்பெற்றனர். சீன மக்களின் அறிவு மேம்பாட்டிற்கும் அறங்களின் செயற்பாட்டிற்கும் அடிப்படைச் சக்தியாக இருப்பதால் சீனச் சமுதாயத்தில் அறிஞர்களுக்கு முதலிடம் வழங்கப்பெற்றது. மக்களுக்கு இன்றியமையாத உணவுப் பொருள்களையும் உடையினையும் வழங்கும் உழவர்கள் இரண்டாம் இடத்தில் எண்ணப் பெற்றனர். நாட்டிற்கு வேண்டிய கருவிகளையும் கலன்களையும் இன்னோரன்ன பிறவற்றையும்

உருவாக்கும் கைத்தொழிலாளர் மூன்றாமிடத்தில் வைக்கப் பெற்றனர். சீன மக்கள் வணிகர்களை வெளிப்படையாகச் சுரண்டுபவர்கள் (Exploiters) என்று கருதியதால் இறுதியில் வைத்து எண்ணினர். இந்த நாலாம் வகுப்பில் வணிகருக்கு அடுத்தபடி படைவீரர்களும், வீட்டுப் பணியாளர்களும், வேசையரும், வேடிக்கையாளரும், நாவிதரும் உள்ளிட்ட பிரிவினர்கள் இடம்பெற்றனர்.[2]

சீனர்களின் நால்வகைப் பகுப்பு வழக்கொடு பொருந்தி வருவதாகும். தமிழிலக்கியங்களில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற இனப்பாகுபாடு காணப்படுகிறது. வடமொழி இலக்கியங்களில் இவர்கள் முறையே பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சொல்லப் பெற்றனர். திணையடிப்படையில் தமிழர்களைக் குறிஞ்சி நிலத்தவர், முல்லை நிலத்தவர், பாலை நிலத்தவர், மருத நிலத்தவர், நெய்தல் நிலத்தவர் என்று பாகுபடுத்தும் தொன்மைமிக்க மரபினைத் தொல்காப்பியம் புலப்படுத்துகிறது. ஐரோப்பிய நாட்டில், இனப்பாகுபாடு Estates என்ற பெயரால் குறிக்கப்பட்டது. திருச்சபையார் (Clergy) முதல் வகுப்பினர் (First Estate). பிரபுக்கள், செல்வர்கள், பெருமகன் (Noble) இரண்டாம் வகுப்பினர் (Second Estate). மருத்துவர், வழக்கறிஞர், கல்வியாளர், கவிஞர், வணிகர் யாவரும் மூன்றாம் பிரிவினர் (Third Estate). உழவர், தொழிலாளர் ஆகியோர் நான்காம் வகுப்பினர் (Fourth Estate). பிரெஞ்சுப் புரட்சியின் மூலம் இந்த வேறுபாடுகள் நீங்கின. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன மூன்றும் தழைத்தன.

சீன ஞானி கன்பூசியசின் (கி.மு.6ஆம் நூ.) சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்த மென்சியசு (Mencius, கி.மு.3ம் நூ.) சீனச் சமுதாயத்தினை இரண்டாகப் பாகுபடுத்தினார். முதல் பிரிவில் கற்றோர் அனைவரும் (The Educated)

அடங்குவர். இவர்களே நாட்டினை ஆள்பவர்கள். இரண்டாம் பிரிவில் கல்லாதவர் அனைவரும் (The Uneducated) அடங்குவர். இவர்களே ஆளப்படுபவர்கள்.[3] இக்காலம் வரை இவர் கருத்து சீனர்களால் ஏற்றுக் கொள்ளப்பெற்றுப் பின்பற்றப்பட்டு வருகிறது.

கல்வி அடிப்படையில் மென்சியசு மக்களை இரு பிரிவினராகப் பாகுபடுத்தினார். தமிழகத்தில் ஔவைப்பிராட்டி கொடையுள்ளம் கொண்டவர்களை ஒரு பிரிவினராகவும், உலோபிகளை மற்றொரு பிரிவினராகவும் பாகுபடுத்தினர். 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்ற இவர் பாடல் பள்ளிச் சிறுவரும் பயின்று வருவதுதான். பொதுவுடைமைக் கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப் பெற்றுள்ள நவ சீனத்தில் மரபு வழிப்பட்ட சமுதாயத்தரப்பிரிவுகள் மெல்ல மெல்ல மறைந்து போயின எனலாம்.

சீனப் பேரரசு (Chinese Empire)

சீனத்து ஞானி கன்பூசியசு (Confucius) தொகுத்துள்ள பழைய சீனப் பனுவல்களில் பேணப்பெற்றுள்ள மரபுகளின் அடித்தளத்தில் எழுப்பப்பட்ட சீனப் பேரரசு தந்தைவழிச் சமுதாயத்தினை நிலைநாட்டியது. குடும்ப அதிகாரங்கள் யாவும் தந்தைக்கு உரியன. பேரரசர் (Emperor) என்பவர் தேசத்தின் பெரியதந்தை ஆவர். குடிமக்கள் அனைவரும் அவருடைய பிள்ளைகள் ஆவர். அவர்முன் அனைவரும் சமம். இத்தகைய கருத்து சங்க காலத் தமிழகத்திலும் நிலவியது. புறநானூற்றில்,

1. *தாயில் தூவாக் குழவி போல*
   ஓவாது கூஉம்நின் உடற்றியோர் நாடே **(4.18-19)**

2. *காவல், குழவி கொள்பவரின் ஓம்புமதி* **(5.6-7)**

எனவரும் பாடற்பகுதிகள் எண்ணுதற்குரியவை. பதிற்றுப் பத்தின் ஆறாம் பத்தின் பதிகத்தில், 'குழவிகொள்வாரிற் குடிபுறந்தந்து' என்று வரும் தொடர் நோக்குதற்கு உரியது.

நாட்டின் உயரிய தலைவராகவும்,சமயத்தின் தலைவராகவும் பேரரசர் சீனமக்களால் போற்றப்பட்டார். குடிமக்களின் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்பச் சீன நாட்டில் அரசப் பணிகள் வழங்கப்பெற்றன.[4]

மரபுவழிப்பட்ட சீன நிருவாகம்
(Traditional Chinese Administration)

பொது நிருவாகம் என்பது பேரரசரால் அமைச்சர்களின் உதவியுடன் நடைபெற்றது. பொதுத் தேர்வுகள் நடத்தப்பட்டு, அவற்றில் தேர்ச்சி பெறுவோரின் தரமதிப்பீட்டின் அடிப்படையில் அமைச்சர் பதவியும் பிற பதவிகளும் வழங்கபெற்றன. இதே அடிப்படையில்தான் பல்வேறு வாரியங்களின் (Boards) உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். கட்டுப்பாட்டு வாரியம் (The Board of Control) அல்லது தேர்வு வாரியம், வரலாறு மற்றும் இலக்கிய அவையம் (The Court of History and Literature) என்பன இரண்டும் குறிப்பிடத்தக்க அரசுத் துறைகள் ஆகும்.[5] பேரரசரின் தனிப்பட்ட செயல்களைக் கூடத் தட்டிக் கேட்கவும் கண்டிக்கவும் தம் கருத்துக்களை வெளிப்படுத்தவும் இந்த வாரியங்களுக்கு உரிமை உண்டு. பொதுக் கல்வியைக் கண்காணிக்கவும் பல்வேறு பணிகளுக்குரிய தேர்வுகளை நடத்தவும், வரலாறு, அரசியல் பற்றிய அரிய நூல்களுக்கு அரசு மானியங்களை வழங்கவும் வரலாறு மற்றும் இலக்கிய அவையம் உரிமை பெற்றிருந்தது.

சீனத்தில் பல மொழிகள்

சீன நாட்டின் பிரதான மொழி சீனமே ஆகும். ஆயினும், வேறு மொழிகள் பேசும் மக்களும் அங்கு வாழ்கின்றனர். அம்மொழிகளில் மங்கோலியம், திபெத்தியம், கொரியம், தாய் (Tai), உயிகுர் (Uighur) என்பன குறிப்பிடத் தக்கவை ஆகும். இந்நாளில் நவீன யுகத்துக்குத் தேவையான ஆங்கிலத்திற்கு முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது.[6]

ஆங்கில அறிஞர்கள் சீன மாணவர்களுக்கு அம்மொழியைக் கற்பிக்க சீன அரசினால் அழைக்கப்படுதல் சுட்டத்தக்கது.

சீனமொழியின் அமைப்பு

சீன மக்களில் தொண்ணூற்று நான்கு விழுக்காடு ஹன்சீனர் (Han Chinese People) ஆவர். ஹன் (Han) என்பது சீனத்தின் மூத்த குடிமக்களின் பெயர். இவர் பேசும் சீனத்தினை ஹன்சீனம் (Han Chinese) என்று வழங்குவர்.[7] இந்நாளில் சீன நாட்டில் மண்டரின் (Mandarin) பலராலும் பேசப்படுகிறது. இது பழைய சீன மொழியின் ஒரு கிளைமொழி ஆகும். இம்மொழி ஐக்கிய நாடுகள் அமைப்பின் (United Nations Organisation) அலுவலக மொழிகள் ஆறனுள் ஒன்றாக உள்ளது.

சீனமொழி சீன-திபெத்திய-மங்கோலிய குடும்பத்தைச் சேர்ந்தது. இம்மொழியில் ஓரசைச் சொற்கள் (Mono-Syllabic Words) மிகுதி ஆகும். அசை அழுத்தத்தால் (Accent) ஒரு சொல் வேறு பொருளைத் தருகிறது. பழைய சீன சாம்ராச்சியத்தின் தலைநகராகிய நன்கிங்கு (Nanking) பகுதியில் வழங்கிவரும் சீன மொழியே தூய்மை மிக்கதாகக் கருதப்படுகிறது. இதுவே சீன நாட்டின் இலக்கிய மொழியாகவும், நீதிமன்றத்தின் செயற்பாட்டு மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் விளங்குகிறது. சீனருள் நனிநாகரிகர் பேசும் மொழியும் இதுவே ஆகும்.

சீன எழுத்துமுறை

தொன்மைமிக்க சித்திர எழுத்துக்களிலிருந்து (Hieroglyphs) சீன எழுத்துக்கள் பரிணாம வளர்ச்சி பெற்றன என்பது சீனவியலாரின் (Sinologists) கருத்தாகும். சீன மொழியில் ஒலி வடிவத்திற்கும் வரி வடிவத்திற்கும் வேறுபாடு உண்டு. சீன எழுத்துக்கள் சொற்களின் ஒலிகளை வெளிப்படுத்தாதவை. ஆனால், சொற்கள் புலப்படுத்தும் கருத்துக்களை (Ideas) அல்லது பொருள்களை (Objects) அவை புலப்படுத்துகின்றன. பேச்சு மொழியில் உள்ள

சொற்களைவிட எழுத்து மொழியில் உள்ள சொற்கள் மிகுதியாகும். பொதுவாக எழுதுவதற்கு 2,425 எழுத்துருக்கள் உள்ளன; இலக்கியப் படைப்பிற்குப் பொதுவாக 10,000 சொற்கள் போதும் என்று சீனமொழி வல்லுநர்கள் கூறுகின்றனர். சீன அகராதியில் 40,000 எழுத்துருக்கள் இடம்பெற்றுள்ளன.[8]

சீன எழுத்துக்கள் வலமிருந்து இடமாகவும், செங்குத்தாகவும் அல்லது சாய்வாகவும் எழுதப்படுகின்றன. கி.மு.221க்கு முன் சீனமொழி பல்வேறு எழுத்து வடிவங்களைப் பெற்றிருந்தது. சின் (Chin) மரபின் ஆட்சிக் காலத்தில் எழுத்துருவம் தரப்படுத்தப்பட்டது. சிற்றெழுத்து (Small Script) அறிமுகம் ஆயிற்று. அரசு அறிமுகம் செய்த எழுத்து முறையினைப் புறக்கணித்து வேண்டியபடி எழுத முற்படுவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டது.[9]

சீன எழுத்து முறைகளில் இருவேறு அமைப்புக்கள் (Systems) இருக்கின்றன. சீன நாட்டிற்கு வெளியே சீனர் குடியேறியுள்ள ஹாங்காங்கு (Hong Kong), தைவான் (Taiwan) முதலிய நாடுகளில் வாழ்வோர் தொன்மைமிக்க ஹன் அரசு மரபு (Han dynasty) ஆட்சிக் காலம் முதலாக வழங்கிவந்த மரபு வழிப்பட்ட எழுத்து முறையினைப் பின்பற்றுகின்றனர். சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் வாழும் சீனர் விதி விலக்காக உள்ளனர். சீன மக்கள் குடியரசு (People's Republic of China) கி.பி.1954இல் பழைய எழுத்து முறையினை எளிமைப்படுத்தி மக்கள் விளங்கிக் கொள்ளும் பொருட்டுப் புதிய வரிவடிவத்தை அறிமுகம் செய்துள்ளது. இவ்வகை எழுத்துமுறை செஞ்சீனாவில் மட்டுமன்றிச் சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் வாழும் சீன மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

சீன மொழியினைக் கால அடிப்படையில் ஐந்தாகப் பாகுபாடு செய்துள்ளனர். அவையாவன:-

1. தொல்பழஞ் சீனமொழி (தொடக்கம் முதல் கி.மு.500 வரை)
2. பழஞ்சீனமொழி (கி.மு.500 - கி.பி.100)
3. இடைக்காலச் சீனமொழி (கி.பி.100 -கி.பி.1000)
4. பிற்காலச் சீனமொழி (கி.பி.1000 - கி.பி.1950)
5. நவீனச் சீனமொழி (கி.பி.1950 முதல்)

அச்சுருவாக்கம்

கி.மு.6ஆம் நூற்றாண்டில் மரக்கட்டையில் சீன எழுத்துக்கள் பதிக்கப்பட்டன. கி.பி.11ஆம் நூற்றாண்டில் சீனக்கருமான் (Chinese Blacksmith) ஒருவர் சீன அச்சினை உருவாக்கினார். அச்சுக்கலை கண்டுபிடிக்கப்பட்டபின் சீனப் பனுவல்கள் எங்கும் பரவத் தொடங்கின.

புத்தக எரிப்பும் மீட்டுருவாக்கமும்

சின் (Ch'in) மரபில் தோன்றிய ஷி ஹுவாங்கு-தி பேரரசராக (Emperor) ஆட்சி புரிந்த காலத்தில் மக்களைக் கட்டுப்படுத்தி ஆளும் முயற்சிகள் நிகழ்ந்தன. மக்களின் செயல்களைக் கட்டுப்படுத்துவதைவிட, அவர்களின் சிந்தனையினைக் கட்டுப்படுத்துதல் மிகவும் முக்கியம் என்ற கருத்தினை அப்பேரரசரின் முதலமைச்சர் லீசூ (Li Ssu) கொண்டிருந்தார். இக்கருத்தினைச் செயற்படுத்தும் பொருட்டுக் கி.மு.213இல் பேரரசர்க்கு ஒரு வேண்டுகோளை அனுப்பினார். அதன் சாரம் வருமாறு.[10]

"சின் மாநிலத்தின் அரசு வரலாற்றினைத் தவிர எல்லா வரலாற்று நூல்களும் எரிக்கப்படுதல் வேண்டும். தத்தம் துறைகளுக்குரிய நூல்களைப் பேணிக்காக்கும் பொறுப்பு வழங்கப்பெற்ற அரசாங்கப் பேராசிரியர்களைத் தவிர, பாடற் பனுவல் (The Book of Odes or Songs), வரலாற்றுப் பனுவல் (The Book of History) இன்னோரன்ன நூல்களையும், பல்வேறு தத்துவங்களுக்குரிய நூல்களையும் வைத்திருப்போர் அனைவரும் உள்ளாட்சித்துறை

அதிகாரிகளுக்கு விவரங்கள் தெரிவிப்பதுடன் அவரிடம் உள்ள நூல்கள் அனைத்தையும் ஒப்படைத்தல் வேண்டும்; ஒப்படைக்கப் பெற்றவுடன் அவை அனைத்தும் எரிக்கப்படுதல் வேண்டும். பாடற்பனுவலிலும் வரலாற்றுப் பனுவலிலும் அடங்கியுள்ள பொருள்களைக் குறித்துத் தங்களுக்குள் விவாதிப்பதற்குத் துணிவு கொண்டுள்ளோர் அனைவரையும் பொதுமக்கள் முன்னிலையில் தூக்கிலிடல் வேண்டும். பழைய நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டி நிகழ்கால ஆட்சியை விமரிசிக்கத் துணிவோர் அனைவரும் அவருடைய குடும்ப உறுப்பினர் களுடன் ஒருங்கு சேர்த்துத் தூக்கில் இடப்பெறுதல் வேண்டும். அவர்களைத் தண்டிக்கத் தவறும் அரசாங்க அதிகாரிகளையும் குற்றவாளிகளாகக் கருதி அதே தண்டனை விதிக்கப்படுதல் வேண்டும். அரசு ஆணை வெளியிட்டு முப்பது நாள்களுக்குள் புத்தகங்கள் யாவும் எரிக்கப்பட வில்லை என்றால், குற்றவாளிகளின் முகத்தில் முத்திரை குத்திச் சீனத்தின் வடகோடி எல்லைக்கு நாடு கடத்தப்பட்டுப் பெருஞ்சுவர் (Great Wall) எழுப்பும் பணியில் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும்.

எரிப்பினின்றும் சலுகை பெற்ற நூல்கள் மருத்துவம், நன்னிமித்தம் (Divination), காடு வளர்ப்பு (Forestation) பற்றியவை ஆகும். சட்டம் பயில விரும்புவோர், அரசு அலுவலர் வழிகாட்டலில் பயிலுதல் வேண்டும்."

இந்த வேண்டுகோளினை ஏற்று மாமன்னர் ஷி ஹுவாங்கு-தி (Shih Huang-ti) ஆணை வழங்கியவுடன் புத்தக எரிப்பு ஏற்பாடுகள் நடைபெற்றன. இந்த அடாச் செயலை எதிர்த்துக் குமுறியவர்களும், கருத்து வேறுபாடு கொண்டவர்களும் ஒடுக்கப்பட்டுக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். கி.மு.212இல் தலைநகரில் வாழ்ந்த 460 அறிஞர்களுக்கு மேற்பட்டவர்கள் பேரரசரைக் குறை கூறிய குற்றத்திற்காகவும், மாறுபட்ட கருத்துக்களைப் பரப்பி மக்கள் மனத்தில் குழப்பம் உண்டாக்கிய

குற்றத்திற்காகவும் அவர்களை உயிருடன் புதைப்பதற்கு ஆணையிடப்பெற்றது. நாட்டின் பற்பல மாகாணங்களில் இத்தகைய குற்றங்களைச் செய்தவர்கள் நாடு கடத்தப்பட்டு எல்லைப்புறத்தின் படை வீரர்களாக அனுப்பப்பெற்றனர்.[11]

அறிவுத்துறைக்கு எதிரான செயலில் ஈடுபட்ட சின் (Ch'in) அரசினை எதிர்த்துச் சில ஆண்டுகளில் திடீரெனப் பெரும்புரட்சி ஏற்பட்ட பொழுது, அறிவு ஜீவிகளில் (Intellectuals) ஒருவர் கூட அரசின் பக்கம் சாரவில்லை. சீன நாட்டில் இந்த முதல் சர்வாதிபத்திய ஆட்சியை (Totalitarian regime) ஒருவரும் ஏற்கவில்லை; எந்த வரலாற்றாசிரியரும் ஏற்கவில்லை. மக்கள் சிந்தனையினைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் லீ சூ (Li Ssu) என்பாரின் அறிவுரையின்படி பேரரசர் ஆணையின் பேரில் நிகழ்ந்த புத்தக எரிப்பு சீன வரலாற்றில் களங்கத்தை ஏற்படுத்தி விட்டது. பழைய பனுவல்களை அடியோடு எரிப்பதன் வாயிலாகத் தானே சீன நாட்டின் முதல் பேரரசன் என்ற புதிய வரலாற்றினை வருங்காலத் தலைமுறையினர்க்கு உண்டாக்கிவிட முடியும் என்ற மனப்போக்கும் புத்தக எரிப்புக்கு ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

இக்காட்டுமிராண்டித்தனமான நிகழ்வு நடந்த அறுபதாண்டுகளுக்குப் பின் வந்த மாமன்னர் அறிவுத் துறைக்கு ஏற்பட்ட புண்ணினை ஆற்றும் பொருட்டுத் தப்பியிருந்த பழைய நூல்களின் படிகளைக் கொண்டு இழந்தனவற்றை மீட்டுருவாக்கம் செய்து மக்கள் பயில்வதற்காக எங்கும் பரப்பினர்.[12]

சின் (Ch'in) ஆட்சிக் காலத்தில் மறக்க முடியாத நல்ல செயல்கள் பலவும் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் முன்பிருந்த சீனப் பெருஞ்சுவரை உயர்த்தியமை, நாடு முழுமைக்கும் சமச்சீர் அளவைகள், எடைகள், சட்டங்கள், எழுத்துமுறை, வேளாண்மைத் திட்டங்கள் முதலிய பொதுப்பணிகள், வடஎல்லைப் புறத்திலிருந்து நாடோடிகள்

படையெடுத்து வராமல் பாதுகாப்பினைப் பலப்படுத்தியது, உள்நாட்டுப் பூசல்களை ஒடுக்கியது என்பன குறிப்பிடத் தக்கவை. சிதறிக் கிடந்த பல மாநிலங்களையும் சின் கால அரசு ஒருங்கிணைத்த செயல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகக் கருதப்படுகிறது.[13]

சீனம் பற்றிய பொதுவான சில கருத்துக்களைக் கண்டோம். இனி, சீனத்திற்கும் தமிழகத்திற்கும் ஈராயிரம் ஆண்டுகளாக நிலவி வந்துள்ள வாணிகம், அரசியல், சமயம் சார்ந்த தொடர்புகள் சிலவற்றை இங்குக் காண்போம்.

சீனமும் தமிழகமும்

சீனமொழி பற்றிய குறிப்பு

சங்க இலக்கியத்தில் மொழிபெயர் தேயங்களுக்குத் தமிழ் வணிகர் சென்று வந்துள்ள செய்தி இடம்பெற்று உள்ளது. பாலை வழியாகப் பயணம் செய்தனர் என்றும் அறிகிறோம். சங்க இலக்கியத்தில் பாலைத்திணைப் பாடல்களே மிகுதி. இந்திய நாட்டிலும் பாலைவனம் உண்டு. இமயம் தாண்டிச் செல்லும் பொழுது பாலைப் பகுதியைக் காணலாம். சீனத்தில் கோபி பாலைவனம் சுட்டத்தக்கது. தமிழ் வணிகர்கள் இங்கெல்லாம் சென்றிருத்தல் கூடும். ஆனால், ஆவணச் சான்று கிடைக்காததால் உறுதியாக எதனையும் கூற இயலவில்லை.

சங்க இலக்கியத்தில் பட்டாடைகள் பேசப்படுகின்றன. இவற்றைத் தமிழர்களே உருவாக்கினார்களா? பட்டுப்பூச்சி வளர்ப்பு சங்க காலத் தமிழகத்தில் உண்டா? விடை கிடைக்கும்வரை, பட்டுக்குப் பேர் பெற்ற சீனத்திலிருந்து பட்டுத் துணிகள் தமிழகத்திற்கு வந்தன எனக் கருதலாம்.

செந்தமிழ் நாட்டினைச் சேர்ந்த பன்னிரு நிலத்திலும் வழங்கிய திசைச் சொற்களைத் தொல்காப்பியரும் நன்னூலாரும் குறித்துள்ளனர். இவை வட்டார வழக்குகளாக (Dialects of the same Language) அமைந்தவை. ஆயினும், தமிழகம்

சாராத அயல்நாடுகளிலிருந்து வந்தோர் பேசிய மொழிகளையும் திசைச் சொற்கள் என்று எண்ணும் மரபும் தோன்றியுள்ளது. காஞ்சிமா நகரில் பதினெட்டு மொழிகள் பேசிய மக்கள் மொய்த்திருந்தனர் என்று பௌத்தக் காப்பியம் மணிமேகலையில் *(28.221)* சாத்தனார் பொறித்துள்ளார். இவர் காலம் கி.பி.5ஆம் நூற்றாண்டு. திருமூலர் பண்டிதர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர் பதினெட்டு மொழிகளில் புலமை பெற்றவர் என்று திருமந்திரத்தில் *(59)* சொல்லியுள்ளார். பல நாட்டவர் பேசும் பதினெட்டு மொழிகளின் ஓசைகளுக்குப் பல்வேறு பறவைகள் எழுப்பும் ஒலிகளைத் திருத்தக்கதேவர் சீவகசிந்தாமணியில் *(93)* உவமை கூறியுள்ளார். கி.பி.8ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட திவாகர நிகண்டில் தமிழர்க்கு அறிமுகமாகியிருந்த பதினெட்டு மொழிகளில் சீனமும் ஒன்றெனக் கூறப்பட்டுள்ளது. இந்நிகண்டில்,

அங்கம் வங்கம் கலிங்கம் கௌசிகம்
சிந்து சோனகம் திரவிடம் சிங்களம்
மகதம் கோசலம் மராடம் கொங்கணம்
துளுவம் சாவகம் சீனம் கம்போஜம்
பருணம் பப்பரம் எனப்பதினெண் பாடை

என வரும் நூற்பா இங்கு எண்ணத்தக்கது.

தமிழர்கள் அண்டை நாடுகளுடனும் அயல்நாடுகளுடனும் கொண்டிருந்த தொடர்பு காரணமாகப் பல்வேறு மொழிகளைப் பேசுவோரைப் பற்றிய குறிப்புக்களைத் தமிழிலக்கியங்கள் தாங்கி நிற்கின்றன. கி.பி.12ஆம் நூற்றாண்டில் பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலுக்கு, அவர் மாணவர் எனக் கருதப்படும் மயிலைநாதர் எழுதியுள்ள உரையில் பின்வரும் பாடல் எடுத்துக்காட்டப்படுகிறது.

“சிங்களம் சோனகம் சீனம் துளுக்குடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலிங்கம் கலிங்கம்வங்கம்
கங்கம் மகதம் கடாரம் கவுடம் கடுங்குசலம்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்நிலம் தாம்இவையே”

தமிழுடன் இவற்றையும் சேர்த்துப் பதினெண் மொழிகள் என்று கணக்கிட்டுள்ளனர். இந்த வரிசையில் சீனம் எண்ணப்பட்டிருத்தல் நோக்குதற்கு உரியது.

கி.பி.10ஆம் நூற்றாண்டினராகிய கம்பர், சீனர் என்ற சொல்லினால் அந்நாட்டு மக்களைக் குறித்துள்ளார் (காண்க: இராமாவதாரம், மிதிலை, 99). கி.பி.12ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டினை ஆட்சி புரிந்த இரண்டாம் குலோத்துங்க சோழனுக்குக் (கி.பி.1133-1150) கப்பம் கட்டி வந்த மன்னர்களின் வரிசையில் சீன மன்னரும் இடம்பெற்றனர். இவ்வுண்மையினை, பூமன்னு பதுமம் என்ற அவன் மெய்க்கீர்த்தி உறுதிப்படுத்துகிறது. நீண்ட இம்மெய்க்கீர்த்தியில்,

"..... கங்கர் சோனகர் கைகயர் சீனர் என்(று)
அறைகழல் வேந்தரும் எல்லா அரைசரும்
முறைமையில் வருந்தித் திறைகொணர்ந் திறைஞ்ச"

என வரும் பகுதி எண்ணத்தக்கது.

சீன மொழியில் காஞ்சி மாநகரினை Houang-tahe என்றும், சோழன் என்ற சொல்லினை Chu-lien என்றும், இராசராசனை Lo-tsa-lo-tsa என்றும், ஸ்ரீஇராசேந்திர சோழனை, Shi-bo-lo-cha Yin-to-lo- Chu-lo என்றும், ஸ்ரீநரசிம்மவர்ம போத்தரையனை Che-Na-lo-seng-k'ia-pao-to-pa-ma என்றும் சீன வரலாற்றாசிரியர்கள் குறித்துள்ளனர்.

எனவே, சீன நாட்டிற்கும் தமிழகத்திற்கும் நெடுங் காலமாகவே அரசியல், பண்பாட்டு, வணிகத் தொடர்புகள் தழைத்தோங்கியிருத்தல் வேண்டும் என்ற கருத்து உறுதி பெறுகிறது.

வாணிகத் தொடர்பு

சீன நாட்டிலிருந்து தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களில் பட்டுக்குச் சிறப்பிடம் உண்டு. நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதரும்

'இப்பட்டுச் சீனம்' என்று சுட்டியுள்ளார்.[15] கி.பி.12ஆம் நூற்றாண்டினராகிய அடியார்க்குநல்லார், தொண்டித் துறைமுகத்திலிருந்து பெறப்பட்ட பொருள்களில் சீனச்சூடன் என்ற கருப்பூர வகையினைச் சிலப்பதிகார உரையில் (14.107-109) குறித்துள்ளார்.

சீன நாட்டுப் பொருள்கள் பலவற்றைத் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon, pp.1491-92) திரட்டித் தந்துள்ளது. அவற்றுள் சீனக்கண்ணாடி, சீனக்கர்ப்பூரம், சீனக்காரம் என்னும் படிக்காரம், சீனக்கிழங்கு, சீனத்துமுத்து, சீனநெல், சீனப்பரணி (சாடி), சீனப்பா, சீனப்பாகு, சீனமிளகு (-வால்மிளகு), சீனி (சருக்கரை), சீனிவெடி முதலியவை சுட்டத்தக்கவை. இவற்றுள் மருத்துவத் தொடர்பான பொருள்கள் பல உள்ளன. சீன மருத்துவத்திற்கும் சித்த மருத்துவத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கி.பி.15ஆம் நூற்றாண்டினராகிய நச்சினார்க்கினியர், சீனம் முதலிய இடங்களினின்றும் பூம்புகார் துறைமுகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட கருப்பூரம், பனிநீர், குங்குமம் முதலியவற்றைப் பட்டினப்பாலையின் (192) உரையில் குறித்துள்ளார். இவரே, ஐயறிவுடையோர் என்ற வரிசையில் சீனர், சோனகர் என்பாரையும் இதே பாட்டின் (216/17) உரையில் எண்ணியுள்ளார். இங்ஙனம் இவர் எண்ணியதற்கு உரிய அடிப்படை புலப்படவில்லை.

கி.பி.1012-1044 என்ற காலப் பகுதியில் சோழப் பெருவேந்தனாக விளங்கிய முதலாம் இராசேந்திரனின் தலைநகராகிய கங்கைகொண்ட சோழபுரத்தில் நடந்த புதைபொருளாய்வில் சீனப் பொருள்கள் கண்டெக்கப்பட்டு உள்ளன. அவற்றுள் சீனப்பீங்கான் பாண்டங்களின் ஓடுகளும் அடங்கும். முதலாம் இராசேந்திர சோழனால் கி.பி.1033இல் சீனப் பேரரசர்க்கு அனுப்பப்பட்ட நல்லெண்ணத் தூதுவர்களால் இந்தப் பாண்டங்கள் கொண்டுவரப்பட்டிருத்தல் வேண்டும் என்று கரஷிமா

(Karashima) கருதுகிறார். இந்தப் பீங்கான் பானை ஓடுகளில் யிங்கு கிங்கு கிண்ணம் (Ying ging Bowl), குவாங்குடோங்கு சாடி (Guangdong jar), பச்சைக் கண்ணாடிக் கிண்ணம் ஆகியவற்றின் ஓடுகளும் அடங்கும். முதலாம் இராசேந்திர சோழனின் காலத்தில் சோழப் பேரரசு தென்கிழக்கு ஆசியப் பகுதியில் கொண்டிருந்த அரசியல், வாணிகத் தொடர்பு காரணமாகவும் சீனப்பொருட்கள் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு வந்திருத்தல் வேண்டும் என்றும் வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்.[16]

முதலாம் இராசேந்திரனின் மகள் வயிற்றுப் பேரன் முதற்குலோத்துங்கன் சீனம் முதலிய அயல்நாடுகளிலிருந்து தமிழகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்கு வரிவிலக்கு வழங்கினான். அதனால், சுங்கம் தவிர்த்த சோழன் என்று போற்றப்பெற்றான்.

தமிழகத்திலிருந்து சீன நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களையும் வரலாற்றாசிரியர்கள் குறித்துள்ளனர். பருத்தி ஆடை, நறுமணச் சரக்குகள் (Spices), மருந்துகள் (Drugs), அணிகலன்கள், யானைத் தந்தம், ரைனோசெரசின் (-காண்டாமிருகத்தின்) கொம்பு, கருங்காலி, ஓர்க்கோலை (அம்பர்), பவழம், நறுமணப் பொருள்கள் (Perfumes) என்பனவற்றைத் தமிழகத்திலிருந்து சீனர் விரும்பிப் பெற்றனர். பின்னர்ச் சுட்டப்பட்ட பொருள்களின் உயர் மதிப்பு காரணமாக அவற்றை விற்கும் உரிமை தனக்கே உரியதென்று சீன அரசு பிரகடனம் செய்தது. இந்தப் பொருள்கள் யாவும் விற்பனை உரிமம் பெற்றவர் வழியாக மக்களிடம் விற்கப்படுதல் வேண்டும் என்று சீன அரசு ஆணை பிறப்பித்தது. அரசு வரையறுக்கும் விலையில்தான் இப்பொருள்கள் விற்கப்பட்டன.[17]

கி.பி.12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சீனச் சுங்க அதிகாரியும் வரலாற்றாளரும் ஆகிய சௌஜுகுவா (Chau Ju-Kua) என்பார் சோழ நாட்டிலிருந்து

பெறப்பட்ட பொருள்களைப் பற்றிய ஒரு பட்டியலைத் தந்துள்ளார். இதில் முன் கூறப்பட்டுள்ள பொருள்களுடன் முத்துக்கள், கண்ணாடிக்கல், பாக்கு, சந்தனக் கட்டை, ஏலக்காய், பளிங்குக்கல் முதலியவையும் குறிக்கப்பட்டுள்ளன.[18]

சீன நாட்டில் மங்கோலிய மன்னன் குப்லேகான் ஆட்சி செலுத்திய காலத்திலும் (கி.பி.1300) தமிழகத்திற்கும் அந்நாட்டிற்கும் நல்லெண்ணக் குழுக்களின் பரிமாற்றம் இருந்து வந்துள்ளது.[19]

பான் கௌ (Pan Kau) வழங்கும் குறிப்புக்கள்

கி.மு.50-கி.பி.50 என்ற காலப் பகுதியில் வாழ்ந்த சீன வரலாற்றறிஞர் பான் கௌ (Pan Kau) என்பார், தமிழகத்திற்கும் ஹன் அரசுமரபு (Han Dynasty கி.மு.202) ஆட்சி செய்த சீனத்திற்கும் நட்புறவு தழைத்திருந்தது என்று குறித்துள்ளதைப் பால் பெல்லியாட் (Paul Pelliot) என்னும் அறிஞர் முதன் முதல் கண்டுணர்த்தினார்.[20] காஞ்சி வேந்தர்க்குப் பேரரசர் வூ (Emperor Wu கி.மு.140-86) காலம் முதலாகப் பரிசுப் பொருள்கள் அனுப்பப் பெற்றுள்ளன. Howng-tche என்ற சீனப்பெயர் காஞ்சியைக் குறிப்பதாக ஃபெர்ராண்ட் (Ferrand) ஆராய்ந்து கூறியுள்ளார்.[21] சீனம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் தேர்ச்சி பெற்ற அறிஞர்கள் இருந்தனர். இவர்கள் இருநாட்டு வாணிகத்தின்பொருட்டு அரசால் அங்கீகரிக்கப்பட்டவர்கள். கடல்வழியாகத்தான் வாணிகம் நடைபெற்றது. முத்துக்கள், கண்ணாடி, அரிய விலையுயர்ந்த கல் வகைகள், வியத்தகு கைவினைப் பொருள்கள் என்பனவற்றைக் கொடுத்துச் சீனத்தின் பட்டினையும் தங்கத்தினையும் தமிழர்கள் பண்டமாற்றுமுறைப்படி பெற்றனர். பெரிய முத்துக்கள் ஒவ்வொன்றும் ஏழ் அங்குலம் கொண்டது.

ஹன் மரபுக்குப்பின் வங்குமங்கு (Wang Mang) என்பார் கி.பி.8இல் ஹிசின் (Hsin) அரச மரபினைத் (Dynasty)

தொடங்கினர். ஹிசின் என்ற சீனச் சொல்லிற்குப் 'புதிய' என்பது பொருள். இம்மன்னர் கன்பூசியசின் நூல்களைக் கற்றறிந்தவர். சௌமரபின் (Chou Dynasty கி.மு.1122 - கி.மு.249) பொற்காலத்து ஆட்சியை மீண்டும் கொண்டுவரப் பாடுபட்டவர். பேரரசர் வங்குமங்கு (கி.பி.8-23) பேரரசர் வூவைப் (Emperor Wou) போலவே காஞ்சி வேந்தர்க்கு விலையுயர்ந்த பரிசுப் பொருட்களை அனுப்பினார். தன்னாட்டிற்கு ஒரு தூதுவரையும் அனுப்பிவைக்கும்படி வேண்டினார். அவர் வரும் பொழுது உயிருடன் ஒரு ரைனாசெரசைக் கொண்டு வரும் படியும் கேட்டுக் கொண்டார் என்று பான் கௌ (Pan Kou), Ts'ien han Chou என்ற தம் நூலில் குறித்துள்ளார். மேலும் காஞ்சி மண்டலத்திலிருந்து சீனம் செல்லுவதற்குரிய வழியையும் சுட்டியுள்ளார். அங்கிருந்து (கடல்மல்லை அல்லது நாகப்பட்டினத்திலிருந்து) மலாயா தீபகற்பத்தின் மேலைக் கரையில் உள்ள பிசாங்கு (P'i-tsong) என்னும் தீவினைப் படகுப் பயணத்தின் மூலம் எட்டுத் திங்களில் அடையலாம்; அங்கிருந்து நிலவழியாகச் சீனம் செல்ல வேண்டும் என்று குறித்துள்ளார்.

தமிழகத்திலிருந்து சீனத்திற்கு நீர்வழி, நிலவழியாகச் சென்றடைய பத்துத் திங்கள் முதல் ஓராண்டு ஆகும் என்று பான் கௌ (Pan Kau) கி.பி. முதல் நூற்றாண்டில் எழுதியுள்ள குறிப்பும்; கி.பி.12ஆம் நூற்றாண்டில் சோழ மண்டலத்திலிருந்து சீனத்திற்குச் செல்ல எட்டுத் திங்கள் ஆகும் என்று சௌ ஜுகுவா (Chau Ju-Kua) எழுதியுள்ள குறிப்பும் மிகுதியாக வேறுபடவில்லை. 1100 ஆண்டு இடைவெளியில் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினைப் பின்னவர் குறிப்புப் புலப்படுத்துகிறது.

சீன ஆசிரியர் சுட்டும் கி.மு.2ஆம் நூற்றாண்டில் அரசு புரிந்த காஞ்சிவேந்தர் இன்னார் என்று அறியப்படவில்லை. சங்க காலத்தில் காஞ்சி மண்டலத்தினைச் சோழ மரபினர் ஆட்சி புரிந்தனர். பிற்காலத்திலும் இராசராசன் உள்ளிட்ட

சோழ வேந்தர்க்கும் சீனவேந்தர்க்கும் நல்லுறவு நிலவியதால், இத்தொடர்பு சங்க காலத்துச்சோழரின் ஆட்சிக் காலம் முதலாகவே தொடர்ந்து வந்துள்ளது என்று எண்ணலாம்.

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்த தொண்டைமான் இளந்திரையன் பெயரில் பாடப்பட்ட பெரும்பாணாற்றுப்படை என்னும் இலக்கியம் அவனுடைய பன்மாண் சிறப்புக்களையும் பாரித்துப் பேசுகிறது. இதனைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

மலர்தலை உலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறல் மூதூர்...
கச்சி யோனே கைவண் தோன்றல் (410-11;420)

என்று காஞ்சிமா நகரையும், அதன் வேந்தனையும் போற்றுதல் நோக்கத்தக்கது. உலக நகராகக் காஞ்சிமாநகர் விளங்கியது என்ற குறிப்பினால் சீன நாட்டுடனும் தொடர்பு கொண்டிருந்த நகர் என்று உய்த்துணரலாம்.

காஞ்சிப் பல்லவரும் சீனத் தொடர்பும்

கி.பி.8ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காஞ்சிமா நகரின் வேந்தனாக விளங்கிய இரண்டாம் நரசிம்மவர்மன் எனப்படும் இராசசிம்ம பல்லவன் கி.பி.720இல் சீன அரசனுக்கு ஒரு தூதுக்குழுவினை அனுப்பி, அரபியருடனும், திபெத்தியருடனும் தான் போர் தொடுக்க இருப்பதாகவும், தன் படைக்குப் பெயரிடுமாறும் கேட்டிருந்தான். சீனப் பேரரசனின் பொருட்டு ஒரு கோயில் கட்டியிருப்பதாகவும் அவன் அதற்குப் பெயர் சூட்ட வேண்டும் என்றும் கேட்டிருந்தான். இச்செய்தி கி.பி.11ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட சீனக் கலைக்களஞ்சியத்தின் சுருக்கத்திலிருந்து பெறப்படுகிறது.

இராசசிம்ம பல்லவன் அனுப்பிய தூதரைச் சீன அரசன் மரியாதையும் மதிப்பும் அளித்து வரவேற்றதாகவும் அந்நூல் கூறுகிறது. இப்பல்லவனின் விருப்பங்களை

நிறைவேற்றும் பொருட்டுச் சீன வேந்தனும் ஒரு தூதுக் குழுவினைக் காஞ்சிமாநகர்க்கு அனுப்பினான். இச்சீனப் பேரரசனின் பெயர் ஹியூன்-சுங்கு (Heuen-tsang. கி.பி.713-756). கி.பி.8ஆம் நூற்றாண்டில் சீனத்திற்கு எதிரிகளாக விளங்கியவை அரபு நாடும் திபெத்தும் என்பதால், பல்லவனின் வேண்டுகோளைச் சீன வேந்தர் விரும்பி ஏற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.[22]

வச்சிரபோதி மகாயான பௌத்தத்தினைச் சேர்ந்தவர். கி.பி.661இல் பிறந்தவர். இவர் தமிழகத்தவர். சீன நாட்டிற்குச் சென்ற தென்னகத் தூதுக்குழுவினால் மிகவும் போற்றப்பட்டவர். இவர் நாலந்தாப் பல்கலைக் கழகத்தில் இருபத்தாறு வயது வரை பயின்றவர். கி.பி.689இல் புத்தர்பிரானின் பிறப்பிடமாகிய கபிலவத்துவைக் கண்டு வணங்கினார். காஞ்சி மாநகர் மூன்றாண்டுகள் மழையின்றி அல்லலுற்றது. (இரண்டாம்) நரசிம்ம போதவர்மனின் வேண்டுகோளினால் வச்சிரபோதி தன் வழிபாட்டுத் திறனால் மழை பொழியச் செய்தார். பின் இலங்கை சென்றார்; மஞ்சுஸ்ரீயை (Manjusri) வழிபட்டார். பின் காஞ்சிக்குத் திரும்பினார். இரண்டாம் நரசிம்மவர்மன் கொடுத்த பரிசுப் பொருள்களுடனும் தூதுவருடனும் சீனப் பேரரசனைக் காணும் பொருட்டுக் கடற்பயணம் மேற்கொண்டார். காண்டனில் (Canton) இறங்கி நில வழியாகப் பயணத்தைத் தொடர்ந்து கி.பி.720இல் சீனத் தலைநகரை அடைந்தார்.[23]

போதிசேனர் (Bodhisena) தமிழந்தணர், மகாயான பௌத்தர். கி.பி.733இல் மஞ்சுஸ்ரீயை வழிபடும் பொருட்டுச் சீனம் சென்றார். இவர் சப்பான் நாட்டிலும் பௌத்தத்தினைப் பரப்பியவர். அம்மொழியில் சோஜோ (Sojo) என்று அழைக்கப்பட்டார். சப்பானில் உள்ள பௌத்தப் பள்ளிகள் அனைத்திலுமுள்ள பிட்சுக்களுக்கு இவர் தலைவராகத் திகழ்ந்தவர்.[24] தியான பௌத்தத்தினைச் சீனத்தில் பரப்பிய போதிதருமர் (Bodhidharma) காஞ்சிப்

பேரரசரின் மூன்றாம் மைந்தர் என்று யமாகமி சோகன் (Yamagomi Sogan) Systems of Buddhist Thought என்ற தம் நூலில் குறித்துள்ளார்.

இந்தியாவிற்கு வந்த சீனப் பயணிகளில் தமிழகத்தில் பல காலம் தங்கியிருந்த சிறப்புக்குரியவர் யுவான் சுவாங்கு (Yuan Chwang). இவர் கி.பி.7ஆம் நூற்றாண்டினர். திராவிட தேசத்தின் தலைநகர் காஞ்சிமாநகர் என்று குறிப்பிட்டுள்ளார்.[25] கி.மு.2ஆம் நூற்றாண்டில் Houang-tche என்று சீன மொழியில் குறிக்கப்பட்ட காஞ்சி, கி.பி.7ஆம் நூற்றாண்டில் யுவாங்சுவாங்கு குறிப்பில் Kan-Chih-pu-lo (-காஞ்சிபுரம்) என்று வழங்கப்பெற்றது. சீனர்கள் பழக்கம் மிகுதியால் கூடக்குறையத் தமிழொலிக்கு நெருக்கமாகவே அவரின் ஒலிப்பு இருந்ததை இதனால் உணரமுடிகிறது.

காஞ்சிமா நகரினையும் தொண்டை நாட்டினையும் இந்தச் சீனப் பயணி சிறப்பாகப் போற்றியுள்ளார். அவர் குறிப்புக்களைக் காண்போம். திராவிடம் 6,000 லீ (Li) சுற்றளவும் காஞ்சிபுரம் 30 லீ (Li) சுற்றளவும் கொண்டவை. நிலம் வளம் மிக்கது. கனிகளும் மலர்களும் நிறைந்துள்ள நாடு. விலையுயர்ந்த பொருள்கள் பற்பல இங்கு உள்ளன. இந்நாட்டு மக்கள் வீரம் செறிந்தவர்கள். முழு நம்பிக்கைக்கு உரியவர்கள். பொதுநல உணர்வினர். கல்விப் பெருக்கினைப் பெரிதும் மதித்தவர்கள். மத்திய இந்திய எழுத்து மற்றும் பேச்சு மொழியினின்றும் இவர்கள் மொழி வேறுபாடு உடையவர்கள். இங்கு 100 பௌத்தப் பள்ளிகளும் 10,000 பிட்சுக்களும் உள்ளனர். இவர்கள் தவிரவாதப் பௌத்தப் பிரிவினைச் (Sthaviravada-தேரவாதம்) சேர்ந்தவர்கள். தேவக்கோட்டங்கள் எண்பதுக்குமேல் உள்ளன. இவற்றுள் பலவும் திகம்பரச் சமணர்க்கு உரியவை.

இந்த நாட்டிற்குப் புத்தர் அடிக்கடி வந்துள்ளார். மாமன்னர் அசோகர் புத்தர் போதனை புரிந்த இடங்களில்

தூபிகளை (Topes) எழுப்பியுள்ளார். அங்குப் பிட்சுக்கள் வாழ்கின்றனர். திராவிடத்தின் தலைநகர் (-காஞ்சி) தருமபாலரின் பிறப்பிடம் ஆகும். (இவர் பௌத்த தருக்கம், பௌத்த தத்துவம் பற்றி நூல்கள் எழுதியவர்). இவர் காஞ்சி வேந்தனிடம் பணிபுரியும் உயரதிகாரியின் மூத்தமகன். அழகுருவானவர். காஞ்சி வேந்தன் தன் மகளை இவருக்குத் திருமணம் முடிக்க எண்ணிய பொழுது பகவான் புத்தரின் அருளால் காஞ்சி மாநகரைவிட்டு வெளியேறி வடக்கே சென்றுவிட்டார்.

இவ்வாறு யுவாங் சுவாங்கு காஞ்சி மாநகரைப் பற்றிய குறிப்புக்களை வழங்கியுள்ளார்.[26] பாண்டிய நாட்டினைப் பற்றியும் பொதிய மலையைப் பற்றியும் அங்கு வழிபடப்பட்ட போதிசத்துவர் அவலோகிதரைக் குறித்தும் இவர் எழுதியுள்ளவை குறிப்பிடத்தக்கவை. கி.பி.11ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட வீரசோழியத்தில் இந்தப் போதிசத்துவர் போற்றப்பட்டுள்ளார்.

போகரும் சீனமும்

போகர் தமிழ்ச் சித்தர்களில் ஒருவர். இவர் பிறப்பினால் சீனர் என்றும் கொள்கையால் பௌத்தர் என்றும் கருதப்பட்டார். ஒரு சாரார் இவர் தமிழர், சீனம் சென்றவர் என்றும் கூறுகின்றனர். போகரின் சப்தகாண்டம் என்ற நூலின் பதிப்பாசிரியர் S.A.A. இராமையா, போகர் தமிழகத்திலிருந்து சீனம் சென்ற சித்தர் என்று குறித்துள்ளார். அங்கு காயகல்பம் உண்டு நெடுங்காலம் வாழ்ந்திருந்தார். அங்கு இறந்து போன சீனர் ஒருவரின் உடலில் பரகாயப் பிரவேசம் என்ற சித்தி வல்லபத்தால் புகுந்து போ யங்கு (Bo-Yang) என்ற பெயர் பெற்றார் என்பது அவர் கருத்து. போகர் ஞானசாகரம் என்ற நூலின் இரண்டாம் பாடலில் போகர், தன்குரு காலிங்கநாதரிடம் யோகப் பயிற்சி பெற்று ஞானம் அடைந்ததாகக் கூறியுள்ளார். போகர் நூல்களை விரிவாக ஆராய்ந்த அமெரிக்க நாட்டுச் சித்த நூல் அறிஞர்

மார்ஷல் கோவிந்தன் (Marshal Govindan) பின்வருமாறு குறித்துள்ளார்.

கடல் வாணிக வழியாகப் போகநாதர் சீனம் சென்றார். இவருக்குச் சித்தர் கலைஞானம் முழுவதையும் காலங்கிநாதர் கற்பித்திருந்தார். காலங்கிநாதர் சமாதி கூடியதும், போகநாதர் சீனர்களுக்குச் சித்தர் கலையினைப் போதிக்கும் பணியைத் தொடர்ந்தார். இதன் பொருட்டு இறந்த சீனர் ஒருவரின் உடலில் தான் புகுந்துகொண்டு போ-யங்கு (Bo-Yang) என்ற பெயரில் போதித்து வந்தார்.[27]

எனவே, சித்தர்களுக்கும் சீனத்திற்கும் தொடர்பு உண்டு என்பது புலனாகும். போகர் நவபாடாணங்களைக் கொண்டு பழனியில் தண்டாயுதபாணி ஆகிய முருகனின் திருவுருவச் சிலையினை அமைத்தார் என்பது நெடுங்காலமாக வழங்கிவரும் செய்தியாகும். இவர் சீடர் புலிப்பாணிச் சித்தர். இவரும் பழனி முருகனிடம் பக்தி பூண்டிருந்தவர். இவர் மரபினோர் இக்கோயிலின் வழிபாட்டுப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இனி, சீனத்துக்கும் சோழப்பேரரசுக்கும் இடையே நிலவிய நல்லுறவு குறித்துச் சுருக்கமாகக் காண்போம்.

சுங்கு அரசரும் சோழப்பெருவேந்தரும்

கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி.13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த சீன வரலாற்றாசிரியர் சௌ-ஜு-குவா (Chau-Ju-Kua) சீனத்திற்கும் சோழத்திற்கும் இடையே நிலவிய அரசியல், வாணிகத் தொடர்புகளைக் குறித்துள்ளார். கி.பி.10ஆம் நூற்றாண்டு முதலாகச் சீனம் கடல் வாணிபத்தில் அக்கறை காட்டியுள்ளது. சுங்கு அரசு மரபின் (Sung Dynasty. கி.பி.960-1279); Song என்று K.A.N. சாத்திரி குறித்துள்ளார்), வேந்தர் வெளிநாட்டு வாணிகத்தினைப் பெருக்கும் பொருட்டுச் சீனத்திலிருந்து தூதுக் குழுவினரை அரசு முத்திரை

பதிக்கப்பெற்ற ஆணைப் பத்திரங்களுடன் தமிழகம் உள்ளிட்ட அயல்நாடுகளுக்கு அனுப்பினர். அவர்கள் பரிசுப் பொருள்களையும் கொண்டு சென்றனர். சுங்கு மரபின் வரலாற்று ஆவணத்தில், மாமன்னன் முதலாம் இராசராசன் (கி.பி.985-1014) அனுப்பிய தூதுவர் குழு கி.பி.1015இல் சீன தேசத்தை அடைந்தது என்ற குறிப்பு இடம்பெற்றுள்ளது. இதே ஆவணத்தில், முதலாம் இராசேந்திர சோழனால் (கி.பி.1012-1044) அனுப்பப்பெற்ற தூதுக் குழுவினர் கி.பி.1033இல் சீனம் வந்தடைந்த செய்தியும் பொறிக்கப்பட்டுள்ளது. முதலாம் குலோத்துங்கசோழன் (கி.பி.1070-1120) அனுப்பிய தூதுக் குழுவினர் கி.பி.1077இல் அந்நாட்டிற்குப் போய்ச் சேர்ந்ததையும் அதே ஆவணம்[28] குறிப்பிடுகிறது. இந்தத் தூதுக் குழுவினைப் பற்றிய கூடுதல் விவரங்களை இந்தச் சீன ஆவணம் குறிப்பிடுகிறது. இக்குழுவில் எழுபத்திருவர் இடம்பெற்றனர். இவர்கள் பரிசுப் பொருள்கள் பலவற்றைச் சீன வேந்தனிடம் வழங்கினர். அவ்வேந்தனும் எதிர் வரிசையாகப் பல்வேறு உயர்பொருட்களைச் சோழ வேந்தனுக்குக் கொடுக்கும்படி வழங்கினான்.[29]

சைலேந்திர மரபின் மாற விசயோத்துங்க வர்மனின் ஸ்ரீவிஜயா நாட்டின் கடற்கரை தமிழகத்துக்கும் சீனத்துக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலமாக விளங்கியது. இவ்வேந்தன் சோழப் பேரரசர்களுடன் (கி.பி.985-1044) நட்புறவு கொண்டவன் என்பது குறிப்பிடத்தக்கது. இவன் வேண்டுகோளினால் நாகப்பட்டினத்தில் புத்தர்பிரானுக்குக் கோயில் எடுக்கப்பட்டு இறையிலி நிலங்களும் வழங்கப்பட்டன என்ற செய்தி ஆனைமங்கலம் செப்பேட்டினால் அறியப்படுகிறது.

சீனக்குறிப்பும் சோழன் மெய்க்கீர்த்தியும்

முதலாம் இராசேந்திரசோழன் (கி.பி.1012-1044) தன் கப்பற் படையின் ஆற்றலால் கடாரத்து அரசன் சங்கிராம

விசயோத்துங்க வர்மனை வென்று அவனுக்குரிய ஸ்ரீவிசயம், பண்ணை, மலையூர், மாயிருடிங்கம், இலங்காசோகம், பப்பாளம், இலிம்பங்கம், வளைப்பந்தூர், தக்கோலம், தமாலிங்கம், இலாமுரிதேசம், நக்கவாரம், கடாரம் ஆகிய இடங்களைக் கைப்பற்றிய செய்தியைத் 'திருமன்னி வளர இருநில மடந்தையும்' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி (கி.பி.1042) புலப்படுத்துகிறது.

சௌ ஜூ-குவா (Chau Ju-Kua) என்ற சீன ஆசிரியர், மாறவிசயோத்துங்கவர்மனின் ஸ்ரீவிஜயப் பேரரசில் (-இதனைச் சீன மொழியில் **San-fo-tsi** எனக் குறித்தார்) அடங்கியிருந்த 15 மாகாணங்களின் பெயர்களைப் பட்டியலிட்டுள்ளார். இவற்றுள் பலவும் மேலே சுட்டப்பட்ட மெய்க்கீர்த்தி குறிப்பிடும் இடப்பெயர்களுடன் ஒத்திருத்தலை வரலாற்றாசிரியர்கள் ஆராய்ந்து கூறியுள்ளனர். கடலே அகழியாகப் பெற்ற மாயிருடிங்கம் என்ற இடத்தை ஜி-லோ-திங்கு (Ji-lo-ting) என்று சௌ ஜூ-குவா சுட்டியுள்ளார். இப்பகுதி ஸ்ரீவிஜயாவின் வடமாகாணங்களில் ஒன்றாகும். இது மலாய் தீபகற்பத்தினை ஒட்டிய பகுதியாகும். இலங்காசோகம் என்பதை இதே சீன ஆசிரியர் லிங்யசேயுகியா (Ling-ya-sseu-kia) என்று குறித்துள்ளார். இப்பகுதி மலாய் தீபகற்பத்தின் வடமாநிலமாகிய கெடாவிற்குத் தென்பால் இருந்துள்ளது. தமாலிங்கம் என்பதும் சீன ஆசிரியர் கூறும் தன்மாலிங் (Tan-maling) என்பதும் ஓரிடத்தையே சுட்டுகின்றன. மலாய் தீபகற்பத்தில் குவாந்தான் ஆறு கடலில் கலக்கும் இடத்தை ஒட்டி இருக்கும் தெமிலிங் (Temiling) என்ற பகுதியும் இதுவும் ஒன்றே என்பர். சுமத்திராவின் வட பகுதியாகிய இலாமுரி தேசமும் சீன ஆசிரியர் சுட்டும் லன்-வௌ-லியும் (Lan-Wou-li) ஓரிடத்தையே குறிப்பனவாகும். கடாரம் (Kedah) சீனமொழியில் கீச்சா (Kie-tch'a) என்று வழங்கும் என்பர் கோடசு (Coedes).[30]

சீனக்குறிப்பில் சோழர் நீதிமுறைமை

சௌ ஜூ-குவா (Chau Ju-kua) சோழர் நீதி முறைமை பற்றியும் சில குறிப்புக்களைத் தந்துள்ளார்: "மக்களில் யாரேனும் ஒருவன் குற்றம் புரிந்திருப்பின், அமைச்சருள் ஒருவர் அவனுக்குத் தண்டனை வழங்குவார். குற்றம் சிறிதாக இருப்பின், குற்றவாளியை மரத்தில் கட்டிவைத்துக் குற்றத்தின் அளவுக்குத் தக்கவாறு 50, 70 முதல் 100 அடிகள் கம்பினால் (Stick) அடிப்பர். கடுங்குற்றம் செய்தவனுக்குச் சிரச்சேதம் தண்டனையாக வழங்கப்படும்; அல்லது, அவன் இறக்கும்வரை களிற்றினை ஏவி அவனை மிதிக்கும்படி தண்டனை வழங்கப்படும்."[31]

மரத்தில் கட்டிவைத்து அடித்தல் சங்க காலத் தமிழகத்தில் இருந்தது என்பதற்கு அகநானூற்றுப் பாடலும் (256.16-21) யானையினை ஏவி மிதிக்கச் செய்வதற்குப் புறநானூற்றுப் பாடலும் (46) சான்றளிக்கின்றன. பல்லவவேந்தன் அப்பரடிகள் மீது களிற்றினை ஏவிய செய்தி சுட்டத்தக்கது. வீரகேரளனைத் தன் பட்டத்துக் கதக்களிற்றினால் உதைப்பித்தான் இராசாதிராசன் (கி.பி.1018-54) என்பது 'திங்கள் ஏர்தரு' என்ற அவன் மெய்க்கீர்த்தியால் புலனாகும்.

எனவே, சோழநாட்டு அரசியல், வணிகம், நீதிமுறை பற்றிய செய்திகளைச் சீன ஆசிரியர் அறிந்து தம் நூலில் குறித்திருத்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பது புலனாகும்.

நவசீனத்தின் தோற்றம்

பல்வேறு அரச மரபுகளால் ஆளப்பட்டு வந்த சீன நாட்டில் ஐரோப்பியரின் வருகைக்குப் பின் கல்வி வளர்ச்சியும் அறிவியல் முன்னேற்றமும் உண்டாயின. சன்யாட்சென்[32] (Sun Yat-sen), சியாங்கே சேக்கு[33] (Chiangkai-shek) ஆகியோர் முயற்சியால் மன்னராட்சி ஒழிந்து

மக்களாட்சி உதயமாயிற்று. மாசேதுங்கு (Mao-Tse-tung) ஏழை உழவர் குடும்பத்தில் பிறந்தவர். தன் முயற்சியாலும் இடைவிடாது மேற்கொண்ட கல்விப் பயிற்சியாலும் தன்னம்பிக்கையாலும் வீரதீரத்தினாலும் உயர்ந்தவர். உலகப் பெருவீரர்கள் ஆகிய அலெக்சாண்டர், நெப்போலியன் உள்ளிட்டோரின் வரலாறுகளையும் புரட்சியாளர்கள் ரூசோ, கிளேடுஸ்டோன், காரல்மார்க்சு உள்ளிட்டோரின் கொள்கைகளையும் படித்தறிந்தார். கி.பி.1940இல் புதிய சனநாயகம் (New Democracy) என்ற 80 பக்க அளவிலான நூலினையெழுதினார். இந்நூலில் தான் கனவு கண்ட நவசீனத்தின் அமைப்பினைத் தெளிவுபடுத்தி உள்ளார். இம்மாமனிதரின் பெருமுயற்சியால் கி.பி.1949இல் சீனத்தில் மக்கள் குடியரசும் (People's Republic) பொதுவுடைமைக் கட்சியின் ஆட்சியும் ஒருங்கே செயல்படத் தொடங்கின.[34] மார்க்சியம் - லெனினியம் - மாவோயிசம் தழுவிய கொள்கை சீன நாட்டின் தேசியக் கொள்கையாக அறிமுகம் ஆயிற்று. வேளாண்மை, கைத்தொழில்கள், உயர்கல்வி, அறிவியல், தொழில்நுட்பம், தேசியப் பாதுகாப்பு என்பன சீனநாட்டில் வளர்ச்சி பெற்று வருகின்றன. மூடநம்பிக்கைகள் முற்றிலும் நீங்கிப் பகுத்தறிவு நோக்குடனும் அறிவியல் ஆற்றலுடனும் சீனமக்கள் முன்னேற்றம் கண்டுள்ளனர்.[35] 18.8.1966இல் சீனாவில் மாபெரும் பண்பாட்டுப் புரட்சி ஏற்பட்டது. அதன் விளைவாகப் புத்தர் கோயில்கள் பல இடங்களில் மூடப்பட்டன. ஆனாலும் செஞ்சீனா மகாயான பௌத்தத்தின் அடையாளங்கள் ஆகிய ஓவியங்கள், சிற்பங்கள், கலைப்பொருள்களைப் பேணிக்காக்கும் முயற்சியைக் கைவிடவில்லை. யுவான் சுவாங்கு நினைவு மன்றம் பீகிங் நகரில் தொன்மை வாய்ந்த குவாங்சி (Kuang-Chi) என்ற புத்த விகாரையில் நிறுவப்பெற்றுள்ளது. அவர் இந்தியாவிலிருந்து (தமிழகத்திலிருந்து) கொண்டு வந்த பௌத்த நூல்களும் கலைப்பொருள்களும் இங்கே

காக்கப்படுகின்றன. இங்குள்ள பௌத்தக் கல்லூரியில் பௌத்தத்தின் வரலாறும் மெய்ப்பொருளியலும் கற்பிக்கப்படுகின்றன.[36]

கன்பூசியம், தாவுநெறி, சட்டவியம், பௌத்தம், பொதுவுடைமைக் கொள்கை, மாவோயியம் ஆகியவற்றின் கலவை நெறிதான் இன்றைய சீனமக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது. வளர்ச்சி பெற்ற உலக நாடுகளில் ஒன்றாக விளங்கும் சீனம் வல்லரசு நாடாகவும் திகழ்கிறது. 19.11.2011இல் தினமணி நாளிதழில் உருசிய அதிபர் விலாடிமிர் புதினுக்குக் கன்பூசிய அமைதி விருதினைச் சீனம் வழங்கும் என்று வெளியான செய்தி குறிப்பிடத்தக்கது.

சீனத்தில் தமிழ் படித்தவர் பலர் வானொலி, இதழ், மொழிபெயர்ப்பு ஆகிய பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் சிலர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இலக்கியத் துறையின் பழைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. குறுந்தொகைப் பாக்கள், திருக்குறள், பாரதியார் பாடல்களில் சில சீனத்தில் மொழிபெயர்க்கப்பட்ள்ளன என்பது சுட்டுதற்குரியது. மகாகவி பாரதியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் கவிதைகளையும் திருக்குறளையும் சீனத்தில் மொழிபெயர்க்கும் பொருட்டு மூன்று கோடி உரூபா நல்கையினைத் தமிழக அரசு தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் (2011-12) வழங்கியிருத்தல் அனைவராலும் பாராட்டத்தக்கது.

அண்மையில் (2011) தமிழகத்தைச் சேர்ந்த யோகப் பயிற்சி விற்பன்னர் கிருட்டிண மாச்சாரியையும் அவர் குழுவினரையும் சீன மக்கள் குடியரசு மரியாதை அளித்து வரவேற்றுப் பயன்கொண்டமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாகும். அன்றைய காஞ்சிப் போதிதருமர் தியான (Chan) நெறியைச் சீனத்தில் பரப்பிய வரலாற்றினை இங்கு நினைவு கூர்தல் பொருத்தமாக இருக்கும்.

ஒலிம்பிக்கு விளையாட்டினை விமரிசையாக நவசீனம் நடத்தி *(2008)* முதனிலை பெற்றதும் இங்குச் சுட்டத்தக்கது.

ஒரு காலத்தில் மங்கோலியராலும் பின்னர் ஐரோப்பியராலும், உருசியராலும், சப்பானியராலும் பாதிப்பு அடைந்த சீனம் இன்று பூரண சுதந்திரமும், பொதுவுடைமை உணர்வும் உலவா உழைப்பும் தொழில் வளமும், அறிவியல் மற்றும் பொறியியல் முன்னேற்றமும் கொண்டு முன்னணி நாடாக விளங்குகிறது. இந்தியாவைப் போலவே பலமொழிகள், பல மதங்கள், பல இனமக்கள் வாழும் சமத்துவ சமதருமம் தழைக்கும் பெருநாடாகவும் சீனம் திகழ்கிறது.

மேற்கோள் குறிப்புக்கள்

1. **Encyclopaedia Britannica**, vol.*4*, pp.*269-270*.
2. Li, Dun Jen, **The Ageless Chinese A History**, Charles Scribner's Sons, New York, *1978*, p.*354*.
3. Ibid
4. Lynch Botta C. Anne, **Encyclopedia of Universal Literature, Vol.I,** Srishti Book Distributors, New Delhi, *2010*, p.*13*.
5. Ibid
6. **Encyclopaedia Britannica**, Vol.*4*, p.*270*.
7. Ibid
8. **Encylopedia of Universal Literature**, Vol.I, p.*9*.
9. **The Ageless Chinese A History**, p.*102*.
10. Ibid., pp.*100-101*.
11. Ibid., p.*101*.
12. **Encylopedia of Universal Literature**, Vol.I, pp.*13-14*.
13. **The Ageless Chinese A History**, pp.*101-102*.
14. **நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும்,** உ.வே.சா. பதிப்பு, சென்னை, *1946*, ப.*129*.
15. அதே நூல், ப.*141*.

16. Vasanthi. S., **Excavation at Gangaikondacholapuram, the Imperial Captial of Rajendra Chola and Its Significance** in the Volume **Nagapattinam to Suvarna dwipa**, Institute of South East Asian Studies, Singapore, *2009*, p.*100*.
17. Nilakanta Sastri.K.A. **The Colas**, University of Madras, Chennai, pp.*607-609*.
18. Ibid., pp.*608-609*.
19. Ibid., p.*609*.
20. Nilakanta Sastri. K.A. **Foreign Notices of South India**, University of Madras, Chennai, *1939*, p.*4*.
21. Ibid., pp.*44-45*.
22. Ibid., pp.*16-17*.
23. Ibid., pp.*17-18*.
24. Ibid., p.*18*.
25. Ibid., p.*102*.
26. Ibid., pp.*102-103*.
27. Marshall Govindan, **Babaji and the Eighteen Siddha Kriyayoga Tradition**, Quebec, Canada, *2001*, pp.*113-115*.
28. **The Colas**, p.*219*.
29. Ibid., p.*316*.
30. Ibid., pp.*215-218*.
31. Ibid, p.*480*.
32. **The Ageless Chinese A History**, pp.*460-466*.
33. Ibid, pp.*466-471*; p.*488*; pp.*495-500*.
34. Ibid, pp.*494-506*; pp.*511-519*.
35. Ibid, pp.*529-545*; pp.*552-590*.
36. கந்தசாமி, சோ.ந., **புரட்சிக்காப்பியம்**, அபிராமி பதிப்பகம், அண்ணாமலை நகர், *1972*, பக்.*138-142*.

2. சீன இலக்கியத்தின் தொடக்கம்

உலகில் மிகவும் நீண்ட, இடைவிடாத தொடர்ச்சியுடைய இலக்கிய மரபுகளைக் கொண்ட மொழிகளில் தமிழ், வடமொழி, ஈபுரு ஆகியவற்றுடன் ஒருங்குவைத்து எண்ணத்தக்க சிறப்புக்குரியது சீன மொழியாகும். தொன்மைமிக்க கல்வெட்டுக்களைத் தவிர, கி.மு. ஆயிரத்தின் முதல் காற்பகுதியிலிருந்து சீன இலக்கிய மரபு தொடர்ந்து வருகிறது. கி.பி. முதலிரு நூற்றாண்டுகளில் தாள் (Paper) எழுத்துப் பயன்பாட்டிற்கு அறிமுகம் ஆயிற்று. தாளில் எழுதப்பட்ட இலக்கியங்கள் எங்கும் பரவுவதற்கும் பயில்வதற்கும் உரியன ஆயின. கி.பி.10ஆம் நூற்றாண்டில் சீனத்தில் அச்சுக்கலை உருப்பெற்றது. கி.பி.11ஆம் நூற்றாண்டில் வணிக நோக்கில் அச்சு வளர்ச்சி பெற்றது. எனவே, தாளும் அச்சும் இணைந்து அறிவுப் பரவுதலுக்கு வழிவகுத்தன.

அச்சுக் கண்டுபிடிப்பதற்கு முன்னர் இலக்கியங்களின் மூலபாடங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பின் வந்த தலைமுறையினர் படியெடுத்தல், மறுபடியெடுத்தல், பதிப்பித்தல், பாடத்திருத்தம் (Emendation) என்பனவற்றின் வாயிலாகத் தங்களின் பிற்காலத் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் பழைய மூல நூல்களாகிய மரபுவழிப்பட்ட சொத்தினை வடிவமைத்துக் கொண்டுள்ளனர்.[1]

பேரரசர்க்குரிய நூலகத்தின் (Imperial Library) புத்தகப் பட்டியல் (Catalogue) கி.மு. முதல் நூற்றாண்டின் இறுதியிலிருந்து கிடைத்துள்ளது. இக்காலம் முதலாகவே புத்தகங்களின் விவர அட்டவணைகள் (Bibliographies)

தொடர்ந்து கிடைத்து வந்துள்ளன. மூல நூல்களின் பழமையினைப் பேரரசர்கள் பொறுப்புணர்ந்தும் கவனம் செலுத்தியும் பேணிக்காத்து வந்துள்ளனர். அரிய நூல்கள் படியெடுக்கப்பெற்று எங்கும் பரவுதற்கு வழி காணப்பட்டது.[2]

சீன இலக்கிய வரலாறு பல நோக்குடையது. சீன மொழியின் செவ்வியல் வடிவத்தில் கொரியா, வியட்நாம், சப்பான் ஆகிய நாட்டு இலக்கியங்கள் எழுதப்பட்டன. காலந்தொறும் சீன மொழியின் வட்டார வழக்குகளில் ஒரே ஒலி (Same Character) வேறுபாட்டுடன் ஒலிக்கப்பட்டு வந்துள்ளது. தொன்மை வாய்ந்த உருபனியலின் (Archaic Morphology) அடையாளம் காணப்படாத தடயங்களைச் (Unrecognized traces) சீனமொழி பெற்றுள்ளது. சீனம் வினைத்திரிபு பெறாத மொழியாகக் (uninflected language) கருதப்படுகிறது.

மொழியின் வரலாற்று மாற்றத்தினையும், வட்டார வேறுபாட்டினையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்குரிய ஒரு வழியாக இருத்தல்தான் எழுதப்பட்ட இலக்கணத்தின் மூலச் செயற்பாடு (Orginal function) என்று வைத்துக் கொண்டால், எழுத்துக்களின் வேறுபட்ட உச்சரிப்பினாலும் உருபனிலக்கணம் (Morphology) வெளிப்படையாக இல்லாமையாலும் சீன மொழிக்கு எழுதப்பட்ட இலக்கணம் (Written Grammar) தேவைப்படாமல் போயிற்று.

தொன்மைமிக்க சீன இலக்கியமொழி (Ancient Chinese Literary Language) செம்மை செய்யப்பெற்றது (-ya), பொதுவானது (-su) என்பனவற்றுக்கு இடையேயும், தொன்மை, நவீனம் (கி.பி.6 - 8ஆம் நூற்றாண்டுகளில் தரப்படுத்தப்பட்ட வடிவம்) என்பனவற்றுக்கு இடையேயும் வேறுபடுகின்ற பதிவுகளைக் கொண்ட மொழியாகவே மிகப் பழைய சீன இலக்கியமொழி (Older Chinese Literary Language) அறியப்படுகிறது.[3] இரு முறைகள் சீனம் புறச்செல்வாக்குகளால் உருமாற்றம் பெற்றுள்ளது. அவையாவன:

1. பௌத்த சமயத்தின் வருகையால்,
2. ஐரோப்பியப் பண்பாட்டுத் தாக்கத்தால்.

கீழை ஹன் மரபு (Eastern Han dynesty) முற்காலத் தங்கு மரபு (Early Tang dynasty) ஆகியவற்றினிடையே 600 ஆண்டு காலத்தில் உலகமே கண்டிராத அளவில் மிகப்பெரியதும் முக்கியம் வாய்ந்ததும் ஆகிய மொழிபெயர்ப்புத் திட்டத்தில் சீனா தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மொழிபெயர்ப்புத் திட்டம் மீண்டும் ஐரோப்பியப் பண்பாட்டுத் தாக்கத்தால் கி.பி.19ஆம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்டது. அறவே பழக்கப்படாததும், மிகவும் புதுமை கொண்டதும் ஆகிய பண்பாட்டு மூலப்பொருள் மொழிபெயர்ப்பின் மூலமாக தெற்கு ஆசியாவிலிருந்து சீனாவில் இறக்குமதி செய்யப்பட்டது. பௌத்த ஞானிகளின் சமற்கிருதத் தாக்கத்தால் சீனமொழி (-Target language) பௌத்தச் சீனம் (Buddhist Chinese) என்னும் பெயர் பெற்றது.[4] இந்தப் பௌத்தச் சீனமொழியின் மூலமாகவே கொரியா, சப்பான் ஆகிய நாடுகளுக்குப் பௌத்தம் பரவலாயிற்று. பௌத்தத்தின் தாக்கத்தால் சீனமொழியும், சீனர்களின் பிரபஞ்சக் கோட்பாடும், தொடர்நிலைச் செய்யுளின் (Narrative) போக்கும் மாற்றம் பெற்றன. சன் (Chan; சப்பானில் Zen) எனப்படும் தியான பௌத்தம் எங்கும் பரவியது. பௌத்தத்தால் சீனம் பெற்ற மாற்றத்துடன் நவீன காலத்தில் மார்க்சியத்தால் அந்நாடு பெற்ற மாற்றம் ஒப்பிடப்படுகிறது. சீனா, இந்தியா ஆகிய இருநாட்டுப் பௌத்தப் பெரியார்களின் பயணங்கள் குறிப்பிடத்தக்கவை. சன் (Chan) என்பது தியான (Dhyana) என்ற வடமொழியின் சீன வடிவம் ஆகும். இந்த நெறியைச் சீனத்தில் பரப்பியவர் தமிழகத்துக் காஞ்சிமா நகரினைச் சேர்ந்த பௌத்தஞானி போதிதருமர் ஆவர். இவர் காஞ்சி வேந்தரின் மூன்றாம் மைந்தர் என்பர் யமாகமி சோகன் (Yamagami Sogan). இதே

நகரில் வாழ்ந்த பரமார்த்தர், திக்நாகர், தர்மகீர்த்தி உள்ளிட்ட பௌத்த அறிஞர்கள் வடஇந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று புத்த நெறிக்கு விளக்கம் தந்தவர்கள் ஒருசிலர் சீனத்திற்கும் சென்றவர்கள். போகர் என்னும் தமிழ்ச் சித்தர் சீனம் சென்று வந்த அனுபவத்தைத் தம் பாடல்களில் குறித்துள்ளார். சீன நாட்டிலிருந்து கி.பி.400 - கி.பி.700 அளவில் இட்சிங், பாஹியான், யுவான்சுவாங் (-ஹயுந்தசாங்) முதலிய பெரியார்கள் காஞ்சிமாநகர் உள்ளிட்ட பௌத்தக் கேந்திரங்களுக்கு வருகை தந்துள்ளனர்; பல்லாண்டுகள் தங்கி இங்குள்ள பௌத்த ஞானிகளுடன் அளவளாவியுள்ளனர். இங்கிருந்து பௌத்தச் சுவடிகளைச் சுமந்துகொண்டு சீனத்திற்குச் சென்றுள்ளனர். அவற்றுள் காஞ்சிபுரத்துச் தமிழ்ப் பௌத்தச் சான்றோர் திக்நாகர் மற்றும் தருமபாலர் எழுதிய நியாயமுகம், நியாயப்பிரவேசம், பிரமாண சமுச்சயம் உள்ளிட்ட பல நூல்கள் இந்தியாவில் அழிந்துபோனாலும், திபெத்திய மொழியிலும், சீன மொழியிலும் பேணிக் காக்கப்பெற்று, அவை மீண்டும் வடமொழியாக்கம் பெற்ற வரலாற்றினை, இத்தாலிய நாட்டு இந்தியவியல் அறிஞர் (Indologist) ஜி.துசி (G.Tucci) என்பார், "Pre-Dinnaga Buddhist Texts on Logic From Chinese sources" என்ற தம் ஆராய்ச்சி நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

பழைய சீன இலக்கிய வரலாறு அரச வமிச கால மரபின்படி (Dynastic Periodization) பலராலும் எழுதப்பட்டுள்ளது. இத்தகைய வரலாற்றில் பண்பாட்டு வரலாற்றிலும் இலக்கிய வரலாற்றிலும் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள் தெளிவாக இடம்பெறவில்லை என்பர் நவீன சீனவியலார் (Modern Chinalogists). முற்கால வரலாற்றுக்கு அரச வமிச கால மரபினைப் பின்பற்றுதல்தான் நல்லது. ஆனால், கி.பி.7ஆம் நூற்றாண்டு, அதற்குப்பின் வரும் வரலாற்றுக்கு வேறு உத்தி முறையே உகந்தது என்பர்.

சீனமொழியும் எழுத்து முறையும்
(The Chinese Language and Writing System)

சீனமொழி, மற்றும் அதன் எழுத்துமுறை ஆகியவற்றுக்குரிய மிகவும் தொன்மைவாய்ந்த சான்றுகள் கி.மு.1250-1046 என்ற காலப் பகுதிக்குரிய எலும்பில் பொறிக்கப்பட்ட தேவ வாக்குகளிலும் (Oracle Bone), வெண்கலப் பொறிப்புக்களிலும் (Bronze Inscriptions) காணப்படுகின்றன. இவை யாவும் இக்காலத்து அன்யங்கு (Anyang) என்ற இடத்திற்கு அருகில் முன்பு விளங்கிய பிற்கால ஷங் (Late Shang)கின் தலைநகரின் ஒரு பகுதியில் கிடைத்துள்ளன. இப்பகுதி ஹெனான் மாகாணத்தின் (Henan Province) வடமேற்கு எல்லையில் உள்ளது. மனித வரலாற்றிலேயே, சுயமாகக் கண்டுபிடித்துக் கொண்ட எழுத்து முறையினைப் (Writing system) பெற்றிருக்கும் விரல்விட்டு எண்ணக் கூடிய மிகச் சிலரில் பண்டைய சீனரும் சுட்டுதற்குரியவர். உலகில் இன்றளவும் நடைமுறையில் இருந்து வருவதும் சீன எழுத்து முறையே ஆகும். சீன மொழிக்குரிய எழுத்து முறையினைக் காலப்போக்கில் கொரியன் (Korean) சப்பனீசு (Japanese), வியட்நமிசு (Vietnamese) ஆகிய கிழக்கு, மற்றும் தென்கிழக்கு ஆசிய மொழிகளும் பின்பற்றத் தொடங்கின.[5]

பிற்கால ஷங் (The Late Shang) காலத்துத் தேவவாக்குப் பொறிப்புக்கள் (Oracle Inscriptions) எருதுகளின் பட்டை எலும்புகளிலும், கடல் ஆமைகளின் வயிற்றுப் பகுதி ஓடுகளிலும் (Turtle plastrons) கீறப்பட்டிருந்தன. இப்பொறிப்புக்கள் யாவும் அரச மூதாதைய ஆவிகளுடன் (Royal ancestral spirits) கொண்ட தகவல் பரிமாற்றங்களின் பதிவுகளாக உள்ளன. கி.பி.1899இல் 1,50,000க்கும் மேற்பட்ட இத்தகைய பொறிப்புக்களின் துண்டுகள் கண்டுபிடிக்கப் பட்டன. இவை ஒவ்வொன்றும் மிகச்சில எழுத்துக்கள் முதல் பற்பல எழுத்துக்கள் கொண்டவை யாகவும் உள்ளன. அரசர்களுக்கு வருவதுரைக்கும் நிமித்தப் பொறிப்புக்களாக

இவை காணப்பட்டன. 1. வேந்தனின் நல்வாழ்வு, 2. படையின் வெற்றி, 3. வேள்விக்குரிய காலம், பருவநிலை - இப்படி பல பொருண்மைகளில் இவை பொறிக்கப்பட்டுள்ளன. இத்தகைய பொறிப்புக்கள் வேந்தனையும், அவனது நாட்டின் செழுமையினையும் பற்றிக் கூறுவனவாக இருந்தன. இவை சமய, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவை.

பிற்கால ஷங் (The Late Shang) காலத்தில் உணவும், மதுவும் தாங்கும் வெண்கலக்கொள்கலன்களின் (Bronze vessels) பொறிப்புக்கள் ஒரு சிலவும் கிடைத்துள்ளன. இவை யாவும் கி.மு.1250-1046 என்ற காலப் பகுதியைச் சேர்ந்தவை என்பதில் வரலாற்றாசிரியர்கள் ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர். தாள், தோல் முதலியவற்றில் எழுதப்பட்டிருந்த பழைய சீனப் பொறிப்புக்கள் யாவும் காலப்போக்கில் மறைந்துபோயின.

மேலை சௌ மரபுக் காலத்திற்குரிய (Western Zhou) வெண்கலப் பொறிப்புக்கள் நூற்றுக்கணக்கான எழுத்துக்களைக் (Characters) கொண்டவை. இவற்றில் இசை, யாப்பு, இரட்டைக் கிளவி (Onomatopoeia) என்பன தெளிவாக உள்ளன. இத்தகைய அழகியல் கூறுகள் (Aesthetic Devices) கி.மு.900-கி.மு.800 காலப் பகுதிக்குரிய ஆவணப்பனுவல் (Classic of Documents - Shangshu or Shujing), பாடற்பனுவல் (Classic of Poetry - Shijing), மாற்றப் பனுவல் (Classic of Changes - Yijing) என்பனவற்றிலும் காணப்படுகின்றன. ஜிங்கு என்பதை கிங்கு (king) என்றும் ஒருசாரார் எழுதியுள்ளனர். இச்சொல்லிற்குப் பனுவல் என்பது பொருள். பெய்ஜிங்கு --> பீகிங்கு ஆதல் காண்க.

சீன எழுத்துக்களின் வடிவங்களைத் தரப்படுத்தும் முயற்சி கி.மு.221-207இல் குவின் அரச மரபின் (Qin dynasty) காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. கி.மு.202 - கி.பி.220 என்ற காலப் பகுதியில் ஆட்சிபுரிந்த மேலை மற்றும் கீழை ஹன் அரச மரபுகளின் காலத்தில் (Western and Eastern Han

dynasties) தரப்படுத்தப்பட்ட சீன எழுத்துருவங்கள் யாவும் நடைமுறைப்படுத்தப்பட்டன. தொன்மைமிக்க பனுவல்கள் யாவும் இவ்வகை எழுத்துக்களிலேயே எழுதப்பட்டன. பின்னர் ஆட்சிக்கு வந்த ஆறு வேறு அரச மரபுகளின் காலத்தில் (கி.பி.220-589) சீன எழுத்து வடிவத்தில் மேலும் பல திருத்தங்கள் அறிமுகம் ஆயின. இத்தகைய வளர்ச்சிப் போக்கில், சொற்பொருளியல் வகைப்பாடுகளின் முறை சார்ந்த பிரயோகத்தின் வாயிலாக, சொற்பொருள்களின் வெவ்வேறு வகைப்பாடுகளைக் குறித்தற்காக எழுத்து வடிவங்கள் (Characters) மேலும் பன்மடங்குகளாகப் பெருகின. இதனால், பலபொருள் ஒரு சொற்களைப் (Homophonous words) பொருளடிப்படையில் இனம் பிரித்துக் காண்பது எளிதாயிற்று. இத்தகைய புலமைத் திறம் வாய்ந்த முயற்சிகளின் உயர்ந்த சாதனையாகக் கீயுன் (Qieyun Cut Rhymes) என்னும் அகராதி கி.பி.ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (கி.பி.581-601) தோன்றியது.[6]

கன்பூசியசு தொகுத்துள்ள பதின்மூன்று செவ்வியல் பனுவல்கள் (Thirteen Classics - Shisan jing) 6,544 வேறுபட்ட எழுத்துருக்களைக் கொண்டுள்ளன. சங்ஜி (Cang Jie) என்ற சீன அகராதி (கி.மு.208) கி.மு.53-கி.பி.18 என்ற காலப் பகுதியில் விரிவுபடுத்தப்பெற்று 5,346 எழுத்துருக்களில் அமைக்கப்பட்டுள்ளது. காலந்தோறும் எழுதப்பட்ட பல்வகைப் பனுவல்களில் எழுத்து வடிவங்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது. இன்றைய சீன மக்கள் குடியரசில் (People's Republic of China) 80,000க்குக் குறைவாக எழுத்து வடிவங்கள் பயன்பாட்டில் உள்ளன. எனவே, சீன எழுத்துக்கள் படைப்பாளர், அரசியலார், மக்கள் ஆகியோரின் தேவைகளுக்கு ஏற்பக் காலந்தோறும் வளர்ச்சி பெற்று வந்துள்ளன என்பது புலனாகும்.

சீன எழுத்துக்கள் ஒவ்வொன்றும் பல்வேறு அசைகளின் (Syllables) அடையாளமாக அமைந்துள்ளன. பெரும்பான்மையான சொற்கள் ஓரசைச் சொற்கள் ஆகும்.

இந்த அசைகள் காலந்தோறும் அதிகரித்து வந்துள்ளன. சீன எழுத்துக்களைப் பட எழுத்துக்கள் (pictographs or images of things) என்றும், கருத்து வடிவங்கள் (ideographs or images of ideas) என்றும் கருதியோரும் உள்ளனர். இவை பட எழுத்துக்களிலிருந்து தோன்றிப் பின்னர் அசையெழுத்துக்களாக வளர்ச்சி பெற்றன என்பர் மார்டின்கேர்ன் (Martin Kern) என்னும் சீனவியல் அறிஞர். இவை மாறும் தன்மை இல்லாதவை என்பது தனிச் சிறப்பு. இலக்கணக் கூறுகளை (Grammatical particles)ச் செயற்பாட்டுச் சொற்கள் (Function Words) என்றும் கூறுவர். இவற்றைப் பெரிதும் பயன்படுத்தாமல், எழுத்துமொழி (Written Language) பெருமளவில் சொற்செட்டுடையதாய்; காலம் எண், பால், தொடரியல் தொடர்புகள் (Syntactical relations)பற்றிக் கவலை கொள்ளாததாய் இருந்தது. வட்டார வழக்குகளின் பெருக்கமும் இம்மொழி பேசுகின்ற மக்கள் வாழும் நிலப் பரப்பின் விரிவும் சீன வட்டார மொழிகளில் இருமொழித் தாக்கத்தால் உண்டாகும் மாற்றங்களும் (Diachronic Changes) ஆகிய இவையாவும் எழுத்துருக்களின் நிலை பேற்றினால் (ஸ்திரத் தன்மையால்) தெற்றெனத் தெரிவதில்லை.[7]

எழுத்துக்களின் நிலைபேறு (-ஸ்திரத்தன்மை) என்பது மொழியியல், மற்றும் பண்பாட்டியல் நிலைபேற்றினை (-ஸ்திரத்தன்மையினை)ப் பற்றிய ஒரு பொய்த் தோற்றத்தினை (Illusion)ப் படைத்துவிட்டது. மூவாயிரம் ஆண்டுகள் தொடர்ந்து வரும் இலக்கிய மரபினைச் (Literary Tradition) சீனம் பெற்றுள்ளது. இவற்றில் புதியனவாக உருப்பெற்ற எந்தப் படைப்பும், காலப் பழமை வாய்ந்த இலக்கியப் படைப்புக்களின் வெளிப்பாடுகளினால் மேலும் ஆக்கம் பெறுதல் கூடும்.

அயற் சொற்களைச் சீனத்தில் எடுத்தாளும் பொழுது இருமுறைகளைக் கையாண்டுள்ளனர். இவை பெரும்பாலும் வடமொழி அல்லது பாலியில் எழுதப்பட்ட பௌத்தப்

பனுவல்களைச் சீனத்தில் மொழிபெயர்க்கும் பொழுது நிகழ்பவை. ஒலியியல் அடிப்படையில் பிறமொழிச் சொற்களைச் சீனத்தில் வழங்குதல் ஒருமுறை ஆகும். பொருள் பொருத்தமுற அவற்றைச் சீனத்தில் மொழிபெயர்த்து வழங்குதல் மற்றொரு முறை ஆகும். இதனால், சீன அகராதியில் அச்சொற்கள் எளிதாக இடம்பெற்றுள்ளன.

சீன எழுத்துக் கண்டுபிடிப்பு என்பது பழைய முனிபுங்கவரின் பண்பாட்டு, நாகரிகச் சாதனையாகும். பிரபஞ்சத்தில் ஒவ்வொரு இயற்கைப் பொருளின் அமைவினையும் (Order) பிரதிபலிப்பதாக எழுத்துருவை அமைத்துள்ளனர். 'இயற்கையின் ஒழுங்கமைவுதான் இலக்கியம்' (Literature is an order of Nature) என்ற கருத்து லூஜி (Lu Ji கி.பி.261-303) என்பார் எழுதியுள்ள Poetic Exposition on Literature என்ற நூலில் புலப்படுத்தியுள்ள இலக்கியக் கொள்கையின் மையக் கருத்தாகும். இதே கருத்து கி.பி.467-522இல் வாழ்ந்த லீயு சீயே (Liu Xie) என்பார் எழுதியுள்ள The Literary mind and the Carving of the Dragon என்ற நூலிலும் காணப்படுகிறது என்பர்.[8] பாடற்பனுவல் (The Classic of Poetry - The Book of Songs) என்பது மூதாதையர் வேள்விகளிலும், மேற்குச் சௌ (Western Zhou) என்ற மாநிலத்தில் நடைபெற்ற அரசியல் சடங்குகளிலும் அவைக்கள அதிகாரிகளால் (Court Officials) படைக்கப்பட்டது என்பர். தொடக்கப்படிநிலையில், ஓசை நலம் மிக்க செறிவுற்ற பேச்சின் ஒருவகையே பாடலாக எண்ணப்பெற்றது. இறுதி ஒலிநயம் (end rhyme), யாப்பு, இரட்டைக் கிளவிகள் என்பனவற்றுடன் தொடை நயமும் மோனை நயமும், இரட்டுற மொழிதல், ஈரெழுத்துத் தொகைகள் (Compounds) என்பனவும் கலந்து பாட்டு என்னும் இலக்கிய வடிவம் வழங்கலாயிற்று. செவிக்கு இன்னோசை பயத்தல் வேண்டும் என்பது பாட்டுப் பற்றிய முதல் வரையறையாகும். சடங்குப் பாடல்கள், வெண்கலப் பொறிப்புக்கள், அரச கட்டளைகள் (Classic of Documentsஇல்

வருவன) முதலிய இலக்கிய வகைகளில் (genres) இறுக்கம்மிக்க ஒலிநயப் பேச்சு காணப்படுகிறது. இத்தகைய வெளிப்பாடுகள்தாம் முற்கால வரலாற்றுணர்வு, புராண நினைவு, அரசியல் பிரதிநிதித்துவம் ஆகியவற்றின் முதுகெலும்பாக உருக்கொள்கின்றன.

ஆவணப்பனுவல் (Classic of Documents), பாடற்பனுவல் (Classic of Poetry) என்பவற்றுடன் மாற்றப்பனுவல் (Classic of Changes) என்பது பின் மேலைச்சௌ (Western Zhou) காலத்திலிருந்தே போரிடும் மாநிலங்களுக்கிடையே வருவதுரைக்கும் பனுவலாகப் பயன்பட்டது. இந்த நூலின் மையப் பகுதிகள் சௌ கோமகன் (Duke of Zhou) எழுதியவை என்பர். இவன் காலம் கி.மு.1042-1036 ஆகும். இந்நூலின் உரைகளை எழுதியவர் கன்பூசியசு என்பர்.[9]

சீனப் பண்பாடு

சீனப் பண்பாடு என்பது தொன்மை, தொடர்ச்சி, புதுப்பித்தல் என்ற இயல்புகள் பொருந்தியதாய்க் கடந்த 3,000 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாய் ஒருபடித்தான (Homogeneous) தன்மையதாய் விளங்கி வந்துள்ளது. புதைபொருள் சான்றுகளினால் கி.மு.1400க்கு முன்பிருந்தே சீன மக்கள் குறிப்பிடத்தக்க நாகரிகம் படைத்தவராகவும், நன்கு வளர்ச்சி பெற்ற எழுத்துமுறை கொண்டவராகவும், வெண்கல வார்ப்புத் தொழில் நுட்பம் வாய்ந்தவராகவும், பட்டுப்புழு வளர்ப்புக் கலையில் வல்லவராகவும் வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகிறது. கி.மு.11ஆம் நூற்றாண்டு முதல் கி.மு.3ஆம் நூற்றாண்டு வரை மிக நீண்ட காலமாக ஆட்சி புரிந்த சௌ அரச மரபின் (Chou dynasty) ஆட்சிக் காலம் தொன்மைச் சீன நாகரிகத்தின் காலமாகக் கருதப்படுகிறது. இந்நாகரிகம் சமுதாய, அரசியல் அமைப்பின் மேல்தளத்தில் உறுதியாக எழுப்பப்பெற்றது. இந்நாகரிகம் இடைக்கால ஐரோப்பிய நாட்டில் நிலவிய நிலப் பிரபுத்துவ அமைப்பினை (Feudal system) ஒத்திருந்தது.

இக்காலம் செவ்வியல் சீனத் தத்துவத்தின் (Classical Chinese Philosophy) காலமாகவும் எண்ணப்படுகிறது. இக்காலத்தில் புதிதாக உதயமாகிய அறிவுத்திறனாளர் வகுப்பிலிருந்து (Intellectual Class) தோன்றிய பெருஞ்சிந்தனையாளர்கள், அரசர்கள் மற்றும் குடிமக்களின் உள்ளங்களை வெல்லுவதற்கு ஒருவருக்கு ஒருவர் முற்பட்டனர். கூடக்குறைய அதே காலப்பகுதியில் மஞ்சள் ஆற்றுப் (Yellow River) பகுதியிலும் யாங்குத்சே ஆற்றுப் (Yangtze) பகுதியிலும் தழைத்திருந்த செய்யுள் இலக்கியத்தின் சுடரொளியுடன் தத்துவத்தின் பேரொளியும் இணையாக விளங்கியது.

ஹன் அரச மரபின் (Han dynasty, கி.மு.202 - கி.பி.220) காலத்திலிருந்து தங்கு அரச மரபு (T'ang dynasty கி.பி.618-906), சுங்கு அரச மரபு (Sung dynasty கி.பி.960-1279) காலம் வரையிலும் சீனப் பண்பாடு தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளது. அரசியல் பிளவுகளாலும், உள்நாட்டுப் போர்களாலும், அரச மரபு மாற்றங்களாலும் சீனப் பெருஞ்சுவருக்கு (Chinese Great Wall) அப்பாலிருந்து அயலினத்தார் படையெடுத்து நாட்டினை வெற்றி கொண்டதாலும் கூட, சீனப்பண்பாட்டின் அடிப்படை சேதப்படாமல் இருந்தது. கி.பி.301-501 என்ற காலப் பகுதியில் வட சீனாவை ஆண்ட தோபா (Toba), மற்றும் துங்குசு (Tungus) மரபினரும்; கி.பி.901-1201 என்ற காலப் பகுதியில் ஆண்ட கிதன்சு (kitans), மற்றும் ஜூர் சென்சு (Jurchens) மரபினரும்; கி.பி.1201-1301 என்ற காலப் பகுதியில் ஆண்ட மங்கோலியரும் (Mangols), கி.பி.1601-1901 என்ற காலப்பகுதியில் ஆண்ட மஞ்சு (Manchu) மரபினரும் ஹன் சீனப் (Han - Chinese) பண்பாட்டின் ஆளுகைக்கு உட்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.[10]

சீனப்பண்பாடு - பௌத்தத்தின் ஆளுகை

மத்திய ஆசியா வழியாகச் சீன நாட்டில் பரவிய பௌத்தம் சீனர்களின் வாழ்வியலிலும் சிந்தனைப் போக்கிலும் புதுப்போக்கினை வழங்கியது; மேலும்,

அவர்களின் ஓவியம், சிற்பம், இலக்கியம் ஆகியவற்றின் படைப்பாற்றலையும் ஊக்கப்படுத்தியது. நவீன காலத்தில் மேலைநாட்டு அறிவியல், தொழில்நுட்பம் சீனத்தையும் பாதித்தன. மாற்ற முடியாத இயற்கை விதிகள், சமூகச் சுற்றுப் புறத்தினைத் தீர்மானிக்கும் காரணிகள் இவற்றுடன் இயைந்து போக வேண்டியதன் தேவை முதலியவற்றையும் மேலைநாட்டுக் கல்வி கற்பித்தது. இங்ஙனம் அயல்நாட்டு ஊட்டச் சத்தினால் சீனப்பண்பாடு பேணப்பெற்றதுடன், தேக்கநிலை மற்றும் அழிவினின்றும் காக்கப்பட்டது. அயல்நாட்டுத் தாக்கங்களை ஏற்றுக் கொண்ட பொழுதிலும் சீனப் பண்பாடு விரிவடைந்தும் செழித்தும் விளங்கியது. ஆயினும் அது தனது சுயம் இழக்காமல் சீனர்களால் காக்கப்பட்டது.[11]

சீனப்பண்பாடு - கன்பூசியத்தின் ஆளுகை

சீன நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் மைய உறுப்பாகக் கன்பூசியம் (Confucianism) விளங்கி வந்துள்ளது. இந்நெறி சீன ஞானி கன்பூசியசினாலும் அவருக்குப் பின் தோன்றிய மென்சியசு (Mencius) உள்ளிட்ட சான்றோர்களாலும் வளர்க்கப்பெற்றது. பின் வந்த சுங்கு (Sung), மிங்கு (Ming) அரச மரபின் ஆட்சிக் காலங்களில் புதுக்கன்பூசியம் (Neo-Confucianism) வளர்ச்சி பெற்றது. இந்த நெறியாளர்கள் தாவு மார்க்கம் மற்றும் பௌத்தம் ஆகிய இருபெரும் நெறிகளினின்றும் தேர்ந்தெடுத்த சிந்தனைகளைப் புதுக்கன்பூசியத்தில் புகுத்திவிட்டனர். இவர்கள் காலத்திற்குப் பின் சீன அரசு நடத்தும் தேர்வுகளை எழுதுவோர்க்குக் கன்பூசியச் செவ்வியல் பனுவல்களுக்குப் புதுக்கன்பூசியப் போதனைகளும் விளக்கங்களும் தரமான பார்வை நூல்களாக (standard works of reference) அமைந்தன. அரசாங்க அலுவலர்கள் யாவரும் கன்பூசியச் செவ்வியல் நூல்களில் (The Confucian Classics) தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

தன்னைப் பண்படுத்திக் கொள்ளுதலும் (Personal Cultivation) மனித உறவுகளின் வழியாக உண்டாகும் சிறப்பும் பண்பொழுக்கமும ஆகியவற்றைக் கற்பிக்கும் நடைமுறைக்கு ஒத்த நீதித் தத்துவமாக விளங்கிய கன்பூசியம் சீனத்தின் தேசியப் பண்பினை வடிவமைத்ததுடன், சீனச் சமூகம், குடும்பம், இலக்கியம், கலைகள் ஆகியவற்றின் ஒவ்வொரு கூறிலும் ஊடுருவியுள்ளது. விரிவான பொருளில் கூறுவதெனில், சீன இலக்கியங்களின் பெரும்பகுதி கன்பூசிய இலக்கியமே.[12] (In a broad sense, much of Chinese literature is Confucian literature). அனைத்துத் துறைகளையும் தழுவிச் செயற்பட்ட கன்பூசியத்தின் தாக்கம் 1. மரபினைக் கடைப்பிடித்துள்ள எழுத்தாளர்களின் வாழ்வினையும் கருத்துக்களையும் பாதித்ததுடன், 2. அவற்றுக்கு எதிராகச் செயல்பட்ட எழுத்தாளரின் வாழ்வினையும் கருத்துக்களையும் கூட பாதித்துள்ளது. நாட்டில் அமைதியும் செழிப்பும் நிலவிய காலங்களில் கன்பூசியம் வெற்றி பெற்றது. அமைதியில்லாமல் குழம்பிய காலத்தில் தாவு மார்க்கமும் பௌத்தமும் வெற்றி பெற்றன. இவ்விரு நெறிகளையும் பின்பற்றுவோர் எண்ணிக்கை அதிகரித்தது.

தனிமனித வாழ்விலும் கூட, ஒருவரின் வெற்றி கன்பூசியப் பழமையில் கொண்டிருந்த நம்பிக்கையினை வலுப்படுத்தியது. வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றங்கள், துன்பங்கள் ஆகியவற்றின் விளைவாக, அப்பாலைத் தத்துவத்தினைப் போதித்த பௌத்தத்திலும், தாவு மார்க்கத்திலும் சார்வதற்குரிய விருப்பத்தினை வளர்த்தது.

சீன எழுத்தாளர்களில் பெரும்பான்மையோர் பெருமைக்குரிய கன்பூசியச் சிந்தனை மரபில் உறுதி பூண்டவர்கள். இவர்களுக்கு இலக்கியம் என்பது கன்பூசியச் சித்தாந்தத்தினை மக்களிடையே பரப்புவதற்குரிய ஊர்தியாக இருந்து வந்துள்ளது; மக்களை நல்லவர்களாக வாழ்வதற்கு நெறிகாட்டுவதாக அமைந்து வந்துள்ளது.

எந்தவொரு சீன இலக்கியத்திலும் நீதிபோதனை எப்பொழுதும் இடம்பெற்றுள்ளது. 'இலக்கியம் மக்களுக்காக' என்ற கோட்பாட்டினைச் சீன இலக்கியத்தில் காண்கிறோம். அழகியல் கூறுகளுக்கு இரண்டாம் நிலை இடம்தான் தரப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளாக அறஇலக்கியங்களும் (Moral Treatises), செவியறிவுரைகளும் (Exhortations), கடிந்துரைகளும் (Admonitions) மிகப் பலவாகத் தோன்றின. நவீனத் திறனாய்வாளர்கள் அவற்றைக் குறைத்து மதிப்பிட்ட பொழுதும் கூட, சீனரின் மனத்திலும் ஒழுக்க நெறியிலும் அவற்றின் ஆதிக்கம் மிகுதியானது மட்டுமன்று தொடர்சியுமுடையது.[13]

இலக்கியத்தினைப் போலவே வரலாறும் மக்களுக்குப் பயன்தருதல் வேண்டும் என்ற கருத்து சீனத்தில் விளங்கியது. நீதித்துறையிலும் அரசியலிலும் வரலாற்றின் தாக்கம் காணப்படுகிறது. பழைய வரலாறு கற்பிக்கும் பாடங்கள் யாவும் நிகழ்கால, மற்றும் வருங்கால வரலாற்றுக்குரிய கண்ணாடி (Mirror) யாகக் கருதப்பெற்றது.

சீன நூலகம்

சீன நூலகத்தின் நான்குபெரும் பிரிவுகளில் கன்பூசியச் செவ்வியல் நூல்களுக்கு (The Confucian Classics) அடுத்தபடி வரலாற்று நூல்கள் அடுக்கியுள்ள பிரிவு மிகப் பெரியதாகப் பேணப்பெற்றது. அதற்கு அடுத்த நிலையில் அழகியல் உணர்வினை வளர்க்கும் கவின்கலைப் பிரிவும் இருந்தது. வரலாற்று மூலப் பொருள்களினால் வளமூட்டப் பெற்ற சீன இலக்கியங்களில் வரலாற்று மாந்தர்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய குறிப்பீடுகள் (Allusions) நிறைந்துள்ளன. சீனப் புலமைத்துவத்திற்கு அந்த நாட்டின் வரலாற்றறிவு ஓர் அளவுகோலாக இப்பொழுதும் கூட எண்ணப்படுகிறது.

காவிய நீதிக்கொள்கை

கன்பூசிய அறத்தின் செல்வாக்கினால் நன்று, தீது ஆகிய உணர்வுகளில் சீனர்கள் உறுதி பூண்டிருந்தனர். இந்த

அறக்கடப்பாட்டினால் காவிய நீதிக்கொள்கை (The Concept of poetic justice) உதயம் ஆகியது. இந்தக் கோட்பாடு பழைய கிரேக்க, இந்திய இலக்கியங்களிலும் ஊடுருவியிருத்தல் இயைபு கருதி இங்குச் சுட்டுதற்கு உரியது. "அறத்திற்குப் பரிசு உண்டு, மறத்திற்குத் தண்டனை உண்டு" என்று கன்பூசியத் தத்துவ ஞானிகளாலும்; "அறம் புரிபவர்க்குச் சுவர்க்கமும், மறம் புரிபவர்க்கு நரகமும் உண்டு" என்று பௌத்த ஞானிகள் மற்றும் தாவு மார்க்கத்தவராலும் மக்களிடையே பரப்பப்பட்ட கருத்தின் அடிப்படையில்தான் காவிய நீதிக்கோட்பாடு எழுந்தது. கன்பூசியம், தாவுநெறி, பௌத்தம் ஆகிய மூன்றின் ஒருங்கிணைந்த கொள்கையினால்தான் பழியெதிர்ச் செயலில் (Retribution) மக்களுக்கு நம்பிக்கை வளர்ந்தது. முடிவில் நல்லதும் அறமும் வெல்லும் என்ற உண்மையினைச் சீன இலக்கியம் கற்பிக்கிறது.[14]

உலகியல் வாழ்வுக்கும் கன்பூசியசின் போதனைகள் நெறிகட்டுவன என்ற கருத்தினையும் சீன மக்கள் கொண்டிருந்தனர். இவர்கள் படைத்த இலக்கியம் அழகியல் உணர்வினைத் தருவதைவிட, பயன்பாட்டினைத் தருவதாக உள்ளது. கலை கலைக்காகவே என்ற மேலைநாட்டார் கோட்பாடு பயனற்றது என்று ஒதுக்கிவிட்டு, இலக்கியப் பயன்பாட்டிற்கு உரியனவாகத் தத்துவத்தினையும் வரலாற்றினையும் சீன எழுத்தாளர்கள் முடுக்கிவிட்டனர். தத்துவமும் வரலாறும் அறிவு, உண்மை ஆகியவற்றுக்குப் பெரும்பங்களிப்புச் செய்துள்ளன என்பதுடன் மனித இனத்தின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் பயன்பட்டுள்ளன என்பதால்தான் எழுத்தாளர்கள் தம் படைப்புக்களில் இவ்விரண்டிற்கும் முதன்மை தந்துள்ளனர்.[15]

சீன இலக்கிய வகைமை

அரச ஆணைகள் (Proclamations) அரியணைப் பதிவேடுகள், நூல்களுக்குரிய பாயிரங்கள், அவற்றின்

பின்னெழுதப்பட்ட குறிப்புக்கள், மெய்க்கீர்த்திகள், கல்லறைக் கல்வெட்டுக்கள் முதலிய பலவகை (Genres) சார்ந்த பயன்பாட்டு உரைநடைகளினால் சீன இலக்கியம் வளப்படுத்தப் பெற்றுள்ளது. கடித இலக்கியம் (Epistolary Writings) ஒரு பயன்மிக்க கலை வடிவமாக இலக்கியர்களால் படைக்கப்பட்டது. கவின்மிகு இயற்கைப் புனைவுகள், பயண இலக்கியங்கள் யாவும் மனித அக்கறை மிக்கனவாக விளங்கின. அறவியல் சிந்தனைகளும், தத்துவ வாதப் பிரதிவாதங்களும் இலக்கியத்தில் இடம்பெற்றன.

அறிவுத்திறன் படைத்தவர்கள் (-அறிவு ஜீவிகள், Intellectuals) கவிதை எழுதுவதை நாளும் மேற்கொண்டிருந்தனர். கற்பனை வானில் கோட்டைகளைக் கட்டும் மேலைநாட்டுக் கவிஞர்களைப் போலல்லாமல் சீனக் கவிஞர்கள் உலகியலுடனும் நடைமுறையுடனும் ஒட்டிய கவிதைகளைப் புனைந்தனர். கற்பனை நாட்டத்தினாலோ அழகியல் விருப்பங்களினாலோ; உள்ளத்தினுள்ளும் பிரபஞ்சத்தினின்றும் ஊடுருவிச் செல்லும் புனைவியற் பயணங்களின் சிலிர்ப்பினாலோ (Thrill) சீன எழுத்தாளர்கள் பாதிப்பு அடைவது இல்லை. அன்றாட வாழ்விலும், தொழிலிலும் தொடர்புடைய மூலப்பொருள்களிலிருந்தே தங்கள் பாடல்களை நெய்வதுடன் அவர்கள் நிறைவு பெற்றனர். பெரும்பான்மையும் கற்றறிவு படைத்த சீனர் ஒவ்வொருவரும் ஒரு கவிஞராக இருந்தனர்; தேவை ஏற்படும் பொழுது, பற்பல பாடல்களை விரைந்து பாடியுள்ளனர். பாடல்கள் புனைவதற்குச் சீன நாட்டில் எண்ணற்ற சூழல்களும் வாய்ப்புக்களும் இருந்தன. 1. அரசுப் பாராட்டு விழாக்கள், 2. சமய விழாக்கள், 3. திருமணங்கள், 4. பிண ஊர்வலங்கள், 5. தோட்ட விருந்துகள், 6. களியாட்டு விருந்துகள், 7. காட்சி இடங்களுக்குப் பயணம் - இன்னோரன்ன பற்பல வேளைகளில் நெஞ்சினைக் கவரும் செஞ்சொற் பாடல்களைச் சீனக் கவிஞர்கள் பாடி மகிந்தனர்.[16]

நாடகங்கள், புனைகதைகள் ஆகியவற்றின் இடைஇடையே பற்பல பாடல்கள் நுழைக்கப்பட்டிருத்தலால் கவிதை எங்கும் பரவலாக மதிக்கப்பெற்ற உண்மை புலனாகும். பழமை வய்ந்த உரைநடைக் கதைகளிலும் பாடல்கள் மிகுதியாகக் கலந்துள்ளன. இவற்றைக் கவிதைக் கதைகள் (Poetic tales) என்றே அழைத்தனர். சீன நாடகம் என்பது செய்யுள் நாடகமாகவே இருந்துள்ளது. நாடகக் கதையின் கரு, அமைப்பு, பாத்திரப்படைப்பு ஆகியவற்றை விட அதில் இடம்பெற்றுள்ள பாடல்களைப் பற்றியே திறனாய்வுப் பாராட்டு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. இதற்குக் காரணம் உரையாடல்களின் உணர்வுக் கூறுகளைப் பாடல்களே உயர்த்தின என்பதுதான். ஃபூ (Fu) என்னும் சீன இலக்கியம் பாடல், உரைநடை ஆகிய இரண்டினாலும் உருப்பெற்றது. ஒரு வகையில் இந்திய நாட்டில் வழங்கும் உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுள் எனப்படும் சம்பு காவியத்தினை இஃது ஒத்தது என்று கூறலாம். நனி சிறந்தனவும், மிகவும் குறிப்பிடத்தக்கனவும் எல்லாம் பாடல் வடிவத்தில் எழுதப்பட்டன. பாடல், உரைநடை ஆகிய இரண்டையும் பிரிக்கும் எல்லைக்கோடு மிகவும் மெல்லிதாக உள்ளது.[17]

சீனப் பாடலின் சிறப்புக் கூறுகள்

சீனப் பாடலின் சிறப்புக் கூறுகளில் **செறிவுடைமை** (Compactness) என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வோரடியிலும் ஐந்து அல்லது ஏழு சொற்களைக் கொண்டதாய் நாலடி முதல் எட்டடி வரை பாடப்பெறும் யாப்பு வடிவமே மிகவும் பரவலாகக் காணப்படுகிறது. சீனச் செய்யுளைப் பொறுத்தமட்டில், சுருக்கமே செய்யுளின் உயிராக (Brevity was the soul of poetry) இருந்தது. இந்த வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் கலைப்பயன் கொடுக்கும் பாங்கில், கவிதையில் ஒவ்வொரு சொல்லும் கவனமாகச் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டு, உன்னதத் தன்மைக்கு (Excellence) உரிய கலைநேர்த்திச் செயற்பாடு உடையதாக அமைக்கப்பட்டது.

செய்யுள் புனைவதில் அருமைப்பாட்டிற்கு ஒரு நிகழ்வினை மேற்கோள் காட்டுதல் மரபு. லீ போ (Li Po) என்னும் கவிஞர் தன் தோழமைக் கவிஞர் தூ ஃபூ (Tu Fu) என்பார் கவிதை புனைவதற்கு மேற்கொள்ளும் வருத்தும் முயற்சிகளை மையமாக வைத்துப் பகடி (Fun) செய்த பாங்கு அவர் கவிதையில் படிந்துள்ளது. லீ போ தன் நண்பரை நோக்கி,

"எவ்வளவு தூரம்,பரிதாபப்படும்படி மெலிந்து போய்விட்டாய்!
மீண்டும் கவிதை புனைதலினால் வருந்துகிறாயோ?"

என்று கேட்டதாக ஒரு பாடல் உண்டு. இலக்கணம், கட்டுக்கோப்பு, சொல்தேர்வு ஆகியவற்றைப் பார்த்துப் பாடல் எழுதுதல் எவ்வளவு அருமைப்பாடு உடையது என்பது இப்பாடற் குறிப்பினால் புலனாகும்.[18] திருச்சிற்றம்பலக் கோவையாரில்,

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்பலத்தும் என்சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோ?அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ?
இறைவா! தடவரைத்தோட்கு என்கொலாம் புகுந்து எய்தியதே.

எனவரும் பாடல் இங்கு எண்ணத்தக்கது. தலைவனின் தோள் மெலிவிற்குரிய காரணங்களில் ஒன்றாகப் பாடலாய்வும் சுட்டப்பெற்றுள்ளமை ஒப்பு நோக்குதற்கு உரியது.

சீனப் பாடலின் மற்றொரு சிறப்புக் கூறு இசை ஆகும். சீனப் பாடல்களின் முதன்மை வகைகளாகிய ஷிஹ் (Shih), துசு (tz'u), சு (Ch'u) என்ற மூன்றும் தொடக்கத்தில் கருவி இசையுடன் பாடப் பெற்றவையாகும். பின்னர், பாடலினின்றும் இசை விடுவிக்கப்பட்டது. வரையறுத்த ஓசை நயத்திட்டங்கள், நாத மாதிரிகள் ஆகியவற்றினின்றும் கடினமான யாப்பியல் உருவாக்கப்பட்டது. பிற்காலத்தில் இசையுடன் இயைந்து பாப்புனைதல் முடிவுக்கு வந்தாலும் கூட கிரேக்கப் பாடலைப் போல வாய்விட்டுச் சத்தமாகப்

படித்தற்குரிய பாடல்களைச் சீனக் கவிஞர்கள் பாடினர். தலையினைக் குலுக்கிக் கொண்டும் பின்னல் சடையினை ஆட்டிக் கொண்டும் சுவையார்வத்துடனும், பாடலின் நனி சிறந்த இயல்புகளைப் புலப்படுத்தும் பாங்கில் ஒவ்வொரு சொல்லிற்கும் உரிய ஒலிப்புடனும் முழக்கமிட்டுப் பாடிவரும் பழைய மரபுச் சீனப் பண்டிதரைப் பார்த்தல் என்பது அரிய அனுபவம் ஆகும். இவ்வாறு பாடல் ஒப்பித்தல் இந்நாளில் மறைந்துவிட்ட கலையாக உள்ளது என்று லியு வு-சி (Liuwu - Chi) என்னும் சீன இலக்கிய ஆராய்ச்சி அறிஞர் கருதுகின்றார்.

சீனக் கவிஞரின் வித்தகம்

சொற்சுருக்கம், கலைத்திறம், இசை ஆகியவற்றின் மேல்தளத்தில் தம் படைப்பாற்றலினாலும் சொற்சாலத்தினாலும் சீனக் கவிஞர்கள் மாயா உலகக் கவிதையினைக் காட்சிப்படுத்திக் காட்டுவதில் வல்லவர்கள் ஆவர். வீட்டு அடுக்களைகளும், நட்பின் கதகதப்பும், குடும்ப அன்பும் புனையப் பெறுவன. சிரிக்கும் நிலவிலும், ஈர்க்கும் மலர்களிலும், இயற்கையின் அழகினை மீண்டும் படைத்துக்காட்டும் இயற்கை நிலக் காட்சி ஓவியங்களிலும் கொண்டஈடுபாட்டினால் அதிசயமும் பிரமிப்பும் ஊட்டக் கூடிய கவிதைகள் தோன்றுகின்றன. நெடுந்தொலைவு பயணம் செல்லும் பொழுது கவிதை வழித்துணைவனாக வருகிறது. அடிக்கடி நாடு கடத்தப்பட்ட சீனக் கவிஞர்கள், தாயகத்தைக் காணவேண்டுமே என்ற ஆறுதல் சொல்ல முடியாத ஆர்வக் கனிவுகளால் உந்தப்பட்டு, குடும்பப் பாசத்தைப் புலப்படுத்தக் கூடிய பாடல்களையும், சீன இலக்கியத்தின் பொற்காலத்தின் நினைவுகளை எண்ணி அசை போடுதலைக் காட்டும் பாடல்களையும் பாடியுள்ளனர். இக்கவிஞர்களின் உணர்வுகள் இயல்பானவை, எளியவை;எனினும், கவிஞர்களின் குரலில் ஒலிநயம் வாய்ந்த தொடர்களில் அவர்தம் கற்பனைப் புனைவுகள் யாவும் கலைக்கவின் பொருந்தி மிளிர்கின்றன.

எளியவற்றையும் எழிலாக்கிக் காட்டும் வித்தையில் சீனக் கவிஞர்கள் சிறந்துள்ளனர்.[19]

மேற்கோற் குறிப்புக்கள்

1. The Combridge History of Chinese Literature, Volume I, Edited by Stephen Owen, First Edition, 2010, pp.xx-xxi.
2. Ibid, p.xxi.
3. Ibid, p.xxiii.
4. Ibid, p.xxv.
5. Ibid, p.1.
6. Ibid, pp.2-3.
7. Ibid, pp.3-4.
8. Ibid, p.6.
9. Ibid, pp.17-28.
10. Liu Wu - Chi, An Introduction To Chinese Literature, Bloomington, Indiana, p.3.
11. Ibid, p.4.
12. Ibid.
13. Ibid, pp.4-5.
14. Ibid, p.5.
15. Ibid, pp.5-6.
16. Ibid, p.6.
17. Ibid, p.7.
18. Ibid.
19. Ibid, p.8.

3. சீனமொழி வளர்ச்சியும் செவ்வியல் இலக்கியமும்

(கி.மு.2,400 - கி.மு.350)

சீனமொழியின் ஆதி வரலாறு கதையிலும் கற்பனையிலும் கலந்துள்ளது. இம்மொழி எப்பொழுது தோன்றியது? எப்படி தோன்றியது? என்பது அறியப் படவில்லை. என்றாலும் இம்மொழி வளர்ச்சியின் பல்வேறு படிநிலைகளையும், இம்மொழியில் முதன்முதல் எழுதப்பட்ட இலக்கியத்தின் வகையினையும் முடிந்தமட்டில் சீனவியலார் (Chinalogists) மீட்டுருவாக்கம் செய்துள்ளனர். மஞ்சள் சக்கரவர்த்தி (The Yellow Emperor) காலத்தில்தான் சீன எழுத்தின் காலத்தால் முற்பட்ட வடிவங்கள் தொடங்கின என்பது மரபு வழிப்பட்ட செய்தியாகும். இம்மாமன்னர் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சிபுரிந்தவராகக் கருதப்படுகிறார். அவருடைய அரசவையில் இருந்த வரலாற்றாசிரியர் சங் சியே (Cs'ang Chieh) என்பவர் மணலில் பறவைகளும் விலங்குகளும் விட்டுச்சென்ற குறிகளிலிருந்து எழுத்து வடிவத்தினை வரைந்தனர் எனச் சொல்லப்படுகிறது. இச்செய்தி கற்பனையாக இருப்பினும், தொடக்கக் காலத்தில் சீன எழுத்துக்கள் பெரும்பான்மையும் பட எழுத்துக்களாக (Pictographic) இருந்தன என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறது.

அரைகுறை வரலாற்றுத் தொடர்புடைய காலத்தில், சீனமொழி வளரத் தொடங்கியது. இக்காலக் கட்டத்தில், சடங்கு சார்ந்த வெண்கலப் பாத்திரங்களின் மேலும், ஆமை ஓடுகளின் மேலும், எருதுகளின் எலும்புகள் மேலும் குறி சொல்லும் தொடர்கள் எழுதப்பட்டன. கி.மு.18ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு.12ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி

செய்த யின் அரச மரபின் (Yin Dynasty) ஆட்சிக் காலத்தில் தேவ வாக்குகளையும் (Oracles) மனித உணர்வுகளையும் செயற்பாடுகளையும் பதிவு செய்வதற்குரிய ஆற்றல் படைத்ததாகவும் நன்கு வளர்ச்சி பெற்றதாகவும் எழுத்துருவம் விளங்கியது. இவ்வகை ஓடு மற்றும் எலும்புப் பொறிப்புக்கள் (Shell and bone inscriptions) பெரும்பான்மையும் நவீன சீன மொழியின் இயல்புகள் அனைத்தையும் பெற்றிருந்தன. யின் அரசமரபின் (Yin dynasty) காலத்துப் பொறிப்புக்கள் பலவும் நவீன காலத்து அறிஞர்களால் படிக்கப்பட்டும் (Deciphered) ஆராயப்பட்டும் (Studied) உள்ளன. சுமார் 4,000 சொற் கோவையில் (Vocabulary) 2,000 சொற்களுக்குமேல் (-பாதிக்கு மேல்) அறியப்பட்டிருக்கின்றன. இம்மொழியின் வளம் மனத்தில் பதிவு ஏற்படுத்துவதாக உள்ளது. யின் காலத்துச் சீன நாகரிகம் உயர்நிலையில் இருந்திருத்தல் வேண்டும் என்பதை இச்சொல் வளம் உணர்த்துகிறது.

இப்பொறிப்புக்களை (Inscriptions) பதிவு செய்வதில் குறி சொல்லுவோர் (Diviners) சிற்சில வேளைகளில் தனிச் சொற்களைத் தொடர்களாவும் வாக்கியங்களாகவும் அமைத்திருத்தல் கூடும். பின்வருவது நீண்ட பகுதிகளில் (passages) ஒன்றாகும்.[1]

Divined on the day of kuei-mao

It is going to rain today.
Is the rain going to come from the West?
Is the rain going to come from the East?
Is the rain going to come from the North?
It the rain going to come from the South?

பருவ காலத்து மழையினைப் பற்றியதாக இதனைக் கருதலாம்.

Kuei - தேவவேர்ச் சொற்கள் (Celestial stems) பத்தில் பத்தாவதாகும். தரைக்கிளைகள் (terestrial branches)

பன்னிரண்டில் mao என்பது நான்காவது ஆகும். சுழன்று வரும் (-மண்டலித்து வரும்) இவ்வெழுத்துக்களின் கலவை சீனப் பஞ்சாங்கத்தின் (Chinese Calendar) மணி (hour), நாள் (day), ஆண்டு (year) ஆகியவற்றைக் குறிக்கிறது என்பர்.

மழைக்குரிய வானிலையினை இப்பொறிப்பு சுட்டுகிறது. நான்கு திசைகளில் எந்தத் திசையிலிருந்தும் மழை வரலாம் என்று பண்டைய சீனமக்கள் எண்ணியதால்,

மேற்கிலிருந்து மழை வரப்போகிறதா?
கிழக்கிலிருந்து மழை வரப்போகிறதா?
வடக்கிலிருந்து மழை வரப்போகிறதா?
தெற்கிலிருந்து மழை வரப்போகிறதா?

என்று எதிர்பார்த்தனர் எனத் தோன்றுகிறது. இத்தகைய தொடர்களில் ஒருவகைக் கவிதை முயற்சி காணப்படுகிறது.

யின் (Yin) காலத்துக்குரிய வெண்கலப் பாத்திரங்களின் பொறிப்புக்கள் பழைய சீனமொழியினை அறிந்து கொள்ளுவதற்குப் பயன்படும் மற்றொரு மூலம் (Source) ஆகும். வடிவத்திலும் கலைநேர்த்தியிலும் யின் வெண்கலன்கள் (Yin bronzes) கலைத்திறன் வாய்ந்தவையாக இருக்கின்றன. இவற்றில் காணப்படும் பொறிப்புக்கள் எலும்புகள், ஓடுகள் (bones and shells) ஆகியவற்றில் காணப்படுவனவற்றுடன் ஒத்துள்ளன. இவ்விரு வகைப் பொறிப்புக்களும் சேர்ந்து பண்டைச் சீன மக்களின் சமுதாயம், மற்றும் அச்சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள் பற்றிய வியப்பளிக்கும் காட்சியை வெளிப்படுத்துகின்றன. அவர்கள் நன்கு பயன்படுத்திய மொழியினை வருங்காலத் தலைமுறையினர்க்காகப் பதிவு செய்து பேணியிருத்தல் பாராட்டத்தக்கது.

பழைய பொறிப்புக்களிலிருந்து சீனமக்களின் பல்வகைச் செயற்பாடுகள் பற்றிய வியத்தகு விவரங்களை அறிய முடிகிறது. அவற்றுள் இலக்கியப் படைப்பிற்கு

அவர்கள் எடுத்துக் கொண்ட கரடு முரடான முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் பலவும் பிற்காலத்தவர்களால் செம்மை செய்யப்பெற்றிருத்தல் வேண்டும் என்பர். இவ்வாறே, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துப் பெருவேந்தர்கள் வாழ்ந்த பொழுது பாடப்பெற்றவை எனச் சொல்லப்படும் பாடல்கள் பலவும் கேள்விக்குரியனவாகவே உள்ளன. எனவே, இப்புராதனப் பாடல்கள் தொல்பழம் சீனக் கவிதையின் ஊற்றுவாய் என்று எண்ணுவதற்கு இயலவில்லை என்று கூறுவர் சீனவியலார் (Chinalogists). இருப்பினும், கிடைக்கும் சான்றுகள் தொல்பழம் சீனர்கள், புராதன மனிதர் பலரைப் போலவே ஆடல், பாடல் ஆகியவற்றில் ஈடுபாடு காட்டினர் என்பதையும், இவற்றுடன் முற்காலச் சீனச் செய்யுள் நெருங்கிய தொடர்பு கொண்டது என்பதையும் உறுதிப்படுத்துகின்றன.

சீனப் பெருஞ் சிந்தனையாளரும் பேராசானும் ஆகிய கன்பூசியசு (கி.மு.551-479) காலம் முதலாகவே சீன இலக்கிய வரலாறு முறையாகத் தொடங்குகிறது. தமக்குமுன் மக்களிடையே வழங்கிய எழுத்துக்களைத் தொகுத்து வருங்காலத் தலைமுறையினர்க்குக் கட்டளை ஏடுகளாக (Canons) வழங்கிய ஞானியாகக் கன்பூசியசு ஒளி வீசுகிறார். இப்பெரியார் தொகுத்துக் கொடுத்த பல்வகை இலக்கியங்களும் யின் மரபுக்குப் பின் வந்த செள அரசமரபு (Chou dynasty) ஆட்சி செய்த கி.மு.1200- கி.மு.300 என்ற காலப் பகுதிக்கு உரியவை. இக்காலப் பகுதியில் சீனம் இரும்பு யுகத்தில் (Iron Age) விளங்கியது. நில மானிய அடிப்படையில் (Feudatory land holding) தழைத்தோங்கிய வேளாண்மை நாகரிகத்தினை (Agrarian Civilization)ச் சீனம் உருவாக்கியது. மஞ்சள்நதிப் பள்ளத்தாக்கினைக் கேந்திரமாகக் கொண்டு செயற்பட்ட செள அரசு (The Chou Kingdom) நிலப்பிரபுக்களால் ஆளக்கூடிய பற்பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுவிட்டன. இவர்கள் அரசனுக்குக் கடமைப்பட்டு அடங்கி நடக்க வேண்டியவர்கள்.

ஒவ்வொரு மாநிலத்தின் (state) ஆட்சியாளரும் தனக்குக் கீழ்நிலையில் உள்ள பிரபுக்களிடமிருந்து தமக்குரிய நிலமானியத்தினைப் பங்கிட்டுக் கொண்டனர். பிரபுக்கள் நிலத்தினை உழுதொழிலுக்காக உழவர்களிடம் ஒப்படைத்தனர். உழவர்கள் பிரபுக்களின் குடும்ப அமைப்புடன் இணைக்கப்பட்டு அவர்களுக்குப் பண்ணையாட்களாக வேலை செய்தனர்.

சௌ மரபு ஆட்சி செய்த காலத்தில் நிலமானிய நீதிமன்றம் (Feudal Court) அரசு நீதிமன்றத்தினைப் (Royal Court) போலவே குறி சொல்லுபவர்கள் (diviners), வரலாற்றெழுத்தாளர்கள் (Historiographers), பாடகர்கள் (Musicians), சடங்குபுரிவோர் (Ritualists) ஆகியோரை அலுவலர்களாகக் கொண்டிருந்தது. இவர்கள் ஆற்ற வேண்டிய பணியும் வரையறுக்கப்பட்டிருந்தது. சமய விடயங்கள் குறித்துக் குறி கூறுவோர் அரசு புரிவோர்க்கு (Ruler) அறிவுரை வழங்கினர். மாநில வரலாறுகளை வரலாற்றெழுத்தாளர் தொகுத்தனர். அரச நிகழ்வுகளின் விரிவான சடங்குகளைப் பாடகர்களும் சடங்கு புரிவோர்களும் நிகழ்த்தினர். அரசுப் பணியில் பயிற்றுநர்கள் (Tutors) நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் இளவரசர்களுக்கு 1.இசை, 2. சடங்கு, 3. எழுதுதல், 4. கணிதம், 5. வில் வித்தை, 6. தேர் செலுத்துதல் ஆகிய அறுவகை வித்தைகளையும் கற்பித்தனர்.

இதே காலத்து மேல்மட்டத்துச் சீனச் சமூகம் பற்றிய மரபு வழிப்பட்ட குறிப்பு நம்பத்தக்கதாக இருப்பின், சௌ காலத்துப் பண்பாடு (Culture of Chou period) நன்கு மேம்பட்டதாக இருந்திருத்தல் வேண்டும். இந்தச் சூழல்களில்தான் பழைமை வாய்ந்த பனுவல் தொகுதிகளைச் சீனஞானி கன்பூசியசு தொகை வகை செய்தார்.[2] இப்பனுவல்கள் தொகுப்பினைப் பற்றிக் கூறுவதற்கு முன், இவற்றைத் தொகுத்தவராகிய கன்பூசியசைப் பற்றிக் கூறுதல் முறையாகும்.

குங் (Kung) என்பதுதான் கன்பூசியசின் மூலப் பெயராகும். இப்பெயருடன் **Fu-tze** என்ற சிறப்புப் பெயரினை அவரைப் போற்றிய சீனமக்கள் சேர்த்து Kung-fu-tze (குங் ஃபு சே) என்று அழைத்தனர். இப்பெயருக்கு குங், பெரும்பேராசான் (Kung, the Master Teacher) என்பது பொருளாகும். சீன நாட்டிற்கு முதன்முதல் வருகை தந்த ஐரோப்பியர்கள் மூலப் பெயரினையும் சிறப்புப் பெயரினையும் ஒன்றாக இணைத்துக் கன்பூசியசு (Confucius) என்று ஒலித்தனர். இப்பெயரே இன்றளவும் நிலைபெற்றது.

சீன இலக்கியம், சமயம், அரசியல் பற்றிய வரலாறுகளின் நடு நாயகமாகத் திகழ்பவர் பெரும்பேராசிரியர் குங் எனப்படும் கன்பூசியசே ஆவர். அரசியல் அடிப்படையில் அவர் காலத்திற்கு முன்பு சீன தேசம் சிறுசிறு நாடுகள் பல உடையதாய், அவை தாமும் ஒன்றுக்கொன்று போரிட்டுக் குழப்பத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தன. கன்பூசியசின் போதனைகளின் ஆற்றலால் அண்மை நூற்றாண்டுகளில் சீனம் அன்பும் அமைதியும் மிக்கதாய், போரில்லாத ஒரு பெரும் சாம்ராச்சியமாக உருவெடுத்துள்ளது.

சமய அடிப்படையில் பார்க்குமிடத்துக்கூட, பழமைக்கும் புதுமைக்கும் நடுநாயகமாகவே கன்பூசியசு திகழ்கிறார். சீன நாகரிகத்தில் புதுமை என்று பெயரிட்டுச் சொல்லப்படுவது 2,400 ஆண்டு காலமே நிலவியுள்ளது. கி.மு.551இல் கன்பூசியசு பிறந்தார். அவர் பிறந்த காலப் பகுதியில்தான் இந்திய நாட்டில் புத்தரும், கிரேக்க நாட்டில் சோலோன் (Solon) மற்றும் பிதாகோரசு (Pythagoras) ஹெராக்லிட்டசு என்பவர்களும் பாரசீகத்தில் சொராஸ்டரும், சீன நாட்டில் தாவு மார்க்கத்தைக் கண்ட இலவோசியசும் (Lao-tze) தோன்றியுள்ளனர். எனவே, கன்பூசியசின் காலத்தில் உலகின் பல பகுதிகளிலும் மார்க்கதரிசிகளும், மகான்களும், ஞானிகளும் தோன்றி மக்களை நல்வழிப்படுத்தினர் எனலாம்.

பரவலான மாபெரும் சிந்தனை எழுச்சியை உண்டாக்கிய கன்பூசியசின் காலத்திற்கு முன்பு சீன நாட்டில் சமய நிறுவனம் எதுவும் தோன்றவில்லை. ஆனால், அவர் காலத்திற்கு முன்பே சமயக் கருத்துக்கள் விளங்கி வந்துள்ளன. ஆனாலும், இவையாவும் குழம்பிய வடிவத்திலேயே இருந்தன. கன்பூசியசு புதுமையாகப் போதித்தவை மிகச் சிலவே ஆகும். தம் உரைகள் ஒன்றில்,

> *"நான் (பழைய சிந்தனைகளைப்) பரப்புகிறவன் (Transmitter), அவற்றின் படைப்பாளி (Creator) நான் அல்லன்"*

என்று கன்பூசியசு கூறுதல் கவனிக்கத்தக்கது. மேலும்,

> *"பண்டைய நம் முன்னோரின் மதிநலம் (Wisdom), பட்டறிவு, அறிவுநுட்பம் ஆகியவற்றை நான் நம்புவதுடன் விரும்புகிறவன்"*

என்று அவர் இயம்புதல் நோக்கத்தக்கது.

பண்டையோர் அறிவுச் செல்வத்தை மக்களுக்குப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்த கன்பூசியசு சமயம் (Religion), ஒழுக்கம் (Morality) ஆகிய இரண்டின் முக்கியத்துவத்தினை வலியுறுத்திப் பேசினார். அவ்விரண்டனையும் மக்கள் மனத்தில் பதியவைத்தார். படிப்படியாகச் சீன தேச மக்கள் அனைவரும் அவர் காட்டிய தோரணியில் (Pattern) தங்களை வடிவமைத்துக் கொண்டனர். சிதறிக் கிடந்த பண்டைய சிந்தனைகள் யாவும் தெளிவாக்கப்பட்ட வாழ்வியல் நம்பிக்கையாக வடிவம் பெற்றன. பெரும்பேராசிரியர் கன்பூசியசின் சிந்தனையில் நுழைந்து சென்ற அப்பழைய சிந்தனைகள் தூய்மைப்படுத்தப் பெற்று மேம்படுத்தப் பெற்றன. எனவே, கன்பூசியம் மிக உயர்ந்ததாகவும், வலிமை மிகப் படைத்த சமயச் செல்வாக்காகவும் வளர்ச்சி பெற்றது.

கன்பூசியசின் போதனைகள் யாவும் முற்ற முடிந்த அறிவுரை என்று மக்கள் ஒப்புதல் அளித்தனர். அளித்தபின், சீனப் பள்ளிகளில் எல்லாம் கன்பூசியசின் போதனைகள் பயிற்றுவிக்கப்பட்டன. கன்பூசியசு ஒரு சாமானிய மனிதர் என்ற மட்டில் சீனர்கள் கருதவில்லை. அவரை ஒரு பூரண மனிதர் (Perfect man) என்று அவரை மதித்தனர்; கடவுளுக்குச் செய்யும் மரியாதைகளை எல்லாம் அவருக்கும் செய்தனர். இருபதாம் நூற்றாண்டில் சீனப் பேரரசி நனியுயர்ந்த கடவுளுக்கு ஒப்பாகக் கன்பூசியசை வழிபடவேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்.

கன்பூசியசு என்ன போதித்தார் என்பதை அவருடைய எழுத்துக்களிலிருந்தும் மூதுரைகளிலிருந்தும் தொகுத்துக் கூறுதல் இயலும். உலகியல் வாழ்வு செம்மையுற அவர் வழங்கிய போதனைகள் தெள்ளத்தெளிவாக உள்ளன. ஒழுக்கம், மரியாதை உணர்வு, தன்மதிப்பு (Dignity), மரபொழுங்குகளைப் பின்பற்றுதல், புலனின்பங்கள் மற்றும் அற்பப் பொருள்களிலிருந்து வெளியேறுதல, தொடர்ந்து படித்தல், நனிநல்லனவும் நனி உயர்ந்தனவுமாகியவை எவையாயினும் அவற்றுடன் ஒன்றுபடுதல் என்பன கன்பூசியசின் போதனைகளில் குறிப்பிடத்தக்கவை. வாய்மையினை அவர் வலியுறுத்தினார். வாய்மை பேசுவதில் விதிவிலக்கான சூழலையும் அவர் குறிப்பிட்டுள்ளார். நடைமுறை வாழ்வில் உண்மை என்பது எல்லா நிலைகளிலும் பின்பற்றக் கூடியது அன்று என்றார். தன் வாழ்வில் அவர் சூளுரையினை மீறியுள்ளார். அங்ஙனம் மீறியதற்குரிய காரணத்தையும் கூறியுள்ளார். அவரைக் கட்டாயப்படுத்திச் சூள் உரைக்கும்படி கூறியதால், அதனை மீறியதாகக் குறித்துள்ளார்.

இவ்வுலக வாழ்வுக்குத் தேவையாகக் கன்பூசியசு கூறிய அறங்கள் தெளிவாக உள்ளன. ஆனால், மறுமை பற்றிய அவர் கொள்கைகள் தெளிவாக இல்லை. தமக்கு

முன் சீன நாட்டில் நிலவிய சமயக் கருத்துக்களில் முழுமுதல் கடவுள் (Supreme God) பற்றிய கொள்கையினை அவர் ஏற்றுக்கொண்டார். அக்கடவுளைத் தி (Ti) அல்லது விண்ணகம் (Heaven) என்ற சொல்லினால் சுட்டினார். மூதாதையர் வழிபாட்டினையும் (The Worship of Ancestors) ஏற்றுக்கொண்டார். அதனை வலிமை மிக்கோரின் ஆவிகளின் வழிபாடு என்று கூறினார். முழுமுதற் கடவுளைவிட இந்த மூதாதைக் கடவுளரே அவர் போதனையில் கூடுதலாக இடம்பெற்றனர். இவ்விருவகைக் கடவுளரையும் விட மனிதனுக்குத்தான் கன்பூசியசு முதன்மை கொடுத்தார். மனிதர்கள் விழுமியவர்களாக வளர்தலுக்கு உரியவர். கடவுளை வழிபடுவதாலும், போற்றுவதாலும், வணங்குவதாலும், அடைக்கலம் புகுவதாலும் மனிதர்கள் விழுமியவர்களாக முடியாது என்று கன்பூசியசு அறிவித்தார். மாறாக, தம்முடைய ஆன்ம பலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுவதாலும், தங்களைத் தாங்களே தியானித்துக் கொள்ளுவதாலும், தங்களுடைய சுயமான ஆற்றல்களாலும், நேர்மையாலும் மட்டுமே மனிதர்கள் உயர்ந்தோங்க முடியும் என்று போதித்தார். வளர்ச்சி என்பது புறத்திலிருந்து ஒருவருக்கு வருவது அன்று; அது தனக்குள்ளிருந்து வெளிப்படுவது. வளர்ச்சி என்பது கடவுட் கொடையன்று; மனிதனின் சுய ஆற்றலாலும் உறுதியாலும் வெளிப்படுவது என்றார்.

கன்பூசியசு மனித முன்னேற்றத்திற்குக் கடவுள் நிலையினைப் புறக்கணித்துவிட்டார். மனித ஆற்றலே அவன் முன்னேற்றத்திற்கு உரியதெனக் கற்பித்தார். எனவே, கடவுளை உடன்படாத பௌத்தத்துடன் கன்பூசியம் கலாம் விளைத்துக் கொள்ளவில்லை. தன் குற்றங்குறைகளுக்கும் பலவீனத்திற்கும் எதிராக மனிதன் தொடுக்கும் போராட்டத்தில் எந்த விதமான உதவி கிடைத்தாலும் வரவேற்கத்தக்கதே; அத்தகைய உதவி தெய்வங்களிடமிருந்தோ, மந்திர தந்திரங்களிலிருந்தோ (Magic) கிடைத்தாலும் ஏற்புடையதே என்றார்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் கன்பூசியம் சீனப் பெருநிலத்தின் அரசாங்க சமயமாக (State Religion) இருந்து வந்துள்ளது. இந்த நெடுங்காலமெல்லாம் மற்ற சமயங்களையோ, தத்துவங்களையோ கன்பூசியம் ஒரு பொழுதும் மறுக்கவில்லை.

பழைய சீன இலக்கியம் பெரும்பான்மையும் கன்பூசியம் (Confucianism) என்ற அடித்தளத்தில் கட்டப்பட்டது. தொன்மைச் சீனத்தினையும் வரலாறு அறிந்த சீனத்தினையும் பிரிக்கும் கோடாக (Dividing line) பேராசான் கன்பூசியசு விளங்குகிறார். தமக்குமுன் சீன இலக்கியம் இருந்தது; ஆனால் அது பேணி வைக்கப்படவில்லை. அந்தப் பழைய இலக்கியத்தின் மதிப்பினைக் கன்பூசியசு சுட்டிக் காட்டினார். தன் போதனைகள் அனைத்தையும் அந்த இலக்கியத்தின் அடிப்படையில் அமைத்துக் கொண்டார். தமக்குமுன் சொல்லப் பெறாத அரியதொரு பொருளை அந்த இலக்கியத்தில் படித்தறிந்தார். காலத்தால் விட்டுச் செல்லப்பெற்ற துணுக்குகளாகக் கிடைத்த அந்தப் பழைய எழுத்துக்களை இலக்கிய நிலைக்குக் கன்பூசியசு உயர்த்தினார். அதனைப் புனிதக் கருவூலமாகப் (SacredTreasure) போற்றினார். பின்னர் அந்த இலக்கியம் புனிதமறை (Holy Scripture) ஆயிற்று. இதனுள் காணப்படும் எளிய சொற்கள் கூட விரிவான குறிப்புப் பொருள்களை யுடையவை என்று பின்னால் தோன்றிய கன்பூசிய நெறியாளர்கள் விளக்கவுரை கூறினர்.

மறைந்துபோய்விடாமல் காப்பாற்றப்பட்ட மிகப் பழைய சீன எழுத்துக்கள் பல பனுவல்களாக வகைப்படுத்தப் பெற்றன. இவற்றின் ஆசிரியர்கள் கன்பூசியசும் அவருக்குப் பின் இரு நூற்றாண்டு வரை வாழ்ந்த அவர் சீடர்களும் அவர்களுக்குச் சீடர்களும் ஆவர் என்பது கற்பித்துக் கூறப்படுகிறது. இந்தப் பனுவல்களே சீனத்தின் புனித இலக்கியம் (Sacred Literature) ஆகும். பின்னர் வந்த கன்பூசிய நெறியாளர்கள் புதியனவாக நூல்கள் எவையும்

எழுதவில்லை. ஆனாலும், மேலே சுட்டப்பெற்ற புனித இலக்கியங்களுக்கு உரைகளும், விளக்கங்களும் அவர்களால் எழுதப்பட்டுள்ளன.

ஐம்பெரும் தொன்மைச் செவ்வியல் பனுவல்கள்

கன்பூசியசு பேணிக்காத்த எழுத்துக்கள் (Writings) யாவும் நான்கு வேறு தொகுதிகளின் ஆவணங்களை உள்ளடக்கியவை. இந்த நான்கு தொகை நூல்களுடன், கன்பூசியசு தாமே எழுதியுள்ள வரலாற்று நூல் ஒன்றனையும் சேர்த்து ஐம்பெரும் தொன்மைச் செவ்வியல் பனுவல்கள் (Five Ancient Classics) என்று வழங்கி வருகின்றன. இவற்றை Five Kings என்றும் கூறுவர்.[3] இப்பனுவல்கள் ஒவ்வொன்றையும் குறித்து முறையே நோக்குவோம்.

1. ஷு கீங்கு (The Shu King - கி.மு.2400-கி.மு.700)

சீனச் செவ்வியல் பனுவல்கள் ஐந்தனுள் முதலாவதாக எண்ணப்படுவது ஷு கீங்கு (Shu King) ஆகும். இதனை **Shoo Keeng** என்று உச்சரிக்க வேண்டும் என்பர். ஷு - வரலாறு, King - பனுவல். ஜிங் என்று சிலர் ஒலிப்பர். (பெய்ஜிங் --> பீகிங்கு என்று ஒலிக்கப்படுதல் இங்கு ஒப்பிடத்தக்கது.) இப்பனுவல் பற்பல வரலாற்று நூல்களின் (Historical Writings) தொகுப்பாகும். இதனை லெக்கே (Legge) என்பார், The Book of Historical Documents என்று மொழிபெயர்த்துள்ளார்.[4] எனவே, இத்தொகை நூலினை வசதிக்காகத் தமிழில் வரலாற்றுப் பனுவல் என்று வழங்குதல் பொருத்தமாக இருக்கும்.

மற்றொரு தொகை நூலாகிய மந்திரப் பனுவலின் சில பாகங்களைவிட இத்தொகை நூலில் காணப்படும் சிறு பனுவல்கள் அல்லது ஆவணங்கள் மிகவும் காலப் பழமை வாய்ந்தவை ஆகும். எனவே, இத்தொகை நூலின் மிகவும் மூத்தனவாகிய ஆவணங்களுடன் (Oldest Documents) சீன இலக்கியம் தொடங்குகிறது என்று அறிஞருள் ஒரு சாரார் கருதுகின்றனர்.

சீனச் செவ்வியல் சார்ந்த ஐம்பெரும் பனுவல்களுக்கு உரியனவாய்த் தற்காலத்துக் கிடைக்கும் சுவடிகளில் எவையும் ஓராயிரம் அல்லது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை அல்ல. கன்பூசியசின் காலம் முதலாகவே இவை வழங்கி வருகின்றன. சீனர்கள் பேசியும் எழுதியும் வருவதால் மாற்றமில்லாமல் அவை நமக்குக் கிடைத்துள்ளன என்று உறுதியாகக் கூறலாம்.

வரலாற்றுப் பனுவல் (Shu King) என்பது தொடர் வரலாறாக (Continuous history) இல்லாமல், மிகப் பழைய ஆவணங்களில் இழந்தன போக இருந்தனவற்றைத் தொகுத்த ஒரு தொகைப் பனுவலாகவே திகழ்கிறது. கிடைத்துள்ள ஆவணங்கள் பற்பல வகையின. அரசர்களின் தற்புகழ் ஆவணங்கள், தாழ்ந்த மனப்பான்மையுடைய தரணி காவலரின் மனப்பூர்வமான இறைவணக்கங்கள், புனிதம்மிக்க நீதிகள், அறிவுரைகள், போர்க்களத்தில் நிகழ்த்திய பேருரைகள், கையறுநிலை வெளிப்பாடுகள் ஆகியவை வரலாற்றுப் பனுவலில் தொகுக்கப் பெற்றுள்ளன. இந்த வரலாற்றுத் துணுக்குகளில் மிகவும் தொன்மை மிக்க ஆவணம் மன்னர் யாவோ (King Yao) கி.மு.2,400இல் அரியணையேறிய செய்தியை வெளியிடுகிறது. மன்னர் யாவோவின் அருஞ்செயல்களைப் பாரித்துப்பேசும் இத்தொன்மை மிக்க வரலாறுதான், இதுகாறும் கிடைத்துள்ளவற்றில் மிகவும் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. சௌ அரச மரபின் (Chou dynasty) முற்கால வரலாற்றினை இந்த ஆவணங்களிலிருந்து மீட்டுருவாக்கம் செய்தல் இயலும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்நூலின் ஒரு சில பகுதிகள் பிற்சேர்க்கையாகக் கருதப்படுகின்றன. மிகத் தொன்மைக் காலத்தில் ஓடு மற்றும் எலும்பு பொறிப்புக்களில் (Shell and Bone Inscriptions) காணப்படுவதினின்றும் வளர்ச்சி பெற்ற உரைநடை இந்த வரலாற்றுப் பனுவலில் காணப்படுகிறது.

2. ஷீ கீங்கு (The Shih King - கி.மு.1700-கி.மு.600)

இவ்விரண்டாவது செவ்வியல் இலக்கியம் பழைய செய்யுளின் தொகுதியாக அமைந்துள்ளது. மரபுவழிப்படி இச்செய்யுள் தொகுதி கன்பூசியசால் நேரடியாகத் தொகுக்கப்பட்டது என்பது பரவலான கருத்தாகும். கன்பூசியசின் காலத்தில் இந்நூலில் பழங்காலத்துக்குரிய 3,000 பாடல்கள் இருந்தன என்றும், அவற்றில் தகுதி வாய்ந்த 305 பாடல்களை மட்டும் அவர் பொறுக்கியெடுத்து ஷீ கீங்கு (Shih King) என்ற பெயரில் தொகுத்தார் என்றும் சீனவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.[5] ஷீ என்ற சொல் பாடலைக் குறிக்கும்; கீங்கு - பனுவல்.

மக்களிடம் நெடுங்காலமாக வாய்மொழியாக இப்பாடல்கள் யாவும் வழங்கி வந்தவை. பழைய பாடல்களில் பெரும்பகுதியைக் கன்பூசியசு ஒதுக்கிவிட்டார் என்பது உண்மையா? அன்றா? என்பது தனி ஆய்வுக்கு உரியது. அவர் பாடற்பனுவலில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது பற்றி ஐயம் சிறிதும் இல்லை. தாம் எழுதிய உரைகளிலும், தமது போதனைகளிலும் இத்தொகைப் பனுவலிலிருந்து பற்பல பழைய செய்யுள்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஒருவர் பாடற்பனுவலில் புலமை பெறவில்லையெனில், மற்றவருடன் உரையாடுவதற்குத் தகுதி இல்லாதவர் என்று கன்பூசியசு சொல்லியுள்ளார்.

பேராசான் கன்பூசியசு பாடற்பனுவலுக்கு வழங்கிய பெருஞ்சிறப்புக் காரணமாக, சீனர்கள் பயபத்தியுடன் இப்பனுவலை அணுகிப் பயின்றனர் என்பது வரலாற்றுண்மை ஆகும். இப்பனுவலின் ஒவ்வொரு பாடலிலும் அறிவார்ந்த சமய போதனையினைக் காணவேண்டும் என்பதை அவர்கள் வலியுறுத்தினர்.

இச்செய்யுள் தொகைப்பனுவலில் இயற்கைக் காட்சிகளைப் பாராட்டும் பாடல்கள், விந்தைமிக்க

நாட்டுப்புறக் கதைகள், மனித உணர்ச்சிகளின் வெளிப்பாடுகள், கடவுளைப் போற்றும் துதிப்பாடல்கள், அரசரை மிகைபடப் புகழும் பாடல்கள் என்பன தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பல கி.மு.1,700 ஆண்டளவிற்குத் தொன்மை வாய்ந்தவை. எனவே, வரலாற்றுப் பனுவலுக்கு (Shu King) அடுத்த நிலையில் பழமை படைத்ததாகப் பாடற்பனுவலை (Shih King) மதிக்கலாம் என்று சீனவியலார் (Chinalogists) கருதுகின்றனர்.

பாடற்பனுவலின் சிறப்பு இயல்புகள்

நாட்டுப் பாக்களாக வழங்கிவந்த 3,000 பாடல்களில் கன்பூசியசு பெருமகனார் தேர்ந்தெடுத்தவை 305 பாடல்கள் என்பதை முன்னரும் கண்டோம். இவற்றை Classic of Poetry, Classic of Songs, Classic of Odes என்று அறிஞர் பலரும் தத்தம் போக்கில் ஆங்கில ஆக்கம் செய்துள்ளனர். இதனைப் பாடற்பனுவல் என்று தமிழில் வழங்கலாம். இப்பனுவலைப் பற்றி அறிஞர்கள் கொண்டுள்ள அரிய கருத்துக்களில் சிலவற்றை இங்குத் தொகுத்துக் கூறுதல் பொருத்தமாய் இருக்கும்.[6]

1. சீன நாட்டின் மிகப்பழைய நாகரிகத்தின் தொட்டிலாக விளங்கிய மஞ்சள் நதியின் (Yellow River) மத்திய சமவெளிகளில் வாழ்ந்த மக்களின் இலக்கியப் படைப்பாகப் பாடற்பனுவல் (The Classic of Poetry) திகழ்கிறது.

2. இந்தப் பாடல்கள் யாவும் சீன நாகரிகத்தின் காலைப் பொழுதில் மலர்ந்தவை (-தொடக்க காலத்தவை).

3. இவற்றில் புதிது புதிதாம் தன்மை (Freshness), தானே இயங்கும் தன்மை (Spontaneity), வாழ்க்கையில் நம்பிக்கை (Confidence in life) என்ற இயல்புகள் காணப்படுகின்றன. பின்னர் வந்த சீனப் பாடல்களில் இவற்றைக் காண்பது அரிது.

4. இப்பாடல்களில் இசை நலமும் வீரியமும் (Vitality) செறிந்துள்ளன. படிப்பவர்களைப் பண்டைச் சீனத்தின் நிலப்பிரபு அவைகளுக்கும், நாட்டு மக்களின் வாழ்விடங்களுக்கும் எடுத்துச் செல்லும் ஆற்றல் படைத்தவை.

5. பின்னால் பாடப்பெற்ற சீனப் பாடல்களின் யாப்பு வடிவத்திற்கும் செய்யுள் தொடை நல உத்திக்கும் (Rhyming device) இப்பாடல்களே முன்மாதிரிகளாக விளங்குகின்றன.

6. இவற்றைப் பாடிய கவிஞர்கள் உருவாக்கிய நாற்சொல் அமைப்பு அடி நெகிழ்ச்சியும் மாற்றமும் கொண்டவை. எனவே, சில சொற்களும், இடைச் சொற்களும் அனுமதிக்கப் பெறுவதால் அடிகளின் சலிப்புத்தன்மை குறைகிறது.

7. ஒரு மாநிலத்தின் கதைப்பாடல்களில் (அல்லது நெடும்பாடல்களில், Ballads of the state) திரும்பக் கூறுதல், மடக்கி வருதல் (பல்லவியாக - Refrain வருதல்) நாட்டார் இயல்பாகக் (Folk nature) காணப்படுபவை. இவை ஏனைய மாநிலத்து மக்களின் பாடல்களிலும், கதைப்பாடல்களிலும் பொருந்தி வருகின்றன.

8. தொன்மை படிந்ததாய் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாடப்பெற்றிருப்பினும் மொத்தத்தில் இப்பாடல்களின் குரல் நவீன மயமாகவும் புதிது புதிதாம் தன்மை வாய்ந்ததாகவும் விளங்குகின்றது.

9. பாடலின் மொழி நெஞ்சினைத் தொடுகிறது; கிளர்ச்சி ஊட்டுகிறது.

10. பாடல்கள் உவமைகள், உருவகங்கள் ஆகிய அணிகளால் வளம் பெற்றவை.

11. இவை நடைமுறையியல் அல்லது காட்சிநெறி மரபினை (Realistic tradition) அடிப்படையாகக் கொண்டவை. இதனைத் தொல்காப்பியர் சுட்டியுள்ள உலகியல் வழக்கத்துடன் (தொல்,பொருள்,56) ஒப்பிடலாம்.

12. இவை மானுட, சமுதாயச் செய்திகள் பலவற்றைப் பிற்காலத்தவருக்கு விட்டுச் சென்றுள்ளன.

13. இப்பாடல்களில் இயற்கைக் காட்சிகள் இன்பம் ஊட்டுவதற்காக மட்டுமே புனையப்படவில்லை. குறிப்புப் பொருளையும் (Symbolic meaning) மனித உறவினையும் புலப்படுத்துவதே இவற்றின் அடிப்படை நோக்கம் ஆகும். சங்க அக இலக்கியத்தில் காணப்படும் உள்ளுறை, இறைச்சி என்பவற்றுடன் இவை ஒப்பிடத்தக்கவை.

14. பறவைகள், விலங்குகள், மரங்கள், மலர்கள் (Fauna and Flora) பற்றிய குறிப்புக்கள் பற்பல. (தொல்காப்பியர் நெறிப்படி இவை கருப்பொருள்கள் எனப்படும்).

15. பழைய உலகிற்குரிய பாடற் படைப்புக்களில் பாடற்பனுவல் (Classic of Poetry) உள்ளடக்கத்தினால் (Content) தனித்தன்மை வாய்ந்தது. வடமொழிவாணரின் வேதங்களைக் காட்டிலும், யூதர்களின் தேவ கீதங்களைக் (The Book of Psalms) காட்டிலும் மிகவும் விரிவான நோக்கம் கொண்டவை இச் சீனப் பாக்கள்.

16. இவை சங்க அகப்பாக்கள், ஹாலனின் பிராகிருதப் பாடல் தொகுப்பு ஆகியவற்றுடன் பொருளளவில் ஒத்துக் காணப்படுகிறன.

17. ஹோமரின் காவியங்கள் வீரதீரச் செயல்களையும், போரினையும் பாடுவன. ஆனால், இந்தச் சீனப்பாக்கள் அன்றாடம் வாழ்வில் நிகழும்

செய்திகளைப் பாடும் நாட்டுப் பாடல்கள் (Folk songs).

18. மக்களின் இன்ப துன்பங்களை உணர்வு பூர்வமாக எடுத்துக் கூறும் திறம் படைத்தவை இப்பாடல்கள்.

19. சீன மக்களின் பழக்க வழக்கங்களையும், நம்பிக்கை களையும், செயல்களையும், விழா நிகழ்வுகளையும் பொதிந்த பொருளாகக் கொண்ட பாக்களின் தொகுதியாகப் பாடற்பனுவல் (Classic of Poetry) விளங்குகிறது.

பாடற்பனுவல் - தொகுப்புமுறை

சௌ (Chou) அரச மரபின் காலத்தைய சீனப் பாடல்களின் ஒப்பற்ற தொகுப்பாகப் பாடற்பனுவல் (Classic of Poetry) திகழ்கிறது. இப்பாடல்கள் எவ்வாறு தொகுக்கப்பெற்றன என்பது பற்றி இருவேறு கொள்கைகள் உள்ளன. கன்பூசியசு முத்திரை பெற்றிருப்பினும், அவர் காலத்துக்கு நெடுங்காலம் முற்பட்டு இப்பனுவல் வழங்கி வந்தது என்றும் அவற்றைத் தொகுத்துக் கொடுத்த பணியினை மட்டும் அவர் செய்துள்ளார் என்றும் அறிஞருள் ஒரு சாரார் கருதுகின்றனர். மற்றொரு சாரார் மூவாயிரம் பாடல்களுக்கு மேல் முன்பே வழங்கி வந்த பாடல்களில் கன்பூசியசு தன் சொந்தப் பயன்பாட்டிற்காக முந்நூற்றைந்து பாடல்களை மட்டுமே தேர்ந்தெடுத்துத் தொகுத்தனர் என்று கருதுகின்றனர். இருமுறை வந்த பாடல்களைக் கன்பூசியசு அகற்றிவிட்டார் என்றும், பொருத்த மற்றவை என்று அவர் எண்ணியவற்றையும் ஒதுக்கிவிட்டார் என்றும், எஞ்சிய பாடல்களுக்கு இலக்கியச் செப்பம் தந்து பதிப்பித்தார் என்றும் இவர்கள் கருதுகிறார்கள். கன்பூசியசு முயற்சியாலும் கடும் உழைப்பினாலும் முந்நூற்றைந்து பாடல்கள் அடங்கிய பாடற்பனுவல் (Classic of Poetry) இன்று வழங்கிவருகிறது.

கன்பூசியசின் பாடல் தொகுப்பு முயற்சி, ஒரு வகையில் தொன்மைத் தமிழ்ப் பாக்களாகிய சங்கச் செய்யுட்களைப் புலவரும், புரவலராகிய அரசரும் தேர்ந்து தொகுத்த வரலாற்றுடன் ஒப்பிட்டு உணர்ந்து மகிழத்தக்கது.

அரசர்களின் மாளிகைகளில் பேணிக் காக்கப்பட்ட நூலகங்களிலிருந்தும், பிரபுக்களின் ஆவணக் காப்பகங்களிலிருந்தும் மேலே சுட்டப்பட்ட முந்நூறு பாடல்களையும் பொறுக்கியெடுத்துச் சேர்த்துப் பாடற்பனுவல் (Classic of Poetry) என்ற தொகை இலக்கியமாகக் (Anthology) கன்பூசியசு வழங்கியுள்ளார் என்பதை சீன மரபுச் செய்தி உறுதிப்படுத்துகிறது. சௌ மரபினைச் சேர்ந்த அரசர்கள் (Kings of Chou dynasty) ஆட்சி புரிந்த தொடக்க காலத்தில், அரசாங்கத்தில் பணிபுரியும் அலுவலர்களை நாடெங்கும் போக்கி, மக்களால் பாடப்பட்டு வந்த பாடல்களைத் தேடச் செய்தலை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்றும் சொல்லப்பட்டு வருகிறது. அவர்கள் மக்களிடையே வழங்கிய பாடல்களைக் கொண்டு வந்து அவையில் சேர்த்தார்கள். தன் கீழ் அடங்கி, வரையறுக்கப்பட்ட நிலப்பகுதியைக் கவனித்து வரும் பிரபுக்களைப் பற்றியும், அப்பகுதியில் வாழும் மக்களின் நடைமுறைகள் பற்றியும் அப்பாடல்களைத் தானே படித்துப் பெருநிலம் முழுதாளும் பெருவேந்தன் அறிந்து கொள்ள முடிந்தது. பிரபுக்கள் மக்களின் நலத்தில் நாட்டமுடன் ஆட்சி புரிகிறார்களா? அவர்களால் மக்கள் துன்புறுகிறார்களா? குறைபாடு உண்டா? குற்றச்சாட்டுக்கள் உளவா? - என்பனவற்றையும் கூட அரசர் அறிந்து கொள்ள அப்பாடல்கள் பயன்பட்டன. பொதுமக்களின் கருத்தினை (Public Opinion) அறிந்து கொள்ளுவதற்கு அவர்களின் பாடல்களே சிறந்த ஆவணமாக அரசர் நம்பினர். அரசருக்கும் பொது மக்களுக்கும் இடையேயுள்ள குறுநிலத் தலைவன் (Barrel), பிரபு (Noble), அரசியல் வாதிகள் ஆகியோரின் அலங்காரப் பேச்சுக்களை

அரசர் நம்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மக்களிடையே வாய்மொழியாக வழங்கிவந்த எண்ணற்ற பாடல்களைக் கன்பூசியசு பாடற்பனுவலில் (Classic of Poetry) தொகுத்துள்ளார்.[7] வாய்மொழி இலக்கியமே (Oral Literature) செவ்வியல் இலக்கியத்திற்கு (Classic LIterature) மூலமாக உள்ளது என்ற சாடுவிக்கு (Chadwick), மில்மன்பர்ரி (Milman parry) உள்ளிட்ட ஐரோப்பிய ஒப்பியலார் கொண்டுள்ள கருத்து இங்கு எண்ணிப் பார்த்தற்குரியது.

பாடற்பனுவலில் (The Classic of Poetry) இப்பொழுது முந்நூற்றைந்து பாடல்கள் உள்ளன. இவற்றை நான்கு பிரிவுகளாகத் தொகுத்துள்ளனர். அவை வருமாறு:-

1. **கதைப்பாடல்கள் (Ballads)**

ஒவ்வொரு மாநிலத்தைப் (Kuo-feng, State) பற்றியும் அந்த அந்த மாநிலத்து மக்களால் பாடப்பட்டு வந்த 160 கதைப்பாடல்கள் ஒருவகை.

2. **சிறுவிழாப் பாடல்கள் (Hsiao-ya, Minor Festal Songs)**

ஒவ்வொரு பெருநிலத்து அரசர் எடுக்கும் விழாக்களிலும், பொழுது போக்குகளிலும் வேடிக்கை நிகழ்வுகளிலும் பாடப்பட்டு வந்த 74 சிறுவிழாப் பாடல்கள் (Minor Festal Songs) தொகுதி மற்றொரு வகையாகும். இவை பாடல் அமைப்பினால் சிறியவை போலும்.

3. **பெருவிழாப் பாடல்கள் (ta-ya-Greater Festal Songs)**

அரசரின் அவையத்தில் நிலப்பிரபுக்கள் கூடும் வேளைகளில் பாடப்பெற்று வந்த 31 பாடல்களின் தொகுதி இன்னொரு வகையாகும்.

4. **பக்திப் பாடல்களும் புகழ்ப்பாடல்களும் (Sung-Hymns and Eulogies)**

அரச மாளிகையில் பல்வேறு கடவுளர்க்கும் பிதிரர்களின் ஆவிகளுக்கும் நடைபெறும் பலி கொடுக்கும்

வேள்விகளில் பாடப்பெற்றவை பிறிதொரு வகைப் பாடல்கள் ஆகும். இவ்வகையில் 40 பாடல்கள் இடம்பெற்றன.

இவற்றுள் முதல் பிரிவில் இடம்பெற்றவை நாட்டார் பாடல்கள் (Folk Songs) என்றும், எஞ்சிய மூன்று பிரிவுகளில் இடம்பெற்றவை அரசவைப் பாடல்கள் (Court Poems) என்றும் அறியப்படுகின்றன.

மேற்குறித்த பல்வேறு வகைப்பட்ட பாக்களின் பொருண்மையினையும், அளவினையும் நோக்கும் பொழுது நாட்டார் பாடல்களாகிய கதைப்பாடல்களே (Ballads) அளவினாலும் எண்ணிக்கையாலும் பெரியனவாக விளங்குகின்றன என்பது புலனாகும்.[8]

மாணவர்களுக்குப் பாடற்பனுவலையே (Classic of Poetry) பாட நூலாகக் கொண்டு கன்பூசியசு போதனை புரிந்து வந்தார். இந்நூலின் 305 பாடல்களிலும் மேலோங்கியிருக்கும் கருத்து, "நெஞ்சத்தை நேர்மையாகப் பேண்" (To keep the heart right) என்பதுதான் என்று பேராசான் கன்பூசியசு குறித்துள்ளார். தமிழ் ஞானி திருவள்ளுவரும், "மனத்துக்கண் மாசிலனாதல்" என்று அறம் கூறியிருத்தலை இங்கு எண்ணிப் பார்த்தல் ஏற்புடையது.

பாடற்பனுவலை ஒவ்வொருவரும் படித்தல் வேண்டும் என்று கன்பூசியசு விரும்பினார். ஒரு சமயம் தன்மகனைப் பார்த்து,

> *"இந்நூலில் உள்ள அறிவார்ந்த பாடல்களைப்*
> *படிக்கவில்லையென்றால் அவன் சுவரில்*
> *முட்டிக் கொள்ளவேண்டும்"*

என்று கூறினார். இந்நூலைக் கல்லாதவன் வாழ்வியல் உண்மைகளை உணர்ந்து கொள்ள முடியாமல் இடர்ப்படுவான் என்ற கருத்தில் சீன ஞானி இவ்வாறு கூறியிருத்தல் வேண்டும்.

மற்றொரு சமயம் தன் மகனைப் பார்த்து,

> "பாடற்பனுவலில் உள்ள பாக்களை நீ
> படிக்கவில்லை என்றால், உன்பேச்சும்
> எழுத்தும் செப்பம் பெறுதல் இல்லை"

என்று அறிவுறுத்தினார்.

பாடல் என்பது ஆட்சியாளர்கள், இராசதந்திரிகள், செல்வர்கள் ஆகியோர் மேற்கொள்ளும் கல்வியின் இன்றியமையாப் பகுதியாக மதிக்கப்பட்டது. இப்பாடல்கள் மேற்கோளாக எடுத்தாளப்பெற்று இவர்களின் உரையாடலை வளப்படுத்தியுள்ளன. இராசதந்திரிகள் இப்பாடல்களுக்கு எவ்வகையில் தம் உணர்வினைப் புலப்படுத்தினார்கள் என்பதையும் அரசர்கள் புரிந்து கொண்டு செயற்பட்டுள்ளனர். பாடலின் குறிப்பினைப் புரிந்து கொள்ளாத இராசதந்திரி அவமதிப்பு உணர்வினைப் பெற்றார்.

ஊர்ப்புறத்து நம்பியரும் நங்கையரும் பாடிய காதற் பாடல்கள் பலவும் இத்தொகை நூலில் (Classic of Poetry) இடம்பெற்றிருத்தல் வேண்டும். காதல்வயப்பட்ட பெண்ணின் உணர்ச்சி வெளிப்பாடுகளாக உள்ள பாடல்களின் ஆழத்தைக் காண்பது அரிது. பிரபுக்கள், அறிவுத் திறனாளர்கள் ஆகியோர் இத்தகைய பாடல்களை மரியாதை மொழியின் (Polite language) மாதிரியாக (Model) எவ்வாறு புரிந்து கொள்ளுதல் முடியும்? என்ற வினாவிற்கும் சீனப் பேரறிஞர்கள் ஹன் அரச மரபின் (Han dynasty) காலத்திலிருந்தே விளக்கங்கள் கூற முற்பட்டுள்ளனர். காதல் பாடல்கள் எல்லாம் குறிப்புப் பொருள் உணர்த்தும் பாடல்கள் என்றும், காதலர் ஆசைகள் எல்லாம் மக்கள் தங்களை ஆளும் மன்னவருக்குப் புலப்படுத்தும் அன்பு என்றும், மன்னவர் மக்களுக்குப் புலப்படுத்தும் அன்பு என்றும் விளக்கம் கூறினர்.[9]

ஆனால், இக்கருத்து இந்நாளில் ஏற்கப்படவில்லை. இவற்றுள், ஒருசில பாடல்கள் பல்வேறுபட்ட விளக்கங்களுக்கு இடம் கொடுக்கின்றன. இதற்குக் காரணம் சீன மொழியின்

நெகிழ்ச்சித் தன்மையும், தொடரியல் தளர்ச்சியும், பலபொருள் ஒரு சொல்லாட்சியும் ஆகும் என்று எண்ணுகின்றனர். இக்கருத்திற்கு எடுத்துக்காட்டாக "இரவு எப்படி போகிறது-" (How Goes the Night, பாடற்பனுவல், எண் 182) என்ற பாடலைக் கூறலாம். அதன் மொழியாக்கத்தைக் காண்போம்:

'இரவு எப்படி போகிறது?
இரவு இன்னும் முடியவில்லை;
முற்றத்தின் விளக்குகளிலிருந்து வெளிச்சம் வருகிறது
பிரபுக்கள் வந்து விட்டனர்,
அவர்கள் கவசமணிகள் ஒலிக்கின்றன.
(-குதிரைகளின் கடிவாளமணிகள் ஒலிக்கின்றன)
1

இரவு எப்படி போகிறது?
இரவு இன்னும் முடியவில்லை;
முற்றத்தின் விளக்குகள் வெளிச்சம் பிரகாசமாயுள்ளது
பிரபுக்கள் வந்து விட்டனர்,
அவர்கள் கவசமணிகள் ஒலிக்கின்றன.
(-குதிரைகளின் கடிவாள மணிகள் ஒலிக்கின்றன)
2

இரவு எப்படி போகிறது?
இரவு இன்னும் முடியவில்லை;
முற்றத்தின் விளக்குகள் சுடர்கின்றன
பிரபுக்கள் வந்து விட்டனர்,
அவர்கள் கவசமணிகள் ஒலிக்கின்றன
(-குதிரைகளின் கடிவாள மணிகள் ஒலிக்கின்றன)
3

இப்பாடல் சிறுவிழாப் பாடல்களில் ஒன்றாகும்.[10] *காலையில் தன்னைக் காண வருவோரைக் காலம் தவறாமல் பார்க்க விரும்பும் அரசனின் ஆவலை இப்பாடல்*

வருணிக்கிறது. "என்கீழ் நிலம் காக்கும் பிரபுக்கள் இங்கு விரைவில் வந்துவிடுவார்கள்" என்ற குறிப்பினைத் தருகிறது.

ஆனாலும், இதேபாடல் வேறு பொருள்களையும் குறிப்பதாகச் சீன அறிஞர்கள் விளக்குகின்றனர்:-

1. பிரபு ஒருவர் தன் அன்புக்குரிய நண்பரை வரவேற்பதற்கு ஆவலாக இருத்தலை இப்பாடல் சுட்டுகிறது.

2. மனைவி ஒருத்தி தன் கணவனின் வருகையினை எதிர் நோக்கி ஆவலாகக் காத்திருத்தலை இப்பாடல் குறிப்பிடுகிறது.

3. பணிமகன் ஒருவன் தன் எசமானனின் வருகையினை எதிர் நோக்கி ஆவலுடன் காத்திருத்தலை இப்பாடல் உணர்த்துகிறது.

4. அரசப் பெருமாட்டிகள் தம் பிரபுவின் வருகையினை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருத்தலை இப்பாடல் புலப்படுத்துகிறது.

மூலப் பாடலில் Chun-tzu என்ற சீனச்சொல் பிரபு (Lord) என்று ஒருமையினையும், பிரபுக்கள் (Lords) என்று பன்மையினையும் உணர்த்துவதால் இப்பாடலில் 'பிரபு வந்துவிட்டார்' என்றும், 'பிரபுக்கள் வந்துவிட்டார்கள்' என்றும் மொழிபெயர்க்க இடம் தருகிறது.

மேலே குறிப்பிட்ட மூன்று பாடல்களும் ஒரே பாடலின் சிறுமாற்றம் கொண்ட பாடல்களாக இருத்தலின், அவற்றை ஒருபாடல் என்றே எண்ணினர். சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய கலித்தொகையில், ஒருபொருள்மேல் மூன்றடுக்கிவந்த தாழிசைகள் இவ்வகைப் பாக்களுடன் ஒப்பிடத்தக்கவை எனத் தோன்றுகிறது. இங்ஙனம், ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வரும் பாடல்கள் பாடற்பனுவலில் (Classic of Poetry) பற்பல உள்ளன என்பது இங்குச் சுட்டுதற்கு உரியது.

பாடற்பனுவலில், 'சோங்குசீ அன்புகூர்ந்து கேள்' (Zhongzi, please) என்ற பாடலும் ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வரும் தாழிசை அமைப்பினைப் பெற்றுள்ளது. குன் (Qin) சிறையினின்றும் வேய் (Wei) நகர்க்குரிய கோமகனை விடுவிக்கும் பொருட்டு இப்பாடல் ஓதப்பட்டதாக மார்டின் கெர்ன் (Martin Kern) என்ற சீன இலக்கிய அறிஞர் குறித்துள்ளார்.[11] முதலில் இப்பாடல்கள் மூன்றனையும் தமிழாக்கம் செய்வோம்.

சோங்குசீ, அன்பு கூர்ந்துகேள்!
எம்சேரிக்குள் குதித்து விடாதே,
நாங்கள் நட்டுவளர்த்த வில்லோ மரங்களை முறித்துவிடாதே.
அவற்றுக்காக நான் எப்படி துணிவு காட்ட இயலும்?
எனினும் என்தந்தை தாய்க்காக அஞ்சுகிறேன்.
காதலித்தற்குரியவன் சோங்குசீ! உண்மையில்
அஞ்சுதற்குரியவை என்தந்தை, தாய் சொற்கள்.
1

சோங்குசீ, அன்பு கூர்ந்துகேள்!
எம்சுவரினைத் தாண்டிக் குதிக்காதே,
நாங்கள்நட்டுவளர்த்த முசுக்கட்டை மரங்களைமுறித்துவிடாதே.
அவற்றுக்காக நான் எப்படி துணிவு காட்ட இயலும்?
எனினும் என் அண்ணன்மார்க்காக அஞ்சுகிறேன்.
காதலித்தற்குரியவன் சோங்குசீ! உண்மையில்
அஞ்சுதற்குரியவை என் அண்ணன்மார் சொற்கள்.
2

சோங்குசீ, அன்பு கூர்ந்துகேள்!
எம்தோட்டத்திற்குள் குதித்து விடாதே,
நாங்கள் நட்டுவளர்த்த சந்தன மரங்களை முறித்துவிடாதே.
அவற்றுக்காக நான் எப்படி துணிவு காட்ட இயலும்?
எனினும் மக்களின் சொற்களுக்காக அஞ்சுகிறேன்.
காதலித்தற்குரியவன் சோங்குசீ! உண்மையில்
அஞ்சுதற்குரியவை மக்களின் சொற்கள்.
3

சோங்குசீ என்பது காதலனின் பெயர்.

பாடற்பொருளை விளக்கிக் கூறும் கலையினை Hermeneutics என்று கூறுவர். இதனை The Science of Interpretation என்று ஆக்சுபோர்டு ஆங்கிலப் பேரகராதி சுட்டுகிறது. மேலே சுட்டப்பட்ட பாடல்களை ஓதுவதால (reciting) குறிப்பிட்ட கோமகன் சிறையினின்றும் விடுபடுவான் என்று சூவோ சம்பிரதாயம் (Zuo Tradition) எண்ணியது. ஆனால், இப்பாடற் கோவையில் சிறை வைக்கப்பட்ட கோமகனைப் பற்றிய குறிப்பு இல்லை.

மாவோ சம்பிரதாயப்படி (Mao Tradition) வரலாற்று நோக்கில் வேறு விளக்கம் இப்பாடல்களுக்குக் கூறப்படுகிறது. செங்கு (Zhang) மாகாணத்தின் கோமகனை இப்பாடல்கள் விமரிசிப்பதாகக் கொண்டனர். கி.மு.722இல் இவ்வரசன், தன் இளவல் பெரும் அதிகாரத்தினைக் கையிலெடுத்துக் கொண்டு மக்களுக்கு இடர் விளைத்ததைத் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டான். ஆனால் அவன் முடிவில் படை பலத்தினால் ஒடுக்கப்பட்டான் என்பதை உள்ளுறைப் பொருளாக இப்பாடல்கள் கொண்டுள்ளன என்பது மாவோ மரபின் (Mao Tradition) விளக்கம் ஆகும்.

ஆனாலும், மேலே கூறப்பட்ட இருவேறு மரபுகளின் விளக்கங்களையும் ஏற்காத செங்கு கியவோ (Zheng Qiao, கி.பி.1104-1162) என்னும் உரை விளக்கத் திறனாளர் காதல் மீக்கூர்ந்த கடத்தல்காரனின் சொற்களாக இப்பாடல்களைக் கருதினார். இவர் கூறிய விளக்கத்தினைக் கி.பி.1130-1200 என்ற காலப் பகுதியில் வாழ்ந்த சூ சீ (Zhu Xi) தமது Collected Traditions of the Poetry (Shijizhuan) என்ற நூலில் ஏற்றுக் கொண்டுள்ளார்.[12]

ஆயினும், இக்காலத்து வாசகர்கள் பழைய விளக்கங்களில் எதனையும் ஏற்கவில்லை. "இப்பாடல்கள் (Zhongzi, Please!) தன் காதலனின் கட்டுக்கு அடங்காத உக்கிரத் தன்மை தன்னுடைய சமுதாய மதிப்பினைச் சரி

செய்துவிடுமோ என்று அஞ்சிய ஓர் இளம்பெண்ணின் சொற்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்" என்று அவர்கள் கூறும் கருத்து பொருத்தம் மிக்கதாகத் தோன்றுகிறது.

ஒரே பாடல் இருவேறு பொருள் பயக்கக் கூடியது என்னும் கருத்துக்குப் பின்வரும் மொழிபெயர்ப்புக்களைச் சான்றாகக் கூறலாம்.[13]

"வழித்தோன்றல் வருகிறார் இங்கே,
தன் மனைவியும் மக்களும் உடன்சூழ,
தென் வயல்களுக்கு உணவு எடுத்துக் கொண்டு,
மகிழ்ச்சியுடன் வருகின்றனர் தொழிலாளிகள்,
இங்கு ஒருபிடிச் சோறு, அங்கு ஒருபிடிச் சோறு,
சுவையுடையது எது என்பதைப் பார்க்க."

(இப்பாடல் வேலே (Waley) என்பாரின் ஆங்கில மொழி பெயர்ப்பின் தமிழாக்கம்). இப்பாடல் கார்ல்கிரின் (Karlgren) என்பவராலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அதன் தமிழாக்கத்தைக் காண்போம்:

"வழித்தோன்றல் வருகிறார்;
தன்மனைவியர், மக்கள் வழியாகத்
தெண்வயல்களில் உள்ளவர்களுக்கு உணவு அனுப்புகிறார்;
வயல்களை மேற்பார்வையிடுபவர் வருகிறார்;
திருப்தி அடைகிறார்;
தன் பணியாட்களை ஒருபக்கம் தள்ளிவிட்டுத்
தானே உணவு நல்லதா? இல்லையா?
என்பதைச் சாப்பிட்டுப் பார்க்கிறார்"

இவ்விரு மொழியாக்கங்களில் எது பொருத்தம் வாய்ந்தது என்பதைத் தீர்மானித்தல் குழப்பமாகவே உள்ளது.

விளக்கங்கள் எவ்வாறு கூறப்பட்டாலும் பாடற்பனுவல் (Classic of Poetry) விலைமதிப்பற்ற பழைய சீனப் பாடல்களின் தொகை இலக்கியமாக விளங்குகிறது என்பதில் கருத்து

வேறுபாடு இல்லை. தன்கீழ் அடங்கிக் கடமைபுரியும் குறுநிலத் தலைவர்களின் நிலைமைகளை அறிந்து கொள்ளுவதற்கு இப்பாடல்கள் பயன்படுத்தப்பட்டன என்பதும்; மனத்தினை மேம்படுத்தவும், மாணவர்கள் மொழித்தூய்மை பேணுவதற்கும் இவை பயன்படுத்தப் பட்டன என்பதும்; இவை பண்ணையாட்கள் பாடிய நாட்டார் பாக்கள் (Folk songs) என்பதும் உண்மையாக இருக்கலாம். எப்படியிருப்பினும், சௌ அரச மரபு (The Chou dynasty) ஆட்சி செய்த காலத்து வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கங்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் அறிந்து கொள்ளுவதற்கு உரிய மிகச் சிறந்த மூலப்பொருளாக இப்பாடல்கள் விளங்குகின்றன என்பதில் ஐயம் இல்லை.

முற்காலத்துச் செல்வர்களின் வாழ்வியல் இப்பாடல்களில் சொல்லோவியம் செய்யப்பெற்றுள்ளது. அரசர் அவைக்கு வரும் அன்பார்ந்த அளவளாவுவோர் (Audience) பற்றியும், அரண்மனைக் கூடங்களில் இரவில் நிகழும் பெருவிருந்து மற்றும் களியாட்டம் குறித்தும் இப்பாடல்கள் சுவையான நிகழ்வுகளைப் புலப்படுத்து கின்றன. உலகிலேயே மிகத் தொன்மை வாய்ந்த உண்டாட்டுப்பாடல் இப்பனுவலில் உள்ளது.[14] இப் பாடலின் தமிழ்பெயர்ப்பினை இங்கே காண்போம்.

நனைக்கும் குளிர்தரும் பனி;
ஆதவனை இன்றி அது காய்வதில்லை.
நெடுநேரம் நெடுநேரம் நாம் குடித்தோம் இரவில்.
நிரம்பக் குடிக்கும் முன்னர் வீடு திரும்பாதே!

நனைக்கும் குளிர்தரும் பனி
ஆங்கே அடர்ந்த புல்லின் மேல்.
நெடுநேரம் நெடுநேரம் நாம் குடித்தோம் இரவில்,
இனப்பொதுக் கூடத்தில் எல்லாம் முடியும் வரை.

இவ்விரு பகுதிகளும் பாடற்பனுவலின் 174ஆம் பாடலாகும். இவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் லியூவுசி (LiuWu-Chi). மிகப் பழைய உலக நாகரிகங்களில் மது அருந்துதல் ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டது. இதனை மேலே காட்டிய சீனப் பாடலும் உறுதி செய்கிறது. குடி, விருந்து, இசை, ஆடல் பற்றிய பாடல்கள் அரண்மனை முற்றங்களில் பாடப்பட்டன. இவை பாடற்பனுவலில் இடம்பெற்றுள்ளன. கண்ணொளி இழந்த பாடகர்கள் சிறுபறை, பெரும்பறை, கஞ்சிரா, இசைக்கல் (Music stone), கோல், மணி, நீண்ட இசைக்குழல் (நாயனம்), குழல் என்பனவற்றையும் இயக்கிப் பாடும் ஆற்றல் பெற்றிருந்தனர். உயரமான மனிதன் ஆடல் பாடல்களை நிகழ்த்துபவன். அவன் புலியைப் போல வலிமை படைத்தவன். அவன் இடக்கையில் குழலும், வலக்கையில் மயில் போன்ற ஒரு பறவையின் இறகும் வைத்திருப்பான். அவன் முகம் காவியூட்டப் பெற்றதுபோல் சிவந்திருக்கும்.

பாடற்பனுவலில் (Classic of Poetry) மேலே குறிக்கப் பெற்ற இசை மற்றும் ஆடல் கலைஞர்களின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. போரிடவும், வேட்டையாடவும் பிரபுக்கள் ஏறிச் செல்லும் தேர்களின் வருணனைப் பாடல்களும் இத்தொகுப்பில் உள்ளன. அவற்றை நான்கு புரவிகள் இழுத்துச் சென்றன. தேர்ப்பாகன் ஒரு கையில் கடிவாளத்தின் ஆறு வார்களையும் பிடித்திருப்பான். மற்றொரு கையில் வெள்ளிப் பிடி போட்ட ஈட்டியை ஏந்தியிருப்பான்; அல்லது புலித்தோலினால் செய்யப்பட்ட அம்பறாத் தூணியில் இரு வில்களை வைத்திருப்பான். ஆமை மற்றும் அரவுக் கொடிகளையும் எருதின்வால் போன்ற கொடிகளையும், வல்லூற்றுக் கொடிகளையும், பறக்கும் நாகம் அல்லது முதலைக் கொடிகளையும் ஏந்திய வீரர்கள் புடைசூழப் பெருமகன் (Lord) போர்க்களம் நோக்கிப் புறப்பட்டுச் செல்வான். வேட்டைக்குச் செல்லும் பொழுது மணிகள் ஒலிக்கவும் வேட்டை நாய்கள்

குரைக்கவும் செல்லுதல் வழக்கம். வேட்டையாடி நரிகள், மரநாய்கள், மான் வகைகள், காட்டு எருதுகள் முதலியவற்றைப் பிடித்து வீடு திரும்புவர். வேடர்கள் கரடி, காட்டு விலங்குகள் முதலியவற்றைக் கொன்று அவற்றின் இறைச்சியையும் இனிய திராட்சை மதுவினையும் விருந்தினர்களுக்கு வழங்கினர். இவற்றைப் பற்றிய நாட்டார் பாக்களும் பாடற்பனுவலில் தொகுக்கப்பட்டு உள்ளன. புறநானூற்றிலும் இத்தகைய செய்திகள் உள்ளன.

வேட்டையடித்தலையும் போரிடுதலையும் நாட்டுப்புறக் கவிஞர்கள் வேறு கோணத்தில் பார்த்துப் பாடியுள்ளனர். இராணுவத்தில் தங்களைக் கட்டாயப் படுத்திச் சேர்த்தலையும், இராணுவப் பணியையும் பற்றித் தாங்கள் படும் வேதனைகளைப் புலப்படுத்தும் உழவர்கள் பாடியனவாக அமைந்த பாக்களும் இத்தொகுப்பில் கன்பூசியசால் சேர்க்கப்பட்டுள்ளன. ஒரு பாடலின் தமிழாக்கம் இவண் தரப்படுகிறது.

“நெடுநாள் முன்னம் போர்க்குப் போனோம்
தினைப்பயிர் அப்பொழுதுதான் மலர்ந்திருந்தது.
இப்பொழுது நாங்கள் திரும்பி வருகிறோம்,
பாதை எங்கும் பனிமூடி யுள்ளது.
இராணுவப் பணியினால் எல்லையில் துன்பம்;
ஒய்வுறல் தங்கி யிருத்தல் - நேரமே இல்லை.
வீடு திரும்பிட விரும்பமாட் டேமா?
மூங்கில் பொறிப்புக்கள் மூட்டிடும் பயத்தினை.”

இராணுவத்தில் கட்டாயச் சேவை புரிய வேண்டும் என்று அரசனின் ஆணை மூங்கில் கல்வெட்டுக்களில் எழுதப்பட்டுள்ளன. தங்கள் வேதனைகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் வீரராகப் பணிபுரியும் உழவர்கள் மூங்கில் பொறிப்புக்களுக்குத் தங்கள் அச்சத்தையும் புலப்படுத்து கின்றனர். வீட்டு நினைவுக்கும் நாட்டுப்படைப் பணிக்கும் இடையே ஊசலாடும்

வீரர்களின் உள்ளம், 'களிறுமாறு பற்றிய, தேய்புரிப் பழங்கயிறு' (நற்.284.9-10) போல நலிதலை இப்பாடல் நமக்கு உணர்த்துகிறது.[15]

பாடற்பனுவலில் பண்டைய சீனர்களின் மூதாதை நினைவுச் சடங்குகள் பற்றிய குறிப்புக்களையும் காணலாம். அறுவடைக் காலத்தில் நன்றி தெரிவிக்கும் சடங்கினை, "Thick Grows the Star-thistle" என்ற பாடல் புனைந்துரைக்கிறது. இப்புனிதச் சடங்கிற்குரிய எண்ணற்ற ஏற்பாடுகளும் சொல்லப் பெற்றன. அவையாவன:

1. பலியிடப் போகும் எருதுகள் மற்றும் ஆடுகளைத் தூய்மைப்படுத்துதல்.
2. வேட்டையடித்த விலங்குகளையும் பறவைகளையும் தோல் உரித்து வேகவிடுதல்.
3. உணவு நிலைகளை ஒழுங்குபடுத்துதல்.
4. வீட்டின் வாழ்வரசி விருந்தினர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் பல்வகை உணவுகளையும் கொணரச் செய்தல்.
5. கிண்ணத்தில் ஊற்றப்பெற்ற மதுவினை மடக்கெனக் குடித்தல்.
6. நல மொழிகளும் உறுதி மொழிகளும் மேற்கொள்ளுதல்.

இந்த ஏற்பாடுகளைத் தொடர்ந்து பலி நிகழ்ச்சி (Sacrifice) நடைபெற்றது. மூதாதையர்க்குப் பலி கொடுப்பதற்குரியவர் ஆண்டில் இளையவராய் அவ்வீட்டின் இளைய வாரிசாக இருந்தார். மூதாதைகளின் ஆவி அவருள் புகுந்ததும் அவர் பிண நிலையினை அடைந்தார். இச்சடங்கின் பொழுது அவர் மரியாதைக்குரிய ஆசனத்தில் பலிச்சடங்கு முடியும் வரை அமர்ந்திருந்தார். ஆவிகள் யாவும் நிரம்ப மது பருகிவிட்டன. மணி ஒலி,

பறை ஒலிகளுக்கு இடையே அவர் இட்டுச் செல்லப்பட்டார். இதற்கிடையில் மாளிகையின் உள் பகுதியில் அவர் சிற்றப்பர், சகோதரர்கள், நெருங்கிய சுற்றத்தார் அனைவருக்கும் தனி விருந்து நடைபெற்றது. மது, உணவு, இசை ஆகியவற்றினால் நிரம்பப் பெற்றபின் அவர்கள் தத்தம் தலைகளைத் தாழ்த்தி, அவ்வீட்டின் தலைவர்க்குத் தத்தம் வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் வழங்கினர். இவ்வாறு பலிச்சடங்கு இன்பச் சூழலில் நிறைவுற்றது.

உழவர்களின் வேளாண்மை வாழ்வினைச் சித்திரிக்கும் பாடல்களும் பாடற்பனுவலில் (Classic of Poetry) கன்பூசியசால் தொகுக்கப்பட்டிருந்தன. அவற்றுள், 'ஏழாவது திங்கள்' (The Seventh Month) அல்லது 'உழவரின் நாள்காட்டி' (The Farmer's Calander) என்ற பாடல் குறிப்பிடத்தக்கது. பல்வேறு பருவ காலங்களில் உழுதல், பட்டுப்புழு வளர்த்தல், நெய்தல், வேட்டையடித்தல், வீட்டு வேலை, அறுத்தல், அறுவடை செய்தல், உணவுக்கும் மதுவுக்கும் முன்னேற்பாடு, பனிக்கட்டியை வெட்டி அடைத்துவைத்தல், நிலப்பிரபுவின் நலத்திற்காக உண்டாட்டு அயர்தல் என்பன இப்பாடலில் புனைந்துரைக்கப்பட்டன.

சீன மக்களின் வேளாண்மையினை, களைகளையும் புதர்களையும் முற்றிலும் பிடுங்கியெடுத்தல் (Cleaning Away the Weeds and Shrubs) என்ற பாடல் விரித்துரைக்கிறது.[16] ஒவ்வொரு விதையிலும் உயிர் உண்டு. விதைத்து, பயிர்கள் வளர்ந்து, களையெடுக்கப்பெற்றுக் கதிர்கள் முற்றி, அறுவடைக்குப்பின் அகம் மகிழ்ந்த உழவர்கள் நாட்டினை வாழ்த்தியும் அமைதி நிலவ வேண்டியும் பாடும் வாழ்த்துப் பாடலாகவும் ஒரு சில உள்ளன.

வயல் விளைந்து மகிழ்ச்சியில் மக்கள் திளைக்கும் பொழுது இளைஞர்கள் காதலில் ஈடுபட்டனர். சீனக் கவிஞர்கள் காதல் பாடல்கள் பாடவில்லை என்று ஒரு பொதுக்கருத்து உண்டு. அது பொருந்தாது. பாடற்பனுவலில் (The Classic of Poetry) காதற் பாடல்கள் பற்பல

தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களில் மொழியின் எளிமை, உணர்வின் தூய்மை என்பன காணப்படுகின்றன. பெரும்பான்மையும் நாட்டுப்புற மக்களின் கள்ளமற்ற காதல் வாழ்வினை இப்பாடல்கள் புலப்படுத்துகின்றன. இப்பாடல்களின் உள்ளடக்கமும் அடிக்கருத்துக்களும் பற்பல வகையின. இளம் நம்பியரும் நங்கையரும் இரு குழுவினராக அமைந்து அருவியின் எதிர்ப்புறக் கரைகளில் நின்று ஆடியும் பாடியும் காதல் புரிதலைச் சில பாடல்கள் வருணிக்கின்றன. பரிசுப் பொருள்களைக் கொடுத்தும் கொண்டும் காதலர் மகிழ்ந்து விளையாடியதையும் இப்பாடல்கள் சொல்லோவியம் செய்துள்ளன. பரிசுப் பொருள்களைப் பரிமாறிக் கொண்டபாங்கினை விளக்கும் பாடல்களில் சிலவற்றைக் காண்போம். அருவியின் எதிர்ப்புறம் ஒரு கரையிலிருந்து மற்றொரு கரையில் உள்ளவர்க்குப் பரிசுப் பொருளை எடுத்துப் போடுதல் அல்லது வீசி எறிதல்[17] காதலர்களின் வழக்கமாகும். ஒரு காதலன் கூறுவதாக அமைந்தவை பின்வரும் பாடல்கள்:

ஒரு பழத்தினை எனக்குவிட் டெறிந்தாள்;
மாறாக மேகலை மணியை யான் அளித்தேன்.
கைம்மா றாகப் பரிசுதர வில்லை யான்.
என்றும் இருவரும் காதலிக்க விரும்பினோம்.
1

இனிய கனியை எனக்குவிட் டெறிந்தாள்;
மாறாக மரகத மணியை யான் அளித்தேன்.
கைம்மா றாகப் பரிசுதர வில்லை யான்.
என்றும் இருவரும் காதலிக்க விரும்பினோம்.
2

சிறந்த கனியை எனக்குவிட் டெறிந்தாள்;
மாறாகக் கருமணி ஒன்றினை யான்அளித்தேன்.
கைம்மா றாகப் பரிசுதர வில்லை யான்.
என்றும் இருவரும் காதலிக்க விரும்பினோம்.
3

பாடற்பனுவலில் (The Classic of Poetry) இஃது அறுபத்து நான்காம் பாடலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வரும் இப்பாடலமைப்பு, கலித்தொகைப் பாடலில் வரும் தாழிசைகள் மூன்றின் அடுக்கினை நமக்கு நினைவூட்டுகிறது. ஒரு தொடர், ஒரு கருத்து, ஓசை என்பன மீண்டும் மீண்டும் வருதல் (Refrain) நாட்டுப்புறப் பாடலின் (Folk song) தனி இயல்பாகத் தோன்றுகிறது.

நங்கை ஒருத்தி காதலின் வெளிப்பாடாகக் காதலனுக்குத் தருவது ஒரு நாணல் அல்லது புல்லின் இதழாகக் கூட இருக்கலாம். கொடுப்பவரின் அன்புப் பெருக்கினால் அது விலைமதிப்பற்ற பொருளாக விளங்கும்.[18] நம்பி ஒருவன் தன் காதலியிடம் பெற்ற பரிசுப் பொருளைப் பெரிதும் மதித்துப் போற்றுவதாக அமைந்த பாடல்களைக் காண்போம். இவையும் ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கி வந்த தாழிசை அமைப்பினை உடையவை.

பணிவான அப்பெண் எழிலானவள்.
அச்சுவரின் மூலையில் காத்திருக்கிறாள் எனக்காக-
அவளைக் காதலிக்கிறேன், கண்டேன் இல்லை
சொரிகிறேன் தலையை, செய்வது அறியேன்.

1

பணிவான அப்பெண் அழகானவள்.
செந்நாணல் அளித்தாள் அவள் எனக்கு;
செந்நாணல் பிரகாசமாய் உள்ளது,
எனினும் அப்பெண்ணின் அழகில் சொக்குகிறேன்.

2

புல்வெளியி லிருந்து இளம்இதழினைக் கொணர்ந்தாள்,
அஃது அழகிது, அரிது உண்மையில்.
இதழே!நீ அழகாக மட்டும் அல்ல,
அழகிய பெண்ணின் அன்புக் கொடைநீ!

3

பாடற்பனுவலில் 42ஆம் பாடலாக இப்பாடல் வரிசை இடம்பெற்றுள்ளது.

சங்க காலத் தமிழர் பண்பாட்டில் காதலர் கையுறையாக (-பரிசாக) மலரையோ தளிரையோ தந்த மரபினை இப்பழைய சீனப் பாடலைப் படிக்கும் நாம் எண்ணி மகிழ்கிறோம். பகல்குறி, இரவுக்குறி என்ற மரபும் எண்ணற்பாலது. பெண்ணின் கவினைப் பாராட்டும் சீனக் காதலனையும், தலைவியின் உறுப்புச் சிறப்புக்களின் நலம் பாராட்டும் சங்கத் தமிழ்க் காதலனையும் ஒப்பிடலாம். உணர்வு என்பது மன்பதைப் பொது. குலம், நிலம், மொழி, காலம் என்ற எல்லைகளைக் கடந்து என்றும் இருப்பது உணர்வு. அந்த உணர்வினை உயர்புலவர்கள் போற்றிப் பாடியுள்ளனர் என்பது சீன இலக்கிய மரபினாலும் தமிழ் இலக்கிய மரபாலும் பிற உலக இலக்கிய மரபாலும் உணர்ந்து மகிழ்தல் கூடும்.

புனைவியல் காதலை (Romantic Love) ஒரு சில பாடல்கள் புலப்படுத்துகின்றன. காதலர் கூடும் களம் (Tryst) முன்பே தீர்மானிக்கப்பட்டது (assignation). இவற்றுள் சில பாடல்கள் மாணிக்கக் கற்கள் போல் சுடர்விடுவன. பின்வருவன சில சான்றுகள்:

கிழக்கு வாயிலில் வில்லோ மரங்கள்,
எண்ணற்(கு) அரியன அவற்றின் இலைகள்;
அந்தியில் நாங்கள் சந்திக்க வேண்டும்,
காலைஉடு இப்போது ஒளிவிடு கின்றது.
1

கிழக்கு வாயிலில் வில்லோ மரங்கள்,
செழிப்பு உடையவை அவற்றின் இலைகள்;
அந்தியில் நாங்கள் சந்திக்க வேண்டும்,
காலைஉடு இப்பொழுது சுடர்விடு கின்றது.
2

(வில்லோ - Willow, ஒருவகை மரம்)

பனுவற்பாடல் என்னும் தொகை இலக்கியத்தில் 140ஆம் பாடலாக இப்பாடல் தொகுக்கப்பட்டுள்ளது.[19]

ஒருநங்கை, பிரபு (Chung-ztze) ஒருவனைக் காதலிக்கிறாள். ஆனாலும் அவன் தன் வீட்டின் தோட்டத்திலோ, எல்லையிலோ தென்பட்டால், பெற்றோர்களும் சகோதரர்களும் பொதுமக்களும் என்ன செய்வார்களோ என்பதற்காக அஞ்சுகிறாள்.[20] அந்த வஞ்சியின் நெஞ்சின் வெளிப்பாடாகப் பின்வரும் பாடல்கள் விளங்குகின்றன. இவையும் ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கிவந்த தாழிசை அமைப்பினை உடையவை.

கெஞ்சிக் கேட்கிறேன் கெழுதகைப் பிரவுவே!
என் வளாகத்துக்குள் தாவிக் குதிக்காதே;
என் வில்லோ மரங்களை முறித்து விடாதே!
அவற்றைப் பற்றி யான் கவலைப்பட வில்லை!
என் பெற்றோர்க் காகவே அஞ்சுகிறேன் யானே.
நெஞ்சார உன்னை நேசிக்கிறேன் பிரபுவே!
எனினும் என்பெற்றோரின் சொற்களை எண்ணி
உண்மையில் யானோ அச்சம் அடைகிறேன்.

1

கெஞ்சிக் கேட்கிறேன் கெழுதகைப் பிரபுவே!
என்வீட்டுச் சுவரைத் தாண்டிக் குதிக்காதே;
என் முசுமுசுட்டை மரங்களை முறித்துவிடாதே!
அவற்றைப் பற்றியான் அக்கறைப் படவில்லை,
என்தமையர்க்காக அஞ்சுகிறேன் யானே.
நெஞ்சார உன்னை நேசிக்கிறேன் பிரபுவே!
எனினும் என்தமையரின் சொற்களை எண்ணி
உண்மையில் யானோ அச்சம் அடைகிறேன்.

2

கெஞ்சிக் கேட்கிறேன் கெழுதகைப் பிரபுவே!
என்தோட்டத் திற்குள் தாவிக் குதிக்காதே;
என்சந்தன மரங்களை முறித்து விடாதே!

அவற்றைப் பற்றியான் அக்கறைப் படவில்லை,
மக்களுக் காகவே அஞ்சுகிறேன் யானே.
நெஞ்சார உன்னை நேசிக்கிறேன் பிரபுவே!
எனினும் மக்களின் அலர்மொழிக் காக
உண்மையில் யானோ அச்சம் அடைகிறேன்.

3

காதல் வயப்பட்ட ஒரு நங்கையின் உள்ளம், ஒருபுறம் காதலும் மறுபுறம் அச்சமும் தாக்க ஊசலாடும் உணர்வுப் போராட்டத்தினைச் சொல்லோவியம் செய்துள்ள கவிஞரின் புனைவியல் ஆற்றலைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். இப்பாடல் பாடற்பனுவலில் 76ஆம் பாடலாகத் தொகுக்கப்பட்டிருத்தல் சுட்டுதற்குரியது.

மன உளைச்சல், ஏமாற்றம், புலம்புதல் ஆகியவற்றைப் பொருண்மையாகக் கொண்ட நாட்டார் பாடல்களையும் பாடற்பனுவலில் (Classic of Poetry) பேராசான் கன்பூசியசு தொகுத்துள்ளார். அவற்றுள் ஒருசிலவற்றின் தமிழாக்கம் இங்கே வழங்கப்படுகிறது.

தன்னைக் காதலிப்பதில் காலம் கடத்தும் காதல் கூர்பவர்க்காகப் (Suitors) பொறுமையினை இழந்து காத்திருக்கும் மங்கை ஒருத்தியின் எரிச்சலையும் மனக்கடுப்பையும் பின்வரும் பாடல் வரிசை புலப்படுத்தக் காணலாம்:

கொடிமுந்திரிக் கனிகள் உதிர்கின்றன-
அங்கே ஏழு மட்டுமே உள்ளன.
என்னை நாடிவரும் இளைஞர்க்கு
இதுவே உகந்த தருணம்.

1

கொடிமுந்திரிக் கனிகள் உதிர்கின்றன-
அங்கே மூன்று மட்டுமே உள்ளன.

என்னை நாடிவரும் இளைஞர்க்கு
இதுவே உகந்த தருணம்.

2

கொடிமுந்திரிக் கனிகள் உதிர்கின்றன-
கூடையில் அவற்றைச் சேர்த்துவைத்துள்ளேன்.
என்னை நாடிவரும் இளைஞர்க்குப்
பேசுக காலம் வாய்த்த பொழுது.

3

இப்பாடல் வரிசை பாடற்பனுவலில் இருபதாம் பாடலாகத் தொகுப்பப்பட்டுள்ளது.[21] ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வரும் பா அமைப்பு நோக்கத்தக்கது. தன் உணர்ச்சியை ஒரு முறைக்கு மும்முறையாக அடுக்கிக் கூறும் நங்கையின் மன நிலையினை இப்பாடல்கள் புலப்படுத்துகின்றன. கனிகள் என்ற சொல் இன்பக் குறியீடாகக் கருதுதற்குரியது. சீனப்பெண் திருமணப் பருவம் அடைந்தவள் (Marriageable girl) என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, தொல்காப்பியம் காட்டும் பெண்பாற் கைக்கிளையின் ஒருவகையாக இப்பாடல்களை எண்ணலாம். சீனக் கவிஞர்கள் அவ்வாறு திணை கூறவில்லை எனினும், தமிழர்தம் அகப்பொருள் இலக்கணம் உலகப் பொதுமை வாய்ந்ததாக விளக்கம் தருவதற்கு உரியதாக விளங்குகிறது.

காதல் வயப்பட்ட காரிகையின் வேதனைப் புலம்பலைப் பின்வரும் பாடல்களில் காணலாம்.[22]

உன்சட்டையின் கழுத்துப்பட்டை நீலம்,நீலம்;
வருந்தும் வருந்தும் எனது நெஞ்சம்.
உன்னைக் காண வந்திலேன் எனினும்,
நீஏன் செய்தி ஒன்றும் அனுப்பவில்லை?

1

உன்இடை அணியின்மணி நீலம்,நீலம்
வருந்தும் வருந்தும் எனது மனமே.

உன்னைக் காண வந்திலேன் எனினும்,
நீஏன் வரக் கூடாது?

2

பொழுது போக்காய் இன்பம் நோக்கி,
நகர்ச்சுவர் மருங்கின் காவல் கோபுரம்மேல்;
உன்னைக் காணாத ஒவ்வொரு நாளும்
மூன்று திங்கள்போல் முழுதும் நீள்கிறது.

3

ஒருபொருள்மேல் மூன்றடுக்கிவந்த இப்பாடல் பாடற் பனுவலில் 91ஆம் பாடலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இப்பாடலில் தன் மனவேதனையினை வெளிப்படுத்தும் பெண் கைக்கிளைக்கு உரியவள் அல்லள். அன்பின் ஐந்திணைக்கு உரியவளாகவே தோன்றுகிறாள். காதலனின் சட்டையின் கழுத்துப்பட்டையின் நீல வண்ணம் அவள் நெஞ்சினைக் கவர்ந்துள்ளது. அவன் அரையில் கட்டும் கச்சையும் (girldle) குறிப்பாக அதில் மின்னலிடும் மணிகளும் அவள் மனத்தைக் கவர்ந்துள்ளன. முன்பே இயற்கைப் புணர்ச்சியில் கூடிய தலைவன் வருவதாகச் சொல்லிப் பிரிந்து போனான். அவன் பிரிவினை ஆற்றாத தலைவியின் பேச்சாக இப்பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு நாளும் அவனைக் கண்டு மகிழவிரும்புகிறாள் மங்கை. இருவரும் உரையாடுவதற்கு உரிய இடம் நகர்ச்சுவரின் பக்கத்தில் உள்ள காவல் கோபுரம் ஆகும். அந்தக் கோபுரத்தினை நோக்கி நோக்கி நங்கையின் கண்கள் வாள் இழந்தன. இங்கு, காலே பரிதப்பினவே எனத் தொடங்கும் வெள்ளி வீதியாரின் பாடல் (குறுந்,44) நம் நினைவுக்கு வருகிறது. தலைவிக்கு ஒருநாள் போவது மூன்று திங்கள் போவதுபோல் நீண்டு தோன்றுகிறது.

நெடுநெல்வாடையில் இடம்பெறும் தலைவிக்குப் பிரிவாற்றாமை காரணமாக ஒரு நொடிப் பொழுது ஓர் ஊழிக் காலம் போல் நெடிதாகத் தோன்றுகிறது. வருத்தும் வாடைக் காலம் நெடிதாகவே தோன்றுகிறது. கடமை

மேற்கொண்டு பாசறையில் இருக்கும் தலைவனுக்கு நல்வாடைக் காலமாகவே காட்சி தருகிறது. கோப்பெருந்தேவிக்கு நெடுவாடையாகவும், பாண்டிய வேந்தனுக்குநல்வாடையாகவும் ஒரே வாடை உள்ளத்தில் பதிவு பெறுவதால், சங்கப் புலவர் நக்கீர் இருவர் உணர்வுகளுக்கும் உரிய மதிப்பு அளித்து நெடுநல்வாடை என்று பெயர் சூட்டினார் என்பது நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் ஆகும்.

சீனநங்கையின் உள்ளமும் செந்தமிழ் நங்கையின் உள்ளமும் பிரிவாற்றாத வேதனையால் வெளிப்படுத்தும் உணர்வுகள் ஒத்துள்ளன என்பது உணர்ந்து மகிழலாம்.

பிறிதொரு பாடலில் இளைஞன் ஒருவன் காதல் வேதனையால் துன்பப்பட்டுப் புலம்பும் காட்சியைப் பாவலர் ஒருவர் சொல்லோவியம் செய்துள்ளார்.[23]

உதிக்கிறது திங்கள், எவ்வளவு பேரொளி!
அருமைக் காதலி, எவ்வளவு அழகு!
கவர்ச்சியும் மென்மையும் கண்ணைக் கவர்வன!
என்நெஞ்சமோ வருத்தத்தில் ஆழ்கிறது.

1

உதிக்கிறது திங்கள், எப்படி பளபளக்கிறது!
அருமைக் காதலி, எவ்வளவு நேர்த்தி!
கவர்ச்சியும் மென்மையும் கண்ணைக் கவர்வன!
என்நெஞ்சமோ துன்பத்தில் ஆழ்கிறது.

2

உதிக்கிறது திங்கள், எவ்வளவு ஒளிமயம்!
அருமைக் காதலி, ஒய்யார அழகு!
கவர்ச்சியும் மென்மையும் கண்ணைக் கவர்வன!
என்நெஞ்சமோ வேதனையில் ஆழ்கிறது.

3

இதுவும் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்த தாழிசையின் அமைப்பினை உடையது. பாடற்பனுவலில் இதனை

143ஆம் பாடலாகக் கன்பூசியசு தொகுத்துள்ளார். இப்பாடல் பிரிவாற்றாத தலைவனின் உணர்வுகளைப் புலப்படுத்துகிறது.

மாலையில் முழுநிலா உதிக்கிற காட்சியைக் காதலன் காண்கிறான். தன் அருமைக் காதலியின் பொலிவு, அழகு, கவர்ச்சி எல்லாம் அவன் நெஞ்சத்திரையில் நிழலிடுகின்றன. அந்த வஞ்சியைப் பிரிந்திருக்க முடியாத ஏக்கத்திலும் வேதனையிலும் தன் உணர்வுகளைக் கொப்புளிக்கும் பாடல்களாக இவை உள்ளன. இவற்றைப் பாடியவர் பெயர் தெரியவில்லை. மக்களிடையே வழங்கி வந்தமையால் பொது ஆசிரியத் தன்மை (Common Authorship)மட்டுமே உணர முடிகிறது. நாட்டார் பாடல்கள் (Folk Songs) என்று இவற்றை ஒதுக்கிவிட முடியாது. சங்க கால அகப்பாடல்களை நினைவூட்டும் பாங்கில் இப்பாடல்கள் சீன மக்களால் பாடப்பட்டு வந்துள்ளன. அவற்றுக்கு மரியாதை தந்து பேராசான் கன்பூசியசு தொகுத்துக் கொடுத்துள்ளார்.

வேறொரு வகையான காதற்பாடலை இப்போது காண்போம். காதலனால் துறக்கப்பட்ட காதலி தன் வேதனையினை வெளிப்படுத்துவதாக அமையும் இப்பாடல்களில் அவனுடன் இயற்கையும் சேர்ந்து கொண்டு சூழ்ச்சி செய்தலைப் பார்க்கிறோம்.[24]

காற்றும் புயலும் கலந்து அடித்தது:
என்னை நோக்கினான் அவன், சிரித்தான்;
கேலி செய்தான் கிண்டலாகச் சிரித்தான்.
என்நெஞ்சத்தில் வேதனைப் படுகிறேன்.

1

காற்றும் புழுதியும் கலந்து அடித்தது:
உறுதி கூறினான் வருவேன் என்று,
வந்திலன் நெடுந்தொலைவு போகவும் இல்லை
நெடிது நெடிது நினைக்கிறேன் அவனை.

2

காற்றும் கருத்த வானமும் அங்கே:
நாள்முழுதும் வானமோ கருத்தது.
விழித்துக் கிடக்கிறேன், விழிமூட வில்லை;
ஏங்கு கின்றேன், மூச்சுத் திணறுவேன்.

3

வானத்தின் மப்பு மந்தாரம் மேகங்கள்:
அதிரொலி, அதிரொலி, இடியின் முழக்கம்.
விழித்துக் கிடக்கிறேன் விழிமூட வில்லை
ஏங்குகிறேன் ஏங்கிக் கொண்டே இருக்கிறேன்.

4

இப்பாடல்கள் ஒருபொருள்மேல் நான்கு அடுக்கி வந்தவை. பாடற்பனுவலில் 30ஆம் பாடலாக இவை தொகுக்கப்பட்டுள்ளன.

இப்பாடல்கள் கார்காலத்து அல்லது கூதிர்காலத்து நிகழ்ச்சியாகக் கருதத்தக்கவை. காற்றும் புயலும் கலந்து வீசுகிற காலம். வானம் மப்பும் மந்தாரமுமாக உள்ள காலம். வானம் இருண்டிருக்கும் காலம். தலைவியுடன் கலந்து பேசி மகிழ்ந்து தலைவன் பிரிந்து சென்றான். வருவதாக உறுதி கூறியவன் வாய்மையினின்றும் தப்பிவிட்டான். தூக்கம் வரவில்லை; உள்ளத்தில் ஏக்கமே நிறைந்துள்ளது. அவன் சொல்லையும் செயலையும் எண்ணி எண்ணி வேதனைப்படும் நங்கையின் பிரிவாற்றாமையினை இப்பாடல்கள் உணர்ச்சிப் பிழம்பாக எடுத்துரைப்பன எனலாம்.

மற்றொரு பாடல்[25] காதலனின் பிரிவினைச் சமாளித்துப் பேசும் பெண்ணின் புலம்பலாக உருக்கொண்டுள்ளது:

தந்திர மான தோழனே!
என்னுடன் நீயோ பேசவில்லை,
எனினும் உன்பொருட்டாக
உண்ண மறுக்கட்டுமா யான்?

1

தந்திர மான தோழனே!
என்னுடன் நீயோ உண்ணவில்லை,
எனினும் உன்பொருட்டாக,
ஓய்ந்திருக்க மறுக்கட்டுமா யான்?

2

ஒருபொருள்மேல் இரண்டு அடுக்கி வந்த இப்பாடல் வரிசை பாடற்பனுவலில் எண் 86ஆம் பாடலாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

களவு ஒழுக்கத்தில் பொய்யும் வழுவும் தோன்றுதல் தமிழகத்தில் மட்டுமன்று; சீனத்திலும் தான்! தந்திரமாக இளைஞன் ஒருவன் நங்கை ஒருத்தியைக் கூடி மகிழ்ந்து பிரிந்து போய்விட்டான். அவன் நினைவு அவள் உள்ளத்தினைவிட்டு அகலவில்லை. இருவருமாக உரையாடுதலும், உண்டு மகிழ்தலும் பண்டு உண்டு. இப்போது அவற்றை எண்ணிப் பார்க்கிறாள் தலைவி. அவனை இல்லாமல் உண்ணவும் உறங்கவும் அவளால் இயலவில்லை என்பதை இயல்பாக இப்பாடல்கள் புலப்படுத்துதல் நோக்கத்தக்கது.

காரசாரமான குரலில் காதல் தோல்வியை எடுத்துரைக்கும் பாடலும், பாடற்பனுவலில் உள்ளது.[26] இப்பாடல் இந்நூலின் 23ஆம் பாடலாக விளங்குகிறது. இதன் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.

அடர்ந்த காட்டில் பெண்முயல் இறந்தது;
நாணல் களால்அது போர்த்தப் பட்டது.
ஊற்றுக் காக விரும்பினாள் ஒருத்தி;
அழகன் பெருமகன் அவள்பதம் பார்த்தான்.

1

அடர்ந்த காட்டில் மரத்துண்டுகள் கிடந்தன;
புதரில் கிடந்தது இறந்த மானே,
நாணல் களால்அது பொதியப் பட்டது.
ஆங்கொரு நங்கை அழகிய மரகதம்!

2

அவ்வளவு வேகமாய், அவ்வளவு முரடாய்
ஆ!என் மேகலைச் சிறுதுணியை அசைக்காதே;
கிடக்கும் நாயைக் குரைக்கச் செய்யாதே.

3

இந்தப் பாடல் வரிசையில் உயர் மனிதன் ஒருவனால் வஞ்சிக்கப்பட்டவள் ஒருத்தியின் நிலை புனையப்பெற்றுள்ளது. முதல் பாடற்பகுதியில் இறந்த பெண்முயலினை நாணல் புற்களினால் மறைத்துவிட்ட செய்தி காணப்படுகிறது. இரண்டாவது பகுதியில் இறந்த மானை நாணல்களினால் பொதியப்பட்ட செய்தி காணப்படுகிறது. மூன்றாவது பகுதியில், அவளைப் பலாத்காரம் செய்யும் ஒருவனை அவள் எச்சரிக்கை செய்வது காணப்படுகிறது. நாய் குரைத்தால் அக்கம் பக்கத்தவர் வந்து விடுவார்கள் என்று எச்சரிக்கை விடுப்பதாலும், தன்இடையில் செருகியுள்ள கைக்குட்டையினை அவசரப்பட்டு முரட்டுத் தனமாய் அசைக்காதே என்று கோரிக்கை வைப்பதாலும் இருவருக்கும் ஏதோ ஒருவகையில் இணக்கம் இருத்தல் ஊகிக்கப்படுகிறது. இயல்பாக (-யதார்த்தமாக), உலகின் நடைமுறைக்கு ஒட்டிப் புனையப் பெற்ற இக்காதற் பாடல்கள் ஊன்றிப் பயிலத்தக்கவை. இறந்துகிடக்கும் பெண் முயலும் பெண்மானும், காம இன்பம் நுகர்ந்தபின் காரிகை ஒருத்தியைச் செல்வ இளைஞன் கொன்று மறைத்துப் போட்டிருக்கிறான் என்ற உள்ளுறைப் பொருளைத் தருவதாகத் தோன்றுகிறது.

பாடற்பனுவலின் சில பாடல்களை வில்லியம் மக்நாட்டன் (William Mcnaughton), எஸ்ரா பவுண்டு (Ezra Pound), பர்டன் வாட்சன் (Burton Watson), ஆர்தர் வாலே (Arthur Waley) உள்ளிட்டோர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். இவற்றை Chinese Literature - An Anthology என்ற தலைப்பில் வில்லியம் மக்நாட்டன் 1974இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இம்மொழிபெயர்ப்பு நூலிலிருந்து ஒருசில பாடல்களைத் தமிழாக்கம் செய்வோம்.

பிரிவாற்றாமை

எஸ்ரா பவுண்டு என்னும் புகழ்பெற்ற அமெரிக்க நாட்டுக் கவிஞர் Plucking the vine leaves என்ற தலைப்பில் மூன்று பாடல்களை மொழிபெயர்த்துள்ளார். ஒவ்வொரு பாடலும் ஈரடியால் இயன்றவை. சங்க இலக்கியமாகிய கலித்தொகையில் இடம்பெறும் ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வரும் ஈரடித் தாழிசையின் அமைப்பினை இச்சீனப் பாடல்களில் கண்டு மகிழலாம்.[27] பிரிவாற்றாத தலைவியின் கூக்குரலை எதிரொலிப்பனவாகவுள்ள இப்பாடல்கள் இங்கே தரப்படுகின்றன.

தேயிலையின் தளிர்கொய்வேன் கேளீர்என் இசையை:
தினம்நீளும் முத்திங்கள் அவனையின்றி எனக்கு.
1

பால்மரத்தின் தோல்உரிப்பேன் கேளீர்என் இசையை:
பகல்நீளும் முவ்வேனில் அவனையின்றி எனக்கு.
2

நீண்டுயரும் புல்கொய்வேன் கேளீர்என் இசையை:
நிதம்நீளும் மூவாண்டாய் அவனையின்றி எனக்கு.
3

பிரிவாற்றாத தலைவி வழிப்போவாரைக் கூவி அழைத்துத் தன் தனிமையின் துன்பத்தை எடுத்துரைப்பதாக இம் மூன்று பாடல்களும் அமைந்துள்ளன. ‘கேளீர்என இசையை’; ‘நீளும்’; ‘அவனையின்றி எனக்கு’ என்பன பாடல்தொறும் வருதல் (Refrain) நாட்டாரிலக்கிய மரபாகும்.

சங்க இலக்கியத்தில் பிரிவாற்றாது புலம்பும் தலைவிக்கும் இந்தச் சீனப் பெண்மணிக்கும் ஒரு வேறுபாட்டினைக் காண முடிகிறது. தலைவனைப் பிரிந்து தன்னால் இருக்க முடியவில்லை என்பதைத் தோழிக்குச் சொல்லியும், அவள் இல்லாத நிலையில் இயற்கையினை நோக்கிப் புலம்பியும் தன் துன்பச் சுமையினை இறக்கி வைத்தல் சங்க காலத் தமிழ்ப் பெண்ணின் நடைமுறை

என்பது புலவர் பலரின் பாடல்களில் வெவ்வேறு கோலங்களில் புனையப் பெற்றுள்ளது. தலைவன் பொருளீட்டவோ, போர் புரியவோ பிரிந்து செல்வதும், தலைவி ஆற்றியிருப்பதும், இல்லறம் புரியும் இருவரின் கடமைதான். ஆனால், பிரிந்துறையும் காலத்தில் தலைவி ஆக்கபூர்வமாக என்ன என்ன செயல்களில் ஈடுபட்டிருந்தாள் என்பதைப் புலவர் ஒருவரும் பாடினாரிலர்.

சீனச் செவ்வியல் பாடலில் பிரிவாற்றாத தலைவி குடும்பத்தினை ஓம்புதற் பொருட்டுச் சில பணிகளைச் செய்தாள் என்பது ஒரு புதுச் செய்தி. புலம்பும் பொழுதுகூட, தான் ஒரு பணியினைச் செய்து கொண்டே புலம்பினாள் என்பது நம் நெஞ்சினை நெகிழச் செய்கிறது.

எஸ்ரா பவுண்டின் ஆங்கில ஆக்கத்தில், முதல் பாடலின் தொடக்கத்தில் Plucking The Vine leaves என்பதும்; இரண்டாம் பாடலின் தொடக்கத்தில், Stripping the southern woods என்பதும்; மூன்றாம் பாடலின் தொடக்கத்தில், Reaping the tall grass என்பதும் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் மூன்றாவது தொடரை அப்படியே எடுத்துக்கொண்டு, 'நீண்டுயரும் புல்கொய்வேன்' என்று தமிழாக்கம் செய்தேன். ஆயினும், முதலிரு தொடர்களையும் முறையே 'தேயிலையின் தளிர் கொய்வேன்', 'பால்மரத்தின் தோல் உரிப்பேன்' என்று சிறு மாற்றத்துடன் மொழியாக்கம் கண்டேன். மற்ற தொடர்களைத் தமிழ்ப்படுத்தும் பொழுது மாற்றம் ஏதும் செய்திலேன்.

கடமைகளைச் செய்துகொண்டே இந்த ஏழைச் சீனப் பெண் தன் ஆற்றாமையினை வழிப்போக்கரை நோக்கி வெளிப்படுத்தியுள்ள பண்பினை வியந்து பாராட்டாமல் இருத்தற்கில்லை.

கலித்தொகையில் இடம்பெற்றுள்ள ஈரடித் தாழிசைகள் மூன்று அடுக்கி வந்தமைக்கு ஒரு சான்றினை

மட்டும் இயைபு கருதி இங்கு எடுத்துக்காட்டுதல் ஏற்புடையது ஆகும்.

கலித்தொகையில் ஈரடித்தாழிசை

பாலை பாடிய பெருங்கடுங்கோ தோழி கூற்றாகப் பாடியுள்ள அகநிலை ஒத்தாழிசைக் கலியில் பின்வருவன ஈரடித் தாழிசைகள் ஆகும்.

1. கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபின்
புல்லென்ற களம்போலப் புலம்புகொண்(டு) அமைவாளோ.

2. ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண்(டு) அமைவாளோ.

3. ஓரிரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்
நீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ.

பொருளீட்டும் பொருட்டுப் பிரிவு மேற்கொண்ட தலைவனை, பிரிவாற்றாமல் தலைவி இறந்துபடுவள் என்று தோழி எடுத்துச் சொல்லித் தலைவன் செலவு தவிர்ந்ததை இப்பாடல் பொருண்மையாகக் கொண்டது. பாட்டின் முகமாக வருவது தரவு என்னும் உறுப்பு; உடலாக வருவன தாழிசைகள் என்னும் உறுப்பு; தரவு, தாழிசை என்னும் உறுப்புக்களை, இறுதியாக வரும் சுரிதகம் என்னும் உறுப்புடன் இணைப்பதற்கு வரும் தனிச்சொல்லும் ஓர் உறுப்பு. இங்ஙனம் அமைப்பொழுங்கு கொண்ட இந்த ஒத்தாழிசைக் கலிப்பாடலில் தாழிசைகள் தாம் தலைவனுக்கு அறிவுரை கூறும் பகுதியாக வருவன.

இத்தாழிசைகளில் தலைவன் பிரிவினைத் தலைவி தாங்கிக் கொள்ள இயலாதவள் என்ற கருத்து ஒரு முறைக்கு மும்முறையாக மூவேறு உவமைகளின் வாயிலாக அழகுணர்ச்சியுடன் வெளிப்படுத்தப்படுகிறது.

1. ஆரவார ஓசையுடனும் மகிழ்ச்சி ஒலியுடனும் அழகுபெற்ற திருவிழாவினைக் கொண்டாடினர்.

விழா முடிந்ததும் எல்லோரும் அது நிகழ்ந்த இடத்தைவிட்டுப் போய்விடுகின்றனர். அந்த இடம் பொலிவழிந்து தனித்துக் கிடத்தல்போல், தலைவி உன்பிரிவினால் உண்டாகும் தனிமை யினைத் தாங்கியிருப்பாளோ?

2. ஆளும் அரசர் கலக்கம் அடையும்படி பகை வேந்தரால் அழிவுற்ற நாட்டினைப்போல அழகு குலைந்த முகத்துடன் வருத்தத்தினைத் தலைவி தாங்கியிருப்பாளோ?

3. தாமரைப் பொய்கையில் நீரால் நீக்கப்பட்ட மலர் ஓர் இரவுக் காலம் வரை வாடாமல் கிடந்தாற்போல், நீ பிரிந்து சென்றால் ஓர் இரா முழுதும் தனிமையினைத் தாங்கி உயிர்வாழ்வாளோ?

பிரிவாற்றாள் என்ற ஒரு பொருளை வலியுறுத்தும் பொருட்டு மும்முறை தோழி மூவேறு உவமைகளின் வழியாகக் கூறுகிறாள். இங்ஙனம் ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்த தாழிசைகள் கலிப்பாவில் தனிச்சிறப்பு வாய்ந்தவை எனலாம்.

களமும், நாடும், பூவும் பின்னும் விழாவாலும் அரசனாலும் நீராலும் பழைய பொலிவினைப் பெறும். அவைபோலன்றித் தலைவன் பிரிந்த பொழுதே தலைவி உயிர் பிரிவாள் என்ற குறிப்பினால் தலைவன் தற்காலிகமாகப் பிரிவினைத் தள்ளிப் போடுகிறான். இதனைச் செலவு அழுங்குவித்தல் என்ற கலைச்சொல்லினால் கூறுதல் மரபு.

ஒருபொருள்மேல் மூன்றடுக்கிவரும் பாடல்கள் இயல்பாகவே சங்க இலக்கியம் ஆகிய கலித்தொகையிலும் காண்கிறோம். கன்பூசியசு தொகுத்துள்ள பாடற்பனுவலிலும் (The Book of Songs) பார்க்கிறோம். ஒன்றினின்றும் ஒன்று கடன்வாங்கப்பட்டதாகக் கருதுதல் முறையன்று. இயல்பாகவே இத்தகைய பொதுத்தன்மைகள் இருவேறு

மொழி இலக்கியங்களில் காணப்படுதல் ஒப்பாய்வினால் உணரப்படுகிறது. தமிழ், சீனம் ஆகிய இருவேறு மொழிகளைத் தவிர உலகத் தொன்மொழிகள் பிறவற்றிலும் இத்தகைய பொதுப்பண்புகள் காணப்பட்டால் அவற்றை மனித குலத்துக்குப் பொதுவானவை (The Commonness belongs to the human stock) என்று முடிவு செய்தல் வேண்டும்.

பிரிவாற்றாமைப் பொருண்மையில், Swallows, Swallows என்ற தலைப்பில் வில்லியம் மக்நாட்டன் (William Mcnaughton) ஆங்கில ஆக்கம் செய்துள்ள மூன்று சீனப் பாடல்களின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.[28]

தூக்கணங் குருவிகள் தொடர்ந்து பறப்பன!
அவற்றின் சிறகுகள் அலைவன வளைவன.
புக்ககத் திற்குப் போகிறாள் அவளே!
பாழ்நிலம் பார்த்துப் போகிறேன் யானோ!
பார்வையை விட்(டு)அவள் மறையும் வரையும்,
பார்க்கிறேன் அவளை ஊன்றிப் பார்க்கிறேன்
கண்ணீர் சிந்திடும் கார்மழை போலே!

1

தூக்கணங் குருவிகள் தொடர்ந்து பறப்பன!
நேராய் நெளிவன அவற்றின் கழுத்துக்கள்,
நீட்டிச் செல்வன நெளியும் கழுத்துக்கள்!
புக்ககத் திற்குப் போகிறாள் அவளே!
முடிந்த தூரத்தில் தொடர்கிறேன் அவளை
பார்வையை விட்டவள் மறையும் வரையும்
பார்க்கிறேன் அவளை ஊன்றிப் பார்க்கிறேன்
தங்கினேன் நிற்கிறேன் அழுகிறேன் அவட்காய்.

2

தூக்கணங் குருவிகள் தொடர்ந்து பறப்பன!
உயர்வன தாழ்வன அவற்றின் குரல்கள்!
புக்ககத் திற்குப் போகிறாள் அவளே!
தெற்கின் தொலைவுயான் செல்லுதல் வேண்டும்
பார்வையை விட்டவள் மறையும் வரையும்

பார்க்கிறேன் அவளை ஊன்றிப் பார்க்கிறேன்
என்நெஞ்சை இந்நிகழ்வு கனக்கச் செய்வன.

3

இவையும் ஒருபொருள்மேல் மூன்று அடுக்கிவந்தவை. தலைவி தன் பெற்றோர் வீட்டுக்குப் போகிறாள். அவளை வழியனுப்பிவிட்ட தலைவன், அவளைப் பிரிந்து எப்படி இருப்பேன் என்று எண்ணுகிறான். வீதியில் நின்றபடி, தலைவி செல்லும் காட்சியையும் அவளைத் தன்னால் பிரிந்திருக்க இயலாமையினையும் வானில் பறந்து கொண்டிருக்கும் தூக்கணங் குருவிகளை நோக்கிப் பேசுவதாக இப்பாடல்கள் புனையப் பெற்றுள்ளன. இவற்றைப் பால் கிளவி எனத் தொல்காப்பியர் கூறுவனவற்றுடனும் ஐரோப்பிய அணியியலார் கூறும் Apostrophe என்ற அணிக்கோட்பாட்டுடனும் ஒப்பிடுதல் கூடும்.

ஒவ்வொரு பாடலிலும் தொடர்கள் மீண்டும் மீண்டும் வருதல் (Refrain)பாடல்களின் கிராமியத் தன்மையினைப் புலப்படுத்தும். வாழ்வியலுடன் நெருங்கி அமைந்து நம்மை நெகிழச் செய்யும் இப்பாடல்கள் எண்ணி இன்புறத்தக்கவை.

நாட்டார் காதற் பாடல்களில் (Folk Love Poems) கலைநேர்த்தியும் முழுமையும் தொடர்ச்சியும் உடைய ஒரு நங்கையின் காதற் கதையினை எடுத்துரைப்பதாகப் பாடற் பனுவலின் எண் 58ஆம் பாடல் அமைந்துள்ளது. அதன் தமிழாக்கத்தைக் காண்போம்:

பட்டினை வாங்கத் துணியைச் சுமக்கும்நீ
தோற்றத்தால் நாட்டுப்புறத்தா னாகக் காணப்பட்டாய்,
ஆனால் நீயோ பட்டு வாங்க வரவில்லை;
சூழ்ச்சியால் என்னை அடைய வந்தாய்நீ.
வழியனுப்பினேன் "சி" நதியில் நடந்து செல்ல.
நாளைநான் ஒத்திப் போட்டதாக எண்ணாதே.
நல்ல தூதுவர் உனக்கொருவரும் இலர்.

கோபப் படாதே கும்பிடு கின்றேன்;
இலையுதிர் காலம் மீண்டும்நாம் சந்திக்கும் காலம்.
1

ஃபு-குவானை நோக்கிக் காண்பதற் காக
ஏறினேன் அந்த இடிந்த சுவரின்மேல்
ஃபு-குவானை நான் பார்த்தேன் இல்லை
ஓடை களாக ஓடினஎன் கண்ணீர்.
பின்னர்க் கண்டேன் ஃபு-குவானை
நகைத்துரை யாடினேன் நயந்தேன் ஆ!ஆ!
ஓட்டிலும் தண்டிலும் உள்ளதேவ வாக்கினைக்
கலந்து கேட்டாய்; புனிதமற்றது ஒன்றும் இல்லை.
தீரத்தோடு வருக,
என்னையும் என்பொருள்களையும் எடுத்துச் செல்க.
2

முசுக்கட்டை யிலிருந்து உதிர்வதன் முன்னம்
எவ்வளவு பளபளப்பாய் இருந்தனஅவ் இலைகள்!
அந்தோ, ஆமைப் புறாவே
முசுக்கட்டை இலைகளைத் தின்ன மாட்டாய்!
அந்தோ, ஓ மகளிரே,
ஆண்களோ டிணைந்துநீர் ஆடிப்பாடி மகிழ்ந்தீர்!
ஆண் ஆடினால் அதுமன்னிக்கப் படலாம்;
ஆனால் பெண் ஆடினாலோ
மன்னிப்பு என்பது அவளுக்கு இல்லை.
3

முசுக்கட்டை இலைகள் வீழ்ந்து விட்டன,
எல்லாம் மஞ்சள் எல்லாம் உலர்ந்தவை.
உன்னிடம் வந்த முதல் நாளில் இருந்து
வறுமையில் உழன்றேன் மூன்றாண் டாக;
"சி" நதியின் நீர்நிறைந்து உள்ளது
அதில்செல்லும்வாகனத்தின்திரைச்சீலைகளை நனைக்கிறது.
ஒருபடித் தாக உள்ளவள் பெண்ணே,
ஆனால் தன்வழிகளை அடிக்கடி மாற்றுகிறவன் ஆணே;

நம்பிக்கையில் குறைந்தவன் அவன்
நடத்தையிலும் மாறுகிறவன் அவன்.

4

மூன்றாண் டிருந்தேன் உன்தன் மனைவியாய்,
வீட்டினைப் பெருக்குதல் மெழுகுதல் முயன்றிலேன்
விழிப்பது முன்னால் துயில்வது பின்னால்;
வேலை யின்றிக் காலையில் இருந்திலேன்.
என்னிடம் குறைகண்டாய் முதன்முதலாய்,
பின்னை என்னைக் கொடுமைப் படுத்தினாய்.
இதனை அறியாளன் உடன்பிறந் தோர்கள்
எள்ளினர் என்னை; இகழ்ந்தனர் தொடர்ந்து.
நினைந்து நினைந்து ஏங்கினேன் அமைதியாய்
எனக்கு நானே இரங்கு கின்றேன்.

5

உன்னுடன் யானும் உறுகிறேன் முதுமை;
முதுமை என்னை இரங்க வைத்தது!
"சி" நதிக்குக் கரைகள் உண்டு
சதுப்பு நிலமும் ஓரங்களும் உண்டு.
சிறுவர் விருந்தில் நாம் உரையாடி மகிழ்ந்தோம்
பிரியேன் என்று பிரியமாய்ச் சூள்உரைத்தாய்.
கவலை சிறிதுமின்றிக் கட்டினை முறித்தாய்.
அதுமுறிக்கப்படும்பொருள்என்று ஒருபொழுதும்எண்ணிலேன்
அப்படி முடிவுதான் அமைந்து விட்டது.

6

ஒரு நெடும் பாடலாக இஃது அமைந்துள்ளது. ஒருத்தியின் காதல் வாழ்வில் ஏற்படும் இன்பம், துன்பம், மாற்றம், மறைவு என்பனவற்றை நெஞ்சம் நெகிழும்படி இந்நெடும் பாடல் எடுத்துரைக்கிறது.[29]

சிறுவர் விருந்து என்பது அவர்களின் திருமணத்திற்கு முன்னர் அவர்களுக்குச் சிண்டு போட்டு முடியும் பெற்றோர் கொண்டாடும் விழாவில் வருகை தருபவர்க்குக்

கொடுக்கப்படும் விருந்து ஆகும். ஆங்கில ஆக்கத்தில் காணப்படும் Tufted hair என்ற சொல் சிறுவரைக் குறிப்பது.

3. யீ கிங்கு (The Yi King - கி.மு.1143)

ஐம்பெரும் பனுவல்களில் மூன்றாவதாக எண்ணப்படுவது Yi King என்பதாகும். இதனை 'yee keeng' என்று ஒலிப்பது வழக்கம். king என்ற சீனச்சொல் இங்குப் பனுவலைக் (Classic) குறிப்பது. Yi என்ற சொல்லிற்கு மாற்றம் (Change) என்பது பொருள். எனவே, யீ கிங்கு என்ற பனுவலை மாற்றப் பனுவல் (The Book of Changes அல்லது The Classic of Changes) என்று தமிழில் மொழிபெயர்க்கலாம். இந்நூல் முன்னுணர்தல், மந்திரம், தந்திரம் முதலியவற்றைப் பேசுதலின், இந்நூல் குறிநூல் அல்லது மந்திரப்பனுவல் (The Book of Divination or of Magic) என்ற பெயரினாலும் சீனவியல் வல்லுநர்களால் (Chinalogists) அழைக்கப்படுகிறது.[30]

சீன மரபின்படி (Chinese tradition) இந்தப் பனுவலின் தோற்றம் சீன நாகரிகத்தின் (Chinese Civilization) தோற்றமான கி.மு.3,322ஆம் ஆண்டிற்குரியதாகக் கொள்ளப்படுகிறது. ஃபு-ஹிசியா (Fu-Hsia) என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட முதல் சீன அரசும் கி.மு.3,322ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டதாகும். இவரைப் புராண காலம் எனப்படும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து அரசராகக் கருதுவர். எனவே, முதல் சீனப் பேரரசின் கால அளவுக்குத் தொன்மை வாய்ந்ததாக மாற்றப் பனுவல் (The Book of Changes) எனப்படும் மந்திரப்பனுவல் (The Book of Magic) சிலரால் கருதப்படுகிறது. ஆனாலும், சீனவியல் அறிஞருள் ஒரு சாரார், அதன் தொன்மையினை 400 ஆண்டுகள் குறைத்து மதிப்பிடுகின்றனர். ஃபுஹிசி (Fu-hsi, or Fu-Hsia)யின் காலத்தில் காலக்கணிப்பு முறை நூற்றுக்கு நூறு அறிவியல் சார்ந்ததாக இருந்ததில்லை. என்றாலும், பாபிலோனிய, எகிப்திய நாகரிகங்களின் தொன்மை குறித்து இக்காலத்து அறிஞர்கள் வெளிப்படுத்திய ஊகங்கள்

(Guesses), தோராயங்கள் (Approximations) ஆகியவற்றைவிட, சீனர்களின் ஆண்டு வரிசைப் பதிவேடுகள் (Chinese Annals) மிகச் சிறந்த முறையில் பாதுகாக்கப் பெற்றுள்ளன என்பது அறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும். எனவே, வரலாற்றுணர்விலும் காலக்கணிப்பிலும் சீனர்கள் முதலில் வைத்து எண்ணத் தக்கவர்கள் என்பது புலனாகும்.

சீன இலக்கியங்களில் யீ (Yi) என்னும் மாற்றப்பனுவல் அல்லது மந்திரப்பனுவல் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதில் கருத்து வேறுபாடும் உள்ளது. இந்நூல் கணித முறைப்படி அமைக்கப் பெற்ற நெடுங்கோடுகளின் வடிவச் சித்திர வரிசைகளைத் தன்னுள் கொண்டது. தொடக்கத்தில் எட்டு முக்கோட்டு வரைவு (Trigrams)ச் சித்திரமாகப் புராண காலத்துப் பேரரசர் ஃபுஹிசி என்பவரால் வடிவமைக்கப்பட்டது என்பர். இதுவே கன்பூசியசின் காலத்தில் 64 அறு கோட்டு வரைவாக (Hexagrams) வடிவமைக்கப்பட்டது. மந்திரம் புரியவும், குறி கூறவும் (Divination), வருவது உரைக்கவும் இந்தச் சித்திர வரிசைகள் (Series of Diagrams) ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. கி.மு.1100க்குச் சற்றுமுன் புகழ்பெற்ற அரசர் இருவர் இவற்றுக்குத் தொடர் விளக்கங்களும், மறைநுட்ப விளக்கங்களும் (Mystical explanations) எழுதினர். பின் வந்த உரையாசிரியர்களும் மேலும் பற்பல விளக்கங்களை இந்தச் சித்திர வரிசைகளுக்கு எழுதிச் சேர்த்தனர். கன்பூசியசு கூட ஒருசில விளக்கங்களை எழுதியிருத்தல் கூடும் என்று சீனவியல் (Chinalogy) அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்வாறு எழுதப்பட்ட விளக்கங்களுக்கு மேற்பட்ட விளக்கங்களே யீ கிங் ஆகிய மாற்றப்பனுவல் அல்லது மந்திரப் பனுவலாக வடிவம் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சித்திர வரிசைகள் தோன்றிய காலத்தில் அவற்றுக்கு வழங்கப்பட்ட பொருள் இன்னதுதான் என்பது பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கு இயலவில்லை. அவை

சொற்கோவை (Vocabulary) அல்லது அசைக்கோவை (Syllabary) அல்லது மிகத் தொன்மை வாய்ந்த எழுத்துமுறை என்றும் இவை சீனரால் பேணிக் காக்கப் பெற்றவை என்றும் அண்மைக் காலத்து அறிஞர் ஒருவர் வாதிட்டிருக்கிறார். இவர் கூற்றிலும் உண்மை இருக்கலாம். அங்ஙனமாயின், இப்பழைய எழுத்துருவங்கள் கணிதச் சுருக்கங்களாகவும் (Mathematical Abstractions), திட்ப நுட்பமாகவும் (Precision) அமைந்து, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனின் அறிவுக் கூர்மைக்கும் சிந்தனை வளர்ச்சிக்கும் கட்டியம் கூறுவன என்று கூறப்படும் கருத்து எளிதில் புலப்படுவதில்லை. மௌனமாக உள்ள இந்தச் சித்திரங்கள் இவை தோன்றிய காலத்தில் என்ன உணர்த்தின என்பது ஒருபுறமிருக்க, அவை 5,000 ஆண்டுகளாகச் சீன மக்களின் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியனவாக இருந்து வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.[31] இன்றளவும் அவை பயபக்தியுடன் போற்றப்படுகின்றன. மறைபொருளாக உள்ள இச்சித்திரங்களின் இரகசியப் பொருளை மேலும் சீனச் செவ்வியலார் ஆராய்ந்து உணர்த்துதல் வேண்டும்.

வடமொழிவாணர்களின் நான்மறைகளில் நான்காவதாக உள்ள அதர்வண வேதம் மந்திரங்களைப் பற்றியது. தொல்காப்பியர் காலத்து வழங்கிய இலக்கிய வகைகளில் வாய்மொழி எனப்படும் மறைமொழி மந்திரமும் இடம்பெற்றிருத்தல் இயைபு கருதி இங்கு எண்ணுதற்குரியது. திருமூலர் அருளிய திருமந்திரம் மூவாயிரம், திருமந்திர மாலை முந்நூறு ஆகிய பனுவல்களில் மந்திரங்கள், எந்திரங்கள், சக்கரங்கள், மண்டலங்கள் பற்பல விளக்கப்பட்டுள்ளன. இவற்றை எண்ணுங்கால் பண்டைக் காலத்தில் உலகச் சமுதாயத்தில் மறைமொழிகளிலும் மந்திரங்களிலும் மக்களுக்கு நம்பிக்கை இருந்துள்ளமை புலனாகும்.

4. லீ கீ (The Li Ki)

செவ்வியல் சீன இலக்கியங்களில் நான்காவதாக எண்ணப் பெறுவது லீ கீ ஆகும். இதனைச் சடங்குப் பனுவல் என்று தமிழாக்கம் செய்யலாம். இத்தொகைப் பனுவலில் சமுதாயத்தில் நிலவிய சடங்குகள், கிரியைகள் (Rites and Ceremonies) பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன. கன்பூசியசின் காலத்திற்குப் பின்பு கூட பிற்சேர்க்கைகளாகப் பற்பல இதனுள் இணைக்கப்பட்டுள்ளன. ஏனைய செவ்வியல் சீனப் பனுவல்களைப் போல, இத்தொகை நூல் படிப்பவர்க்கு ஆர்வம் அளிப்பதாக இல்லை என்பது சுட்டுதற்குரியது. பிற்காலத்தில் உருப்பெற்ற சடங்கு நூலுக்கும், தொன்மை மிக்க இச்சடங்கு நூலுக்கும் சுட்டத்தக்க வேறுபாடுகள் உள்ளன என்று சீனவியலார் கூறுகின்றனர்.[32] இந்நூல் தீக்கிரையாகிவிட்டது. கி.மு. முதல் நூற்றாண்டில் மீண்டும் கண்டெடுக்கப்பட்டது.

பேராசான் கன்பூசியசு சீனச் சடங்குகளையும் கிரியைகளையும் பெரிதும் மதித்தவர். ஏனைய பனுவல்களுக்கு ஒப்பாகவே இச்சடங்குப் பனுவலையும் கன்பூசியசு கருதியுள்ளார். எல்லாப் பொருள்களுக்கும் கௌரவம் இருக்க வேண்டும் என்றும், சடங்குகள் யாவும் ஒழுங்காகவும் முறையாகவும் நடைபெற வேண்டும் என்றும் அவர் விரும்பினார். இத்தகைய போதனையினால் இந்தச் சீன ஞானி சமுதாய முன்னேற்றத்தினைத் தடுத்து விட்டார் எனக் கருதுவோரும் உள்ளனர். சீன மக்கள் பழைய சடங்கு முறைகளைக் கற்றறிந்து அவற்றைப் பூரணமாகச் செய்து முடித்தல் வேண்டும் என்று நம்பினர். அவ்வாறு சடங்குகளைச் செய்யும் பொழுது வாழும் ஆவி (Living Spirit) மந்திரச் சக்கரத்திலிருந்து நழுவிவிட்டால் இழப்பு ஏற்படும் என்று கவலைப்பட்டனர். இத்தகைய மூடநம்பிக்கைகள் சமுதாய வளர்ச்சிக்குத் தடையாக இருந்தன. எனவே, சடங்குப் பனுவலுக்குக் கல்வியாளர் முதன்மை கொடுத்தாரிலர்.

5. இளவேனிற் காலமும் இலையுதிர் காலமும் (Chun Chiu)

மேலே கூறப்பட்ட நான்கு வகைத் தொகை இலக்கியங்களுடன் ஐந்தாவது பனுவலாக (-King) இளவேனிற் காலமும் இலையுதிர் காலமும் எண்ணப்பெற்றது. கன்பூசியசின் படைப்பாக இந்நூல் விளங்குகிறது. சீன மொழியில் இந்நூல் Chun Chiu (The Spring and Autumn) என்று பெயர் பெற்றது. இப்பனுவல் கன்பூசியசு காலத்துடன் முடிவடையும் இருநூற்று நாற்பதாண்டு (கி.மு.722-481) கால வரலாற்றினை எடுத்துரைக்கிறது.[33] இப்பனுவல் அரசர்களைப் பற்றிய உப்புச் சப்பில்லாத ஆவணமாக இக்காலத்து வாசகர்களுக்குத் தோன்றுகிறது. கன்பூசியசின் ஏனைய பனுவல்களைவிட இது சுவையில் குறைந்ததாகவே எண்ணப்படுகிறது. பாடற்பனுவல் (Classic of Poetry), வரலாற்றுப் பனுவல் (Classic of History) ஆகியவற்றில் விளங்கும் இலக்கியச் சிறப்பு, ஏனைய மூன்று தொகைப் பனுவல்களிலும் காணப்படவில்லை. எஞ்சிய தொன்மைமிக்க சீனப் பனுவல்கள் பற்றிச் சற்று உற்று நோக்குவோம்.

நாற்பெரும் பனுவல்கள் (Four Great Books)

நாற்பெரும் பனுவல்கள் என்ற இலக்கியத் தொகுதிக்குத் தத்துவ ஞானிகளின் பனுவல்கள் (The Books of the Philosophers) என்ற பெயரும் வழங்கிவருகிறது. இவற்றை இயற்றியவர் பேராசான் கன்பூசியசும் அவருடைய அண்மைக் காலத்துச் சீடர்களும் ஆவர்.[34] கன்பூசியசின் இளவேனிலும் இலையுதிர் காலமும் ஆகிய பனுவல் (King) தமக்குமுன் 200 ஆண்டுகளில் வாழ்ந்த மன்னர்களின் வரலாற்றினைக் கூறுவது. எனின், பேராசான் கன்பூசியசின் உண்மையான போதனைகளையும் கொள்கைகளையும் விளக்கும் பனுவல்களாக நாற்பெரும் பனுவல்கள் எனப்படும் தத்துவ ஞானிகளின் பனுவல்கள் திகழ்கின்றன. இவற்றில்தான் கன்பூசியத்திற்குரிய புனிதப் பனுவலை நோக்குதல் வேண்டும். இந்நாற்பெரும் பனுவல்களில்

முதலில் வைத்து எண்ணப்பெறுவது அனலெக்ட்சு (Analects) என்ற நூலாகும். இந்நூலின் ஆசிரியர் கன்பூசியசு ஆவர். இந்நூலில்தான் கன்பூசியம் காணப்படுகிறது. கன்பூசியம் என்பது அவர் போதித்த நன்னெறிகளின் ஒருங்கமைவு ஆகும்.

1. அனலெக்ட்சு (Analects)

இந்நூலினைச் சீனத்தில் **Lun Yu** என்றும் குறிப்பிடுவர். இந்நூல், பேராசானின் போதனைகளும் அறிவுரைகளும் அடங்கிய பனுவல் ஆகும். அவர் போதித்தவற்றை அருகிலிருந்து கூர்ந்து கேட்ட அவரின் சீடர்தான் இந்நூலைத் தொகுத்துள்ளார் என்பது சீனவியலாரின் (Chinalogists) கருத்தாகும்.

கிறித்தவர்களுக்குப் புதிய ஏற்பாட்டின் (New Testament) முதல் நான்கு அதிகாரங்களைப் (Four Gospels) போல, சீன மக்களுக்கு அனலெக்ட்சு என்ற பனுவல் அமைந்துள்ளது என்பர் ஒப்பியலார். இந்நூலிலிருந்து கன்பூசியசையும் அவர் கொள்கைகளையும் தெள்ளத் தெளிவாக அறியலாம்.

2. மென்சியசின் போதனைகள்

நாற்பெரும் பனுவல்களில் இரண்டாவதாக எண்ணப் பெறுவது மென்சியசின் போதனைகள் (The Sayings of Mencius)ஆகும். ஏசுபிரானுக்கு (Jesus Christ) ஏற்ற சீடராகப் பால் (Paul) விளங்கியமை போல, கன்பூசியக் கொள்கைகளைப் பரப்பும் பணிகளில் தலைசிறந்தவராக மென்சியசு (Mencius) விளங்கினார்.

பேராசான் கன்பூசியன் போதனைகளை ஏற்பதில் மெத்தனம் காட்டிய சீன உலகில், அவர் இறப்பிற்கு நூறாண்டு கழிந்தபின் வந்த மென்சியசு தன்சொந்த விளக்கங்களாலும் பேரார்வத்தாலும் பேராசானின் போதனைகளை எங்கும் பரவச் செய்தார். எனவே, இன்றைக்குக் கன்பூசியம் என்பது

மென்சியசால் வடிவமைக்கப்பட்ட நெறியாகவே கொள்ளப்படுகிறது.

3. பெருங்கல்விப் பனுவல்

நாற்பெரும் பனுவல்களில் அடுத்து வரும் இரு பனுவல்களும் லீ கீ (Li Ki அல்லது Collection of Rites) என்ற செவ்வியல் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. எனினும், இவ்விரு பனுவல்களும் தாமே தனித்து நிற்கும் தகுதி படைத்தவை. அவற்றுள் ஒன்று தா ஹிசியோ (Ta Hsio) என்று கூறப்படும் பனுவல் ஆகும். இதனை, The Great Learning என்று ஆங்கில ஆக்கம் செய்துள்ளனர். தமிழில் பெருங்கல்விப் பனுவல் என்று வழங்கலாம். இந்நூலில் கன்பூசியசின் கருத்துக்களின் சாராம்சம் அடங்கியுள்ளது. மேலும், சீடர் ஒருவர் அவற்றை விளக்கிப் பல பக்கங்களில் விரித்தெழுதிய விளக்கங்களும் இதனுள் பொதிந்து வைக்கப்பெற்றுள்ளன.

4. சமனிலைக் கோட்பாட்டு நூல்

நான்காவது நூல் சுங் யுங் (Chung Yung) என்ற பெயருடையது. இதனை Doctrine of the Equilibrium என்று ஆங்கில ஆக்கம் செய்துள்ளனர். இதனைச் சமனிலைக் கோட்பாடு என்று தமிழில் வழங்கலாம். இந்நூல் பேராசான் கன்பூசியசின் பேரர் ஒருவரால் இயற்றப்பட்டது. இந்நூலில் மிதத்தன்மை (Temperance) அல்லது பொருள்களின் ஒத்திசைவு (Harmony in all things) பற்றிய போதனைகள் அடங்கியுள்ளன.

மேலே கூறப்பெற்ற நாற்பெரும் பனுவல்களுக்கு அடுத்த படியாக, ஹிசியோ பனுவல் (Hsiao King) எண்ணப்படுகிறது. இதனை, The Classic of Filial Piety என்று ஆங்கில ஆக்கம் செய்துள்ளனர். இதனைத் தமிழில் பெற்றோரன்புப் பனுவல் என்று வழங்கலாம். Filial Piety என்பது பெற்றோருக்குப் பிள்ளைகள் செலுத்த வேண்டிய மரியாதையுடன் கூடிய பக்தியைக் குறிப்பதாகும். இந்நூல்

கன்பூசியசினால் எழுதப்பட்டதாக எண்ணப்பெறினும் அவருக்குப் பின் வந்தோரால் அவர் போதனை மரபினை விளக்குவதாக எழுதப்பட்ட நூல் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். எங்ஙனமாயினும், கன்பூசியத்தினை விளக்கும் பனுவல்களில் பலராலும் மிகுதியாகவும் பரவலாகவும் அறியப்பட்ட சிறந்த பனுவலாக இந்நூல் திகழ்கிறது என்பது சீனவியலாரின் (Chinalogists) கருத்தாகும். மூதாதையர் வழிபாடு (Ancestor Worship) என்ற அடிப்படையிலோ, பிள்ளைகள் தத்தம் பெற்றோர்க்கு அன்பும் மரியாதையும் செலுத்தவேண்டும் என்ற அடிப்படையிலோ ஒரு முழுமையான சமயத்தைக் காண்பதற்கு இந்நூல் முயல்கிறது எனலாம்.

தொன்மைமிக்க சீனச் செவ்வியல் இலக்கியங்களைக் குறித்து வாசகர்களின் கவனத்திற்கு ஒரு செய்தியைச் சொல்லியாக வேண்டும். இப்போதுள்ள சீனச் செவ்வியல் இலக்கியங்கள் அவற்றின் பழைய வடிவத்தைப் பிரதிபலிக்கவில்லை என்பது அறிஞர்களின் கருத்து. கடந்த பல நூற்றாண்டுகளாக அப்பழைய பனுவல்கள் யாவும் படியெடுக்கப்பட்டும், அப்படிகள் மீண்டும் படியெடுக்கப்பட்டும் இப்படி பற்பல தலைமுறைகளாக வழங்கி வருகின்றன. படியெடுக்கும் பணியாளர்கள் தவறின்றிச் சரியாகச் செயல்படும் வேலையாட்கள் (Precise Workmen) அல்லர். சீன எழுத்தில் மிகச் சிறிய மாற்றம் கூட அதன் பொருண்மையினை மாற்றிவிடலாம். இக்காலத்துக் கவனம்மிக்க ஆராய்ச்சியறிஞர், செவ்வியல் சீனப் பனுவல்களில் கூடக்குறைய இருபத்தைந்து விழுக்காடு பல காலமாகப் படியெடுப்போரால் மாற்றம் பெற்றுள்ளன என்று மதிப்பிட்டுள்ளனர். அனைத்துக்கும் தொன்மை வாய்ந்த வரலாற்றுப் பனுவலில் (Shu King) செய்யுளமைப்புக்குரிய தடயங்கள் காணப்படுகின்றன. எனவே, இத்தடயங்கள் இப்பனுவலின் பழைய வடிவத்தில் சில பகுதிகளோ அல்லது முழுவதுமோ பாடல்களாக இருந்திருத்தல் வேண்டும் என்ற கருதுகோளை

உறுதிப்படுத்துகின்றன. ஆயினும், இன்றைக்கு வரலாற்றுப் பனுவல் முழுதும் உரைநடை வடிவத்திலேயே உள்ளது.[35]

படிப்பவர் உள்ளங்களைக் கவரக் கூடிய சீனச் செவ்வியல் இலக்கியங்களைப் பெற்றிருக்கிறோம். ஆயினும் அப்பனுவல்கள் தோன்றிய காலத்துத் தொன்மை வடிவங்களைப் பேணிய நிலையில் இன்று கிடைக்கவில்லை. அறிவியல் சார்ந்த சரியான பதிவுகளாக அவை அமையவில்லை. பற்பல தலைமுறைகளாக மரியாதையும் ஆர்வமும் மிக்க மாணவர்களால் ஓதப்பட்டுப் பண்டைய மதிநுட்பமும் (Wisdom) பழைய நாள்களின் காட்சிகளும் இணைந்து வந்துள்ளன. இவற்றின் ஊடே, உண்மையான பேராசான் கன்பூசியசின் ஆளுமையினை மீண்டும் காண்பதற்கு மேற்புலத்துப் புலமை ஈடுபட்டுள்ளது.

மேற்கோள் குறிப்புக்கள்

1. Liu Wu-Chi, ***An Introduction To Chinese Literature,*** pp.9-10.
2. Ibid., pp.10-11.
3. Charles F. Horne, ***The Sacred Books & Early Literatures of The East,*** vol.XI, Mittal Publications, Delhi, Reprint, 1987, p.5.
4. James Legge, ***The Sacred Books of China - The Texts of Confucianism***, vol.3, part 1, Motilal Banarisdass, Delhi, Reprint,
1970, p.xv.
5. Ibid.
6. ***An Introduction to Chinese Literature,*** pp.22-23.
7. Ibid, p.11.
8. Ibid, p.12.
9. Ibid, pp.12-13.
10. Ibid, p.13.
11. ***The Cambridge History of Chinese LIterature,***Vol.I, p.29.

12. Ibid, p.30.
13. ***An Introduction to Chinese LIterature***, pp.13-14.
14. Ibid, p.14.
15. Ibid, p.15.
16. Ibid, p.16.
17. Ibid, p.17.
18. Ibid, pp.17-18.
19. Ibid, p.18.
20. Ibid, p.18.
21. Ibid, p.19.
22. Ibid
23. Ibid
24. Ibid, p.20.
25. Ibid
26. Ibid
27. i. இலையூர்கிழார், பிரிவாற்றாமை, அரிமா நோக்கு, 4:2, சூலை 2010, சென்னை, ப.63,
ii. William Mcnaughton, ***Chinese Literature - An Anthology - From the Earliest Times To the Present Day***, Charles Tuttle Company, Japan, 1974, p.53.
28. i. Ibid, p.54.
ii. இலையூர்கிழார், சீனத்துப்பூக்கள், அரிமா நோக்கு, 4:3, அக்டோபர் 2010, சென்னை, ப.54.
29. ***An Introduction To Chinese Literature,*** pp.21-22.
30. ***The Sacred Books of China - The Texts of Confucianism,*** Vol.3, part 1, p.xvi.
31. ***The Sacred Books & Early Literatures of the East***, Vol.xi, p.6.
32. ***The Sacred Books of China - The Texts of Confucianism,*** Vol.3, part.1, p.xviii.
33. Ibid, p.xix.
34. ***The Sacred Books & Early Literatures of the East***, Vol.xi, pp.249-269.
35. Ibid.

4. கன்பூசியசின் வரலாற்றுக் குறிப்புக்கள்
(கி.மு.551- கி.மு.479)

கன்பூசியசுக்குச் சுமார் 300 ஆண்டுகட்குப் பின் வாழ்ந்த ஷெமா சியென் (Szema Ch'ien) என்பவர் சிகி (Shiki) என்ற நூலில் கன்பூசியசின் வரலாற்றினை எழுதியுள்ளார். இதுவே கன்பூசியசின் வரலாறு பற்றிய தொன்மை மிக்க ஆவணம் ஆகும். இதனை எழுதிய ஷெமா சியென் சீன வரலாற்றாசிரியர்க்கு எல்லாம் தந்தை என்றும் சிறந்த உரைநடையாளர் என்றும் மதிக்கப்பெறுபவர். கன்பூசியசு பிறந்த ஊர்க்கும் மற்றும் அவர் வாழ்வுடன் தொடர்புடைய இடங்களுக்கும் சென்று அங்கு வாழ்ந்த முதியோரிடம் செய்திகளைத் திரட்டி இந்நூலினை எழுதியுள்ளார். இந்த நூலின் அடிப்படையில் கன்பூசியசின் வாழ்வியலில் இன்றியமையாத நிகழ்ச்சிகள் சிலவற்றை இங்குத் தொகுத்து நோக்குவோம்.

1. வழிமரபு, குழந்தைப் பருவம், இளமை (கி.மு.551-523)

லூ (Lu) என்னும் மாநிலத்தில் சங்பிங் (Ch'angping) என்ற மாவட்டத்தில் செள (Tsou) என்ற நகரில் கன்பூசியசு பிறந்தார். கன்பூசியசுக்கு நான்கு தலைமுறை முற்பட்ட மூதாதை குங் ஃபங்ஷு (K'ung Fangshu) என்பாராவர். இவர் சுங் அரசனின் ஒன்பதாம் தலைமுறைக்குரிய மூதாதையும் ஆவர். போசிய (Pohsia) என்பவரின் தந்தை ஃபங்ஷு. ஷுலியங் ஹோ (Shuliang Ho) என்பவரின் தந்தை போசிய (Pohsia). ஷுலியங் ஹோ என்பவர் யென் (yen) குடும்பத்தைச் சார்ந்த ஒரு பெண்ணுடன் மணம் செய்து கொள்ளாமல் வைத்துக் கொண்ட தொடர்பினால் பிறந்தவரே கன்பூசியசு ஆவர். அந்தப் பெண் வரம் வேண்டிப் பெற்ற புதல்வராகக்

கன்பூசியசு கூறப்படுகிறார். அவர் குடிப்பெயர் குங் (K'ung) என்பதாம்.

கன்பூசியசு பிறந்த சில நாள்களில் தந்தை இறந்துவிட்டார். பின் தாயினையும் இழந்தார். ஃபங்ஷன் (Fangshan) என்ற இடத்தில் இருவரையும் புதைத்துவிட்டார்.

லூ (Lu)வின் பெருமகன் (Baron) சி (Chi) ஒரு முறை தன் நகரத்து அறிஞர் பெருமக்களுக்குச் சிறப்பு விருந்தளித்தார். தாயினை இழந்து துயருற்ற நிலையிலும் கன்பூசியசு அந்த விருந்தில் கலந்து கொள்ளுதற்குச் சென்றார். யங் ஹோ (Yang Ho) என்னும் ஊழல் அதிகாரி ஒருவன் கன்பூசியசைக் கண்டபடி வைது, "பெருமகன் (Baron) அறிஞர்களுக்கு மட்டுமே கொடுக்கும் விருந்தில் உன்னை அழைப்பது பற்றி எண்ணிக் கொண்டிருக்கவில்லை" எனச் சினந்து பேசினான். அதனால் அவ்விடத்தைவிட்டுக் கன்பூசியசு அகன்றார்.[1]

கன்பூசியசுக்குப் பதினேழு வயது இருக்கும் பொழுது பெருமகன் லீ மெங் (Baron Li Meng) நோய்வாய்ப்பட்டார். தன்னுயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த பொழுது தன்மகன் பெருமகன் யி மெங்கை (Baron Yi Meng) அழைத்துப் பின் வரும் அறிவுரையினைக் கூறினார்:

"மகனே! குங் சியு (K'ung Ch'iu - கன்பூசியசின் பெயர்) மரியாதைக்குரிய பெருமக்களின் வழித்தோன்றல். அவர்தம் மூதாதையர் இல்லம் சுங் மாநிலம் (Country of Sung) பகைவரின் படையெடுப்பின் பொழுது அழிக்கப்பட்டது. பின்னரே, அவர்கள் லூ மாநிலத்திற்கு (Country of Lu) குடிபெயர்ந்தனர். சுங் மாநிலத்தின் கோமகனின் மூத்த மகன் ஃபூ ஃபூ ஹொ (Fu Fu Ho) கன்பூசியசின் பெருமைமிகு மூதாதை. ஆனாலும், அவர் தன் இளவல் லீ (Li)க்காகத் தன் அரியாசனத்தை விட்டுக் கொடுத்தவர். பின்வரும் தலைமுறையில் தை (Tai), வு (Wu), சுவான் (Hsuan) என்போர் சுங்கின் கோமகன்களாக விளங்கினர்.

அரச மரபில் வந்தவர் எனினும் கன்பூசியசு தன்னடக்கம் கொண்டவர். அதன் காரணமாகத் தொடர்ச்சியாக மூன்று பதவி ஏற்றங்களைப் பெற்றவர். அதனால் அவர் இல்லத்தில் பின்வரும் எழுத்துப் பொறிப்பு இடம்பெற்றது:

"முதல் பதவி ஏற்றத்துடன், என் தலையைத் தாழ்த்தினேன்; இரண்டாம் பதவி ஏற்றத்துடன், என் கழுத்தினைத் தாழ்த்தினேன்; மூன்றாம் பதவி ஏற்றத்துடன் என் முதுகினை வளைத்தேன். நேராக நடந்து சென்றேன். என்னை இகழ்தற்கு ஒருவர்க்கும் துணிவில்லை. என் பசி தணிப்பதற்குத் தேவையுள்ள அரிசி உணவும் கூழும் என்னிடம் உள்ளன."

எனவே, கன்பூசியசின் தன்னடக்கம் எத்தகையது என்பது தெளிவாகிறது. தாங்கள் அதிகாரத்தில் இல்லை என்றாலும், தத்துவ மேதைகள் பெரியோர்களின் வீடுகளிலிருந்து வெளிப்படுவார்கள் என்பதை நான் கேட்டிருக்கிறேன். கன்பூசியசு அவ்வாறு வெளிவந்த தத்துவமேதை. ஆண்டில் இளையவராயினும், வரலாற்றுக் கல்வியைப் பெரிதும் விரும்புபவர். என் இறப்பிற்குப் பின் அவரிடம் நீ கட்டாயம் செல்லவேண்டும்; அவர் வழியினைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்."

பெருமகன் லீ மெங்கின் மறைவுக்குப் பின், அவர் மகன் யீ (Baron Yi), அவர் இளவல் நன்குங்கு சிங்சூ (Nankung Chingshu) என்பாருடன் இணைந்து கன்பூசியசிடம் கல்வி பயிலச் சென்றனர்.

கன்பூசியசு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். ஆயினும் அவர் வளர்ச்சியுற்றதும் பெருமகன் சி (Baron Chi) என்பாரின் வீட்டுக் கூலக் களஞ்சியம் அவர் பொறுப்பில் விடப்பட்டது. நேர்மையாகத் தன் பணியைத் தொடர்ந்தார். மேலும் அப்பெருமகனுக்குரிய ஆநிரை, ஆட்டு மந்தைகளைக் கண்காணிக்கும் பொறுப்பும் அவர்க்கு வாய்த்தது. விரைவில் அவை ஒன்று பலவாயின. பின்னர்,

அப்பெருமகன் பொதுப்பணித்துறை அமைச்சராகக் கன்பூசியசை நியமித்தார். ஆயினும் அப்பொறுப்பில் அவர் நீடிக்கவில்லை. தன் தாய் மாநிலம் லூ (Lu)வை விட்டுப் புறப்பட்டார். யாது காரணத்தினாலோ பெருமகன் சியின் மாநிலத்தை விட்டு மரியாதையற்ற முறையில் வெளியேற்றப்பட்டார். சுங் (Sung), வெய் (Wei)யையும் விட்டு விரட்டப்பட்டார். பல துன்பங்களுக்கு ஆளானார். சென் (Ch'en) சை (Ts'ai) ஆகியவற்றுக்கு இடையேயுள்ள சுற்றுப்புறங்களில் உடல் அளவிலும் அச்சத்துக்கு ஆளானார். பல்வேறு இடங்களுக்கும் அலைந்து திரிந்தபின் மீண்டும் தன் தாய் மாநிலம் ஆகிய லூ (Lu) மாநிலத்திற்கே திரும்பினார்.

கன்பூசியசு 9 அடி 6 அங்குலம் உயரம் உடையவர் (-பழங்கால அளவின் அலகு மிகவும் குறைந்தது). இவரைப் போலவே கிங் வென் (King Wen) என்பார் 10 அடி உயரம் உடையவர் எனப் புகழப்பட்டார். மக்கள் எல்லோரும் கன்பூசியசைப் பார்த்து உயரமான மனிதன் என வியந்து நின்றனர். லூ அரசு (Government of Lu) இணக்க வணக்கமாக இருந்ததால், மீண்டும் லூ மாநிலத்திற்கே திரும்பி வந்தார். அவர் சீடர் நன்குங் சிங்ஷு (Nankung Chingshu) லூ வின் பெருமகனை அணுகி, பேரரசரின் தலைநகர் சோ (Chou)வுக்குப் பயணம் செல்வதற்கு இசைவினை வேண்டினார். அதனை ஏற்ற பெருமகன், ஊர்தியையும் அதனை இழுத்துச் செல்லும் இரு குதிரைகளையும் பணிமகன் ஒருவனையும் வழங்கினார். ஆசிரியரும் மாணவருமாக இணைந்து சோ (Chou) சென்றனர். அங்கு மக்களிடையே நிலவும் சடங்குகள், ஒழுகலாறுகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை ஆராய முற்பட்டனர். லாவோட்சே (Laotse) என்னும் சான்றோரைக் கண்டனர். (இவரை இலவோசியசு (Laocius) என்றும் வழங்குவர்.) கன்பூசியசு அவ்விடத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன் லாவோட்சே பின்வரும் அறிவுரையினைக் கூறி வழியனுப்பி வைத்தார்.

"செல்வர்கள், இங்கு வந்தவர்களுக்குச் செல்வத்தைப் பரிசளிக்கிறார்கள் என்றும், அன்புடையோர் அவர்களுக்கு அறிவுரை வழங்குகிறார்கள் என்றும் நான் கேள்விப்பட்டு இருக்கிறேன். யான் உமக்குச் சிறு அறிவுரையை அன்பளிப்பாக வழங்கப்போகிறேன்:

அறிவொளியும் சிந்தனையும் மிக்க மனிதனின் உயிருக்கு அடிக்கடி இடர் ஏற்படுகிறது; ஏன் எனில், அவன் மக்களை விமரிசிக்கிறான்.

வாதத்திறமையும், ஆழ்ந்தகன்ற கல்வியறிவும் கொண்ட மனிதன் தனக்குத்தானே இடர் இழைத்துக் கொள்கிறான்; ஏன் எனில், மக்களின் குறைபாடுகளையும் வழுக்களையும் வெளிப்படுத்த விரும்புகிறான். உம்மை ஒரு குடிமகனாகவோ அரசவையின் அமைச்சராகவோ மட்டும் நினைத்துக் கொள்ளற்க."

எனவே, இளைய ஞானியாகிய கன்பூசியசுக்கும் அறிவுரை கூறுவதற்கு முதிர்ச்சியும் அனுபவமும் உடைய இலவோசியசு (Laotse அல்லது Laocius) போன்றோரும் கி.மு.6ஆம் நூற்றாண்டில் சீன நாட்டில் வாழ்ந்துள்ளனர் என்பது எண்ணிப் பார்த்தற்கு உரியது. இவர் உருவாக்கியதுதான் தாவு மார்க்கம் ஆகும்.

2. முப்பதுக்கும் ஐம்பதுக்கும் இடையே (கி.மு.522-503)

சோ (Chou) மாநிலத்தை விடுத்துக் கன்பூசியசு தன் சொந்த மாநிலம் ஆன லூ (Lu)வுக்குத் திரும்பினார். அவர் திரும்பியதும் அவரிடம் பயிலுவதற்காக மாணவர் பற்பலர் வந்தனர். அப்பொழுது, சின் (Chin) மாநிலத்தின் கோமகன் பிங் (Duke P'ing of Chin) நெறிகெட்டவனாயிருந்தான். அவன் அமைச்சர்கள் அறுவரும் அதிகாரத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு கிழக்குப் பகுதியிலுள்ள நாட்டினைப் பிடிப்பதற்குப் படையெடுத்தனர். சு மாநில மன்னன் லிங் (King Ling of Ch'u) மிகப் பெரிய படை பெற்றிருந்தான். எனவே, சீனம் முழுதும் அவ்வரசன் ஆதிக்கம்

செலுத்தினான். சி (Ch'i) ஒரு பெரு மாநிலம். லூ (Lu) மாநிலம் சிறியது. வலிமை குன்றிய பகுதி. கன்பூசியசுக்கு வயது முப்பது இருக்கும் பொழுது சி மாநிலத்தின் கோமகன் சிங் என்பான் (Duke Ching of Ch'i) தன் அமைச்சர் யென் யிங்குடன் (Yen Ying) லூ (Lu)வைப் பார்வையிட வந்தான். கன்பூசியசைக் கண்டான். பின்வரும் கேள்வியைக் கேட்டான்.[2]

"சின் கோமகன் மூ (Duke Mu of Ch'in) என்பவன், தன்னாடு சிறியதாக, சீனச் சாம்ராச்சியத்தின் ஒரு கோடியில் இருந்தும்கூட, ஏனைய மாநிலங்களின்மேல் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகிறான்" என்று கேட்டான். கன்பூசியசு அளித்த விடை வருமாறு:

> "சின் (Ch'in) சிறிதாயினும், அதன் ஆசை மிகுதி. அது ஒரு கோடியிலிருப்பினும், நீதி நெறிகளுடன் பொருந்தியதாகவே அதன் செயற்பாடுகள் இருந்தன. அதன் கோமகன், போலி ஹிசி (Poli Hsi) என்பவனைச் சிறை நீக்கம் செய்து பிரபு நிலைக்கு உயர்த்தினான். பின்னர் ஆட்சிப் பொறுப்பிலும் இடம் அளித்தான். இங்ஙனம் தன் சாதுரியத்தினால் சின்னின் மன்னன் ஆட்சிக்கு வந்தான்."

கன்பூசியசின் விடையினைக் கேட்டுச் சியின் கோமகன் (Duke of Ch'i) மகிழ்ச்சியுற்றான்.

பின்னர் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தால் கன்பூசியசு லூவை விட்டு நீங்கி சி (Ch'i) சென்றார். அங்கு ஒரு கோமகனிடம் செயலராகப் (Secretary) பணிபுரிந்தார். அங்கு இசை வல்லுநரிடம் இசை குறித்துக் கலந்தாய்வு செய்தார். சி (Ch'i) மாநிலத்து மக்கள் அவரைப் பெரிதும் பாராட்டினர். அதன் கோமகன், கன்பூசியசிடம் 'ஆட்சி (Government) எவ்வாறு இருத்தல் வேண்டும்' என்று வினவினான். கன்பூசியசு கூறிய விடை வருமாறு:

"அரசன் அரசனாக இருக்க வேண்டும். அமைச்சர்கள் அமைச்சர்களாக இருக்க வேண்டும். பெற்றோர் பெற்றோராக இருக்கவேண்டும். பிள்ளைகள் பிள்ளைகளாக இருக்க வேண்டும்".

இந்த விடையினைச் செவிமடுத்த கோமகன் பாராட்டினான். மேலும் பின்வருமாறு கூறினான்:

"அரசன் அரசனாக இல்லாவிடின், அமைச்சர்களும் அமைச்சர்களாக இல்லாவிடின், பெற்றோரும் பெற்றோராக இல்லாவிடின், பிள்ளைகளும் பிள்ளைகளாக இல்லாவிடின், என் நாட்டில் அளவற்ற கூலங்கள் இருப்பினும், உண்ணுவதற்கு ஏதேனும் பெற இயலுமா?"

கன்பூசியசின் சொற்களைக் கோமகன் பெரிதும் மதித்தவன். பின்னொரு நாள் மீண்டும் நல்லாட்சி எது என்ற கேள்வியை அவரிடம் கேட்டான். அவர் வழங்கிய விடை இதுவே:

"அரசாங்கச் செலவினை மட்டுப்படுத்திக் கொள்ளும் அரசுதான் நல்லரசு" *(Good Government consists in limiting state expenditures)*

இந்தக் கன்பூசியக் கருத்தினைத் திருவள்ளுவரிடமும் *(கி.மு.50-கி.பி.50)* காண்கிறோம்:

ஆகா(று) அளவிட்டி தாயினும் கேடில்லை
போகா(று) அகலாக் கடை. (திருக்குறள், 478)

சான்றோர் உள்ளங்களில் மலரும் கருத்து ஒன்றேபோல் இருக்கும் என்பதற்கு இந்த ஒப்புமை சான்றாக அமைகிறது.

கன்பூசியசின் கருத்தாழம் மிக்க விடையினைக் கேட்டின்புற்ற கோமகன் அவருக்கு முற்றூட்டு (பெருநிலம்) வழங்க முற்பட்டான். ஆயினும் அவனுடைய அமைச்சன், கன்பூசிய நெறியாளர்கள் வாயாடித்தனமும் தற்பெருமையும்

கருவமும் கொண்டவர்கள் என்றும், சடங்கு கலாச்சாரம் என்பனவற்றைப் பெரிதும் பேசி மக்களை வறியவராக்குபவர்கள் என்றும் பற்பல காரணங்களைச் சொல்லிக் கன்பூசியசை அலட்சியம் செய்தான். பின்னர், பிரபுக்கள் பலரும் தனக்கு எதிராகக் கிளம்பியதைக் கண்ட கன்பூசியசு அக்கோமகனை விடுத்துத் தன் தாயகம் லூ (Lu)வுக்குத் திரும்பினார்.

கன்பூசியசுக்கு வயது *42* (கி.மு.*511*). அவர் சிறந்த வரலாற்றாசிரியராகவும் தொல்லியல் அறிஞராகவும் மதிக்கப்பட்டார். லூ (Lu)வின் கோமகன் ஹுவன் (Huan), ஒரு நகரின் சுவரினை இடித்து அப்புறப்படுத்திய பொழுது கிடைத்த விலங்குகளின் எலும்புகள் பற்றிக் கன்பூசியசிடம் கேட்டான். அவரும் தக்க விடையினை வழங்கினார்.[3]

லூ (Lu) மாநிலம் பிரபுக்களின் கையில் சிக்கிக் கொண்டது. அரசியல் குழப்பங்களுண்டாயின. கன்பூசியசு ஆட்சி அலுவலில் தலையிடாமல் செய்யுள், வரலாறு, சடங்கு, இசை நூல்கள் (Books of Poetry, and History and Ritual and Music) நன்கு ஆராய்ந்து பதிப்புரு வழங்கும் பணியில் ஈடுபட்டார். அந்நாள்களில், சீனத்தின் பல பகுதிகளிலிருந்தும் அவரிடம் பயிலுவதற்கு மாணவர்கள் திரண்டு வந்தனர்.[4]

3. பேராதிக்கக் காலம் (கி.மு.502-496)

லூவின் கோமகன் திங் (Duke Ting of Lu) காலத்தில் நிலப்பிரபுக்கள் கலவரம் செய்தனர். அவனுடைய வைப்பாட்டிகளின் பிள்ளைகளை வாரிசுகளாக்க முயன்றனர். அப்போது கன்பூசியசுக்கு வயது *50*. ஆயினும், திங் கோமகன் அவரை சுங்து (Chungtu) நகரின் குற்றவியல் நீதியரசராக்கினான். கன்பூசியசு பொறுப்பேற்றுக்கொண்ட ஓராண்டுக்குள் மற்ற நகரங்களுக்கெல்லாம் அதனை ஒரு மாதிரி நகரமாக (Model City) மாற்றிக் காட்டினார். பின்னர் அப்பதவியிலிருந்து உயர்வு பெற்றுப் பொதுப்பணித் துறையின் செயலராகவும், பின், நீதித்துறையின்

பெருமைமிகு செயலராகவும் பணிபுரிந்து சிறப்பு நிலையினைப் பெற்றார்.

திங்கு கோமகன் சி (கோமகனை (Duke of Ch'i)ச் சந்திக்கச் சென்ற காலத்தில் லூ (Lu) பெருநிலத்தின் முதலமைச்சர் பொறுப்பினையும் கன்பூசியசு பெற்றிருந்தார். பயன்மிக்க அரசியல் அறிவுரைகளைத் தன் கோமகனுக்கு அவ்வப்பொழுது வழங்கி வந்தார். கன்பூசியசு ஒரு முறை கவிதை வடிவில் கூறிய அறிவுரை குறிப்பிடத்தக்கது. அதன் சாரத்தைத் தருகிறோம்.[5]

"பெண்ணின் சொல்லில் விழிப்பாயிரு:
விரைந்தோ தாழ்ந்தோ அது கொட்டிவிடும்!
பெண்ணின் வருகையில் விழிப்பாயிரு:
விரைந்தோ தாழ்ந்தோ வருகை புரிவாள்!
ஆகா ஆகா! ஓகோ ஓகோ!
போய்க்கொண் டிருக்கிறேன் ஓடி விடவே."

இவ்வாறு பாடிவிட்டுப் பிரபுக்களை விடுத்து வெளியேறினார்.

4. ஐந்தாண்டுகள் சுற்றித்திரிதல் (கி.மு.496-492)

லூ மாநிலத்தின் மேற்குப் பக்கத்தில் உள்ள வெய் (Wei) மாநிலத்திற்குக் கன்பூசியசு சென்றார். வெய்யின் கோமகன் லிங் (Duke Ling of Wei) லூ அரசிடம் கன்பூசியசு பெற்ற மாத ஊதியம் பற்றிக் கேட்டார். அறுபதாயிரம் புஷல் (=பெரிய மரக்கால்) நெல்லினைப் பெற்றார் கன்பூசியசு என்பதை அறிந்துகொண்ட வெய்யின் கோமகனும் அதே அளவு ஊதியத்தை அவருக்கு வழங்கினார். அங்குத் தங்கியிருந்த பத்துத் திங்களில் அவரைப் பற்றிச் சிலர் கோமகனிடம் குறை பேசினர். அக்கோமகன், குங்சுன் யுசியா (Kungsun Yuchia) என்பவனைப் படைவீரனுக்குரிய சீருடையில் கன்பூசியசு தங்கியிருந்த அறைக்கு உள்ளேயும் வெளியேயும் நடை பயிலும்படி

கட்டளையிட்டான். குறிப்பறிந்து கொண்ட கன்பூசியசு, வெய் மாநிலத்தை விடுத்து வெளியேறினார்.

பின்னர், சென் (Ch'en) மாநிலத்திற்குக் கன்பூசியசு சென்றார். குவாங் (K'uang) என்னும் பெருநகரின் ஊடே அவர் கடந்து செல்லும் பொழுது, தன் ஊர்தியை இயக்கும் யென்கே (Yenk'eh) என்பவன், அந்நகரச் சுவரில் உள்ள ஒருவெடிப்பினைச் சுட்டிக் காட்டி "சென்ற முறை அந்த வெடிப்பின் வழியே தான் நகருக்குள் சென்றேன்" என்று கூறினான். இவன் பேச்சினைக் கேட்ட நகர மக்கள் லூ வின் பெருமகன் யங் ஹு (Yang Hu of Lu) தம் நகருக்குள் வருவதாக எண்ணினர். குவாங் நகர மக்களை முன்பு ஒருமுறை அக்கோமகன் கொடுமைப்படுத்தியவன். அக்கோமகன் போலவே தோன்றிய கன்பூசியசை அந்நகர மக்கள் சூழ்ந்து கொண்டனர்; ஐந்து நாள் சிறை வைத்தனர். அங்கு, தன் அன்புக்குரிய சீடன் யென் யுயென் (Yen Yuen) வந்ததும், அவனைப் பார்த்து, "நீ கொல்லப்பட்டாய் என்று எண்ணினேன்" என்று கன்பூசியசு கூறினார். "நீங்கள் உயிரோடு உள்ள வரை என்னைக் கொல்லுவதற்குரிய துணிச்சல் யாருக்கும் இல்லை" என்று சீடன் கூறினான். ஆயினும், சூழ்நிலை அச்சுறுத்துவதாகவே இருந்தது. அவர்தம் சீடர்கள் அஞ்சினர். முடிவாக, தன் சீடருள் ஒருவர் வெய் அரசில் பணிபுரிதல் வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் கன்பூசியசு தன் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டார்.

பின்னர், பு நகரம் (P'u) சென்றார். அங்கு ஒரு திங்கள் தங்கியிருந்தார். மீண்டும் வெய் (Wei) பகுதிக்கே திரும்பினார். அங்கு சுபொயு (Chu Poyu) என்னும் சான்றோரின் இல்லத்தின் முன் நின்றார். அவர் கன்பூசியசால் நன்கு மதிக்கப் பெற்றவர். வெய்யின் பேரரசி நன்சிய (The Queen Nancia of Wei) கன்பூசியசுக்குப் பின்வரும் செய்தியை அனுப்பினாள்:

"அயல்நாடுகளிலிருந்து வரும் சான்றோர் எங்கள் நாட்டைப் பார்க்க வருவதன் வாயிலாக எங்களைப் பெருமைப்படுத்துகிறார்கள்; எங்கள் அரசரின் நண்பர்களாக இருப்பதையே விரும்புகிறார்கள். அவர்கள் என்னையும் காண்பார்கள். உங்கள் கூட்டுறவினால் பெறும் இன்பம் நான் பெறக் கூடுமோ?"

இந்தச் செய்தியைப் படித்ததும் கன்பூசியசு முதலில் மறுத்துரைக்க முயன்றார். ஆனாலும், அதனின்றும் தன்னை விடுவித்துக்கொள்ள முடியவில்லை.[6]

விலையுயர்ந்த துணித் திரைக்குப் பின்னிருந்து (Curtain of linen) பேரரசி கன்பூசியசைப் பார்த்தாள். கன்பூசியசு வடக்கு நோக்கி நெற்றியால் தரையினைத் தொட்டு மரியாதை செலுத்தினார். திரைக்குப் பின்னிருந்தபடியே இரட்டை மரியாதையினைப் பேரரசி புலப்படுத்தினாள். பச்சைக் கற்கள் பதித்த அவளுடைய ஆபரணங்கள் உராசி ஒலித்தன. இருவரின் உரையாடலுக்குப் பின்னர், கன்பூசியசு,

"அவளைப் பார்ப்பதற்கு நான் எண்ணவில்லை. உரையாடலின் போது, பூரண சீலத்துடன் நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்."

என்று கூறினார். பேரரசி நன்சியா ஒழுக்கக் குறைபாடு உடையவள் என்பதால் செலு (Tselu) எனும் நகர மாந்தர் பெரிதும் வெறுப்புற்றார். அவரை அமைதிப்படுத்தும் பொருட்டு, 'யான் ஏதேனும் பிழை செய்திருப்பேனாயின், கடவுள் என்னைத் தண்டிக்கட்டும்' என்று இருமுறை சூளுரைத்தார் கன்பூசியசு.

வெய் (Wei) என்னும் நகரில் ஒரு திங்களுக்குமேல் கன்பூசியசு தங்கியிருந்தார். ஒருநாள் கோமகன் தன் பேரரசியுடன் அரச ஊர்தியில் உலவிக் கொண்டிருந்தார். அந்த ஊர்தியின் ஓட்டுநர் யுங் சு (Yung Chu) என்ற

அலியாவன். இரண்டாவது ஓட்டுநரின் இடத்தில் கன்பூசியசு அமர்ந்திருந்தார் (-இரண்டாவது ஊர்தியில் வந்தார் என்பது ஒரு மொழிபெயர்ப்பு). மக்களின் கவனத்தை ஈர்த்தபடி அவர்கள் வீதிகளை வலம் வந்தனர். "அழகிய மங்கையரால் ஈர்க்கப்படும் மக்களைத் தவிர அறத்தொடு பொருந்திய அறிஞர்களை நோக்கும் மாந்தரை இதுவரை யான் பார்த்ததில்லை" என்று கன்பூசியசு குறிப்பிட்டார். இன்றைய நிலையும் இத்தகையதே! மக்களின் போக்கை ஒரு அவமரியாதைச் செயலாகவே எண்ணிய கன்பூசியசு வெய் (Wei) நகரத்தை விட்டு, சாவோ (Ts'ao) நகரத்திற்குப் புறப்பட்டார்.

பின்னர், சாவோ நகரையும் விடுத்து, சுங் (Sung) நகரம் சென்றார். தன் சீடர்களுடன் ஒரு பெரிய மரத்தின் அடியில் அமர்ந்து சீன மக்களின் சடங்குப் பழக்கங்களைப் பற்றி ஆராய்ந்தார். ஹுவான் தூயை (Huan Tuei) என்னும் படை அதிகாரி கன்பூசியசைக் கொல்லக் கருதி, அந்தப் பெரிய மரத்தினை வேரொடு பெயர்த்தார். 'நீதியைப் பரப்பும் பணியைக் கடவுள் எனக்கு வழங்கியிருக்கும் பொழுதுஇவன் நம்மை என்ன செய்ய இயலும்?' என்று கூறி அவ்விடத்தைவிட்டு அகன்றார்.

செங் (Cheng) என்ற நகரினைக் கன்பூசியசு வந்து சேர்ந்தார். சீடர்கள் வழிமாறிச் சென்று விட்டனர். அந்நகரின் கீழை வாயிலில் தனியராகக் கன்பூசியசு நின்ற பொழுது, உள்ளூர் மக்கள் அவரைப் பற்றி, சேகுங் (Tsekung) என்பவரிடம் பின்வருமாறு பேசினர்:

"நம் ஊர் கீழை வாயிலில் ஒரு மனிதன் நிற்கிறான். பேரரசர் யாவோ (Emperor Yao)வின் நெற்றியும் அவன் நெற்றியும் ஒத்துள்ளன. பழைய காலத்து அமைச்சர் கயோயயோ (Kaoyao) என்பவரின் கழுத்தும் அவன் கழுத்தும் ஒத்துள்ளன. சேசன் (Tsech'an) தோள்களும் அவன் தோள்களும் ஒத்துள்ளன. ஆனாலும், அவன்

இடுப்பிற்குக்கீழே பேரரசர் யூ (Emperor Yu)வைவிட மூன்று அங்குலம் குறைந்து காணப்படுகிறான். வீடற்ற, திரியும் நாயைப்போல் அவன் நம்பிக்கை யிழந்து காணப்படுகிறான்."

இவ்வுரையினைக் கேட்ட சேகுங் (Tsekung) அப்படியே கன்பூசியசிடம் தெரிவித்தான். அதற்கு விடை பகரும் பாங்கில்,

"என் உருவத்தைப் பற்றிய வருணனைகளைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனாலும், 'வீடற்ற, திரியும் நாயை ஒத்தவன்' என அவன் கூறியது முற்றிலும் சரி, முற்றிலும் சரி!"

எனக் கன்பூசியசு சிரித்துக் கொண்டே சொன்னார்.

பின்னர், செங் (Cheng) நகரினை விடுத்து, சென் (Ch'en) நகரம் சென்றார். அங்கு, ஒரு குற்றவியல் நீதியரசரின் இல்லத்தில் ஓராண்டிற்குமேல் தங்கியிருந்தார். அண்டை நகரங்களின் தலைவர்களுக்கிடையே போர் நடந்தது. தன்னுடலை ஊடுருவிய அம்புடன் ஒரு பருந்து கன்பூசியசு தங்கியிருக்கும் சென் கோமகன் (Duke of Ch'en) அரண்மனையில் வந்திறங்கியது; உடன் இறந்தது. அந்த அம்பு பற்றிஅறிந்து கொள்ளுவதற்குக் கன்பூசியசிடம் கோமகன் தூதுவன் ஒருவனை அனுப்பினான்.

"இந்தப் பருந்து மிக மிகச் சேய்மையிலிருந்து வந்திருக்க வேண்டும். ஷுஷென் (Shushen) பகுதிக்குரிய காட்டுமிராண்டிகளால் இந்த அம்பு பயன்படுத்தப்பட்டது. பேரரசர் வூ (Emperor Wu) ஷங்கை (Shang) வென்றதும் காட்டு மிராண்டிகள் வாழும் பகுதிகளில் சாலைகள் அமைத்தான். தங்கள் மரியாதைக்கு அடையாளமாக ஆண்டுதோறும் அவர்கள் கப்பம் செலுத்தவேண்டும் என்றும் ஆணை இட்டான். எனவே, அவர்கள் விட்ட அம்புகளில் ஒன்றால் ஊடுருவப்பட்ட பருந்து அரண்மனையில் வீழ்ந்தது.

இத்தகைய அம்புகளைப் பேரரசர்தன் மூத்த (மகளுக்கு) இளவரசிக்குத் தன் அன்பின் அடையாளமாகக் கொடுத்தார். அவள் கோமகன் யூஹூ (Yuhu)வை மணந்தாள். அவனே சென் (Ch'en)னின் முதல் கோமகனாக ஆண்டான்.

அன்பின் அடையாளமாகப் பச்சைக் கற்களைப் பேரரசனின் உறவினர்க்குப் பரிசளிப்பது வழக்கம். இவ்வாறே தூரத்து நாடுகளிலிருந்தும் கப்பப் பொருள்களைப் பேரரசரின் சுற்றத்தார்க்குப் பரிசு தருதல் மரபு. இந்த வகையில்தான், ஷூஷென் (Shushen) அம்புகள் சென் (Ch'en) அரண்மனைக்கு வந்தன. பழம் பொருள் ஆவணக் காப்பகத்தில் இவற்றைக் காணலாம்."

என்று கன்பூசியசு விளக்கம் தந்தார். அவர் கூறியது போலவே அத்தகைய அம்புகளை ஆவணக் காப்பகத்தில் கண்டு வியந்தனர்.

சென் (Ch'en) நகரத்தில் மூன்றாண்டுகள் கன்பூசியசு தங்கியிருந்தார். உள்நாட்டுக் கலவரத்தால் அதனை விடுத்து பூ (P'u) நகரம் சென்றார். அந்நகர மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். குங்லியங் (Kungliang) என்னும் தீரம்மிக்க சீடன் ஐந்து ஊர்திகளில் (மற்றவர்களுடன்) கன்பூசியசைப் பின் தொடர்ந்து வந்தான். அங்கு நடந்த சண்டையில் அவன் அருஞ்சமர் புரிந்தான். அவனை அஞ்சிய பூ நகர மக்கள் கன்பூசியசை விடுதலை செய்தனர். பின், அவர் வெய் (Wei) நகரம் சென்றார். அந்நகரக் கோமகன் அவரை ஊரின் முன்புறம் சென்று வரவேற்றான்.

சியங்சே (Hsiangtse) என்னும் இசைப் பேரறிஞரிடம் சின் (Ch'in) என்னும் கருவி இசையினைக் கன்பூசியசு கற்றறிந்தார். அப்பேரறிஞர் கன்பூசியசை வணங்கிப் போற்றினார். அவர் பாடிய இசைப் பாடலை யாத்தவர் சோ அரச மரபின் (Chou Dynasty) வென் (Wen) என்னும் அரசன் ஆவன்.

கன்பூசியசு, கோமகன் சியென் சவோ (Duke Chien Chao)வைக் காண்பதற்குப் போய்க் கொண்டிருந்தார். மஞ்சள் நதியின் (The Yellow River) கரையினை அடைந்தார். சின்னின் (Chin) நல்லமைச்சர்கள் ஆகிய து மிங்து (Tu Mingtu), ஷுன் ஹுவ (Shun Hua) ஆகிய இருவரின் இறப்புச் செய்தியைக் கேட்டதும், கரையில் நின்றபடி கன்பூசியசு பெருமூச் செறிந்தார்.

"இந்த ஆற்றுநீர் எவ்வளவு அழகாக உள்ளது!
இந்த ஆற்றைக்கடக்க முடியாதபடி விதி ஆணையிட்டுவிட்டது!"

என்று கன்பூசியசு கூறியதைக் கேட்ட சேகுங் (Tse kung, 'தாங்கள் கூறியதன் பொருள் யாது?' என்று வினவினார்.

கன்பூசியசு பின்வருமாறு விடை கூறினார்:

"து மிங்து (Tu Mingtu), ஷுன் ஹுவ (Shun Hua) சின்னின் (Chin) சிறந்த அமைச்சர்கள். ஆனால், சியன் சவோ (Chien Chao) கோமகன் இவ்விருவரையும் அமைச்சராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதாக எண்ணியிருந்தேன். ஆனால், அவன் கோமகன் ஆனதும் இவ்விருவரையும் கொலை புரிந்துவிட்டான்.

1. மக்கள் தனது கருவைக் கலைக்கும் பொழுது அல்லது இளையதைக் கொல்லும் பொழுது ஒற்றைக் கொம்பு விலங்கு (unicorn), நாட்டுப்புறத்தில் தோன்றுவதற்கு மறுத்துவிடுகிறது.
2. மக்கள் மீனைப் பிடிப்பதற்காகக் குளத்தைக் காய வைக்கும் பொழுது, இறக்கையுள்ள முதலை அல்லது நாகம் (Dragon) ஒற்றுமை உண்டாக்கும் யின் (Yin), யங் (Yang) என்னும் அடிப்படைப் பொருள்களை இணைத்து வைப்பதற்கு மறுத்துவிடுகிறது.
3. மக்கள் பறவைகளின் கூடுகளைப் பறித்தாலோ, அவற்றின் முட்டைகளை உடைத்தாலோ ஃபீனிக்ஸ் (Phoenix) பறவை வெளிவருவதற்கு மறுத்துவிடுகிறது.

ஏன்எனில், தன்னினத்தை அழிப்பவர்களைச் சான்றோர்கள் தவிர்க்கின்றனர். பறவைகள், விலங்குகள்கூட அறத்திற்குப் புறம்பானவர்களைத் தவிர்க்கின்றன எனின், யான் எந்த அளவு அக்கொடியவர்களைத் தவிர்த்தல் வேண்டும்?"

இவ்வாறு பேசியபடி, கன்பூசியசு அவ்விடத்தைவிட்டு அகன்று சௌ (Tsou) என்னும் சிற்றூர்க்குத் திரும்பினார். கொலையுண்ட அமைச்சர்கள் இருவர் நினைவையும் போற்றும் பாங்கில் கருவியில் வாசிப்பதற்குரிய வகையில் இசைப் பாடல் ஒன்றினைக் கன்பூசியசு இயற்றினார்.

பின்னர், வெய் (Wei) நகரம் வந்தார். அவ்வூர்க் கோமகன் போர்த் தந்திரங்கள் பற்றிக் கன்பூசியசிடம் கேட்டான்.

"சடங்குப் பலிகளைப் பற்றி எனக்கு ஓரளவேனும் தெரியும்; போர்த் திறங்கள் பற்றி, எனக்குச் சிறிதும் தெரியாது"

என்று விடையிறுத்தார். மறுநாள் கன்பூசியசு அக்கோமகனிடம் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, அவன் தன் தலையைத் திருப்பிக் கொண்டு, வானில் பறந்துசெல்லும் நாரைகளைப் பார்த்தான். தன்னை அலட்சியம் செய்வதாகக் கருதிய கன்பூசியசு அங்கிருந்து அகன்று சென் (Ch'en) நகர்க்கு மீண்டும் வந்து சேர்ந்தார்.[7]

கன்பூசியசுக்கு அகவை அறுபது (கி.மு.492). லூ (Lu) நகரில் இருந்த மூதாதையர் கோயில் (ancestral temple) எரிக்கப்பட்டது. அதனைக் கேள்வியுற்றுக் கன்பூசியசு கலங்கினார். பெருமகன் ஹுவன் சி (Baron Huan Chi) நோயுற்றிருந்தான். லூ நகரைக் காணச் சென்றார். நகரச் சுவரைப் பார்த்துப் பெருமூச்செறிந்தார். "வலிமை மிக்க மாநிலமாக லூ வளர்ச்சி பெற்றிருக்கும் வாய்ப்பினை, நான் கன்பூசியசை அவமதித்ததால் இழந்துவிட்டேன்" என்று அப்பெருமகன் புலம்பினான். அவனுக்குப் பெருமகன் கங் (Baron K'ang), மற்றும் அவன் இளவல் யூ (Yu) ஆகிய

இருவரும் கன்பூசியசின் சீடரின் வழியாக அமைதி கூறுதற்கு முயன்ற பொழுது கன்பூசியசு உடன்படவில்லை. கன்பூசியசு பின்வருமாறு பேசினார்:

"நாம் வீடு செல்வோம்! நாம் வீடு செல்வோம்! நம் நாட்டின் இளைஞர்கள் அறிவுக் கூர்மையுடன் பிழைபாடு உடையவராக இருக்கிறார்கள்; அல்லது மிகவும் எளியவராகவும் பின்வாங்குபவராகவும் உள்ளனர். அவர்கள் நல்ல பொருள்களைச் செய்கிறார்கள். அவற்றை நான் வடிவமைக்க முயலவேண்டும்."

இவ்வாறு பேசிய படியே தன் வீடு நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.

5. சென் (CH'EN) சை (Ts'ai)இல் இரு கோடிகளுக்கு இடையே (கி.மு.491-489)

கி.மு.491இல் கன்பூசியசு சென்னிலிருந்து (Ch'en) சைக்குச் (Ts'ai) சென்றார். அடுத்த ஆண்டில் சையிலிருந்து (Ts'ai) யே (Yeh) என்னும் சிறு மாநிலத்திற்குச் சென்றார். அதன் கோமகன் கன்பூசியசிடம் நல்லாட்சி (good government) பற்றிக் கருத்துரைக்க வேண்டினான். "தன் எல்லைக்குட்பட்ட மக்களின் விசுவாசத்தை ஈட்டுதலும், எல்லைக்கு அப்பாற்பட்ட மக்களைக் கவர்தலும் தான் நல்லாட்சி" என்று விளக்கம் தந்தார்.[8] (Good Government consists in winning the loyalty of the people nearby and attracting the people far away).

கன்பூசியசு கூறிய விளக்கம் தன் நாட்டிற்கு, தன் காலத்துக்கு மட்டுமன்றி இக்காலத்துக்கும் எல்லா நாடுகளுக்கும் ஏற்புடையதாக அமைந்திருத்தல் நோக்கத்தக்கது.

யே கோமகன் (Duke of Yeh) ஒரு நாள் செலு (Tselu) என்னும் சீடனிடம் கன்பூசியசின் செயற்பாடு பற்றிக் கேட்டான். அம்மாணவன் பதில் சொல்லவில்லை. இதனைக் கேள்வியுற்ற ஆசிரியர், மாணவனை நோக்கி,

"இனிய சீடனே! ஓயாமல் ஒழியாமல் மெய்ம்மையைத் தேடுகிற மனிதன் யான்; இடைவிடாமல் மக்களுக்குப் போதனை புரிகிறேன்; ஒரு சிலவற்றில் ஆர்வம் கொண்டுள்ள போது உண்ணவும் மறந்துவிடுகிறேன்; மகிழ்ச்சியில் திளைக்கும் பொழுது கவலைகளை மறந்து விடுகிறேன்; முதுமை நெருங்குவதைக் கூட அறியாதவனாக இருக்கிறேன் - இப்படி என் நிலையினை நீ ஏன் அவரிடம் எடுத்துச் சொல்லவில்லை?"

என்று வினவினார்.

சங்சு (Ch'ang chu) செய்ஹினி (Chiehni) என்னும் இருவரும் நிலத்தை உழுது கொண்டிருந்தனர். அவர்கள் ஓய்வு பெற்ற தத்துவ அறிஞர்கள் என்று கன்பூசியசு கருதினார். கன்பூசியசு தன் ஊர்தியில் போய்க்கொண்டிருந்தார். அவர் மாணவர் செலு (Tselu) வாயிலாக நிலம் உழுதவருள் ஒருவர் ஊர்தியில் போகிறவர் கன்பூசியசு என்பதைத் தெரிந்து கொண்டார். செலுவிடம்,

"இங்கும் அங்கும் திரிந்து கொண்டிருக்கும் மக்கள் இந்த உலகில் நிறைய உள்ளனர். அவருள் யார்தான் நாட்டின் நடைமுறைகளை மாற்றி அமைக்கப்போகிறாரோ? ஒருவகைப்பட்ட மக்களைத் தவிர்த்துச் செல்லும் ஒருவரைப் பின்பற்றுவதைவிட, சமுதாயத்தையே தவிர்த்துச் செல்லும் ஒருவரைப் பின்பற்றினால் என்ன?"

என்று கேட்டார். இதனைச் செலு (Tselu) தன் ஆசிரியர் கன்பூசியசிடம் தெரிவித்தார். அதனைக் கேட்டுப் பெருமூச்சு விட்ட கன்பூசியசு,

"பறவைகளோ விலங்குகளோ, அல்லது அவற்றைப் போன்றவர்களோ நமக்கு ஏற்ற நட்பு அல்ல. நிகழ்கால உலகத்தில் நீதியொழுங்கு (Moral Order) நிலவுமேல், அதனை மாற்றுவதற்கு நான் ஏன் கவலைப்பட வேண்டும்?"

என்று பேசினார்.

தன் காலத்து ஆட்சியாளர்களின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி, நல்லாட்சி புரிய நல்லுரை கூறியவர் கன்பூசியசு. அவருக்குப் பலரும் உயர் பதவி வழங்க வந்த பொழுது அப்பெரியார் மறுத்துவிட்டார். எப்பொழுதும் படிப்பிலும், இசையிலும் ஈடுபட்டிருந்தார். இந்த ஞானியின் போதனைகள் உலகம் ஏற்றுப் போற்றுதற்கு முன்வராத அளவிற்கு உயர்ந்தனவாய் இருந்தன. அவர் தன் உச்சத்தினின்றும் சற்று இறங்கி வந்து போதனை புரியவேண்டும் என்று எதிர்பார்த்தனர். அத்தகைய ஆட்சியாளரை நோக்கிக் கன்பூசியசு பேசினார்:

"ஐயா சேகுங் (Tsekung)! நல்ல உழவன் வயலில் நடவு செய்கிறான்; ஆனால், அறுவடையினைப் பற்றி உறுதி சொல்ல முடியாது. நல்ல கைவினைஞன் திறமைமிக்க ஒரு தொழிலைப் புரிகிறான். ஆனால், தன் வாடிக்கையாளர்களைத் திருப்தி செய்ய முடியாது. உம்மை நீவிரே பண்படுத்திக் கொள்ளுவதில் அக்கறை காட்டுவது இல்லை. ஆனால், உம்மை மக்கள் ஏற்றுப் போற்றுதல் வேண்டும் என்பதில் அக்கறை காட்டுகிறீர்கள்! உமக்கு நீவிரே உயர்ந்த எடுத்துக்காட்டாக அமைத்துக் கொள்ளாமையினை நோக்கி அஞ்சுகிறேன்."

அவ்வுரையினைக் கேட்ட சேகுங் அவ்விடத்தை விட்டகன்றார். பின்னர், யென் ஹூயெ (Yen Huei) அங்கு வந்தார். அவரை நோக்கிக் கன்பூசியசு,

"ஐயா யென் ஹூயெ! பாடல்கள் பனுவலில் (The Book of Songs) இது சொல்லப்பட்டது. எருமைகளோ, புலிகளோ பாலைவனத்தில் அலைவது இல்லை. என் போதனைகள் தவறானவையா? இந்தச் சூழலில் நான் எவ்வாறு அகப்பட்டேன்?"

என்று பேசினார். அங்குமிங்கும் அலைபவர்களாகப் போதனை புரிபவர்கள் இருந்தனர் என்பது இவர்

உரையினால் புலனாகிறது. அவர் உரையைச் செவிமடுத்த யென் ஹூயெ,

"ஆசானின் போதனைகள் மிகவும் உயர்ந்தவை. அதனால்தான் எளிய உலக மக்கள் அவற்றை ஏற்க முடியவில்லை. உங்களால் முடிந்தமட்டில் தங்கள் கருத்துக்களைப் பரப்புங்கள். அவை ஏற்கப்படாவிட்டால் நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? தங்கள் போதனைகள் ஏற்கப்படவில்லை என்ற உண்மையே உங்களை உண்மையான சான்றோர் என்பதைப் புலப்படுத்திக் காட்டுகிறது. உண்மை வளர்க்கப்படவில்லை யென்றால், வெட்கம் நம்மைச் சாரும். உங்கள் போதனைகள் ஏற்கப்படவில்லை என்பதுவே உங்கள் உயர்வுக்குச் சான்றாகும்."

என்று கூறிய விடை கன்பூசியசை மகிழ்வித்தது. கன்பூசியசு சிரித்துக்கொண்டு,

"ஓ மகனே! நீ ஒரு செல்வனாக இருந்திருப்பின்
நான் உனக்கு உணவு பரிமாறுபவனாக இருந்திருப்பேன்"

என்று கூறி அகன்றார்.

சு (Ch'u) மாநிலத்தின் மன்னர் சாவோ (Chao) தன்படை பரிவாரங்களை அனுப்பிக் கன்பூசியசை வரவேற்றார். எழுநூறு லீ (ஓரளவு) நிலத்தினைக் கன்பூசியசுக்கு மன்னன் வழங்க இருந்தான். அப்பொழுது ஓர் அமைச்சன் குறுக்கீட்டினால் அம்மன்னன் மனம் மாறினான். கி.மு.489இல் மன்னன் இறந்தான். கன்பூசியசு அம்மாநிலத்தை விட்டு வெளியேறிய பொழுது ஒரு பித்தன்,

"ஃபீனிக்சு பறவைவே! ஃபீனிக்சு பறவையே!
உன் இயல்புக்கு என்ன குந்தகம் ஏற்பட்டது?
சென்றவை சென்றவை யாக இருக்கட்டும்.

செல்ல வேண்டியவற்றைச் செப்பம் செய்க!
அந்தோ! ஆட்சியாளர்களுக்கு ஆயிரம் இரக்கங்கள்!"

என்று பாடினான். கன்பூசியசு தன் ஊர்தியை விட்டிறங்கி அந்தப் பாடகனைப் பார்த்துப் பேச விரும்பினார். ஆனால், அவன் ஓடோடி விட்டான்! சு (Ch'u) மாநிலத்தை விட்டு வெய் (Wei) மாநிலத்திற்குக் கன்பூசியசு திரும்பினார் (கி.மு.489). அப்போது அவருக்கு அகவை அறுபத்து மூன்று.

6. மேலும் பல ஆண்டுகள் சுற்றுப் பயணங்கள் (கி.மு.488-484)

கி.மு.488இல், வூ (Wu), லூ (Lu) மாநிலங்கள் இணைந்து ஒரு கூட்டம் நடத்தின. நூறு பசுக்களைப் பலி பீடத்தில் வழங்கின. அச்செயற்பாடு கன்பூசிய முறைக்கு முரண்பட்டது. வெய் (Wei) மாநில அரசில் அவர் சீடர்கள் பலர் பணிபுரிந்து வந்தனர். அம்மாநில மன்னன் கன்பூசியசின் பணியையும் பெறுதற்கு விரும்பினான். சீடர் செலு (Tselu) தன் குருநாதர் கன்பூசியசை நோக்கி, "வெய்யின் (Wei) அரசர் தங்களை ஆட்சிப் பணியில் அமர்த்தினால், எவ்வாறு உங்கள் பணியைத் தொடங்குவீர்கள்?" எனக் கேட்டார். "பணியாளர்களின் தரப்பணி, பணிப்பெயர்களின் சரியான வழங்குமுறை என்பவற்றை நிறுவிக் கொண்டு என் பணியைத் தொடங்குவேன்" என்றார் கன்பூசியசு. 'அப்படிச் செயற்படுதல்தான் ஐயாவின் கருத்தா?' என்று சீடர் செலு (Tselu) வினவினார். விரிவான விடையினைக் கன்பூசியசு வழங்கினார்.[9]

"தரம், பதவி ஆகியவற்றின் குறியீட்டுச் சொற்கள் (Terminology of ranks and titles) சரியாக இல்லையெனில், ஒருவர் பேச்சின் நடை முழுதும் வடிவம் இழந்து போகும்; ஒருவரின் பேச்சு உரிய வடிவத்தில் அமையாவிடின், ஆணைகளைச் சரிவர நடைமுறைப்படுத்த இயலாது. ஆணைகளை நடைமுறைப்படுத்தாவிடின், சரியான

வழிபாட்டு முறைகளையும் சமுதாய ஒருங்கிணைவையும் (சடங்கிலும் இசை நிகழ்ச்சியிலும்) நிலைநாட்ட இயலாது. சரியான வழிபாட்டு முறைகளும் சமுதாய ஒருங்கிணைவும் பேணப்பெறவில்லையெனில், நாட்டின் சட்டம் தழுவிய நீதி வீழ்ந்துவிடும். சட்டம் தழுவிய நீதி வீழில், எதைச் செய்வது, எதைச் செய்யக்கூடாது என்று மக்கள் அறிய இயலாதவர் ஆகிவிடுவர். சான்றோன் ஒருவன் ஒன்றை நிறுவினால், எந்தக் கலைச்சொல்லினால் அஃது அழைக்கப்படுதல் வேண்டும் என்ற தெளிவு அவனுக்கு உண்டு. அப்பெருமகன் ஓர் ஆணை இட்டால், தடையின்றி அது நிறைவேற்றப்படுதல் வேண்டும். சான்றோன் சீர்தூக்கிப் பார்க்காமல் அரசியல் கலைச்சொற்களைப் (Terminology) பயன்படுத்துதல் இல்லை."

இந்த விளக்கத்தினால், அரசுப் பணியினை ஏற்போரின் தராதரமும் தகுதியும், ஒவ்வொருவரையும் சுட்டுதற்குரிய தனித்தனி பதவிப் பெயரும் செயற்பாடு வெற்றிபெற நிகழ்வதற்குக் கட்டாயம் தேவை என்பதை 2,500 ஆண்டுகட்கு முன்பே சீன ஞானி கன்பூசியசு உணர்ந்திருந்தார் என்பது வியப்பாகவே உள்ளது.

ஒருமுறை (கி.மு.484) லூ (Lu) அரசில் பணிபுரிந்த ஜன் சியூ (Jan Ch'iu) என்பவர் லங் (Lang) என்ற இடத்தில் நடந்த போரில் பகை மன்னரைத் தோற்கடித்தார். தனக்குப் போர்த் தொழில் எப்படி தெரியும்? என்று லூவின் அரசன் கேட்டதற்குத், தன் ஆசான் கன்பூசியசிடம் தெரிந்து கொண்டதாகக் கூறினார். கன்பூசியசு எத்தகையவர் என்று அரசன் கேட்டதற்கு ஜன் சியூ (Jan ch'iu) விடை கூறினார்:

"நீங்கள் அவரை (-கன்பூசியசை)ப் பதவியில் அமர்த்தினால், அவர் புகழ் எங்கும் பரவும். அவர் போதனைகளை மக்கள் பின்பற்றச் செய்யலாம்; அவற்றைத் தெய்வங்களின் முன்பு வைத்தால்,

அத்தெய்வங்கள் கூட ஒரு தவறும் காணமுடியாது. நாட்டில் செம்மையும் ஒழுங்கும் நிலவச் செய்வதே அவர் நோக்கம். 25,000 குடும்பங்கள் வாழும் பகுதியை ஆளும் அதிகாரத்தினை அவருக்கு அளித்தாலும் தன்னலத்திற்குத் தன் அதிகாரத்தினைத் தவறாகப் பயன்படுத்த மாட்டார்.”

இவ்வுரையினைக் கேட்ட கோமகன் கங் (Baron K’ang). “அவரை இங்குவர ஆணை பிறப்பிக்கட்டுமா?” என்று கேட்டான். ஆனால், ஜன்சியு (Jan Ch’iu) கோமகனைப் பார்த்து,

“அவர் ஒரு சாதாரண மனிதர் அல்லர். நீங்கள் ஆணையிடுவது மரியாதைக்குறைவு; அவரை அவைக்கு வரும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுதலே முறை”

என்றார்.

ஆனாலும், வெய்யின் கோமகன் தன் பகைவரைத் தாக்குவதற்குரிய போர்த் தந்திரத்தினைக் கன்பூசியசிடம் கேட்டான். சீன ஞானி உடன்படவில்லை. அவ்விடத்தை விட்டு நீங்கும் பொழுது,

“தான் வாழ்வதற்குரிய மரத்தினைப் பறவையால்தான் தேடிக் கொள்ளுதல் இயலும். ஆனால், ஒருமரம் தனக்குரிய பறவையினை ஒரு பொழுதும் தேடிக் கொள்ளுதல் இயலாது.”

என்று கன்பூசியசு சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.[10] சங்கப் புலவர்கள் தங்களைப் பழுமரம் தேடிச் செல்லும் பறவைகள் எனப் பாடியிருத்தலைக் கன்பூசியசு கூறிய உரையுடன் ஒப்பிட்டு உவகையுறலாம்.

பின்னர், தன் சொந்த மாநிலம் லூ (Lu)வுக்கே கன்பூசியசு வந்து சேர்ந்தார் (கி.மு.484இல்). இடையில் 14 ஆண்டுகள் அயல் மாநிலங்களில் தன் வாழ்நாளினை அப்பெரியார் செலவிட்டுள்ளார்.

7. கன்பூசியசின் அறிவார்ந்த உழைப்பும் தனிப்பட்ட பழக்கங்களும் (கி.மு.484-481)

லூ (Lu) மாநிலத்தின் கோமகன் ஐ (Duke Ai) ஆட்சிமுறை பற்றிய கன்பூசியசின் கருத்தினைக் கேட்டான். "சரியான அமைச்சர்களைத் தேர்ந்து கொள்ளுவதில்தான் ஆட்சி முறையின் இரகசியம்அடங்கியுள்ளது" என்று கன்பூசியசு கருத்துரைத்தனர்.

கங்கு சி (K'ang Chi) என்னும் கோமகனும் அதே வினாவினை எழுப்பினான். அதற்குக் கன்பூசியசு அளித்த விடை இதுவே.[11]

> "முறை திறம்பாத மனிதரை அதிகாரத்தில் அமர்த்துக. அவர்கள் முறை திறம்பியவரின் அளவுகோலாகப் பணிபுரியட்டும். முடிவில், முறைதிறம்பியவர்கள் நீதிமான்களாகத் திருந்திவிடுவர்"

எனவே, நல்லாரின் சார்பினால் தீயோர் கூட திருந்துவர் என்ற உண்மையினைக் கன்பூசியசு உரை நமக்கு உணர்த்துகின்றது.

கோமகன் கங் (Kang) நாட்டில் நடமாடும் கொள்ளையர்கள், திருடர்களைப் பற்றிப் பெரிதும் கவலைப்பட்டான். அவனைப் பார்த்து,

> "நீவிர் நும்மளவில் பணத்தை விரும்பாதிருப்பின், திருடர்களுக்குப் பரிசாகத் தரும் பொருளைக் கூட அவர்கள் தொடமாட்டார்கள்"

என்று கன்பூசியசு அறிவுரை கூறினார்.[12]

லூ ஆட்சி கன்பூசியசை அதிகாரத்தில் அமர்த்துதலில் தெளிவில்லாமல் இருந்தது போலவே, கன்பூசியசும் அரசுப் பதவியில் நாட்டம் செலுத்தவில்லை.

கன்பூசியசு சீன மாநிலங்களில் தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்துவந்த வழிபாட்டு முறைகள்,

சடங்குகள், அவை தொடர்பான இசைப் பாடல்கள் பற்றி விரிவாக ஆராய்ந்தார். அவற்றைத் தம் காலத்துக்கு ஏற்ற பாங்கில் சமுதாயச் சீர்மைக்காக ஒழுங்குபடுத்திக் கொடுத்தார். இந்த வகையில்தான் வழங்கிவந்த நாட்டுப்புறப் பாடல்கள் யாவும் (The Book of Songs) அவரால் தொகை வகை செய்யப்பெற்றன. அவர் காலத்து வழங்கி வந்த இசை மரபினை 1. சுங் (Sung), 2. பெரிய ய (The Great Ya), 3. சிறிய ய (The little Ya), 4. ஃபெங் (Feng) என்று நான்கு வகைகளாகப் பாகுபத்தினார்.

சடங்குகள் தொடர்பான இசைப்பா வகையினை சுங் இசை (Sung) என்று வழங்கினார். சோ (Chou) மாநிலத்தில் வழங்கி வந்த செவ்வியல் இசையினை ய (Ya) என்று குறித்தார். அவர்க்கு முற்பட்ட காலத்திற்குரியனவாக வழங்கிய மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களில் போலிகளை ஒதுக்கினார். நல்ல வடிவத்தில் அமைத்தற்குரிய பாடல்களையே தேர்ந்தெடுத்தார். இத்தொகை இலக்கியத்தினைப் பாடற்பனுவல் எனத் தமிழாக்கம் செய்யலாம் என்பது முன்னரும் குறிக்கப்பட்டது. இதனுள் அடங்கியுள்ள முந்நூற்றைந்து பாடல்களையும் அவரே மிடற்றிசையாகப் பாடியதுடன் கருவியிலும் இசைத்துக் காட்டினார். பல்வேறு மாநிலங்களில் வழங்கி வந்த நாட்டார் இசைப் பாடல்களை ஃபெங் (feng) என்ற வகைப்பாட்டில் தொகுத்தார்.

கன்பூசியசின் பெருமுயற்சியால், பண்டைய சடங்கு முறையும் இசைப்பாடல்களும் மறைந்து போகாமல் மீட்கப்பட்டு வருங்காலத் தலைமுறையினர்க்கு வழங்கப்பட்டன. அவர் காலத்தில் படிப்பதற்கு என்று அரசால் வரையறுக்கப்பட்ட வித்தைகள்: 1. சடங்குகள், 2. இசை, 3. வில்வித்தை, 4. ஊர்தி இயக்குதல், 5. படித்தல், 6. கணிதம் என்ற ஆறும் ஆகும். இவற்றை ஆறு கலைகள் (The Six arts) எனக் கூறுவர். இவற்றைக் கற்பிப்பதற்குக் கன்பூசியசு தொகுத்துள்ள இசைப் பாடல் வகைகள் பெரிம் உதவும்.

தன் முதுமைக் காலத்தில் கன்பூசியசு மாற்றங்களின் பனுவலைப் (The Book of Changes) பயில்வதற்குப் பெரிதும் விரும்பினார். மனித நிகழ்வுகளின் மாற்றம் பற்றிய தத்துவத்தினையும் அறிந்திருந்தார்.

செய்யுள், வரலாறு, சடங்குகள், இசை ஆகியவற்றை மூவாயிரம் மாணவர்களுக்குக் கற்பித்தார். அவருள் எழுபத்திருவரே அறுவகைக் கலைகளிலும் முழுத்தேர்ச்சி பெற்றவர்கள்.

இலக்கியம் (Literature), மனித நடத்தை (Human Conduct), தன்வயமாதல் (Being one's true self), சமுதாய உறவுகளில் நேர்மை (Honesty in social relationships) என்ற நான்கைப் பற்றிய கருத்துக்களை மாணவர்களுக்குப் படிப்பித்தார்.

வேண்டியபடி மதிப்பிடுதல் அல்லது விதிக்கட்டின்றிக் கருத்துரை கொள்ளுதல் (Arbitrariness of opinions), விடாப்பிடிப் போக்கு (Dogmatism), குறுகிய மனப்பான்மை (Narrow-mindedness), தன்முனைப்பு (Egotism) என்ற நான்கையும் கன்பூசியசு அடியோடு வெறுத்தார்.

வழிபாட்டின் முன்னேற்பாடாக ஒருவர் மேற்கொள்ளுதற்குரிய சடங்குநீராடல், போர், பிணி ஆகிய மூன்றிலும் அப்பெரியார் அக்கறை காட்டினார்.

இலாபம், கடவுள் விருப்பம் அல்லது ஊழ் என்பது பற்றி அவர் மிகவும் அருகியே பேசினார்.

தன் மாணவர்க்கு அவர் பாடம் சொல்லும் முறை குறிப்பிடத்தக்கது. அவர் கூற விரும்பியதில் கால் பாகம் மட்டுமே கூறுவார். எஞ்சிய முக்கால் பாகத்தைத் தன் சிந்தனையாலும் தேடலாலும் மாணவர் தாமே விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய மாணவர்க்கு மட்டுமே அவர் பாடம் நடத்தினார்.[13] இம்முறையின் விளக்கமாகவே,

"ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்
காற்கூ(று) அல்லது பற்றலன் ஆகும்.
அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்"

என வரும் நன்னூல் பொதுப்பாயிர நூற்பாக்கள்[14] விளங்குதல் ஒப்பிட்டு உணர்ந்து மகிழ்தற்கு உரியது.

தன் சொந்த ஊரில் இருக்கும் பொழுது, தன் சொந்த வாழ்விலும் சரி, தன் உறவினருடன் உள்ள பொழுதும் சரி கன்பூசியசு மிகவும் மென்மையாகவும், இணக்க வணக்கமாகவும், நாகரிகமாகவும் நடந்துகொண்டார். ஆயினும் பொது வழிபாடு நிகழும் இடங்களிலும், நீதிமன்றங்களிலும் நாநலத்துடன் முனைப்பாகப் பேசினார். அந்நிலையில் கூட, தேர்ந்த சொற்களையே கையாண்டார். முறை மன்றங்களில் தனக்கு உயர்ந்தோரிடம் பண்புடனும் மரியாதையுடனும் பேசினார்; தனக்குத் தாழ்ந்தோரிடம் அன்புடனும் ஆதரவுடனும் உரையாடினார். பொது மன்றத்தில் தன் தலையினைத் தாழ்த்திய படியே விரைந்து உள்ளே போதல் வழக்கம். அரசரின் தூதர் தன்னை அணுகும் பொழுது பெருமிதத்துடன் இருந்தார். ஆயினும், அரசர் தன்னை அழைத்துவரச் சொல்லியபொழுது, ஊர்திகளைத் தேடாமல் நேராகப் போய்விடுவார்.

மீன் அல்லது புலால் புதிதாக இல்லையெனில், அல்லது அவை ஒழுங்காக நறுக்கப்பட வில்லையெனில், அவற்றைக் கன்பூசியசு உண்ண மாட்டார். பாய் (Mat) ஒழுங்காக விரிக்கப்படவில்லையெனில் அதிர் அவர் உட்கார மாட்டார்.

துக்க நிகழ்ச்சியில் மக்களின் குழுவில் தானும் சேர்ந்து உண்ணும் பொழுது, வயிறாரச் சாப்பிடமாட்டார். பிண ஊர்வலத்தின் பொழுது அழுதுவிடுவார்; அந்த நாள் முழுதும் பாட மாட்டார்.

துக்கத்தில் செல்லும் மக்களையோ, குருடர்களையோ பார்த்துவிட்டால், அவர்கள் குழந்தைகளாக இருந்தாலும் கூட தன் முகத்தைக் கன்பூசியசு மாற்றிக் கொள்ளுவார். அவர் பலரோடு கூடி நடைபயிலும் வழக்கத்தினர் அல்லர். அவர்,

> "மூவருடன் சேர்ந்து செல்லும் பொழுது, அவருள் ஒருவராவது எனக்குப் புதிதாகப் போதிப்பவராக இருப்பதை நான் காணவில்லையெனில், அவர்களுடன் நான் நடந்து போவது இல்லை"

என்று கூறினார்.[15] எனவே, நடைப்பயிற்சியின் பொழுதும் தன்னினும் கற்றறிந்த நன்மக்களுடன் செல்லுவதையே கன்பூசியசு விரும்பியுள்ளார் என்பது எண்ணி மகிழ்தற்குரிய செய்தியாகும்.

கன்பூசியசு தன் அனுபவங்களை வெளிப்படையாகவே புலப்படுத்தியுள்ளார். தனக்குக் கவலை தருவன எவை என்பதையும் பட்டியலிட்டுள்ளார். அவை வருமாறு:

1. என்னை நான் பண்படுத்திக் கொள்ளுவதற்கு மறந்து விட்டேன்.
2. நான் மேற்கொள்ள வேண்டிய கல்வியையும் ஆய்வுகளையும் புறக்கணித்து விட்டேன்.
3. நன்னெறி என் கண்முன் தெரிந்தும்கூட, அதனைப் பின்பற்ற இயலாதவனாகியுள்ளேன்.
4. என் பிழைபாடுகளைத் திருத்திக் கொள்ளவும் இயலாதவனாக இருந்திருக்கிறேன்.

இவற்றால் கன்பூசியசு தன் குறைபாடுகளை உணர்ந்து அவற்றைக் களைய எண்ணியவர் என்பது புலனாகும்.

கன்பூசியசுக்குச் சமய உணர்வும் தெய்வ அச்சமும் (Fear of God) உண்டு. சடங்குகளிலும், சமய வழிபாட்டு

முறைகளிலும் அவருக்கு அக்கறை உண்டு. மோனமாக அமர்ந்து இறைவழிபாடு புரிதல் அவர் வழக்கம்.[16]

கன்பூசியசு தன் மாணவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தவர். இயற்கையைப் பற்றியும், வானகம் பற்றியும் அவர் என்ன எண்ணியிருந்தார் என்பதை மாணவர்களுக்கு அவர் கற்பிக்கவில்லை என்று அவர் மாணவர்களில் ஒருவரான செகுங் (Tsekung) கூறியுள்ளார்.

> "நம் ஆசான் (கன்பூசியசு) இலக்கியக் கல்வியின் மூலம் நம் பார்வையை விசாலப்படுத்திக் கொள்ளவும், நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் தன்னடக்கத்தையும் கற்றுக் கொடுத்தார். என்னால் இயன்றமட்டில் என்னுள் இருப்பதாகிய ஆற்றலை வளர்த்துக் கொண்டேன். இருந்தும்கூட, பிடிபடாத ஏதோ ஒன்று இன்னும் இருக்கிறது"

என்று யென்யுவன் (Yenyuan) என்னும் மற்றொரு மாணவர் இயம்பியுள்ளார்.

கோமகன் ஷூசுன் (Baron Shusun)னின் வலவன் (Driver) வேட்டையின் போது ஒற்றைக் கொம்பு விலங்கினைப் (Unicorn) பிடித்து வந்தான். ஆமைதான் நற்பேற்றின் அடையாளம் என்பது சீனரின் நம்பிக்கை. ஒற்றைக் கொம்பு விலங்கு தீமையின் சின்னம். அதனைக் கண்ட கன்பூசியசு "என் பணியை இறைவன் எடுத்துக்கொள்ளப் போகிறான்" என்று கூறினார்.

> "தான் மேற்கொண்ட பணியை நிறைவு செய்யாமல் இறப்பது வெட்கக்கேடு என்று சான்றோர் (Gentleman) எண்ணுவார்.
>
> யான் எண்ணிய குறிக்கோள் அரசினை நடைமுறைப்படுத்துவதற்கு உகந்த அதிகாரத்தினை அடைய முடியவில்லை என்பதை நான் உணர்கிறேன்.

வருங்காலத் தலைமுறையினரின் கண்களில் என் நிலையை எப்படி நியாயப்படுத்துவேன்?"

என்று வாய்விட்டுப் பேசினார். எனவேதான், "இளவேனிலும் இலையுதிர் காலமும்" (The Spring and Autumn) என்னும் வரலாற்று நூலினை எழுதினார். இந்நூலில் கோமகன் யின் (Duke Yin) ஆண்ட கி.மு.722 தொடங்கிக் கோமகன் ஐ (Duke Ai) ஆட்சியின் 14ஆம் ஆண்டு முடிய (கி.மு.481) பன்னிரு கோமகன்கள் லூ (Lu) மாநிலத்தை ஆண்ட வரலாற்றினைக் காணலாம்.

தன் சொந்த மாநிலம் ஆகிய லூவை மையமாகக் கொண்டு எழுதப்பெற்ற இந்த வரலாற்று நூலில் சோ பேரரசர்களுக்கும் (Chou Emperors) உரிய மரியாதையினைக் கன்பூசியசு தந்துள்ளார். செறிவுடைய நடையில் ஆழ்ந்த பொருளைப் பொதிந்து வைத்துள்ளார். தன் காலத்து அரசியலில் உள்ள பிழைபாடுகளைக் கண்டனம் செய்தார். பண்பாடில்லாத இளவரசர்களும் அதிகாரத் திருடர்களும் வெட்கப்பட்டுத் தங்களைத் தாங்களே திருத்திக் கொள்ளும் வகையில் அவர் வரலாற்று நூல் அமைந்தது. "வருங்காலத் தலைமுறையினர், இளவேனிலும் இலையுதிர் பருவமும் என்ற என் நூலின் வாயிலாக என்னைப் புரிந்து கொள்ளுவார்கள். இந்த நூலினை அடிப்படையாகக் கொண்டு என்னை எடை போட்டுப் பார்ப்பார்கள்" என்று கன்பூசியசு தன் மாணவர்களிடம் வெளிப்படையாகப் பேசினார்.

8. அவர் இறப்பும் வருங்காலத் தலைமுறையும் (கி.மு.479)

தன் மாணவர் செலு (Tselu) வெய்யில் (Wei) கி.மு.480இல் இறந்தார். கன்பூசியசும் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவரைக் காண்பதற்காக மாணவர் சேகுங் (Tsekung) வந்தார். அப்பொழுது, தண்டூன்றித் தள்ளாடித் தன்னாசிரியர் கதவின் பக்கமாக மெல்ல நடந்து கொண்டிருந்தார். "ஏன் அப்பா இவ்வளவு காலம் கடந்து வந்தாய்?" என்று மாணவரைப்

பார்த்துக் கேட்டார். பெருமூச்சுவிட்ட படியே ஒரு பாடலைப் பாடினார்:

"அந்தோ! அந்த மலை நொறுங்கி விழுந்து கொண்டிருக்கிறதே!
அந்தத் தூண் வீழ்ந்து கொண்டிருக்கிறதே!
அந்தத் தத்துவ ஞானி போய்க்கொண்டிருக்கிறாரே!"

கண்ணீர் வடித்துக் கொண்டே கன்பூசியசு மாணவர் சேகுங்கிடம் (Tsekung) பேசினார்:

"நீண்ட நெடுங்காலமாக இந்த உலகம் நீதி கலங்கி நிலை குலைந்து நிற்கிறதே! ஹிசிய (Hsia) ஆட்சியின் கீழுள்ள மக்கள் புதைப்பதற்கு முன் தங்கள் சவப்பெட்டிகளைச் சீன முற்றத்தின் கிழக்குப் படிகளில் வைத்தனர். சோ (Chou) ஆட்சியின் கீழுள்ள மக்கள், தங்கள் சவப்பெட்டிகளை மேற்குப் படிகளுக்கு மேலே வைத்தனர். ஷங் (Shong) ஆட்சியின் கீழுள்ள மக்கள் அவற்றை மையக் கூடத்தின் இரு தூண்களுக்கு இடையே வைத்தனர். நேற்றிரவு அவ்விரு தூண்களுக்கு இடையே உட்கார்ந்த படியே நான் படையல் பானத்தைப் (Libation) பெற்றுக் கொள்ளுவதாகக் கனவு கண்டேன். ஷங் அரச மரபின் வழித்தோன்றல் யான் என்பதால் ஒருவேளை இவ்வாறு கனவு கண்டிருக்கலாம்."

இக்கனவு கண்ட ஏழு நாள்களுக்குப் பின் கன்பூசியசு இறந்துவிட்டார். அப்போது அவருக்கு அகவை 72. இந்நிகழ்வு கி.மு.479 ஏப்பிரலில் சிசௌ (Chich'ou) என்ற நாளில் ஏற்பட்டது. அப்போது கோமகனாக இருந்தவர் ஐ (Duke Ai).

கோமகன் ஐ கன்பூசியசின் சவ ஊர்வலத்திற்குப் பின்வரும் பிரார்த்தனைச் செய்தியை அனுப்பினார்:

"அந்தோ! கடவுள் (Heaven) நம்மிடம் இரக்கம் கொள்ளவில்லை. மரியாதைக்குரிய முதுமகனை நம்மிடம் அவர் விட்டு வைக்கவில்லை. அவர் என்னை

விட்டுப் பிரிந்து போனார். நான் செயலற்றுப் போனேன். நான் ஒரு பிணியாளி ஆனேன் இப்பொழுது. தந்தையே! (-கன்பூசியசு) என் துயரம் பெரிது. என்னை மறவாதீர்"

லூ மாநகரின் வடபுறத்தில் ஓடும் செ (Sze) ஆற்றங் கரையில் கன்பூசியசு புதைக்கப்பட்டார். அவருடைய மாணவர்கள் மூன்றாண்டுகள் முறையாகத் துக்கம் அனுசரித்தனர். பிரிந்து செல்லும் முன்னர் புதைத்த இடத்திற்கு மரியாதை செலுத்திவிட்டு அழுது கொண்டே பிரிந்து போயினர்.

சேகுங்கு (Tsekung) என்ற மாணவர் மட்டும் கன்பூசியசின் கல்லறைக்குப் பக்கமாக ஒரு குடிலில் ஆறு ஆண்டுகள் தங்கிவிட்டார். அந்தக் கல்லறையின் பக்கத்தில் உள்ள நிலத்தில் வீடுகள் அமைத்து, கன்பூசியசின் சீடர்கள், லூ (Lu) நகர மக்கள் உள்ளிட்ட நூறு குடும்பத்தார் தங்கினர். ஒரு தனி ஊரே உருவாகிவிட்டது. பல தலைமுறைகள் கன்பூசியசின் கோயிலுக்குப் பலிகள் கொடுக்கப்பட்டன. கன்பூசியக் கொள்கையாளர்கள் அங்கே அறிவார்ந்த சொல்லாடல்கள் நிகழ்த்தினர். கிராம விழாக்கள் நடந்தன. வில்வித்தைப் போட்டிகளும் நடைபெற்றன.

கன்பூசியசுக்கு உரிய உடைமைகள், தொப்பிகள், மேலங்கிகள், இசைக்கருவிகள், ஊர்திகள், நூல்கள் யாவும் அவருக்கு எழுப்பப்பெற்ற திருக்கோயிலில் வைத்துப் பல தலைமுறைகளாகப் பேணிக் காக்கப்பெற்று வந்தன. ஹன் அரச மரபின் (Han Dynasty) முதல் பேரரசர் (கி.மு.206) ஆநிரை, ஆட்டுமந்தை, பன்றிகள் ஆகியவற்றை மரியாதையுடன் நிவேதனமாகக் கன்பூசியசுக்கு வழங்கி வழிபட்டார். இளவரசர்களோ, உயர்ந்த அமைச்சர்களோ முதலில் கன்பூசியசின் திருக்கோயிலில் தங்கள் மரியாதைகளைச் செலுத்திய பின்னரே பதவி ஏற்றுக்கொண்டனர்.

சீனமக்கள் அனைவரும் ஏற்றுப் போற்றும் மேதையாகவும் ஞானியாகவும் கன்பூசியசு ஒளி வீசினார்.

மேற்கோள் குறிப்புக்கள்

1. Lin Yutang, ***The Wisdom of Confucius,*** The Modern Library, New York, *1938*, p.*56*.
2. Ibid. p.*58*.
3. Ibid. p.*61*.
4. Ibid. p.*62*.
5. Ibid. p.*68*.
6. Ibid. p.*70*.
7. Ibid. p.*76*.
8. Ibid. p.*79*.
9. Ibid. p.*84*.
10. Ibid. p.*87*.
11. Ibid.
12. Ibid. p.*88*.
13. Ibid. p.*91*.
14. ***நன்னூல்,*** பொதுப்பாயிரம், நூ.*44*,*45*.
15. ***The Wisdom of Confucius,*** p.*92*.
16. Ibid. p. *93*,f.n.

5. கன்பூசியசின் சிந்தனைப் போக்கு

இக்காலத்து மக்கள் கன்பூசியத்தில் ஆர்வமுடையவராக இருத்தல் கூடுமோ? என்பது குறித்து வியப்படைவோர் உளர். கன்பூசியக் கோட்பாட்டில் நம்பிக்கையுடையவராக மக்கள் உள்ளனரா என்பதும் ஒரு வினா வாகும். குறிப்பாக நவீனச் சீனர்களுக்கு இஃது ஒரு இன்றியமையாக் கேள்வியாகவே அமைந்துள்ளது. அவர்களுடைய உள்ளங்களுக்கு அறை கூவலாக விளங்கும் இந்த வினாவை ஒருபுறமாக எளிதில் தள்ளிவிட முடியாது. கன்பூசிய மனப்பான்மையிலும் நோக்கு நிலையிலும் மையநிலை (Centrality) அல்லது உலகப் பொதுமை நிலை (Universality) காணப்படுவதாலும்; அந்நிலை கன்பூசியக் கோட்பாட்டினால் விளையும் இன்பத்தில் பிரதிபலிப்பதை மேலை நாட்டுக் கல்வி பயின்ற, முதிர்ந்த நவீனச் சீனர்களிடம் பார்க்க முடிகிறது. கன்பூசியத்தின் மையநிலைக்கோட்பாடும் மனிதநேய அடிப்படையும் தமக்கே உரிய தனிப்பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளன. கன்பூசியசு காலத்தினைத் தொடர்ந்து வரும் நூற்றாண்டுகளில் சீன நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்கள், கருத்தியல் மோதல்களுக்கு ஊடே, தாவோ மார்க்கம் (Taoism), மோசிய நெறி (Motianism), இயற்கையியம் (Naturalism), வினைமுறைக் கடைப்பிடிப்பியம் அல்லது சட்டவியம் (Legalism), பொதுவுடைமை வாதம் (Communism) உள்ளிட்ட பல்வேறு சித்தாந்தங்களையும் வென்று கன்பூசியம் வாகை சூடியுள்ளது. ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாகச் சீன மக்களிடம் தன் மேலாதிக்கத்தை (Supremacy) இந்நெறி தக்கவைத்துக் கொண்டுள்ளது. இடையே சிற்சில காலக் கட்டங்களில் தொய்வு

ஏற்பட்டிருப்பினும், முன்பிருந்ததைக் காட்டிலும் கூடுதல் வலிமையுடன் இந்நெறி திரும்பவும் செல்வாக்குப் பெற்றிருந்தது. கி.பி.300-600 என்ற காலப் பகுதியில் இறுதி வடிவம் பெற்ற தாவு மார்க்கத்தைத் தவிர, சுங்கு (Sung) அறிஞர்களிடம் பெருவழக்காக விளங்கிய பௌத்தம் கன்பூசியத்திற்கு எதிராளியாக இலங்கியது. சிறந்த தத்துவக் கோட்பாட்டினைப் பெற்றிருந்த பௌத்தம், அறிவுக் கோட்பாட்டு விளக்க முறையினையும், மனிதப் பண்பாட்டின் குறிக்கோளையும் தழுவி அமைத்துக் கொள்ளுவதில் மட்டுமே வெற்றி பெற்றது. கன்பூசிய நூல்களில் பொதிந்துள்ள கருத்துக்கள் சிலவற்றின் அழுத்தத்தினைப் பௌத்தம் திசை திருப்பியிருப்பினும், கன்பூசியத்தையே பெயர்த்துவிடவில்லை. கன்பூசியத்தின் பழைய செல்வாக்கினையும் தன்மதிப்பையும் அது காட்டுகிறது. கன்பூசிய அறிஞர்களிடம் தங்கள் செம்மையில் நம்பிக்கையும் மற்றவர் கருத்துக்களில் இகழ்ச்சியுடன் கூடிய ஐயுறவு நோக்கும் ஏற்பட்டதால் அப்பண்புகள் அவர்கள் பௌத்தத்தினைத் துறப்பதற்கு ஏதுவாகின. சுவாங்சேயின் (Chuangtse) மறையியலை (Mysticism) துறப்பதற்குக் காரணமாகவிருந்த அவர்தம் பொது அறிவுதான் பௌத்த மறையியலையும் (Mysticism of Buddhism) துறப்பதற்குத் துணையாயிற்று.

இன்றைய நாளில் கன்பூசியம் மிகப்பெரும் எதிராளியைச் சந்திக்கிறது. அது கிறித்தவம் மட்டும் அன்று. மேலைநாட்டுச் சிந்தனை, வாழ்வியல் அமைப்பும், தொழில் யுகத்தினால் (Industrial age) கொண்டுவரப்பட்ட புதிய சமுதாய அமைப்பும் (New social order) கன்பூசிய நெறிக்குப் பெரும் அறை கூவலாக அமைந்துள்ளன. நிலமானியச் சமுதாய அமைப்பினை மீட்டெடுக்கும் (Restoration of a feudal order) குறிக்கோளுடன் கூடிய அரசியல் அமைப்பாக (Political System) கன்பூசியம் இருப்பதால், நவீன அரச அறிவியல் (Political Science), பொருளாதாரவியல் (Economics)

என்பனவற்றின் வளர்ச்சிகளால், காலத்துக்கு ஒவ்வாததாக அது புறக்கணிக்கப்படலாம். ஆயினும், மனிதனைப் பண்படுத்தும் அமைப்பு என்ற வகையில் வாழ்வியலையும் சமுதாயத்தையும் நெறிப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது என்பதால் கன்பூசியம் தொடர்ந்து செல்வாக்கு செலுத்தும் என்று நம்பலாம்.

காரல் மார்க்சு (Karl Marx) கொள்கையும் கன்பூசியசு (Confucius) கொள்கையும் ஒருபொழுதும் இணைந்து செல்வன அல்ல. சீன மக்களிடையே கன்பூசியம் ஒரு வாழும் சக்தியாக (Living Force) விளங்குகிறது; சீனர்களின் பொதுவுடைமைக் கொள்கையினையும் மென்மைப்படுத்துவதாகவும் உள்ளது; சீனர்களின் தேசிய நடைமுறைகளையும் வடிவமைப்பதாய்த் திகழ்கிறது. சீனர்களின் தனிப்பண்பமைதியையும் (Ethos), சமுதாயத் தகவுகளைப் பிரதிபலிக்கும் சமுதாயப் பழக்கவழக்கங்களையும் (Mores) மேற்புலத்தார் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

சுருங்கிய சொற்களில் நீதி போதனைகளை வழங்கும் ஞானி என்ற மட்டில் தான் மேற்புலத்தாரால் கன்பூசியசு புரிந்து கொள்ளப்படுகிறார். கன்பூசியசின் அனலெக்ட்ஸ் (Analects) என்ற நூல் திருக்குறளைப் போலவும் விவிலியத்தைப்போலவும் மதிக்கப்படுகிறது. இந்நூல் நீதி போதனைகளின் தொகுப்பாகும். இந்த நூல்தான் உலகெங்கும் கன்பூசியசின் புகழ் பரவுவதற்கு அடிப்படையாகும். சுருக்கமாகவும் திடீரென முடித்துக்கொள்ளுவதும் ஆகிய (Staccato) வாக்கியங்களில் நாள் முழுதும் கன்பூசியசு பேசினாரல்லர். கன்பூசியசின் சிந்தனைகளை ஒரு அமைப்பாக (System)ப் புரிந்து கொள்ளாதவர்களுக்கு அவருடைய கௌரவத்தையும் (Prestige) தாக்கத்தையும் (Influence) குறித்து முழுமையாகப் பாராட்டுதல் முடியாத செயலாகும்.

தன்னைப் பண்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் (Self-Cultivation) என்ற அவர்தம் போதனையின்

அடிப்படையில் அறவியல் அணுகுமுறையின் மூலமாகவே அமையும் பகுத்தறிவு சார்ந்த சமூக அமைப்பின் (Social Order) மறுபெயர்தான் கன்பூசியம் எனச் சுருக்கமாகக் கூறலாம். ஒழுங்கு அமைப்பின் (Moral Order) அடிப்படையில் எழுப்பப்படும் அரசியல் அமைப்பினைக் (Political Order) கன்பூசியம் குறிக்கோளாகக் கொண்டது. மனிதனுக்குள் பொதிந்து கிடக்கும் ஒழுங்கென்னும் ஒத்திசைவினை (Moral Harmony) அடைவதன் வாயிலாகவே அரசியல் ஒத்திசைவினை (Political Harmony) அடைய முடியும் என்பது கன்பூசியசின் கருத்தாகும். அரசியலுக்கும் அறவியலுக்கும் இடையே உள்ள இடைவெளியை முற்றிலும் அகற்றி இரண்டும் ஒன்றுதான் என்று நடைமுறைப்படுத்துதல்தான் அவர்தம் குறிக்கோள். சட்டத்திற்கு முதன்மை கொடுத்தோர் (Legalists) சட்டத்தை வன்மையாக நடைமுறைப்படுத்துவதன் வாயிலாகவே வலிமையான தேசத்தை உருவாக்க முயன்றனர். ஆனால், சட்டத்திற்கு மாறாக அறங்களை வலியுறுத்துவதன் வாயிலாகவே வலிமை மிக்க நாட்டினை நிர்மாணிக்க வேண்டும் என்பது கன்பூசியசின் அணுகுமுறை ஆகும். சக மனிதர்களிடையே தத்தம் கடமைகளை உணர்ந்து செயற்படுவதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். கன்பூசியம் மனித நேயத்தை மையமாகக் கொண்டது. மனிதன் தன்னொத்த மனிதனிடம் புலப்படுத்த வேண்டிய உறவுகளை வலியுறுத்தினார் கன்பூசியசு. பயனற்ற அப்பாலைத் தத்துவத்திலோ, மறையியலிலோ (Mysticism), அமரத்துவத்திலோ (Immortality), ஆவிகள் உலகிலோ அவர் அக்கறை காட்டவில்லை. மனிதனின் மேலளவு மனிதனே (The measure of man is man) என்பது அவர்தம் மையக் கொள்கையாகும். எனவே, கன்பூசியத்தின்படி ஒருவன் பூரணத்துவம் (முழுமை, Perfection) அடைவதற்குக் கடவுளை நோக்கத் தேவை இல்லை என்பதும், தன் ஆற்றலிலும் தற்பண்பாட்டிலும் (Self-Cultivation) நாட்டம் செலுத்துதல் தேவை என்பதும் புலனாகும்.

சோ அரச மரபு (Chou Dynasty) காலத்தில் நிலப்பிரபுத்துவ அமைப்பு (Feudal System) உடையத் தொடங்கிய பொழுது, அதனை மீண்டும் பகுத்தறிவியல் சார்ந்த அமைப்பாக நிலை நிறுத்துவதில் (Restoration) கன்பூசியம் கவனம் செலுத்தியது. இதனைப் புரிந்து கொள்ளுவதற்கு, கன்பூசியசின் காலத்தைய நிலப்பிரபுத்துவ அமைப்பு முறையை அறிந்து கொள்ளுதல் வேண்டும். அவர் காலத்திலும், தொடர்ந்து சில நூற்றாண்டுகளிலும் சீன நாட்டில் நூற்றுக்கணக்கில் கோமகனின் ஆட்சிப் பகுதிகள் (duchies), பெருமகனின் ஆட்சிப் பகுதிகள் (baronies), நகரியங்கள் (Townships) இருந்தன. அவை ஒவ்வொன்றும் சுயேச்சை பெற்ற தனி நாடுகளாக வெளிப்பட்டன. ஆற்றலிலும் நிலப்பரப்பிலும் மிக்க வலிமை வாய்ந்த நாடுகள் தமக்குள் தொடர்ந்து சமர் புரிந்து வந்தன. சீனப் பேரரசின் மாமன்னர் இந்தச் சிறுசிறு நிலக்கிழார்களின்மேல் பேரளவில்தான் ஆதிக்கம் செலுத்தினாரே தவிர, உண்மையில் அவருடைய அதிகாரம் மறைந்துவிட்டதென்றே சொல்லிவிடலாம். அத்தகைய நிலைகளில் கன்பூசியசோ அல்லது அவர்க்குப் பின் வந்த மென்சியசோ அரசர் பலரையும்தத்தம் வசப்படுத்தித் தம் கருத்துக்களை நடைமுறைப்படுத்த சுழன்றார்களே தவிர, பேரரசரை அணுகுவதற்குச் சிறிதும் எண்ணம் கொண்டிலர். வலிமை குன்றிய மாமன்னரைப் பார்ப்பதால் ஒன்றும் விளையப் போவதில்லை என்ற நிலை உருவாகியிருந்தது. அதன் விளைவாக உள்நாட்டுக் குழப்பம் உண்டாகியது. சிற்றரசர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகள் கிழித்தெறியப்பட்டன. அஞ்சத்தக்க அளவு வரிகள் விதிக்கப்பட்டன. அந்த வரிப் பணத்தினால் படை பலத்தை வளர்த்துக் கொண்டனர். வலிமைமிக்க அண்டை மாநிலத்து அரசர்கள் தங்கள் நிலத்தின்மேல் போர் தொடுப்பார்களோ என்ற அச்சத்தில் சிற்றரசர்கள் கவலைப்பட்டனர். போர் தொடுத்தல் (Offensive), தடுத்து

நிறுத்தல் அல்லது தற்காப்பு (defensive) என்ற இருவகைப் போர் முறைகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினைத் தத்துவவாதிகள் விளக்கத் தொடங்கினர். பண்டைய தமிழகப் போர் முறைகளில் இவை இரண்டும் முறையே வஞ்சி என்றும் காஞ்சி (எதிரூன்றுதல்) என்றும் எண்ணப் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்விருவகைப் போர்களில் ஈடுபட்டோரை முறையே ஆக்கிரமிப்பாளர்கள் (Aggressors) என்றும், பலியானவர்கள் (Victims) என்றும் எண்ணி இவ்விருவகையாளர்க்கும் இடையே காணப்படும் தனித்தன்மைகளையும் தத்துவவாதிகள் விளக்கத் தொடங்கினர். வியப்பிற்குரிய வகையில் ஒருவகைப்பட்ட அறிவு சார்ந்த சர்வதேசியம் (Intellectual internationalism) வளர்ந்தது. அறிஞர்கள் ஒருகுறிப்பிட்ட மாநிலத்திற்கும் அதனை ஆட்சி செய்த தலைவர்க்கும் செலுத்திய கடப்பாட்டினை (Allegiance) பிறிதொரு மாநிலத்திற்கும் அதன் தலைவர்க்கும் மாற்றிக் கொள்ளும் பொருட்டு அங்குமிங்கும் அலைந்தனர். பழைய சடங்கு முறைகளும், தரவரிசை அரசு அடையாளங்களும் குழப்பத்திற்கு உள்ளாயின. இத்தகைய ஒழுங்கீனமான அரசியல் குழப்பங்கள்யாவும் அமைதியையும் ஒழுங்கினையும் மீண்டும் கொண்டுவருவதற்குரிய வகையில் கூர்த்த மதியாளரைச் சிந்திக்க வைத்தன. இத்தகைய சூழ்நிலையில்தான், கூடுதலான சிந்தனை உரிமையுடன் பொருந்திய கூடுதலான அறிவார்ந்த செயற்பாடு சீனத் தத்துவத்தில் கூடுதலான வளத்தையும் பலதிறப்பட்ட பாங்கினையும் விளையச் செய்தது. லாவோட்சே (Laotse), சுவாங்சே (Chuangtse) உள்ளிட்ட சிலர் நாகரிகத்தை முற்றிலுமாக இகழ்ந்தனர்; ஒரு சிலர் அரும்பும் பொதுவுடைமை வாதிகளாக ஆகினர். இவர்கள், ஒவ்வொரு மனிதனும் தத்தம் வாழ்க்கைக்குத் தேவையானதைத் தங்கள் உழைப்பினாலேயே பெறவேண்டும் என்று எண்ணினர். மற்றும் சிலர் கடவுளின் ஒருமையினையும்

கடவுட்பத்தியையும், மனிதநேயத்தையும், தன்னலமற்ற தன்மையினையும் போதிக்கத் தொடங்கினர். மேலும், மோட்சே (Motse) போன்றோர் இசையினை இகழ்ந்ததுடன் துறவுதான் மேம்பட்டது என்றும் சொல்ல முற்பட்டனர். கிரேக்கத்தில் கடும் நோன்புகளை வலியுறுத்திய சொபிஸ்டுகள், ஸ்டாயிக்குகள், இன்பியல் பேசும் ஹெடோனிஸ்டுகள், எபிகூரியர்கள், மற்றும் இயற்கைவாதிகள் (Naturalists) ஆகியோருக்கு ஒப்பானவர்கள் சீனத் தத்துவ வாதிகளிடையே காணப்பட்டனர். நாகரிகத்தை ஐயுறத் தொடங்கியவர் சிலர் காட்டு வாழ்க்கையே மேலானது எனப் பேசத் தலைப்பட்டனர். கன்பூசியசைப் போன்ற ஒரு சிலர் அறத்தின் ஆற்றல், கல்வி, கலைகள் ஆகியவற்றை வலியுறுத்தினர். மனித உறவுகளில் அறத்தொடு பொருந்திய உயர்தரத்தையும், சர்வதேசிய மரியாதையினையும் தகைமையினையும் (decency) பழமையினைத் தொடர்ந்து பேணுதலையும் அவர்கள் ஆதரித்தனர்.

கன்பூசியம் தொடக்க காலம் தொட்டு ஜு (Ju) என்றே வழங்கப்பட்டு வந்தது. இந்நெறியாளர்கள் பழமை நோக்குடையவர்கள், வரலாற்றுப் புலமையாளர்கள். மேலும் இவர்கள் தனிப்பட்ட தொப்பியையும், அங்கியையும் தாங்கள் பழமை விரும்பிகள் என்பதற்குரிய அடையாளமாகப் பூண்டிருந்தனர். இனி, கன்பூசியக் கொள்கைகள் சிலவற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

கன்பூசியத்தின் அடிப்படைக் கொள்கைகள்

சமுதாயச் சீர்மைக்கு (Social Order) சடங்கும் இசையும் (Ritual and Music) வேண்டப்படும் என்று கன்பூசியசு கருதினார். சமுதாயத்தில் காணப்படுவனவற்றைச் சரிவர, ஒழுங்குபட அமைத்தற்கு எடுக்கும் முயற்சிதான் அரசின் செயல்பாடாக இருத்தல் வேண்டும் என்பது அவர் எண்ணம். சமுதாயத்தில் அமைதி (Peace in Society) நிலவ வேண்டுமெனின், நீதி அடிப்படையாய் அமைதல்

வேண்டும் என்றார். இத்தகைய சமுதாய அமைப்பினின்றுதான் அரசியல் அமைதி (Political Peace) உருவாக முடியும் என்று நம்பினார்.

குற்றவியல் சட்டம், அரசு ஆகியவற்றின் இறுதி நோக்கமும் சடங்கு, இசை ஆகியவற்றின் இறுதி நோக்கமும் ஒன்றே என்று கன்பூசியசு கூறினார். அன்பினாலோ, அச்சத்தாலோ, அறத்தினாலோ மக்களை அரசு நெறிப்படுத்துதல் வேண்டும் என்றார்.

பகுத்தறிவு சார்ந்த சமுதாய அமைப்பினை லீ (Li) என்று குறிப்பிட்டார் "பொருள்களின் ஒழுங்குமுறை" (The Order of things) என்பதையே லீ (Li) குறிப்பதாக விளக்கினார். சடங்கு என்று அவர் சொல்வதெல்லாம் நன்னெறி, நற்பண்பு, நல்லொழுக்கமே ஆகும். தத்துவப் பொருளில், லீ என்பது இலட்சியச் சமுதாய அமைப்பினைக் குறிக்கிறது. கன்பூசியசின் காலத்தில் உடையத் தொடங்கிய நிலமானியச் சமுதாயத்தினைப் (Feudal society) பகுத்தறிவுக்குப் பொருந்துமாறு செப்பம் செய்வதற்கு லீ என்ற கோட்பாட்டினைப் பயன்படுத்தினார். மக்கள் ஒருவர்க்கு ஒருவர் அன்பு செலுத்துதலும், ஆட்சியாளர்க்கு மரியாதை காட்டுதலும் ஆகிய இவ்விரண்டிற்கும் உரிய வெளி அடையாளங்களே சடங்கு, இசை ஆகியவற்றுடன் கூடிய பொது வழிபாடும் விழாக்களும் என்று விளக்கினார். கன்பூசியச் சிந்தனைகள் பலவும் யூதர்களின் நெறியாளர் மோசசு (Moses) என்பாரின் சிந்தனைகளுடன் ஒப்பிடத்தக்கவை என்பர். கன்பூசியசின் காலத்தில் 1. சடங்கு (Ritual), 2. இசை (Music), 3. வில்வித்தை (Archery). 4. ஊர்தி இயக்குதல் (Carriage driving), 5. எழுதுதல் (Writing), 6. கணிதம் (Mathematics) என்ற ஆறு அங்கங்களைக் கொண்டதாகக் கல்வித்துறை விளங்கியது.[1]

சடங்கு, இசை என்பனவற்றின் உள்ளார்ந்த பொருளையும் கன்பூசியசு விளக்கியுள்ளார். ஒரு நாட்டு

மக்களின் ஆடலைப் பார்த்து, அவர்தம் பண்பாட்டினை அறிந்து கொள்ளுதல் இயலும் என்றார். இசை என்பது உள்ளத்திலிருந்து வெளிப்படுவது; சடங்கு என்பது புறத்தே இருந்து வருவது (Music comes from the heart, while ritual comes from the outside) எனக் கூறினார். சமுதாயத்தை ஒருங்கிணைப்பது இசை; சமுதாயத்தின் தனித்தன்மையினைத் தீர்மானிப்பது சடங்கு என்றார். மேலும், இசை என்பது விண்ணகத்தை அல்லது நுண்மையைப் பிரதிபலிப்பது என்றும், சடங்கு என்பது மண்ணகத்தை அல்லது பருமையைப் பிரதிபலிப்பது என்றும் எண்ணினார் (Music represents heaven or the abstract, while ritual represents the earth or the concrete) என்னும் விளக்கினார். சடங்கினையும் இசையினையும் பண்டைய அரசர்கள் நிறுவியதற்குக் காரணம் இவை இரண்டும் நம் கண்ணுக்கும் செவிக்கும் விருந்தாக விளங்குவன என்பதனால் மட்டுமன்று; தக்கது, தகாதது இவைஇவை என்பதைக் கற்பிப்பதற்கும், மன்பதை ஒழுங்கினை மீண்டும் நிலைநாட்டுதற்குமே என்று எடுத்துரைத்தார்.[2]

மனிதநேயம் (Humanism) கன்பூசியத்தின் மையக் கருத்தாகும். சடங்கு, இசை என்பவற்றின் உள்ளார்ந்த பொருள் மனித உள்ளத்தைச் செம்மைப்படுத்தலே ஆகும். ஒருவன் உள்ளத்திற்குள்தான் கடவுளின் தேசம் (Kingdom of God) உள்ளது என்பதுதான் அவர் போதனையின் சாரம். நல்ல மகனாக, நல்ல மகளாக, நல்ல சகோதரனாக, நல்ல சகோதரியாக, நல்ல குடிமகனாக இருப்பதன் வாயிலாக ஒருவன் உண்மையான மனிதனாக (Real man) இருத்தல் முடியும் என்றார் கன்பூசியசு. "உனக்குப் பிறர் என்ன செய்யக் கூடாது என்று எதிர்பார்க்கிறாயோ அதனை நீயும் பிறர்க்குச் செய்யாதே" (Do not do unto others what you would not have others do unto you) என்ற போதனையினையே அவர் பன்முறையும் வழங்கினார்.[3] தனி ஒருவன் ஒழுக்கம் உடையவனாக இருந்தால்தான் சமுதாய ஒழுங்கு

நிலைபெறும் என்பதைப் பெரிதும் வலியுறுத்தினார். குடும்ப வாழ்வு ஒழுங்காக இருந்தால்தான் தேசிய வாழ்வு ஒழுங்காக அமையும் எனப் பேசினார். உலக ஒழுங்கு அமைவதற்குத் தனி மனிதனின் வாழ்வின் ஒழுங்கு தொடக்கமாக அமையும் என்று இயம்பினார்.

அறிவார்ந்த மேல் வகுப்பு (Intellectual upper class), அறம் ஆர்ந்த மேல் வகுப்பாகவும் (Moral upper class) இருத்தல் வேண்டும் என்பதைக் கன்பூசியசு வலியுறுத்தினார். பாரம்பரியமும் பண்புகளும் நிறைந்த மனிதனைக் குறித்துக் கன்பூசியசு தெளிவான சிந்தனை கொண்டிருந்தார். இத்தகைய மனிதனை, gentleman (சான்றோன்), superior man (உயர்மனிதன்), princely man (கம்பீர மனிதன்) எனக் குறித்தனர். அறக்கோட்பாடுகளும் அன்பும் பொருந்திய மனிதனையே இச்சொற்கள் சுட்டுகின்றன. இத்தகையோர் மற்றவர் பின்பற்றுதற்குரிய எடுத்துக்காட்டாக இருப்போர் ஆவர்.[4]

கன்பூசியசு பற்றிய மதிப்பீடு

கன்பூசியசு ஆற்றல் மிக்க அறபோதகர்; தோற்றப் பொலிவு வாய்ந்தவர். சாக்ரட்டீசைப் போலக் கவர்ச்சியான தோற்றமும் பேச்சுத் திறனும் பெற்றவர். தன்னை ஒருபொழுதும் முனிவர் (Sage) என்று அவர் சொல்லிக் கொள்ளவில்லை. ஆயினும், கற்பதில் களைப்பில்லாதவர் என்பதையும், தான் உணர்ந்தவற்றை மக்களுக்குப் போதிப்பவர் என்பதையும் அவர் ஒத்துக் கொண்டவர். அனலெக்ட்ஸ் (Analects) என்ற நூலில் காணப்படும் அவருடைய போதனைகள் பலவும் நகைச்சுவை மிக்க ஆசிரியர் ஒருவர்க்கும் அவர்தம் மாணவர்களுக்கும் இடையே நிகழ்ந்த சொல்லாடல்களே ஆகும். சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடுடைய வஞ்சகர்களை (Hypocrites) அவர் முற்றிலும் வெறுத்தவர். பொறுப்பற்ற ஆட்சியாளரை அரிசி மூட்டைகள் (rice-bags) என்று எள்ளி

நகைத்தார்.[5] ஒருவனின் கல்வி பாடலில் தொடங்குதல் வேண்டும்; நல்லொழுக்கத்தால் வலிமை பெறுதல் வேண்டும்; இசையில் முழுமை பெறுதல் வேண்டும் என்பது கலையுள்ளம் கொண்ட கன்பூசியசின் கருத்தாகும் (A man's education should begin with poetry, be strengthened by proper conduct, and consummated in music). இசையில் அவர்க்கு ஈடுபாடு மிகுதி. அவருடைய உணவுப் பழக்கம் பற்றிய ஒரு செய்தி குறிப்பிடத்தக்கது. பொருத்தமான சாற்றுடன் பரிமாறப்படாத உணவினை அவர் உண்பதில்லை; சரியாகச் சமைக்கப்படாத உணவினையும் உண்பதில்லை; பருவ காலத்திற்கு உரியதாகாத உணவினையும் உண்பதில்லை. உடுப்பதிலும் தனி ஆர்வம் கொண்டிருந்தவர். பொருத்தமான வண்ண ஆடைகளை மட்டுமே உடுத்தினார். குளிரைத் தடுப்பதற்காகத் தூங்கும் பொழுது மிக நீண்ட ஆடைகளை உடுத்திக் கொண்டார்.

தன்னைத் தளராத கல்வியாளர், ஆசிரியர் என்றே கருதியிருந்தார். அறிவுத் தேடலிலும் கல்விப் பயிற்சியிலும் களைப்பின்றி விளங்கியவர். வரலாற்று அறிஞர் என்ற வகையில் நடைமுறையில் உள்ள பழக்கவழக்கங்களையும், வரலாற்று ஆவணங்களையும் கொண்டு தம் காலத்துக்கு மிகவும் முற்பட்ட சமுதாயப் பழக்கங்களையும் சமயச் சடங்குகளையும் கண்டறிந்து காப்பாற்ற முயன்றவர். தன் உழைப்பின் பயனாக ஐம்பெரும் பனுவல்கள் என்னும் செவ்வியல் கருவூலத்தைத் தொகுத்துக் கொடுத்துள்ளார்.[6]

கன்பூசியசுக்கு மூவாயிரம் மாணவர் இருந்தனர். அவருள் எழுபத்திருவர் மட்டுமே The Book of Songs, The Book of History,The theory and practice of rituals and music என்பனவற்றில் முழுமையான தேர்ச்சி பெற்றிருந்தவர் என்பதை முன்னரும் கண்டோம். நகைச்சுவை உணர்வுடையவர் கன்பூசியசு. "உனக்கு என்ன தெரியும் என்பதை நீ அறிந்துகொள். உனக்கு என்ன தெரியாது என்பது உனக்குத்

தெரியாது என்பதை நீ அறிந்துகொள். அதுவே ஒருவனுக்கு என்ன தெரியும் என்பதற்கு அளவுகோல்" என்பது அவர் அறிவுரை.[7]

"தான் புரிந்தது தவறு என்பதை ஒருவன் தெரிந்திருந்தும், தன்னைத் திருத்திக் கொள்ளவில்லையென்றால் மற்றுமொரு தவறு புரிந்தவன் ஆகிறான்"

என்பதும் அவர் பொன்மொழி.

பாடற்பனுவலில் (The Book of Songs) ஒரு பகுதி உண்டு. அதில் ஒரு காதலனைப் பற்றிய செய்தி காணப்படுகிறது. "தன் காதலி தன்னை நினைக்கவில்லை என்பதன்று; தன்வீடு அவளிருக்குமிடத்திலிருந்து மிகவும் சேய்மையில் உள்ளது" என்று காதலன் கூறியதாக உள்ள அப்பகுதிக்குக் கன்பூசியசு தரும் நகைச்சுவை மலிந்த விளக்கம் இதுதான்:[8]

"உண்மையில் அவள் அவனை அறவே நினைக்கவில்லை; அவள் அவனை நினைத்திருந்தால் அவன் வீடு எங்ஙனம் தூரத்தில் இருப்பதாகத் தோன்றும்?"

வரலாற்றுப் புலமை என்பது கன்பூசியச் சிந்தனைப் பள்ளிக்குச் சிறப்பாக உரியது. கன்பூசியசு தொகுத்துள்ள ஐம்பெரும் பனுவல்களில் மருத்துவம், சோதிடம், தோட்டக்கலை என்ற பொருண்மைக்குரிய புத்தகங்களைத் தவிர எஞ்சியவை யாவும் கி.மு.213இல் அரசியல் குழப்பத்தால் எரிக்கப்பட்டன. கி.மு.212இல் கன்பூசியக் கல்வியாளர் 460 பேர்கள், சீனப் பெருஞ்சுவரை (Great Wall of China) எழுப்பிய சின் ஷி குவாங்கு (Cin Shihhuang) என்ற மன்னனை விமரிசனம் செய்ததற்காக உயிருடன் புதைக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சிக்குப் பின் ஐந்தாண்டு முடிந்ததும் இவனுடைய அரச மரபு அழிவுற்றது. ஆயினும் கன்பூசியத்தின் மூத்த புலமையாளர்கள் தம்

நினைவாற்றலினால், அழிக்கப்பட்ட நூல்களைக் காப்பாற்றினர். தொல்பழம் எழுத்தில் (ancient script) மூங்கிலில் எழுதப் பெற்றிருந்தமையின், அவற்றை மூங்கில் பொறிப்புக்கள் (Bamboo inscriptions) என்று கூறுதல் மரபு. பின்னர், இவை நவீன எழுத்தில் (Modern Script) பெயர்த்தெழுதப்பட்டன. எனவே, கன்பூசியசு நூல்கள் யாவும் 1. தொல்பழம் எழுத்து மரபு,2. நவீன எழுத்து மரபு என்ற இருவகை மரபுகளால் பேணப்பெற்று வந்தன. ஹன் அரச மரபு (Han Dynasty) ஆட்சி புரிந்த காலத்திலேயே இவ்விருவகை மரபுகளும் வழக்கில் இருந்தன. ஆயினும், செங் சுவான் (Cheng Hsuan) என்னும் மாபெரும் உரையாசிரியர் இவ்விரு மரபுகளையும் ஒருமைப்படுத்துவதற்குப் பெரிதும் முயன்றார்.

கன்பூசியச் செவ்வியல் பனுவல்கள் (Confusian Classics) என்ற குறியீடு The Five Classics, The Four Books என்ற தொகுதிகளையே இன்று வழக்கமாகச் சுட்டுகின்றது. இவற்றுள் The Five Classics என்ற தொகை நூல் கன்பூசியசினால் மாணவர்க்குப் பாடம் சொல்லப்பெற்று, அவராலேயே பதிப்பிக்கப்பெற்ற வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியது. The Four Books என்ற தொகை நூல் தன்னைப் பின்பற்றுவோரின் நூல்களையும், அவர்கள் பதிவு செய்துள்ள கன்பூசியசின் மூதுரைகளையும், அவற்றுக்கு அவர்கள் எழுதிய விளக்கங்களையும், அவை பற்றிய பிற்கால வளர்ச்சிகளையும் உள்ளடக்கியது.

மேலே குறிக்கப்பெற்ற இருவேறு தொகை நூல்களைத் தவிர, பதின்மூன்று செவ்வியல் பனுவல்கள் (Thirteen Classics) என்ற தொகை நூலும் பேசப்படுகிறது. கன்பூசியசு வாழ்ந்த காலத்திலேயே ஐம்பெரும் பனுவல்களுடன் (Five Classics) இசைப்பனுவல் (The Book of Music) என்ற நூலையும் சேர்த்து ஆறு செவ்வியல் பனுவல்கள் (Six Classics) வழங்கி வந்துள்ளன. இந்த ஆறாவது நூலில்

மறைந்தன போக எஞ்சிய பகுதிகள் யாவும் Liki என்ற தொகை நூலின் பத்தாவது நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

அனலெக்ட்சு (The Analects) என்ற நூல் செப்பம் செய்யப்பெறாதது. இதில் கன்பூசியசின் நல்லுரைகள் பொதிந்துள்ளன. எனினும், இதன்பல இயல்களில் கூறியது கூறலாகப் பல உரைகள் சேர்க்கப்பெற்றுள்ளன. பலரின் இடைச்செருகல்களால் இந்நூல் பருமனாகியது. செங்த்சே (Tsengtse) என்பாரின் மாணவர்கள் தொகுத்துள்ள இயல்களிலும் கன்பூசியசின் உரைகளைவிட செங்த்சேவின் உரைகளே கூடுதலாக இடம்பெற்றுள்ளன. பழமை முறையில் அனலெக்ட்சைப் பயிலும் முறை சுட்டுதற்கு உரியது. சீனரின் நாள் காட்டியில் குறிப்பிட்ட நாள்களில் இத்தொகை நூலின் குறிப்பிட்ட நீதியுரைகள் ஓதப்படும். ஒரு நாளுக்கு ஒரு நீதி உரையினை மட்டுமே வாசகர் சிந்தித்துப் பொருள் காணுதல் வேண்டும். அந்த உரையின் உள்ளார்ந்த பொருளும் கருத்தும் இன்னதென விளங்கிக் கொண்ட பிறகே மற்ற நீதி உரைகளைப் பயிலுதற்கு ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளப்பெறும். இதுவே பழைய சீனக் கல்வி முறை ஆகும்.

கன்பூசியசும் திருவள்ளுவரும்

ஆசிய நாட்டின் கிரேக்கர்கள் என்று சீன நாட்டவரைச் சுட்டுதல் மரபு. கிரேக்கப் பண்பாட்டின் உயிர்நாடி அழகும் வாய்மையும் என்றால், சீனப் பண்பாட்டின் சிறப்பு ஒத்திசை (Harmony), நேர்மை, பொருளொடு பொருந்திய சமூகப் பழக்க வழக்கங்கள் என்பனவற்றில் அடங்கியுள்ளன. சீன அறவியல் வரலாற்றில் கன்பூசியசு, இலவோசியசு என்னும் இருபெரும் சான்றோரும் முக்கியத்துவம் பெறுகின்றனர். இவர்கள் இருவரும் மகாவீரரும் புத்தரும் போல உடன்காலத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒப்பற்ற மேதை ஆகிய கன்பூசியசு சீனர்களின் சிந்தனைச் சிற்பியாகப் போற்றப்பெறினும் உலகப்பெரும் சான்றோர் வரிசையில் இடம்பெறத்தக்கவர் என்பதில் ஐயமில்லை. அறிவினைப் பெரிதும் மதித்தார். "அறிவுத் தேட்டத்தில் ஆர்வம் உள்ளவன் உணவையும் மறக்கிறான்; அறிவினைப் பெற்ற மகிழ்ச்சித் திளைப்பில் தன் சோகத்தையும் மறக்கிறான்; முதுமை நெருங்குவதையும் பார்க்கிறதில்லை" என்று தன்னிலையினைப் புலப்படுத்துதல் காண்க. இப்பெரியார் தமக்குமுன் வழங்கிவந்த அறங்களையும் நல்ல சிந்தனைகளையும் தொகுத்துக் கொடுத்தவர் என்றும் புதியன ஒன்றும் கண்டுரைத்தவர் அல்லர் என்றும் தனக்குத் தானே சொல்லிக் கொண்டவர். இவர் தொகுத்த நூல்கள் ஐந்து. இவர் புகட்டிய போதனைகள் இவர் சீடர்களால் தொகுக்கப்பட்டன. இவற்றில் காணப்படும் அறக்கருத்துக்கள் எந்த அளவில் திருக்குறள் சிந்தனைகளுடன் ஒத்து வருவன என்பதை அறிதல் நல்லது.

அன்புடைமை, நடுநிலை பிறழாமை, சான்றாண்மை, அறிவுடைமை, நேர்மை என்னும் ஐந்தினையும் கன்பூசியசு மேலான அறங்களாக வகுத்துள்ளார். நடுப்பாதை, பண்புடைமை, புலனடக்கம் என்பன இவரால் வலியுறுத்தப் பெற்றன. செல்வங்களைவிட அறவழி ஒழுகுதல்தான் மேம்பட்டது என்று எடுத்துரைத்தார். எந்த அளவில் ஒருவன் நல்லவனாகஇருக்கிறானோ, அந்த அளவில் அவன் தக்கவன் என்றும், நல்லியல்பு என்பது சடங்குகளின் மூலம் புலப்படுத்துவது அன்று என்றும், ஒழுங்குறுத்தப்பெற்ற நடுப்பாதை என்னும் பொன் வழியில் நடப்பதன் மூலமே காட்டமுடியும் என்றும் கருதினார். இலக்கியம், அறம், ஆன்மீக ஈடுபாடு, வாய்மை என்ற நான்குமே இவர் மிகுதியும் புகட்டிய பொருளாகும்.[9] 'அறிவு' என்பதற்கு இவர் தரும் விளக்கம் அடக்கத்தை வளர்க்கும் ஆற்றல்

வாய்ந்தது. தெரிந்ததைத் தெரிந்தது என்றும், தெரியாததைத் தெரியாது என்றும் சொல்லுவதுதான் அறிவு என்ற இவர் விளக்கம், ‘அறிதோறும் அறியாமை கண்டற்றால்’ என்ற குறள் கருத்துடன் இணைத்து எண்ணத்தக்கது. கட்டிளம் காளைப் பருவத்தில் காமத்தையும், பேராற்றலும் பெருவலிமையும் படைத்த காலத்தில் வம்புரைகளையும், ஆற்றலழியும் முதுமைக் காலத்தில் வெளவுதலையும் தடுத்துத் தற்காத்துக் கொள்ளுதல் வேண்டும்என்பது இச்சீன ஞானியின் அறிவுரையாகும். இவை யனைத்தும் திருக்குறளில் அதிகாரங்களின் தலைப்புக்களாகவும் தனிக்குறள்களாகவும் விரிவும் விளக்கமும் பெற்றிருத்தல் காணலாம். திரிகரணத் தூய்மையினைச் சீனச் சான்றோரும் வலியுறுத்தலின், உலகப் பெருஞ் சான்றோர்களின் பொதுக் கோட்பாடாக இதனை மதித்தல் வேண்டும். பிறர் தீங்கு தூற்றுவோர், புறங்கூறுவோர், பழிப்புரை பேசுவோர், சுருங்கிய உணர்வுடன் திடமாகத் திகழ்பவர், வெறும் ஆற்றல் மட்டும் உடையோர் என்னும் இவர்களைக் கன்பூசியஸின் இலட்சிய மேனிலை மனிதன் (Superior Man) வெறுக்கிறான்.[10]

சிந்தனை இல்லாத கல்வியும் கல்வி இல்லாத சிந்தனையும் ஆபத்தானது என்பது இவர்தரும் பொன்மொழி. நல்லதை உணர்ந்தும் அதனைச் செய்யாதவன் கோழை என்கிறார். சமசித்தம் இவரால் வலியுறுத்தப்பெற்றது. நல்ல அரசின் இயல்புகளையும் இவர் கருதியுள்ளார்.[11] இரக்கம் இன்மை, பழிக்கு நாணாமை, பண்பின்மை, நல்லது கெட்டதுஅறியும் ஆற்றலின்மை முதலியன மனிதப் பண்புகள் அல்ல என்று பறை சாற்றினார். திருக்குறளில் குடிமக்களுக்குரிய தகுதிகளை வகுத்துக் கூறும் குடியியலில் நாணுடைமை, பண்புடைமை முதலியன கூறப்பெறுதலும், அறத்துப்பாலில் அன்புடைமை, அருளுடைமை இடம்பெறுதலும், ‘நன்றின்பால் உய்ப்பது அறிவு’ என

இனம் காட்டுதலும் தமிழ்நாட்டுக் கன்பூசியசு என மதிக்கத்தக்க வள்ளுவரின் வளம்மிக்க அறவுணர்வுக்கு நல்ல சான்றாகும். "பிறர் உனக்கு என்ன செய்யக்கூடாது என்று எதிர்பார்க்கிறாயோ, அதை நீயும் பிறருக்குச் செய்யாதே" என்பது சீனப் பெரியாரின் கண்ணியம்மிக்க புண்ணிய போதனையாகும்.[12] இயற்கைக் கோளாறுகளுக்கு மக்களின் ஒழுங்கீனத்தைச் சீன ஞானியர் காரணம் காட்டியது போல் வள்ளுவரை உள்ளிட்ட தமிழ் மேதைகளும் கருதியுள்ளனர். அறத்திற்குப் புறம்பாகவும் முறைகேடாகவும் ஈட்டப்பெறும் செல்வமும் சிறப்பும் அலையும் மேகம் போன்றது என்றார் கன்பூசியசு. அருளொடும் அன்பொடும் வாராத செல்வத்தை ஏற்கக் கூடாது என்று திருவள்ளுவரும் தெளிவுறுத்தியுள்ளார் (755). எனவே, உலக மக்கள் உன்னதம் அடைவதற்குக் கன்பூசியசும் திருவள்ளுவரும் காட்டிய நெறி ஒப்பற்றது என்பது புலனாகும்.

மேற்கோள் குறிப்புக்கள்

1. Lin Yutang, ***The Wisdom of Confucius, The Modern Library,*** New York, *1938*, p.*15*.
2. Ibid, p.*16*.
3. Ibid, p.*21*.
4. Ibid, p.*23*.
5. Ibid, p.*28*.
6. Ibid, p.*31*.
7. Ibid, p.*32*.
8. Ibid, p.*37*.
9. Royston Pike, ***Ethics of the Great Religions,*** p.*221*.
10. Ibid, p.p.*222*.
11. Kenneth Saunders, ***The Ideals of the East and West,*** p.*49*, p.*68*, p.*70*.
12. Ibid, p.*49*.

6. கன்பூசியசின் பனுவல்களில் விழுமியம்

1. லீ (Li-Lee) என்னும் கோட்பாடு

பழைய சீன மொழியில் லீ (Li) என்ற சொல் சமுதாய ஒழுங்கு, சீர்மை, ஒத்திசைவு (Harmony) முதலிய பல பொருள்களைக் குறித்துள்ளது. பேராசான் கன்பூசியசு தன் ஒரே மகனுக்கு லீ என்ற பெயரிட்டுள்ளார் என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும். தொடர்ந்து சீனமக்கள் இன்றளவும் இப்பெயரினைத் தம் பிள்ளைகளுக்கு இட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நவயுகத்தின் சீர்திருத்தச் செம்மலாக விளங்கிய தந்தை பெரியார் மேற்கொண்டிருந்த பகுத்தறிவு, விடுதலை என்னும் கொள்கைப் பெயர்களை அவரிடம் மரியாதை கொண்டிருந்த பெருமக்கள் தம் பிள்ளைகளுக்குப் பெயராகச் சூட்டி மகிழ்ந்துள்ளனர் என்ற அண்மைக்கால உண்மையும் இயைபு கருதி இங்கு எண்ணிப் பார்த்தற்கு உரியது.

அறுவகைச் செவ்வியல் பனுவல்களிலும் (Six Classics) ஊடுருவி விளங்கும் லீ என்னும் கன்பூசியக் கோட்பாட்டினைச் சுருக்கமாகக் காண்போம்.

சமுதாயம், அரசு, சமயம், அறம் ஆகியவற்றின் அடித்தளமாக இருப்பது **லீ** ஆகும். சமுதாய ஒழுங்கினையும், சமுதாயக் கட்டுப்பாட்டினையும் குறிப்பதாக லீ விளங்குகிறது. லீ கோட்பாட்டினை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாகப் பண்டைய நிலமானிய அமைப்பினை (Feudel Order) மீண்டும் நிறுவுவதற்குக் கன்பூசியசு முயன்றனர் என்பர். பல்வேறு படிநிலைப்பட்ட பதவிகளை உள்ளடக்கிய நிலமானிய அமைப்புடன் நின்றுவிடாமல் குடும்பம், சமுதாயம், அரசியல் என்ற அமைப்புக்களில் அடிப்படையான

மனித உறவுகளுக்கும் **லீ** என்னும் கோட்பாடு விரிவு படுத்தப்பட்டுள்ளது. முற்றிலும் ஒழுங்குடைய ஒரு தேசிய அமைப்பினை அறவயப்பட்ட அரசியல் அடிப்படையில் அமைத்தல் வேண்டும் என்பது தான் கன்பூசியசின் விருப்பம்.[1]

சமய வழிபாட்டு முறைகள், சடங்குகள் ஆகியவற்றைச் சார்ந்து லீ அமைந்துள்ளது. சமுதாயக் கட்டுப்பாடும் ஒத்திசைவும்தான் லீ யின் மையக் கொள்கையாகும். இசை எனபது வெறும் மணியடிப்பதுடனும் பறைகள் கொட்டுவதுடனும் நின்று விடுவதில்லை. அதைப்போலவே லீ என்பது பலிப்பாத்திரங்களைச் சுற்றி ஆடல் புரிவதுடன் நின்று விடுவதில்லை. சடங்கும் இசையும் தெய்வம் அஞ்சல் (God-fearing) என்ற கடவுட் பக்தியினின்றும் படைத்துக் கொள்ளப்பட்டவை. சடங்கு செய்வதின் வழியாகவும் இசை பாடுதலின் வாயிலாகவும் மகிழ்ச்சியான மனநிலையும் சமுதாய ஒத்திசைவும் உண்டாகின்றன. இந்தப் பயனை அடையும் குறிக்கோளுடன்தான் தெய்வ வழிபாடு, பேரரச மூதாதையர் வழிபாடு, ஞாயிறு திங்கள் வழிபாடு, மலைகள் ஆறுகள் வழிபாடு, அடுக்களைத் தெய்வ வழிபாடு, வீட்டின் தென்மேற்கு மூலைக்குரிய (-பிள்ளையார் மூலை எனத் தமிழர் கூறுவர்) தெய்வ வழிபாடு, நாட்டார் விழாக்கள் என்பன சீன நாட்டில் பண்டைக் காலத்தில் ஏற்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்ட சமயத்தினையும் லீ என்ற சொல்லால் கன்பூசியசு குறிப்பிட்டுள்ளார். மேலும்,

1. கல்வியால் உன் அறிவினை விரிவு செய்.
2. சமய நெறியால் உன் நடத்தையினை ஒழுங்கு செய்.
3. உன் சுயத்தினை உணர்; பின் சமயம் சார்வாய்.

என்ற மூன்று கருத்துக்களும் உண்மையான மனிதத்தினை (Manhood) உருவாக்குவன என்று கன்பூசியசு போதனை புரிந்தனர். இதுவே லீ என்றும் கூறினார்.[2]

கன்பூசிய நெறிதான் (Confucianism) லீ யின் சமயம் என்பது இன்றளவும் வழங்கிவரும் கருத்தாக உள்ளது. வேள்வியில் பலிகொடுக்கப்பட்ட புலால் உணவினை உட்கொள்ளுதற்கு முன்னர்க் கையினைக் கழுவிக் கொள்ளுவதையும் கூட, சமயச் சடங்காகக் கன்பூசியசு கருதினார்.[3]

சமுதாய ஒழுங்கிற்குத் தெய்வம் அஞ்சலும் (God fearing), பக்தியும் வேண்டப்படும் என்பது அவர் போதனையாகும். கன்பூசியத்தின் மையக் கோட்பாடாக விளங்கும் லீ (Li) பின்வரும் பொருள்களைக் குறிக்கிறது.[4]

1. லீ என்பது சமயம் (Religion).
2. சமயம் உள்ளிட்ட சமுதாய ஒழுங்கின் பொதுக் கொள்கையினையும் குறிக்கும்.
3. பகுத்தறிவுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்ட நிலமானிய அமைப்பினையும் சுட்டுகிறது.
4. சமுதாய, அற, சமயச் செயற்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கிய அமைப்பினையும் குறிப்பிடுகிறது.
5. வரலாற்றுப் புலமையினையும் (Historical scholarship) சுட்டும்.
6. சமய வழிபாடு, அரசாங்கச் சடங்குகள், நாட்டார் (Folk) எடுக்கும் விழாக்கள், திருமணச் சடங்கு, ஈமச் சடங்கு, 20 வயதடைந்த சிறுவர், மற்றும் 15 வயதடைந்த சிறுமியர்க்குரிய குல்லாய் மற்றும் சீப்பு தொடர்பான சடங்குகள், படையொழுக்கம் (army discipline), கல்வி அமைப்பு, பாலியல் நடத்தை,

இல்வாழ்க்கை, உண்ணுதல், பருகுதல், வில்வித்தை, ஊர்தி ஓட்டுதல், வேட்டையாடுதல் உள்ளிட்ட விளையாட்டுக்கள், இசை, ஆடல் பற்றிய ஒழுங்கு முறையினையும் லீ குறிப்பிடுகிறது.

7. பெற்றோர் பிள்ளைகளுக்குக் காட்டும் அன்பு, பிள்ளைகள் பெற்றோருக்குச் செலுத்தும் பக்தியுடன் கூடிய அன்பு, இளவல்களுக்கு மூத்தோர் காட்டும் அன்பு, மூத்தோர்களுக்கு இளையோர் செலுத்தும் அன்பு, நண்பர்களிடையே விசுவாசம், குடிமக்கள் அரசு ஆணைக்கு அளிக்கும் மதிப்பு, அரசு குடிமக்களுக்கு ஆற்றும் நன்மை முதலியவற்றின் ஒட்டு மொத்தத்தினையும் லீ குறிப்பிடும்.

8. தனிமனித ஒழுக்கம், எல்லாவற்றிலும் செப்பம், தக்க இடத்தில் தக்க பொருள் இருத்தல், சடங்குமுறை, பழைமையுடன் தொடர்தல், மரியாதை, நற்பண்புகள் அனைத்தையும் லீ குறிப்பிடுகிறது.

இங்ஙனம் லீ (Li) பற்றிக் கன்பூசியசு கூறியுள்ள விளக்கங்கள் யாவும் ஒருங்கிணைந்து ஒருகோட்பாடாகக் கருதப்படுகிறது.

பல்வேறு பனுவல்களையும் கற்பிப்பதில் ஏற்படக் கூடிய அபாயம் பற்றியும் சீன ஞானி செப்பியுள்ளார்.[5] அவற்றையும் சிறிது காண்போம்:

1. கவிதையைக் கற்பிப்பதில் உள்ள அபாயம் என்னவெனில், மக்கள் மிகவும் மெல்லிய இதயம் கொண்டவராக இருந்து விடுவர் என்பதாம்.

2. வரலாற்றினைக் கற்பிப்பதில் உள்ள அபாயம் என்னவெனில், மக்கள் பிழையான கதைகளையும் நிகழ்வுக் கதைகளையும் நிரம்ப அறிதல் கூடும் என்பதாம்.

3. இசையினைக் கற்பிப்பதில் உள்ள அபாயம் என்னவெனில், மக்கள் கட்டுப்பாட்டில் அடங்காமல் ஊதாரித்தனமாகப் போய் விடுவார்கள் என்பதாம்.

4. தத்துவத்தினைக் கற்பிப்பதில் உள்ள அபாயம் என்னவெனில், உள்ளம் வளைந்து போவார்கள் என்பதாம்.

5. லீ (Li) யைக் கற்பிப்பதில் உள்ள அபாயம் என்னவெனில், சடங்குகள் அளவுக்குமேல் விரிவடைந்துவிடும் என்பதாம்.

6. இளவேனிலும் இலையுதிர் காலமும் (Spring and Autumn) என்ற நூலைக் கற்பிப்பதில் உள்ள அபாயம் என்னவெனில், ஒழுங்கீன உணர்வு மக்ளுக்கு உண்டாகிவிடும் என்பதாம்.

மேலே குறிப்பிட்ட துறைகளைப் பயில்கிறவர்களுக்கு எத்தகைய தகுதிகள் வேண்டப்படும் என்பதையும் கன்பூசியசு கருதியுள்ளார்:

1. அன்பும் அறிவும் மென்மையும் எளிய உள்ளமும் கொண்ட ஒருவன் கவிதைக்கல்வியில் ஆழ்ந்திருக்கிறான் என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

2. பொய்யும் பொருத்தமும் இல்லாத கவிதைகளையும், நிகழ்வுகளையும் புறக்கணிக்கக் கூடிய ஒருவன் விரிந்த உள்ளம் கொண்டவனாய், கடந்தகால நிகழ்வுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பான் எனில், வரலாற்றுக் கல்வியில் அவன் ஆழ்ந்திருக்கிறான் என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

3. ஊதாரித் தனமில்லாத ஒருவன் பெருந்தன்மையும் நற்குணமும் வாய்க்கப் பெற்றவன் என்றால், அவன்

இசைக்கல்வியில் ஆழ்ந்திருக்கிறான் என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

4. சலனமில்லாத அமைதியும் சிந்தனையும் உடையவனாய், கூர்ந்து நோக்கும் ஆற்றல் பெற்றவனாய் வளைந்த உள்ளம் இல்லாதவனாய் உள்ள ஒருவன் தத்துவக் கல்வியில் ஆழ்ந்திருக்கிறான் என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

5. பணிவும், கண்ணியமும், சிக்கனமும் உடையவனாய், அளவுக்கு மிஞ்சிய சடங்குகள் செய்யாதவனாய் உள்ள ஒருவன் லீ கல்வியில் ஆழ்ந்திருக்கிறான் என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

6. சொல் நாகரிகம் உடையவனாய், உவமை முதலிய அணி நலப் புலப்பாட்டுத்திறம் பெற்றவனாய், நடைமுறையில் காணப்படும் ஒழுங்கீனத்தால் பாதிப்படையாதவனாய் உள்ள ஒருவன் இளவேனிலும் இலையுதிர் காலமும் (Spring and Autumn) என்ற நூற் கல்வியில் ஆழ்ந்திருக்கிறான் என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

இவ்வாறு அறுவகைக் கல்வியையும் ஆழ்ந்து கற்பவர்களின் இயல்புகளையும் தகுதிகளையும் வரையறுத்துக் கூறிய கன்பூசியசு, இலட்சியப் பேரரசன் எவ்வாறு செயற்படுவான் என்பதையும் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

1.1. இலட்சியப் பேரரசனின் செயற்பாடுகள்

விண்ணகத்தையும் மண்ணகத்தையும் (The Heaven and Earth) ஒத்து விளங்குகிறவன் இலட்சியப் பேரரசன் (Ideal Emperor). ஞாயிறும் திங்களும் போல் பேரரசனும் ஒளி வீசுகிறான். அவன் பேரொளி சிறுசிறு பொருள்களையும் விலக்காமல் நான்கு கடல்களிலும் (Four Seas) பாய்கிறது.

அரசவையில், நீதியும் நேர்மையும் உடைய மனிதனைப் பற்றியும் சமுதாயச் சீர்மைப் பண்புகளைப் பற்றியும் குறிக்கோளைக் குறித்தும் அவையத்தாருடன் பேரரசன் விவாதிக்கிறான்.

தன் வீட்டில் உள்ள பொழுது செவ்வியல் பாடலிசையினையும் (The music of ya) புனிதமான நாட்டு வாழ்த்திசையினையும் (sung) பேரரசன் கேட்டு மகிழ்கிறான்.

அவன் நடந்து செல்லும் பொழுது காலில் அணிந்துள்ள விலையுயர்ந்த கல்தொங்கலின் ஓசைகளைக் கேட்கலாம். அவன் குதிரை பூட்டிய தேரில் ஏறிச் செல்லுகையில், அழகியரின் மணிகள் இசையினைக் கேட்கலாம்.

பேரரசனின் இல்வாழ்வு அலங்காரம் ஆனது. அவன் அழகிய தோற்றம் போலவே சிறந்த ஒழுக்கமும் உடையவன். அவன் ஆணையின்வழி அரசியல் அதிகாரிகள் தங்களுக்குரிய கடமைகளைப் புரிகின்றனர். சமுதாய வாழ்வின் முழுமையான நடைமுறையினையும் சீர்மையினையும் செம்மையினையும் அவன் ஆட்சி வழங்குகிறது.

பாடற்பனுவல் (The Book of Songs) என்ற செவ்வியல் நூல்,

> "அறத்தகைப் பேரரசன் தன்புறத் தோற்றத்திலும் ஒழுக்கத்திலும் குற்றமற்றவனாகத் திகழ்கிறான்; அவ்வாறு திகழ்வதால் தேசத்திற்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறான்"

என்று கூறுகிறது.[6] மேலும்,

"அவன் இடும் கட்டளைகளை அதிகாரிகள் பணிவுடன் ஏற்றுச் செயற்படுவதால், நாட்டின் ஒத்திசைவினை (Harmony) அடைகிறான். ஆள்வோரும் ஆளப்படுவோரும் ஒருவருக்கொருவர் அன்புடையவராய்

நட்புப் பாராட்டினால், பேரரசன் நட்புச் சூழலைப் பெறுகிறான்” என்றும் அந்நூல் கூறுகிறது.

மக்கள் தங்களுக்குத் தேவையானவற்றைக் கேட்காமலேயே பெறுகிறார் என்றால், அப்பேரரசன் தேசத்தின் நம்பிக்கையினை அடைகிறான் என்பது பொருளாகும். மக்களுக்குத் துயர் தரும் காரணங்களை அவன் களைகிற பொழுது, நாட்டில் உகந்த நல்வாழ்விற்கு அவன் வழியமைக்கிறான். பொது ஒத்திசைவாலும் (General Harmony) நட்புச் சூழலினாலும் (Atmosphere of friendliness), அரசர்கள் வலிமையின் வல்லமையாலும் அறத்தின் ஆற்றலாலும் தத்தம் நாடுகளை நன்கு ஆட்சி செய்கிறார்கள்.

எடை பார்ப்பவர்களுக்குத் துலாக்கோலும், தச்சர்களுக்குக் கருவிகளும் மாலுமிகளுக்குத் திசை காட்டும் கருவிகளும் உதவுதல்போல், சமுதாய ஒழுங்கிற்கு லீ (Li) பயன்படுகிறது.[7]

ஒருவரை ஒருவர் மதிப்பதும், மரியாதை செலுத்துவதும் லீ என்ற கொள்கையின் விளைவாக உள்ளது. இதன் பயன்பாட்டினைப் பின்வருமாறு பட்டியல் இடலாம்:

1. கோயில்களில் வழிபாட்டிற்கு லீ பயன்படுத்தப்படும் பொழுது நமக்குப் பக்தி உணர்ச்சி உண்டாகிறது.
2. அரசவையில் லீ பயன்படுத்தப்படும் பொழுது, அரசு அலுவலர்களின் தரங்களில் ஒழுங்கு உண்டாகிறது.
3. வீட்டிற்கு லீ பயன்படுத்தப்படும் பொழுது, பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்கும் இடையே பாசம் உண்டாகிறது; சகோதரர்களுக்கு இடையே ஒத்திசைவு உண்டாகிறது.
4. சிற்றூர்க்கு லீ பயன்படுத்தப்படும் பொழுது மூத்தோர், இளையோர் ஆகியோருக்கு இடையே மரியாதை ஒழுங்கு உணர்வு உண்டாகிறது.

எனவே, வீட்டையும் நாட்டையும் சமுதாயத்தினையும் ஒழுங்குபடுத்தும் பேராற்றலாக லீ (Li) செயல்படுகிறது என்று கன்பூசியசு தெளிவுறுத்தியுள்ளார்.

லீ என்பது சடங்குகளையும் குறிக்கும் என்பதால், பல்வேறு சடங்குகள் பயன்தருவதற்கு அஃது எவ்வாறு உதவுகிறது என்பதையும் சீன ஞானி சிந்தித்துள்ளார்.

1. அரசவையில் செய்யப்படும் கிரியைகளும் சடங்குகளும் அரசர்க்கும் அமைச்சர்க்கும் இடையே நல்லுறவுகளை உண்டாக்கும்.
2. இராச தந்திரிகளின் பரிமாற்றங்கள் பற்றிய சடங்குகள் பல்வேறு நாடுகளின் அரசர்களுக்கு இடையே நல்லுறவினை நிலைபெறச் செய்யும்.
3. பெற்றோர்க்குப் பிள்ளைகளும் மன்னருக்குக் குடிமக்களும் புரியும் பலித்தொடர்பான ஈமச்சடங்குகள் தத்தம் நன்றியுணர்வினைப் புலப்படுத்துவதற்காகவே அமைந்தவை.
4. மூத்தோர்க்கும் இளையோர்க்கும் ஒழுங்கினையும் சீர்மையினையும் நிலவச் செய்யும் நோக்கத்தில் சிற்றூர்களில் மதுவருந்தும் விருந்து தொடர்பான சடங்குகள் நடைபெறுகின்றன.
5. கணவன், மனைவி ஆகிய இருபாலாரின் தனித்தன்மையினை விளக்கும் பொருட்டுத் திருமணச் சடங்குகள் நடக்கின்றன.

இவ்வாறு லீ யின் ஒரு கூறாகிய சடங்குகள் சமுதாய மேம்பாட்டிற்குப் பயன்படும் பாங்கினையும் கன்பூசியசு விரிவாக விளம்பியுள்ளார்.[8]

பழைய மரபினையும் சடங்குமுறைகளையும் அழிக்கக் கூடாது என்பதுதான் கன்பூசியசின் கருத்தாகும். இப்பொருண்மையில் அவர் கூறும் கருத்துக்கள் பழைய

நாகரிகங்களைக் கொண்ட உலக நாடுகளுக்கும் பொருந்துவனவாகவும் உள்ளன. அவர் கூறிய கருத்துக்களில் முதன்மையான சிலவற்றை இங்கே காண்போம்.

லீ எனப்படும் சமுதாய ஒழுங்குக் கொள்கை அறக்கழிவினால் உண்டாகும் சமுதாயக் குழப்பத்தினைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் படைத்தது. ஓர் உவமையின் வாயிலாகக் கன்பூசியசு இக்கருத்தினை விளக்கியுள்ளார். பெருவெள்ளத்தினை ஓர் அணை தடுத்து நிறுத்துதல் போல லீ என்பது சமுதாயக் குழப்பம் அல்லது சீரழிவு பெருக்கெடுத்து வரும்பொழுது தடுத்து நிறுத்தும் என்றார்.

லீ என்பது பழைய கோட்பாடு என்பதற்காக அதனை ஒழிப்பதற்கு எண்ணுவோரைத் திருத்தும் வகையில் கன்பூசியசு கூறும் கருத்தினைக் கண்போம். பழைய அணை என்பதால் அது பயன்படாது எனக் கருதிக் கொண்டு அதனை அழிக்கக் கருதும் மக்கள் வெள்ளப்பெருக்கால் உறுதியாக அழிவினைச் சந்திக்க வேண்டியிருக்கும். அதுபோலவே, லீ என்பது பழைமையானது, பயன்படாதது என்று எண்ணங் கொண்டு அதனை அழிக்க எண்ணுவோர் பெரும்பேரழிவினைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்தார்.

எனவே, திருமணச் சடங்குகளைக் குறைத்து மதித்தாலோ, மதிக்காமல் போனாலோ, திருமண உறவுகள் பாதிக்கப்படும்; ஒழுக்கக்கேடு தலைவிரித்தாடும் என்று எச்சரிக்கை விடுத்தார்.

சிற்றூர் மது விருந்து தொடர்பான சடங்குகள் புறக்கணிக்கப்பட்டால், மூத்தோர் இளையோர் ஆகியோர்க்கிடையில் நிலவும் ஒழுங்கும் முறைமையும் மறைந்து போவதுடன் சண்டைச் சச்சரவுகளும் அத்து மீறல்களும் அதிகரித்துவிடும் என்றும் எச்சரிக்கை செய்தார்.

. ஈமச்சடங்குகள், பலிச்சடங்குகள் என்பன புறக்கணிக்கப்பட்டால் சிறுவர்களிடம் நன்றியுணர்வும், குடிமக்களிடம் விசுவாசமும் போய்விடும் என்றும், மூதாதையரின் ஆவிகள் மறைந்துவிடும் என்றும் கூறினார்.

இராசதந்திரிகள் வருகைகள் தொடர்பான சடங்குகள் அவமரியாதை செய்யப்பெற்றால், தொடர்புடைய நாட்டினர், அரசர் தலைக்கனம் பிடித்துப் படையெடுப்புப் போர்கள் மூண்டுவிடும் என்றார்.

எனவே, லீ (Li) என்பதன் பண்பாட்டுப் பணி கட்புலன் ஆகாதது என்று அறிதல் வேண்டும். தீயவழியினின்றும் மக்களைத் திருப்பி நல்வழியில் செலுத்துவது லீ ஆகும். எனவே, பண்டைய மன்னர்கள் லீக்கு முக்கியத்துவம் அளித்தனர். மாற்றப்பனுவலில் (The Book of Changes),

> "பொருள்களின் தொடக்கம் முதலே பேரரசர் கவனம் செலுத்துதல் வேண்டும். தொடக்கத்தில் ஓர் அங்குலத்தில் 1/100 அல்லது 1/1000 அளவில் உள்ள வேறுபாடு கூட, முடிவில் 1000 மைல் வேறுபாட்டில் முடிந்துவிடும்"

என்று ஒரு பகுதியில் கூறப்பட்டுள்ள கருத்து நம் அனைவரின் சிந்தனைக்கும் உரியது.[9]

1.2. கோமகன் ஐ - கன்பூசியசு உரையாடலில் /லீ/ கோட்பாடு

கோமகன் ஐ (Duke Ai) "இந்தப் பெரிய லீ என்பது என்ன? மிகவும் முக்கியமானவிடயம் என்ற கருத்தில் இதனைப் பற்றிக் கூடுதலாகத் தாங்கள் பேசுதல் ஏன்" என்று பேராசான் கன்பூசியசைக் கேட்டான். கன்பூசியசு, "உங்கள் பணிவுள்ள அடியேன் உண்மையில் லீயை அறியும் தகுதி உடையவன் அல்லன்" என்றார். ஆனாலும், 'தாங்கள் அதுபற்றி அடிக்கடி விடாமல் பேசுகிறீர்?' என்றான் கோமகன். விரிவான விடையினைச் சீன ஞானி வழங்கத் தொடங்கினார்:

"மக்கள் வாழ்வில் அறிந்தனவற்றில் எல்லாம் லீ (Li) மகத்தானது. லீ இல்லாமல் பிரபஞ்சத்தின் ஆவிகளுக்கு முறையான வழிபாடு செய்தல் எப்படி என்பது கூட நாம் அறிய முடியாது. அரசர் அமைச்சர், ஆளுவோர் ஆளப்படுவோர், மூத்தோர் இளையோர் ஆகியோரின் தராதரமும் லீ இல்லாமல் தீர்மானிக்க முடியாது; இருவேறு பாலாரின் முறையான உறவு, பெற்றோர் பிள்ளைகள் உறவு, சகோதரர்கள் இடையே அமையும் உறவு, அல்லது குடும்பத்தின் பலதரப்பட்ட உறவுகள் - இவற்றை வேறுபடுத்தி உணர முடியாது.

எனவேதான், பெருமகன் (-Gentleman) லீ க்கு உயர் மதிப்பு வழங்குகிறான்; அதன் பண்புகளை மக்களுக்குக் கற்பிக்க முற்படுகிறான்; சமுதாய வாழ்வின் பல்வகை வடிவங்களையும் ஒழுங்குபடுத்த முன்வருகிறான். இவையனைத்தும் நிலைநிறுத்தப் பெற்ற பின்னர், பல்வேறு நிறுவனங்களின் (Institutions) அதிகாரிகளுக்குரிய அடையாளங்களாகிய சம்பிரதாய அங்கிகளையும் சின்னங்களையும் நிறுவுகிறான். எல்லாம் ஒழுங்காய் இருக்கிற பொழுது, பிணங்களைப் புதைப்பது, துக்கம் கொண்டாடுவது ஆகியவற்றுக்குரிய காலங்களைக் குறிக்கிறான். வேள்வி செய்வதற்குரிய பாத்திரங்கள், கொடுக்கப்படும் பலி உணவுகள் ஆகியவற்றை வழங்குகிறான். மூதாதையர் கோயில்களை (Ancestral Temples) அழகுபடுத்துகிறான்.

ஆண்டுதோறும் உரிய பருவங்களில் வேள்விகள் செய்யப்படுகின்றன. இதனால், பல்வேறு பழங்குடிகளுக்கும் மரபுகளுக்கும் இடையே சமுதாய ஒழுங்கு அமைகிறது. இவ்வளவும் செய்து முடித்தபின், தனித்துறைவதற்காக ஓய்வு பெறுகிறான்.

எளிய வாழ்வினை மேற்கொள்ளுகிறான். பொதுமக்களின் சுக துக்கங்களில் பங்கு கொள்ளுகிறான். அவர்கள் உண்ணும் உணவினையே உண்ணுகிறான். இவ்வாறுதான் பழைய அரசர்கள் லீ என்னும் நெறியைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர்."

இவ்வாறு கன்பூசியசு லீயைப் பற்றிய விரிவுரையினை நிகழ்த்தினார்.[10] செவிமடுத்த கோமகன் ஐ (AI), 'இந்நாளைய அரசர்கள் ஏன் அவ்வாறு செய்யவில்லை' என்று கேட்டான். கன்பூசியசு பின்வருமாறு விடை கூறினார்:

"உலகியல் நலங்களைத் தேடிக் கொள்ளுவதில் இந் நாளைய அரசர்கள், இளவரசர்கள் யாவரும் பேராசை பிடித்துள்ளனர். புலனின்பத்திளைப்பில் அவர்கள் மூழ்கிக் கிடக்கின்றனர். தத்தம் கடமைகளை முற்றிலும் புறக்கணித்து விட்டனர். செருக்குற்றுத் திரிகின்றனர்.

மக்களிடமிருந்து தங்களால் முடிந்தமட்டில் எல்லா வற்றையும் எடுத்துக்கொள்ளுகின்றனர். மக்களின் விருப்பத்திற்கு எதிராக நல்ல அரசர்களின் நிலப்பரப்பின்மேல் படையெடுத்துச் செல்கின்றனர். நியாயத்திற்குப் புறம்பாகப் போய்த் தாங்கள் விரும்புவனவற்றைப் பெறுகின்றனர்.

எனவேதான், இந்நாளைய அரசர்கள் பண்டைய அரசர்கள் பின்பற்றி வந்த லீ என்னும் பண்பாட்டினைப் பின்பற்றவில்லை."

இவ்விடையினைக் கேட்டு மனம் நிறைவு பெற்ற கோமகன் ஐ (Duke Ai) கன்பூசியசைப் பார்த்து,

"தங்கள் கருத்தில் மனித நாகரிகத்தின் மிகமிக உயர்ந்த தத்துவம் யாது?"

என்று வினவினான். கன்பூசியசு மனவருத்தத்துடன் விடை பகர்ந்தார்:

"மக்களின் நற்பேறு காரணமாக மேதகு கோமகன் ஆகிய தாங்கள் இவ்வினாவினைக் கேட்டீர். எனக்கு முடிந்தமட்டில் மிகச் சிறந்த விடையினைக் கூறுகிறேன். மனித நாகரிகத்தின் மிகமிக உயர்ந்த தத்துவம் அரசாங்கம்தான் (Government.)"

மேலும் கோமகன், 'ஆட்சிக் கலை (The art of Government) என்பது என்ன?' என்று வினவினான். கன்பூசியசு,

"பொருள்களை அவற்றுக்குரிய இடத்தில் வைத்தல் அல்லது பொருள்களைச் செம்மைப்படுத்துதல் அரசாங்கக் கலை என்று சொல்லப்படும். ஆள்பவன் தானே செம்மையுடன் இருப்பான் எனில், குடிமக்கள் இயல்பாகவே அவனைப் பின்பற்றிச் செம்மையுடன் இருப்பார்கள்"

என்று விடையளித்தார்.

கோமகன் விடவில்லை. "பெரியோரே! அரசாங்கக் கலையினைப் பற்றி மேலும் விரிவாகவும் விளக்கமாகவும் கூறுங்கள்" என்றான். கன்பூசியசு கூறியவிடை இதுதான்:

"கணவனும் மனைவியும் வேறுவேறு கடமைகளை உடையவராக இருத்தல் வேண்டும். பெற்றோர்களும் பிள்ளைகளும் ஒருவருக்கு ஒருவர் அன்புடையவராக இருத்தல் வேண்டும். அரசனும் குடிமக்களும் உறுதியான ஒழுங்கினைப் பின்பற்றுதல் வேண்டும். இம்மூவகையினரும் சரியாகச் செயல்படுவார் எனின், பின் நிகழ்வன யாவும் சரியாகவே இருக்கும்."

கோமகன் விடவில்லை.

"சான்றீர்! இம்மூவகையோரின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் பற்றி மேலும் எனக்குத் தெளிவுறுத்துதல் இயலுமா?"

என்றான். கன்பூசியசு விடை வருமாறு:

"பண்டைக் காலத்து மன்னர்கள் மக்களை அன்புடன் நடத்துதல்தான் அரசாங்கத்தின் முதன்மைக் கொள்கை என்று மதித்தனர். லீ என்னும் ஒழுக்கக் கோட்பாட்டினை முதன்மைக் கொள்கையாகக் கொண்டு தாங்கள் விரும்பிய குடிமக்களை ஆண்டு வந்தனர்.

லீ (Li)யை வளர்ப்பதில் மரியாதை உணர்வு என்பதுதான் மிகமிக முக்கியமானது. இந்த மரியாதையின் முற்ற முடிந்த அடையாளமாக இருப்பது அரசத் திருமணச் சடங்காகும். இதுவே மிகமிக முக்கியமானது. முடி சூடி அரசனே முன் சென்று, வரவேற்கும் பொருட்டு இளவரசியின் சொந்த இல்லம் அடைகிறான். தனக்கும் அவளுக்கும் உள்ள நெருக்கம் மிக்க உறவுதான் இதற்குக் காரணம் ஆகும். இம்முறையால் மரியாதை உணர்வினையும் சொந்த உறவினையும் அரசன் வளர்த்துக் கொள்ளுகிறான்.

மரியாதை காட்டப் புறக்கணித்தல் என்பது சொந்த உறவினை அவமதித்ததாகும். அன்பு இல்லை என்றால், சொந்த உறவு (Personal relationship) என்பது இருத்தல் இயலாது. எனவே அன்பும் மரியாதையும்தான் அரசாங்கத்தின் அடித்தளம் (Foundation) ஆகும்."

கோமகன் ஐ (Ai) மீண்டும் கேள்வியைத் தொடர்ந்தான்.

'பெரியீர்! அரசன் முடிசூடி இளவரசியின் வீடு சென்று அவளை வரவேற்று அழைத்தல் என்பது அரசத் திருமணச் சடங்கில் சற்றே அக்கறை மிக்கதாக ஆகிவிடாதா?"

என்பது அவன் வினா. அது கேட்டுக் கவலையுற்ற கன்பூசியசு தன்னிலையினைச் சமாளித்துக் கொண்டு கூறிய விடை இதுவாம்:

"நீங்கள் அப்படி ஏன் சொல்லவேண்டும்? அரசத் திருமணம் என்பது ஆளும் வீடுகள் இரண்டின் ஒன்றிணைப்பு ஆகும். இத்தகைய இணைப்பின் நோக்கம்: 1. அரச மரபினைத் தொடரச் செய்தல், 2. விண்ணகம் மற்றும் மண்ணகத் தெய்வங்களையும் மூதாதையர் ஆவிகளையும் வயல் மற்றும் கூலங்களின் தெய்வங்களையும் பரவும் பொருட்டு நடைபெறும் வழிபாட்டுச் சடங்குக்குத் தலைமை ஏற்கக் கூடிய பிள்ளையினைப் பெற்றெடுத்தல் என்பனவாகும்."

கோமகன்,

'ஐயா! எனக்குப் புரியும்படி மேலும் விளக்குவீராக!'

என்றான். கன்பூசியசு,

"அரசே! விண்ணும் மண்ணும் ஒருங்கு சேரவில்லையெனில், இந்த உலகில் உயிர் வாழ்க்கை இல்லை. ஆயிரம் ஆயிரம் தலைமுறைகளுக்கு அரச மரபினைத் தொடர்ந்துவரச் செய்தல்தான் அரசத் திருமணத்தின் முதன்மைக் குறிக்கோள் ஆகும்"

என்றார். மேலும் கூறினார்:

"அரசாங்கக் கலையில், லீ (Li) முதலிடம் பெறுகிறது. அதன் வாயிலாகவே வழிபாட்டு வடிவங்களையும் முறைகளையும் நிலைநாட்டுகிறோம். இதனால், ஒருபக்கம் வேள்விகளில் விண்ணக மண்ணக ஆவிகள் முன்பாக அரசர் தோன்றுவதற்கு ஏற்றவராகச் செய்தலும்; மற்றொரு பக்கம் அரச அவையில் அரசர் குடிமக்கள் ஆகியோருக்கு இடையே பக்தி உணர்ச்சியும் மரியாதையும் நிலைபெறச் செய்தலும் இயலும். எனவே, சமுதாய வாழ்வும் அரசியல் வாழ்வும் மரியாதையில்லாத குழப்ப நிலையிலிருந்து மீட்கப்படும்; காக்கப்படும். எனவே, லீ (Li) என்ற ஒழுக்கக் கொள்கைதான் அரசாங்கத்தின் அடித்தளமாக அமைகிறது.[11]

பண்டைய பேரரசர்கள் எல்லாம் ஏற்புடைய இலட்சியத்தின் அடிப்படையில் தத்தம் மனைவியர்க்கும் பிள்ளைகளுக்கும் மரியாதையும் உரிய சலுகையும் எப்பொழுதும் வழங்கி வந்தனர். மனைவிதான் வீட்டின் மையமாக இருப்பவள். அவளை எப்படி ஒருவன் அவமதிக்க முடியும்? பிள்ளைகள் தம் குடும்பத்தைத் தொடர்ந்து தழைக்கச் செய்பவர்கள். அப்படி இருக்கும் பொழுது, அவர்களுக்கு எப்படி அவமரியாதை செய்ய முடியும்? சான்றோன் ஆகிய அரசன் (Gentleman) எல்லோருக்கும் மதிப்பும் மரியாதையும் செலுத்துகிறான்.

நல்ல அரசன் தன்னை மதிக்கிறான்; தன் மனைவியை மதிக்கிறான; தன்மக்களை மதிக்கிறான். குடிமக்கள் ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும் என்பதற்குத் தானே எத்துக்காட்டாக அரசன் இருக்கிறான்.

பண்டைய அரசர்கள் தங்கள் ஆட்சியில் மக்களை நேசிப்பதுதான் முதன்மைச் செயல் என்று கருதினர். மக்களை நேசிக்காமல் மன்னவன் தன் சுயத்தினை (True self) உணர முடியாது. தன் சுயத்தினை உணராமல் தன் நாட்டில் அமைதியை நிலைநாட்ட முடியாது. அமைதி இல்லாமல் கடவுள் கட்டளைக்கு ஏற்ப வாழ்க்கையில் இன்புற்றிருத்தல் இயலாது. இவ்வாறு இன்புற்று வாழாதவன் முழுமையான வாழ்வினைப் பெறஇயலாது."

இவ்வாறு பேருரையாற்றினார் பேராசான் கன்பூசியசு. கோமகன் ஐ (Duke Ai) மீண்டும்,

"முழுமையான வாழ்வு என்றால் என்ன?"

என்று வினவினான். சீன ஞானி,

"இயற்கை விதிகளைப் பின்பற்றி வாழ்தல் தான் முழு வாழ்வு எனப்படும். இயற்கை விதி என்பது கடவுளின்

கட்டளை. அதுவே நிரந்தரமானது. எடுத்துக் காட்டாக, வானப் பாதையில் ஞாயிறும் திங்களும் ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று எக்காலத்தும் இயங்கி வருதல் கடவுளின் ஆணை என்று கூறப்படும்.

எம்முயற்சியும் இன்றி, யாருடைய குறுக்கீடும் இன்றிப் பொருள்கள் யாவும் படைக்கப்படுகின்றன. இதுவே கடவுளின் ஆணை (God's Law) என்று கூறப்படும். பொருள்கள் படைக்கப்படும் பொழுது பிரபஞ்சம் ஒளியேற்றப்படுகிறது. இதுவே கடவுளின் ஆணை"

என்று விளக்கிக் கூறினார். நிறைவு பெறாத கோமகன் ஐ (Ai),

'நான் மந்த அறிவினன், குழம்பியிருக்கிறேன். நான் நினைவில் வைத்துக் கொள்ளும் அளவிற்குத் தாங்கள் எளிமைப்படுத்தியும் தெளிவுபடுத்தியும் கூறினால் நன்றாயிருக்குமே!'

என்று பணிந்து கூறினான். பேராசான்,

"பெரிய மனிதன் என்பவன் எளிதில் இயற்கை விதிகளைப் பின்பற்றுகிறான். நல்ல மைந்தன் இயற்கையின் விதிகளை எளிதில் பின்பற்றுகிறான். எனவே, பெரிய மனிதன் தன் பெற்றோர்க்குப் பணி செய்யும் பொழுது பரமனுக்குச் செய்வதாகவே உணர்கிறான். அவ்வாறு பரமனுக்குப் பணி செய்யும் பொழுது தன் பெற்றோர்க்குப் பணி செய்வதாகவே உணர்கிறான். எனவேதான், நல்ல மைந்தன் முழுமையான வாழ்வில் திளைக்கிறான்"

என்று விளக்கமாகப் பேசினார். இவ்வுரை கோமகன் உள்ளத்தில் பதிந்தது. அப்பெருமகன்,

"ஐயன்மீர்! இவ்விளக்கவுரையினைத் தங்களிடமிருந்து கேட்பதற்கு நான் கொடுத்து வைத்தவன். இதற்குப் பிறகு தாங்கள் சொல்லிய நெறியில் நான் வாழத்

தவறினால் இப்பொழுது உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன் (-தவற மாட்டான் என்பது கருத்து)"

என்று விநயமாகப் பேசினான். இவன் சொற்களைக் கேட்ட கன்பூசியசு, 'எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது' என்றார்.[12]

1.3. கன்பூசியசின் கற்பனை உலகில் லீ

உடோபியா என்பது குறிக்கோள் உலகினைக் குறிக்கும் ஒரு சொல். பல நாட்டு அறிஞர் பெருமக்களும் கவிஞர்களும் கூட கற்பனை உலகு எனப்படும் இலட்சிய உலகினைக் குறித்து எண்ணியுள்ளனர். பிளேட்டோ (கி.மு.400) என்னும் கிரேக்க நாட்டறிஞர் குடியரசு (The Republic) என்ற தம் நூலில் விரித்துரைக்கும் இலட்சியப் பொதுவுடைமை அரசினைக் காலத்தினால் முற்பட்ட கற்பனை நாடாகப் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் கருதுகிறார் (Vide, History of Western Philosophy, 1996, p.125). கற்பனை நாட்டினைக் குறிக்கும் உடோபியா (Utopia) என்ற சொல்லினை முதன்முதல் படைத்தவராகிய சர் தாமசு மோர் (Sir Thomas More) கி.பி.15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மனிதநேயம் மிக்கவர். கி.பி.16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்சிசு பேகன் (Francis Bacon) என்ற மேதையும் கற்பனை நாட்டினைப் படைத்துள்ளார். இதே காலப்பகுதியில் இத்தாலி நாட்டில் தோன்றிய தொமாசோ கேம்பனெல்லா சோதிடக் கலையிலும் இறைமையியலிலும் வல்லவர். இவர் படைத்த கற்பனை உலகு ஞாயிறு நகர் (The City of Sun) எனப் பெயர் பெற்றது. இவர் காலத்தில் ஜெர்மனியில் தோன்றிய மற்றுமொரு அறிஞர் ஜொகான் வேலண்டின் ஆந்த்ரியே (Johann Valentin Andreae) பன்மொழிப் புலவர் ஆவர். இவர் கற்பனையில் உருவாகிய கிறிஸ்டியானோ போலிசு (Christiano Polis) என்பது இலட்சிய நாடாகும். கம்பர் (கி.பி.1000) கண்ட இலட்சிய உலகு இராமாவதாரம் நாட்டுப் படலத்தில் காட்சி தருகிறது. இனி, கன்பூசியசு காணும் இலட்சிய உலகு பற்றிக் காண்போம்.[13]

கன்பூசியசின் சீடர் செயு (Tseyu) என்பவரால் லிகி (Liki) என்ற பனுவலின் ஒன்பதாம் இயலில் எழுதிச் சேர்க்கப்பட்டதாகக் கருதப்படும் பகுதியில் கன்பூசியசின் உடோபியா உலகு பற்றிய விளக்கம் இடம்பெற்றுள்ளது. இவ்வியலின் முதற் பகுதியில் கன்பூசியசின் உடோபியாவும், இரண்டாம் பகுதியில் பண்பாட்டின் நனி சிறந்த உலகும் பேசப்படுகின்றன. கன்பூசியசின் இலட்சிய உலகு தாதுங் (Tat'ung) என்று சொல்லப்படுகிறது. இந்த உலகில் எந்த விதமான மனித வேறுபாடுகளும் இல்லை. யாவரும் ஒரு நிறம், ஒரு எடை, சரிநிகர் சமானர். இரண்டாவது பகுதியில் பேசப்படும் நனி சிறந்த பண்பாட்டு உலகு ஹிசியோகங் (Hsiaok'ang) என்று சுட்டப்படுகிறது. இவ்வுலகில் கன்பூசியசு லீ (Li) பற்றிப் போதித்த அறங்கள் யாவும் நடைமுறையில் உள்ளன. லீ கற்பிக்கும் நனி சிறந்த பண்பாடு இந்த உலகுக்கு உரியது. பூரண மனிதர்கள் வாழும் இலட்சிய உலகினைக் கன்பூசியசு கற்பனை செய்துள்ளார். இந்த உலகில் லீ என்பதற்குக் கூட இடம் வைக்கவில்லை. சமுதாய ஒழுங்கு மட்டுமே எங்கும் காணப்படும்.

மேலை நாட்டறிஞர்கள் உருவாக்கிய உடோபிய உலகுகளால் பாதிக்கப்பட்ட நவீன சீன அறிஞர்களின் நடுவே கன்பூசியசின் கற்பனை உலகு கூடுதலான முக்கியத்துவம் பெற்றுள்ளது. நவீன சீனத் தலைவர் டாக்டர் சன்யாட்சென் (Dr.Sun Yat Sen) தன் நண்பர்களுக்கு வழங்கிய தற்கையொப்பத்தில் (autograph) 'The World of tat'ung' என்ற நான்கு சொற்கள் இடம்பெற்றன. இத்தொடர் கன்பூசியசின் உடோபியா ஆகிய கற்பனை உலகு காட்சிப்படுதல் வேண்டும் என்ற விருப்பத்தினை வெளிப்படுத்துவதாகும்.

லீ (Li) பற்றிய மேலும் பல விளக்கங்களை இங்குக் காணலாம். நாட்டார் வழக்காறுகள் (Folk ways), சமயப் பழக்கங்கள், விழாக்கள், விதிகள், உடை, உணவு,

வீடமைத்தல் என்பனவற்றையும் லீ (Li) உள்ளடக்கியது. முன்பு கூறப்பட்ட லீ பற்றிய விளக்கங்களையும் இணைத்துக் கொண்டால் அறிவார்ந்த சமுதாய ஒழுங்கு என்பது முழுமைபெறும்.

பலதுறை சார்ந்த கல்வியைக் கன்பூசியசு மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். சிந்தனையுடன் புலமையினையும் ஒருசேரப் பெற்றவன்தான் உண்மையான கல்வியாளன் என்பது அவர் கொள்கை.

1.4. சமுதாயத்தின் இருவேறு அமைப்புக்கள்

ஒருமுறை கன்பூசியசு ஊர்ப்புற விழாவினைப் பார்க்கச் சென்றார். நடந்து சென்றார். உடன் அவர் சீடர் செயு (Tseyu) சென்றார். ஊர் மக்கள் விழாவின் முடிவில் விலங்குகளுக்கும் உயிரில்லாத பொருள்களுக்கும் பலி கொடுத்து ஆடல் புரிவதைப் பார்த்துவிட்டு ஆசான் பெருமூச்சு விட்டதை நோக்கிய சீடர் ஏன் அவ்வாறு மூச்சுவிட்டீர் என்று கேட்டார். தன் லூ (Lu) நாட்டின் சமுதாய நிலைமையினைப் பார்த்து பெருமூச்சு விட்டதாகக் கூறினார். மேலும்,

> "பொற்காலம் (Golden age) மலரவேண்டும் என்ற கற்பனையில் இருந்தேன். அத்தகைய காலத்தில் மீண்டும் நான் பிறந்து அறிவார்ந்த அரசர்கள் மற்றும் அமைச்சர்கள் கூட்டுறவில் தொடர்பு கொள்ள முடியாமல் போவது பற்றிப் பெருமூச்சு விட்டேன்"

என்று கூறினார்.

பொற்காலத்தில் உலகம் ஒரு பொது நாடாக இருந்தது. எந்தக் குறிப்பிட்ட அரச குடும்பத்துக்கும் அஃது உரியதன்று. நாட்டில் நிலவும் அமைதி, ஆட்சியாளரின் அறிவுக் கூர்மை, திறமை, ஆள்வோருக்கும் மக்களுக்கும் இடையே அமையும் நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் ஆள்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

எனவே, மக்கள் தத்தம் பெற்றோர்களைப் பெற்றோர்களாகவும் பிள்ளைகளைப் பிள்ளைகளாகவும் கருதுவதுடன் பிறர் பெற்றோர்களையும் பிள்ளைகளையும் கூட தமக்குரியவராக அன்பு பாராட்டினர்.

முதியவர்கள் முதுமையினை மகிழ்வுடன் போக்கினர். இளைஞர்கள் தத்தம் தகுதிக்கேற்பப் பணி புரிந்தனர். மேலும் தமக்கு மூத்தோர்களைப் பேணிக் காத்தனர். ஆதரவற்ற கைம்பெண்கள், அனாதைகள், முடவர், குருடர் உள்ளிட்ட அனைவரும் அன்புடன் புரக்கப்பட்டனர். ஆடவர் தமக்குரிய தொழில்களைச் செய்தனர். பெண்டிர் தமக்குரிய வீட்டுப் பணிகளைப் புரிந்தனர். மக்கள் தத்தம் உடைமைகளைத் தாங்களே வைத்துக் கொள்ளாமையினால், அவை வீட்டின் வெளியே தரையில் கிடந்தன. மக்கள் கூடுதலான ஆற்றல் கொண்டவராக இருப்பின், தம் நலத்திற்காகவும் தம் ஊதியத்திற்காகவும் அவர்கள் வேலை செய்வது இல்லை. எனவே, அந்தக் கற்பனை உலகில் (-உடோபியாவில்) சூழ்ச்சிக்கும், தந்திரத்திற்கும் இடம் இல்லாமல் போய்விட்டது. அங்கே திருடர்கள், கொள்ளையர்கள் இல்லை. எனவே, இரவு நேரத்தில் வீட்டின் கதவினைப் பூட்டுதலும் இல்லை. இதுவே பொற்காலம் (tat'ung) அல்லது மாபெரும் பொதுச்செல்வ யுகம் (Age of Great Common Wealth) என்று கூறப்பட்டது.

இப்பொழுது தாவோ (Tao - Golden Age) காணப்படவில்லை. உலகம் சிதறுண்டது. உலகின் சொத்துக்கள் தனியார் குடும்பங்களின் உடைமைகள் ஆகிவிட்டன. மக்கள் தத்தம் பெற்றோரை மட்டுமே பெற்றோராகவும் தத்தம் பிள்ளைகளை மட்டுமே பிள்ளைகளாகவும் எண்ணுகின்றனர். சுயநலமிகளாக மாறிவிட்டனர். தம் நலத்திற்காகப் பொருள்களை ஈட்டுகிறார்கள். ஒவ்வொருவரும் தத்தம் நன்மைக்காகவே

வேலை செய்கின்றனர். மற்றவர்களைப் பற்றிய கவலையோ அக்கறையோ ஒருவருக்கும் இல்லை.

பரம்பரையான பிரபுக்கள் ஆட்சி (Hereditary Aristocracy) நிலைநாட்டப்பட்டுள்ளது. வெவ்வேறு நாடுகளும் நகரங்களையும், புறநகரங்களையும் அமைத்துக் கொள்ளுகின்றன. தற்காப்புக்காக மதில்களும் அகழிகளும் அமைக்கப்படுகின்றன.

ஆனாலும், லீ (Li)யின் கொள்கைகள் அல்லது சமுதாய உறவுகள், நேர்மை என்பன சமுதாய ஒழுக்கத்தின் அடிப்படைகளாகக் கொள்ளப்படுகின்றன. இந்தச் சீரிய கொள்கைகளால் அரசர்களுக்கும் குடிமக்களுக்கும் இடையே உள்ள அலுவல் சார்ந்த தராதரங்கள் பேணப்படுவதற்கு மக்கள் முயல்கின்றனர். அவ்வாறே, பெற்றோர் பிள்ளைகள், மூத்தோர் இளையோராகிய உடன்பிறப்புக்கள், கணவர் மனைவிமார் ஆகியோர் ஒத்திசைவுடன் அன்புற்று வாழ்ந்திடவும் முயல்கின்றனர். மேலும், சமுதாய நிறுவனங்களை நிலை நிறுத்தவும் சேரிகளில் (Hamlets) குழுக்களாகச் சேர்ந்து வாழவும் முயல்கின்றனர்.

உடல் வலிமை மிக்கவர்களும் மனத்திறன் மிக்கவர்களும் சிறப்பு நிலைக்கு உயர்த்தப்படுகின்றனர். ஒவ்வொருவரும் தத்தம் தொழிலை அமைத்துக் கொள்ளுவதற்கு முயல்கின்றனர். இதனால், ஏமாற்றுதல், சூழ்ச்சி என்பன எழுதல் இயல்புதானே. இவற்றிலிருந்து போர்கள் மூள்கின்றன.

பெரும் அரச மரபுகளைத் தோற்றுவித்த பேரரசர்கள் யு (Yu), தங் (T'ang), வென் (Wen), வு (Wu), செங் (Ch'eng) ஆகியோரும் கோமகன் சோவும் (Duke Chou) இந்த யுகத்தின் தலைசிறந்த மாந்தராவர். ஒரு விதி விலக்குக்கூட இல்லாமல் இங்குக் கூறப்பட்ட சால்புமாந்தர் (Gentlemen) அறுவரும் லீ என்னும் தத்துவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு

கொண்டு, அத்தத்துவத்தின் வாயிலாகவே நீதிபரிபாலனம் செய்தார்கள். இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் பொது நம்பிக்கை பரிசோதிக்கப்பட்டது; குற்றங்களும் தவறான செயல்களும் வெளிப்படுத்தப்பட்டன. உண்மையான மனிதம் பற்றிய இலட்சியம் உருப்பெற்றது. இதனை ஜென் (Jen) எனக் கூறினர். இதனால் நல்ல பண்புகளும் மரியாதை உணர்வும் வளர்க்கப் பெற்றன. இவையே மக்கள் பின்பற்றுவதற்குரிய உறுதியான கொள்கைகள் என்று வரையறுக்கப்பெற்றன. இந்தப் பண்புகளை மீறிச் செல்லும் அரசன், பொதுமக்களின் எதிரி என்றும் பகைவன் என்றும் எள்ளப்பட்டு அரச பீடத்தினின்றும் விரட்டியடிக்கப்படுவான். இதுவே ஹிசியோகங் (Hsiao K'ang) யுகம். அதாவது சிறு அமைதிக் காலம் (The Period of Minor Peace) என்று அழைக்கப்படுகிறது.

1.5. லீ அல்லது சமுதாய ஒழுங்கின் பரிணாமம்

லீ (Li) என்னும் தத்துவத்தால்தான் பண்டைய வேந்தர்கள் கடவுள் கட்டளைகளுக்கு (Laws of Heaven) உருவம் கொடுத்தார்கள். இந்தத் தத்துவத்தால்தான் மனித இயற்கைக்குரிய வெளிப்பாடுகளை ஒழுங்குபடுத்தினார்கள். ஆதலால், லீ யைப் பெற்றவர் வாழ்கிறார்; அதனை இழந்தவர் இறக்கிறார். பாடற்பனுவல் (The Book of Songs),

See even the mouse has a t'i (body)
And a human being has no li!
A human being has no li-
Why doesn't he go off and die?

என்று இயம்புகிறது. இதன் பொருளைக் காண்போம்:

"சுண்டெலி கூட உடலைப் பெற்றிருக்கிறது,
மனிதன் லீயைப் பெறவில்லையே!
மனிதன் லீயைப் பெறவில்லையே-
அவன் ஏன் புறம்போய் உயிர்விடக் கூடாது?"

ஒழுக்கம் (-li) கெட்டவன் சுண்டெலியைவிடக் கீழாகக் கருதப்படுவான். அவன் இருப்பதைவிட இறந்துபோவது நன்று என்று பாடற் பனுவல் பகர்கிறது. திருவள்ளுவர், 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' எனக் கூறிய கருத்து இயைபு கருதி இங்கு எண்ணிப் பார்த்தற்கு உரியது. லீ எனப்படும் பண்பாட்டு, ஒழுக்க நெறியில் நின்றுதான் தனி மனிதன், பொது மனிதன், ஆளுவோர், அமைச்சர், அலுவலர் யாவரும் தத்தம் பணிகளையும் கடமைகளையும் புரிதல் வேண்டும் என்று சீன ஞானி கருதியுள்ளார்.

பண்டைக் காலத்தில் வழக்கத்தில் இருந்த பழக்கங்களைப் பற்றிக் கன்பூசியசு ஆராய்ந்து அறிந்தார். இதற்காகக் கி.மு.2205-கி.மு.1784 என்ற காலப் பகுதியில் ஆட்சி புரிந்த ஹிசிய அரச மரபு (Hsia Dynasty)க்குரிய தலைநகரம் சி (Chi) யைப் பார்வையிட்டார். பின்னர், கி.மு.1783-கி.மு.123 என்ற காலப் பகுதியில் ஆட்சி புரிந்த ஷங் அரச மரபு (Shang Dynasty)க்குரிய தலைநகர் சுங் (Sung) கையும் பார்வையிட்டார். இவ்விரு அரச மரபினர்க்குரிய நகரங்களிலும் போதிய அளவில் பழைய பழக்க வழக்கங்களை அவரால் பார்க்க முடியவில்லை. அவற்றை முழுமையாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தில் இவ்விரு அரசு மரபுகளுக்குரிய வரலாற்று நூல்களைப் படித்து அறிந்து கொண்டார். இது பற்றி அவர் தரும் விளக்கத்தினை நோக்குவோம்:

தொடக்கத்தில் லீ (-நாகரிகம்) என்பது உணவு (Food), குடி (Drink) என்பனவற்றுடன் தொடங்கியது. (நெல் அல்லாத) தானியங்களையும் (சோளம், தினை முதலியவை) பன்றி இறைச்சியையும் தட்டையான கல்லில் வைத்துக் கீழே தீமூட்டிச் சுட்டுச் சாப்பிட்டனர். தரையில் துவாரங்களைச் செய்தனர். இவை சாடியாகப் பயன்பட்டன. அவற்றிலிருந்து உள்ளங் கைகளினால் அள்ளிப் பருகினர்.

களிமண்ணினைப் பிசைந்து பறைகளையும் (Drums) அவற்றை அடிக்கும் கோல்களையும் படைத்துக்

கொண்டனர். இவற்றை முழக்கி ஆவிகளை வழிபட்டனர். உறவினர் ஒருவர் இறந்தால், கூரையின் உச்சிக்குப்போய் ஆவியை விளித்து, "ஐயகோ! ஆவியே (-இறந்தவரின் ஆவி)! தயவு செய்து மீண்டும் உன் உடம்பிற்குத் திரும்பமாட்டாயா?" என்று விண்ணப்பம் செய்தனர். ஆவி திரும்பவில்லை என்றால், அவன் உண்மையில் இறந்துவிட்டான் எனக் கருதினர். சமைக்காத அரிசியையும் சுட்ட இறைச்சியையும் பலி கொடுத்தனர். வானத்தை நோக்கிக் குறிப்பிட்ட தூரத்தில் ஆவியைப் பார்த்து, நிலத்தில் உடலைப் புதைத்தனர். உருவமான ஆவி (The Material spirit) கீழே இறங்கி வந்தது. அதே நேரத்தில், உணர்வு மயமான ஆவி (The Conscious spirit) வான்நோக்கிச் சென்றது. எனவே, இறந்தவர் தலைகள் வடக்கு நோக்கிய படி அவர்தம் உடல்கள் புதைக்கப்பட்டன. உயிருடன் உள்ளவர்கள் தத்தம் வீடுகளைத் தெற்குப் பார்க்க அமைத்துக் கொண்டனர். இவையே சீனர்களின் காலப் பழமை வாய்ந்த பழக்க வழக்கங்கள் ஆகும்.

பண்டைக் காலத்தில் ஆள்வோர் வீடுகள் வைத்திருக்கவில்லை. குடையப்பட்ட குகைகளிலும் குவிக்கப்பட்ட மணற் குன்றுகளிலும் குளிர்காலத்தில் வாழ்ந்தனர். மரங்களின் உச்சியில் உலர்ந்த கிளைகளினால் உண்டாக்கப்பட்ட ஒருவகைக் கூடுகளில் (பறவைகளைப் போல) கோடைக் காலத்தில் வாழ்ந்தார்கள். நெருப்பின் பயன்பாட்டினை அவர்கள் அறிந்திருக்கவில்லை. பழங்களையும், பறவைகள் மற்றும் விலங்குகளின் இறைச்சியையும் தின்றனர். மயிரோடு விரவிய அவற்றின் குருதியையும் குடித்தனர். சணல் அல்லது பட்டு ஆடைகள் அவர்களுக்குத் தெரியா. பறவைகளின் இறக்கைகளையும் விலங்குகளின் தோலையும் ஆடையாக உடுத்தினர்.

பின்னர் வந்த முனிவர்கள் (Sages) நெருப்பின் பயன்பாட்டினைக் கற்றுத் தந்தனர். மூங்கில் வடிவங்களில் (Moulds) உலோகப் பொருள்களை வார்த்தெடுக்கவும்

கற்பித்தனர். மற்றும் களிமண்ணினால் பானை, சட்டி முதலியனவற்றை உருவாக்கவும் கற்றுத் தந்தனர். பின்னர்தான், மக்கள் சன்னல், கதவுகள் வைத்து வீடுகள், மச்சுகள் கட்டத் தொடங்கினர். குத்துக் கம்பியின் உதவியுடன் இறைச்சியைச் சுடவும் வறுக்கவும் கற்றுக் கொண்டனர். திராட்சைச் சாறும் சாராயமும் தயாரிக்கத் தொடங்கினர். சணலையும் பட்டினையும் ஆடையாக நெய்யவும் கற்றனர். இறந்தவர்களுக்கும் ஆவிகளுக்கும் தெய்வத்திற்கும் பலியிடவும் தொடங்கினர். இந்தப் பழக்கங்கள் யாவும் பழைய காலத்திலிருந்து தொடர்ந்து வந்தன. மதுவும் மாமிசமும் படைக்கப்படும் பொழுது குழல், மணி, பறை முதலிய இசைக் கருவிகள் இயக்கப்பட்டன. பலிகள் கொடுத்த பின்னர் விருந்து வழங்கப்பட்டது. பல்வேறு பாத்திரங்களில் நாய், பன்றி, பசு, ஆடு ஆகியவற்றின் கறிகள் பரிமாறப்பட்டன. நன்றி, விசுவாசம் ஆகியவற்றின் காரணமாக இறந்தவர்க்குப் பிரார்த்தனை நடத்தப்பட்டது. பிராத்தனையின் பயனாக இறந்தவரின் தொடரன்பினையும் உற்றவர் பெற்றனர். இதுவே லீ (Li)யின் வாழ்த்தும் சாதனையுமாக அமைந்தது.

பேரரசரின் மிகப்பெரும் ஆற்றலாகவும் படைக்கலனாகவும் லீ (Li) விளங்கியது.

1.6. மனித இயற்கையின் அடிப்படையில் லீ

உலகத்தினை ஒரு குடும்பமாகக் கருதியவர் கன்பூசியசு. சங்கப்புலவர் கணியன்பூங்குன்றனார் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கூறிய கருத்தும், காளிதாசன் வசுதேவ குடும்பகம் எனக் கூறிய கருத்தும் வெண்டல் வில்கி (VendelWilkie) ஒரே உலகம் (One World) என்றியம்பியுள்ள கருத்தும் இயைபுபடுத்தி இங்கு எண்ணுவதற்கு உரியன. மனித இயற்கை என்பது மனிதர் அனைவர்க்கும் பொதுவாகக் காணப்படுதலினால் சீனர்களை ஒரு மனிதராகவே கன்பூசியசு மதித்துள்ளார். இதனால் மனித குலத்தையே ஒன்றாகவும் கருதியுள்ளார்.

மனித இயற்கை என்பது மகிழ்ச்சி, சினம், துக்கம், அச்சம், காதல், வெறுப்பு, ஆசை என்ற ஏழுவகைப்பட்ட இயல்பான உள்ளுணர்ச்சிகளைக் கொண்டது என்று சீன ஞானி கன்பூசியசு விளக்கினார்.

மனிதன் ஆற்ற வேண்டிய கடமைகளைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்த கன்பூசியசு அவற்றைப் பத்தாக வகைப்படுத்தியுள்ளார். அவையாவன:

1. பிள்ளைகளுக்குத் தந்தை காட்டும் அன்பு.
2. பிள்ளைகள் தந்தைக்குச் செலுத்த வேண்டிய பக்தி கலந்த அன்பு.
3. தம்பியரிடத்தில் தமையன்மார் காட்டும் பெருந்தன்மை.
4. தமையன்மாரிடத்தில் தம்பியர் செலுத்தவேண்டிய மரியாதை.
5. மனைவியிடத்தில் கணவனின் நன்னடத்தை.
6. கணவனிடத்தில் மனைவியின் பணிவு.
7. மூத்தோர்கள் இளையவர்களிடம் காட்டவேண்டிய தயவு.
8. இளையோர் மூத்தோரிடத்தில் காட்டவேண்டிய பணிவு.
9. ஆள்வோர் குடிமக்களிடம் காட்டும் தயவு.
10. குடிமக்கள் ஆள்வோரிடம் செலுத்தும் விசுவாசம்.

மேலே குறிக்கப்பட்ட கடமைகள் யாவும் குடும்பத்தையும், சமுதாயத்தையும், அரசியலையும் செம்மையுற நடத்தும் மாபெரும் ஆற்றல்கள் ஆகும்.

பல்வகை உணர்வுகளில் உணவு, பானம், பாலியல் என்பனவே மனிதனின் முப்பெரும் விருப்பங்கள் ஆகும். இறப்பும் ஏழைமையும் துயரமும் மனிதனின் முப்பெரும் அச்சம் அல்லது வெறுப்பாகும். மனித உள்ளத்தை இயக்கும் மாபெரும் சக்திகள் ஆசையும் அச்சமும் ஆகும். இந்த உணர்வுகள் எல்லாம் நெஞ்சத்தில் மறைந்துள்ளன.

மனிதனின் நெஞ்சத்தை அளந்தறிதல் முடியாது. லீ என்னும் தன்னிறைவு பெற்ற தத்துவத்தினைத் தவிர மற்றொன்றாலும் நெஞ்சத்தினை ஆராய்ந்து காண முடியாது எனக் கூறினார் கன்பூசியசு.

மனிதன் என்பவன் விண், மண் ஆகிய இரண்டின் ஆற்றல்களால் படைக்கப்பட்டவன். மனிதன் என்பவன் யின் (Yin) மற்றும் யங் (Yang) என்ற தத்துவங்களின் ஒருங்கிணைப்பு; ஆவிகளின் மறு அவதாரம்; உலோகம், மரம், நீர், நெருப்பு, நிலம் என்ற ஐம்பொருள்களின் சாரம். எனவே, பிரபஞ்சத்தின் இதயமாக இருப்பவன் மனிதன் என்றார் சீனஞானி. துய்ப்பதற்காகவே அவன் பிறக்கிறான்.

1.7. விண் அல்லது இயற்கையினை அடிப்படையாகக் கொண்ட லீ என்னும் கோட்பாடு

மிக மேம்பட்ட கடவுளின் ஆட்சியை மதிக்கும் நோக்கத்தில்தான் வான்கடவுள் வழிபாடு அமைகிறது. மண்ணின் ஆக்கச் சக்தியை வெளிப்படுத்தும் பொருட்டு மண் தேவதையின் வழிபாடு அமைகிறது. மூதாதையரை மதிக்கும் பொருட்டு மூதாதையர் கோயிலில் வழிபாடு நிகழ்கிறது. பல்வேறு ஆவிகளுக்கும் பணி செய்யும் பொருட்டு மலைகள் மற்றும் ஆறுகளுக்குரிய தெய்வங்களின் வழிபாடு நடைபெறுகிறது.

உலோகம், மரம், நீர், நெருப்பு, நிலம் என்ற ஐம்பொருள்களை வழிபடுவது மனிதனின் தொழில்களின் தொடக்கத்தினைக் கொண்டாடும் பொருட்டே ஆகும். (ஐம்பொருள்கள்: கதவு, தெரு, ஒற்றைக்கதவு, அடுக்களை, வீட்டின் மைய முற்றம் என்றும் கூறப்படும்). எனவே, கோயிலில் பூசாரிகளும், அவையத்தில் (Court) உயரமைச்சர் மூவரும், கல்லூரியில் (College) மூத்தோர் மூவரும் இருப்பார்கள். அரசனுக்கு முன்பாகக் குறி சொல்லுபவனும் (Sooth sayer), பின்பாக அரசாங்க வரலாற்றாசிரியனும் நிற்பார்கள். அரசனுக்கு வலப்புறமாக நிமித்தம் சொல்லும்

பூசாரியும் இடப்பக்கமாக, கண்ணொளியில்லாத இசையாசிரியரும் அவர் உதவியாளரும் நிற்பார்கள். அனைவருக்கும் நடுவில் அரசன் அமர்ந்திருப்பான். அப்போது அவன் உள்ளத்தில் அமைதி குடிகொண்டிருக்கும். இதுவே முற்ற முடிந்த ஒழுங்கிற்கு அடையாளமாக இருக்கும்.

விண்தெய்வ வழிபாட்டின் பொழுது லீ (Li) பின்பற்றப்படும் பொழுது, பல்வேறு தேவதைகளும் தத்தம் கடமைகளைக் கவனிக்கின்றனர். மண் தெய்வ வழிபாட்டின் பொழுது லீ (Li) பின்பற்றப்படும் பொழுது நிலத்தின் விளைச்சல் பன்மடங்காக அதிகரிக்கிறது. மூதாதையர் கோயிலில் லீ (Li) அனுசரிக்கப்படும் பொழுது பெற்றோர்க்குச் செலுத்த வேண்டிய பத்தி உணர்வும், பிள்ளைகளுக்குக் காட்டவேண்டிய அன்பும் தழைக்கின்றன.

ஐவகைப் பலிகளில் (Five Sacrifices) லீ (Li) அனுசரிக்கப்படும் பொழுது அளவைகளின் தரம் நிலைநிறுத்தப்படுகிறது (ஐம்பலிகள் ஆவன: 1. உலோகம், 2. மரம், 3. நீர், 4. நெருப்பு, 5. நிலம் இவற்றுக்கு வழங்கப்படுவன. இவற்றை Five Elements என்று கூறுவர்).

எனவே விண், மண், மூதாதையர், மலைகள் மற்றும் ஆறுகள், ஐம்பொருள்கள் அல்லது பலிகள் இவற்றுக்குரிய கடவுளரை வழிபடுவதால் லீ (Li) என்னும் கோட்பாட்டுக்கு உரிய மனிதக் கடமைகள் யாவும் பேணப்படுகின்றன என்றார் கன்பூசியசு.

எனவே, லீ (Li) என்னும் தத்துவம் (Principle) ஐக்கிய மூலப் பொருளிலிருந்து (Primeval Unity) ஆரம்பமாகிறது. பின்னர் அது விண், மண் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு, பருவ காலங்களை இயக்கும் யின் (Yin), யங் (Yang) என்னும் சக்திகளாகவும், அவை பல்வேறு ஆவிகளாகவும் வடிவம் கொள்கின்றன. கடவுளரின்

இச்சைதான் விதி (Destiny)யாக வெளிப்படுகிறது. இது விண் கடவுளால் கட்டுப்படுத்தப்படுகிறது.

இவ்வாறு லீ (Li) விண்ணில் தொடங்கி, மண்ணில் தன் செயற்பாட்டினைக் காட்டுகிறது. பல்வேறு பருவ காலங்களுக்குப் பொருந்தக் கூடிய பல்வகைத் தொழில்கள், கைவினைகள் நடைபெறுவதற்கும் லீ (Li) அடிப்படையாக அமைகிறது. மனிதனில் லீ (Li) என்பது வாழ்க்கைத் தத்துவமாக வெளிப்படுகிறது. வாணிகம், உழைப்பு, சமுதாய உறவு, உண்ணுதல், பருகுதல் ஆகியவற்றிலும் அதன் செயற்பாடு காணப்படுகிறது. தலையில் தொப்பி அணியும் சடங்கு, திருமணம், புதைத்தல், இறந்தவர்க்குப் பலியிடுதல், வில் வித்தை, வாகனம் இயக்குதல், அவையில் செவி சாய்த்தல் என்பனவற்றிலும் லீ (Li)யின் செயற்பாடு வெளிப்படுகிறது. எனவே, மனிதன் செயற்பாடுகள் யாவற்றிலும் லீ (Li) மறைவாக உள்ளது என்று கன்பூசியசு விரித்துரைத்துள்ளார்.

1.8. லீ (Li)யை வளர்த்துக்கொள்ளும் முறை

மதுச்சாற்றுக்கு நொதியை (Yeast)ப் போல, மனிதனுக்கு லீ (Li) உள்ளது. உயர் மனிதன் அதனைக் கூடுதலாகப் பெற்றிருக்கிறான்; தாழ்மனிதன் அதனைக் குறைவாகப் பெற்றிருக்கிறான். முனிவரும், ஆட்சிபுரிபவரும் லீ (Li)யைக் கூடுதலாக வளர்த்துக் கொள்ளுகிறார்கள். மனித இயற்கையினை அது கட்டுப்படுத்துகிறது; ஒழுங்கு படுத்துகிறது.

மனித இயற்கை என்னும் நிலத்தினை லீ (Li)யால் அரசன் அல்லது முனிபுங்கவன் உழுகிறான்; உழுத நிலத்தில் கடமைகள் என்னும் விதைகளைத் தூவுகிறான்; கல்வி கேள்விகளால் (தடைகள் ஆகிய) களையெடுக்கிறான்; உண்மையான மனிதத்தால் அறுவடை செய்கிறான்; இசைப் பாடலால் அதனை (Li) அனுபவித்து மகிழ்கிறான். நியாயம் என்பதன் தெள்ளத் தெளிந்த வடிவம் தான் லீ (Li) ஆகும்.

நியாயத்தினைப் பின்பற்றி, நெறிமுறைகளைக் கடைப்பிடித்து, உண்மையான மனிதத்தினை (Manhood) வளர்த்துக் கொள்ளுபவர் ஆற்றல் படைத்த நிர்வாகிகளாக வளர்தல் முடியும் என்று கன்பூசியசு கருதினார்.

லீ (Li) என்னும் பண்பாடும் ஒழுங்கும் இல்லாமல் நாட்டை ஆட்சிபுரிதல் என்பது ஏர் இல்லாமல் நிலத்தினை உழுதல் போன்றது என்றார் சீன ஞானி. நியாயத்தின்அடிப்படை யின்றி லீ (Li)யை அனுசரித்தல் என்பது வயலை உழுதபின் விதைக்க மறந்துவிடுதலைப் போன்றது என்றும் அறிவுறுத்தினார். அறிவினை வளர்த்துக் கொள்ளாமல் நியாயத்தைச் செய்வதற்கு முயலுதல் என்பது வயலில் விதைத்தபின் களையெடுக்காமல் விட்டுவிடுதலைப் போன்றது. உண்மை மனிதம் என்னும் குறிக்கோளினைப் பெறாமல் அறிவினை வளர்த்துக் கொள்ளுதல் என்பது, அறுவடையின்றிக் களையெடுப்பதைப் போன்றது. இசைப்பாடல் மூலம் இன்பம் துய்க்காமல் உண்மை மனிதம் என்னும் குறிக்கோளினை அடைய முயலுதல் என்பது, அறுவடை செய்தும் கூட அதனை உண்ண மறப்பதைப் போன்றது. இயற்கையுடன் முழுமையான ஒத்திசைவு (Harmony) கொள்ளாமல் இசைப்பாடல் மூலம் உண்மை மனிதத்தினை அறிந்து மகிழ்தல் என்பது, நன்றாக உண்ணாமல் உடல்நலம் குன்றி இருத்தலைப் போன்றது.[14]

இவ்வாறு விரிவாகக் கூறிய கன்பூசியசு மனிதனின் செயற்பாடுகள் எல்லாம் லீயை (Li) அடிப்படையாகக் கொண்டு அமைதல்தான் சாலச் சிறந்தது என்று அறிவுறுத்தினார். லீ (Li)யைப் பின்பற்றுவதால் குடும்பம், சமுதாயம், அரசு என்ற முத்தலத்திலும் பல நிலையில் விளங்கும் மாந்தர் அன்பும் பண்பும் ஆற்றலும் உடையவராய், ஒருவருக்கு ஒருவர் ஒத்திசைவு உடையவராய் நாடு வளம்பெற நல்வாழ்வு பெறுவார் என்றும் அப்பெரியார் பேசினார்.[15]

2. சில கலைச்சொற்களின் பொருள்

பனுவல் நான்கனுள் (Four Books) இரண்டாவதாக எண்ணப்பெறுவது சுங்யுங் (Chungyung) என்பது. இதனை "பொறப்பாதை" (The Golden Mean) அல்லது சாதனக் கோட்பாடு (The Doctrine of the Mean) என்று மொழிபெயர்த்துள்ளனர். கன்பூசியத் தத்துவக் கருத்துக்கள் இந்நூலில் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

இந்த நூலினைக் கன்பூசியசின் பேரரும், செங்சே (Tsengtse)வின் சீடரும் ஆகிய செஸ்ஸே (Tsesze) என்பார் எழுதியதாகப் பழைய அதிகார பூர்வமான ஆவணங்கள் சுட்டுகின்றன. லிகியின் (Liki) 30, 32, 33ஆம் இயல்களையும் அவரே எழுதினார் என்று சொல்லப்படுகிறது. மென்சியசு (Mencius) என்ற தத்துவ ஞானியின் ஆசிரியராகவும் செஸ்ஸே (Tsesze) விளங்கினார்.

இந்நூலில் காணப்படும் சில கலைச்சொற்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஜென் (Jen) - அறஉணர்வு (Moral Sense); யி (Yi) - நீதி உணர்வு (Sense of Justice); லீ (Li) - நீதி மற்றும் சமய நிறுவனங்கள் (Moral and Religious institutions). இச்சொல் (Li) - சமுதாய வாழ்க்கையின் நியதிகளும் ஒழுகலாறுகளும் (Laws and Usages of Social LIfe) என்ற பொருளிலும் வழங்கியுள்ளது.

தாவோ (Tao) - நீதிச்சட்டம் (Moral Law); சுன்சே (Chuntse) - நீதி வழுவா நேர்மையாளன் (The Moral Man); ஹிசியாஜென் (Hsiaojen)- பண்பாடற்ற மனிதன் (The Vulgar Man); சுங்யுங் (Chung yung) - பிரபஞ்ச அற ஒழுங்கு (The Universal Moral Order). இச்சொல், பிரபஞ்ச ஒழுங்குடன் இணைக்கும் அறமுடைய நம்முள் பொதிந்துள்ள மையப்பசை (The Central Clue in our moral being which unites us to the Universal Order) என்ற பொருளிலும் வழங்கியுள்ளது.

3. மைய ஒத்திசைவு

கடவுளால் கொடுக்கப்பட்டதை மனித இயற்கை (Human Nature) என்று கூறுகிறோம். மனித இயற்கையின் நியதியை (Law of Human Nature) எது நிறைவு செய்கிறதோ, அதனை நல்லொழுக்க விதி அல்லது சட்டம் (Moral Law) என்று அழைக்கிறோம். நல்லொழுக்க நெறியை வளர்த்துக் கொள்ளுவதையே பண்பாடு (Culture) என்று பேசுகிறோம்.

நல்வாழ்வில் ஒருகணப் பொழுதுகூட நல்லொழுக்க முறைமையின் செயற்பாட்டினின்றும் தப்ப முடியாது. ஒரு விதிமுறையினின்றும் தப்பித்துக் கொள்ளுவதற்கு இடம் அளிப்பதாக இருக்கும் எதுவும் நல்லொழுக்கச் சட்டமாக இருத்தல் இயலாது. இந்தக் காரணத்தினால், நல்லொழுக்கமுடையோன் (அல்லது உயர் மனிதன் - Superior man) தன் கண்களால் பார்க்க முடியாதவற்றை அக்கறையுடன் கவனிக்கிறான்; தன் காதுகளால் கேட்க முடியாதவை பற்றி ஆக்கமும் ஆர்வமும் கொண்டவனாக இருக்கிறான்.

ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்ட பொருளைவிட வெளிப்படையானதும் தெளிவானதும் ஆகிய எப்பொருளும் இல்லை. இந்தக் காரணத்தினால் தன் இரகசிய சிந்தனைகளின் மேல் கவனம் செலுத்தி நன்னெறியாளன் (Moral man) விழிப்பாக இருக்கிறான்.

மகிழ்ச்சி, சினம், துன்பம், இன்பம் உள்ளிட்ட உணர்வுகள் எழப்பெறாத நிலையே மனிதனின் மையமாகக் கருதப்படும் சுயம் (Central Self) அல்லது ஒழுங்கின் இருப்பு (Moral Being) என்று கூறப்படும். இதனைச் சுங் (Chung) என்ற கலைச் சொல்லினால் கன்பூசியசு வழங்கினார். இங்குச் சுட்டப்பெற்ற உணர்வுகள் விழித்தெழுந்து ஒவ்வொன்றும் மற்றும் அனைத்தும் உரிய அளவும் தரமும் அடைதல்தான் ஒத்திசைவு (Harmony) அல்லது ஒழுங்கின் அமைவு (Moral Order) என்று கூறப்படுகிறது. இதனை,

ஹொ (ho) எனக் கன்பூசியசு குறித்தனர். நம்முடைய மைய சுயம் (Central Self) அல்லது ஒழுங்கின் இருப்பு (Moral Being) நம்முடைய இருப்பிற்குப் பெரிய ஆதாரம் ஆகும்; ஒத்திசைவு (Harmony) அல்லது ஒழுங்கின் அமைவு (Moral Order) பிரபஞ்சத்தின் விதியாக (Law) விளங்குகிறது.

நம்முடைய உண்மையான மைய சுயமும் (Central Self) உலகின் ஒத்திசைவும் (Harmony) உணரப்படும் பொழுது, உலகம் ஒரு பிரபஞ்சமாகிறது; எல்லாப் பொருள்களும் முழு வளர்ச்சியும் செம்மையும் பெறுகின்றன.

4. பொற்சாதனம் (Golden Mean)

ஒழுக்கமுடைய மனிதனின் வாழ்வு, பிரபஞ்சத்தின் ஒழுங்கு அமைவுக்கு (Moral Order) சிறந்ததொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஒழுக்கமில்லாதவனின் வாழ்வு, பிரபஞ்சத்தின் ஒழுங்கு அமைவுக்கு ஒரு முரண்பாடாகும்.

தன்னுடைய ஒழுங்குடைய சுயத்தை இடையீடின்றிப் பண்படுத்திக் கொண்டே இருப்பதால், அத்தகைய மனிதனின் வாழ்வு பிரபஞ்ச ஒழுங்கு அமைவுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஒழுங்கில்லாதவன் நீதியின் சட்டத்திற்குக் கட்டுப்படாதவனாகவும் தன் நெஞ்சத்தில் அதைப் பற்றி மதிப்போ, அச்சமோ கொள்ளாதவனாகவும் இருப்பதால், அத்தகைய மனிதனின் வாழ்வு பிரபஞ்சத்தின் ஒழுங்கு அமைவுக்கு முரண்பாடாகவே உள்ளது.

பிரபஞ்சத்தின் ஒழுங்கு அமைவுடன் நம்முடைய ஒழுங்கின் சுயத்தை ஒட்டுதற்குரிய மையமான உபாயத்தைக் (Clue) கண்டறிதல்தான் மனிதனின் மிகவுயர்ந்த சாதனையாக அமைகிறது. இதனைஅடைவதில் நெடுங்காலமாக மக்கள் இயலாதவராகவே இருந்து வந்துள்ளனர்.

நீதியின் சட்டத்தினை, ஒழுங்கின் அமைவினை உணராமலேயே மக்கள் வாழ்நாட்களை வீணே கழித்து விட்டனரே என்று கன்பூசியசு கழிவிரக்கப்பட்டார்.[16]

தன் ஒழுங்கின் சுயத்திற்குரிய மையத்தினை உணர்ந்து கொண்ட ஒருவனால் ஒரு நாட்டினை ஒழுங்குபடுத்த முடியும்; தனக்கு வரும் பதவிகள், சிறப்புக்கள், செல்வங்கள் எல்லாவற்றையும் துச்சமாகக் கருதி உதறித் தள்ள முடியும்; படைக்கருவிகளை மிதித்து மேல் நடந்து செல்ல முடியும்.

ஒழுக்கத்தின் வலிமை (Strength of Character) எவ்வாறு உண்டாகிறது? என்று செலு (Tselu) என்ற சீடன் கேட்டான். கன்பூசியசு பேசத் தொடங்கினார்.[17]

"பொறுமையாய் இரு; பண்புடையனாய் இரு, பிறர்க்குக் கற்பிக்க ஆயத்தமாய் இரு, தீமை செய்தவர்க்குத் தீமையினைத் திருப்பிக் கொடுக்காதே. அதுவே ஒழுக்கத்தின் வலிமை ஆகும்". இவ்வாறு சீனப் பேரரசின் தென்மாநிலங்களின் மக்கள் எண்ணி நடைமுறைப்படுத்தினர் என்றார் கன்பூசியசு.

"போர்க்கருவிகளில் உழல்க, வருத்தமின்றி இறப்பினைச் சந்திக்க. இது ஒழுக்கத்தின் வலிமை" என்று சீனப் பேரரசின் வடமாநிலங்களின் மக்கள் எண்ணி இருந்தனர் என்றார் அப்பெரியார்.

5. எங்கும் நீதியின் நியதி

நீதியின் நியதி எங்கும் காணப்படினும் அஃது ஒரு மறைபொருளாகவே (Secret) உள்ளது. எளிய ஆடவர் மகளிர் ஆகியோரின் எளிய அறிவு கூட நீதியின் நியதியை ஓரளவு புரிந்துகொள்ளும். ஆயினும், அந்நியதியின் மிகவுயர்ந்த விசாலத்தில், மனிதருள் அறிவிற் சிறந்தோரும் புனிதத்திற் சிறந்தோரும் கூடப் புரிந்துகொள்ள இயலாத கூறுகள் உண்டு.

ஒழுங்கினைப் பேணும் அறவோரின் மனம் பிரபஞ்சத்தைவிடப் பெரியது. உலகில் காணப்படும் பொருள்களில் பெரியதிற் பெரியதையும் சிறியதில் சிறியதையும் கூட அறவோரின் மனம் புரிந்து கொள்ள இயலும்.

பாடற் பனுவல் (The Book of Songs), "வானளாவ வல்லூறு உயர்ந்து போகிறது; அடிவரை மீன்கள் ஆழ்ந்து செல்கின்றன" என்று இயம்புகிறது.[18] அதன்பொருள் இதுதான்: நனியுயர்ந்த வானிலோ, நனி ஆழ்ந்த நீரிலோ ஒழுங்கின் சட்டம் அல்லது நீதியின் நியதி காணப்படாத இடம் இல்லை. ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உள்ள உறவில் தொடங்கி, பிரபஞ்சத்தின் கடைசி எல்லைகள் வரையும் ஒழுங்கின் நியதி செயல்படுவதை நீதிமான் (Moral man) காண்கிறான்.

கன்பூசியசு, "பிரபஞ்சத்தின் ஆன்மீகச் சக்திகளின் ஆற்றல் உலகெங்கும் தீவிரமாகச் செயல்படுகிறது! அது கண்களுக்குத் தெரிவதில்லை; ஏனைய புலன்களுக்கும் புலப்படாதது; எல்லாப் பொருள்களின் இயல்பிலேயே அஃது இயைந்திருந்திருக்கிறது; அதன் செயற்பாட்டினின்றும் எந்த ஒரு பொருளும் தப்ப இயலாது" என்று குறிப்பிட்டார்.

எல்லா நாடுகளிலும் உள்ள மனிதர்களை நோன்பிருக்கச் செய்வதும், தூய்மைப்படுத்துவதும் மேலே கூறப்பெற்ற ஆன்மீகச் சக்திகளே ஆகும். அவைதாம் பவித்திர ஆடையணிந்து பலிப்பணிகளையும் சமய வழிபாட்டினையும் நடைபெறச் செய்கின்றன. ஆற்றல்மிக்க ஆற்றின் ஓட்டத்தைப்போல, கட்புலன் ஆகாச் சக்திகள் இருத்தலை உணரமுடிகிறது. சில வேளைகளில் அவை நமக்கு மேலேயும் உள்ளன; சில வேளைகளில் நம்மைச் சூழ்ந்தும் உள்ளன என்பது கன்பூசியசின் கருத்தாகும்.

கண்ணாற் காண முடியவில்லை என்பதற்காக அந்த மேலான ஆற்றலைப் புறக்கணித்துவிட முடியாது என்று பாடற்பனுவல் (The Book of Songs) புகல்கிறது.[19]

6. மனித நேயத்தரம்

'மனித இயல்பினின்றும் உண்மை (Truth) பிரிந்து செல்லுவது இல்லை; அவ்வாறு பிரிந்து செல்லுவதுதான் உண்மை எனின், அஃது உண்மையாகக் கருதப்பட மாட்டாது' என்று வரையறுத்துக் கூறியவர் கன்பூசியசு.

மனச்சான்று, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தல் என்ற கொள்கைகளைச் செயற்படுத்தும் மனிதன் நீதியின் நியதிக்கு அருகிலேயே இருக்கிறான். 'உனக்குப் பிறர் எதனைச் செய்யக் கூடாது என்று விரும்புகிறாயோ, அதனை நீ பிறருக்குச் செய்யாதே' என்று போதித்தவர் கன்பூசியசு. இதே கருத்தினைக் கிரேக்கச் சிந்தனையாளர்களிடமும் காணலாம்.

நீதிமானின் வாழ்வில் நான்கு பொருள்கள் குறிப்பிடத்தக்கவை. அவையாவன:

1. என்மகன் எனக்குத் தொண்டு செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிற யான், என் தந்தைக்குச் செய்யவேண்டிய பணிகளை யான் செய்தல் வேண்டும்.

2. என்கீழ் இருக்கும் அமைச்சன் எனக்குப் பணி செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கும் யான், என் பேரரசர்க்கு யான் பணி செய்தல் வேண்டும்.

3. என் இளவல் என்னிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கும் யான், என் அண்ணன்மாரிடமும் அப்படியே யான் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

4. என் நண்பர்கள் என்னிடம் எங்ஙனம் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கும் யான், அவர்களிடம் அவ்வாறு நடந்து கொள்ளுவதில் யான் முதல்வனாக இருத்தல் வேண்டும்.

இங்ஙனம் சமுதாய உறவுகளை வகைப்படுத்தி, நீதி வழுவாதவன் எவ்வாறு நடந்து கொள்ளுதல் வேண்டும் என்று வரையறை செய்த அறமுதல்வனாகக் கன்பூசியசு காட்சி தருகிறார்.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமைகளிலும், பிறருடன் உரையாடும் பொழுது ஏற்படும் குறைபாடுகளைக் களைந்து முன்னேற்றம் காண்பதிலும் தவறக் கூடாது என்பதும் அவர் கருத்தாகும்.

நிறையப் பேசுவற்கு இருந்தும் கூட, தேவைக்குக் குறைவாகவே பேசுவதை இந்தச் சீன ஞானி வலியுறுத்தினார். மாசற்ற சில சொல்லல் தேற்றாதவரே பல சொல்லக் காமுறுவர் என்று திருவள்ளுவரும் தெளிவுறுத்தியுள்ளார் *(649)*. சொல்லுக்கும் செயலுக்கும் முரண்படாமல் செயற்படுதலையும் எடுத்துக் கூறினார். இங்ஙனம் நீதியின் மாந்தன் (Moral man) விளங்குவான் என்பது அவர் கருத்தாகும். சொல்வேறு செயல் வேறுபட்டார் தொடர்பினைக் களைதல் வேண்டும் என்றார் திருவள்ளுவர் *(819)*.

நீதிமானின் வாழ்வு நெடுந்தூரப் பயணம் போன்றது; அண்மையில் தொடங்கிச் சேய்மை நோக்கிச் செல்லுவது. அதற்கு உயரத்தை நோக்கி ஏறுவதும் உவமையாகக் கூறப்பட்டது. பாடற்பனுவல் *(The Book of Songs)* பகர்வதைப் பார்ப்போம்.[20]

“கணவர், மனைவியர், மக்கள் ஒருங்கிருத்தல்
குழலும் வீணையும் கூடியிருத்தல் போன்றது.
உடன்பிறப்புக்கள் ஒன்றுபட்டு அமைதியாய் வாழும்பொழுது
ஒத்திசைவு இசை ஒருபொழுதும் நிற்பதில்லை.
மகிழ்வுக் கூட்டுறவு என்னும் விளக்கு
வீட்டில் வெளிச்சத்தைப் பாய்ச்சுகிறது.
பிள்ளைகள் வரும்பொழுது ஒளிநாள்கள் தொடர்கின்றன.”

“இத்தகைய இனிய நிலையில் இதைவிடப் பெற்றோர்கள்
வேறென்ன நிறைவினைப் பெறமுடியும்?”

என்று கன்பூசியசு குறிப்பிட்டார்.

வாழ்க்கைச் சூழல்களுக்குப் பொருந்த நீதி மனிதன் ஒத்துப் போகிறான். தன்நிலைக்கு அப்பால் அவன் ஒன்றையும் விரும்புவது இல்லை. செல்வமும் மதிப்பும் வாய்ந்த நிலையில் தான் இருப்பதைக் காணும் நீதிமான், செல்வமும் மதிப்பும் வாய்ந்த நிலையில் வாழும் ஒருவனைப் போலவே வாழ்கிறான். வறுமையும் தாழ்மையும் உள்ள சூழ்நிலையில் தான் இருப்பதைக் காணும் நீதிமான், வறுமையும் தாழ்மையும் வாய்ந்தநிலையில் வாழும் ஒருவனைப் போலவே வாழ்கிறான். அநாகரிக நாடுகளில் தான் இருப்பதைக் காணும் அவன், அநாகரிக நாடுகளில் வாழும் ஒருவனைப் போலவே வாழ்கிறான். அபாயமும் துயரமும் வாய்ந்த சூழ்நிலைகளில் தன்னைக் காணும் அவன், அத்தகைய சூழ்நிலைகளில் ஒருவன் எப்படி நடக்கத் தேவைப்படுமோ அப்படி நடக்கிறான். தனக்குத் தானே தலைவனாகும் தகைமை இல்லாத சூழ்நிலையில் தான் இருப்பதை அவன் விரும்புதல் இல்லை.

உயர்நிலையில் உள்ள பொழுது நீதி மனிதன், தன்கீழ் உள்ளவர்களிடம் அகந்தையுடன் நடந்து கொள்ள மாட்டான். தாழ்நிலையில் உள்ளபொழுது தனக்கு மேலுள்ளோரின் ஆதரவுகளையும் சலுகைகளையும் விரும்ப மாட்டான். தன்னொழுக்கத்தில் ஊன்றியிருக்கும் அவன், பிறரிடமிருந்து எதனையும் எதிர்பார்ப்பது இல்லை; எனவே, யாரைப் பற்றியும் புகார் செய்வதோ குறை சொல்வதோ இல்லை. அவன் கடவுளிடம் முறையிடுவதும் இல்லை; மனிதர்களை இகழ்வதும் இல்லை.

இத்தகைய நீதியின் மைந்தன் தனக்கு வகுக்கப்பட்ட காலம் வரை வாழ்ந்து முடிக்கிறான். கடவுளின் நியமன நாளிற்காக அமைதியாகக் காத்திருக்கிறான். ஆனால், நெறியற்ற மனிதன் அபாய வழிகளைப் பின்பற்றுகிறான்; உறுதியற்ற அதிருஷ்ட வாய்ப்புக்களுக்காக எதிர்பார்த்துக் கிடக்கிறான்.

"நீதியின் மைந்தனிடம் காணப்படும் கொள்கைப் பிடிப்பினைப் போன்றதொரு உறுதிப்பாடு வில்வித்தை பயில்வதற்கு வேண்டும்"

என்பது கன்பூசியசின் கருத்தாகும்.[21]

7. மாதிரிகள் சில

ஷுன் (Shun) என்னும் பேரரசரைப் பற்றிக் கன்பூசியசு கூறும் கருத்து நோக்கத்தக்கது: அப்பேரரசர் அறிவாற்றலில் சிறந்து விளங்கினார். சாதாரண உரையாடலில் இடம்பெறும் பொருள்களைக் கூடத் தீவிரமாக ஆராய்ந்து பார்க்கும் இயல்பினை உடையவர். தீயனவற்றை அவர் புறக்கணித்துவிட்டவர்; நல்லனவற்றை எங்கும் பரப்பியவர். இரு கோடிகளில் இருக்கும் அறிவுரைகள் அல்லது ஆலோசனைகளுக்கு இடையே நடுவாக உள்ளதையே அவர் எடுத்துக் கொண்டார். மக்கள் விவகாரங்களில் இந்த நடுப்பாதையினையே அவர் பொருத்தி முடிவு செய்தார்.

கன்பூசியசு காலத்துப் பேரரசர் கொண்ட நடுப்பாதைக் கோட்பாடு கி.மு.6ஆம் நூற்றாண்டில் அவர் சமகாலத்தில் வாழ்ந்த புத்தர்பிரானின் மாத்தியமிகக் கோட்பாட்டுடனும் (Middle-path), கி.மு.3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க மேதை அரிசுடாட்டிலின் பொற்பாதைக் (Golden mean) கோட்பாட்டுடனும் ஒப்பிட்டுப் பார்த்தற்கு உரியது.[22] ஞானிகள் உலகின் எப்பகுதியில் எக்காலத்தில் வாழ்ந்தாலும் அவர்கள் போதித்த கோட்பாடு பொதுத்தன்மை வாய்ந்ததாகவும் சமுதாய நலத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் விளங்குதல் எண்ணி இன்புறத்தக்கது.

மேலும் பேரரசர் ஷுன் (Shun)ஐப் பற்றிக் கன்பூசியசு குறித்துள்ள கருத்துக்களைக் காண்போம்:

அப்பேரரசர் மிகவுயர்ந்த பக்திமானாக விளங்கினார். நீதி நெறிகளைப் பின்பற்றுவதில் அவர் ஒரு முனிவராகத் (Saint) திகழ்ந்தார். பெருமிதப் பண்புமிக்க மாமன்னராக ஆட்சி புரிந்தார். செல்வத்தில், விரிந்த வையகத்தில் அடங்கிய பொருள்கள் எல்லாம் அவர் உடைமையாகும். அவர் இறப்பிற்குப் பின்னர், அவருடைய ஆவி (Spirit) மூதாதையர் கோயிலில் சமர்ப்பணம் செய்யப்பட்டது. அவருடைய மக்கள், பேரர்கள் என்று பல தலைமுறையினர் அவரை வழிபட்டு வந்தனர்.

உயர்ந்த பண்புகள், நீதிநெறிகள் வாய்த்திருந்த காரணத்தினால் உயர்நிலையும், பெருவளமும் சீரும் பேரும் நீண்ட ஆயுளும் பெற்று அப்பேரரசர் வாழ்ந்தனர். அவரவர் பண்புகளுக்கு ஏற்றபடியே இறைவன் அவரவர்தம் வாழ்வியலை அமையச் செய்கிறான்.

பேரரசர்கள் வென் (Wen), சி (chi), வு (Wu) என்பாரைப் பற்றிய சிறப்புக்களையும் கன்பூசியசு குறித்துள்ளார்.

8. அறவியலும் அரசியலும்

கன்பூசியசின் சொந்த மாநிலம் ஆகிய லூ (Lu)வின் கோமகன் ஐ (Duke Ai) என்பவன், நல்லரசு (Good Government) என்பது யாது? என்று வினவினான். அவன் வினாவிற்குக் கன்பூசியசு விரிவான விடையினை வழங்கினார்.[23] அவ்விடையினைக் காண்போம்:

> "நல்லவர்கள் பொறுப்பில் இருக்கும் பொழுது நல்லரசு தழைத்தோங்கும். அவர்கள் அதிலிருந்து வெளியேறிவிட்டால், நல்லரசு நலிவடைகிறது; காலப்போக்கில் மறைந்துவிடுகிறது.
>
> தகுந்த மண்ணில் தாவரங்கள் விரைவில் வளர்ச்சி பெறுதல் போலவே தக்கவர் பொறுப்பேற்கும் நல்லரசும் விரைவில் மேம்பாடு பெறுகிறது. நல்லரசு என்பது வேகமாக வளரும் ஒரு செடியைப்

போன்றது. நல்லரசின் செயற்பாடு என்பது அதில் பொறுப்பேற்கும் மாந்தரைப் பொறுத்துள்ளது. ஆட்சி செய்பவனின் நன்னடத்தையால் தக்கவர் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறார்கள். ஆட்சி செய்பவன் தனது ஒழுக்கத்தைப் பண்படுத்திக் கொள்ளுவதற்கு நீதிநெறி என்னும் சட்டத்தை (-இதற்குத் தாவோ (tao) என்று சீன மொழியில் பெயர்) கடைப்பிடித்தல் வேண்டும். நீதிச்சட்டத்தை (Moral Law) வளர்ப்பதற்கு நீதி உணர்வினை (Moral sense; இதற்குச் சீன மொழியில் ஜென் (Jen) என்பது பெயர்) ஆட்சியாளன் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

மனிதன் எனச் சொல்லிக் கொள்ளுவதற்குரிய சிறப்பியல்பாக நீதி உணர்வு (Moral sense) அமைந்துள்ளது. நமக்கு நெருக்கமாக உள்ளவர்களிடத்தில் இயல்பாகப் புலப்படுத்தப் பெறும் அன்புதான், நீதி உணர்வின் உச்சபட்ச வெளிப்பாடாக அமைகிறது. எது சரியானது, தக்கது என்பதை அடையாளம் காண்பிப்பது நியாய உணர்வுதான் (The Sense of justice; இதனைச் சீனமொழியில் யீ (Yi) எனக் கூறுவர்).நம்மினும் தகுதி மிகுதி படைத்தாரை மரியாதை செய்வதுதான் நியாய உணர்வின் உச்சபட்ச வெளிப்பாடாக அமைகிறது. அன்பு, நியாயம் என்னும் உணர்வுகள்தாம் சமுதாய வாழ்க்கையில் தனிச்சிறப்புக்கள் மலர அடிப்படையாகும். (சமுதாய ஒழுங்கமைப்பின் (Social Order) கோட்பாடுகளைச் சீனத்தில் லீ (Li) என்று கூறுவர்).

எனவே, தன் சொந்த ஒழுக்கத்தினையும் பண்பாட்டினையும் செம்மையுறச் செய்தல்தான் ஆளும் இனத்தைச் சேர்ந்தவனின் இன்றியமையாக் கடப்பாடு ஆகும். உரியவர்களுக்குத் தான் ஆற்ற வேண்டிய கடமைகளை முறையாகச் செய்வதன்

வழியாகத்தான் ஒருவனின் தன்னொழுக்க மேம்பாடு அமைய முடியும்.

சமுதாயத்தின் ஒருங்கிணைவு, பண்பு ஆகியவற்றைப் புரிந்துகொண்டு செயலாற்றுதல் வேண்டும். இத்தகைய செயற்பாட்டிற்கு ஒருவன் தெய்வச் சட்டங்களை (Laws of God) புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒருவன் மற்றவர்க்கு ஆற்ற வேண்டிய கடமைகள் ஐந்து நிலைகளில் அமையும். அவையாவன: 1. ஆளுவோன் - ஆளப்படுவோன், 2. தந்தை - மகன், 3. கணவன் - மனைவி, 4. அண்ணன் - தம்பி, 5. நண்பன் - நண்பன்.

மேலே சுட்டப்பெற்ற ஐவகையோர்க்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் 1. அறிவுடைமை, 2. அனுதாபம், 3. உறுதிப்பாடு (courage) என்ற மூவகை நீதிப் பண்புகளால் (Moral Qualities) அமைகின்றன.

மேலே சுட்டப்பெற்ற நீதிப் பண்புகள் பற்றிய அறிவு ஒருசிலர்க்குப் பிறவியிலேயே அமைகின்றன. ஒரு சிலர் கல்வியின் பயனாக அவற்றை அடைகின்றனர். பல்வகை அனுபவங்களின் பயனாக ஒருசிலர் அவற்றைப் பெறுகின்றனர்.[24]

நீதிப் பண்புகளை இயல்பாகவும் எளிமையாகவும் ஒரு சிலர் பயில்கின்றனர் (Practise). இவற்றின் நற்பயன்களைக் கருதிச் சிலர் இவற்றைப் பயில்கின்றனர் (Practise). பெரு முயற்சியுடனும் வருத்தத்துடனும் இவற்றைச் சிலர் பயில்கின்றனர். எவ்வாறாயினும், இம்மூவகையினரும் முடிவில் ஒரே சாதனையை அடைகின்றனர்.”

இவ்வாறு நல்லரசு பற்றி நீண்டதொரு உரை நிகழ்த்திய கன்பூசியசு கோமகன் ஐக்கு மேலும் நல்லுரைகளைத் தொடர்ந்து போதித்தார். அவற்றையும் இங்கே காண்போம்:

"கல்வியறிவினைப் (Knowledge) பெறுவதற்குரிய வேட்கை புத்தியுடைமைக்குச்)Wisdom) சமமானது. நல்லொழுக்கத்தில் செலுத்தும் தீவிரக் கவனம் இரக்க வுணர்வுக்குச் சமம். நாணத்தக்கவற்றுக்கு நாணுதல் வீரம் (-உறுதிப்பாடு) எனப்படும்.

புத்தியுடைமை, இரக்கம், உறுதிப்பாடு என்ற மூவகை நீதி உணர்வுகளின் இயல்பினையும் பயன்பாட்டினையும் ஒரு மனிதன் புரிந்து கொண்டால், தன்னொழுக்கத்தையும் தன்னடத்தை யினையும் எவ்வாறு ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பதைப் புரிந்துகொள்கிறான். இந்தப் புரிந்துணர்வு கைவரப் பெற்ற ஒருவனே எவ்வாறு மக்களை ஆள்வது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுவான். மக்களை நன்கு ஆளத் தெரிந்தவன்தான், நாடுகளையும் (Nations) பேரரசுகளையும் (Empires) எவ்வாறு ஆளவேண்டும் என்பதையும் புரிந்து கொள்ளுகிறான். இங்ஙனம் இவற்றை ஆள்வதற்கு அழைக்கப்படும் ஒவ்வொருவரும் பின்வரும் ஒன்பது முக்கியக் கட்டளைகளை நிறைவேற்றுதல் வேண்டும்:-

1. தன்னொழுக்கத்தை வளர்த்துக் கொள்ளுதல்.
2. தகுந்தவரை மதித்தல்.
3. உற்றார், உறவினர்க்கு அன்பு செலுத்துதல், கடமை ஆற்றுதல்.
4. மாநிலத்தின் உயரமைச்சர்களுக்கு உரிய மரியாதை செலுத்துதல்.

5. பொதுப்பணி அலுவலர்களின் முழுக் கூட்டமைப்பின் நலம், ஈடுபாடுகளுடன் தன்னையும் இணைத்துக் கொள்ளுதல்.
6. சாமானிய மக்களுக்குத் தான் ஒரு தந்தை என்பதைப் புலப்படுத்துதல்.
7. அனைத்துப் பயன்கலைகளையும் அறிமுகப் படுத்துதலை ஊக்குவித்தல்.
8. அயல்நாடுகளிலிருந்து வரும் புதியவர்களிடம் மென்மையாக நடந்து கொள்ளுதல்.
9. பேரரசின் இளவரசர்களின் நலத்தில் அக்கறை காட்டுதல்."

இவ்வாறு கோமகன் ஐக்குப் போதனை புரிந்தார் கன்பூசியசு. இவற்றை மேலும் விரிவாகவும் விளக்கமாகவும் கூறுவதற்கு முற்பட்டார். அவர்தம் போதனைகளை மேலும் காண்போம்:

"ஆட்சிபுரிபவன் தன் சொந்த நடத்தையினை வளப்படுத்திக் கொள்ளுவதில் கவனம் செலுத்தின், நீதிச் சட்டத்தை (Moral Law) எல்லோரும் மதிப்பார்கள். தகுந்தவர்க்கு ஆட்சிபுரிபவன் (Ruler) மரியாதை செய்தால், தந்திரமும் சூதும் வாய்ந்த அலுவலர்களால் வஞ்சிக்கப்பட்டமாட்டான். தன் உறவினர்க்கு அன்பு செலுத்துவான் எனின், தன் குடும்பத்து உறுப்பினர்களிடையே அதிருப்தி ஏற்படாது. உயர் அமைச்சர்களுக்கு ஆட்சிபுரிபவன் உரிய மரியாதையினை வழங்கினால், அவன் பிழை புரியமாட்டான். பொதுப்பணித்துறை அலுவலர்களின் நலம், ஈடுபாடுகளுடன் தன்னை ஒன்றுபடுத்திக் கொண்டால், நாட்டுப் பெருமக்கள் ஆகிய சான்றோர்களின் இடையே வலிமைமிக்க விசுவாச உணர்வு நிலவும். எளிய, சாமானிய மக்களுக்குத்தான் ஒரு தந்தை என்று ஆட்சிபுரிபவன் நடந்து கொண்டால், பொதுமக்கள் நாட்டின் நலத்திற்காகக்

கடுமையாகப் பாடுபடுவார்கள். பயன்தரும் கலைகள் அனைத்தையும் அறிமுகப்படுத்துதலை ஆளுவோன் ஊக்குவித்தால், நாட்டின் வருமானமும் செல்வமும் போதிய அளவு கிடைக்கும். பல்வேறு திசைகளைச் சேர்ந்த அயல்நாடுகளிலிருந்து வரும் புதியவர்களுக்கு ஆளுவோன் அன்பு செலுத்தினால், அந்நாடுகளின் மக்கள் திரண்டு வருவார்கள். பேரரசுக்குரிய இளவரசர்களின் நலத்தில் ஆளுவோன் அக்கறை காட்டினால், உலகெங்கும் தன் ஆணை செலுத்துவதற்கு உரிய அச்சம் கலந்த மரியாதை உணர்வும் மேலோங்கும்."

இவ்வாறு கோமகன் ஐக்கு நீதியும் அரசியலும் கலந்த போதனைகளைக் கன்பூசியசு வழங்கி வந்தார். அப்பெருமகன் அவர் நல்லுரைகளில் கூடுதல் ஆர்வமும் அக்கறையும் காட்டுவதைக் கன்பூசியசு கண்டுகொண்டார். பக்குவப்பட்ட நிலையில் இருந்த அக்கோமகன் உள்ளத்தில் மேலே சுட்டப்பட்ட ஒன்பது அறங்களின் விரிவினைப் போதித்தார். அவற்றையும் தொடர்ந்து காண்போம்:

9. கன்பூசியசு போதனைகளின் விரிவாக்கம்

9.1. தன்னொழுக்கம் பேணுதல்

ஆட்சி புரிபவன் (Ruler) தன்னொழுக்கத்தைப் பேணி வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். மனம், மொழி, உடல் ஆகியவற்றின் தூய்மையினைக் காத்தல் வேண்டும். பிறர் மதிக்கத்தக்க சிறந்த ஆடையினை உடுத்துதல் வேண்டும். நற்செயலுக்கும் மரியாதைக்கும் ஒவ்வாத எச்செயலையும் புரிதல் கூடாது. சான்றோரால் ஒப்புக்கொள்ளப்பெற்ற நல்லுரையினைப் பேசுதலும் நற்செயல்கள் புரிதலும் வேண்டும். இவ்வகையால் ஆட்சிபுரிபவன் தன்னொழுக்கம் பேணுபவனாகிறான்.

9.2. தகுந்தவரைப் பாராட்டுதல்

துதிபாடும் போலிகளை அகற்றுதல் வேண்டும். மகளிர் ஆயத்தினின்றும் விலகி நிற்றல் வேண்டும். உலக உடைமைகளை அற்பமாகக் கருதுதல் வேண்டும். மாந்தரிடையே காணப்படும் விழுமியங்களையும் உயர் பண்புகளையுமம மதித்திடுதல் வேண்டும். இவ்வகையால் ஆட்சிபுரிபவன் (Ruler) தக்கவர்க்கு ஊக்கம் அளித்துப் பாராட்டுகிறான்.

9.3. சுற்றம் ஓம்புதல்

அரசன் தக்கவரைப் பாராட்டுவதுடன் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தாரையும் முறையாக அன்பு செலுத்தி உதவுதல் வேண்டும். உயர் பதவிகளில் அவர்களை அமர்த்துதல் வேண்டும். அவர்தம் வாழ்வுக்குத் தேவைப்படும் ஊதியத்தையும் பொருளையும் போதிய அளவு வழங்குதல் வேண்டும். அவர்களுடைய இன்ப, துன்பங்களில் பங்கு கொள்ளுதலும், அவருள் எளியோரிடத்தில் இரக்கம் காட்டுதலும் வேண்டும். இவ்வகையால் ஆட்சிபுரிபவன் (Ruler) தன் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சுற்றத்தார்களின் அன்பினைக் கிளர்ந்தெழச் செய்கிறான்.

9.4. உயர் அமைச்சர்களுக்கு உரிய மரியாதை

ஆட்சிப் பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் தகுதியும் திறமையும் நோக்கி உயர் அமைச்சர்களுக்கு அரசன் பகிர்ந்தளித்தல் வேண்டும். அமைச்சர்கள் தங்களின் கீழ் பணிபுரிவோர்களைத் தங்கள் விருப்பப்படி அமர்த்திக் கொள்ளுவற்குரிய அதிகாரத்தையும் அரசன் அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். இவ்வகையால் ஆட்சிபுரிபவன் (Ruler) உயர் அமைச்சர்களுக்கு உரிய மரியாதை செய்கிறவனாக எண்ணப்படுகிறான்.

9.5. பொதுப்பணி அலுவலர்களை இயக்குதல்

நாட்டின் பல்வேறு பொதுப்பணிகளில் (Public Affairs) பலதரப்பட்ட அலுவலர்கள் ஈடுபட்டிருப்பார்கள். அவர்களிடத்தில் அரசன் விழிப்புடனும் விவேகத்துடனும் நடந்து கொள்ளுதல் வேண்டும். அவர்கள் நிலை எவ்வாறு இருப்பினும் அனைவரிடத்திலும் அரசன் அன்பு காட்டுதல் வேண்டும். அவர்கள் காலம் தவறாமல் கடமைபுரிகிறார்களா என்பதைக் கவனித்தல் வேண்டும். அவர்களுக்கு மாத ஊதியம் தாராளமாக வழங்குதல் வேண்டும். இவ்வகையால் ஆட்சிபுரிபவன் (Ruler) பொதுப்பணி அலுவலர்களுக்கு ஊக்கம் அளிப்பவனாக விளங்குகிறான்.

9.6. பொதுமக்களுக்குத் தந்தையாக விளங்குதல்

நாட்டில் வாழ்வோர் அனைவரையும் தன் பிள்ளைகளாகவும் தான் அவர்களுக்குத் தந்தையாகவும் அரசன் விளங்குதல் வேண்டும். பிள்ளைகளுக்கு அன்பு காட்டவேண்டிய நிலைகளில் அன்பினைப் புலப்படுத்துதல் வேண்டும். அதிகாரம் காட்டவேண்டிய நிலைகளில் அவர்களைச் செம்மைப்படுத்துதலும் வேண்டும். அவர்கள் பணிபுரியும் கால அளவினை மட்டுப்படுத்துதல் வேண்டும். குறைந்த மட்டில் அவர்கள் அரசுக்குச் செலுத்தவேண்டிய வரிகளைக் குறைத்தல் வேண்டும். இவ்வகையால் ஆட்சிபுரிபவன் (Ruler) பொதுமக்களுக்குத் தந்தையாக விளங்குகிறான்.

9.7. பயன்கலைகளை ஊக்குவித்தல்

நாட்டில் பல்வேறு மக்கள் பல்வகைப் பயன்கலைகளில் ஈடுபட்டிருப்பார்கள். அவர்களுக்குப் போதிய ஊக்கம் அளித்து அக்கலைகளைக் காத்தலும் வளர்த்தலும் அரசனின் கடமை ஆகும். கை வினைஞர்களின் வேலைப்பாடுகளை நாள்தோறும்

பார்வையிடவும், மாதம் ஒருமுறை சோதனை செய்யவும் அரசன் ஆணையிடுதல் வேண்டும். ஒவ்வொருவரின் வேலைப்பாட்டின் தரத்தினை மதிப்பிட்டுத் தக்க பரிசுகளையும் ஊக்கத் தொகையினையும் அரசன் வழங்குதல் வேண்டும். இவ்வகையால் ஆட்சிபுரிபவன் (Ruler) கைவினைஞர்களுக்கு ஊக்கம் அளிப்பவனாக விளங்குகிறான்.

9.8. அயல்நாட்டாரிடம் அன்பு காட்டுதல்

ஒரு நாட்டின் பொருளாதாரம், பண்பாடு, கலைகள் யாவும் அயல்நாட்டு மக்களின் வருகையால் மேம்பாடு அடைதலுடன் உலகெங்கும் பரவவும் வழி உண்டாகும். அவர்களுக்கு அரசன் வரவேற்பு அளித்தல் வேண்டும். நாட்டிற்கு வந்த பிறகு அவர்களுக்கு இடையூறு ஏற்படாதபடி பாதுகாப்பினையும் அரசன் அளித்தல் வேண்டும். அவர்களிடம் காணப்படும் நல்லனவற்றை அரசன் அறிந்து பாராட்டுதல் வேண்டும். அவர்கள் அறியாதவற்றைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இவ்வகையால் ஆட்சிபுரிபவன் (Ruler) அயல்நாடுகளிலிருந்து வருவோர்க்கு அன்பு செலுத்துகிறவனாக விளங்குகிறான்.

9.9. இளவரசர் நலத்தில் அக்கறை

பேரரசில் (Empire) இளவரசர் (Princes) பலர் இருப்பார்கள். ஆட்சிபுரிபவர் (Ruler) அவர்களின் நிலைக்கேற்ப அவர்களை நடத்துதல் வேண்டும். வாரிசு முறையில் ஏற்பட்ட முறிவினைச் சரிசெய்தல், அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளைப் புதுப்பித்துக் கொள்ளுதல் வேண்டும். அரசியல் குழப்பங்களையும் ஒழுங்கின்மையினையும் அடியோடு அழித்தல் வேண்டும். வலிய அரசர்க்கு எதிராக அமையும் எளிய அரசர்க்கு ஆதரவு அளித்தல் வேண்டும். தன்னை அவர்கள் பார்க்க வேண்டிய நேரங்களையும், அவர்களுடைய தூதுவர்கள்

நாளோலக்கத்தில் தன்னைப் பார்க்க வேண்டிய நேரங்களையும் ஆட்சிபுரிபவன் வரையறுத்துக் கொள்ளுதல் வேண்டும். தன்னிடம் விடைபெற்றுச் செல்லும் பொழுது அவர்கள் சுமக்கும் அளவுக்குப் பரிசுப் பொருள்களை அளித்தல் வேண்டும். தனக்கு அவர்கள் வழங்கக் கூடியவற்றை மிகவும் குறைவாகவே எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இவ்வகையால், ஆட்சிபுரிபவன் (Ruler) பேரரசின் இளவரசர்களின் நலனில் அக்கறை காட்டுகிறவனாக அமைகிறான்.

மேலே கூறப்பெற்ற ஒன்பது நெறிமுறைகளைக் கருத்தில் கொண்டு நாடுகளையும் (Nations) பேரரசினையும் (Empire) ஆட்சிபுரிவதற்கு அழைக்கப்படுபவன் பின்பற்றி நடத்துதல் வேண்டும்.

எவ்வகைச் செயல்களிலும் வெற்றி என்பது முன்னேற்பாட்டினை (Preparation) பொறுத்துத்தான் விளைகிறது. முன்னேற்பாடு இல்லை யெனில், தோல்விதான் முடிவாகும். முன்பே தீர்மானிக்கப் பெற்றவற்றை நடைமுறைப்படுத்துவது கடினம் இல்லை. இங்ஙனம் கன்பூசியசு வழங்கிய அரசியல் நீதிகள் அனைவரின் வரவேற்பினைப் பெற்றன. இவற்றுள் பல இன்றைக்கும் எல்லா நாடுகளுக்கும் நல்லனவாக அமைந்துள்ள பாங்கினை அறிந்து மகிழலாம்.

9.10. சுயமாக இருத்தல் (Being one's True Self)

தாழ்நிலையில் உள்ளவர்கள் தமக்கு மேல் நிலையில் உள்ளவர்களிடம் நம்பிக்கை வைக்கவில்லையெனில், அந்நாட்டில் அரசு செயற்படுதல் இயலாது. தனக்குத்தானே உண்மையாக இருத்தல் என்ற ஒரே வழிதான், அரசன் தன் ஆணையின்மேல் மக்கள் நம்பிக்கை கொள்ளுவதற்கு உதவும்.

ஒருவன் தன் நண்பர்களால் நம்பப்படவில்லை யெனில், தனக்குமேல் உள்ளவர்களிடம் அவன் நம்பிக்கை

கொள்ள மாட்டான். அவன் தன் நண்பர்களால் நம்பப்படுவதற்கு ஒரே ஒரு வழி உண்டு. அதுதான், தனக்குத்தானே உண்மையாக இருத்தல் ஆகும்.

ஒருவன் தன் பெற்றோரிடம் அன்பு காட்டவில்லை யெனில், ஒருபொழுதும் அவன் தன் நண்பர்களால் நம்பப்படுவதில்லை. தன் பெற்றோர்களிடம் அன்பு செலுத்துவதற்கு ஒரே ஒரு வழி உண்டு. அதுதான், தனக்குத் தானே உண்மையாக இருத்தல் ஆகும்.

ஒருவன் தனக்குத்தானே உண்மையாக இருத்தற்கு ஒரே ஒரு வழி உண்டு. அதுதான், எது நன்மை தரும் என்பதை அறிந்துகொள்ளுதல் ஆகும். இதனை அறியாதவன் தனக்குத் தானே உண்மையுடையவனாக இருத்தல் இயலாது.

தனக்குத்தானே - தன் சுயத்துக்கு உண்மையாக இருத்தல் என்பது கடவுளின் சட்டம் (Law of God). தனக்குத் தானே - தன் சுயத்துக்கு உண்மையாக இருத்தற்கு முயலுதல் என்பது மனிதனின் சட்டம் (Law of man).

தனக்குத்தானே இயல்பாகவே உண்மையாய் இருப்பவன் பிரயாசையின்றித் தக்கது எது என்பதைப் புரிந்துகொள்ளுகிறான்; எண்ணாமலேயே தான் எதை அறிந்து கொள்ள விரும்புகிறானோ அதைப் புரிந்து கொள்ளுகிறான்; அவனுடைய வாழ்க்கை நீதிச்சட்டத்துடன் (Moral Law) எளிதாகவும் இயல்பாகவும் இசைந்துள்ளது. அத்தகைய ஒருவன் புனிதன் (Saint) ஆகவும், தெய்வீக இயல்பு வாய்ந்தவன் ஆகவும் திகழ்கிறான்.

தன் சுயத்தை உணர்ந்தவன் எது நன்மை என்பதை புரிந்து கொண்டு அதனைவிடாது பற்றிக் கொள்ளுகிறான்.

உலகில் உரைக்கப்பட்டவை, செயல்பட்டவை எவைஎவை என்பதைப் பற்றிய ஆழ்ந்தகன்ற அறிவு, தன் சுயத்தை அறிந்து கொள்ளுவதற்குத் தேவைப்படுகிறது;

அவற்றை அலசி ஆராய்வதற்கும், சலித்துப் பார்த்து நல்லன கொள்ளுவதற்கும் தேவைப்படுகிறது; நல்லன எனத் தெரிந்து கொண்டவற்றை நடைமுறைப் படுத்துவதற்கும் தேவைப்படுகிறது.

மேலும் கோமகன் ஐக்குக் கன்பூசியசு தன் அறிவுரைகளைத் தொடர்ந்து கூறினார். அவற்றையும் சுருக்கமாக இங்கும் காண்போம்.

9.11. அறிவுரைகள்

"நீ என்ன கற்கிறாய் என்பது முக்கியம் அன்று; ஆனால், ஒருமுறை ஒன்றை நீ கற்றால் அதில் முழுத் தேர்ச்சி பெறுவதற்கு முன்னர் அதனை நீ ஒருபொழுதும் கைவிடுதல் கூடாது.

நீ எதனை ஆராய்கிறாய் என்பது முக்கியம் அன்று; ஆனால், ஒரு பொருளை நீ ஆராய்ந்தால், அதனை முற்றிலுமாகப் புரிந்துகொள்ளும் வரையில் அதனைக் கைவிடுதல் கூடாது.

நீ எதனைப் பற்றிச் சிந்திக்கிறாய் என்பது முக்கியம் அன்று; ஆனால், ஒரு பொருளைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கும் பொழுது, அதனை அடையும் வரை கைவிடுதல் கூடாது.

நீ எந்தப் பொருளைச் சலித்தெடுக்கிறாய் என்பது முக்கியம் அன்று; ஆனால், அதனைத் தெளிவாகவும் உறுதியாகவும் சலித்தெடுக்கும் வரை கைவிடுதல் கூடாது.

நீ எதனைச் செயற்படுத்துகிறாய் என்பது முக்கியம் அன்று; முற்றிலுமாக அதனைச் செயற்படுத்தும் வரை அதனைக் கைவிடுதல் கூடாது.

மற்றொருவன் ஒரே முயற்சியில் வெற்றி பெறுகிறான் எனில், நீ நூறு முயற்சிகள் எடுத்தாகிலும் வெற்றி பெறுவாய்.

மற்றொருவன் பத்து முயற்சிகளால் வெற்றி பெறுகிறான் எனில், நீ ஆயிரம் முயற்சிகள் எடுத்தாகிலும் வெற்றி பெறுவாய்.

இவ்வகையினை ஒருவன் உண்மையில் தொடர்ந்து பின்பற்றுவான் எனில், அவன் மந்தன் (Dull) எனினும், அவன் உறுதியாக அறிவுடையவன் ஆவான்; மெலியவன் ஆயினும், உறுதியாக வலியவன் ஆவான்.

தன் சுயத்தைத்தான் புரிந்து கொள்ளுதலை இயற்கை (Nature) என்றும், புரிந்து கொண்டதிலிருந்து தன் சுயத்தை அடைதலைப் பண்பாடு (Culture) என்றும் கன்பூசியசு கருதினார். தன்னைப் புரிந்துகொள்ளுதலும் தன்னை அடைதலும் ஒவ்வொருவரின் கடமை ஆகும்.

9.12. முழுமைபெற்ற உண்மைச் சுயமாக உள்ளவர்கள்

முழுமை பெற்ற உண்மைச் சுயமாக உள்ளவர்களின் இயல்புகளையும் ஆற்றலையும் கன்பூசியசு கூறியுள்ளார். அவற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

இவர்கள் தம் இயல்புகளையும் ஆற்றலையும் புரிந்து கொண்டவர்கள். ஏனையோர்க்கும் இவற்றை வழங்க வல்லவர்கள். அன்னை இயற்கை (Mother Nature) வளர்வதற்கும் வாழ்வதற்கும் உதவக் கூடிய தகுதிபடைத்தவரகள் இவர்கள். விண்ணகத்திற்கும் மண்ணகத்திற்கும் நிகராக இவர்கள் மதிக்கப்படுகின்றனர்.

குறிப்பிட்ட கல்வித் துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் மெய்ப்பொருளை உணரும் ஆற்றலை உடையவர்கள். தம்மை உணர்தல் தம் சுயத்தை வெளிப்படுத்துகின்றது. இத்தகைய வெளிப்பாடு உண்மை உணர்தற்குச் சான்றாகிறது. இத்தகைய சான்று அறிவின் ஒளியாக (ஞானப்பிரகாசமாக) அமைகிறது. அறிவின்

ஒளி செயல்புரியத் தூண்டுகிறது. தீவிர அறிவுதான் சக்தி ஆகிறது; சக்தி சர்வ வியாபக ஆற்றலாக விளங்குகிறது. முழுமை பெற்ற உண்மைச் சுயமாக உள்ளவர்கள்தாம் எங்கும் வியாபகமாக விளங்கும் ஆற்றலைப் பெற்றவர்கள் ஆவர். தன் சுயத்தை உணர்ந்தவர் விண்ணகத்தாரை (Celestial spirit) ஒத்தவர்.

உண்மைக்கும், நீதிச் சட்டத்திற்கும் கன்பூசியசு முதன்மை கொடுத்தவர். இவ்வுலக வாழ்வின் தொடக்கமும் முடிவும் என்பன உண்மை, நீதி என்ற இரண்டிற்கு உட்பட்டவை என்றார். முற்ற முடிந்த உண்மை என்பது (Absolute truth) எந்த ஒரு சக்தியாலும் அழிக்க முடியாதது. அதுவே என்றும் உள்ள முழுமுதல் என்பது கன்பூசியசின் கருத்து. அது தானே இருப்பது (Self-existent), வரம்பற்றது, அகன்றது, ஆழ்ந்தது. அதுவே அறிவுமயமானது; இடம், காலம் முதலிய எல்லைகளைக் கடந்து இருப்பது. அதனால், எல்லாவற்றையும் அது தனக்குள் பொதிந்துவைத்துள்ளது. அதுவே பூரணப் பொருள். அது நிலம் போல் பெரியது. எல்லாம் கடந்த அந்த அறிவு விண் போன்றது. வரம்பற்ற அதுவே அதற்குள் இருப்பது.

அத்தகைய மெய்ப்பொருள் கண்ணுக்குப் புலப்படாமல் காட்சி தருகிறது; இயங்காமல் பொருள்களை இயக்குகிறது; செயலில்லாமல் தன்னைத் தானே நிறைவு செய்து கொள்கிறது. மாற்றமில்லாத விதிக்குமட்டுமே அது ஒத்து வருவதால், அது படைக்கும் பல்வகைப்பட்ட பொருள்களும் எளிதில் புரிந்துகொள்ள முடியாதனவாக உள்ளன.

இயற்கை விரிந்தது, ஆழ்ந்தது, உயர்ந்தது, அறிவுமயமானது, வரம்பற்றது, நிலைபேறு உடையது. நம் கண்முன் தோன்றும் விண், ஒளியுடைய திரள் ஆயினும், அதன் அளப்பரிய நிலையில் ஞாயிறு, திங்கள், உடுக்கள், விண்மீன் குழுக்கள் என்பன அதில்

தொங்கவிடப்பட்டுள்ளன; எல்லாப் பொருள்களும் அதன்கீழ் தழுவப்பட்டுள்ளன.

நம் கண் முன் தோன்றும் நிலம்(Earth) கைம்மண் அளவுதான். ஆயினும், அதன் அகல, ஆழங்களில் வலிமை மிக்க மலைகளை அவற்றின் பாரத்தை உணராமலேயே தாங்குகிறது. அதிலிருந்து நீர் ஒழுகும்படி செய்யாமலேயே ஆறுகளும் கடல்களும் அதனை முட்டி மோதுகின்றன.

நம் கண்முன் தோன்றும் மலை ஒரு கற்பிண்டம் தான். ஆனாலும், அதனுடைய அளவின் விரிவில் புல், செடி, கொடி, மரங்கள் வளர்கின்றன; பறவைகளும் விலங்குகளும் அதில் வாழ்கின்றன. விலைமதிப்பற்ற தாதுப் பொருள்கள் ஆகிய களஞ்சியங்கள் அதில் காணப்படுகின்றன.

நம் கண்முன் தோன்றும் நீர் ஒரு குவளை திரவம் தான். ஆனாலும், அதனுடைய ஆழங்காண முடியாத ஆழத்தில் தான் மிகப்பெரிய கடின நீர்ப்பிராணிகளும், பறக்கும் முதலைகளும், மீன்களும், ஆமைகளும் (Dragons) பிறப்பெடுக்கின்றன. பயன்தரத்தக்க பொருள்கள் யாவும் அவற்றில் நிரம்ப உள்ளன.

பாடற்பனுவலில் (The Book of Songs),

"கடவுளின் சட்டம் அறிவுக்கு அகப்படாதது; ஆனாலும் அது என்றும் உள்ளது; எப்பொழுதும் செயல்படுவது"

என்று சொல்லப்பட்டுள்ளது. இதுவே கடவுளின் சாராம்சம் (Essence) ஆகும். இதே நூலில்,

"வென் அரசனின் (King Wen) அறத்தின் பூரணத்துவம் எவ்வளவு மேம்பட்டது!"

என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதுவே பேரரசர் வென்னின் (Emperor Wen) மேதகு பண்பாட்டின் சாராம்சம் (Essence) ஆகும். அறத்தின் பூரணத்துவம் (Moral Perfection) ஒரு பொழுதும் அழிவதில்லை.

9.13. நீதியின் சட்டமும் திட்டமும்

கன்பூசியசுப் பெரியார் உருவாக்கிக் கூறிய நீதியின் சட்டம் (Moral Law) என்ற கோட்பாடு மாட்சிமிக்கது. இவ்விதி அளவற்றது; வானளாவ உயர்ந்தது, படைக்கப்பெற்றுள்ள பொருள்களுக்கு எல்லாம் வாழ்வு அளிப்பது. முந்நூறு கோட்பாடுகளையும் மூவாயிரம் நடத்தை விதிகளையும் உள்ளடக்கிய நீதியின் சட்டம் தன்னை நடைமுறைப்படுத்தும் மனிதனுக்காகக் காத்திருக்கிறது. உயர்ந்த ஒழுக்கநெறி இருந்தால் ஒழிய, உயர்ந்த நீதியின் சட்டத்தை நிறைவேற்ற முடியாது.

நீதிமான் ஒவ்வொருவரும் தனது நீதி இயல்பின் பெருமைக்கும் ஆற்றலுக்கும் மதிப்பளிக்கும் அதே வேளையில், தீர விசாரித்துணர்தலையும் அறிவுத் தேடலையும் புறக்கணித்து விடுதல் கூடாது. முன்பே கற்றறிந்த அளவில் நில்லாது புதிய அறிவினையும் ஈட்டிக் கொள்ளுதல் வேண்டும். சமுதாய வாழ்வின் வழக்கங்களுக்கும் சட்டங்களுக்கும் ஒருவன் மரியாதை அளிப்பதுடன் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும்.

ஒருவன் அதிகாரத்தில் உள்ள பொழுது செருக்குடன் இருத்தல் கூடாது. கீழ்நிலைப் பதவியில் உள்ள பொழுது யாருக்கும் கீழ்ப்படியாமல் இருத்தல் கூடாது. நீதியுடன் பொருந்திய சமுதாய அமைப்புத்தான் தேசத்திற்கு வளத்தைச் சேர்க்கும். பாடற்பனுவலில் (The Book of Songs),

> "மதிநுட்பமும் நல்லறிவும் வாய்ந்தவன்
> இடரினின்றும் தன்வாழ்வைக் காக்கிறான்"

என்று கூறப்பட்டுள்ளது. நீதிமானின் (Moral man) இலக்கணம் இதுவே. திருவள்ளுவர்,

> *"மதிநுட்பம் நூலோ டுடையார்க்(கு) அதிநுட்பம்*
> *யாவுள முன்னிற் பவை"* *(636)*

என்று அமைச்சு அதிகாரத்தில் கூறியிருத்தல் இங்கு எண்ணத்தக்கது.

உலகெங்கும் தன் ஆணை (Sovereignty) செல்ல விரும்பின், ஒருவனுக்கு மூன்று முக்கியப் பொருள்கள் தேவைப்படுகின்றன. அவையாவன: 1. நிலை (position). 2. ஒழுக்கம் (Character). 3. வரலாற்று அறிவு.

இங்ஙனம் கன்பூசியசு விழுமிய கருத்துரைகளைச் சமுதாய மேம்பாட்டிற்காக வழங்கியுள்ளார்.

யாவோ (Yao), ஷுன் (Shun) ஆகிய பழங்காலத்துச் சீனப் பேரரசர்கள் (Emperors) வழங்கி வந்த நெறிகளைத்தான் கன்பூசியசு செப்பனிட்டுத் தம் காலத்துக்குப் பொருந்தும் வகையில் போதனை புரிந்தார். வென் (Wen), வு (Wu) என்னும் சீனப் பேரரசர்களால் நிலைப்படுத்தப்பட்ட சமுதாய, சமய நிறுவனங்களையும் அவற்றுக்குரிய விதிமுறைகளையும் கூட, கன்பூசியசு முழுமைப்படுத்தினார். இவை வானகத் தொடர்புடைய பருவ காலங்களை ஆட்சி கொள்ளும் புனித ஆணையுடன் (Divine order) ஒத்திசைப்பன என்று அவர் புலப்படுத்தினார். மேலும், மண்ணகத்தில் பௌதிக இயற்கையில் காணப்படும் நீதியின் திட்டத்துடன் (Moral design) இவை பொருந்துகின்றன என்பதையும் அவர் புலப்படுத்தினார். உலகம் முழுமையினையும் தன் விரிந்த மனத்தால் தழுவும் இயல்பு படைத்தவன் மனிதன் என்றார். இக்கருத்து மலைபடுகடாம் என்ற சங்கப் பாடலில்,

பரந்திடம் கொடுக்கும் விசும்புதோய் உள்ளம் (558)

என்று காணப்படுதல் இயைபு கருதி இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆற்றலுடனும் உயிர்ப்புடனும் என்றும் ஓடிக் கொண்டிருக்கும் நீரூற்றினைப் போல் மனித இயற்கை என்பது ஆழமானதாகவும் வற்றாததாகவும் விளங்குகிறது. அத்தகைய மனிதன் அவனியில் தோன்றினால், மக்கள் அனைவரும் அவனுக்கு மரியாதை

செலுத்துவர். அவன் எதைச் சொல்லினாலும், அவர்கள் அதனை நம்புவார்கள். அவன் எதனைச் செய்தாலும், அவர்கள் மன நிறைவு பெறுவார்கள். இங்ஙனம், அவனுடைய பேரும் புகழும் எங்கும் பரவி, நாகரிக உலகினை நிரப்பும்; மேலும், காட்டுமிராண்டிகளின் நாடுகளிலும் பரவும்; மரக்கலங்களும் மற்ற ஊர்திகளும் இயங்கும் இடங்களிலும், மனிதனின் உழைப்பும் முயற்சியும் ஊடுருவும் இடங்களிலும், வானம் ஒளி மறைப்புச் செய்யும் இடங்களிலும், நிலம் சுமக்கும் இடங்களிலும் பரவும்; ஞாயிறும் திங்களும் சுடர்விடும் இடங்களிலும், உறைபனியும் பனியும் பொழியும் இடங்களிலும் பரவும். அத்தகைய ஞானச் சான்றோரை வாழ்வும் மூச்சும் பெற்ற அனைவரும் மரியாதை செய்வதுடன் அன்பும் செலுத்துவர். எனவே, அத்தகைய ஞானச் சான்றோரைக் கடவுளுக்கு நிகரானவர் என்று நாம் கூறலாம் எனக் கன்பூசியசு கூறியுள்ளார்.

அத்தகைய ஞானச் சான்றோர்தாம் தன்னுடைய பூரண சுயத்தை (Absolute self) உணர்ந்தவர் ஆகிறார். மனித சமுதாயத்தின் மாபெரும் உறவுகளைச் சரிசெய்தலும் ஒழுங்குறுத்தலும் அந்தப் பூரண சுயத்தால் மட்டுமே முடியும்; ஒழுக்க நெறியின் (Morality) அடிப்படைக் கொள்கைகளை வரையறுக்க முடியும்; பிரபஞ்சத்தின் வளர்ச்சி, இனப்பெருக்கம் பற்றிய விதி முறைகளைப் புரிந்துகொள்ள முடியும். இங்ஙனம் கன்பூசியசு முழு ஞானியின் மாண்பினைக் குறித்துள்ளார்; அவரே எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

தன்னிலிருந்துதான் முழு ஞானி ஆற்றலையும் அறிவையும் ஒருசேர வருவித்துக் கொள்ளுகிறார். தன்னிறைவு பெற்றதாகவும் எளிமை உடையதாகவும் அந்த ஞானியின் ஆளுமை உள்ளது. அவருடைய மனம் அளத்தற்கு அரிய ஆழம் உடையது. பூரண ஞானமும், உயரிய தெய்வீகப் பண்புகளுடன் கூடிய ஒழுக்கமும், கடவுளுக்கு நிகரான அறமேம்பாடும் படைத்த ஒருவரைத்

தவிர வேறு யாவராலும் அம்மாமனிதனின் இயற்கையினைப் புரிந்துகொள்ள இயலாது.[25]

சீன ஞானி கன்பூசியசு ஞானச் சான்றோருக்குக் கூறும் இயல்புகள் யாவும் தன்னிடம் நிரம்பப் பெற்றவர் என்பது சுட்டுதற்குரியது.

9.14. முழு ஞானியின் இயல்பு

முழு ஞானி பகட்டு இல்லாதவர். அவருடைய வாழ்வு வெளிப்படையானது, எளியது, அருள் நிரம்பியது, முறைமை வாய்ந்தது. சிறுசிறு வேலைகளைச் செம்மையாகச் செய்தல்தான் பெரும்பணிகளை நிறைவேற்றுவதற்கு அடிப்படை என்பது முழு ஞானியின் கருத்தாகும். சிறுசிறு ஏதுக்களால் பெரும்பெரும் பயன்கள் விளைகின்றன என்பதை அவர் நன்றாக அறிந்தவர். மெய்ம்மை என்பது பொறிகளின் அறிவுக்கு அப்பாற்பட்டது என்பதையும் அவர் அறிந்தவர் ஆவர். இவ்வகையால் எண்ணங்களும் அறங்களும் உடைய உயரிய உலகில் உலவும் ஆற்றலைப் பெற்றவர்.

பாடற்பனுவலில்,

> "எவ்வளவு ஆழத்தில் மீன் ஆழ்ந்து செல்கிறது;
> ஆயினும் அதனை அந்த ஆழத்தில் நன்றாகப் பார்க்க
> முடிகிறது"

என்று சொல்லப் பெற்றுள்ளது.

9.15. நீதிமானின் இயல்பு

நீதிமான் (Moral man) தன் இதயத்தை நன்றாகச் சோதித்தறிதல் வேண்டும். தன்னைத் தானே கடிந்து கொள்ளுவதற்குரிய (Self-reproach) காரணம் ஒன்றும் இல்லை என்பதையும், தன்மனத்தில் எந்தத் தீய சிந்தனையும் இல்லை என்பதையும் தற்சோதனை செய்து பார்த்தல் வேண்டும். தான் ஒன்றும் (ஒரு பிழையும்)

புரியாவிட்டாலும் தன்னைப் பற்றி நீதிமான் மிக்க கவனத்துடன் இருத்தல் வேண்டும்.

நீதிமான் எந்த வெகுமதியையும் ஊக்கப் பரிசாகப் பெறாமலும் சிறிதும் சினந்து கொள்ளாமலும், அச்சுறுத்தாமலும் மக்களை நல்லவர்களாக ஆக்கும் ஆற்றல் படைத்திருக்கிறார். தான் தன் அறத்தகுதிப்பாட்டினை (Moral Worth) புலப்படுத்திக் காட்டாவிடினும், நாட்டின் இளவரசர்கள் அனைவரும் அவர் வழிகளையே பின்பற்றித் தொடர்கின்றனர் என்று பாடற்பனுவலில் (The Book of Songs) சொல்லப் பெற்றுள்ளது.[26]

தன் எளிய வாழ்க்கையாலும், நேர்மைத் திறத்தினாலும், உண்மையினாலும் உலகில் அமைதியும் ஒழுங்கும் நிலைபெறுவதற்கு நீதிமான் மட்டுமே உதவ முடியும் என்று கன்பூசியசு கருதினார்.

ஓசைபடாமல் ஒரு வாசனையும் வீசாமல் பேராற்றல் வாய்ந்த கடவுளின் செயற்பாடுகள் உள்ளன. அத்தகைய மிக உயர்ந்த வளர்ச்சி நிலை வாய்ந்ததாக நம்முடைய அறத்தின் இயல்பு (Moral nature) அமைதல் வேண்டும் என்பது கன்பூசியசின் கருத்தாகும்.

9.16. கல்விக் கொள்கை

உயர் மனிதன் (Superior man) எனப்படும் அரசன் கல்வியின் மூலமாகத்தான் மக்களைப் பண்படுத்தவும் நல்ல சமுதாயப் பழக்கங்களை நிலைநிறுத்தவும் முடியும் என்று கன்பூசியசு கருதினார். பட்டை தீட்டாத மரகதக்கல் கலைப்பொருளாக மாறுதல் இயலாது. கல்வியறிவு இல்லாதவன் நீதிச்சட்டத்தினை அறிந்துகொள்ளுதலும் இயலாது. எனவேதான், பண்டைய வேந்தர்கள் நாட்டில் அமைதியையும் ஒழுங்கினையும் நிலைநாட்டுவதற்குரிய முக்கியக் காரணிகளில் கல்விக்கு முதலிடம் வழங்கினர். திருவள்ளுவரும் அரசனுக்குரிய தகுதிகளைக் கூறும்

இயலில் கல்வி என்னும் அதிகாரத்தினை அமைத்துள்ளமை இயைபு கருதி இங்குச் சுட்டுதற்கு உரியது.

உள்ளத்தில் எழும்பும் சிந்தனைகள் யாவும் கல்வியறிவுடன் கலந்திருத்தல் வேண்டும். உணவினை உண்ணாமலே அதன் சுவையினை ஒருவன் அறிய முடியாது. அதுபோலவே, கல்வி இல்லாமல் மிகப் பெரும்பான்மையான அறிவின் உன்னதத்தினை (Excellence) ஒருவன் அறிதலும் இயலாததுதான்.[27]

தன் அறிவின் பற்றாக்குறையினை ஒருவன் கல்வியினால்தான் அறிந்து கொள்ளுதல் முடியும். இக்கருத்து, 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்ற திருவள்ளுவரின் சிந்தனையுடன் இயல்பாகவே ஒத்திருத்தல் எண்ணி இன்புறத்தக்கது. மற்றவர்க்குக் கற்பிப்பதன் வாயிலாகவே மேலும் படிக்கவேண்டும் என்ற உணர்வு ஒருவர்க்குத் தோன்றுகிறது. எனவே, ஆசிரியர் பணியில் இருப்பவர்கள் புதிது புதிதாகப் பயின்று அறிவினைப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்பது கன்பூசியசின் எதிர்பார்ப்பு எனலாம். கற்பது பாதி அறிவினைத் தரும்; கற்பிப்பது எஞ்சிய பாதி அறிவினைத்தரும் என்பது அவர் கொள்கை.

9.16.1. பண்டைய கல்வித் திட்டம்

இருபத்தைந்து குடும்பங்கள் வாழும் ஒவ்வொரு குடியிருப்பிலும் ஒரு தொடக்கப்பள்ளி இருந்தது. ஐந்நூறு குடும்பங்கள் வாழும் ஒவ்வொரு நகரிலும் ஒரு உயர்நிலைப் பள்ளி இருந்தது. ஒவ்வொரு மாநிலத்தின் (State) தலைநகரிலும் ஒரு கல்லூரி இருந்தது. இந்தக் கல்லூரியில் அரச குமாரர்கள், பிரபுக்களின் பிள்ளைகள், உயர்நிலைப் பள்ளிகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் ஆகியோர் கல்வி பயின்றனர். ஒவ்வொரு ஆண்டும் புதிய மாணவர்கள் கல்வி நிறுவனங்களில் சேர்க்கப்பட்டனர்.

ஒவ்வொரு ஆண்டும் தேர்வு உண்டு. முதலாண்டு முடிவில், மாணவர்கள் வாக்கியங்களுக்கு எவ்வாறு நிறுத்தக்குறி இடுகிறார்கள் என்பது பற்றியும் அவர்களுடைய இயற்கையான ஈடுபாடுகள் யாவை என்பது பற்றியும் கண்டறியும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மூன்றாண்டுகளின் முடிவில், மாணவர்களின் படிப்புப் பழக்கங்கள் பற்றியும் குழுவாழ்வு பற்றியும் கண்டறிவதற்கு உரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஐந்தாண்டுகளின் முடிவில், மாணவர்கள் எந்த அளவில் நன்றாகப் படித்துள்ளனர் என்பது குறித்தும், தத்தம் ஆசிரியர்கள் பயிற்றுவித்தலை எந்த அளவில் நெருக்கமாகக் கவனித்துள்ளனர் என்பது குறித்தும் அறிந்து கொள்ளும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. ஏழாண்டுகளின் முடிவில் மாணவர்கள் தம் சிந்தனையினை எந்த அளவில் வளர்த்துக் கொண்டுள்ளனர் என்பது குறித்தும், எத்தகைய நண்பர்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொண்டனர் என்பது குறித்தும் கண்டறியும் முயற்சியும் மேற்கொள்ளப் பட்டது. இவ்வாறு கண்டறிதல் என்பது சிறு பட்டத் தகுதிப் பேறு (Minor Graduation) என்று அழைக்கப்பட்டது. ஒன்பது ஆண்டுகளின் முடிவில், மாணவர்கள் பல்வேறு துறைகளில் அறிவும், வாழ்க்கையினைப் பற்றிய பொதுவான புரிதலும், தங்கள் நல்லொழுக்கத்திற்கு அதினின்றும் விலகிவிடாதபடி உறுதியான அத்திவாரம் (Foundation) இடுதலும் ஆகியவற்றை அறிந்திருத்தல் வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டனர். இதுவே பெரும் பட்டத்தகுதிப்பேறு (Major Graduation) என்று சொல்லப்பெற்றது.

இத்தகைய கல்வி அமைப்பின் (Educational System) வாயிலாகத்தான் மக்களைப் பண்படுத்தவும், நாட்டின் நீதிகளைப் புதுப்பிக்கவும் முடியும். இதனால் உள்நாட்டு மக்கள் இன்பம் அடைதலும், தூர தேசங்களில் உள்ள மக்கள் இந்த நாட்டிற்கு (-சீன நாட்டிற்கு) வருகைதர

விரும்புதலும் இயலும். இதுவே உயர்கல்விக் கொள்கை ஆகும். இதுவே பழைய பதிவுகளில் (Ancient Records) சுட்டப்படும் "எந்நேரமும் எறும்புகள் சுறுசுறுப்பாக உள்ளன" (The ants are ever busy) என்ற தொடரின் உள்ளார்ந்த பொருளாகும். தொடர் கல்வியின் முக்கியத்துவத்தினை இத்தொடர் புலப்படுத்துகிறது.

கல்லூரியில் மாணவர்கள் சடங்குக்குரிய அங்கிகளை முறையாகப் பயன்படுத்துதல் பற்றியும், வேள்வியில் காய்கறிகளைப் பலியாகக் கொடுத்தல் பற்றியும் கற்கத் தொடங்குகின்றனர். இதன் பயனாக, மரியாதை மற்றும் பக்தி என்னும் தத்துவத்தினை அவர்கள் புரிந்துகொள்ளுகின்றனர். பாடற்பனுவலில் (The Book of Songs) மூன்றாம் பகுதியில் காணப்படும் முதல் மூன்று பாடல்களைப் பாடுவதற்கும் அம்மாணவர்கள் கற்பிக்கப்படுகின்றனர். இதன் பயனாக, அலுவலக வாழ்வின் முதன்மைக் கூறுகளையும் அவர்கள் கற்றுக் கொள்கின்றனர்.[28]

மாணவர்கள் கல்லூரியில் நுழையும் பொழுது, அவர்கள் புத்தகங்களை அவிழ்ப்பதற்கு முன் பறை அடிக்கப்படுகிறது. இதன் நோக்கம், தாம் மேற்கொண்ட படிப்புக்களில் கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதுவே. இந்நாளில் தமிழகப் பள்ளிகளில் முதல் வகுப்பு தொடங்கும் வேளையில் மணி அடிக்கப்படுவதை இங்கு இயைபு கருதி எண்ணிப் பார்க்கலாம். மாணவர்களின் புறவொழுக்கத்தினை ஒழுங்குபடுத்தும் பொருட்டுப் பிரம்பு பயன்படுத்தப்படுகிறது. (Canning - தமிழகத்திலும் தொடக்கப் பள்ளிகளில் இந்நிலை உண்டு).

அரச மூதாதையர்களுக்குப் பெருவேள்வி புரியும் வேளைகள் தவிர மற்ற நேரங்களில், கல்லூரிக்கு ஆய்வாளர் (Inspector) ஒருவரும் அனுப்பப்படுவது இல்லை. மாணவர்கள் தாங்களே தங்களை நெறிப்படுத்திக்

கொண்டு வளர்தல் வேண்டும் என்பதுவே இதற்குக் காரணம் ஆகும்.

மாணவர்களின் செயற்பாடுகளையும் கல்வியையும் ஆசிரியர்கள் கூர்ந்து கவனித்தல் உண்டு. தொடர்ந்து ஆசிரியர் பாடம் நடத்துதல் என்பது இல்லை. ஏன்எனில், ஆசிரியர் கற்பித்தவற்றைச் சுயமாக மாணவர்கள் சிந்திப்பதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டே ஆகும். இளம் மாணவர்கள் நிலை அப்படி அன்று. இவர்கள் ஆசிரியர் பாடம் நடத்துதலைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். கேள்விகள் கேட்பதற்குரிய பக்குவம் பெறாமையினால் கேள்விகள் கேட்கக் கூடாது. இவையே பயிற்றுதலுக்கு உரிய முதன்மையான முறைகளாகும்.

9.16.2. பாடத்திட்டம் சாராப் படிப்புக்கள்

கல்லூரியின் கல்வித் திட்டத்தில் வகுப்பறையில் முறையான படிப்புக்கள் கற்றுத் தரப்படும். மாணவர்கள் தாங்கள் தங்கியிருக்கும் அறைகளில் துணைப்படிப்புக்களை (Collateral Studies) மேற்கொள்ளுவர். விரலசைவு பயிலாமல் கருவியிசையினைக் கற்க முடியாது. பாடல்களைப் படிப்பதற்கு உயிரினங்களைக் கூர்ந்து நோக்கும் அறிவு தேவையாகும். பாடற்பனுவலில் (-The Book of Songs) பூச்சிகள், மீன்கள், பறவைகள், விலங்குகள், மலர்கள், மரங்கள் ஆகியவற்றின் பெயர்கள் நிரம்ப இருக்கும். (இந்த நூலுக்கு எழுதப்பட்ட உரைகள் பலவும் தாவரவியல் மற்றும் விலங்கியல் ஆய்வுகளாகவே இருக்கும்). எனவே மாணவர்கள் இவற்றைப் பற்றிய அறிவினை நோக்குதல் (Observation) வாயிலாகப் பெறுதல் இயலும் என்றார் கன்பூசியசு.[29]

இடைப்பிறவரலாகத் தமிழின் தொன்மை இலக்கியங்களாகிய சங்கப் பனுவல்களை இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். செடி கொடிகள், பறவை, விலங்குகள் உள்ளிட்ட பலவற்றையும் தொல்காப்பியர்க்கு

முற்பட்ட காலத்திலிருந்தே கருப்பொருள்கள் (Flora and Fauna) என்று தமிழ்ச் சான்றோர்கள் வழங்கிவந்தனர். சங்க அகப்பாக்களில் இவற்றைப் பற்றிய புனைவுகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. இவை படிப்பவர்க்கு இன்பம் தருதலுடன் உள்ளார்ந்த பிறிது பொருளையும் குறிப்புப் பொருளையும் புலப்படுத்த வல்லன. இவற்றை உள்ளுறை, இறைச்சி என்ற கலைச்சொல்லினால் சுட்டினர். இத்தகைய பொதுக் கூறுகளை மானிடப் பொதுமைக்கு (Common to the Human stock) உரியனவாக எண்ணுதல் வேண்டும்.

எனவே, பாடலைக் கற்பதற்கு இயற்கைப் பொருள்களைப் பற்றிக் கூர்ந்து நோக்கிப் பெற்ற அறிவு தேவை என்று கன்பூசியசு கூறியுள்ள கருத்து, தொல்காப்பியர் (கி.மு.500) கூறியுள்ள கருத்துடன் இயைத்து நோக்கத்தக்க சிறப்புடையது எனலாம்.

இனி, பாடத்திட்டம் சாராத படிப்புக்கள் பற்றி மேலும் கன்பூசியசு கூறியுள்ள கருத்துக்களைக் காண்போம்.

பல்வகைப்பட்ட சடங்குகளில் அணிதற்கு அங்கிகள் பற்றிய அறிவு இல்லாமல், சடங்குப்பனுவலை (The Book of Rituals) ஒருவன் கற்க முடியாது. வில் வித்தை, வாகனம் ஓட்டுதல் முதலிய பல்வேறு கலைகளையும் கற்காமல் பள்ளியில் ஒருவன் கல்வியைச் சுவைக்க முடியாது.

எனவே, உயர்மனிதனின் (Superior man) கல்வியில், கற்ற கல்வியைச் செரித்துக் கொள்ளுவதற்கும், பக்குவப்படுத்திக் கொள்ளுவதற்கும், ஓய்வு கொண்டபின் விளையாடுவதற்கும் போதிய அவகாசம் மாணவனுக்கு அளிக்கப்படுகிறது.

இவ்வகையினால், கல்லூரியைத் தன் சொந்த வீடாக உணரும் மாணவர்கள் தத்தம் ஆசிரியர்களிடம்

நேர்த் தொடர்பு கொள்ளுகின்றனர்; நல்ல நண்பர்களைப் பெறுகின்றனர்; தத்தம் கருத்துக்களில் உறுதி பெறுகின்றனர்.

கன்பூசியசு காலத்துக் கல்வி முறை இந்த நூற்றாண்டில் கூட கல்வியாளர்களாலும் சான்றோர்களாலும் பாராட்டப்பெறுகிறது.

9.16.3. கல்வியின் அடிப்படைக் கூறுகள்

கல்லூரிக் கல்வியின் அடிப்படைக் கொள்கைகள் வருமாறு:-

1. தீய பழக்கங்கள் தோன்று முன்னரே அவற்றைத் தவிர்த்தல்.
2. பருவம் அறிதல் - மாணவர்கள் ஏற்றுக் கொள்ளுவதற்குத் தயார் நிலையில் உள்ள பொழுதே அவர்களுக்குத் தேவையானவற்றைப் பயிற்றுதல்.
3. மாணவர்களின் தராதரம் அறிந்து வெவ்வேறு பாடங்களையும் ஒழுங்காகக் கற்பித்தல்.
4. மாணவர்கள் மற்ற மாணவர்களின் உன்னதத்தினை (Excellence) உணர்ந்து பாராட்டுதல்.

இந்த நான்குமே கல்வியியின் வெற்றியை உறுதிப்படுத்துவன என்றார் கன்பூசியசு.

1. காலம் கடந்து மாணவர்களின் தீய பழக்கங்களைத் தடுத்தல் என்பது பயனற்ற முயற்சியாக முடிதல் உண்டு.
2. இளமைக்குப் பின் கற்பித்தல் என்பது மாணவர்கள் எளிதில் கற்க இயலாமல் வீணாகப் போகும்.
3. பல்வேறு பாடங்களையும் அவற்றுக்குரிய வரிசையில் கற்பிக்கத் தவறுதல் என்பது

மாணவர்களின் படிப்புக்களில் குழப்பத்தை உண்டாக்கும். நல்ல விளைவுகளைப் பயவாது.

4. நண்பர்களின் கூட்டுறவு இன்றித் தன்னந் தனியே மாணவர் ஒருவர் ஒரு பாடத்தினைப் படித்தல் என்பது அவர் பார்வையினைக் குறுகலாக்கும். மேலும், பொது அறிவினை இழக்கச் செய்யும். (இதனால் கூடிப்படித்தல் (Group Study) வலியுறுத்தப்பட்டது).

5. தீ நட்பு ஆசிரியர்க்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்டும் (-இன்றைய நடைமுறையினை நினைவூட்டுகிறது.)

6. பொருத்தமில்லாத பொழுது போக்குகள் மாணவர்களின் முறையான படிப்பினைப் பாதிக்கும்.

இந்த ஆறும் கல்லூரிக்கல்வி முறிவுறச் செய்யக் காரணமாக அமைவன என்றார் கன்பூசியசு.

9.16.4. இலட்சிய ஆசிரியர்

கல்வியில் தேர்ச்சியும் வெற்றியும் பெறுவதற்கும் தோல்வியுறுவதற்கும் உரிய காரணங்களைப் பற்றிய அறிவு பெற்ற உயர்மனிதர் (Superior man) ஆசிரியர் ஆவதற்குத் தகுதி படைத்தவராகின்றார்.

இலட்சிய ஆசிரியர் மாணவர்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறார். அவர்களை ஒருபொழுதும் காலை வாரிவிடுவதில்லை. அவர்களை முன்னோக்கிச் செல்லுதற்கு வலியுறுத்துவார். ஒருபொழுதும் அவர்களைக் கீழ்ப்படுத்தல் இல்லை. அவர் மாணவர்களுக்கு வழியைத் திறந்துவிடுவாரே தவிர, அடைய வேண்டிய இடத்திற்கு அவர்களை நடத்திச் செல்லுவதில்லை. அவர்களாகவே அந்த இடத்தினைச் சேர்தல் வேண்டும். இத் தன்மையால், கல்வி பயிலுதல் எளிமையாகவும்

இனிமையாகவும் அமைகிறது. மாணவர்கள் சுயமாகவே சிந்திப்பதற்கு ஊக்கம் அளிக்கப்படுகின்றனர். இன்னோரன்ன காணரங்களால் ஆசிரியர் நல்லாசிரியர் என்றும் பெயரைப் பெறுகிறார்.[30]

கல்வியில் நான்கு பொதுவான குறைகள் காணப்படுகின்றன. இவற்றை ஆசிரியர் நன்கு உணர்ந்திருத்தல் வேண்டும்.

1. மாணவருள் ஒருசிலர் அளவுக்குமேல் கற்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.
2. அளவுக்குக் கூடுதலான துறைகளைக் கற்க வேண்டும் என்று விரும்புபவர் சிலர்.
3. மாணவருள் ஒருசிலர் அளவுக்குக் குறைவாகக் கற்க விரும்புவர் அல்லது அளவுக்குக் குறைவான துறைகளைக் கற்றால் போதும் என்று எண்ணுவர்.
4. ஒருசிலர் மிக எளிமையாகக் கற்கின்றனர். ஒருசிலர் மிகவும் எளிமையாக மனம் தளர்ந்து போகிறார்கள்.

இந்த நான்கு நிலைகளினால், ஒவ்வொரு மாணவரும் தத்தம் மனத்தின் இயற்கையான ஆற்றல்களில் வேறுபடுகின்றனர் என்பது தெளிவு. இவர்களில் ஒவ்வொருவரின் மன ஆற்றலின் தகுதியை முழுமையாக அறிந்து கொள்ளுவதால் மட்டுமே அவர்களுடைய பிழைகளை ஆசிரியர் திருத்துதல் முடியும். ஒரு மாணவனிடம் உள்ள நல்லனவற்றை வெளிப்படுத்துதலும், அவரிடம் காணப்படும் கறைகளைக் களைதலும்தான் நல்லாசிரியரின் பணியாகும்.

நல்ல பாடகன் மற்றவரும் தன் இராகத்தினைப் பின்பற்றச் செய்கிறான். நல்ல ஆசிரியரும் மற்றவரும் தன் இலட்சியத்தினைப் பின்பற்றச் செய்கிறார். ஆசிரியர் பேசும் சொற்கள் சுருக்கமாயிருப்பினும் பொருளாழமும்

புலப்பாட்டுத் திறமும் கொண்டவை; உட்பொருள் பொதிந்தவை. மக்களை புரியவைப்பதற்காக ஆசிரியர் நல்ல, ஆற்றல்மிக்க உவமைகளையும் உதாரணங்களையும் எடுத்தாள்கிறார்.

உயர்மனிதர் (-ஆசிரியர்) எது கடினமானது, எது எளிமையானது என்பதை அறிகிறார். எது விழுமியது, எது வருந்தத்தக்கது என்பது பற்றிய அறிவும் வாய்க்கப்பெற்றவர் ஆசிரியர். இத்தகைய அறிவுக் கூர்மையாலும், திறமையாலும் ஆசிரியர் முதுவர் (Elder) ஆகிறார். அடுத்த பரிணாம நிலையில் மக்களை ஆளும் உயர்மனிதர்ஆகிறார். ஆசியராக இருத்தற்கு உரிய கலை ஆளுவோராக இருத்தற்கு உரிய கலையாக அமைகிறது. எனவே, நல்லாசிரியர்களை மேற்கூறப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்தல் பழைய முறையாகும்.

ஆசிரியரை மதித்தல் வேண்டும். ஆசிரியர் மதிக்கப்பெற்றால்தான் அவர் கற்பிப்பதை மக்கள் மதிப்பார்கள். இங்ஙனம் ஆசிரியரை மதிப்பதன் வாயிலாக மக்கள் கல்வியை மதிக்கிறார்கள்.

எனவே, அரசன் தன் குடிமக்கள் என்று கருதாத நிலையில் உள்ளவர்கள் ஆசிரியர் ஆவர். மேலும் மூதாதையர் ஆவியும் இவ்வாறு கருதப்படும்.

9.16.5. கற்கும்முறை

நல்ல மாணவனுக்காக ஆசிரியர் அதிகம் வேலை புரிய வேண்டியதில்லை. மேலும் அவன் ஆசிரியரை முழுமையாக மதிக்கிறான். மந்த மாணவனுக்காகவே ஆசிரியர் அதிகம் வேலை செய்தல் வேண்டும். இதனால் பாதி விளைவுதான் ஏற்படும். அன்றியும் அவனால் ஆசிரியர் வெறுக்கப்படுதலும் உண்டு. மாணவர் பொருள் பொதிந்த கேள்வியைக் கேட்க வேண்டும். ஆசிரியரும் பொருள்மிக்க விடையினைக் கூறுதல் வேண்டும். இதனால் இருவருக்கும் மகிழ்ச்சி உண்டாகிறது.

கேள்விகளுக்குஏற்ற விடையினைக் கூறுவதற்கு அறிந்த ஆசிரியரை மணிகளின் தொகுதிக்கு (Group of bells)க் கன்பூசியசு ஒப்பிடுகிறார். பெரிய மணியை அடித்தவுடன், அது ஒலிக்கிறது. சிறிய மணியை ஒலித்தால் அதுவும் ஒலிக்கிறது. எனவே மணி பெரிதாயினும் சிறிதாயினும் ஒலிப்பதில் ஒன்றாயிருத்தல் போல, மாணவர் கேட்கும் வினா பெரிதாயினும் சிறிதாயினும் விடை தெளிவாயிருத்தல் வேண்டும்.

பழுது பார்ப்பவன் மகன் தோலினால் உருவாக்கப்பட்ட மேல் சட்டையினை எப்படி செப்பம் செய்வது என்பதை இயல்பாகவே அறிகிறான். வில்களை உருவாக்கும் தொழிலாளியின் மகன் உள்ளீடான மூங்கில் தட்டிலைச் செய்வது எப்படி என்பதை இயல்பாகவே அறிகிறான். குதிரையினை அடக்கிப் பழகுபவன் முதலில் வாகனத்தின் பின்புறமே குதிரையினைக் கட்டுகிறான். இம்மூன்று உதாரணங்களினால் தகுந்த பயிற்று முறையினைச் சான்றோர் (Gentleman) கற்க முடியும். பண்டைக் காலத்து அறிஞர்கள் இத்தகைய உவமைகள், உதாரணங்களின் வழியாகவே உண்மைப் பொருளைக் கற்றுத் தெளிந்தனர்.[31]

இசையின் ஐந்து வகைக் கூறுகளில் யாதொன்றின் கீழும் பறையோசை வருவதில்லை. இசையின் ஐவகைக் கூறுகளும் பறையோசையுடன் தொடர்ந்து ஒத்திசைப்பதும் இல்லை. ஐவகை நிறங்களில் யாதொன்றினையும் தண்ணீர் (நிறம்) சாராது. ஆனால், வண்ண ஓவியம் தீட்டும் பொழுது தண்ணீரின் பயன்பாடில்லாமல் ஐந்து நிறங்களும் ஒளி மழுங்கித் தோன்றும். கல்வி தானே ஐம்புல அறிவுகளில் யாதொன்றின் கீழும் வருவது இல்லை. ஆயினும், கல்வி இல்லாமல் ஐம்புலன்களைத் தக்கபடி பழக்குதல் முடியாது. அரச மரபின் ஐந்து படிநிலைகளில் உள்ளவர் யாதொருவரின் கீழும் ஆசிரியர் வருவதில்லை. ஆனாலும் அரச மரபின் ஐந்து

படிநிலைகளில் உள்ளவர்கள் ஆசிரியரின்றி ஒருவரை ஒருவர் நேசிப்பது இல்லை. எனவே, அரசியலிலும் சமுதாயத்திலும் ஆசிரியர் சிறப்பிடம் பெற்று விளங்குகிறார் எனலாம்.

9.17. இசைக்கொள்கை

9.17.1. இசையின் தோற்றமும் செயற்பாடும்

ஒருவரின் நெஞ்சம் புற உலகத்தால் தொடப்படும் பொழுது,இசை உதயம் ஆகிறது. புற உலகத்தால் தொடப்படும் பொழுது நெஞ்சம் இளகுகிறது; அதனால் ஒலிகளின் வாயிலாகத் தன்னை நெஞ்சம் வெளிப்படுத்திக் கொள்ளுகிறது. இந்த ஒலிகள் ஒன்றோடொன்று இணைந்து ஒழுங்குபெறும் பொழுது சந்தம் (Rhythm) உண்டாகிறது. கவசமும் மழுவும் ஏந்திய இராணுவத்தினரின் நடனத்துடனும்; நீண்ட இறகுகள் சூடி மற்றும் கொடிகள் ஏந்தியுள்ள நாட்டு மக்களின் நடனத்துடனும் இன்பம் தரும் பாங்கில் ஒத்திசைக்கும் நாதங்களின் ஒழுங்கமைப்பினை இசையென்று அழைக்கின்றனர்.[32]

1. நெஞ்சம் துன்பத்தால் தொடக்குறும் பொழுது, எழுப்பப்படும் இசையொலி வருத்தம் படிந்ததாக இருக்கிறது. 2. நெஞ்சம் நிறைவுற்றிருக்கும் பொழுது எழும்பும் ஒலி தளர்ந்தும் மெதுவாகவும் இருக்கிறது. 3. நெஞ்சம் மகிழ்ச்சியில் ஆழும் பொழுது ஒலிகள் யாவும் ஒளிமயமாகவும் விரிவாகவும் வெளிப்படுகின்றன. 4. நெஞ்சம் சினத்தினால் பாதிப்படையும் பொழுது ஒலிகள் கடுமையாகவும் வலிமையாகவும் வெளிப்படுகின்றன. 5. நெஞ்சம் பக்தியினால் நிறைந்திருக்கும் பொழுது எழும் ஒலிகள் எளிமையாகவும் தூய்மையாகவும்உள்ளன. 6. நெஞ்சம் காதலினால் நிறைவுறும் பொழுது வெளிப்படும் ஒலிகள் இனிமையாகவும் மிருதுவாகவும் உள்ளன.

மேலே சொல்லப்பெற்ற அறுவகைப்பட்ட உணர்ச்சிகளும் இயற்கையாக நெஞ்சத்தினின்றும்

வெளிப்படுவன அல்ல; ஆனால், புற உலகின் பதிவு உண்டாக்கும் மனநிலைகளினால் உண்டாவன.

மனிதரின் நெஞ்சங்களைப் பாதிக்கும் புற உலகு பற்றிப் பண்டைய வேந்தர்கள் எப்பொழுதும் கவனமாகவே இருந்துள்ளனர். எனவேதான், பண்பாட்டு ஒழுக்கத்தினை (லீ) பின்பற்றுவதால் மக்களின் குறிக்கோள்களையும் விருப்பங்களையும் வழிநடத்த அவர்கள் முயன்றுள்ளனர். மேலும் இசையின் வழியாக ஒலிகளில் ஒத்திசைவினையும், நல்லாட்சியின் வழியாக நடத்தையினையும் ஒழுங்குபடுத்தவும் முயன்றுள்ளனர். உரிய தண்டனைகளால் அநீதிகளையும் தீய ஒழுக்கத்தையும் தடுக்க முற்பட்டனர்.

லீ (Li), இசை, தண்டனைகள், அரசாங்கம் என்ற நான்கும் ஒரு பொதுக் குறிக்கோளைக் கொண்டவை. மக்கள் நெஞ்சங்களில் ஒருமையுணர்வினை உண்டாக்குவதுடன், அரசியல் ஒழுங்கின் தத்துவங்களை நடைமுறைப்படுத்துவதும் மேலே கூறப்பட்ட நான்கின் செயற்பாடாகும்.

அமைதியும் வளமும் மிக்க ஒரு நாட்டின் இசை, அமைதியையும் மகிழ்ச்சியையும் வழங்குவதுடன் அரசாங்கமும் முறையாகச் செயற்படுவதற்கு ஆற்றுப்படுத்துகிறது.

துன்பத்திலும் குழப்பத்திலும் தொடக்குற்ற ஒரு நாட்டின் இசை, மனநிறைவின்மையினையும், சீற்றத்தையும் உண்டாக்குவதுடன் அரசாங்கத்தையும் குழப்பமடையச் செய்யும். அழிவுற்ற ஒரு நாட்டின் இசை, துன்பமும் பழைமை நினைவும் பயப்பதுடன் மக்களின் கவலையினையும் புலப்படுத்துகிறது. இங்ஙனம், இசையும் அரசாங்கமும் ஒன்றற்கு ஒன்று நேர்த்தொடர்பு கொண்டிருக்கின்றன.[33]

1. சி (C) என்னும் நாதம் அரசனின் அடையாளமாக உள்ளது. டி (D) என்னும் நாதம் அமைச்சரின் அடையாளமாக உள்ளது. இ (E) என்னும் நாதம் மக்களின் அடையாளமாகவும், ஜி (G) என்றும் நாதம் நாட்டு நடப்புக்களின் சின்னமாகவும் ஏ (A) என்னும் நாதம் இயற்கை உலகின் சின்னமாகவும் உள்ளன. இந்த ஐந்து சாவிகளும் ஓர் ஒழுங்கில் அமைக்கப்படும் பொழுது கடூரமான, இணக்கமில்லாத ஒலிகள் எழுவதில்லை. சி (C) என்னும் நாதத்தின் சாவி (Key), தன் குரல் தன்மையினை (Tonality) இழக்கும் பொழுது, இசை தன் அடிப்படையினை இழக்கிறது; அரசனும் தன் கடமைகளைப் புறக்கணிக்கிறான். டி (D) என்னும் நாதத்தின் சாவி (Key) தன் குரல் தன்மையினை இழக்கும் பொழுது, இசை தனது தரவரிசையினை (Gradation) இழக்கிறது; அமைச்சர்கள் அரசர்க்குக் கீழ்ப்படியாமலும் கட்டுக்கு அடங்காமலும் போகின்றனர். இ (E) என்னும் நாதத்தின் சாவி, தன் குரல் தன்மையினை இழக்கும் பொழுது, இசை துக்கமயமாகிறது; மக்களும் துன்ப உணர்வு பெறுகிறார்கள். ஜி (G) என்னும் நாதத்தின் சாவி, தன் குரல் தன்மையினை இழக்கும் பொழுது, இசை புலம்பல் மயமாகிறது; நாட்டின் செயற்பாடுகள் சிக்கலடைகின்றன. ஏ (A) என்னும் நாதத்தின் ஒலி தன் குரல் தன்மையினை இழக்கும் பொழுது ஏற்படும் இசை அபாயத்தைக் குறிப்பாக உணர்த்துகிறது; மக்கள் வறுமையால் துன்புறுகின்றனர்.

மேலே சுட்டப்பட்ட ஐவகைச் சாவிகளும் தத்தம் குரல் தன்மையினை இழந்து, ஒன்றை மற்றொன்று புரட்டிப் போடும் பொழுது ஒவ்வாத இசை உண்டாகிறது; தேசம் நெடுங்காலம் வாழ்தல் இல்லை.

மனிதனின் நெஞ்சத்திலிருந்து குரல்கள் எழுகின்றன. மனிதனின் ஒழுகலாற்றின் தன்மைகளுடன் இசை தொடர்புறுத்தப் பெற்றுள்ளது. எனவேதான்,

விலங்குகள் ஓசைகளை (Sounds) அறியுமே தவிர, நாதங்களை (Tones) அறிவதில்லை. சாமானிய மக்களோ நாதங்களை அறியினும் இசையினை (Music) அறிவதில்லை. உயர்மனிதன் (Superior Man) மட்டுமே இசையினை அறியும் திறன் பெற்றுள்ளான்.

ஒலிகளை முறையாகக் கற்பதன் பயனாக ஒருவர் நாதங்களைப் புரிந்து கொள்ளுகிறார்; நாதங்களை முறையாகக் கற்பதன் பயனாக இசையினைப் புரிந்து கொள்ளுகிறார். இசையினை முறையாகக் கற்பதன் பயனாக அரசாங்கத்தின் தத்துவங்களைப் புரிந்து கொள்ளுகிறார்; புரிந்து கொள்ளுவதன் வாயிலாக நாட்டினை ஆளுவதற்குரிய தயார் நிலையினை அடைகிறார்.[34]

எனவே, உயர்மனிதன் அரசன் என்பதும் அவன் இசைக்கலையினை அறிந்திருந்தால் நாட்டினை ஆட்சி செய்தல் முடியும்என்றும் கன்பூசியசு கருதியுள்ளார் என்பது புலனாகும். பெருங்கதைக் காப்பியத்தின் தலைவன் உதயணனும்,[35] சீவக சிந்தாமணிக் காப்பியத்தின் தலைவன் சீவகனும்[36] இசைக்கலையில் தேர்ச்சி பெற்றுச் சீர்த்தியுடன் ஆட்சி புரிந்த பேரரசர்கள் என்பது இங்கு இயைபு கருதி எண்ணிப் பார்த்தற்கு உரியது.

இசையினை நன்கு புரிந்துகொள்கிறவன் மட்டுமே லீ (Li)யினைப் புரிந்து கொள்ளுதற்கு அணியம் ஆகிறான் என்று கன்பூசியசு கருதினார். எவர் ஒருவர் லீயையும் இசையினையும் கற்றுத் துறைபோகிறார்களோ, அவரை நற்குணம் மிக்கவர் என்று கூறினார்.

பண்டைய சீன நாட்டில் மூதாதையர் வழிபாட்டிலும் கருவியிசையும் மிடற்றிசையும் ஒலித்தன. ஒருவர் பாடவும், மூவர் பின்பாடவும் அவர்கள் இசை குழுப்பாடலிசையாக விளங்கியது. அரச விருந்துகளிலும் இசைக்குச் சிறப்பிடம் உண்டு.[37]

புற உலகின் பாதிப்பால்தான் மனிதன் விருப்பு, வெறுப்பு ஆகிய உணர்வுகளுக்கு ஆளாகிறான். கூடுதலாக இவ்வுணர்வுகளால் ஒருவர் பாதிக்கப்பட்டால் அவர் உலகாயதராக (Materialist) மாறிவிடுகிறார். ஆசைகள் என்னும் கடலில் அத்தகைய மனிதர் மூழ்கி விடுகிறார். காரண காரியத் தொடர்பினை மறந்துவிடும் நிலை உண்டாகிறது. இதன் விளைவாகப் புரட்சி, கீழ்ப்படியாமை, சூழ்ச்சி, ஏமாற்றுதல் பொது ஒழுக்கக்கேடு என்பன எழுகின்றன. மெலியோரை வலியோர் கொடுமைப்படுத்துதலும், பெரும்பான்மையர் சிறுபான்மையோரை நலிவுறுத்தலும் தந்திரமான கெட்டிக்காரர் எளியோரை ஏமாற்றுதலும், பிணியாளரும் உறுப்பிற் குறைந்தோரும் கவனிக்கப்படாமையும்; முதியோரும் குழந்தைகளும் அனாதைகளும் பராமரிக்கப்படாமையும் உண்டாகின்றன.

இவற்றையெல்லாம் முறையாக ஒழுங்குபடுத்தும் பொருட்டுத்தான் சடங்குகளும் இசையும் பண்டைய அரசர்களால் நிறுவப் பெற்றுள்ளன. சவ ஊர்வலத்தின் பொழுதும் மணியோசை, பறையோசை, பாடலிசை எழுப்பப்படுகின்றன. திருமணத்தின் பொழுதும், சிறுவன் பருவம் அடைந்து தலையில் குல்லாய் (Cap) அணிந்து கொள்ளும் சடங்கின் பொழுதும், சிறுமி பருவம் அடைந்து முடி ஒப்பனை செய்து கொள்ளும் பொழுதும் இசைப்பாடல்கள் பாடப்படுகின்றன. வில்வித்தைப் போட்டிகள், விழாக்கள், விருந்து உபசரிப்புக்களிலும் இசைக்குச் சிறப்பிடம் உண்டு.

சடங்குகள் யாவும் மக்களின் உணர்வுகளை ஒழுங்குபடுத்துகின்றன. நாட்டின் ஒலிகளில் ஒத்திசைவினை இசை நிலைநாட்டுகின்றது. அரசு மக்களின் நடத்தையினை ஒழுங்குபடுத்துகிறது. தண்டனைகள் குற்றங்களைத் தடுக்கின்றன.

சடங்குகள், இசை, தண்டனைகள், அரசாங்கம் - இந்த நான்கும் ஒழுங்காகச் செயற்பட்டால் அரசநீதி (Political Justice) என்னும் தத்துவம் செம்மையாகச் செயற்படும் என்பது கன்பூசியசு காட்டிய நெறியாகும்.[38]

9.17.2. சடங்குகளும் இசையும்

மக்களை ஒன்றுபடுத்துவது இசை. சடங்குகள் மக்களை வேறுபடுத்துவன. ஒன்றுபடுவதால் மக்கள் ஒருவருக்கு ஒருவர் தோழமையுடன் பழகுகின்றனர். வேறுபடுவதால் மக்கள் ஒருவரை ஒருவர் மதிக்கக் கற்றுக் கொள்ளுகின்றனர்.[39]

இசையும் சடங்கும் சமநிலையில் இருந்தால்தான் நன்மையினை நல்கும். ஒன்று கூடி மற்றொன்று குறைதல் சிறப்பன்று. இசை சடங்கினைவிட மேலோங்கினால், சமுதாயக் கட்டமைப்பு சீர் குலையும். சடங்கு இசையினைவிட மேலோங்கினால் சமுதாய வாழ்வு உற்சாகம் அற்றதாக மாறிவிடும். மக்களின் உள்ளுணர்வுகளையும் அவர்களின் புறவொழுக்கத்தினையும் சமனிலைக்குக் கொண்டு வருதல் சடங்குகள் மற்றும் இசையின் ஒன்றுபட்ட வேலை ஆகும்.

சடங்குகள் என்னும் நிறுவனம் ஒழுங்குணர்வுக்கும் சீர்மைக்கும் வரையறுத்த பொருண்மையினைக் கொடுக்கிறது. இசையும் பாடலும் எங்கும் பரவுதல் மக்களிடையே அமைதிச் சூழலை நிலைநாட்டுகின்றது. தீய உணர்வினின்றும் நல்ல உணர்வினை வேறுபடுத்திக் காட்டும் பொழுது, தீயோரிடமிருந்து நல்லோரை வேறுபடுத்திக் காணும் வழியினைக் காண்கிறோம். அகிம்சை குற்றவியல் சட்டத்தால் தடுக்கப்படும் பொழுதும் நல்லவர்கள் அரசுப் பணிகளில் அமர்த்தப்படும் பொழுதும் அரசாங்கம் நிலைத்தன்மையினையும் ஒழுங்கமைவினையும் உடையதாக மாற்றம் பெறுகிறது. அன்பினை மனித நேயத்தாலும், நடுவுநிலை

உணர்வினைக் கடமை உணர்வினாலும் எடுத்துணர்த்தும் பொழுது நீதியும் ஒழுங்கும் வாய்ந்தவர்களாக மக்கள் வாழக் கற்றுக் கொள்ளுகின்றனர்.

அகத்திலிருந்து வெளிப்படுவது இசை. புறத்திலிருந்து வருவது சடங்கு. இசை உள்ளத்திலிருந்து வருவதால் சாந்தம், அமைதி என்ற தன்மைகள் இசையில் அமைந்துள்ளன. சடங்குகள் புறத்திலிருந்து வருவதால் சம்பிரதாயத்தன்மை பெற்றுள்ளது. நல்லிசை பரவினால் அதிருப்தி உணர்வில்லை. முறையான சடங்குகள் நடைபெற்றால் சண்டை சச்சரவுகள் இல்லை. அரசன் இசை, சடங்கு என்பவற்றால் நாட்டினை இனிதாக ஆட்சி செய்கிறான். அரசர், குடிமக்கள், பெற்றோர் பிள்ளைகள், மூத்தோர், இளையோர் யாவரும் இசையினாலும் சடங்கினாலும் பண்புடனும் பரிவுடனும் மகிழ்வுடனும் வாழ்கின்றனர்.

பிரபஞ்சத்தின் ஒத்திசைவுத் தத்துவத்துடன் விழுமிய இசை பொருந்திப் போகிறது. பிரபஞ்சத்தின் பன்மைத் தத்துவத்துடன் சடங்குகள் பொருந்திப் போகின்றன. ஒத்திசைவுக் கோட்பாட்டினால் பௌதிக உலகில் ஒழுங்கு மீட்டெடுக்கப்படுகிறது. பன்மைக் கோட்பாட்டினால் விண்ணகம் மற்றும் மண்ணகத் தெய்வங்களுக்குப் பலிக்கொடை வழங்கும் தகுதி பெற்றிருக்கிறோம். பௌதிக உலகில் இசையினையும் சடங்கினையும் நாம் பெற்றிருக்கிறோம். ஆன்மீக உலகில் பல்வேறு கடவுளரைப் பெற்றிருக்கிறோம். இவ்வகையால் அன்பிலும் பக்தியிலும் உலகம் தழைக்கும்.[40] பல்வேறு சூழ்நிலைகளில் சடங்குகள் பக்தியைப் புகட்டுகின்றன. இசை பல்வேறு வடிவங்களில் அன்பினைப் போதிக்கிறது. சடங்கு,இசை ஆகியவற்றின் வழியாக இத்தகைய நீதி நிலை (Moral Condition) நிலை நாட்டப்படும் பொழுது, அறிவுக் கூர்மை மிக்க பல்வேறு வேந்தர்கள் தொடர்ந்து

ஆட்சி புரிவதன் வாயிலாகப் பண்பாட்டின் தொடர்ச்சியை மக்கள் பெற்று மகிழ்ந்திடுவர்.

பிரபஞ்சத்தின் ஒத்திசைவினை இசை புலப்படுத்துகிறது. பிரபஞ்சத்தின் ஒழுங்கமைவினைச் சடங்குகள் புலப்படுத்துகின்றன. ஒத்திசைவினாலும், ஒழுங்கமைவினாலும் உலகில் சமனிலை (Balance) உண்டாகிறது. இசை விண்ணகத்திலிருந்து உதயமாகிறது. சடங்குகள் மண்ணகத்தில் வரிசைப்படுத்தப்படுவன. இவ்விரண்டினையும் புறக்கணித்தால் அகிம்சையும் ஒழுங்கின்மையும் விளையும். சடங்குகள், இசை - இவ்விரண்டனையும் முறையாகப் பயன்கொள்ளுவதற்கு விண், மண் என்ற இரண்டன் தத்துவங்களையும் கட்டாயம் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

எனவேதான், முனிபுங்கவர் (Sage) விண்ணுடன் இயைபுறுத்தும் பொருட்டு இசையினையும், மண்ணுடன் இயைபுறுத்தும் பொருட்டுச் சடங்குகளையும் படைத்திருக்கிறார். சடங்குகளும் இசையும் நன்றாகப் பேணப் பெற்றால், விண்ணும் மண்ணும் பூரண ஒழுங்கில் செயல்படும். விண் உயரே உள்ளது, மண் கீழே உள்ளது. இவ்வகையில்தான் அரசர் - அமைச்சர்கள் உறவு பேணப்பெற்று வருகிறது. உயர்வும் தாழ்வும் பல்வேறு தரங்களில் வரிசைப்படுத்தப் பெறும் பொழுது, சமுதாயப் படிநிலைகள் (Social ranks) என்னும் தத்துவத்தைப் பெறுகிறோம். வினை, எதிர்வினை என்பனவற்றைத் தொடர்புபடுத்தும் விதிகளை நாம் பெற்றிருக்கும் பொழுது, பெரியோர் சிறியோர் பற்றிய வேறுபாடுகளை நாம் காண்கிறோம். இயற்கை இயல்புகளின் அடிப்படையில் எண்ணற்ற பொருள்கள் வகைமைப்படுத்தப் பட்டுள்ள நிலையில், விலங்கியல் வாழ்வில் பன்மைத் தத்துவத்தினை இனம் காண்கிறோம். இவ்வகையால், குறியியலாகவுள்ள விண்ணக உடுக்குழுக்களையும், மண்ணகத்தின் பல்வகை வடிவம் கொண்ட மலைகள்,

ஆறுகள் மற்றும் எஞ்சிய பொருள்களையும் அறிந்து கொள்ளுகிறோம். பிரபஞ்சத்தின் பன்மைத் தத்துவத்தில் லீ (Li)யின் செயற்பாடும் உள்ளது.

மண்ணின் மேலுள்ள வாயுப் பொருள்கள் (Gases) மேல் நோக்கிச் செல்லும் பொழுதும் வானின் வாயுப் பொருள்கள் கீழ்நோக்கி வரும் பொழுதும்; யின் (Yin) மற்றும் யங் (Yang) தத்துவங்கள் சந்தித்து உரசல் உண்டாக்கும் பொழுதும்; விண்ணும் மண்ணும் ஒன்றன் மீது ஒன்று வினைபுரியும் பொழுதும் (Interact) ஞாயிறு, திங்களின் கதிர்களால் வெப்பம் ஊட்டப்பெற்று, பருவங்களின் சுழற்சியினால் தூண்டப்பெற்று, காற்றும் மழையும் கலந்தடிக்கப்படுவதால், இடி மின்னல்களால் விரைவுபடுத்தப்பட்டு வாழ்வில் எழுச்சி ஏற்படும் பொழுதும் உலகில் உள்ள பொருள்கள் வளர்கின்றன, மற்றும் செழிப்புறுகின்றன. இதனால் பிரபஞ்சத்தின் ஒத்திசைவுத் தத்துவத்தின்மேல் இசை செல்வாக்குச் செலுத்துகிறது என்பதை உணரலாம்.[41]

1. இயற்கையின் அனாதியான சக்திகளை இசை விளக்குகிறது.
2. படைப்பின் பொருள்களை லீ (Li) பிரதிபலிக்கிறது.
3. நிரந்தர இயக்கத்தின் தத்துவத்தினை விண் பிரதிபலிக்கிறது.
4. இருப்பின் தத்துவத்தினை மண் பிரதிபலிக்கிறது.
5. இயக்கம் (Motion), இருப்பு (Rest) ஆகிய இரு தத்துவங்கள் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே வாழ்வில் ஊடுருவியுள்ளன.

எனவேதான் முனிபுங்கவர் (Sage) சடங்குகள், இசை பற்றி விரிவாகப் பேசுகிறார்.

9.17.3. மனிதப் பண்பினை இசை புலப்படுத்துதல்

மனித இயற்கையின் முதுகெலும்பாக இருப்பது நல்லொழுக்கம். நல்லொழுக்கத்தின் மலர்ச்சியே இசை. உலோகம், கல், நரம்பு, மூங்கில் ஆகியவற்றால் இசைக் கருவிகள் அமைக்கப்படுகின்றன.

நம் நெஞ்சத்தின் வெளிப்பாடு பாடல். நம் குரலின் வெளிப்பாடு இசை. நம் அசைவுகளின் வெளிப்பாடு ஆடல். மனிதனின் ஆன்மாவிலிருந்து பாடல், இசை, ஆடல் என்ற மூன்று கலைகளும் தோன்றுகின்றன. இசைக்கருவிகளால் இம்மூன்றும் மேலும் வெளிப்பாடு (Expression) பெறுகின்றன. சுவையுணர்வின் (Sentiment) ஆழத்திலிருந்து வடிவத்தெளிவு வருகிறது. மனநிலையின் (Mood) வலிமையிலிருந்து சூழ்நிலையின் தெய்வீகத் தன்மை வருகிறது. இந்த உணர்வின் ஒத்திசைவு ஆன்ம சக்தியிலிருந்து வெளிப்பட்டுத் தோன்றி இசை வடிவத்தில் மலர்கிறது.[42]

9.17.4. செவ்வியல் இசையும் நவீன இசையும்

வேய் (Wei) மாநிலத்தின் பெருமகன் வென் (Baron Wen) கன்பூசியசின் சீடர் சேஹிசியா (Tsehsia)வைப் பார்த்து,

> "என் அலுவலக உடையில் இருக்கும் பொழுது செவ்வியல் இசையினை (Classical Music)க் கேட்கும் ஒவ்வொரு பொழுதும் எனக்குத் தூக்கம் வருதல்போல் உணர்கிறேன். இதற்குக் காரணம் யாது?
>
> செங் (Cheng) மற்றும் வேய் (Wei) மாநிலங்களின் இசையினைக் கேட்கும்பொழுது களைப்பு உணர்ச்சி ஒருபொழுதும் வருவதில்லை. இதற்குக் காரணம் யாது?
>
> செவ்வியல் இசையின் இலக்கணம் யாது? நவீன இசையின் தன்மை யாது?"

என்று வினவினார். சீடர் சேஹிசியா கூறிய விடையினை நோக்குவோம்:

"பழைய இசை நிகழ்வில் ஆடல் புரிபவர்கள் (Dancers) அமைதியும் ஒழுங்கும் பொருந்திய சூழலில் முன்னாகவும் பின்னாகவும் சொகுசான அசைவுகளில் இயங்குகின்றனர். ஆடல் தொடங்குதற்கு முன் பறையோசை எழும்பும் வரை கருவி இசைவாணர்கள் தயார்நிலையில் உள்ளனர். நாட்டு நடன அசைவுகளுடன் இசை தொடங்குகிறது. இராணுவ நடன அசைவுகளுடன் முடிகிறது. தொடக்கம் முதல் முடிவு வரை ஒரு தொடர்ச்சி உண்டு. செவ்வியல் இசையின் கால அளவு (-தாளம்) விரைந்து இயங்க விரும்பும் ஆடல் புரிவோரைத் தடுத்து நிறுத்துகிறது. செவ்வியல் இசையினைக் கேட்ட பின்பு உயர்மனிதன், இசை பற்றியும் பண்டையோரின் பாடல் முறை பற்றியும் தனி மனித வாழ்வினைப் பண்படுத்துதல் குறித்தும், தேசிய வாழ்வினை ஒழுங்குறுத்துதல் குறித்தும் கலந்துரையாடுதற்குத் தகுந்த சூழலில் இருப்பான். இதுவே பண்டைய இசையின் (-செவ்வியல் இசை) முதன்மைப் பண்பாகும்.

புதிய இசை (New Music) பாடும் பொழுது முன்னும் பின்னும் இயங்கும் வேளையில் மக்கள் தங்கள் உடல்களை வளைக்கின்றனர். ஒழுங்கற்ற ஓசைகள் உண்டாகின்றன. நடிகர்களும் வாமனர்களும் குரங்குகள் போல் உடுத்திக் கொண்டு ஆடவர் பெண்டிர் குழாத்துடன் கலந்து கொண்டு யார் பெற்றோர், யார் பிள்ளைகள் என்பது கூட அறியாதவர் போலக் காட்சிதருவர்.[43] இத்தகைய ஆடல் பாடல் நிகழ்ச்சியின் முடிவில், இசையினைப் பற்றியோ அல்லது பண்டைய மக்களின் (இசை) முறைகள் பற்றியோ விவாதித்தல் என்பது இயலாத செயலாக அமைகிறது. இதுவே புதிய இசையின் தன்மையாகும்.

இசையினைப் பற்றிக் கேட்டீர்கள். ஆனால் நீங்கள் உண்மையில் ஈடுபட்டிருத்தல் ஒலிகளில் மட்டும்தான். இசையும் ஒலிகளும் தொடர்புடையன; ஆனாலும் அவையிரண்டும் வேறானவை.

பண்டைக் காலத்தில் இயற்கையின் சக்திகள் ஒத்திசைவில் இருந்தன. நான்கு பருவங்களுக்கு உரிய முறையில் காலநிலை, தட்பவெப்பம் இருந்தன. மக்கள் நல்லொழுக்கத்தினர். அறுவடைகள் ஏராளமானவை. தொற்று நோய்கள் இல்லை. முன்னக் கேடுகள் இல்லை. ஒவ்வொன்றும் ஒழுங்காய் இருந்தது. பின்னர், முனிபுங்கவர்கள் (sages) தோன்றினர். பெற்றோர் பிள்ளைகள், அரசர் அமைச்சர்கள் - ஆகியோருக்கு இடையேயுள்ள உறவுகளில் சமுதாய ஒழுங்கினை நிலைநாட்டினர். சமுதாய ஒழுங்கு நிலைநாட்டப்பட்ட பின்பு, உலகம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. பின்னர், முனிபுங்கவரின் அறுவகைக் குழல்களுக்கும் ஐவகைச் சாவிகளுக்கும் சரியான தரங்களை வரையறை செய்தனர். பின்னர், மக்கள் இசைபாடத் தொடங்கினர். நாட்டு வாழ்த்துக்கள் பாடினர். கருவிகள் இசையும் தொடர்ந்தது. இதுவே புனித இசை (Sacred Music) என்று அழைக்கப்பட்டது.

மேதகு வேந்தே! தாங்கள் ஈடுபட்டிருந்தது துன்மார்க்க இசைக்கலவையில்."

என்று கோமகன் வென் (Baron Wen) இடம், கன்பூசியசின் சீடர் சேஹிசியா (Tsehsia) தெளிவு படுத்தினார்.[44]

கோமகன் வென் மேலும் சில வினாக்களைக் கேட்டான். அவற்றுக்குச் சீடர் தந்த விடைகளைக் காண்போம்.[45]

"செங் (Cheng) மாநிலத்தின் இசை காமம் ஊட்டுவதாகவும் உருக்குலைந்ததாகவும் உள்ளது. சுங்

(Sung) மாநிலத்தின் இசை மென்மையானதாகவும் பெண்மை வாய்ந்ததாகவும் உள்ளது. வேய் (wei) மாநிலத்தின் இசை சொல்லியதையே மீண்டும் சொல்லுவதாகவும் தொல்லைப்படுத்துவதாகவும் உள்ளது. சி (Ch'i) மாநிலத்தின் இசை கொடூரமானதாகவும் செருக்குடையதாகவும் உள்ளது. இங்குக் கூறப்பட்ட நான்கு வகை மாநில மக்களின் இசைகளும் புலனின்பம் ஊட்டுவதாகவும் மக்களின் ஒழுக்கத்தினைப் புறக்கணிப்பதாகவும் உள்ளன. எனவேதான், வேள்விச் சடங்குகளில் இந்நான்கு இசைகளும் பயன்படுத்தப்படுவது இல்லை. பாடற்பனுவல் (The Book of Songs),

> "ஒத்திசைவு ஒலிகள் ஷு (Shu), யுங் (Yung) என்பனவாகும். என் முன்னோர் அவற்றைக் கவனமாகக் கேட்டனர்"

என்று ஒரு மன்னன் கூற்றாகப் புலப்படுத்துதல் காணத்தக்கது.[46] ஷு (Shu) என்ற ஒலிக்கு பக்தி மயமானது என்பது பொருள். யுங் (Yung) என்ற ஒலிக்கு அமைதியானது என்பது பொருள்.

கோமகன் ஆகிய நீவீர் (Baron Wen) பக்தியும் அமைதியும் பொருந்திய ஒழுக்கத்தினைப் பெற்றிருந்தால், ஒரு நாட்டிற்குச் செய்ய வேண்டிய ஒவ்வொன்றையும் உம்மால் செய்ய முடியும்.

அரசன் தன் விருப்பு வெறுப்புக்களைப் பற்றிக் கவனத்துடன் இருத்தல் ஒன்றுதான் செய்யத் தேவையானது. இவற்றை அறிந்து கொண்டால், அரசன் எதனை விரும்புகிறானோ அதனை மக்கள் செய்வார்கள். அரசன் எதனைச் செய்கிறானோ அதனை மக்கள் பின்பற்றுவார்கள். பாடற்பனுவல் (The Book of Songs),

> "மக்களை நெறிப்படுத்துவது மிகவும் எளிது"

என்று கூறியுள்ளதன் உண்மைப் பொருளை மேலே காணலாம்.

இக்கருத்திற்கு ஏற்பவே முனிபுங்கவர்கள் (Sages) இசைக் கருவிகளைச் செய்தனர். யாவோ (Yao), குங் (K'ung), சியா (Ch'ia), ஹசுவன் (Hsuan). சிஹ் (Ch'ih) முதலிய இசைக்கருவிகளின் அமைப்பினையும் கன்பூசியசின் சீடர் கோமகனுக்கு எடுத்துக் கூறினார்.

இறந்த பழைய அரசர்களை வழிபடும் பொழுதும், பல்வேறு சடங்குகளின் பொழுதும் பாடவேண்டிய இசை முறைகளையும் தலைமுறை தலைமுறையாக மூத்தோர் இளையோர்க்கும், உயர்ந்தோர் தாழ்ந்தோர்க்கும் கற்பித்து வந்தனர்.

மணி ஓசை தெளிவாகவும் அதிர்ந்து முழங்குவ தாகவும் உள்ளது. மணியோசை சமிக்கைகளுக்கு (Signals)ப் பொருந்துவது. இந்த ஓசை வேந்தரின் இராணுவ அதிகாரத்தினைக் கிளரச் செய்கிறது.

இசைக்கல்லின் ஒலி கூர்மையும் தெளிவும் வாய்ந்தது. போர்க்களத்தில் பயன்படுவது. நரம்புக் கருவியின் ஓசை ஆன்மாவினைத் தூய்மை செய்து அறவுணர்வினை உண்டாக்குகிறது. மூங்கில் கருவியின் இசை பொது மக்களைத் திரட்டி ஓரிடத்தில் சேர்க்கும் திறம் கொண்டது. சிறு மற்றும் பெரும் பறைகளின் ஓசை மக்களைச் செயலாற்றத் தூண்டுவது".[47]

இவ்வாறு பல்வேறு இசைகளின் பயன்பாட்டினைக் கன்பூசியசின் சீடர் கோமகனுக்கு எடுத்துரைத்தார்.

பின்மொவ் சியா (Pinmou Chia)வுக்குக் கன்பூசியசு இசை, நடனம் பற்றிய நுண்பொருளை எடுத்துரைத்தார். ஓர் அரசர் மற்றோர் அரசரை வென்ற பொழுது வீரர்கள் ஆடும் நடனம் வூ நடனம் (Dance of Wu) எனப்படும் (தொல்காப்பியர் கூறியுள்ள முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை ஆடல்களை இங்கு எண்ணிப் பார்க்கலாம்). நடனம் எப்பொழுதும் குறிப்பிட்ட இசையுடன் இணைந்து நடைபெறும்.

9.18. அறவியலும் அரசியலும்

நாற்பனுவலில் (The Four Books) இடம்பெற்றுள்ள அறவியலும் அரசியலும் பற்றிய கருத்துக்களைச் சீனப் பள்ளிச் சிறார்கள் அனைவரும் தொடக்கக் கல்வியில் பயின்று வருதல் வழக்கமாக உள்ளது.[48] எனினும், இக்கருத்துக்களும் இவற்றில் பொதிந்துள்ள தத்துவமும் ஏழு அல்லது எட்டு வயது சிறுவர்களின் மனவியலுக்கு முற்றிலும் அப்பாலாக விளங்கின. ஆயினும், அவர்களால் இக்கருத்துக்கள் முயற்சியுடன் மனப்பாடம் செய்யப்பெற்று நினைவில் வைக்கப்பெற்றவை. இவை என்றும் அவர்கள் மனத்தில் வாழ்நாள் அளவும் ஒட்டி நின்று எப்பொழுதும் பயன் அளிப்பன ஆகும். அறப்பாதையில் செல்ல விரும்புவோர்க்கு அறவியலும் அரசியலும் (Tahsueh i.e. Ethics and Politics) நுழைவாயில் என்று செங் யிசுவான் (Ch'eng Yich'uan) என்னும் கன்பூசிய நெறியாளர் கருதினார். தாசுவே (Tahsueh) என்ற சொல்லினைப் பெருங்கல்வி அறிவு (The Great Learning) என்று ஜேம்ஸ் லெக்கும் (James Legge), உயர்கல்வி (The Higher Education) என்று கு ஹுங்மிங்கும் (Ku Hungming) மொழிபெயர்த்தனர்.

ஆட்சியாளராகவும் அரசு புரிவோர்க்கு உதவுவோராகவும் இருந்த அறிவார்ந்த மேல் வருக்கத்தின் செல்வாக்கில் கல்வித் திட்டம் அமைந்தது என்பது கன்பூசிய நோக்குடையவரின் கருத்தாகும். இளவரசர்கள் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகளைக் கற்பிப்பதாக அறவியலும் அரசியலும் அமைந்தது. காலப்போக்கில் இளவரசர் (Chuntse) என்ற சொல் சான்றோனையும் (Gentleman) குறித்தது.

உயர் கல்விக் கொள்கைகள் நன்கு வரையறுக்கப் பெற்றிருந்தன. மனிதனின் தெளிந்த ஒழுக்கத்தைப் பேணுவதாகவும், மக்களுக்குப் புத்துயிர் அளிப்பதாகவும், முழுமை அல்லது பூரணத்துவம் (Perfection) அல்லது முற்ற

முடிந்த நன்மை (Ultimate good)யில் நிலைபெறுவதாகவும் உயர்கல்வி அமைகிறது. பூரணத்துவத்தின் இலக்கு அல்லது நோக்கு இன்னது என்பதை அறிந்த பிறகுதான் ஒருவன் வாழ்க்கையில் வரையறுத்த குறிக்கோளை அடைய முடியும். இந்தக் குறிக்கோளைஅடைந்த பிறகுதான் அமைதியாக ஓய்வு கொள்ளுதலும், சிந்தித்தலும், அறிவு பெறுதலும் இயலும். ஒவ்வொரு பொருளுக்கும் இடையே காணப்படும் காரண காரிய அடிப்படையினைப் புரிந்துகொள்ளுதல்தான் நுண்ணறிவின் தொடக்கமாகும்.

மக்களின் பண்பாட்டினைப் பேணிக் காப்பதற்கு அடிப்படை, தேசிய வாழ்வினை ஒழுங்குபடுத்துவதாக அமையும். தேசிய வாழ்வினை ஒழுங்குபடுத்துவதற்கு, மக்கள் தம் குடும்ப வாழ்வினை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் வேண்டும். குடும்ப வாழ்க்கையினை ஒழுங்குபடுத்துவதற்கு, மக்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்வினை (personal life) பண்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இதற்கு, தத்தம் நெஞ்சங்களைச் செம்மைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இதற்கு, தத்தம் மனவுறுதியை நேர்மையுறச் செய்தல் வேண்டும். இதற்கு, உண்மை அறிவினை அடைதல் வேண்டும். இது, பொருள்களைத் துருவி ஆராயும் திறனைச் சார்ந்து உண்டாவது.

பொருள்கள் துருவி ஆராயப்பெற்றால், உண்மை அறிவு உண்டாகிறது. உண்மை அறிவு அடையப் பெற்றால், மன உறுதி நேர்மை ஆகிறது. மன உறுதி நேர்மையானால், நெஞ்சம் செம்மை பெறுகிறது. நெஞ்சம் செம்மை பெறின், தனி மனித வாழ்க்கை பண்படுத்தப் படுகிறது. தனி மனித வாழ்வு ஒழுங்குபடுத்தப் பெற்றால், குடும்ப வாழ்வு ஒழுங்குபடுத்தப்படுகிறது. இதனால், தேசிய வாழ்வு (National life) ஒழுங்கு பெறுகிறது. அதன் பயனாக எங்கும் அமைதி நிலவுகிறது.

சக்கரவர்த்தியிலிருந்து (emperor) சாதாரண மனிதன் வரை அனைவரும் தத்தம் தனி வாழ்க்கையினைப் பண்படுத்திக் கொள்ளுதல்தான் தேசிய வாழ்வின் வேர் (Root) அல்லது ஆதாரம் (Foundation) என்று மதித்தல் வேண்டும். ஆதாரம் சரியாக அமையாவிடில், மேல்தளம் ஒழுபொழுதும் சரியாக அமைதல் இல்லை. அடிப்பகுதி சிறுத்தும் மெலிந்தும், அதன்மேல் உள்ள கிளைகள் பருத்தும் பாரமாகவும் உள்ள ஒரு மரம் ஒருபொழுதும் நிலைபெறுதல் இல்லை. இதுதான், பொருள்களின் வேரினை அல்லது ஆதாரத்தை அறிதல் என்று சொல்லப்படுகிறது.

10. சில சொற்களின் பொருள்

'மனிதன் தன் நடத்தையினைத் தூய்மைப்படுத்திக் கொள்ளுதல்' (Making Clear man's Character) என்று வரலாற்றுப் பனுவலில் (Book of History) கூறப்படும் கருத்திற்கு அப்பனுவலிலேயே விளக்கம் பின்வருமாறு காணப்படுகிறது.

1. தன் நடத்தையைத் தானே தூய்மைப்படுத்திக் கொள்ளுதல் தன்னால் முடியும்.
2. கடவுளின் (Heaven) தெளிவான கட்டளைகளைப் பற்றி அவன் ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்.
3. தன்பெரும் நடத்தையினைத் தானே தெளிவு செய்து கொள்ள முடியும்.

இவையனைத்தும் அக்காலத்துச் சீன அரசர்கள் தத்தம் நடத்தைகளைத் தாமே ஒழுங்குபடுத்திக் கொள்ளத் தொடங்கியதைப் புலப்படுத்துவன என்பர்.

'மக்களுக்குப் புத்துயிர் அல்லது புதுவாழ்வு தருதல்' (Giving new life to the people) என்ற கருத்திற்குப் பின்வரும் விளக்கங்கள் கூறப்படுகின்றன.

1. ஒருவன் தன்னைத் தானே புதுமைப்படுத்திக் கொள்ளுதல் அல்லது புதுப்பித்துக் கொள்ளுதல்.
2. ஒவ்வொரு நாளும் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளுதல்.
3. நாள்தோறும் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளுதல்.

இவ்வாறு தங்குப் பேரரசனின் (Emperor T'ang) குளியல் தொட்டியின் மேற்பகுதியில் பொறிக்கப் பெற்றிருந்தது.[49]

'புதுதேசமாக வளர்தல்' (Becoming a new nation) என்பதற்குரிய விளக்கம் பாடற்பனுவலில் (The Book of Songs) கொடுக்கப்பட்டுள்ளது. "சோ (chou) என்னும் அரசனின் நாடு பழைய தேசமாக விருந்தாலும் கடவுளிடமிருந்து (from Heaven) அந்நாடு பெற்ற கட்டளைகள் எல்லாம் எப்பொழுதும் புதியவை" என்பது அந்த விளக்கம் ஆகும். எனவே, சான்றோன் என்பவன் எல்லாக் காலங்களிலும் தன்னால் உச்சபட்சமாக முடிந்தனவற்றைச் செய்ய முயல்கிறான்.

பூரணத்துவத்தில் இளைப்பாறுதல் அல்லது குடியிருத்தல் (Resting or Dwelling in Perfection) என்பதற்குரிய விளக்கங்களும் பாடற்பனுவலில் இடம்பெற்றுள்ளன. அவற்றை இங்கு நிரலே காண்போம்:

1. பேரரசனின் சாம்ராச்சியம் ஆயிரம் லி (Li- ஓர் அளவு) கொண்டது. அதில் மக்கள் வாழ்கிறார்கள்.
2. கீச்சிடும் மஞ்சள் பறவை சிறு மணல்மேட்டில் வந்திறங்குகிறது; இளைப்பாறுகிறது.

கன்பூசியசு இளைப்பாறுதல் பற்றிக் கூறியுள்ள கருத்தும் நோக்கத்தக்கது:

"பறவை ஓய்வு கொள்ளும் பொழுது எங்கு ஓய்வு கொள்ளுதல் வேண்டும் என்பதைத் தெரிந்துள்ளது. எங்கு இளைப்பாறுவது என்பதைத் தெரிந்து கொள்ளுவதில் மனிதன் பறவையினை விட இழிந்த நிலையில் இருத்தல் வேண்டுமா?"

பறவைகள் கூட தமக்குப் பாதுகாப்பான இடத்தில் இளைப்பாறுதற்குத் தெரிந்து வைத்துள்ளனவே! அந்த அறிவு மனிதர்களுக்கு ஏன் அமையவில்லை என்று கன்பூசியசு தன் கவலையினை வெளிப்படுத்துகிறார்.

பாடற்பனுவலில், வென் என்னும் அரசன் (King Wen) இளைப்பாறுதல் பற்றிய செயலில் கூரிய கவனம் கொண்டிருந்தான் என்றும், அவன் செயல் உன்னதமானதாகவும் பிறர்க்கு எழுச்சியூட்டுவதாகவும் இருந்தது என்றும் கூறப்பட்டுள்ளன. ஆட்சியாளன் என்ற முறையில், உதாரகுணத்தில் குடியிருந்தான். அமைச்சன் என்ற முறையில் கண்ணியத்தில் குடியிருந்தான். மகன் என்ற முறையில் பெற்றோர்க்குச் செலுத்தும் பக்தியில் குடியிருந்தான். தந்தை என்ற முறையில் அன்பில் குடியிருந்தான். மக்களோடு அவன் கொண்ட விவகாரங்களில் நேர்மையில் குடியிருந்தான்.

எனவே இளைப்பாறுதல், குடியிருத்தல் என்ற சொற்கள் வெறும் உடலளவில் அமைந்துவிடாமல், பண்பு, செயல் அளவிலும் அமைந்திருத்தல் கருதத்தக்கது.

நாட்டு இளவரசன் கடைந்தெடுத்த, பளபளப்பாக்கப் பெற்ற விலையுயர்ந்த மரகதக் கல்லைப் (Jade) போல இருத்தலை மக்கள் விரும்புவார்கள் என்று பாடற்பனுவல் பகர்கிறது.

11. மெய்யறிவு பெறுதல்

மெய்யறிவு பெறுதல் என்பதற்குக் கன்பூசியசு தன்னனுபவமாகக் கூறியுள்ள விளக்கத்தைக் காண்போம்.

வழக்குகளை ஆராய்ந்து முறையான தீர்ப்பு வழங்கும் பொறுப்பினைக் கன்பூசியசு ஏற்றிருந்தார். அப்போது அவர் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் மெய்யறிவு பெறுதல் என்பதற்கு அவர் அளித்த விளக்கம் இங்குத் தரப்படுகிறது.[50]

"இருபக்க வழக்குகளையும் ஆராய்ந்து தீர்ப்புரைக்கும் தலைமைப் பொறுப்பில் இருந்தபொழுது எனக்கு ஏற்பட்ட முற்ற முடிந்த அனுபவம் இதுவே: உண்மையில் பிழை புரிந்தவர்கள் தாங்கள் செய்த பிழையினின்றும் தங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டுத் தற்காப்புச் சொற்போரில் ஈடுபடுதல் குறித்து நாணத் தொடங்கிவிட்டார்கள் என்றால் வழக்குகள் தோன்ற வழியே இல்லை. இவ்வாறு பிழைக்கு நாணும் உணர்ச்சியுடையவர் நீதிபதியிடம் பெருமதிப்பும் அல்லது அச்சமும் உடையவராகத் திருந்துகின்றனர்.

இங்ஙனம் தங்கள் பிழையைத் தாங்களே உணர்ந்து, நாணி நெறி நிற்க முயலுதலே மெய்யறிவு பெறுதல் (Achieving the True Knowledge) எனப்படும்"

என்றார் கன்பூசியசு.

12. நேர்மைப்படுத்துதல்

ஒருவன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது என்பதுதான் மனத்தை நேர்மைப்படுத்துதல் என்று கன்பூசியசு கருதினார். மேல்மனிதன் அல்லது சான்றோன் (Superior Man) தனிமையில் தன்னிலைப்பாட்டினில் கவனம் செலுத்துகிறான். பொதுமனிதன் (Common Man) புலனடக்கம் இல்லாமல் தனி வாழ்வில் பிழைபுரிகிறான். மேல்மனிதனைக் கூறும் பொழுது அவன் தன் பிழைக்கு வெட்கப்படுகிறான்; தன் தீமையை மறைக்க முயல்கிறான்;

தன்னில் ஏதாவது நல்லது இருக்குமெனில், அதனை வெளிப்படுத்திக் காட்ட முற்படுகிறான். அதனால் ஒரு பயனும் உண்டாவது இல்லை. மக்கள் தங்கள் உள்ளத்தைத் தாங்களே நோக்குகிறார்கள்; தங்களை அறிகிறார்கள். மனிதனின் உள்ளத்தில் உண்மையில் என்ன உள்ளதோ, அவனது புறத்தோற்றத்திலும் அதுவே வெளிப்படுகிறது. எனவே, மேல்மனிதன் தனிமையில் உள்ள பொழுது தன்னைப் பற்றி விழிப்பாக இருத்தல் வேண்டும்.

செங்சே (Tsengtse) என்னும் ஞானி கூறிய கருத்தும் நோக்கத்தக்கது:

"பத்துக் கண்கள் எதை/யாரைப் பார்க்கின்றனவோ,
பத்துக் கைகள் எதை/யாரைச் சுட்டுகின்றனவோ
அது/அவர் அச்சுறுத்தலாக அமையவில்லையா?"
செல்வம் ஒரு வீட்டின் பொலிவுக்குக் காரணமாதல் போல, ஒருவன் உட்பொலிவுக்கு ஒழுக்கம் காரணமாக அமைகிறது. பேருள்ளம் படைத்தவன் பேரளவில் தராதரம் உடையவனாக இருக்கிறான்."

எனவே, மேல்மனிதன் (Superior man) தன் மனத்தை நேர்மைப்படுத்திக் கொள்ளுதல் இன்றியமையாது வேண்டப்படும்.

13. நெஞ்சினைச் செம்மைப்படுத்துதலும் தன்னைப் பண்படுத்திக் கொள்ளுதலும்

தன்னைப் பண்படுத்திக் கொள்ளுதல் என்பது தன் நெஞ்சினைச் செம்மைப்படுத்திக் கொள்ளுதலைப் பொறுத்துள்ளது. இங்ஙனம் கன்பூசியசு எடுத்துக் கூறிய கருத்தினை மேலும் தெளிவுறுத்துகின்றார்:

ஒருவன் சினத்தினால் நிலை தளரும் பொழுது, அவனுடைய நெஞ்சம் அதற்குரிய இடத்தில்

இருப்பதில்லை; ஒருவன் அச்சத்தினால் குலையும் பொழுதும் நெஞ்சம் அதற்குரிய இடத்தில் இருப்பதில்லை; ஒருவன் காதலினால் குருடாயிருக்கும் பொழுதும் நெஞ்சம் அதற்குரிய இடத்தில் இருப்பதில்லை; ஒருவன் கவலையினாலும் சஞ்சலத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்கும் பொழுதும் அவன் நெஞ்சம் தனக்குரிய இடத்தில் இருப்பதில்லை; அந்நிலையில் மனம் சமனிலையினை இழந்துவிடுகிறது. மனம் தன்னிலையில் இல்லையெனில், நாம் நோக்குகிறோமே தவிர, பார்ப்பது இல்லை; கவனிக்கிறோமே தவிர காதில் விழுவதில்லை; சாப்பிடுகிறோமே தவிர, உணவின் சுவையினை நாம் அறிவதில்லை. இதுதான், 'தனி வாழ்வினைப் பண்படுத்திக் கொள்ளுதல் என்பது தன் நெஞ்சினைச் செம்மைப்படுத்திக் கொள்ளுதலைப் பொறுத்துள்ளது' என்பதற்குரிய விளக்கமாகும்.

14. ஒருவன் தனிவாழ்வு குடும்ப வாழ்வுகளுக்கு இடையே உள்ள உறவு

'குடும்ப வாழ்வினை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் ஒருவனின் தனி வாழ்வினைப் பண்படுத்திக் கொள்ளுதலைப் பொறுத்துள்ளது' என்று கன்பூசியசு எடுத்துக் கூறினார். தாம் கூறிய கருத்திற்குரிய விளக்கத்தினையும் வழங்கியுள்ளார். தாம் விரும்புபவர், தாம் வெறுப்பவர், தாம் அஞ்சுபவர், தாம் இரக்கப்படுபவர், தாம் செல்லம் கொஞ்சுபவர், தாம் பெருமை பாராட்டுபவர் - ஆகியோர் தொடர்பாக மக்கள் பொதுவாகத் தம் நடுநிலையுணர்வினின்றும் பிறழ்ந்து விடுகின்றனர். தாம் விரும்புவரிடத்திலும் குறை காண்போரும், தாம் வெறுப்பவரிடத்திலும் நிறை காண்போரும் உலகில் மிகச் சிலராகவே உள்ளனர்.

"தம் வயல்களில் உள்ள நெற்பயிர்களின் கண்ணுக்குத் தெரியாத வளர்ச்சியை அறியாததைப்

போலவே மக்கள், தம் பிள்ளைகளின் குற்றங்களையும் பார்ப்பதில்லை"

என்ற முதுமொழி வழங்கி வருகிறது. எனவேதான், தம் தனி (சொந்த) வாழ்வினைப் பண்படுத்திக் கொள்ளாதவர்கள், தம் வீட்டு வாழ்க்கையினையும் ஒழுங்குபடுத்திக் கொள்ள இயலாதவர் என்று சொல்லப்படுகிறது.

15. குடும்ப வாழ்வு, தேசிய வாழ்வு - இவற்றுக்கு இடையேயுள்ள தொடர்பு

'தேசிய வாழ்வினை ஒழுங்குபடுத்துவோர் தம் வீட்டு வாழ்வினையும் ஒழுங்குபடுத்தத் தொடங்குதல் வேண்டும்' என்று ஒரு முதுமொழி வழங்கிவருவதைக் கன்பூசியசு எடுத்துக் கூறுகிறார். அதனை விரிவாகவும் விளக்குகிறார்.[51]

தன் குடும்ப உறுப்பினர்களுக்கு நன்னெறியைப் போதிப்பதில் தவறுபவர் ஒருவரும் இலர். தன் குடும்ப எல்லைக்கு அப்பால் உள்ளவர்களுக்கும் போதிப்பது என்பது அத்தகையோரால் முடியும். எனவேதான், உயர்மனிதன் (Superior man) தன்வீட்டில் இருந்தபடியே தேசம் முழுமைக்கும் தன் பண்பாட்டினை எடுத்துரைத்துப் பரப்புகிறான். தேச விசுவாசத்தைப் போதிப்பது என்பது நாட்டினை ஆள்கிறவனுக்குப் பணிபுரிவதற்குரிய முன்னேற்பாடு ஆகும். தன் தலைவன்மாருக்கு மதிப்பளித்தல் என்பது நாட்டில் உள்ள மூத்தவர் அனைவர்க்கும் பணிபுரிவதற்குரிய முன்னேற்பாடு ஆகும். பெற்றோர்களுக்கு அன்பு செலுத்துதலைப் போதிப்பது என்பது நாட்டு மக்களை ஆள்வதற்குரிய பயிற்சியாக அமைகிறது.

"குழந்தையினைப் பாதுகாப்பவரைப் போல ஒவ்வொருவரும் செயல்படுதல் வேண்டும்"

என்ற கன்பூசியசின் கருத்து,[52]

'காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி'
(புறம்.5.6-7)

என்ற புறநானூற்றுக் கருத்துடன் பொருத்திப் பார்க்கத் தக்கது. திருமணம் செய்துகொள்ளுவதற்கு முன்னால் எந்தவொரு பெண்ணும் ஒரு குழந்தை எப்படிச் சீராட்ட வேண்டும் என்பதைக் கற்கத் தேவையில்லை. குடும்பங்கள் அன்பினைக் கற்றுக் கொண்டால், முழு நாடும் அன்பினைக் கற்றுக் கொண்டதாக அமையும். தனிக் குடும்பங்கள் மரியாதை என்றால் என்ன என்பதைக் கற்றுக் கொண்டால், முழு நாடும் மரியாதையினைக் கற்றுக் கொண்டதாக அமையும். ஒரு தனி மனிதன் பேராசைப்பிடித்தவன் என்றால், முழுத் தேசமும் ஒழுங்கின்மையில் அமிழ்ந்துவிடும். எனவே, தனிமனித ஒழுக்கம் வற்புறுத்தப்படுகிறது.

மற்றவர்களுக்குக் கட்டளையிடுவதற்கு முன்னர் உயர்மனிதன் (Super man) தற்சோதனை செய்து கொள்ளுதல் வேண்டும். தான் விதியினைவிட்டு விலகாதவன் என்பதை உறுதி செய்து கொண்ட பிறகுதான், மற்றவர்கள் விதிக்குப் புறம்பாக, கட்டளைக்கு விலகிப் போகக் கூடாது என்று ஆணை வழங்க முடியும். எனவே, தேசிய வாழ்வினை ஒழுங்குபடுத்துதல் என்பது, குடும்ப வாழ்வினை ஒழுங்குபடுத்துதலைப் பொறுத்துள்ளது.

ஒருவன் தன் வீட்டில் உள்ள மற்ற குடும்ப உறுப்பினர்களுடன் இசைந்து வாழ்வதன் வாயிலாக, தேச மக்களுக்கு எடுத்துக்காட்டாக இருத்தல் இயலும். "நாட்டை ஆள்பவர் தம் தமையன்மாருடனும் இளவல்களுடனும் இசைந்து வாழ்கின்றனர்" என்று பாடற்பனுவல் (The Book of Songs) பகர்கின்றது. தமக்கு மூத்த, இளைய உடன்பிறப்புக்களுடன் ஒத்திசைந்து வாழ்வதன் வாயிலாகத் தேச மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தகுதி பெற்றவராகின்றனர். ஓர் இளவரசனின்

நடத்தை செம்மையாகயிருப்பின், அவனால் நாட்டினைச் செம்மையுறச் செய்வது இயலும். அவனே ஒரு தந்தை, மகன், அண்ணன், தம்பி என்று சொல்லுவதற்கு ஒரு எடுத்துக்காட்டாகக் கடமையாற்றியுள்ளதால், மக்கள் அவனை முன் மாதிரியாக மேற்கொண்டு ஒழுகினர். இதுதான், 'தேசிய வாழ்வினைச் செம்மைப்படுத்தல் என்பது தன் குடும்ப வாழ்வினை ஒழுங்குபடுத்துதலைப் பொறுத்தது' என்ற தன் வாசகத்திற்குரிய விளக்கமாகக் கன்பூசியசு கூறியுள்ளார்.

16. அதிகாரத்தில் உள்ளவர்களும் பல்வகைப் பதவிகளில் பணிபுரிபவர்களும்

தேசிய வாழ்வினை ஒழுங்குபடுத்துதலைப் பொறுத்துத்தான் உலகில் அமைதியை நிலைநாட்டுதல் என்பது அமைந்துள்ளது. இதன் விளக்கத்தினையும் கன்பூசியசு வழங்கியுள்ளார். அவ்விளக்கத்தினையும் இங்குக் காண்போம்:

அதிகாரத்தில் உள்ளவர்கள் மூத்த குடிமக்களிடத்தில் மரியாதையுடையவர்களாகயிருப்பின், பொதுமக்கள் நல்லவர்களாக இருக்கக் கற்றுக் கொள்ளுகிறார்கள். அதிகாரத்தில் உள்ளவர்கள் தமக்கு மேம்பட்ட அதிகாரிகளிடம் மரியாதை செலுத்தினால், பொதுமக்கள் மரியாதையினையும் அடக்கத்தையும் கற்றுக் கொள்ளுகிறார்கள்.

அதிகாரத்தில் உள்ளவர்கள், இளையவர்களிடத்தும் மற்றும் ஆதரவற்றவர்களிடத்தும் அன்பு செலுத்தினால், பொது மக்கள் அன்பு நெறிக்கு மாறாகச் செல்லமாட்டார்கள். எனவேதான், உயர்மனிதன் எனப்படும் கோமகன் (Prince) தன் நடத்தையினை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்று கன்பூசியசு அறிவுரை வழங்கியுள்ளார்.

பலர் கூடிப் பணி புரியும் அலுவலகத்தில் மேல்நிலையில் உள்ளவர், நடுநிலையில் இருப்பவர், கீழ்நிலையில் வருபவர் - ஆகிய இம்மூவகைப் பணியாளர்களும் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் எவ்வாறு தத்தம் பணிகளைப் புரியவேண்டும் என்பது குறித்தும் கன்பூசியசு தீவிரமாகச் சிந்தித்துள்ளார். அவருடைய கருத்து விளக்கத்தினைக் காண்போம்.

தனக்கு மேல்நிலையில் அமர்ந்து பணிபுரிபவர் இடத்தில் ஒருவர் விரும்பத்தகாத சில பண்புகளையும் செயல்களையும் காண்கிறார். அவர், தனக்குக் கீழ்நிலையில் இருந்து பணிபுரிபவர்களிடம் மேற்கொள்ளும் நடைமுறைகளில் அத்தகைய விரும்பத்தகாத பண்புகளையும் செயல்களையும் தவிர்ப்பாராக.

ஒருவர் தனக்குக் கீழ்ப்பட்டவர்களிடத்தில் காண்கின்ற வெறுக்கத்தக்கனவற்றை, தன்னினும் மேற்பட்டவர்களிடம் ஆற்றும் பணிகளில் வெளிப்படுத்தாமல் இருப்பாராக. தனக்கு முன்னால் இருப்பவர்களிடம் எவற்றை ஒருவர் வெறுக்கிறாரோ, அவற்றைத் தனக்குப் பின்னால் இருப்பவர்களிடம் வெளிப்படுத்தாமல் இருப்பாராக. தனக்குப் பின்னால் இருப்பவர்களிடம் எவற்றை ஒருவர் வெறுக்கிறாரோ, அவற்றைத் தனக்கு முன்னால் இருப்பவர்களிடம் வெளிப்படுத்தாமல் இருப்பாராக.

தனக்கு வலப்பக்கம் இருப்பவர்களிடம் எவற்றை ஒருவர் வெறுக்கிறாரோ, அவற்றைத் தனக்கு இடப்பக்கம் இருப்பவர்களிடம் வெளிப்படுத்தாமல் இருப்பாராக. தனக்கு இடப்பக்கம் இருப்பவர்களிடம் எவற்றை ஒருவர் வெறுக்கிறாரோ, அவற்றைத் தனக்கு வலப்பக்கம் இருப்பவர்களிடம் வெளிப்படுத்தாமல் இருப்பாராக. இதுவே நேர்மையினையும் ஒழுங்கையும் அளக்கும் அளவுகோலாகும் என்று கன்பூசியசு தெளிவுறுத்தியுள்ளார் (-This is the principle of the measuring square. square என்ற

சொல் சதுரம் என்ற பொருள் தரினும் நேர்மை, ஒழுங்கு, நியாயம் முதலிய பொருள்களையும் குறிக்கும்).

பணிக் களரியில் பல நிலை அலுவலர்கள் வேலை பார்ப்பார்கள். அவர்கள் மேல், நடு, கீழ் என்ற நிலைகளில் இருப்பவர்கள் என்பது ஒரு பொதுவான வரையறை. தனக்கு முன்னும் பின்னும் இருப்பவர்கள், தனக்கு வலமும் இடமும் இருப்பவர்கள் என்ற வரையறையினையும் கன்பூசியசு கண்டுள்ளார். square meal என்றால் முழுமையான உணவு எனப் பொருள்தரும். The measuring square என்றால் முழுமையாக அளப்பது என்று பொருள்படும். அலுவலகத்தில் உள்ளவர்களைக் கன்பூசியசு முழுமையாக அளந்துள்ளார். அவர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் ஒத்திசைந்து பணிபுரிதல் வேண்டும் என்பது அவரது கட்டளை.

பாடற்பனுவல் (The Book of Songs),

> "குடிமக்களைப் பெற்றோரைப் போலப் பேணும்
> அரசரை மக்கள் எவ்வாறு மகிழ்ந்து போற்றினர்"

என்பதைப் பற்றிக் கூறுகிறது. அந்நூல் கூறுவதைக் காண்போம்:

> "பொதுமக்கள் எதை விரும்புகிறார்களோ, அதனையே அரசன் விரும்புகிறான். பொதுமக்கள் எதை வெறுக்கிறார்களோ, அதனையே அரசன் வெறுக்கிறான்"

இவ்வகையால் பொதுமக்களுக்குப் பெற்றோராக அரசன் விளங்குகிறான்.

அதிகாரத்தில் உள்ளவர்கள் தூயவர்களாகவும் தம் கடமையில் கருத்துடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஒருமுறை அவர்கள் பிழைபுரிந்தாலும், உலகமே அவனைப் பழித்துரைக்கும். மலைகளைப் போல் அவர்கள் பெருமிதத்துடன் நிமிர்ந்து இருத்தல்

வேண்டும் என்று பாடற்பனுவல் (The Book of Songs) பகர்கிறது. கடவுள் கட்டளையைக் (The Mandate of Heaven) கடைப்பிடித்துச் செயலாற்றுதல் என்பது அருஞ்செயல் ஆகும். மக்களின் நம்பிக்கையினை இழந்துவிட்ட பேரரசர்கள் வேள்விக் களத்தில் கடவுளுக்கு முன்னிலையில் பதில் சொல்ல வேண்டும் என்றும் அதே நூல் அறிவிக்கிறது.

எனவே, மக்களைத் தம்முடன் அரவணைத்துச் செல்லும் அரசர்களால் மட்டுமே ஒரு நாட்டினை ஆட்சிபுரிதல் முடியும். மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்ட அரசர்கள் நாட்டின் ஆட்சியையும் இழந்து போகிறார்கள் என்பது கன்பூசியசின் முடிந்த கருத்தாகும். மன்னர் ஆட்சி ஓங்கியிருந்த சீன நாட்டில், மக்கள் நம்பிக்கையினைப் பெற்றால்தான் மன்னன் ஆட்சிபுரிதல் முடியும் என்ற நவீனக் குடியாட்சித் தத்துவத்தினை 2,500 ஆண்டுகளுக்கு முன்பே, சீன ஞானி கன்பூசியசு கூறியிருத்தல் வியந்து பாராட்டுதற்குரியது.

உயர்மனிதன் (Superior Man) என்று கன்பூசியசு யாரைக் கருதினார் என்ற வினா எழுகிறது. மக்களில் பண்பினாலும் செயலினாலும் உயர்ந்தவரை மட்டும் இச்சொல் குறிக்கவில்லை. பண்பினாலும் செயலினாலும் மேம்பட்ட அரசன், கோமகன், இளவரசன் உள்ளிட்ட அரசுப் பொறுப்பாளரை இச்சொல் குறித்தது. மேலும் சீன ஞானியின் கருத்தினைக காண்போம்.

உயர்மனிதன் (அரசன், இளவரசன் உள்ளிட்டோர்) என்பவன் தன் நடத்தையின்மேல் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும். தான் நன்னடத்தை உடையவன் என்றால், தன் பக்கம் மக்களை உடையவனாக விளங்குகிறான். நன்னடத்தை உடைய அரசனை மக்கள் மதிப்பார்கள் என்பதும் ஆதரிப்பார்கள் என்பதும் கருத்து.

தன் நடத்தையினால் நாட்டு மக்களைத் தன்பால் கொண்டுள்ள அரசன் தன் நிலப்பரப்பில் அரசுபுரியும்

ஆணையினைப் பெறுகிறான். அங்ஙனம் அரசுபுரியும் ஆணையினைப் பெற்றவன், செல்வம் உடையவன் ஆகிறான். செல்வம் பெற்றவன் ஆகியதும், எப்பணிகளையும் நிறைவேற்றும் வல்லமை உடையவனாக விளங்குகிறான்.

எனவே, அனைத்திற்கும் அத்திவாரம் அல்லது அடிப்படையாக இருப்பது நன்னடத்தை என்பதும் முடிபாக, விளைவாக இருப்பது உடைமை அல்லது செல்வம் என்பதும் புலனாகும். அத்திவாரத்தினைப் புறக்கணித்துவிட்டு அரசன், வெளிப்புறச் செயல்களிலும் அவற்றின் முடிபுகளிலும் கவனம் செலுத்தினால், மக்கள் ஒருவருக்கொருவர் கொள்ளையடிப்பதற்கும், பெரும் இலாபத்திற்குப் போட்டி போடுதற்கும் அவர்களை அரசன் வழிநடத்துபவனாக மாறிவிடுவான். எனவே, அரசன் தன் சொந்தச் செல்வத்தை ஈட்டிக் கொள்ளும் பொழுது, மக்களின் ஆதரவை இழந்துவிடுகிறான். தன் சொந்தச் செல்வத்தை இழக்கும் பொழுது, பொதுமக்கள் என்ற செல்வத்தினைப் பெறுகிறான்.

தன் பேச்சில் ஒருவன் சூழ்ச்சியாகவும் வஞ்சகமாகவும் இருப்பானேல், சூழ்ச்சியும் வஞ்சனையும் கலந்த பேச்சு அவனுக்கு விடையாக வந்து சேர்கிறது. தாறுமாறான வழிகளில் அவனுக்கு வந்த செல்வமும் தாறுமாறான வழிகளில் போய்விடுகிறது என்கிறார் கன்பூசியசு.

எனவே, நேர்மை, ஒழுங்கு, உண்மை ஆகிய தகவுகளுக்குக் கன்பூசியசு பெருமதிப்பு அளித்தவர் என்பது புலனாகும். திருவள்ளுவரும், 'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்' (659) என்று எச்சரிக்கை செய்திருத்தல் இங்கு இயைபு கருதி எண்ணிப் பார்த்தற்கு உரியது. திருக்குறளில்,

> "அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
> புல்லார் புரள விடல்" (755)

என்று தமிழ் ஞானி நல்வழியில்தான் ஒருவன் பொருள் ஈட்டுதல் வேண்டும் என்ற கருத்தினைத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார் என்பது புலனாகும்.

கங்குக்கு அறிவிப்பு (Announcement to K'ang) என்ற பனுவல்,

"கடவுள் கட்டளை (Mandate of Heaven) என்பது நிலையானதும் (Fixed) அன்று; மாற்றம் இல்லாததும் (Unchangeable) அன்று. தூய அரசர் அதனைப் பெறுகிறார்கள்; தீய அரசர்அதனை இழக்கிறார்"

என்று கூறுகிறது.

சூவின் சரிதம் (History of Ch'u) கூறுவதைக் காண்போம். சூ ஓர் அரசன். அவன் ஆட்சியைப் பற்றி அவன் வரலாறு விரிவாக எடுத்துரைக்கிறது.

"சூவின் தேசம் கருவூலங்கள் எவையும் பெற்றிருக்கவில்லை. நன்மைபுரிதல் என்கிற ஒன்றுதான் அந்நாட்டின் ஒரே கருவூலம்"

எனவே, நாட்டில் வாழும் மக்களுக்கு நன்மைபுரிதல் வாயிலாக அரசன் குடிமக்கள் என்ற செல்வத்தையே நாட்டின் கருவூலமாகப் பெறுகிறான் என்பது கருத்து.

நாடு கடத்தப்பட்டிருக்கும் ஓர் இளவரசனின் தாய்மாமன் செஃபன் (Tsefan) என்பவன் தன் மருமகனைப் பற்றிக் கூறியுள்ள கருத்தும் நம் அனைவரின் உள்ளத்தையும் கவர்வதாக உள்ளது. அக்கருத்து இதுவே.[53]

"நாடு கடத்தப்பட்ட நம் இளவரசனுக்கு எந்தவொரு கருவூலமும் (Treasure) கிடையாது; அன்புமிக்க குடிமக்களிடம் கொண்ட தொடர்பு ஒன்றுதான் பெருங்கருவூலமாக உள்ளது"

எனவே 2,600 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சீன நாட்டினை ஆட்சிபுரிந்தவர்கள், மக்களின் ஆதரவும்

அன்பும்தான் பெறுதற்கரிய பெருஞ்செல்வம் என்று மதித்துள்ளனர் என்பது புலனாகும். இத்தகைய நிலையினைச் சங்க இலக்கியத்திலும் திருக்குறளிலும் நம்மால் காணமுடிகிறது.

ஒரு நாட்டின் அரசன் எப்படி இருத்தல் வேண்டும் என்று கூறிய கன்பூசியசு, ஒரு நாட்டின் அமைச்சன் எப்படி இருத்தல் வேண்டும் என்பது பற்றியும் நன்கு சிந்தித்துள்ளார். அமைச்சர் பற்றி அவர் சொல்லும் கருத்துக்களைக் காண்போம்:

சின் என்ற நிலப்பகுதியின் கோமகன் மூ (Duke Mu of Ch'in) கூறும் வஞ்சினத்தில் நல்லமைச்சர் பற்றிய விளக்கம் கிடைக்கிறது.[54] அவன் கூறுகிறான்:

> "ஒரே ஒரு அமைச்சரை யான் அடைவேனாக. அவன் தூயவனாகவும் நேர்மையானவனாகவும் இருப்பானாக. தனக்கு இல்லாத திறமைகள் தன்னிடம் இருப்பதாக நடிப்பவனாக அவன் இருத்தல் கூடாது. அந்த நல்ல அமைச்சன் எளிய ஆனால் விசாலமான நெஞ்சம் கொண்டவனாகவும், பெருந்தன்மை உடையவனாகவும், மற்றவர்களை நோக்கிப் பொறையுடையவனாகவும் இருத்தல் வேண்டும். தன்னிடம் இல்லாத ஒருவகைத் திறமை இன்னொருவனிடம் இருப்பதை அவன் காண்பான் எனில், தானே அந்தத் திறமையினைப் பெற்றிருப்பதாக எண்ணி மகிழ்பவனாக இருத்தல் வேண்டும்.
>
> தன்னிடம் இல்லாத கவர்ச்சியும் அறிவுக் கூர்மையும் இன்னொருவரிடம் இருப்பதை அந்த நல்ல அமைச்சன் காண்பான் எனில், தன்னுள்ளத்தில் அத்தகையவனை விரும்பிப் போற்றுதல் வேண்டும். அத்தகைய ஒருவனால்தான் என்னுடைய மைந்தர்களையும், பேரர்களையும், கருமுடி

மாந்தர்களையும் (black-haired people) காக்க முடியும். எனவே, அத்தகைய தகுதி மிகுதி படைத்த அமைச்சன் ஒரு நாட்டின் சிறந்த மூலதனம்.

எந்தவொரு அமைச்சன் தன்னிடம் இல்லாத தனித்திறமை உடையவனைக் காணும் பொழுது, அழுக்காறும் வெறுப்பும் அடைகிறானோ; தன்னிடம் இல்லாத கவர்ச்சியும் அறிவுக் கூர்மையும் உடையவனின் வழியில் தடையாக நிற்கிறானோ; தன்னினும் மிக்காரைக் கண்டு தாங்கிக் கொள்ளும் ஆற்றல் இலனாக உள்ளானோ - அவனால் என்னுடைய மைந்தர்களையும் பேரர்களையும், கரிய முடியுடைய மாந்தர்களையும் காக்க முடியாது. அத்தகைய அமைச்சன் நாட்டிற்கு ஓர் ஆபத்து."

உண்மையில் உயர் மனிதன், பெருமனிதன் என்பவன் மேலே சுட்டப்பட்ட தீய அமைச்சனை நாட்டைவிட்டு வெளியேற்றவும் காட்டுமிராண்டிகளின் நடுவே வாழும்படி துரத்தவும் வேண்டும். நம் மக்களோடு சீனத்தில் வாழ்வதற்கு இசைவளிக்கக் கூடாது என்று கோமகன் கூற்றாக வரும் கருத்து, கன்பூசியசின் கருத்தே ஆகும்.

உண்மையில் உயர்மனிதன்தான் எப்படி நேசித்தல் வேண்டும், எப்படி வெறுத்தொதுக்குதல் வேண்டும் என்பதை அறிகிறான். தகுதி படைத்தவரைக் கண்டும் அவரை அரசுப் பணிக்குப் பரிந்துரைக்காமல் இருப்பவன், தன் அரசனுக்கு அவமரியாதை செய்தவனாகவும், தன் கடமையினைப் புரியாமல் புறக்கணித்தவனாகவும் எண்ணப்படுகிறான்.

பொதுமக்கள் எதனை வெறுக்கிறார்களோ அதனை விரும்புதலும், அவர்கள் எதனை விரும்புகிறார்களோ அதனை வெறுத்தலும் உடைய அரசனையும் அமைச்சனையும் பேராபத்தும் விபரீதமும் வந்து சூழ்ந்து

கொள்ளும். எனவே, பேரரசரின் (Sovereign) நல்லாட்சி குறித்த ஓர் அடிப்படைத் தத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். நேர்மை, விசுவாசம் என்பனவற்றின் மூலமாகவே மாமன்னன் தன் ஆட்சியை நிலைநிறுத்துகிறான். அகங்காரத்தினாலும் சுகபோகத்திளைப்பினாலும் அவன் ஆட்சியை இழந்துவிடுகிறான் என்பது முற்ற முடிந்த கருத்தாகக் கன்பூசியசு மொழிந்துள்ளார்.

நல்ல அரசன், நல்ல அமைச்சன் எவ்வாறு இருத்தல் வேண்டும்? எவ்வாறு இருத்தல் கூடாது? என்பதற்குப் போதிய விளக்கமும் வரையறையும் வழங்கிய சீன ஞானி கன்பூசியசு, பொருளீட்டுதல் (Accumulation of Wealth) பற்றிய வரையறையினையும் கண்டுள்ளார்.[55]

பொருளினை உற்பத்தி செய்வோர் பலராகவும் செலவு செய்வோர் சிலராகவும் இருப்பினும் மக்கள் பொருளீட்டுவதில் விரைவாகவும், அதனைச் செலவு செய்வதில் மெதுவாக இருப்பினும் ஒரு நாட்டின் செல்வம் எப்பொழுதும் போதுமானதாகவே இருக்கும். தன் பொருட் செல்வத்தின் வாயிலாக உண்மையான மனிதன் (True man; Superior man என்பவனும் இவனே), தன் ஆளுமையினை (Personality) வளர்த்துக் கொள்ளுகிறான். தகுதியற்ற மனிதன், தன் ஆளுமையினை இழந்து பொருளை வளர்த்துக் கொள்ளுகிறான்.

பிறர் நலம் விரும்பும் உதார குணமுள்ள அரசனும், செங்கோன்மையினை விரும்புவதில் தவறும் குடிமக்களும் இருந்தமைக்கு ஒரு நிகழ்வும் ஒரு பொழுதும் இருந்ததில்லை. செங்கோன்மையினை விரும்பும் மக்கள் வாழும் நாட்டில் அரசு அலுவல்கள் (Affairs of the State) வெற்றிகரமாக முற்றுப்பெற முடியவில்லை என்பதற்கும் ஒரு நிகழ்வும் ஒரு பொழுதும் இருந்ததில்லை. அத்தகைய நாட்டினில் தேசியக் கருவூலத்தில் தொகுத்து வைக்கப்பெற்ற நிதியம் அரசனின் உடைமையாகத்

தொடரவில்லை என்பதற்கும் ஒரு நிகழ்வும் ஒரு பொழுதும் இருந்ததில்லை.

கோமகன் சீயென் மெங் (Baron Hsien Meng) என்பார், கற்றவர்கள் (scholars), உயர் அலுவலர்கள் (Higher Officials), பிரபுக்கள் (Nobles) ஆகியோருக்குரிய இயல்புகளைப் பற்றிக் கூறியுள்ளார். அவற்றைக் காண்போம்.

1. அப்போதுதான் அலுவலர்களாகப் பணியமர்த்தம் பெற்ற கல்வியாளர்கள் குதிரையினையும் அது இழுத்துச் செல்லும் வாகனம் அல்லது ஊர்தியையும் பாதுகாப்பதில் கவனம் செலுத்து கின்றனர். ஆனால், அவர்கள் கோழி, வாத்து வளர்ப்பும் பன்றி வளர்ப்பும் பற்றிக் கவலைப்படுவ தில்லை.

2. உயர் அலுவலர்கள் தாம் செய்யும் பலிகளில் (Sacrifices) பனிக்கட்டியைப் பயன்படுத்து கின்றார்கள். ஆனால், அவர்கள் ஆநிரைகளையும் ஆட்டு மந்தைகளையும் பேணிக் காப்பதில் அக்கறை காட்டுவது இல்லை.

3. பிரபுக்கள் என்பவர் நூற்றுக்கணக்கில் வாகனங்களைப் பராமரிக்கின்றார்கள். ஆனால், அவர்கள் தங்களின் கீழ் ஆர்வத்துடன் வரி தண்டுவோர்களைப் பராமரிப்பது இல்லை. தங்களுக்குரிய கருவூலங்களைக் களவு செய்த அமைச்சர் ஒருவரைக் கூட அரசர் தம்பால் வைத்திருக்கலாம். ஆனால், ஆர்வமுடன் வரி தண்டாத அலுவலர்களை வைத்திருத்தல் கூடாது.

எனவேதான்,

“ஒரு தேசத்தின் பொருள் வளம் (Material prosperity) என்பது பொருள் வளத்தில் அடங்கியிருக்கவில்லை. செங்கோன்மையில்தான் அடங்கியுள்ளது”

என்ற முதுமொழி வழங்கி வருகிறது.

அரசின் (-Government) தலைமைப் பீடத்தில் எவர் இருக்கிறாரோ அவர், பொருளைத் தொகுக்கும் பொழுது அலுவலகத்தில் பணிபுரியும் அற்ப மனிதர்களைப் பயன்படுத்துகின்ற கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறார். அவர் நல்லது செய்ய நினைத்தாலும் கூட அற்ப அலுவலர்களே நாட்டினை ஆள்கிறார்கள். இவர்கள் தம் முறைகேடான பணியினால் நாட்டிற்குப் பேரிடரை (Disaster) உண்டாக்குகின்றனர். அதனால், அரசரின் நல்ல நோக்கங்களும் திட்டங்களும் நிறைவேறாமல் போய்விடுகின்றன. எனவேதான், "ஒரு தேசத்தின் பொருள் வளம் என்பது பொருள் வளத்தில் அடங்கியிருக்கவில்லை, செங்கோன்மையில்தான் அடங்கியுள்ளது" என்ற முதுமொழி வழங்கி வருகிறது.[56]

17. நீதியும் அறிவுரையும்

கன்பூசியசு சிறந்த ஞானி, சிந்தனையாளர், மனித நேயம் மிக்கவர். அவர் அவ்வப்பொழுது வெளியிட்ட நீதிக் கருத்துக்கள் திட்பம் நுட்பம் செறிந்தவை. அவற்றை அவர்தம் சீடர்கள் அனலெக்ட்சு (The Analects) என்ற பெயரில் தொகை வகை செய்துள்ளனர். தமிழர்களுக்குத் திருக்குறளைப் போலவும், கிறித்தவர்களுக்கு விவிலியத்தைப் The Bible) போலவும் சீனர்களுக்குக் கன்பூசியசின் அறவுரைகளடங்கிய அனலெக்ட்சு (The Analects) என்ற நூல் விளங்குகிறது. பல்வேறு சமயங்களிலும் பல்வகைச் சூழ்நிலைகளிலும் கன்பூசியசு வெளியிட்ட உயரிய கருத்துக்களின் கோவையாக இந்நூல் திகழ்கிறது. இதனுள் இடம்பெற்ற பல்வகைக் கருத்துக்களும் தொகைவகை செய்யப்படாதவை, ஆராய்ந்து பதிப்பிக்கப்படாதவை என்பர். இவற்றுள் பல கருத்துக்கள் எந்தச் சூழ்நிலையில் கன்பூசியசால் கூறப்பட்டவை என்ற குறிப்பினைப் பெறாதவை. தேர்ந்தெடுத்த முதுமொழிகளாகக் கன்பூசியசின் கருத்துக்கள் பலவும் மதிக்கப்படுகின்றன. இவை

படிப்பவர் உள்ளத்திலும் கேட்பவர் உள்ளத்திலும் சுவை உணர்வினைக் கிளர்ந்தெழச் செய்பவை. ஆழ்ந்து சிந்திப்பதற்கும் வியந்து பாராட்டுவதற்கும்உரிய பற்பல கருத்துக்களை அனலெக்ட்சில் ஒருவர் காணலாம்.

கன்பூசியசு மனிதர்களின் மனப்பான்மை குறித்துக் கூறியுள்ள ஒரு கருத்தினைக் காண்போம்.

> "இது வரையிலும், அழகார்ந்த மகளிரால் கவரப்பட்ட மாந்தரைப் பார்த்திருக்கிறேனே தவிர, அறமார்ந்த அறிஞர்களால் கவரப்பட்ட மாந்தரை ஒரு பொழுதும் யான் கண்டதில்லை"

என்று கூறிய கருத்து இந்நூலிலும் இடம்பெற்றுள்ளது. இக்கருத்தினை முன்பே நாம் கண்டுள்ளோம்.

அனலெக்ட்சு (Analects) என்ற நூல் சிறு சிறு வாக்கியங்கள் பலவற்றைக் கொண்டது. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு அல்லது ஐந்து சொற்களால் அமைந்தது.[57] தொல்காப்பியம் கூறும் முதுமொழி அல்லது வாய்மொழி[58] என்னும் இலக்கிய வகையினை இந்நூலுடன் ஒருவாறு ஒப்பிடலாம். அனலெக்டசிலிருந்து உதாரணமாகச் சில வாக்கியங்களைக் காணலாம்.

'சான்றோன் என்பவன் ஒரு மரக்கலம் அல்லன்' என்பது ஒரு வாக்கியம். இவ்வாக்கியத்தின் உள்ளார்ந்த பொருள், 'சான்றோன் என்பவன் ஒரு குறிப்பிட்ட திறமையினை மட்டும் உடையவன் அல்லன்' என்பதாகும். 'அப்பாவிகள் என்போர் நற்குணத்தின் திருடர்கள்' என்பது ஒருவாக்கியம். இரண்டும் கெட்டான் நிலையில் இருப்பவர்கள் அப்பாவிகள். பார்ப்பதற்கு அருவருப்பாகக்கூட விளங்குபவர்கள். ஆனால், அவர்கள் நற்குணங்களை மட்டுமே கவர்ந்து கொள்பவர்கள். நற்குணங்களையே தம் உடைமையாகக் கொண்டவர்கள் என்பது கருதத்தக்கது.

கன்பூசியசு ஒரே நேரத்தில் இரண்டு மூன்று அசைகளில் (Syllables) மட்டுமே பேசினார் என்பதை ஒருவர் நம்பாமல் கூட இருக்கலாம். சீடர்கள் கேள்விகளுக்குக் கூறிய திட்ப நுட்பம் செறிந்த சிறுவாக்கிய விடைகளே அனலெக்ட்சில் இடம்பெற்றன. என்றாலும், இந்நூலில் சீடர்களின் வினாக்கள் முடிந்தமட்டில் சுருக்கமாகவே கொடுக்கப் பெற்றுள்ளன. ஒரே நேரத்தில் பல்வேறு சீடர்களும் பல்வேறு வினாக்களைக் கேட்டுள்ளனர். ஒருவர் 'அரசு' (Government) பற்றியும், மற்றொருவர், 'உண்மையான மனிதத்தன்மை' (True manhood) பற்றியும், இன்னொருவர், 'லீ (Li) பற்றியும் பேராசானிடம் வினவினர். இம்மூவகை வினாக்களுக்கும் கன்பூசியசு வேறுபட்ட விடைகளையே கூறினார்.

ஈன்றணிமைப்பட்ட பசுவின் கன்றினைக் கண்ட கன்பூசியசு, சுங்குங் (Chung Kung) என்பாரிடம், "அந்த அழகிய கன்றினைப் பாருங்கள். அந்தக் கன்றின் இளம் பழுப்புத் தோலும் அழகிய மெல்லிய கொம்புகளும் எவ்வளவு நேர்த்தியாக உள்ளன! அதனை விட்டுவைக்க வேண்டும் என்று நான் விரும்பினாலும் மலைகளுக்கும் ஆறுகளுக்கும் உரிய ஆவிகள் (Spirits) தம் பலிக்காக அவற்றை விட்டுவைக்கக் கூடும்" என்று கூறினார். இக்கூற்றின் உள்ளார்ந்த பொருளாக உரைகாரரர், "சுங்குங் (Chung Kung) செங்கோலாட்சி செய்வதற்குத் தகுதி படைத்த அழகிய பண்புகளைப் பெற்றிருந்தார்" என்று விளக்கம் கூறினார். ஆனாலும் யுவன் மெய் (Yuan Mei) என்பார் கன்பூசியசின் கூற்றில் உள்பொருள் இல்லை என்றும், சன்னல் வழியாகத் தானும் தன் சீடனும் கண்ட காட்சியைத்தான் சீடரிடம் காண்பித்துப் பேசினார் என்றும் குறிப்பிடுகிறார்.

மூதுரைகளையும் அறிவுரைகளையும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் சில உவமைகள் மற்றும் உதாரணங்களின் வழியாக எடுத்துரைக்கும் பாங்கில்

அனலெக்ட்சு அமைந்துள்ளதே தவிர, கன்பூசியசின் சிந்தனை அமைப்பினை முற்றாகவும் முடிவாகவும் முழுமையாகவும் விளக்குவதாக அமையவில்லை என்பது அறிஞர் பலரின் கருத்து.

கன்பூசியசு தன் அன்புக்குரிய சீடர்கள் இருவர் அல்லது மூவர் சூழ்ந்திருக்கும் பொழுது மகிழ்ச்சியுடன் விளங்குவார். செங்த்சே (Tsengtse), சேசியா (Tsehsia), யுட்சே (Yutse), சேச்சங் (Tsechang) முதலியோர் கன்பூசியசின் பெருமைக்குரிய சீடர்கள் ஆவர். இவர்கள் உரைகளும் அனலெக்ட்சில் விரவியுள்ளன. மேலும், கன்பூசியசின் சீடர்களுக்குச் சீடர்கள் மொழிந்த நல்லுரைகளும் இந்த நூலில் கலந்துள்ளன.

ஆழ்ந்த சிந்தனையுடன் அனலெக்டிசினைக் கற்றால்தான் அதன் ஒவ்வொரு வாக்கியத்தின் பொருளையும் அறிந்து கொள்ளுதல் இயலும். வாசகனின் முழு ஈடுபாடும், உள்ளுணர்வும் இந்நூலினைப் புரிந்து கொள்ளுதற்கு இன்றியமையாதவை ஆகும். பண்டைய சீனப் பள்ளியின் கல்வி அமைப்பு, இதன் தத்துவார்த்தங்களைப் பள்ளிப் பிள்ளைகள் புரிந்து கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால், இந்த நூலினை அவர்கள் முழுமையாக மனப்பாடம் செய்தல் வேண்டும் என்று எதிர்பார்த்தது. இளம் பருவத்தில் கன்பூசியசின் பொன்மொழிகள் உள்ளத்தில் பதிந்துவிட்டால், வாழ்நாள் முழுதும் அவைஅவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்து பயன் விளைக்கும்என்று கல்வியாளர்கள் எதிர்பார்த்தனர்.

18. கன்பூசியசு பற்றிய சுயவருணனையும் பிறர் வருணனையும்

தன் சீடர்களுடனும் தன் புரவலராகிய கோமகனுடனும் (Duke) கன்பூசியசு பேசும் பொழுது தன் ஆளுமையினையும் இயல்புகளையும் வருணித்துக் கூறியுள்ளார். செலு (Tselu) என்ற சீடரிடம் சு நாட்டின்

கோமகன் யே *(Duke Yeh of Ch'u)* என்பார் கன்பூசியசு எத்தகையவர் என்று வினவினார். அதற்குச் சீடர் செலு விடை கூறவில்லை. கன்பூசியசு,

> "அவர் வேறு பொருளில் நாட்டம் செலுத்தும் வேளையில் நான் உணவு கொள்ளுவதைக் கூட மறக்கிறவன் என்று நீ ஏன் சொல்லவில்லை? அவர் மகிழ்வுடன் இருக்கும் வேளையில் நான் அல்லல்களை மறக்கிறவன் என்று நீ ஏன் சொல்லவில்லை? முதுமை நெருங்குவதைக் கூட அறியாமல் இருக்கிறேன் என்று நீ ஏன் சொல்லவில்லை?"

என்று தன் சீடர் செலுவிடம் தான் எத்தகையவர் என்பதை எடுத்துக் கூறினார். இந்தச் சுய விளக்கத்திலிருந்து அவருடைய ஒரு சில இயல்புகள் வெளிப்படுகின்றன.

செலு *(Tselu)* இரவில் கல் வாயில் *(Stone Gate)* என்ற இடத்தில் தங்கியிருந்த பொழுது, வாயில் காவலன், 'நீ எங்கிருந்து வருகிறாய்?' என்று கேட்டான். சீடன், 'நான் கன்பூசியசிடமிருந்து வருகிறேன்' எனக் கூறினான். அதற்கு வாயிற் காவலன், 'செய்ய முடியாத ஒன்றையும் செய்து காட்ட விரும்பும் அவரிடமிருந்தா நீ வருகிறாய்' என்று வினவினான். இந்தக் கூற்றினால், கன்பூசியசு செயற்கரியவற்றைச் செய்ய விரும்பிய பெரியார் என்பது புலனாகும்.

வேஷெங் மௌ *(Weisheng Mou)* கன்பூசியசைப் பார்த்து,

> "நீவிர் ஏன் மிகவும் சுய முக்கியம் உடையவராகவும் தொடர்ந்து இங்குமங்கும் விரைபவராகவும் இருக்கிறீர்? சிறிது கூடுதலாக நீவிர் ஏன் பேசக் கூடாது?"

என்று கேட்டார். அவருக்கு விடை கூறும் வகையில்,

"நான் பேச விரும்பாதவன் என்பதல்ல. நிகழ்காலத்தில் நிலவும் நீதி, அறம் பற்றிய குழப்பத்தினை நான் வெறுப்பதால்தான்" என்று இயம்பினார்.

எனவே, சமுதாயச் சீர்கேடுகள், நீதியின் கலங்கிய நிலை, அறத்தின் சரிவு ஆகியவற்றைக் கண்ட கன்பூசியசு வாயடைத்துப் போனார். அதனால், கூடுதலாகப் பேசுதற்கு அவர் விரும்பவில்லை.

மேலும் கன்பூசியசு,

"பதினைந்தாம் வயதில் படிப்பில் ஆர்வமும் ஆழ்ந்த ஈடுபாடும் கொண்டிருந்தேன். முப்பதாம் வயதில் என் குணநலத்தை (Character) உருவாக்கிக் கொண்டேன். நாற்பதாம் வயதில் எனக்குக் குழப்பங்களே இல்லை. ஐம்பதாம் வயதில் கடவுளின் கட்டளையினை (Will of Heaven) அறிந்தேன். அறுபதாம் வயதில் துன்பங்கள் தொலைந்தன. எழுபதாம் வயதில் நீதியின் விழியைக் கடந்து போகாமல், என் சிந்தனையினை உலவவிட்டேன்."

என்று கூறினார். இதனால் அவர் வளர்ச்சியில் ஏற்பட்ட பரிணாமப் படிநிலைகளைப் புரிந்து கொள்ளமுடிகிறது.

தன் சீடர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த கன்பூசியசு, தனக்கு மிகவும் பிடித்தமுள்ள சீடன் செலுவை (Tselu) நோக்கி,

"உன் வாழ்க்கைக் குறிக்கோள் என்ன?"

என்று வினவினார். அதற்குச் சீடர்,

"எனக்கென்று குதிரை பூட்டிய ஊர்தி வேண்டும். எனக்கென்று மென்மையான உரோம மேல்சட்டை (Fur Coat) வேண்டும். இந்த ஊர்தியையும்

> சட்டையினையும் கிழிந்து போகும் வரை எந்தவித மனவருத்தமும் இன்றி என் நல்ல நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். இதுவே என் வாழ்வின் இலட்சியம், ஆசை"

என்று சொல்லி முடித்தார். மற்றொரு சீடர் யென் ஹுயெ (Yen Huei) என்பார் தன் விருப்பத்தைப் பேராசானிடம்,

> "என்னைப் பகட்டாக வெளிப்படுத்திக் கொள்ளுவதையும் தற்புகழ்ச்சி செய்து கொள்ளுவதையும் விரும்பாதிருத்தல்தான் என் வாழ்க்கையின் இலட்சியம்"

என்று தெரிவித்தார். பின்னர், அன்பார்ந்த சீடர் செலு (Tselu), தன் பேராசானைப் பார்த்து, 'உங்களின் வாழ்க்கைப் பெருவிருப்பம் என்ன என்று தெரிந்து கொள்ளலாமா?' என்று பணிவுடன் கேட்டார். அவருக்கு விடை பகரும் முறையில்,

> "முதியோர்கள் எல்லாம் அமைதியுடன் வாழ்தல் வேண்டும். நண்பர்கள் எல்லாம் ஒருவருக்கு ஒருவர் விசுவாசத்துடன் வாழ்தல் வேண்டும். இளைஞர்கள் எல்லாம் தத்தம் மூத்தோர்களுக்கு அன்பு செலுத்துதல் வேண்டும். இதுவே என் பெருவிருப்பம்"

என்று கூறினார். இவர் உரையினால் சமுதாயத்தில் முதியோர், நண்பர், இளைஞர் எவ்வெவ்வாறு இருத்தல் வேண்டும் என்பது பற்றிய கன்பூசியசின் சமுதாயச் சிந்தனை தெளிவாகப் புலப்படுதல் காணலாம்.

சமுதாயத்தைவிட்டுத் தப்பிச் செல்லும் துறவிகளும் அவர் காலத்தில் இருந்தனர். நடைமுறைக்கு ஒவ்வாத நிலையில்அவர்கள் வாழ்ந்தனர். சமுதாயப் போக்கில் தங்களை இணைத்துக் கொண்டும் தங்களைச் சரிசெய்து கொண்டும் அவர்கள் வாழவேண்டும் என்று பேராசான் கன்பூசியசு அறிவுறுத்தினார்.[59]

ஒரு பெரிய அதிகாரி கன்பூசியசின் சீடர் சே குங் (Tsekung) என்பவரைப் பார்த்து,

"பேராசான் ஒரு முனிவரா? அவர் ஏன் பன்முகப் போக்குடன் இருக்கிறார்?"

என்று கேட்டார். அதற்குச் சீடர்,

"கடவுள் அவரை ஒரு முனிவராக (Sage) இருக்கத்தான் அனுப்பினார். ஆனால் அவர் மற்றவர்க்கு உதவி செய்யும் பொருட்டுப் பன்முகப் போக்குடையவராக விளங்குகிறார்"

என்று விடை கூறினார். அதிகாரியின் வினாவையும் சீடரின் விடையினையும் செவிமடுத்த கன்பூசியசு,

"இந்தப் பெரிய அதிகாரி என்னை நன்றாக அறிகிறவர். நானோ ஓர் ஏழையின் மகன். எனவேதான், பாமர மனிதனுக்குரிய பல செயல்களைச் செய்ய முடிகிறது. உயர்மனிதன் (Superman) இவற்றையெல்லாம் அறிய முடிகிறதா? ஒரு பொழுதும் இல்லை!"

என்று கூறினார். இக்கூற்றினால் ஓர் ஏழைதான் ஏழையின் சுகதுக்கங்களை அறிய முடியும், உதவ முடியும் என்ற உண்மை தெளிவாகிறது. உயர்மனிதன் என்ற சொல் இளவரசன், கோமகன், அரசன் ஆகியோரைக் குறிப்பதற்காகக் கன்பூசியசு பயன்படுத்திய ஒரு குறியீடாகும் என்பதை மீண்டும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். மேலும்,

"நான் அரசியலில் நுழையவில்லை. அதனால்தான் பல கலைகளையும் பயிலுவதற்குப் போதிய காலம் எனக்குக் கிடைத்தது"

என்று அவர் கூறிய உரையும் சிந்திக்கத்தக்கது.[60] கன்பூசியசு,

"எளிய காய்கறி உணவினை உண்டு நீர் பருகிய பின்னர், வளைந்த புயத்தினைத் (arm) தலையணையாகக் கொண்டு தரையில் ஓய்வு கொள்ளுவதில் மகிழ்ச்சி இருக்கிறது. மறுபக்கமாக, நேர்வழியில் தேடாத செல்வத்தையும் செல்வாக்கினையும் அனுபவித்தல் என்பது மிதக்கும் மேகங்களைப் போல் எனக்குத் தோன்றுகிறது"

என்று கூறியுள்ள சொற்கள் ஆழந்து நோக்கத்தக்கது. சீன ஞானி எளிமையினையும் நேர்மையினையும் கடைப்பிடித்தவர். திருவள்ளுவர்,

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரள விடல்"[61]

என்று கூறிய கருத்துடன் கன்பூசியசின் கொள்கை ஒப்பிட்டுணர்ந்து மகிழ்தற்கு உரியது.

உயர்மனிதனை (Superman)க் கன்பூசியசு மூன்று வகையினராகப் பாகுபடுத்தியுள்ளார். முதல் வகையினரை உண்மையான மனிதன் (True man) எனக் கூறுகிறார். இத்தகைய மனிதர் கவலைகளே இல்லாதவர் என்கிறார். இரண்டாம் வகையினரை மதிநல மனிதன் (Wise man) எனக் கூறுகிறார். இத்தகைய மனிதர் குழப்பங்களே இல்லாதவர் என்கிறார். மூன்றாம் வகையினரை, தைரிய மனிதன் அல்லது வீர புருஷன் (Brave man) எனக் கூறுகிறார். இத்தகைய மனிதர் அச்சம் அற்றவர் என்கிறார். இவர் விளக்கத்தைக் கேட்ட சீடர் சேகுங் (Tsekung) தன் பேராசானைப் பார்த்து,

"ஐயா! தாங்கள் தங்களை உள்ளபடி வருணிக்கிறீர்கள்"

என்று பணிவாகக் கூறினார். எனவே, கன்பூசியசு உயர்மனிதர் என்பதும் உயர்மனிதரின் மூவகையராகிய 1. உண்மையான மனிதர், 2. மதிநல மனிதர், 3. வீர மனிதர் என்பதும் புலனாகும்.

தன் சீடரின் அன்புரையினைக் கேட்ட கன்பூசியசு,

"நான் கூடுமான வரை உயர்மனிதனாக இருக்க முயன்றுள்ளேன். நான் வாழ்ந்ததையே பிறர்க்குப் போதிக்கவும் இயன்ற வரை முயன்றிருக்கிறேன்"

என்று இயம்பினார். மேலும்,

"பத்துக் குடும்பங்கள் அடங்கிய ஒவ்வொரு சேரியிலும் (Hamlet) ஒரு சிலராவது என்னைப் போல் நேர்மையுடையவராகவும் நம்பிக்கைக்கு உரியவராகவும் உள்ளனர். ஆனால், கல்வியிலும் படிப்பிலும் என் அளவுக்கு ஒருவரும் இலர்"

என்று அவர் ஆளுமையினை வெளிப்படுத்திக் கூறியுள்ளார். ஆதலின், நேர்மை, நம்பிக்கை, கல்வி, படிப்பு ஆகியவற்றின் உருவமாக அவர் விளங்கினார் என்பது பொருத்தம் உடைய கருத்தாகும். அவர் தொன்னூல்களையும் தொன்மைக்கு உரியவற்றையும் கற்றறிவதில் பேரார்வம் கொண்டவர்.[62]

ஒருமுறை அவர் தன்னைப் பற்றிப் பின்வருமாறு கூறிக்கொண்டார்:

"*1.* என் ஒழுக்கத்தினையும் நடத்தையினையும் நான் புறக்கணித்து விடுவேனோ?

2. என் படிப்பினையும் ஆய்வுகளையும் புறக்கணித்து விடுவேனோ?

3. நன்னெறி இன்னதுதான் என்பதைக் காணும் பொழுது அதனை நோக்கிச் செல்லாமல் நழுவ விட்டு விடுவேனோ?

4. என் பிழையினை உணரும் பொழுது என்னை நானே திருத்திக் கொள்ளத்தவறுவேனோ?"

என்று அடிக்கடி சுயசோதனை செய்துகொண்ட சான்றோராகக் கன்பூசியசு விளங்குவதை அனலெக்ட்சு நமக்கு உணர்த்துகிறது.[63]

வேறொரு சூழ்நிலையில்,

"நான் மதிநலம் உடையவனாகப் பிறக்கவில்லை. ஆனாலும், பழைய பனுவல்களைப் பயில்வதில் காதல் கொண்டிருந்தேன். அவற்றைப் பயின்று தேர்வதில் கடுமையாக உழைத்திருக்கிறேன்"

என்று தன் நிலையினை விளக்கியுள்ளார். பிறக்கும் பொழுதே யாரும் அறிஞராகப் பிறப்பதில்லை. பிறந்த பின்னர் ஊக்கத்தாலும் உழைப்பினாலும் பல நூல்களையும் கற்றறிந்து ஒருவர் அறிஞராக முடியும் என்பது அவர் வரலாறு நமக்கு உணர்த்தும் உண்மையாகும்.

அறிவுடைய பெருமக்களுடன் நெருங்கிப் பழகி வருவதால் ஒருவர் அறிஞராக முடியும் என்று இந்தச் சீன ஞானி நம்பினார். அவர் ஒருமுறை கூறியதை இங்குக் காண்போம்:

"ஒருநாள் முழுவதும் உணவில்லாமலும் உறக்க மில்லாமலும் சிந்தனையில் தொடர்ந்து ஆழ்ந்திருந்தேன்; ஆனால், எந்த முடிவுகளையும் எட்ட முடியவில்லை. எனவே, மேலும் மேலும் படிக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்".

இவ்வாறு அனலெக்ட்சில் அவர் கூறியுள்ளார்.[64] இதனால், அவர் சிந்தனையின் திறமும் கல்வியில் அவர் கொண்டிருந்த தணியாத வேட்கையும் புலனாகின்றன. மேலும் சொல்கிறார்:

"நான் மூவருடன் நடந்து செல்லும் பொழுது எனக்குப் புதிய கருத்துக்களைக் கூறும் ஆசிரியரும் (-ஒருவரும்) அவருள் இடம்பெறுதல் உண்டு. நல்லார் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரை முற்றிலும் பின்பற்றுகிறேன். தீயவர் ஒருவரைக் காணின், என்னிடம் தீமை எதுவும் இல்லாதபடி என்னைத் திருத்திக் கொள்ளுகின்றேன்"

இக்கூற்றினால் நல்லாரிணக்கத்தின் முக்கியத்துவம் வெளிப்படுகிறது.

யார்யாருக்குக் கல்வியைச் சொல்லிக் கொடுக்க வேண்டும், யார்யாருக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாது என்ற வரையறையினையும் கன்பூசியசு கொண்டிருந்தார். அவர் கருத்தினை நோக்குவோம்.[65]

> "ஆர்வம் இல்லாத ஒருவனுக்குக் கற்பிக்க விரும்பவில்லை. கூறுகிற செய்திகளைத் தனக்குள் விளங்கிக் கொள்ள முயலாத ஒருவருக்கும் எதனையும் விளக்குவதற்கு விரும்பமாட்டேன். ஒருபொருளைப் பற்றி நான் கால் பகுதியை விளக்கினால், எஞ்சிய முக்கால் பகுதியில் பொதிந்துள்ள குறிப்புப் பொருள்களை (Implications)ப் பற்றி எண்ணாதவர்க்கும் ஆராயாதவர்க்கும் பாடம் சொல்லிக் கொடுப்பதைப் பற்றிக் கவலை கொள்ள மாட்டேன்."

எனவே, கல்வியில் நாட்டம் உள்ளவர்கள் ஆசிரியர் கற்பிப்பதை அடிப்படையாகக் கொண்டு தாமும் சிந்தனையினைப் பயன்படுத்தி அறிவுத் தேடலில் முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும் என்பது சீன ஞானியின் சித்தாந்தமாகக் கொள்ளலாம். நன்னூல் பொதுப்பாயிரப் பகுதியில்,

> *"ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்*
> *காற்கூறு அல்லது பற்றலன் ஆகும்"*[66]

என்று கூறப்படும் கற்றல் பற்றிய கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. எஞ்சிய முக்காற் பகுதி அறிவு மாணவர்க்கு எப்படி ஏற்படும் என்பதை,

> *"அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்*
> *செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்*
> *மையறு புலமை மாண்புடைத் தாகும்"*

எனவரும் நூற்பா புலப்படுத்துகின்றது. எனவே, பழைய காலத்துக் கல்வி கற்கும் முறை தமிழகத்திலும் சீனத்திலும் ஒரே மாதிரியாக இருந்தது என்பது தற்செயலான ஒப்புமை (accidental Similarity) என்று கருதலாம்.

மாற்றப்பனுவலில் (Book of Changes) கன்பூசியசு பேரார்வம் கொண்டிருந்தார். அந்நூலைப் படிப்பதற்கு மேலும் சில ஆண்டுகள் வேண்டும் என்றும், அதனை முழுமையாகப் படித்துவிட்டால், பிழைகள் புரிவதினின்றும் விடுதலை பெறுதல் முடியும் என்றும் நம்பினார். மாற்றப் பனுவலுடன் பாடற்பனுவல், வரலாற்றுப் பனுவல், சடங்குப் பனுவல் ஆகிய சீனச் செவ்வியல் இலக்கியங்களில் பொதிந்துள்ள அரிய கருத்துக்களைப் பற்றியும் அடிக்கடி பேசி வந்தார்.[67]

1. இலக்கியம், 2. தனிமனித நன்னடத்தை, 3. தன் சுயத்தில் இருத்தல், 4. சமுதாய உறவுகளில் நேர்மை - இந்த நான்கையும் அவர் போதித்து வந்தார்.

கன்பூசியசு மீன் பிடிப்பதில் வல்லவர். மீன் பிடிப்பதற்கு அவர் வலையினைப் பயன்படுத்தவில்லை; ஒரு கோலினை மட்டுமே பயன்படுத்தினார். சுடும் பொழுது ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் ஒரு பறவையினை அவர் சுட்டதில்லை.

அவர் அறவே வெறுத்தவை:[68] 1. தன்னிச்சைப் படியான கொள்கை, 2. பிடிவாதப் போக்கு, 3. குறுகிய மனப்பான்மை, 4. செருக்கு.

அவர் எப்பொழுதும் மென்மையராகவும், கடுமையில்லாதவராகவும், மரியாதைக்குரியவராகவும், பண்பாளராகவும், அலட்டிக் கொள்ளாதவராகவும் வாழ்ந்து வந்துள்ளார்.

ஒருமுறை ஷுசுன் வுஷு (Shusun Wushu) என்பார் அவைக்கள அதிகாரிகளைப் பார்த்து, ‘கன்பூசியசைவிட

அவர் சீடர் சேகுங் (Tsekung) சிறந்தவர்' எனக் கூறினார். அதனைக் கேட்ட அதிகாரிகள் சீடரிடம் அப்படியே எடுத்துச் சொல்லினர். சேகுங் அவர்களுக்குக் கூறிய விடை வருமாறு:

"வீட்டு மதிற்சுவர்களைப் பற்றிப் பேசுதல் போன்றது எனக்கும் என் ஆசானுக்கும் உள்ள சிறப்பினைப் பற்றிய பேச்சு. என் வீட்டு மதிற்சுவர் என் தோள் அளவுதான். எனவே, வெளியே இருக்கும் மக்கள் என் அழகிய வீட்டினைப் பார்க்க முடியும். ஆனால் கன்பூசியசின் வீட்டு மதிற்சுவர் 20 அடி முதல் 23 அடி வரை உயரமானது. வீட்டிற்குள் நேரே புகாமல், அவர் இல்லத்துக் கூடங்களின் அழகினையும் அறைகளின் அழகினையும், அங்குப் போட்டிருக்கும் நாற்காலி, மேசை, கட்டில் போன்ற பொருள்களின் காம்பீர்யத்தையும் காண முடியாது. ஆனால், ஒரு சிலரால்தான் அவர் மாளிகைக்குள் செல்ல முடியும். இந்த அடிப்படையில் ஷூசுன் (shusun) சொல்லியதைப் பூரணமாகப் புரிந்துகொள்ளுதல் இயலும்."

இவ்வுரையினைக் கேட்டும் அமைதியுறாத ஷூசுன் வுஷூ (Shusun Wushu) கன்பூசியசின் பெருமையினைக் குறைவுபடுத்திப் பேச முயன்றார். கண்ணனுக்கு ஒரு சிசுபாலன் இருந்தது போலவே கன்பூசியசுக்கு ஒரு ஷூசுன் இருந்திருக்கிறார்! அவருடைய சிறு சொற்களைச் சட்டை செய்யாத சீடர் சேகுங் (Tsekung),

"கன்பூசியசைக் குறைத்துப் பேசும் வீண் முயற்சியால் பலனில்லை. மற்ற பெரிய மனிதர்களுக்கும் கன்பூசியசுக்கும் ஒரு வேற்றுமை உண்டு. அவர்கள் மணல் மேடுகளையும் குன்றுகளையும போன்றவர்கள். அவற்றில் நீர் ஏற முடியும். ஆனால், கன்பூசியசோ திங்களைப் போலவும் கதிரவனைப் போலவும்

எட்டாத உயரத்தில் உள்ளவர். அவற்றை ஒருபொழுதும் எந்த மனிதனாலும் ஏறிச் சென்று அடைய முடியாது. ஒருவன் திங்கள், கதிரவன் ஆகிய இருபெரும் சுடர்களுக்கு முன் தன் கண்களை மூடிக் கொள்ளமுடியும். அங்ஙனம் மூடிக் கொள்ளுவதால் அவ்விருபெரும் சுடர்களுக்கு என்ன தீங்கு செய்துவிட முடியும்? உம்முடைய நிலையும் அப்படித்தான்!"

என்று விரிவான, வியப்பான விடையினை விளக்கமாகக் கூறினார்.[69] மேலான குரு பக்திக்கு வேறென்ன சான்று வேண்டும்?

19. கன்பூசியசின் உணர்வு பூர்வமான கலையியல் வாழ்வு

கன்பூசியசு உணர்ச்சிவசப்பட்டவர். யென்ஹுயெ (Yen Huei) இறந்த பொழுது கன்பூசியசு வாய்விட்டுக் கதறி அழுதார். அவருடைய சீடர்கள், "நீங்கள் அனைவரும் உலுக்கப்பட்டீர்கள், நடுங்கிவிட்டீர்கள்" என்று கூறினார். கன்பூசியசு அவர்களைப் பார்த்து,

"நான் உலுக்கப்பட்டேனா? நடுங்கிவிட்டேனா? இந்த நல்ல மனிதனின் இறப்பு என்னை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது. இவருக்கு நான் உள்ளம் உடைந்து போகவில்லையெனில், சிறிதும் உணர்ச்சி வசப்படவில்லையெனில், வேறு யாருக்காக அத்தகைய நிலையைப் பெறப்போகிறேன்?"

என்று பேசினார்.[70] துக்கத்தில் இருந்த மக்களுடன் சேர்ந்து கன்பூசியசு சாப்பிடவில்லை. அவர் அழுத அந்த நாளில் பாடவில்லை (மற்ற நாள்களில் பாடுபவர்). சமய வழிபாட்டுக்கு முன்பும், போர் புரிவதற்கு முன்பும், பிணிக் காலத்தும் சடங்குமுறைக் குளியலை மேற்கொள்ள வேண்டும் என்பதில் கன்பூசியசு அக்கறை காட்டியுள்ளார்.

தன் மூதாதையர்க்குக் கன்பூசியசு பலிப்பொருளைப் படைத்த பொழுது, அவர்கள் உடலுடன் வருகை தந்திருப்பதாகவே உணர்ந்தார். மற்ற தெய்வங்களுக்குப் பலிப் பொருள்களைப் படையல் செய்த பொழுதும் அத்தெய்வங்களே உருவத்துடன் வந்திருப்பதாக உணர்ந்தார். அவ்வாறு அவர்கள் உருவத்துடன் வருகை தந்து அவர் பலியை ஏற்கவில்லையெனில், அவர் பலியிடவில்லை என்றே ஆகிவிடும் என்று எண்ணியுள்ளார்.

பழைய சீனர்கள் பல நம்பிக்கைகளைக் கொண்டவர்கள். ஒவ்வொரு இடத்திலும் ஒரு கடவுள் இருப்பதாக எண்ணினர். அடுக்களைக் கடவுள் (Kitchen God), வீட்டின் தென்மேற்கு மூலைக்குரிய தெய்வம், குளிர்காலத் தெய்வம் என்று பல கடவுளுக்கும் ஆடு முதலியவற்றைப் பலியிட்டுப் பரவும் பழக்கத்தினர். அவர் சீடர் சேகுங் (Tsekung) குளிர்ப் பருவத்தில் ஆட்டினைப் பலி கொடுக்கும் சடங்கினை ஒழித்துவிட வேண்டும் என்று ஆசானிடம் அறிவித்தார். அதற்கு, ‘நீ ஆட்டினை விரும்புகிறாய்; நானோ சடங்கினை விரும்புகிறேன்” என்று கன்பூசியசு கூறினார். மேலும், “விண்ணகத்திலும் மண்ணகத்திலும் உள்ள ஆவிகளை மதிப்பீராக! ஆனாலும், அவற்றை நெருங்கிவிடாதீர்” என்றும் போதித்தார்.

இசையினைச் சீன ஞானி பெரிதும் விரும்பினார். இசை நளினம் மிக்கது என்று நவின்றார். மூன்று மாதங்களாகப் புலாற் சுவையினை மறந்துவிட்ட அந்த ஞானி, இசை மிகமிக அழகு வாய்ந்தது என்று ஹிசியா (Hsiao)வின் இசையினைக் கேட்டு, உணர்ந்து, சுவைத்து, மகிழ்ந்து பாராட்டினார். கன்பூசியசு பாடற்பிரியர். அவர்தானே தனியாகவும் பாடி மகிழும் இயல்பினர். இசை ஞானம் உடைய மற்றவருடனும் சேர்ந்து

குழுப்பாடலாக (Chorus) இசை பாடி மகிழ்ந்தவர். "பாடலோடு விழித்தெழுக. லீயில் (-ஒழுக்கத்தில்) நிலை பெறுவீர். இசையில் உங்கள் கல்வி முழுமை பெறட்டும்" என்று இசைத்தார். இசை வகைகளைப் பற்றியும் அவர் ஆராய்ந்துள்ளார்.

ஆடை பற்றிய விடயத்திலும் அவருக்குத் தனிப்பட்ட கொள்கை உண்டு. தன் ஆடையின் கழுத்துப்பட்டை அழுத்தமான நீலமாகவோ சிவப்பாகவோ இருப்பதை அவர் விரும்பவில்லை; அதனைப் பயன்படுத்தவும் இல்லை. சிவப்பு அல்லது ஊதா நிறத்துப் பைஜாமாவை உடுத்த மாட்டார். தன் உடலைவிட அரைப்பங்கு நீண்ட இரவு அங்கியை எப்பொழுதும்உடுத்தும் இயல்பினர்.

அவர் குறிப்பிட்ட உணவுப் பழக்கங்களை உடையவர். வெள்ளை அரிசியை அவர் விரும்பவில்லை. துண்டு துண்டாக வெட்டப்பட்ட கறியை மிகவும் மெல்லிதாக்குவது அவருக்குப் பிடிக்காது. புலாலாயினும் மீன்கறியாயினும் சுவை குறையின் உண்ணமாட்டார். உணவு அதற்கேற்ற சாறுடன் பரிமாறப்படவில்லை யெனில், அதனையும் சாப்பிடமாட்டார். போதிய அளவு மதுபானம் (wine) செய்வார். இஞ்சி (Ginger) சேராத உணவினையும் அவர் தொடுவதில்லை. அளவுக்கு மேலாகச் சாப்பிடும் பழக்கம் அவரிடம் இல்லை. இடி இடிக்கும் பொழுதும், புயல் வீசும் பொழுதும் அவர் முகம் நிறம் மாறிவிடுதல் உண்டு.

எனவே, அனலெக்ட்சு (Analects) சுய சரிதைக் குறிப்புக்களும் வாழ்வியல் நிகழ்ச்சிகளும் பொதிந்துள்ள இலக்கியமாகவும் திகழ்கிறது எனலாம். இதனுள், இடையிடையே அவருடைய போதனைகளும் சாதனைகளும் போதிய அளவில் சுவையுணர்வுடன் சொல்லப் பெற்றுள்ளன என்பதும் சுட்டுதற்குரியது.

20. கன்பூசியசின் கூரறிவும் மதிநலமும்

அறிவுக் கூர்மையும் மதிநலமும் வாய்ந்தவர் கன்பூசியசு. பட்டறிவும் நகைச்சுவையும் அவர் உரையாடலில் தவழ்தல் இயல்பு. ஒருசில சான்றுகளை அனலெக்ட்சிலிருந்து காண்போம்.[71]

1. "உனக்கு என்ன தெரியும் என்பதை அறிதலும் என்ன தெரியாது என்பதை அறிதலும் தான் அறிந்தவனுக்குரிய அடையாளம் ஆகும்".
2. "நான் என்ன செய்யவேண்டும்? என்ன செய்ய வேண்டும்? என்று ஒருவன் தனக்குள் கேட்டுக் கொள்ளவில்லை என்றால், அத்தகைய மனிதனுடன்என்ன செய்யவேண்டும் என்று உண்மையில் எனக்குத் தெரியவில்லை".
3. "ஒரு பிழையினைச் செய்தவன், அதனைத் திருத்திக் கொள்ளாவிட்டால் மேலும் ஒரு பிழையினைச் செய்தவன் ஆகிறான்".
4. "அரசனாக இருத்தல் கடினம் எனச் சொல்லப்படுகிறது. அதைவிடக் கடினம் அமைச்சராக இருத்தல்."
5. "கோமகன் வென் சி (Wen chi), 'நான் ஒரு செயலைச் செய்வதற்கு முன்னால் மும்முறை சிந்திக்கிறேன்' என்று கன்பூசியசிடம் கூறினார். அதற்குக் கன்பூசியசு, 'இருமுறை எண்ணிப் பார்த்தலே போதுமானது' என்றார்".
6. 'இந்நாளில் புனிதர் (Saint) ஒருவரைக் காணவேண்டு மென்று எதிர்பார்க்கவில்லை. ஒரு சான்றோனைக் (Gentleman) கண்டாலே முழு நிறைவு பெறுகிறேன்'.

முரண்பாடுகளை விளக்குவதில் கன்பூசியசு தலைசிறந்தவர். ஒரு சில சான்றுகளைக் காண்போம்.

1. அழகிய ஆன்மாவையுடைய ஒருவன் எப்பொழுதும் அழகிய பொருள்களைப் பற்றிப் பேசுவதற்குச் சித்தமாகஇருக்கிறான். ஆனால், அழகிய பொருள்களைப் பற்றிப் பேசும் ஒருவன் அழகிய ஆன்மாவை உடையவனாக இருக்க வேண்டிய தேவை இல்லை.

2. உண்மையிலேயே பெரிய மனிதன் எப்பொழுதும் துணிவு உடையவனாகவே காணப்படுவான். ஆனால், துணிவு உடைய மனிதன் எப்பொழுதும் உண்மையுடைய மனிதனாகக் காணப்படுவது இல்லை.

3. வெட்கமின்றித் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளுபவன், தற்புகழ்ச்சிக்கு ஏற்றாற்போல் வாழ்தல் அரிது என்பதைக் காண்கிறான்.

4. உண்மையினை அறிந்தவனைவிட உண்மையினை விரும்புபவன் சிறந்தவன். உண்மையின்கண் மகிழ்ச்சியைக் காண்பவன், உண்மையினை விரும்புபவனைவிட மேலானவன்.

5. "பேரரசனிடம் பேசுவதற்கு மூன்று செய்திகளை ஒருவன் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்:

அ. உன்னைக் கேட்பதற்கு முன்பே பேசுதல் திடீர் உணர்ச்சியின் எழுச்சிக்கு (Impulsiveness) ஆட்படுத்திவிடும்.

ஆ. உன்னைக் கேட்டபின் பேசவில்லையெனில், மரியாதைக் குறைந்தவன், நேர்மையற்றவன் (Lack of Candour)ஆவாய்,

இ. பேரரசரின் குறிப்பறியாமல் பேசுதல் உன் குருட்டுத் தன்மையினைக் காட்டிவிடும்."

மேலும் கன்பூசியசு பேச்சு எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றிக் கூறியுள்ள விழுமிய கருத்துக்களை நோக்குவோம்.[72]

"உரையாடுதற்குத் தகுந்தவன் என்று காணப்படும் ஒருவனிடம் உரையாடாமல் விடுவாயேல், உனக்கு உரிய ஒருவனை இழந்துவிட்டாய்.

உரையாடுதற்குத் தகுதியற்றவன் என்று காணப்படும் ஒருவனிடம் உரையாடினால், உன் சொற்களை நீ வீணடித்துவிட்டாய்.

அறிவுடையவன் என்பவன் தனக்குரிய மனிதனையும் இழக்க மாட்டான்; தன் சொற்களையும் இழக்கமாட்டான்."

சான்றோன் ஒருவனின் செயற்பாடு எவ்வாறிருத்தல் வேண்டும் என்பதையும் கன்பூசியசு சொல்லியிருக்கிறார்:

"ஒருவன் வாய்ச்சொல்லின் அடிப்படையில் அவனைப் புகழ்தலையோ, பணியமர்த்தலையோ சான்றோன் செய்யமாட்டான்.

தான் வெறுக்கும் ஒருவன் பேசும் உண்மையினையும் சான்றோன் மறுக்க மாட்டான்."

சேகுங் (Tsekung) தன் பேராசான் கன்பூசியசைப் பார்த்து,

"ஒர் ஊரின் மக்கள் அனைவரும் ஒருவனை விரும்புகிறார்கள் என்பது குறித்துத் தாங்கள் என்ன சொல்வீர்கள்?"

என்று வினவினார். கன்பூசியசு,

"அது போதாது"

என்றார். மீண்டும் சீடர்,

> "ஓர் ஊரின் மக்கள் அனைவரும் ஒருவனை வெறுக்கிறார்கள் என்பதுகுறித்துத் தாங்கள் என்ன சொல்வீர்கள்?"

என்று கேட்டார். கன்பூசியசு,

> "அது போதாது"

என்று விடை கூறினார். மேலும்,

> "ஓர் ஊரில் வாழும் மக்களில் நல்லவர்கள் அவனை விரும்புதல் வேண்டும். தீயவர்கள் அவனை வெறுக்க வேண்டும் (தீயவர்களால் வெறுக்கப்படுபவன் நல்லவனாகவே இருப்பான் என்பது கருத்து)" என்று விளக்கினார்.

மக்களுக்கு எவ்வாறு துன்பம் உண்டாகிறது என்பது பற்றியும் கன்பூசியசு சிந்தித்துள்ளார். சிறந்த உதாரணங்களுடன் தன் கருத்தினைத் தெளிவாக விளக்கியுள்ளார். இத்திறம் குறித்துச் சற்று உற்று நோக்குவோம்.

> "ஆற்றுநீரிடத்தில் கொண்ட அன்பு காரணமாகப் பொது மனிதன் துன்பப்படுகிறான்.
>
> பேச்சில் கொண்ட விருப்பம் காரணமாகச் சான்றோன் துன்பப்படுகிறான்.
>
> மக்களிடத்தில் வைத்த அன்பு காரணமாகப் பெருமகன் அடிக்கடி துன்பத்தை எதிர்கொள்கிறான்."

இம்மூவகை மாந்தரும் தங்களுக்கு அணியமாகவும் பழக்கமாகவும் உள்ளவற்றில் நெருக்கம் வைத்துக் கொள்ளும் பொழுது மூழ்கிவிடுகின்றனர்.

ஆற்றுநீர் மக்களுக்கு மிகவும் நெருக்கமாக, அன்றாட வாழ்வுடன் தொடர்பு கொண்டது. எளிதில் நெருங்கக் கூடியதாக இருந்தும், மிகவும் நெருங்கிவிட்டால்

ஆபத்தானதாகவும் இருப்பதால், மக்களை எளிதில் மூழ்கடித்து விடுகிறது.

பேச்சு ஒருவனை எளிதில் துன்பத்தில் உய்த்துவிடும். பேசுவதில் கவனம் வேண்டும். பேசும் பொழுது அளவுக்குமேல் சொற்களைப் பயன்படுத்துகிறான். வாயிலிருந்து வார்த்தைகளை வெளியே கொட்டிவிடுதல் எளிது. ஆனால், அவற்றைத் திரும்பவும் அள்ளியெடுத்தல் என்பது அரிது.

அற்பத்தனத்தாலும் திறந்த மனம் இன்மையாலும் மக்கள் துன்பத்துக்கு ஆளாகின்றனர். அவர்களை நீ மதிக்கலாம்; அவர்களை நீ அவமதித்தலோ புண்படுத்தலோ கூடாது. எனவே, சான்றோன் பொதுமக்களிடம் காட்டும் அன்பில் மிக்க விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

இத்தகைய வாழ்வியல் உண்மைகள் எக்காலத்துக்கும் எந்நாட்டவர்க்கும் ஏற்புடையவையாகப் பயன் விளைவிப்பன எனக் கருதலாம். அனலெக்ட்சில் காணப்படும் கன்பூசியசின் கருத்துக்களைத் தொடர்ந்து காண்போம்.[73].

1. "ஆடம்பரமான வாழ்க்கையினை நடத்தும் மக்கள் பகட்டுக்கும் இறுமாப்புக்கும் உரியவர். எளிமையான வாழ்க்கையினை நடத்தும் மக்கள் கொச்சை நிலைக்கு உரியவர். பகட்டான மக்களைவிட கொச்சைநிலை மக்கள் பெரிதும் விரும்பத்தக்கவர்கள்".
2. "செல்வராக இருத்தல் எளியது; ஆனால், அவர்கள் இறுமாப்புடையவராக இருத்தல் கூடாது. ஏழையராக இருத்தல் கடினமானது; ஆனால் அவர்கள் முணுமுணுப்பவராக இருத்தல் கூடாது".
3. "ஒழுங்கான ஒரு நாட்டில் ஒருவர் ஏழையாகவும் பாமரனாகவும் இருத்தல் என்பது வெட்கக்கேடு. ஒழுங்கற்ற ஒரு நாட்டில் செல்வராக இருத்தலும் அலுவலராக இருத்தலும் நாணத்தக்கது."

4. "ஒரு நாட்டின் அமைச்சராகப் பணிபுரியும் ஓர் அற்ப மனிதனைப் பற்றி நீ கற்பனை செய்தது உண்டா? அந்தப் பதவியை அவன் அடைவதற்கு முன்னால், அதனைப் பெறுவதற்குப் பேரார்வம் கொள்ளுகிறான். அதனை அடைந்ததன் பிறகு, அதனை இழக்க நேரிடுமோ என்பதில் பெருங்கவலை கொள்ளுகிறான். இழப்பது பற்றிக் கவலைப்படத் தொடங்கினால், அவனால் செய்ய முடியாதது எதுவுமே இல்லை."

இந்தப் பொன்மொழி பதவியில் இருப்போரை நன்னெறிப் படுத்துவது. மக்களுக்கு நன்மை செய்வதற்குத்தான் அமைச்சர் பதவி. அப்பதவியில் உள்ள பொழுதே அரும் பணிகளைச் செய்து முடித்தல் வேண்டும். எந்த நேரத்தில் பதவி பறிபோகுமோ என்ற அச்ச உணர்ச்சி அமைச்சருக்கும் மற்ற பதவியாளர்க்கும் வேண்டும். அந்த உணர்வில் அவரவர் தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்வார்கள் என்பது கன்பூசியசின் கருத்தாகும்.

அவர் வழங்கியுள்ள பொன்மொழிகள் சமுதாயத்தில் வாழும் பலநிலை மாந்தரின் செம்மைக்கும் சிறப்புக்கும் நெறிப்படுத்த வல்ல ஆற்றல் கொண்டவை. மேலும் சில நல்லுரைகளைக் காண்போம்.

1. மற்றவர்கள் உன் திறமையினை அறியாமல் இருக்கிறார்களே என்பது பற்றிக் கவலைப்படாதே. அதனை நீ பெறாமல் இருப்பது பற்றிக் கவலைப்படுக.

2. சான்றோன் தன்னைக் குறை கூறிக் கொள்ளு கின்றான். பாமரன் பிறரைக் குறை கூறுகின்றான்.

3. தனக்குத்தானே கடுமையாகவும் மற்றவரிடத்தில் பெருந்தன்மையாகவும் இருந்தான் என்றால், அவன் பிறருடைய மனக்கசப்பினையும் வெறுப்பையும் ஒருபொழுதும் அடையமாட்டான்.

4. ஒரு மனிதன் நெடுநாள் சிந்தித்து முன் கூட்டியே திட்டமிடவில்லை என்றால், அவன் தன் கதவின் புறத்திலேயே தொந்தரவைச் சந்திப்பான்.

5. எவன் நல்லவன், எவன் கெட்டவன் என்பது பற்றிய நம் கருத்தினை வழவழ, கொழ கொழப் பேச்சு குழப்பிவிடுகிறது.

6. சிறு இழப்புகளையும் அசௌகரியங்களையும் தாங்கிக் கொள்ள முடியாத ஒருவன் பெருந்திட்டத்தினைக் கெடுத்து விடுகிறான்.

7. உயர்சாதி மனிதன் ஒருவனைப் பற்றிப் பேசும் பொழுது, அவனுடைய வலிமையினை நீ வியந்து பாராட்டுதல் இல்லை. ஆனால் அவன் குணத்தையும் சுபாவத்தையும் பேசுகிறாய்.

உலகியலில் பலவகைப்பட்ட மக்களைப் பார்க்கிறோம். அவர்களின் தன்மைகளையும் பண்புகளையும் உன்னிப்பாக உற்றுநோக்கி, வரையறுத்த கருத்துக்களைச் சமுதாய மேம்பாட்டிற்காக வகுத்துக் கூறிய மாட்சிக்கு உரியவராகவே சீன ஞானி கன்பூசியசு தோன்றுகிறார்.

சீன மொழியில் படஎழுத்துக்கள் அல்லது வடிவ எழுத்துக்களே உண்டு. ஒவ்வொரு படமும் அல்லது வடிவமும் ஒவ்வொரு சொல்லினைக் குறிக்கும். ஒவ்வொரு சொல்லுக்குள்ளும் ஒரு தொடரே அடங்கியிருக்கும். எனவே, கன்பூசியசு மூன்று, நான்கு சொற்களில் அறிவுரைகளையும் நெறிகளையும் வகுத்துக் கூறினார் எனச் சொல்லும் பொழுது, அவையாவும் செறிவுடைய மொழியில் புலப்படுத்தப்பட்டவை என்று அறிதல் வேண்டும். சீனவியல் அறிஞர்கள் அவருடைய சொற்களை ஆங்கிலத்தில் சில பல வாக்கியங்களாகவே மொழி பெயர்த்து அவருடைய சிந்தனைகளை வழங்கியுள்ளனர் என்பது நினைவிற் பதித்துக் கொள்ளுதற்குரிய செய்தியாகும்.

ஒரு சமயம் ஒருவர் கன்பூசியசை அணுகி,

"ஐயா! தீமை செய்தவர்களுக்கு அன்பு செலுத்துதல் குறித்துத் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

என்று கேட்டார். அவருக்கு,

"தீமை செய்தவருக்கு அன்பினைச் செலுத்தினால், அன்பு செலுத்தியவர்க்கு நீ எதனைத் திருப்பித் தருவாய்? அன்பு செலுத்தியவர்க்கு நீயும் அன்பினைச் செலுத்துவாய். தீமை செய்தவர்க்கு நீதியைச் செலுத்துவாய்"

என்று கன்பூசியசு விடை கூறினார். திருவள்ளுவர்,

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?"

என்று வினவினார். உயர்ந்த பண்பாளர்கள் தீமை செய்தவர்க்கும் கூட நன்மையே செய்யவேண்டும் என்று எதிர்பார்த்தார். இன்னாமை செய்தவர்க்கு இன்னாமையினைத் திருப்பிச் செய்வதுதான் பொதுவான மனிதனின் போக்கு. ஆனால், அறநூல் பேராசான், "அப்படி இருக்காதே, உனக்கு இன்னாமை செய்தவனுக்கும் இனியனவற்றை நீ செய்வாய். அவ்வாறு செய்யவில்லை என்றால், உன்னுடைய சான்றாண்மை என்னும் பண்பினால், என்ன பயன்?" என்று கேட்கிறார். இவ்வாறே ஏசுபிரானும், 'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுவாய்' என்று போதித்தார். புத்தர்பிரானின் போதனையும் திருவள்ளுவர் ஏசுபிரான் போதனைகளை ஒத்ததே. தீயவற்றை மறந்து இனியனவற்றைச் செய்வதன் வாயிலாகத் தீயோர்கள் உள்ளம் திருந்துவார்கள் என்பதே இவர்களின் எதிர்பார்ப்பு. ஆனால், கன்பூசியசு மேலே குறிப்பிடப்பட்ட சொல்லாடலில் வேறுபடுகிறார் என்றே தோன்றுகிறது. தீயோர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பது

அவர் கருத்து. யூத நெறியினைப் போதித்த மோசசும் இதே கருத்துடையவர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆனாலும் திருவள்ளுவர், ஏசுபிரான் ஆகியோர் கருத்தினையும் அவரிடம் காண்கிறோம்.

கன்பூசியசு தன் நிலைப்பாட்டிற்குக் கூறியுள்ள விளக்கமும் இங்குக் கருதற்பாலது. அதனை இங்கே காண்போம்:

> "நீ நன்மைக்கு நன்மையைத் திருப்பிச் செலுத்தினால், நன்மை செய்வதற்கு மக்களை ஊக்கப்படுத்தியதாக அமையும். நீ தீமைக்குத் தீமையினைத் திருப்பிச் செலுத்தினால், மக்கள் தீமை செய்யக் கூடாது என்பதற்கு ஓர் எச்சரிக்கையாக அமையும்"
>
> "தீமைக்கு அன்பினைத் திருப்பிச் செலுத்துதல் என்பது பெருந்தன்மைப் பண்பின் அடையாளம் ஆகும். ஆனால், அன்புக்குத் தீமையினைப் பரிசளித்தல் என்பது குற்றவாளியின் அடையாளம் ஆகும்."

கன்பூசியசின் சிந்தனையின் ஆற்றலையும் நோக்கத்தின் உயர்வினையும் பாராட்டாமல் இருத்தல் இயலாது. மேலும் அவருடைய சீரிய கருத்தினைத் தொடர்ந்து காண்போம்:

1. "மக்கள் பிறப்பினால் ஒத்தவர்கள். ஆனால், அவர்களுடைய பழக்க வழக்கங்களால் ஒருவருக்கு ஒருவர் வேறுபட்டு வளர்கின்றனர்."

இக்கருத்தினை,

> *"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா*
> *செய்தொழில் வேற்றுமை யான்"* (972)

எனவரும் திருக்குறள் கருத்துடன் இயைபுறுத்தி எண்ணிப் பார்த்து மகிழலாம்.

2. "பிறப்பு ஒக்குமேனும் மிகமிக உயர்ந்தவர்களும், மிகமிகத் தாழ்ந்தவர்களும் தங்கள் போக்கினை மாற்றிக் கொள்ள மாட்டார்கள்"

இஃது ஓர் அரிய சமுதாயச் சிந்தனை யாகும். எந்த உபாயத்தினாலும் ஆலமரத்தினைப் பலாமரம் ஆக்க முடியாது; நாயின் வாலினை நிமிர்க்கவும் முடியாது; கிளி பேசுகிறது என்பதற்காகக் காக்கையினைப் பேசவைக்க முடியாது. அதுபோல மூர்க்கரைச் சீர்ப்படுத்த முடியாது என்ற ஔவைப் பிராட்டியின் மூதுரையினை இங்கு ஒப்பிட்டுப் பார்த்தல் உகந்தது. திருவள்ளுவரும், 'தம் உண்மை அறிவே மிகும்' எனக் கூறினார்.

3. "கோமகன் சோ (Duke Chou)வைப் போலும் ஒருவன் அழகிய மதிநுட்பமும் திறமும் பெற்றிருந்தாலும், அவன் இறுமாப்பும் ஆணவமும் உடையவனாயின், நோக்குதற்குரிய தகுதியுடையவன் அல்லன்".

எனவே, செருக்கில்லாத சால்புதான் மனிதனை மேம்படுத்தும் என்பது தெளிவு. இக்கருத்துடன்,

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்" (997)

என்ற திருக்குறள் இயைபுபடுத்தி எண்ணுதற்குரியது.

கன்பூசியசு நவின்றுள்ள நல்லுரைகள் சிலவற்றை மேலும் காண்போம்.

1. உயர்மனிதன் (Super man) தன் நடத்தையில் கவனமாக இல்லை என்றால், அவன் கண்ணியமாக இருத்தலும் இயலாது.

2. கல்வி என்பது ஒருவனைக் குறுகிய மனப்பான்மை யினின்றும் தடுத்து மீட்கிறது.

3. விசுவாசமாகவும், நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் இருப்பதுதான் வாழ்க்கையின் முதன்மைக் குறிக்கோள் ஆகும்.

4. உன்னைப் போல் நல்லவராக இல்லாதவரை நண்பர்களாகக் கொள்ளுதல் வேண்டாம்.

5. நீ தவறுகள் செய்திருந்தால், அவற்றைத் திருத்திச் செப்பம் செய்து கொள்ளுவதற்கு அஞ்சுதல் வேண்டாம்.

6. நல்ல மனிதன் ஒருவனை நீ கண்டால், அவனை முன் உதாரணமாகப் பின்பற்ற முயலுக.

7. தீய மனிதன் ஒருவனை நீ கண்டால், அவன் குற்றங்களுக்காக நீயே சோதனை செய்வாய்.

8. பிறர் குற்றங்களைப் பற்றி விமர்சிக்க வேண்டாம். உன் குற்றங்களைப் பற்றி விமர்சிப்பாய்.

கன்பூசியசு திருவள்ளுவரைப் போல ஒரு தலைப்பிட்டுக் கொண்டு கோவைபடக் கருத்துக்களைச் சொல்லவில்லை. என்றாலும், அவ்வப்பொழுது அவர் உள்ளத்தில் தோன்றும் உயரிய எண்ணங்களை வெளிப்படையாகவே கூறியுள்ளார். உயர்மனிதன் என்ற பொருளில் பல இடங்களில் பலவகைக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவற்றைத் தொகுத்து நோக்கும் ஆய்வறிஞன், உயர்மனிதன் குறித்துக் கன்பூசியசு உருவாக்கிய ஒரு வரையறையினைத் தெளிவாகக் காணமுடியும்.

மேலே எடுத்துக்காட்டப் பெற்ற பொன்மொழிகளில் கல்வி, நட்பு, தற்சோதனை முதலிய மேலான கருத்துக்கள் பொதிந்துள்ளமை புலனாகும். தொடர்ந்து அந்த ஞானியின் சிந்தனைகளை நோக்குவோம்:

சேகுங் (Tsekung) என்ற அபிமான சீடர் தன் பேராசான் கன்பூசியசைப் பார்த்து,

"ஐயா! ஏழையாய் இருக்கிற பொழுது பகட்டாக இல்லாத ஒருவன், செல்வனாகிற பொழுது இறுமாப்பாக இருப்பது இல்லை என்பது பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

என்று கேட்டார். அவருக்கு ஆசிரியர்,

"அது நல்லதுதான். அவன் ஏழையாய் இருந்த பொழுது மகிழ்ச்சியுடையவனாகவும், செல்வனாக இருந்த பொழுது தன்னொழுங்கும் தன்னடக்கமும் உடையவனாகவும் இருந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும்"

என்று விடை கூறினார். வறுமை, வளம் ஆகிய இரண்டினையும் ஒப்ப நோக்கம் சமநிலை மாந்தர்க்கு வேண்டும் என்பதும் இவ்விரு நிலைகளிலும் தன்னை இழந்துவிடாமை மிகவும் இன்றியமையாதது என்பதும் இவர் உரையினால் புலனாகும்.

மேலும் கன்பூசியசு ஒருமுறை, "ஒரு படையின் தளபதியை உன்னால் சொல்ல முடியும். ஆனால் பாமரனின் உள்ளத்தில் உறையும் ஆசையினையும் விருப்பத்தையும் உன்னால் சொல்ல முடியாது" என்று கூறினார். சாதாரண மனிதனுக்குள் பொதிந்திருக்கும் விருப்பத்தையும் ஆசையினையும் யாராலும் அழிக்க முடியாது என்பது கருத்து.

21. மனித நேயமும் உண்மை மனிதப்பண்பும்

மனித நேயம் குறித்தும் உண்மையான மனிதத் தன்மைகள் குறித்தும் கன்பூசியசு கூறியுள்ள ஆழ்ந்த சிந்தனைகள் சிலவற்றை இங்குக் காண்போம்.[74]

1. மனிதன்தான் உண்மையினைப் பெருமையுறச் செய்கிறானே தவிர, உண்மை மனிதனைப் பெரியோன் ஆக்கவில்லை.

2. மனித இயற்கையினை விட்டு உண்மை பிரிந்து போவது இல்லை.

3. உண்மை என்று மதிக்கப்படுவது மனித இயல்பினின்றும் பிரிந்து செல்லும் எனின், அஃது உண்மை என்று எண்ணப்படாதது.

ஒருமுறை செலு (Tselu) என்ற சீடர் விண்ணகத்திலும் மண்ணகத்திலும் விரவியுள்ள ஆவிகளின் வழிபாடு பற்றிப் பேராசான் கன்பூசியசிடம் கேட்டார். அவருக்குக் கன்பூசியசு,

> "மனிதர்களுக்குப் பணி செய்வது எப்படி? என்பது பற்றி நாம் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. இந்நிலையில் ஆவிகளுக்குப் பணிவிடை செய்வது எப்படி? என்பதுபற்றி எப்படி அறிந்து கொள்ள முடியும்?"

என்று வினா வாசகத்தில் விடை கூறினார். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற கருத்து சீன ஞானிக்கும் உரியதுதான்! தொல்காப்பியர்,

> "வினாவும் செப்பே வினாஎதிர் வரினே"
>
> (தொல்.சொல்.14)

என்று கூறியுள்ள விளக்கமும் நம் நினைவிற்கு இங்கு வருகிறது.

மீண்டும் அந்தச் சீடர், 'இறப்பு என்பது என்ன?' என்று வினவினார். கன்பூசியசு, 'வாழ்வு என்பது என்ன?' என்பது பற்றி நாம் அறியவில்லை. இந்நிலையில், 'இறப்பு என்பது என்ன? என்பது பற்றி என்ன அறியமுடியும்?' என்று எதிர்வினா விடுத்தார். அதுவே விடையாகும். நாள்தோறும் கண்ணாரப் பார்க்கக் கூடியதை (empirical) நாம் சரியாக அறியாத பொழுது, கண்ணுக்குப் புலப்படாத ஒன்றைப் பற்றி அறிந்து கொள்ளுவதில் ஆர்வம் காட்ட வேண்டாம் என்பதுதான் கருத்து.

குதிரைகள் கட்டும் கொட்டில் எரிந்துவிட்டது. அதனைக் கேள்வியுற்ற கன்பூசியசு, 'எந்த மனிதனுக்காவது தீப்புண் உண்டா?' என்றுதான் கேட்டார். குதிரைகள் பற்றி ஒன்றும் கேட்கவில்லை. எனவே, அவர் உரை மனித முக்கியத்துவம் (Human Significance) வாய்ந்தது என்பது புலனாகும். குதிரை நெருப்பில் இறந்தால் வேறு வாங்கிக் கொள்ளலாம். மனிதன் அப்படி அல்லன்!

மனிதனின் அளவுகோல் மனிதனே (The Measure of man is man) என்பது கன்பூசியசின் பொன்மொழி. இம்மொழி கிரேக்கஞானி புரோடோகோரசு (Protogoras, கி.மு.532) என்பார்,

'Man is the measure of all things'

என்று இயம்பியிருத்தலுடன் இங்கு எண்ணுதற்குரியது. அப்பர் அடிகளும், 'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்' (IV 81.5) என்று இயம்பியுள்ள அரிய கருத்தும் இங்கு இயைபுபடுத்தி எண்ணத்தக்கது.

"உண்மையான மனிதப் பருவத்திற்குரிய (Manhood) கொள்கைகளுடன் வாழவிரும்புபவர் உயர்மனிதன் ஆவர். இவர் புறத்தூண்டுதல்களால் பாதிப்பு அடைவதில்லை. உண்மையான மனிதப் பருவத்திற்குரிய கொள்கைகளுக்குப் புறம்பானவற்றை இவர் முற்றிலும் வெறுப்பவர். இங்ஙனம் வெறுப்பதால் தண்டனைகளுக்குரிய அச்சங்களைப் பற்றியும் கவலை கொள்ளாதவர். எல்லா மனிதரும் சரிநிகர் சமானரே.

எனவே, உயர்மனிதர் (superior man) தன்னை அளவுகோலாகக் கொண்டு நடத்தை பற்றிய எல்லாக் கேள்விகளையும் விவாதிக்கிறவராக விளங்குகிறார். பின்னரே பொதுமக்கள் பின்பற்றுவதற்குரிய சட்டங்களையும் விதிகளையும் முன் வைக்கிறார்."

இந்தப் பகுதியில் உயர்மனிதன் கோமகன் (Duke) அல்லது அரசனைக் (King) குறிப்பதாகக் கொள்ளுதல் வேண்டும்.

மேலும், உண்மையான மனிதப் பருவம், மனித இயல்பு (Manhood) பற்றிக் கன்பூசியசு கூறியுள்ள கருத்துக்கள் சிலவற்றைக் காண்போம்.

1. "உண்மையான மனிதப்பருவம், மனித இயல்பு என்பவற்றுக்கு ஒருபெரும் திறமையும் ஆற்றலும் தேவைப்படுகிறது. அதனை அடைவதற்குரிய வழி கடினமானது. உன் கைகளால் அதனைத் தூக்கிவிட முடியாது. காலால் நடந்து அதனை அடைய முடியாது. அதனைப் பேரளவு நெருங்குகிறவர் மற்றவர்களைப் பார்க்கினும் உண்மையான மனிதர் (True man) என்றே அழைக்கப்படுவார். இந்த வழியைத் தன் முயற்சி ஒன்றினால் மட்டுமே அடைவதற்கு முயலுதல் கடினமான செயல் அல்லவா?

   எனவே, சான்றோர் (Gentleman) நேர்மை, ஒழுங்கு என்ற பூரணமான அளவுகோலினால் மனிதர்களை மதிப்பிடுகிறார் என்னும் பொழுது, உண்மை மனிதனாக இருப்பது கடினமாகவே உள்ளது. ஆனால், மனிதரை மனிதத் தரத்தினால் அளக்கிற பொழுது சிறந்த மக்கள் பின்பற்றுவதற்குரிய தரத்தினைப் பெறுதல் முடியும்".

மனிதர்களை மனிதத் தரத்தினால் அளத்தல் என்பது சராசரி நிலை. உயர்நிலையில் உயரிய பண்புகளைக் கொண்டு அளந்து காணும் பொழுது மேம்பட்ட உயர்மனிதர் (Superman) இன்னார் என்பதைக் காணமுடிகிறது.

2. "ஒவ்வொரு மனிதரும் உண்மை மனிதப் பண்புகட்குரிய கொள்கையினைப் பின்பற்றி நடக்கும் பொழுது ஒருவனின் நெஞ்சம் இயல்பாகவும் இன்பமாகவும் இருப்பதை உணர்கின்றனர். ஒத்த உணர்வுடைய அத்துணை பேரும் சரிநிகர் சமானராகவே எண்ணப்படுவார்."

இதுவரையும் மனிதனுக்கு அளவுகோல் மனிதனே எனக் கூறி வந்த கன்பூசியசு, 'உண்மையான மனிதன் யார்' என்று அவர் சீடர் சேகுங் (Tsekung) கேட்ட வினாவிற்கு விளக்கமாக விடை கூறினார். அதனைக் காண்போம்:

"மனித இனத்துக்கு நன்மை செய்கிற ஒருவன், பாமரர்களுக்கும் உதவு புரிந்தால் அவரை உண்மையான மனிதன் (True man) என்று கூறலாமா? என்பது உன்னுடைய கேள்வி.

அத்தகைய மனிதன் உண்மையான மனிதன் மட்டும் அல்லன்; அவன் ஒரு ஞானி (sage). பேரரசர்கள் ஆகிய யாவோ (Yao), ஹ்சுன் (Hsun) என்போரும் அத்தகைய தகுதிக்குச் சற்றுக் குறைந்தவர்களே.

உண்மையான மனிதர் தன் நடத்தையினை நிலைநாட்டுவதுடன் மற்றவர் நடத்தையினையும் நிலைநாட்ட முயல்கிறார். தான் (-முயற்சிகளில்) வெற்றிபெற விரும்புவதுடன் மற்றவரும் வெற்றி பெறுவற்கு உதவி செய்ய முயல்கிறார்.

உண்மையான மனிதப் பருவம், இயல்பு என்பது சேய்மையில் இல்லை; அஃது ஒருவருக்குள் பொதிந்து கிடக்கிறது."

மேலும் சுங் குங் (Chung Kung) என்னும் சீடர் அதே பொருள் (True manhood) பற்றி வேறொரு வேளையில் தன் பேராசானிடம் கேட்டார். அவருக்குப் பேராசான் கன்பூசியசு வழங்கிய விளக்கம் வருமாறு:-

"உண்மை மனிதர் வெளிநாட்டில் இருக்கும் பொழுது, சிறப்புமிக்க மாந்தரை வரவேற்றுக் கொண்டிருப்பதாக உணர்கிறார்.

மக்களை ஆட்சி செய்யும் பொழுது, கடவுளை வழிபடுவது போன்று உணர்கிறார்.

தனக்குப் பிறர் என்ன செய்யக் கூடாது என்று விரும்புகிறாரோ அதனைத் தான் பிறருக்குச் செய்வதில்லை.

எனவே, நாட்டிலும் வீட்டிலும் மக்கள் மனநிறைவு பெறுகிறார்கள்".

பொன்விதி அல்லது பொற் சட்டம் (The Golden Rule) என்பது,

"ஒருவன் தனக்குப் பிறர் எதைச் செய்யவேண்டாம் என்று விரும்பினானோ அதனைத்தான் பிறருக்குச் செய்யக்கூடாது"

என்று அவரால் வரையறுக்கப்பட்டது. இந்தப் பொன்விதியைப் பல இடங்களில் அவரும் அவரது சீடர்களும் எடுத்துரைக்கக் காணலாம்.

ஒவ்வொரு நாட்டிலும் தோன்றிய ஞானிகள் ஒவ்வொரு பொற்பாதை அல்லது பொன்னெறியைப் போதித்துள்ளனர். கன்பூசியசின் சம காலத்தில் இந்திய நாட்டில் தோன்றிய புத்தர் பிரான், தன்னை வருத்திக் கொள்ளுதல் (Self-mortification), புலன் இன்பத்தில் ஆழ்ந்திருத்தல் (Self-indulgence) ஆகிய இரண்டனையும் ஒதுக்கிக் கூறிய நடுப்பாதை அல்லது மாத்தியமிக நெறி (Middle Path) பொற்பாதை என்று போற்றப்பட்டது.

கிரேக்க அறிஞர் அரிசுடாட்டில் தாம் எழுதிய நிகோமேகியன் எதிக்ஸ் (Nichomachian Ethics) என்ற நூலில் வாழ்வில் காணப்படும் இரு கோடிகளுக்கும் (-Maximum and Minimum) நடுவே காணப்படும் நிலையினை (Optimum) பொன்வழி (Golden Mean) என்று கூறினார். எனவே, எதிலும் அளவாக இருத்தலே நன்னெறி எனக் கொண்டார்.

தமிழ் ஞானியாகிய திருவள்ளுவர், 'மிகினும் குறையினும் நோய் செய்யும்' என்று நடுவாம் தன்மையே

நலம் தரும் எனக் கூறிய கருத்தும் மேலே சுட்டப்பெற்ற ஞானிகளின் கருத்துக்களுடன் ஒருங்கு வைத்து எண்ணத்தக்கது. இவ்வொப்புமையினால், 'ஒத்த உள்ளம் கொண்ட உயர் சான்றோர்கள் ஒத்த கருத்தினையே எண்ணுவர்' என்ற கருத்து உறுதி பெறுகிறது. ஒருவரிடமிருந்து ஒருவர் கடன் பெற்றதாக எண்ணுதல் கூடாது.

கன்பூசியசு சமுதாயத்தில் மக்கள் ஒருவருக்கு ஒருவர் ஒத்தும், உதவியும், மதித்தும் வாழ்தல் வேண்டும் என்று கற்பித்தார். இதனைச் சீனமொழியில் ஷு (Shu) என்பர். இதனை ஆங்கிலத்தில் Reciprocity என்று மொழியாக்கம் செய்தனர். தமிழில் கொண்டும் கொடுத்தும் வாழ்தல் என்று ஒருவாறு மொழிபெயர்த்துக் கூறலாம். இதுவும், 'பிறர் உனக்குச் செய்யக் கூடாது என்று விரும்புவதைப் பிறர்க்கு நீ செய்யாதே' என்ற கருத்தின் சாரமாகக் கொள்ளப்படுகிறது. பாரசீக ஞானி சொராஸ்டரும் இப்படி ஒரு கருத்தினைச் சொல்லியுள்ளார். இவரும் கன்பூசியசு வாழ்ந்த கி.மு.6ஆம் நூற்றாண்டில் ஒளி வீசியவரே ஆவர்.

யென் ஹுயெ (Yen Huei) என்னும் சீடரும் உண்மை மனிதன் (Trueman) யார் என்று ஒருமுறை பேராசான் கன்பூசியசிடம் வினவினார். இந்த ஞானி,

> "தான் யார் என்பதை உணர்தல் - தன் சுயத்தினை
> உணர்தல், ஒழுங்கினையும் நீதியையும் நிலைநாட்டுதல்
> - இவற்றைப் புரிபவரே உண்மை மனிதர்"

என்று விளக்கம் தந்தார். எனவே, வெவ்வேறு சூழல்களில் ஒரு பொருள் குறித்து அவர் நல்கிய விளக்கங்களை ஒருங்கு சேர்த்துத்தான் அப்பொருள் பற்றிய அவருடைய கொள்கையினை உருவாக்குதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

மற்றொரு முறை இதே பொருளுக்கு அவர் தந்த விளக்கத்தினைக் காண்போம்:

"அடக்கம் என்பது நீதியொழுங்கிற்கு (-li) மிகவும் நெருக்கமாக உள்ளது. எளிமைப் பண்புதான் உண்மை மனிதத்திற்கு நெருக்கமாக உள்ளது. விசுவாசம் (Loyalty) என்பதுதான் நெஞ்சத்தின் நேர்மைக்கு நெருக்கமாக உள்ளது. நடைமுறை ஒழுக்கத்தில் இப்பண்புகளையெல்லாம் ஒருவன் கவனமாகப் பேணி வளர்ப்பானேல், உண்மை மனிதத்தினின்றும் அவன் வெகுதூரத்தில் இருக்கமாட்டான்.

அடக்கம் அல்லது புனித நிலையில் உள்ளவன் குற்றங்கள் செய்தல் அரிதினும் அரிது. நெஞ்சுக்கு நேர்மையுள்ளவன் பொதுவாக நம்பத்தகுந்தவன்".

இங்ஙனம் ஒவ்வொரு நிலையிலும் அவர் உள்ளத்தில் தோன்றிய கருத்துக்களை ஆங்காங்கே தூவிச் சென்றுள்ளார்.

யாரோ ஒருவர் பேராசானைப் பார்த்து,

"போர்க்குணம், இறுமாப்பு, வெறுப்பு, பேராசை ஆகியவற்றை அறவே ஒதுக்கிவிட்ட ஒருவனை உண்மை மனிதர் (True Man) என்று கூறமுடியுமா?"

என்று வினவினார். அதற்குக் கன்பூசியசு,

"அத்தகைய மனிதர் மிகவும் அரியவராக இருப்பர். ஆனாலும், அவரை உண்மை மனிதர் என்று கூறமுடியுமா? என்று எனக்குத் தோன்றவில்லை"

என்று விடையிறுத்தார். ஒருவரின் ஆடைக் கவர்ச்சி, பதவி அதிகாரம் அவரை உயர்மனிதராக ஆக்கமுடியாது என்று அப்பெரியார் பேசினார்.

"உண்மை மனிதனாக இல்லாத ஒருவன் நெடுங்காலம் வறுமையில் வாழ்ந்திட முடியாது. அவ்வாறே நெடுங்காலம் செழுமையிலும் வாழ்ந்திட

முடியாது. உண்மை மனிதத்திற்குரிய கொள்கைகளுடன் வாழ்வதில் உண்மை மனிதன் மகிழ்ச்சியாகவும் இயல்பாகவும் இருக்கிறான். அவ்வாறிருத்தல் வசதியாக உள்ளதென அறிவுடையோன் நினைக்கிறான்"

என்பதும் சீன ஞானியின் சிந்தனையாகும்.

"மாந்தரை எவ்வாறு நேசிப்பது? எவ்வாறு வெறுப்பது? என்பதை உண்மை மனிதர் அறிந்திருக்கிறார்"

என்பதும் அவர் கருத்தாகும்.

உண்மை மனிதனின் பரிணாம வளர்ச்சியே உயர்மனிதன் (Superior man) என்று கன்பூசியசு இயம்பினார். 'மனிதன் உண்மை மனிதனாக இல்லையெனில், அவன் செய்யும் சடங்குகளால் என்ன பயன்? இசையினால் என்ன பயன்?' என்பதும் அவர் தொடுத்த வினா ஆகும்.

'புத்திசாலிக்கு (-Wiseman) குழப்பங்கள் இல்லை. உண்மை மனிதனுக்குத் (True man) துயரம் இல்லை. வீர மனிதனுக்கு (Brave man) அச்சம் இல்லை' என்பதும் அவர் கொள்கை.

'உண்மை மனிதன் மிகவும் நிதானமாகப் பேசுகிறவன்' என்னும் வரையறை செய்தார் கன்பூசியசு.

22. உயர்மனிதனும் தாழ்மனிதனும்

சமுதாய நிலையில் உயர் நிலையிலும் தாழ் நிலையிலும் காணப்படும் மனிதரின் இயல்புகளையும் சீன ஞானி கூர்ந்து நோக்கியுள்ளார். உயர்மனிதன் யார்? தாழ்மனிதன் யார்? அவர்களை எவ்வாறு அடையாளம் காண்பது? இவ்வாறு எண்ணிப் பார்த்துக் கன்பூசியசு கூறியுள்ள கருத்துக்களில் சிலவற்றைக் காண்போம்.[75]

1. உயர்மனிதன் (Superior man) எது சரி, நியாயமானது என்பதைப் புரிந்து கொள்ளுகிறான். தாழ்மனிதன் (Inferior man) எது எடுபடும், விற்பனையாகும் என்பதைத் தெரிந்து கொள்ளுகிறான்.

2. உயர்மனிதர் தன் ஆன்மாவை நேசிக்கிறார். தாழ்மனிதர் தன் சொத்தினை நேசிக்கிறார்.

3. தாம் செய்த பிழைகளுக்காக எவ்வாறு தண்டிக்கப் பட்டோம் என்பதை உயர்மனிதர் நினைவு கூர்கிறார். தாழ்மனிதர் தான்பெற்ற ஆவணங்களை எப்பொழுதும் நினைத்துப் பார்க்கிறார்.

4. பிறர் கருத்துக்கள் குறித்து உயர்மனிதர் பெருந்தன்மையுடன் இருக்கிறார். ஆனால் அவற்றை முழுமையாக ஏற்பது இல்லை. தாழ்மனிதர் பிறர் கருத்துக்களை முழுமையாக உடன்படுகிறார்; ஆனால் அவற்றைப் பெருந்தன்மையாக ஏற்பது இல்லை.

5. உயர்மனிதர் உறுதி படைத்தவர். ஆனால் பிறருடன் சண்டை போட்டுக் கொள்ளமாட்டார். மற்றவர்களுடன் எளிமையாகக் கலந்து பழகுவர். ஆனால், சிறு குழுக்களை அமைப்பதில்லை.

6. தன்னைத் தானே குற்றம் சாற்றுகிறவர் உயர்மனிதர். பிறரைக் குற்றம் சாற்றுகிறவர் தாழ்மனிதர்.

7. உயர்மனிதருக்குப் பணி செய்தல் எளிது. ஆனால் அவரை மகிழ்வித்தல் அரிது. ஏன் எனில், ஒழுங்கு அல்லது நீதி ஒன்றினால்தான் அவரை மகிழ்விக்கவும் திருப்தி செய்யவும் முடியும்.

8. உயர்மனிதர் தராதரம் அறிந்தும் தகுதி அறிந்தும் மக்களைப் பயன்படுத்துவார். தாழ்மனிதர்க்குப் பணி செய்தல் அரிது. ஆனால் அவருடைய பலகீனத்தைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப

வேண்டியதை வழங்குவதன் மூலம் அவரை எளிதாக மகிழ்விக்கவும் திருப்தி செய்யவும் முடியும்.

9. தாழ்மனிதர் நியாயம் உடையவராகத்தான் இருத்தல் வேண்டும் என்ற கட்டாயம் அல்லது தேவை இல்லை. அவர் தாம் வேலை வாங்கும் மனிதரிடம் பூரணத்துவம் அல்லது முழுமை (Perfection)யினை உரிமையுடன் வேண்டுகிறார்.

10. தன் விருப்பப்படி, செயல்படுகிற அதிகாரங்களை மிகுதியாகத் தந்து உயர்மனிதரை முக்கியமான ஒரு பதவியில் அல்லது பொறுப்பில் அமர்த்தலாம். ஆனால், அவருக்கு நயம்மிக்க சிறு பணியினை வழங்க முடியாது. ஆனால், தாழ்மனிதருக்கு நயம்மிக்க சிறுபணியினைக் கொடுக்கலாம். ஆனால், தன் விருப்பப்படி செயல்படுகிற அதிகாரங்களை மிகுதியாகத் தந்து முக்கியமானஒரு பதவியில் அல்லது பொறுப்பில் அவரை அமர்த்தக் கூடாது.

11. உயர்மனிதர் ஒரே ஒரு குறிப்பிட்ட பதவிக்கு மட்டுமே உரியவரல்லர்.

12. உயர்மனிதர் விரிந்த உள்ளமும் விசாலப் பார்வையும் கொண்டவர். எல்லோரையும் ஒப்ப மதிப்பவர். குறிப்பிட்டோரை மட்டுமே மதிக்கும் குறுகிய உள்ளம் அவருக்கு இல்லை. ஆனால், தாழ்மனிதர் ஒரு குழுவினை மட்டுமே ஆதரிப்பவர். எல்லாரிடமும் விரிந்த மனப்பான்மை கொண்டவர் அல்லர்.

13. உயர்மனிதனுக்கும் துன்பங்கள் உண்டு. ஆனால் அவற்றைப் பொறுத்துக் கொள்ளுவார். தாழ்மனிதருக்குத் துன்பங்கள் வரின் தாங்கிக்

கொள்ளமாட்டார். அவற்றினின்றும் விடுவித்துக் கொள்ளுதற்கு எதையும் செய்யக் கூடியவர்.

14. உயர்மனிதர் ஆன்மீக வாழ்வியலை மேற்கொள்ளுகிறவர். தன் வாழ்க்கை, பிழைப்புப் பற்றிக் கவலைப்பட மாட்டார். அவர் ஒரு பண்ணையினை வளர்ப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அவர் பட்டினி கூட கிடப்பார். அவர் படிப்பு, ஆய்வு என்பவற்றில் ஈடுபடும் பொழுது அதில் செல்வங்களைக் காண்பார்.

15. தன் வறுமையினைக் குறித்து உயர்மனிதர் கவலைப்படுவது இல்லை. ஆனால், ஆன்மீக விடயங்கள் பற்றிக் கவலைப்படுவார்.

16. உயர்மனிதர் எப்பொழுதுமே நேர்மையாளராக இருப்பவர். தன்னளவிலும் பிறரளவிலும் இயல்பான அமைதியுடன் இருப்பவர். ஆனால், தாழ்மனிதர் ஏதோ ஒன்றை எண்ணிக் கவலைப் பட்டுக்கொண்டே இருப்பவர்.

17. உயர்மனிதர் மேனோக்கி உயர்ந்து செல்கிறார். ஆனால், தாழ்மனிதர் கீழ்நோக்கித் தாழ்ந்து போகிறார்.

18. உயர்மனிதர் பெருமிதப் பண்புடன் இருப்பவர்; ஆனால், இறுமாப்புடன் இருக்கமாட்டார். ஆனால், தாழ்மனிதர்இறுமாப்புடன் இருப்பவர்; பெருமிதப் பண்புடன் இருக்கமாட்டார்.

19. நல்ல உணவினையோ, நல்ல தங்குமிடத்தையோ உயர்மனிதர் தமக்கு வேண்டுமென்று பிறரிடம் வற்புறுத்துவதில்லை. அவர்தம் கடமைகளில் மட்டுமே கவனம் செலுத்துகிறவர். தம் பேச்சில் கவனத்துடன் இருப்பவர். தம்மினும் மேம்பட்ட பெரியோரைத் தம் வழிகாட்டியாகப் பின்பற்றுகிறவர். கல்விக் காதலராக விளங்குபவர்.

இதுகாறும் உயர்மனிதரைப் பற்றிய சீன ஞானியின் கருத்துக்களைத் தொகுத்துக் கண்டோம். இனி சான்றோரைப் பற்றி அவர் கூறிய சில கருத்துக்களைப் பார்ப்போம்.

1. தம் செயல்களைக் காட்டிலும் தம் சொற்கள் சிறந்தனவாக இருப்பதற்காக வெட்கப்படுபவர் சான்றோர் (Gentleman).

இங்ஙனம் அவர் கூறுவதின் உட்பொருள் சிந்திக்கத் தக்கது. அழகாகப் பேசிவிட்டு, செயல்களைச் சிறப்பாக ஆற்றவில்லை என்றால் அந்நிலை நாணத்தக்கதுதான். நாணத்தக்கவற்றுக்கு நாணுபவர் சான்றோர். திருவள்ளுவர்,

“அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால்(பு) ஊன்றிய தூண்’

என்று சான்றோர்க்குக் கூறிய இயல்புகளை இங்கு எண்ணிப் பார்த்தல் ஏற்புடையது.

2. சான்றோர் என்பவர் மூன்று விடயங்களில் எச்சரிக்கையாகவும் விழிப்புடனும் இருத்தல் வேண்டும். அவையாவன:

அ. இளமைப் பருவத்தில் உடம்பில் குருதியோட்டம் வலிமையாக உள்ள பொழுது, பாலியல் (Sex) பற்றிக் கவனமாக இருத்தல் வேண்டும் (முதுமைப் பருவத்தில் இது பற்றிக் கவனமாக இருந்து என்ன பயன்?)

ஆ. வளர்ச்சிப் பருவத்தில், உடம்பில் குருதி நிரம்பியுள்ள பொழுது பிறருடன் சண்டை போடுவதினின்றும் கவனமாக இருத்தல் வேண்டும்.

இ. முதுமைப் பருவத்தில் உடம்பில் குருதி மெலிந்திருக்கும் பொழுது பணத்தைப் பற்றிக் கவனமாக இருத்தல் வேண்டும்.

கன்பூசியசு வழங்கிய அறவுரையினை,

'இளையான் அடக்கம் அடக்கம்' (7.5)

என்ற நாலடியார் பாடலுடன் ஒருவாறு ஒப்பிட்டு மகிழலாம்.

தான் போதித்த நெறியினைக் கன்பூசியசு பொன்வழி அல்லது பொற்பாதை (Golden Mean) என்றும் குறித்துள்ளார்.

23. கன்பூசியசு கடிந்து கொண்டவர்

தமக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த தொன்மைமிக்க மாந்தர்க்கும் தம் காலத்து மாந்தர்க்கும் இடையே காணப்படும் சில இயல்புகளை ஒப்பிட்டும் உறழ்ந்தும் கன்பூசியசு காட்டுகிறார்.[76] பண்டைய மாந்தர் மூவகைக் குற்றங்களை உடையவராக வாழ்ந்தனர்.

1. அவர்களுள் திடீர் உணர்ச்சிக்கு ஆளானவர்கள் வழக்கத்திற்கு முரணாகத் தம்போக்கில் நடந்து கொண்டனர். இன்றைய மக்கள் திடீர் உணர்ச்சிக்கு ஆளாகி மனம்போன போக்கில் நடக்கிறார்கள்.

2. பண்டைய மக்கள் செப்பமும் தற்புகழ்ச்சியும் உடையவராய் இருந்தனர். எனினும், தன் நடத்தையில் கண்டிப்பாகவும் கவனமாகவும் விளங்கினர். ஆனால், இந்நாளில் தற்புகழ்ச்சி யுடைய மக்கள் தீய உணர்வுடையயராகவும் பிறரைத் தூற்றுபவராகவும் உள்ளனர்.

3. பண்டைய அடித்தட்டு மாந்தர் எளிமையும் நேர்மையும் கொண்டவர்கள். இன்றைய அடித்தட்டு மாந்தர் பிறரை ஏமாற்றுபவராக உள்ளனர்.

இவ்வாறு ஒப்பியல் நோக்கில் தம் சமகால மக்களின் இயல்புகளை முற்பட்ட காலத்து மக்களின்

இயல்புகளுடன் உறழ்ந்து காணும் சமுதாய உணர்வு கன்பூசியசிடம் காணப்படுகிறது.

24. உயர்மனிதன் வெறுப்பன

சேகுங் (Tsekung) என்ற சீடர் தன் பேராசான் கன்பூசியசைப் பார்த்து, 'ஐயா! உயர்மனிதர் கூட வெறுக்கக் கூடிய பொருள்கள் உள்ளனவா?' என்று வினவினார். அவருக்குக் கன்பூசியசு கூறிய விடை வருமாறு:

1. ஆம். உயர்மனிதர் கூட வெறுக்கக் கூடிய பொருள்களும் உள்ளன. மற்றவர்களை விமர்சிப்பவர்களையும், மற்றும் அவர்களுடைய பலகீனத்தை வெளிப்படுத்துகிறவர்களையும் உயர்மனிதர் (Superior man) வெறுக்கிறார்.

2. அதிகாரத்தில் உள்ளவர்களை அவர்களுக்குக் கீழே உள்ளவர்கள் அவதூறு பேசுதலையும் அவர்களைப் பற்றி வதந்தைகளைக் கிளப்பி விடுதலையும் உயர்மனிதர் வெறுக்கிறார்.

3. தன்னடக்கம் இன்றி வீரமும் பிடிவாத குணமும் உடைய மாந்தரையும் உயர்மனிதர் வெறுக்கிறார்.

4. தங்கள் அளவில் திடமாக இருக்கும் குறுகியமனம் உடைய மாந்தரையும் உயர்மனிதர் வெறுக்கிறார்.

இவ்வாறு தன் சீடருக்கு விளக்கம் கூறிய கன்பூசியசு தான் வெறுக்கும் மாந்தரையும் பட்டியலிட்டுக் கூறினார். அவர்களை நிரலாகக் காண்போம்:

1. தங்களைக் கெட்டிக்காரர்கள் என்று எண்ணிக் கொண்டு மற்றவர்களை வேவு பார்க்க விரும்புகிறவர்களை நான் வெறுக்கிறேன்.

2. தாங்கள் தறிகெட்டிருக்கும் பொழுது தங்களை வீர புருஷர்களாக எண்ணுகிறவர்களையும் நான் வெறுக்கிறேன்.

3. சான்றோராக நடித்துக் கொண்டிருக்கும் சூதுவாது நிரம்பியவரையும் நான் வெறுக்கிறேன்.

4. உண்மைப் பொருள்கள் போல் தோற்றமளிக்கும் பொய்ப் பொருள்களை நான் வெறுக்கிறேன்.

5. பயிர்களோடு விரவியிருக்கும் களைகளை வெறுக்கிறேன். (நல்லவர்கள் ஆகிய பயிர்களோடு கலந்திருக்கும் கயவர்களாகிய களைகளை வெறுக்கிறேன் என்பது உள்பொருளாகும்).

6. நல்லவர்களோடு கலந்திருக்கும் குறுக்கு வழியில் ஆதரவு தேடுபவர்களையும் நன்றி கெட்டவர்களையும் வெறுக்கிறேன்.

7. நேர்மையாளர்களை அடையாளம் காண்பதற்குத் தடையாகவுள்ள நாணய மற்றவர்களையும் நம்பிக்கை யற்றவர்களையும் வெறுக்கிறேன்.

8. செவ்வியல் இசையினைக் (Classical Music) குழப்பிவிடும் செங் (Music of Cheng) இசையினை வெறுக்கிறேன். (நாட்டுப்புற இசையினைக் கன்பூசியசு விரும்பவில்லை).

9. சிவப்பு நிறத்துடன் குழப்பம் உண்டாக்கும் ஊதா வண்ணத்தை நான் வெறுக்கிறேன்.

10. நல்லொழுக்கம் உடையவர் போல் தோற்றம் அளிக்கும் அற்பர்களை நான் வெறுக்கிறேன்.

இவ்வாறு சமுதாயத்தில் வெறுக்கத்தக்கவர்களை அடையாளம் காட்டியுள்ளார் கன்பூசியசு. பல்வகைப்பட்ட மக்களைப் பற்றிய அவர் கருத்துக்களைத் தொடர்ந்து காண்போம்.

25. பல்வகை மாந்தர்

1. ஒரு சிலர் புறத்தோற்றத்தில் பெருமிதத்துடனும் புனிதத்துடனும் காட்சியளிப்பார். ஆனால்

உள்ளே அவர்கள் உள்ளீடற்றும் குறைபாடுடனும் இருப்பார். அத்தகைய மாந்தர், இரவு நேரத்தில் ஒரு வீட்டிற்குள் கன்னமிட்டு உள்ளே நுழையும் அற்பத் திருடரைப் போன்றவர் ஆவர்.

2. பெண்களையும் சிறிதும் படிப்பறிவில்லாத பாமரர்களையும் சமாளிப்பது என்பது மிகவும் கடினமானது. அவர்களுடன் நெருங்கிப் பழகினால் ஆணவத்துடன் இருப்பார்கள். அவர்களைப் புறக்கணித்துவிட்டால் மனக்கசப்படைவதுடன் மிகவும் வன்மம் கொண்டிருப்பார்கள்.

3. சளசள என்று பேசுகிறவர்கள் சமுதாயத்தில் உள்ளனர். அவர்களை நான் வெறுக்கிறேன்.

4. ஏதாவது சலுகை பெறுவதற்காக வெற்று வேட்டுப் பேச்சாளர் (Glib talker) பெருந்தன்மையாளராக இருப்பது அரிது.

5. ஒரு மனிதனை அவன் பேசும் சொற்களை மட்டும் வைத்துக் கொண்டு அவனைப் பெருமகன் (Gentleman) எடை போட்டுப் பார்ப்பது இல்லை.

6. பண்பட்ட உலகில் அணிநலம் கலந்த செயற்பாட்டினைப் பெற்றிருக்கிறோம். பண்படாத உலகில் அணிநலம் கலந்த பேச்சுக்களைப் பெற்றிருக்கிறோம்.

இவ்வாறு சமுதாயத்தில் தாம் சந்தித்த மக்களின் இயல்புகளையும் செயற்பாட்டினையும் அனலெக்ட்சில் கன்பூசியசு பொறித்துள்ளார்.

26. அரசின் நெறிமுறை இலட்சியம்

ஒரு அரசாங்கத்தின் நீதி தழுவிய நெறிமுறைக் குறிக்கோள் பற்றியும் கன்பூசியசு சிந்தித்துள்ளார். மக்களை

எவ்வாறு ஆளுதல் வேண்டும் என்பதற்குரிய நெறிமுறைகளையும் வரையறுத்துக் கூறியுள்ளார். அவருடைய அரசியல் சிந்தனைகள் சிலவற்றை நோக்குவோம்:-

1. அரசின் ஆணையளவுகள் அடிப்படையில் மக்களை வழிநடத்திச் செல்லுதல் வேண்டும். தண்டனை என்ற அச்சுறுத்தலால் அவர்களைக் கட்டுப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் வேண்டும். தண்டிக்கப் பெற்றுச் சிறைக்குச் செல்லுவதை விரும்பாத மக்கள் நாணம், மரியாதை என்ற உணர்வு உடையவராக உள்ளனர்.

2. அறக்கோட்பாட்டினால் மக்களை வழிநடத்திச் செல்லுதல்வேண்டும். ஒழுங்கினால் (Li) அவர்களைக் கட்டுப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் வேண்டும். அவ்வாறாயின், மக்களுக்கு மரியாதையுணர்வும் மான உணர்வும் உண்டாகும்.

கன்பூசியசு பண்பாடு செழத்திருக்கும் நாட்டில் வழக்குகள் இரா என்று கூறினார்.

ஒரு சமயம் யாரோ ஒருவர் சீன ஞானியைப் பார்த்து, 'ஐயா! நீங்கள் ஏன் அரசாங்கப் பணியில் ஈடுபடக் கூடாது?' என்று கேட்டார். அவர்க்கு அந்த ஞானி,

> "வரலாற்றுப்பனுவல் (Book of History) நன்மகனைப் பற்றிப் பேசவில்லையா? நாட்டை ஆளும் பேரரசர் நல்ல மகனாக, நல்ல சகோதரனாக இருந்து கொண்டு, தன் கடமைகளை மக்களுக்குச் செய்துவரின் அந்த ஆட்சியை நல்லாட்சி என்று தானே நாம் கூறுவோம். எனவே, நான் அரசாங்கப் பொறுப்பேற்க வேண்டிய தேவையில்லை"

என்று விடை கூறினார். இந்த வாசகத்தினைப் பார்க்கும் பொழுது, இரண்டாம் இராசராச சோழனின் நிலைப்பாடு நம் நினைவுக்கு வருகிறது.[77] அவனுடைய மெய்க்கீர்த்தியில்,

> "தந்தையிலோர்க்குத் தந்தையாகியும் தாயிலோர்க்குத் தாயாகியும் மைந்தர் இலோர்க்கு மைந்தராகியும் மன்னுயிர்கட்கு உயிராகியும்"

என்று அவ்வேந்தன் ஆட்சிபுரிந்த செய்தி சீனத்து வரலாற்றுப்பனுவல் கூறும் கருத்துடன் இயைந்திருத்தல் எண்ணி இன்புறத்தக்கது.

அறநெறியில் ஆட்சிபுரியும் அரசன் வடமீன் (North Ploar Star) போன்றவன் என்று கன்பூசியசு கருத்துரைத்தார். வடமீன் என்பது துருவ நட்சத்திரம். அந்த நட்சத்திரம் எல்லா நிலையிலும் எல்லாக் காலத்திலும் ஒரே இடத்தில் நிலைத்திருக்கும். அதனைச் சுற்றி மற்ற நட்சத்திரங்கள் சுழன்று வரும். அதுபோல அற நெறியில் ஆட்சிபுரியும் அரசன் ஒரே நிலையில் மாறாமல் இருப்பான். அவனைச் சுற்றி மற்றைய அரசர்கள் சூழ்ந்து கொண்டிருப்பார்கள் என்று கன்பூசியசு விளக்கினார்.

எல்லா இடங்களிலும் சீன ஞானி அறத்தினை வலியுறுத்தியே அறிவுரைகளைப் போதனை புரிந்துள்ளார். அரசன் சிறந்த எடுத்துக்காட்டாக ஆட்சி புரிந்தால் அவன் நாட்டினை விடுத்து வேறிடம் செல்லுவதற்குக் குடிமக்கள் விரும்பமாட்டார் எனவும் கூறினார்.[78]

கோமகன் கங் சி (Baron K'ang Ch'i) கன்பூசியசிடம்,

> "ஐயா! தீய குடிமக்களையெல்லாம் கொன்றுவிட்டு, நல்ல குடிமக்களோடு தொடர்பு கொள்ளுதல் குறித்துத் தங்கள் கருத்து என்ன?"

என்று கேட்டார். கன்பூசியசு,

> "ஒரு நாட்டை ஆள்பவள் ஒருசார் மக்களைக் கொல்ல வேண்டிய தேவை என்ன? எது நல்லதோ அதனை நீ விரும்பினால், மக்களும் நல்லவர் ஆவர் அல்லரோ?

அரசன் என்பவன் வீசும் காற்றைப் போன்றவன். குடிமக்கள் புல்லைப் போன்றவர்கள். புல் காற்றடிக்கும் திசையில் வளைகிறது"

என்று உவமை நயத்துடன் விளக்கம் கூறினார்.

மேலும் தம்போதனையினைத் தொடர்ந்தார்:

"எது சரியோ, நியாயமானதோ, அதனை அரசனே செய்கிற பொழுது, அவன் கட்டளைகள் இடாமலேயே மக்களிடத்தில் செல்வாக்கு உடையவனாக இருப்பான்.

எது சரியோ, நியாயமானதோ, அதனைஅரசன் தானே நிறைவேற்றாத பொழுது, அவன் இடும் கட்டளைகள் எல்லாம் பயனற்றுப் போகும்"

"அரசன் ஒருவன் தன் நடத்தையினைச் செம்மை செய்து கொண்டால், அரசு புரிதல் என்பது எளிதான செயலாகிறது. தான் தன்னைச் செம்மைப்படுத்திக் கொள்ளவில்லை என்றால், குடிமக்களை அவனால் எப்படி செம்மைப்படுத்த முடியும்?"[79]

இவ்வாறு கன்பூசியசு வழங்கிய போதனை, 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி' என்ற தமிழ் முதுமொழியையும், 'யதா ராஜா ததா பிரஜா!' என்ற வடமொழி வாசகத்தினையும் நமக்கு நினைவூட்டுதலை எண்ணி இன்புறலாம்.

27. நல்லாட்சியின் கூறுபாடுகள்

தன் குருநாதரை நோக்கி, 'நல்லாட்சியின் அடையாளங்கள் எவை?' என்று சேகுங் (Tsekung) வினவினார்.

"1. மக்களுக்குப் போதுமான அளவு உணவு கிடைத்தல் வேண்டும். 2. நாட்டைக் காப்பதற்குப்

போதிய படை வேண்டும். 3. அரசனிடத்தில் மக்களுக்கு நம்பிக்கை வேண்டும்."

இவ்வாறு கன்பூசியசு விடை கூறினார். இவர் கருத்து,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா(து) இயல்வது நாடு" (734)

என்ற திருவள்ளுவர் கருத்துடன் ஒருவாறு ஒத்திருத்தல் உணரத்தக்கது.

சீடர் சேகுங் (Tsekung) மீண்டும் தன் பேராசானைப் பார்த்து,

"ஐயா! தாங்கள் கூறிய நல்லாட்சிக் கூறுபாடுகள் மூன்றனுள் ஒன்றை விடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், எதனை விடுவீர்கள்"

என்று கேட்டார். அவருக்கு விடையளிக்கும் சீன ஞானி,

"முதலில் படையினை விட்டுவிடுவேன்" என்று கூறினார். மேலும் சீடர், 'எஞ்சிய இரண்டு கூறுகளில் ஒன்றை விடவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டால் எதனை விடுவீர்?' என்று கேட்டார். பேராசான் கன்பூசியசு,

'மக்களுக்குப் போதுமான உணவு கிடைப்பதைக் கூட விட்டுவிடலாம். ஒவ்வொரு தலைமுறையிலும் பட்டினிச் சாவுகள் நிகழ்ந்து வந்துள்ளன. ஆனால் ஒரு தேசம் என்பது அரசனிடம் நம்பிக்கையின்றி வாழ முடியாது'

என்று வரையறுத்துக் கூறினார்.

28. கல்வி, சடங்கு, கவிதை

கல்வியைப் பற்றிக் கன்பூசியசு தமக்கென்று தனிக் கொள்கை வைத்திருந்தார். அவர் கருத்தின்படி, 'கல்வி

என்பது கவிதையில் தொடங்குகிறது (-Education begins with poetry); தக்க ஒழுக்கத்தால் வலிமை பெறுகிறது; இசை ஞானத்துடன் பூரணம் அடைகிறது.'

> 'பெருமகன் (Gentleman) புலமையால் தன்னை அகலப்படுத்திக் கொள்ளுகிறான். தக்க நடத்தையாலும் ஒழுக்க நெறியாலும் (-இவை லீ எனக் கூறப்படும்) தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்ளுகிறான். இவ்வாறு தகுதி பெற்ற பின், பொது ஒழுக்கங்களிலிருந்தும் அவன் விலகுவது இல்லை'.

இதுவும் கன்பூசியசின் விளக்கம் ஆகும்.

யுட்சே (Yutse) என்ற சீடன் ஆசானைப் பார்த்து,

> "லீயின் செயற்பாடுகளில் ஒத்திசைவு என்னும் உணர்வுதான் (Sense of harmony) மிகவும் மதிப்பு வாய்ந்தது. பண்டைய அரசர்களின் நனி சிறந்த மரபுச் செல்வமாக இந்த லீ (Li) விளங்குகிறது. சிறிதும் பெரிதுமான எல்லாவற்றுக்கும் வழிகாட்டும் தத்துவமாக விளங்குவதும் இந்த லீ (Li)தான். நாட்டின் நடைமுறைகள் சரியாக அமையவில்லை என்றால், லீ அடிப்படையில் சமுதாயத்தினை ஒழுங்குபடுத்தாமல், சமுதாய ஒத்திசைவு அல்லது அமைதிக்குத் தாங்கள் வளைந்து கொடுக்கிறீர்கள். அங்ஙனமிருந்தும் செயற்பாடுகள் செம்மைப்படுவது இல்லை."

என்று பேசினான். பொறுமையாகச் சீடரின் சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்த கன்பூசியசு,

> "எப்பொழுது பார்த்தாலும் லீ! லீ! (Li! Li!) என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். லீ என்பது (சடங்குகளில் பயன்படும்) மாணிக்கக் கற்கள், பட்டுக்கள் ஆகியவற்றின் தொகுப்பினைக் குறிக்கிறதா?

> எப்பொழுது பார்த்தாலும் இசை! இசை! (Music! Music!) என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இசை என்பது முரசங்கள் (Drums) மணிகள் (bells) ஆகியவற்றை ஒலிப்பதையா சுட்டுகிறது?"

என்று எதிர்வினா விடுத்ததன் வாயிலாக விடையினை அனுமானித்துக் கொள்ளும்படி செய்தார்.

சேஷியா (Tseshia) என்ற சீடர், பாடற்பனுவலுடன் (The Book of Songs) தொடர்புடைய ஒரு வினாவினை எழுப்பினார்:

> "பிறரைக் கவரும் பாங்கில் அவள் சிரிப்பு இருக்கிறது. அவள் கண்கள் தெளிவாகவும் ஒளிமயமாகவும் உள்ளன. சுத்தமான பின்னணியில் (plain background) அவள் ஆடை வண்ண வரைவு (Colour design) கொண்டதாக உள்ளது. இவ்வாறு பாடற்பனுவலில் (The Book of Songs) வரும் பகுதிக்குப் பொருள் என்ன?"

என்பதுவே அந்த வினாவாகும். கன்பூசியசு,

> "வண்ணம் தீட்டுவதில் சுத்தமான பின்னணி இருந்தேயாக வேண்டும்"

என்று சுருக்கமாக விடை சொன்னார். சீடரோ,

> "அப்படியென்றால், லீ (ஒழுக்க நெறிமுறை)யின் சடங்கு தொடர்பான வடிவங்கள் அல்லது உருவங்கள் எல்லாம் எளிமையான நியதியின் பின்னணியினை அடிப்படையாகக் கொண்டமைதல் வேண்டும் என்று பொருள்படுமா?"

என்று தொடர்ந்து வினவினார். கன்பூசியசு,

> "இப்பொழுது நீ சொல்லிய கருத்து ஒரு புதிய சிந்தனைக் கொடை. எனவே, பாடற்பனுவலைப் படிப்பதற்கு நீ தகுதிபெற்றிருக்கிறாய்"

என்று அமைதி கூறினார்.

சடங்குகள் யாவும் ஆடம்பரமாக இருப்பதை அவர் விரும்பவில்லை. கடமைக்காகவும் பிறர் புகழ்ச்சிக்காகவும் சடங்குகளைச் செய்யக் கூடாது என்றும் கூறினார். உணர்வின் வெளிப்பாடாக அவை அமைதல் வேண்டும் என்றார்.[80]

பாடற்பனுவலில் *(The Book of Songs) 305* பாடல்களைக் கன்பூசியசு தொகுத்துக் கொடுத்துள்ளார். இவற்றுள் பெரும்பான்மைப் பாடல்கள் அவருக்குக் காலத்தால் முற்பட்டவை என்பது மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும். இந்த நூலின் உயிர் நிலையாக உள்ள ஒரு தொடரே **305** பாடல்களின் சாரத்தினையும் தன்னுள் பொதிந்து வைத்திருத்தல் கூடும்.

பாடற்பனுவலையும் (The Book of Songs), சடங்குப் பனுவலையும் (The Book of Rituals or Ceremonies) கட்டாயம் படித்தல் வேண்டும் என்பது கன்பூசியசின் காலத்துக் கல்விக் கொள்கையாகும்.

சென் கங் *(Ch'en K'ang)* என்பார், கன்பூசியசின் ஒரேமகன் போயு *(Poyu)* அல்லது லீ *(Li)* என்பாரைப் பார்த்து,

> "உன் தந்தையால் கற்பிக்கப்பட்டவற்றுள் ஏதாவது குறிப்பிடத்தக்கது உண்டா?"

என்ற கேள்வியைத் தொடுத்தார். அவர் விடை கூறினார்:[81]

> "அப்படி ஒன்றும் இல்லை. ஒரு நாள் அவர் (-தந்தையார்) தன்னந் தனியராய் வீட்டின் முன்புறம் நின்று கொண்டிருந்தார். அவரை நோக்கி ஓடினேன். 'நீ பாடற்பனுவல் (-Book of Songs) படித்தாயா?' என்று கேட்டார். 'இன்னும் இல்லை' என்றேன். 'நீ பாடற்பனுவலைப் பயிலவில்லை என்றால், உன் மொழி ஆளுகை செப்பம் உறாது' என்று கூறினார். எனவே, திரும்பிச் சென்றேன்;

பாடல்களைப் படித்தேன். மறுநாள், முன்பு போலவே அவர் நின்று கொண்டிருந்த முன்றிலை நோக்கிச் சென்றேன். 'நீ சடங்குப் பனுவலைப் படித்துவிட்டாயா?' என்று என்னைக் கேட்டார். 'இன்னும் இல்லை' என்றேன். 'நீ சடங்குப் பனுவலைப் பயிலவில்லை என்றால், உன்னை நன்னெறிக்கு வழி நடத்தும் வழிகாட்டி உனக்கு யாரும் இல்லை' என்றார். திரும்பிச் சென்றேன்; சடங்குப் பனுவலைப் பயின்றேன். இவ்வாறு பாடற்பனுவலையும் சடங்குப் பனுவலையும் படித்தேன்".

செங் கங் (Ch'en K'ang) என்பார் போயு (லீ) கூறிய விடையினைக் கேட்டு மனமகிழ்ந்து, 'அவரிடம் ஒன்றுதான் கேட்டேன். மூன்று விடயங்களைத் தெரிந்து கொண்டேன். அவையாவன:[82]

1. பாடற்பனுவலைப் பற்றிக் கன்பூசியசு கூறிய கருத்து இன்னது என்பதைத் தெரிந்து கொண்டேன்.

2. சடங்கினைப் பற்றி அவர் கூறிய கருத்து இன்னது என்பதைத் தெரிந்து கொண்டேன்.

3. பேராசான் ஏனைய சீடர்களுக்கு எவற்றைக் கற்பித்தாரோ அவற்றைத்தான் தன் புதல்வனுக்கும் கற்பித்துள்ளார்; மகன் என்பதற்காகப் புதிதாக ஒன்றையும் சொல்லவில்லை என்பதையும் தெரிந்துகொண்டேன்

என்று புலப்படுத்தினார்.

எனவே, கன்பூசியசு மாணவர் என்ற வகையில் தன் ஒரேமகன் உள்ளிட்ட மாணவர்கள் அனைவரையும் சமமாகவே பாவித்துக் கல்வியைப் புகட்டியுள்ளார் என்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

‘கல்வியைக் கற்பதிலும் மீண்டும் மீண்டும் கற்பதிலும் பெருமகிழ்ச்சி உள்ளது’ (It is a great pleasure to learn and relearn again) என்று இந்தச் சீன ஞானி எண்ணினார். கல்விக்கு அவர் கொடுத்துள்ள மதிப்பும் திருவள்ளுவர் வழங்கியுள்ள மதிப்பும் ஒருங்கெண்ணத் தக்கவை.

ஆசிரியராதற்குத் தகுதி வாய்ந்தவர் யார்? என்ற வினாவிற்கும் கன்பூசியசு விடை கண்டுள்ளார். ‘முன்பே கற்றறிந்தவற்றை மீண்டும் சிந்தித்துப் பார்த்துப் புத்தறிவு பெறும் ஒருவன் ஆசிரியனாக இருத்தற்குத் தகுதி படைத்தவன்’ என்பது அன்னாரின் கருத்து.

‘பண்டைக் காலத்து அறிஞர்கள் தமக்காகக் கற்றனர். இன்றைய அறிஞர்கள் பிறர்க்காகக் கற்கின்றனர்’ என்றார்.

அறுவகைக் குறைகளைப் பற்றிய அலுவலக மூதுரைகளைக் கன்பூசியசு எடுத்துரைத்தார். அவையாவன.[83]

1. கல்வியை விரும்பாமல் அன்பினை மட்டும் விரும்புபவன் அறியாமை என்ற குறைபாடு உடையவன்.
2. அறிவினை மட்டும் விரும்பிக் கல்வியை விரும்பாதவன் விந்தை அல்லது வலிமையற்ற கருத்துக்கள் உடையவன் என்று குறை பேசப்படுவான்.
3. நேர்மையினை மட்டும் விரும்பிக் கல்வியை விரும்பாதவனின் குறைபாடு பொருள்களை அழிக்கும் அல்லது நிலைகுலைவினை உண்டாக்கும்.
4. எளிமையினை மட்டும் விரும்பும் ஒருவன் கல்வியை விரும்பவில்லை யெனில், அவன்

குறைபாடு நடைமுறையினை மட்டும் பின்பற்றுவதாக அமைந்துவிடும்.

5. வீரத்தை மட்டும் விரும்பும் ஒருவன் கல்வியை விரும்பவில்லை யெனில், அவன் குறைபாடு கட்டுப்பாடின்மை அல்லது பலாத்காரத்தில் முடியும்.

6. பண்புகளை உறுதிப்படுத்துதலை விரும்பும் ஒருவன் கல்வியை விரும்பவில்லை யெனில், பிடிவாத குணம் என்னும் குறைபாட்டில் முடிந்துவிடும்.

எனவே, எந்நிலையில் இருப்பவரும் கல்வியை விரும்பிக் கற்கவில்லை என்றால் வாழ்க்கையில் குறைபாடு உடையவராகவே கருதப்படுவார் என்பது கன்பூசியசின் முற்ற முடிந்த கருத்தாக விளங்குகிறது.

அறிவு, கல்வி, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் மக்களைத் தரப்பாகுபாடு செய்துள்ளார்:

1. மதி நலத்தினைப் பிறவிக் குணமாகப் பெற்றவர்கள் மக்களில் மிகவுயர்ந்த வகையினர் ஆவர்.

2. கல்வியின் வாயிலாக மதிநலம் பெறுபவர்கள் அடுத்த நிலையில் சிறப்புடையவர்.

3. தம் உழைப்பாலும் முயற்சியாலும் கடினமாகக் கற்றுத் தேறுபவர் மூன்றாம் நிலைச் சிறப்புக்கு உரியவர்.

4. கற்பதில் மந்தராக இருப்பவரும், கல்லாமலே இருப்பவரும் கடையர் ஆவர்.

எனவே, மதிநலத்தையும் கல்வியையும் அடிப்படையாகக் கொண்டு மக்களைத் தரப்பாகுபாடு செய்துள்ளதன் வாயிலாகக் கன்பூசியசு அறிவுக் கூர்மைக்கும் படிப்புக்கும் கொடுத்துள்ள சிறப்பிடம் தெளிவாதல் காணலாம்.

இளைஞர்கள் சமுதாயத்தின் பல படிநிலைகளிலும் எவ்வாறு விளங்க வேண்டும் என்பதையும் சீன ஞானி வரையறுத்துக் கூறியுள்ளார்:

1. இளைஞர்கள் வீட்டில் நல்லவராக இருத்தல் வேண்டும்.
2. சமுதாயத்தில் மரியாதையுடனும் மதிப்புடனும் நடந்து கொள்ளுதல் வேண்டும்.
3. தங்கள் நடத்தையிலும் நம்பிக்கையிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.
4. மக்களை நேசித்தல் வேண்டும்.
5. அன்புடைய மக்களுடன் தங்களைத் தொடர்புபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
6. இவற்றுக்குப் பின் பலநூல்களையும் படித்தல் வேண்டும்.

சமுதாயம் இளைஞர்களை நம்பியுள்ளது. அவர்கள் எவ்வாறு வளர வேண்டும் என்பதில் கன்பூசியசு கூடுதலான அக்கறை காட்டியுள்ளார். அவர் கூறியுள்ள கருத்துக்கள் சீன நாட்டு இளைஞர்களுக்கு மட்டுமன்றி உலகின் பலநாட்டு இளைஞர்களுக்கும் ஏற்புடையனவாகவே உள்ளன.

மேற்கோள் குறிப்புக்கள்

1. Lin Yutang, The Wisdom of Confucius, The Modern Library, New York, 1938, p.206.
2. Ibid, p.207.
3. Ibid, p.208.
4. Ibid, pp.208-209.
5. Ibid, p.211.
6. Ibid, p.212.
7. Ibid, p.213.

8. Ibid, p.214.
9. Ibid, p.215.
10. Ibid, p.217.
11. Ibid, p.220.
12. Ibid, pp.221-222.
13. Ibid, pp.224-240.
14. Ibid, p.239.
15. Ibid, p.240.
16. Ibid, p.105.
17. Ibid, p.107
18. Ibid, p.108.
19. Ibid, p.109.
20. Ibid, p.110.
21. Ibid, p.111.
22. கந்தசாமி, சோ.ந., **திருக்குறள் கூறும் உறுதிப்பொருள்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1977, ப.97
23. **The Wisdom of Confucius**, p.116.
24. Ibid, pp.117-126.
25. Ibid, p.131.
26. Ibid, p.133.
27. Ibid, p.241.
28. Ibid, p.244.
29. Ibid, p.245.
30. Ibid, pp.246-249.
31. Ibid, p.250.
32. Ibid, p.251.
33. Ibid, pp.253-254.
34. Ibid, p.254.
35. பெருங்கதை, I.32.5; II.9.55-59.
36. சீவகசிந்தாமணி, 411, 667, 729, 730,
37. The Wisdom of Confucius, p.255.

38. Ibid, p.256.
39. Ibid, p.257.
40. Ibid, p.258.
41. Ibid, p.260.
42. Ibid, p.262.
43. Ibid, p.263.
44. Ibid, p.264.
45. Ibid.
46. Ibid.
47. Ibid, pp.265-266.
48. Ibd, pp.135-152.
49. Ibid, p.141.
50. Ibid, p.143.
51. Ibid, p.145.
52. Ibid, p.146.
53. Ibid, p.150.
54. Ibid.
55. Ibid, p.151.
56. Ibid, p.152.
57. Ibid, p.154.
58. **தொல்காப்பியம்,** பொருளதிகாரம் (இளம்பூரணம்), 384, 479.
59. **The Wisdom of Confucius,** p.161.
60. Ibid, p.162.
61. **திருக்குறள்,** 755.
62. **The Wisdom of Confucius,** p.163.
63. Ibid.
64. Ibid, p.164.
65. Ibid.
66. **நன்னூல்,** பொதுப்பாயிரம், நூ.44.
67. **The Wisdom of Confucius,** p.165.
68. Ibid, p.166.
69. Ibid, pp.166-167.

70. Ibid, pp.*167-170*.
71. Ibid, pp.*170-174*.
72. Ibid, p.*180*.
73. Ibid, pp.*181-183*.
74. Ibid, pp.*184-190*.
75. Ibid, pp.*191-193*.
76. Ibid, pp.*196-198*.
77. சதாசிவப்பண்டாரத்தார்,தி.வை., **பிற்காலச் சோழர் வரலாறு**, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியிடு, *1974*, மறுபதிப்பு, ப.*646*.
78. **The Wisdom of Confucius**, p.*199*.
79. Ibid, p.*200*.
80. Ibid, p.*201*.
81. Ibid, p.*202*.
82. Ibid, p.*203*.
83. Ibid.

7. இலவோசியசின் தாவு மார்க்கம்
(கி.மு.6 நூ. முற்பகுதி)

1. முன்னுரை

சீன நாட்டில் தோன்றிய ஞானிகளில் இலவோசியசும் ஒருவர் (Lao-Tze, அல்லது Laocius). இவர் கி.மு.ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். கன்பூசியசின் மூத்த சம காலத்தவர். லவோ (Lao) முது, சியசு (Tzu, Cius) - முனிவர். ஆதலின் லவோசியசு என்ற சொல்லிற்கு முதுமுனிவர் (Old sage) என்பது வேர்ப்பொருள் ஆகும். இச்சொல் பொதுவாகக் கவிஞர்களுக்கு வழங்கப்படும் மரியாதைச் சொல் ஆகும். எனவே, லவோசியசு என்ற சீனப் பெரியார் அறிவினால் முதிர்ச்சியும் அனைவரின் மரியாதையினையும் பெற்றவர் என்பது புலனாகும். இவருக்கு முன்பே தாவு நெறி சீன நாட்டில் இருந்தது என்பர். இந்நெறியினை நிறுவியவர் என்று இலவோசியசு தன்னைச் சொல்லிக் கொள்ளவில்லை. தனக்கு முன்பே வழங்கிவந்த விழுமிய இந்நெறியினைத் தான் முந்தையோரிடமிருந்து வாங்கிக் கொடுத்தவர் (Transmitter) என்றுதான் இலவோசியசு கூறிக் கொள்கிறார். இவ்வாறே கன்பூசியசும் தன்னைப் பற்றிக் கூறிக் கொண்டவர் என்பதைச் சென்ற இயலில் கண்டோம்.

கி.மு.2704 - 2595 என்ற காலப் பகுதியில் சீன நாட்டின் பேரரசராக விளங்கிய ஹுவாங்கு தி (Huang Ti) என்பவர்தான் இந்நெறியின் முதல்வர் என்று ஒரு செய்தி வழங்கிவருகிறது. இலவோசியசுக்கு முன்பே தாவு (Tao) என்ற சொல் வழங்கியுள்ளது. கன்பூசியசு இச்சொல்லினைப் பயன்படுத்தியுள்ளார். கன்பூசியம், இலவோசியம், பௌத்தம் ஆகிய மூன்று மார்க்கங்களுமே இந்தச் சொல்லினை (Tao) ஆண்டிருத்தல் சுட்டுதற்கு உரியது.

2. தாவோ அல்லது தாவு - பொருண்மை

தாவு நெறிக் கவிஞர் போ சூ-ஈ (Po Chu-i) இந்நெறியின் சாரத்தினை ஒரு பாடலில் புலப்படுத்துகிறார்:

"எவர் பேசுகிறாரோ அவர் ஒன்றும் அறிகிலர்
எவர் அறிகிறவரோ அவர் மௌனமானவர்"

இச்சொற்களைப் பேசியவர் இலவோசியசு. எனினும், இலவோசியசு அறிந்தவர் என்று நாம் நம்புவதால் அவர் எங்ஙனம் ஐயாயிரம் சொற்களில் நூல் எழுதினார்?"

பேசாப் பொருளைப் பேசமுற்பட்டவர் இலவோசியசு என்பது இப்பாடலின் கருத்தாகும். இவர் நெறியினை, 'நாமமுயர் சீனத்துத் தாவு மார்க்கம்' என்று மகாகவி பாரதியார் போற்றுதல் சுட்டத்தக்கது.

தாவு (Tao) என்ற சொல் பல்வகைப் பொருள்களையும் குறிக்கிறது. இச்சொல்லிற்குக் கூறப்படும் விளக்கங்களைக் காண்போம்.[1]

1. தாவு (Tao) என்பது எல்லாம் கடந்த முற்ற முடிந்த மறைபொருளைக் (Ultimate mystery) குறிக்கிறது. அதனைப் பேச முடியாமல் சொற்கள் திரும்பி விடுகின்றன. வருணனைகளையும் சிந்தனைகளையும் தாண்டி விளங்கும் மெய்ப்பொருள் தாவு.
2. சொற்களினால் சுட்ட முடியாதது மட்டுமன்று, மௌனமும் அதனைச் சுட்டுதற்குப் போதியது அன்று. பேச்சும் மௌனமும் கடந்தது. எல்லாம் கடந்த அதன் இயல்பினைப் (transcendental nature) புரிந்து கொள்ள முடியும்.
3. மறையியல் (Mysticism) தாவு எனப்படும்.

4. தாவு என்ற சொல்லிற்குச் சரியான மொழிபெயர்ப்பு இல்லை. வழி (way) என்று ஒருவாறு மொழி பெயர்க்கப்படுகிறது. வழியும் அதுவே, அடையும் இடமும் அதுவே.

5. தாவு (Tao) என்ற சொல் தலை அல்லது வழிநடத்துவோர் என்ற பொருள்தரும் ஒரு வேர்ச்சொல்லும், அடி அல்லது படிப்படி முன்னேற்றம் என்ற பொருள்தரும் மற்றொரு வேர்ச்சொல்லும் கொண்டது. தலை (Head) என்பது ஒரு கொள்கையினை அல்லது தொடக்கத்தை உணர்த்துகிறது. அடி (Feet) முன்னியக்கச் சக்தியைக் (Power of Forward Movement) குறிக்கிறது. இரண்டும் சேர்ந்து ஒரு பாதையின் வழியே அறிவு பூர்வமான இயங்குதல் (Intellectual Movement) என்ற பொருளைத் தரும்; சீடன் தன் குருவினைத் தொடர்தல் என்ற பொருளையும் தரும். அறிவு (Intelligence) என்பது மூளை அறிவும், பகுத்தறிவும் அன்று; பகுத்தறிவிற்கும் மேம்பட்ட குணத்தைக் குறிக்கிறது.

6. இலவோசியசு, தாவோ அல்லது தாவு (Tao) என்ற குறியீடு சர்வமும் கடந்த முதற் காரணத்தைக் (Transcendental First Cause) குறிக்கும் என்றார். இது காலத்திற்குள் அகப்படாதது. பிரபஞ்சம் முழுமையினையும் வியாபித்து இருப்பது தாவு என்றார். பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பது; ஆனால் பிரபஞ்சத்தினால் குறைவுபடாதது. பிரபஞ்சத்திற்கு ஆதாரமாகவும், அதனைக் கட்டுப்படுத்துவதாகவும் இருப்பதுதான் தாவோ அல்லது தாவு (Tao) என்றார்.

விண்ணும் மண்ணும் படைக்கப்படுவதற்கு முன்பே உள்ளது தாவு. அதுவே பூரணம்

(Absolute). முற்ற முடிந்த மெய்ப்பொருள் (Ultimate Reality). அதற்குப் பெயரில்லை, மறையியத்துக் கெல்லாம் வாயிற்படி (Portal of all Mystery). பிரபஞ்ச ஒழுங்கு (Cosmic Order) தாவு எனப்படும்.

7. ஒரு சிலர் தாவோ அல்லது தாவு (Tao) என்பது வேதாந்தத்தில் சொல்லப்படும் ஆத்மா (Atman) என்றும், பௌத்தத்தில் கூறப்படும் தததா (Suchness) என்றும், கிரேக்கத்தில் கூறப்படும் மொனாடு (-Monad) என்றும் ஒப்பிட்டுப் பேசுவர். எனினும் தாவு ஞானிகள், குணம் குறியில்லாத தாவு என்ற மெய்ப்பொருளுக்கு எடுத்துக்காட்டு மற்றும் விளக்கம் கூறப்படுவதை உடன்படார்.

8. பௌதிக இருப்பிற்கு அப்பாற்பட்டது தாவோ (Tao) அல்லது தாவு. அதனை வழி அனுப்பலாம் (Transmitted). ஆனால், அதனைப் பெற முடியாது. அதனை அடையலாம், ஆனால் காண முடியாது.

9. அது உயரங்களுக்கெல்லாம் உயரமானது; ஆனால் அது உயரமன்று. அது கீழே உள்ளவற்றுக்கெல்லாம் கீழே இருப்பது; ஆனால் அது கீழ் அன்று. அது பழமைக்கெல்லாம் பழமையாது; ஆனால் அது முதியது அன்று.

10. தாவோ என்பது கேட்கப்படாதது (Tao cannot be heard); கேட்கப்படுவது எதுவோ அது தாவோ அன்று. அது பார்க்கப்படுவதுஅன்று; பார்க்கப்படுவது எதுவோ அது தாவோ அன்று.

11. எல்லாப் பொருள்களையும் உண்டாக்குவது; ஆனால் அது எதனாலும் உண்டாக்கப்பட்டது அன்று.

12. தாவு (Tao) தான் தோன்றி, சுயம்பு; தனக்குள் பொருள் (Substance), தோற்றம் (Appearance),

ஞானம் (Wisdom), வலிமை (Strength), பிரிவு (dispersion), நிறுத்தம் (Cessation) ஆகிய கூறுகளைக் கொண்டுள்ளது. ஆயினும், இவற்றுள் எப்பெயரினாலும் அதனைக் குறிப்பிடல் தவறாகும். எதுவும் தாவோவை உண்டாக்க முடியாது. எனினும் எப்பொருளையும் தாவோ தன்பால் கொண்டது.

13. தாவோ என்பது வழி (passage) பாதை (Path) அன்று. பிரபஞ்ச மாற்றத்தின் ஆற்றல், புதுப்புது வடிவங்களை உருவாக்கும் என்றுமுள வளர்ச்சிக்குத் தாவோ என்பது பெயர்.

14. டிராகன் (Dragon) தனக்குள் சுருட்டிக் கொள்ளுதல் போல், தனக்குள் தானே பொதிந்திருப்பது தாவோ. எனவேதான் தாவு மார்க்கத்தவர் டிராகனைத் (Dragon) தங்கள் பேரன்புக்குரிய குறியீடாகக் கொண்டுள்ளனர்.

15. ஆற்றல் அனைத்திற்கும் மூலமாக விளங்குவது தாவோ. ஆனால், தாவோ தன்னளவில் ஆற்றல் அன்று; ஆனால், ஆற்றல் அதன் தோற்றங்களில் ஒன்று. எல்லா உயிர்களுக்கும் அடிப்படைத் தத்துவம் தாவோ. ஆனால், எவ்வுயிரையும் அது வெளிப்படுத்தாது. பௌதிகப் பொருள்கள் யாவும் தாவோவின் மாற்றங்களே. எனவேதான், எல்லாப்பொருள்களுக்கும் தாய் (Mother of all things) என்று இது சொல்லப்படுகிறது.

16. எந்தச் சூழ்நிலையிலும் தாவோ என்பது கடவுளைக் குறிக்கும் சொல்லாகக் கருதப்படுதல் கூடாது. தாவு மார்க்கம் இறைவனைப் பற்றிப் பேசவில்லை.

17. புலன் கடந்தது, எல்லாவற்றையும் தாண்டிச் செல்லுவது (Transcendental) என்பதை ஒருவர் வருணனைக்குள் அடக்க முடியுமென்றாலும்

பெயரிட்டுச் சுட்ட முடியும் என்றாலும், அது புலன்கடந்ததாகவும் எல்லாவற்றையும் தாண்டிச் செல்லுவதாகவும் இருக்க முடியாது. பொறிபுலன்களாகிய எல்லைக்குட்பட்டது அறிவுக்குப் பொருளாகும்; அதனை வருணிக்க முடியும். சொற்கள் எல்லாம் உலகியல் பொருள்களைப் பேசுதற்கு மட்டுமே பயன்படுவன. வரம்பற்ற தாவோவினை வரம்பிற்குள் கொண்டுவர வருணனைகள் பயன்படா.

18. காணப்படும் உலகம் (Object), காண்கின்ற யான் (Subject) என்ற துவைத நிலை (Dualism) அகலும் பொழுது வாலறிவாக - சுத்த சைதன்யமாக Pure Consciousness ஆக இருப்பதுதான் தாவு (Tao).

19. தாவு மார்க்கம் மெய்ப்பொருளைப் பேசுவதற்கு அன்மை வாசகத்தினை (Negative expression) பயன்படுத்துகிறது. உபநிடதமும் 'நேதி நேதி' (இது அன்று, இது அன்று) என்று குறிப்பிடுதல் ஒப்பு நோக்கத்தக்கது. அனுபூதிமானாகிய அருணகிரிநாதர் 'வானன்று மண்ணன்று... சரீரி அன்று அசரீரி அன்றே' என்று கந்தரலங்காரத்தில் பாடுதல் இயைபு கருதி இவண் எண்ணுதற்குரியது. இவ்வாறே பரஞ்சோதிமுனிவர், 'அல்லையீ(து), அல்லையீ(து) என மறைகளும், அன்மைச் சொல்லினால் துதித்து இளைக்கும் இச் சுந்தரன்' என்று பரம்பொருளினைத் திருவிளையாடற் புராணத்தின் பாயிரப் பகுதியில் பரவியுள்ளார்.

ஞானிகள் உலகின் எப்பகுதியில் தோன்றினாலும் அவர்களின் முற்ற முடிந்த அனுபவம் ஒன்றாகவே உள்ளது என்பது நோக்கத்தக்கது.

20. தாவு என்பதைச் சூனியம், பாழ், தோன்றாமை (Void, emptiness, non-appearance) என்ற சொற்களினால் கூறுதல் மரபு. தமிழ்ச்சித்தர்களின் அனுபவத்திலும் முற்ற முடிந்த உண்மை (Ultimate, Transcendental Reality) என்பது இவ்வாறே இயம்பப் பெறுதல் ஒப்பு நோக்கத்தக்கது.

21. தாவு நெறியிலும், பௌத்தத்திலும் தொடக்கத்தில் தெய்வங்கள் இடம்பெறவில்லை. பின்வந்தவர்கள் தங்கள் வசதிக்காகவே பல தேவதைகளைப் படைத்துக் கொண்டனர்.

22. தாவு மார்க்கத்திற்கு என்று முறைப்படுத்தப்பட்ட கோட்பாடுகள் இல்லை. ஆதியும் அந்தமும் இல்லாதது எதுவோ அதுவே தாவோ அல்லது தாவு (Tao) எனப்படும்.

23. மனிதனின் சுயம் (True Being) இருப்பிடம் தாவோ அல்லது தாவு.

24. தாவோ ஒளியாகவும் உள்ளது; ஒளியால் பார்க்கப்படும் உன்னதமாகவும் உள்ளது. அதுவே தேடுவதாகவும், தேடப்படும் பொருளாகவும் இருப்பது.

25. மெய்ம்மையினைக் காண்பதற்கு நம்மை இயக்கும் அந்தச் சக்தி (தாவு) நாம் தேடிக் கொண்டிருக்கும் மெய்ம்மையாகவே இருக்கிறது.

‘தாவு’ என்ற சீனச் சொல் அறப்பாதை (Path of Virtue) என்னும் பொருள் உடையது. இலவோசியசு (Laocius) அறவோனைப் பற்றிப் பின்வருமாறு விளக்கியுள்ளார்:

1. பிறரைப் புரிந்து கொள்ளுபவன் புத்திசாலி.

2. தன்னைப் புரிந்து கொள்ளுபவன் மெய்ஞ்ஞானி.

3. பிறரை வெல்லுகிறவன் பலசாலி.
4. தன்னையே வெல்லுகிறவன் ஆற்றல் மிக்கவன்.
5. நிறைவு உணர்வுடையவன் செல்வன்.
(செல்வம் என்பது சிந்தையின் நிறைவே-குமரகுருபரர்)
6. எடுத்த நல்வினையினைச் சக்தியுடன் தொடர்கிறவன் மன வலிமையுடையவன்.
7. பதிளழு அறியாப் பண்பினன் நெடுநாள் நிலை பெறுவோன்.
8. அழியாது இறப்பவன் நீடூழி இருப்பவன்.

வேறு சில இடங்களில், குளிர்காலத்தில் நீரோடையினைக் கடப்பவனைப் போலக் கவனம் மிக்கவனும்; அண்டை வீட்டார்க்கு அஞ்சுகிறவனைப்போல் தயங்குகிறவனும்; விருந்தாளியைப்போல் பணிவும் பண்பும் படைத்தவனும்; உருகும் பனிக்கட்டிபோல் தன்னைப் பிறர்க்கு ஈவோனும், செதுக்கப்பெறாத மரக்கட்டையினைப் போலும் எளிமை நிலையினனும், வெற்றிடமான பள்ளத்தாக்குப் போலும் எளியவனும், கலங்கல் நீர்போலும் குழம்பியவனும், பூரணத்துவம் உடையவனும் அறவோன் என்று இப்பெரியார் கூறியுள்ளார்.[2]

அன்பு, நடுநிலை, உலகியல் கடவாமை என்ற மூன்றுமே பெரும் புதையல்கள் என்று இலவோசியசு கருதினார். “பெரும் வெறுப்பிற்கு மாறாக அன்பைத் திருப்பிக் கொடு”[3] என்ற இப்பெரியவர் கருத்தும், “மறத்திற்கும் அஃதே துணை”, “இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு” என்னும் வள்ளுவர் வாய்மொழியும் ஒத்திருக்கக் காண்கிறோம். இவ்வகையினால், சீனரும் தமிழரும் பகைவர்க்கும் கருணைபுரியும் மாசற்ற மனச்செம்மையினர் என்பது புலனாகும். ‘பெருமைக்கு வித்துப் பணிவுடைமை’

என்றார் இச்சீனப் பெரியார்.[4] 'பணியுமாம் என்றும் பெருமை' என்பது தமிழ்மறை. இச்சீனச் சான்றோர் உண்மைத் துறவிக்குக் கூறும் இயல்புகள் காணத்தக்கவை.

1. சொற்களால் அன்றிச் செயல்களால் போதனை புரிகிறவர்.
2. கைம்மாறு கருதாது செயல்புரிகிறவர்.
3. மதிப்பு நோக்காது பூரணத்துவத்திற்குப் பணிபுரிகிறவர்.
4. அகவாழ்வு (- உள்முக வாழ்வு) ஒன்றே கருதுகிறவர்.
5. மிகை, ஆணவம், மென்மைகளை அகற்றுவோர்.
6. ஆன்ற மதிப்பும் அவமதிப்பும் சமமாகக் கொள்கிறவர்.
7. யாவரையும் தம் பிள்ளைகளாகப் பாவிக்கிறவர்.

நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்திலும் துறவறவியலிலும் ஏனைய சில இடங்களிலும் வள்ளுவர் புகட்டியுள்ள துறவுப் பண்புகள் பலவற்றுடன் இலவோசியசின் துறவுக் கொள்கைகள் ஒத்திசைக்கின்றன.

3. தே (Te) என்னும் கொள்கை

உலக வாழ்வியலினின்றும் ஒதுங்கி இலவோசியசு ஓய்வு கொள்ளும் பொருட்டு, சீன நாட்டின் மேல்பால் உள்ள மலைகளை நாடிச் சென்றார். அதற்குப் பொறுப்பாளர், அவரைச் சற்றுக் காத்திருக்கக் கூறி, தன் போதனைகள் யாவும் அடங்கிய ஒரு பனுவலை எழுதும்படி கேட்டதால், அவரும் இசைந்து ஒருநூல் எழுதினார் என்று ஒரு கதை வழங்குகிறது. இந்நூல் தாவோ (Tao) தே (Te) என்ற இரண்டனைப் பற்றி எடுத்துரைப்பது. இவ்விரு சொற்களையும் way (-வழி) Virtue (-புண்ணியம்) என்று மொழிபெயர்த்துள்ளனர். இந்நூலினை எழுதிக் கொடுத்த பிறகு உயர்ந்த கணவாய் வழியாக மேலே சென்று மறைந்துவிட்டார். கதை எப்படி இருப்பினும், அவர் எழுதிய தாவோ தே சிங்கு (Tao Te

Ching) என்ற தாவு மறை நூல் (canon) விவிலியத்திற்கு அடுத்தபடி உலகின் மிகப்பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது. தாவு மார்க்கம் உலகில் முற்றிலும் அறிவார்ந்த சமயம் (most purely intellectual religion) என்று போற்றப்படுகிறது. சிங்கு (Ching) என்ற சொல் செவ்வியல் நூல் (Classic), மறைநூல் (Canon) என்ற பொருள் தருவது. மிகவும் போற்றத்தக்க ஒரு நூலுக்குச் சிங்கு (Ching) என்பது ஒன்றே புகழ் மிக்க அடைமொழியாக வழங்கப்படுகிறது. King என்பதும் Ching என்பதும் ஒன்றே. க -> ச, ச -> க என்று ஆதல் ஒலியியல் விதி. சேரலன் -> கேரளன் என்று ஒலி மாற்றம் பெறுதல் ஓர் எடுத்துக்காட்டு.

தே (Te) என்ற சொல்லின் பொருளையும் விளக்கத்தையும் காண்போம்.[5]

4. தே உணர்த்தும் பொருள்

தே (Te) என்ற சொல்லினை Virtue (புண்ணியம், நற்பண்பு), Uprightness (நேர்மை, செம்மை) என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர். இதனை ஒரு நேர்கோடு என்ற குறியீட்டினால் கட்டினர். இது தாவோ (Tao) - வழி (Way) என்பதைக் குறிப்பது. தாவோவின் உண்மையான இயற்கையின் வெளிப்பாடாகத் தே (Te) திகழ்கிறது. வழக்கமாகப் புண்ணியத்தினைக் (Virtue) குறிப்பினும், இச்சொல் (Te) இயற்கையான நல்லியல்பின் பண்பினைக் குறித்தது. இந்த நல்லியல்பு என்பது மெய்யொளி (Enlightenment) பெறுவதன் விளைவினாலும், பிரபஞ்சத்தில் எல்லாப் பொருள்களிலும் மனிதனிடமும் தாவோ (Tao)வின் செயற்பாட்டினாலும் உண்டாகிறது.

தே (Te) என்ற சொல்லிற்கு அறம் தொடர்பான கூடுதல் பொருள் இல்லை. மனிதனை உள்ளிட்ட எல்லா உயிர்களிலும் அமைந்திருக்கும் அகப்பண்பாகவும் (Inward Quality), உள்ளடங்கிய ஆற்றலாகவும் (Potentiality),

தாவோவின் சார்பினால் உதயமாகும் உள்ளுறையும் இயற்கை சக்தியாகவும் தே (Te) என்ற சொற்பொருள் விளங்குகிறது. தே (Te) என்பது ஒத்திசைவினை முழுமையாகப் பெறுதல் என்று சுவாங்கு சூ (Chuang Tzu) விளக்குகிறார்.

அறவியல் என்ற நிலையினையும் தாவு மார்க்கம் கடந்து மேலே செல்லுவதால், அறத்தினை அது வலியுறுத்தவில்லை. இந்நெறியினைச் சார்ந்த முனிவர் (Sage) தே (Te) என்பதற்கு உயிருடன் உள்ள உதாரண மாவார். அவரை அறமனிதன் (Moral man) என்று கூறுவதில்லை; ஏன்எனில், அவர் மனத்திற்குள் அறங்கள் (Morals) நுழைவதில்லை. தன் சுற்றுப் புறச் சூழலுடன் பூரணமாக அவர் பொருத்தப்பாடு உடையவர். இயல்பாகவே முழுமை நிலையில் (Perfection) அவர் செயல்படுபவர். நன்மை, தீமை என்ற இருமை நிலைக்கும் அவர்அப்பாற்பட்டவர். அவருடைய ஒழுக்கத்திலும் பண்பிலும் எந்தக் குறைபாடும் இல்லாமையினால், அவருக்கு ஒழுக்கப் பண்பு (Morality) தேவையில்லை. தாவு (Tao) என்பதை அறிந்தவர்கள் வேறுபட்ட சூழ்நிலைகளிலும் தன் போக்கினைச் செம்மைப்படுத்திக் கொள்ளுதலை உறுதியாக அறிந்தவர்கள் ஆவர். இந்தப் புரிந்துணர்வினால், பிற பொருள்கள் தன்னைத் துன்புறுத்த அனுமதிக்கமாட்டார். எந்தப் பொருளும் அவரைத் துன்புறுத்த முடியாது.[6]

தன்னம்பிக்கையும் பிறர் உதவி நாடாமையும் ஆகிய தாவு (Tao) மனிதனின் தனிப்பண்பு. தாவு மார்க்கத்தில் பாவக் கோட்பாடு இல்லை. மேல்நாட்டார் கூறும் sin என்பதற்கு ஒப்பான ஒரு சொல் சீன மொழியில்இல்லை. Sin என்பது அறியாமை, முட்டாள்தனம், கிறுக்குத்தனம். தன்னுணர்வில் உள்ளவர் எவரும் தனக்குத் தண்டனை அல்லது இழிவு உண்டாக்கும் செயலையோ, தன்னைத் துன்புறுத்தும் செயலையோ

அறிந்து செய்வதில்லை. இயற்கைவிதிகளை மீறி நடப்பது தவிர்க்க முடியாத தண்டனையினைக் கொண்டு வரும். கொடிய மனிதன் கொடிய முடிவுக்கு வருகிறான். தாவு மார்க்கத்தார்க்கு Sin (பாவம்) என்பது பிரபஞ்சத்தின் ஒத்திசைவினைக் கடப்பது ஆகும். தெய்வக் கட்டளையினை மீறுதல் Sin என்று மேலை நாட்டுச் சமயங்கள் கூறுவதை இவர்கள் ஏற்பதில்லை.

அறக்கேட்டிற்குக் காரணம் அறியாமைதான். பொறிகளின் செயற்பாட்டுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளுதலும்; அனுபவம் அறிவு ஆகியவற்றின் தொகுப்பு அப்பொறிகள் என்று பிழைபடக் கருதுதலும்; தனக்கு உள்ளும் புறம்பும் வேலை செய்யும் சக்தியை உடம்பென்று மயங்கி உணர்தலும்; பிழையான தகவுகளை (Values) அமைத்துக் கொள்ளுதலும் அறியாமையால் விளைவன ஆகும்.

பிரபஞ்சத்தில் தீயது (Evil) என்று எதுவும் இல்லை என்பதைக் கன்பூசியசு கூறியது போலவே இலவோசியசும் கூறினார்.[7] "துன்பமும் துயரமும் முன்பே தீர்மானிக்கப்படவில்லை (Not predestined); அவற்றைத் தங்களுக்குக் கொண்டு தருபவர் மனிதர்களே. நன்மை, தீமை என்பனவற்றின் பயன், நிழல் அதன் பொருளைத் தொடர்வது போல, செய்தவனை விடாது பின்தொடரும். இக்கொள்கையினைத் தம்மபதத்தில் பித்தர்பிரானும் புகன்றுள்ளார். பாவ மன்னிப்புக்காக வழிபாடு, பலி கொடுத்தல் என்பன தாவு நெறியில் இல்லை. பாவம் (Sin) என்பது அறியாமை என்பது தவிர, தெய்வக் கட்டளைக்குக் கீழ்ப்படியாமை அன்று என்ற உணர்வு உண்டாகிய பொழுது ஒருவன் குற்றத்திலிருந்து விடுதலை பெறுகிறான்.

மூலத் தாவு நெறியில் (Original Taoism) நரகம், பேய் என்பன இல்லை; ஒளிமயமாகவும் நன்மை மயமாகவும்

உள்ள கடவுளுடன் நேர் முரண் கொள்ளும் தீய சக்திகளும் இடம்பெறவில்லை. அவ்வாறே, சுவர்க்கமும் இடம்பெறவில்லை. இன்ப துன்பம், சுவர்க்க நரகம் என்ற இருவேறு நிலைகளையும் தாவுநெறி ஒதுக்கியது. எது ஒழுங்கோ அதனைச் செய்தல் இயற்கை விதிகளை மதித்து நடத்தல் ஆகும். அவ்விதிகளுடன் இயைந்து நடத்தல் வேண்டும். அவ்வாறு நடக்கத் தவறினால் பழிஎதிர்ச் செயல், ஒத்திசைவின்மை, நைவு, துயரம் என்பனவற்றைத் தானே கொண்டு வரும்.[8]

தாவு மார்க்கத்தில் இடம்பெறும் மற்றொரு கொள்கை யின் - யங்கு (Yin - Yang) என்பது பற்றியது. இது குறித்துச் சுருக்கமாகக் காண்போம்.

5. யின் - யங்கு (Yin - Yang) மெய்ப்பொருள்

யின் - யங்கு என்பதை தீ (Ti),தீயென் (T'ien) என்றும் மண் -விண் என்றும் கூறுவர். உலகின் இருமைப் பண்பினை (Dualism) இவை விளக்குவன.[9] இக்கொள்கை தாவு மார்க்கத்தார்க்கும் கன்பூசிய நெறியாளர்க்கும் மட்டுமே உரியது அன்று. இவ்விரு நெறிகளுக்கும் முன்பே வழங்கி வந்த இக்கொள்கையினை இவர்கள் எடுத்துக் கொண்டனர். ஃபூ-ஹிசி (Fu - hsi) என்ற முதல் சீன அரசர்க்கு (கி.மு.2852 - 2738) இக்கொள்கை உரியதாகக் கூறப்படுகிறது.

ஆயினும், தாவு மார்க்கத்தில் ஆதி ஒருமை, ஒத்திசைவு ஆகியவற்றின் பிரபஞ்ச அடையாளமாக இக்கொள்கை வளர்க்கப்பட்டது. யிங் - யங்கு (Yin - Yang) ஆகிய இரண்டனையும் இயற்கையின் இருபெரும் சக்திகளின் அடையாளம் என்று சூவாங்கு சூ (Chuang Tzu) அமைத்தார். பிரபஞ்சத்தின் ஒழுங்கினை நெறிப்படுத்தும் இருபெரும் சக்திகள் இவை ஆகும்.[10]

பிரபஞ்சத்தின் இருபெரும் சக்திகள் ஆகிய ஒளி, இருள்; எதிர்மறை, உடன்பாடு; ஆண், பெண்

ஆகியவற்றின் சமநிலையினையும் சமசக்தியையும் யின்-யங்கு (Yin-Yang) என்ற எண்பிப்பு வரைப்படம் (Diagram) காட்டுகிறது. உருவ அமைப்பின் ஒவ்வொரு பகுதியையும் இவ்விரு சக்திகளும் இணைந்து தம் கட்டுப்பாட்டில் இருக்கச் செய்கின்றன. கருமையில் வெண்புள்ளியும், வெள்ளையில் கரும்புள்ளியும் உள்ளது. இஃது எதிர்பாராமல் நிகழ்வது அன்று; குறியியலுக்கு (Symbolism)த் தேவையானது. தனக்குள் தனக்கு எதிரான ஒன்றின் ஜீவ அணுவை (Germ)ப் பெறாத உயிரி (Being) ஒன்றும் இல்லை. பெண்ணியல்புகள் இல்லாத முழுமையான ஆணோ, ஆணியல்புகள் இல்லாத முழுமையான பெண்ணோ உலகில் இல்லை. இருமைகள் (Dualities) எப்பொழுதும் இருக்கும். இவை முற்றிலும் முரண் தீர்க்கப்படாத எதிர் சக்திகள் அல்ல. ஒரு முழுமையின் (Whole) இருவேறு கூறுகள்; ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல இவை பிரிக்க முடியாமல் இணைந்துஇருப்பன. இவை இணைந்து செயல்படும் சக்திகள்.

தாவு மார்க்கத்தில் (Taoism) படைப்போன் (Creator) இல்லை. தாவோவின் (Tao) செயற்பாடு யின் (Yin), யங்கு (Yang) என்பன தமக்குள் ஒன்று ஒன்றன்மேல் வினைபுரிதலின் வாயிலாகத் தன்னிச்சையான படைப்பினைக் (Spontaneous Creation) கொண்டு வருகிறது.

யின் (Yin) என்னும் தத்துவம் எதிர்மறை (negative), இருள்பக்கம் (dark side), பெண்கூறு (Feminine element) ஆகியவற்றின் அடையாளமாக உள்ளது. இது தனக்குள் ஆற்றலை உடையது; அகத்துறைவது, இயற்கையானது. இருளின் ஆதிக்குழப்பமாக (Primordial Chaos of darkness) இருந்த ஒன்றிலிருந்து காணப்படும் உலகு (Phenomenal World) படைப்பின் ஒளியாக வெளிப்பட்டது. இந்த ஆதிக்குழப்பம் (Primordial Chaos) என்பதைத் தாவோ

(Tao)வுடன் நிகராக்கக் கூடாது; தாவோ (Tao) என்பது ஆதிக்குழப்ப நிலைக்கும் முற்பட்டது.

யின் (Yin) என்னும் தத்துவம் அநாதி காலமாகவே படைத்துக் கொண்டிருக்கும் பெண்மை ஆற்றல்; பெருந்தாய் (Great Mother). எனவேதான், யங்குக்கு (Yang) முன்னதாக யின் (Yin) எப்பொழுதும் வைக்கப்படுகிறது. உள்ளுறை சக்தியிலிருந்து (Potential) யங்கு (Yang) பிறந்ததாலும், இருளிலிருந்து ஒளிவெளிப்பட்டு உயிர்ப்பாகவும், அறிவாகவும், செயலாகவும், அடிப்படைத் தேவையாகவும் அமைவதாலும், யங்குக்கு முன்பாகவே யின் இருப்பது என்ற கருத்தினைத் தாவு மார்க்கம் கொண்டது.[11]

யின் என்பது சதுரமான மண்ணகத்தையும், யங்கு என்பது வட்டமாக விளங்கும் விண்ணகத்தையும் சுட்டும். எனவேதான், பீகிங்கில் (Peking)உள்ள பேரரசர்க்குரிய அரண்மனைகளின் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள விண்ணகத்தின் பெரிய பீடம் (Great Altar of Heaven) வட்டமாக அமைந்து வானோக்கி உள்ளது. விண்ணகத்தின் கீழ் உள்ள அனைத்துக்கும், பேராற்றல் (Supreme Power) வெளிப்பட்டு இருக்கிறது என்பதைக் குறிக்கவே விண்ணகப் பீடம் மேற்சுட்டியபடி அமைக்கப்பட்டுள்ளது.

மண்ணகத்தின் பீடம் சதுரமாகவும் மூடப்பட்டும் இருந்தது. இதன் நாற்புறமும் சூழ்ந்துள்ள வேலி (Enclosure), பெண்மைத் தத்துவத்தின் கருவினைக் குறிப்பது. பீடம் வேலியால் காக்கப்படுதல்போல், இந்தக் கருவும் பாதுகாப்புடையது. யங்கு தத்துவத்தின் வட்ட வடிவம் இயக்கத்தினையும் (Movement) ஆற்றலையும் (Dynamism) படைப்புத் திறனையும்(Creativety) சுட்டுகிறது. யின் தத்துவத்தின் சதுர வடிவம் இருப்புத் தன்மையினையும் (Static aspect), செயலற்ற நிலையினையும் (Passive aspect) குறிப்பது.[12]

இருப்புத் தன்மையுடைய யின் (Yin), இயக்கத் தன்மையுடைய யங்கு (Yang) ஆகிய இரண்டும் சைவ சித்தாந்தத்தில் சொல்லப்படும் சிவம் சக்தி ஆகியவற்றுடன் ஒப்பிடுதற்குரியவை. சிவம் என்றும் ஒருபடித்தாக அசைவற்று இருப்பது (Static). அதன் சக்திதான் (Dynamic) பிரபஞ்சத்தின் ஐந்தொழிலையும் புரிவது (Cosmic functions which are five fold). படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல் என்பன சக்தி ஆற்றும் ஐவகைத் தொழில்கள் ஆகும்.

இரசவாதத்தில் (Alchemy) யின் (Yin) உறைதலையும் யங்கு (Yang) கரைதலையும் குறிப்பன. வெள்ளி, முத்துக்கள் என்பன யின். பொன், மாணிக்கம் என்பன யங்கு. திங்களும் தண்ணீரும் யின். கதிரவனும் மலைகளும் யங்கு. ஒன்றன் உள்ளார்ந்த பகுதியை (esoteric side) யின் (Yin) சுட்டுகிறது. அதன் வெளிப்பகுதியை (Exoteric side) யங்கு (Yang) சுட்டுகிறது.[13]

கன்பூசியம், தாவு மார்க்கம் ஆகிய சீனப் பெருநெறிகள் இரண்டுமே யின்-யங்கு ஆற்றல்கள் (Forces of Yin and Yang) மக்கள் வாழ்வியலில் சம நிலையினைக் காக்கச் செய்வன என்று எடுத்துரைத்தன. பூரண மனிதன் (Perfect Man) எனப்படும் முனிவர் (Sage) இருபெரும் நெறிகளுக்குரிய இலக்கியங்களையே எடுத்துப் பேசியவர். அவரிடம் யின்-யங்கு ஒத்திசைவு (Harmony) பொருந்தியிருந்தது. தலைக்கும் நெஞ்சுக்கும், மனத்திற்கும் உணர்ச்சிகளுக்கும், அறிவுக்கும் உள்ளுணர்வுக்கும் இடையேயுள்ள சம நிலையினை அவர் பெற்றிருந்தார். அவர் எதிர்மறையும் இல்லை, உடன்பாடும் இல்லை. மகிழ்ச்சி மிக்க நடுநிலையாகவும், மைய அச்சாகவும் துருவமாகவும் அவர் உள்ளார்.[14]

தாவோ (Tao) என்ற முதல் தத்துவத்திலிருந்து வெளிப்பட்ட சாறுகள் (Essences) யின் (Yin), யங்கு (Yang)

என்பன. உலகின் தோற்றங்களுக்கும் மாற்றங்களுக்கும் இவ்விரண்டுமே காரணம். இவ்விரண்டின் சமநிலைதான் கன்பூசிய நெறிக்குரிய பூரண மனிதரையும் (Perfect Man), தாவு நெறிக்குரிய முனிவரையும் (Sage) படைக்கிறது.

யிங்-யங்கு ஆகிய இரண்டின் ஒருங்கிணைந்த செயற்பாடுதான் ஓய்வு, ஓய்வின்மை, தனிமை, தேடுதல் (Quest) என்பன மக்கள் வாழ்விலும், மலையில் வாழும் முனிவர் வாழ்விலும், நிர்வாகம் செய்பவர் வாழ்விலும் உண்டாவதற்குப் பொறுப்பாக உள்ளன.[15]

பருவ காலங்களையும் கூட யின், யங்கு கட்டுப்படுத்துகின்றன. வாழ்வு ஆற்றல்கள் பின்வாங்கும் காலம் ஆகிய இலையுதிர் காலமும் மண்ணகம் 'மூடப்பட்டு', செயலற்றுக் குளிர்ந்து கிடக்கும் குளிர் பருவமும் யின் (Yin) என்பதற்கு உரியவை. மண்ணகம் 'திறக்கப்பட்டு' உழவினால் வானகத்தின் வெதுவெதுப்பு உண்டாகும் இளவேனிற் பருவமும், சூரியனின் ஆக்க ஆற்றல் மேலுயர்ந்து விளங்கும் கோடைப் பருவமும் யங்கு (Yang) என்பதற்கு உரியன.[16]

தாவு (Tao) என்பதன் உள்ளுறை ஆற்றலாக (-அந்தர்யாமி, Immanent power) யின்னும், கடந்த ஆற்றலாக (Transcendent power) யங்கும் விளங்குகின்றன. முன்னது மூச்சினை உள்ளிழுக்கும் ஆற்றல், பின்னது மூச்சினை வெளிவிடும் ஆற்றல்.

யின் (Yin) என்பது - - என்ற இரு கோட்டு வரியாலும், யங்கு (Yang) என்பது - நேர் வரியாலும் வேறுபடுத்திக் காட்டப்பெறுவன.

முனிவர்கள், கலை உள்ளத்தினர், கவிஞர்கள் யின்-யங்கு ஒத்திசைவினைப் பேணும் பொருட்டுத்தான் மலைகள், வனங்கள் ஆகிய இடங்களுக்குச் சென்று தனிமையில் இன்புறுகின்றனர். புறஉலக அறிவு பன்முக

உணர்வினையும், விரையத்தையும் (Dissipation), குழப்பத்தையும் உண்டாக்கும். யிங் -யங்கு ஒத்திசைவினால் உண்டாகும் ஞானம் ஒருமை உணர்வினையும் பூரணத்துவத்தினையும் உண்டாக்கும்.[17]

செய்திகளின் தொகுப்பினைத் தேடுதலும் நினைவில் சேமித்தலும் புலமைத் திறம் (Erudition) என்று கூறப்படுகிறது. இத்தகைய அறிவு, இயக்கம் இல்லாதது (Static); இறந்த காலத்தொடும் வரலாற்றொடும் தொடர்பு உடையது. இறந்த காலம் என்பது இறப்பு, நிகழ்காலம் என்பது வாழ்வு. அறிவு என்பது ஆன்மீகத்துடன் தொடர்புடையது, நிகழ்காலத்தினை நினைப்பது. தாவு மார்க்கத்து முனிவர் போதனை புரிய மாட்டார். தானே எடுத்துக்காட்டாக ஒளி வீசுபவர்.[18]

6. வூ - வேய் கோட்பாடு

தாவு மார்க்கத்தில் இடம்பெற்றுள்ள இன்னொரு கோட்பாடு வூ - வேய் (Wu - Wei) என்று பெயர் பெறும்.[19] இச்சொல்லிற்கு இணையான ஆங்கிலச் சொல் இல்லை. எனினும், Non-interference அல்லது 'letting go' என்பது கூடுதலான பொருத்தம் வாய்ந்த மொழிபெயர்ப்பு ஆகும். தமிழில் குறுக்கீடின்மை, 'போகட்டும்' என்று இதனைக் கூறலாம். அடிமட்டத்தில், இயற்கைத் தன்மைக் (Naturalness) கொள்கை என்று சொல்லப்படும் 'வாழ், வாழவிடு' என்பதுதான் இயற்கைத் தன்மை என்று அறியப்படுகிறது. உரசலைத் தவிர்த்தலும், உரசலால் உண்டாகும் வேறுபாட்டையும் முரண்பாட்டையும் தவிர்த்தலும் வூ - வேய் (wu - Wei) என்னும் இயற்கைத் தன்மைக் கோட்பாடு ஆகும். தனிமனிதன் நிலையிலோ, தேசிய மட்டத்திலோ உரிமையினையும், பிறர் கருத்துக்களைப் புரிந்துகொள்ளுதலையும் இக்கொள்கை வலியுறுத்துகிறது. தன்னலத்திற்கு வித்திடும் ஆணவத்தைப் போக்குதலையும் இக்கொள்கை

அறிவுறுத்துகிறது. பிறர்க்கு வழி விடுதல், 'போகட்டும்' என்ற மனப்பான்மை என்பவற்றையும் இக்கொள்கை சுட்டுகிறது.

உயர்மட்டத்தில் வூ - வேய் என்பது ஆசையின்மை, உணர்ச்சி வசப்படாமையினைக் குறிக்கிறது. இதனால், மன இறுக்கத்தினின்றும் விடுதலை கிடைக்கிறது. மெய்யுணர்வுக்கு உதவுகிறது. எல்லா முழுமையான இயக்கமும் இயல்பாக நிகழ்கிறது. பிரபஞ்சத்தின் இருப்புக்கு எம்முயற்சியும் தேவையில்லை. அவ்வாறு மனிதனின் நிலையும் அமைதல் வேண்டும். ஒருவன் இயற்கை (எதேச்சை) நிகழ்வினை அடையவில்லையெனின், அவன் செயல்கள் யாவும் இச்சையின் விளைவுகளாகவும், பகுத்தறிவின் ஆய்வு முடிபுகளாகவும் அமையும். எனவே, அவையாவும் செயற்கையானவை, விண்ணக இயக்கத்துடன் ஒத்திசையாதவை, பிரயாசையுடையவை. இயக்கம் என்பது முடங்கியுள்ள தன்னை விரித்தலாக (Unfolding) இருத்தல் வேண்டும்; உடலை வருத்தி வருவதாக இருக்கக் கூடாது. தானே, தன்னிச்சையில் செயல்படுவதான் இயக்கம் (Movement). இதனால், இதனைச் சடத்தன்மை, சுறுசுறுப்பின்மை என்று பேச முடியாது.

தாவு மார்க்க முனிவர் (Sage), உலகப் பொருள்களின் வட்டத்திற்குப் புறத்தே உள்ள அறிவினைப் பெற்றிருந்தும், அப்பொருள்களுடன் தொடர்பு கொள்ளுவதற்கு அவர் ஒருபொழுதும் தவறுவதில்லை. அவருடைய ஆன்ம சக்தி (Spirit) எல்லாவற்றையும் கடந்திருப்பினும், அது எப்பொழுதும் உலகில்தான் உள்ளது. உலகில் எவ்வாறு வாழ்வு வருகிறதோ, இருக்கிறதோ, அதனை அவ்வாறே ஏற்றுக் கொள்ளுதல்தான் வூ - வேய் எனப்படும். காலத்திற்கும் பருவத்திற்கும் காத்திருத்தலும், ஒரு விடயத்தை வலியுறுத்தாதிருத்தலும், ஆனால் அது தானே தனக்குரிய நல்வேளையினையும் இயல்பினையும் விரித்து விடுதலும்

இக்கொள்கைக்குரிய கூறுகள் ஆகும். சூவாங்கு சூ (Chang Tzu) என்னும் தாவு ஞானி, தமக்கு ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளை மகிழ்வுடன் முடித்தல் இக்கொள்கைக்கு உரியது என்றார்.

வூ-வேய் (Wu-Wei) இன் 'போகட்டும்' (-Letting go) என்ற கோட்பாடு, பாதுகாப்புக்குரிய பொய்த் தெய்வங்களை வழிபடுதலை விட்டு விடுதலை வலியுறுத்துகிறது. பாதுகாப்புத் (Security) தேடி அடைதல் முட்டாள்தனம் என்று தாவு முனிவர்கள் உபதேசித்தனர். வாழ்வு என்பது செயலாற்றல் உடையது. வளைந்து செல்வது; எப்பொழுதும் மாறிக் கொண்டிருப்பது. இறப்பு என்பது இறுக்கமானது, இயக்கம் அற்றது (Static).

இயக்கம் அற்ற மையத்திற்கு மாறாக, பாதுகாப்புக் குறித்த ஆசையினைத் தவிர்தல், சூனியத்தின் தன்மை அறியாமை என்பதுதான் பாதுகாப்பு.

வூ-வேய் (wu-Wei) என்பது செயலற்ற செயற்பாடு (actionless activity) ஆகும். இதுவே வாழ்வுச் சக்கரத்தின் மையப் புள்ளி. தாவோ (Tao) என்பதற்கு இயக்க மற்ற இயங்குவோர் (Motionless Mover) என்றும்; அது ஒரு பொழுதும் செயற்படாது என்றும் அதன் மூலமாகவே எல்லாம் செயல்படும் என்றும் விளக்கம் கூறப்படுகிறது. இவ்விளக்கம் கேனோபநிடதத்தில்,

> "வாயினால் பேசாததாய், வாயினைப் பேசுவிப்பதாய் உள்ளது எதுவோ அதுவே பிரமம் என்றும்; செவியினால் கேளாததாய், செவியினைக் கேட்பிப்பதாய் உள்ளது எதுவோ அதுவே பிரமம் என்றும் அறி. அதன் பக்கலிலிருந்து அதனால் இயக்கப்படுகின்ற நீ ஒருபொழுதும் பிரமம் ஆகாய்"

என்று வற்புறுத்திக் கூறப்படும் கொள்கையுடன் ஒப்பிட்டு உணர்ந்து மகிழ்தற்கு உரியது.[20]

செயல் (Action), செயலின்மை (No action) இல்லாத ஒரு நிலையினையும் எதேச்சையாகவும் இயல்பாகவும் எல்லாம் நடைபெறுதலையும் தாவு நெறி வலியுறுத்துகிறது. பயனைக் கருதி எச்செயலையும் புரியாதே; பாசம் வைத்தும் செயல் புரிதல் கூடாது. இக்கருத்து பகவற்கீதையில் கூறப்பட்டுள்ள கருத்துடன் ஒத்துள்ளது. செயல், செயலின்மை என்பன இருமை எல்லைக்குள் (Realm of Duality) உள்ளவை. முரண்கள் எல்லாம், இயக்கமற்ற மையத்திற்குத் திரும்பும் பொழுது தாமாகவே நீங்கிவிடும்.

தாவு நெறியாளர் சுவாங்கு சூ (Chuang Tzu) என்பாரின் நூலுக்குக் குவோ ஹிசியங்கு (Kuo Hsiang) எழுதியுள்ள உரையில்,

> "செயல்படாமை என்பது ஒன்றும் செய்யாமை அன்று. உண்மையில் எது செய்கிறதோ அது எதனையும் புரியட்டும். அதன் இயல்பு திருப்திபெறும். செயல்படாமைக் கொள்கையினை (Theory of Non-action)க் கேள்விப்படும் மக்களில் சிலர், 'நடப்பதைவிட கிடப்பது சிறந்தது' என்று எண்ணுகின்றனர். இவர்கள் சுவாங்கு சூவின் தத்துவத்தினைப் புரிந்து கொள்ளவில்லை"

என்று கூறியுள்ளார்.[21]

தடுத்து நில்லாமை (Non -resistance) வன்செயலின்மை (Non-violence) என்பதுதான் வூ-வேய் (Wu-Wei) என்பதின் தெள்ளத் தெளிந்த முடிபாகும். தாவு மார்க்கத்தினை நிறுவிய இலவோசியசு (Laocius, Lao Tzu) தடுத்து நில்லாமையுடன், தீமைக்கு ஈடாக நன்மை புரிதலையும் வலியுறுத்தினார்.[22] இவர் கருத்துடன்,

> "இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்தோ சால்பு?"

என்று திருவள்ளுவர் இயம்பியுள்ள சான்றாண்மைக் கொள்கையும் ஒத்திருத்தலை எண்ணி மகிழலாம். இக்கருத்தினை முன்னரும் கண்டோம்.

இலவோசியசு வன்செயலின் எவ்வகையும் காட்டு மிராண்டியின் அல்லது குற்றவாளியின் அறிகுறியாகும் என்றார். மேலும், "நல்ல முடிவுக்கு வந்த பலாத்கார மனிதனை எனக்குக் காட்டுங்கள். அவனை எனக்குக் குருவாக எடுத்துக் கொள்ளுவேன்" என்று இயம்பினார். முதிர்ச்சியும், பண்பாடும் கொண்ட ஒருவன் பலாத்காரத்தில் ஈடுபடமாட்டான். 'தாக்குகிற ஆட்டுக்கடா ஒரு சுவரை உடைத்துத் தள்ளிவிடும்; ஆனால், உடைபட்டதைப் பழுது பார்க்க அதனால் முடியாது. கடுங்காற்று கூட ஒருநாள் முழுதும் அடிக்க முடியாது. கொட்டும் மழைகூட ஒரு காலை முழுதும் பெய்தல் இயலாது. எனவே, வன்செயல் மூலம் ஒருவன்தன் ஆற்றலை இழக்க வேண்டாம்' என்று அறிவுறுத்தினார்.

தாவு மார்க்கம் தீமைக்கும் நன்மை செய் என்று வலியுறுத்திய கொள்கை கன்பூசியசுக்கு உடன்பாடு இல்லை. தீமைக்கு நன்மை செய் என்றால், நன்மைக்கு எதனைச் செய்வாய்? என்று கன்பூசியசு கேட்டார். தீமை புரிந்தவனுக்குத் தண்டனை தரவேண்டும். நன்மை புரிந்தவனுக்கு அன்பு செலுத்த வேண்டும் என்றார். ஒரு வகையில் கன்பூசியசு நெறி யூத நெறியுடனும் தாவு நெறி ஏசுபிரான் நெறியுடனும் ஒத்திருத்தல் நோக்கத்தக்கது.

7. முப்பொருள் உண்மை

தாவு மார்க்கம், 1. விண்ணகம், 2. மனிதன், 3. மண்ணகம் என்ற முப்பொருள் உண்மை பேசுவது.[23] விண்ணகம் (Heaven) என்பது Spirit (ஆவி), அல்லது Essence (சாரம்) என்பதைக் குறிக்கும். மண்ணகம் (Earth) என்பது பொருள் (substance) ஆகும். மனிதன் (Man) என்பவன்,

விண் மண் என்பனவற்றின் கலவை என்றும், இரண்டின் இடையே விளங்கும் நடுவர் (Mediator) என்றும், இவ்விரண்டின் இயல்புகளில் பங்கு கொள்ளுபவன் என்றும் தாவு மார்க்கம் பேசுகிறது.

மனிதன் (Man) என்று சொல்லப்படுபவன் தெருவில் உள்ள பொது மனிதனைச் சுட்டவில்லை. தாவு கூறும் முனிவனை (Sage) அல்லது கன்பூசிய நெறியின் பூரண மனிதனைக் குறிக்கும். இப்பூரண மனிதன் விண்ணக மைந்தன் (Son of Heaven) ஆகிய பேரரசனைக் (emperor) குறிக்கும். யின்-யங்கு தத்துவத்தின்படி மனித இயல்பின் பூரண உள் சக்தியைப் பெறுபவனே பூரண மனிதன் ஆவன். வாழ்வியலில் காணப்படும் இரு கோடிகளையும் (Two extremes), இன்ப துன்பம், நன்று தீது உள்ளிட்ட இரு முரண்களையும் சமன் செய்து, அவற்றின் ஊடே ஒருமை நிலையினை எடுத்துக் காட்டும் ஞானியாகப் பூரண மனிதன் (Perfect Man) அல்லது முனிவர்(Sage) திகழ்கிறார். தத்துவஞானியே நாட்டினை ஆளவேண்டும் என்ற பிளேட்டோவின் கருத்து இங்கு எண்ணிப் பார்த்தற்கு உரியது.

வியவகார நடைமுறை உலகில் ஆன்மாவும் (Spirit) பொருளும் (Substance), மூன்றாவது கூறாகிய உடலினால் (Body) ஒன்றிணைக்கப்பட்டு, உடலில் இவ்விரண்டும் (Spirit and Substance) இணைந்துள்ளன. இரண்டிற்கும் நடுவே உள்ள மனிதன் விண் (Heaven), மண் (Earth) என்ற இரண்டின் குணங்களையும் தன் இயற்கையாகப் பெற்றிருக்கிறான். மேலும், அவனிடம் விலங்கின் உணர்வுகளும், புனிதனாதற்குரிய விழைவுகளும் விரவியே காணப்படுகின்றன. அவன் தாவு (Tao) என்ற நெறியைப் பெற்றால், இரு முரண்களையும் கடந்து உயர்ந்து ஒளிவீசுவான்.

விண் (Heaven), மண் (Earth), மனிதன் (Man) என்ற மூன்றும் படைப்பின் அடித்தளம். விண் அவற்றைப்

படைக்கிறது. மண் அவற்றை வளர்க்கிறது. மனிதன் அவற்றை நிரப்புகிறான். தாவு மார்க்கத்தின் முப்பொருள் சிந்தனையும் கன்பூசிய பூரணமனிதச் சிந்தனையும் தொல்பழங்காலத்துச் சீனச் சிந்தனையிலிருந்து எடுத்து வளர்க்கப் பெற்றவை ஆகும்.

சீனச் சமுதாயத்தின் மையமாகத் திகழ்பவர் பேரரசர் (Emperor). இவர்தான் பூரணமனிதனின் (Perfect Man) குறியீடாகவும், விண்மண் என்பனவற்றின் சந்திப்புப் புள்ளியாகவும், விண்ணின் மைந்தராகவும் (Son of Heaven), மண்ணில் அவரின் பிரதிநிதியாகவும் (Regent on Earth) விளங்குகிறார். மக்களுக்குக் காட்சி கொடுக்கும் பொழுது பேரரசரின் சிங்காதனம் தெற்கு நோக்கி இருந்தது. துருவ நட்சத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட சீனர்களின் அண்ட அமைப்பியல் (Cosmology), வானியல் (Astronomy) என்பனவற்றை நோக்கி, மண்ணகத்தில் உள்ள இராச்சியத்தில் பேரரசர் நடு இடத்தினைப் பெற்றார். இந்நிலை விண்ணகத்தில் துருவ நட்சத்திரத்தின் (Pole Star) நிலையினை ஒத்தது. விண்ணகத்தின் நடு இராச்சியத்தை (Celestial Middle Kingdom) பிரதிபலிப்பதால், சீன நாட்டிற்கு மண்ணகத்தின் நடு இராச்சியம் (Terrestrial Middle Kingdom) என்ற பெயர் ஏற்பட்டது என்பர்.

விண்ணகம் (Heaven), இயற்கை (Nature) ஆகிய இரண்டுக்கும் உரிய நடுவு நிலைமை, நீதி ஆகியவற்றைப் பேரரசர் நடைமுறைப்படுத்துதல் வேண்டும். இவ்விரண்டில் எது ஒன்றையும் கடந்து செல்லின் தானே தண்டனை அவருக்கு வந்து சேரும். விருப்பு வெறுப்பின்றிச் சமமாக எப்பொருளையும் விண் (Heaven) மூடி நிற்றல் போல (-கூரை போல), பூரண மனிதராகிய பேரரசர் ஒரு சார்பும் இன்றி எல்லோர்க்கும் பொதுவாக, சமநீதி வழங்கவேண்டும். சார்புடைய மனிதன், விண்ணின் கீழ் உள்ள உலகிற்குக் குழப்பத்தையும் அராஜகத்தையும் கொண்டு வருகிறான்.

நடுவு நிலைமை என்பது பேரரசர்க்கு மட்டும் தேவையான பண்பு அன்று; தனிமனிதனுக்கும் அப்பண்பு தேவை. தன்னைத் தானே ஆள்பவன் ஆகிய தனிமனிதன், ஆணவத்தினால் உண்டாகும் சுயநலத் தேவைகளைக் கட்டுப்படுத்தி நடுநிலைமையினைப் பேணிக் காத்தல் வேண்டும். விண், இயற்கை என்பனவற்றின் விதிகளுக்கு ஒத்துப் போவதால், அவனுக்குரிய மைய இடத்தைப் (Central place) பெறுவதுடன், புனிதனாக (sage) உயர்வு பெற்று விண் மண் இரண்டின் நடுவராக (Mediator) ஒளிரவும் இயலும்.

இன்றைய சீன நாட்டில் தாவு நெறி (Taoism) இலவோசியசு, சுவாங்கு சூ ஆகியோரால் கற்பிக்கப்பட்டபடி தத்துவம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த மார்க்கமாக இல்லை; பொதுமக்களிடம் இழிநிலை அடைந்த மூடநம்பிக்கைகளின் தொகுப்பாகவே உள்ளது.

8/ தாவு - கலைநிலை

தங்கு (Tang) பேரரசர்கள் மற்றும் சுங்கு (Sung) அரசர்கள் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் சீனக்கலை புதுமலர்ச்சியும் பெருவளர்ச்சியும் பெற்றது. அரசவைச் சமயமாக விளங்கிய தாவு நெறி தந்த எழுச்சியும் செல்வாக்குமே கலை வளர்ச்சிக்குக் காரணம். தத்துவ, ஆன்மீக அடிப்படையில் கலை வளர்ச்சி அடைந்தது. பிரபஞ்சக் கோட்பாட்டின் வெளிப்பாடாகவும், முழுமையின் காட்சியாகவும், மனித ஈடுபாடுகள், தவறான போக்குகள் ஆகியவற்றுக்கு ஆட்படும் நிலையினின்றும் பெறும் விடுதலையாகவும் கலையின் நிலை விளங்கியது. இளைப்பாறுதல் (Repose) என்னும் தத்துவத்தின் அடிப்படையில்தான் மரபுவழிப்பட்ட சீனக்கலை அமைகிறது. பொது வாழ்வினைக் காட்சிப்படுத்தாமல், மெய்யுணர்வினை ஓவியமாக்குவதன் மூலம் வரம்பற்ற மன நிறைவினைக் கலைஞர் பெற்றனர். மருத நிலங்களில்

குச்சி பொறுக்குதலிலும், குன்றுகளில் மூலிகைகளைச் சேகரித்தலிலும், ஆறுகளிலும் நீர் நிலைகளிலும் அமைதியாக மீன் பிடித்தலிலும் மலைவாழ் கலைஞர்களின் ஓவியங்களிலும் கவிஞர்களின் பாடல்களிலும் மன அமைதியைக் காணமுடியும். இவர்கள் கூரை வேய்ந்த குடிலில் தனிமையில் இனிமை கண்டு வாழ்ந்தவர்கள். காற்றோசையும் நீரோசையும் தவிர இவர்கள் இருந்த இடத்தில் வேறு ஓசைகள் இல்லை.[24]

தாவுக் கவிதைகளில் ஊசியிலை மரவகையின் ஊடே அடிக்கும் காற்றின் குலவையும், மூங்கில் தோப்பில் நுழைந்து வரும் தென்றலின் ஓசையும் இடம்பெறும். இந்த ஓசை மிகவும் மென்மை வாய்ந்ததாய், அனைத்தும் கனவோ என்று கருதும்படி மனத்தினையும் உணர்வினையும் கிளரச் செய்து அனுபவத்தின்பின் அனுபவத்தினை விட்டுச் செல்லும். தாவுக்கலை என்பது கட்புலனாகாத மறையியலை (Mysticism)க் கட்புலனாகக் காட்டுவது. பார்வையிற்படாத உலகுகளைக் காண்பதற்குரிய சன்னலாக இக்கலையின் தெள்ளத் தெளிந்ததும், மறைப்பற்றதும் ஆகிய பண்பு செயற்படுகிறது. இக்கலை குறிப்புப் பொருளை உணர்த்துமே தவிர, வெளிப்படையான புலப்பாடாக இருத்தல் இல்லை. முற்ற முடிந்த உண்மையினைக் (Infinity) காண்பதற்குரிய கதவினை இக்கலைப் படைப்பு திறந்து விடுகிறது.

சீனக் கலைஞர் ஓவியம் (Painting), பாடல், இசை என்ற மூன்றின் வாயிலாகத் தன் கருத்துக்களையும் கற்பனைகளையும் வெளிப்படுத்தும் ஆற்றல்படைத்தவர். இம்மூன்றில் ஒன்றிலிருந்து ஒன்றை மாற்றி அமைக்கவும் இயலும். சீனக் கவிதையில் இசையும் கலந்துள்ளதால், அதனைப் படிப்பதை விடப் பாடுவதுதான் மரபாக உள்ளது. பண்டைய தாவு முனிவர்கள், 'கவிதை என்பது காணும் வடிவங்கள் இல்லாத ஓவியம்' என்றும், 'ஓவியம்

என்பது காணும் வடிவம் பெற்ற கவிதை' என்றும் கூறினர். சீன நாட்டில் கலை என்பது ஒரு தொழிலாக இல்லை; அது வாழ்க்கையாகவே இருந்தது.[25]

தாவுக் கலைகளில் இடம்பெறும் சூனியம் (Emptiness) அல்லது வெட்டவெளி (Open space) என்பது அக அனுபவத்தினையும் அதன் பயனையும் சுட்டும் குறியீடாகும். தியானம் என்பது ஓவியத்தின் முக்கியப் பகுதியாக அமைகிறது. வெறுமை (Emptiness) என்பது திறந்த மனத்தன்மை (Open mindedness). எச்சார்பும் இன்றி ஒருவன் திறந்த மனத்துடன் இருந்தால் ஒவ்வொன்றின் அறிவும் அவனுக்குப் போய்ச்சேரும்.

ஒரு குவளை, தட்டு, பாத்திரம் என்பவற்றின் வெற்றிடம் தான் (Empty space) அவற்றின் பயன்பாட்டினை உண்டாக்குகிறது. கதவுகள் மற்றும் சன்னல்களின் திறந்த வெளிதான் ஒளியினை உள்வரச் செய்கிறது. சட்டம் போடப்பட்டிருப்பினும், உண்மையான பயன்பாடு அவற்றின் திறந்த வெளியில்தான் (Emptiness) உள்ளது. மனிதன் எலும்புச் சட்டகம்; இதனுள் வேறெதற்கும் இடமில்லை; ஒளியையும் தடுக்கிறது; இயக்கத்தையும் தடுக்கிறது; தாவுக்கு (Tao) இடம் தருவதில்லை.

களிமண் பாண்டங்களாக ஆக்கப்படுகின்றது. இவற்றில் வேறொன்றும் இல்லாத திறந்தவெளி (Open Space) இருப்பதால்தான் அவற்றைப் பாத்திரங்களாக நாம் பயன்படுத்துகிறோம். ஒரு வீட்டின் சுவர்களை வெட்டிக் கதவுகளும் சன்னல்களும் அமைக்கப்படுகின்றன. அவற்றில் காலியான வெளி (Empty space) இருப்பதால்தான் அவற்றை நாம் பயன்படுத்த முடிகிறது. எனவே ஒரு புறம், இருப்பின் (Existence) நன்மையினை நாம் பெற்றிருக்கிறோம்; இன்னொரு புறம்,இன்மை (Non-Existence)யினையும் பயன் கொள்ளுகிறோம்.[26] வெறுமை (Emptiness) அல்லது சூனியம் (Void) இருமையினைக்

(Dualism) கடந்துள்ளது. இது இல்பொருள் அன்று. நிறைவு, வெறுமை என்பன உண்டாகக் காரணமாகவுள்ள தாவோ (Tao) அவ்விரண்டும் அன்று. அது முழு நிறைவு (Plenitude), நிறைவின் முழுமை (Fullness of Completion). இறுதிக் குறிக்கோள் ஆகிய மெய்ஞ்ஞானம் பெறுநிலை இதுவே. இதனை வெறும்வட்ட வடிவமாகக் குறியீடு செய்வர். சூனியத்திலிருந்து எல்லாம் தோன்றுகின்றன; மீண்டும் அவை அதில் ஒடுங்குகின்றன.

"வரம்பற்றதும் முடிவற்றதும் (Infinity) ஆகிய ஒன்றுடன் உன்னை ஒருங்கிணைத்துக்கொள். சூனியத்தில் சுற்றுலாப் போய் வா. எந்தப் பெறுதியையும் எதிர்பாராமல், இயற்கையிலிருந்து நீ பெற்றவற்றையெல்லாம் முழுமையாகப் பயன்படுத்துவாய். வெறுமையாக (Empty) விளங்குவாய்." தாவு என்பது தாவு நெறியின் முற்ற முடிந்த கொள்கையாகும். தாவு நெறியும் பௌத்தமும் சூனியக் கொள்கையினைத்தான் போதிக்கின்றன. "வெறுமை என்பது ஒளி தருவதற்குத் தவறுவதில்லை. ஒளி விளக்கம் என்பது வெறுமை தருவதற்குத் தவறுவதில்லை" என்பது பௌத்தக் கருத்து.

9. தாவுக்கவிதை

சீனக் கவிதையினை மொழிபெயர்த்தல் என்பது அருஞ்செயல் ஆகும். ஒலியியைபு விதிகள் (Rhyming rules) மற்றும் ஒலியியைபுக் கருத்துக்கள் (Rhyme ideas), ஒலியியைபு அடிகள் (Rhyming lines) என்பன பொருந்தி வருவதாலும்; எல்லாச் சொற்களும் ஓரசைச் சொற்களாக இருப்பதாலும் சீனக் கவிதையினைப் பிறமொழியில் பெயர்த்தல் கடினமாகும். சான்றாக, ஓரசைச் சொற்களாகிய மலர் (Flower), நடு (Middle), ஒன்று (One), புட்டி (Bottle), மது (Wine) என்பனவற்றை முதலடியாகக் கொண்டு தொடங்கும் லீ போ (Li Po) என்னும் தங்கு (Tang) காலக் கவிஞரின் பாடலை ஆங்கிலத்தில்

"சிறுவிழா" அல்லது "சிறு விருந்து" (Little Fete) என்று மொழிபெயர்த்தனர். இதன் முதலடியை,

"I take a bottle of wine and I go to drink it among the flowers"

என்று மொழிபெயர்த்தனர். கவிஞர் லீ போ (Li Po) வாழ்க்கையினை எள்ளி நகைத்தவர்; பூரண வாழ்வினைப் பேசியவர். பாடல்களைப் புனைவதற்கு முன் நூற்றுக்கணக்கான கிண்ணம் மதுவினைப் பருகும் பழக்கத்தினர்.[27] இவர் பாடலைத் தமிழில் தருவோம்:

"மதுக்கிண்ணம் ஒன்றெடுத்து மலர்களின் நடுவே பருகச் செல்கிறேன்
எப்பொழுதும் நாங்கள்மூவர் - நான், என்நிழல், என்நண்பன் ஒளிநிலா
நிலா குடிப்பது பற்றி ஒன்றும் அறியாதவன்.
என் நிழலுக்கு ஒருபொழுதும் தாகம் ஏற்படுவது இல்லை.
நான்பாடும் பொழுது மௌனமாய் நிலா கவனித்துக் கேட்கும்.
நான் ஆடும் பொழுது என்நிழல் கூட ஆடும்.
விழா நடைமுறைகளுக்குப்பின் விருந்தினர் பிரிவர்;
இந்த வருத்தம் நான் அறிகின்றிலேன்.
வீடு செல்லும் பொழுது நிலாவும் என்னுடன் வருகிறது,
என் நிழலும் என்னைத் தொடர்ந்து வருகிறது."

தாவுக் கவிஞர் லீ போ (Li Po)வின் பாடல் புனைவியல் சாயலும் (Romantic tint) கற்பனைக் கவினும் பொருந்தியது.

தாவு நெறியில் குறியியல் (Symbolism) சிறப்பிடம் பெறுகிறது. இதனைப் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

10. குறியியல் (Symbolism)

கலையும் குறியியலும் விரவியே வந்துள்ளன. உண்மையான கலை என்பது மூல முதல் உண்மையினை

(Primordial Truth) கிரகித்துக் கொண்டு புலனாகாத - புலப்படாத ஒன்றைப் புலப்படச் செய்தலை முதன்மை நோக்கமாகக் கொண்டது. குறியியலின் குறிப்பிடத்தக்க பிரதிநிதித்துவமாக உண்மைக்கலை ஒளிர்கிறது. தாவுக் கலையில் குறியியலாக இல்லாத ஒன்று இடம்பெறுவது இல்லை. ஒவ்வொரு குறியும் (Symbol) குறியைவிடவும், அதனைப் பார்க்கும் மனிதனைவிடவும் மிகப் பெரியதொரு மண்டலத்தை நோக்குதற்குரிய சன்னலாக இருந்தது.

10.1. டிராகன்

தாவு நெயியின் குறியாக அமைவது ஒப்பற்ற Dragon ஆகும். இதற்கு வேதாளம் என்றும்; விலங்கு, பறவை, பாம்பு, முதலை ஆகியவற்றின் தோற்றம் கலந்த நெருப்புயிர்க்கும் பெரிய விலங்குவகை என்றும் புறாவகை என்றும், அச்சம் தரும் மனிதர் என்றும் பலவாறு சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம் பொருள் கூறுகிறது. இப்படி ஒரு உயிரினம் இருந்ததில்லை. சீனத் தொன்மங்களில் ஒன்றாக இது இருந்துள்ளது. இந்த விலங்கு இச்சமயத்தின் குறியாக மட்டுமன்றி, அதனை உருவாக்கிய புகழ்பெற்ற நிறுவனர் இலவோசியசையும் (Laocius, Lao Tzu) குறிக்கிறது.[28] இலவோசியசுக்கும் கன்பூசியசுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்புக்களில், கன்பூசியசு பின்வருமாறு கூறினார்:[29]

"பறவைகள் பறக்க முடியும், மீன்கள் நீந்த முடியும், விலங்குகள் ஓட முடியும் என்பது எனக்குத் தெரியும். ஆனால், ஓடுகிறது வலையில் அகப்படலாம், நீந்துகிறது தூண்டிலில் அகப்படலாம், பறப்பது அம்பினால் வீழ்த்தப்படலாம். ஆனால் டிராகன் (Dragon) எவ்வாறு மேகங்களின் வழியே காற்றில் ஏறுகிறது, விண்ணகம் செல்கிறது என்பதை

என்னால் சொல்ல முடியாது. இன்று நான் இலவோசியை (Laocius, Lao Tzu)ப் பார்க்கிறேன். அவரை ஒரு டிராகனுடன் என்னால் ஒப்பிடுதல் இயலும்."

இக்கூற்று கன்பூசியசு கூறியதாகத் தாவு மார்க்கத்து அறிஞர் சுவாங்கு சூ (Chuang Tzu) கட்டிவிட்டது என்ற கருத்தும் உண்டு. டிராகன் (Dragon), ஃபொனிக்ஸ் (Phoenix) பறவை ஆகிய இரண்டும் அரசக் கலையில் முறையே பேரரசரையும் பேரரசியையும் குறிக்கும் அடையாளங்கள் (Symbols) ஆகும். இவ்விரு குறிகளும் யின்-யங்கு (Yin-Yang) என்ற பிரபஞ்ச ஒருமையினை உள்ளடக்கியவை.

பந்துடன் கூடிய டிராகன் (Dragon with the ball) குறியியல் தொடர்பான பல கற்பனைகளுக்கு அடிப்படையாக அமைகிறது. ஒரு சாரார், இந்தக் குறியீடு மழையினை டிராகன் கொண்டு வருதலைச் சுட்டுகிறது என்பர். ஆனால், சீனத்தில் பந்து (Ball) என்பது விலையுயர்ந்த முத்தின் குறியீடு என்றும், நிலவின் குறியீடு என்றும் பிறிதொரு சாரார் கூறுகின்றனர்.[30]

டிராகன் உருமாற்றத்திற்குரிய வரம்பில் ஆற்றல்களைக் கொண்டது. இது அண்டத்திலிருந்து அணு உருவாக மாற வல்லது. இயற்கையிலும், மனித வாழ்விலும் தோன்றும் மாற்றச் சக்திகளின் முழு வடிவம் என்றும், நிரந்தர மாற்றத்தின் ஆற்றல் என்றும் இது கூறப்படுகிறது. இந்த டிராகன் கிட்டுதற்கு அரிய மலைக் குகைகளில் மறைந்து கிடக்கும்; கடலின் அளக்கமுடியாத ஆழத்தில் சுருண்டு கிடக்கும்; காலம் பார்த்து மெதுவாகத் தன்னைத் தானே செயற்பாட்டிற்கு எழுப்பிக் கொள்ளுகிறது; புயல் மேகங்களில் தன்னை விரித்துக் கொள்ளுகிறது; தன் பிடரியைக் கொதித்துக் குமுறும் நீர்ச் சுழிகளின் கருமையில் கழுவிக் கொள்ளுகிறது; அதன்

வளைந்த நகங்கள் மின்னலின் குறடுகளாகின்றன; அதன் பல்காறைகள் மழையில் அடிபட்ட பைன் (Pine) மரங்களின் பட்டையில் மினுமினுக்கத் தொடங்குகின்றன. வனங்களின் உதிர் இலைகளைச் சிதறச் செய்து வீசும் சூறாவளியில் அதன் குரல் கேட்கப்படுகிறது; இலையுதிர்ந்ததும்விரைவில் புதிய வசந்தம் வருவதற்கு விரைவுபடுத்துகிறது.

10.2. கயல்மீன்

கயல்மீன் என்பது சாதாரண மனிதனைச் சுட்டும் குறியீடாக (Symbol) உள்ளது. டிராகன் வாயிலைத் (Dragon's gate) தாண்டிக் குதித்ததும் அவன் அரசாங்கத் தேர்வுகளின் உணர்ச்சிகளைப் பெறுகிறான். இன்னும் மேல்படிக்குச் செல்லும் பொழுது மெய்ஞ்ஞானம் (Enlightenment) எய்துகிறான். விடாமுயற்சி, வீரம், டிராகன் என்பதின் அடையாளமாக உள்ள ஆற்றல் ஆகியவற்றை அடைவதற்குரிய வழியில் மேற்கொள்ளப்படும் உறுதிப்பாடு - என்பனவற்றின் குறியீடாகவும் கயல் (Carp) உள்ளது.[31]

10.3. தண்ணீர்

டிராகனுக்கு அடுத்த நிலையில் தண்ணீர் தாவு நெறியில் அடிக்கடி பயன்படுத்தப்படும் குறியீடாக உள்ளது. அது வெளிப்படையான பலகீனத்தில் பலமாக உள்ளது; வாழ்வின் ஓட்டமாக உள்ளது; நீதித் தீர்ப்பின் குளிர் நிலையாக இருப்பது.

தண்ணீர் உரமாகிறது, புத்தாக்கம் தருகிறது, தூய்மைப்படுத்துகிறது; எல்லா உயிர்களுக்கும் தேவைப்படுகிறது. பிறர் வெறுக்கும் இடங்களில் கூட இது இருக்கிறது. எனவே, இது தாவோ (Tao)வுக்கு அருகில் உள்ளது. அறிவுடைய மாந்தன் ஆற்றின் நீரோட்டத்தினை எதிர்த்துச் செல்லுவதால் தன் சக்தியையும் வலிமையினையும் இழக்கிறான். அதனைக்

கடந்து போகிறவன் தன் வலிமையினை இழப்பதும் இல்லை; தன்னைத் தண்ணீர் அடித்துச் செல்லவும் அனுமதிப்பதில்லை. நீரோட்டத்தின் போக்கினைப் புரிந்து கொண்டு இங்கு வழியைவிட்டு, அங்கு வழியைப் பிடித்துக் கடக்கிறான். இதற்குக் குறைந்த ஆற்றலே போதும், மிகுந்த பயனைப் பெறுகிறான்.

10.4. தாமரை

தாமரை என்னும் குறியீடு பூரணத்துவம், மெய்யொளி பெறுதலைச் சுட்டுகிறது.[32] பூரணத்துவமும் (Perfection) மெய்ஞ்ஞானம் பெறுதலும் (Enlightenment) தாமரை என்ற குறியீட்டால் சுட்டப்படுகிறது. இந்தக் குறியீட்டில் யின்-யங்கு (Yin-Yang) பண்புகளின் சமனிலை பொருந்தியுள்ளது. சேற்றில் பிறந்து, மழுங்கல் தண்ணீரின் மேல் சூரிய முழு ஒளியில் தாமரை மலர்கிறது. அதன் வேர்கள் நிலைத் தன்மையினையும், அடிப்பகுதி வாழ்வின் நடுக்கட்டினையும் சுட்டுகிறது. ஒளி மண்டலத்தில் விரிவடைதல் மற்றும் மெய்யுணர்தல் என்பவற்றின் அறிகுறியாகத் தாமரைப் பூவின் மலர்தல் அமைகிறது. மனிதனின் முழுமையான வளர்ச்சி, ஆற்றல்கள், ஆன்மீக வளர்ச்சி என்பனவற்றைத் தாமரைக் குறியீடு பிரதிபலிக்கிறது. பேரரசிகள், பேரரசர்தம் பெருமைத் தாய்மார்கள் ஆகிய மேன்மக்களைச் சுட்டுதற்குத் தாமரை அடைமொழியாக வருகிறது. பெண்மை, வனப்பு, தூய்மை, பூரணத்துவம் ஆகியவற்றின் குறியீடாகவும் தாமரை அமைகிறது. தாமரைச் செடி ஒரே நேரத்தில் அரும்புகள், மலர்கள், விதைகள் என்பனவற்றைத் தாங்கி நிற்பதால், இறப்பு (Past), நிகழ்வு (Present), எதிர்வு (Future) ஆகிய முக்காலங்களின் குறியீடாகவும் திகழ்கிறது. யின் (Yin)னுக்கு உரிய தண்ணீரின் ஆற்றலையும், யங்குக்குரிய (Yang) ஒளியின் ஆற்றலையும் ஒருங்கே பெற்றிருத்தலின் தாமரை என்பது முழுமையின் குறியீடாகவும் உள்ளது.

தானே தோன்றி, தானே இருத்தலின் தாமரை தாவோ (Tao)வாகக் கருதப்படுகிறது.

தமிழ்ப் பண்பாட்டிலும் தாமரை சிறப்பிடம் பெற்றுள்ளது. இறைவன் திருவடியைத் 'தாமரை புரையும் காமர் சேவடி' என்று குறுந்தொகைக் கடவுள் வாழ்த்து போற்றுகிறது. 'திருமுகம் மலர்ந்த தெய்வத் தாமரை' என்று சிறுபாணாற்றுப்படை பேசுகிறது. தாமரைக் கண்ணான் உலகினைத் திருக்குறள் சுட்டுகிறது. புத்தர்பிரானின் ஆசனத்தினைத் தாமரைப் பீடிகை என்று பௌத்தக் காப்பியம் மணிமேகலை போற்றுகிறது. சத்தரும புண்டரிகம் (-நல்லறத் தாமரை) என்பது மகாயான பௌத்த நூல்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்திய நாட்டில் தோன்றிய இலக்கியங்களிலும் சமயங்களிலும் தாமரை உயர்ந்தவற்றின் குறியீடாகவும் பேரழகின் குறியீடாகவும் பேணப்படுகிறது.

10.5. மூங்கில்

தாவு நெறிக்குரிய இலக்கியங்களிலும் கலைகளிலும் தாமரைக்கு அடுத்து மூங்கில் சிறந்த குறியீடாக விளங்குகிறது. மூங்கில் நிமிர்ந்து நிற்றல், வளைந்து கொடுத்தல் என்ற இரு பண்புகளையும் கொண்டது. சீன ஓவியர்க்கும், கவிஞர்க்கும் தத்துவ ஞானிக்கும் மூங்கில் ஒப்பற்ற மரமாகத் திகழ்ந்துள்ளது. மூங்கில் வண்ணக்கலை பற்றிச் சீன மொழியில் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இந்தக் கலையினை முழுமையுறச் செய்யும் பொருட்டு அக்கலை வல்லுநர்கள் தம் வாழ்நாள் முழுமையினையும் செலவிட்டுள்ளனர். தாவு மார்க்கம் (Taoism) தழைத்தோங்கிய தங்கு அரச மரபின் (Tang Dynasty) ஆட்சிக் காலத்தில் அடைந்த மிகப்பெரும் கலைத்துறைச் சாதனைகளில் மூங்கில் வண்ணக்கலை ஒன்றாகும். முனிவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் யாவரும் விரும்பும் பொழுதெல்லாம் மூங்கிற்

காடுகளில் வாழ்ந்தனர். அங்கு, அவர்கள் தென்றல் உராசும் இலைகளின் ஓசையினையும், மலைச்சந்துகளிலிருந்தும் சோலைகளிலிருந்தும் சேய்மையிலிருந்தும் புறப்பட்டு வரும் ஒலிகளின் முணுமுணுப்பையும் கேட்டார்கள்; மௌனத்தின் சத்தத்தினையும் (the voice of silence) ஞான ரூபமாகக் கேட்டார்கள்.[33]

மனிதனின் ஆன்மாவுக்குரிய எல்லாப் பண்புகளையும் இயற்கைக்குரிய எல்லா இயல்புகளையும் சுட்டும் குறியீடாக மூங்கிலைத் தாவு நெறியினர் கொண்டனர். கருமை, வெண்மை முறையே இருளையும் ஒளியையும் சுட்டுதலின் இவ்விரு நிறங்களில்தான் மிகுதியாக ஓவியம் தீட்டினர். பிரபஞ்சத்தின் யின் - யங்கு குறியீடாக இவ்விரண்டும் உள்ளன.

வலிமைப் பண்பிற்கு மூங்கிலைக் கொண்டாற் போல, மெலிவு மற்றும் நிலையாமையினைச் சுட்டுவதற்கு பைன் (Pine), வில்லோ (Willow) என்ற மரங்களின் குறிகளை அடையாளமாகக் கொண்டனர்.

10.6. பருவ காலம்

பருவ காலங்கள் (Seasons) மனித வடிவங்களில் தீட்டப்பட்டன. பெண் ஒருத்தி அல்லது சிறுவன் மலர்களை அல்லது மாலைகளை ஏந்தியிருக்கும் ஓவியம் வசந்த காலத்தைக் காட்டுகிறது. அவர்கள் கூலங்களின் கதிர்க்கட்டினைச் சுமந்து செல்லுதல் அல்லது கோதுமை மகுடம் அணிந்து செல்லுதல் கோடைக்காலத்தின் குறியீடாகும்.[34]

மலர்களும் மரங்களும் அழியாத் தன்மையின் அறிகுறியாகவும், வாழ்வு இறப்பு ஆகியவற்றின் அனைத்துக் கூறுகளாகவும் அமைந்தன. பூம்பொழில் ஓவியம் நில உலகில் ஒரு சுவர்க்கத்தைக் குறித்தது. முனிவர்களும், கவிஞர்களும், இசைவாணர்களும் தங்கள்

நூலகங்களிலும், படிப்புக்களிலும் செலுத்தும் நேரத்தைவிட, சோலைகளிலும் தோட்டங்களிலும் கூடுதலாகச் செலவிட்டனர்.

10.7. புனித விலங்குகள்

டிராகன் (Dragon), ஃபொனிக்சு Phoenix), கிலின் (Ky-lin), ஆமை (Tortoise) என்பன நான்கும் புனித விலங்குகளாகப் போற்றப்பட்டன. இவற்றுள் முதல் மூன்றும் புராணங்களில் இடம்பெற்றவை; பல உயிரிகளின் உறுப்புக்களின் சேர்க்கையால் தோன்றுவன; யின்-யங்கு இணைப்பினை உடையவை. ஆமை மட்டும்தான் இயற்கையில் காணப்படுவது. இந்நான்கு விலங்குகளுமே ஆன்மீகச் சக்திகளின் குறியீடாக வரையப்பெற்றன.

ஆமை தண்ணீரின் சக்தி. படைப்பின் தொடக்கமே ஆமையிலிருந்து அமைகிறது. ஆமையின் கரிய நிறம் ஆதிக் குழப்பத்தையும், இரவினையும் வடமண்டலங்களையும் சுட்டும். உலகினைத் தாங்கி நிற்கும் ஆதாரமாக ஆமை கருதப்பட்டது. கூர்ம அவதாரம் இங்கு ஒப்பிடத்தக்கது.

10.8. பல்வகை விலங்குகள்

தொடக்க காலத்தில் சீன நாட்டில் புலிதான் விலங்குகளின் அரசனாக விளங்கியது. பௌத்த நெறி பரவிய பிறகுதான் சிங்கம் அறிமுகமாயிற்று. தமிழகத்திலும் இதுவே நிலை. சங்கப் பாக்களில் புலி களிற்றினைக் கூட வெல்லும் ஆற்றல் கொண்டதாகக் காணப்படுகிறது. திருவள்ளுவர்,

> "பரியது கூர்ங்கோட்ட(து) ஆயினும் யானை
> வெரூஉம் புலிதாக் குறின்"

எனப் பாடுதல் பார்க்கத்தக்கது. பௌத்தத்தில் புலி சினத்தையும், குரங்கு ஆசையினையும், மான் காதல்

பிணியையும் குறித்தன. தாவுக் குறியியலில் (Symbolism) புலி முக்கிய இடம் பெற்றிருந்தது. புலி இலையுதிர் காலத்தின் சின்னம்; கடும் புயலின் குறியீடு. யங்கின் (Yang) குறியாகவும் புலி அமைந்து வலிமை, வீரம், கடுமை, அழிப்பாற்றல் ஆகியவற்றின் உருவமாகவும் கொள்ளப்பட்டது. புலி யின் (Yin) குறியீடாகவும் நிலத்தினைக் குறித்தது.

நீர் எருமை என்பது வலிமை, வளைந்து கொடுக்காமை ஆகியவற்றின் குறியீடு. இலவோசியசு (Laocius, Lao Tzu) ஒரு பசிய எருமையின் மேல் ஏறிச் செல்வதாக வண்ண ஓவியம் அடிக்கடி தீட்டப்பெறுதல் உண்டு.

நாய் தாவு ஓவியங்களில் சிறப்பிடம் பெறும் விலங்குகளில் ஒன்றாகும். இது யின் அல்லது யங்கு ஆக அடையாளப்படுத்தப்படுகிறது. யங்கு என்ற நிலையில் புனித நாய் தீய ஆவிகளை விரட்டியடிக்கும். யின் என்ற நிலையில் அதே நாய் இரவில் காவலனாகப் பணிபுரியும்.

நரி, யின் ஆக அமைந்து இரவுக்குரிய விலங்காக எண்ணப்பட்டது. மாயா சாலங்களையும், உருமாற்றங்களையும் நரி ஓவியம் சுட்டுகிறது. நரிக்கன்னி (Fox-maiden) சிரிக்கும் பெண்; மாயா உலகின் ஒழுக்கம் சாராப் பண்புகளின் உறைவிடம்; கொடியது. உணர்வினைத் தூண்டுவது. ஒருமுறை மாணவர் ஒருவர் நரிக்கன்னியைக் காதலித்தார். கண்ணாடியில் தன்னைப் பார்ப்பதற்கு மட்டும் அவள் அனுமதித்தாள். அந்தக் கண்ணாடியும் அவன் புத்தகங்களில்தான் காணப்படும். அவன் படிக்கவில்லையெனில் அவள் ஊளையிடுவாள்; அவன் உழைத்துப் படித்தால் மகிழ்ந்து சிரிப்பாள். மூன்று ஆண்டுகள் கடுமையாகப் படித்து முதல் நிலையில் தேர்வில் வெற்றி பெற்றான். வெற்றிப் பெருமிதத்துடன் கண்ணாடிக்கு முன் சென்று தன் மகிழ்ச்சியைப்

பிரதிபலிக்கும் அக்கன்னியைக் கண்டான். அதன்பின் அவள் உண்மையாகவே மணமகளாக உருக்கொண்டு அந்த மாணவனை மணந்தாள் என்று ஒருகதை வழங்குகிறது.

10.9. வண்ணத்துப்பூச்சி

வண்ணத்துப்பூச்சி (Butterfly) ஆன்மா, மறுபிறப்பு, அழியாமை என்பனவற்றின் அடையாளம்.[35] மாயக் கனவுலகின் உருவகக் கதையில் சுவாங்கு சூ (Chuang Tzu) தன்னை ஒரு வண்ணத்துப் பூச்சியாகக் கூறியுள்ளார். "முன்பு ஒரு நாளில் சுவாங்கு சூ தான் ஒரு வண்ணத்துப் பூச்சியாக மாறியதாகக் கனவில் கண்டார். அந்தப் பூச்சியின் உருவில் தான் சுற்றுமுற்றும் பறந்து மகிழ்ந்தார். அந்தப் பூச்சிக்கு, தான் சுவாங்கு சூ என்று தெரியாது. திடீரென அவர் விழித்துப் பார்த்தார். தான் தானாகவே இருந்தார்" என்று லீயே சூ (Lieh Tzu) என்னும் தாவு நெறியாளர் ஒரு கதையினைக் குறித்துள்ளார்.

10.10. பறவைகள்

யங்கு (Yang) வகை உயிரிகளில் கொக்கு, மயில், சேவல், நாரை, வல்லூறு என்பன குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் வல்லூறு என்பது பிற பறவைகளைக் கொல்லும். வீரம், தைரியம் ஆகியவற்றின் குறியாகவும், போர்மறவர் இனத்துக்கு உரியதாகவும் இஃது எண்ணப்பட்டது. இந்தப் பறவை சீனர்களால் வெறுக்கப்பட்டது. எனவே, ஓவியத்தில் அரிதாகவே இடம் பெற்றது. கொல்லுவதும் திருடுவதும் தான் இந்தப் பறவைக்கு மகிழ்ச்சி தரும் என்று கவிதைகளில் கூறப்பட்டது.

வெள்ளை நிறத்து நாரையும் கருநிறத்துக் காகமும் இணைந்துள்ள வண்ண ஓவியம் யங்கு-யின் (Yang-Yin) ஆகியவற்றை அடையாளப்படுத்தியது. கொக்கும் பைன் (Pine) மரமும் ஒருங்கிருத்தலைப் போல, நாரை வில்லோ

(Willow) மரமும் சேர்ந்திருத்தலை ஓவியத்திலும் கவிதையிலும் காணலாம். மூன்றுகால் காகம் சூரியனில் வசிக்கிறது என்று நம்பினர். வீட்டுக் கூரைகளின் உச்சியில் அமர்ந்து சேவலும் கொக்கும் தீய சக்திகளை விரட்டுவதாகப் பல ஓவியங்கள் உள்ளன. மூன்று கால்களை உடைய பறவைகள் அல்லது விலங்குகள் சூரியனின் உதயம், உச்சி, அத்தமனம் என்பனவற்றின் குறியாகக் கொள்ளப்பட்டன. மூன்று கால்களை உடைய தவளை அல்லது குறுமுயல் நிலாவில் உள்ளதாக நம்பினர்.[36] நிலாவின் கறையினை முயலாகக் காணும் மரபு கலித்தொகை உள்ளிட்ட தமிழிலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது.[37]

மயில் பறவைகளின் அரசனாகப் போற்றப்படுகிறது.[38] தமிழில் கருடனைப் பறவைக்கு அரசாகக் கூறுதல் மரபு. ஆயினும் மயிலின் வண்ணம், ஆடல், அழகு என்பன இலக்கியத்தில் இடம் பெறுதல் சுட்டத்தக்கது. அரசாங்கச் சேவை புரிந்த நம்பிக்கைமிக்க ஊழியருக்கு மயிலிறகு பரிசாக வழங்கப்பட்டது.

10.11. கண்ணாடி

சீனக் கலையில் கண்ணாடிக் கலையும் ஒன்று. வெண்கலம், வெள்ளி உள்ளிட்ட நன்கு இழைக்கப்பட்ட உலோகங்களினால் கண்ணாடி செய்யப்பட்டது. அதன் ஒருபுறம் வழவழப்பும் மறுபுறம் சமயம், மரபு, பிரபஞ்சம் தொடர்பான குறியீட்டு ஓவியமும் இருக்கும். தீமையினை விரட்டியடிக்கும் ஆற்றல் கண்ணாடிக்கு உண்டு என்று சீனர் நம்பினர். கண்ணாடி மனிதனின் சுயத்தினைக் காட்டுகிறது. கண்ணாடி முனிவரின் குறியீடு. அவர் மனம் ஒரு கண்ணாடி. அது பொருள்களுடன் அசைவது இல்லை; அவற்றை எதிர்பார்த்தலும் இல்லை; பொருள்களுக்குப் பதில் குறிப்பு (Respond) தெரிவிக்கிறது; ஆனால், அவற்றைத் தன்னில்

இருத்திக் கொள்ளுதல் இல்லை. எதனாலும் தொடக்குறாமல் இருக்கும் கண்ணாடியைப் போலவே தாவு முனிவரும் எப்பொருளினாலும் பாதிப்பு அடைவதில்லை.

குறியியலுடன் தொடர்புடைய கருத்துக்கள் உலக இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. சில சான்றுகளைக் கூறலாம். தொல்காப்பியர் கூறியுள்ள உள்ளுறை, இறைச்சிக் கோட்பாடுகளும் தொடர்புடைய பிறவும் இங்குச் சுட்டத்தக்கவை. கி.பி.5ஆம் நூற்றாண்டினராகிய திருமூலர் ஊமைமொழி பற்றித் திருமந்திரத்தில் (1611) பேசியுள்ளார். இதனுள் ஒன்பதாம் தந்திரத்தில் பல பாடல்கள் (2866-2935) குறியியலுடன் இயைபுறுத்தி ஆராயத்தக்கவை. பிரெஞ்சு மொழியியல் அறிஞர் ஃபெர்டினாண்ட்சசூர் (Ferdinand Saussure, 1857-1913), அமெரிக்கத் தத்துவமேதை சார்லசு சாண்டெர்சு பியர்சு (Charles Sanders Pierce, 1839-1914), பிரெஞ்சு இலக்கியத் திறனாய்வாளர் ரோலண்டு பார்த்தெசு (Roland Barthes, 1915) என்ற நவீன யுகத்து அறிஞர் பெருமக்கள் குறியியல் (Semiotics) குறித்து உளவியல் மற்றும் மொழியியல் அடிப்படையில் விரிவான ஆய்வுகள் நிகழ்த்தியுள்ளனர். சீன ஞானிகள் வழங்கியுள்ள குறியியல் சிந்தனைகள் இவ்வகை ஆய்வினை மேலும் எடுத்துச் செல்லுவதற்குப் பெரிதும் பயன்படும் எனலாம்.

11. தாவு - வழியும் முடிவும்

தாவு (Tao) என்பது வழியாகவும் அடையும் இடமாகவும் இருப்பது. அது எதனாலும் உண்டாக்கப் படாதது; சுயம்புவாக உள்ளது. எல்லாம் அதுவே; இன்மையும் அதுவே. முதலும் அதுவே, முடிவும் அதுவே. காரிய காரணம் எல்லாம் தாவு தான். எல்லாப் பொருள்களும் தாவு-இல் இருந்து தோன்றுகின்றன; தாவுக்கு ஏற்பனவாக உள்ளன; முடிவாகத் தாவில் சென்று சேர்கின்றன.[39]

மேற்கோள் குறிப்புக்கள்

1. Cooper, J.C., **Taoism: The Way of the Mystic,** Thetford, Norfolk, *1984*, pp.*9-14*.
2. **Ethics of the Great Religions,** p.*232*.
3. Ibid, p.*233*.
4. **The Ideals of East and West,** p.*50*.
5. **Taoism: The Way of the Mystic,** p.*20*.
6. Ibid, p.*21*.
7. Ibid, p.*23*.
8. Ibid, p.*25*.
9. Ibid, p.*26*.
10. Ibid, p.*27*.
11. Ibid, p.*28*.
12. Ibid, p.*29*.
13. Ibid, p.*30*.
14. Ibid, p.*32*.
15. Ibid, p.*34*.
16. Ibid, p.*38*.
17. Ibid, p.*67*.
18. Ibid, p.*68*.
19. Ibid, pp.*73-76*.
20. கந்தசாமி, சோ.ந., **இந்தியத் தத்துவக் களஞ்சியம் - மூன்றாம் தொகுதி,** மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, *2003*, ப.*42*.
21. **Taoism: The Way of the Mystic,** p.*76*.
22. Ibid, p.*78*.
23. Ibid, pp.*81-83*.
24. Ibid, p.*93*.
25. Ibid, p.*94*.
26. Ibid, p.*95*.
27. Ibid, p.*102*.
28. Ibid, p.*107*.

29. Ibid, p.108.
30. Ibid, p.109.
31. Ibid, p.110.
32. Ibid, p.111.
33. Ibid, p.113.
34. Ibid, p.114.
35. Ibid, p.118.
36. Ibid, p.121.
37. கலித்தொகை, 144.18.
38. **Taoism : The Way of Mystic**, p.121.
39. Ibid, p.122.

8. மோவியமும் சட்டவியமும்
(கி.மு.350 - கி.மு.250)
(Moism and Legalism)

1. முன்னுரை

தத்துவம் ஒரு கற்பனை அறிவியல், தத்துவம் ஒரு வாழ்க்கைமுறை என்ற இரண்டிற்கும் இடையே பண்டைய சீன மெய்யியலார் வேறுபாடு கண்டிலர். அவர்தம் முதன்மை நோக்கம் மானிட உறவுகள் என்பதால், தத்துவம் என்பது ஒரு வாழ்க்கைமுறை என்ற கோட்பாட்டிற்கு முதல்நிலை வழங்கினர். புரியாத கலைச்சொற்களால் விவாதிக்கப்படு வதற்குரியது தத்துவம் என்று அவர்கள் எண்ணவில்லை. ஒரு தத்துவஞானி எதனைப் பேசினார், எதனை எழுதினார் என்பதற்குக் கொடுத்த மதிப்பினைவிட, தன் சொந்த வாழ்வினை அவர் எவ்வாறு நடந்து காட்டினார் என்பதற்குத்தான் கூடுதலான முக்கியத்துவம் கொடுத்தனர். சீனச் சான்றோர்கள் அவரைத் தத்துவத்தின் வாழும் வடிவமாகவே போற்றினர். கன்பூசியம், தாவு மார்க்கம் என்பவற்றைப் போலவே வேறு பல சிந்தனைப் பள்ளிகளும் (Schools of Thought) விளங்கின. குழம்பியதும் அமைப்புக் குலைந்ததும் ஆகிய ஒரு சமுதாயத்தினைச் செம்மைப்படுத்தும் பொருட்டு அவை தோன்றின. என்றாலும், கன்பூசியமும் தாவு மார்க்கமுமே சீன மக்களினால் முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டன. இவ்விரண்டினையும் தவிர எஞ்சியுள்ள தத்துவங்களில் மோவியமும் (Moism) சட்டவியமும் (Legalism) சுட்டுதற்குரியன. இவற்றுள் முதலில் மோவியம் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

2. மோவியம் (Moism)

கி.மு.நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவஞானி மோ-தி (Mo Ti) என்பவர். இவரை மோ-சூ (Mo - tzu) என்றும் கூறுவர். இவர்தம் இயற்பெயர் மோ (Mo). தி (Ti) அல்லது சூ (tzu) என்ற சொல்லினை Master என்று ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்துள்ளனர். இச்சொல் ஆசிரியர், போதகர், தலைவர் என்ற பொருளில் வழங்கியது. தத்துவஞானி மோ, கன்பூசியசு இறந்த பின்னர் வடசீனத்தில் ஒரு எளிய குடும்பத்தில் தோன்றினார். சிறந்த சிந்தனையாளர். அவர்தம் தத்துவம் மக்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றது. கி.மு.நான்காம் நூற்றாண்டில் அவருடைய தத்துவம் கன்பூசியத்திற்கு அறைகூவல் விடுத்தது.[1]

மோவியத்தின் அடிக்கருத்துக்கள் இரண்டாகும். அவையாவன: 1. பிரபஞ்சம் தழுவிய நேயம் (Universal Love), 2. போர்மனப்பான்மை இன்மை (Non-militarism).[2] இவற்றுள் பின்னது முன்னதுக்கு அனுசரணையானது.

2.1. பிரபஞ்ச நேயம்

கன்பூசியசு போதித்த அன்புக் கொள்கைக்கும் மோதி போதித்த பிரபஞ்சம் தழுவிய நேயக் கொள்கைக்கும் சிறு வேறுபாடு உண்டு. கன்பூசியசின் கருத்துப்படி, அன்பு என்பது அடிமனத்தின் உள்ளிருந்து வெளிப்பட்டுப் புற உலகினை நோக்கி விரிந்து செல்வது. அதனைப் பெறுவோரின் நெருக்கத் தன்மைக்கு ஏற்றவாறு அது பல்வேறு தரங்களில் சென்று சேரும். ஆனால், பிரபஞ்சம் தழுவிய நேயத்தில் மோதி (Mo Ti) நம்பிக்கை கொண்டிருந்ததால், நெருக்கம், நெருக்கம் இன்மை என்ற வேறுபாடின்றியும், வேண்டியவர், வேண்டாதவர் என்ற வேறுபாடின்றியும் பிரபஞ்சத்தில் உள்ள மாந்தர் அனைவர்க்கும் செலுத்தக் கூடிய அன்பினைப் போதித்தார்.

கன்பூசியசு (Confucius), பிள்ளைகள் பெற்றோர்க்குச் செலுத்தக் கூடிய பேரன்பினை (Filial Piety) வலியுறுத்தினார். மோதி (Mo Ti) இவர் கருத்தினை எள்ளி நகைத்தார். கன்பூசியசின் அன்புக் கொள்கை குறுகிய இனப் பற்றினையும் தன்னலத்தையும் வளர்த்துவிடும் என்று எச்சரித்தார்.[3]

கன்பூசியக் கொள்கையில் நம்பிக்கை உள்ளவர்கள் ஒட்டுமொத்தச் சமுதாயத்தின் நல ஆக்கத்தினை விட, குடும்பநல ஆக்கத்திற்கே முதன்மை நல்கினர். ஆனால், மோதி (Mo Ti) முழுச் சமுதாய மேம்பாட்டிற்கும் நல ஆக்கத்திற்கும் முதன்மை அளித்தார்.

நல ஆக்கம் (Welfare) என்பது அறநல ஆக்கம் (Moral Welfare) என்று கன்பூசியசு கருதினார். ஆயினும், அது பொருளாதார நல ஆக்கமே (Material Welfare) என்று மோதி எண்ணினார்.

பிரபஞ்சநேயம் (Universal Love) என்பது சமத்துவ நலம். சமுதாயத்தில் உள்ள கடைநிலை மனிதன் கூட நிறைவுடைய வாழ்வினை எய்துவதற்கு அது பயன்படுதல் வேண்டும்; சமத்துவ நுகர்ச்சியை (Equal enjoyment) ஒவ்வொருவரும் அடைதல் வேண்டும் என்று மோதி புகட்டினார். பொருளாதார மேம்பாட்டிற்குச் சிறிதும் உதவாத தேவையற்ற வெறுஞ்செலவுகளைப் புரியத் தூண்டும் பழக்க வழக்கங்கள் அனைத்தையும் துடைத்தொழித்தல் வேண்டும் என்றார். கன்பூசியசு பழைய சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் நியாயப்படுத்தியதை மோதி ஒப்பவில்லை என்பது சுட்டுதற்கு உரியது. ஒருவர் உண்பதற்கு ஒருசிறிதும் கிடைக்காத நிலையில் ஈமச் சடங்கிற்காகச் சிலர் வெறும் செலவு தாராளமாகச் செய்வதையும் மோதி ஏற்கவில்லை. சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதன் வாயிலாகவும், உற்பத்தியைப் பெருக்குவதன் வாயிலாகவும் நிலையினை

மேம்படச் செய்தல் இயலும் என்று பேசினார். சீன நாட்டின் மாவீரர்களில் பலரிலும் மேம்பட்டவர் யூ (Yü) என்னும் பொறியாளரே என்று மோதி கூறினார். தம் காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, இந்தப் பொறியாளர் வடசீன தேசத்தினை வெள்ள அபாயத்தினின்றும் காப்பாற்றும் பொருட்டு மாபெரும் அணைகளைக் கட்டி, பெரிய கால்வாய்களையும் அகழ்ந்து அமைத்தவர். கடும் உழைப்பே உருவான இந்தப் பொறியாளரே சீனத்தின் மாவீரர் என்று மோதி போற்றினார்.[4]

ஏழைகளுக்காகவும் எளியவர்களுக்காகவும் மோதி குரல் கொடுத்தவர். பொருளாதாரத் தன்னிறைவு கொண்ட தேசம் தான் இலட்சியத் திருநாடு என்று கருதினார்.[5]

2.2. போர் மனப்பான்மை இன்மை

ஒருவரை நேசித்தல் எப்படி என்பது பற்றியும் இந்த நடைமுறைத் தத்துவஞானி போதித்தார். ஒருவரை நேசிப்பதற்கு முதற்படியாக, வெறுப்பின்மையினைக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்றார். வெறுப்புக்களின் பல்வேறு வடிவங்களில் ஐயத்துக்கு இடமின்றிப் போர் புரிதல்தான் மிகக் கொடுமை ஆனது. எனவேதான், பிரபஞ்சநேயத்தின் முதற்படியாகப் போர்மனப்பான்மை இன்மை (Non - militarism) விளங்குகிறது. அகிம்சை (Non-Violence) என்பதும் போர் மனப்பான்மை இன்மை என்பதும் ஒருபொருளே எனக் கருதுதல் கூடாது. ஒரு கன்னத்தில் அறைந்தால் இன்னொரு கன்னத்தினைத் திருப்பிக் காட்டுதலும் கூட, போர்மனப்பான்மை இன்மை என்று சொல்லிவிடுதல் முடியாது. வன்முறை என்பது வருந்தத்தக்கதுதான். என்றாலும், சிலவேளைகளில் கூடுதல் வன்முறையினைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு அதனைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இணங்குவித்தல் (Persuasion) என்பது ஒருவாறு ஏற்புடையது எனினும், அது மெதுவாகவே செயல்படுதலும் பலவேளைகளில் பயனற்றுப் போதலும் உண்டு.[6]

சமுதாயத் தத்துவஞானி மோதியின் காலத்தில் போர்கள் அடிக்கடி நிகழ்ந்தன. எனவே, நகரினையும் நாட்டையும் காக்கும் பணிக்கு உதவும்படி தன் கொள்கையினைப் பின்பற்றுவோரை ஒருங்கு திரட்டினார். அவர்களில் பலர் பொறியாளர்களும் கைவினைஞர்களும் ஆவர். தற்காப்புப் படைக்கருவிகளைச் செய்வதில் அவர்கள் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். பாதுகாப்புப் படையினர்க்குப் பக்கபலமாக மோதியும் அவர் ஆதரவாளர்களும் அணிதிரண்டு வந்து நின்ற பொழுது படையெடுத்து வந்தோர் தடுத்து நிறுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்ஙனம் ஒழுங்குறுத்தப் பெற்ற வீரர்களையும் பொறியாளர்களையும் கொண்ட குழுவினர் பேரரசர்க்கு விசுவாசம் உடையோரல்லர்; மாறாக மோதி (Mo-Ti)யின் கொள்கையினால் ஈர்க்கப்பெற்றவர் ஆவர்.[7]

2.3. மோவியமும் கன்பூசியமும்

தனக்கு முற்பட்ட தத்துவ ஞானி கன்பூசியசின் கொள்கைகள் சிலவற்றை மோதி உடன்படவில்லை எனினும், இருவர்க்கும் பொதுவான கருத்துக்கள் பல உள்ளன.[8] அவற்றுள் ஒரு சிலவற்றை நோக்குவோம். இருவருமே மனிதநலம், மேம்பாடு ஆகியவற்றில் அக்கறை காட்டியவர்கள். மன்னராட்சியை (Monarchy) நனிசிறந்த ஆளுகை எனக் கருதியவர்கள். ஆட்சிபுரிபவர்கள் அறமும் தகவுகளும் வாய்க்கப்பெற்றவராகவும் குடிமக்களுக்குத் தாங்கள் சிறந்த முன் மாதிரிகளாகவும் எடுத்துக் காட்டாகவும் விளங்குதல் வேண்டும் என்பதைக் கன்பூசியசும் மோதியும் ஒத்துக் கொண்டனர். அங்ஙனம் ஆளுவோர் விளங்கினால்தான் விண்ணக விருப்பங்களுடன் அவர்தம் ஆட்சி ஒத்திசைவு உடையதாக விளங்கும் என்று எண்ணினார். பேரரசர் அறமும் நீதியும் உடையவராக இருத்தலைக் கன்பூசியசு வலியுறுத்தினார். ஆனால் மோதி, நடைமுறைக்கு ஒத்துவருதலும் பயன்பாடு உடைமையும் பேரரசரின் இலக்கணமாக இருத்தல்

வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறினார். பிரபஞ்ச நேயம் (Universal Love) என்ற தம் நூலில் மோதி பின்வருமாறு கூறியுள்ளார்:[9]

> "சால்புடைய மனிதன் தன் நண்பனைத் தானாகவும், தன் நண்பனின் உறவினர்களைத் தன் உறவினர்களாகவும் நேசிக்கிறவன் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ... நல்ல இளவரசர் தன் நலத்திற்கு மேலாகத் தன் குடிமக்களின் நலத்தினை வைத்துப் பேணுபவர் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் பசித்திருக்கும் பொழுது அவர்களுக்கு உணவு வழங்குகிறார்; அவர்கள் நனையும் பொழுது உடைகள் வழங்குகிறார்; பிணிவாய்ப்பட்ட பொழுது செவிலியாக இருந்து மருந்தளிக்கிறார்; அவர்கள் இறக்கும் பொழுது ஈமச் சடங்கினைப் புரிகிறார்,"

இங்ஙனம் பிரபஞ்ச நேயக் கொள்கை மனிதநேயக் கொள்கையாகவும் விளங்கியது.

இதுகாறும் மோவியம் பற்றித் தெரிந்து கொண்டோம். இனி சட்டவியம் என்னும் தத்துவக் கொள்கை பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

3. சட்டவியம் (Legalism)

சட்டத்தின் முதன்மையினை வலியுறுத்தும் நூல்களைச் சீனருள் ஒரு பகுதியினர் மதித்தனர். அரசாட்சியில் திறமையும் சமுதாயத்தில் ஒழுங்கமைதியும் உண்டாவதற்குரிய ஒரே வழி சட்டத்தை மதித்து நடத்தலே என்று அவர்கள் எண்ணினர். ஹுவான் கோமகனிடம் (Duke Huan) முதலமைச்சராக விளங்கிய குவான் சுங்கு (Kuan Chung) எழுதியதாகக் கூறப்படும் குவான் சூ (Kuan-tzu) என்ற நூல் இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. ஷங்கு-சூன் சூ (Shang-Chūn shu) என்ற நூல், சட்டத்தினை மதித்தல் வேண்டும் என்ற கருத்தினை

வலியுறுத்தி கி.மு.3ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இதன் ஆசிரியர் ஷங்கு யங்கு (Shang Yang) என்று சொல்லப்படுகிறது. சட்டச் சிந்தனைப் பள்ளியின் (Legalist School) முதன்மை வாய்ந்த சிந்தனையாளர் என்று ஹன்ஃபே (Han Fei) மதிக்கப்படுகிறார். இவர் வாழ்ந்த காலம் கி.மு.3ஆம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும். இவர் எழுதிய நூல் ஹன்-ஃபே-சூ (Han-fei-tzu) என்பதாகும். சட்டவியம் (Legalism) என்னும் தத்துவத்தினைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இந்நூல் எடுத்துக் கூறுகிறது.[10] கன்பூசியச் சிந்தனையாளர் ஆகிய சூன் சிங் கின் (Hsun Ch'ing) மாணவர் ஹன் ஃபே (Han Fei) ஆவர். இவரின் இன்னொரு புகழ் வாய்ந்த மாணவர் லீ சூ (Li Ssu) என்பாராவர். இவர் சின் அரசின் முதலமைச்சராகப் பணிபுரிந்தவர். இவர் கி.மு.3ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இறந்துபோனார். ஹன் ஃபே சட்டவியத்தின் கொள்கையாளர் (Theoretician); லீ சூ அதனை நடைமுறைப்படுத்தியவர் (Practitioner). இருவரும் ஒரு சாலை நண்பர்கள். இருவருக்கும் இடையே தனிப்பட்ட பகைமை உணர்வு இருந்தது. முடிவில் லீ சூ (Li Ssu) தன் முன்னாள் வகுப்புத் தோழர் ஆகிய ஹன் ஃபேயை (Han Fei) சிறையில் போட்டு, தற்கொலை புரிந்து கொள்ளும்படி செய்துவிட்டார். சட்டவியலார் (Legalists) நவீன ஃபாசிஸ்டுகளைப் (fascists) போல அன்பு, கருணை என்பவற்றில் சிறிதும் நம்பிக்கை அற்றவர்கள்; கொலை புரிந்தாவது ஆட்சி அதிகாரத்தைப் பெறுதலும் பேணிக் காத்தலுமே அவர்கள் கொள்கை.

3.1. கல்வியும் சட்டமும்

சூன் சிங்கு (Hsūn Ch'ing) மனிதனிடம் உள்ள தீய இயல்பை மாற்றக் கூடியது கல்வியே என்று நம்பினார். அவர் மாணவர் ஹன் ஃபே (Han Fei), மனிதனின் தீய இயல்புகளைச் சட்டத்தினைச் சரிவரச் செலுத்துவதின் மூலமே தடுக்க முடியும் என்று இயம்பினார்.[11] மக்களிடமிருந்து தாமே நல்லியல்பினை வெளிப்படுத்துவர்

என்று எதிர்பார்ப்பது ஒரு நல்ல விருப்பமே தவிர நடை பெறாதது என்று ஹன் ஃபே கருதினார்.

3.2. அறமும் சட்டமும்

கன்பூசியசு வகுத்துக் கொடுத்த அறங்கள் யாவும் கபடமான நடிப்புக்கள் என்றும், அவை போலிகளின் சுயநலத்தின் பொருட்டுப் பயன்படுத்தப்பட்டன என்றும்; தன்னல நோக்கம் இல்லாமல் எந்தவொரு அறமும் இருந்ததில்லை என்றும் கூறினார்.[12] பொய்ம்மையானதும் நிலைபேறில்லாததும் நம்பத்தகாததும் ஆகிய அறங்களின் மேல் சமுதாயத்தினை எழுப்புதல் என்பது, சரியக் கூடிய மணலின்மேல் வீடு கட்டுதலைப் போன்றது என்றார். அறங்களின் புறவெளிப்பாடாகிய லீ என்னும் கன்பூசியக் கொள்கை அற்பமானது மட்டுமன்றிப் பயனற்றதும் ஆகும் எனக் கருதினார். பொன்மயமான பூர்வ காலத்திற்குத் திரும்பும்படி கன்பூசியசு கூறிய அறிவுரை, பழமையாய்ப் போகிய கருத்து மட்டுமன்றிக் காலத்துக்குப் பொருந்தாததும் ஆகும் என்றனர். பழமைக் காலமும் வாழும் காலமும் வேறுபடுதலின், தேவைகளும் வேறுபடுவன என்பதை எண்ணும்படி ஹன் ஃபே கேட்டுக் கொண்டார். எந்தவொரு நிறுவனமும் நிலைபேறு உடையது அன்று. வரலாற்றில் ஒவ்வொரு காலக் கட்டத்திற்கும் ஒத்துவரக்கூடியதையே விழுமியது என்று எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். எனவே, யாவோ (Yao), சூன் (Shun), யூ (Yu), தங்கு (T'ang), வென் (Wen), வூ (Wu) ஆகிய அரசர்களின் காலத்துக்கு உரிய அறங்களை இனிமேலும் எவரொருவரும் பாராட்ட வேண்டிய தேவை இல்லை. புதுயுகத்துக்குத் தேவைப்படும் புது வழிகளைப் போதிக்கக் கூடிய புதுப்புனிதர்கள் (New Sages) முன் வருதல் வேண்டும் என்று சட்டவியலார் எதிர்பார்த்தனர்.

3.3. நிகழ்காலத் தேவை

நிகழ்காலத் தேவை சட்டமே என்பது சட்டவியலார் (Legalists) கருத்து. அளவுகள் (Measures) இல்லாமல் தச்சர்

தம்தொழிலினைச் செய்ய இயலாது. அதுபோலவே, சட்டம் இல்லாமல் அரசர் தன் நாட்டினை ஆட்சி புரிதலும் இயலாது. சட்டம் நேர்மையும் நியாயமும் பொருந்தி அமைதல் வேண்டும். சட்டம் எதுவாக இருந்தாலும், ஒருமுறை அது உருவாக்கப் பெற்றுவிட்டால், உழவர் முதல் உயர் மக்கள் முடிய அனைவருக்கும் பொதுவாகச் செயற்படுத்தப்படுதல் வேண்டும். சட்டம் என்பது தெளிவாக இருத்தல் வேண்டும்; இதுதான் என்று புரிந்து கொள்ளும் வகையில் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் இது பின்பற்றுவதற்கு உரியது, இது ஒதுக்குவதற்கு உரியது என்ற தெளிவு மக்களுக்குக் கிடைக்கும். சட்டத்தை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுதல் வேண்டும். சட்டத்தை வழுவாமல் பின்பற்றுவோர்க்குத் தாராளமாகப் பரிசு வழங்கிப் பாராட்டப் பெறுதல் வேண்டும். பரிசளிப்பும் தண்டனையளிப்பும் அரசன் கையில் இருக்கக் கூடிய இருபெரும் ஆயுதங்கள் ஆகும்.[13] சட்டத்தைக் கொண்டுதான் மக்களின் நடத்தையினை அரசன் மதிப்பிடுதல் வேண்டும். ஒருவர் அறம் உடையவரோ என்பதைவிட அவர் சட்டத்தை மதித்து நடப்பவரா என்பதுதான் முக்கியம். ஒருவனுக்குள் உறையும் பண்பு என்ன என்பதைத் தேடுதல் ஆட்சி புரிபவனின் தொழிலன்று.

3.4. வலிமைமிக்க அரசு

சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலமாகவே ஒரு வலிமை மிக்க அரசினை நிலைபெறச் செய்தல் முடியும். எந்த உபாயத்தைக் கொண்டாகிலும் அரசு நன்றாக வலிமையுறுத்தப்பெறுதல் வேண்டும். மையப்படுத்தப்பட்டதும் சர்வ வல்லமை உடையதும் ஆகிய நாட்டினை எந்த உபாயத்தைக் கொண்டாவது உருவாக்குதல் வேண்டும் என்பது சட்டவியலாரின் (Legalists) கொள்கையாகும். அந்த உபாயம் நீதிக்கும்

அறத்துக்கும் புறம்பாகவும் இருக்கலாம் என்றனர். மேக்கியவில்லிய முறைகள் (Machiavellian Methods) நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் அளவில் பயன்படுத்தப்படலாம்.

3.5. முரண்பாடு

ஆள்வோருக்கும் ஆளப்படுவோர்க்கும் இடையே ஏற்படும் முரண்பாட்டினை நேருக்குநேர் அரசர் ஒவ்வொருவரும் சந்திக்க வேண்டியிருந்தது. தன் உயர் நிலையினைக் காத்துக் கொள்ளும் பொருட்டும் ஆதரவாளர்களைத் திரட்டும் பொருட்டுப் புகழையும் பொருளையும் பயன்படுத்தலாம். ஏனையோரைத் தன் கீழ்க் கொண்டுவரும் பொருட்டுப் பலாத்காரத்தையும் தண்டனையினையும் கூடப் பயன்படுத்தலாம். உண்மையான நன்றி உணர்வு என்பது ஒருபொழுதும் இருந்ததில்லை. எந்தவொரு மனிதனும் ஏதாவது ஒன்றினைக் கைம்மாறாகப் பெறாமல் எந்தவொரு செயலினையும் செய்வதில்லை. வேறுவழி இல்லாமை காரணமாகவே ஒருவன் நீதிமானாகவும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவனாகவும் இருக்கிறான். இத்தகைய பிறர் குற்றம் கூறும் வாதங்களும் நம்பிக்கையற்ற பேச்சுமே (Pessimistic talk) ஹன்ஃபேயின் (Han Fei) எழுத்துக்களில் ஊடுருவிக் காணப்படுகின்றன.

3.6. குறிக்கோள் சமுதாயம்

சட்டவியல் அமைப்புடைய குறிக்கோள் சமுதாயத்தில், அறங்களை வளர்த்தலைவிட உலகியல் சார்ந்த நன்மைகளே கூடுதல் முதன்மை வாய்ந்தவையாக விளங்கின. ‘மக்கள் நன்றாக உண்டும் உடுத்தும் வாழும் பொழுதுதான், நேர்மைக்கும் வெட்கக் கேட்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை அறிந்து கொள்ளுவார் என்று எதிர்பார்க்க இயலும்’ என்று குவான் சூங்கு (Kuan Chung) குறிப்பிட்டார் என்று சொல்லப்படுகிறது. சின் (Ch’in) முதலமைச்சராக ஷங்கு யங்கு (Shang yang) இருந்த

பொழுது வேளாண்மை விளைச்சலை மிகுவிக்கும் பொருட்டுக் கடைசி மனிதனைக் கருத்தில் கொண்டு நாடு முழுவதையும் திருத்தி அமைத்தார். 1. மேற்கொள்ளும் வேலையில் கடும் உழைப்பும், 2. போரில் தைரியமும் ஆகிய இரண்டின் அடிப்படையில்தான் ஒரு மனிதனின் அறங்கள்(Virtues) மதிப்பீடு செய்யப்பெறுதல் வேண்டும் என்று ஹன்ஃபே கருத்துரைத்தார்.[14] ஒரு குறிக்கோள் சமுதாயம் என்பது, நன்கு அமைக்கப்பெற்ற உழவர் மற்றும் போர் வீரர்களால் உருவாக்கப்பெற்று, சர்வ வல்லமை படைத்த அரசன் தலைமையினை ஏற்று, சர்வ வல்லமையுள்ள நாட்டின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. அமைதிக் காலங்களில் மனிதர் அனைவரும் சிறந்த உழவர்களாகவும், போர்க் காலங்களில் சிறந்த வீரர்களாகவும் விளங்கினர். அமைதிக் காலத்தில் போர்ப் பயிற்சியுடன் நிலத்தினை உழும் பயிற்சியும் வழங்கப்பட்டது. அத்தகைய சமுதாயத்தில் தத்துவத்திற்கோ இலக்கியத்திற்கோ ஒரு தேவையும் இல்லை என்று லீ சூ (Li Ssu) இயம்பினார். படிப்பதற்குரிய ஒரே பொருள் சட்டமாக இருந்தது. அரசு அதிகாரிகள் மட்டுமே ஆசிரியர்களாக இருந்தனர். ஒரு காலத்தில் சிறந்தனவாகவும் உயர்ந்தனவாகவும் இருந்த சம்பிரதாயங்களும் மரபுகளும் பிற்காலத்தில் நம்பப்படவில்லை. நிகழ்காலம்தான் மிகவும் முக்கியமானது. ஆற்றலும் செல்வமும் பொருந்தியதாய்ச் சீன நாட்டினை ஒருங்கிணைத்துக் குழப்பத்திலிருந்து மீட்கக் கூடிய மையப்படுத்தப்பட்ட அரசுதான் மிக முக்கியத் தேவை என்று ஹன்ஃபே வாதிட்டார். சின் (Chin)னை ஆட்சிபுரிந்த சின் ஷீ ஹுவாங்கு-தி (Ch'in Shih Huang-ti) என்னும் அரசன் ஹன்ஃபேயின் நூலின் ஒரு பிரதி தனக்குக் கிடைக்கப் பெற்றதும், அவர் காலத்தில் தான் வாழ்வதற்குக் கொடுத்து வைக்கவில்லையே என்று வருந்தினான். அவர் பழங்காலத்து முனிபுங்கவரில்

ஒருவராக இருந்திருத்தல் வேண்டும் என்று எண்ணினான். அவருடைய வகுப்பு நண்பர் லீ சூ (Li Ssu) தன்னுடைய முதலமைச்சர் என்பதை அவ்வரசன் அறிந்திருக்கவில்லை. ஹன்ஃபேயின் சட்டவியத் தத்துவத்தைச் செயற்படுத்தத் தன்னால் முடிந்ததைச் செய்தவர் லீ சூ என்பது குறிப்பிடத்தக்கது.

4. நான்கு நெறிகள்

கி.மு.221இல் சின் ஆட்சிக் காலத்தில்தான் முன்பு சிதறிக்கிடந்த பல்வேறு மாநிலங்களும் ஒருங்கிணைக்கப் பட்டுச் சீனம் ஒரு நாடாக ஒளி வீசியது. சின் ---> சீனம்; சின்னால் ஒன்றிணைக்கப்பட்ட காரணத்தினால் சீனம் என்ற பெயர் அந்த முழு நாட்டிற்கும் பெயராயிற்று. இக்காலத்திற்கு (கி.மு.221) முன் வரை கன்பூசியம், தாவு மார்க்கம், மோவியம் (Moism) சட்டவியம் (Legalism) என்பன நான்கும் முதன்மை வாய்ந்த சிந்தனைப் பள்ளிகளாகத் திகழ்ந்துள்ளன.[15]

5. பொதுநல நோக்கம்

இருபதாம் நூற்றாண்டில் சீன நாட்டில் பொதுவுடைமை இயக்கத்தாரின் மக்கள் குடியரசு ஆட்சி உருவாயிற்று. இவர்கள் சீனத்தின் மரபுரிமைச் செல்வத்தைத் துடைத்தகற்றி விடவில்லை. அவர்கள் கன்பூசியத்திற்கு மாறாகச் சட்டவியத் தத்துவத்தினை (The Philosophy of Legalism) ஏற்றுக்கொண்டனர். முற்றிலுமாகக் கன்பூசியத்தையும் தள்ளிவிடவில்லை. அமைதியும், ஒழுங்கும் பொருந்திய சமுதாயத்தினை நிர்மாணிப்பதில் சட்டவியம் (Legalism) சிறந்த சாதனமாக அமைந்தது.[16] சுயநலத்தினைத் தியாகம் செய்து பொதுநலத்தினை நாடுவதற்கு இத்தத்துவம் பெரிதும் உதவியாக இருந்தது.

மேற்கோள் குறிப்புக்கள்

1. Li, Dun Jen, **The Ageless Chinese A History,** Charles Scribner's Sons, New York, *1978*, p.*89*.
2. Ibid.
3. Ibid, p.*90*.
4. Ibid.
5. Ibid.
6. Ibid.
7. Ibid, p.*91*.
8. Ibid.
9. Ibid.
10. Ibid.
11. Ibid.
12. Ibid, p.*92*.
13. Ibid.
14. Ibid, p.*93*.
15. Ibid.
16. Ibid, pp.*562-563*.

9. சீனமும் பௌத்தமும்

(கி.பி.60 - கி.பி.1,200)

சீன நாட்டில் ஹன் பேரரசர் மிங்கு தீ (Emperor Han Ming - Ti) கி.பி.58-75இல் ஆட்சி புரிந்தார். இவர் பௌத்த நெறியின் மாட்சியைக் கேள்வியுற்று இந்தியாவிற்குத் தன் தூதுவர்களை அனுப்பிக் காசிப மாதங்கர் (Kas'yapa Matanga), தருமரட்சர் (Dharmaraksa) என்ற பெருந்தேரர்களைத் தன் நாட்டிற்கு அழைத்து வரச் செய்தார்.[1] இவ்விருவரும் பௌத்த நூல்களையும் புத்தர் பிரானின் உருவச் சிலையினையும் உடன் கொண்டு சென்றனர். இவர்களைச் சீனப் பேரரசர் உரிய மரியாதையுடன் வரவேற்று உபசரித்தார். இவர்கள் சீன நாட்டில் தங்கிப் புத்தர்பிரானின் போதனைகளை மக்களிடம் பரப்பும் பொருட்டுப் பேரரசர் ஒரு பௌத்தப் பள்ளியைக் கட்டினார். இதற்கு வெண்புரவிப்பள்ளி (White Horse Monastery) எனப் பெயரிட்டார்.[2] மேலே சுட்டப்பட்ட பௌத்தப் பிட்சுக்கள் இருவரும் இந்திய நாட்டிலிருந்து வெள்ளைக் குதிரைகளில் பௌத்தப் பனுவல்களை ஏற்றி வந்ததை நினைவு கூரும் வகையில் சீனப் பேரரசர் இவ்வாறு பெயரிட்டார். சீனர் மனங்களில் பௌத்தச் சிந்தனைகள் சென்று சேரவேண்டும் என்ற பெருநோக்குடன் மகாதேரர்கள் இருவரும் சீனமொழியில் புலமை பெற்றுப் பௌத்த நூல்கள் பலவற்றைச் சீனத்தில் மொழிபெயர்த்தனர். அவற்றுள் நாற்பத்திரண்டு இயல்களைக் கொண்ட சூத்திர நூல் (The Sutra of Forty-two sections) இன்றைக்கும் சீன மக்களிடையே புகழ்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

காசிபமதங்கரும், தருமரட்சரும் சீனம் சென்று புத்தரின் போதனைகளைச் சீன மக்களிடம் பரப்பினர்

என்ற வரலாற்றுச் செய்தியைக் கி.பி.7ஆம் நூற்றாண்டினராகிய இட் சிங்கு (I-tsing) தன் பயணக் குறிப்பில் எழுதியுள்ளார். இவ்விருவரின் சீன வருகை சீன நாட்டில் ஒரு புதுயுகத்தினைத் தோற்றுவித்துள்ளது எனலாம்.

ஹன் மரபின் ஆட்சிக்குப்பின் வூ பேரரசரின் (Emperor Wu) ஆட்சிக் காலத்தில் பௌத்தம் சீன நாட்டின் பல பகுதிக்கும் சென்றது. இப்பேரரசர் தம் சாம்ராச்சியத்தின் (Empire) பல பகுதிகளிலும் எண்ணற்ற பௌத்தப் பள்ளிகளை எழுப்பினார். பேரரசரின் ஆதரவுடன் பௌத்த நூல்களின் சீன மொழியாக்கம், விளக்கவுரைகள் ஆகியவையும் சேர்ந்து சீன மக்களின் உள்ளத்தில் பௌத்தம் பற்றிய பேரார்வத்தையும் ஈடுபாட்டினையும் உண்டாக்கின. கி.பி.நான்காம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பௌத்தம் சீன நாட்டின் தேசிய மதமாக (National Religion) விளங்கியது. இடையிடையே ஏற்பட்ட சோதனைகளைக் கடந்து பௌத்தம் மேன்மேலும் தழைத்தோங்கத் தலைப்பட்டது. கி.பி.நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் சீனர்கள் பௌத்த ஞானம் பெறும் பொருட்டுத் துறவு பூண்டு பௌத்தப் பள்ளிகளில் பிட்சுக்களாக மாறும் வாய்ப்பினைச் சீன அரசு அவர்களுக்கு வழங்கியது. 'சீன வரலாற்றில் இந்நிகழ்வு ஒரு திருப்பு முனையாகக் கருதப்பட்டது' என்று ஜே.பி. பிரட்டு (J.B. Pratt) என்னும் அறிஞர் கூறியுள்ளார். அரசாங்க ஒப்புதல் அறிவிப்புக்குப் பின்னர், சீனர் பெருமளவில் பௌத்தப் பள்ளிகளில் சேர்ந்து துறவொழுக்கம் மேற்கொண்டனர். வேய் (Wei) மரபினைச் சேர்ந்த அரசர்களின் பேராதரவினால் பௌத்தம் சீனா எங்கும் பரவும் சிறப்பினைப் பெற்றது. லோ -யங்கு (Lo-Yang), சங்கு (Ch'ang) என்ற நகரங்கள் பௌத்தத்தின் கேந்திரமாக வளர்ந்தன. ஹன் மரபின் ஆட்சிக் காலம் (கி.பி.65-220) முழுவதும் இந்தியாவிலிருந்து

எண்ணற்ற பௌத்த அறிஞர்கள் சீன நாட்டிற்கு வந்து, அங்குள்ள சீன அறிஞர்களுடன் இணைந்து பௌத்தப் பனுவல்கள் பலவற்றை மொழிபெயர்த்துள்ளனர்.[3]

இந்தியாவிலிருந்து சீனம் சென்று பௌத்தத்தினைப் பரப்பிய பெருந்தேரர்களில் குமாரசீவர் (Kumarajiva), போதிதருமர் (Bodhidharma), பரமார்த்தர் (Paramartha), போதிருசி (Bodhiruci) என்போர் சிறப்பாகச் சுட்டத்தக்கவர். இவருள் போதிதருமரைப் பற்றி இவ்வியலின் வேறிடத்தில் விரிவாகக் கூற இருப்பதால், எஞ்சியோரைப் பற்றிச் சுருக்கமாக இங்குக் காண்போம்.

I. குமாரசீவர் (Kumarajiva)

இவர் கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். இவர் பௌத்தத்தின் தத்துவம், தருக்கம் உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் புலமை பெற்றவர். மாத்தியமிகப் பேரறிஞர் நாகார்ச்சுனரின் நூல்களை இவர் முழுமையாகக் கற்றவர். அவர் வரலாற்றினையும் சீன மொழியில் எழுதியவர்.[4] கி.பி.401-412 ஆகிய காலப் பகுதியில் இவர் சீன நாட்டில் பௌத்த ஒளியைப் பரப்பியவர்.[5] இவர் முயற்சியால் அந்த நாட்டில் பௌத்தப் பள்ளிகள் பல கட்டப்பட்டன. திசின் மரபின் (T'sin dynasty) அரசர் குமாரசீவர்க்கு உரிய மரியாதையும் சிறப்பும் வழங்கி உபசரித்தார். சங்கன் (Changan) தலைநகரில் ஒன்பது ஆண்டுகள் குமாரசீவர் தங்கியிருந்து மொழிபெயர்ப்புத் துறையினைத் (Translation Bureau) தொடங்கி வைத்தார்.[6] இதில் எண்ணூற்றுக்கும் மேற்பட்ட பௌத்த ஞானிகளும் மத குருமார்களும் பணிபுரிந்தனர். குமாரசீவர் மட்டும் நூற்றாறு நூல்களைச் சீனத்தில் மொழிபெயர்த்துப் பௌத்தம் எங்கும் பரவுதற்குப் பெருந்துணையாகத் திகழ்ந்துள்ளார்.

இவர் வடமொழியிலிருந்து சீன மொழியில் ஆக்கம் செய்த பௌத்தப் பனுவல்களில் 1. மகாபிரஞ்ஞாபாரமிதை சாத்திரம், 2. சத சாத்திரம், 3. சுகவத்யம்ருத வியூகம், 4. சத்தரும புண்டரிக சூத்திரம், 5. வச்சிர சேதிகாபிரஞ்ஞாபாரமிதை சூத்திரம் என்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவை. இவையாவும் மகாயானப் பௌத்தப் பனுவல்கள் ஆகும். இந்த மொழிபெயர்ப்பு நூல்களைத் தவிர, குமாரசீவர் சீனமொழியில் எண்ணற்ற பாடல்களையும் ஒரு நூலினையும் எழுதியுள்ளார். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சீனப் பௌத்தக் குருமார்கள் இவருடைய சீடர்களாயினர். இவர்களுள் பதின்மர் பௌத்த நூல்கள் பலவற்றைச் சீன மொழியில் பெயர்த்துள்ளனர்.[7]

அரசரே பௌத்தராக மாறினார். குமாரசீவரின் மேற்பார்வையில் மொழிபெயர்ப்பு நூல்கள் முந்நூறு தொகுதிகளாக வெளிவந்தன என்று சீன வரலாற்று நூல்கள் குறித்துள்ளன. இவர் போதனையால் சீன நாட்டின் பழைய நெறிகளாகிய கன்பூசியமும் தாவு மார்க்கமும் பின்னுக்குத் தள்ளப்பட்டன. கி.பி.5ஆம் நூற்றாண்டிலிருந்து பௌத்தத்தினை அயல் நெறியாகக் கருதும் போக்கு மாறிவிட்டது. சீன மக்களின் வாழ்வில் பேராதிக்கம் செலுத்தும் சத்தியாகப் பௌத்தம் விளங்கியது. சீன மக்களில் பத்தில் ஒன்பதுபேர் பௌத்த நெறியினைத் தழுவினர்.

குமாரசீவர் மரணப் படுக்கையில் கிடந்த பொழுது, தன் சீடர்களிடம் கூறிய செய்தி நெஞ்சினை நெகிழச் செய்வது. தான் எழுதிய நூல்களை மட்டும் அவர்கள் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்றும், தன்னை அல்ல என்றும் கூறினார். “சேற்றில் தாமரை வளரினும் தாமரையினை விரும்புங்கள், சேற்றினை அல்ல” என்றும் கூறினார்.[8] தன்னைச் சேறு என்று தற்சிறுமை தோன்றப் பேசினார். ஆனாலும், அவர் நூல்கள் சேற்றில் தோன்றும்

செந்தாமரை போன்றவை என்று போற்றினார். தன்னடக்கம், பணிவு தோன்ற இப்பெரியார் பேசியிருப்பினும், அவர் சேறு அன்று, தாமரைமலரே (சத்தரும புண்டரிகம் = சத்-நல்ல, உண்மையான, தருமம் - அறம், புண்டரிகம்- தாமரை) ஆவர். இந்தியா, சீனம் ஆகிய இரு பெரும் நாடுகளின் பண்பாட்டுக் கூட்டுறவுக்குச் சிறந்த அடையாளமாகக் குமாரசீவர் ஒளி வீசுகிறார்.

தங்கு மரபின் (T'ang dynasty) ஆட்சிக் காலத்தில் (கி.பி.618-907) பௌத்தம் உச்ச நிலையினை அடைந்ததுடன் மங்கோலியா, சப்பான், கொரியா முதலிய அண்டை நாடுகளிலும் பரவும் சிறப்பினைப் பெற்றது.

II. பரமார்த்தர் (Paramārtha)

இவர் மேற்கு இந்தியாவில் உச்சயினி நகரில் தோன்றியவர். கி.பி.ஆறாம் நூற்றாண்டினர். உச்சயினி நகரில் பௌத்தப் பனுவல்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றுப் பின் மகத நாட்டின் தலைநகராகிய பாடலிபுரத்தில் குடியேறினார். அக்காலத்துச் சீனப் பேரரசர் மகதப் பேரரசர்க்குத் தன் தூதுவரைஅனுப்பி, புத்தர் பிரானின் போதனைகளைச் சீன நாட்டிற்கு வந்து போதிக்க வல்ல நல்லறிஞர் ஒருவரை அனுப்பியுதவும்படி வேண்டினார். மகதப் பெருவேந்தர் ஆணையின்படி பரமார்த்தர் பௌத்தப் பனுவல்கள் பலவற்றையும் உடன் கொண்டு சீனத்தூதுவருடன் கடல்வழிப் பயணம் மேற்கொண்டு கி.பி.548இல் நன்கிங்கு (Nanking) என்ற நகரினை அடைந்தார்.[9] சீனமொழி பயின்று புலமை பெற்றார்.

சீனப் பேரரசரின் விருப்பப்படி பௌத்த நூல்களைச் சீனத்தில் மொழிபெயர்க்கும் பணியினை மேற்கொண்டார். இப்பணி பத்தாண்டுகள் நீடித்தன. பலபௌத்த நூல்களைப் பரமார்த்தர் சீனத்தில்

மொழிபெயர்த்தார். பரமார்த்தர் வடமொழியிலிருந்து சீனத்தில் மொழிபெயர்த்துள்ள நூல்கள் யாவும் 275 தொகுதிகளாக (Volumes) வகுக்கப்பட்டன. அவற்றுள் 1. சாந்தி நிர்மோசன சூத்திரம், 2. வச்சிரசேதிகா பிரஞ்ஞா பாரமிதை சூத்திரம், 3. மகாயான சம்பரிக்கிரக சூத்திரம், 4. மாத்யந்த விபாக சாத்திரம், 5. அபிதருமகோச வியாக்கிய சாத்திரம், 6. மகாயான சம்பரிக்கிரக சாத்திர வியாக்யா, 7. விநயதுவவிம்சதி பிரசன்னார்த்த சாத்திரம், 8. அஷ்டாதச சூன்யதா சாத்திரம் என்பன சிறப்பாகக் சுட்டத்தக்க நூல்கள் ஆகும். இரண்டாம் புத்தர் என்று போற்றப்பெற்ற வசுபந்துவின் வாழ்க்கை வரலாற்றினையும் சீனமொழியில் இவர் வரைந்துள்ளார்.

பரமார்த்தர் விஞ்ஞானவாதம் எனப்படும் யோகாசார பௌத்தத்தினை எங்கும் பரப்பியவர். இந்த மகாயானப் பௌத்தப் பிரிவின் மூலவர்கள் அசங்கரும் அவர் சீடர் வசுபந்துமே ஆவர். முற்ற முடிந்த உள்பொருள் (Ultimate Reality) என்பது விஞ்ஞானமே (Absolute Knowledge) என்பது இவர்கள் கருத்து. இதனைத் தமிழில் உணர்வு என்ற சாத்தனார் பௌத்தக் காப்பியம் ஆகிய மணிமேகலையில் மொழிபெயர்த்துள்ளார். மேலும், 'உள்வழக்கு உணர்வு' (மணி.30,208) என்று விஞ்ஞான வாதக் கருத்தினை வழிமொழிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.[10]

இவர் சீன நாட்டில் வாழ்ந்த இறுதிக் காலத்தில் அந்நாட்டில் அரசியல் குழப்பங்கள் உண்டாகின. எனவே, அந்நாட்டின் பல்வேறு இடங்களுக்குப் பரமார்த்தர் இடம் பெயர்ந்து போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர் இறுதிக் காலம் தனிமையிலும் ஓய்விலும் கழிந்தது. கி.பி.569இல் தம் எழுபத்தோராம் வயதில் பரமார்த்தர் காலமானார். என்றாலும் அவர் ஆற்றிய பணியினால் சீன மக்களின் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றுள்ளார்.

III. போதிருசி (Bodhiruci)

இவர் தென்னாட்டு அந்தணர். காசிப கோத்திரத்தவர். பௌத்தத் துறவி. இவருக்கு முதன் முதல் வழங்கிய பெயர் தருமருசி (Dharmaruci) என்பது. இச்சொல்லிற்கு (புத்த) தருமத்தை நேசிப்பவர் என்பது பொருள். பௌத்தத்தினைப் பரப்பும் பொருட்டுச் சீனம் சென்றவர். கி.பி.684-705இல் சீனப் பேரரசியாக விளங்கிய வூ சோ-தீயென் (Wu Tso-thien) ஆணையின்படி தருமருசி தம் பெயரினைப் போதிருசி என்று மாற்றிக்கொண்டார்.[11]

தங்கு (T'ang) மரபின் ஆட்சிக் காலத்தில் இலங்கை, இந்தியா, சப்பான் ஆகிய நாடுகளிலிருந்து புத்தப் பிட்சுக்கள் பலர் சீனத்திற்கு வந்தனர். இவர்களில் ஒருவராகச் சீனம் வந்து அங்கேயே போதிருசி இறுதிவரை தங்கிவிட்டார். இவர் வான நூல், மருத்துவ நூல், நில நூல், நிமித்த நூல் உள்ளிட்ட பல நூல்களையும் கற்றவர். தன் பன்னிரண்டாம் அகவையில் பௌத்தராக மாறியவர்.

மகாயான தேரர் ஆகிய யசகோஷர் (Yasaghosa) இவருடைய அசாதாரண திறமையினையும் ஆற்றலையும் கண்டு பௌத்த நூற்பயிற்சி வழங்கினார். மூன்றாண்டில் திரிபிடகங்களையும் முழுமையாகக் கற்றார். இவர் செயற்பாடுகளைக் கேள்வியுற்ற சீனப் பேரரசர் இவரைத் தம் நாட்டிற்கு வரவழைத்தார். பல நூல்களைச் சீனத்தில் மொழிபெயர்க்கச் செய்தார்.

இவர் இறப்பதற்குமுன் உணவினை முற்றிலுமாகக் கைவிட்டு, வடமொழிப் பௌத்தப் பனுவல்களைப் பிடித்தபடி வணங்கத் தொடங்கினார். தம் 156வது வயதில் கி.பி.727இல் இவர் உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்தார். தன் வாழ்நாள் முழுதும் வடமொழிப் பௌத்த நூல்களைச் சீனத்தில் மொழிபெயர்க்கும் பணியினைச் சிறப்பாகச் செய்துள்ள போதிருசி அனைவராலும் போற்றப்பட்டார். தங்கு (T'ang) அரசு மரபினர் யுவான்

சுவாங்கு, போதிருசி உள்ளிட்ட பௌத்தப் பேரறிஞர்களை ஆதரித்துப் போற்றினர். கி.பி.693-713 என்ற காலப் பகுதியில் 53 நூல்களைப் போதிருசி மொழிபெயர்த்துள்ளார்.[12]

சீனப் பௌத்த வரலாற்றில் போதிருசி என்ற பெயரில் பௌத்தப் பேரறிஞர் இருவர் இருந்துள்ளனர். இவருள் ஒருவர் தங்கு (T'ang) அரசு ஆட்சி புரிந்த காலத்தவர். மற்றொருவர் தசபூமிகப்பிரிவினை நிறுவிய பௌத்தப் பெரியார். முதல் போதிருசி சீனத்தில் மொழிபெயர்த்த பௌத்தப் பனுவல்களில் பின்வருவன குறிப்பிடத்தக்கவை.[13]

1. பிரக்ஞா பாரமிதை அர்த்த சதிகா
2. மகாரத்தின குட சூத்திரம்
3. அமிதாயுஷ வியூகம்
4. சமந்தமுக பரிவர்த்தம்
5. விநய விநிச்சய -உபாலி பரிப்பிருச்சா
6. மைத்திரேய-பரிப்பிருச்சா
7. மகாயான வஜ்ர சூடாமணி போதிசத்துவ சரியா வர்க்க சூத்திரம்
8. இரத்தினமேக சூத்திரம்
9. மகாயான சூத்திரம்
10. மஞ்சுஸ்ரீரத்தின கர்ப்ப தரணி சூத்திரம்

இவையாவும் மகாயான பௌத்த நூல்கள் ஆகும்.

இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு வருகை புரிந்து ஆங்குள்ள பௌத்த ஞானிகளிடம் போதனை பெற்ற சீனப் பயணிகள் 169 பேர்ஆவர்.[14] இவர்கள் கி.பி.300-800 என்ற காலப் பகுதியில் வாழ்ந்தவர்கள். இடச்சுருக்கம் கருதி இவர்களில் மூவரைப் பற்றிச் சுருக்கமாக இங்குக் கூறுதல் பொருந்தும்.

சீனப் பயணிகளில் குறிப்பிடத்தக்கவர் 1. ஃபாகியான் (Fa-Hien), 2. யுவான் சுவாங்கு (Hiuen - tsang),

3. இட் சிங்கு (I-tsing) ஆகிய மூவரும் ஆவர். முதலில் பாகியானின் பணிகளைப் பற்றிக் காண்போம்.

I. ஃபாகியான்

முதன் முதல் இந்தியாவிற்கு வந்த சீனப் பயணி ஃபாகியான் ஆவர். இவர் கி.பி. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மத்திய சீனாவிலிருந்து புறப்பட்ட பாகியான் கால்நடையாகத் தன் பயணத்தை மேற்கொண்டார். கோபி பாலைவனத்தைக் கடந்து, இந்துகுஷ் மலையினையும் கடந்து வடஇந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். அங்குச் சில காலம் தங்கிப் பௌத்த நூல்களைக் கற்றறிந்தபின், வங்கத்தில் தம்ரலிப்தி (Tamralipti) துறைமுகத்திலிருந்து கடல் வழியாக இலங்கை சென்றார். அங்கிருந்த பௌத்தத் தேரர்களிடம் பயின்ற பின் கடல் வழியாகவே சீனத்திற்குத் திரும்பிச் சென்றார்.[15]

இவர் இந்தியாவில் தங்கியிருந்த பொழுது (கி.பி.400) போதிசத்துவர் அவலோகிதேசுவரர் வழிபாடு பரவலாகக் காணப்பட்டதைத் தன் பயணக் குறிப்பில் எழுதியுள்ளார். இலங்கையிலிருந்து சீனத்திற்குக் கடல்வழிப் பயணம் மேற்கொண்ட பொழுது வீசிய கடும் புயற்காற்றிலிருந்து தன்னைக் காக்கும்படி அவலோகிதேசுவரரை வேண்டினார் என்றும் அவ்வாறே காக்கப்பட்டார் என்றும் அவர் குறிப்பில் கூறப்பட்டுள்ளன.[16] இந்தப் போதிசத்துவரின் உருவச்சிலை கி.பி.5ஆம் நூற்றாண்டு முதல் நாகப்பட்டினம் உள்ளிட்ட பல இடங்களில் கிடைத்துள்ளன. கி.பி.11ஆம் நூற்றாண்டிலும் இப்போதிசத்துவரின் வழிபாடு தமிழகத்தில் விளங்கியதாலன்றோ, புத்தமித்திரனார் தாம் இயற்றிய வீரசோழியம் என்னும் ஐந்திலக்கண நூலின் பாயிரத்தில் இப்போதிசத்துவரிடமிருந்து அகத்தியர் தமிழ் பயின்றார் என்ற புதுச்செய்தியைச் சொல்லியுள்ளார்.

II. யுவான் சுவாங்கு (Yuan Chwang)

இவர் கி.பி.602இல் தோன்றினார். தம் எட்டாம் வயதில் கன்பூசியச் சடங்குகளை மேற்கொண்டதன் வாயிலாகத் தன் தந்தையினை வியப்படையச் செய்தார். பின் இவர் பௌத்தரானார். இவர் போதனையினால் இவர் தமையரும் பௌத்தர் ஆனார். லோயங்கு (Lo-yang) என்ற பௌத்தப் பள்ளியில் கி.பி.622இல் பௌத்தத் துறவு மேற்கொண்ட யுவான் சுவாங்கு வரலாற்று நூல்கள் எழுதுவதில் சிறந்த அறிஞராக விளங்கினார். வடமொழிப் பௌத்த நூல்களைச் சீனத்தில் மொழிபெயர்த்த சிறப்பு இவருக்கு உண்டு.

கி.பி.629இல் இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டார். கி.பி.645இல் தான் மீண்டும் சீன நாட்டிற்குத் திரும்பினார். இந்தியாவில் நாளந்தா பல்கலைக்கழகத்தில் ஐந்தாண்டுகள் தங்கியிருந்தார். அப்போது அவர் பௌத்தப் பனுவல்களையும் வைதிக நூல்களையும் கற்றுத் தேர்ச்சி பெற்றார். காஞ்சி மாநகரில் தங்கி அங்கிருந்த பௌத்தப் பேரறிஞர்களிடம் உரையாடித் தன் அறிவினைப் பெருக்கிக் கொண்டார். நாளந்தா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த சீலபத்திரரிடம் விஞ்ஞானவாதம் எனப்படும் யோகாசாரப் பௌத்த நூல்களைக் கற்றார். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து புத்தர் பிரானின் நினைவுச் சின்னங்களையும் புத்தரின் படிமையினையும் கணக்கற்ற வடமொழி நுல்களையும் சீன நாட்டிற்குக் கொண்டு வந்தார். அசுவகோஷர், ஆரியதேவர், நாகார்ச்சுனர், குமாரலப்தர் ஆகிய நால்வரையும் உலகிற்கு ஒளிபரப்பும் நான்கு ஞான சூரியர்கள் என்று யுவான் சுவாங்கு போற்றியுள்ளார். சீன இலக்கியத்திற்கு யுவான் சுவாங்கின் பெருங்கொடை எனக் கருதப்பட்டது பாலி, வடமொழிப் பௌத்த நூல்களின் சீன மொழிபெயர்ப்பே ஆகும். அவர் மொழிபெயர்த்த நூல்களின் எண்ணிக்கையினையும்

அவற்றுக்குரிய பௌத்தப் பிரிவுகளையும் இங்கே காண்போம்.[17]

	பௌத்தப் பிரிவுகள்	**நூல்களின் எண்ணிக்கை**
1.	மகாயானம்	*416*
2.	தேரவாதம்	*14*
3.	சம்மிதியப் பிரிவு	*15*
4.	மஹிசாசகப் பிரிவு	*22*
5.	காசியபியப் பிரிவு	*17*
6.	தரும குப்தப் பிரிவு	*42*
7.	சருவாஸ்தி வாதப் பிரிவு	*67*
8.	மகாசங்கிகப் பிரிவு	*15*
9.	ஏது சாத்திரம்(அளவை நூல்)	*36*
10.	சப்த சாத்திரம்	*13*

இந்த நூல்கள் அறுநூற்று ஐம்பத்தேழினையும் 22 குதிரைகளில் ஏற்றிக் கொண்டு சீனா சென்றார். சீனாவின் தலைநகர் ஆகிய சங்கனில் (Ch'ang-an) தங்கினார். அப்போதுதான் அவற்றை மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டார். இவர் மொழிபெயர்ப்பின் சிறப்புக்கூறு மூல நூலின் சாரத்தினை விட்டுவிடாமல் சீனத்தில் வழங்கியதில் அடங்கியுள்ளது. இவர்க்கு முன்னால் இந்தியப் பௌத்தர் பரமார்த்தர் பின்பற்றிய மொழிபெயர்ப்பு முறையினைப் பழையமுறை (Old Method) என்றும், இவர் பயன்படுத்திய முறையினைப் புதியமுறை (New Method) என்றும் கூறினர்.

பேரரசனின் ஆதரவுடன் யுவான் சுவாங்கு தம் அறுபத்து ஐந்தாம் வயது வரை பௌத்தப் பணி புரிந்து கி.பி.664இல் இறந்தார். தங்கு (Tang) மரபின் ஆறாம் பேரரசரின் ஆட்சிக் காலத்தில் பௌத்தம் குன்றத் தலைப்பட்டது. கி.பி.8ஆம் நூற்றாண்டில் கன்பூசிய நெறியாளர்கள் பௌத்தத்தினை ஒடுக்கும் பொருட்டுப் பேரியக்கத்தினைத் தொடங்கினர். பேரரசரின்

ஆணைப்படி 12,000 பிக்குகளும், பிக்குணிகளும் துறவினைக் கைவிட்டு இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பும்படி வற்புறுத்தப்பட்டனர். பேரரசி வூ (Queen Wu) ஆட்சிக் காலத்தில் பௌத்த நூல்களை எழுதுவதற்கும் புத்தர் கோயில்கள் கட்டுவதற்கும் தடை விதிக்கப்பட்டது.

பல நூற்றாண்டுகள் நடைபெற்ற பௌத்த நூல்களின் மொழிபெயர்ப்புப் பணியின் காலப் பகுதியை வரலாற்று நோக்கில் மூன்றாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. கி.பி.67 - பௌத்தம் முதன் முதல் சீன நாட்டிற்கு வருதல். இக்காலப் பகுதியில் சீனத்தில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் தம்மபதம்.
2. கி.பி.405 - குமாரசீவரின் காலம்
3. கி.பி.646 - யுவான் சுவாங்கு காலம்

யுவான் சுவாங்கின் மொழிபெயர்ப்புப் பணிக்கு வடமொழி அறிஞர்கள் சிலர் உதவியுள்ளனர். யுவான் சுவாங்கின் வேண்டுகோளின்படி ஒவ்வொரு பௌத்தப் பள்ளியிலும் (Buddhist Monastery) ஐந்தைந்து புதிய பிட்சுக்கள் சேர்க்கப் பெறுவதற்குப் பேரரசர் ஆணை வழங்கியிருந்தார். அவர் காலத்தில் சீன நாட்டில் 3,716 பௌத்தப் பள்ளிகள் இருந்தன.

யுவான் சுவாங்கும் அவர் சீடர்களும் சீனத்தில் மொழிபெயர்த்த பௌத்த நூல்களில் பின்வருவன முதன்மையானவை.[18]

1. மகாபிரஞ்ஞா பாரமிதை சூத்திரம்
2. வித்யா மாத்ர சித்தி திரிதச சாத்திரம்
3. கர்ம சித்த பிரகரண சாத்திரம்
4. வித்யா மாத்ர சித்தி சாத்திரம்
5. மாத்யந்த விபாக சாத்திரம்
6. மகாயான சம்பரிகிரக சாத்திரம் மூலம்

7. அபிதர்மான்யாயனுசார சாத்திரம்
8. ஏது வித்யா நியாயப் பிரவேச சாத்திரம்
9. நியாயத்வார தர்க்க சாத்திரம்
10. வச்சிர சேதிகா பிரஞ்ஞா பார்மித சாத்திரம்

இவை யாவும் மகாயானப் பௌத்தப் பிரிவுக்குரிய சாத்திரங்கள் ஆகும். யுவான் சுவாங்கு காஞ்சி மாநகர் வந்த காலத்தில் தமிழகத்தில் பரசமய கோளரியாக விளங்கிய திருஞானசம்பந்தர், 'சடங்கொண்ட சாத்திரத்தார்' என்று மகாயானப் பௌத்தர்களைக் குறிப்பிடுதல் இங்குச் சிந்தித்துப் பார்க்கத்தக்கது.[19]

மேலே குறிப்பிட்ட நூல்களில் நியாயப் பிரவேசம், நியாயத்துவாரம் என்பன திக்கநாகர் இயற்றிய பௌத்தத் தருக்க நூல்கள் என்பது சுட்டத்தக்கது.

III. இட்சிங்கு

பாஹியான் தமிழ் நாட்டிற்கு வந்தவரா என்பது புலப்படவில்லை. ஆனால் இட்சிங்கு (I-tsing) தமிழகத்திற்கும் வந்த சீனப் பயணி ஆவார். யுவான் சுவாங்கு சீனம் திரும்பிய பொழுது இவருக்கு வயது பத்து ஆகும்.[20] இவர் தமிழகம் வந்திருந்த பொழுது திக்கநாகர்க்கு (Dignaga) பௌத்த அறிஞர்கள் நடுவே உயர்மதிப்பு இருந்ததைக் குறிப்பிட்டுள்ளார்.[21] இவர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் காஞ்சியில் வாழ்ந்தவர். தண்டமிழாசான் சாத்தனார் திக்கநாகர் எழுதிய நியாயப் பிரவேசம், பிரமாண சமுச்சயம் உள்ளிட்ட பௌத்தத் தருக்க நூல்களை ஆழ்ந்து பயின்று தாம் பாடிய பௌத்தக் காப்பியம் ஆகிய மணிமேகலையின் இருபத்தொன்பதாம் காதையில் அந்நூல்களின் சாரத்தினைப் பிழிந்து கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.[22] திக்கநாகர்க்குச் சினன் (Jina) என்ற பெயரும் வழங்கியது. புத்தர்பிரானைச் சினன் என்று கூறுதல் மரபு. ஐம்புலன்களையும் வென்றவர் என்பது சினர் என்ற

சொல்லின் பொருளாகும். தொண்டை நாட்டினைச் சார்ந்திருந்த ஆந்திரத்தின் தலைநகர் ஆகிய வேங்கிக்கு அருகில் ஒரு மலையில் திக்கநாகர் வாழ்ந்தனர் என்று இட்சிங்கு குறித்துள்ளார். இந்தியாவிலும் இலங்கையிலும் கி.பி.7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பௌத்தர் பலரும் திக்கநாகரைப் புத்தராகவே போற்றினர் என்று இவர் கூறுகிறார். எனவேதான், புத்தரைக் குறிக்கும் சினன் (Jina) என்ற சொல்லினால் திக்கநாகரையும் மக்கள் சுட்டினர் எனலாம். இந்தியத் தருக்க வரலாற்றில் புது அத்தியாயத்தினைத் (New Chapter) தொடங்கி வைத்த பெருமை திக்கநாகர்க்கு உண்டு. இவர் எழுதிய பௌத்தத் தருக்க நூல்கள் எட்டினைக் கற்றல் என்பது பௌத்தத் துறவியர் ஒவ்வொருவருக்கும் வழக்கமாக இருந்தது என்று இட்சிங்கு கூறுகிறார்.[23]

திபெத்திய மூலங்களிலிருந்து (Tibetan Sources) திக்கநாதர் காஞ்சிபுரத்தினைச் சேர்ந்த அந்தணர் என்று அறிகிறோம். வசுபந்துக்குப் பின் பௌத்தப் பெருஞ்சுடராக ஒளி வீசியவர். இவர் நூல்களில் நியாயப் பிரவேசம் என்ற தருக்க நூல் மட்டுமே வடமொழியில் எஞ்சியுள்ளது. ஏனைய தருக்க நூல்களில் மூன்று சீனத்தில் கிடைக்கவில்லை. அவற்றுள் பல திபெத்து மொழிபெயர்ப்பில் காக்கப்பட்டுள்ளன.

இட்சிங்கு, சீனத்தில் மொழிபெயர்க்கப்பட்ட அசுவகோஷரின் புத்தசரிதம் என்ற காப்பியம் 28 சருக்கங்களைக் கொண்டது எனக் கூறியுள்ளார். இந்தியாவின் பல பகுதிகளில் மட்டுமன்றிச் சுமத்திரா, சாவா (Java) உள்ளிட்ட தீவுகளிலும் புத்தசரிதம் பயிலப் பெற்றுள்ள வரலாற்றினையும் அவர் பயணக் குறிப்பில் பொறித்துள்ளார்.[24]

சீனத்தில் பௌத்தப் பிரிவுகள்

சீன நாட்டில் மகாயான பௌத்தம் பரவியது என்பது முன்பே கூறப்பட்டது. ஆயினும் அங்குப்

பல்வேறு மகாயானப் பிரிவுகள் மக்களால் பின்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படைக் கருத்துக்களில் பெரும் வேறுபாடுகள் காணப்படவில்லை. எனினும், சிறுசிறு வேறுபாடுகள் காரணமாக மகாயானத்தில் பல பிரிவுகள் தோன்றின. அவற்றுள் தியானப் பிரிவுதான் பெரும்பான்மையோரால் பின்பற்றப்பட்டது. ஆதலின் இதனைப் பற்றி முதலில் காண்போம்.

I. தியானப்பிரிவு (Dhyāna sect)

இந்தியாவில் தோன்றி அயல்நாடுகள் பலவற்றில் பரவிய சிறப்புக்கு உரிய ஒப்பற்ற நெறியாகப் பௌத்தம் விளங்குகிறது. மகாயான பௌத்தத்தினைச் சீன மக்கள் கி.பி.முதல் நூற்றாண்டு முதலாகவே பின்பற்றி வந்துள்ளனர். மகாயானத்தின் ஒரு பிரிவாகிய தியான பௌத்தத்தினைச் சீன நாட்டில் பரவச் செய்த பெருமைக்குரியவர் போதிதருமர் (Bodhi dharma) ஆவர். இவர் காஞ்சி வேந்தனின் மூன்றாம் மைந்தர் என்று யமாகமி சோகன் (Yamakami Sogen) ஆராய்ந்து கூறியுள்ளார்.[25] தமிழ் இளவரசர் ஒருவர் சமணச் சார்பினர் என்பதை இளங்கோவடிகளின் வரலாற்றினால் அறிகிறோம். மற்றொருவர் ஆகிய போதிதருமர் பௌத்தச் சார்பினர் என்று எண்ணி மகிழ்கிறோம்.

தியானம் (Dhyāna) என்ற வடசொல் சீன மொழியில் சான் (Chan) என்றாகியது. tsung என்ற சீனச்சொல் பிரிவு (Sect) என்ற பொருள் பயப்பது. எனவே தியானப் பிரிவு என்பது சான்சுங்கு (Chan -tsung) என்று சீன மொழியில் வழங்கியது. சான் என்பது சப்பான் மொழியில் ஜென் (Zen) என்று ஒலித்தது. எனவே தியானம்,சான், ஜென் என்பன ஒரு பொருட்பன்மொழி ஆகும்.

போதிதருமர் சீன நாட்டில் கி.பி.486-527 என்ற காலப் பகுதியில் தியானப் பௌத்தத்தினைப் பரப்பியவர்

என்பது வல்லுநர்களின் முடிந்த கருத்தாகும்.[26] இவரைத் தருமபோதி (Dharma bodhi) என்றும் வழங்கினர்.[27] இவர் தமோ (Tamo) என்ற பெயரில் சீன நாட்டிலும், தரும (Daruma) என்ற பெயரில் சப்பானிலும் அழைக்கப்பெற்றார். போதிதருமர் இளைஞராய் இருந்த காலத்தில் பிரஞ்ஞாதரர் (Prajnatara) என்ற பௌத்த ஞானி இவருக்குப் பௌத்தத் தியானத்தினைப் போதித்துப் பயிற்சியும் கொடுத்திருந்தார்.[28] கி.பி.486-527 என்ற காலப் பகுதியில் சீன நாட்டில் தியானப் பௌத்தத்தினைப் போதிதருமர் பரப்பினர் என்று சுங்கு அரச மரபின் (Sung Dynasty)காலத்தவராகிய கை-சூ (Kai-Su) என்பாரின் An Essay on the Orthodox Transmission of Dharma (இது சீன நூலின் பெயர்ப்பு) என்ற நூலில் கூறப்பட்டுள்ளது என்பர் D.T. சுசுகி (Suzuki).[29] போதிதருமர் கி.பி.528இல் இறந்தார் என்றும் அவர் எழுதியுள்ளார். கி.பி.520இல் போதிதருமர் தென்சீன நாட்டில் உள்ள காண்டன் (Conton) நகர்க்கு வந்தார்.[30] அப்பொழுது தென்சீனத்தினை ஆட்சிபுரிந்த பௌத்தப் பேரரசர் லீயாங்குவூ - தீ (Liang Wu-ti) பக்தி சிரத்தையுடன் போதிதருமரை வரவேற்றுப் போற்றினார்.[31] இருவருக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலைக் காண்போம்.[32]

பேரரசர் வூதீ : அரியணையில் அமர்ந்த காலம் முதல் இடைவிடாமல் பற்பல கோயில்களைக் கட்டியிருக்கிறேன். இந்த நற்செயலின் பயனாக எனக்கு எவ்வளவு புண்ணியம் கிடைக்கும்?

போதிதருமர் : ஒன்றும் கிடைக்காது.

பேரரசர் வூதீ : ஏன் ஒன்றும் கிடைக்காது?

போதிதருமர் : குறைபாடுடைய காரணங்களினால் அற்பமான பலன்களையே இவை தரும். நும் புண்ணியச் செயல் என்பது பொருளைத் (வஸ்துவை, Substance)

தேடிப் போகும் நிழலைப் போன்றது. உண்மையானது அன்று.

பேரரசர் வூதி : அப்படியாயின், புண்ணியம் என்பதன் மெய்ப்பொருள் யாது?

போதிதருமர் : எப்பொருளும் உண்மையாக இல்லாததால் புனிதம் என்று சொல்லத்தக்க ஒன்றும் இல்லை.

பேரரசர் வூதீ : என் வினாக்களுக்கு விடை கூறுகிறவர் யார்?

போதிதருமர் : அவர் யார் என்று எனக்கும் தெரியாது.

இங்ஙனம் நிகழ்ந்த உரையாடலினால், தியானக் கொள்கையின் அடிப்படையினைப் பேரரசர் புரிந்துகொள்ள இயலவில்லை. 'நான்' என்று சொல்லத்தக்க ஆத்மாவைப் புத்தர் உடன்படவில்லை. விஞ்ஞானம் எனப்படும் அறிவு ஒன்று தான் முற்ற முடிந்த உண்மை எனக் கருதியதால் போதிதருமர், பேரரசரின் வினாவுக்கு விடை தருபவர் 'நான்' என்று சொல்லவில்லை. போதிதருமர் கூறிய விடையிலிருந்து அவர் சூனியவாதத்தினைப் (Sunyata - Void - Emptiness) போதித்தார் என்று தோன்றுகிறது. சூனியம் (பூஜ்யம் - சுழியம்) என்பது சொல்லினால் விவரிக்கவோ, விளக்கவோ முடியாத உள்பொருள். எனவேதான், போதிதருமர் இன்மை வாசகத்தினால் விடை கூறினார். இந்தச் சூனியவாதம் விஞ்ஞான வாதம், யோகாசாரம், தியானம் என்பனவற்றின் சாரமாகவும் திகழ்கிறது.

சீனச் சூழலில் தியான பௌத்தம் காலந்தொறும் சிறுசிறு மாற்றங்களைப் பெற்றுள்ளது. பிடகங்களையும் மகாயான நூல்களையும் ஓதுவதற்குப் போதிதருமர் முதன்மை கொடுக்கவில்லை. மெய்ஞ்ஞான ஒளியைத் (Enlightenment) தியானப் பயிற்சியினால் மட்டுமே அடைய

முடியும் என்று யோக சாதனத்திற்குப் போதிதருமர் முதன்மை கொடுத்தார்.

பேரரசர் வூதியின் பக்குவப்படாத நிலையினைக் கண்ட போதிதருமர் அம்மன்னரின் தலைநகர் நங்கிங்கை (Nanking) விடுத்து வடசீனாவுக்குச் சென்றார். அங்கு லோ-யங்கு (Lo-Yang) என்ற இடத்திற்கு அருகில் இருந்த ஷவோ-லின் (Shao-lin) பௌத்தப் பள்ளியில் தன் எஞ்சிய வாழ்நாளினைத் தியானத்தில் கழித்தார். இங்கு அவர் சுவரை நோக்கியபடியே தியானத்தில் ஒன்பது ஆண்டுகள் ஆழ்ந்திருந்தார். இதனால், இவரைச் சுவரை நோக்கிய பிக்கு என்று அழைத்தனர். தியானப் பயனாய் அளப்பரிய சித்திகளைப் பெற்றிருந்தார். உடைந்து போன நாணல் தட்டையினைப் பற்றிக் கொண்டே கருநதியைக் (Black River) கடந்து வடக்குநோக்கிச் சென்றார் என்று கூறப்படுகிறது.[33]

சீன மக்கள் பௌத்தம் வருவதற்கு முன்பே யோகப் பயிற்சி உடையவர்கள். மனத்தினைக் கட்டுப்பாட்டில் வைப்பதற்குரிய அரிய சாதனமாகவே யோகப் பயிற்சியைக் கொண்டிருந்தனர். எனவே, போதிதருமர் போதித்த தியானநெறி அவர்களிடம் விரைவாகப் பரவியது.

தியான பௌத்தத்திற்குரிய அடிப்படைக் கருத்துக்கள் யாவும் இலங்காவதார சூத்திரம், வச்சிர சமாதி, வச்சிர சேதிகை, பிரஞ்ஞா பாரமிதை சூத்திரங்கள் ஆகிய மகாயானப் பௌத்த நூல்களிலிருந்துதான் எடுத்துக் கொள்ளப்பெற்றன. மெய்ஞ்ஞானம் எனப்படும் மெய்யொளி பெறுதல்தான் பௌத்தத்தின் இறுதிக் குறிக்கோள். இதனை எய்துவதற்குத் தியான பௌத்தம் தியான நெறியைப் புகட்டியது. பௌத்த நூல்கள் கூறுவனவற்றைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுதலைத் தவிர்த்தல் வேண்டும். அவற்றைக் கண்மூடித்

தனமாகப்பின்பற்றுதல் என்பது மனத்தை அடிமைப்படுத்துதலுடன் செயற்படாமல் கட்டிப்போட்டு விடுகிறது. மத குருமார்களின் செயற்பாடுகளையும் உருவ வழிபாட்டையும் தியான பௌத்தம் உடன்படவில்லை.

ஹுயி-நெங்கு என்பவர் சீனர், பௌத்தரானவர். இவரை வேய்-லங்கு (Wei-lang) என்று தென்சீன வழக்கில் கூறுவர். இவரை யேனோ (Yeno) என்ற பெயரினால் ஜப்பானியர் வழங்குவர். இவர் காலம் கி.பி.638-713 ஆகும். போதிதருமர் உருவாக்கிய தியான பௌத்த நெறியினை இவர் மேலும் வளர்த்தவர். இலக்கியத்தின் வாயிலாக மனத்தைப் புரிந்து கொள்ளுதல் இயலாது என்றும், எந்த ஊடகத்தின் உதவியும் இன்றி மனத்தைப் புரிந்து கொள்ளுவதற்கு மனம் மட்டுமே துணையாகும் என்றும் ஹுயி-நெங்கு (Hui-neng) போதித்தார்.[34] இவர் கருத்தினை, வீரசைவராகிய கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் பாடியுள்ள பிரபுலிங்கலீலையில் இடம்பெறும், 'மனத்தை அடக்க மனம்துணை ஆகும்' என்ற கருத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து உவகை உறுதல் கூடும்.

தியான பௌத்தத்தின் அடிப்படைக் கருத்துக்களில் சில மகாயான சூத்திரங்களில் காணப்படுகின்றன. அவையாவன:[35]

1. புத்தத்தன்மை (Buddhahood) என்பது போதி ஞானம் பெறுதல் (Enlightenment) ஆகும். போதிஞானம் என்பது மனத்தை அசைக்காமல், எழுப்பாமல் இருப்பதில் அடங்கியுள்ளது. தன்னியல்பினை உணர்தலும் புத்த நிலையினை அடைதலும் முதன்மை நோக்கமாக அமைந்தது.

2. மனம் என்பது அசையாமல் இருக்கும்படி பார்த்துக் கொண்டால், புலன்கள் யாவும் அமைதிப்படுத்தப் படுகின்றன. இந்நிலையில் போதி ஞானம் ஆகிய

உயரிய ஞானத்திற்குரிய வாயில் திறக்கப்படுகிறது. சொற்களையும் எழுத்துக்களையும் சார்ந்திராமை வலியுறுத்தப்பட்டது.

3. மெய்ஞ்ஞானம் (-போதிஞானம்) திறத்தல் என்பது மனம், உடல் (நாம ரூபம்) ஆகிய இரண்டினின்றும் மறைபொருளான விடுதலைக்கு (Mystical emancipation) இட்டுச் செல்லுகிறது. இந்த நிலை தேரவாத பௌத்தர் கூறும் நிர்வாண அமைதி நிலை அன்று. இது, மகாயான பௌத்தர் கூறும் போதிசத்துவர்க்குரிய உயர் ஞானம் ஆகும். இதன் பயனாய்ப் புலன்களின் தொடர்பு நீங்கி அவர்கள் செயலாற்றுவர்.

4. தொடக்கற்ற செயல் என்பது நாம - ரூபம் (மனம், உடல்) என்னும் இருமையினின்றும் விடுபட்ட நிலையில் புரியும் செயலாகும். இச்செயலால் பொருள்களின் உண்மை இயல்பு உணரப்படும்.

5. ஏகதா - எனப்படும் ஒருமை நெறி தததா (Suchness) எனப்படும் உலகிற்கு இட்டுச் செல்லும். அங்குத் தடைகளும், வேறுபாடுகளும் இல்லை. இதுவேதான் போதிஞானம், உயர்ஞானம், மெய்ஞ்ஞானம் (Enlightenment) ஆகும்.

மேலே கூறப்பட்ட கருத்துக்கள் வட சிந்தனைப் பள்ளிக்கு (Northern School) உரியன. தென்சிந்தனைப் பள்ளிக்கு (Southern School) உரிய கருத்துக்களை இங்கே காண்போம்:

“கண்ணாடியின் தன்மை என்பது விளக்குதல் ஆகும். தொடக்கத்திலேயே ஒவ்வொருவரும் போதிஞானம் உடையவர்களே. அழுக்குப் படிந்தால் கண்ணாடி விளக்கத்தை இழந்துவிடும். ஆசைகள் படிந்தால் ஒருவரின் ஞானம் சுடர்விடாது. கண்ணாடியை நன்றாகத் துடைத்துவிட்டால் மீண்டும் ஒளிதரும்.

பிழையான எண்ணங்களை அகற்றிவிட்டால் ஒருவரின் மனம் பிரகாசிக்கும்."

தென் சிந்தனைப் பள்ளிக்குரிய ஷென்-ஹிசீயு (Shen-hsiu) என்னும் பௌத்த ஞானி பின்வருமாறு கூறுகிறார்.[36]

"இந்த உடலே போதிமரம்
மனம் கண்ணாடி போன்றது
எப்பொழுதும் அதனைத் தூய்மையாகக் காப்பதில் கவனம் கொள்ளுவாய்.
அதன்மேல் எந்த அழுக்கும் படியாமல் இருக்கட்டும்"

ஷென்-ஹிசீயுவின் கருத்தினைச் சுங்கு - மீ (Tsung-mi) என்ற ஞானி மேலும் விளக்கிக் கூறுகிறார்.

"தனக்குத் தனிநிறம் இல்லாத பளிங்குப் பந்தினைப் போன்றது மனம். தானே இயல்பில் தூயதாய், முழுமையதாய் உள்ளது. ஆனால், அத்தகைய மனம் புற உலகுடன் தொடர்புறும் பொழுதுதான் பல்வேறு வண்ணங்களையும் வேறுபாடுகளையும் எடுத்துக் கொள்ளுகிறது. வேறுபாடு என்பது புற உலகுக்கு மட்டுமே உரியது, மனத்திற்கு உரியது அன்று.

கருநிறப் பொருளுக்கு முன் வைக்கப்பட்ட பளிங்குப் பந்து கருநிறம் அடைதல்போல், மனமும் அதன்முன் பொருந்தும் பொருள்களின் தன்மையினைப் பெற்று விடுகிறது. மாசுதுடைத்தல் என்னும் சொல் சாந்தநிலையினைத் தரும் தியானத்திற்கு இட்டுச் செல்லுகிறது".

தியான நெறிக்குரிய மற்ற பௌத்த ஞானிகளைப் போலவே, ஷென்-ஹிசீயு (Shen-Hsiu) மனம் என்பது உள்பொருள் என்பதை உடன்படுகிறார். ஒவ்வொருவரின் மனத்திலும் புத்த சீலங்கள் முழுதுமாய் உள்ளன. புறத்தே உள்ள பொருள்களை நோக்கி வழக்கமாக மனம் ஓடிக் கொண்டிருப்பதால், இந்த உண்மை உணரப்படவில்லை.

தன் மனத்தினை விடுத்து வெளியே ஓடாமல், அமைதிப் பயிற்சியினால் (Practice of Tranquilization) ஒருவர் தன் உள்ளத்தையே நோக்குதல் வேண்டும் என்று ஷென்-ஹிசீயு போதித்தார். இவர் போதனையில் தத்துவ விசாரம் இடம்பெறவில்லை என்று டி.டி. சுசுகி (D.T. Suzuki) கூறியுள்ளார்.[37] அருணகிரிநாதர், 'உள்ளத்தை நோக்க அருள்வாயே, வள்ளிக்கு வாய்த்த பெருமாளே!' எனப் பாடுதல் காண்க.

ஷென்-ஹிசீயு (Shen-Hsiu) 1. மகாயானத்தில் நம்பிக்கையினை விழித்தெழச் செய்தல் (Awakening of Faith in the Mahayana). 2. சத்தரும புண்டரிகம், 3. விமல கீர்த்தி சூத்திரம், 4. ஷியகு - கியோ (Shiyaku-kyo), 5. அவதம்சக சூத்திரம் என்ற ஐந்து நூல்களின் சாரத்தின் அடிப்படையில் பின்வரும் ஐந்து பொருண்மைகளை வெளியிட்டுள்ளார்.[38]

1. பூரண மெய்யுணர் ஞான மயமான புத்த தேகம் என்பது ததாகதரின் தரும காயத்தினை வெளிப்படுத்துவது.

2. புத்தருக்குரிய உள்ளுணர்வுஞானம் ஆறு அறிவுகளாலும் முற்றிலும் மாசடைகிறது.

3. அறிவு சாதனங்களுக்கு அப்பால் உள்ள விடுதலை (Emancipation) என்பது போதி சத்துவர்க்கு உரியது.

4. புற உலகால் தொடக்குறாது சாந்த மயமாய் இருத்தல்தான் எல்லாப் பொருள்களின் உண்மை இயல்பாகும் (சொரூபம்).

5. வேறுபாடற்ற மெய்ம்மைக்குள் துருவி நோக்குதலின் வாயிலாக எய்தப்படும் மெய்யுணர்வு ஞானத்திற்கு உரிய முற்றிலும் தடையற்ற பாதை திறக்கப்பட்டு உள்ளது.

இதுகாறும் ஷென்-ஹிசீயுவின் தியான நெறிக் கொள்கைகளைக் கண்டோம். இனி, ஹுயி-நெங்கு (Hui-neng) என்பாரின் கருத்துக்களைச் சுருக்கமாகக் காண்போம்.

ஹுயி-நெங்கின் கொள்கைகள்

இவர் கொள்கை முன்கண்ட ஷென்-ஹிசீயுவின் கொள்கையினின்றும் வேறுபட்டது:

“போதிமரம் என்பது ஒன்று இல்லை,
ஒளிக் கண்ணாடி நிலையும் இல்லை
எல்லாம் சூனியமாயி ருத்தலின்
தூசு எங்கிருந்து வந்து சேரும்?”

‘தொடக்கம் முதலே (அநாதியிலிருந்து) ஒரு பொருளும் இல்லை’ என்பதுதான் இவரின் முதல் பிரகடனம். D.T. சுசுகி இந்தப் பிரகடனத்தினை ஷென்-ஹிசீயு மற்றும் அவருக்கு முற்பட்டோர் குழாத்தின் மீது வீசப்பட்ட அணுகுண்டு என்று விமர்சிக்கிறார்.[39]

ஹுயி-நெங்கு தியான நெறியில் சூனிய வாதத்தினைப் புகட்டினார். இதனைச் சீன மொழியில் வூ-ஈ-வூ (Wu-i-Wu) எனக் கூறினர். இவர் கருத்திற்குப் பிரஞ்ஞாபாரமிதைத் தத்துவம் அடிப்படை ஆகும். இவருக்கு வச்சிர சேதிகா சூத்திரம் என்ற மகாயான நூல் பயிற்சியும் உதவிற்று.

“ஆதி முதலே ஒன்றும் இல்லை” என்பதுவே இவரின் தத்துவம். இக்கருத்து, தியானப் பௌத்தப் பயிற்சியை முற்றிலும் மாற்றி அமைத்தது. “(மனத்தின்) இயற்கைக்குள் நோக்குதல்” என்று போதித்தார். இதனை, சீயென்-ஹிசீங்கு (Chien-hsing) என்று சீனமொழியில் கூறினர். பொருள்களின் முற்ற முடிந்த முழு இயல்பினை நோக்குதல் என்றும் விளக்கினார். கபில தரிசனம் ஆகிய சாங்கிய தத்துவத்தில் ஒருவருக்குள் உள்ள புருடன் (Subject), புறத்தே உள்ள பிரகிருதியின் (உலகினை) நடனத்தைக் கவனிப்பதைப் போல், மனம் பொருள்களின் முற்ற முடிவான இயல்பினை

(Ultimate nature of things) நோக்குகிறது என்பதுதான் இவர் கருத்து. பௌத்தர்கள் யாவர்க்கும் ஆன்மா உடன்பாடு இல்லை என்பதால் ஆன்மாவாகிய புருடத் தத்துவத்தினை அவர்கள் ஏற்கவில்லை. அதற்குப் பதில் மனம் எனப்படும் உணர்வினை உள்பொருளாகக் கொண்டனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதுது. நோக்குவோன், நோக்கப்படும் பொருள் ஆகிய இரண்டினையும் ஒருங்கிணைத்தல் தியானம் அன்று; உணர்வு மயமாக ஒளிர்தலே தியானப்பயன்.

'ஆதியிலிருந்து ஒரு பொருளும் இல்லை' என்ற சூனியக் கோட்பாடு தூய்மை என்ற கோட்பாட்டுடன் இணைத்துப் பேசப்படும் பிழைபாட்டினை வன்மையாக அழிக்கிறது. தூய்மை (விசுத்தி, Purity) என்பது வெறுமைதான் (Sunyata-Nothingness). எல்லா இயல்புகளின் இன்மையே தூய்மை ஆகும். பூரணமான இன்மைத் தன்மை (Absoltue no-ness) தூய்மை எனப்படும் வெறுமையினைக் குறிக்கும்.

ஹுயி-நெங்கு (Hui-neng), "மனம் என்ற கருத்துடன் அல்லது தூய்மை என்ற கருத்துடன் அல்லது அசையாமைக் கருத்துடன் ஒட்டிக் கொண்டு விடாதே. ஏன்எனில் மனம் (Mind), தூய்மை (Purity), அசையாமை (Immovability என்பன யாவும் நம் தியானம் ஆகா.

தூய்மை என்னும் கருத்தினை ஏற்றுக் கொண்டு அதனுடன் ஒட்டிக் கொண்டால், நீ தூய்மையினைப் பொய்மை ஆக்கிவிடுகிறாய். தூய்மை என்பதற்கு வண்ணமோ வடிவமோ இல்லை. தூயது என்று ஒரு பொருளை அடைந்துவிட்டதாக உரிமை கொண்டாடினால், உன்னுடைய சுயத்தன்மையினைத் தடுக்கிறாய். தூய்மையால் பந்தப்படுகிறாய்".

என்று கூறுவதிலிருந்து இறுதி விடுதலைதான் (Final emancipation) அவர் விரும்பியது என்பது புலனாகும்.[40]

எத்தனை வகையான ஒட்டுதல்கள் (Clingings) உள்ளனவோ, அத்தனை வகையான கட்டுதல்கள் (Bindings) உள்ளன. எனவே, தூய்மையுடன் ஒட்டுதல் என்பது தூய்மை என்பதற்கு ஓர் உருவத்தை உண்டாக்கி, அதனால் கட்டப்பட்டு விடுகிறோம் (Purity-bound). அதே அடிப்படையில் சூனியத்துடன் ஒட்டியிருக்கிறோம், தங்கியிருக்கிறோம் என்றால், சூனியத்திற்கு ஓர் உருவம் கொடுக்கப்பட்டு, அதனால் கட்டப்பட்டு விடுகிறோம் (Emptiness-bound). தியானத்தில் ஒட்டியிருக்கிறோம், தங்கியிருக்கிறோம் என்றால், தியானத்தால் கட்டப்பட்டிருக்கிறோம் (Dhyana-bound) என்றாகிவிடும்.

எவ்வளவுதான் தியானப் பயிற்சிகள் உன்னதத் தகுதிகள் மற்றும் பேறுகளைத் தந்தாலும், ஏதேனும் ஒரு வகையில் அவை நம்மை பந்த நிலைக்கு (State of Bondage) ஆளாக்கிவிடும். இதனால் விடுதலை கிட்டாது. எல்லா விதமான தளைகளிலிருந்தும் முற்றாக விடுபடுவதற்குரிய முயற்சிப் படிநிலைகளின் ஒழுங்குமுறை அமைப்புத்தான் தியானம்- சான் - ஜென் பௌத்தம் ஆகும்.

ஹுயி-நெங்கின் ஞானமிகு சீடர் ஷென்-ஹுயி (Shen-hui) என்னும் தியானப் பௌத்த ஞானி கூறும் கருத்தினைக் காண்போம்:

“பார்த்தல் (Seeing) என்பது ஏதோ ஒன்றினைப் பார்த்தல் என்று கொள்ளப்படும் காலம் வரை, அது உண்மையானது அன்று; ‘பார்த்தல் என்பது பார்த்தல் இல்லை’ (Seeing is no-seeing) என்பது குறிப்பிட்ட உணர்வு நிலையில் குறிப்பிட்ட பார்த்தல் தொழிலைக் குறிக்கவில்லை. வேறுவிதமாகக் கூறின், ‘பார்த்தல் என்பது பார்த்தல் இல்லை என்ற நிலையே உண்மையில் பார்த்தல் ஆகும். கேட்டல் என்பது கேட்டல் இல்லை

என்ற நிலையே உண்மையில் கேட்டல் ஆகும். இதுவே பிரஞ்ஞா பாரமிதையின் உள்ளுணர்வு ஆகும்.

சுயத்தின் தன்மையினை நோக்குதல் என்பது ஒரு குறிப்பிட்ட உணர்வு நிலையுடன் தொடர்புறாவிடின், அந்த நிலை இன்மைச் சொற்களினால் (Negative terms) இல்லாத எண்ணம் (No-thought), இல்லாத மனம் (No-mind) என்று வழங்கப்படும். வெறுமைக்குள் அல்லது சூனியத்திற்குள் நோக்குதல்தான் உண்மை நோக்குதல் என்றும், முடிவற்ற நோக்குதல் என்றும் கூறப்படும்" என்றார் ஷென்-ஹுயீ.[41]

பார்த்தல், நோக்குதல் என்பன ஊனக் கண்ணினால் பார்ப்பதைக் குறிக்கவில்லை. 'பரமே பார்த்திருப்பார் பதார்த்தங்கள் பாரார்' என்று அருணந்தி சிவனார் என்னும் மெய்ஞ்ஞானி சிவஞான சித்தியாரில் கூறியுள்ள கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. பதம்+அர்த்தம்=பதார்த்தம். சொல் உணர்த்தும் உலகப் பொருள்கள்மேல் கவனம் காட்டாமல் பரம்பொருளையே ஞானிகள் தியானித்திருப்பர் என்பது இப்பாடலின் பொருளாகும். தியானம் என்றும் ஞானம் என்றும் சொல்லப்படும் கண்ணினால் புலன்களுக்கு அகப்படாத வியாபகத்தினை நோக்குதலே தியான பௌத்தம் உள்ளிட்ட ஞான சமயங்கள் யாவற்றிலும் போதிக்கப்பட்டது. தியான பௌத்தம் கூறும் சூனியம் என்பது இல்பொருள் அன்று; உள்பொருளே ஆகும்.

மகாயான பௌத்தத்திற்குரிய விஞ்ஞான வாதக் கொள்கையும், சூனியவாதக் கொள்கையும் யோகாசாரக் கொள்கையும் தியான பௌத்தமாக உரு எடுத்தது எனலாம். தியான பௌத்தம் பற்றிய மூல நூல்களையும் ஆய்வு நூல்களையும் நுணுகி ஆராயின் அஃது ஒரு ஒட்டுநெறி (Hybrid path) என்பது தெளிவாகிறது. இந்நெறியின் மையக் கொள்கைகள் இரண்டாகும். முதற்

கொள்கை தியானத்தினை மையப்படுத்துவது. ஒவ்வொருவரின் உள்ளத்திலும் புத்த இயல்பு (Buddha nature) உறைந்துள்ளது. இந்தப் புத்த இயல்பாகிய போதி ஞானத்தை விழித்தெழச் செய்வதற்குத் தியானமே வழியாகும். இரண்டாவது கொள்கை சதோரி (Satori) எனப்படுவது. இச்சொல் தியானப் பயிற்சியினால் ஒவ்வொருவரின் உணர்வினில் சுடர்விடும் உள்ளொளியைக் குறிப்பது. வரம்பற்ற இப்பேரொளி சர்வ அண்டத்தினையும் (All Universe) ஒளியேற்றக் கூடிய ஆற்றல் வாய்ந்தது. போதிசத்துவ நெறியில் சொல்லப்படும் பிரஞ்ஞா பாரமிதை (-Perfection in Absolute Knowledge) என்பதற்கு மறுபெயராகச் சதோரி (Satori) அமைந்துள்ளது. அளவற்ற, வரம்பற்ற முழுமையான ஞான ஒளியை அடைதல்தான் தியான-சான்-ஜென் பௌத்தத்தின் இறுதிக் குறிக்கோள் ஆகும். ஒருவர் பெறும் ஞான அனுபவத்தினால் உலகத் தொடர்பினின்றும் தன்னை விலக்கிக் கொள்ளவோ, ஒதுங்கிக் கொள்ளவோ இந்நெறி கூறவில்லை. சமுதாய ஓட்டத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு குடும்பக் கடமைகளையும் சமுதாயப் பொறுப்புக்களையும் கவனிக்கத் தூண்டுவதுதான் இந்நெறியின் நோக்கம் ஆகும். அங்ஙனம் பல்வேறு செயல்களில் ஒருவர் ஈடுபடும் பொழுது தன் சுயத்தினை இழந்துவிடாமலும், அவற்றுடன் ஒட்டிக் கொள்ளாமலும் விழிப்புடன் பார்த்துக் கொள்ளவும் இந்நெறி அறிவுறுத்துகிறது.

வளர்தல் மரத்தின் இயல்பு. நீந்துதல் மீனின் இயல்பு. பறத்தல் பறவையின் இயல்பு. அதுபோல் போதி ஞானப் பேரொளி மனிதனின் இயல்பு என்று தியான பௌத்தம் பேசுகிறது.

பொறிகளுக்கும் புலன்களுக்கும் அனுபவப்படுவன அனைத்துமே உண்மையல்ல; அழிவன. எனவே, பொறிகளையும் புலன்களையும் கடந்த முற்ற முடிந்த

உண்மை (Transcendental Reality or Absolute Reality) என்பது மனத்தினைத் தாண்டிச் செல்வது; சொற்களால் பிடிக்க முடியாதது; எங்கும் எப்பொழுதும் இருப்பது. அதனைச் சூனியம் என்றனர். சூனியம் என்பது முயற்கோடு போல இல்லாத பொருள் அன்று. அது உள்பொருளே. அதற்கு அடை (Attribute), வருணனை (Description) ஒன்றும் இல்லை. தமிழ்ச் சித்தர்கள் அந்தப் பரம சத்தியத்தினைப் பாழ், வெட்டவெளி, சூனியம் முதலிய சொற்களினால் குறித்துள்ளனர். தியானப் பௌத்தம் கூறும் சூனியமும் தமிழ்ச் சித்தர் கூறும் பாழ், வெட்டவெளியும் ஒன்றேதான். தமிழ்ச் சித்தர்களில் ஒருவராகிய போகர் பிறப்பினால் சீனர் என்றும், சீன நாட்டிற்குச் சென்றிருந்த பொழுது இறந்த சீனர் உடலில் புகுந்து கொண்ட தமிழ்ச் சித்தர் என்றும் கூறப்படும் இருவேறு கருத்தினையும் இங்கு எண்ணிப் பார்த்தல் வேண்டும். காஞ்சி மாநகரிலிருந்து சென்ற இளவரசர் போதிதருமர் தியானப் பௌத்தத்தினைச் சீனத்தில் பரப்பியவர் என்பதால் போக சித்தரும் அவ்வாறே தம் நெறியினைப் பரப்பியவராகக் கருதுதற்கு இடம் உண்டு. புத்தர் நெறிக்கும் சித்தர் நெறிக்கும் பொதுக்கருத்துக்கள் பல காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சீன நாட்டில் பெரிதும் பரவியது தியான பௌத்தம் என்பது குறிப்பிடத்தக்கது. அந்நாட்டில் பரவியிருந்த ஏனைய பௌத்தப் பிரிவுகள் பற்றிக் சுருக்கமாகக் காண்போம்.

II. தீயெந்தைப் பிரிவு (T'ien-t'ai-tsung)

இந்தப் பிரிவு ஃபாஹுவா (Fa-hua) என்று சீனத்திலும், தெண்டை (Tendai) என்று ஜப்பானிலும் வழங்குகிறது. சேகியங்கு (Chehkiang) மாகாணத்தில் தீயெந்தை என்ற பெயருடைய குன்றில் இருந்த பௌத்தப்பள்ளியில் இப்பிரிவினை நிறுவின சீசீயே (Chih-

ch'i-yeh) என்பார் தங்கியிருந்ததால் இதற்கு இவ்விடப் பெயரிடப்பபட்டது.[42]

இதனை நிறுவிய சீசீயே கி.பி.ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர். தம் பதினேழாம் வயதில் பிட்சுக் கோலம் பூண்டவர். நன்கிங்கு (Nanking) என்ற இடத்தில் வாழ்ந்தவர்; மக்களால் போற்றப்பட்டவர். கி.பி.597இல் மாறுகாலிட்டு ஆசனத்தில் அமர்ந்தபடி தன் சீடர்களுக்குப் போதனை புரியும் பொழுது உயிர் நீத்தார். இவரைப் பின்பற்றுவோர் பலராவர்.

இவரின் தத்துவக் கருத்துக்கள் கி.பி.2ஆம் நூற்றாண்டினராகிய நாகார்ச்சுனரின் மாத்தியமிகக் கருத்துடன் நெருக்கமாக ஒத்துள்ளன. இவர் நாகார்ச்சுனரைப் போலவே மாத்தியமிகம் எனப்படும் நடுப்பாதையினை (Middle-path) போதித்தார். மாத்தியமிகத்துக்குரிய வியவகார சத்தியம் (Empirical reality), பாரமார்த்திக சத்தியம் (Transcendental reality) என்பன இரண்டையும் இவரும் ஏற்றுக் கொண்டார். வியவகாரக சத்தியம் என்பது ஐம்புலன்களாலும் அறியப்படும் உலகியல் பொருள்களின் உண்மையினைக் குறிக்கும். வியவகாரம் - உலகியல் நடைமுறை. வியவகார நிலையில் இவை உண்மையெனக் கொள்ளப்படினும், புலன்கடந்த ஞான நிலையில் இவை நிரந்தரம் அற்றவை, பொய்யானவை என்ற உணர்வு தோன்றும். சூனியம் (Emptiness) மட்டுமே உண்மை என்பதுதான் பாரமார்த்திக சத்தியம் ஆகும். பரம+அர்த்தம் என்றால் மேலான பொருள்; இந்தப் பொருள் குணம், குறி இல்லாதது; சுட்டிக்காட்ட முடியாதது; நிரந்தரமானது. அதுவே முற்ற முடிந்த உண்மை அல்லது சத்தியம் (Absolute Reality or Transcendental Reality). இந்தச் சூனியத்தைத் திருமூலரை உள்ளிட்ட தமிழ்ச் சித்தர்கள் சூனியம், பாழ், வெட்டவெளி என்ற சொற்களினால் குறித்துள்ளனர் என்பதை முன்னர்க் கண்டோம்.

பல்வேறு பௌத்தப் பிரிவுகளில் காணப்படும் போதனைகளை ஒருங்கு திரட்டி, ஒன்றிணைத்துச் சீசீயே இடைவிடாமல் மக்களுக்குக் கற்பித்து வந்தார். சீன நாட்டில் வாழ்ந்த பௌத்த குருமார்களில் இவர் புகழ் பெற்ற ஒருவராகப் போற்றப் பெற்றார். இவர் புகட்டிய நெறி சீனம் எங்கும் பரவியிருந்ததோடு, ஜப்பானிலும் பரவி இன்றளவும் அங்குள்ள பிட்சுக்களால் பின்பற்றப்படுகிறது.

III. லூ-சுங்குப் பிரிவு (Luh-tsung)

திரிபிடகங்களில் ஒன்றாகிய விநய பிடகத்தினை அடிப்படையாகக் கொண்டு இப்பிரிவு அமைந்தது. இதனைத் தோற்றுவித்தவர் யுவான் சுவாங்கின் ஒப்பற்ற மாணவர் தாவோ சூயென் (Tao-Suen) ஆவர்.[43] இன்றளவும் இப்பிரிவு சான் பிரிவுக்கு இணையாகச் சீன மக்களால் பின்பற்றப்படும் முக்கியப் பௌத்தப் பிரிவாக உள்ளது. சீன நாட்டின் பௌத்தப் பள்ளிகளில் பெரும்பான்மையானவை இவ்விரு பிரிவுகளுக்கும் உரியவை.

கி.பி.8ஆம் நூற்றாண்டில் சீனப்பிட்சு ஒருவர் இந்நெறியை ஜப்பானில் பரப்பினார். அந்நாட்டில் இந்நெறி ரிட்சு (Ritsu) என்று வழங்கலாயிற்று. இந்த நெறி ஒழுக்கத்தையும் அறத்தினையும் கூடுதலாக வலியுறுத்துகிறது. விநய பிடகத்தில் கூறப்பெற்ற விதிகளைப் பிட்சுக்கள் உறுதியுடன் பின்பற்றவேண்டும் என்று இப்பௌத்தப் பிரிவு வலியுறுத்துகிறது. தர்மகுப்தர் விநய பிடகத்திற்கு வழங்கிய விளக்கத்தின் அடிப்படையில் இந்நெறி அமைந்திருப்பதால் தர்மகுப்தர் பிரிவு என்றும் பெயர்பெற்றது. ஏனைய பௌத்தப் பிரிவுகளைச் சேர்ந்த பிட்சுக்கள் கூட இக்காலத்து இந்நெறியிற் கூறப்படும் 250 ஒழுங்கு விதிகளைப் பின்பற்றி வருகின்றனர்.

தாவோ சூயென் புகழ்பெற்ற எழுத்தாளர். எண்ணற்ற நூல்களை எழுதியுள்ளார். வாழ்க்கை வரலாறு, வரலாறு, தத்துவ உரையாடல்கள் முதலிய தலைப்புக்களில் அவை அமைந்துள்ளன. இந்நெறியில் எண்ணற்ற ஆர்வலர்க்குப் பயிற்சி அளித்தார். அவர் இறப்புக்குப் பின்னும் அவர்கள் இந்நெறியைப் பேணி வளர்த்தனர். தங்கு (T'ang) மரபின் ஆட்சிக் காலத்தில் புகழ்பெற்ற படைப்பாளர் பலரும் இந்தப் பௌத்தப் பிரிவினராகவே இருந்துள்ளனர்.

IV. சிங்கு-தூ-சுங்குப் பிரிவு (Tsing-thu-tsung)

இந்தப் பௌத்தப் பிரிவினைக் கி.பி.4ஆம் நூற்றாண்டில் ஹூயி-யுவான் (Hui-yuan) என்பவர் தோற்றுவித்தார். இவர் வட ஷான்சி (Shan-si) என்ற ஊரினர். தாவோ-அன் (Tao-an) என்பாரின் சீடர். தொடக்கத்தில் இவர் தாவு நெறியினைப் பின்பற்றியவர். பௌத்தப் பிரிவுகள் பலவற்றுக்குரிய நூல்களைப் படித்துத் தெளிந்தபின் பௌத்தராக மாறியவர். பௌத்தத்தினைப் பரப்பும் நோக்கத்துடன் ஒரு நிறுவனத்தை உண்டாக்கினார். இங்கு இந்தியாவிலிருந்தும் பல பௌத்தப் பிட்சுக்கள் வந்தனர். சீனப் பிட்சுக்களும் இருந்தனர். அவர்களில் புத்தபத்திரர், ஜினகுப்தர், புத்தயசர் என்பவர் குறிப்பிடத்தக்கவர். இவர்கள் எண்ணற்ற பௌத்த நூல்களை வடமொழியிலிருந்து சீனத்தில் மொழிபெயர்த்தனர்.[44]

போதிசத்துவர் அமிதாபா (Amitabha)விடம் பூரண நம்பிக்கை வைப்பதால் உய்தி பெறலாம் என்று சிங்கு-தூ-சுங்குப் பிரிவு போதித்தது. அமிதாபாவின் பெயரை உச்சரித்துக் கொண்டிருப்பவர் சுவர்க்கம் புகுவர் என்று இப்பிரிவு போதித்தது. சீனத்திலிருந்து ஜப்பான் சென்ற இப்பிரிவு ஷெண்டோ (Zendo) என்ற பெயருடன் விளங்கியது.

V. ஹுவ-யென்-சுங்குப் பிரிவு (Hua-yen-tsung)

இப்பிரிவு கி.பி.6,7ஆம் நூற்றாண்டுகளில் சீனத்தில் தழைத்திருந்தது. இப்பிரிவின் தோற்றம் அசுவகோஷருடனும் நாகார்ச்சுனருடனும் தொடர்புபடுத்தப்படுகிறது. ஆயினும், நூ-தூ-ஃபா-சூ (Nu-thu-fa-su) என்பவர்தான் இதனை நிறுவியவர்.[45] அவதம்சகப் பிரிவு என்றும் இதற்குப் பெயர் உண்டு.

இப்பிரிவு யோகாசாரப் பௌத்தத்துடன் நெருங்கிய தொடர்புடையது. 'உள்ளம்தான் பிரபஞ்சத்தின் இருப்பிடம்' என்பது இதன் மையக் கொள்கையாகும். உள்ளம்தான் உலகமாகக் காட்சி தருகிறது. உள்ளம் என்பது உணர்வு எனப்படும் விஞ்ஞானம். இதுதான் உண்மை; இதற்குமேல் உள்ளன யாவும் இதன் படைப்பு அல்லது விகாரமே. எனவே, இப்பிரிவு விஞ்ஞான வாதம் என்றும் பேசப்பட்டது. இந்தியாவில் இதனைத் தோற்றுவித்தவர் அசங்கர், வசுபந்து என்னும் பௌத்த ஞானிகள் ஆவர். மணிமேகலை ஆகிய பௌத்தக் காப்பியத்தில், 'உள்வழக்கு உணர்வு' (xxx-208), என்று விஞ்ஞானத்தையே உண்மை (Reality) என்று சாத்தனார் கூறியுள்ளதால், அவர் அசங்கர், வசுபந்துவின் விஞ்ஞான வாதத்தினை ஏற்றுக் கொண்ட பௌத்தக் கவிஞர் என்பது புலனாகும்.

VI. ஃபா-ச-சுங்குப் பிரிவு (Fa-cha-tsung)

இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியதும் (கி.பி.650) யுவான் சுவாங்கு (Hiuen-Tsang) இந்தப் பிரிவினைத் தொடங்கினார்.[46] இதற்குத் தருமலட்சணப் பிரிவு (Dharmalaksana sect) என்ற பெயரும் உண்டு. இப்பிரிவு சப்பான் நாட்டிலும் பரவிற்று. இந்தப் பிரிவுக்குரிய தத்துவநூல் விஞ்ஞப்தி மாத்ரதா சித்தி சாத்திரம் என்பதாகும். புற உலகு உண்மை என்பதை இப்பிரிவு உடன்படவில்லை. சித்தம் என்றும் விஞ்ஞானம் என்றும் சொல்லப்படுவதுதான் உண்மை

என்று இப்பௌத்தப் பிரிவு பேசுவதால் இதுவும் யோகாசாரம் அல்லது விஞ்ஞான வாதம் எனப்படும் மகாயானப் பௌத்தப் பிரிவுடன் தொடர்புடையது என்பது புலனாகும். அசங்கர் அல்லது மைத்திரேயர் ஆகியோரின் சிந்தனைகள் அடங்கிய மகாயான சூத்திராலங்காரம் என்ற நூலும் இப்பிரிவுக்கு உரியது.

VII. சன் - லுன் பிரிவு (San - Lun - tsung)

கி.பி.5ஆம் நூற்றாண்டில் இப்பிரிவினை நிறுவியவர் இந்தியப் பௌத்தப் பேரறிஞர் குமாரசீவர் ஆவர்.[47] இப்பௌத்தப் பிரிவு நாகார்ச்சுனரின் மாத்தியமிக சாத்திரம், துவாதசநிகாய சாத்திரம் என்ற நூல்களையும், ஆரியதேவரின் சதுஷ்சதகம் அல்லது சத சாத்திரம் என்ற நூலையும் அடிப்படையாகக் கொண்டது. இம்மூன்று நூல்களையும் அடிப்படையாகக் கொண்டதால் இப்பிரிவுக்கு முச்சாத்திரப் பிரிவு (San-lun-tsung அல்லது Three Sastra sect) என்ற பெயரும் உண்டு. இந்நூல்களைச் சீனமொழியில் குமாரசீவர் மொழிபெயர்த்துள்ளார். சூனிய வாதத்தினை இப்பிரிவு புகட்டுகிறது. மாத்தியமிகப் பௌத்தத்தின் மறுவடிவமாக இஃது உள்ளது. கி.பி.625இல் இம்மகாயானப் பிரிவு சப்பான் நாட்டிற்கு அறிமுகம் ஆயிற்று. அங்கு சன்ரோன் (San-ron) பிரிவு எனப் பெயர் பெற்றது. இப்பொழுது சீனத்திலும் சப்பானிலும் இப்பிரிவினைப் பின்பற்றுபவர் எவரும் இலர்.

VIII. செங்கு-ஷி-சுங்குப் பிரிவு (Ch'eng-shih-tsung)

இப்பிரிவுக்குச் சத்திய சித்திப் பிரிவு என்ற பெயரும் உண்டு. கி.பி.5ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இது தோன்றியது. ஹரிவர்மன் என்பாரின் சத்திய சித்தி சாத்திரத்தினைக் குமாரசீவர் சீனத்தில் மொழிபெயர்த்தார். இந்த மொழிபெயர்ப்பு நூலினை அடிப்படையாகக் கொண்டது இப்பிரிவு.

கி.பி 7ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இப்பௌத்தப் பிரிவு சீனாவிலிருந்து சப்பானுக்குப் பரவியது. அங்கு ஜோதிசூ (Jotitsu) என்று பெயர் பெற்றது. காலப் போக்கில் சன்லுன் (சன்ரோன்) பிரிவுடன் இஃது இணைந்துவிட்டது.[48] முச்சாத்திரப் பிரிவினைப் போலவே இப்பிரிவும் சூனிய வாதத்தைப் புகட்டுகிறது.

IX. சூ-ஷே-சுங்குப் பிரிவு (Chu-shē-tsung)

வசுபந்து இயற்றியுள்ள அபிதரும கோச சாத்திரத்திற்கு யுவான்-சுவாங்கின் சீன மொழி பெயர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு இப்பிரிவு தோன்றியது.[49] இதற்குக் கோசப் பிரிவு என்ற பெயரும் உண்டு. கி.பி.7ஆம் நூற்றாண்டில் சீனாவிலிருந்து இப்பிரிவு சப்பானில் அறிமுகமாகி சுஷப்பிரிவு (Susha sect) என்ற பெயருடன் பரவியது.

ஆன்மாவினை உடன்படாத இப்பௌத்தப் பிரிவு உணர்வுமயமான கந்தங்களை (Skandhas) ஒப்புக் கொள்ளுகிறது.

X. மீ-சுங்குப் பிரிவு (Mi-tsung அல்லது Secret Sect)

கி.பி.8ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வச்சிர போதி இப்பிரிவினைச் சீன நாட்டில் நிறுவினார்.[50] இது இந்தியாவில் வழங்கிய மந்திரயானம் அல்லது தந்திரயானம் என்ற மகாயானப் பிரிவுடன் ஒத்துள்ளது. இந்தியாவிலிருந்து கடைசியாகச் சீன நாட்டில் அறிமுகம் செய்யப்பெற்ற பௌத்தப் பிரிவு இதுவே. இப்பிரிவிற்குரிய நூல் மகா வைரோசனாபி சம்போதி எனப்படும் மகாவைரோசன சூத்திரம் ஆகும். வைரோசனர் என்பவர் சூரிய உருவில் உள்ள புத்தர். இவரை வழிபடுவதை இப்பிரிவு போதிக்கிறது. ததாகதகருப்பம், தருமதாது, தததா எனப்படும் முற்ற முடிந்த உண்மையும், வைரோசனராகிய உயர்புத்தரும்

ஒருவரே. எல்லாவற்றுக்கும் மூலமுதலும் இவரே. எப்பொருளும் இதனுடன் ஒன்றுபடும். மந்திரங்கள், சடங்குகள் என்பவற்றின் வாயிலாக உய்தி பெறலாம் என்று இப்பிரிவு கற்பிக்கிறது. இந்தப் பிரிவின் அறிமுகத்துக்குப் பின்னர், சீனமக்கள் மூடநம்பிக்கை மிக்கவராக மாறிவிட்டனர். பௌத்தத்தின் உன்னதக் கொள்கைகள் மறக்கப்பட்டு, சடங்குகள் முன்னிலை பெற்றன.

தியான பௌத்தமும் தாவு மார்க்கமும் பல பொதுக் கருத்துக்கள் கொண்டுள்ளன. பெரும்பாலான பௌத்தப் பிரிவுகள் நெகிழ்ச்சியும் ஏற்புத் தன்மையும் பெற்றுள்ளன. அவற்றுள் நான்கு பிரிவுகள் மட்டுமே சீன நாட்டில் இன்றளவும் நிலைபெற்றன. அவையாவன: 1. தியானப் பிரிவு, 2. விநயப் பிரிவு, 3. தீ-யெந்தைப் பிரிவு, 4. சிங்கு-தூ-சுங்குப் பிரிவு என்பன ஆகும்.

ஓராயிரத்து அறுநூற்று அறுபத்திரண்டு பாலி, வடமொழிப் பௌத்த நூல்கள் சீனத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றை 1. சூத்திரபிடகப் பிரிவு, 2. விநயபிடகப் பிரிவு, 3. அபிதருமப்பிடகப் பிரிவு, 4. பிற என்று நான்கு வகையாகப் பாகுபடுத்தியுள்ளனர். இவற்றுள் முதல் மூன்றும் வடமொழியிலிருந்து சீனத்தில் மொழிபெயர்க்கப்பட்டவை. நான்காவது பிரிவில் மொழிபெயர்ப்பு நூல்களுடன் சீனத்தில் எழுதப்பட்ட மூல நூல்களும் அடங்குவன ஆகும்.

பொதுவுடைமைக் கொள்கைகளின் செல்வாக்கினால் இன்றைய சீன நாட்டில் பௌத்தம் குன்றியபோதிலும், சீனர்களின் வாழ்வுத் துறைதொறும் அதன் பதிவு நீடித்துள்ளது. இந்தியாவுக்கும் சீனத்துக்கும் பௌத்தம் ஒரு பிணைப்பாக இருந்து வந்துள்ளது.

சீன மொழியில் பௌத்தம் சார்ந்த பாலி, வடமொழிச் சொற்கள் நூற்றுக் கணக்கில் கலந்துள்ளன. அவற்றைச் சில தலைப்புக்களில் அடைவு செய்து காண்போம்.

சீனமொழியில் பௌத்தச் சொற்கள்

பாலி மொழியிலும், வடமொழியிலும் எழுதப்பெற்ற பௌத்த நூல்கள் சீனமொழியில் கி.பி.முதல் நூற்றாண்டிலிருந்து பல நூற்றாண்டுகள் வரை மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. இவற்றுள் மகாயானப் பௌத்தத்திற்குரிய வடமொழி நூல்களின் மொழிபெயர்ப்புக்கள் மிகுதியாக உள்ளன. இவற்றை மொழிபெயர்த்தவர்கள் இந்தியாவிலிருந்து சென்ற மகாதேரர்களும், சீன நாட்டிலிருந்து இந்தியா வந்து பல பௌத்தக் கேந்திரங்களிலும் தங்கிப் பௌத்தப் பேரறிஞர்களிடம் முறையாகப் பயின்று பின் தம் தாயகம் சென்ற சீனப் பேரறிஞர்களும் ஆவர். இவற்றுள் திக்கநாகர் எழுதிய பிரமாண சமுச்சமும் நியாயப் பிரவேசமும் இந்தியாவில் மறைந்து போயின. இவற்றை மீண்டும் இருமொழி வல்ல அறிஞர்கள் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. திக்கநாகர் காஞ்சிமாநகரில் தோன்றிய தமிழ்ப் பௌத்தர் ஆவர்.

திக்கநாகர் காலத்திற்கு (கி.பி.450) முற்பட்ட 1. தருக்க சாத்திரம் (Tarka sastra), 2. உபாய ஹிருதயம் (Upayahrdaya). 3. விக்கிரக வியாவர்த்தனீ (Vigrahavyavartani), 4. சத சாத்திரம் (Satasastra) என்பன நான்கனையும் இத்தாலியப் பௌத்தப் பேரறிஞர் ஜி. துச்சி (G. Tucci) என்பார் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து, "Pre-Diññāga Buddhist Texts on Logic From Chinese Sources" என்ற நூலினை வெளியிட்டுள்ளார்.[51]

வில்லியம் எட்வர்டு சூதில் (William Edward Soothill), லெவி ஹோடோஸ் (Lewis Hodous) என்னும் பௌத்த அறிஞர்கள் இருவர் சீன மொழியில் பொதிந்துள்ள பௌத்தக் கலைச்சொற்களைத் திரட்டி, அவற்றுக்குரிய வடமொழி, பாலி, ஆங்கிலப் பரியாயச் சொற்களையும்

அகர வரிசைப்படுத்தி, விளக்கங்களையும் இணைத்து A Dictionary of Chinese Buddhist Terms[52] என்ற நூலினை வெளியிட்டுள்ளனர். இந்த அகரநிரலிலிருந்து பின்வரும் சொற்கள் எடுக்கப்பட்டவை. ஒவ்வொரு பக்கத்தின் பின்னர்ச் சுட்டப்படும் a, b என்பன முறையே அப்பக்கத்தின் இடப்புறம், வலப்புறம் என்பனவற்றைக் குறிப்பன.

I. புத்தர் பிரானைக் குறிக்கும் சொற்களில் சில

1. அருகன் (Arhat) 52b.
2. அனுத்தரர் (Anuttara) 52b.
3. ஆதிபுத்தர் 83b, 225a, 288a.
4. சம்யக் சம்புத்தர் (Samyak-sambuddha) 52b.
5. சாக்கியமுனி 48a, 216b, 468a, 482a.
6. சாத்தர் (Sasta) 52b.
7. சினர் (Jina - புலன்களை வென்றவர்) 336b, 366a, 376a.
8. சுகதர் (Sugata) 52b.
9. ததாகதர் (Tathagata) 5b, 52b, 209b, 210b, 258a, 284b.
10. பகவன் (Bhagavan) 52b.
11. புத்தர் 63b, 77b, 225a, 227a, 241a,b, 297b, 327b, 412b, 480b.
12. புருடதம்ய சாரதி (Purusadamya sarathi) 52b.
13. லோகவிது (Lokavid) 52b.
14. வித்தியாசரண சம்பன்னர் 52b.

II. புத்தரின் பத்துச் சீடர்கள்

1. அநிருத்தர் (Aniruddha)- தேவக்காட்சி உடையவர் 48a.
2. ஆனந்தர் (Ananda) - கேள்வி ஞானம், நினைவுத் திறன் கொண்டவர் 48b.

3. இராகுலர் (Rāhula) - பௌத்த மறைபொருளை (Esoteric) விளக்குபவர் 48b.
4. உபாலி (Upāli) - பௌத்த விதிகளைப் பேணுபவர் 48b.
5. காத்தியாயனர் (Kātyāyana) - வேர்க்கொள்கைகளை விளக்குபவர் 48a.
6. சாரிபுத்திரன் (Sāriputra; பாலியில் சாரிபுத்தன்) - அறிவிற் சிறந்தவர் 48a.
7. சுபூதி (Subhuti)- சூனியக் கொள்கையினை விளக்குபவர் 48a.
8. பூரணர் (Pūrrṇa) - பௌத்த விதிகளை நிலைநாட்டுபவர் 48a.
9. மகாகாசிபர் (Mahākāśyapa) - விநய பிடகத்தில் தேர்ந்தவர் 48a.
10. மௌத்கல்யாயனர் (Maudgalyayana) இயற்கை கடந்த ஆற்றல்கள் பெற்றவர் 48a.

III. போதிசத்துவருள் சிலர்

1. அமிதாபா (Amitabha), 63a, 77b, 96a, 230b, 382b, 457a, 490a.
2. அவலோகிதேசுவரர் (Avalokitesvara) - இவரை அவலோகிதர் (Avalokita) என்றும் கூறுவர். (இவரிடம் தான் அகத்தியர் தமிழ் பயின்றார் என்று வீரசோழியத்தின் பாயிரத்தில் புத்தமித்திரனார் பொறித்துள்ளார்), 81b, 286b, 287b, 290a, 381a, 412b, 470a, 485a, 489a.
3. போதிசத்துவர் (Bodhisativa), 94b, 389a, 412b, 468a.
4. மஞ்சுசிரீ (Manjusri), 153a, 230b, 234b, 352b, 374a, 387b, 389b, 454b, 480b.
5. மைத்திரேயர் (Maitreya), 399b, 400a, 456b.

IV. பௌத்த ஆசிரியர்களில் சிலர்

1. அசங்கர் (Asanga), 89b, 229b, 285b, 382a, 407b, 483a.
2. அசுவகோஷர் (Aśvaghosa), 22b, 176b, 247a, 340b, 370b, 461b.
3. ஆரியதேவர் (Āryadeva), 146b.
4. குமாரசீவர் (Kumārajiva), 76b, 220a, 235a, 419b, 455b, 472a.
5. குமாரலப்தர் (Kumaralapta), 176b, 419b.
6. சங்கரசுவாமி (Sankarsvamin), 205b.
7. சங்கவர்மன் (Sanghavarman), 349a.
8. தருமகுப்தர் (Dharmagupta), 117b, 174b, 269a, 415b.
9. தருமபாலர் (Dharmapāla), 116b, 195a, 415b, 484b.
10. தருமரட்சர் (Dharmarakṣa), 90a, 278b, 402b, 415b.
11. தருமருசி (Dharmaruci), 388b.
12. திக்கநாகர் (திக்நாகர், திங்நாகர் - Dignāga, Diññaga), 86b, 205b, 344b, 366a.
13. நாகசேனர் (Nāgasena), 247b, 455b.
14. நாகார்ச்சுனர் (Nāgārjuna), 22b, 176b, 214a, 225a, 243b, 247a, 287b, 333a, 373a, 391b, 454a.
15. பரமார்த்தர் (Paramārtha), 261b, 267a, 333b, 339b, 340b, 466b.
16. புத்தகுப்தர் (Buddhagupta), 229b.
17. புத்தகோஷர் (Buddhaghosa), 226b.
18. புத்தசாந்தர் (Buddhasanta), 229b.
19. புத்தசிங்கர் (Buddhasinha), 229b.
20. புத்தசீவர் (Buddhajiva), 229b.
21. புத்ததாசர் (Buddhadasa), 229b.
22. புத்தநந்தி (Buddhanandi), 229b.
23. புத்தபத்திரர் (Buddhabhadra), 229b.
24. புத்தபாலிதர் (Buddhapalita), 229b.
25. புத்தமித்திரர் (Buddhamitra), 22b, 200a, 229b.

26. போதிதருமர் (Bodhidharma), 22b, 227b, 297b, 389a, 415a, 426a, 433b, 446b, 460a, 461a.
27. போதிருசி (Bodhiruci), 9b, 388b, 402b.
28. மகாதிக்நாகர் (Maha Dignaga), 86b.
29. வசுபந்து (Vasubandhu), 22b, 147b, 347a, 382a.

V. பௌத்த நூல்களில் சில

1. அங்குத்தர நிகாயம் (Anguttara Nikāya), 431a.
2. அபிதரும பிடகம் (Abhidharma Piṭaka), 221b, 305b, 330a, 434a, 444a.
3. அபிதரும ஹ்ருதய சாத்திரம் (Abhidharma hṛdaya śāstra), 256a.
4. அமோக திரிபிடகம் (Amogha Tripiṭaka), 108a.
5. அவதம்சக சூத்திரம் (Avatamsaka śūtra), 248a, 410a.
6. இலங்காவதார சூத்திரம் (Laṅkāvatāra śūtra), 341a, 344b, 402b, 415b.
7. இலலித வித்தரம் (Lalitavistara), 155a, 482b.
8. ஏதுவித்தை சாத்திரம் (Hetuvidyā śāstra), 205b, 475a.
9. சத்தரும புண்டரிகம் (Saddharmapuṇḍarika), 84b,235a, 256b, 272b.
10. சதுர் தாரக சமாதி சூத்திரம் (Caturdāraka samādhi śūtra), 329a.
11. சாதக மாலை (Jātakamālā), 276a.
12. சுகாவதி வியூகச் சூத்திரம் (Sukhāvati vyūha śūtra), 383a.
13. தசபூமி விபாஷா சாத்திரம் (Dasabhūmivibhāṣā śāstra), 45a.
14. தருமபதம் (Dharmapada), 268b.
15. நியாயப்பிரவேசம் (Nyāya praveśa), 205b.
16. புத்தசரிதம் (Buddha Carita). 228a.
17. புத்தவேதம் (Buddha Veda), 226b.
18. மகாகருணா புண்டரிக சூத்திரம் (Mahākaruṇāpuṇḍarika śūtra), 88a.

19. மகாசங்காதச் சூத்திரம் (Mahāsaṅghāta śūtra), *96b*.
20. மகாபிரஞ்ஞாபாரமிதா சூத்திரம் (Mahāprajñāpāramita śūtra), *86b*, *94b*, *195a*.
21. மகாயான சம்பரிகிரகச் சாத்திரம் (Mahāyāna samparigraha śāstra), *256b*.
22. மகாரத்தினகூடச் சூத்திரம் (Mahāratnakūṭa śūtra), *87b*.
23. மகாவைபுல்ய மகாசம்நிபாதச் சூத்திரம் (Mahāvaipulya-mahāsamnipāta śūtra), *90a*.
24. யோகாசார்ய பூமி சாத்திரம் (Yogācāryabhūmi śāstra), *89b*, *399a*, *407b*.
25. வச்சிர சேதிகா பிரஞ்ஞாபாரமிதா சூத்திரம் (Vajracchedikā-prajñāpāramita śūtra), *282b*, *337a*.
26. வித்தியாதர பிடகம் (Vidyādhara piṭaka), *408b*.
27. விநய பிடகம் (Vinaya piṭaka), *301b*, *306a*.

VI. பௌத்தத் தலங்களில் சில

1. அபயகிரி (Abhayagiri), *292b*, *381a*.
2. அமராவதி (Amarāvati), *188b*, *228a*.
3. அநுராதபுரம் (Anurādhapura), *285b*.
4. ஆந்திரம் (Andhra), *326b*.
5. இரத்தினத்தீவம் (Ratnadvīpa), *477a*.
6. இராசக்கிருகம் (Rājagṛha), *91a*, *164a*, *205a*, *304a*, *472b*.
7. உலும்பினி (Lumbini), *69b*, *263b*, *371a*.
8. கபிலவத்து (Kapilavastu), *46a*, *166a*, *224b*, *232b*, *315b*, *482a,b*.
9. கம்போஜம் (Kamboja), *195b*, *362b*.
10. காஞ்சிபுரம் (Kāñcipura), *301a*.
11. குசிநகரம் (Kusinagara), *17a*, *46a*, *101b*, *192a*, *243a*, *261a*.
12. கௌசாம்பி அல்லது கோசம்பி (Kauśāmbi), *46a*, *261b*, *322a*, *433a*, *455a*.

13. சம்பா (Campā; இக்காலத்தில் பாகல்பூர்), 465b.
14. தமிழம் (Damila- தமிழகம்) 284b.
15. தாமிரலிப்தி (Tamralipti), 209a, 252b, 392a.
16. தான்யகடகம் (Dhānyakaṭaka), 188a.
17. தானகடகம் (Dhānakaṭaka) 222b, 228a, 430a.
18. திராவிடம் (Drāviḍa), 415b.
19. நாரிகேளத் தீவும் (Nārikeiadvīpa), 247b.
20. பாஞ்சாலம் (Pāñcāla), 46a.
21. பிரமபுரம் (Brahmapura), 97b, 346b.
22. பிரயாகை (Prayāgā), 418b.
23. மகதம் (Magadha), 148b, 204b, 229b, 436a.
24. மதுரை (Mathura),46a, 335a, 430b, 435a.
25. வாரணாசி (Vāraṇāśi), 46a.

VII. பௌத்தத் தருக்கக் கலைச்சொற்களில் சில

1. அசத்து (Asat), 235a.
2. அபாவம் (Abhava), 295a.
3. உதாரணம் (Udāharaṇa), 60b, 118b, 223b, 392b.
4. எண்ணுறுப்புடைய அளவைக்கோவை (Eight limbs of Syllogism in Buddhist Logic), 41a.
5. ஏது (Hetu), 119a.
6. ஏதுவிருத்தம் (Hetuviruddha), 206a.
7. காரண ஏது (Kāraṇahetu), 133b.
8. ஞாதிரு (Jñātṛ), 248a.
9. ஞேயம் (Jñeya), 425b.
10. திட்டாந்தம் (Dṛṣṭānta), 368b.

VIII. பௌத்தத் தத்துவக் கலைச்சொற்களில் சில[53]

1. அரூபதாது (Arūpa dhātu), 63b, 70b, 382a.
2. அவித்தை (Avidyā), 42b, 379b.
3. ஆயதனம் (Āyatana), 137b, 252a, 291b, 363b.
4. ஆரிய மார்க்கம் (Eightfold Noble path), 37b.
5. ஆலய விஞ்ஞானம் (Ālayavijñāna), 40b.
6. சிட்சாபதம் (Śikṣāpāda), 50a.

7. தசகுசல கன்மம் (Daśakuśala), 50a.
8. தருமகாயம் (Dharmakāya), 63b.
9. தருமதாது (Dharadhātu), 90b.
16. புத்த தருமம் (Buddha dharma), 45b.
10. தானம் (Dāna), 186b.
11. தியானம் (Dhyāna), 67b.
12. நால்வகை வினாவிடை, 182a (மணி.30, 235-249).
13. நான்கு வாய்மைகள் (Catvari Arya satyāni), 182a.
14. பத்துப் பாரமிதைகள் (Ten Pāramitas), 49a.
15. பன்னிரு சார்புகள் (Dvādasānga Pratītyasamutpāda) அ. வித்தை, ஆ. சம்ஸ்காரம், இ.விஞ்ஞானம்,ஈ. நாமரூபம், உ. சட்டாயதனம் ஊ. பரிசம், எ. வேதனை, ஏ. திருட்டிணை, ஐ. உபாதானம், ஒ. பவம், ஓ. சாதி, ஔ. சராமரணம், 42b, 43a.
16. புத்த தருமம் (Buddha dharma), 45b.

(வசதிக்காகச் சில சொற்கள் தமிழ்ப்படுத்தித் தரப்பெற்றன.)

எனவே, சீன இலக்கியத்தில் பௌத்தம் ஊடுருவியுள்ள உண்மை புலனாகும். அரசர்கள் அளித்த ஆதரவும், மக்களின் ஈடுபாடும்தான் சீன நாட்டில் பௌத்தம் பரவுதற்குக் காரணம் ஆயின. சீன இலக்கியங்களைப் பயிலும் பொழுது மகாயானப் பௌத்தச் சிந்தனையின் பதிவுகள் வெளிப்படுதல் இயல்பு.

மேலே சுட்டப்பட்ட கலைச்சொற்களில் பற்பல மணிமேகலை, நீலகேசி, சிவஞானசித்தியார் பரபக்கம் முதலிய தமிழ்ப்பனுவல்களில் பௌத்தம் பற்றிய பகுதிகளில் காணப்படுதல் இயைபு கருதி இங்குச் சுட்டுதற்குரியது.

நிறைவுரை

புத்தர் பிரானின் பொன்மொழிகள் இந்திய நாட்டிலும் இலங்கையிலும் மட்டுமன்றிச் சீனம், சப்பான்,

கொரியா, வியட்நாம், தாய்லாந்து உள்ளிட்ட ஆசிய நாடுகள் பலவற்றிலும் பரவியது. புத்தர்பிரானை ஆசியஜோதி (The Light of Asia) என்று கூறும் மரபு எழுந்தது. கி.பி முதல் நூற்றாண்டில் சீன நாட்டில் பௌத்தம் முதன் முதல் பரவத் தொடங்கியது. காசிப மதங்கர், தருமரட்சர், குமாரசீவர், பரமார்த்தர், போதிதருமர் உள்ளிட்ட பௌத்தப் பெரியார்கள் சீனம் சென்று மகாயான பௌத்தத்தினை மக்களிடையே பரவச் செய்தனர். சீன நாட்டிலிருந்து இந்தியாவுக்கும் இலங்கைக்கும் *169* ஆர்வலர்கள் வருகை தந்து பௌத்தஞானம் பெற்றுத் தாயகம் சென்று பௌத்தத்தினைப் பரப்பினர். இவர்களில் பாகியான், இட்சிங்கு, யுவான் சுவாங்கு சுட்டத்தக்கவர். ஹன் மரபு, திசின் மரபு, தங்கு மரபு ஆகியவற்றின் பேரரசர்கள் பௌத்தத்திற்குப் பேராதரவு வழங்கினர். புத்தப் பள்ளிகள், கோயில்கள் தோன்றின. வடமொழியில் எழுதப்பட்டிருந்த மகாயானப் பௌத்தப் பனுவல்கள் பற்பல சீனமொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. தம்மபதம் கி.பி.முதல் நூற்றாண்டிலேயே சீன ஆக்கம் பெற்ற பௌத்தப் பேரற நூலாகும். இதுவே உலகமொழி ஒன்றில் முதன்முதல் மொழிபெயர்க்கப்பட்ட பனுவல் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதனைத் தருமபதம் என்ற வடமொழி ஒலிப்புடன் வழங்கினர்.

சீன நாட்டின் கலை, இலக்கியம், மொழி ஆகியவற்றில் பௌத்தத்தின் தாக்கம் ஏற்பட்டது. மக்கள் வாழ்வியலிலும் இதனைக் காணலாம். பௌத்த நூல்களைச் சீனத்தில் மொழிபெயர்த்தமையால் பல வடசொற்கள் சீன மொழியில் இடம்பெற்றன. புத்தர்பிரான் தனியுடைமையினை மறுத்துப் பொதுவுடைமையினைப் பேணும் பொருட்டுச் சங்கம் என்ற நிறுவனத்தை உண்டாக்கினர். பௌத்தம் பரவியுள்ள சீனம் உள்ளிட்ட பல நாடுகளில் பொதுவுடைமைக் கொள்கை தழைத்துள்ளமை சுட்டுதற்குரியது.

மேற்கோள் குறிப்புக்கள்

1. ANUKUL CHANDRA BANERJEE, Buddhism in India and Abrod, Calcutta, 1973, pp.236-237.
2. Ibid, 237.
3. 2500 years of Buddhism, Publications Division, Ministry of Information and Broadcasting, Government of India, New Delhi, 1959, p.59.
4. NARIMAN. J.K., Literary History of Sanskrit Buddhism, Motilal Banarsidass, Delhi, Reprint, 1972, p.92.
5. SURENDRANATH SEN, India Through Chinese Texts, University of Madras, Chennai, 1956, p.2.
6. 2500 years of Buddhism, p.211.
7. Ibid, p.212.
8. Ibid.
9. Ibid, p.214.
10. KANDASWAMY. S.N., Buddhism As expounded in Manimekalai, Annamalai University Publication, Annamalai nagar, 1978, p.356.
11. 2500 years of Buddhism, p.219.
12. Ibid.
13. Ibid, pp.219-220.
14. India Through Chinese Texts, p.7.
15. 2500 years of Buddhism, p.225.
16. Literary History of Sanskrit Buddhism, p.75.
17. 2500 years of Buddhism, pp.216-217.
18. Ibid, p.218.
19. கந்தசாமி, சோ.ந., தமிழும் தத்துவமும், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1976, ப.286.
20. 2500 years of Buddhism, p.225.
21. India Through Chinese Texts, pp.112-113.
22. Buddhism As Expounded in Manimekalai, pp.256-305.
23. India Through Chinese Texts, p.113.
24. Literary History of Sanskrit Buddhism, p.25.

25. YAMAGAMI SOGAN, Systems of Buddhist Thought, pp.5-6.
26. SUZUKI, D.T., The Zen Doctrine of No-mind, Rider and Company, London, 1949, p.9.
27. 2500 years of Buddhism, p.214.
28. Buddhism in India and Abroad, p.239.
29. The Zen Doctrine of No-mind, p.9.
30. Buddhism in India and Abroad, p.239.
31. Ibid.
32. 2500 years of Buddhism, p.215.
33. Buddhism in India and Abroad, p.240.
34. The Zen Doctrine of No-mind, pp.14-15.
35. Ibid, p.16.
36. Ibid, p.17.
37. Ibid, p.18.
38. Ibid, p.21.
39. Ibid, p.22.
40. Ibid, pp.26-27.
41. Ibid, pp.28-29.
42. Buddhism in India and Abroad, p.241.
43. Ibid, p.242.
44. Ibid, p.244.
45. Ibid, p.245.
46. Ibid, pp.245-246.
47. Ibid, p.247.
48. Ibid, pp.247-248.
49. Ibid, p.248.
50. Ibid, pp.248-249.
51. Tucci,G., Pre-Dinnaga Buddhist Texts on Ligic From Chinese Sources, Baroda, 1929.
52. A Dictionary of Chinese Buddhist Terms,Motilal Manarsidass, Delhi, Reprint, 1977.
53. Buddhism As Expounded in Manimekalai, pp.317-352; 363-367.

10. சீனச் செய்யுளின் தந்தை

(கி.மு.340 - கி.மு.278)

பண்டைய சீன நாகரிகத்தின் தொட்டிலாகக் கருதப்படும் மஞ்சள் நதியின் (The Yellow River) மத்திய சமவெளிகளில் வாழ்ந்த மக்களின் இலக்கியப் படைப்பாகப் பாடற்பனுவல் (TheClassic of Poetry) விளங்குகிறது. அந்நாள்களில் மஞ்சள் நதியின் தென்பகுதியில் உள்ள மாநிலங்களில் சௌ பிரபுக்களின் (Chou nobles) ஆளுகையின் கீழ் பழங்குடிமக்கள் (Tribes) வாழ்ந்து வந்தனர். படிப்படியாக, இத்தென்மாநிலங்கள் வளர்ச்சி பெற்றுச் சீன அரசியலில் முதன்மைப் பங்காற்றத் தொடங்கின. இவற்றுள் சு மாநிலம் (The State of Ch'u) மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இம்மாநிலம் யாங்குச்சே (Yangtze) என்னும் மற்றொரு பெரிய நதியின் கரைகளில் பரவியிருந்தது. தென்மாநிலங்கள் பலவற்றிலும் சு மாநிலமே பேராற்றல் படைத்ததாகவும் பண்பாட்டில் பெரிதும் முன்னேற்றம் பெற்றதாகவும் திகழ்ந்தது. இங்ஙனம் கி.மு.5,6ஆம் நூற்றாண்டுகளில் சீன நாட்டில் இருபெரும் பண்பாட்டுக் கேந்திரங்கள் இருந்தன. ஆற்றின் அடிப்படையில் இவ்விரு பண்பாடுகளுக்கும் உரிய நாகரிகங்களை 1. மஞ்சள் நதி நாகரிகம் (Yellow River Civilization) என்றும், 2. யாங்குச்சே நதி நாகரிகம் (Yangtze Civilization) என்றும் வரலாற்றாசிரியர்கள் வரையறுத்துக் கூறினர். இவற்றுள், முன்னது கன்பூசியசின் பனுவல்களால் (The Confucian Classics) மாட்சி பெற்றது. பின்னது சு (Ch'u) அல்லது சு த்சூ (Ch'u tz'u) பாடல் இலக்கியத்தால் சிறப்புப் பெற்றது.

தென்மாநிலங்களின் மலைகள், அருவிகள், ஓடைகள், காடுகள் என்பன கதைகளுக்கும்

கற்பனைகளுக்கும் வளம் சேர்க்கும் தளமாக இருந்தன. சீன வரலாற்றின் தொடக்கம் வடபகுதியாக இருந்தது. முனிவர் (Sage) நிலையிலிருந்த பேரரசர்களும் (Experors), அரச மரபு ஆட்சியாளர்களும் (Dynastic rulers) வடமாநிலத்தில் தோன்றிய கன்பூசிய இலக்கியத்தில் இடம்பெற்றனர். எனினும், சீனப் புராண இலக்கியம் (Mythology) தென் மாநிலத்தில் வளர்ச்சி பெறுவதற்கு உகந்த சூழ்நிலையினைப் பெற்றிருந்தது. கரடுமுரடான சுற்றுப் புறங்களில் போதாத, குறைந்த வாழ்வினை மேற்கொள்ள வேண்டிய நிலையில் தென்மாநிலமக்கள் இருந்திலர். இவர்கள் இயற்கையின் பெருங்கொடைகள் வாய்க்கப் பெற்றவர்கள். இத்தகைய இயற்கை வளத்தினால் வசதியான, எளிமையான வாழ்வினை நடத்தினர். எனவே, அவர்களால் புனைவியல் (Romantic) தொடர்பாகவும், இயற்கை கடந்த ஆற்றல் (Supernatural) தொடர்பாகவும் கற்பனைக் கனவுகளில் ஈடுபட முடிந்தது. இவ்வகைத் திறங்கள் வடமாநில நாகரிகத்தினின்றும் முற்றிலும் வேறுபட்டதொரு நாகரிகம் எழுவதற்குக் காரணிகள் ஆயின.

தென்சீனாவில் எண்ணற்ற கவிஞர்கள் தோன்றினர். அவர்களில், சூ யூவன் (Ch'u Yuan), சுங்கு யூ (Sung Yu) என்ற கவிஞர்கள் பரவலாக அறியப்பட்ட சிறந்த கவிஞர்கள் ஆவர். இவர்களில் சுங்கு யூ, சூ யூவன் என்பவரைப் பின்பற்றுபவராக விளங்கினார். அவருடைய மாணவராகவும் மதிக்கப் பெறுகிறார். இவ்விருவர் பாடல்களும், இவர்களைப் பின்பற்றிப் பாடிய பாவலர்களின் கவிதைகளும் தொகுக்கப் பெற்று, சூ பாடல்கள் (Songs of Ch'u) எனப் பெயர் பெற்ற இலக்கியமாக விளங்குகிறது.[1] இந்தத் தொகை இலக்கியம் (Anthology) கன்பூசியசு தொகுத்த பாடல்பனுவல் (Classic of Poetry) என்ற தொகை இலக்கியத்தினின்றும் பொருண்மையாலும் பாவியல் கூறுகளாலும்

வேறுபட்டது. சூ தொகைப் பாடல்கள் (Songs of Ch'u) தன்மையினால் தன்னுணர்ச்சிப் பாக்களாகவும் (Lyrical Songs), உயிர்ப்பினால் புனைவியல் பாக்களாகவும் (Romantic poems) விளங்குகின்றன. இவை வேறுபட்ட ஒலி நயமும், இசையும் வாய்ந்தவை. இவை ஒழுங்கற்ற நீளம் கொண்டனவும் தொடை நலம் (Rhyme) வாய்ந்தனவும் ஆகிய அடிகளைக் கொண்டவை. ஒரு சில சொற் கூறுகள் இவற்றில் மீண்டும் மீண்டும் நிலையாக வருதல் இப்பாடல் அமைப்பின் சிறப்புக் கூறாகும். கவிதைச் சிறப்பினாலும், பின்வந்த கவிஞரிடம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தாலும் வடமாநிலத் தொகைப்பாக்களும், தென்மாநிலத் தொகைப் பாக்களும் நிகரான முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்விரு மாநிலத் தொகைப் பாக்களும் பண்டைய சீனக் கவிதையின் இருபெரும் நீரோட்டத்தினை உருவாக்கின.

சூ யூவன் (Ch'u Yuan) கி.மு.340-கி.மு.278 என்ற காலப் பகுதியில் வாழ்ந்தவர். சூ கவிதை மண்டலத்தின் முதன்மைக் கவிஞராக இவர் பாராட்டப்படுகிறார். இவரே சீனச் செய்யுளின் தந்தை (Father of Chinese Poetry) ஆவர். இவர் அரச மாளிகையில் ஓர் உறுப்பினராகவும், இராச தந்திரியாகவும் (Statesman), அரசியல் விரகராகவும் (Diplomat) விளங்கியவர். இளமையில் இவர் அமைச்சராகவும், தூதுவராகவும் பணியாற்றினார். ஆயினும் இவருடைய வெற்றி உடன் பணியாற்றும் அமைச்சர்களின் பொறாமையினை வருவித்துக் கொண்டது. இவரைப் பற்றி அவர்கள் அவதூறு பேசினர். இவருக்கு எதிராகச் சூழ்ச்சிகள் செய்தனர். அவற்றின் விளைவாக சூ யூவன் அரசரின் ஆதரவை இழந்து, பதவியையும் துறந்தார். இவர் வாழ்வில் ஏற்றத் தாழ்வுகள் பற்பல. ஒவ்வொரு பதவித் துறப்பிற்குப் பின்னரும் மீண்டும் பணியமர்த்தம் பெற்றார். மீண்டும் பணியைத் துறந்துள்ளார். இவருடைய அறிவுரைகளைக் கேளாத

சூ மாநில அரசன் (The King of Ch'u state), சின் மாநில அரசனுடன் (The King of Ch'in state) கலந்தாய்வு நிகழ்வில் பங்கு கொண்டான். வலிமைமிக்க சின் அரசனால் சூ அரசன் சிறைப்பிடிக்கப்பட்டான்; சிறையிலேயே இறந்தான். இவன் மகன் தந்தையின் கொலைக்காகப் பழிவாங்க எண்ணாமல் தன் பகையரசனுடன் அடக்கமான அமைதி உடன்படிக்கை செய்து கொண்டான். ஆனாலும், காலப்போக்கில் கி.மு.278இல் சின் அரசன் சூ அரசனுடன் போரிட்டு அவன் தலைநகரைக் கொள்ளையடித்து அழித்தான். இந்நிகழ்வின் பொழுது கவிஞர் சூ யூவான் அறுபதாம் அகவையினைக் கடந்திருந்தார். அவருடைய நாட்டுப் பற்றுக்குப் பேரடியாகச் சூ தலைநகர் வீழ்ச்சி அமைந்துவிட்டது. முடிவாகக் கவிஞர் சூ யூவன் மிலோ (Mi-lo) ஆற்றில் தன்னைத் தானே மூழ்கடித்துக் கொண்டு இறந்துபோனார். எவ்வாறாயினும், சீன நாட்டின் அறியப்பட்ட முதல் பெருங்கவிஞர் சூ யூவன் என்று போற்றப்படுகிறார். இவரே சீனக் கவிதையின் தந்தை (Father of Chinese Poetry) என்று அழைக்கப்படுகிறார். மேலும், இப்பெருங்கவிஞர் தேசியப் பண்பாட்டுத் தலைமகனாகவும் (National Culture-hero) ஒரு சிலரால் மதிக்கப்படுகிறார்.

சூ தொகை இலக்கியத்தில் பற்பல பாடல்களின் ஆசிரியராக சூ யூவன் எண்ணப்படுகிறார். இவர் பாடல்களில், துன்பத்தை எதிர்கொள்ளுதல் (Encountering Sorrow), வினாவப்பட்ட விண்ணகம் (Heaven Questioned), ஆன்மாவரக் கட்டளையிடுதல் (Summoning the Soul), ஒன்பது பாடல்கள் (The Nine Songs), ஒன்பது படைப்புக்கள் (Nine Compositions) என்பன குறிப்பிடத்தக்கவை. இவை புனைவியல் பாங்கில் பாடப்பட்டவை. இக்கவிஞரின் பாடல்களில் ஒரு சிலவற்றின் பொருண்மையினையும் சிறப்பியல்புகளையும் காண்போம்.

சூ யூவனின் தொடக்க காலப் பாடல்களாக ஒன்பது பாடல்கள் (The Nine Songs) கருதப்படுகின்றன. சூ (Ch'u) மாநிலத்தின் தெய்வங்களைப் போற்றுவனவாக இப்பாடல்கள் திகழ்கின்றன. கீழைத்திசைக்குரிய மகாசக்கரவர்த்திக் கடவுள், ஹிசியாங்கு ஆற்றுக்குரிய (The River Hsiang) பெருமானும் பெருமாட்டியும் ஆகிய கடவுளர், மேகங்களின் அதிபதி ஆகிய தெய்வம், கீழைத்திசையின் அதிபதி ஞாயிறு (Sun), விதியின் பெரியரும் இளையரும் ஆகிய நடுவர் (Arbiters), ஆற்றுத் தெய்வம், மலைத்தெய்வம் என்ற தெய்வங்களைப் போற்றுவனவாகச் சூவின் ஒன்பது பாடல்கள் பாடப் பெற்றுள்ளன. இவற்றுடன் கூடுதலாக இரு பாடல்களும் அவர் பாடியனவாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு பாடல், போர்க் களத்தில் உயிர்த்தியாகம் செய்த தேசிய வீரர்களைப் போற்றுகிறது. மற்றொரு பாடல் படையல் சடங்குகளின் முடிவில் பாடப்படும் நிறைவுப் பாடலாக உள்ளது.

இத்தகைய குழுப் பாடல்கள் வேள்விப் பாடல்களாகத் தொடக்கத்தில் இருந்திருத்தல் வேண்டும் என்றும், மந்திர மத குருக்களால் கோயில் சடங்குகளிலும் பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் அறிஞர்கள் எண்ணுகின்றனர். தான் மேற்கொண்ட பல்வேறு பயணங்களின் பொழுது சூ யூவன் கரடு முரடாக இருந்த இப்பாடல்களைக் கலைத்திறம் வாய்ந்த வடிவத்தில் உணர்ச்சி அழகும் சொல்லழகும் சேர்த்துச் செப்பம் செய்திருத்தல் வேண்டும் என்பதும் அன்னாரின் எண்ணமாகும்.

தாம் வழிபடும் இறைவன் அல்லது இறைவியிடத்தில் கொண்டுள்ள பக்தியின் உறுதியினையும் நெருக்கத்தினையும் இப்பாடல்கள் புலப்படுத்துகின்றன. ஆன்மீகத்திற்காகவும் அழகியலுக்காகவும் தவித்துக் கொண்டிருக்கும் ஒருவரின் புனைவியல் ஏக்கத்தினை

(Romantic Yearning) இப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. மனித உலகு, தெய்வ உலகு என்ற இரண்டிற்கும் இடைப்பட்ட எல்லைகளைத் தாண்டிச் செல்லும் அகவயமான முறுகிய பக்தி உணர்வினையும் இப்பாடல்கள் புலப்படுத்துகின்றன. மலைத்தெய்வம் (The Mountain Spirit) என்ற பாடல் மனிதம் தெய்வம் ஆகிய இரண்டனையும் ஒருங்கிணைக்கும் காதற் பாடலாகவே அமைந்துள்ளது.[2] அதன் தமிழாக்கம் காண்போம்:

"ஆழ்மலையில் ஒருமனிதன் உள்ளதுபோல் தோற்றம்,
படர்ந்த கொடிமுந்திரியால் உடுத்தப்பட்டுப்
பளபளப்பான பச்சைஇலைக் கொடியினால்
சுற்றப்பட்டுள்ளான்
வசீகரப் பார்வையுடன் இசைவான புன்சிரிப்பு
என்கவர்ச்சி வடிவிற்காக என்னை நீவியந்து
பாராட்டுவாயா?"

1

"சிறுத்தைமேல் அவள் இவர்ந்து வருகிறாள்
வரிப்பூனை பின்தொடர
அவள் வனப்புடைத் தழைமலர்த் தேரில்
பட்டைக் கொடிகள் அணிவகுக்க,
பகட்டு வண்ண மேலங்கி, புதர்மலர்ச் செடி மேகலை,
இனிய மலர்களைப் பொறுக்கி எடுக்கிறாள்
நெஞ்சமர் நேசர்க்காக".

2

"வான் தெரியாத மூங்கிற் சோலையில் வாழ்கிறேன்
நான்
இங்குச் செங்குத்துச் சாலை, அபாயமுள்ளது;
தனியே வந்தேன், தாமதம்.
தன்னந் தனியளாய் நிற்கிறேன் அம்மலையின் உச்சியில்
எனக்குக் கீழே இணைகின்றன எழில் மேகங்கள்".

3

"இந்நாள் இருண்டும் மப்புமாய் எங்கும் உள்ளது:
கீழைக் காற்று மிதக்கிறது, இறைவன் கீழே
மழையை அனுப்புகிறான்.
புனிதனுக்காகக் காத்திருக்கிறேன், வீடுபோக
மறக்கிறேன்,
ஆண்டு தாமதம். என்னை இப்பொழுது அலங்கரிப்பார்
யார்?"

4

"சாரலில் உள்ள புல்லிவட்டச் செடியைப் பறிக்கிறேன்,
குன்றுகள் யாவும் கரடுமுரடு, கொடிமுந்திரிகள்
பின்னிக்கிடப்பன.
இளம்தலைவனைக் குறைகூறிக் கொண்டு வருத்தத்தால்
வீடுபோக மறக்கிறேன்.
ஓ என் தலைவா! என்னை நினைத்துக்
கொண்டிருக்கிறாய்; ஆனால், உனக்கு
நேரமில்லை."

5

"இனிய மூலிகை கமழும் அம்மலையில் உள்ள
மனிதன்,
தேவதருக்கள் நிழலின்கீழ் குன்றின் நீரூற்றில்
பருகுகிறான்.
என் தலைவா! என்னை நினைத்துக்
கொண்டிருக்கிறாய்; ஆனால் தயங்குகிறாய்".

6

"இடி குமுறுகிறது, மழை இருள்கிறது;
குரங்குகள் துயருறுவன, இரவு முழுதும்
கூச்சலிடுகின்றன;
காற்று ஊதுகிறது, மரங்கள் வெறிச்சோடின.
அந்த இளம் தலைவனை எண்ணுகிறேன்,
பயனில்லாக் கவலை".

7

இப்பாடல்கள் சீனப் பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பின் மொழிபெயர்ப்பு. ஆயினும்,

இயற்கைச் சூழல், குறிஞ்சிக் காட்சி, காதலனுக்காக ஏக்கம் இயல்பாகக் காதலியின் நெஞ்சிலிருந்து வெளிப்படும் உணர்வுகளின் ஓவியமாக இப்பாடல்கள் ஒளிர்கின்றன.

"ஆரஞ்சுக்கு ஒரு பாசுரம்" (A Hymn to the Orange) என்ற பாடலையும் சூ யூவன் (Ch'u Yuan) பாடியுள்ளார். சீன நாட்டின் தென்மாநிலத்திற்குரிய ஆரஞ்சுக் கனியின் கவினையும் பண்புகளையும் இப்பாடலில் கவிஞர் எழிலுறப் பாடியுள்ளார். கனியின் கவின், பண்பு என்பனவெல்லாம் இளமையின் குறியீடாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

தொங்குகின்ற குறுங்கிளைகள்மேல் குத்தும்
முள்களின்மேல்
பச்சைப் பசும் இலைத் தொகுதி, வெள்ளை
வெளேரென அரும்புகள்,
எவ்வளவு செழுமை! எவ்வளவு நேர்த்தி!
கொத்துக் கொத்தாய்க் குலுங்கும் வட்டக் கனிகள்
பசுமையும் மஞ்சளும் விரவிய கலவை
கிளரும் கட்டமைப்பில் ஒளிரும்அக் கனிகள்
கண்ணுக் கினிய வண்ணம், தூய்மை உள்ளே,
அறங்களைச் சுமக்கும் ஒருவரைப் போலே-
அழகின் வீச்சு, கவரும் நேர்த்தி
இங்கே உளது அழகு எக்குறையும் இல்லை.

ஆரஞ்சுக்கனி வருணனை அற்புதம், அருமை. ஒரு நங்கையினைக் கனி எனக் கூறுதல் கவி மரபு. "கல்லும் புல்லும் கண்டுருகப் பெண்கனி நின்றாள்" எனக் கம்பர் பாடுதல் இங்கு நம் நினைவுக்கு வருகிறது. கனியின் வருணனைகள் எல்லாம் காரிகையின் வருணனைகளே. காதலன் தன் காதலியை எண்ணி எண்ணி உணர்வு பொங்கும் இப்புனைவில் ஈடுபட்டிருக்கிறான். இந்நாளில்கூட சீனப் பெருமக்கள் புத்தாண்டு நாளில் நண்பர்க்கும் உறவினர்க்கும் கூடை கூடையாய் ஆரஞ்சு வழங்கி வாழ்த்துதல் குறிப்பிடத்தக்கது.

உத்தமக் கவிஞர் சூ யூவன், அறங்களைச் சுமக்கும் ஒருவரைப் போல் கனிகள் கண்ணுக்கினியன, கருத்துக்கு விருந்து, உள்ளே தூய்மை உடையவை எனப் புனைந்திருத்தல் படிப்பவர்க்கு இலக்கிய இன்பம் வழங்குதல் காணலாம்.

வினாவப்பட்ட விண்ணகம் (Heaven Questioned) என்ற நெடுங்கவிதையில் கவிஞர் சூயூவன் (Ch'u Yuan) விண்ணகத்தை நோக்கி 172 வினாக்களைக் கேட்கிறார். இவ்வினாக்கள் உலகப் படைப்பு, ஒளியின் இயற்கை, இருளின் இயற்கை, விண்ணகத்தின் ஒன்பது பிரிவுகளின் இடஅமைவு (location), ஞாயிற்றின் இயக்கம், திங்களின் இயக்கம், பழைய சீனக் கவிதைகள், புராணக் கதைகள் என்பன பற்றியனவாக எழுப்பப்பட்டுள்ளன. இவ்வினாக்கள் ஆவலைத் தூண்டுவனவாகவும், சிந்தனையினைக் கிளரச் செய்வனவாகவும், மூலப்படிவமாகவும் (Original) திகழ்கின்றன. இந்நெடும் பாடலின் தொடக்கப் பகுதியைப் பார்ப்போம்.[3]

“நீண்ட நெடுந்தொன்மையின் தொடக்கம்-
அதனைச் சொல்லவும் வழிவழி அனுப்பவும்
அங்கே யாவர் உளர்?
மேலும் கீழும் எல்லாமே உருவம் அற்றவை,
அதனைப் பரிசோதிக்க எம்முறைகள் பயன்பட்டன?
1

ஒளியும் இருளும் கருமை தோய்ந்தவை
அவற்றை ஆழ்ந்து பார்த்தல் யாவரால் இயலும்?
படிவங்கள் உருவமற்றவை, எண்ணற்றவை
அவற்றை அடையாளம் காணுதல் யாங்கனம்
இயலும்?
2

ஒளிமிகு நாள் இருள் அடர் இரவு
அதனுடன் காலம் என்ன செய்யும்?

யின்னும் யங்கும் மும்முறை கலந்தன
தோற்றம் யாது? மாற்றம் யாது?

3

விண்ணகப் பிரிவுகள் ஒன்பது ஆகும்
அதனைத் திட்டமிட்டவர் யார்? அளந்தவர் யார்?
அஃது எச்செயல் புரியும்?
அதனைப் படைத்த முதல் யாவர்?

4

அதன் இயக்க மையம் எதன்மேல் கட்டப் பட்டது?
எதன்மீது விண்ணகத் துருவம் எழுப்பப் பட்டது?
எட்டுத் தூண்களும் எதனைப் பார்ப்பன?
தென்கிழக்கில் ஏன் இடைவெளி உள்ளது?

5

விண்ணகம் ஒன்பதின் விரிவு அடி வானம்
எவ்வளவு தூரம் செல்லும்? எங்கே அது
தளைக்கப்பட்டது?
குகைகளும் வளைகுடாக்களும் எண்ணில;
அவற்றின் தொகையினை அறிந்தவர் யாவரே?

6

இப்பாடல்களை முதலில் சூ யூவன் கோயிற் சுவர்களிலும், பிரபுக்களின் முன்னோரை வழிபடும் கூடங்களின் சுவர்களிலும் எழுதினார் என்றும், இதனால் இவை சுவர்க்கவிதை (Wall Poetry) எனப் பெயர் பெற்றன என்றும் செவிவழிச் செய்தி உண்டு. பின்னர் இவர் பாடல்களைத் தொகுத்த பொழுது, அத்தொகுப்பில் இவையும் இடம்பெற்றன என்பர்.

இங்ஙனம் வரும் பாடல் வரிசைகள் சூ யூவனின் பிரபஞ்சச் சிந்தனையினைப் (Cosmic Thoughts) புலப்படுத்துவனவாக விளங்குகின்றன. யின் (Yin), யங் (Yang) என்னும் சக்திகளின் மும்முறைக் கலப்பினால் படைப்பு (Creation) தோன்றியது என்பது அவருடைய

கருத்து. உலகப் படைப்பினைப் பற்றித் தொல்பழம் நாகரிகம் படைத்த ஒவ்வொரு நாட்டாரும் ஒவ்வொரு கருத்தினைக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய நாட்டிலும் வேறுவேறு படைப்புக் கொள்கைகள் உருவாகின. சாங்கியர்கள் பரிணாமக் கொள்கையினைக் (Theory of Evolution) கொண்டவர்கள் என்பது இங்குச் சுட்டுதற்குரியது.

எட்டுத் தூண்கள் என்பன உலகிற்கு ஆதாரமானவை என்பது இச்சீனக் கவிஞரின் கருத்து. இந்திய மரபில் எட்டு யானைகள் எட்டுத் திசையிலும் இருந்து உலகினைச் சுமப்பன என்று கூறப்பட்டுள்ளது.

ஆன்மா வரக்கட்டளையிடுதல் (Summoning the Soul) என்ற பாடலில் சூ யூவன் சொல்லும் கருத்துக்களை நோக்குவோம்.[4]

சூ மாநிலத்தின் அரசன் இறந்து போனான். அவன் ஆன்மாவை மீண்டும் வரும்படி வேண்டி வரவழைக்கும் பாங்கில், ஆன்மா வரக்கட்டளையிடுதல் என்ற பாடல் புனையப்பட்டது. சூ மாநிலத்துச் செல்வர்களின் வளம்மிக்க வாழ்வினை வருணித்தலுடன் அவர்களிடம் காணப்பட்ட இயற்கை கடந்த பொருளைப் பற்றிய நம்பிக்கைகளையும் (Supernatural beliefs) புனைந்துரைக்கின்றன. உலகின் நான்கு மூலைகளிலும் நடைபெறும் எல்லா வகையான பயங்கரப் பொருள்களையும் இப்பாடல்கள் வருணிக்கின்றன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்:[5]

1. கீழைத்திசைக்குரிய உயிரை உறிஞ்சும் அரக்கர்கள்.
2. தென்திசைக்குரிய கரிய பற்களுடன் பச்சைக் குத்திக் கொண்ட காட்டுமிராண்டிகள்.
3. மேலைத்திசைக்குரிய திடீர் மணற்குன்றுகள்.
4. வடதிசைக்குரிய பனிப்பாறைகள்.

இவ்வாறு அயல் நிலங்களில் காணப்படும் அச்சுறுத்தும் பொருள்களுக்கு முரணாக உள்ளூரில் காணற்கினிய

காட்சிகள், மகிழ்ச்சிகள் அமைந்துள்ளன என்று பாடுகிறார். குன்றின் அருகில் எழுந்து நிற்கும் கோபுரங்கள் (Towers) மற்றும் மேல்தளங்கள் (Terraces), பெரிய கூடங்களும் மாடங்களும் கொண்ட அரண்மனைகள், சிவப்புக் கதவுகள் பொருந்திய அழகிய பெரிய அறைகள், கரிய பளிங்குவிட்டங்கள், பாம்புகள் மற்றும் வேதாளங்கள் (dragons) வரையப்பெற்ற வீட்டின் உட்கூரைகள் (Ceilings) என்பன எழிலுடன் திகழ்வன. வீட்டினுள்ளே காணப்படும் பொருள்களையும் கவிஞர் வருணிக்கிறார்:[6]

முத்துநிற மெத்தைகளில் சிச்சிலிப் பறவையின்
    இறகுகள்
நிறக்கோவையினால் ஒளியும் எதிர்ஒளியும்
    உடையவை;
சுவருக்கு எதிர்ப்புறம் நாணற்புல் பாய்கள்;
அவற்றின் மேலே குஞ்சங்கள் கூடிய மென்பட்டு
    விரிப்புக்கள்;
அழகிய மாணிக்கம் மரகதம் பொருத்தப் பெற்ற
    சித்திர விசித்திரப் பட்டுக்கள்.

பிரபுக்களின் பொழுது போக்கு விளையாட்டுக்கு, மருட்டும் விழிப்புருவமும் சுண்டியிழுக்கும் பார்வைகளும் கொண்ட பெண்களின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் உண்டு. சதுரங்க விளையாட்டுக்களும் உண்டு. சுவையுடைய பல்வகைப்பட்ட உணவுகள் விருந்து வைக்கப்பட்டன. இவற்றையும் விரிவாகக் கவிஞர் பட்டியல் இட்டுள்ளார்.

சூ யூவன் (Chu Yuan) தன் அனுபவங்களாகப் பாடியுள்ள கவிதைகள் யாவும் அவருடைய பண்பினையும் உள்ளத்தையும் வெளிப்படுத்துவன. துன்பத்தை எதிர்கொள்ளுதல் (Encountering Sorrow) என்ற நெடும்பாடல் கற்பனை, உள்ளுறை, வரலாற்றுக் குறிப்புக்கள் கொண்ட சுய சரிதைப் பாடலாகும். சீன

மொழியில் எழுதப்பட்டுள்ள மிக நீண்ட சுயசரிதைப் பாடல்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.[7] இப்பாடலின் தொடக்கத்தில், கவிஞரின் மூதாதையர், அவர்தம் பண்புகள், பெருந்தன்மை மிக்க வமிசாவளி, எடுத்துக்காட்டாக விளங்கிய இவருடைய தந்தை, தனது புனிதப் பெயர், உள்ளமைந்த குணங்கள், வளர்த்துக் கொண்ட திறங்கள் முதலியவை இடம்பெற்றுள்ளன. அடுத்து வரும் பகுதியில் இவருடைய அரசியல் வாழ்க்கை கூறப்பட்டுள்ளது. அரசனையும் நாட்டினையும் வழி நடத்துவதற்குத் தான் மேற்கொண்ட முயற்சிகள், அவையில் தனது போராட்டங்களும் மாற்றுப் பிரிவினரால் உண்டாகிய தோல்வியும், உலகின் கண்மூடித்தனமான, கீழ்மையான வழிகளுக்குத் தன்னை ஒத்துப் போகச் செய்யாமல் தடுத்த அவருடைய நேர்மையும் தேச விசுவாசமும் இப்பகுதியில் உணர்ச்சி பூர்வமாகப் பாடப்பட்டுள்ளன. எவ்வளவு பின்னடைவுகள் ஏற்பட்டாலும், பழைய பழக்க வழக்கங்களில் பற்று, மக்களுக்கு இரக்கம் காட்டுதல், தன் நடத்தையினைப் பேணிக் காத்தல் என்பனவற்றில் கவிஞர் கண்ணும் கருத்துமாக இருந்தார். தன் அருள் உள்ளத்தையும் அறவுணர்வுகளையும் வளர்த்து வந்தார். இப்பண்புகள் யாவும், மலர்களின் அழகினையும் மனத்தையும் வருணிக்கும் பொழுது குறியீடாகப் புலப்படுத்தப்பட்டுள்ளன. தன் நெஞ்சச் சுமையினை இறக்கிவைத்த பின்னர், விண்ணகம் நோக்கிய கற்பனைப் பயணத்தினைக் கவிஞர் மேற்கொள்கிறார். விண்ணகத்தின் வனப்புக்களையும் தன் செயற்பாடுகளையும் பாடுகிறார்.

> "விண்ணக வாயிலோனுக்கு நடையைத் திறக்க உத்தரவு இடுகிறேன். ஆனால் அவன் கதவில் சாய்கிறான், என்னை வெறித்துப் பார்க்கிறான். நாள் இருள்கிறது; முழுதும் செலவிடப்பட்டது; வண்ண

மலர்களை மாலையாகத் தொடுத்துக் காத்துக்
கிடக்கிறேன்."

பின்னர் வானர மகளிருடனும் அழகு தேவதைகளுடனும் சல்லாபம் பேசுகிறார்; தன் முயற்சியில் தோல்வி அடைகிறார். பின் வியந்து பாடுகிறார்.[8]

"அக அறைகள் எய்தஅரியன, சேய்மையன;
புத்திசாலி வேந்தன் இன்னும் விழித்தெழவில்லை.
செறிவுடையது என்உணர்வு; அதற்குப் போக்கு இல்லை,
இறுதிவரை இவ்வாறு வாழ்வதற்கு எப்படித்தான் இயலும்."

தன் மனக்குமுறலை வெளிப்படுத்திய கவிஞர் வேறு வழியின்றிக் கடைசியாகத் தேவ வாக்குகளை (Oracles) நாடுகிறார். குறி சொல்லுபவர்கள், நாட்டைவிட்டு அகன்று, பரந்த உலகில் எங்கேயாவது சென்று தன் நற்பேற்றினை அடையும்படி அறிவுரை பகர்ந்தனர். அவர்கள் சொற்களால் தூண்டப்பட்டார்; அப்போது அவர் பார்க்கும்படி அழகிய மலர்கள் இனிய செடிகளினின்றும் அருவருப்பான இடத்தில் திடீரென வீழ்கின்றன. அதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். சொந்த நாட்டினை விட்டு வேறிடம் போக முடிவு செய்கிறார். கனத்த நெஞ்சத்துடன் தானே தன்னை நாடு கடத்திக் கொள்ளுகிறார். முடிவாகப் பாடுகிறார்:[9]

"விண்ணகத்தின் வியப்புக்களைக் காண்பதற்காய்
முயன்றேன்,
தாயகத்தின் காட்சி என்னைத் தடுத்து நிறுத்துகிறது.
என் குதிரைக்காரன் பெருமூச் செறிகிறான்;
என் குதிரைகள் துயரத்தால் கனைக்கின்றன;
தங்கின, திரும்பிப் பார்க்கின்றன, முன் செல்ல
மறுக்கின்றன".

"எல்லாம் முடிந்தது இப்பொழுது!
என்னை அறிகிறவர் எவரும்இலர் இந்நாட்டில்.
வீணாக என்நகரை எண்ணிஏன் மகிழவேண்டும்?

அறிவோடு ஆள்பவர்க்கு உதவும் தகுதி உடையோர்
யாரும்இலர்,
பெங் சீயென் இருக்கும் இடம் நோக்கிச் செல்வேன்!"

இப்பாடலின் உரையாசிரியர் ஒருவர் கருத்தின்படி, பெங் சீயென் (P'eng Hsien) என்பார், யின் அரச மரபின் (Yin dynasty) இறுதி அரசனாகிய கொடுங்கோலன் சௌசின் (Chou Hsin) என்பவனுக்கு அறிவார்ந்த நல்லமைச்சராக இருந்தவர் ஆவர். அரசனின் அநீதிகளுக்கும் கொடுஞ்செயல்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அமைச்சர் ஆற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். அவர் வாழும் இடத்திற்குச் செல்கிறேன் என்று கவிஞர் சூ யூவன் Ch'u Yuan) கூறுவதால் தானும் ஆற்றில் மூழ்கி உயிர் துறப்பதாகக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறே அவர் மாண்டு போனார் என்று வரலாறு கூறுகிறது. அநீதி புரியும் அரசனைத் திருத்தலாம்; திருந்தாவிட்டால், 'ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவர்க்கு உரியது அம்மா' என்று கும்பகருணன் கூற்றாகக் கம்பர் கூறும் உயரிய கருத்துக்கு உரியவராக மேலே சுட்டப்பட்ட சீன அமைச்சரும் சீனக் கவிஞரும் திகழ்கின்றனர் அல்லரோ!

சூ யூவன் தன் காலத்தைப் பிரதிபலிக்கும் கவிஞர். சிறுமை கண்டு பொங்கியவர். அரசனின் அநீதிக்குத் துணைபோகாதவர். கொள்கைக்காக உயிர்த்தியாகம் செய்து கொண்டவர். அழகியல் உணர்வு வாய்ந்தவர். மலர்கள், அணிகலன்கள், நங்கையர், இறை ஆகிய வடிவங்களில் காணப்படும் அழகினை ஆராதனை செய்தவர். மக்களுக்காகக் குரல் கொடுத்தவர். புனைவியல் கனவுகளால் (Romantic dreams) தான் கண்ட உலகினின்றும் நடைமுறை உலகம் வேறுபட்டதாய், அசுத்தமும் அருவருப்பும் உடையதாய் இருந்ததால், தான் தீண்டத்தகாதவனாகக் கருதப்பட்டார். தானே அந்த அழுகிய உலகினைவிட்டு வெளியேறத் தன்னை

மாய்த்துக்கொண்டார்! சூ யூவன் என்ற மனிதர் இறந்தாலும் கவிஞர் இறக்கவில்லை.[10] அவர் பாடிய கவிதைகளின் வாயிலாக அவர் சீனக் கவிதை வரலாற்றில் நனிசிறந்த இடத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்!

மேற்கோள் குறிப்புக்கள்

1. Liu Wu-Chi, **An Introduction to Chinese Literature,** p.24.
2. Ibid, pp.26-27.
3. Ibid, pp.28-29.
4. Ibid, p.29.
5. Ibid.
6. Ibid.
7. Ibid. p.31.
8. Ibid, p.32.
9. Ibid.
10. Ibid, pp.33-34.

11. ஹன் காலத்து இலக்கியம்

(கி.மு.206-கி.பி.220)

சிதறிக் கிடந்த சிறு சுதந்திர அரசுகளை ஒன்றுபடுத்தி ஐக்கிய சீனத்தை (Unified China) உருவாக்கிய சிறப்பு சின் மரபுக்கு (Ch'in dynasty) உண்டு. (Chin ஐ Quin என்று எழுதும் மரபும் உள்ளது). சின் மரபு ஆட்சி செய்த காலத்தில் குறிப்பிடத்தக்க இலக்கியங்கள் தோன்றவில்லை. இதற்குக் காரணம் இரண்டு: 1. குறுகிய காலமே சின் மரபு ஆட்சி செய்தமை. 2.இலக்கிய அடக்குமுறைக் கொள்கையினைப் (Policy of Literary repression) பின்பற்றியமை.

சின் மரபுக்குப் பின் சீனத்தை ஹன் மரபு (Han Dynasty) ஆட்சி செய்தது. இவ்வாட்சியில் பொருளாதார விரிவாக்கமும் பண்பாட்டு வளர்ச்சியும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. ஹன் அரசர்களில் மிகவும் புகழ்பெற்ற பேரரசர் வூ (Emperor Wu) கி.மு.140--87 என்ற காலப்பகுதியில் ஆட்சி புரிந்தவர். இவர் காலத்தில் சீன சாம்ராச்சியம் மஞ்சள் ஆற்றிலிருந்து (Yellow Reiver) தெற்கில் யாங்குச்சே (Yangtze) ஆற்றின் சமவெளிப் பகுதிகள் வரையும் அன்னம் (Annam) பகுதிக்குத் தெற்கிலும், மங்கோலியாவுக்கும் (Mangolia) கொரியாவுக்கும் (Korea) வடக்கிலும் பரவியிருந்தது. வடமேற்கில் மத்திய ஆசியாவுக்குச் சீனப் படையெடுப்புக்களின் விளைவாகத் திறக்கப்பட்ட வாணிகச் சாத்து வழியாக (Caravan route) உரோம சாம்ராச்சியத்திற்குப் பேரளவில் சீனப் பட்டுக்கள் அனுப்பப்பட்டன. உள்நாட்டில் பேரரசர் வூ (Emperor Wu) கன்பூசியத்தைத் தேசியக் கொள்கையாக

உயர்த்தினார். இந்நெறியாளர்களைத் தன் நிர்வாகத்தில் பணிபுரியச் செய்தார். தாவு மார்க்கத்தின் நீள் ஆயுட் கருத்தினையும், உயிர் அமிழ்தக் கருத்தினையும் ஏற்றுக் கொண்டார். எனவே, இவரது அவைக்களத்தில் கன்பூசிய அறிஞர்களும் தாவு மார்க்கத்தார்களும் கூடினார்கள். இலக்கியப் படைப்பாளர்கள் பலரையும் ஆதரித்தார். அவர்கள் சீன இலக்கிய மேம்பாட்டிற்குத் தங்கள் பங்களிப்பினைச் சிறப்பாக வழங்கினர். அவர் காலத்துச் சீன இலக்கியச் சாதனைகள் எனப் பாராட்டத்தக்க படைப்புக்களில் 1. இசைத்துறைப் பாடல்கள் (Music Bureau Poems - Yueh-fu shih). 2. ஐந்து சொற்பாடல்கள் (Five - Word Poems - Wu-yen-shih) 3. வசன கவிதைகள் (Prose-Poems-Fu). 4. வரலாற்று வசனம் (Historical Prose) என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை ஆகும். இவற்றுள் இசைத்துறைப் பாடல்களைப் பற்றி முதலில் காண்போம்.

1. இசைத்துறைப் பாடல்கள் (Music Bureau Poems)

இந்தத் தொகை இலக்கியத்தினை இசைத்துறைக் கதைப்பாடல்கள் (Music Bureau Ballads) என்றும் வழங்குதல் உண்டு. கி.மு.120இல் பேரரசர் வூ (Emperor Wu) என்பவரால் இசைத்துறை (Music Bureau) நிறுவப்பெற்றது. இத்துறை ஒரு நிருவாக அலுவலகம் (Administrative Office) ஆகும். அரசவையில் சடங்குகள் நிகழும் காலங்களில் இசையும் பாடல்களும் வழங்குதல் தான் இந்தத் துறையின் முதன்மை நோக்கம் ஆகும். இவை கோயிற் பாசுரங்கள், வேள்விப் பலிப்பாடல்கள், தனியறைப் பாடல்கள், விருந்தின் பொழுது பாடப்பெறும் பாக்கள், ஆடலின் பொழுது பாடப்படும் பாக்கள் என்று பல தரப்பட்டவை. அரசனின் நீதியைப் போற்றும் பாடல்கள் பல. தெய்வங்கள் மற்றும் ஆவிகளின் ஆசிகளைப் பெறுவதற்காகப் பாடப் பெறுவனவும் உள்ளன.

சௌ அரசு மரபுக் (Chou dynasty) காலத்தைச் சேர்ந்த நாட்டார் பாடல்களைப் (Folk Songs) பார்த்து

அவைபோல் உருவாக்கப் பெற்றவை இப்பாடல்கள். அரசு அலுவலர்கள் வூ (Wu) பேரரசரின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பரப்பு எங்கும் சென்று அங்கு வாழும் மக்கள் பாடியவற்றைச் சேர்த்துத் தொகுத்தவை இசைத்துறைப் பாடல்கள் அல்லது இசைத்துறைக் கதைப்பாடல்கள் என்று வழங்கப்பெற்றன. ஹன் அரசு மரபுக்குரிய வூ பேரரசன் தொகுத்த இப்பாடல்கள் சௌ அரசு மரபுக் காலத்தில் கன்பூசியசு தொகுத்த பாடற் பனுவலைப் (Classic of Poetry) போலச் சிறப்பு வாய்ந்தவை. இசைத்துறைக் கதைப்பாடல்கள் பொதுவாக ஓரடி ஐந்து எழுத்துருவம் அல்லது சொற்கள் (Five-Character line) கொண்டது. பல பாடல்கள் சம அடிகளாக அமையாமல் நீண்டும் குறுகியும் வேறுபட்டும் வருவன ஆகும். இவற்றுள் பெரும்பான்மையானவை சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்ந்த பொதுமக்கள் பாடியவை. எடுத்துரைத்தல் (Narration) நேர்த்தியாகவும், பாத்திரப் படைப்பு தெளிவாகவும் உள்ளன. படிமக் காட்சிகள் புதுப்புது வகையாகவும் இயற்கையாகவும் படைக்கப்பட்டன.[1]

ஏனைய இலக்கிய வகைகளைப் போலவே, இப்பாடல்களும் வாழ்வின் பொதுமையான அடிக்கருத்துக்களாகிய காதல், பிரிவு, வறுமை, போர் ஆகியவற்றை விவரிப்பனவாக உள்ளன. குழல், செங் (Sheng) எனப்படும் மூங்கில் வாய்க்கருவி, பறை, இசைத்தட்டம், தந்திகள் பொருத்திய இசைக்கருவி முதலிய வாத்திய இசைகளுக்கு ஒத்துவரும்படி இப்பாடல்கள் புனையப் பெற்றவை. வேட்டையடிக்கும் பொழுதும் போர்க்களத்திலும் பாடுதற்குரிய பாக்களும் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வகைப் பாக்கள் நாடோடிகளாகிய டார்ட்டார் (Tartar tribes) மரபுகளினால் இசைக்கப்பட்டவை.

கன்பூசியசின் பாடல் தொகுப்பில் (Classic of Poetry) 305 பாடல்கள் இடம்பெற்றன. ஹன் மரபினன் ஆகிய வூ (Wu) முயற்சியால் உருப்பெற்ற தொகுப்பில் கூடக் குறைய 100 பாடல்கள் இடம்பெற்றன. ஒருசில மாதிரிகளைக் காண்போம்.

ஒருசில பாடல்கள் எளிமையானவை. பின் வரும்பாடல் ஒரு சான்று:[2]

"ஆற்றின் தென்புறம் தாமரை விதைகளைத்
தொகுக்கலாம்.
தாமரை இலைகள், எத்தனை! எத்தனை!
தாமரை இலைகளின் நடுவே மீன்கள்
துள்ளி விளையாடுகின்றன;
தாமரை இலைகளின் கீழ்பால் மீன்கள்
துள்ளி விளையாடுகின்றன;
தாமரை இலைகளின் மேல்பால் மீன்கள்
துள்ளி விளையாடுகின்றன,
தாமரை இலைகளின் வடபால் மீன்கள்
துள்ளி விளையாடுகின்றன".

பாமரர் பாடும் பாடலில் ஆறு, தாமரை, மீன்கள், அவற்றின் விளையாட்டு என்பன மையப் பொருளாக விளங்குகின்றன. பாமரரின் இசையினால் பாடல் உயர்ச்சி பெறுகிறது. திரும்பத் திரும்ப வருதல் (Repetitions) குழுப் பாடலின் தன்மைகளில் ஒன்றாகும்.

அனாதை ஒருவனின் துன்பத்தினையும் துயரத்தினையும் பற்றிய பின்வரும் பாடல் அடிகள் உள்ளத்தை உருகச் செய்வன.

"என் கைகள் புண்ணாகின,
கால்களில் செருப்பு இல்லை;
வருத்தத்துடன் நடக்கிறேன் உறைபனிமேல்
முட்கள் கள்ளிப் புதர்களின் நடுவே.

முள்ளைப் பிடுங்கி எடுக்கும் பொழுது
எப்படி என்நெஞ்சம் வலிக்கிறது!
கண்ணீர்த் துளிகள் விழுந்து விழுந்து
முடிவில்லாத ஓசையாக உருக்கொள்ளும்."

ஆதரவற்ற அனாதைபடும் அல்லலைத் தன்மை நவிற்சி அணியுடன் எடுத்துரைக்கும் இப்பாடல், இன்றைய உலகிலும் இதுவே நடைமுறைக் காட்சியாக இருத்தலை நினைவூட்டுகிறது. ஈற்றடிகளில் உயர்வு நவிற்சி காணப்படினும் அனாதையின் துயரத்தினையே அது சுட்டுவதாக அமைகிறது.

"கீழைவாசல்" (The Eastern Gate) என்ற பாடல்,[3] வறுமையாலும் பசியாலும் வாட்டப்பட்ட ஏழை ஒருவன் தன் மனைவி மற்றும் குழந்தையினை விடுத்து, வெளிநாட்டில் பொருள் தேடப் புறப்படும் வேளையில், மனைவி அவனைத் தடுத்து நிறுத்த முற்படுதலை மையமாகக் கொண்டது. இருவருக்கும் இடையே நிகழும் உரையாடலைக் காண்போம்:

மனைவி : மற்றவர்கள் செல்வத்தையும் உயர் நிலையையும் விரும்புகிறார்கள். என் கஞ்சியை உன்னுடன் பகிர்ந்து கொள்ளுவதில் நான் நிறைவு பெறுகிறேன். நமக்கு மேலே விரிந்த நீலவானம் கீழே பால் குடிக்கும் குழந்தை."

கணவன் : அந்தோ! இன்று நான் நீங்கிலேன் எனில், அது மிகவும் காலம் கடந்ததாகிவிடும். என் முடியோ வெளுத்து வருகிறது. நெடிது நான் தங்கியிருக்க முடியாது."

மனைவியின் பாச உணர்ச்சியுடனும், கணவனின் கடமை உணர்ச்சியுடனும் பொருளீட்டப் போகும் சங்க இலக்கியத் தலைவனின் வினைமாட்சியையும், தாங்கியிருக்கும்

தலைவியின் அன்பின் சிறப்பினையும் ஒப்பிட்டுப் பார்த்தல் பொருத்தமாக இருக்கும்.

"நகரின் தெற்கில் போர்" (Fighting South of the City) என்ற போர்ப்பாடல்கள் இறந்த வீரனின் சொற்களையும் அவன் பிணத்தைக் காகங்கள் கொத்தி விழுங்குவதையும் வெளிப்படுத்துகின்றன:

"என் பொருட்டுக் காகங்களுக்குச் சொல்லுங்கள்:
வருவ வருக நீங்களே விருந்து உண்ணுங்கள்!
போர்க்களக் காட்டில் புதைக்காமல் கிடக்கிறது
அழுகிய என் உடலை எப்படி விட்டுவைக்க முடியும்?"

புறநானூற்றிலும் போர்க்களப் பாடல்கள் உள்ளன. பரணி இலக்கியங்களில் வீழ்ந்து கிடக்கும் வீரனின் குடலை உருவிச் செல்லும் பருந்தினங்களையும் பிணத்தைக் கொத்தித் தின்னும் காகங்களையும் புலவர்கள் வருணித்துள்ளனர். ஆனால், ஹன் காலத்துச் சீனப் பாடல் கொஞ்சம் வேறுபட்டு, இறக்கும் முன்னே இறந்த பிறகு என்ன நடக்க வேண்டுமோ அதனை வெளியிடும் வீரச் சொற்களில் அவலத்துடன் கொடைக் குணமும் விரவியிருத்தல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

2. ஐந்து சொற்பாடல்கள்

ஓரடிக்கு நான்கு சொற்களே அமைந்த பாடல்கள் (The Four-Word or Character Poems) பாடற் பனுவலில் (The Classic of Poetry) காணப்படுகின்றன. அவற்றின் வளர்ச்சியாக இசைத்துறைப் பாடல் தொகுதியில் (Music Bureau Songs) ஓரடிக்கு ஒரு சொல் கூடுதலாகச் சேர்க்கப்பெற்று ஐந்து சொற்களால் இயற்றப்பட்ட பாடல்கள் இடம்பெற்றுள்ளன.[4]

சீனச் செய்யுள் மொழியில் பெரும்பாலும் முன்னொட்டுக்கள் (Prepositions), பிரதிபெயர்ச் சொற்கள் (Pronouns), சுட்டுச் சொற்கள் (Articles) என்பன இல்லை.

ஒவ்வொரு சொல்லும் முக்கியத்துவம் வாய்ந்தது, பொருள் உடையது, குறிப்புப் பொருள் தருவது. எளிமையின் அழகு சீனப் பாடலின் தனிச்சிறப்பு. சுற்றி வளைத்துச் சொல்லாமல் நேராகப் பேசுதல் மற்றொரு சிறப்பு.

ஃபொனிக்சுப் பறவையின் தென்கிழக்குப் பயணம் (Flight of the Phoenix to the Southeast) என்ற கதைப்பாடல் ஜியோ சொங்கிங் (Jiao Zhongquing) என்னும் இளநிலை அலுவலரையும், லீயு லன்ஷி (Liu Lanzhi) என்ற அவன் மனைவியையும் பற்றிய கதையாக அமைந்துள்ளது.[5] இருவரும் ஒருவரை ஒருவர் ஆழமாக நேசிக்கிறார்கள். ஆயினும் ஜியோவின் கொடிய தாய் லீயுவைத் தன் தாய் வீட்டிற்கே திரும்ப விரட்டி விடுகிறாள். வீடு திரும்பியதும் அவள் சகோதரன் உள்ளூர்க் காவல் அதிகாரியின் மகனை மணந்து கொள்ளும்படி அவளை வலியுறுத்துகிறான். இரண்டாம் திருமண வேளையில் இளையவளாகிய லீயு ஆற்றில் மூழ்கித் தன் வாழ்வினை முடித்துக் கொள்ளுகிறாள். ஜியோ தூக்கிட்டுக் கொண்டு மடிகிறான். இந்தக் குடும்ப அவலக் கதைப்பாடலில் அதனைப் பாடியவர் நிலமானியப் பழக்க வழக்கங்களின் கொடுமையினை வெளிப்படுத்திக் காட்டுகிறார். சமுதாய மரபுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தற்கொலை செய்து கொண்ட இளம் இணையர்க்காகக் கவிஞர் கழிவிரக்கம் கொள்கிறார். எடுத்துரைப் பாங்கில் (-Narrative) புனையப்பட்ட இக்கதைப் பாடலில் தன்னுணர்வுக் கூறுகளும் (Lyrical elements) விரவி வரும்படி திறமையாகப் படைக்கப்பட்டன. மரபு சார்ந்த காட்சியியல் (Realistic) இலக்கியத்திற்கு இப்படைப்பு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஃபொனிக்சு என்ற சொல் பேரழகு நங்கையினைக் குறிக்கும். மேலும் அரேபிய பாலைவனத்தில் அறுநூறு ஆண்டுகள் வாழ்ந்து பின்னர் மறுபிறவி எடுப்பதற்காகவே தன்னையே எரித்துக் கொண்ட ஒரு பறவையினையும்

குறிக்கும். தன் கணவனுக்காகத் தன்னையே தியாகம் செய்துகொண்ட பேரழகியை இச்சீனப் பாடல் இச்சொல்லால் குறிப்பிடுகிறது.

தமிழர்கள் தெற்கினை மறலி திசை என எண்ணுதல் மரபு. ஒருவேளை சீனர்கள் தென்கிழக்கினை அவ்வாறு கருதியிருத்தல் கூடும். ஹன் காலத்தைய பாடல்களில் பல படைத்தளபதி, இராசதந்திரி, புலமையாளர், கோமகனுக்குரிய இற்பரத்தை ஆகியோர் பாடியவை என்று கூறப்படுகிறது. இவற்றுள் பல பாடல்கள் ஓரடிக்கு ஐந்து சொற்கள் பெற்று வந்தவை (Five-Word poems). இவற்றுள் பிற்கால ஹன் காலத்தில் (கி.பி.192) புகழ்பெற்ற கல்வியாளர் ஒருவரின் மகள் சை யென் (Ts'ai Yen) பாடியதாகக் கருதப்படும் மனத்துயரமும் ஏளனக் கோபமும் (Sorrow and Indignation) என்ற நெடும்பாடல் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பெற்ற சிறப்புடையது. ஹன் சாம்ராச்சியம், குலைவுற்ற பொழுது படையெடுத்து வந்த ஹுணர்களால் (Huns) சை யென் சிறப்பிடிக்கப்பட்டாள். தலைநகரிலிருந்து வடக்கு நோக்கி டார்ட்டார் மாநிலத்திற்கு (Tartar land) கொண்டு செல்லப்பட்டாள். அங்குப் பன்னிரண்டு ஆண்டுகள் தங்க நேரிட்டது. அப்பொழுது ஹுணத் தலைவனுடன் கூடிப் புதல்வர் இருவரை ஈன்றளித்தாள். இறுதியில் பிணைய மீட்பாகச் சீன நாட்டிற்குத் திருப்பி அனுப்பப் பெற்றாள். மேலே சுட்டப்பட்ட தன் நெடும் பாடலில் கசப்பான தன் அனுபவங்களை விளக்கமாக நினைவு கூர்ந்திருக்கிறாள். ஹன் அரசு மரபின் முடிவில் எழுந்த நீண்ட உள்நாட்டுப் போர், படையெடுத்து வந்த ஹுணர்களின் கையில் அகப்பட்ட சீனர்களின் துயரங்கள், வடபால் உள்ள காடுகளுக்குச் செல்லும் வழியில் பிடிபட்ட பெண்களின் ஆற்றொணாத துன்பங்கள் முதலியவை இப்பாடலில் சொல்லோவியம் செய்யப்பெற்றுள்ளன. தான் பிணைய மீட்பாக மீண்டும் தாயகம் திரும்பும்

செய்தியைக் கேட்டதும் ஒருபுறம் மகிழ்ச்சியும், மறுபுறம் தன்புதல்வர் இருவரையும் அயல் நிலத்தில் விட்டுவிட்டு வரவேண்டிய சூழலைப் பற்றிய மன உளைச்சலும் எழுந்தன. இப்பெண் கவிஞர் இருதலைக் கொள்ளியின் உள்ளகப்பட்ட எறும்பு போல் துயருற்றாள்.[6] தன் துயரைப் பாடிய கவிதையின் ஒரு பகுதியின் தமிழாக்கத்தைத் தருகிறோம்.

"பெற்றெடுத்த என் பிள்ளைகள் என் கழுத்தைத் தழுவ
 வந்தனர்
'தாய் எங்கேபோய்க் கொண்டிருக்கிறார்?'
 அவர்கள் கேட்டனர்.
'தாய் பிரிந்து போகிறாள்' என்றனர் மக்கள்
"எப்பொழுது எம்தாய் திரும்பி வருவார்?
அன்பும் மென்மையும் வாய்ந்தவர் எம்தாய்:
இரக்கம் இல்லாமல் எப்படி பிரிய முடியும்?
நாங்கள் இன்னும் வயது ஆகாதவர்கள்
எங்களைப் பற்றிஏன் அவர் எண்ணக் கூடாது?"
இப்படி இவர்களைப் பார்த்து என்நெஞ்சம் பிளந்தது.
திடீரெனப் பைத்தியம் பிடித்ததுபோல் தோன்றியது.
புலம்பிக்கொண்டே என்கைகளால் அவர்களைத்
 தட்டிக் கொடுத்தேன்.
புறப்பட முயன்ற பொழுது மீண்டும் தங்கினேன்.
என்னை வழியனுப்ப வந்தஎன் பழைய நண்பர்கள்
'நான்மட்டுமே பிரிகிறேன்' என்று
 பொறாமைப்பட்டனர்.
நெஞ்சக் குமுறலால் வாய்விட்டுக் கதறினர்.
கலக்கத்தில் நின்றன குதிரைகள்
வாகனங்கள் உருளத் தவறின
பார்வை யாளர்கள் தேம்பினர், பெருமூச் செறிந்தனர்,
பாதைகள் கூட பரிதாபமாகப் புலம்பின."

இங்ஙனம் உணர்ச்சிப் போராட்டத்தின் தத்தளிப்பினை நெஞ்சுருகும்படி சை யென் (T'sai yen) என்ற பெண்

கவிஞர் பாடியிருத்தல் சீன இலக்கியச் சுவைஞர்களின் பாராட்டினைப் பெற்றது.

ஹன் மரபின் காலத்திற்குப் பின் கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வட சீனாவில் வேய் அரசினை (Wei kingdom) நிறுவிய அரச குடும்பத்தைச் சேர்ந்த கவிஞர் மூவர் சிறப்பாகக் குறிப்பிடப் பெறுகின்றனர். இவர்கள் கவிதைப் புரவலராகவும் திகழ்ந்துள்ளனர். இம்மூவரில் முதன்மை பெற்றவர் சாவோ சீ (T'sao Chih) கி.பி.192-232 என்ற காலப் பகுதியில் வாழ்ந்தவர். ஓரடிக்கு ஐந்து சொற்கள் அமைத்துப் பாடும் யாப்பிற்கு ஒரு புதுத் தரத்தினையும் மதிப்பினையும் தந்தவர் இவர். தன்னுடைய சொந்த உணர்வுகளைப் புலப்படுத்துவதற்கு ஒரு வாகனமாக வறுமையினை அமைத்துக் கொண்டார். இவருடைய உணர்வுகள் மூன்று வகை மாற்றங்களைப் பெற்றன. அவையாவன:

1. இளமை வாய்ந்த இளவரசனைப்போல இன்பத் துய்ப்பும் எளிதாம் தன்மையும் பெற்ற இவர்தம் தொடக்க கால வாழ்வின் உணர்வு நிலை.
2. அரசியல் ஏமாற்றமும், சக்கரவர்த்தியாகிய தன் தமையன் வழங்கிய தண்டனையும் பெற்ற இடைப்பட்ட கால வாழ்வின் உணர்வுநிலை.
3. மந்திர வழியில் அமரத்துவம் பெறுதற்கு மேற்கொண்ட பயனற்ற தேடுதலும், பாதுகாப்பற்றதும் குறுகிய காலமே எஞ்சியதும் ஆகிய வாழ்வினைப் பற்றிய ஏக்க நிலையும், நிலைகுலைவும், அச்சமும் பொருந்திய இறுதிக் கால வாழ்வின் உணர்வுநிலை

தன் இளவலும், இளவரசனும் ஆகிய மற்றொரு சகோதரர்க்கு இக்கவிஞர் கோமகன் வரைந்து விடுத்த ஆறு விடைபெறு பாடல்களின் (Six Farewell Poems) தொகுப்பில்

மேற்சுட்டப்பட்ட மூன்று வகை உணர்வு நிலைகளும் திறம்படப் புலப்படுத்தப்பட்டன. அந்த இளவலும் கூட, தன் நடு அண்ணனாகிய கவிஞர் அடைந்த அல்லல்களை மூத்த அண்ணன் ஆகிய சக்கரவர்த்தியிடம் பெற்றுத் துன்புற்றார். நீண்ட பிரிவின் தீக்குறிகளும் மரணம் பற்றிய சிந்தனைகளும் கவிஞரைச் சூழ்ந்து கொள்ள அவர்தம் வேதனைகளை எல்லாம் ஆறாவது பாடலில் உணர்வு பொங்க வெளியிட்டுள்ளார்.[7] அப்பாடலின் தமிழாக்கம் தரப்படுகிறது:

இக்கசப்பான துயரம் பற்றி நான் ஏன் கவலைப்பட
வேண்டும்? கடவுளின் கட்டளை ஐயத்துக்கு
இடமாக உள்ளது!
*வெட்டவெளி உலகத்தில் அமரர்களைத்
தேடினேன்,
[S]குருஆசான் செந்தேவன் நெடுங்காலம்
என்னை ஏமாற்றியிருக்கிறான்.
ஒருநொடிப் பொழுதில் பெருமாற்றம் நிகழும்.
நூறாண்டும் எவரால் வாழ முடியும்?
பிரிகிறேன் இப்பொழுது, மீண்டும் நாம்
சந்திக்க மாட்டோம்
மீண்டும் நாம் கைகோத்து இருப்பது எப்பொழுது?
[N]இளவரசே! விலைமதிப்பற்ற உன்உயிர்
நலத்தினை ஓம்புவாய்.
இருவரும் இணைந்து [K]முடிமஞ்சள் நிறமாதல்
கண்டு மகிழ்வோம்.
கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டு,
நெடும்பயணம் தொடங்குகிறேன்;
பேனாப் பிடித்தபடி பிரியாவிடை எப்பொழுதும்.

குறிப்பு: *வெட்டவெளி - சித்தர்கள் சொல்லும் சூனியம், Void; [S]ஆசான் செந்தேவன் - அமரத்துவம் பெற்ற தாவு மார்க்கத்து முனிவன் Master Red Pine; [N]இளவரசே - தன்

தம்பியை விளிக்கிறார் கவிஞர். [K]முடிமஞ்சள் நிறமாதல் - முதுமையினைக் குறித்தது.

சாவோ சீ (Ts'ao Chih) ஹன் மரபுக் காலத்து மிகச் சிறந்த கவிஞர் என்பது அவர்தம் படைப்புக்களால் புலனாகிறது. அவருக்கு ஒப்பாக மதிக்கப்படும் பெயர் அறியப்படாத கவிஞர் ஒருவர், "மயில் தென்கிழக்குத் திசையில் பறக்கிறது" (The Peacock flies South east) என்ற தலைப்பில் பாடியுள்ள புகழ்பெற்ற பாடலும் ஓரடிக்கு ஐந்து சொற்கள் பெற்று வந்தது. சீன மொழியின் மிக நீண்ட பாடல்களில் இதுவும் ஒன்றாகும். ஆர்வமும் அவலமும் விரவிய இப்பாடல், 'சியோ சுங்-சிங்கின் (Chiao Chung-Ch'ing) மனைவிக்கு எழுதப்பட்ட பாட்டு' என்றும் வழங்கப்பட்டது.

சியோ (Chiao) என்பவர் லூ-சியாங் (Lu-Chiang) என்ற நகர மன்ற அலுவலகத்தில் சிறு எழுத்தராக இருந்தவர். அவருடைய தாயாரின் குறுக்கீட்டினால் மகிழ்ச்சிமிக்க திருமண வாழ்வு தடைப்பட்டது. மருமகளிடம் வெறுப்புற்ற மாமியார், அவளைப் பெற்றோர் வீட்டிற்குப் போகும்படி பலாத்காரம் செய்தார். சியோ (Chiao) தாயிடம் எவ்வளவோ முறையிட்டும் பயனில்லை. முடிவாக மணமுறிவு ஏற்பட்டது. பிரியும் பொழுது கூட, ஒருவருக்கு ஒருவர் நிரந்தரமான நம்பிக்கையுடன் வாழ்வதற்குச் சூள் உரைத்தனர்.[8] இந்நிகழ்வினைப் பின்வரும் பாடலில் காண்போம்.

"நேர்மையான அந்த எழுத்தரின் குதிரை
முன்நின்றது,
அவன் இளம்மனைவியின் வண்டி பின் நின்றது.
கடகட ஒலியுடனும் தரையினை நசுக்கிக்
கொண்டும் அவை சென்றன,

பெருஞ்சாலையின் வாயிலில் இரண்டும் சந்தித்தன.
கீழே இறங்கியவன் தன்மனைவியின் வண்டிக்குள்
நுழைந்தான்;
தலை வணங்கி அவள் செவியில் முணுமுணுத்தான்:

உன்னை ஒருபொழுதும் பிரியேன் எனச்
சபதம் செய்கிறேன்!
சிறிது நேரத்திற்குச் சற்றே வீடு திரும்புகிறேன்.
என் அலுவலகத்திற்குத் திரும்புவேன் சிறிதுநேரம்;
எனினும், உன்னை அடைய விரைந்து வந்து
சேர்வேன்.
ஒருபொழுதும் தவறேன் எனக் கடவுள் பேரில்
சத்தியம் சொல்கிறேன்!"

செம்மை எழுத்தர்க்குத் தன் இளம்மனைவி இயம்பினாள்:

"எளியள் ஆகிய என்பால் காட்டிய பரிவுக்கு நன்றி
தங்கள் கருத்தினை வெளிப்படுத்தியதால்
தாங்கள் விரைந்து திரும்புதலை எதிர்பார்ப்பேன்.
தாங்கள் ஒருபெரும் பாறைபோல் இருத்தல்
வேண்டும்.
உன் அடித்தொழிலாட்டி யான் ஒருநாணல்நார்.
நார்க்கண்ணாடி பட்டுப்போல் எளிதில் வளைக்கக்
கூடியது.
ஆனால், பெரிய பாறையோ அசைவதோ
மாறுவதோ இல்லை."

அன்புப் பெருக்கும் பாசநெஞ்சமும் பொருந்திய காதல் நெஞ்சங்கள் இரண்டும் இலட்சிய இணையராக வாழ இயலாமல் தடைபோடும் மாமியாரின் கொடுமை ஈராயிரம் ஆண்டுகளாகச் சீனத்தில் மட்டுமன்று இந்தியத் திருநாட்டிலும்,ஏன் தமிழகத்திலும் தொடர்ந்து வருதல் குறிப்பிடத்தக்கது. இத்தகைய பொதுப்போக்கினை மானிடப் பொதுமைக்கு (Human Stock) உரியது என்று மாந்தனியலார் கருதுவர்.

எழுத்தரின் இளம்மனைவி பிறந்தகம் திரும்புதல் அவளுடைய பெற்றோர்க்குத் துன்பத்தையும் வியப்பையும் தந்தது. சில நாள் சென்றன. திருமணத் தரகர் உயர் மரபுக்குரிய அலுவலர் குடும்பத்து எழில்மிகு இளைஞன் ஒருவனை அவளுக்கு மறுமணம் செய்விக்கப் பேச்சு வார்த்தை நடத்தினான். தான் கூறிய மறுப்புரைகள் யாவும் பயனற்றுப் போகவே, தன் குடும்பத்தாரின் விருப்பத்திற்குத் தலை வணங்கினாள். திருமணச் சடங்கிற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றன. இதற்கிடையில், செம்மை எழுத்தர் இச்செய்தி கேட்டு, திருமணத்திற்கு முதல்நாள் அவளைக் காண வந்தார். அவர் ஏறி வந்த குதிரையின் கனைப்புக் கேட்ட உடனேயே அவனைக் காணும் பொருட்டு வீட்டின் உள்ளிருந்து வெளியே ஓடோடி வந்தாள். எழுத்தர் முதலில் பேசத் தொடங்கினார்.

"உன்புது முன்னேற்றத்திற்கு என் பாராட்டுக்கள்!
உறுதி படைத்ததும் நிமிர்ந்து நிற்பதும் ஆகிய
அந்தப் பெரும் பாறை
ஆயிரம் ஆண்டுகள் நிலை பெற்றிருக்கக் கூடும்,
நாணலோ வளைவது ஒருநொடிப் பொழுது,
காலை முதல் மாலை வரை
மதிப்பும் வெற்றியும் நாளும் நீபெறுவாய்,
மஞ்சள் ஊற்றிற்கு நான் தனியாகப் போகும்
பொழுது."

அவர் உரைக்கு அவள் இறுத்த விடை இதுவே:

"அத்தகு சொற்களைக் கூற உங்களால்
முடிந்தது எப்படி?
ஒரே மாதிரியாகத்தான் நாம்
ஒடுக்கப்பட்டிருக்கிறோம்-
நீங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டீர்கள், நானும்
அப்படியே!
மஞ்சள் ஊற்றில் நாம் சந்திப்போம்
இப்போது கூறிய சத்தியத்தை உடைக்கக் கூடாது!"

பின்னர், ஒருவர் ஒருவர் கையினின்றும் விடுவித்துக் கொண்டு இருவரும் பிரிந்தனர்; தனித்தனி வழியே சென்றனர். அதே இரவில், அப்பெண் தன் செருப்பினைக் கழற்றிவிட்டு, உள்ளாடையினை உயர்த்தியபடி, மணமேடைக்கு அருகில் இருந்த தெளிந்த நீர்நிலைக்குள் நடந்து போனாள். எழுத்தரோ, முற்றத்து மரத்தின் தென்கிழக்கிக் கிளையில் தூக்குப் போட்டுக் கொண்டார். அவல நிகழ்ச்சிக்குப் பிறகு, இருவர் குடும்பங்களும் காதலர் இருவரையும் ஒரு பெரிய மலையின் சாரலில் புதைத்தனர். அங்குப் பல்வகை மரங்களும் உயர்ந்தும் செழித்தும் வளர்ந்தன. அவற்றின் கிளைகளும் இலைகளும் ஒன்றை ஒன்று உராசிக் கொண்டன. மணற்குன்றுக்கும் காதற் பறவைகள் கூடு கட்டும் இடத்திற்கும் நிழல் அளித்தன. அப்பறவைகள் ஒவ்வொரு இரவின் ஐந்தாம் சாமம் வரும் வரையும் தத்தம் தலைகளை உயர்த்தி ஒன்றை ஒன்று கூவி யழைக்கும். வழிப்போக்கன் அவ்வோசையினைக் கேட்பதற்காக அங்குத் தங்குகிறான்; கைம்பெண் உணர்வின்றி அலைவதற்காக எழுகிறாள். இத்தகைய அவலங்களும் கொடுமைகளும் இலட்சியத் தம்பதிகளுக்கு நடக்கக் கூடாது என்று பின்வரும் தலைமுறைகள் எச்சரிக்கப்படலாம். இவற்றை மறவாமல் இருத்தல் கூடும். இவர்கள் மறைந்த தம்பதிகளுக்கு நன்றிக் கடப்பாடு உடையவர்கள் என்ற அளவில் நெடும்பாடல் நிறைவு பெறுகிறது.[9] இப்பாடலில் மஞ்சள் ஊற்று (Yellow Spring) என்பது பாதாள உலகினை; இதனை ஐரோப்பிய இலக்கியம் Hades என்று கூறும்.

தென்கிழக்குத் திசை என்பது எமன்திசையினைக் குறிக்கும் என்பது சீனரின் நம்பிக்கை ஆகலாம் என்று மேலே கூறினோம். அதனை உறுதிப்படுத்துவதாக இப்பாடலின் ஒரு நிகழ்வு அமைந்துள்ளது. எழுத்தர் தன்னை மரத்தின் தென்கிழக்குக் கிளையில் தூக்கிட்டு மடித்துக் கொண்டார் என்று இப்பாடல் சுட்டுதல்

நோக்குதற்குரியது. Peacock- ஆண்மயில், இஃது எழுத்தருக்குப் படிமம் (Image) ஆகும்.

இத்தகைய உலகியலோடு ஒத்துவரக் கூடிய உண்மை நிகழ்வுகளை உணர்ச்சி பொங்கப் பாடும் ஆற்றல் ஹன் மரபுக் காலத்துச் சீனக் கவிஞர்களிடம் சிறந்து விளங்குதல் குறிப்பிடத்தக்கது. சங்க அகஇலக்கியப் புலவர்கள் இத்தகைய நடப்பியல்களைப் பெரிதும் பாடினார்களா? அரிதாகப் பாடினார்களா? என்ற வினா எழுதல் இயல்பே. இவர்கள் அரிதும் பெரிதும் நடப்பியலைப் பாடியதைவிட, குறிக்கோள் நெறியாகிய புலனெறி வழக்கத்தினையே போற்றிப் பாடியுள்ளனர் எனக் கூறலாம். சங்க அகஇலக்கியத்திற் கென்று எவ்வளவோ சிறப்பியல்புகள் உள்ளன. அவற்றைப் பிற மொழி இலக்கியங்களில் காணுதல் அரிது என்பதும் சுட்டுதற்கு உரியது.

3. வசன கவிதைகள்

ஹன் மரபுக் கால இலக்கிய வகையில் வசன கவிதை (Prose-poem) என்பது குறிப்பிடத்தக்கது. இக்கவிதையின் தோற்றத்திற்கும் பரவுதலுக்கும் பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றை இங்கே காண்போம்:

1. சூ (Ch'u)வின் பாடல்களின் தாக்கம்.
2. நெடுங்கால அமைதியும், செழுமையும்.
3. செல்வந்தர்கள் இந்த இலக்கிய வகையினை மேம்படுத்தியமை.
4. பேரரசர் வூ (Emperor Wu)வும் பின்வந்த பேரரசர்களும் வசன-கவிதை வரையும் பாவலர்களை ஆதரித்தமை.
5. இத்தகைய கவிஞர்களுக்கு அரசாங்கப் பதவிகள் அளித்தமை.

6. ஆடம்பரம் மற்றும் அழகியல் அரசாங்க வாழ்வும் உலகாயதப் பண்பாட்டில் (Material Culture) நாட்டமும்.

சீன இலக்கிய வரலாற்றில் வசன-கவிதையின் எழுச்சி குறிப்பிடத்தக்க ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. இதனை ஃபூ (Fu) என்று சீன மொழியில் கூறுவர். இவ்வடிவம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அறிமுகப்படுத்தப் பெற்றது. என்றாலும், ஹன் அரச மரபின் காலத்தில்தான், இவ்வடிவம் விவரித்துக் கூறுவதற்கு (Descriptive) ஏற்புடையதாக வளர்ச்சி பெற்றது. ஃபூ என்ற சொல்லிற்கு விரிகிறது (extends), பரவுகிறது (spreads out) என்பது அடிப்படைப் பொருள். எனவே அலங்காரமான விரிவாக்கம் (Ornate elaboration) என்ற பொருளையும் இச்சொல் குறித்தது. ஒரு குறிப்பிட்ட பொருளையோ, பொருண்மையினையோ விரிவாகவும் விளக்கமாகவும் படைத்துக் கூறும் இலக்கிய வடிவமும் ஃபூ எனப் பெயர் பெற்றது. நீண்ட வருணனை உண்டாக்கும் சலிப்பு உணர்ச்சியைச் சமன் செய்யும் வகையில், இவ்வகை வசனப் பாடலின் முதன்மை வருணனைப் பகுதி, ஓசை நயம் வாய்ந்ததாகவும் இசை நலமும் பெருமித நடைப் பொலிவும் உடையதாகவும் பாடப்பெறுதல் வழக்கம்.

இவ்வகைய யாப்பின் தொடக்கப் பகுதியும் இறுதிப் பகுதியும் பெரும்பான்மையும் வினா-விடை வடிவத்தில் அமைக்கப் பெறுவன. இப்பகுதிகள் யாவும் வசனமாக (Prose) அமையும்.

வசன கவிதையின் பாடுபொருள் அல்லது உள்ளடக்கம் பல்வகையாகும். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை:[10]

1. விசிறி (Fan), குழல் (Flute) என்பன போன்ற சிறு பொருள்கள்.
2. மகளிரின் உடல் வனப்பு, அழகுப் பொருள்கள்.

3. நகரங்கள் மற்றும் அரச மாளிகைகள்.

4. மலைகள், ஆறுகள், மரங்கள் முதலிய இயற்கையின் அழகு.

5. தேவதைகள் உலகின் கற்பனை விந்தைகள்.

6. வேட்டை யடித்தல், விருந்தாட்டு முதலியன.

வசன-கவிதை வருணனை இயல்பு படைத்ததாகப் பாடப் பெறினும், தன்னுணர்ச்சி (lyrical) வெளிப்பாடாகவும், விளங்க உரைப்பதாகவும் (Exposition), வாதிடுவதற்குரியதாகவும் (Argumentative), எள்ளற் குறிப்புடையதாகவும் (Satirical) அமைதல் உண்டு. 'வசனகவிதையினை எழுதுவோரின் உள்ளம் பிரபஞ்சத்தினைத் தழுவுகிறது' என்று சொல்லப்படுகிறது. இதனால், வசன கவிதையின் ஆற்றலும் அதனைப் படைப்பவரின் உலகநோக்கும் ஒருங்கே புலனாதல் காணலாம்.

ஏனைய இலக்கிய வடிவங்கள் சிலவற்றிற்கு அமையாத அனுகூலம் வசன-கவிதைக்கு உண்டு. அதன் நீளத்தினைத் தேவைக்கேற்பக் குறைக்கவோ, கூட்டவோ முடியும். ஒரு சில வசன கவிதைகள் குறியன. ஆயினும் இவை, ஏனைய இலக்கிய வகைப் பாவடிவங்கள் பலவற்றைப் பார்க்கிலும் மிகவும் நீண்டவை. வளர்ச்சிப் போக்கில் வசன-கவிதைகள் ஆயிரக்கணக்கான சொற்களாக நீண்டு சென்றுள்ளன. இத்தகைய நெகிழ்ச்சிக்குக் காரணம் கவிதை, வசனம் என்பனவற்றின் கட்டற்ற கலவையே யாகும். பாட்டினில் வரும் அடியில் கூட சொற்களின் எண்ணிக்கை கூட சராசரி நான்கிலிருந்து ஒன்பது வரை வேறுபடும். இவற்றில் வரும் இடைச்சொற்கள் கூட நெகிழ்ந்தனவாக, பொருளை வெளிப்படுத்துவனவாக விளங்கும். தேர்ந்த கவிஞரின் கலைத்திறத்தால் செய்யுள் அடைகள் (Poetic epithets) கூட வசன-கவிதையினை மேம்படுத்திக் காட்டும். தேர்ச்சி

பெறாத எழுத்தாளர் செயற்கைத் தன்மை (Artificiality), இருக்க முடியாத் தன்மை (Improbability), ஏட்டறிவை வெளிப்படுத்துதல் அல்லது பண்டிதத் தன்மை (Pedantry) என்பனவற்றைப் புலப்படுத்துவார். அவர் படைப்புக்களில் அழகியல் அரிதாகக் காட்சி தரும்.

வசன-கவிதைக் கவிஞர்

ஹன் காலத்து வசன-கவிதைக் கவிஞரின் பிரதிநிதியாக சுசு-மா ஹிசியாங்-ஜு (Ssu-ma Hsiang-ju) என்பார் போற்றப்படுகிறார். அறிவுக் கூர்மை வாய்ந்த இக்கவிஞர் இசைவாணராகவும் ஒளி வீசியவர். இவர் வாழ்ந்த காலம் கி.மு.179-117 ஆகும். சூ (Ch'u) காலத்துப் பாடல்களின் மாதிரியாக, இவர் வசன-கவிதை (ஃபூ) வடிவத்தினைப் படைத்தார். இவர் படைப்பு சம அடிகள் அல்லது விசம (நேரற்ற) அடிகள் கொண்டிருக்கும்; பெரும்பாலும் மோனை, இயைபு ஓசை பொருந்தி யிருக்கும்; தன்னுணர்வுக் கூறினைக் காட்டிலும் வருணனைக் கூறு விஞ்சி நிற்கும். 'Master Figment' என்ற இவருடைய ஒரு வசன-கவிதையின் சாரத்தினைக் காண்போம்.

இக்கவிதையின் தலைப்பு ஆகிய ஆசான் கற்பனை (Master Figment) என்பது உருவகத் தலைப்பு. இதில் வரும் மாந்தர் பெயர்களும் உருவகமே. Mr. Nonesuch - திருவாளர் அப்படி ஒருவரும் இலர். Lord Nonexistence - பிரபு இன்மை என்பவர் இதில் இடம்பெறுகிறார்கள். Cloud-Dream - மேகக் கனவு என்னும் பூங்கா.[11]

பிரபு இன்மையின் முன்னிலையில் ஆசான் கற்பனைக்கும் திருவாளர் அப்படி ஒருவரும் இலர்க்கும் ஒரு கற்பனை உரையாடல் நிகழ்வதாகக் கவிஞர் புனைந்துள்ளார். உரையாடற் பொருள் வேட்டையாடுதல் அல்லது வேட்டை அடித்தல் (Hunting) ஆகும். அண்டை நாட்டின் தூதுவராக வந்துள்ள ஆசான்

கற்பனை என்பவர் விருந்து நாட்டின் இளவரசர் தனக்கு வழங்கவிருக்கும் வேட்டை விருந்தினை (Hunting party) குறைத்துப் பேசுகிறார். அதே நேரத்தில் தன்னாட்டு இளவரசர், மேகக்கனவு என்னும் அற்புத இன்பப் பூங்காவில் விலங்கினைத் துரத்திச் சென்ற சிறப்பினையும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விருந்தினையும் ஆடலையும் பெரிதும் புகழ்ந்து பேசினார். எனினும், அவர் விருந்து நாட்டினை அவமதித்துப் பேசியதை வன்மையாகக் கண்டித்த திருவாளர் அப்படி ஒருவரும் இலர், இளவரசுக்குரிய பண்பு நலன்களைக் குறைத்துக் கூறியது அவருடைய வாய்ச்சுவைக்காகவும் புலன் நுகர்வுக்காகவுமே என்று வாதாடினார். அறச்சார்பு முடிபு பெறினும், இவர்தம் உரையாடல் ஆளுவோரின் உலகியல் இன்ப நுகர்ச்சிகளின் பகட்டு வெளிப்பாடாகவே இருத்தலை இவ்வசன-கவிதை புலப்படுத்துகிறது.

ஆசான் கற்பனை (Master Figment) என்ற வசன-கவிதையின் தொடர்ச்சியாக ஷாங்லின் பூங்கா (Shang-lin Park) எழுதப்பட்டது. இது பேரரசர் வூ வின் (Emperor Wu) சிறப்புக்களைக் கூறுவதாக அமைந்துள்ளது. பிரபு இன்மை (Lord Nonexistence) மேடைக்கு வந்தார். சிறு அறிமுகவுரைக்குப் பின்னர், அரசப் பூங்காவில் பேரரசர் மேற்கொண்ட வேட்டையாடும் விளையாட்டினைப் பற்றிச் சுடர்விடும் புனைவுகளைச் சொல்லுதற்கு முற்படுகிறார். நிலப்பிரபுக்கள், இளவரசர்களைவிட, இவ்விளையாட்டில் பேரரசர் விஞ்சி நிற்றலைக் கோடிட்டுக் காட்டுகிறார். அந்த நெடும்பாடலை ஒருவாறு தமிழில் தர முயல்கிறோம்.

“இலையுதிர் காலம் ஏகிற்று, குளிர்ப்பருவம்
நெருங்குகிறது,
விண்ணின் மைந்தன் வேட்டைக்குத் தன்
பரிவாரத்துடன் புறப்பட்டான்.

மரகத அணிபூண்ட கொம்பில்லா ஆறு
குதிரைகளால் இழுக்கப்பட்ட
தந்தத்தால் இழைக்கப்பட்ட ஊர்தியில் இவர்ந்து
சென்றான்.
காற்றில் வானவில் கொடிகள் ஆடவும், மேகக்
கொடிகள் அசையவும் பேரரசரின் ஊர்தி
புலித்தோலால் போர்த்தப்பட்டு வரிசைக்கு முன்
சென்றது.
பின்னால் வழிகாட்டிச் செல்லும் தேர்கள், இன்பத்
தேர்கள் தொடர்ந்தன.
[S]பிரபுவேய் உதவியுடன் [N]சுன்சூ கடிவாளக்
கயிறுகளைப் பற்றினான்.
இருமருங்கும் அரசப் பரிவாரங்கள் அலங்கரித்து
வந்தன
படைக்கலம் தாங்கிய நான்கு வரிசைகளில் குறுக்கும்
நெடுக்குமாய்;
முரசுகள் முழங்கின; மணிகள் ஒலித்தன
வேட்டைக் காக அவர்கள் பிரிந்து சென்ற பொழுது.
இடியைப் போல முழங்கின குதிரைகளும்
தேர்களும்;
விண்ணகம் அதிர்ந்தது, மண்ணகம் குலுங்கிற்று.
ஆறுகளும் ஓடைகளும் எல்லைகள் ஆயின,
தாய் மலையே அவர்கள் பார்வைக்கு உரியது.
இங்கும் அங்கும் எல்லாத் திசையிலும்
கலைந்தனர் வேட்டைக்குப் பிரிந்து சென்றனர்.
குன்றுகள் புதர்கள் நோக்கி அவர்கள்
மேகமாய்ப் பறந்தனர்; மழைபோல் இறங்கினர்!
சிறுத்தைகள் பிடிபட்டன உயிருடன்,
முட்டிகளில் பிடிபட்டன ஓநாய்கள்,
கைப்பிடிப்பில் சிக்கின கரடிகள்,
கரிய மான்கள் காலடியில் மிதிபட்டன,
நீள்தோகை மயில் கோழிகள் வலையில் சிக்கின,

வெள்ளைப் புலிகளும் வலையில் வீழ்ந்தன;
பல்வகைத் தோல்களில் உடலை மூடி
ஊக்கம்மிகு குதிரைகளில் ஊர்ந்த படியே
மலையின் அஞ்சுதகு உச்சியிலும் ஏறினர்,
முரடான மலைச் சரிவுகளில் இறங்கினர்.
நூலிழை போன்ற செங்குத்துப் பாதைகளில்
சென்றனர்
பயங்கரப் பாதைகளிலும் பயமின்றிக் கடந்தனர்;
மலைப்பள்ளங்களைக் கடந்தனர், நீரில் நடந்தனர்.
மாயக் குருவிகளை மடக்கிச் சேர்த்தனர்
ஒற்றைக் கொம்பு இரலைமான் வேட்டை
யடித்தனர்
காட்டு விலங்கினை எதிர்த்துத் தாக்கினர்
சிறப்புக் கரடியை ஈட்டியால் குத்தினர்
சொலிக்கும்போர்க் குதிரைகளை மடக்கிப் பற்றினர்
காட்டுப் பன்றிகளைச் சுட்டுக் கொன்றனர்
உயிர்நிலை உறுப்பினைக் குறிபார்த்த கணைகள்
கழுத்தினைப் பிளந்து மண்டையில் ஆழ்ந்தன;
பயனின்றி வில் ஒருபொழுதும் வளையவில்லை.
மணிஒலி கேட்டு விளையாட்டு முடிந்தது.

குறிப்பு: விண்ணின் மைந்தன் - பேரரசர்; S. பிரபுவேய் - Lord Wei. N - சுன்சூ - Sun Shu

அலங்கார வருணனையுடன் வசன கவிதை அதன் தொடக்கத்தைப் போல முடிந்தது. பேரரசரின் உள்ளத்தைப் பாதித்து மனமாற்றம் செய்த குறிப்புடன் இவ்வேட்டை நிகழ்ச்சிப் பாடல் நிறைவு பெற்றது. மாமன்னன் அசோகன் கலிங்கப் போரில் எண்ணற்ற வீரர்கள், குதிரைகள், யானைகள் மாண்டு கிடப்பதைப் பார்த்துப் போரினைத் துறந்தமை போல, பல உயிரினங்களை வேட்டையாடி விருந்து வைத்த பின்னர் பேரரசர் வூ வின் உள்ளத்தில் பெருமாற்றம் தோன்றியது. முடிவாக, அம்மாமன்னன் வேட்டை ஆடிய இடங்களை

எல்லாம் மக்களுக்கு விளைநிலமாக வழங்கும்படி ஆணை இட்டான். இம்முடிபு அறம்சார்ந்ததுதான். ஆனால் உச்ச மறுதலை அல்லது வீழ்ச்சிநிலை (Anti-Climax) என்று சிலரால் கருதப்படுகிறது. இது புதிய விளக்கம் என்று எண்ணிப் பேசப்படும் மட்டமான நிலை (Platitude) என்றும் மறுப்பாளர் சிலரால் கூறப்பட்டது. எங்ஙனமாயினும் வசன-கவிதை ஒரு வருணனைக் கவிதை என்பதற்கு வேட்டை வருணனை ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. திருக்குற்றாலக் குறவஞ்சியில், குளுவன் பல்வேறு பறவைகளைப் பிடிப்பதற்குக் கண்ணி எடுத்துச் செல்லும் நிலை பற்றிய வருணனை நம் நினைவுக்கு வருகிறது. வேட்டைக்குரிய பறவைகளின் பல்வேறு வகைகளை இச்சிற்றிலக்கியத்தில் பார்த்தல் போல், மேலே பார்த்த சீன இலக்கியத்தில் வேட்டைக்குரிய பல்வேறு விலங்குகளின் வகைகளைப் பார்க்கிறோம். கவிஞர் சுசுமாஹிசியாங்-ஜு (Ssu-ma Hsiang-ju)வைப் பின்பற்றித் தோன்றிய கவிஞர் பலரில் பான்கு (Pan Ku), சாங்ஹெங் (Chang Heng) என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் பான்கு (கி.பி.32-92) என்னும் கவிஞர் சிறந்த வரலாற்றறிஞரும் ஆவர். சாங்ஹெங் (கி.பி.78-139) என்பவர் கணிதமேதையாகவும் வானநூற் புலவராகவும் வாழ்ந்தவர். இவர் தாவு மார்க்கத்திலும் ஈடுபாடு கொண்டவர். 'வயலுக்குத் திரும்புக' (Return to the Field) என்ற பாடல் அப்பாலைத் தத்துவம் (Meta-physics) அமைந்ததாகவும் தாவு மார்க்கத்தினைத் தழுவியதாகவும் பாடப் பெற்றுள்ளது.[12]

ஹன் இலக்கிய வகைகளில் வரலாற்று வசனம் குறிப்பிடத்தக்கது. அதனைப் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

4. வரலாற்று வசனம் (Historical Prose)

சுசு மா சீயென் (Ssu-ma Ch'ien) கி.மு.முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். இவர்

எழுதிய வரலாற்றுப் பதிவுகள் (Shih Chi-Historical Records) குறிப்பிடத்தக்க நூலாகும். அரசாங்க வரலாற்றறிஞராகிய இவர் தந்தையின் அரவணைப்பில் வளர்ந்த காரணத்தினால் அரசுக்குரிய நூலகங்களில் தரவு தொகுக்கும் வாய்ப்பு இவர்க்கு எளிதாயிற்று. மேலும் வரலாற்றுக்குரிய தரவுப் பொருள்களையும் நினைவிடங்களையும் இவர் தேடிச் சென்றார். தணியாத ஆர்வமும் தளராத முயற்சியும் உந்து சக்திகளாக அமைந்ததால் இவரால் இந்த வரலாற்றுப் பதிவுகளை எழுத முடிந்தது. இதனை வருங்காலத் தலைமுறையினர்க்கு அழியாத இலக்கியச் சொத்தாகவும் வழங்கியுள்ளார்.

வரலாற்றுப் பதிவுகள்

கி.மு. முதல் நூற்றாண்டில் தொகுத்தெழுதப்பட்ட இந்நூல் நோக்கம், அளவு, அகலம் ஆகிய அனைத்துக் கூறுகளாலும் இதற்குமுன் தோன்றிய வரலாற்று நூல்களையெல்லாம் கடந்து செல்கிறது. பண்டைச் சீன நாட்டின் முழுமையான பொது வரலாறாக இந்நூல் திகழ்தல் முதல் சிறப்பாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து நூலாசிரியர் காலம் வரை (சீன மரபுப்படி) மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறாகக் கருதப்படுகிறது.

இந்நூலில் 130 இயல்கள் (Chapters) உள்ளன. அரச மரபுகள் (Dynasties), பேரரசர்கள் (Emperors), வரலாற்றுக் கால அட்டவணைகள் (Chronological tables) சீன ஆட்சி அரசியல் தொடர்பான பல்வகைக்கூறுகளைப் பற்றிய கட்டுரைகள், நிறுவனங்களைப் (Institutions) பற்றிய செய்திகள், குடும்ப வமிசா வழிகள் (Hereditary families) புகழ்படைத்தோரின் சரிதங்கள் (Biographies of Celebrities) என்பனவும் இவ்வியல்களில் பேசப்படுகின்றன. இந்நூலின் இயல்பாகுபாடுகளும் அமைப்பும் சிறப்பாக உள்ளன. சடங்குகள், இசை, அளவைகள் (Measures),

நாட்காட்டி (Calendar), சோதிடம், பலியிடல், ஆறுகள், வாய்க்கால்கள், பணம், உணவு என்பன பற்றிய விரிவான கட்டுரைகளும் இந்நூலில் அடங்கியுள்ளன.

இளவரசர்கள், அரச தந்திரிகள், படைத்தலைவர்கள், புலமைச் செல்வர்கள், நல்ல அலுவலர்கள், தீய அலுவலர்கள், புரட்சியாளர்கள், கொலையாளிகள், சுற்றும் வீரர்கள், நகைச்சுவையாளர்கள், நடிகர்கள், அரசவை விரும்பிகள், அண்டிப்பிழைப்பவர்கள் ஆகியோரின் வரலாறுகளையும் வரலாற்றுப் பதிவுகளில் காணலாம். ஹன் பேரரசின் புற எல்லையின் வடகிழக்கில் கொரியாவிலிருந்து, தென்மேற்கில் செழுச்சுயன் (Szechuan), குவிசௌ (Kwei Chow), யுன்னான் (Yunnan) ஆகிய பகுதிகளில் வாழ்ந்த ஹன் அல்லாத புற இனங்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.[13]

எனவே, வரலாற்றுப் பதிவுகள் (The Historical Records) சீன வரலாற்றிலும், ஒரு வகையில் உலக வரலாற்றிலும் முதல் நூலாக மதிக்கப்படுகிறது. கிரேக்க வரலாற்றாசிரியர் ஹெரோடோடசு (Herodotus) எழுதிய நூல்களிலும் புளூடார்க்கிலும் (Plutarch), சீன வரலாற்றுப் பதிவுகளில் இடம்பெற்றுள்ள பல கூறுகள் காணப்படவில்லை.[14] சீன வரலாற்றாசிரியர் சுசுமா சீயென் (Ssu-ma Ch'ien) எழுத்துக்கள் கிரேக்க வரலாற்றாசிரியர் எழுத்துக்களைவிட இலக்கியப் பண்புகளிலும் இலக்கியத் தாக்கத்திலும் விஞ்சி நிற்கின்றன. நேரடி எடுத்துரைத்தல், வருணனையின் தெளிவு, உரையாடலைத் திறம்படக் கையாளுதல் என்பன எல்லாம் சேர்ந்து சீன வரலாற்று உரைநடைக்கு ஒப்பற்ற நடையழகினைக் கொடுத்துள்ளன. இவர் வரலாற்றுக் குறிப்புக்கள் நீதி போதனைககளயும் வழங்குவன. இவ்வகையால் சீன வரலாற்றாசிரியர் சுசுமா சீயென் ஒப்பற்ற வரலாற்றாசிரியராகவும் இலக்கியராகவும்

இலங்குகிறர். இவருக்குப் பின் இவரைப் பின்பற்றுவோரும், இவர் போல் எழுதுவோரும் மிகப்பலராவர்.[15]

மேற்கோள் குறிப்புக்கள்

1. An introduction to Chinese Literature, p.45.
2. Ibid, p.46.
3. Ibid.
4. Ibid, p.47.
5. Literature and The Arts, p.6.
6. An Introduction to Chinese Literarure, pp.47-48.
7. Ibid, p.49.
8. Ibid.
9. Ibid. pp.50-51.
10. Ibid, p.51.
11. Ibid, pp.52-53.
12. Ibid.p.54.
13. Ibid, p.55.
14. Ibid.
15. Ibid.

12. சீன இலக்கியம்

(கி.பி.220-618)

ஹன் மரபு ஆட்சி முடிவுக்கு வந்து (கி.பி.220), தங்கு அரசு மரபின் (Tang Dynasty) ஆட்சி (கி.பி.618-906) தொடங்குவதற்கு முன் இடைப்பட்ட நானூறு ஆண்டுகளில் அரசியல், சமூகவியல், பண்பாட்டியல் தொடர்பான சீர்குலைவு சீன நாட்டில் ஏற்பட்டது. மேலும், ஹூணர்கள் (Huns), துருக்கர்கள் (Turks), துங்குகள் (Tungus), தோபர்கள் (Toba) ஆகிய அயலார்கள் வட சீனத்தில் தலைதூக்கி நின்றனர். இக்காலப் பகுதி சீன மக்களுக்குத் துன்பியல் சூழ்ந்த இருண்ட காலம் (An age of darkness and afflicition) என்று வரலாற்றாசிரியர் கூறுவர்.[1] இத்தகைய சூழலில் அரசியல் நிலைத்தன்மை, சமுதாயக் கட்டொழுங்கு, நீதியை மதித்தல் முதலிய கன்பூசிய இலட்சியங்கள், இயற்கை மற்றும் அமர வாழ்வு பற்றிப் பேசும் தாவு மார்க்க இலட்சியங்களுக்கும், மறு உலக நாட்டம் கொண்ட பௌத்த இலட்சியத்திற்கும் வழிவிட்டன. இருண்ட காலத்திலும் கூட சிறந்த இலக்கியங்கள் சிலவேனும் தோன்றியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இக்காலப் பகுதியில் (கி.பி.300-700) சிற்பம், ஓவியம் ஆகியவற்றில் பௌத்தத்தின் தாக்கம் சிறப்பாகக் காணப்பட்டது. இதே காலப் பகுதியில் தத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் தாவு மார்க்கச் சிந்தனை (Taoist thought) ஊடுருவியது. இந்நெறிக்குரிய புனைவியல் பண்பும் கவிஞர்களின் பாடலில் படிந்துள்ளது.

கவிஞர்கள் பலரும் தாவு மார்க்கத்தினைப் பின்பற்றினர். இவர்களில் மூங்கில் தோப்பின் முனிவர் எழுவர் (Seven Sages of the Bamboo Grove) என்பவர்கள் சிறப்பாகச் சுட்டுதற்கு உரியவர்கள். இவர்கள் கவிஞராக மட்டுமன்றித் தத்துவ ஞானிகளாகவும் விளங்கியவர்கள். அரசியலிலிருந்து விடுபட்டு இயற்கையின் அமைதியிலும் மதுக்களியில் மறத்தலிலும் இவர்கள் புகழ் அடைந்தனர். இவ்வெழுவரில் யூவன் சீ (Yuan Chi) என்பவர் இவர்களின் தலைவராக விளங்கினார். இவர் கி.பி.210-263இல் வாழ்ந்தவர். இவர் "என்நெஞ்சத்தினின்றும் பாடுகிறேன்" (Yung-huai Shih - Singing from My Heart) என்ற தலைப்பில் எண்பத்திரண்டு பாடல்களைப் புனைந்துள்ளார். இப்பாடல்களில் ஓசை நலமும் உருவகக் கதையும் (Allegory) அமைந்து இவருடைய உணர்வுகளை வெளிப்படுத்துதல் தனிச்சிறப்பு. இவர் கன்பூசியத்தினின்றும் தாவு நெறிக்குத் தாவியவர் என்பதற்குப் பின்வரும் இவர் பாடல் நேர்முகச் சான்றாக உள்ளது.[2]

"பல ஆண்டுகட்கு முன் பதினான்கு, பதினைந்து வயதிருக்கும். என் ஈடுபாடு பாட்டினையும் வரலாற்றையும் நோக்கியது. கரடுமுரடாக உடுத்தியிருப்பினும் இனிய முத்துக்கள், மரகதங்களில் மகிழ்ந்தேன். [s]யென் மின் தரத்திற்கு வாழ்ந்திட விரும்பினேன். விளையாட்டரங்கினைத் திறந்தேன், சுற்றுப் புற வனங்களை உற்றுநோக்க; மலையின் உயரங்களுக்கு ஏறினேன், நான் மதிக்கும் பெரியோரைப் பார்ப்பதற்கு. எனினும், மலைப் பாறைகளைக் கல்லறைகளும் மணல்மேடுகளும் மூடியிருந்தன. எண்ணற்ற தலைமுறைகள் எல்லாம் சமகாலத்தவராக இருக்கின்றனர். ஆயிரம் இலையுதிர் காலங்களுக்கும் பத்தாயிரம் ஆண்டுகளுக்கும் பின்னர்ப் புகழ் பெற்ற பெயராக வருவது என்ன?

ஆசான் [N]சீயென் மென்னால் நான் மெய்யொளி பெற்றேன். என் பழைய இருளுக்காக என்னையே யான் பரிகசிக்கிறேன்."

குறிப்பு : பாட்டு - Classic of Poetry, வரலாறு - Classic of History. [S]யென்மின் - Yen Min. [N]சீயென் மென் - Hsien - men. முத்துக்கள், மரகதங்கள் என்பன அழகிய, விலைமதிப்பற்ற மேலான சிந்தனைகளைக் குறிக்கும்.

யென் யூவன் (Yen Yuan), மின் சுன் (Min Sun) என்பார் இருவரும் கன்பூசியசின் சீடர்கள்; வறுமையிற் செம்மையும், கல்வியில் ஈடுபாடும் கொண்டவர்கள்.

ஆசான் சீயென் மென் (Master Hsien-men) என்பவர் புகழ்பெற்ற தாவு நெறியாளர், அழியாச் சிறப்பினர். தாவு நெறிசார்வோர் எல்லாம் வியந்து பாராட்டுதற்குரியவராகச் சுடர்விட்ட ஞானி.

தாவு மார்க்கத்து ஞானி தமிழ்நாட்டுச் சித்தரைப் போன்றவர். நல்லாடை உடுத்தமாட்டார். அவர்கள் சொற்கள் முத்துக்களாகவும் மணிகளாகவும் போற்றப் பெற்றன. இயற்கைச் சூழலைக் கண்டு இதயம் குளிர்ந்து இன்புற்றவர். மலை உச்சிகளில் வாழும் ஞானிகளைக் காணச் செல்பவர். குருவுக்கு முதலிடம் தந்தவர். மெய்ஞ்ஞானம் பெற்ற பின் பழைய இருள் நிலையினைப் பார்த்துத் தாங்களே நகைத்துக் கொண்டவர்கள் என்பது மேலே பார்த்த யூவன் சீ (Yuan Chi) பாடலின் சாரக் கருத்தாகும். மதுக்கனியில் புற உலகினை மறத்தல் என்ற பழக்கம் தமிழ்ச் சித்தரிடமும் தாவு ஞானியிடமும் காணப்படுதல் சுட்டத்தக்கது. மதுக்களி என்று அவர்கள் எண்ணியது ஞானப்பாலாகக் கொள்ளுதற்கு உரியது. உண்மையாகவும் அவர்கள் மது அருந்தியிருக்கலாம். எப்படியாவது உலகப் போக்கினை மறத்தலை அவர்கள் விரும்பியுள்ளனர் என்பது தெளிவு.

கவிஞர்களிடையே மதுப்பழக்கம் உண்டு. இதனைப் புனைவியல் போக்காக (Romantic trend) கருதுகின்றனர். கவிஞர் சாவோ சீ (Ts'ao Chih) என்பவரின் தந்தையும் வேய் அரசின் (Wei Kingdom) நிறுவனரும் ஆகிய சாவோ சாவோ (Ts'ao Ts'ao) என்பார் இத்தகைய புனைவியல் பண்புடன் பாடிய சீனப் பாடலின் ஆங்கில ஆக்கம் இதுதான்:

"Brief indeed is a man's life!
So, let's sing over our wine."[3]

இதனைத் தமிழில் இவ்வாறு வழங்கலாம்.

"உண்மையில் மனித வாழ்வு குறுகியது!
எனவே மதுவுண்டு மகிழ்ந்து பாடுவோம்."

இதனால் தாவு நெறிக் கவிஞரின் வாழ்வியலும் புலனாகிறது. உமர்கய்யாம் என்ற பாரசீகக் கவிஞரின் கருத்தும் இதுவே.

மூங்கில் தோப்பின் ஏகாந்த இடத்தில் இருந்தபடி முனிவர் எழுவரும் இசைக்கருவியை மீட்டிப் பாடினர், கவிதை புனைந்தனர், மது பருகினர். இப்படி, கவிஞர்களின் இனிய நண்பர்களாக இசையும் மதுவும் விளங்கிய சீன மரபின் (Chinese Tradition) தொடக்கம் அமைகிறது. இவ்விரண்டிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுவதால் தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்ளுதலும், துன்ப நீக்கமும், அன்றாட வாழ்வில் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பிச் செல்லுதலும் அவர்களுக்கு எளிதாகின்றன. இவையாவும் புனைவியல் கூறுகளே (Romantic Aspects).

மற்றொரு முனிவர் லீயு லிங் (Liu Ling) என்பவர் கி.பி.221-300 என்ற காலப் பகுதியில் வாழ்ந்தவர். இவரும் மதுப்பிரியர். இவர் மனைவிக்கு மது என்றால் அருவருப்பு, வெறுப்பு. ஆனாலும் மிகவும் திறமையாகத்

தன்மனைவியை வசப்படுத்தி, மதுப்பழக்கத்தைத் துறக்கப்போகும் வேளையில் கடவுளர்க்குப் புலாலும் மதுவும் வைத்துப் படைத்தல் வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அம்மையாரும் கணவர் சொற்படி எல்லாம் செய்து வைத்தார். வானக ஆவிகளுக்காக வைக்கப்பட்டிருந்த மது அனைத்தையும் அவசரம் அவசரமாக விழுங்கிவிட்டார். இக்கவிஞர் இந்த அனுபவத்தினை "Hymn to the Virtue of Wine" என்று பாடியுள்ளார். Hymn - என்ற சொல் கடவுளுக்குப் பாடப்படும் பாசுரத்தினைக் குறிப்பது. இக்கவிஞர்க்குக் கள்ளே கடவுளாக மாறிவிட்டார். மதுவை Virtue என்று புண்ணியப் பொருளாகக் கவிஞர் போற்றியுள்ளார். இப்பழக்கமும் தாவு நெறியாளரிடம் தழைத்திருந்தது.

நடைமுறை வாழ்விலிருந்து தப்புதற்கு இன்பமருளை இசையும் தரவல்லது என்று எண்ணினர். அறிவினை விட உணர்வினைத்தான் இசைதொடும் என்பதால் இவ்வாறு கருதினர். யூவன் சீ (Yuan Chi) சித்தார் (Zither) நரம்பிசைக் கருவியை மீட்டி இசைப்பதில் வல்லவர். இவர் சமகாலத்தவராகிய ஹிசி கங் (Hsi K'ang - கி.பி.223-262) மற்றொரு இசைக்கருவியை (Virtuoso) வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர். இவர் தன் இசைக்கருவியைப் பற்றி எழுதியுள்ள வசன கவிதை சிறப்புடையது. இயற்கையின் குரல் ஒலியாக இசையினை இவர் போற்றுகிறார். பிரபஞ்சத்தின் ஒத்திசைவுடன் இசையின் ஒத்திசைவு ஒன்றுபட்டது என்பது இவர்தம் கருத்தாகும். சித்தார் கருவியைப் பொறுத்தமட்டில், வல்லவர் அதனை வாசித்தால் நெஞ்சத்தினையும் உயிரையும் அசைக்க வல்லது இசை; ஒடுங்கியுள்ள உணர்ச்சிகளுக்குப் பேச்சு வடிவம் தரவல்லது இசை. ஹிசி கங்கின் (Hsi K'ang) வசன கவிதையின் நிறைவு[4] இங்கே தமிழாக்கம் பெறுகிறது:

"சாந்தமே சித்தாரிசையின் சக்தி,
அதன் ஆழம் அளக்க ஒண்ணாதது;
தூயது உடம்பில், நெஞ்சப் பெருமிதம்,
அதன் உயரங்கள் அடைதற்கு அரியன.

நல்ல இசைக்கருவிகளும் கலைத்திறக் கரங்களும்
ஒருங்கே இவ்வுலகில் காணப் படுமோ?
அதன் பட்டு நரம்புகள் ஒத்திசைவில் இணைவன;
ஏனைய கலைகளை இக்கலை விஞ்சிடும்.

இசையினைப் புரிந்தவர் எண்ணிற் சிலரே,
அதனைக் களஞ்சியப் படுத்தும் திறலோர் யாரே?
இனிய சித்தாரிசையில் முழுமை பெற்ற
[s]மாமனிதரைத் தவிர யாருமே இலரே."

குறிப்பு : [s]மாமனிதர் - Superior Man. பேரரசரைக் குறிக்கும் சொல். அவர் சித்தார் இசைக்கலையில் வல்லவர், புரவலருமாவர். (L. Zither < Gr.Kithara).

இக்காலப் பகுதிக்குரிய இலக்கியங்களில் காணப்படும் புனைவியற் கூறுகளில் மது, இசை ஆகிய இரண்டினையும் சார்ந்து இயற்கையின் செல்வாக்கு காணப்படுகிறது. இயற்கையின் ஈடுபாட்டினால், மலையும் ஓடையும் (Mountain and Stream) என்ற கவிஞர் குழு உருவாகியது.

வடசீன நாட்டினை ஹூணர் முதலிய காட்டுமிராண்டி இனத்தவர் ஆக்கிரமித்துக் கொண்டதால் அங்கு வாழ்ந்த சீன அறிஞர்களை யாங்குத்சே (Yangtze) ஆறு பாயும் தென்சீனத்திற்கு விரட்டிவிட்டனர். தென்சீனத்தின் இயற்கைக் காட்சிகளின் கண்ணைக் கவரும் பேரழகு, கவிஞர்கள் மற்றும் கலை உள்ளம் கொண்டவர்களின் வாழ்விலும் செயற்பாடுகளிலும் தெளிவான பதிவினை ஏற்படுத்தியது. அதன்பிறகுதான், சீனக் கலையில் இயற்கைக் காட்சிகளை வரைதல் ஒரு

முக்கியப் பகுதியாக விளங்கியது. அவ்வாறே, சீன இலக்கியத்தில் இயற்கைப் பாடல் (Nature Poetry) முதன்மை பெற்றது.

இக்காலப் பகுதியின் சீன இலக்கியத்தில் சிறந்த இயற்கைக் கவிஞராகத் திகழ்ந்தவர் ஹிசியே லிங்-யூன் (Hsieh Ling-Yun) ஆவர். இவர், கி.பி.385-433இல் வாழ்ந்தவர். அழகு கொலுவீற்றிருக்கும் இயற்கைக் காட்சிகள் இலங்கும் இடங்களுக்கு எல்லாம் இவர் பயணம் சென்றவர். அரசுப் பணியில் உயர் அலுவலராக இருப்பினும் இவருடைய நாட்டம் இயற்கையினை நோக்கியே சென்றது. வாரக் கணக்கில் மலைப்பாறைகள், அருவிகள் ஓடும் பள்ளத் தாக்குகள், குகைகள் ஆகிய இயற்கைகளில் மறைந்திருக்கும் பேரழகு,சலிப்பின்றித் தேடிச் செல்லுபவர்க்கு மட்டுமே கிட்டுவதாகத் தன்னை வெளிப்படுத்தி கொண்டது. ஹிசியே லிங்-யூன் ஒரு மௌனப் பயணி அல்லர். தன்பரிவாரத்துடன் அவர் போகும் பொழுது கொள்ளையர் கூட்டமோ என்று ஐயுறப்பட்டனர்! இன்ப நொடிகளை ஊமையாக இருந்து கொண்டு துய்க்காமல், ஒலிநலம் மிக்க சொற்களில் தன் இன்ப அனுபவங்களைப் பாடி மகிழ்ந்தவர். இதன் பயனாக அவர் பாடல்கள் யாவும் பயண இலக்கியம் போலப் பயிலப்பெற்றன. இதன் தலைப்புக்கள் யாவும் அவர் பயணத்தின்போது சுவைத்துணர்ந்த காட்சிகளை நினைவு கூர்வனவாக அமைந்தன. தன்வீட்டுத் தோட்டத்திலேயே, இயற்கையின் மாறுதல் நிலைகளின் கவர்ச்சிக் கவினையும் கண்டு களித்தனர்.[5] பின்வரும் பாடல் ஒரு சான்று:

"காத்திருக்கும் குளிர்காலக் காற்றினை வசந்தம்
விரட்டுகிறது,
பழைய இருளைப் புதிய ஞாயிற்றின் கதிர்கள்
மாற்றுகின்றன,

நீர்நிலையின் கரைகள்மேல் வசந்தப் புற்கள்
வளர்கின்றன
"வில்லோ செடிகளின் கவர்ச்சியழகு பறவைகளைப்
பாடச் செய்கிறது".

("Willow - மெல்லிய கிளைகளையுடைய அலரி போன்ற புதர்ச்செடி. இப்பாடல், "Mounting the Pavilion Over the Pond" என்ற ஆங்கில ஆக்கத்தின் தமிழாக்கம்).

ஹன் சகாப்தத்தின் பின் இயற்கை ஈடுபாடும், ஏனைய கவிதைப் போக்குகளும் தாவோ சீயென் (T'ao Ch'ien, இவருக்கு தாவோ யூவன் மிங் T'ao Yuan - ming என்றும் பெயர் உண்டு) படைப்புக்களில் உச்ச நிலையினை எட்டின. இவர் கி.பி.365-427 என்ற காலப் பகுதியில் வாழ்ந்தவர். இவர் பாடல்களில் தாவு மார்க்கத்துறவியின் வாழ்வியல் நோக்காகிய இசை மற்றும் மது ஆகிவற்றின் வேட்கை இணைந்து காணப்படுதல் குறிப்பிடத்தக்கது. மேலும், இயற்கையின் அதிசய இன்பங்களைப் பற்றிய உணர்வும் இவர் பாடல்களில் சிறப்பிடம் பெற்றது. இதனால், தோட்டம் மற்றும் வயல் கவிஞர் (Poet of the Garden and field) என்ற அடைப்பெயர் பெற்றார். இவர் எழுத்துக்களினால் இவர் எங்ஙனம் நிலத்தினை உழுது வயல்களில் களை எடுத்தார் என்பதும் அறுவடை செய்தார் என்பதும், தன் உழைப்பினால் பெற்ற கூலங்களையே உண்டனர் என்பதும், தான் தயாரித்த திராட்சை மதுவைப் பருகினர் என்பதும் தெளிவாகப் புலனாகின்றன.

தாவோ சீயென் (T'ao Ch'ien) பல்வகை ஆர்வமும் படைத்த பாவலராவர். தாவு மார்க்கத்தவர். அவர் பாடலில் தத்துவ உலகினை நோக்கி அவர் மேற்கொண்ட கற்பனைப் பயணமும், அதிலிருந்து மீண்டதும் வழங்கிய தாவு நெறிக்குரிய அறிவுரையும் பொதிந்துள்ளன.[6] அப்பாடலின் தமிழாக்கம் இது:

"அளவுக்கு மீறிய சிந்தனை உயிருக்கு ஆபத்து;
விதி எங்கு செலுத்துகிறதோ அங்குநாம்
செல்லுவோம்.
நில்லாமல் ஓடும் நீர்ப்பெருக்கின் அலைகளின்மேல்
சவாரி போவோம்
மகிழ்ச்சியும் இன்றி, அச்சமும் இன்றி.
வாழ்வு முடியத்தான் வேண்டுமெனில் முடிந்து
போகட்டும்;
அதுபற்றிக் கவலைகள் கொள்ளத் தேவையில்லை."

எனவே, விதியின்மேல் நம்பிக்கை, மாற்றம் என்பதுதான் (Constant Flux) உண்மை, கவலையற்ற மனம் - இவை தாவு நெறியினர்க்கு மட்டுமன்றிப் பௌத்த நெறியாளர்க்கும் உரியவை யாகும்.

தாவோ சீயென் மதுப்பிரியர். அதனால் அவர் இவ்வாறு பாடுகிறார்:[7]

"என்வாழ்நாள் எல்லாம் மதுவைத துறந்திலேன்;
குடித்தலை நிறுத்தினால் இன்பஉணர்வு எனக்கு
இல்லை.
மாலையில் நிறுத்தினால் அமைதியான தூக்கம்
இல்லை;
விடியலில் நிறுத்தினால் எழுதல் இயல வில்லை."

இந்தப் பலகீனம்தான் இக்கவிஞர்க்குப் பலமாக மாறியது. தான் தனியே குடித்துப் பெறும் இன்பத்தினைவிட, நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாருடன் கலந்து குடிப்பதாலும் இன்பம் பெற்றவர். இதனால் அவரால்பாட முடிந்தது. தன் நெஞ்சம் திறந்து பாடும் கவிஞராக இவர் விளங்கினார்.

யாப்பியல் கவிஞர்

மூன்று பேரரசுகளின் காலத்திலும் நெடிது வாழ்ந்த யாப்பியல் கவிஞர் ஷென்யோ (Shen Yo) என்பவர்

(கி.பி.441-513) உயர் பதவியில் இருந்த பொழுதும் கவிஞர்களுக்கும் திறனாய்வாளர்களுக்கும் புரவலராகத் திகழ்ந்தவர். இவர் வரலாற்றினைப் படிக்கும் பொழுது சோழப் பேரரசர்கள் மூவர் காலத்திலும் கவிச்சக்கர வர்த்தியாக ஒளி வீசிய வரலாற்றுக்கவிஞர் ஒட்டக்கூத்தரின் நினைவு நமக்கு எழுதல் இயல்பே. இவர் எழுதிய நான்கு நாத அட்டவணை (The Table of Four Tones) என்ற புகழ் பெற்ற யாப்பிலக்கண நூலினால் இவர் பரவலாக அறியப்பெற்றவர். நாதங்களின் வேறுபாடுகளை நுனித்தறிந்து அவை பாடலில் பயின்று வருதற்குரிய இலக்கண விதிகளை இவர் வரையறை செய்தனர். சீன யாப்பியலின் இரகசியம் இன்னதென்று தெரியாமலேயே தமக்குமுன் ஆயிரம் ஆண்டுகளாகக் கவிஞர்கள் பாப்புனைந்து வந்தனர் என்று இவரே குறிப்பிட்டுள்ளார். அவர் கண்டறிந்த நால்வகை நாதங்களையும் நோக்குவோம்.

நால்வகை நாதங்கள்[8]

1. பிங் (P'ing) அல்லது சம நாதம் (Even tone) முதல்வகை ஆகும். ஒரு சொல்லினைத் தெளிவாக உச்சரிக்கும் பொழுது, அதன் சுருதி ஒலி (Pitch) சம அளவில் (-ஒரே அளவில்) இருப்பது பிங் அல்லது சமநாதம் எனப்படும்.

2. ஷங் (Shang) அல்லது எடுத்தல் நாதம் (Rising tone). ஒரு சொல்லினை உச்சரிக்கும் பொழுது, அதன் ஓசை ஏற்றத்தாழ்வுகளினால் (Intonation) உயர்தல் ஷங் அல்லது எடுத்தல் நாதம் எனப்படும்.

3. சூ (Ch'u) அல்லது படுத்தல் நாதம் (Falling tone). ஒரு சொல்லினை ஒலிக்கும் பொழுது, அதன் ஓசை மெல்ல மெல்ல குறுகுதல் சூ அல்லது படுத்தல் நாதம் எனப்படும்.

4. ஜூ (Ju) அல்லது நுழை நாதம் (entering tone). ஒரு சொல்லினை ஒலிக்கும் பொழுது அதன் ஓசை திடீரெனத் தடைப்படுத்தப்படுதல் ஜூ அல்லது நுழைநாதம் எனப்படும்.

ஓரசை இயல்புடைய சீனமொழி (Monosyllabic Chinese)யின் இயல்பு, எடுப்பொலிகளில் (accents) அழுத்தம் கொடுத்தற்கு இடம் தருவதில்லை. எனவே, ஒரே ஒலியுடைய சொற்களின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவதற்கு மேலே கூறப்பட்ட நால்வகை ஒலிவேறுபாடுகள் பயன்படுகின்றன. மொழிப் பயிற்சி இல்லாதவரும் ஓசை வேறுபாட்டினைக் கூர்ந்து கேட்காதவரும் ஆகிய சீனர்களுக்குக்கூட ஒலிப்பின் நுண்ணிய வேறுபாடு உணராநிலை ஏற்படுதல் உண்டு. இந்நிலையில் இம்மொழி பயிலும் அயல்மொழியாளரின் நிலை சொல்லத் தேவையில்லை. ஷென்யோவின் நாதங்கள் கண்டுபிடிப்பு சீனச் செய்யுள் இலக்கியத்தினைப் பயில்பவர்க்குப் பேருதவியாக உள்ளது.

நாட்டார் பாடல்கள் அல்லது நாட்டுப்புறப் பாடல்கள் (Folk Songs)

அரசவைப் புலவர்களும் அறிஞர்களும் அழகுபடுத்தப்பட்ட இலக்கியப் பாக்களைப் புனைவதில் ஈடுபட்டிருந்த வேளையில், பொதுமக்கள் முற்கால ஹன் காலத்து மரபினைப் பின்பற்றி எளிய நாட்டார் பாடல்களைப் படைக்கத் தொடங்கினர். கி.பி.300-600 என்ற காலப் பகுதிக்குரிய நாட்டார் பாடல்களை, அரசியல் பிரிவு அடிப்படையில் தென்பகுதிக்குரியவை, வடபகுதிக்கு உரியவை என்று இருபெரும் பிரிவுகளாகப் பிரித்தல் கூடும்.[9]

சீன நாட்டின் வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் அரசியல், பொருளாதார, பண்பாட்டு அடிப்படையில் வேறுபாடுகள் இருந்தமையால், பல்வேறு பகுதிகளில்

இருந்து திரட்டப்பட்ட நாட்டார் பாக்களிலும் வேறுபாட்டு இயல்புகள் காணப்பட்டன. தென்சீன நாட்டார் பாடல்களில் அடிக்கருத்து குறுகலாகவே இருந்தது. காதல் இன்பங்களையும் பிரிவுத் துன்பங்களையுமே அப்பாடல்கள் பெரும்பான்மையும் மையப்படுத்தின. நிலமானியச் சமுதாயத்தில் (Feudal society) வாழ்ந்த பெண்களின் பல்வகைப்பட்ட உணர்வுகளுக்குக் குரல் கொடுப்பனவாக அப்பாடல்கள் விளங்கின. சமுதாயத்தால் ஒடுக்கப்பட்ட அப்பெண்கள் கொடுமைகளை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அற்றவர்களாகவே இருந்தனர். இப்பாடல்கள் மென்மையாகவும் பட்டை தீட்டப்பட்டவையாகவும் உள்ளன.[10]

வடசீன நாட்டின் நாட்டார் பாடல்களின் தன்மையும் பொருண்மையும் வேறுபட்டவை. தொடர் போரினாலும், பல்வேறு இனக்குழுக்களின் கலப்பினாலும் நாட்டார் பாடல்கள் வாழ்வியலைப் பற்றியும் சமுதாயம் பற்றியும் அகலமான காட்சிகளை அழகுடன் வழங்கின. நியாயமற்ற போர்கள், மக்கள் படும் துயரங்கள் ஆகியவற்றை மையப் பொருளாகக் கொண்ட நாட்டார் பாடல்கள் மிகுதி ஆகும். மூலன் கதைப்பாடல் (The Ballad of Mulan) சிறந்த எடுத்துக்காட்டு. இப்பாடல் முன்பு பார்த்த 'ஃபொனிக்சுப் பறவையின் தென்கிழக்குப் பயணம்' (Flight of the Phoenix to the Southeast) என்ற கதைப்பாடலுடன் ஒப்பிடத்தக்கது.

மூலன் கதைப்பாடலின் தலைவியாக அமைபவள் ஒரு வீரப் பெண்மணி. அவள் பெயர்தான் மூலன் ஆகும். இவள் ஆண்வேடம் பூண்டு தன் தந்தைக்கு மாற்றாகப் படையில் சேர்கிறாள்; ஆயிரக்கணக்கான மைல்கள் பயணிக்கிறாள்; நூற்றுக்கணக்கான போர்க்களத்தில் போரிடுகிறாள். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் வாகை சூடித் தன் சொந்த ஊருக்குத் திரும்பும் வரை

அவள் ஒருபெண் என்பது யாருக்கும் தெரியாது. அவள் கதைப்பாடலின் பின் பகுதியைக் காண்போம்:

"தந்தையும் தாயும் தம் மகளின் திரும்புகையினைக்
கேட்டனர்,
நகரச்சுவர்களுக்கு வெளிப்புறம் போயினர்,
கைகொடுத்து அவளை அழைத்துவர.
தமக்கை தன்தங்கையின் திரும்புகையினைக்
கேள்வியுற்றாள்,
கதவுக்குமுன்னால் செந்நிறம் ஊட்டிய கன்னமும்
உதடும் கொண்ட அவள் அருகில் சென்றாள்.
தம்பியோ தன் தமக்கையின் திரும்புகையினைக்
கேள்வியுற்றான்,
தீட்டிய கத்தியை ஒலித்தபடியே பன்றி, ஆடுகளை
நோக்கிச் சென்றான்.
கிழக்கில் உள்ளஎன் அறையின் கதவினைத்
திறக்கிறேன்;
மேற்கில் உள்ளஎன் அறையின் படுக்கையில்
அமர்கிறேன்.
என் போர்க்கால உடையை வெளியே கழற்றினேன்,
என் பழங்கால ஆடையை மீண்டும் உடுத்தினேன்.
சன்னலைப் பார்த்து என் கொண்டல் முடியை
நீவுகிறேன்;
கண்ணாடியைப் பார்த்து மஞ்சள் துகளால்
(நெற்றியை) அலங்கரித்துக் கொள்ளுகிறேன்.
கதவுக்குச் செல்கிறேன் உடன்உண்டவர்களை
வரவேற்பதற்கு,
அவர்கள் அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர்;
பன்னிரண்டு ஆண்டுகள் அவளுடன் போர்நடை
புரிந்திருப்பினும்
மூலன் ஒருபெண் என்று அவர்கள் அறிந்திலர்.
ஆண் முயலுக்கு எழும்பிக் குதிக்கும் கால்கள் உண்டு,
பெண் முயலுக்கு மங்கலான கண்கள் உண்டு;

தரையின்மேல் அவ்விரண்டும் அருகருகில்
நடக்கின்றன
எதுஆண்? எதுபெண்? ஒருவரும் சொல்ல
முடியவில்லை"

வீரப்பெண்மணியின் வியக்கத்தக்க அருஞ்செயல்களை இந்த வடசீன நாட்டுப்பாடல் புலப்படுத்துகிறது. வீரதீரச் செயல்களால் தென் சீனமக்களின் நெஞ்சில் நீங்கா இடம்பெற்ற மூலன் கதைப்பாடல் பல நூற்றாண்டு காலமாக மக்களால் வேண்டப்பட்ட பாடலாக விளங்கியுள்ளது. இன்றும் பல சிற்றூர்களில் வாழும் குடும்பங்கள் இக்கதைப்பாடலை மனப்பாடமாகச் சொல்லும் அளவிற்குச் சிறப்புப் பெற்றுள்ளது.[11]

தன்னை ஒரு ஆணாகவே மதித்து, உடுத்தி, போரிட்டு நாட்டிற்கும் வீட்டிற்கும் புகழ் சேர்த்த இப்பெண்மணியின் வரலாறு புறநானூற்று மறக்குடி மடந்தையரின் வீரவரலாற்றுடன் ஒப்பிட்டு உணர்ந்து மகிழத்தக்கது. அல்லியரசாணிமாலை என்னும் கதைப்பாடலும் (Ballad Poetry) இங்குச் சுட்டுதற்கு உரியது. பாவேந்தர் பாரதிதாசன் படைப்புக்களிலும் வீரமங்கையரின் சாகசங்கள் சொல்லோவியம் செய்யப்பெற்றுள்ளன.

தென்சீனப் பகுதியினை ஆட்சி செய்த சீன அரச மரபினர்க்கு நன்கிங் (Nanking) என்பது தலைநகரமாக விளங்கியது. இது வூ மாவட்டத்திற்கு (Wu District) உரியது. இத்தலைநகரில்தான் சூயே (Tzu-yeh) பாடல்கள் முதன்முதல் பாடப்பட்டன. இப்பாடல்கள் யாவும் அளவினாற் சிறியவை. இவை தன்னுணர்வுப் பாடல்கள் (Lyrics). இவற்றைச் சூ-யே (Tzu-yeh) என்ற பெயருடைய பெண்கவிஞர் பாடியவர் என்று பொதுவாகக் கூறப்பட்டது. ஆனாலும், சீன இலக்கிய வரலாற்றறிஞர்கள், இப்பெயரில் கவிஞர் ஒரு காலத்திலும்

இருந்திலர் என்றும் இப்பாடல்கள் யாவும் பெயர் அறியப்படாத ஒருவரால் பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் எண்ணுகின்றனர். தென்சீன நாட்டின் நுண்ணறிவுதான் அழகிய இப்பாடல்களின் தொகுப்பினைப் படைத்திருத்தல் வேண்டும் என்று கருதப்படுகிறது. இப்பாடல்களில் அவல உணர்ச்சி மேலோங்கியுள்ளது. இவ்வகைகளில் இப்பாடல்கள், பாடற்பனுவலில் (Classic of Poetry) காணப்படும் காதற் பாடல்களினின்றும் வேறுபடுகின்றன. தென்சீனத்தின் உணர்வு நிலையும் மனப்பான்மையும் வடசீனத்தினின்றும் வேறுபட்டவை.

தென்சீன நாட்டார் பாடிய நூற்றிருபத்தைந்து பாடல்கள் பேணிக்காக்கப்பட்டன. இவற்றுள், பெரும் சூ-யே பாடலை (Big Tzu-Yeh-song) இத்தொகை இலக்கியத்திற்கு ஓர் அறிமுகமாகக் கொள்ளலாம்.[12] அப்பாடலின் சாரம்:

> *"பல நூறு பாடல்கள் உள்ளன அவற்றுள்*
> *சூ-யே மிகவும் இரக்கம் வாய்ந்தது.*
> *தெளிந்த குரலில் பெருமிதப் பொலிவுடன்*
> *இப்பாடல் வெளிப்படை யாக, இணக்க மாக,*
> *தொடர்ச்சி யாகச் சொல்லிச் செல்வது."*

தெளிந்த குரல் (Clear voice) என்ற தொடராற்றலினால், கருவி இசை இல்லாமல் வாய்ப்பாட்டாகவே வூ வட்டார மக்களால் இந்நாட்டார் பாடல்கள் பாடப்பட்டு வந்தவை என்ற கருத்தினைக் குறிப்பிடுவதாகச் சீன இலக்கிய அறிஞர்கள் கருதுகின்றனர். இத்திறத்தினால், தென்சீன நாட்டார் பாடல்கள் புதிய இசைத்துறைப் பாடல்கள் (New Music Bureau Poems) என்று சிலவேளைகளில் அழைக்கப்படுகின்றன. வடசீன நாட்டார்க்குரிய பழைமைமிக்க இசைத்துறைப் பாடல்கள் (Old Music Bureau Poems) கருவி இசை தொடரப் பாடப்பட்டு வந்தவை ஆகும்.

காதல் கொண்ட கன்னிப் பெண்ணின் நெஞ்சத் துடிப்பினைத் தென்சீன நாட்டார் பாடல்கள் ஆகிய சூ-யே (Tzu-Yeh) வெளிப்படுத்துகின்றன.[13]

"இரவு முழுமையும் தூங்க முடியவில்லை;
எவ்வளவு பளபளப்பு எழில்நிலா ஒளிதான்!
என் காதலன் குரலைக் கேட்டதாகத் தோன்றியது.
வறிதே விடையிறுத்தேன், 'ஆம்' என எதிரொலித்தது."

இப்பாடலில் காதல் வயப்பட்ட காரிகையின் மனநிலை புலப்படுத்தப்பட்டது. காதல் மீதூரும் காலத்துத் தூக்கம் வாராமை என்பது சீனப் பெண்ணுக்கு மட்டுமன்று சங்க அகப்பாடலில் வரும் பெண்ணுக்கும் அப்படித்தான். "அது கொல் தோழி காம நோயே .... கண்பாடு ஒல்லாவே" (குறுந்.5) என்ற பாடல் இங்கு எண்ணுதற்கு உரியது.

காதலால் சலனப்படும் காரிகை இன்னொருத்தியின் உணர்ச்சி வெளிப்பாடாக அமைந்த பாடலின்[14] சாரத்தினைப் பார்ப்போம்:

"வடமீன் போல உறுதியாய் உள்ளேன்
ஆயிரம் ஆண்டெனினும், மாற்றம் இன்றி.
உன் நெஞ்சம் வெள்ளைச் சூரியனைப்போல்
உள்ளது.
அது காலையில் கிழக்கிலும்
மாலையில் மேற்கிலும் போகிறது."

வடமீன் (North Star) துருவ நட்சத்திரத்தினைக் குறிப்பது. வானப் பாதையில் எந்த நட்சத்திரமும் எங்கு வேண்டுமெனினும் இயங்குதல் கூடும். ஆனால், கோடையாயினும் குளிர்ப்பருவம் ஆயினும் எக்காலத்தும் எந்தவித மாற்றமும் இன்றித் தன்னிடத்திலேயே தங்கியிருத்தல் என்ற இயல்பு வடமீனுக்கு உண்டு என்று சீனர்களைப போலத் தமிழர்களும் கண்டறிந்துள்ளனர்.

சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவி கற்புக்கரசியாகிய கண்ணகியை,

"தீதிலா வடமீனின் திறம்இவள் திறம்என்றும்' (1.27)

என்று மாதரார் போற்றினர் என இளங்கோ பாடியிருத்தல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இத்தகைய பொதுப் பண்புகள் ஒரு நாட்டிற்கு, ஒரு மொழிக்கு உரியதாகக் கூறுவதைவிட மன்பதைப் பொதுவாகக் கொள்ளுதலே பொருத்தமாயிருக்கும். (Such common aspects belong to the human stock).

மேலே பார்த்த சீனப் பாடலில் வரும் தலைவி, தலைவன் தன்னைக் காண வருவான் என்ற உறுதிப்பாட்டுடன் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் மனம் மாறாமல் வடமீன் போல் (Pole star) காத்திருப்பேன் என்று கூறுதல்,

பெண்ணின் பெருந்தக்க யாவுள? கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

என்ற திருக்குறளினை நமக்கு நினைவூட்டுகிறது அல்லவா?

அடுத்து, தன் நெஞ்சினை விளித்துப் பேசுகிறாள். காலையில் கிழக்கினை நோக்கியும் மாலையில் மேற்கினை நோக்கியும் செல்லக் கூடிய சூரியனைப் போன்றது அவள் நெஞ்சம். காரிகையின் உள்ளம் காதலன் கிழக்கிலிருந்து தன்னைக் காண வருவானோ என்று காலை முழுவதும் அத்திசையினையே நோக்குகிறது. அவன் வந்திலன். ஒருவேளை மேற்கிலிருந்து வருவானோ என்று மாலை முழுவதும் அத்திசையினையே பார்த்து நிற்கிறது. அவன் வரவில்லை. அவள் ஏக்கக் குரலினை இப்பாடல் எடுத்துக்காட்டுகிறது. இதன் கருத்து,

"ஓங்குமலை நாடன், ஞாயிறு அனையன் தோழி
நெருஞ்சி அனையஎன் பெரும்பணைத் தோளே"

என்ற குறுந்தொகைப் பாடலின் (315.2-4) கருத்துடன் ஒப்பிட்டு மகிழ்தற்குரியது.

தன் கன்னிமைப்பருவத்தின் காதல் துயரினைக் கள்ளம் கபடமின்றிக் காரிகை ஒருத்தி பாடுகிறாள். அப்பாடலின் சாரம்:

"இடுப்பில் கட்டிய கச்சையினைத் தளர்த்திப்
பாவாடையினைப் பிடித்தபடி
முன் சன்னலை நோக்கி நடந்தேன்; என்
புருவங்கள் மைதீட்டப்படவில்லை.
என்பட்டாடை அலையும் நிலையில்;
அது சிறிது திறப்பினும், இளவேனிற் காற்றினை
ஏசுவேன்!"

சன்னலுக்கு வெளியே காதலன் வருகிறானா என்று பார்ப்பதற்குச் சென்றாள். அவள் உடுத்திய பட்டாடை காற்றில் அசைகிறது. ஆனால் அது தன் உடலைச் சிறிது திறந்து காட்டும் நிலை ஏற்படினும், அதற்குக் காரணமாக இருக்கும் இளவேனிற் காலத்துக்குரிய தென்றல் காற்றினை ஏசுவேன் என்று கூறுகிறாள்.

இத்தகைய சூழலில் பாவேந்தர் பாரதிதாசன் காட்டும் மகளிர்,

"பெண்கள் விலக்காத ஆடை தன்னை விலக்கினும்
விலக்கார் நின்னை!"

என்று தென்றலை அனுபவிக்கும் தெரிவையராகப் படைக்கப்பட்டிருத்தல் இயைபு கருதி இங்கு எண்ணிப் பார்த்தற்கு உரியது. இங்கு வரும் பெண்களின் நிலைவேறு.

காதல் புரிந்து விளையாடி மகிழும் இன்ப நொடிகளையும் மென்மை உள்ளத்துடனும் நம்பிக்கை உணர்வுடனும் ஒருத்தி வெளிப்படுத்துகிறாள்.[15]

> *"என் காதலன் என்னுடன் லீலை புரிய வரும்*
> *பொழுது*
> *தலையணையினை எடுத்துக் கொண்டு வட*
> *சன்னல் மருங்கில் படுக்கிறேன்.*
> *விளையாடும் பொழுது அடிக்கடி மூர்க்கம்*
> *ஆகிறான்.*
> *காதல் - எவ்வளவு காலம் நீடிக்கும்?"*

முரடனான காதலனையும் மென்மையுடையவனாகப் பண்படுத்தும் திறம் காதலிக்கு உண்டு. ஆனால் கொடூரமான தன்மை கொண்ட காதலனின் மூர்க்கம் நீங்கிவிட்டால் இருவரும் கொண்ட காதல் வாழ்நாள் முழுதும் நீடிக்கும் என்ற நம்பிக்கையில் இப்பெண் அமைதி கொள்கிறாள். இங்கு,

> *"சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்*
> *நீரோ ரன்ன சாயல்*
> *தீயோ ரன்னஎன் உரன் அவித் தன்றே"*

என்ற குறுந்தொகைப் பாடல் *(95.3-5)* எண்ணிப் பார்த்தற்கு உரியது.

இதுவரையும் தென்சீன நாட்டார் பாடல்களின் பண்புகள் சிலவற்றைப் பார்த்தோம். இனி, வடசீன நாட்டார் பாடல்களின் இயல்புகள் சிலவற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

தென்சீனத் தன்னுணர்வுப் பாடல்களைப் போலன்றி, வடசீனப் பாடல்களில் உணர்ச்சி வெளிப்பாடுகள் யாவும் நேரடியாகவும், கட்டற்றதாகவும் திடமானதாகவும் அமைந்திருத்தல் தனிச்சிறப்பு எனலாம். காதற் பாடல்கள், போர்ப்பாடல்கள், ஆயர் பாடல்கள்,

மற்றும் சந்தர்ப்பப் பாடல்கள் யாவும் வடசீனக் காட்சியின் மங்கலான தன்மையினையும், நீண்ட காலப் பிரிவுக்கும் போருக்கும் பிறகு வாழ்க்கையின் கடினக் கூறுகளையும் பிரதிபலிப்பனவாக உள்ளன. காதல் பாடல்கள் ஒன்றில் காதலியின் உணர்வுகள் கொப்புளிக்கின்றன:

"மகிழ்ச்சி யற்றநிலை, வருத்தம்தான்
என் அழகனே! உன் கண்காணியாக
இருக்க விரும்புகிறேன்;
உள்ளும் புறமும் உன் புயங்களில் முடியப்பட்டு,
எழும்பிக் குதிப்பேன்; இன்றேல் முழங்கால்
அருகில் கிடப்பேன்."

போர்ப் பாடல்களில்[16] அவலத் தனிமை வெளிப்படுகிறது.

"ஆண்களோ உண்மையில் இரங்கத்தக்க
பிராணிகள்:
வீட்டை விட்டால் இறப்புத் துயர்கள்
அவர்களுக்கு உண்டு-
அவர்கள் பிணங்களோ வாய்க்காலில்
அழுகுகின்றன;
அவர்களின் வெள்எலும்புகளைத் திரட்டுவோர்
ஒருவரும் இலர்."

வலிமை மிக்க வடசீனர்களின் ஆற்றல்மிக்க உணர்வுக்குப் பின் வரும் பாடல் ஒரு சான்று.[17]

"தைரியம் மிக்க வீரனுக்கு வலிமை மிக்க
போர்ப்புரவி,
வலிமை மிக்க போர்ப்புரவிக்குத் தைரியம் மிக்க
வீரன்!
மஞ்சள் தூசியில் சவாரி போன பிறகுதான்
அவர் ஆணா? பெண்ணா? என்பது தெரியும்."

வலிமையற்றவரும், பெண்மைப் பண்புடையவருமாகிய மனிதர்கள் இழிவாக எண்ணப்பட்டனர். போர்ச் சாதனைகளினால் வீராங்கனைகள் மதிக்கப்பட்டனர்.

கதை இலக்கியம் (Fiction)

இக்காலப் பகுதியில் தோன்றிய மற்றொரு இலக்கிய வகை கதை (Fiction) ஆகும். பெரும்பாலும் இயற்கை கடந்த பொருள் பற்றியதாக இக்கதைகள் புனையப் பெற்றன. பழங்காலத்து அறிஞர்களைப் பற்றிய அரிய நிகழ்வுகள் (Anecdotes) பற்பலவும் கதை வடிவில் அமைக்கப்பட்டன. கன் பாவோ (Gan Bao) எழுதிய ஆவிகளின் பதிவுகள் (Records of Spirits) இயற்கை கடந்த புனைவு (Supernatural Fiction) ஆகும். லீயு யீகிங் (Liu Yiking) வரைந்துள்ள "சமுதாயப் பேச்சுப் பற்றிய புதிய நிகழ்வுகள் தொகுப்பு" (New Anecdotes of Social Talk) அரிய புனைகதையாக மதிக்கப்படுகிறது. இவை யாவும் சிறுகதைகள் (Short tales) வடிவில் அமைந்தவை. பிற்காலத்துத் தோன்றிய கதை இலக்கியங்களில் இவற்றின் தாக்கம் உண்டு.

இக்காலப் பகுதியில் திறனாய்வுத் துறையிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காணலாம்.[18] இத்துறை சார்ந்த ஒருசில நூல்களைப் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

இலக்கியத் திறனாய்வு நூல்கள்

1. சாவோபி (Cao Pi) என்பார் எழுதிய "Essay on Literature" என்ற நூல் இலக்கியத் திறனாய்வு பற்றிய தொன்மை மிக்க நூலாகக் கருதப்படுகிறது. இலக்கியத்தின் மதிப்பினை இந்நூல் உறுதிப்படுத்துகிறது. நடையியல் (Stylistics) பற்றிய முதல் முயற்சியாக இந்நூல் திகழ்கிறது.

2. லூ ஜி (Lu Ji. கி.பி.261-303) என்பார் வரைந்துள்ள Rhyme-Prose on Literature என்ற நூல் இலக்கியம் பற்றிய பல வினாக்களை விவாதிக்கிறது. வடிவத்திற்கும் உள்ளடக்கத்திற்கும் (Form and

Content) உள்ள தொடர்பினையும், இலக்கிய வகைகள், நடையியல், கட்டமைப்பு பற்றிய சிறப்பியல்புகளையும் இந்நூல் நிலைநாட்டுகிறது.

3. லீயு ஜீயே (Liu Xie, கி.பி.466-520) எழுதியுள்ள Intent and Ornament in Literarure என்ற நூல் பத்துப் பாகங்களைக் கொண்டது. ஒவ்வொன்றிலும் 50 பிரிவுகள் உள்ளன. இலக்கியத்தின் தோற்றம், அதன் சிறப்புக் கூறுகள் ஆகியவற்றை இந்நூல் தெளிவுபடுத்துகிறது. முற்கால எழுத்தாளர்களின் அனுபவங்களைக் கூறுகிறது. திறனாய்வு முறைகளையும் தரங்களையும் விளக்குகிறது. சீன இலக்கிய வரலாற்றில் இலக்கியக் கொள்கையினை விளக்கும் முதல் நூலாக இந்நூல் திகழ்கிறது.

4. சோங் ரோங் (Zhong Rong, கி.பி.552) என்பார் எழுதியுள்ள "The Classification of Poets" என்ற நூல், ஹன் அரசுக் காலம் முதல் தென் லீயங் (Southern Liang) காலம் வரை வாழ்ந்துள்ள கவிஞர் நூற்றுவர் பற்றியும் அவர்தம் படைப்புக்கள் பற்றியும் முறைப்படி மதிப்பீடு செய்துள்ளது. அப்பாலைத் தத்துவச் செய்யுளையும் (Metaphysical Poetry) இந்நூல் விமர்சிக்கிறது. இலக்கியத்தில் இடம்பெற்ற சம்பிரதாயங்களை இந்நூலும் இதற்குமுன் சுட்டப்பெற்ற நூலும் (காண்க: 3) உடன்படவில்லை.

எனவே, இருண்ட காலப்பகுதியிலும் குறிப்பிடத்தக்க நூல்கள் சீன மொழியில் தோன்றியுள்ளன என்பது தெளிவு. தமிழிலக்கிய வரலாற்றில் கி.பி.300-600 என்ற காலப் பகுதி இருண்ட காலம் என்று சிலரால் கூறப்பட்டது. இந்தக் காலத்திலும் கூட, நல்ல அற நூல்கள் பல எழுந்துள்ளன என்பதை இயைபு கருதி இங்குச் சுட்டுதல் சாலும்.

மேற்கோள் குறிப்புக்கள்

1. Liu Wu-Chi, An Introduction to Chinese Literarure, p.59.
2. Ibid.
3. Ibid,p.60.
4. Ibid.
5. Ibid,p.61.
6. Ibid,p.62.
7. Ibid.
8. Ibid,p.65.
9. Ibid,p.66.
10. Literature and the Arts, Complied by the China Hand book Editorial Committee, Translated by Bonnie S. Mc Dougall and Hu Liuyu,Foreign Languages Press, Beijing, 1983, pp.10-11.
11. An Introduction to Chinese Literature, p.68.
12. Ibid,p.66.
13. Ibid,p.67.
14. Ibid.
15. Ibid.
16. Ibid.
17. Ibid,p.68.
18. Literature and The Arts, p.12.

13. சீன இலக்கியத்தின் பொற்காலம்

(கி.பி.618-906)

ஒவ்வொரு செம்மொழியின் வரலாற்றிலும் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியைப் பொற்காலம் (Golden Age) எனக் கூறும் மரபு காணப்படுகிறது. அவ்வகையில், தமிழிலக்கிய வரலாற்றில் சங்க காலம் பொற்காலமாகவும், வடமொழி இலக்கிய வரலாற்றில் குப்தர்கள் காலம் பொற்காலமாகவும் போற்றப்படுதல் சுட்டுதற்குரியது. கிரேக்க இலக்கிய வரலாற்றில் பெரிக்கிலிசு காலம் (Periclean Age) பொற்காலமாக எண்ணப்படுகிறது. இவ்வாறே சீன இலக்கிய வரலாற்றில் மாபெரும் தங்கு அரசு மரபின் (The Great T'ang dynasty) ஆட்சிக் காலம் (கி.பி.618-906) பொற்காலம் என்று போற்றப்படுகிறது.[1]

தங்கு அரச மரபினர் (T'ang dynasty) ஆட்சி செய்த காலத்தில் (கி.பி.618-906) உலகின் கீழைப் பகுதிகளுக்கெல்லாம் சீன நாடு முக்கிய மையமாக விளங்கியது. இந்நாட்டின் கம்பீரமான தலைநகர் சங்கன் (Ch'ang-an) என்ற பெருநகரை நோக்கி ஆசியச் சாலைகள் எல்லாம் அமைந்தன. சீன நாட்டு வரலாற்றிலேயே, வேறு எந்தக் காலப் பகுதியிலும் இல்லாத அளவுக்கு இந்தக் காலப்பகுதியில்தான் ஒளிமயமான அறிவு சார்ந்த செயற்பாடுகளும் இலக்கியச் செயற்பாடுகளும் நிகழ்ந்துள்ளன.

எலிசபெத்துப் பேரரசி ஆட்சி செய்த இங்கிலாந்தினைப் போல தங்கு (Tang) ஆட்சி செய்த சீன நாடு பாடும் பறவைகளைக் (-கவிஞர்களைக்) கொண்ட பொன்னாடாகவும் நன்னாடாகவும்

பொலிந்தது. தங்கு ஆட்சிக்குப் பின் ஆயிரம் ஆண்டுகள் ஆன பிறகும் கூட தங்கு (Tang) காலத்து இலக்கியங்களில் பெரும் பகுதி இன்றளவும் பேணிக்காக்கப்பட்டுள்ளது. கூடக்குறைய ஈராயிரத்து முந்நூறு கவிஞர்கள் பாடியுள்ள ஐம்பதாயிரம் பாடல்கள் தங்கு (Tang) கால இலக்கியமாகக் கிடைத்துள்ளன.[2]

பண்டைக் காலம் தொட்டுப் பாடல் புனைதல் என்பது சீனப் பெருமக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. இந்நிலை தங்கு (Tang) ஆட்சிக் காலத்தில் மிகவும் பரவலாகவும் வியாபகமாகவும் செழித்து வளர்ந்தது. கவிஞர்கள் பொதுமக்களாகிய சுவைஞர்களால் கௌரவிக்கப்பெற்றனர். அரசு சார்ந்த ஆதரவும் கவிஞர்களுக்குக் கிடைத்தது. தங்கு (Tang) காலத்துக் கவிஞர்களில் பெரும்பான்மையோர் இலக்கியத் தேர்வுகளில் வெற்றி பெற்று அரசுப் பணிகளில் கடமை ஆற்றியவர்கள். ஆனால், அவர்களுடைய நிருவாகத் திறமைக்காக அவர்களுக்குப் புகழ் கிடைக்கவில்லை. ஆயினும், கவிதைத் துறையில் அவர்கள் பெற்ற சாதனைகளுக்காகவே பாராட்டப் பெற்றனர்.

கவிஞர்கள் வரிசையில் பேரரசர்கள் (Emperors), பேரரசிகள் (Empresses), படைத்தலைவர்கள் (Generals), அரசர் புகழ் பாடுவோர் (Courtiers) இடம் பெற்றனர். தாவு மார்க்கத்துத் துறவிகளும், பௌத்தப் பிட்சுக்களும், அரசுசார் பெருமாட்டிகளும், பாடற்பெண்களும் கவிஞர்களாக விளங்கினர். இவர்கள் அனைவரின் பெருங்கொடையால் தங்கு (T'ang) காலத்துப் பாடல் இலக்கியம் பொற்களஞ்சியமாகப் பொலிவுற்றது.[3]

தங்கு (Tang) காலத்து இலக்கியம் பெரும்பாண்மையும் பாட்டு இலக்கியமே ஆகும். புனைவியல் (Romanticism), காட்சியியல் அல்லது நடப்பியல் (Realism) ஆகிய இரு நிலைகளிலும் பாட்டு இலக்கியங்கள் புதிய உயரங்களையும் உச்சங்களையும் எட்டியிருந்தன.

தங்கு மரபு ஆட்சிக்காலம் பெரும் அளவில் பொருளாதாரச் செழிப்புடனும் பண்பாட்டு வளர்ச்சியுடனும் திகழ்ந்தது. நிலமானியச் சமுதாயம் எல்லா வகையிலும் மேம்பாடு அடைந்திருந்தது.

அரசியல் நிலைபேறு, பொருளாதாரப் பெருக்கம், பேரரசர்களின் ஆதரவு, கவிஞர்களுக்கு வழங்கப்பெற்ற உயரிய சிறப்புக்கள், மரியாதை என்பன பாப்புனையும் நுண்ணாற்றலை வளர்த்தன. தங்கு (T'ang) ஆட்சியில் புகழ்பெற்ற பேரரசராக விளங்கிய மிங்கு ஹுவங்கு (Ming Huang) காலத்தில்தான் பாடல் இலக்கியம் முழுமையான பெருமையினைப் பெற்றது. இப்பேரரசரே சிறந்த கவிஞராகவும் புரவலராகவும் விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. உலகப் புகழ்பெற்ற கவிஞர்களாக லீ பாய் (Li Bai), தூஃபூ (Du Fu), பாய் ஜுயி (Bai Juyi) என்போர் ஒளி வீசினர்.

இலக்கிய உரைநடைப் போக்கிலும் சீர்திருத்தம் செய்வதற்கு ஒருபெரும் இயக்கம் உருவாகியது. இதற்குத் தலைமையேற்று நடத்தியவர்களில் ஹன்யூ (Han Yu), லீயு சோங்கியன் (Liu Zongyuan) என்போர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். தரம்மிக்க கட்டுரைகள் பற்பல இக்காலத்தில் எழுந்தன. இவை யாவும் பின்வந்த கட்டுரையாளர்களுக்கு முன் மாதிரிகளாக அமைந்து வழிகாட்டின எனலாம். நகரங்களின் வளர்ச்சியுடன் கூடிய சிறுகதைகள் வளர்ச்சியும் இக்காலப் பகுதியின் இலக்கியச் சிறப்புக் கூறுகளில் ஒன்றாகும்.[4]

பேரரசர் சூவன் சோங்கு (Xuan Zong) (இவருக்கு மிங்கு வங்கு (Minghuang) என்ற பெயரும் உண்டு) ஆட்சி புரிந்த கி.பி.712-756 என்ற காலப்பகுதியில் சீனச் செய்யுள் இலக்கியம் மிகவுயர்ந்த சாதனைகளுக்குரிய நிலையினை எட்டியது. இக்காலமே தங்கு (Tang) அரசின் உச்ச காலமாக உரைக்கப்படுகிறது. இக்காலத்தில்தான்

இருவகை யாப்பு வடிவங்கள் முதிர்ச்சியும் முழுமையும் பெற்றன. இவற்றை 1. ஒழுங்குபடுத்தப்பட்ட யாப்பு (Regulated Poetry) என்றும், 2. சுருக்கப்படுத்தப்பட்ட யாப்பு (Cut-short poetry) என்றும் வழங்கினர்.

முதல் வகை யாப்பமைந்த பாடலில் எட்டு அடிகள் அமைந்திருக்கும். ஒவ்வோரடியிலும் ஐந்து அல்லது ஏழு சொற்கள் இடம் பெற்றிருக்கும். நாதவாய்பாடுகள் (Tone Patterns), தேர்ந்தெடுக்கப் பெற்ற சொற்கள் என்றிவ் வகையால் பாடலின் அமைப்பு ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும்.

இரண்டாம் வகை யாப்பமைந்த பாடலில் நான்கு அடிகள் மட்டுமே அமைந்திருக்கும். அவையும் தேர்ந்த சொற்கள், ஓசை ஒழுங்கு முதலிய கூறுகளைப் பெற்றிருக்கும். இத்தகைய பாடலின் மையக் கருத்து குறிப்பாகவும் அமையலாம்; வெளிப்படையாகவும் கூட அமையலாம்.

ஒழுங்குபடுத்தப்படாத முற்காலத்துப் பாடலின் ஒவ்வோரடியிலும் ஐந்து அல்லது ஏழு சொற்கள் அமைந்து, பழைய நடைப்பாட்டு (Old-style poetry) என்ற பெயருடன் வழங்கியது. பல்வேறு நடைகளும் (Styles), குழுக்களும் (Schools) இலக்கியக் கூர்மையுடன் புகழ்மிக்க பாக்களைப் படைத்துள்ளன.[5] இக்காலப் பகுதியில் வாழ்ந்த கவிஞர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்களின் படைப்புக்களைப் பற்றிக் காண்போம்.

அ. மெங்கு ஹவோரன் (Meng Haoran)

இவர் கி.பி.689-740இல் வாழ்ந்தவர். இவர் எழுதியவற்றுள் 260 பாடல்கள் கிடைத்துள்ளன. இவர் ஓரடிக்கு ஐந்து சொற்கள் அமைத்துப் பாடும் யாப்பியல் கவிஞர். திறம்பட ஓசைநயம் அமைத்தவர். இயற்கைக் காட்சிகளைச் சொல்லோவியங்களாகத் தீட்டிய சிறப்பு இக்கவிஞருக்கு உண்டு. மேலும் இவர் பாடல்களில்

முல்லை நிலத்துக் காட்சிகளும் (Pastoral scenes), குறிஞ்சி நிலத்து வருணனைகளும் நிரம்பவுள்ளன. பெரிய ஆறுகளின் புனைவுகளும் இவர் பாடல்களில் காணப்படும். காடுகளில் கரந்துறையும் முனிவர்களின் குடில்களையும் இவர் பாடியுள்ளார். அரசில் பணிபுரியும் உயர் அலுவலர்கள் துய்க்கும் இன்பங்களையும் துன்பங்களையும் பாடுவதிலும் இக்கவிஞர் தேர்ந்தவர். படைப்பாற்றலால் இக்கவிஞர் உணர்வுகளையும் இயற்கைக் காட்சிகளையும் இயைத்துப் பாடுவதில் வல்லவராக விளங்கினார்.[6]

ஆ. வாங்கு வேய் (Wang Wei)

இவர் கி.பி.701-761இல் வாழ்ந்தவர் என்று போனீ எஸ்.மெக்தொளகல் (Bonnie S. McDougall) என்பார் எழுதியுள்ளார். ஆனால் லீயு வூ-சீ (Liu Wu-Chi) என்பார், இக்கவிஞரின் காலம் கி.பி.699-759 என்று குறித்துள்ளார். பெரிய வேறுபாடு இல்லையெனினும், சீன இலக்கிய வரலாற்றில் சிறு கால வேறுபாடு காணப்படுதல் சுட்டத்தக்கது.[7]

வாங்குவேய் (Wang Wei, கி.பி.699-759 அல்லது 701-761) என்னும் கவிஞர் ஓவியக்கலை, கையெழுத்துக்கலை (Calligraphy), இசைக்கலை, கவிதைக்கலை ஆகிய பல்வகைக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர். அவர் வரைந்த இயற்கைக் காட்சிகள் ஒவ்வொன்றும் அவர் பாடல்களைப் போலவே புகழ் வாய்ந்தவை. இவருடைய ஓவியங்களில் கவிதை உண்டு; கவிதைகளில் ஓவியம் உண்டு என்று இவர் கலைத்திறம் பற்றிய பொது மொழி வழங்குகிறது. இவர் பாடல்கள் நானூறுக்கு மேல் கிடைத்துள்ளன.[8]

இவர் வடசீனாவின் கோநகர் ஆகிய சங்குவனில் (Ch'ang-an) அரசாங்கப் பதவியில் நெடுங்காலம் பணிபுரிந்தவர். இவர் பதவிக் காலத்தில் குறிப்பிடத்தக்க

நிகழ்வு எதுவும் ஏற்படவில்லை. லோயங்கு (Loyang) என்ற இடத்தில் புரட்சியாளர்களால் இவர் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தார். தன் கவிதைத் திறத்தினால் வஞ்சகர்களின் சிறை வைப்பினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டார்.

இக்கவிஞர் தன் இறுதிக் காலத்தில் வாங்கு சூவன் (Wang-Ch'uan) என்ற ஊரிலுள்ள தன் இல்லத்திற்கே திரும்பினார். தன் ஓய்வுக் காலங்களிலும் பௌத்தப் பிடகங்களைப் படித்து மகிழ்ந்தார். தன் நண்பர்களாகிய புத்த பிட்சுக்களுடன் ஆழ்ந்த தத்துவச் சிந்தனைகளிலும் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டு இன்புற்றார். இவர் தாயாரும் பௌத்தர் ஆவர். அவரிடத்தில் இக்கவிஞருக்கு எல்லையற்ற பக்தியுடன் கூடிய அன்பு உண்டு. தன் மனைவியின் இறப்புக்குப் பின் மறுமணம் செய்து கொள்ளாமல், முப்பது ஆண்டுகள் பிரமசரியம் காத்தார். இவர் வாழ்க்கையின் பிற்பகுதியில் சைவரானார் (Vegetarian).

இக்கவிஞரின் பாடல்களில் இவருடைய பௌத்த ஈடுபாடுகள் தெளிவாகப் புலனாகின்றன. பௌத்த அறிஞர் ஹூ (Hu) என்பவர்க்கு இரு பாடல்களை இவர் எழுதி அனுப்பினார். இருவரும் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது அவை எழுதப்பட்டன. இரண்டாவது பாடலில்,

"நல்லாசிகளை மேம்படுத்திக் கொள்ளப் பௌத்தத்
துறவிகளைப் பணிகிறேன்,
புண்ணியம் தேடிப் போகும் கன்பூசியத்தை நான்
பரிகசிக்கிறேன்"

என்று இக்கவிஞர் குறிப்பிட்டுள்ளார். இவர் காலத்தில் சீன நாட்டில் கன்பூசியத்தைவிடப் புத்தர்பிரானின் போதனை சிறப்பிடம் பெற்றிருந்தது. இக்கவிஞர் பௌத்தச் சிந்தனையில் நாட்டம் மிக்கவர் என்பதற்குப் பின்வரும் பாடலும் சான்றாகும்.

"தூய்மைப்படுத்துதல் மூலம் துன்பங்கள்
தொலைதல் எங்ஙனம் கூடும்?
மார்க்கத்தை அறிதல் என்பது கரைசேர்தலாக
அமையும்
உண்மையில் உலக பாசத்தால் விளைவது துயரம்
பேராசையுடன் தொடங்குகிறது வறுமை"

புத்தர்பிரான் சித்தத்தினைச் சுத்தம் செய்வதற்கு எண்வகை நெறிகளை (Eightfold path) அமைத்துக் கொடுத்துள்ளார். அவற்றை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாகப் பிறவிக் கடலை நீந்திக் கரை சேர்தல் இயலும். பாசமே துன்பத்துக்குக் காரணம். பேராசைதான் வறுமையின் தோற்றம். இத்தகைய புத்தச் சிந்தனைகள் சீனம் எங்கும் பரவியிருந்தன என்பதை வாங்கு வேயின் (Wang Wei) பாடல்கள் புலப்படுத்துகின்றன.

மேலும் இக்கவிஞர் பாடியுள்ள ஒரு கவிதையினைக் காண்போம்:

"இறுதிக் காலங்களில் அமைதியை மட்டுமே
விரும்புகிறேன்;
உலகியல் செயல்களில் என்நெஞ்சம்
போகவில்லை.
என் சுயநலத்திற்காக நெடுந்திட்டம் ஒன்றும்
இல்லை;
எனக்குத் தெரிந்ததெல்லாம் பழைய வனத்திற்குத்
திரும்புதலே,
அங்குக் கற்பகக் காற்று தளர்த்திய என் கச்சில்
வீசுகிறது,
மலையின் முழுமதி சித்தார் கருவியில் ஒளி
பாய்ச்சுகிறது.
வெற்றி, தோல்வியின் விதி பற்றி நீ வினவுகிறாய்!
மீனவன் பாடல் ஆற்றங்கரை ஆழத்தில் நுழைகிறது-"

எனவே, புத்த பிட்சுவைப் போல இக்கவிஞர் வன வாழ்க்கையில் அமைதியை நாடியவர் எனலாம்.[9]

சூங்கு நன் (Chung-nan) என்ற மலை இவருக்கு ஏகாந்தமாக இருந்தது. இவர் பாடுகிறார்:

"என் நடு வயதில் மார்க்கத்தை மிகவும்
விரும்பினேன்;
என் பிற்காலத்தில் Sதென்குன்றில் என்இல்லம்
அமைத்தேன்;
உணர்வு இயக்கும் பொழுது தனியே அலைகிறேன்
அடிக்கடி
எனக்கு மட்டுமே தெரிந்த இனிய காட்சிகளின்
இடையே.
எங்கு ஓடை முடிகிறதோ அங்கே நான்
சுற்றுகிறேன்,
பிறகு அமர்ந்து மேகங்களின் எழுச்சியை
நோக்குகிறேன்.
எப்பொழுதாவது வனத்தில் முதியோரைச்
சந்திக்கிறேன்,
வீட்டை எண்ணாமல் நாங்கள் பேசுகிறோம்,
சிரிக்கிறோம்."

குறிப்பு : Sதென்குன்று - Southern Hill. இதுவே சூங்கு நன் (Chung-nan) என்று குறிக்கப்பட்டது. இப்பாடலிலும் இவருடைய இயற்கை ஈடுபாடும், சாந்த மயமான வாழ்வும், பௌத்தப் பெரியோரின் (-முதியோர்) கூட்டுறவும், அதனால் பெறும் நலமும் சுட்டப்பட்டன.

பே தீ (P'ei Ti) என்னும் பௌத்த இளம் ஞானிக்கு இவர் எழுதிய பாடல், "வாங்கு சுவானில் பொழுது போக்கு வாழ்வு" (Living Leisurely at Wang-Ch'uan) என்ற தலைப்பில் அமைந்தது.[10] அதன் தமிழாக்கம்:

"குளிர்மலைகள் யாவும் இளம்நீலமாக
மாறுகின்றன;
இலையுதிர் காலத்து ஓடை நாளும் ஓடுகிறது.
கதவின் வெளிப்புறம் தண்டினை ஊன்றிநின்று

காற்றை நோக்குகிறேன், மாலையில் சிள்வண்டின்
ஒலி கேட்கிறேன்.
ஆற்றின் துறையில் மறையும் கதிரவன்
தயங்குகிறான்;
சிற்றூர்க் குடிலிலிருந்து வைக்கோற்கட்டு
எழுகிறது.
[S]ஐந்து மரங்களுக்கு முன்பு [N]சீயே யூ பேழையில்
மூழ்கி
பைத்தியம் போலப் பாடி ஆடுகிறான்."

குறிப்பு : [S]ஐந்து மரங்கள் - Five Willows; Willow ஒருவகை மரம். [N]சீயே-யூ- Chieh Yu; இவர் தாவு மார்க்கத்து முனிவர். ஐந்து மரங்கள் என்பது ஐம்புலன்களைக் குறிக்கலாம். இவற்றை வென்றவர் எனத் தன்னைத் தானே சொல்லிக் கொள்கிறார் (-Master of the Five Willows).

வாங்கு வேய் (Wang Wei) இயற்கைக் காட்சிகளைப் பாடுவதிலும் சிறந்து விளங்கினார். சமய மனோபாவத்துடன் கூடிய இவர் இயற்கையிடம் செலுத்திய பேரன்பு இவர் பாடல்களில் வெளிப்படுகிறது. சாந்தத்தினையும் ஆழ்ந்த அமைதியையும் (Calm and peace) இவர் பாடல்களில் காணலாம். "நீண்ட மழைக்குப்பின் வாங்கு-சுவானில் (Wang-Ch'uan) உள்ள என் சிற்றூர்க்குடிலில்" (In my Country Residence at Wang-Ch'uan after a Long Rain) என்ற பாடலின் தமிழாக்கத்தைத் தருகிறோம்.[11]

"காலியான காட்டில் மழை சேமிக்கப்படுகிறது,
புகை மெல்ல எழுகிறது.
கருகிய மூலிகை, சமைத்த சோறு கிழக்கு
வயல்களுக்கு அனுப்பப்படுகின்றன.
விசாலமான நீர்நிலைப் பள்ள நிலங்களில்
வெள்ளை நாரையும் பறக்கிறது;
கோடை நிழல் மரங்களின் கீழே மஞ்சள்
வண்ணப்புள் பாடுகிறது.

மலைகளில் தியானித்துக் கொண்டே காலை
பண்படுத்தப்பட்ட தோட்டச் செடி
வகைமையினை நோக்குகிறேன்;
பைன் மரங்களின் கீழ் நோன்பிருந்து கொண்டே
சூரிய காந்தி விதைகளைப் பொறுக்குகிறேன்.
மரியாதை பீடத்திற்குப் போட்டியிடுதலைப்
பழைய முரடன் நிறுத்தியபின்
கடற்பறவைகள் ஏன் ஐயத்திற்கு இடமாக
அமைதல் வேண்டும்?"

இப்பாடலில் ஒரு சில சொற்கள் உள்பொருள் கொண்டவை.

மூங்கில் விடுதி (Bamboo Lodge) என்ற இவர் கவிதையின் தமிழாக்கம்:[12]

"அடர்ந்த மூங்கில் தோப்பில் தனியனாய்
இருக்கிறேன்,
சித்தாரை இசைத்துக் கொண்டும் ஊதலை
ஊதிக் கொண்டும்
இந்த ஆழ்ந்த சோலையில் ஒருவரும் அறியார் -
ஒளிநிலா மட்டும் உலவும் சுடர்விட."

இக்கவிஞர் இசையிலும் இயற்கையிலும் ஈடுபாடு கொண்டவர் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. தனிமையில் இனிமை காண்பவராக விளங்குகிறார். அடர்ந்து இருண்டுள்ள பெருஞ்சோலைக்குள் மனித நடமாட்டம் இல்லை; முழுநிலாவின் கதிர்கள் மட்டுமே நுழையும் என்று இக்கவிஞர் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ள கருத்து சங்க காலக் கவிஞரின் பாடலிலும் பொதிந்திருத்தல் சுட்டுதற்குரியது:

வெயில்நுழை(பு) அறியாக் குயில்நுழை பொதும்பர்
(பெரும்பாண்.374)

மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்து
(திருமுருகு.42)

கதிரவனின் கதிர்கள் கூட நுழைய முடியாதபடி அடர்ந்துள்ள பெருஞ்சோலையின் இடுக்குகளின் வழியாகக் குயில்கள் நுழையும் என்பது முதலடியின் கருத்து. குரங்கு ஏறாத மரம் இல்லை. ஆனால் அதற்கும் தெரியாத மரங்கள் அடர்ந்து படர்ந்துள்ள காடு என்பது இரண்டாவது அடியின் பொருள். ஏதோ ஒரு வகையில் தமிழ்ப் பாடலிலும் சீனக் கவிதையிலும் ஒருவகைப் பொதுவான கற்பனை பொதிந்திருத்தல் உணரத்தக்கது.

வாங்கு வேயின் (Wang Wei) பாடலின் இரண்டடிகளின் ஆங்கில ஆக்கம் வருமாறு:

Desolate City-wall overlooks ancient ford
Setting sun fills autumn hills.

தமிழாக்கம்:

பாழான நகர்ச்சுவர் பழைய துறையைப்
புறக்கணிக்கிறது
மறையும் கதிரவன் ஒளி இலையுதிர்காலக்
குன்றுகளை நிரப்புகிறது.

இவ்வடிகளின் பத்துச் சொற்கள் காலமும் பருவமும் பொருந்தியதாய், அண்மைப் பொருளும் சேய்மைக் காட்சியும் அமைந்ததாய், நிகழ்கால மனோநிலையினைச் சுட்டுவதாய் முழுமையான இயற்கைக் காட்சியைத் தெளிவாக எழுப்புகின்றன. இப்பாடல் வசந்தத்தின் புதுமையினையோ கோடையின் செழுமையினையோ வருணிக்கவில்லை. ஆனால், இலையுதிர் காலத்தின் மங்கலை வருணிக்கிறது. அதன்பின் குளிர்காலமோ சேய்மையில் இல்லை.

இப்பாடலில் சுட்டப்படும் காலம், மாலைப் பொழுதின் பிற்கூறு (-எற்பாடு). அந்திப் பொழுதினை அணுகிக் கொண்டிருக்கும் வேளை ஆகும். முன்தரையின் காட்சி நகரச் சுவரையும் படகு அடையும் துறையினையும்

காட்டுகிறது. அதே நேரத்தில் சேய்மையில் மலைத் தொடர்களில் மறையும் கதிரவனின் கதிர்க்கற்றைகளின் வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கிறது. அது பார்ப்பதற்கு அச்சம் தருகிறது. இந்த இயற்கைக் காட்சி, பாழடைந்த நகரின் நிலை பற்றிய தற்கால மனோநிலையினை எழுப்பவில்லையெனில், நெஞ்சத்தில் அவ்வளவாகப் பதிவதும் இல்லை. நகரச் சுவரோ பாழடைந்துவிட்டது. பழைய படகுத்துறையும் பாழ்பட்டது. கதிரவனோ மறைகிறான். குன்றுகளோ இலையுதிர் காலத்து நிறங்களால் வழிகிறது. இத்தகைய மையச் சொற்களின் கோவையின் (-key words) வாயிலாக ஒருமையானதும் ஆழ்ந்ததும் ஒருங்கிணைந்ததும் ஆகிய உணர்வு உருவாக்கப்படுகிறது. இந்தக் காட்சியின் புலம்பல் உணர்வு முற்றிலும் தடைசெய்யப்படுவதாக இல்லை. அண்மைக் காட்சி (பாழ்ஞ்சுவர், பாழ்ந்துறை) இரண்டும் மங்கலாகத் தோன்றினும் சேய்மைக் காட்சி (குன்றுகளில் கதிரவன் கதிர்களின் வெள்ளம்) ஒளியும் வண்ணமும் வியப்பும் நிரம்பியதாய், நம்பிக்கை தருவதாய் இருத்தலை ஆழ்ந்து நோக்கி உணர்ந்து மகிழ்தல் வேண்டும்.[13] இக்காலப் பகுதியில் வாழ்ந்த இன்னொரு புகழ்மிக்க கவிஞரின் பாடல்களைப் பற்றிக் காண்போம்.

இ. லீபோ (Li Po) என்னும் லீ பாய் (Li Bai)

லீ போ (Li Po) என்றும் லீ பாய் (Li Bai) என்றும் அழைக்கப்பெற்ற இக்கவிஞர் கிராமியச் சூழலில் வாழ்ந்தவர். விடாமல் படித்துக் கொண்டே இருந்தவர். இவர் வாழ்ந்த காலம் கி.பி.701-762. இவர் முன்பு பார்த்த வாங்குவேயின் (Wang Wei) சம காலத்தவர். சீனக்கவிஞர்களிலேயே மிகவும் நன்கு அறியப்பட்டவராகவும் இவர் திகழ்கிறார். இவர் சிறந்த புனைவியற் கவிஞராக (Romantic Poet) போற்றப்படுகிறார்.[14]

பாலப் பருவத்திலேயே இவர் பாப்புனையத் தொடங்கிவிட்டார். ஆயினும், நாற்பது வயதுக்கு முன்

பரவலான புகழை இவர் அடையவில்லை. மத்திய மற்றும் வடசீனாவில் உள்ள மலைகள், ஆறுகள்முதலியவற்றைப் பலமுறை பயணம் சென்று பார்த்துக் களித்தார். பின்னர் கோநகரம் ஆகிய சங்கன் (Ch'ang-an) வந்து சேர்ந்தார். அப்பொழுது இந்நகரம் செழுமையும் வளமையும் முழுமையாகப் பெற்று விளங்கியது. அங்கிருந்த சக கவிஞர்கள் இவரை வரவேற்று மகிழ்ந்தனர். பேரரசரின் ஆதரவும் விரைவில் இவருக்குக் கிடைத்தது. மிகவுயர்ந்த இலக்கியச் சாதனைகள் புரிந்த அறிஞர் பெருமக்கள் அடங்கிய ஹன்லின் பேரவையின் (Han-lin Academy) உறுப்பினராக இவரை இருக்கச் செய்தனர். அரசு விழாக்களுக்குரிய பாடல்களைப் புனையும்படி இவர் அழைக்கப்பட்டார். நகர மதுவகத்திற்கு அடிக்கடி செல்லுவோரில் இவரும் ஒருவராக இருந்தார். அவர் இளைய நண்பரும் கவிஞருமாகிய தூஃபூ (Tu Fu) கூற்றின்படி மதுக்கடையில் லீபோ அளவுக்குமேல் குடித்துவிட்டார். அவ்வேளையில் அவருக்கு அரசு அழைப்பாணை வந்தது. தூஃபூ குறிப்பிடுகிறார்:[15]

> "ஒருமிடா மதுவுக்குப்பின் லீபோ ஒருநூறு
> பாக்கள் எழுதினார்.
> சங்கன் மதுக்கடையில் அவர் ஆழ்ந்து துயின்றார்
> அப்போது அரசுஆணை அழைத்தது;
> அரசுப்படகில் ஏறவில்லை,
> "உங்கள் அடக்கமான பணிமகன்
> மதுதேவதையாக இருக்கிறான்" என்றார்.

லீபோ வின் அரசவையுடன் தொடர்பு கொண்ட வாழ்க்கை குறுகிய காலமே எனினும் ஒளிமயமானது. இவரைப் பற்றிய பல நிகழ்வுகள் (Anecdotes) வழங்குகின்றன. அவற்றுள் இரண்டொன்றைக் கூறலாம்.

1. மேலே சுட்டப்பட்ட நிகழ்வின்படி இக்கவிஞர் கூடுதலாக மது அருந்தி ஆழ்ந்து துயின்ற பொழுது அவரை நினைவுலகுக்குக் கொண்டுவரும் பொருட்டு அவர் முகத்தில் தண்ணீரால் அறைந்தனர். விழித்தவுடன் தன் புரவலராகிய பேரரசரைப் பற்றிப் பத்துக்கும் மேற்பட்ட பாக்களை விரைந்து பாடினார்.

2. பேரரசரின் மெய்க்காப்பாளனாகிய அலியைத் (Eunuch) தன் காலில் உள்ள புதைமிதியடியைக் (Boots) கழற்றும் படி இக்கவிஞர் ஏவினார். இதனைப் பொறுத்துக் கொள்ளாத மெய்க்காப்பாளன் பேரரசரின் முன்பாகவே இவரை இழிவாகப் பேசியதாகச் சொல்லப்படுகிறது.

தலைநகர் சங்கனில் மூன்றாண்டுகள் முடிந்தபின் கவிஞர் லீபோ சீனச் சாம்ராச்சியத்தை முழுதுமாகப் பார்க்கும் பொருட்டு மிக நீண்ட பயணம் மேற்கொண்டார். அவர் பயணத்தின் பொழுது உள்ளூர் அரசு அதிகாரிகளின் மரியாதைக்குரிய விருந்தினராக இவர் உபசரிக்கப் பெற்றார். இவருடைய புகழ் நாடெங்கும் பரவத் தொடங்கியது.

அன் லூ ஷன் (An Lu-shan) புரட்சிக் காலத்தில், யாங்குத்சே (Yangtze) சமவெளிப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தார். வடசீனத்தில் நடந்த போரினால் இவர் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்படவில்லை. எனினும், ஒளிப் பேரரசரின் (Brilliant Emperor) எண்ணிலாப் புதல்வர்களில் ஒருவரான யுங்கு இளவரசர் (Prince of Yung) தங்குப் (Tang) படைக்குத் தலைமை தாங்கிக் கிழக்கு மத்திய சீனத்தில் போரில் ஈடுபட்டிருந்த பொழுது, லீபோ சிக்கிக் கொண்டார். இளவரசரின் தோல்விக்குப் பின் லீபோ சிறைப்படுத்தப்பட்டுத் தென்மேற்குச் சீனத்தின் உட்பகுதியில் நாடு கடத்தப்பட்டார். அந்த இடத்திற்கு

அவர் போவதற்கு முன்பாகவே, அரசியல் குற்ற மன்னிப்பு ஆணை அவரை யாங்குத்சே பள்ளத்தாக்கிற்கு மீட்டு வந்தது. இங்கு அவர் பல்லாண்டுகள் நோய்வாய்ப்பட்டு இறந்து போனார்.

அவர் இறப்பினைப் (Romantic death) பற்றி ஒரு கதை வழங்குகிறது. அவர் கூடுதலாகக் குடித்திருந்த நிலையில் படகில் போய்க் கொண்டிருந்த பொழுது ஆற்று நீரில் காணப்பட்ட நிலாவின் பிரதி பிம்பத்தைத் தழுவுவதற்காக முயன்றார். அப்பொழுது படகு ஒருபுறமாகச் சாய்ந்து தண்ணீரில் இழுத்துச் செல்லப்பட்டார் என்பதுதான் அக்கதை (Legeand) ஆகும்.[16]

லீபோவின் கவிதைகளில் புனைவியல்தான் (Romanticism) உயிர்த்துடிப்பாக உள்ளது. நெடுங்காலமாக இருந்து வரும் சமுதாய அமைப்புக்களையும் மரபு சார்ந்த வழக்கங்களையும் எதிர்த்துப் போரிட்டார். வாழ்வியலின் நல்ல பொருள்கள் என்று அவர் மதித்தவை பாடல், இசை, காதல், நட்பு என்பனவாகும். இவற்றின் வாயிலாக ஒருவர் பெறும் இன்பம்தான் உண்மையான இன்பம் என்று அவர் நம்பினார். ஏனைய தங்கு (Tang) கவிஞர்களைப்பேலவே லீபோவும் (Li Po) சந்தர்ப்பக் கவிதைகள் (Occasional Poems) பலவற்றைப் பாடியுள்ளார். தன் நண்பர்களுக்குப் பிரியாவிடை கூறும் பொழுது இவர் எழுதிய பாடல்களும், மதுவருந்தும் விழாக்களில் இவர் பாடிய கவிதைகளும் குறிப்பிடத்தக்கவை.

வாங்கு லூன் (Wang Lun) என்னும் நண்பர்க்கு இவர் புனைந்துள்ள பிரியா விடைப் பாடல் (Farewell song) ஒன்றின் சாரத்தினைத் தருகிறோம்:[17]

“லீபோ படகில் ஏறிப் பிரியப் போகிறார்.
திடீரெனக் கடற்கரையில் காலடி ஓசையும்
பாடல் ஒலியும் அவர் கேட்கிறார்.
நீர் நிலையின் ஆழமோ ஆயிரம் அடி இருக்கும்.

ஆனாலும், எனக்கு வாங்கு லூன் காட்டும்
பிரியாவிடை அன்பு
அளவுக்கு அது (நீர்நிலை) ஆழமானது அன்று."

இதனால், தன்னிடம் உயிர்த் தோழர் வாங்கு லூன் (Wang Lun) செலுத்திய அன்பின் ஆழம் அளவிடுதற்கு அரியது என்ற உண்மை புலனாகும்.

நன்கிங்கு (Nanking) என்ற நகரின் மதுக்கடையினை விடுத்துப் பிரியும் பொழுது இவர் புனைந்த கவிதை, "Parting at a Wine-shop in Nanking" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆக்கம் பெற்றது. அதன் தமிழாக்கம் இங்கே காண்போம்:

"★வில்லோ காற்று வீசுவதால் பூக்கிறது;
மதுக்கடையினை மணத்தால் நிரப்புகிறது.
வூ(Wu)நகரத்து இளம்பெண் விருந்தினர்
புதுமது அருந்த வற்புறுத்துகிறாள்.
நன்கிங்கு இளைஞர்கள் எனக்குப் பிரியாவிடை
கூற வருகிறார்.
வழியனுப்பிவிட்டு பயணியரும் பிறரும்
மதுக்கிண்ணத்தைக் காலி செய்கின்றனர்.

அன்புகூர்ந்து செல்க, கிழக்குநோக்கி ஓடும்
ஆற்றினைக் கேட்க.
நண்பனின் பிரிவிடை அன்பினும் நெடுந்தூரம்
அதனால் செல்ல முடியுமா?"

குறிப்பு : ★வில்லோ - Willow; மரவகை.

பிரிவு என்பது இனிப்பான துன்பம். உயிர் நண்பர்களுடன் மது அருந்துதல் என்பது அரியதோர் இன்பம்; வாழ்வின் துக்கங்களிலிருந்து தப்பிச் செல்லும் நிழற்சாலை. கவிஞரின் "Wine will be served"[18] என்ற பாடலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது:

"வானின்று கீழிறங்கும் மஞ்சள்நதியின் நீர்
விரைந்தோடி கடலுக்குள் உருண்டுபோகிறது
திரும்புதல் ஒரு பொழுதும் இல்லை என்பதை
நீ கண்டது இல்லையா?
பெரிய கூடத்தில் ஒளிமிக்க கண்ணாடியில் தங்கள்
வெள்ளை முடியைப் பார்த்து மனிதர்கள்
இழவுக் கவலைப்படுவதை நீ பார்த்தது
இல்லையா?
காலையில் அலங்கரிக்கப்பட்ட கருமுடி
இரவுக்குள் பனிநிறமாக மாறவில்லையா?
வாழ்க்கையில் குதுகலம் அமைந்து ஒருவன்
முழுமையாக அனுபவிக்க வேண்டும்.
நிலவை நோக்கி மதுக்கிண்ணம்
காலியாக ஒருபொழுதும் அனுமதிக்காதே
இறைவன் வழங்கிய என் திறமைகள்
உரிய பயன் தந்தேயாகல் வேண்டும்;
ஆயிரம் பொற்காசுகளைத் தூக்கி எறிக,
அவை திரும்பி வரமாட்டா.
ஆட்டை வறுத்திடுக, எருதினை வெட்டுக,
உண்டு களிப்போம்.
நெடுநேரம் மதுஅருந்தி முந்நூறு கிண்ணங்களைக்
காலி செய்வோம்!
இளம் அறிஞர் ★தன்சீயு, [N]பேராசான் சேன்,
மது பரிமாறப்படும்;
பருகுவதை நிறுத்த வேண்டாம்.
உங்களுக்காக ஒரு பாட்டுப் பாடுகிறேன்;
செவிகொடுத்துக் கேளுங்கள்.
மணிகள், முரசுகள், மரகதக் கலன்கள்
பேணுதற்குரியவை அல்ல;
எப்பொழுதும் மது பருகுதலையே
ஒருவன் விழைகிறான்,
மயக்கம் அடையாத நிலையை அன்று;

பண்டைக் காலத்து முனிவர்கள் அமைதியாய்,
தனிமையாய் உள்ளனர்.
பெருங்குடியாளர் மட்டுமே தமக்குப்பின்
தம்பெயரினை விட்டுச் சென்றனர்.
[K]அமைதி மகிழ்வுக் கோயிலில் [A]இளவரசர் சென்
விருந்து கொடுத்தார்;
பத்தாயிரம் பெறும் மதுவினை மாந்தினர்,
மகிழ்விலும் பரிகாசப் பேச்சிலும் ஆழ்ந்தனர்
விருந்தளிப்போர் பணம் இல்லை என்று
ஏன் சொல்லுவார்?
உன்னுடன் சேர்ந்து பருகும் பொருட்டுப் போய்,
மதுவினை எடுத்துவா. ஐந்து நிறக்குதிரை,
ஆயிரம் பொன் மென்மைத்தோல்-
அந்தப் பையனை அழைத்து அவற்றை
எடுத்துப்போய்
நல்ல மதுவுக்காக அடகு வைக்கச் சொல்லுவோம்.
சேர்ந்து குடிப்பதால் கணக்கற்ற ஆண்டுகளின்
துக்கங்களை விரட்டுவோம்."

குறிப்பு : *தன்சீயு - Tan-Ch'iu; [N]பேராசான் சேன் - Master Ts'en. [K] அமைதி மகிழ்வுக் கோயில் - Temple of Peace and Joy. [A]இளவரசர் சென் - Prince Ch'en.

கவிஞர் லீபோ களித்து மகிழ்வதில் கவலையினை மறந்து கவி பாடியவர் என்பதை ஒளிவு மறைவின்றித் தன் பாடல்களில் பதிவு செய்துள்ளார்.[19] யோகாசார பௌத்தத்தின் ஒரு பிரிவு தியான பௌத்தம்; மற்றொரு பிரிவாகிய தாந்திரிக பௌத்தத்தில் குடிப்பழக்கம் ஒரு யோக சாதனமாகக் கருதப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் பௌத்தச் சார்பினராகிய இக்கவிஞரின் வாழ்வியலை நோக்குதல் வேண்டும். இவர் தாவு மார்க்கத்திலும் ஈடுபாடு கொண்டவர். பௌத்தத்திற்கும் தாவு மார்க்கத்திற்கும் இடையே காணப்படும் பொதுக்கூறுகளில் சூனிய வாதம், நிலையாமைக் கொள்கை,

தற்பண்பாடு (Self-Culture) என்பன சுட்டுதற்குரியன. பெரும்பான்மைக் கவிஞர்கள் குடிப்பழக்கம் கொண்டவர்கள். சங்க காலப் புலவர்களில் புகழ்பெற்ற கபிலர், மாங்குடி மருதனார், ஔவையார் உள்ளிட்டோர் மது பருகிய அனுபவங்களைத் தம் பாடல்களில் விட்டுச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பலரோடு கூடி மது பருகுதலையே லீபோ (Li Po) விரும்பினார். தன் பக்கத்தில் நண்பர் ஒருவரும் இல்லையெனின், பேசாத பொருள்களாகிய இயற்கையின் தோழமையினை நாடுதல் வழக்கம். மது மயக்கம் குறையும் உணர்வு நிலையில் கற்பனைப் பெருக்கெடுக்க "நிலவின் கீழிருந்து தனியே பருகுதல்" (Drinking Alone under the Moon) என்ற பாடலைப் புனைந்தார்:[20]

"மலர்களுக்கு நடுவே மதுக்குடத்துடன்
தன்னந் தனியனாய்ப் பருகுகிறேன்,
என்பக்கத்தில் இனிய நண்பர் எவரும் இலர்.
கிண்ணத்தைத் தூக்கி உயர்த்தி
ஒளிநிலாவை வரவேற்கிறேன்,
என் நிழலுடன் சேர்ந்து மூவர்
குழுவினை அமைப்பதற்கு.
சிறிது நேரம் திங்களும் நிழலும் தோழர்களாக
வசந்த காலத்தில் இன்பத்தைத் தேடுவேன்.
பாடுகிறேன் நான், திங்களோ சுற்றுகிறது;
ஆடுகிறேன் நான், நிழல் தாறுமாறாக ஓடுகிறது.
மிதமான நிலையில் இணைந்துநாம்
இன்புறுகிறோம்;
குடித்தபின் ஒருவரை ஒருவர் பிரிகிறோம்.
மனவெழுச்சி இல்லாப் பயணத்திற்குச்
சபதம் செய்வோம் எப்போதும்,
சேய்மையில் உள்ள [c]பால்பாதையில் ஒருவர்க்காக
ஒருவர் காத்திருப்போம்.

குறிப்பு : [c]பால்பாதை -Milky way (வானப்பாதையில் உள்ளது).

இத்தகைய பாடல்கள் கவிஞர் லீபோவின் புனைவியல் கற்பனைகளையும் உணர்வுகளையும் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

காதலிலும் கற்பனையிலும் தன்வருத்தத்திலிருந்தும் தளர்ச்சியினின்றும் விடுபட்டுப் புகலடைதலைத் தேடினார். அவர் மேற்கொண்ட பயணங்களின் பொழுது சந்தித்த வனப்புடைய வனிதையர் பற்பலர் அவர் நினைவில் வந்தனர். பின்னர், அவர் பாடல்களில் இடம் பிடித்தனர். யாங்குத்சே (Yangtze) சமவெளிப் பகுதிகளில் கவிஞர் சந்தித்த அழகிய பெண்கள் வூ (Wu) மற்றும் யூச்சு (Yuch) என்ற இடங்களுக்கு உரியவர்கள். தன் நெஞ்சம் கவர்ந்த இக் காரிகையரைப் பற்றிப் பாடினார்:[21]

> "வூவின் இளம்பெண்கள் சொலிக்கும்
> வெண்ணிறம்.
> வேடிக்கைக்காகப் படகினை அசைக்க
> விரும்பினர்.
> கடைக்கண் பார்வைகளை விலைபேசினர்
> வசந்தத்தின் இதயத்தை விட்டெறிந்தனர்,
> மலர்களைப் பறித்தனர், சுற்றும் மனிதனுடன்
> சரசமாடினர்."

பழைய பயண நினைவுகள் இப்படிப் பாடல் வடிவம் பெறுதல் இயல்புதானே!

வடசீனாவின் டார்டர் (Tartar) பெண்களும் அழகில் விஞ்சியவர்களே. அவர்களுடன் பழகிய அனுபவத்தையும் லீபோ பாடியுள்ளார். சங்கன் (Ch'ang-an) கோநகரில் நடந்து போகும் வழியில் அழகிய நங்கையினைக் கண்டு ஆனந்த பரவசம் அடைந்த கவிஞர் பாடிய கவிதை, "To a Beautiful Woman on the Road" என்று ஆங்கில ஆக்கம் பெற்றது.[22]

பிரிவாற்றாத பெண்கள் தங்கள் கணவரின் வருகைக்காகக் காத்திருந்து படும் துன்பங்களையும் லீபோ பாடியுள்ளார். மூங்கில் குதிரையில் (Bamboo horse) ஏறி விளையாடிக் கொண்டிருந்த அண்டை வீட்டுப் பையன் பதினான்கு வயது பெண்ணைக் காதல் புரிந்து கடிமணம் செய்து கொண்ட நிகழ்வும் இவர் பாடற்குப் பொருளாக அமைந்தது.[23]

மன உளைச்சலிலிருந்தும் வாழ்க்கைத் துன்பங்களினின்றும் கவிஞர் தப்பித்துக் கொள்ளும் மற்றொரு வழியாக இயற்கையுடன் தன்னை இணைத்துக் கொள்ளும் ஈடுபாடு அமைந்துள்ளது. தாவு தத்துவத்தின்படி வாழ்க்கை ஒரு பெரும் கனவு என்றுஇவர் எண்ணினார். பறவைகளின் பாடலோசைகளில் மெய்மறந்து நின்றார். பாடுவதினாலும் பருகுவதாலும் இந்த வாழ்வினை மறத்தல் முடியும் எனின், முனிவரின் வாழ்வினை மேற்கொள்ளம் பொருட்டு, உலக ஓட்டத்தினின்றும் பின்வாங்கிக் கொள்ளுதல்தான் (Withdrawal) தேர்ந்து கொள்ளுதற்குரிய செயல் என்று இக்கவிஞர் கருதினார். இயற்கையின் மடிமீது இருப்பதால்தான் துன்ப நோயைத் துடைக்கும் சிறந்த மருந்தினைப் பெறுதல் இயலும் என்று நம்பினார். இயற்கைச் சூழலில்தான் ஆன்மா புனிதம் அடைகிறது என்று பாடினார்:[24]

"பச்சை மலைகளின் இருப்பிடத்தில் ஏன்
வாழவேண்டும் என்கிறாய்
சிரிப்புத்தான் வருகிறது, பதில் வரவில்லை
என்நெஞ்சம் புனிதம் ஆகிறது.
மரங்கள் பூக்கின்றன; சுவடு தெரியாமல் ஆறு
ஓடுகிறது.
மனித உலகுக்கு அப்பால் மற்றொரு விண்ணும்
மண்ணும் உண்டு."

சாந்தம், புனிதம், ஒய்வியல் வாழ்வு - இவற்றைத் தம் மலை வாசத்தால் பெற்றவர் லீபோ. இவைதாம் அவருக்கு ஆறுதல் அளித்தவை. எவ்வளவுதான் கவர்ச்சியூட்டுவதாக இருப்பினும்,ஒரே இடத்தில் நெடுங்காலம் இருப்பது அவருக்குப் பரபரப்பை உண்டாக்கிவிடும். சீனக் கவிஞர்களிலே கூடுதலாகப் பயணம் போனவர்களில் இவரும் ஒருவராக எண்ணப்படுகிறார். சீனப் பெருநாட்டின் மலைகள், ஆறுகள் ஆகியவற்றின் பெரும்பகுதியை இவர் காலடிகள் தாண்டிச் சென்றுள்ளன. சங்க காலத்துப் புலவர்களும் வேளிரையும் வேந்தரையும் தேடியும் நாடியும் பழுமரம் தேரும் பறவைபோல் அலைந்தவர்கள் என்பது இங்கு எண்ணத்தக்கது. பயண அனுபவங்களை ஆற்றுப்படை இலக்கியமாக வடிவமைத்துக் கொடுத்த சிறப்பும் அவர்களுக்கு உண்டு.

லீபோ (LiPo; Li Bai என்றும் கூறப் பெற்றவர்) புனைந்தவற்றில் 900 பாடல்களுக்கு மேல் கிடைத்துள்ளன. வாழ்வியல், சமுதாயம் பற்றிய பொருள்கள் பலவற்றையும் இக்கவிஞர் பாடியுள்ளார். எதேச்சாதிகாரத்தையும் (Autocracy), அடக்குமுறையினையும் எதிர்த்தலைப் பாராட்டியும், வீரதீரச் செயல்களை ஆதரித்தும் இவர் பாடியவை சிறப்புடையவை. ஆளும் வருக்கத்தாரின் இலஞ்ச இலாவண்யங்களை வெளிப்படுத்தியும், வாழ்க்கையின் இருண்ட பகுதிகளைச் சித்திரித்தும் இவர் எழுதிய பாடல்கள் குறிப்பிடத்தக்கவை.[25]

லீபோ யாப்பியல் கட்டுகளை நெகிழச் செய்தவர். அவருடைய சொற்கள் மடைதிறந்த வெள்ளம்போல் பெருக்கெடுத்தவை. உணர்வுகளின் ஊர்தியாகவே அவர் பயின்றுள்ள சொற்கள் ஒளிர்கின்றன. பின் வந்த கவிஞர்களின் படைப்புக்களில் அவருடைய தாக்கம் உண்டு.

லீபோ, ஒரு நாடு கடத்தப்பட்ட தேவதை (Banished Angel) என்று அழைக்கப் பெற்றார். இதற்குக் காரணம் : அவர் பாடல்கள் 1. நிலத்தோடு ஒட்டவில்லை (unearthly). 2. உலகியலைத் தாண்டிச் சென்றவை (Transcendental). 3. தெய்வப்பித்துடன் வரவில்லை. எங்ஙனமாயினும், சீன இலக்கியத்தின் பொற்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய கவிவாணரில் லீபோவுக்குச் சிறப்பான இடம் உண்டு எனலாம்.[26]

ஈ. தூஃபூ (Tu Fu அல்லது Du Fu)

தூஃபூ என்னும் கவிஞர் கி.பி.712-770 என்ற காலப் பகுதியில் வாழந்தவர். கவிதைக் கலைத்திறனிலும் கவிதை உத்திகளிலும் சிறந்து விளங்குகிறார். லீபோவுக்கும் தூஃபூக்கும் முரண்பாடு உண்டு. லீபோ தாவு மார்க்கம் மற்றும் பௌத்தம் சார்ந்தவர். தூஃபூ கன்பூசிய நெறியினர். முன்னவர் புனைவியல் போக்கினர் (Romanticist). பின்னவர் உண்மையியல் கவிஞர் (Realist), அறவியல் நடையினர். லீபோ உலகினின்றும் தப்புதற்கு மது, மங்கை, இயற்கை என்பவற்றை நாடிச் சென்றவர். தூஃபோ சமுதாயத்தை விட்டுத் தப்புவதற்கு விரும்பவில்லை; சமுதாய மேம்பாட்டிற்குத் தன்னால் இயன்றதைச் செய்ய விரும்பியவர். தன் பேரரசுக்கு மனப்பூர்வமாகவும் விசுவாசத்துடனும் பணி புரிய வேண்டும் என்று விழைந்தவர். தங்கு (Tang) மரபின் மாட்சிகளைத் தம் புனைவியற் பாடல்களில் பட்டியலிட்டுப் பாடியவர் லீபோ. ஆனால், தங்கு அரசின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்த சீர்கேடுகளையும் கொடுமைகளையும் தன் மனிதநேயக் கவிதைகளில் பாடியவர் தூஃபோ.

ஹோனான் (Honan) என்ற ஊரில் கற்றறிந்த ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் தூஃபூ (Tu Fu). பல ஆண்டுகளாகத் தேர்வுக்காகக் கடும் பயிற்சியினை மேற்கொண்ட

போதிலும், சங்கனில் (Ch'ang-an) நடைபெற்ற இலக்கியத் தேர்வுகளில் தோல்வியடைந்தார். ஆனாலும், அரசவையில் ஓர் எளிய பதவி அவருக்கு வழங்கப்பட்டது. அன்லூரஷன் (AnLu-shan) புரட்சியால் சிக்கிக் கொண்ட இவர் பல்வகைத் துன்பங்களையும் அனுபவித்தார். பின்னர், புரட்சியாளர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டார். தன் வழியைத் தானே தேடிச் சென்றார். பட்டினி கிடந்தார். கந்தலை உடுத்தினார். இறுதியாக ஒளிப்பேரரசர்க்குப் (Brilliant Emperor) பின் அரியணை அமர்ந்த புதிய அரசரிடம் சேர்ந்தார். தலைநகரில் (-சங்கன், Ch'ang-an) தணிக்கையாளர் பதவியைப் பெற்றார். சக ஊழியரைக் காக்கும் நோக்கில் அவர் வெளிப்படையாகப் பேசியதால் பதவியை விட்டுவிலக வேண்டிய நிலை உண்டாகியது. பின்னர், செங்குது (Ch'eng-tu) என்ற நகரில் சிறு பணியில் சேர்ந்தார். எஞ்சிய காலத்தினை ஒரு கூரைக் குடிலில் அமைதியாகக் கழித்தனர். அப்பொழுதுதான் அவர் பல கவிதைகளை எழுதினார். தன் முதுமைக் காலத்தில் தன் நண்பரும் புரவலரும் இறந்ததால் பல இடங்களுக்கும் பயணம் மேற்கொண்டார். பயணத்தின் பொழுது மத்திய சீனாவில் ஹுனன் (Hunan) என்ற இடத்தில் இறந்தார். அவர் இறப்பினைப் பற்றிய ஒரு நிகழ்வுக் குறிப்பு (anecdote) வழங்குகிறது. ஒரு வெள்ளத்தினின்றும் அவர் காப்பாற்றப்பட்ட பின் அவருக்கு மக்கள் வைத்த விருந்தில் அளவுக்குமேல் உணவு உட்கொண்டதால் திணறி இறந்துவிட்டார் என்பதே அக்குறிப்பு ஆகும்.

கன்பூசிய நெறியில் ஊன்றி நின்ற இக்கவிஞர் முதல் நிலையில் சிறந்த குடும்ப மனிதராக (Family man) மதிக்கப்படுகிறார். வறுமை காரணமாகவும், தொடர் போர் காரணமாகவும் தன் பெண்டு பிள்ளைகளைப் பல ஆண்டுகள் பிரிந்திருந்த காலத்தில் தூஃபூ எழுதியுள்ள கவிதைகள் கல் நெஞ்சையும் கரையச் செய்வன.

தன்னுடைய துணிச்சலான நெடும்பயணத்தினின்றும் வீடு திரும்பிய இக்கவிஞர் பசியால் இறந்துவிட்ட தன் இளைய மைந்தனைக் கண்டார். தன் உணர்வுப் பெருக்கினை, "Uttering my Sentiments in Five Hundred Words on My Trip from the Capital to Feng-hsien" என்ற நெடும்பாட்டினில் கொட்டி வைத்துள்ளார். இப்பாடலின் ஒரு சில அடிகளின் பொருண்மையினைத் தமிழில் காண்போம்:[27]

"என்முது மனைவி அயல்நிலத்தில் தங்குகிறாள்,
வளியாலும் பனியாலும் எங்கள் பத்துவாய்கள்
பிரிந்தன.
யார்தான் நெடுங்காலம் கவனிப்பாரின்றி
விட்டிருத்தல் கூடும்?
எனவே, அவர்களின் பசி, தாகத்தில் பங்குகொள்ள
வீடு சென்றேன்.
கதவு தாண்டியதும், உரத்த அழுகுரல் கேட்டேன்;
எங்கள் கடைசி மகன் பட்டினியால் மடிந்தான்
இப்பெரும் துயரில் பங்கு கொள்ளாமல் எப்படி
நான் பின் வாங்குவேன்?
அண்டை வீட்டார் அனைவரும் அழுது
புலம்பினர்;
தந்தையாய் இருத்தற்கு நான் வெட்கப்படுகிறேன்;
உணவின்மை அவன் இறப்பிற்கு ஏதுவாயிற்று!"

உண்மையில் குடும்பப் பற்றும் பாசமும் மிக்கவர் கவிஞர் என்பதை இப்பாடல் தெளிவுறுத்துகிறது. வீட்டை விட நாட்டை முதன்மையாகக் கருதிச் சென்ற கவிஞர் இந்த அவலத்தால் மனம் இடிந்து போனார்.

நிலா ஒளி இரவு (Moon light Night)என்ற கவிதை பிரிவுக் காலத்தில் தன் மனைவியை எண்ணிப் பாடியது.[28] அதன் தமிழாக்கத்தைக் காண்போம்:

"ᴺஃபூசோவில் இன்று நிலா ஒளி இரவு-
தன் அறையிலிருந்து தனிமையில் அதனைக்
கவனித்துக் கொண்டிருக்கலாம்.

சிறுசுகளுக்காக இரங்குகிறேன், சேய்மையில்
உள்ளனர்,
[A]சங்கன் பற்றி அவர்களுக்கு எந்த நினைவும்
இல்லை.
அவள் மேகக் கூந்தலை நறும்பனி நனைக்கிறது;
அவள் மரகத-வெள்ளைத் தோள்களை
ஒளிக்கதிர்கள் குளிரச் செய்யும்.
மெல்லிய கதவுத் திரையை நோக்கி நாம் சாய்ந்து
நம்கண்ணீர் வறளும்வரை அந்நிலா நம்மேல்
சாய்வது எப்போது?"

குறிப்பு : [N]ஃபூசோ - Fu Chou, [A]சங்கன் - Ch'ang-an - இவ்விரண்டும் இடப்பெயர்கள். பின்னது தலைநகர்.

எங்கிருந்தாலும் எப்பணியில் ஈடுபட்டிருப்பினும் மனைவியின் நினைவும் மக்களின் நினைவும் அன்பின் அடி ஆழத்தினின்றும் வெளிப்பட்டுச் சுடர்தலை இப்பாடல் புலப்படுத்துகிறது.

போர்க் காலத்துப் பாடல்களில் மற்றும் ஒன்று வீடு திரும்பும் பொழுது பாடப்பட்டது. போர் நிகழும் பொழுது அஞ்சத்தக்க சூழ்நிலையில் வீடு திரும்புதலைக் கூறுவது வடதிசைப் பயணம் (Northern Journey) என்னும் பாடல் ஆகும். அவல உணர்வும் நகைச்சுவை உணர்வும் விரவிய குரலுடன் தன் குடும்பத்தினைப் பற்றிய விரிவான சொல்லோவியமாக இப்பாடல் விளங்குகிறது.[29]

"ஓராண்டிற்குப்பின் அவ்வோலைக் குடிலை
அடைந்தேன்-
என்மனைவி மக்களின் ஆடைகளில் நூறு
ஒட்டுக்கள் இருந்தன.
பைன் மரங்கள் எங்கள் துயர அழுகையை
எதிரொலித்தன.
வருந்திய நீரூற்று எங்கள் தேம்பலில்
பங்குகொண்டது.

என் வாழ்நாளெல்லாம் கொஞ்சிய மகன் தோலின்
நிறம்
பனியை விட வெளுத்துவிட்டது -
தன் தந்தையைப் பார்த்ததும் அழுதான், முதுகை
எனக்குக் காட்டி;
காலுறை இல்லாத அவன் கால்கள் அழுக்காய்,
பசையாய் இருந்தன.
படுக்கையின் முன்பாக என் இரு சிறு பெண்கள்
இருந்தனர்,
அவர்தம் முழங்காலுக்கு மேலேதான்
ஒட்டுப் போட்ட ஆடை;
அவர்தம் சித்திரப் பின்னல் துணிகள்
கோணல்மாணல் ஆயின-
கடல் தேவதையும் ஊதாநிற ஃபொனிக்சும்
சிற்றாடையின் மேல்பகுதியில் நின்றபடி
பின்னல்ஆடை.
அம்முது மனிதன் கலக்கமுற்றான், நெஞ்சப்
பிணியுடன்,
வாந்தியெடுத்தான், கழிந்தான்,
பின்பல நாள் தூங்கினான்,
"குளிரின் நடுக்கத்திலிருந்து உங்களைக் காப்பதற்கு
என்பையல் பட்டாடையின்றி எப்படி என்னால்
இருக்க முடியும்?"
இப்பொழுது பொடியும் மையும் திறக்கப்பட்டன,
மெத்தைகளும் படுக்கை ஆடைகளும் காட்சி
ஆயின.
என் இளைத்த மனைவியின் முகம் மீண்டும்
ஒளிர்கிறது;
தங்கள் தலை முடியைச் சிறுமிகள் நீவுகின்றனர்
தங்கள் தாயைப் பின்பற்றி, ஒவ்வொரு பாங்கிலும்,
எப்பொழுதாவது ஒப்பனை புரிந்து கொள்ளுவர்.
செவ்வண்ணச் சாயம் நறுந்துகள் உடல் முழுதும்

அகன்று விரிந்த விழிப்புருவங்களை
அழகுபடுத்துவர்.
இப்பிள்ளைகளிடத்திற்கு உயிருடன் திரும்பி
வருதல் என்பது
தன் தாகத்தையும் பசியையும் மறத்தலைப்
போன்றது!
பொருள்கள் வேண்டுமெனக் கேட்கும் பொழுது
என்தாடியை இழுப்பதில் போட்டிப் போடுவர்!
சீற்றத்துடன் அவர்களிடம் நேரடியாக
ஊளையிடுதல் யாரால் முடியும்?
புரட்சிப் பாசறையில் அனுபவித்த துன்பங்களை
எண்ணிப் பார்த்து
குழப்பத்தையும் கூக்குரலையும் விருப்பத்துடன்
தாங்கிக் கொள்ளுகிறேன்.
புதிதாகத் திரும்பினேன், என் உணர்வுகளைப்
பேணுதல் வேண்டும்
பிழைப்பினை உண்டாக்குதல் பற்றிப் பேசுதல்
ஏனோ?"

பல்லாண்டுகள் செல்லினும் தன் குடும்ப நிலைக்கு இரங்கிய கவிஞர் பாசம் குன்றாமல் மனைவி, மக்களின் கழிவிரக்க நிலைக்கு உள்ளம் உருகுகிறார். பொறுமையுடன் துயரினை எதிர்கொள்கிறார். குடும்பத்தை அரவணைத்துக் கொள்ளுகிறார்.

அன்றாடக் குடும்ப வாழ்க்கையில் கதகதப்பு, இன்பம், அமைதி பற்றியும் கவிஞர் தூஃபூ (Fu Fu) பாடியுள்ளார். குடும்பத்துடன் அவர் மேற்கொண்ட சுற்றுலாக்கள் குறித்தும் அவர் பல கவிதைகள் புனைந்துள்ளார். போகிய வழியில் பல துன்பங்கள் இருந்தும்கூட, சேசுவன் மலைகளுக்கு (SzeChuan mountains) தாம் மேற்கொண்ட பயணத்தினால் உண்டாகிய இன்ப அனுபவங்களையும் கவிதையாக்கினர்.[30]

"மூங்கில் தோப்புக்குள் ஊடுருவியதும் ஏவலர்
தமக்குள் பேசுகிறார்;
மலைமேல் மேகங்களைக் கண்டு சிறுவர்
சத்தமிடுகிறார்.
கற்கள் கரணம் போடும் பொழுது குட்டிச்
சாத்தான்கள் அதிர்ந்தன;
அம்பின் முனையில் கருங்குரங்குகளும்
சிற்றணில்களும் வீழ்ந்தன.
வேடிக்கையும் மகிழ்ச்சியும் உண்மையில் இவை
தருவன,
என்பயணத்தின் பாரதூரங்கள் எனக்கு
ஆறுதல் அளிப்பன."

மலையில் தன் குடும்பத்துடன் கவிஞர் தூஃபூ (Tu Fu) சுற்றுலா சென்ற பொழுது உடன் வந்த பணியாளர், சிறுவர்கள் உள்ளிட்டோரின் செயல்களை இப்பாடல் உணர்த்துகின்றது. வில்வித்தையும் கவிஞர் கற்றிருந்தவர் என்பதை இப்பாடலால் உணரலாம்.

தூஃபூ ஒரு கவிஞராக மட்டுமன்றிச் சமுதாய வராற்றாசிரியராகவும் மதிக்கப்படுகிறார். சீனச் சமுதாயத்தின் சீர்குலைவினையும் அவர் பாடல்களில் தெளிவாகவும் நம்பகத்திற்குரியதாகவும் பொறித்துள்ளார். உயர் அலுவலர்களின் ஆடம்பரங்கள், பொதுமக்களின் வறுமை, படைக்குக் கட்டாய ஆள்சேர்ப்பு, போரினால் விளைந்த துன்பங்கள் அழிவுகள் என்பனவற்றை ஒரு சமுதாய வரலாற்றாசிரியராக நின்று தம் பாடல்களில் இயல்பாக வருணித்துப் பாடியுள்ளார்.

செல்வர், ஏழைகள் ஆகியோருக்கு இடையே காணப்படும் ஏற்றத்தாழ்வு, மக்களுக்குக் கடுமையான வரி விதிப்பு, எல்லைப்புறப் போர்க்குப் படைத்தளம் அமைத்தல் ஆகியவற்றை நெருங்கிவரும் புயற் சின்னமாகவும் அபாய அறிவிப்பாகவும் கவிஞர் கருதினார்.[31]

தங்குப் பேரரசின் (T'ang empire) நில எல்லையை அகலப்படுத்தும் பொருட்டுச் பேரரசர் வலிந்து போரிட்டுப் பிறவேந்தரின் நிலப் பகுதியைத் தன்னாட்டுடன் இணைத்துக் கொண்டதைக் கவிஞர் விரும்பவில்லை. அவர் பாடிய போர்த்தேர்ப் பாட்டு (Song of the War Chariot)[32] இங்குத் தமிழாக்கம் பெறுகிறது:

"தேர்கள் அரைப்பொலி செய்தன.
குதிரைகள் கனைப்பொலி செய்தன.
இடுப்பில் வில்லும் அம்பும் கொண்டு வீரர்கள்
போர்நடை புரிந்தனர்.
தந்தையர் தாயர், மனைவிகள் மக்கள் அவர்களை
வழியனுப்பினர்-
*ஹிசியன்-யங்கு பாலத்தைத் தூசு மறைக்கிறது.
தம் உடைகளை வலித்துக் கட்டியும், கால்களைப்
பதித்தும்
அவர்கள் சாலையை அடைகிறார், அழுகிறார்;
அவர்களின் அழுகுரல் ஓசை ஆகாய மேகத்தை
எட்டியது.
பாதையோரமாகப் போகிறவன் ஒருவன்
போர்நடை மனிதனைக் கேட்கிறான்.
அவனோ, "வலிய ஆட்சேர்ப்பு
அழுத்தமாய்" என்றான்.
வடக்கில் ஆற்றினைக் காத்தவர் பதினைவர்
என்பதால்,
படைநிலத்தினை உழுவதற்கு நாற்பதுபேர்
அனுப்பப்பட்டனர்.
அவர்கள் புறப்பட்ட பொழுது, அவர்கள்
தலையினை அரசர் பேராளர் போர்த்தினர்.
திரும்புகையில், அவர்தம் தலைமுடி முன்பே
வெள்ளை,
இன்னும் அவர்கள் எல்லையைக் காத்தல்
வேண்டும்,

ஆங்கே படைக்கம்பத்தின் பக்கம் குருதி ஓடுகிறது,
கடல் உருவாகிறது-
எல்லைப் புறத்தினைத் திறப்பதற்கு வீரப் பேரரசர்
இன்னும் விரும்புகிறார்.
[K]ஹன் சாம்ராச்சியத்தின் மலைகளுக்குக் கீழ்பால்
இருநூறு மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான
சிற்றூர்களில்
முட்களும் புதர்களும் வளர்கின்றன என்பது நீவிர்
கேள்விப்பட வில்லையா?
[N]சின் படைவீரர்கள் கடும் போர்களைத் தாங்கிக்
கொள்ளுபவர்,
நாங்கள், கோழிகள் போல விரட்டப்பட்டவர்.
மறவருள் ஒருவனாகிய யான் புகார் செய்தற்கு
எப்படி தைரியம்? என்று பெரியவரே! என்னைக்
கேட்கிறீர்.
சான்றாக, இவ்வாண்டு குளிர் காலத்தில்
மேற்குக் கணவாய் காக்கும் வீரர்கள்
விடுவிக்கப்படார்.
அந்த மாவட்ட அலுவலர் வரிதண்டலை
வலியுறுத்துகிறார்.
ஆனால், வரிப்பணம் எங்கிருந்து வரமுடியும்?
உண்மையில் புதல்வரைப் பெறுதல் நற்பேறு
அன்று.
பெண்களைப் பெறுதலே பெரும்பேறு ஐயா!
பக்கத்து ஊர்களில் இனிதான் பெண்களின்
திருமணம் நடைபெறும்.
ஆனால், புதல்வர்கள் நூறுகளைகளுக்கு அடியில்
புதைப்படுகின்றனர்.
தொன்று தொட்டுச் சேகரிக்கப்படாது
நீலக்கடலின்மேல்
மிதக்கும் வெள்ளை எலும்புகளை நீங்கள் பார்த்தது
இல்லையா?

புதிய பூதங்கள் துக்கம் கொண்டாடும்,
முணுமுணுக்கும்,
பழைய பூதங்களோ அழுகுரல் எழுப்பும்,
வானமோ இருள்கிறது, மழையோ நனைக்கிறது,
தேம்பும் குரலோ துயரமானது.

குறிப்பு : ★ஹிசியன் - யங்கு - Hsien-yang; Kஹன் - Han; Nசின் - Ch'in.

தாம் வாழ்ந்த காலத்து சமுதாய, அரசியல் நிகழ்வுகளை மனம் நெகிழும்படி கவிஞர் தூஃபூ (TuFu) இப்பாடலில் எடுத்துக் கூறியுள்ளார். இடையிடையே நகையுணர்வையும் அவல உணர்வையும் அள்ளித் தெளித்துள்ளார்.

படைக்குக் கட்டாய ஆள் சேர்ப்பதின் உடனடித் தேவை, விரைவு, ஆள்சேர்க்கும் அதிகாரியின் கொடுமை ஆகியவற்றை ஒருங்கிணைத்துச் சொல்லோவியம் செய்துள்ள இக்கவிஞரின் "Recruiting Officer at Shih-hao" (ஷீ-ஹவோவில் வேலையில் சேர்க்கும் அதிகாரி) என்ற தலைப்பில் அமைந்த மூன்று பாடல்களின்[33] தமிழாக்கம் காண்போம்.

"மாலைப் பொழுதில் Nஷீ-ஹவோ சிற்றூரில்
தங்கியிருந்தேன்,
அங்கு இரவில் மக்களைப் பிடிப்பதற்கு ஓர்
அலுவலர் வந்தார்.
முதிய மனிதர் சுவர் தாண்டிக் குதித்துத்
தப்பிவிட்டார்.
முதிய பெண் கதவருகில் நின்று ஒரு
பார்வையிட்டார்.
அதிகாரியின் சத்தம் எவ்வளவு சினத்தைக்
கக்கியது!
பெண்ணின் அழுகுரல் எவ்வளவு துயரமாய்,
கசப்பாய் இருந்தது!

அவள் முன்னே வந்து பேசிய சொற்களைக்
கேட்பீர்:
[K]யோ-செங்கில் கோட்டைக் காவல் பணியில்
என் மைந்தர் மூவரும்:

1

அவருள் ஒருவன் அண்மையில் ஒருமடல்
அனுப்பினான்:
போரில் மற்றவர் இருவரும் மாண்டனர்.
மிச்சம் இருப்பதற்காகவே ஒருவன் இருக்கிறான்;
நெடுங்காலம் முன்பே இறந்தவர் முடிந்தனர்.
இப்பொழுது வீட்டில் மனிதர் எவரும் இல்லை
முலைப்பால் பருகும் பேரனைத் தவிர,
அவன் இருப்பதால் தாய் சாகவில்லை!
உடுத்த அவளுக்கு முழு ஆடை இல்லை
வீட்டிலும் சரி
வெளியே செல்லும் பொழுதும் சரி.

2

நான் முதியோன் ஆயினும் ஆற்றலில் குறைந்தவன்
எனினும்
இன்றிரவே அதிகாரியைப் பார்த்து விவாதிக்கப்
போகிறேன்.
[L]ஹோ-யங்கு பணிசேர்ப்புக்கு உடன்பதில்
அளிக்கும்படி;
காலை உணவினைக் குறைந்தபட்சம் தயாரிக்க
முடியும்
இரவின் ஆழத்தில் குரல்களின் ஒலி
அடங்கிவிட்டது;
தேம்புதலும் அழுதலும் மட்டுமே தெளிவின்றிக்
கேட்டது.
வைகறைப் பொழுதில் என்பயணம் தொடர்ந்தேன்
அந்த முதுமனிதருக்கு மட்டும் பிரியாவிடை
கூறினேன்."

3

குறிப்பு : [N]ஷீ-ஹவோ -Shih-hao; [K]யேசெங்கு - Yeh-Ch'eng; [L]ஹோ-யங்கு - Ho-yang.

பல்வேறு ஊர்களிலும் படைக்குக் கட்டாய ஆள் சேர்ப்பினால் ஆண்களும் பெண்களும் பட்ட கடுந்துயரங்களும் இழப்புகளும், போர்வெறியின் கொடுஞ்செயலும் ஈவிரக்கமற்ற அதிகாரிகளின் அக்கிரமங்களும் இப்பாடல்களில் கவிஞர் தூஃபோ விளக்கமாகவும் விரிவாகவும் சொல்லோவியம் செய்துள்ளார்.

புரட்சிப் போருக்குப் பின் சண்டை ஓய்ந்த பாடில்லை; விட்டுவிட்டு நடைபெற்றது. தூஃபோவின் போர்க்கள வருணனை புறநானூறு, பதிற்றுப்பத்து மற்றும் பரணி இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள மறக்களப் புனைவுகளுடன் ஒப்பிடத் தக்கது. புல்வெளிகள் மரங்களின் இடையே அடுக்கப்பட்டிருந்த பிணங்களின் அடுக்கு, ஓடைகளையும் சமவெளிகளையும் செவ்வண்ணமாக்கிய குருதிப் பெருக்கு, நரிகளின் ஊளை என்பன பற்றிய புனைவுகளை இவர் பாடல்களில் காணலாம்.

நிலவரி செலுத்தவும், படையில் சேர்வதிலிருந்து சலுகை பெறவும் அன்பினையும் பாசத்தினையும் முறித்துக் கொண்டு சிறுவர்களும் சிறுமிகளும் விற்கப்பட்டதையும் இவர் பாடல்களினால் அறியலாம். பொதுமக்களின் துன்பங்களுக்கும் கவலைகளுக்கும் வேராக விளங்கும் அரசின் கூடுதல் வரி விதிப்புக்கள் யாவும் 'கடற்கன்னியின் முத்துப் போன்ற கண்ணீர் குருதியாக மாறின' என்ற குறியீட்டுப் புலப்பாட்டினால் கவிஞரால் சுட்டப்பட்டன. தென்கடல்களிலிருந்து வந்த விருந்தினர் ஒருவர் (A Quest came from the South Seas) என்ற கவிதையில் இவர் அடைந்த பாதிப்புக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.[34]

"தென்கடல்களிலிருந்து விருந்தினர் ஒருவர் வந்தார்
கடற்கன்னியின் முத்தினை எனக்குப் பரிசளித்தார்.
முத்தின்மேல் மறைபுதிர் எழுத்துக்கள் இருந்தன;
அவற்றைப் படிக்க முயன்றும் பயனில்லை.
அரசின் தேவைக்குப் பயன்படும் காலஅளவும்
ஒருபெரும் பைக்குள் அம்முத்தினை
வைத்திருந்தேன்.
இன்று அப்பையினைத் திறந்து பார்த்த பொழுது
முத்து குருதியாக மாற்றம் பெற்றிருந்தது-
வரிசெலுத்துவதற்கு ஒன்றும் இல்லையே
என்று புலம்புகிறேன்."

வரிக் கொடுமையினை இக்கற்பனைப் பாடலின் வழி கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார். அவர் காலத்து அரசின் போக்கினையும் மக்களின் துயரத்தினையும் உணர முடிகிறது.

தான்பட்ட துயரங்களும் இன்னல்களும் ஆகிய அனுபவங்கள் துன்பப்படும் பொதுமக்களிடத்தில் எல்லையற்ற அன்பினையும் ஆதரவையும் கவிஞர் துஃபோவின் உள்மனத்தில் கிளரச் செய்தன. அநீதியை நோக்கிச் சீற்றம் கொண்டிருந்த இக்கவிஞர், ஆதரவற்றவர்க்கும் ஒடுக்கப்பட்டவர்க்கும் பெருங்கருணையாளராகத் திகழ்ந்தார். அவரிடத்தில் மனித நேயம் மலிகியிருந்தது. தன் சக மனிதர்களிடத்தில் நிறைந்த அன்பு பூண்டிருந்தார். தனி உரிமைகள் பெற்ற அறிஞர் - அலுவலர் என்னும் உயர் வகுப்பினைத் தாம் சார்ந்திருந்தும் கூட ஆதரவற்ற மக்களின் பேச்சுப் பாங்கனாக (Spokesman) செயற்பட்டார். இத்தகைய அசாதாரண காலங்களில் பொதுமக்களையும் ஏழையையும் இன்னல் கொண்ட அறிஞர்களையும் ஒரு சிறு மெல்லிய கோடுதான் பிரித்தது.

"இலையுதிர் காலத்துப் புயலால் அழிக்கப்பட்ட என் கூரைக்குடில்" (My Thatched Cottage Demolished by the Autumn Gale) என்ற இவர் கவிதை யதார்த்த வருணனை

பொருந்தியது. காற்றினால் அலைக்கழிக்கப்பட்ட தன் வீட்டின் கூரைகளைப் பக்கத்து வீட்டுப் பையன்கள் தூக்கிக்கொண்டு மூங்கில் தோப்பினை நோக்கி ஓடுவதை இவரால் தடுத்து நிறுத்தி அவற்றை மீட்க முடியவில்லை. தன் முதுமையே இதற்குக் காரணம் என்று கவிஞர் கூறுகிறார். புயலுக்குப் பின்னர், இரவுப் பொழுதில் இருண்ட வானில் மழை வந்தது. இக்காட்சியைக் கவிஞர் வருணிக்கிறார்.[35]

"பல ஆண்டு காலம் துணிமெத்தை இரும்புபோல்
இருந்தது;
கொஞ்சும் குழந்தை அதில்தூங்கி எழுந்து நடந்து
கிழித்துவிட்டது.
கூரை ஒழுகிற்று, படுக்கைகளில் காய்ந்த இடம்
ஒன்றும் இல்லை.
மழைத்தாரைகள் சணல் நாரைப் போல் முடிவின்றி
உள்ளே கொட்டின.
துயர்மிக்க அக்காலங்களிலிருந்து எனக்குத் தூக்கம்
இல்லை என்றே
இப்பொழுது நீண்ட இரவில் குளிர் சொட்டுகிறது.
விடியலின் வருகைக்காக ஏங்கி இருந்தேன் நான்."

தன்னிரக்கத்தை எழச்செய்வதற்கு மாறாக, தன் சொந்த துயரங்கள், தன்னையொத்த ஏழை அறிஞர்கள், கவிஞர்களிடத்தில் இரக்கத்தையும் நம்பிக்கையினையும் ஒளிரச் செய்தன. தொடர்ந்து கவிஞரின் குரலைக் கேட்போம்.[36]

"இந்த நாட்டின் ஏழைப் புலவர்களைப்
பாதுகாப்பாக இருக்கச் செய்வதற்கு
ஆயிரக் கணக்கில் அறைகள் கொண்ட மாபெரும்
மாளிகை இருக்குமெனில்,
அவர்கள் மகிழ்ச்சி பொங்கும் முகத்தைக்
காணமுடியும்.

காற்றினாலும் மழையாலும் அசைக்க முடியாமல்
மலைபோல அவர்கள் நிலைபெற்று நிற்பர்!
அந்தோ! என் கண்களின் முன் இப்பெரு மாளிகை
எப்பொழுது தோன்றும்?
என்குடில்சிதறுண்டிருப்பினும் நான்மட்டுமே
இறைப்பிற்கு உறைந்து போனேன்,
நான் நிறைவு பெறுகிறேன்."

கவிஞரின் கற்பனை, சக கவிஞர்களாகிய புலவர் பெருமக்களுக்காக (scholars) அவர் காட்டும் அக்கறை, பாசம், தன்னிறைவு என்பனவற்றை இப்பாடல் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

கவிஞர்கள் நடுவில் தூஃபூ (Tu Fu) ஒருபெரும் கலைஞராகவும் விளங்கினார். இக்கவிஞருக்குக் கவிதையில் சிறந்த ஒவ்வொரு சொல்லும் ஆயிரம் அவுன்சு பொன்னுக்கு நிகரான மதிப்புடையது. தன்னைப் பற்றித் தானே சொல்லுகிறார்.[37]

"என்னிடம் நகைப்புக்கு இடமான பலகீனம்
உண்டு;
நான் நல்ல பாடலுக்கு மட்டுமீறிய செல்லம்
கொடுக்கிறேன் (அன்பு காட்டுகிறேன்)
வாசகர்களைக் கிளர்ந்தெழச் செய்யும் சொற்களைக்
காணும் வரையும்
அமைதியுடன் நான் இறந்துபோக மாட்டேன்."

சிறந்த கவிதையினையும், கவிதையில் இடம்பெறும் சிறந்த சொற்களையும் இவர் நேசிப்பவர். இந்தச் சுவை உணர்வினால் இவர் கவிதைக் கலையில் எந்த அளவு ஈடுபாடு கொண்டு விளங்கினார் என்பதை இவர் சொற்கள் வெளிப்படுத்துகின்றன.

ஆங்கில இலக்கிய வரலாற்றில் கலையுள்ளம் கொண்ட கவிஞர்களின் உணர்வுகளைத் திறனாய்வாளர்கள் சுட்டிச் சென்றுள்ளார். பாசுபர்மல்லம் (Phosphor Mallam)

என்ற திறனாய்வாளர், "தன் காமக்கிழத்தியின் பெயரினை யாரோ ஒருவன் தெரிந்தோ தெரியாமலோ சொல்லும் பொழுதுகூட அவளுக்காக ஏங்கி நிற்கும் காதலனைப்போல், கவிஞன் கவினார்ந்த சொற்களுக்காகக் காத்துக் கிடக்கிறான்" (The Poet lingers over the beautiful words like a lover over his mistress's name [Vide, An Approach to Poetry, 1929, p.8]) என்று கூறும் கருத்தினைச் சீனக்கவிஞர் தூஃபோவின் கருத்துடன் பொருத்திப் பார்த்து மகிழ்தல் கூடும். இக்கவிஞர் கலை நேர்த்திக்குப் பேர் பெற்றவர்.

சீனக் கவிஞர்களிடையே லீபோ (LiPo) நன்கறியப்பட்ட கவிஞர் என்று கூறும் திறனாய்வாளர்கள், தூஃபூவை (Tu Fu) நனி சிறந்த பெருங்கவிஞர் என்று மதிப்பீடு செய்துள்ளனர்.[38] லீபோ புனைவியல் போக்கினர் (Romanticist), இணங்கிவராதவர். தூஃபூ ஒழுங்கு, நாணயம் என்பனவற்றை உறுதியாகக் கொண்ட கன்பூசிய நெறியாளர் (Confucianist).

தன் விருப்பியல்பும் இயல்பாகவே நிகழும் தன்மையும் (Spontaneity) கொண்டவர் லீபோ. கலைநாட்டம் (Artistry) கொண்டவர் தூஃபூ. லீபோவின் மேதைமை (Genius) ஈடற்றது. தூஃபூவின் கைவினைத் திறமும் கலைநேர்த்தியும் திரளான ஆதரவாளர்களையும் பின்பற்றுவோரையும் கவர்ந்தன.

இவ்விருபெருங் கவிஞர்களில் சிறந்தவர் யாவர் என்ற விவாதம் பேரளவில் எழுந்தபொழுது, ஹன்யூ (Han Yu, கி.பி.768-824) என்ற பிற்காலத் தங்கு (Tang) கவிஞர் சீர்தூக்கிப் பார்த்துக் கூறிய மதிப்பீட்டினைக் காண்போம்.[39]

"லீ, தூ இருவர் படைப்புக்களும் என்றும்
இருப்பன.
அவற்றின் ஒளிச்சுடர் நூறடி உயரம்!
வீணாகச சீர்தூக்கி இவர்களை அவதூறு
பேசமுற்படுதல்

சிறுபிள்ளைத் தனமானது, முட்டாள் தனமானது,
எறும்புகள் சேர்ந்து பெருமரத்தினைக் கவிழ்க்க
முயலுதல்போல்
தன்னறிவில்லாத இவர்கள் உண்மையில்
எள்ளலுக்கு உரியவர்கள்."

எனவே, திறனாய்வு என்ற பெயரில் முதிர்ச்சி பெறாதவர்கள் ஒரு கவிஞரின் குறிப்பிட்ட சில இயல்புகளை உயர்த்தியும், மற்றொரு கவிஞரின் இயல்புகள் சிலவற்றைத் தாழ்த்தியும் மதிப்பீடு செய்வதுபொருத்தமற்றது என்பது புலனாகும். லீ, தூ ஆகிய கவிஞர் இருவருமே தங்கு காலச் சீன இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற இருபெரும் சுடர்கள் என்பது தெளிவு.

இருவகை யாப்பு

தங்கு (Tang) காலத்துக் கவிஞர்கள் பழைய நடையியலினின்றும் வேறுபட்டுப் புதிய நடையியலைக் கவிதையில் கொண்டு வந்தவர்கள். இவ்விருவகைக் கவிதைகளையும் 1. ஒழுங்குறுத்தப் பெற்ற பாடல் (lushih - Regulated Poem), 2. திடும் என முடியும் பாடல் (Chuch-Chu - Truncated Verse) என்று கூறினர். இவற்றுள் முதலிற் சொல்லப்பட்ட பாடலில் எட்டடி பயின்று வரும்; ஒவ்வொரு அடியிலும் ஐந்து அல்லது ஏழு சொற்கள் இடம்பெற்றிருக்கும். யாப்பியல் விதிகள் உறுதியாகப் பின்பற்றப்படும். தரமிக்க ஒலிநயத் திட்டம், நிலைபெற்ற குரல்கோலங்கள் (Tonal patterns), இணையடிகள் அல்லது நேரெதிர்அடிகள் என்பன இவ்வகை யாப்பின் சிறப்புக் கூறுகளாகும். சரி சீரமைவு (Symmetry), இன்னிசை (Melody) இவ்வகை யாப்பின் இலக்குகளாகும். முன்பும் இது பற்றிக் கூறப்பட்டது.

இரண்டாவது வகைப்பாடலில் நான்கடிகள் பயின்றுவரும். ஒவ்வொரு அடியிலும் ஐந்து அல்லது ஏழு சொற்கள் இடம் பெற்றிருக்கும். மிகவும் குறைந்த

அளவுடைய சீனப்பாடலாக இவ்வகைக் கவிதை எண்ணப்படுகிறது. இத்தகைய குறும்பாடலில் கலைநயம் என்பது குறிப்புப் பொருண்மையினையும் சொற்சுருக்கத்தினையும் பொறுத்துள்ளது. சப்பானிய ஹைகு (Haiku) கவிதையைப் போலச் சீனச் சூச்சூ (Chuch-Chu) கவிதை எழுதுவதற்கு எளியது; ஆனால், நன்கு எழுதுவதற்கு அரியது. இப்பாடலின் ஒவ்வொரு அடியும் ஆழ்ந்த, அரிய கருத்துச் சுமையினைத் தாங்கி நிற்பது.

சீனச் செய்யுளின் முதன்மையான இலக்கிய வடிவங்கள் (Shih) பலவும் அவற்றின் வளர்ச்சியின் உச்சத்தினை, தங்கு (Tang) காலத்தின் முடிவில் அடைந்திருந்தன. பின்வந்த கவிஞர்கள் இவற்றை மேலும் தூய்மைப்படுத்தவும், புதிய கருத்துக்களையும், தொடர்களையும் அறிமுகம் செய்யவும் முடிந்ததே தவிர, ஒருவரும் மேலே சுட்டப்பட்ட கவிஞர்களைத் தாண்டிப்போக முடியவில்லை. கவிதையின் அழகு, கற்பனையின் பிறங்கொளி, அவர்கள் பாடிய மனிதப் பரப்பின் அகலம் என்பன பல தலைமுறைச் சீனர்களின் உள்ளத்தில் நீடித்த பதிவினை விட்டுச் சென்றுள்ளன. இக்கவிஞர் படைப்புக்களின் சர்வதேசியத் தன்மையினை, அவற்றுக்கு உண்டாகிய மேலைநாட்டுப் பன்மொழி பெயர்ப்புக்களால் உணர்ந்து மகிழ்தல் கூடும்.[40]

வில்லியம் மக்நாட்டன் (William Mcnaughton) தொகுத்துப்பதிப்பித்துள்ள சீன இலக்கிய ஆங்கில மொழிபெயர்ப்பு நூலில், தங்கு அரச மரபுக்குரிய காலத்துப் பாடல்களில் (The Songs of T'ang Period) மூன்றினைப் பறக்கும் பருந்துகள் (The Buzzards Fly) என்ற தலைப்பில் காண்கிறோம். போர்புரிவதற்காகப் பெற்றோரையும் உற்றோரையும் பிரிந்து சென்றுள்ள வீரர்கள், நீலவானில் சிறகடித்துச் செல்லும் பெரும் பருந்துகளின் சுதந்திர உணர்வினையும் கட்டுப்பட்டுக் கிடக்கும் தங்கள் துயரினையும் உறழ்ந்து காட்டி

உரைப்பனவாக இப்பாடல்கள் மூன்றும் அமைந்துள்ளன. அவற்றின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.[41]

1. சிறடித்துச் சிறகடித்துப் பெரும்பருந்து பறக்கும்
செறிந்திருக்கும் கருவாலி மரங்களிலே தங்கும்!
மறம்மிக்க மன்னனுக்காய்ப் போர்புரியும் எமக்கு
மருந்துக்கும் ஓய்வில்லை; வயலிலுள்ள பயிரைத்
திறம்மிக்க உணர்வோடு காப்பதுவும் இயலேம்
செயல்தளரும் பெற்றோரை எவ்வகையில் காப்போம்?
நிறம்நீல நெடுவானே! கொடும்இடர்கள், துன்பம்;
நீங்குவதும் எப்பொழுதோ இத்துயரத் தொடர்கள்?

2. சிறகடித்துச் சிறகடித்துப் பெரும்பருந்து நீந்தும்
செறிந்திருக்கும் முள்மரங்கள் மிசைவந்து தங்கும்!
மறம்மிக்க மன்னனுக்காய்ப் போர்புரியும் எமக்கு
மருந்துக்கும் ஓய்வில்லை; வயலிலுள்ள பயிரைத்
திறம்மிக்க உணர்வோடு காப்பதுவும் இயலேம்
செயல்தளரும் பெற்றோரை எவ்வகையில் காப்போம்?
நிறம்நீல நெடுவானே! கொடும்இடர்கள், துன்பம்;
நீங்குவதும் எப்பொழுதோ இத்துயரத் தொடர்கள்?

3. சிறகடித்துச் சிறகடித்துப் பெரும்பருந்து செல்லும்
செறிந்திருக்கும் முசுக்கட்டை மரங்கள்மிசை தங்கும்!
மறம்மிக்க மன்னனுக்காய்ப் போர்புரியும் எமக்கு
மருந்துக்கும் ஓய்வில்லை; தினை,நெல்லை வயலில்
விறல்மிக்க உணர்வோடு விதைப்பதற்கும் இயலேம்
வேறென்ன எம்பெற்றோர் உண்ணுதற்கு வாய்க்கும்?
நிறம்நீல நெடுவானே? கொடும்இடர்கள், துன்பம்
நீங்குவதும் எப்பொழுதோ இத்துயரத் தொடர்கள்?

ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வரும் இப்பாடல்களில் நாட்டார் வழக்காறுகள் (Folk Motifs) காணப்படும் என்பதற்கு இவையும் எடுத்துக்காட்டாகும். பெரும்பருந்து பறக்கும்/ நீந்தும் / செல்லும் ; கருவாலி மரங்களில் /

முள்மரங்கள்மிசை/முசுக்கட்டை மரங்கள்மிசை தங்கும் என்பனவும் இவை ஒத்த பிறவும் காட்சிப் பிணைப்புக்கள். ஒரு சொல், ஒரு தொடர், முழு வாக்கியம், உணர்வுகள் என்பன பாடல்தொறும் மாறாது பயின்று வருதல் தனிச்சிறப்பு ஆகும். இவை தமிழ்த் தாழிசைகளிலும் காணப்படுதலை முன்னரே சுட்டியுள்ளோம். இவ்வாறு வருவனவற்றை மடக்கு என்று தமிழ் நூலோர் கூறுவர்; திரும்பவருதல் (Refrain) என்று நாட்டாரியல் ஆய்வறிஞர்கள் கூறுவர்.

போர்வயிற் பெற்றோரைப் பிரிந்து சென்ற வீரர்கள் நீல வானத்தை நோக்கிப் பேசுவதாக இம்மூன்று பாடல்களும் அமைந்துள்ளன. இவர்கள் திருமணம் ஆகாதவர்கள் என்று உய்த்துணரலாம். மனைவி, மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் பெற்றோராகிய தாய், தந்தையைப் பற்றி மட்டும் கவலைப்படுவதால் இவ்வாறு கருத வேண்டியுள்ளது. கன்பூசியசு கற்பித்த அறங்களில் பெற்றோர்க்குப் பிள்ளைகள் செலுத்தும்அன்பு (Filialty) பிரதானமானது. பிள்ளைகள் இளமை முதலாகவே பெற்றோர்ப் பாசத்துடன் வளர்கிறார்கள். வாலிபப் பருவம் வரும்பொழுது, முறையான கல்வியும் போர்ப் பயிற்சியும் பெறுகிறார்கள். அண்டை நாட்டார் படையெடுத்து வரும் பொழுது தம்நாட்டு அரசனின் ஆணைப்படி நாட்டினைக் காக்கும் பொருட்டுப் போர் புரிகிறார்கள். இந்தப் போர் பகைவரை விரட்டியடிக்கும் வகையில் பகைப்புலத்தில் நடைபெறுதல் உண்டு. இத்தகைய சூழலில் வீரர்கள் நெடுங்காலம் போரில் ஈடுபட்டுள்ளனர். சற்றே ஓய்வு கிடைக்கும் பொழுது இவ்வீரர்கள் தத்தம் வீட்டினையும் எண்ணிப் பார்க்கிறார்கள். வயலை எண்ணிப் பார்க்கிறார்கள். தமிழ்ச் சமுதாயத்தைப் போலவே சீனச் சமுதாயமும் வேளாண்மை சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தாங்கள் பருவ காலம் தப்பாமல் தத்தம் வயல்களில் வேளாண்மை புரிந்து அறுவடை செய்து

உணவுக் கூலங்களைக் கொண்டு வந்து பெற்றோரைப் புரக்கும் பெருங்கடமையினைச் செய்ய முடியவில்லையே என்ற ஆற்றாமை மேலிட அவலித்து நீலவானைப் பார்த்துப் புலம்புகிறார்கள். போர் எப்பொழுது முடிவது? ஊர் திரும்புவது எப்போது? பெற்றோரைப் பார்ப்பது எப்பொழுது? வயல்வேலைகளைக் கவனிப்பது எப்பொழுது? என்ற ஏக்கம் வீரர்களின் அடிமனத்தினின்றும் எழும்பி வெளிப்படுகிறது.

நீல வானைப் பார்த்துப் பேசுதல் தொல்காப்பியர் கூறியுள்ள பாற்கிளவியுடனும் ஐரோப்பியப் பாவியலார் பகரும் Apostrophe என்ற அணியுடனும் ஒப்பிட்டு மகிழத்தக்க ஒருபொது இலக்கியக் கூறாகும்.

அறிவிற்குறைந்த பருந்துகளுக்கு இருக்கும் சுதந்திரம் கூட, வீரர்களாகிய தங்களுக்கு இல்லையே என்று மறுகுகின்றனர். அப்பறவைகள் நீலவானில் சுற்றித் திரிந்தபின் இளைப்பாறுதற்குத் தாங்கள் வாழும் இடங்களாகிய கருவாலி மரங்களிலும், முள் மரங்களிலும், முசுக்கட்டை மரங்களிலும் தங்குகின்ற காட்சியை வீரர்கள் பார்க்கிறார்கள். போர் முடிந்து தாயகம் திரும்பித் தத்தம் இல்லத்தில் ஓய்வு கொள்ளுவது எப்பொழுது? என்று ஏங்குகிறார்கள்.

போர் வீரர்களின் நிலை அவர்களின் மனப்போராட்டத்தைப் புலப்படுத்துகிறது. இருபெரும் கடமைகளுக்கு இடையே அவர்களின் உள்ளம் போராடுகிறது. மன்னவனுக்காக, நாட்டைக் காப்பதற்காக, பகைவரை விரட்டியடிப்பதற்காகப் போரிடுதல் அவ்வீரர்களின் நாட்டுக் கடமை. அதேவேளையில், வேளாண்மை புரிந்து பெற்றோரைப் பேணுதல் தள்ளுதற்கரிய வீட்டுக் கடமை. நாட்டுக் கடமையா? வீட்டுக் கடமையா? முதன்மை எதற்கு? விடை காண முடியாத இவ்வீரர்களின் இம்மனப்

போராட்டம் என்னும் ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்த இப்பாடல்கள் பெயரறியப்படாத சீனக் கவிஞரின் சீரிய கருத்துக்கும் சிறந்த கற்பனைக்கும் ஏற்ற சான்றாக இலங்குகின்றன!

இச்சீனப் பாடல்களைப் படிக்கும் பொழுது,

ஒளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல

என்ற நற்றிணைப் பாடலடிகள் (284.9-10) நம் உள்ளத்தில் தோன்றுதல் இயல்புதானே!

தங்கு-பிற்காலக் கவிஞர்கள் (Later T'ang Poets)

தங்கு அரசு மரபு ஆட்சியின் பிற்பகுதியில் (கி.பி.772-846) வாழ்ந்துள்ள கவிஞர்களின் படைப்புக்கள் முற்பகுதியில் வாழ்ந்த கவிஞர்களின் படைப்புக்களைவிட மிகுதியானது. இக்கவிஞர்கள் பழைய கவிஞர்களைப் பின்பற்றிப் பாடியவர்கள் அல்லர். காட்சியியல் (Realism), சமுதாய விமர்சனம் (Social Criticism), அழகியல் (aestheticism), குறியியல் (Symbolism), தத்துவம் (Metaphysics), இலக்கியத் திறனாய்வு (Literary Criticism) ஆகியவற்றை நோக்கி இவர்கள் சென்றனர். எடுத்துரை கலையினை (The Art of Narration) வளர்த்தவர்கள். இவர்களில் இன்றியமையாக் கவிஞர்கள் ஐவரைப் பற்றி இங்குக் காண்போம்.

அ. போ சூ-ஈ (Po Chu-i)

இக்கவிஞர் கி.பி.772-846 என்ற காலப் பகுதியில் வாழ்ந்தவர். இவர் காலத்துத் தீமைகளையும் சீர்கேடுகளையும் சாடுவதற்குரிய படைக்கருவியாக இவர் கவிதையினைப் பயன்படுத்தினார். இருபத்தெட்டாம் வயதில் இலக்கியத் தேர்வில் வெற்றிபெற்று, ஹன்-லின்-பேராயத்தின் (Han-lin-Academy) புலமையாளராக (Scholar)வும் தணிக்கையாளராகவும், பல நகரங்களின் ஆளுநராகவும் தண்டனை வாரியத்தின் செயலராகவும்

நெடுங்காலம் புகழ்மிக்க அரசு அலுவலராகப் பணியாற்றினார்.

இடையிடையே ஓய்வும் நாடு கடந்து வாழ்தலும் குறுக்கிட்டுள்ளன. அனைத்துக்கும் மேலாக, இவர் சிறந்த கவிஞராகவும் விளங்கியவர். ஈராயிரத்து அறுநூறு பாடல்களுக்குமேல் இவர் வருங்காலத் தலைமுறைக்காக விட்டுச் சென்றுள்ளார். அவர் கவிதைகளிலிருந்து அவருடைய வாழ்வியலைஉய்த்துணர்தல் கூடும்.

போகூ-ஈ பாடியவை பலதிறப்பட்ட பாடல்கள். நண்பர்களுக்குக் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்காகப் பாடியவை சில. பயணத்தின் பொழுது இயற்கைக் காட்சிகளில் இதயம் பறிகொடுத்து இன்பப் பெருக்கினால் எழுதியவை சில. வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களைப் பாடிய பாடல்கள் சில. பருவ மாற்றங்கள்,அன்றாட வாழ்வு, குடும்ப சுக துக்கங்கள் என்பனவும் இவர் கவிதைக்குப் பொருளாயின. தன் மகள் பிறந்த பொழுதும் இவர் பாடல் வரைந்துள்ளார். இப்பாடல்களில் தன் உண்மையான, உறுதியான, உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார். தயக்கமும் பகட்டும் இன்றி வாசகர்களைத் தன்னம்பிக்கைக்கு உரியவராக அமைத்து, தன் உணர்வுகளை அவர்களுக்குப் புலப்படுத்திக் காட்டியுள்ளார்.

"மலைகளில் தனியே பித்தேறிப் பாடுதல்" (Singing Madly Alone in the Mountains) என்ற இவர் கவிதையைக் காண்போம்.[42]

"ஒவ்வொருவருக்கும் பலகீனம் உண்டு-
கவிதைக்காக என் பலகீனம்,
என் வாழ்வுக் கட்டுகள் எல்லாம் மறைந்தன;
இக்குறைபாடு மட்டும் என்னைவிட்டுப்
போகவில்லை;

ஒவ்வெரு குறையிலும் ஓரழகிய காட்சியைப்
பார்க்கிறேன்,
அல்லது பழைய அன்பு நண்பரைச் சந்திக்கிறேன்
ஒருவீர காவியத்தினை வாய்விட்டுப் பாடுகிறேன்,
கடவுளரை முகத்துக்குமுகம் கண்டதுபோல."

கவிஞரின் சோம்பேறித்தனம் கூட பாடலின் அடிக்கருத்தாக அமைந்துள்ளது. "சோம்பலும் கவலையின்மையும் (Idle and Care free) என்ற வேடிக்கைப் பாடல் தமிழாக்கம் பெறுகிறது:

"அடுக்கில் புத்தகங்களே இல்லை என்பதுஅன்று
அவற்றைப் படிப்பற்கு என்கண்கள் அவ்வளவு
சோம்பல்.
பெட்டியில் சித்தார் இசைக்கருவி கிடக்கிறது,
அதனை எடுப்பதற்கு என்கைகள் அவ்வளவு
சோம்பல்.
கச்சை யணிய இயலாதபடி என்இடுப்பு அவ்வளவு
நெகிழ்வு;
அலுவலகத் தொப்பிக்கு என்தலை அவ்வள்வு
கவலையற்றது;
நீண்ட பிற்பகலில் சிறுதுயிலில் ஆழ்கிறேன்,
மதியம் உண்டதன்பின் உணவென்பதற்கு என்ன
உண்டு.
ஒருவேளை உணவே முழுநாளுக்கும் போதும்;
ஒதுதூக்கம் இரவு முழுதும் அமைதியுடன்
தொடர்கிறது.
பசியும் குளிரும் கவலைக்கு உரியன அல்ல;
மேலும் யான் பட்டினி கிடக்கவும் இல்லை,
நடுங்கவும் இல்லை."

தன் சுய வாழ்வினைச் சொல்லுவதாக இப்பாடல் அமைகிறது. அன்றாடம் கவிஞரின் உணர்வுகளையும் சிந்தனைகளையும் மெய்யாகப் பதிவு செய்யும் ஏடாகவும்

இவர் பாடல் விளங்குகிறது. தன்னைச் சுற்றியுள்ள மக்களுடன் தான் கொண்ட தொடர்புகளையும் இவர் பாடத் தவறவில்லை.

தாம் பாடியனவற்றுள் அங்கதக் கதைப்பாடல்களை (Satirical Ballads) இலக்கியப் பெருங்கொடையாகப் போசூ-ஈ (Po Chu-i) எண்ணுகிறார். இப்பாடல்களில் போர் மனப்பான்மை (Militarism), மட்டுமீறிய பணித்துறைச் சார்பு (Officialdom), கடுமையான வரி விதிப்பு (Heavy Taxation), ஆடம்பரம் (Extravagance), மக்களின் மூடநம்பிக்கை (Popular superstition) என்பனவற்றை இக்கவிஞர் கடுமையாகத் தாக்கிப் பாடியுள்ளார்.

கவிதையின் குறிக்கோள் குறித்தும் இக்கவிஞர் தனக்கெனக் கொள்கை கொண்டவர். "கவிதை என்பது காற்றோடும் நிலாவோடும் விளையாடுவது அன்று; மலர்களுடனும் புற்களுடனும் விளையாடுவதும் அன்று" என்று இவர் கூறுவது இவருக்கு முற்பட்ட புனைவியல் கவிஞர்களின் (Romantic Poets) போக்கினை நோக்கியே எனலாம். எதிர்மறை வாசகத்தால் கவிதைக் குறிக்கோளைச்சுட்டிய கவிஞர் உடன்பாட்டு வாசகத்தாலும் கூறும் பகுதி கூர்ந்து நோக்கத்தக்கது.[43]

"சமுதாய ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதலும், மனிதக் குறைபாடுகளை வெளிக்கொணர்தலும்தான் கவிதையின் புனிதப்பணி" என்ற இவர்தம் கவிதைக் கொள்கை இன்றைக்கும் ஏற்புடையதாக இருத்தல் காணலாம்.

தன் தோழர் யூவன் சென் (Yuan Chen) என்பவர்க்கு இவர் எழுதிய மடலில்,

"இலக்கியப் படைப்புக்கள் தன் தலைமுறையினர்க்குப் பணிபுரிவதற்காக

எழுதப்படுதல் வேண்டும். பாடல்களும் செய்யுள்களும் (Songs and Poems) பொதுப்பணிகளை ஊக்கப்படுத்துவதற்காக அமைதல் வேண்டும்"

என்று குறிப்பிட்டுள்ளார். இப்பகுதியும் இவர்தம் இலக்கியக் கொள்கையினை உணர்த்துவதாக உள்ளது.

படைக்குக் கட்டாய ஆட்சேர்ப்பினின்றும் தப்பிக்க முயல்பவர் ஒருவரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு போசூ-ஈ பாடிய அங்கதக் கதைப்பாடல், "உடைந்ததோள் முதுமனிதன்" (Old man With a Broken Arm) என்பதாகும். படைப்பணியில் உண்டாகும் இன்னல்கள், எல்லைப்புறப் போர்களில் இறப்பு உறுதி ஆகியவற்றைத் தவிர்ப்பதற்காகவே தன்தோளைத் தானே தடிந்து கொண்டு அதனால் உண்டாகும் வலியினால் துன்பப்படும் முதியவர் நிலையினைக் இக்கதைப்பாடல் அங்கதச் சுவையுடன் எடுத்துரைக்கிறது. எண்பத்து எட்டு வயதில் உள்ள முதுமகனார், கொள்ளுப்பேரனால் ஆதரிக்கப்படுகிறார். இவர் தன் தோளினைத் தடிந்து கொண்ட சூழ்நிலையினை இப்பாடல் விளக்குகிறது.

ஒளிப்பேரரசர் (Brilliant Emperor) தீயென்-பாவோ (T'ien-pao) ஆட்சியில் இம் முதியவர்க்கு இருபத்து நான்கு வயது. அப்பொழுது, யுன்னன் (Yunnan)இல் தென்திசைக் காட்டு மிராண்டிகளுக்கு எதிராகப் போர் தொடுக்க ஆட்சேர்ப்பு நடந்தது. யுன்னன் பயணத்தால் விளையும் சோகக் கதைகளையும், அங்கே லூ (Lu) ஆற்றிலிருந்து மலேரியா ஆவிகள் எழுதலையும், தண்ணீர் கொதித்தலையும் கேள்வியுற்ற இவர், கட்டாய ஆட்சேர்ப்பினின்றும் தப்பித்துக் கொள்ளும் பொருட்டாகத் தன் வலது தோளினைத் தானே பெருங்கல்லினால் உடைத்துக் கொண்டார். இக்கதைப்பாடலின் ஒரு பகுதி வருமாறு:[44]

"உடைந்த எலும்புகள் புண்பட்ட தசைப்பற்று
துன்புறுத்தத் தவறின என்பது அன்று,
கட்டாய ஆட்சேர்ப்பினை மறுத்து வீடு
திரும்புதலைத் தேர்ந்திருந்தேன்.
அறுபது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தப்புயம்
உடைக்கப்பட்டுள்ளது:
ஓர்உறுப்பு பழுதுபட்டாலும் உடம்பின்
முழுமையும் தப்பியது.
இப்பொழுதுகூட, இருள்குளிர் இரவுகளில்
காற்றும் மழையும் உள்ளபொழுது,
வலியைத் தாங்கிக் கொண்டு விடியும் வரையும்
துயிலின்றி இருக்கிறேன்.
வலியும் துயிலின்மையும் குறித்து ஒருபொழுதும்
நான் வருந்தமாட்டேன்.
என்முது உடல் உயிருடன் இருக்கிறதே
என்பதற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.
அவ்வாறு இல்லையேல், பல்லாண்டுகட்கு முன்பே
லூ ஆற்றின் உச்சியில்
என்உடல் அழுகிப் போயிருக்கும், உயிர்பறந்து
போயிருக்கும்,
யாரும் சேகரிக்காமல் எலும்புகள் கிடக்கும்.
யுன்னனில் தங்கியிருக்கக் கூடும், வீட்டு நினைவுப்
பேயாய்,
எண்ணற்ற வீரர்களின் சவக்குழிகளில் அழுகுரல்
எழுப்பிக் கொண்டு."

தங்கு அரசு ஆட்சிக் காலத்தில் படைக்குக் கட்டாய ஆட்சேர்ப்பு கடுமையாக இருந்த கொடுமையினையும், அதினின்றும் தப்புவதற்குத் தன்புயத்தினையே இளைஞன் கல்லினால் உடைத்துக் கொண்டு எண்பத்து எட்டு வயதளவும் இருந்ததையும் தான் பட்ட இன்னல்களையும் இக்கதைப்பாடல் அங்கதச் சுவையுடன் எடுத்துரைக்கிறது. தன் உறுப்பினைச் சிதைத்துக் கொண்டாலும் உடல்

முழுதும் பாதுகாப்பாக இருப்பதை எண்ணி இக்கதைத்தலைவன் மகிழ்கிறான்.

படைப்பொருள் வாங்குதல் தொடர்பாக அரசுக் கட்டளைக்கு எதிராக இக்கவிஞர் பாடிய அங்கதப் பாடல் (Satirical poem) "முதிய கட்டைக்கரி விற்பவர்" (The Old Charcoal - Seller) என்பதாகும்.[45] இதன் சாரத்தைக் காண்போம்.

"கட்டைக்கரி விற்கும் முதியவர்
தென்குன்றுகளில் மரம் வெட்டுகிறார், எரிக்கிறார், கரியாக்க.
தூசாலும் புகையொட்டாலும் மூடப்பட்ட அவர்முகம் புகைநிறம் உடையது.
அவர் கன்னப் பொட்டில் நரை, பத்துவிரல்களும் கருமை.
கட்டைக்கரி விற்ற பணத்தை எவ்வாறு செலவிடுகிறார்?
அவர் உடம்பின் மேல்உறை இரங்கத்தக்கதாய் மிகவும் மெல்லியது.
குளிர்வானிலைக்காக ஏங்குகிறார், கரியின் விலை குறையாதன்றோ!
நேற்றிரவு நகரச் சுவரின் வெளிப்புறம் ஓரடிப்பனி விழுந்தது;
இன்று காலை கரிவண்டியை உறைந்த பாதைமேல் ஓட்டிச் சென்றார்
எருது களைத்தது, மனிதன் பசித்தான், கதிரவன் உச்சியில்;
சந்தையின் தென்வாயிலின் வெளிப்புறச் சேற்றில் ஓய்வு கொண்டபொழுது,
ஒய்யாரத் தாவுநடை பயிலும் அவ்விரு குதிரை வீரர் யாவர்?
மஞ்சள் பணியாடையில் விரைதூதன் ஒருவன்,
வெண்சட்டையில் இளைஞன் ஒருவன்,

கையில் பற்றாணையும் வாய்மொழி
அரசாணையும் கொண்ட அவர்,
வண்டியைத் திருப்பினர், வடக்கு நோக்கி
இழுக்கும்படி எருதிடம் கத்தினர்;
வண்டி நிறைய மரக்கரி,
ஆயிரம் சீனக் கல்லெடை, கூடுதலாகவும்
இருக்கும்,
அரசு தூதர் பறித்துக் கொண்டார்,
முறையீடு செய்வது முடியாது.
செவ்வலையும் பத்தடிச் சணல்துணியும் கொண்டு
எருதின் தலைமேல் பாதிக்கட்டு - கரியின்
விலைக்காக!''

கரி விற்பவர் சமுதாயத்தில் வறிய நிலையில் உள்ளவர். அவர்பட்ட பாட்டையெல்லாம் எள்ளற் சுவையுடன் இப்பாடலில் போசூ-ஈ புலப்படுத்தியிருத்தல் நகைப்பினைப் பயப்பதாகும்.

கடுமையான வரி விதிப்பு (Heavy Taxation) என்ற பொருண்மையில் தூஃபூ உள்ளிட்ட கவிஞர்கள் பாடியிருப்பினும், போசூ-ஈயின் பாடல்களில்தான் வரிவிதிப்பின் கொடுமை விரிவாகவும் நறுக்கென்றும் விவரிக்கப்பட்டுள்ளது. சிற்றூர்களில் வாழும் எளியமக்கள் மிதமிஞ்சிய வரியைச் செலுத்த முடியாமல் ஓட்டாண்டியாகப் போன சோக நிகழ்வுகளை இக்கவிஞர் சொற்சித்திரம் செய்துள்ளார். பேராசைபிடித்த அதிகாரிகளின் கெடுபிடிகள், ஆண்டு முழுவதும் வரி தண்டுதல், பாதியளவில் தயாரிக்கப்பட்ட பட்டாடைக்குக் கூட வரி செலுத்துதல், கிராம மக்களின் இரங்கத்தக்க வாழ்வியல் நிலைகள் ஆகியவற்றைக் கவிஞர் போசூ-ஈ உள்ளம் உருகும்படி சொல்லோவியமாகப் புனைந்துள்ளார்.[46] தன்னனுபவமாக அவர் பாடியுள்ள கவிதையின் தமிழாக்கம்:

"எஞ்சிய வரியைச் செலுத்த நேற்று அலுவலகம்
சென்றேன்,
அலுவலகச் சரக்கறையின் வாயில் வழியே உள்ளே
நோக்கினேன்
ஆங்கே பட்டுத் துண்டுகளும் ஆடைகளும்
குன்றுபோல் அடுக்கப்பட்டிருந்தன;
மென்பட்டு நூல்களும் பட்டுக் கழிவுகளும்
மேகம்போல் திரண்டிருந்தன.
இவைதாம் 'கூடுதலான பொருள்கள்' என்று
கூறப்பட்டவை,
பேரரசர்க்குத் திங்கள்தோறும்
பரிசளிக்கப்பட்டவை இவை."
"உன்னை வளர்த்துக்கொள்ள என்உடல் வளத்தைத்
திருடுகிறாய்"
ஒருமுறை அரசு களஞ்சியத்திற்குப் பட்டு
அறுவைகள் நுழைந்துவிட்டால்
நீண்ட ஆண்டுகள் தூசுபடிய அவை அங்கே
தங்கியிருக்கும்."

எனவே, பட்டுத்தொழில் சீனக் கிராம மக்களின் அடிப்படைத் தொழில் என்பதும், வரி செலுத்த முடியாமல் தாம் நெய்த ஆடை அரைகுறையாக இருப்பினும் அதிகாரிகளால் அபகரித்துச் செல்லப்பட்டன என்பதும், அவை அரசர்க்குப் பயன்படாமல் தூசுபடிந்து அரண்மனைக் களஞ்சிய அறையில் கிடந்தன என்பதும் இக்கவிதையின் வழியாகக் கவிஞர் புலப்படுத்தும் சோகச் சித்திரமாக அமைந்தன.

மலர்கள் வாங்குதல் (Buying Flowers) என்ற கவிதையில், போசூ-ஈ செல்வர்கள் மலர்களின் பொருட்டாக ஊதாரித் தனமாகப் பெருஞ்செல்வத்தைச் செலவழிக்கின்றனர் என்ற குறைபாட்டினையும், அப்பணத்தைக் கொண்டு ஏழை மக்கள் அன்றாட உணவினை வாங்கி உண்டு வாழ முடியும் என்ற இரக்க

எதிர்பார்ப்பினையும் பொறித்துள்ளார். இளவேனிற் காலத்தின் பிற்பகுதியில் பெருஞ்செல்வர்கள் தேர்களிலும் குதிரைகளிலும் ஆரவாரத்துடன் சென்று பல வண்ண மலர்களைச் சந்தையில் பெரும் அளவிற்கு வாங்கினர். இக்காட்சியைக் கண்ட முதிய உழவன் ஒருவன் சந்தையில் மலர்க்குவியலைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுப் பேசினான்:

"கொத்துக் கொத்தாகக் கிடக்கும்இம் மலர்கள்
பத்து நடுத்தர உழவர் குடும்பங்களின் வரிப்பணம்"

வரிக்காக மலர்களைக் கூட, பெரும் அளவிற்குச் சீன உழவர்கள் வழங்கியுள்ளனர் என்பது இப்பாடலால் புலனாகிறது.[47]

மக்களிடையே பல்வேறு மூடநம்பிக்கைகள் இருந்தன. வாழ்நாளை நீட்டிக்கும் அமுதபானம் (Elixir), சிலைகள், படிமங்கள், பேய்கள், வனதேவதை, தேவதை உலகு என்பன அவர்தம் நம்பிக்கைகளில் குறிப்பிடத்தக்கவை ஆகும். இவற்றைக் கவிஞர் போசூ-ஈ தம் பாடல்களில் எள்ளி நகையாடியுள்ளார்:

"தெய்வங்கள் அமரர்கள் உண்மையில்
இருக்குமெனின்
அவர் வழிகள், அழியும் மனிதரின் முயலுகைக்கு
அப்பாற்பட்டவை.
அந்தோ! அமரத்துவத்தைப் பற்றிக் கனாக்கண்ட
மனிதன்
ஒருகனவு அவன் முழுவாழ்வினையும்
பாழாக்கிவிட்டது"

இப்பாடல் ஜேடு பேரரசரின் (Jade Emperor) அமரத்துவ முயற்சியைப் பற்றியது. தாவு மார்க்கத் தெய்வத்தினை இவர் கனவில் கண்டு, உரையாடி, அமர வாழ்வியலைப் பெறப் போவதாகக் கற்பனை செய்து கொண்டு, தன் குடும்பத்தினைத் துறந்து ஒரு குகையில் வாழச் சென்றார்.

அவருக்கு உணவு என்ன கிடைத்தது? கவிஞர் பாடுகிறார்:[48]

> *"அவர் காலை உணவு மைக்கா தூசு*
> *இரவில் பனியின் சாரத்தைப் பருகினார்!"*

குகையில் முப்பது ஆண்டுகள் தன்னைத் தேவர் உலகிற்குக் கொண்டு செல்ல வானிலிருந்து விமானம் வரும் என்று பொறுமையாகக் காத்துக் கிடந்தார். என்ன நடந்தது? ஒவ்வொரு நாளும் இளைத்து வந்தார். முடிவாக ஒருநாள் அவர் உடல் மண்ணுடன் சேர்ந்து உரமாகப் போனது!

இத்தகைய இவர் பாடல்கள் செல்வர்களையும் அதிகாரத்தில் உள்ளவர்களையும் புண்படுத்திவிட்டன. அதனால் இவர் பல தொல்லைகளை அடைந்தார். பதவி இறக்கத்தையும் நாடு கடத்தலையும் பெற்றார். நடைமுறைத் தீமைகளை எதிர்த்து இவர் கவிதைகள் குரல் எழுப்பிச் சீனக் கவிதையின் போக்கில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியிருப்பினும், இவருக்குப் பின் வந்த கவிஞர்கள் எதிர்விளைவுகளைச் சந்திக்க அஞ்சியதால் இவரைப் பின்பற்றிப் பாடுவதற்கு முன்வரவில்லை.

போசூ-ஈ யின் கவிதைகள் மக்களிடையே பெரிதும் பரவின. அவை எளிமையாகவும் புரிந்துகொள்ளக் கூடியனவாகவும் இருந்தன. "கவிதை என்பது கிராமத்து மூதாட்டிக்குக்கூட எளிதில் புரிவதாய் இருத்தல் வேண்டும்" என்பது இவர்தம் கவிதைக் கொள்கை. இவர் பாடல்களில் புலமைப் பகட்டினைப் புலப்படுத்தும் கதைக்குறிப்புக்கள் (Allusions) இடம்பெறவில்லை; ஆடம்பரச் சொல்லாட்சியையும் பார்த்தல் இயலாது. பொது வாசகர்களுக்கு நேராகப் பேசுவதுபோல் இவர் பாடல்கள் விளங்குகின்றன. எளிய சொற்கள், நேரடியான வெளிப்பாடு, பொது உணர்வு என்பனவற்றை இவற்றில் காணலாம்.

தன் இனிய நண்பர் யூவன் சென் (Yuan Chen)னுக்கு இவர் எழுதிய மடலில் சுயமதிப்பீடு செய்திருக்கிறார்.[49]

"சங்கன் (Ch'ang-an) நகரிலிருந்து கியாங்சி (Kiangsi) வரை பரந்து கிடக்கும் மூவாயிரம், நாலாயிரம் லீ நிலப்பரப்பு எங்கும், கிராமப் பள்ளிகளிலும், புத்தர் கோயில்களிலும், மதுக்கடைகளிலும், கப்பல்களிலும்கூட எங்கும் பொதுமக்களுக்குத் தெரியும்படி என்பாடல்கள் எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன். அறிஞர்களாலும், பிட்சுக்களாலும், கைம்பெண்களாலும், இளம்பெண்களாலும் என் பாடல்கள் ஒலி நயத்துடன் ஓதப்படுதலையும் பார்த்தேன்.

என் பாடல்களைப் படியெடுத்துச் சந்தைகளில் விற்பனைக்காக விளம்பரப்படுத்தப்படுதலையும் கண்டேன். மது மற்றும் தேயிலைக்காக இப்பாடல்களைப் பண்டமாற்று செய்தனர்."

மேலும் இவர் பாடலின் சிறப்புக் குறித்து ஒரு நிகழ்வுக் குறிப்பு சுட்டுதற்குரியது. இராணுவ அதிகாரி ஒருவர், கேளிக்கைக்காகக் கூடுமிடத்தில் ஒரு பெண்ணைக் காதலிக்க முற்பட்டார். "என்னை மற்றைய பெண்களைப் போல மதிப்பீடு செய்யாதே! கவிஞர் போ -சூ யின் (Po Chu-i) 'நிரந்தரத் துன்பப் பாடலை' (Song of Everlasting Sorrow) என்னால் ஓத முடியும்" என்று அப்பெண் விடை கூறிவிட்டாள்.

கவிஞரின் புகழ்பெற்ற எடுத்துரைப் பாடல்களில் (Narrative Poems) நிரந்தரத் துன்பப் பாடல் மிகவும் பிரசித்தி பெற்றது; மிகுதியான மொழிபெயர்ப்புக்களைப் பெற்றது. ஒளிப்பேரரசர் (Brilliant Emperor), அவர்தம் பெருமாட்டி யங்கு (Yang) ஆகியோரின் புகழ்பெற்ற கதையினை இப்பாடல் மையமாகக் கொண்டது. அரசாங்க அந்தப் புரத்தில் அப்பெருமாட்டி முதன்முதல் வந்த நாள்

தொடங்கி, காதலிலும் களியாட்டங்களிலும் கழித்த நாள்கள், புரட்சியாளரின் கலகத்தின் பொழுது சங்கனிலிலிருந்து தப்பிச் சென்றது, புரட்சியாளரின் கேட்புக்கு ஏற்ப அப்பெருமாட்டி தூக்கிட்டு இறந்தது முடிய எல்லா நிகழ்வுகளையும் உணர்ச்சி குன்றாமல் இந்நெடும்பாடல் வருணித்துச் செல்கிறது.

பின்வரும் பாடற்பகுதியில் அப்பெருமாட்டியின் அந்தப்புர வாழ்வின் வருணனை அமைந்துள்ளது:[50]

“தூய மலர் நீரூற்றில் இனிய இளவேனில்
நாள்களில் அவள் நீராடினாள்.
அவள் மெல்லிய பாலாடைத் தோல்
மென்மையான வெப்ப நீரினால்
கழுவப்பட்டது.
அவள் தளர்ந்திருந்தாள், நொய்ம்மையாய்
இருந்தாள்
தன்செவிலிப் பெண்களால் உதவப்பெற்ற
பொழுதுதான்
முதன்முதல் பேரரசனின் அன்பினைப் பெற்றாள்
அவள் கொண்டற்கூந்தல், மலர்முகம், தலையின்
பொன் அலங்காரம்
படபடக்கும் ஒவ்வொரு அடியும்-
திரைக்குப் பின்னே இளவேனில் இரவுகள்
இன்பமயமாய்ச் சென்றன.
இளவேனில் இரவுகள் மிகவும் குறுகியவை;
கதிரவன் உயரும் வரை அவள் எழவில்லை.
ஆதலினால், பேரரசர் காலைச் சல்லாபம்
கொள்ளவில்லை.

இக்காட்சி பெருமாட்டி யங்கின் (Lady Yang) காதற் காலத்து ஓவியம். இதற்கு எதிரானதாக, சேசூவன் (Szechuan) செல்லும் சாலையில் சென்ஷி (Shensi)யில் மா-வேய் (Ma-Wei) சாரலில் நிகழ்ந்த அவள் இறப்பின் அவலக்காட்சி அமைகிறது:

"அவள் சிகைஅலங்கார அணிகள் தரையில் சிதறிக்
கிடந்தன-
ஒருவரும் அவற்றைப் பொறுக்கவில்லை-
மீன்கொத்தி, பொன்னிறக் குருவிகள், முடியிற்
செருகும் மரகதக் கொளுவி (இவை
ஆபரணங்கள்)
அவளைக் காப்பாற்றும் ஆற்றலற்ற பேரரசர் தன்
முகத்தை மூடிக்கொண்டார்.
கண்ணீரும் குருதியும் கலந்தோடும் இடத்தினைத்
திரும்பிப் பார்த்தார்.
மஞ்சள் தூசு எங்கும் கலைந்தது; உறைகுளிராக
வீசியது காற்று.
[N]குத்துவாள்-கோபுரம் நோக்கி மேகம் மூடிய
பாதை சுருண்டு போனது.
[K]ஓமெய் மலைக்கீழ் வழிப்போக்கர் சிலரே
தம்போக்கில் போயினர்.
குதிரைக் கொடிகளும் பிறகொடிகளும்
ஒளிஇழந்தன; கதிரவன் மங்கினான்."

குறிப்பு: N. குத்துவாள் கோபுரம் - Dagger - Tower.
K. ஓமெய்மலை - Mount Omei.

புரட்சிக் கலவரத்தினை அடக்கியபின், ஒளிப்பேரரசர் (Brilliant Emperor) தலைநகர் திரும்பிய பொழுது, எப்பொழுதும் பார்க்கும் காட்சிகளைப் பார்த்து, அரண்மனையில் பெருமாட்டி யங்கு (Lady Yang) இல்லாமையால் பெருந்துயருற்றார். இயற்கைப் பொருள்களில் எல்லாம் அவள் முகத்தைக் கண்டார், விழிப்புருவத்தின் வனப்பினைக் கண்டார். அவரால் கண்ணீர் வடிக்காமல் இருக்க முடியவில்லை.

எனவே, பேரரசரின் கட்டளைப்படி பெருமாட்டி யங்கின் ஆவியைத் தேடி வருவதற்கு மந்திரவாதி ஒருவன் அனுப்பப்பட்டான். தேவதைத் தீவில் அவளைக் கண்டான்.

"பாதி சரிந்த முடி ஒப்பனையுடன்,
தூக்கத்திலிருந்து புதிதாக அவள் எழும்பொழுது,
தலை மலர்அணி கலைந்திருந்தது, கூடத்திற்கு
அவள் வந்தாள்.
காற்றினால் ஆடும் அவள் சட்டைக் கைப்பகுதி
அழகுடன் பறந்தது:
'வானவில் பாவாடையும் இறகுச் சாக்கெட்டும்'
என்ற நடனம் ஆடுவதுபோல அக்காட்சி
அமைந்தது.
அவள் மணிமுகம் துயரால் குளிர்ந்தது, விழிநீர்
விரைந்து வீழ்ந்தது.
இளவேனில் மலர்த்துளிகளைத் தாங்கிய
முத்து மலரின் தளிர்க்கிளைபோல் அவள்
காணப்பட்டாள்"

இந்நெடும்பாடல், பேரரசர்க்குத் தன் அழியாத காதலின் உறுதிமொழியுடன் நிறைவுறுகிறது:

"விண்ணும் மண்ணும் நெடுங்காலமாகஇருப்பன,
என்றேனும் வீழ்தல் கூடும்,
இப்பெரும் துயரம் நீளும் முடிவின்றி
எப்பொழுதும்"

இலக்கியப் படைப்பில் பொருத்தமான நீதியும், பாடமும் (Moral Lesson), நன்கு வரையறுக்கப்பட்ட சமுதாய நோக்கமும் இருத்தல் வேண்டும் என்ற நம்பிக்கை கொண்ட கவிஞர் குழுவிற்குப் போசூ-ஈ (Poch'u-i) தலைமையேற்று வழி நடத்துவோராக விளங்குகிறார். இவ்வகையில் அவர் நினைவு சீன இலக்கிய உலகில் நிலைபெற்றுள்ளது.[51]

ஆ. லீ ஹோ (Li Ho)

அடுத்துச் சுட்டத்தக்க கவிஞர் லீ ஹோ (Li Ho) ஆவர். இக்கவிஞர் கி.பி.790-816இல் வாழ்ந்தவர். இவர் ஒல்லியாகவும் இளைத்தும் காணப்பட்டார். இருபத்தாறு

ஆண்டுகளே வாழ்ந்தவர். எனினும் ஒளிமயமான புகழ்படைத்த இளங்கவிஞர். தொடக்க காலத்தில் இவர் செயற்கையான செய்யுள்களையே எழுதினார். இருபது வயதுக்கு முன்பே இக்கவிஞர் தலைநகர் சங்கனில் (Ch'angan) நடந்த இலக்கியத் தேர்வினை எழுதுவதற்குச் சென்றார். இலக்கிய உலகில் இவர் பெயர் நன்கறியப்பட்டிருந்தது. இருபத்தாறாம் அகவையில் இறந்தார். இவரைப் பற்றிய கதை ஒன்று வழங்குகிறது. "ஒவ்வொரு நாள் காலையிலும் ஒல்லியான இவர் வற்றிய தன் குதிரையிலேறிச் செல்லுதல் வழக்கம். இவருடன் இவர்க்கு அடிமை செய்யும் குறளன் ஒரு பழைய பூப்போட்ட பையுடன் போதல் உண்டு. தாள் துணுக்குகளில் தாம் எழுதிய நல்ல பாடல்கள் எவையாக இருப்பினும், அவற்றை அந்தப் பையில் விட்டெறிவார். மாலையில் வீடு திரும்பியதும் எஞ்சியவற்றையும் எழுதி நிறைவு செய்வார். இப்பழக்கத்திற்கு ஏற்புடையதாக இவர் தாயார்,

> "தன் நெஞ்சில் உள்ளவற்றை வெளியே
> கொட்டும் வரையும்
> இப்பிள்ளை எழுதுவதிலிருந்து தன்னை
> விடுவித்துக் கொள்ளமாட்டான்"

எனக் கூறிய வாய்மொழி குறிப்பிடத்தக்கது.[52]

ஆறு அரச மரபுகளின் (Six Dynasties) இலக்கிய மரபினை ஒட்டி தங்கு காலக் கவிஞர்கள் (T'ang poets) பலரும் அரசப் பாடல்களைத் தொடர்ந்து எழுதிய பொழுது, லீ ஹோ (Li Ho) கவிதைக்குப் புதிய நோக்கினையும் தூண்டுதலையும் தந்தார். அந்தப்புரப் பாடல்கள் (Harem Poems) பலவற்றைப் போலவே, லீ ஹோ வின் பாடல்களும் மணமும் நிறமும் அணிநலமும் வாய்க்கப் பெற்றவை. ஆயினும், பெண்ணுடலின் அழகினையும் புலக்கவர்ச்சியையும் வருணிக்காமல்,

மாயமானதும் நெறியற்றதும் ஆகிய அழகினை அவர் வருணனைகளில் புகுத்தினார். அந்தரங்கப் பெருமாட்டிகளின் காமுறச் செய்யும் அழகினைப் பற்றி அவர் கவலை கொள்ளாமல், அவர்களின் கவின் மிக்க வடிவங்களிலிருந்தும், அணிந்திருக்கும் ஆபரணங்களிலிருந்தும் பெறக் கூடிய அழகியல் இன்பம் (Aesthetic Pleasure) மட்டுமே அவர் கவனத்தை ஈர்த்தது.

லீ ஹோ (Li Ho)வின் பாடல்களில் சுயமாக வெளிப்படுத்தப்படும் உள்ளுறைப் பொருள்கள் பொருந்தியிருந்தன. எடுத்துக்காட்டிற்காக, தன் கூந்தலை அழகுபடுத்தும் அழகிய பெருமாட்டிப் பாடல் (Song of a Beautiful Lady Dressing Her Hair) என்ற பாடலைச் சுட்டுதல் பொருந்தும்.[53] அதன் சாரத்தைக் காண்போம்.

"Sஹிசி ஷி வைகறைக் கனவில் ஓய்வுறுகிறாள்;
பட்டுப் படுக்கை உறை குளிர்ந்துள்ளது-
அவள்நறுமண முடிமேல் முடிச்சு வீழ்ந்தது, பகுதி
ஒழுங்கற்றது.
வளிநங்கையின் வளைந்துவரல் ஆபரண
மரகதத்தின்
துண்டுகள்போல் கணகண ஒலித்துத் தோட்டச்
செடியைத்
திடுக்கிடச் செய்து, அவளைப் புதிய, போதிய
துயிலினின்றும் எழுப்பியது.
மாயப் பறவை இணை கண்ணாடியைத்
திறக்கிறது, அதன்
இலையுதிர் கால நீர்மய ஒளியை வெளிப்படுத்த;
அவள் முடி நெகிழ்ந்துள்ளது, அவள் நிற்கிறாள்
கண்ணாடியை நோக்கி, கயிற்றுப்
படுக்கையின்மேல்.
நறுமணப் பட்டின் கற்றை சிதறுண்டு மேகம்போல்
தரைமேல் கிடக்கிறது.
மரகதச் சீப்பு அவள் கண்ணாடிக் கூந்தல்
கற்றையில் மெதுவாக நழுவுகிறது.

காக்கை நிறத்துத் தலைமுடியைத்தன்மென்
கைகளால் சுருளாக்குகிறாள்.
மதிப்பற்ற ஊசியின் மரகதக்கல் பிடிக்க
முடியாதபடி வழுக்குகிறது.
ஒளிமயமான இளவேனில் காற்று அழகிய,
சோம்பிய நங்கைக்கு எரிச்சலூட்டுகிறது.
அவள் பதினெட்டுச் சுருள்களுள் பல ஆற்றல்
குறைவு.
கூந்தல் ஒப்பனை முடிந்தது, ஒருபக்கத்தில்
முடிச்சு, சாய்வு இல்லை.
காட்டு வாத்து மணல்மேல் நடத்தல்போல், அவள்
மேகநிற அரைப்பாவாடை காலடிகளை
எண்ணுகிறது.
யாரிடமும் எதையும் சொல்லாமலும், பேசாமலும்
எங்கு நோக்கி அவள் போகிறாள்?
கீழே இறங்கிவந்து, செர்ரி மலர்க்கொத்து
ஒன்றினைப் பறித்துக் கொள்ளுகிறாள்."

குறிப்பு : [S]ஹிசிஷி - Hsi Shih, கி.மு.5ஆம் நூற்றாண்டு பேரழகி.

இவருடைய அரிய சொல்லாட்சிகள் இவர் பாடல்களின் சிறப்புக் கூறாகும். பின்வரும் பாடல் அவர் கற்பனைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

"[N]கடவுளுக்கும் உணர்ச்சிகள் இருக்கும் எனின்,
கடவுள் கூட முதுமை அடைந்திருப்பார்.
நறுமணம் பறக்கிறது, செவ்வாடை அலைகிறது,
வானெங்கும் ஊற்று.
படுக்கைத் திரையில் மலர்க்குஞ்சம் படபடக்கிறது,
இளவேனில் மேகங்கள் இதம் அளிக்கின்றன,
ஆமை ஓடு காற்றுக்குத் திரைபோடுகிறது,
மயங்கிய கண்கள் முடிச்சாகின.
மதுவால் புத்துணர்வு பெற்று, திங்களைத் திரும்பி
நடக்கும்படி

அவன் கத்தினான். நீண்ட வாத்து இறகு
குழல்கள் பொருந்திய நாணல் கருவியை
விண்ணக இளவேந்தன் ஊதுகிறான்
[S]மாய விலங்கினை (Dragon) அழைத்து, உழுது
மரகதப் புல்லினை நடுவதற்கு.
[K]துவான்-சோவின் [T]கற்கருமான் திறமையன்
கடவுளைப்போல்.
அவன் வானில் நடக்கிறான், தன் கத்தியைத்
தீட்டிக் கொண்டு
ஊதா மேகங்களை உடைக்கிறான்!"

குறிப்பு : N. கடவுள் - Heaven; S - மாயவிலங்கு - Dragon; K. துவான்-சோ - Tuan-Chou. T. கற்கருமான் - Stone Cutter.

இப்படி அவர் பாடிய கவிதைகளில் கற்பனை, வருணனை, இயற்கை கடந்த காட்சி (Supernatural vision) ஆகியவற்றைக் காணலாம்.

லீ ஹோ (Li Ho) வாழ்ந்த மிகச்சில ஆண்டுகளில் கூட செயல்குலைவு, மனப்புழுக்கம், இருண்மை, பணி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டார். இவரைப் பேய்க்கவிஞர் (Ghost-poet) என்று அழைத்தனர். அங்ஙனம் அழைத்தற்குரிய காரணங்களைக் காண்போம்.[54]

1. ஒருசில பாடல்கள் மனத்திரிபுடன் கூடிய துயர நிலையினைப் புலப்படுத்துதல்.

2. தனிமை, பேயச்சம் ஊட்டுதல், இயற்கை மீறிய மாய உணர்ச்சிப் பாதிப்பு, ஆழம் அறியப்படாமை - இவற்றுடன் பொருந்திய சிந்தனைகளைப் பெற்றமை.

3. வேகம், சினம், பொறுக்கமுடியாமை, அரிப்புத் தன்மை ஆகிய உணர்ச்சி மாற்றங்களுக்கு ஆட்படுதல்.

4. விரைந்து உணர்ச்சி வசப்படுதல்.

5. குருதி, கண்ணீர், இறப்பு, பேய்கள் ஆகிய சொற்களை அடிக்கடி பயன்படுத்துதல்.

6. சந்தடி மிக்க மக்கள் கூட்டத்திலிருந்து வாசகர்களை நெடுந்தூரம் அகற்றிச் சென்று, பாழடை இடத்திற்கும் துயரம் தரும் இடத்திற்கும் இட்டுச் செல்லுதல்.

7. புற்கள், மரங்களினிடையே உள்ள பழைய ஈமக் காடுகளின் வருணனை. (ஒப்புமை : மணிமேகலையில் சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதையின் காட்சிகள்.)

8. அவ்விடங்களில் இரவு வேளைகளில் ஒட்டகங்கள் ஓலமிடுதல், பேய் ஏந்திய விளக்குகள், பேய்மழை பொழிதல், கூக்குரலிடும் குயில்கள், இரத்த வாந்தி எடுத்தல், முது ஆந்தைகள் தம் கூடுகளிலிருந்து அலறுதல் ஆகியவை பற்றிய அச்சுறுத்தும் புனைவுகள் முதலியன.

இக்காரணங்களினால் லீஹோ (Li Ho) பேய்க்கவிஞர் (Ghost-poet) என்று அழைக்கப்பட்டார். இதற்கு முரண் நிலையில் இவர் காலத்தவரான லீ போ (Li Po) தேவதைக்கவி (Angel-poet) என்று அழைக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முற்றிலும் லீ ஹோவை ஒரு பேய்க்கவிஞர் என்று கூறிவிட முடியாது. இயற்கையிலும் ஈடுபாடு கொண்டு இவர் புனைந்துள்ள பாடல்கள் சுட்டுதற்குரியன. தென்தோட்டம் (Southern Garden) என்ற தலைப்பில் இவர் பாடியுள்ள பதின்மூன்று கவிதைகளிலும் இயற்கை வழங்கும் இன்பங்களைத் தேர்ந்த சொற்களில் பாடியுள்ளார். ஒரு பாடலின் சாரத்தினை இங்கு நோக்குவோம்.

"ஊற்றுநீர் புதிதாக எழும்புகிறது, இளம் தூக்கணங்
குருவி பறக்கிறது!
சிறுவால் மஞ்சள் வண்டு மலர்களின் நடுவே
கைகொட்டி விட்டுத் திரும்புகிறது!
சேய்மைக் காட்சியை மூடியிருந்த சன்னல்
திரையினின்றும் திறக்கிறது!
கடல்தளத்தின் அருகில் இனிய கொக்கியை மீன்
இறுகத் தழுவுகிறது!"

இத்தகைய இயற்கைப் பாடல்கள் இவர்தம் அழகியல் உணர்வுக்கு ஆதாரமாக அமைகின்றன.

இ. லீஷங் - யின் (Li Shang - Yin)

இக்கவிஞர் கி.பி.812 - 858 என்ற காலப் பகுதியில் வாழ்ந்தவர். இவர் லீஹோ (Li Ho)வின் ஆர்வலர். அவருடைய வாழ்க்கை வரலாற்றினை எழுதியவர். புலன்கடந்த மறையுணர்வுக்கும் (Mysticism) இருண்மைக்கும் (obscurity) இவர் கவிதைகள் பேர் பெற்றவை. எனவே, இவர் பாடல்களை எளிதில் புரிந்து கொள்ளுதல் இயலாது. அவற்றின் மறைபொருளான தன்மையினால் பல்வேறு விளக்கங்களுக்கு அவைஇடம் அளிப்பனவாக உள்ளன. இவர் பாக்களில் உள்ளுறை (Allegory), குறியியல் (Symbolism) பொதிந்துள்ளன. இப்பண்புகள் பொருந்திய பூவேலைப்பாட்டு வீணை (Embroidered Harp) என்ற பாடல் மிகவும் புகழ் பெற்றதாகக் கருதப்படுகிறது.[55] அதன் தமிழாக்கம்:

"இப்பூ வேலைப்பாட்டு வீணை எக்காரணமும்
இன்றி ஐம்பது நரம்புகள் கொண்டது.
ஒவ்வொரு நரம்பும், திவவுக்கட்டையும் (nut)
செழித்த கால நினைவுகளை
மாணவன் [N]சூவங்கு காலைக் கனவில் வண்ணத்துப்
பூச்சியின் வனப்பினால் மயக்குற்றான்;
மன்னர்[S]தூ தன்வசந்த நெஞ்சத்தைக் [P]குயிலிடம்
ஒப்படைத்தார்.

"கருங்கடல்மேல் முழுநிலாவின் பேரொளி,
முத்துக்கள் கண்ணீர் கொண்டன;
நீல வயலில், கதிரவனின் கதகதப்பு,
மரகதத்தின்மேல் புகை வளர்ந்தது;
இவ்வுணர்வுகள் மனத்தில் நெடுங்காலம் நீடிக்கக்
கூடியவை,
ஆனால் அக்கணத்தில் தனிமையில்
விடப்பட்டிருப்பேன் உண்மையில்."

2

குறிப்பு : [N]சூவங்கு - Chuang, [S]தூ - Tu, P குயில் - Cuckoo பறவை. சீன வீணையில் சாதாரணமாக 25 நரம்புகளே இருக்கும். இங்கு இருமடங்கு கொண்ட வீணையினைக் குறித்துள்ளார். அரசர் தூதன்இறப்பிற்குப் பின் குயிலாக உருமாற்றம் பெற்றார் என்ற கதைக்குறிப்பும் உண்டு.

1. கடற்கன்னிகளின் கண்ணீர்த் துளிகள்தாம் முத்துக்கள்.

2. நீலவயல் என்பது தலைநகர் சங்கனுக்கு (Ch'ang-an) தென்கிழக்கில் உள்ள ஒரு மலை. இங்கு மரகதக் கற்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

3. ஒரு கதையின்படி, கவிஞர் ஒருவர் மரகதம் (Jade) என்ற பெயருடைய காதலியின் கல்லறைக்குச் சென்று துக்கம் கொண்டாடிய பொழுது, அவள் திடீரென உயிர்த்தெழுந்தாள்; ஆனால், அவன் அவளைத் தழுவ முற்பட்ட பொழுது புகைபோல மறைந்துவிட்டாள்.

கவிஞர் லீ ஷங்-யின் (Li Shang-Yin) ஒப்பற்ற வெளிப்பாடுகளை (Expressions) தீவிரமாகத் தேடுபவர் என்பதற்கும், தைக்கக் கூடிய வண்ணமிகு சொற்களைத் திறமையாகப் பயன்படுத்துவதில் வல்லவராக விளங்கினார் என்பதற்கும் மேலே சுட்டப்பெற்ற பாடல்கள் சான்றாகும்.

சுவாங்கு செள (Chuang Chou) தன் கனவில் வண்ணத்துப் பூச்சியாக உருமாற்றம் கொண்டார் என்பது அடிக்கடி சொல்லப்படும் ஒரு குறியீடாகும் (Allusion). மன்னர் தூ குயிலாக (Cuckoo) உருமாற்றம் கொண்டார் என்ற கதையும் நன்கு அறியப்பட்ட ஒன்றே. Bewitch (-அழகினால் மயங்குதல்), Entrusted (ஒப்படைத்தாள்), Spring heart (வசந்தநெஞ்சம்) என்ற சொற்கள் இடம்பெறவில்லை யெனில், பாடலடிகள் சப்பென்றிருக்கும். ஐந்தாம், ஆறாம் அடிகளில், கண்ணீரை உடைய முத்துக்கள், புகையினை உண்டாக்கும் மரகதம் என்ற தொடர்கள் வியப்பான புனைவியற் கதைகளை நினைவுபடுத்துவன. பூவேலைப்பாட்டு வீணை என்ற பாடல், இப்பெயர் தாங்கியவளும், பெருஞ்செல்வனின் அழகிய காமக் கிழத்தியுமாகிய ஒருத்திக்கு எழுதப்பட்ட காதல் கவிதையாகக் கருதப்படுகிறது. தன்னைப் பிறர் மதியாமை மற்றும் பயன்படுத்தாத தன் திறமை பற்றிய தற்புலம்பல் கவிதை என்ற அடிப்படையில் இப்பாடல் எண்ணவும்படுகிறது. மேலும் தன் நண்பராகிய கவிஞர் ஒருவரின் மனைவியின் இறப்புக் குறித்த புலம்பலாகவும் இப்பாடல் கூறப்படுகிறது.

காதல் கவிதைகள்

லீ ஷங்-யின் (Li Shang-Yin) காதற் கவிதைகள் பலவும் தலைப்பு இல்லாமல் (Without Title) என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன.[56] இக்கவிதைகளுக்கு இவர் கொடுத்திருந்த தலைப்புக்கள் மறைந்துவிட்டன அல்லது தெரியவில்லை என்பதால் இப்பெயர் (-தலைப்பு இல்லாமல்) தரப்பட்டது என்பது அன்று; கோட்சொல்லித் தலைப்புக்களைக் கவிஞர் தம் பாடல்களுக்குச் சூட்ட விரும்பாமையே காரணமாக அமைகிறது. கவிஞர் களவுக் காதல் விளையாட்டுக்களில் ஈடுபட்டவர் என்பதற்குப் பல்வேறு கதைகள் வழங்கி

வந்துள்ளன. அவற்றுள் ஒரு சிலவற்றைச் சுட்டுதல் வேண்டும். தனக்குப் புரவலராக விளங்கிய உயரதிகாரி ஒருவரின் காமக்கிழத்தியுடன் இவர் தொடர்பு வைத்திருந்தார் என்பது ஒரு கதை. துறவிகள் ஆசிரமத்தில் இருந்த தாவு மார்க்கத்துப் பிக்குணியுடன் (Taoist Nun) இவர் காதல் கொண்டிருந்தார் என்பது மற்றொரு கதை. அரசவைப் பெருமாட்டிகளிடம் இவர் காதல் பூண்டு, பேரரசுக்குரிய விளையாட்டரங்குகளில் கண்டு பேசுவதற்குக் குறியிடம் நயந்தார் என்றும் ஒரு கதை உண்டு. என்றாலும், இவர்தம் காதற் கவிதைகள் இருண்மை பொருந்தியனவாய்த் துல்லியம் இன்றி, மனம்போன போக்கில் செல்லுவனவாக உள்ளன. பாப்புதிர்களாகவும் (Poetic Riddles) இவை கருதப்படுகின்றன.

தலைப்பு இல்லாமல் (Without Titles) என்ற கவிதைத் தொகுதியிலிருந்து குறிகள் (Symbols) பயன்படுத்தப்பட்டுள்ள இரு பாடல்களைப் பார்ப்போம்.[57]

"ஒன்று கூடுதல் அரிது, பிரிந்து போதலும்
அதுபோல் அரிது;
கீழைக் காற்று வலிமையற்றது, நூறு மலர்களும்
வாடுகின்றன.
வசந்தப்பட்டுப்பூச்சி இறுதி நூலளவும் நெய்யும்
இறக்கும்வரை;
தன்சொட்டுகள் வறளும் வரை மெழுகுவர்த்தி
எரிந்து சாம்பலாகும்.
காலைக் கண்ணாடியில் தன் மேக முடியின்
நிறமாற்றத்தினால் ஒருவர் புலம்புகிறார்.
இரவில் பாடிக் கொண்டே, திங்களின் ஒளி
குளிராதலை உணர்கிறார்.
இச்சாலை இங்கிருந்து [s]மாய மலைக்கு நெடுந்தூரம்
இல்லை.

அது நோக்கிச் செல்லும் பாதையினைக்
கேட்டறிதற்கு ஈடுபாடு கொள்ளும்படி
நீலப்பறவையினை நான் கேட்பேன்.
நீ வீணாகச் சூளுரைத்தாய், வருவேன் என்று;
சுவடு இல்லாமலே என்னை நீ கைவிட்டு விட்டாய்.
ஐந்தாம் காவற்பொழுதில் திங்கள் என்
அறையின்மேல் சாய்ந்து ஒளிர்கிறது.
நெடும்பிரிவுக் கனவினை எந்தப் புலம்பலும் திரும்பி
அழைக்க முடியாது.
விரிந்து முடிக்கப்பட்ட குறிப்பேட்டில் மை
இன்னும் மங்கலாகிறது.
பொன்னிற மீன்கொத்தியைப் பாதியளவு
மெழுகுவர்த்தியின் வெளிச்சம் மூடுகிறது.
பூவேலைப்பாடுடைய வண்ண மலர்ச்
செடியிலிருந்து கஸ்தூரி வாசனை வீசுகிறது
கள்ளக் காதலன் மாயமலை வெகுதூரத்தில் என்று
முன்பு வருந்தினான்.[N]
அதன் பத்தாயிரம் சிகரங்களிலிருந்து நான்
பிரிக்கப்பட்டு இருக்கிறேன்".

குறிப்பு : [S]மாயமலை (Fairy Mountain)- The P'eng-lai Mountain - பேய்களின் இருப்பிடம். [N]-தன் முதுமையில் பேரரசர் வூ (Wu) சின் (Ch'in)னின் முதற் பேரரசரைப் போல, தம் சாம்ராச்சியத்தின் கீழ்பால் உள்ள பெங்கு-லய் மலையில் வாழ்நாளை நீட்டிக்கும் அமிழ்தத்தைத் தேடினார் என்ற கதைக் குறிப்பு உடையது.

ஈ. சுசுகுங்கு தூ (Ssu-K'ung T'u)

இவர் தத்துவப் பாடல்கள் பலவற்றைப் பாடியவர். இவர் வாழ்ந்த காலம் கி.பி.837-908. பல ஆண்டுகள் அரசுப் பணியில் தொண்டாற்றிய பின், இவர் மலைகளுக்குச் சென்று ஓய்வு கொண்டார். அங்குத் தங்கியிருந்த பௌத்தப் பிட்சுக்களுடனும் தாவு

மார்க்கத்து முனிவர்களுடனும் தொடர்பு கொண்டு பல கவிதைகளைப் புனைந்துள்ளார். இவர்களுடன் கொண்ட தொடர்பு இவருடைய வாழ்வியல் நோக்கினைப் பெரிதும் பாதித்துள்ளது. இதன் விளைவாக இவர் பாடல்களின் அடிநாதமாகத் தத்துவச் சிந்தனை ஒலித்தது. இவருடைய கவிதைத் திறனாய்வு (Critique of Poetry) இருபத்து நான்கு பாக்களைக் கொண்டது. பழைய நாற்சொல் ஓரடி யாப்பில் பாடப்பட்டவை. இந்நூல் உணர்ச்சிப் பொதுப்பதிவுகள் திறனாய்வு (Impressionistic Criticism) அல்லது ஆக்கத் திறனாய்வுக்கு (Creative Criticism) ஒரு எடுத்துக்காட்டாகக் கருதப்படுகிறது. கவிதைக்கு மரபு வழியாகக் கூறப்பட்டுவரும் அடைமொழிகள் (Attributes) ஒவ்வொன்றுக்கும் விளக்கச் செய்யுளாக இப்பனுவல் விளங்குகிறது. ஒரு சில அடைமொழிகள் : 1. பெருமிதமும் முழுத் தழுவலும் (Majestic and All-embracing), 2. அமைதியும் ஆசையின்மையும் (Tranquil and Dispassionate), 3. இகழ்ச்சியும் மிகுதியும் (Slander and Abundant), 4. மெருகேற்றியதும் பண்பட்டதும் (Polished and Refined) முதலியன ஆகும்.

விளக்க முடியாத திறனாய்வுக் கலைச்சொல்லாகிய பெருமிதமும் முழுத்தழுவலும் என்பதை விளக்குதற்குக் கொண்ட முயற்சியில் தத்துவச் சிந்தனைகளைக் கவிதைப் படிமக் காட்சியுடன் இணைத்துக் கவிஞர் சுசுகுங்குது (Ssu-K'ung - T'u) இப்பனுவலின் முதற்பாடலில் பாடியுள்ளார்.[58] அப்பாடலின் தமிழாக்கம்:

"பெருஞ்செலவு புறஅழிவுக்கு இட்டுச் செல்லுகிறது;
தூய பொருள் உள்ளே முழுமை பெற்றது.
[S]சூனியத்தில் மடங்கி வந்தடைதல் [N]முழுமையினைத்
தழுவுதலாம்.
ஈட்டி வைத்துள்ள வலிமை பெருமிதம் ஆகிறது.
எண்ணிலாப் பொருள்கள் முழுமை நிறைவு
பெற்றுள்ளன.

அவற்றைக் கடந்திருப்பது பெரும் சூனியம்.
அடர்ந்த மேகங்கள் அளப்பரியன.
தனிமையே வலிய காற்று.
புலக்காட்சியைக் கடந்து
வளையத்தின் மையத்தினை அடைகிறார்.
விடாப்பிடியை விட வலியது இல்லை.
அது வெளிப்படும் பொழுது வற்றாதது".

குறிப்பு : [S]சூனியம் - Emptiness, Void; குணம்,குறியற்ற பூரணம்; The Reality transcending all the limits of our knowledge. [N]முழுமை பூரணப் பொருள். Defectless, measureless Reality. குறையற்றதும் அளவற்றதும் ஆகிய முழுமுதற் பொருள்.

இப்பாடலில் பௌத்தர்களின் சூனியக் கோட்பாடு சிறப்பிடம் பெற்றுள்ளது. சூனியம் என்பது பூஜியம், சுழியம், பாழ், வெட்டவெளி என்று தமிழ்ச் சித்தர் பாடல்களில் சொல்லப்பெறுவது. பிடகங்களில் பூரணத்தினைக் குறிக்க சூனியம் பயிலப்பெற்றது. சூனியம் என்பது இல்பொருள் (Non-Real) அன்று, உள்பொருள் (Real) ஆகும். எவ்விதப் பண்பும், பெயரும், தொழிலும் கடந்த சர்வ வியாபகமாகவும் (All Pervading), சர்வத்தையும் கடந்ததாகவும் (All transcending) இருப்பதுதான் பூரணம் (Perfect) என்றும் முழுமை (Whole) என்றும் சொல்லப்பெறும் சத்தியம் (Reality - உள்பொருள்). அதனைத் தழுவுதல் என்பது அதனை யோக ஞான சாதனங்களால் உணர்ந்து அப்படியே நிலைபெறுதல் ஆகும். இதுவே விழுமிய குறிக்கோள் என்ற பௌத்த, தாவு மார்க்க ஞானிகளின் கருத்தினைக் கவிஞர் சுசுகுங்குதூ(Ssu-K'ung-T'u) இப்பாடலில் குறிப்பாகப் புலப்பத்தியுள்ளார்.

உ. வேய் சூவங்கு (Wei Chuang)

தங்கு காலத்துப் பெருங்கவிஞர்களில் இறுதியில் வாழ்ந்தவர் வேய் சூவங்கு (Wei Chuang) ஆவர். இவர்

கி.பி.836-910 என்ற காலப் பகுதியில் வாழ்ந்தவர். இவர் புனைந்துள்ள பாடல்களில் சின் பெருமாட்டியின் புலம்பல் (The Lament of the Lady of Ch'in) என்பது குறிப்பிடத்தக்கது. கொள்ளையர் கூட்டத்துத் தலைவன் ஹுவங்கு சாவோ (Huang Ch'ao) சின் (Ch'in) பகுதியைச் சூறையாடிய காலப் பகுதியையொட்டி, கி.பி.883இல் இப்பாடல் இயற்றப்பட்டது. இந்தப் புரட்சியின் பொழுது தலைநகர் சங்கன் (Ch'ang-an) அழிக்கப்பட்டது. அங்கு வாழந்தவர்கள் கொலை செய்யப்பட்டனர். இந்தக் கொடுமை மிக்க குழப்பமான நிகழ்வினை வருணிக்கும் இப்பாடலின் இரண்டடிகளின் தமிழாக்கம் தரப்படுகிறது.

"அரசாங்கக் களஞ்சியம் சாம்பலாக்கப்பட்டது;
இராச வீதியில் உயர் அதிகாரிகளின் எலும்புகள்
மிதிபட்டுக் கிடந்தன"

வேய் சூவங்கு (Wei Chuang) தாமே அதிகாரியாக இருந்த காலத்தில் இப்பாடலை எழுதியதற்காக அவரே வருந்தினார் என்றும், தன் வழித்தோன்றல்களால் இப்பாடல் தொடர்ந்து பாடப்படுதல் தடை செய்யப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. ஆயிரம் ஆண்டு காலமாக இப்பாடல் இவரது கவிதைத் தொகுப்பிலிருந்து விலக்கப்பட்டுள்ளது. இப்பாடலின் பிரதிகள் துன்-ஹுவங்கு (Tun-huang) தாள்களில் காணப்படுகின்றன. இவை இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் அருங்கலையகத்தில் (British Museum) பேணி வைக்கப் பெற்றுள்ளன. பாரீசில் தேசிய நூலகத்திலும் (Bibliotheque Nationale in Paris) இவை இடம்பெற்றிருக்கின்றன.

சின் பெருமாட்டியின் புலம்பல் (Lament of the Lady of Ch'in)

இப்பாடல் இவர் பாடிய எடுத்துரை நெடும்பாடல்களில் (Long Narrative Poems) மிகவும் புகழ் வாய்ந்தது. இதில் வரும் அவலக்கதை போரின்

கொடுமைகளைப் புல்லரிக்கப் புனைந்துரைப்பது. அப்போரினை நேரில் பார்த்தவர் கூறுவதாக எடுத்துரை விளங்குகிறது. நாடு குழப்பத்திலும் துயரத்திலும் குமுறிக் கொண்டிருக்கும் பொழுது இப்பாடல் வரையப்பட்டது. எனவே, எடுத்துரை (Narration) உண்மையியல் சார்ந்ததாய், நேரடியானதாய், பயனுறுத்துவதாய் அமைந்துள்ளது. இப்பாடல அகத்தூண்டுதலால் இயங்குவது, தெளிவுடையது. நெஞ்சை உருக்கும் காட்சிகளைக் கூறும் பகுதிகள் உணர்வுகளை எழுப்பவல்லன.[59]

லோயங்கு (Loyang) என்ற இடத்தில் தனிமையான அமைதியில் சின் பெருமாட்டியுடன் (Lady of Ch'in) கவிஞர் சந்திப்பு, இப்பாடலின் தொடக்கமாக உள்ளது. இப்பெருமாட்டியின் நீண்ட எடுத்துரையில், தானே நேரில் கண்ட விரும்பத்தகாத, துன்பமயமான நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. கோநகரம் சங்கன் (Ch'ang-an) வீழ்ச்சியுற்ற காலத்தில் அச்சத்திற்கும் இம்சைக்கும் பலியானவர்கள் பெண் மக்களே.

"வடதிசையின் சுற்றுப்புறத்தும் மகளிர் ஒருங்கு
திரண்டனர்,
மிதிபட்ட மாட்டு மந்தைபோல வீட்டைவிட்டு
இங்குமங்கும் ஓடினர்"

சின் பெருமாட்டி உயிர் விட்டு வைக்கப்பட்டாலும், புரட்சியாளன் ஒருவனின் காமக்கிழத்தியாகும்படி கட்டாயப்படுத்தப்பட்டாள். பெருமாட்டி பாடுகிறாள்.[60]

"புரட்சியாளன் கையில் சிக்கி மூன்றாண்டுகள்
முடிந்தன.
நாள்எல்லாம் என்நெஞ்சம் உடைந்தது, துக்கத்திலும்
பயத்திலும் வாழ்ந்தேன்.
ஆயிரக்கணக்கில் ஈட்டிகள் வாள்களுக்கு நடுவே
இரவில் நான் தூங்கினேன்.

காலையில் அதே மனிதக் கல்லீரல் துண்டினைப்
பெற்றேன்.
அந்தப் புரட்சியாளன் அறையில் நுழையும் பொழுது
மகிழ்ச்சி அறியேன்.
எவ்வளவு மிகுந்திருப்பினும் அவன் கருவூல
வைப்பிற்குச் சிறிதும் விருப்பம் இல்லை.
இத்தகைய கயவர்களைப் பார்க்க மாட்டாமல் என்
பார்வையினைப் பலமுறை திருப்பிக் கொண்டேன்;
அவர்களைப் பார்ப்பது என்னால் தாங்கிக் கொள்ள
முடிவதாக இல்லை.
அவர்கள் ஆடைகள் ஒழுங்கற்றவை;
அவர்கள் வட்டாரப் பேச்சுக்கள் வேறுபட்டவை,
பழமை வாய்ந்தவை, கரடு முரடானவை.
அவர்களின் வலிமையினைப் பறைசாற்றும் சொற்கள்
அவர்கள் முகங்களில் பச்சைக் குத்தப்
பெற்றிருந்தன."

தொடர்ந்து சின்சீமாட்டி தன் துன்பங்களையும் துயரங்களையும் கதை கதையாகக் கூறியபின், தலைநகரிலிருந்து தப்பியோடிய தன் கதையினைக் கூறத் தலைப்பட்டாள். அவள் வழியில் சந்தித்த பொன்மயமான தெய்வம் (Golden god) கூட, தன்னைக் காப்பாற்றியுதவும் வலிமை பெறவில்லை. பலிகள் கொடுக்கப்படாமையால், அக்கடவுள் கூட பட்டினி போடப்பட்டிருந்தது; தன்னைக் காத்துக் கொள்ளுதற்காக மலைகளை நோக்கி ஓடியது.

அடுத்து, அப்பெருமாட்டி இரங்கத்தக்க வயோதிகப் பிச்சைக் காரனைச் சந்தித்தாள். அவன் தன்பூர்வாசிரமத்தில் செல்வம் மிக்க உழவன். அவன் படும் துன்பத்திற்குக் காரணம் புரட்சியாளர்கள் என்பதைவிட அரசாங்க அதிகாரிகளே என்பது பொருத்தமாயிருக்கும். எனவே புரட்சியாளர்களைப்

பார்க்கிலும், அரசு அதிகாரிகள் கொடியவர்கள், மக்களை வருத்தியவர்கள் என்பது கவிஞரின் உள்ளம்.

சீன வரலாற்றின் துன்பக் கதை பின்வரும் ஈரடிகளில் தெளிவாகத் தொகுத்துக் கூறப்படுகிறது.

"பயனின்றிப் பாலைவனம் தன் அழகு நிறங்களால்
வீரரின் ஆவியை மயக்குகிறது;
ஆறுகளிலும் ஓடைகளிலும் உள்ள நீரில் சரிபாதி
அப்பாவி மனிதர்களின் குருதி."

நெஞ்சினை நெகிழச் செய்யும் இப்பாடல், கவிஞர் காலத்துச் சமுதாய, அரசியல் சீர்குலைவுக்குச் சான்றாகிறது.

ஹுவங்கு சௌவின் (Huang Ch'ao) கலவரத்திற்கு இருபதாண்டுகளுக்குப்பின் தங்கு மரபு (T'ang dynasty) கி.பி.906இல் ஒரு முடிவுக்கு வந்தது. இம்மரபிற்குப் பின் ஐந்து சிறு மரபுகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சீன நாட்டினை ஆட்சி புரிந்தன. கவிஞர் வேய் சுவாங்கு (wei Chuang) கி.பி.900 அளவில் செச்சுவன் (Szechuan) சென்றார். அதன் ஆளுநரின்கீழ் ஓர் அதிகாரியாகப் பணியாற்றினார். அங்கு அவர் பணியாற்றிய காலத்தில் புகழ்பெற்ற துசு (Tz'u) கவிஞர் குழுவிற்குத் தலைவராக ஒளி வீசினார். இளமையில் இவர் படைத்த சின் பெருமாட்டியின் புலம்பல் (Lament of the Lady of Ch'in) என்ற ஒப்பற்ற எடுத்துரைப் பாடல், ஒளிமிக்க தங்கு சகாப்தத்தின் (T'ang Era) அவல முடிவிற்குப் பொருத்தமான நினைவுச் சின்னமாக அமைந்துவிட்டது. தங்கு மரபிற்குப் பின் நானூறு ஆண்டுகள் அரசு புரிந்த ஐந்து அரச மரபுகள் (Five Dynasties) காலம் முதல் சுங்கு (Sung) மரபின் காலம் வரையும் மலர்ந்த கவிதைகளில் இக்கவிஞரின் தாக்கம் காணப்படுகிறது.[61]

மேற்கோள் குறிப்புக்கள்

1. *Literature and the Arts,* Compiled by the China Handbook Editorial Committee,Translated by Bonnie S. McDougall and Hu Liuyu,Freign Languages Press, Beijing, 1983, pp.12-13.
2. Liu Wu-Chi, *An Introduction to Chinese Literature,* p.69.
3. Ibid.
4. *Literature and The Arts,* p.13.
5. Ibid, p.14.
6. Ibid.
7. *An Introduction to Chinese Literature,* p.70.
8. *Literature and The Arts,* p.14.
9. *An Introduction to Chinese Literature,* pp.70-71.
10. Ibid, p.71.
11. Ibid.
12. Ibid, p.72.
13. Ibid, p.73.
14. *Literature and The Arts,* p.15.
15. *The Cambridge History of Chinese LIterature,* Volume I, 2010, p.307; *An Introduction to Chinese Literature,* p.73.
16. *An Introduction to Chinese Literature,* p.74.
17. Ibid.
18. Ibid.
19. Ibid, p.75.
20. Ibid.
21. Ibid.
22. Ibid, p.76.
23. Ibid.
24. Ibid, p.77.
25. *Literature and The Arts,* p.15.
26. *An Introduction to Chinese Literature,* p.79.

27. Ibid, pp.79-80.
28. Ibid, p.80.
29. Ibid, pp.80-81.
30. Ibid. p.81.
31. Ibid. p.82.
32. Ibid. pp.82-83.
33. Ibid. pp.83-84.
34. Ibid. p.84.
35. Ibid. p.85.
36. Ibid.
37. Ibid. pp.85-86.
38. Ibid. p.86.
39. Ibid. pp.86-87.
40. Ibid.
41. i. *Chinese Literature -An Anthology From the Earliest Times to the Present Day*, Charles E. Tuttle Company, Tokyo, 1974, pp.69-70.
    ii. காண்க : இலையூர்கிழார், பிரிவாற்றாமை - சீனப்பாக்கள், அரிமா நோக்கு, 4:4, சனவரி, 2011, சென்னை, ப.26.
42. *An Introduction to Chinese Literature*, pp.88-89.
43. Ibid. p.89.
44. Ibid. pp.89-90.
45. Ibid. pp.90-91.
46. Ibid. p.91.
47. Ibid.
48. Ibid. p.92.
49. Ibid.
50. Ibid. pp.92-93.
51. Ibid. pp.93-94.
52. Ibid. p.94.
53. Ibid. pp.94-96.
54. Ibid. p.96.

55. Ibid.
56. Ibid. p.*97*.
57. Ibid. p.*98*.
58. Ibid. pp.*98-99*.
59. Ibid. p.*99*.
60. Ibid. pp.*99-100*.
61. Ibid. p.*100*.

14. உரைநடை இலக்கியம்

(கி.மு.500-கி.பி.950)

சீன உரைநடை கி.மு.5ஆம் நூற்றாண்டு முதலாகவே வளர்ச்சி பெற்று வந்துள்ளது. நடை, வெளிப்பாடு, வடிவம், உள்ளடக்கம் ஆகியவற்றில் சீன உரைநடை காலந்தொறும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. சீன உரைநடை வடிவங்களில் வரலாற்று எடுத்துரைகள் (Historical Narratives), தத்துவப் பேருரைகள் (Philosophical Discourses), கற்பனைக் கட்டுரைகள் (Imaginative Essays) என்பன குறிப்பிடத்தக்கவை. இவற்றில் புதுமொழி அமைப்பும், சொல் வளமும், இலக்கியச் சிறப்பும் காணப்படுகின்றன.[1] இவற்றின் பொருண்மை வரலாறும் மெய்ப்பொருளுமாக அமைந்தன. கி.மு.5ஆம் நூற்றாண்டில் செவ்வியல் உரைநடை (Classical Prose) என்பது சொற் சுருக்கமும், தெளிவும், நேர்த்தியும், ஆற்றலும், நேரடித் தன்மையும் (directness) பொருந்தித் தரம்பெற்ற எழுத்து வடிவமாக பரிணாமம் பெற்றது. நீண்ட வழக்கத்தாலும் (long usage) போலாக்கத்தாலும் (Imitation) ஒரே மாதிரியாக எழுதப்பட்டுவரினும் அதன் நிலைத்த பண்புகளால் இலக்கிய வெளிப்பாட்டிற்கு ஏற்ற ஊடகமாக அது இன்றளவும் விளங்குகிறது.

கன்பூசியசு தொகுத்த செவ்வியல் இலக்கியங்களில் ஒன்றாகிய இளவேனிலும் இலையுதிர் காலமும் (Spring and Autumn) என்ற பனுவலுக்குப் பல்வேறு உரைகள் வரையப்பட்டன. இவற்றுள் துசோ (Tso) என்பார் உரை இலக்கிய நோக்கில் மேம்பட்டதாகக் கருதப்படுகிறது. இவர் நாட்டின் உரையாடல்கள் (Discourses of State) என்ற வரலாற்று நூலின் ஆசிரியரும் ஆவர். இளவேனிலும்

இலையுதிர் காலமும் என்ற செவ்வியல் இலக்கியத்தினைப் பெரிதும் விரிவுபடுத்தியதாக இவர் உரை (Commentary) அமைந்துள்ளது. இவ்வுரையில் நீண்ட எடுத்துரைகள், உரையாடல்கள், வருணனைகள் என்பன நிரம்ப இடம்பெற்றன. இவர் உரையின் ஒரு பகுதியை இங்கு மொழிபெயர்த்துத் தருகிறோம்.[2]

"திசின் மாநிலத்தின் கோமகன் லிங்கு (Duke Ling of Tsin State) ஒரு பிரபுவைப்போல் நடந்து கொள்ளவில்லை. தனது அரண்மனைச் சுவர்களுக்கு வண்ணம் பூசுவதற்காக கடுமையான வரிகளைத் தண்டினான். அரண்மனையின் மேல் தளத்தில் இருந்தபடியே தான் ஏவும் குண்டுகளுக்கு எப்படி வழிப்போக்கர்கள் நெளிந்து கொடுக்கிறார்கள் என்பதை வேடிக்கை பார்ப்பதற்காக அவன் சுடுதல் உண்டு. தான்வேட்டையாடிக் கொண்டு வந்த கரடியின் நகம் பொருந்திய பாதத்தினைத் தலைமைச் சமையற்காரன் சுவைபடச் சமைக்கவில்லையெனில், கோமகன் அவனைக் கொன்றுவிடுவான்; பின் அவன் உடல் ஒரு கூடைக்குள் பொதியப்படும்; பின்னர், அந்தச் சவத்தினை அரண்மனைக்கு அப்பால் சுமந்து போகும்படி பணிப்பெண்கள் சிலரை ஏவுவான்.

சாவோதுன் (Chao Tun) ஷீ சீ (Shih Chi) இருவரும் ஐயுற்று, நடந்ததைப் பற்றிக் கேட்கும் பொழுது அப்பெண்கள் குழப்பமும் கலக்கமும் உற்றனர். இவ்விருவரும் கோமகனிடம் அவன் புரிந்த குற்றத்தினை எடுத்துச் சொல்லும் நிலையில் இருந்த பொழுது, ஷீசீ கூறினார்: "நாம் இருவரும் இணைந்து குற்றத்தைச் சொல்லித் தோல்வியுற்றால், நம்மைப் பின்பற்றி ஒருவரும் வாரார். எனவே, தயை கூர்ந்து நான் முதலில் போகிறேன்; தோல்வியுறின், நீவீர் என்னைத் தொடர்ந்து வரலாம்". இவ்வாறு கூறிவிட்டு ஷீசீ மும்முறை அரண்மனை நோக்கிச் சென்றார்; ஆயினும், தாழ்வாரம்

போகும் வரை கோமகன் கவனத்தினைக் கவரமுடியவில்லை. "என் குற்றத்தினை அறிகிறேன். அதனைத் திருத்திக் கொள்ளப்போகிறேன்" என்றான் கோமகன். தரைக்குத் தலை வணங்கி ஷீசீ விடை கூறினார் : "மனிதருள் எவர்தாம் குற்றம் அற்றவர்? பிழை புரிந்து பின் சீர்திருத்திக் கொள்ள முயலுதல்தான் புண்ணியம் (Virtue); இதனைவிடப் பெரியது ஒன்றும் இன்று. பாடல் பகர்கிறது:

"யார் தான் நல்ல தொடக்கம் இல்லாதவர்? எனினும்,
நல்ல முடிபினை எட்டுவோர் மிகச் சிலரே"

தம் குற்றங்களைக் களைந்து செம்மை செய்து கொள்ளுவோர் உண்மையில் சிலரே. கோமகனாகிய நீங்கள் நல்ல முடிபினைச் செய்ய முடியுமெனில், நாடு நிலைத்தன்மை பெறும்; நம் அமைச்சர்கள் மட்டுமே உம்மை நம்பி இரார். பாடல் பகர்கிறது:

"நாட்டின் சட்ட நிபுணரின் குற்றத்தினை
சுங்குஷன்ஃபூ (Chung Shan Fu) மட்டுமே களைதல்
முடியும்"

இதன் பொருள் : அவன் தன் குற்றங்களைக் களைவான். கோமகனாகிய நீங்கள் நும்முடைய பிழைகளைக் களைந்துவிடின், நும் நாட்டின் சட்ட நிபுணர்கள் புறக்கணிக்கப்பட மாட்டார்கள்."

இருந்தும் கூட, கோமகன் தன் போக்கினை மாற்றிக் கொள்ளவில்லை. சாவோதுன் தொடர்ந்து இடித்துரைத்துக் குற்றங்களையக் கேட்டுக் கொண்டும், கோமகன் கலக்கமுற்று, அவரைக் கொல்ல சூ நீயை (Ch'u Ni)ஏவினான். சூநீ வைகறையில் சென்றான். படுக்க அறை அகலத் திறந்திருந்தது. அரசவைக்குச் செல்ல சாவோ துன் முழு அரசுச் சின்னம் ஆடையுடன் தயார் நிலையில் இருந்தார். எனினும், அவ்வேளை மிகவும் முற்பட்டதாகத் தோன்றியதால் உட்கார்ந்தபடியே

அறிதுயில் கொண்டார். சூநீ பின்வாங்கினான். புலம்பியபடியே சொன்னான் : "அவர் (-சாவோதுன்) உண்மையில் மக்களின் தலைவர். மக்களின் தலைவரைக் கொல்லுதல் என்பது துரோகச் செயலாகும். கோமகனின் ஆணையினை மீறுதல் என்பது அவநம்பிக்கையாய் முடிந்து விடும். வேறு வழியில்லை என்பதால் இறப்பதுவே மேல்!" வேறுவழியின்றி லோகஸ்டு (Locoust) மரத்தில் முட்டிக் கொண்டே துணிந்து தற்கொலை செய்து கொண்டான்.

இலையுதிர் பருவத்தில் ஒன்பதாம் திங்களில் திசின் கோமகன் வஞ்சக உணர்வுடன் சாவோதுன்னுக்கு மதுவுடன் கூடிய விருந்து வைத்தார். அப்பொழுது படைக்கலம் தாங்கிய போர் வீரர்களைக் கொண்டு சாவோதுன்னை உறுப்புச் சிதைவு செய்ய எண்ணியிருந்தார். ஆனால், சாவோதுன்னின் ஓட்டுநர் தீ-மீ-மிங்கு (Ti-mi Ming) என்பார் சதித்திட்டத்தைக் கண்டு பிடித்தார். கூடம் வரை விரைந்தோடிச் சென்று,

> "விருந்தில் தன் பிரபுவுடன் மூன்று கிண்ணங்களுக்கு மேல் மது பருகுதல் அமைச்சருக்குரிய ஒழுங்குமுறைக்கு முற்றிலும் மாறுபட்டது."

என்று கூறினார். படிக்கட்டின் வழியாகத் தன் எசமானர் கீழே இறங்கி வருவதற்கு உதவினார். அவ்விருவர் மீதும் கோமகன் பெரியதும் பயங்கரமானதும் ஆகிய நாயினை ஏவினார். ஆனாலும், தீ-மீ-மிங்கு தன் கைகளினாலேயே அதனைப் பற்றி அடித்துக் கொன்றார். "அது எவ்வளவு பயங்கரமானதாக இருந்தாலும், மனிதனுக்குப் பதிலாக ஒரு நாயைப் பயன்படுத்துவது போதுமானது அன்று" என்று சாவோ துன் கூறினார். இடையில் ஏற்பட்ட சண்டையில், தீ-மீ-மிங்கு கொல்லப்பட்டார்.

முன்பு சாவோ துன் ஷோவ் (Shou) மலையில் வேட்டை ஆடினார். முசுக்கட்டை மரத்தின் நிழலில்

ஓய்வு கொண்டார். அவ்விடத்தில் லிங்கு-சே (Ling-Ch'e) என்பவன் பட்டினியால் இறக்கும் தறுவாயில் இருத்தலைக் கண்டார். அவன் இன்னலைப் பற்றி உசாவினார். அவன், "கடந்த மூன்று நாள்களாகவே நான் சாப்பிடவில்லை" என்று கூறினான். உணவு கொண்டுவரப்பட்டதும், அதில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்தான். "ஏன் அவ்வாறு செய்தாய்?" என்று கேட்டதற்கு அவன், "நான் வேற்று நாட்டில் கடந்த மூன்றாண்டுகளாகப் படித்துக் கொண்டிருந்தேன். என்தாய் இன்னும் உயிருடன் இருக்கிறாரா என்பது எனக்குத் தெரியாது. இப்பொழுது நான் வீட்டிற்கு அருகில் வந்துவிட்டேன். அவருக்கு அந்தப் பாதி உணவினை வழங்கும்படி வேண்டுகிறேன்" என்று கூறினான். சாவோதுன் அவனை எல்லா உணவினையும் உண்ணும்படிச் செய்தார். பின்னர் ஒரு கூடை நிறைய அரிசியும் ஒரு பை நிறையப் புலாலும் வைத்து அவனிடம் வழங்கினார். பிற்காலத்தில் அவன் கோமகனின் பாதுகாவலனாக அமைந்தான். அவன் (இந்தத் தருணத்தில்) தன் ஈட்டியை கோமகனின் பரிவாரத்திற்கு எதிராகத் திருப்பினான். இவ்வாறு சாவோதுன்னைக் காப்பாற்றினான். ஏன் அவ்வாறு செய்தாய் என்று கேட்ட பொழுது, "முசுக்கட்டை மரத்தின் நிழலில் பட்டினி கிடந்த அந்த மனிதன்தான் நான்" என்று விடை கூறினான். ஆயினும் அவன் பெயரினையும் ஊரினையும் கேட்க, அவன் சொல்ல மறுத்துவிட்டான். அவ்விடத்தை விட்டுப் பின் வாங்கினான். பின் மறைந்து விட்டான்.

இதுவரை துசின் மாநிலத்தின் எல்லைப்புறத்துக் குன்றுகளை விட்டுவிலகாத கோமகன் லிங்கைப் பீச்சு மரத் தோட்டத்தில் சாவோ சூவான் (Chao Ch'uan) தாக்கினான். பெருமைமிகு வரலாற்றாசிரியர், "சாவோ துன் தன் பிரபுவை (சாவோ-சூவான்) கொன்றுவிட்டான்" என்று எழுதியுள்ளார். தான் எழுதியதை அரசு அவைக்கும்

காண்பித்தார். சாவோதுன், "அது உண்மைதான்" என்று கூறினான்.

"நீவீர் முதலமைச்சர். நாட்டைவிட்டு ஓடிய போதிலும், எல்லைகளுக்கு அப்பால் ஏகவில்லை. நீவீர் திரும்பினீர்; ஆனாலும் கொலையாளியைத் தண்டிக்கவில்லை. உம்மைத் தவிர பிரபுவைக் கொன்றவர் வேறு யாராக இருக்க முடியும்?"

"ஐயகோ!" என்றான் சாவோ துன்:

"என் ஆவலின் குறிக்கோள்
என்மேல் துயரத்தைக் கொணர்ந்தது."

"இது எனக்குப் பொருந்தாதோ?"

கன்பூசியசு கூறினார். "துங்கு ஹு (Tung Hu) பண்டைக் காலத்துச் சிறந்த வலராற்றாளர். எதையும் ஒளிக்கக் கூடாது என்பதுவே அவர் எழுத்தின் நோக்கம். சாவோதுன் பண்டைக் காலத்து நல்லமைச்சர்தான்; கொள்கை காரணமாகவே அவமதிப்பினை அனுபவிக்க வேண்டியதாயிற்று. எல்லைகளைத் தாண்டிப் போயிருந்தால், அவரை விட்டு வைத்தல் என்பது மிகவும் தீயது."[3]

மேலே காட்டிய பகுதி துசோ (T'so)வின் உரைநடைப் போக்கிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தாம் வாழ்ந்த காலத்து நிலமானியச் சமுதாயத்தின் மாந்தரையும் அரசியல் நிகழ்வுகளையும் உயிரோட்டம் உள்ள உரைநடையில் துசோ எழுதியுள்ள பகுதிகள் மிகப்பலவாகும். எடுத்துரை (Narrative), உரையாடல் (Dialogue), பாடல் மேற்கோள் (Poetic Quotations) என்பனவற்றைப் பொருத்தமும் திருத்தமுமுறப் பயன்படுத்தி எழுதியுள்ள சிறப்பு இவரைச் சாரும். பழைய நூல்களில் காணப்படாத சீனமொழி ஆளுகை இவர் உரையில் பளிச்சிடுகிறது.

கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிற்கும் கி.மு.மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடையே சீன உரைநடையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி நிகழ்ந்துள்ளது. இக்காலப் பகுதியில் எழுதப்பட்ட போரிடும் மாநிலங்களின் போர்முறைத் திறங்கள் (-The Strategies of the Warring States) என்ற மற்றொரு வரலாற்று நூலின் ஆசிரியர் ஏழு போரிடும் மாநிலங்களின் (Seven Warring States) பெருவீரர்களையும் போர் நிகழ்வுகளையும் ஒளிமிகு வண்ணக் காட்சிகளாக வரைந்துள்ளார். சீன வரலாற்றில் இக்காலப் பகுதி கிளர்ச்சியூட்டக் கூடியது. இக்காலப் பகுதி போர்கள், போர்க் கூட்டுகள், அரசியல் பூசல்கள், தத்துவ விசாரம் என்பனவற்றால் கிளர்ச்சியூட்டுவதாக விளங்கியது. இவையனைத்தையும் மேலே சுட்டப்பட்ட வரலாற்று நூல் பதிவு செய்துள்ளது. இந்நூல் உண்மையில் நேர்த்திமிக்க எடுத்துரைகளையும் நாவன்மை மிக்கோரின் பேருரைகளையும் உள்ளடக்கியது. ஹன் மரபின் ஆட்சிக் காலத்தில் இந்நூல் பலமுறை முக்கியத் திருத்தங்களைப் பெற்றிருந்தாலும் கூட, இதன் அடிப்படைப் பொருண்மைக் கூறுகள் இதன் மூல நூலிலிருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும் என்று வல்லுநர் கருதுகின்றனர்.

இதே காலப் பகுதியில் (கி.மு.500 - கி.மு.300) தத்துவ உரைநடை நூல்களும் வரலாற்று வசன நூல்களுடன் தோன்றியுள்ளன.[4] கன்பூசியசின் அனலெக்ட்சு (Analects) மூதுரைகளும் அறிவுரைகளும் அடங்கிய ஒண்மையும் நுண்மையும் வாய்ந்த பனுவல் ஆகும். இந்நூலின் சிறு சிறு தொடர்கள் தொடர்பற்றனவாக உள்ளன. கன்பூசியசின் சம காலத்தவரான இலவோசியசு (Laocius - Lao-tzu) எழுதியதாகக் கூறப்படும் தாவோ பனுவல் (The Book of Tao) என்பது இயைபற்ற வசனமும் தரமற்ற நையாண்டிப் பாடலும் சேர்ந்த கதம்பத் திரட்டாகக் காட்சி தருகிறது.

கி.மு.400 - கி.மு.300 என்ற காலப் பகுதிக்குரிய மோத்துசு (Motzu), மென்சியசு (Mencius), சுவாங்கு - துசு (Chuang-tzu) ஆகியோரின் வசனங்களில் கவனமாக அமைக்கப்பட்ட நன்கு வளர்ச்சி பெற்ற விரிவான பேருரைகள் சிறந்து காணப்படுகின்றன.

மாற்றார் கருத்துக்களை மறுத்துரைக்கும் கண்டன வசனங்களை ஆற்றலுடன் எழுதுவதில் மோத்துசு (Mo-tzu) என்னும் தத்துவமேதை முதலில் வைத்துப் போற்றப்படுகிறார். சில வேளைகளில் அவர் உடைநடை நூல்கள் மந்தமாக நடப்பினும் கூறியது கூறலாக இருப்பினும், அவருடைய கருத்துக்களைத் தெளிவாகவும் அழுத்தமாகவும், அளவாகவும் அவை எடுத்துரைக்கின்றன. மோத்துசுவின் உலகளாவிய அன்புக் கோட்பாடு (Doctrine of Universal Love), வலுச்சண்டைக்குப் போவதற்கு எதிர்ப்பு (Anti-aggression), பயனெறிமுறைக் கோட்பாடு (Utilitarianism) என்பன அவர் உரைநடை நூல்களில் விளக்கம் பெறுகின்றன.

வலுச்சண்டைக்குப் போதலைக் கண்டித்து அவர் எழுதியுள்ள உரைநடையின் ஒரு பகுதியின் தமிழாக்கத்தைத் தருகிறோம்.[5]

"ஒருவனைக் கொலைபுரிதல் அநீதி என்று கூறப்படுகிறது; அது ஒரு இறப்புத் தண்டையினை வருவித்துக் கொள்ளுகிறது. இந்த வாதத்தினைப் பின்பற்றி, பத்துப் பேரினைக் கொலைபுரிதல் பத்து மடங்கு அநீதி என்றும், அது பத்து இறப்புத் தண்டையினை வருவித்துக் கொள்ளுகிறது என்றும்; நூறு பேரினைக் கொலைபுரிதல் நூறு மடங்கு அநீதி என்றும், அது நூறு இறப்புத் தண்டையினை வருவித்துக் கொள்ளுகிறது என்றும் கூறலாம். உலகின் சான்றோர் (Gentlemen) அனைவரும், இவற்றைக் கண்டிக்க வேண்டும் என்றும், இவை

அநீதி என்று முத்திரை குத்த வேண்டும் என்றும் அறிகிறார்கள். ஆனால், பெரும் அநீதியுடைய மாநிலங்களுக்கு வரும் பொழுது, அவற்றைக் கண்டிக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரிவது இல்லை. மாறாக, அவர்கள் அதனை (-அநீதியை) நீதி என்று கூறிக் கைதட்டி வரவேற்கின்றனர்; அது அநீதிதான் என்பது பற்றி அவர்கள் உண்மையில் அறியாதவராகவே உள்ளனர். எனவே, அவர்கள் வரும் தலைமுறைக்குத் தங்கள் (தவறான) தீர்ப்பினைப் பதிவு செய்து விட்டுச் செல்கின்றனர். அது அநீதிதான் என்பதை அவர்கள் அறிந்திருந்தால், அவர்கள் ஏன் பொய்யான தீர்ப்பினைப் பதிவு செய்து வருங்காலத் தலைமுறைக்கு விட்டுச் செல்லுதல் வேண்டும்?"

மோத்துசு (Motzu) தருக்க மேதை. வாதத் திறமை தோன்றத் தம் வசனங்களைத் தெளிவாக வரைந்துள்ளார். இவர் தருக்க ஆற்றல்மிக்க வசனத்திற்கு மேலும் ஒரு சான்றினைக் காண்போம்.[6]

"தரமான தீர்ப்பு நிலைநிறுத்தப்படுதல் வேண்டும். தரத்தினைக் கருதாமல் (அதனை) நிலைநிறுத்தக் கருதுதல், சுழன்று கொண்டிருக்கும் குலாலனின் சக்கரத்தினை வைத்து ஞாயிற்றின் எழுச்சியையும் மறைவினையும் உறுதி செய்வதற்கு ஒப்பானது. இம்முறையினால் நியாயம் x அநியாயம், நன்மை x தீமை என்பனவற்றின் வேறுபாட்டினை அறிய முடியாது. என்வே, எவ்வகைக் கூற்றும் (Statement) மூன்று விதிகளைப் பின்பற்றுவதாக இருத்தல் வேண்டும். அவையாவை? 1. அதன் அடித்தளம் (Base), 2. அதன் சரிபார்க்கப்படும் தன்மை (Verifiability), 3. அதன் பொருத்தப்பாடு (Applicability). எந்த ஆதாரத்தின் மேல் அக்கூற்று அமைகிறது? பண்டைய முனிவர் - அரசர்களின் (Sage-Kings)

செயல்களைத் தளமாகக் கொண்டு அஃது அமைதல் வேண்டும். எதனால் அக்கூற்று சரிபார்க்கப் படுகிறது? கேள்வி அறிவாலும் காட்சியறிவாலும் அது சரிபார்க்கப்படுதல் வேண்டும். அக்கூற்றினை எப்படி பொருத்தப்படுத்துவது? தண்டனைச் சட்டங்களினாலும் ஆட்சியினாலும் அதனை மேற்கொள்ளுவதாலும், நாட்டிற்கும் மக்களுக்கும் அதனால் வரும் நன்மைகளைக் கூர்ந்து நோக்குவதாலும், அதன் பொருத்தப்பாடு உறுதி செய்யப்படுதல் வேண்டும். ஒவ்வொரு கொள்கையின் மூன்று விதிகள் என்பது இப்படி பொருள்படுவதாக அமையும்."

மோத்துசுவின் சிந்தனைத் தெளிவிற்கும் தருக்க விளக்கத்திற்கும் மேலே கண்ட பகுதி ஒரு சிறந்த சான்றாகக் கருதத்தக்கது.

கன்பூசியசின் கருத்துக்களைத் திருத்தமாகவும் தெளிவாகவும் மக்களிடையே தம் எழுத்தினாலும் பேச்சினாலும் பரப்பிய சிறப்புக்குரியவர் மென்சியசு (Mencius). மனிதன் உள்ளார்ந்த நிலையில் நற்பண்புகள் உடையவன் என்பது மென்சியசின் போதனையாகும். இந்தப் போதனை இவருக்குத் தத்துவப் புகழை ஈட்டித் தந்தது. இவருடைய உரைநடை இலக்கியத்தில் பேருரைத்திறம், நயமிக்க சொற்கள், நடை அழகு என்பன இடம்பெற்றன. அவர் காலத்து நிலவிய எதிராளியின் போதனைகளை எதிர்கொள்ளுவதற்கு அரசர்கள், அரசியல் வாதிகள், தத்துவவாதிகள் ஆகியோருடன் நீண்ட சொற்போர் புரிய வேண்டியதாயிற்று. முதிர்ந்த தருக்கவாதியாகிய மென்சியசு (Mencius), எதிராளிகளின் பலகீனத்தை எவ்வாறு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பதை நன்கு அறிந்திருந்தார். வலிமைமிக்கதும், தடுக்க முடியாததும் ஆகிய சொல்லாடலினால் அவர்களைத் தாக்கி வெற்றி

கொள்ளுதல் எப்படி என்பதையும் அவர் நன்றாகவே அறிந்திருந்தார். ஒரு சான்றினைக் காண்போம்.

ஹ¯சு ஹிசிங்கு (Hsu Hsing) என்பவர் தத்துவ ஆசிரியர். இவர் உழவே உயர்ந்த தொழில் என்ற கொள்கை கொண்டவர். ஒவ்வொருவரும் உழவுத் தொழில் புரிய வேண்டும் என்பதை வலியுறுத்திப் பேசியவர். நாட்டினை ஆளுவோர் வயல்களில் இறங்கி வேலை செய்வது இல்லை என்று குறை கூறியவர். உலகாயதப் பொருள்கள் யாவும் நிலத்திலிருந்து பெறப்படுதலின் உழவர்களே உற்பத்தியாளர்கள். பிற தொழில் புரிவோர் யாவரும் சுரண்டுபவர்கள் என்பது இவர்தம் கொள்கை.[7] இவருக்கும் மென்சியசுக்கும் சொற்போர் (வாதம், Debate) நடந்தது. அதனைக் காண்போம்.[8]

மென்சியசு
(Mencius) : தலைவர் ஹ¯சு (Master Hsu) உண்மையில் தாமே வயலில் கூலங்களை விதைத்து அறுவடைப் பயனை உண்ணுகிறார்.

தத்துவ ஆசிரியர்
ஹ¯சு (Master Hsu): ஆம்.

மென்சியசு : தலைவர் ஹ¯சு உண்மையில் தான் உடுத்தும் ஆடையினை நெய்கிறார்.

ஹ¯சு : இல்லை; தலைவர் ஹ¯சு மயிர் ஆடையினை உடுத்துகிறார்.

மென்சியசு : தலைவர் ஹ¯சு குல்லாய் (Cap) வைத்திருக்கிறாரா?

ஹ¯சு : ஆம், அவர் குல்லாய் அணிந்துள்ளார்.

மென்சியசு : எத்தகைய குல்லாய்?

ஹ¯சு : எளிய ஒன்று.

மென்சியசு : அவரே அதனை நெய்து கொண்டாரா?

ஹ௱சு : இல்லை. உணவுக் கூலத்தைப் பண்டமாற்றாகத் தந்து அதனைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

மென்சியசு : தலைவர் ஹ௱சுவே அதனை ஏன் தயாரித்துக் கொண்டிருத்தல் கூடாது?

ஹ௱சு : அஃது அவருடைய உழவுத் தொழிலில் குறுக்கிடுவதாக ஆகிவிடும்.

மென்சியசு : தலைவர் ஹ௱சு சமையலுக்குக் குடங்களும் தட்டுகளும், உழவுக்கு இரும்புக் கொழுவும் பயன்படுத்துகிறாரா?

ஹ௱சு : ஆம்.

மென்சியசு : அவற்றை அவரே செய்து கொள்ளுகிறாரா?

ஹ௱சு : இல்லை. உணவுக் கூலத்தைப் பண்ட மாற்றாகத் தந்து அவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

மென்சியசு : நன்று. தன் உணவுக் கூலத்துக்காகப் பெற்ற பொருள்களுக்காகக் குலாலர்க்கும் கொல்லர்க்கும் அவர் (- தலைவர் ஹ௱சு) பொல்லாங்கு புரியவில்லை யெனில், குலாலரும் கொல்லரும் தங்கள் பொருள்களை உணவுக் கூலத்திற்காகப் பண்டமாற்று செய்தல் குறித்து உழவர் ஏன் பொல்லாங்கு கொள்ளுதல் வேண்டும்? மேலும், தலைவர் ஹ௱சுவே ஏன் குலாலத் தொழிலையும் கொல்லத்

தொழிலையும் தாமே எடுத்துக் கொண்டு, தம் எல்லைக்குள் செய்த அப்பொருள்களைப் (குடம், கொழு முதலியன) பயன்படுத்துதல் கூடாது? நூற்றுக்கணக்கான கைவினைஞர்களுடன் எண்ணற்ற தொழில் தொடர்புகள் வைத்துக் கொள்ளுதல் எதற்காக? தலைவர் ஹூசு அந்த அளவுக்கு ஏன் தொந்தரவு படுதல் வேண்டும்?

ஹூசு : நூறு கைவினைஞரின் தொழிலை உழவுத் தொழிலுடன் ஒருங்கிணைத்துச் செய்தல் இயலாதது.

மென்சியசு : அப்படியானால், ஒரு மாநிலத்தின் அரசு மட்டும் உழவுத் தொழிலுடன் ஒருங்கிணைத்துச் செயற்படுதல் இயலுமா? மேலோருக்கு உரிய பணியும் உண்டு; கீழோர்க்குரிய பணியும் உண்டு. மேலும், நூறு கைவினைஞரின் வேலை ஒருவனிடம் சென்று சேரும் எனில், அவனும் தான் செய்கிற பொருள்களை மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும் எனில், இம்முறை முழு உலகினையும் குழப்பப் பாதைக்கு மட்டுமே இட்டுச் செல்லும். எனவேதான், ‘சிலர் தங்கள் மூளையால் (மனங்களால்) உழைக்கின்றனர்; ஏனையோர் தங்கள் உடல்களால் உழைக்கின்றனர்’ என்ற முதுமொழி வந்தது. “தங்கள் மூளையால் (-மனங்களால்) உழைப்பவர்கள் ஏனையோரை ஆள்கின்றனர்; தங்கள் உடலால் உழைப்பவர்கள் ஆளப்படுகிறார்கள். ஆளப்படுபவர்கள்

உணவுக் கூலங்களை உற்பத்தி செய்கின்றனர்; ஆள்பவர்கள் அவர்களால் உணவு அளிக்கப்படுகிறார்கள். இந்தத் தத்துவம் உலகெங்கும் ஒப்பியது".

இவ்வாறு மென்சியசு தன் வாதத்திறமையினால் 'உழவே உயர்வு' என்ற கொள்கை கொண்ட தத்துவ ஆசிரியர் ஹுசுவை வென்றார். அவர் கொள்கைப் பொதுவுடைமைச் சீனத்தில் ஏற்கப்படவில்லை என்பதும் சுட்டத்தக்கது. காலத்துக்கு ஒவ்வாததாக அவர் கொள்கை வழக்கு வீழ்ந்தாலும், வலிமை மிக்க அவர் வசனம் சீன உரைநடை வளர்ச்சியில் ஒரு எல்லைக் கல்லாக எண்ணப்படுகிறது.

தத்துவ ஆசிரியர் காவோ (Master Kao), மென்சியசு (Mencius) ஆகிய இருவரும் மனித இயல்பு (Human Nature) பற்றி உரையாடல் நிகழ்த்தினர்.[9] அதன் தமிழாக்கம் காண்போம்:

காவோ : மனித இயல்பு என்பது சுழலும் தண்ணீரைப் போன்றது. கிழக்கு நோக்கிப் பிளவு ஏற்படும் எனில், அது கிழக்கு நோக்கி ஓடுகிறது. மேற்கு நோக்கிப் பிளவு ஏற்படும் எனில், அது மேற்கு நோக்கி ஓடுகிறது. எது கிழக்கு, எது மேற்கு என்பதைப் பிரித்தறிய இயலாத தண்ணீரைப் போல, மனித இயல்பு என்பது எது நல்லது எது தீயது என்பதைப் பிரித்தறிய இயலாதது.

மென்சியசு : கிழக்கு, மேற்கு என்ற வேறுபாட்டுணர்வின்றித் தண்ணீர் ஓடும் என்பது உண்மைதான். ஆனால், அது மேலும் கீழும் சமமாக ஓடக் கூடியதா? தண்ணீர் கீழ் நோக்கி ஓடும் இயல்புடையதுபோல்,

> நன்மை நோக்கி ஓடக் கூடியது மனித இயல்பு. பள்ளத்தை நோக்கி ஓடாத வெள்ளம் இல்லை. அதுபோல, நன்மை நோக்கிச் செல்லும் இயல்பில்லாத மனிதர் ஒருவரும் இலர்.
>
> தண்ணீரை வலிமையாக மோதுவதால், உம் நெற்றியின் உயரத்துக்குமேல் அதனை விசிறி அடிக்க முடியும். அதனை அணைகட்டி நிறுத்துவதால், குன்றின் இடத்திற்குக் கொண்டு போக முடியும். ஆனால், அதுவா தண்ணீரின் இயல்பு? அதற்குப் புறத்தே உள்ள ஆற்றல்தான் அதனை அப்படி இருக்கச் செய்வற்குக் காரணமாகிறது. அதுபோல, நல்லது அல்லாததை ஒருவன் புரியும்படி செய்யப் பெறுவான் எனில், அவன் இயல்பு புற ஆற்றலால் அங்ஙனம் மாற்றப்படுகிறது என்பதுதான் பொருள்.

இந்த உரையாடலிலிருந்து மனித இயல்பு நன்மையினை நோக்கியது என்றும், புறச்சூழலால் அவ்வியல்பு பாதிக்கப்படுகிறது என்றும் மென்சியசு கருதினார் என்பது புலனாகும்.

தான் கூற விரும்பிய கருத்தினை நிலைநாட்டும் பொருட்டு மென்சியசு உவமைகள், கதைகள், தொடர் உருவகங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தினார். ஒரு காலத்து மலையில் அடர்ந்திருந்த அழகிய மரங்களை வெட்டி அப்புறப்படுத்திய பொழுது, அச்செயல் மனிதனின் உள்ளுறையும் இயல்பினைத் தவறாகப் பயன்படுத்தும் செயலைப் போன்றது என்று கூறினார். தேவைக்கும் அளவுக்கும் மீறிச் செயல்படுபவர் ஈமக் காட்டில் இடும் பலி உணவிற்காகக் கையேந்தி நிற்கும்

பிச்சைக்காரராக வேண்டி நிலைக்குத் தள்ளப்படுவார் என்பதால், அளந்து செலவு செய்யும்படி அறிவுரை கூறியுள்ளார். ஒருவன் முறையாக ஈட்டாத செல்வமும் மரியாதையும், வெற்றியும், இலாபமும் முடிவில் அவன் மனைவியரும் வைப்பாட்டியரும் அவனுக்காகக் புலம்பக் கூடிய நிலையில் கொண்டு போய் விடும் என்று எச்சரிக்கை செய்துள்ளார்.

மென்சியசைப் போலவே, தத்துவப் பொருள் பற்றிய உரைநடை எழுதுவதில் வல்லவராக விளங்கியவர் சுவாங்கு - துசு (Chuang-tzu) ஆவர். இவர் தாவு மார்க்கத்தினர். தம் கொள்கையினை நிலைநாட்டுவதற்கு வாழ்வியல் நிகழ்ச்சிக் குறிப்புக்களையும் (anecdotes), உருவகக் கதைகளையும் (allegories) பயன்படுத்துவதில் இவருக்கு விருப்பம் மிகுதி. இவர் உரைநடையில் வியக்கத்தக்க கற்பனைகள் உண்டு. இதனால் இவர் வசனங்கள் இன்பம் தருவதுடன் சிந்தனைக் கிளர்ச்சியை உண்டு பண்ணுவதாகவும் அமைந்தன.[10]

சுவாங்கு - துசு நகைச்சுவையாளர். மனிதனின் குறுகிய நோக்கத்தையும் சிறுமையினையும், அறியாமையினையும் கண்டு இவர் எள்ளல் வசனம் எழுதியவர். வாழ்வு என்பது ஒரு கனவு; வாழ்வினை விரும்புதல் என்பது மாயம் என்பது இவர் கருத்து. தன் குறுகலான பார்வையினால் மனிதன் வாழ்வு, சாவு என்பன பற்றித் தேவையில்லாமல் பிதற்றுகிறான். இப்பொருள் பற்றி அவர் எழுதியுள்ள உரைநடையின் தமிழாக்கம் காண்போம்:[11]

"மதுபான விருந்தினைக் கனவிற் காண்பவர் விழித்தெழுந்ததும் புலம்புதலையும் துயரத்தையும் காண்கின்றனர். புலம்புதலையும் துயரத்தையும் கனவிற் காண்பவர் விழித்தெழுந்ததும் வேட்டைக்குத் தயாராகி வருகின்றனர். தூங்கும்

பொழுது அவர்கள் 'நாம் தூங்குகிறோம்' என்பதை அறிவதில்லை. அவர்கள் விழித்தெழுந்ததும்தான் தாங்கள் கண்டது கனவு என்பதை அறிகிறார்கள். படிப்படியாகப் பெருவிழிப்பு (Great awakening) உண்டாகிறது. அதன் பிறகுதான் இந்த வாழ்வு என்பது உண்மையில் ஒரு பெருங்கனவு என்பதைக் கண்டு கொள்ளுகிறோம். இப்போது விழித்திருப்பதாக மூடர்கள் நினைக்கின்றனர். இவன் இளவரசன் என்றும் இவன் இடையன் என்றும் தாங்கள் அறிவதாகத் தற்பெருமை பேசிக் கொள்ளுகின்றனர். எவ்வளவு குறுகலான மனம்! கன்பூசியசும் நீவீரும் - எல்லாமே கனவுதான். உங்களைக் கனவுகள் என்று சொல்லுகிற நானும் எனக்குள் ஒரு கனவு தான்!"

இவ்வாறு உலகம் மாயைத் தோற்றம் என்ற தாவுக் கொள்கையினை அழகுபடக் கூறிய சுவாங்கு துசு 'தானே ஒரு கனவு' என்ற தன் கூற்றினை விரித்துரைக்கும் வகையில் பட்டாம்பூச்சியின் கதை ஒன்றினையும் கூறியுள்ளார். அக்கதை வருமாறு:[12]

"முன்னொரு காலத்தில் சுவாங்கு என்பவர் மகிழ்ச்சியாகச் சிறகடிக்கும் பட்டாம்பூச்சியைப் போலத் தானும் ஒரு பட்டாம்பூச்சி என்று கனவு கண்டார். பட்டாம்பூச்சியைப் போலத் தானும் மகிழ்ச்சியுடையவர் என்ற உணர்வு அவருக்கு இருந்ததே தவிர, தான் சுவாங்கு சௌ (Chuang Chou) என்பது அவருக்குத் தெரியாது. திடீரென்று அவர் விழித்துக் கொண்டார். அவர் உண்மையில் சுவாங்கு சௌ ஆகவே (-தானாகவே) இருந்தார். பட்டாம்பூச்சி என்பது சுவாங்கு சௌ கண்ட கனவா? அல்லது, சுவாங்கு சௌ என்பவர் பட்டாம் பூச்சியின் கனவா? என்பது அவருக்குத் தெரியாது."

இக்கதைக் குறிப்பினால், வாழ்வு என்பது ஒரு கனவு என்ற தாவு நெறியின் கருத்து புலனாகிறது. சுவாங்கு செள மெய்யியல் சிந்தனைக்குப் பின்வருவது ஒரு சான்று:

> "பூரண மனிதனுக்கு (Perfect man) ஆன்மா எதுவும் இல்லை; ஆன்மீக மனிதனுக்குச் (Spiritual man) சாதனை எதுவும் இல்லை; புனிதனுக்குப் (Sage) பெயர் எதுவும் இல்லை."

பெரும்பாலும் தாவு மார்க்கச் சிந்தனைகள் பௌத்தச் சிந்தனைகளுடன் ஒத்துக் காணப்படுகின்றன. ஆனால், பௌத்தம் கி.பி.முதல் நூற்றாண்டில்தான் சீனம் சென்றது. ஆனால், தாவு மார்க்கத்தைத் தொடங்கிய இலவோசியசு கி.மு.ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது நினைவில் கொள்ளுதற்கு உரியது. இக்கருத்து அத்துவித வேதாந்தத்திலும் காணப்படுதலினால், அதன் விளக்கவுரையாளராகிய ஆதிசங்கரர் பிரசன்ன பௌத்தர் என்று குறிக்கப்பெற்றார்.

ஆன்மாவைப் (Soul) பற்றிச் சுவாங்கு துசு நல்ல உரைநடையில் எழுதியுள்ள புகழ்பெற்ற விளக்கங்கள் சிலவற்றைக் காண்போம்:

> "ஆன்மா உறக்கத்தில் பூட்டப்பட்டிருக்கிறதா? அன்றி, விழிப்பு நிலையில் உடல் அசைகிறதா? என்ற வினாவிற்கு விடை காண்பதற்காக அண்மைச் சூழல்களைக் கொண்டு போராடிக் கொண்டு இருக்கிறோம். சிலர் எளிமையாகவும் ஓய்வாகவும் போய்க்கொண்டிருக்கிறார்கள்; சிலர் ஆழமானவர்களாகவும் சூழ்ச்சி வாய்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். சிலர் மனம் விட்டுப் பேசாதவர்களாகவும் ஒளிவு மறைவு உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். சிலவேளை அற்ப அச்சங்களால் நாம் பெரிதும் அச்சுறுத்தப்படுகிறோம்; சிலவேளை மனம் உடைந்து போகிறோம்; பேரச்சத்தினைக் கண்டு

மருள்கிறோம். சரி, தப்பு ஆகிய இரண்டிற்கும் நடுவராக, குறுக்கு வில்லிலிருந்து பாயும் அம்பினைப் போல நம்மனம் பறக்கிறது; அம்மனம் பெற்ற தொன்றினைப் பற்றிக் கொள்ளுவதற்குச் செய்யப்படும் சபதம் போலப் பின்னால் தங்குகிறது. இலையுதிர் காலத்திலும் குளிர் காலத்திலும் தாவரங்களைப் பற்றி அழிக்கும் நோயினைப் போல மனத்திற்குப் படிப்படியான சிதைவு வருகிறது; தன் சுய வேலைகளில் மூழ்கி, தன்போக்கில் ஓடுகிறது; ஒருபொழுதும் அது திரும்புவது இல்லை. முடிவாக, தேய்ந்து போய்ச் சிறைப்பட்டுப் பழைய வடிகாலைப் (Drain) போல அது மூச்சுத் திணறி நின்று போகிறது. வீழ்ந்தமனம் மீண்டும் ஒளியைப் பார்ப்பது இல்லை.

மகிழ்ச்சியும் சினமும், துன்பமும் இன்பமும், கவலையும் வருத்தமும், தெளிவின்மையும் அச்சமும் முறைவைத்து நம்மேல் வரத் தொடங்குகின்றன. இங்ஙனம் வருவதால் எப்பொழுதும் மாறிக் கொண்டிருக்கும் மனநிலைகள் துளையிலிருந்து புறப்படும் இசையைப் போலவும், ஈரத்திலிருந்து தோன்றும் காளான்கள் போலவும் உள்ளன. இரவு பகலாக, நம்முள் அவை மாறிமாறி வருகின்றன. ஆனால், அவை எப்போது எழுந்தன என்பதை நம்மால் சொல்ல இயலாது. அந்தோ! அந்தோ! அவற்றுக்கு மூலமாயுள்ள காரணத்தின்மேல் ஒரு கணமேனும் நம் விரலைப் பதிக்க முடியுமா?

உணர்ச்சிகள் இல்லையேல் நான் இருத்தல் இயலாது. என்னைத் தவிர அவற்றை உணர்பவர் ஒருவரும் இருத்தல் இயலாது. முடிந்தமட்டில் அவற்றை அணுகிப் போகலாம்; ஆனால், யாருடைய ஆணையினால் அவை ஆடல் புரிகின்றன என்பது

நமக்குத் தெரியாது. அதற்குக் காரணம் ஆன்மா என்பது போல் தோன்றும். அதன் (ஆன்மாவின்) இருப்புக்குரிய குறிப்பு தேவைப்படுகிறது. அதன் வடிவத்தினை நாம் பார்க்காவிட்டாலும், அது செயற்படுகிறது என்பதுவே அதன் இருப்புக்குப் போதிய காரணம் ஆகும். ஒரு வேளை அது (-ஆன்மா, Soul) புற வடிவம் இன்றி அக உண்மை (inner reality) பெற்றிருத்தல் கூடும்.

நூற்றுக்கணக்கான எலும்புகளும், ஒன்பது புறத்துவாரங்களும், ஆறு அக உறுப்புக்களும் கொண்டு முழுமை பெற்ற மனித உடலை எடுத்துக்கொள்ளுவோம். இவ்வுறுப்புக்களில் எப்பகுதியை நான் கூடுதலாக நேசிக்கிறேன்? எல்லாவற்றையும் சமமாக நீவீர் நேசிக்கவில்லையா? அல்லது ஏதாவது ஒன்றை மட்டும் விரும்புவீரோ? இந்த உறுப்புக்கள் வேறொருவரின் வேலையாட்களாகப் பணிபுரிகின்றனவா? பணிமக்கள் தங்களைத் தாங்களே ஆட்கொள்ள முடியாது; ஆகையினால், அவர்களே எசமானராகவும் பணிமக்களாகவும் முறைவைத்துப் பணி செய்து கொள்ளுகிறார்களோ? உறுதியாக, அவ்வுறுப்புக்களை எல்லாம் கட்டுப்படுத்தும் ஆன்மா இருக்கத்தான் வேண்டும்.

ஆன்மாவின் உண்மை இயல்பு என்பதை உறுதி செய்ய முடியுமோ முடியாதோ, அஃது ஆன்மாவுக்குச் சிறிதும் பொருளாவதில்லை. ஒருமுறை இந்தப் பொருள் வடிவத்திற்குள் (Material shape) ஆன்மா வந்துவிடுமெனில், அது களைத்துப் போகும் வரை, தன்போக்கில் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. வாழ்வின் சேதாரத்தினால் அலைக்கழிக்கப்படுதலும், தன்போக்கினைத்

தடுத்துக்கொள்ள வாய்ப்பின்மையால் விரட்டி யடிக்கப்படுதலும் இரங்குதற்கு உரியன அல்லவா? வாழ்நாள் முழுமையும் இடைவிடாமல் உழைத்தலும், பயனை நுகர்வதற்காக வாழாமையும், உழைப்பினால் தேய்ந்து போதலும்,பின் பிரிந்து எவ்விடம் செல்கிறோம் என்பது ஒருவராலும் அறியப்படாமையும் - இவையனைத்தும் ஒருவர் ஆழ்ந்த துன்பம் உறுவதற்குரிய நியாயமான காரணம் அன்றோ?"

இந்த விளக்கவுரையினால் சுவாங்கு-துசு ஆன்மா உண்மையினை ஒப்புக் கொண்டவர் என்பது புலனாகும்.[13] உடம்பினை உருவாக்கும் உறுப்புக்களின் வேறாக, உடம்பினுள் செயற்படும் தத்துவமே ஆன்மா என்பது அவரால் தருக்க முறையில் நிலைநாட்டப்பட்டது. இந்தியத் தத்துவ ஞானிகளில் சாங்கியக் கபிலர் கி.மு.7, 8ஆம் நூற்றாண்டிலேயே ஆன்மா உண்மைக்குக் கூறியுள்ள காரணங்களில் பலவற்றைச் சுவாங்கு-துசு என்னும் சீன ஞானியின் உரையிலும் காண்கிறோம். சாங்கியத்தின் தாக்கம் இவரிடம் உள்ளது என்று கூறுதல் அரிது. இயல்பாகவே வேற்று நாட்டார், மொழியாளர்களிடம் காணப்படும் பொதுக்கூறுகள் யாவும் மனிதப் பொதுமைக்கு உரிமையுடையதாகவே ஒப்பியலார் கொள்ளுவர்.

சௌ மரபின் (Chou dynasty) ஆட்சிக் காலத்தின் இறுதியில் கி.மு.3ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஹுசூன் - துசு (Hsun -tzu), ஹன்ஃபே - துசு (Han -Fei-tzu) என்ற அறிஞர்கள் வாழ்ந்திருந்தனர். முன்பே நடைநலத்தாலும் புலப்பாட்டுத் திறத்தாலும் நல்ல வளர்ச்சி பெற்றிருந்த சீன உரைநடை, இவ்விரு அறிஞர்களையும் தத்தம் போதனைகளைப் பயனுற எடுத்துரைப்பதற்குப் பெரிதும் உதவிற்று. இவருள், ஹுசூன் துசு என்பார் சடங்கியம் (Ritualism) என்ற

கோட்பாட்டினையும், ஹன்ஃபே - துசு என்பார் சட்டவியம் (Legalism) என்ற கோட்பாட்டினையம் போதித்து வந்தனர். சடங்குகள், அறிவு, முகில்கள், பட்டுப்புழு,இடித்து அறிவுறுத்துததல் என்ற ஐந்து பொருண்மையிலும் ஹூசூன் -துசு ஐந்து வசன கவிதைகள் எழுதியுள்ளார். சீனமொழியில் வசன கவிதையை ஃபூ (Fu) எனக் கூறுவர். ஒரே வகையான வடிவத்தில் அமைந்துள்ள ஒன்றற்கொன்று தொடர்பு இல்லாத தலைப்புக்கள்' அவர் ஒரு புது இலக்கிய வடிவத்தினைச் சோதனை முயற்சியாகச் செய்து பார்த்துள்ளார் என்பதைக் காட்டுகின்றன. இந்தப் புதிய வடிவத்தினை ஒலிநயப்புதிர் (Rhyming riddle) என்று பொருத்தமுற வழங்கினர். பட்டுப்புழுவினைப் பற்றி ஹூசூன் - துசு வரைந்துள்ள வசன கவிதையின்[14] (Fu) தமிழாக்கத்தினைக் காண்போம்:

"ஒல்லியான உடலும் குதிரைத் தலையும் கொண்டு அடிக்கடி உருமாற்றம் செய்து கொள்ளுவதும், நீண்ட வாழ்நாளை ஒரு பொழுதும் அடையாததும் ஆகிய புழு என்று சொல்லட்டுமா? இளையதற்கு அன்பும் மூத்ததற்குப் புறக்கணிப்பும் கொண்டது என்று சொல்லட்டுமா? எப்பாலும் சாராத பெற்றோர்க்குப் பிறந்தது என்று சொல்லட்டுமா? குளிர் பருவத்தில் சோம்பிக்கிடந்து, கோடைப் பருவத்தில் அலையும் இயல்பு உடையது என்று சொல்லட்டுமா?

அப்புழு முசுக்கட்டையின் இலைகளைத் தின்று, பட்டினை உமிழ்கிறது; அப்பட்டு முதலில் ஒழுங்கின்றித் தோன்றினும் பின்னர் அது முறைப்படுத்தப்படுகிறது. கோடையில் பிறந்தும், வெப்பத்தை அது (பட்டுப்புழு) வெறுக்கிறது. ஈரத்தினை விரும்புகிறது. ஆனால் மழையினை வெறுக்கிறது. முதனிலைப் புழுவினைத் (Larva) தன்

தாயாகவும் அந்துப் பூச்சியைத் (Moth) தன் தந்தையாகவும் அது கருதுகிறது. மும்முறை கீழே அது கிடக்கிறது; மும்முறை அது மேலே ஏறுகிறது; பின்னர் எல்லாம் நிறைவு பெறுகிறது. உண்மையில் பட்டுப் புழுவின் தத்துவம் இது."

பட்டுப்புழுவின் தோற்றம், தொண்டு பற்றிய கற்பனைச் சுவையும் உண்மையியலும் ஒருங்கே சேர்ந்த படைப்பாக இவ்வசன கவிதை உள்ளது. சீன மொழியில் காணப்படும் அரிய இலக்கிய வகையாக ஃபூ எனப்படும் வசன கவிதை போற்றப்படுகிறது. கவிதை, உரைநடை ஆகிய இரண்டின் விளிம்பில் இது நிற்கிறது. இது கவிதையும் அன்று, உரைநடையும் அன்று. இரண்டின் கூறுகளையும் பெற்றுள்ள இலக்கிய வடிவமாக இது திகழ்கிறது. உணர்ச்சிப் பெருக்கும், அழகிய வருணனைகளும் கொண்ட உரைநடை (=வசனம், Prose) கவிதையின் உயரத்தினை எட்டுகிறது. இந்த வசன கவிதை தென்சீனத்தின் படைப்பாகத் தொடக்கத்தில் திகழ்ந்துள்ளது.

கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் வரலாறு, தத்துவம் ஆகிய பொருள்களில் எழுதுவதற்குரிய ஊடகமாக உரைநடையினைச் சீன எழுத்தாளர்கள் சோதனை செய்து பார்த்து வெற்றி கண்டுள்ளனர். இந்த உரைநடையின் வடிவத்தில் கன்பூசியசின் காலத்து வழக்கிழந்த சொற்கள் (Archaic Words) பெரும்பான்மையும் இடம்பெறாமை சிறப்பாகச் சுட்டுதற்கு உரியது. சொற்சுருக்கமும், தெளிவும், கதைக்குறிப்பும், மேற்கோளும் இந்த உரைநடையின் சிறப்புக் கூறுகளாகும். முரண் தோன்ற விளக்குதலும் வலியுறுத்துவதற்காகத் திரும்பக் கூறுதலும் இவ்வகை உரைநடையில் காணலாம்.[15]

முற்பட்ட கீழை ஹன் காலத்து எழுத்தாளர்கள் ஒன்றற்கொன்று நெருங்கிய தொடர்புடைய இரு வகை

உரைநடை வடிவங்களை எழுதத் தொடங்கினர். அவை, 1. கல்வெட்டு (Ming - Inscription), 2. அறிவுரை (Zhen - Admonition) ஆகும். ஏதாவதொரு பொருளின்மேல் பொறிக்கப்படும் எழுத்தினைக் கல்வெட்டு என்பர். பண்டைக் காலத்தில் உலோகம் கல்வெட்டுப் பொறிப்பதற்குரிய பொருளாக இருந்தது. சங்கு காலம் (Shang Period, கி.மு.1766- கி.மு.1122) முதலே வெண்கலப் பாத்திரங்களில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டன. ஆயினும், அவை யாவும் அப்பாத்திரங்களை உடையவர் பெயரினையும் உருவாக்கியவர் பெயரினையும் தாங்கியிருந்தன. பின்னர் சௌ மரபு (Zhou - Chou) ஆட்சிக் காலத்தில் (கி.மு.1122 - கி.மு.249) விரிவான வாசகங்கள் பொறிக்கப்பட்டன. இப்பொறிப்புக்களில் அறிவுரைகள் (Admonitions) இடம்பெற்றன. இவையாவும் நயமாக இடித்துரைப்பனவாக அமைந்தன. ஒரு சில பொறிப்புக்கள் அரச வாழ்த்தாக அமைந்தன.[16]

கீழை ஹன் மரபின் ஆட்சிக் காலத்தில் (கி.பி.25- கி.பி.220) எழுத்துப் பொறிப்பு (Inscription) ஒரு கலையாக வளர்ச்சி பெற்றது. புகழ்பெற்ற எழுத்தாளர் பலரும் எழுத்துப் பொறிப்புக்களின் (Inscriptions) ஆசிரியர்களாக (authors) விளங்கினர். கி.பி.92இல் ஹன் தளபதி வடக்கு சியோங்குனு (Northern Xiongnu) மேல் பெற்ற போர் வெற்றியைப் பாராட்டும் பாங்கில் யன்றன் குன்றில் (Mount Yanran) எழுப்பப்பட்டுள்ள கல் நினைவுச் சின்னத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு குறிப்பிடத்தக்கது. இதனை எழுதும்படி ஆணையிடப்பட்ட எழுத்தாளர் பன் கூ (Ban Gu) என்பார் ஆவர். இந்த எழுத்துப் பொறிப்பின் (Inscription) தொடக்கம் இஃது எழுதப்படுவதற்குரிய சூழல்களை நல்ல உரைநடையில் எடுத்துரைக்கிறது. இதற்குப்பின் எழுத்துப் பொறிப்பு தொடங்குகிறது. இதன் உரைநடை ஒலி நயத்துடன் யாப்பியல் பாங்கில் இயற்றப்பட்டுள்ளது.[17]

சதுரங்கப் பலகை, தூரிகைகள், இசைக்கருவிகள், அம்புகள், சேணம் (Saddles), கடிவாளம், பாய், படுக்கை முதலியவற்றிலும் எழுத்துக்களைப் பொறித்தல் கீழை ஹன் காலத்து வழக்கமாக இருந்தது.

எழுத்துப் பொறிப்புக்கள் படைப்பதில் லீயூ (Li You) என்பவர் சிறப்புற்று விளங்கினார். இவர் காலம் கி.பி.44-126 ஆகும். கி.பி.96இல் பேரரசர் ஹீ இவரை ஃபூ (-உரைநடை) எழுதிக் கொடுக்கும்படி ஆணையிட்டார். இவர் ஆற்றலைப் பாராட்டி அரசப் பணியில் எழுத்தர் பணி வழங்கப்பட்டது. அப்பணியில் நாற்பதாண்டுகள் இவர் செயற்பட்டார். பின்னர் அமைச்சுப் பதவியும் இவருக்கு வாய்த்தது. தம் எண்பத்து மூன்றாம் அகவையில் இறந்தார்.

பேரரசர் ஹீயைப் (Emperor He) பற்றி இவர் எழுதிய மெய்க்கீர்த்திகள் 120 ஆகும். ஆனால், காலப் போக்கில் மறைந்தன போக எஞ்சியவை 86 ஆகும். இவற்றுள் பல துணுக்குகளாகவே உள்ளன. இங்குத் தமிழ்ப்பிராமி கல்வெட்டுக்களை எண்ணிப் பார்க்கலாம்; அவையும் துணுக்குகளாகவே கிடைத்துள்ளன. கூடக்குறைய இவையும் சம காலத்தவை எனலாம்.

பேரரசர் ஹீயைப் பற்றிய கற்பொறிப்புக்கள் பல்வகைப் பொருண்மை கொண்டவை. மஞ்சள் ஆறு (Yellow River), லூவோ ஆறு (Luo River), ஹங்கு கணவாய் (Hangu Pass), ஒளிக்கூடம் (Bright Hall), அறிஞர் பேரவை (The Grand Academy), வட்ட அகழி, கீழை நிறுவனம் (Eastern Institute), யோங்கன் அரண்மனை (Yong'an Palace), முகில் மேல்தளம் (Cloud Terrace), தேயங்கு கூடம் (Deyang Hall), கால்பந்தாடு களம், தலைநகர்ச் சுவர்கள், தங்கும் விடுதிகள், பூங்கா, தலைநகர் வாயில்கள், கிணறு, அடுப்பு என்பனவற்றிலும் எழுத்துப் பொறிப்புக்களை உரைநடை வடிவில் லீ யூ (Li You) எழுதியுள்ளார்.[18]

எழுத்துப் பொறிப்புக்கு (Inscription) துணையான இலக்கிய வகை ஜென் (Zhen) ஆகும். தியான பௌத்தத்தினைக் குறிக்கும் சப்பானியச் சொல்லாகிய ஜென் இதிலிருந்து வேறுபட்டது. ஜென் என்ற சீனச் சொல்லிற்கு ஊசி (Needle) அல்லது ஊசி குத்து மருத்துவம் (Acupuncture) என்பது நேர் பொருள். விரிபொருட்பேறு (Semantic Expansion) காரணமாக நன்னெறியில் மக்கள் நடப்பதற்குரிய அறிவுரைகளை ஜென் என்ற சொல் குறித்தது. ஓரடியில் நான்கசைச் சொற்களினால் இயற்றப்படும் குறும்துணுக்காகவே ஜென் அமைந்தது. ஹன் மரபு ஆட்சி புரிந்த காலத்தில் பெரும்பாலான ஜென் துணுக்குகள் அரசு பணிபுரியும் குறிப்பிட்ட அலுவலர் பின்பற்றுதற்குரிய கடமைகளையும் நீதிகளையும், பண்புகளையும் வரையறுத்துக் கூறின. முதன் முதல் அறிவுரைக் கொத்துக்களை எழுதியவர் என்ற சிறப்புக்குரியவர் யங்கு சியோங்கு (Yang Xiong) ஆவர். இவர், ஹன் ஆட்சிக்கு உட்பட்ட மாகாணங்களுக்கு உரியனவாக பன்னிரு அறிவுரைகளையும் (Admonitions), அரசு அலுவலகங்களுக்காக இருபத்தைந்து அறிவுரைகளையும் உரைநடையில் எழுதினார். முற்காலக் கீழை ஹன் காலத்தில் சூயி யின் (Cui Yin), அவர் மகன் சூயி யூவன் (Cui Yuan, கி.பி.78-143), லீயு தௌது (Liu Taotu, கி.பி.70-130) உள்ளிட்ட அறிஞர் பலர் பதினாறு அறிவுரைத் துணுக்குகளைக் கூடுதலாக வழங்கினர்.

ஹூ குவங்கு (Hu Guang, கி.பி.91-172) நான்கு அறிவுரைகளை வழங்கினார். இவற்றுக்கு அவரே உரை விளக்கத்தினையும் எழுதினார். இவையாவும் பை குவான் ஜென் (Bai Guan Zhen) என்று சீன மொழியில் வழங்கப்பெறும். இதனை, Admonitions on the Official Offices என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர்.

இந்த எழுத்துப் பொறிப்புக்கள் யாவும் ஓசை நயம் வாய்ந்தவை; ஓரடிக்கு நான்கு அசைகள் அமைந்தவை. இவை முப்பது அடிகள் அல்லது அதற்குக் கூடுதலாகவும்

அமைந்தன. அலுவலகத்தின் வரலாறு, பதவியை முறையாகவும் முறைகேடாகவும் பயன்படுத்திய விவரம் உள்ளிட்ட செய்திகளுடன் ஒவ்வொரு துணுக்கும் தொடங்குகிறது. பதவியில் உள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் எச்சரிக்கை விடுக்கும் நீதியுரையுடன் அத்துணுக்குகள் நிறைவுறுகின்றன.[19]

கீழை ஹன் மரபின் ஆட்சிக் காலத்து வாழ்ந்த மிகவும் புகழ்படைத்த எழுத்தாளர்களில் ஜங்கு ஹெங்கு (Zhang heng, கி.பி.78-139) என்பவர் குறிப்பிடத்தக்கவர். இவர் மாபெரும் அறிஞர், கவிஞர், அறிவியலாளர். தம் பதினைந்தாம் வயதில் (கி.பி.93இல்) ஹன் தலை நகரங்களாகிய சங்கன் (Chang'an), லூயோ யங்கு (Luo yang) என்பன குறித்து ஃபூ (Fu) எனப்படும் வசன கவிதையில் அறிவுரைகளை வழங்கினார். நன்யாங்கு (Nanyang) என்ற நகரில் இருந்த உள்ளூர் அவையினைச் சேர்ந்த அறிஞர்களைப் (Scholars) பற்றிய மதிப்பீடுகளையும் எழுதியுள்ளார். யங்கு ஜியோங்கு (Yang Xiong) எழுதிய பரம ரகசியம் (Great Mystery) என்ற நூலிற்கு ஜங்கு ஹெங்கு (zhang heng) பேருரை எழுதியுள்ளார். இவ்வுரையில் கணிதம், வானியல் உள்ளிட்ட அவருடைய பல்துறைப் பேரறிவும் புலப்படக் காணலாம். இவ்வுரை ஐந்து செவ்வியல் இலக்கியங்களுடன் (Five Classics) ஒப்பிடத்தக்கது என்று அவர் கருதினார். தம் தகுதியால் எழுத்தாளர்களின் படைப்புக்களை மதிப்பீடு செய்யும் அரசுப் பணி கி.பி.114இல் அவருக்குக் கிடைத்தது. ஆனாலும் அவர் பெற்ற ஊதியம் 400 புஷல் (Bushels) கூலங்கள் (Grain) ஆகும்.[20] ஒரு புஷல் - 8 காலன்கள் (Gallons) ஆகும். (தமிழகத்திலும் பண்டைக் காலங்களில் அரசு ஊதியமாக குறிப்பிட்ட அளவு நெல் வழங்கப்பட்டதை இங்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம்).

கி.பி.196-219 என்ற காலப்பகுதி கீழை ஹன் மரபின் இறுதி ஆட்சிக் காலம் ஆகிய ஜியனான் காலம் (Jian'an) என்று சொல்லப்படுகிறது. இக்காலப் பகுதியில் ஃபூ -

வசன கவிதை இலக்கியத்துடன், வசன இலக்கியமும் வளர்ச்சி பெற்றது. கடிதம், விண்ணப்பம் என்பன பெரும்அளவில் உரைநடையில் எழுதப்பட்டன. விண்ணப்பம் (Petition) என்பதின் ஒருவகையாகச்சுய வெளிப்பாடு (bio-expression) விளங்கியது. தங்கள் சொந்த உணர்வுகளை இவ்வகை வசனத்தில் எழுத்தாளர்கள் பலர் கொட்டி வைத்துள்ளனர். எழுத்தாளர்களுக்கு இடையே நிகழ்ந்த தகவல் பரிமாற்றங்களைக் கடித இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. சாவோ ஷீ (Cao Zhi) என்பவர் மட்டும் எழுதிய முப்பத்து நான்கு வெளிப்பாட்டு வசனங்கள் கிடைத்துள்ளன.[21]

சொல்லாடல் (Discourse) என்பதும் உரைநடையின் ஒருவகையாக வளர்ந்தது. காரசாரம் மிக்க விவாதங்கள், சொற்போர்கள் யாவும் தனிப்பட்ட வசன வகையாக எண்ணப் பெற்றன. கி.பி.217இல் சாவோ பி (Cao Pi, கி.பி.187-226) என்பார் இருபது கட்டுரைகளடங்கிய தொகுப்பினை டியன்லுன் (Dian lun) என்ற பெயரில் வெளியிட்டார். இதனை, Normative Discourses என்று ஆங்கில ஆக்கம் செய்தனர். இதனுள் அமரத்துவத் தேடல், ஹன் பேரரசர்கள் பற்றிய மதிப்பீடுகள், இலக்கியம், புகழ்பெற்ற வாள்கள் பற்றிய கதைகள், சுயசரிதம் என்பன பற்றிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்தத் தொகுப்பில், இலக்கியம் பற்றிய சொல்லாடல் (Discussing Literature) என்பது மட்டுமே பூரணமான கட்டுரை ஆகும். இலக்கியம் பற்றிய முதல் பிரகடனம் என்று இக்கட்டுரை[22] பலராலும் பாராட்டப்படுகிறது. சாவோ சாவோ போர்ப் பிரபுக்களில் (Warlords) புகழ்பெற்றவர். இவர் கி.பி.155-220 என்ற காலப் பகுதியில் வாழ்ந்தவர். வடகிழக்குச் சீனத்தில் தன்னுரிமை பெற்ற இராச்சியத்தினை நிறுவியவர்.[23] இக்காலத்தில், சாவோ சாவோ (Cao Cao) மற்றும் அவர் புதல்வர்கள் இருவரும் கொண்டிருந்த

இலக்கிய ஆர்வமும், எழுத்தாளர்க்கு அவர்கள் வழங்கிய பேராதரவும் இலக்கியம் தழைப்பதற்கு ஏதுவாயின. சாவோ சாவோ நூற்றைம்பது உரைநடை நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள் கடிதங்கள், ஆணைகள் (Ling - commands), முன்னுரைகள், விண்ணப்பங்கள், அறிவுரைகள் என்பனவும் அடங்கியுள்ளன.[24] சீன இலக்கிய மரபில் ஆணைகள் மிகுதியாக எழுதிய சிறப்பு அவருக்கு உண்டு.

ஜியனான் காலத்தில் எழுத்தாளர்களும் அலுவலர்களும் அரச குடும்பத்தினரும் தமக்குள் கடிதத் தொடர்புக் கலையினை வளர்த்தனர். சாவோவின் அவையில் நடைபெற்ற இலக்கியச் செயற்பாடுகளைப் பற்றிய முக்கியத் தகவல்களைப் பல கடிதங்கள் புலப்படுத்துகின்றன.

யிங்கு குயு (Ying Qu, கி.பி.190-252) யிங்கு யங்கின் (Ying Yang) இளவல் ஆவர். இவரும் பாராட்டத்தக்க கடிதங்கள் பலவற்றை நல்ல உரைநடையில் வரைந்தவர். இவர் எழுதியவற்றுள் முப்பத்து நான்கு கடிதங்கள் மட்டும் கிடைத்துள்ளன. அவற்றுள் பல கடிதங்கள், நாட்டுப்புறத்தில் உழவுத் தொழில் மேற்கொண்டு பண்பாளனாக (Gentleman) வாழும் வாழ்க்கையில் உண்டாகும் வியத்தகு மகிழ்வினை வெளிப்படுத்துவன ஆகும். யிங்கு குயு கடிதங்களைத் தொகுத்துக் கடிதச் சோலை (Shu lin) என்று பெயர் சூட்டினார். எனினும், காலப்போக்கில் இத்தொகுப்பு மறைந்து போயிற்று.[25]

ஷெங்குஷி (Zhengshi, கி.பி.220-280) காலத்தில் இலக்கியத் துறையில் பல புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உரையாடல் என்னும் இலக்கிய வடிவத்தின் பொற்காலமாக இக்காலம் போற்றப்படுகிறது. உரையாடலுக்குப் பொருளாக அரசியல், மெய்யியல், புலமை, அழகியல் என்பன அமைந்தன. ரூயன்ஜி (Ruan

Ji) என்பவர் படைப்பிரிவில் பதவி பூண்டவர். சிறந்த கட்டுரையாளராகவும் விளங்கினார். தாவு நெறியாளர்க்கும் (Daoist i.e. Taoist) கன்பூசிய நெறியாளர்க்கும் (Confucianist) இடையே நிகழும் உரையாடல் வடிவத்தில் இவர் எழுதிய கட்டுரை மிகவும் புகழ்பெற்றது.[26]

லீயு கூன் (Liu Kun) உரைநடை வரைவதில் வல்லவர். விண்ணப்பம் என்ற வசன வகை இவருக்குக் கைதேர்ந்த கலையாகும். கி.பி.306இல் ஜியோங்குனு (Xiongnu) படையினால் மக்கள் உடைமைகள் சூறையாடப்பட்ட பொழுது, அவர்களின் அவலக் காட்சியை லீயூ கூன் நெஞ்சம் நெகிழும்படி எழுதியுள்ளார்.[27] ஜின் (Jin) அரியணையில் அமரும்படி வலியுறுத்திச் சீமா ரூயிக்கு (Sima Rui) இவர் நான்கு விண்ணப்பத் தொடர்களை வரைந்துள்ளார். இவற்றுள் நான்காவது விண்ணப்பம் வாரிசினை வலியுறுத்துதல் (Urging the Succession) என்ற தலைப்புடையது. இவ்வசனம் உரைநடைக்கு மாதிரி எடுத்துக்காட்டாக மதிக்கப்படுகிறது.[28]

கீழை ஜின் மரபின் (The Eastern Jin Dynasty கி.பி.317-420) ஆட்சிக் காலத்தில் எழுதுவதற்குரிய முதன்மை வாய்ந்த ஊடகமாகத் தாள் (Paper) அமைந்தது. கவிதையினைவிட, உரைநடை சமுதாய உலகில் முதன்மைப் பங்கினை ஆற்றியது. அரசருக்கு எழுதும் முறையீடுகள், பிரகடனங்கள், புகழ்பெற்றோரின் கல்லறைச் சாசனங்கள் ஆகியவற்றுடன் மரபு வழிப்பட்ட இலக்கிய வகையாகிய ஃபூ (Fu) தொடர்ந்து முதன்மை பெற்றிருந்தது. கி.பி.நான்காம் நூற்றாண்டில் உரைநடை வரலாற்று இலக்கியம் வளர்ச்சி பெற்றது.[29] அடுத்து, அபூர்வக் கதை இலக்கியம் வளர்ந்தது. இயற்கை கடந்த ஆற்றல்கள், வசீகரத்தன்மை வாய்ந்த இடங்கள், அற்புதத் தாவரம், விலங்கு, பறவைகள் பற்றிய வியத்தகு கதைகளைத் தொகுக்கும் பணி இக்காலத்தில்

நடைபெற்றது. இயற்கைப் புனைவுகள் அடங்கிய வசனங்கள் எழுதப்பட்டன.[30]

யூ லீயங்கு (Yu Liang) தங்கு தடையற்ற நடையில் அழகிய உரைநடை எழுதியவர். கி.பி.323இல் இவர் அரசருக்கு எழுதிய கடிதம் சுட்டத்தக்கது. ஆற்றல் படைத்த தளபதியாகவும் எழுத்தாளராகவும் விளங்கிய ஹுவன் வென் (Huan Wen, கி.பி.312-373) அரசுக்கு எழுதிய கடிதங்கள் யாவும் வசன இலக்கியத்திற்கு ஏற்ற எடுத்துக்காட்டாகும். படைத்தளபதிகளின் சார்பில் யூ சான் (Yu Chan) எழுதிய பிரகடனங்கள் உள்ளிட்ட எழுத்துக்கள் (Writings) யாவும் குறிப்பிடத்தக்கவை. இவர் நடை ஆற்றல் மிக்கது (Virile style). பொதுவாக உரைநடை வரைவதில் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் யூவன் பாவோ (Yuan Bao, கி.பி.373-413) சுட்டத்தக்கவர். இவர் கற்றுத்துறைபோகியவர். கையறுநிலை வசனங்கள் எழுதிச் சிறப்புப் பெற்றவர். இருப்பவரைப் புகழ்வதிலும் இறந்தவரின் அருஞ்செயல்களைப் போற்றுவதிலும் வல்ல இவரின் வசனம் உயரிய நடையில் இயற்றப்பட்டது. இத்தகைய இலக்கிய வகை வாழ்வோரின் உலகினையும் இறந்தோரின் உலகினையும் ஒருங்கிணைக்கும் பாங்குடையது.[31] எழுத்துப் பொறிப்பு (Inscription) உரைநடை இக்காலத்தில் மீண்டும் பரவலாகக் காணப்படுகிறது. தாவோ யூவன்மிங்கு (Tao Yuanming) தான் உயிருடன் உள்ள பொழுதே தனக்குத் தானே எழுதிக் கொண்ட ஈம வசனத்தில் இறப்பினை ஒரு பயணத்திற்கும் சடங்குகளை வழியனுப்பு விருந்திற்கும் ஒப்பிட்டுள்ளார். "வாழ்வு என்பது உண்மையில் கடினமானதுதான். இறப்பு எப்படி இருக்குமோ என்று நான் வியப்புறுகிறேன்" என்று தம் உரையினை முடித்துள்ளார்.[32]

வாங்கு ஷிஜி (Wang Xizhi, கி.பி.303-361), வாங்கு ஷியன்ஜி (Wang Xianzhi, கி.பி.344-386) என்பார் எழுதிய

பல நூற்றுக்கணக்கான கடிதங்கள் மடல் இலக்கிய வகைக்கு எடுத்துக்காட்டாக உள்ளன. இக்கடிதங்களில் பல சிறியவை. இவை ஆழ்ந்து சிந்தித்து எழுதப்பட்டவை என்று கூற இயலாது. மிகச் சாதாரண செய்திகள் கூட இவற்றில் இடம்பெற்றன. வாங்குஷிஜி, 'உமக்கு முந்நூறு ஆரஞ்சுகளை அனுப்பியிருக்கிறேன். உறைபனிக் காலம் இன்னும் வரவில்லை; எனவே, கூடுதலாகப் பெறமுடியவில்லை' என்று தன் நண்பர்க்கு எழுதிய மடலைக் குறிப்பிடலாம். வாங்கு ஷியன்ஜி "குயிங்கும் (Qing) மற்றையோரும் முன்னமே வந்து விட்டனர். வாத்துக்கள் நலமாக இருக்கின்றனவா? அதுபற்றி எனக்குக் கவலை உண்டு" என்று தன் நண்பர்க்கு எழுதியதையும் சுட்டுதல் கூடும். இத்தகைய கடிதங்களில் இலக்கியத்தரம் இல்லை; என்றாலும், மிங்கு (Ming Dynasty) ஆட்சிக் காலத்தின் உரைநடை வளர்ச்சிக்கு இக்கடிதங்கள் எழுச்சி ஊட்டும் முன்மாதிரிகளாக இருந்துள்ளன.[33]

கி.பி.4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெண் எழுத்தாளர்களில் சன்கியோங்கு (Sun Qiong), சென் சென் (Chen Chen) ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்விருவரும் கடித இலக்கிய வகையினை வளர்த்துள்ளனர். சன் சியோங்கு, தன் சிற்றப்பன் மகளுக்கு எழுதிய மடலில் தன் வளர்ப்புச் செல்லங்களாகிய வாத்துக்களுக்குத்தான் செலுத்தும் அன்பினைக் காத்துக் கொள்ளும் பொருட்டு எழுதியுள்ளார். சென்சென் தன் இளவல் சென்ஹோங்குக்கு (Chen Hong) எழுதிய கடிதத்தில் கன்பூசிய விழுமியங்களின் உயர்வினை வலியுறுத்திக் கூறியுள்ளார்.[34]

தாவோ யூவன் மிங்கு (Tao Yuan ming, கி.பி.365-427) செவ்வியல் சார்ந்த கவிதை புனைவதிலும் உரைநடை வரைவதிலும் வல்லவர். இவர் எழுதிய வசனங்களில் "Taohuayuan ji" (- The Record of Peach Blossom Spring - பீச்சுமரம் பூக்கும் வசந்தத்தின் பதிவேடு) என்பது

குறிப்பிடத்தக்கது. செவ்வியல் சீன இலக்கியத்தில் மிகவும் விரும்பிப் படிக்கக் கூடிய உரைநடையாக இஃது உள்ளது. இவ் வுரைநடை இலக்கியம் உடோபியன் சமுதாயத்தினைப் (கற்பனை உலகு) புனைந்துரைக்கிறது. கம்பர் படைக்கும் அயோத்தி ஓர் உடோபிய நாடு என்று கூறுதலை இங்கு எண்ணிப் பார்த்தல் வேண்டும். தாவோ யூவன் மிங்கு படைத்துள்ள கற்பனை உலகில் சமுதாயத் தடைகள் இல்லை, வரிவிதிப்பு இல்லை, மதக்குருமாரின் ஆட்சி இல்லை; ஒவ்வொருவரும் மனநிறைவு பெற்று வாழ்கின்றனர். குன்றுகளின் நடுவே மறைந்திருந்த இந்த இலட்சிய நாட்டில் வாழும் சமுதாயத்தினை மீனவர் ஒருவர் தற்செயலாகக் கண்டுபிடித்தார். பின்னர், அந்த இடத்திற்குப் போகவேண்டும் என்று அந்த மீனவர் முயன்றும் கூட, அங்கிருந்த சமுதாயத்தினை மீண்டும் அவரால் காண முடியவில்லை. பீச்சுமரம் பூக்கும் வசந்தத்தின் கதை பிற்காலத்து எழுத்தாளர் பலரையும் கவர்ந்தது. அதுவே ஒரு சிறு இலக்கிய மரபாகவும் ஆகியது.[35]

ஃபூ (Fu) என்னும் வசன கவிதை கி.பி.5ஆம் நூற்றாண்டில் வளர்ச்சி பெற்றது. ஜி ஹுயிலியன் (Xie Huilian) என்பார் எழுதிய பனியைப் பற்றிய வசன கவிதை குறிப்பிடத்தக்கது. இந்த வரலாற்று எடுத்துரை வசனத்தில் மேலை ஹன் இளவரசன் லீயங்கு (Liang) மற்றும் அவன் துதி பாடுவோர் மையப் பாத்திரங்களாகப் படைக்கப் பட்டுள்ளனர். வேறுபட்ட புகழ்பாடுவோரின் பல்வகைப் பட்ட குரல்களை உள்ளடக்கிப் பனியைப் பற்றிய உரை அடுக்காக இந்த ஃபூ வசன கவிதை அமைந்துள்ளது.[36]

கி.பி.5ஆம் நூற்றாண்டில் நையாண்டி அங்கதங்கள் (Parodies) வசன வடிவத்தில் எழுதப்பட்டன. இவற்றில் விலங்கு அல்லது தாவரம் பாத்திரங்களாக (Characters) அமைந்தன. யூவன் ஷு (Yuan Shu) தொகுத்துள்ள பத்துச் சுருள்களைக் கொண்ட விநோதரச வசனம் சுட்டத்தக்கது.

ஷென் யூயே (Shen Yue) எழுதிய வாழையைப் பற்றிய மூங்கிலின் குற்றச்சாட்டு (The Bamboo's Accusation of the Plantain) மற்றுமொரு வசன வகை இலக்கியம் ஆகும். பேய்கள் மற்றும் ஆவிகள் ஆகியவற்றுக்கு எதிராகப் பாவோலின் (Baolin) என்னும் பிட்சு எழுதிய அதிகாரபூர்வ அறிக்கை (Proclamation) சுட்டத்தக்கது. கோங்கு ஷீகுயி (Kong Zhigui, கி.பி.447-501) எழுதிய வடமலையின் சார்பில் அதிகாரபூர்வ அறிக்கை என்ற வசன இலக்கியம் விந்தை மிக்கது, எள்ளல் தன்மை கொண்டது, நல்ல உரைநடையில் எழுதப்பட்டது. இதன் ஆசிரியரின் நண்பர் சோவ் யோங்கு (Zhou Yong) என்பவர் மலையில் மேற்கொண்டிருந்த துறவினைக் கைவிடும்படி தொந்தரவு செய்வதாக மலைத்தெய்வத்தின் நோக்கிலிருந்து பேசுவதாக இஃது எழுதப்பட்டுள்ளது.

கி.பி.5ஆம் நூற்றாண்டில் உரைநடையில் எழுதப்பட்ட வாழ்க்கைக் குறிப்புக்கள் (Memoirs) குறிப்பிடத்தக்கவை. குறிப்பிட்ட ஒருவரின் வாழ்வில் நிகழ்ந்த முதன்மை நிகழ்வுகளை உள்ளடக்கியதாக இவை இலங்கின. இதே நூற்றாண்டில் பல வரலாற்று நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பிற்கால ஹன் மரபின் வரலாற்றினை ஃபன் யீ (Fan Ye) என்பாரும், சோங்கு மரபின் வரலாற்றினை ஷென்யூயே (Shen Yue) என்பாரும் எழுதினர். செய்தித் தொடர்பு (Communication) என்னும் உரைநடை இலக்கிய வகையும் இதே காலத்தில் புதுவதாகத் தோன்றியது. தமக்கு வழங்கப்பெற்ற பரிசுக்காக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் குறிப்புக்களாக இவ்வகை வசனம் தொடக்கத்தில் இருந்தது. ஆனால் கி.பி.5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இத்தகைய நன்றிக் குறிப்புக்கள் கொடை பற்றிய வருணனைகளையும் வளம்மிக்க வரலாற்றுக் கதைக்குறிப்புக்களையும் (Allusions) உள்ளடக்கியதாய்க் கவர்ச்சியும் நேர்த்தியும் மிக்க சொற்களில் புனையப்பட்டன.[37]

ஆறுகளின் இலக்கியம் (The Classic of Rivers) கி.பி.100-200 என்ற காலப் பகுதியில் எழுதப்பட்டது. இதற்குக் கி.பி.527இல் உரை எழுதியவர் லீ தாவோயூவன் (Li Daoyuan) ஆவர். இந்த உரையில் இவர் தமக்கு முற்பட்ட முந்நூற்றுக்கு மேற்பட்ட மூலங்களிலிருந்தும் மேற்கோள் காட்டியுள்ளார். உரைநடையில் இயற்கைக் காட்சிகளைப் புனைந்து எழுதுவதில் இவர் வல்லவர் என்று போற்றப்படுகிறார். வட சீனத்தில் ஓடும் பல ஆறுகளையும் அவர் நேரில் பார்த்து அவற்றின் வனப்பிலும், அவை பாயும் நிலத்தின் அழகிலும் ஈடுபட்டு நல்ல உரைநடையில் இயற்கைக் காட்சிகளைச் சித்திரித்துள்ளார். ஆனால் புத்தக அறிவிலிருந்தும் செவிவழிச் செய்தியிலிருந்தும் தென் சீனத்தின் இயற்கைக் காட்சியை இவர் எழுதியிருக்க வேண்டும் என்பர்.[38]

தங்கு அரசு மரபுக் காலத்தில் (கி.பி.618-906) கவிதையைப் போலவே உரைநடையும் வளர்ச்சி பெற்றது. பிரிவுக்கு ஒரு முன்னுரை (Preface on Parting) என்ற உரைநடை இலக்கிய வடிவம் தனித்தன்மையும் முதன்மையும் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. கவிதை என்னும் இலக்கிய வடிவத்தினின்றும் பிரிவதால் இப்படி ஒரு பெயர் வந்திருக்கலாம் என்று சீன இலக்கியவியலார் எண்ணுகின்றனர். சுற்றுலாப் பற்றிய வருணனை (Youji - Account of an Excursion) உற்சாகம் ஊட்டும் வசன வடிவங்களில் ஒன்றாகும். இதனுள் இயற்கை வருணனையுடன் ஆழ்ந்த சிந்தனையும் இடம்பெற்றிருத்தல் சுட்டுதற்கு உரியது.[39] இக்காலப் பகுதியில் கடித இலக்கியமும் வளர்ச்சியுற்றது. அறிவார்ந்த பொருள்களையும், அரசியல் சிக்கலையும் விவாதிக்கும் பாங்கில் பெரும்பான்மைக் கடிதங்கள் எழுதப்பட்டன.[40]

தங்கு காலத்தில் கடித இலக்கியமும் தோன்றி வளர்ந்துள்ளது. காதல் பொருண்மையில் கதைகள்

புனையப்பட்டன. எடுத்துரை வசனம் (Narrative Prose) மற்றொரு சிறப்புக் கூறாகும். பாடல்களைப் புரிந்து கொள்ளும் பொருட்டு எழுதப்படும் துணை நூல்கள் (Guide books) உரைநடையில் எழுதப்பட்டன. மிக நீண்ட எடுத்துரை வசனத்தின் முடிவில் எடுத்துரைப்போரின் (Narrator) தீர்ப்புரையும் இடம்பெற்றது. இத்தகைய எடுத்துரை வசனங்கள் நீதிக்கதை (Parable) ஆகவும் மாற்றம் பெற்றன.[41] பழைய நடையில் வசனம் எழுதும் ஆர்வமும் இக்காலத்து எழுத்தாளரிடம் காணப்பட்டது. லீயூ துாயி (Liu tui, *கி.பி.821-874*) எழுதிய கடிதத்தில்,

> "உண்ணும் பொழுதும் பருகும் பொழுதும் உரைநடையினை நான் ஒருபொழுதும் மறந்தது இல்லை. இருளில் கூட நான் ஒருபொழுதும் உரைநடையை மறந்தது இல்லை. துன்பத்திலும் சினத்திலும், நோயிலும், மகிழ்விலும், கூட்டத்திலும், பயணத்திலும் கூட, என் மனத்தில் உரைநடையினைச் சுமக்க ஒருமுறைகூட தவறியது இல்லை."

என்று குறிப்பிட்டுள்ளார்.[42] இதனால் உரைநடைக்கு இவர் முதன்மை தந்துள்ளார் என்பது புலனாகும்.

தங்கு மரபின் (Tang Dynasty) ஆட்சிக் காலத்தில் உரைநடை ஓர் இலக்கிய வகையாகப் பெரு வளர்ச்சி பெற்றது. கி.பி.*768-824* என்ற காலப் பகுதியில் வாழ்ந்த ஹன் யூ (Han Yu) சிறந்த உரைநடையாளராகப் போற்றப்படுகிறார். இவர் கன்பூசியச் சிந்தனையாளர்; தாவுக் கொள்கைகளையும் பரப்பியவர். தெளிவும், அளவும், ஆற்றலும் மிக்க கட்டுரைகளை இவர் வரைந்துள்ளார். இவை பல்வேறு பொருண்மைகளில் எழுதப்பட்டவை. ஒருபொருளைப் பற்றி எழுதிக் கொண்டு வரும் பொழுதே திடீரென வேறு பொருளையும் இடைப்பிறவரலாக எழுதும் போக்கும்

இவரிடம் உண்டு. பாதையின் மூலம் (The Origin of the Way), அழிவின் மூலம் (Origin of Destruction), பயிற்றுதல் பற்றிய ஒரு பேச்சு (A Talk on Instruction) என்ற கட்டுரைகள் சம காலத்தவரால் மட்டுமன்றி இன்றளவும் சீனப் பெருமக்களால் போற்றப் பெற்றுள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் சில நூறு சொற்களைக் கொண்டவை. ஊடுருவிச் செல்லும் விளக்கவுரையாக இவர் கட்டுரை அமைந்துள்ளது. தாம் கூற எடுத்துக்கொண்ட கருத்தினை அழுத்தம் கொடுத்தும், தெளிவுறுத்தியும் எழுதுவதில் இவர் வல்லவர். தருக்க முறைப்படி இவர் தொடரமைப்புக்களைப் படைத்துள்ளார். இவர்தம் ஈமப் பேருரைகள், முன்னுரைகள், வாழ்க்கைக் குறிப்புக்கள் என்பன சிறந்த உரைநடைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள் ஆகும். இவர் உரைநடையில் இடம்பெற்ற ஆற்றல் மிக்க கருத்துப் புலப்பாடுகளும், மொழி ஆளுகையும் பின்வந்த எழுத்தாளர்க்கு வழிகாட்டியாக விளங்கின. இவர்தம் உரைநடையில் காணப்படும் அருந்தொடர்கள் (Rare Phrases) இவர்க்குப் பின் சீன மொழியில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.[43] இவர் இலக்கியத்தின் இளவரசர் (Prince of Literature) என்று போற்றப்பட்டார். கன்பூசியசுக்கு மென்சியசைப் போல, இலவோசியசுக்கு ஹன்பூ விளங்குகிறார்.[44] இவருக்குச் சம காலத்து வாழ்ந்த மற்றொரு உரைநடையாளர் லீயூ சொங்கு யூவன் (Liu Zong Yuan, Liu Tsung-Yuan என்றும் சுட்டப்பட்டார்) ஆவர். இவர் கி.பி.773-819இல் வாழ்ந்தவர். பல்திறப்பட்ட கட்டுரைகளை இவர் வரைந்துள்ளார். இவர் எழுதிய அங்கதக் கதைகள், பயணக் கட்டுரைகள் என்பவற்றில் இவரது சுயத்தினைக் காணலாம். குவின் (Qin) காலத்துக்கு (கி.மு.2ஆம் நூற்றாண்டு) முற்பட்ட தத்துவ வாதிகளின் எழுத்துக்களில் காணப்படும் வாழ்வியல் நிகழ்வுக் குறிப்புக்களையும் (Anecdotes), கட்டுக் கதைகளையும் (Fables) இவர் விரிவாக்கம் செய்து சிறு இலக்கியக்

கட்டுரைகளாக எழுதியுள்ளார். நடப்பியலை (realism) இவர் கதைகளுக்குள் ஏற்றியுள்ளார். எள்ளல் குறிப்புடைய கதைகளையும் புனைந்துள்ளார். தம் மேம்பாட்டில் மட்டுமே கருத்துடையவராய், தத்தம் விருப்பங்கள் நிறைவேறியதும் கட்டுப்பாடுகளை மறந்துவிடுகிற மக்களை எள்ளி நகைக்கும் இயல்புடைய கதையாக, "மூன்று எச்சரிக்கைகள்" (Three Cautions) உள்ளன. இக்கதை மான், குரங்குகள், எலிகள் ஆகியவற்றை மையப்படுத்திப் புனையப்பட்டது. இயற்கைக் காட்சிகளைப் புனைவதிலும் லீயூ சொங்குயூவன் குறிப்பிடத்தக்கவராகத் திகழ்ந்தார். இவற்றை இவர்தம் பயணக்கட்டுரைகளில் காணலாம்.[45]

சோங்கு குயிங்கு (Song Qing), ஒட்டகமுதுகு குவோ (Camel - Back Quo), நாற்றங்கால் மனிதன் (Nursery man), தச்சர் (Carpenter) என்ற வாழ்வியல் குறிப்பு வசன நூல்கள் என்பன மூலிகை மருந்து வணிகர்கள், தச்சர், தோட்டக்காரரர், சமுதாயத்தின் அடித்தட்டுக்களில் உள்ளோர் ஆகியோரின் பெருந்தன்மையினையும், திறமையினையும் விளக்குகின்றன. பாம்பு பிடிப்பவர் (Snake Catchers) என்ற தலைப்பில் ஜீயங்கு (Jiang) குடும்பத்தின் கதை நல்ல உரைநடையில் புனையப்பட்டுள்ளது. மூன்று தலைமுறையாகப் பாம்பு பிடித்தலைத் தொழிலாகக் கொண்டிருந்த இக்குடும்பத்தார், அரசாங்கத்தின் அதிக வரிகளால் அழிந்து போதலைக் காட்டிலும் பாம்பு கடித்து இறப்பதே ஏற்புடையது என்று எண்ணியிருந்தனர். இதனால், கருணையற்ற சுரண்டல் வருக்கத்தின் கொடுமையினை இலக்கிய வனப்புடன் லீயூ சொங்கு யூவன் வெளிப்படுத்திய திறம் சீனவியலாரால் பாராட்டப்படுகிறது. "கொடுங்கோன்மை புலியைவிடக் கொடியது" என்ற கன்பூசியக் கருத்தினைஇவர் கதை புலப்படுத்துகிறது.[46] பிற்காலத்துத் தென்காசிப் பகுதியை ஆட்சி செய்த அதிவீரராம பாண்டியர்,

"கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டின்
கடும்புலி வாழும் காடு நன்றே" **(63)**

என்று வெற்றிவேற்கை என்னும் அறநூலில் பாடியுள்ள கருத்து இங்கு ஒப்பிட்டுணர்ந்து மகிழத்தக்கது.

வாணிப வளர்ச்சி, நகர வளம், பண்பாட்டுப் பொழுது போக்குகளிலும் கேளிக்கையிலும் நகர மாந்தர்க்கு இருந்த ஆர்வம் என்பன தங்கு மரபின் காலத்தில் புனைகதை (Fiction) என்னும் இலக்கிய வகை வளர்ச்சி பெறுவதற்குக் காரணம் ஆகின. இக்காலத்திற்குமுன் புனைகதை குழவிப் பருவத்தில் இருந்தது என்பது சுட்டுதற்கு உரியது. தங்கு மரபின் காலத்தில் இலக்கிய மொழியில் எழுதப்பட்ட சிறுகதைகள் உரைநடைப் புனைவியல்கள் (Prose romances) என்று கூறப்பட்டன. இவற்றுள் தலையணையின் கதை (The Story of the Pillow) புகழுக்கும் பதவிக்கும் பைத்தியம் பிடித்து அலைவோரை எள்ளி நகைப்பதாக அமைந்தது. காதல் பற்றிய பல்வகைப் புனைகதைகளும் தோன்றின. இவையாவும் தங்கு மரபின் காலத்துக்குப் பின் வந்த கதை எழுத்தாளர்க்கும் நாடக ஆசிரியர்க்கும் மூலப்பொருளாகத் திகழ்ந்துள்ளன.

கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் நிகழ்வுக் குறிப்புக்கள் (Anecdotes), கதைகள் (Tales) என்பன பெருகின. ஐந்து மரபுகளின் (Five Dynasties) ஆட்சிக் காலத்தில் (கி.பி.907-960) போர்ப் பிரபுக்களின் (War Lords) கையே மேலோங்கி இருந்தது. சோங்கு (Song or Sung Dynasty) மரபின் காலத்திலும் (கி.பி.960-1279) உரைநடை வளர்ச்சி பெற்றது. ஹன் யூ (Han Yu), லீயூ சொங்கு யூவன் (Liu Zongyuan) என்பாரின் உரைநடை தொடர்ந்து வியந்து பாராட்டப்பட்டது.[47] தங்கு காலத்துப் புகழ்பெற்ற உரைநடை எழுத்தாளராக இவர்கள் ஒளி வீசினார்.

சோங்கு மரபின் (Song Dynastry கி.பி.960-1279) காலத்தில் தங்கு மரபின் (Tang Dynasty) காலத்தைய

இலக்கியப் போக்குகள் தொடர்ந்தன. இலக்கிய நடையில் எழுதும் படைப்புக்கள் வரவேற்புப் பெற்றன. இலக்கிய உரைநடையின் நிலைநிறுத்தப் பெற்ற வகைகள் தொடர்ந்து ஆட்சி செலுத்தின.[48] இந்த ஆட்சியின் இறுதிக் காலத்தில்தான் (கி.பி.13ஆம் நூற்றாண்டு) நாடகம், புனைகதை (Fiction) என்ற இலக்கிய வடிவங்கள் வட்டார மொழியில் எழுதப்பட்டன. இக்காலத்தில்தான் இலக்கியம் கையெழுத்துப் பண்பாட்டிலிருந்து (Manuscript Culture) அச்சுப் பண்பாட்டிற்கு (Print Culture) மாற்றம் பெற்றது. இருநூறு ஆண்டுகளில் எழுதப்பட்டவற்றின் தொகுப்பாகச் சோங்கு உரைநடை முழுமையும் கி.பி.2006இல் வெளிவந்தது.[49]

மேற்கோள் குறிப்புக்கள்

1. Liu Wu-Chi, *An Introduction to Chinese Literature*, p.35.
2. Ibid, pp.35-36.
3. Ibid, pp.37-38.
4. Ibid, p.38.
5. Ibid.
6. Ibid, p.39.
7. Li, Dun Jen, *The Ageless Chinese A History*, p.93.
8. *An Introduction to Chinese Literature*, pp.39-40.
9. Ibid, p.40.
10. Ibid, p.41.
11. Ibid.
12. Ibid, pp.41-42.
13. Ibid, p.42.
14. Ibid, p.43.
15. Ibid, p.44.
16. *The Cambridge History of Chinese Literature*, Vol.I, p.138.
17. Ibid.
18. Ibid, p.139.

19. Ibid, pp.139-140.
20. Ibid, pp.141-142.
21. Ibid, p.166.
22. Ibid, p.167.
23. Ibid, p.171.
24. Ibid.
25. Ibid, p.172.
26. Ibid, pp.177-178.
27, Ibid, p.196.
28. Ibid.
29. Ibid, p.201.
30. Ibid, p.202.
31. Ibid, p.206.
32. Ibid, p.207.
33. Ibid, p.208.
34. Ibid.
35. Ibid, p.221.
36. Ibid, p.232.
37. Ibid, pp.233-234.
38. Ibid, p.280.
39. Ibid, p.289.
40. Ibid, p.291.
41. Ibid, p.336.
42. Ibid, p.349.
43. Bonnie S. McDougall & Hu Liuyu, Literature and the Arts, pp.20-21.
44. *An Introduction to Chinese LIterature*, p.126.
45. *Literature and the Arts*, pp.20-21.
46. *An Introduction to Chinese Literature*, p.132.
47. *The Cambridge History of Chinese Literature*, vol.I, p.369.
48. Ibid, p.381.
49. Ibid, p.384.

15. கதை இலக்கியம்

(கி.பி.350 முதல்)

சீன நாட்டினைத் தங்கு மரபும் (Tang dynasty) சுங்கு மரபும் (Sung or Song dynasty) ஆட்சி புரிந்த அறுநூறு ஆண்டுகள் (கி.பி.618-1279) சீன இலக்கிய மறுமலர்ச்சிக் காலம் என்று அழைக்கப்படுகிறது. இக்காலப் பகுதி சீன மக்களின் நீண்ட இலக்கிய வளர்ச்சியில் பழமைக்கும் புதுமைக்கும் இடைப்பட்டதாக எண்ணப்படுகிறது. கி.பி.300-600 என்ற காலப் பகுதியில் தற்காலிக மந்த நிலையும் தேக்க நிலையும் ஏற்பட்டிருப்பினும் மீண்டும் சீன இலக்கியம் வனப்பும் செழுமையும் ஆற்றலும் பெற்று விளங்கியது. சீனப் புதுச் செவ்வியல் இலக்கியம் புகழின் புதிய உச்சத்தை அடைந்திருப்பினும் சீன வழக்கு இலக்கியம் (Colloquial Literature) இதே காலக் கட்டத்தில்தான் தோற்றம் பெற்றுப் பிற்கால வளர்ச்சிக்கு வழிவிட்டது. புனைகதை (Fiction), நாடகம் (Drama) என்ற இலக்கிய வகைகளின் வித்துக்கள் தங்கு மரபின் காலத்திற்கு முன்பே இருந்திருப்பினும், தங்கு - சுங்கு காலப் பகுதியில்தான் கரு வடிவினின்றும் வெளிப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.[1]

சௌ (Chou) மற்றும் ஹன் (Han) மரபுகள் காலத்தில் எழுதப்பட்ட தத்துவ நூல்களிலும் வரலாற்று நூல்களிலும் நிரம்பக் காணப்பட்ட கட்டுக் கதைகள் (Fables), வாழ்வியல் நிகழ்வுக் குறிப்புக்கள் (Anecdotes), பழங்கதைகள் (Legends) என்பன மனித நேயத்தைப் புலப்படுத்துவனவாக அமைந்தன. தத்துவம், வரலாறு என்பவற்றுடன் தொடர்புறாத எடுத்துரை எழுத்துக்களின் (Narrative Writings)

பெரும்பகுதி இக்காலப் பகுயில் எழுந்தன. கி.பி.முதல் நூற்றாண்டளவில் பதினைந்து தொகுதிகளில் *1,380* கதைகள் இடம் பெற்றிருந்தன. இவை பெரும்பான்மையும் மூதுரைகளும் (Sayings), குறிப்புக்களும், பழங்கதைகளும் புராணக் கதைகளும் ஆகும். இவை தொடக்கத்தில் தெருப்பேச்சாகவும், பாதை ஓர அரட்டைப் பேச்சாகவும் இருந்து, பின்னர் அரசுப் பணிபுரியும் இளையோரால் எழுத்துருக் கொடுக்கப் பெற்றவை.

ஆறு மரபுகள் (Six Dynasties) ஆட்சிபுரிந்த கி.பி.*400-600* என்ற காலத்தில்தான் கிடைப்பனவற்றுள் தொன்மைமிக்க சீனக் கதைகள் எழுதப்பட்டன. இக்கதைகள் *1.* படைப்புக்கதை (Myth of Creation). *2.* கற்பனை ஆட்சியாளரும் வீரர்களும் பற்றியவை, *3.* மலைகள் மற்றும் கடல்கள் பற்றிய வியத்தகு கதைகள், *4.* பயணத் தொடர்கள் , *5.* நகைச்சுவைக் கதைகள், *6.* பேய், பூதக் கதைகள், *7.* உரையாடல் துணுக்குகள் என்று பாகுபடுத்தப்படுகின்றன. பௌத்தம், தாவு மார்க்கம் ஆகியவற்றின் தாக்கத்தினால் போலும் இயற்கை கடந்த புனைகதைகள் பரவலாகக் காணப்பட்டன. கி.பி.*469-520*இல் வாழ்ந்த வூ சூன் (Wu Chun) என்பார் வியப்பும் நகைப்பும் உண்டாக்கும் கதைகளின் தொகுப்பாசிரியர் ஆவர்.[2]

ஒரு காதலருள் பல காதலர்

இந்தக் கதைத் தொகுப்பில் யங்கு சியெனைச் சேர்ந்த இளம் மாணவன் (The Young Student of Yang - hsien) என்ற கதையில் பௌத்தத்தின் சாயல்கள் பதிந்துள்ளன. நம்பகத் தன்மையில்லா விந்தைமிக்க காதலர் கதையாக இக்கதை அமைந்துள்ளது. ஒரு காதலருள் பல காதலர் (Lovers within a Lover) அல்லது சூ யென்னின் அதிசய சந்திப்பு (Hsu Yen's Strange Encounter) என்ற தலைப்பில் இந்தக் கதையினை ஆங்கிலத்தில்

மொழிபெயர்த்துள்ளனர்.[3] இதன் மூலக்கதையினை எழுதிய வூசூன் (Wu Chun) என்பார் கி.பி.469-520 என்ற காலப் பகுதியில் வாழ்ந்தவர். இந்தக் கதையின் சுருக்கத்தினை இங்கே காண்போம்.

சீனக்கதை

கீழைச் சின் காலத்தில் (கி.பி.318-420) யங்கு சியெனைச் சேர்ந்த சூயென் (Hsu Yen) என்பான் சூயியன் (Suian) மலைகளின் வழியே சென்று கொண்டிருந்தான். சாலை ஓரத்தில் அவன் ஒரு மாணவனைச் சந்தித்தான். தன் கால்கள் வலிப்பதால் யென்னைப் (Yen) பார்த்து, "உன்னுடைய வாத்துக் கூண்டில் என்னைத் தூக்கிக் கொண்டு போக முடியுமா?" என்று கேட்டான். யென் இசைவு தெரிவித்தான். அதன்பின் அந்த மாணவன் அந்தக் கூண்டுக்குள் பக்குவமாக ஊர்ந்து சென்று அதனுள் இருந்த இருவாத்துக்களுக்கிடையே வசதியாக அமர்ந்து கொண்டான். அவன் உருவம் சிறிதாகவும் இல்லை, கூண்டும் பெரிதாகவும் இல்லை. சுமக்கும் யென்னுக்குப் பாரமாகவும் தோன்றவில்லை.

நடந்து போகும் பாதையில் ஒரு மரத்தின் அடியில் ஓய்வு கொள்ளும் பொருட்டு யென் (Yen) தங்கினான். கூண்டுக்குள் இருந்து மாணவன் வெளியே வந்தான்; யென்னைப் பார்த்து, 'உனக்குத் தின்பதற்கு ஏதாவது சிற்றுண்டி வேண்டுமா?' என்று கேட்டான். யென்னும் 'ஆம்' என்றான். அயலானாக வந்த அந்த மாணவன், பலவகைப்பட்ட அரிய சுவைமிக்க தின்பண்டங்கள் வைக்கப் பெற்றிருந்த வெண்கலப் பெட்டியை வெளியே துப்பினான். அதில் இருந்த பாத்திரங்கள் எல்லாம் வெண்கலத்தால் ஆனவை. அதில் இதுவரையும் யென் (Yen) கண்டறியாத சுவைமிக்க உணவு வகைகள் இருந்தன. சில முறைகள் மதுபானம் நடந்த பிறகு, அயலானாகிய மாணவன் யென்னைப் பார்த்து, "எனக்கு மடந்தை

ஒருத்தி உண்டு. அவள் நம்முடன் சேர்ந்து கொள்ளுவதை நான் விரும்புகிறேன்" என்றான். 'நல்லது' என்றான் யென். அதன்பின், அந்த மாணவன் வாயிலிருந்து ஒரு பெண்ணை வெளியே துப்பினான். அவ்வளவு அழகு! பதினாறு வயது பருவ மங்கை. பொலிவுடைய ஆடை, ஆபரணங்களை அணிந்திருந்தாள்.

சிறிது நேரத்திற்குப்பின் அந்த மாணவன் போதையில் நன்றாகத் தூங்கிவிட்டான். அந்த அழகி யென்னைப் பார்த்து,

"நான் இந்த மாணவனுக்கு மணம் முடிக்கப்பட்டிருப்பினும், உண்மையில் நான் மற்றொருவனைக் காதலிக்கிறேன்; எல்லா நேரங்களிலும் அவன் என்னுடன் உறைகிறான். அந்த மாணவன் தூங்குவதால்,சிறிது நேரம் என் காதலனை மகிழ்விக்க விரும்புகிறேன் - நீ மட்டும் இதனை யாரிடமும் சொல்லமாட்டேன் என்று சத்தியம் செய்வதாக இருந்தால்!"

என்று பேசினாள்.

யென் சத்தியம் செய்தான். அந்தப் பெண் வாயிலிருந்து அழகான இளைஞன் ஒருவனை வெளியே துப்பினாள். அவனுக்கு 23 அல்லது 24 வயது இருக்கும். அவனை யென்னுக்கு அறிமுகம் செய்தாள். திடீரென அந்த மாணவன் விழித்து எழுந்தான். உடனடியாக, அவள் தன்வாயினின்றும் சித்தர வேலைப்பாடமைந்த சரிகைத் திரைச்சீலையை வெளியில் துப்பி, தனக்கும் தன் காதலனுக்கும் இடையே விரித்துவிட்டாள். பின்னர், திரைக்குப் பின் சென்று அந்த மாணவனுடன் சேர்ந்து கொண்டாள்.

அந்த இளைஞன் யென்னைப் பார்த்து,

'இந்தப் பெண் என்னைக் காதலித்தாலும், என் நெஞ்சத்தினை முழுமையாக நிறைக்கவில்லை.

> எனவே, எனக்கென்று ஒரு மடந்தை இருக்கிறாள். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு அவளைப் பார்க்க விரும்புகிறேன். இதனை யாரிடமும் சொல்லிவிடாதே என்று உன்னைக் கேட்டுக் கொள்ளுகிறேன்'

என்று கூறினான். யென் சத்தியம் செய்தான். அதன்பின் அந்த இளைஞன், தன் வாயிலிருந்து இருபது வயதுடைய மங்கையினை வெளியே துப்பினான். நீண்ட நேரம் அவளுடன் மதுவருந்தி விளையாடி மகிழ்ந்தான்.

அப்போது அந்த மாணவனின் சந்தடி ஓசை வந்தது. அந்த இளைஞன், "அவ்விருவரும் விழித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னான். உடனடியாக, தான் வெளியே துப்பிய பெண்ணினை எடுத்து மீண்டும் வாய்க்குள் போட்டுக் கொண்டான்.

பின்னர், அந்த மாணவனுடன் இருந்து வந்த அப்பெண்,

> 'அந்த மாணவன் எழுந்திருக்கும் நிலையில் உள்ளான். அந்த இளைஞனை விழுங்கிவிட்டான். யென்னுடன் தனியனாக உட்கார்ந்திருக்கிறான்'

என்று சொல்லிக் கொண்டே வெளியே வந்தாள். பின்னர், அந்த மாணவன் யென்னைப் பார்த்து,

> 'உன்னைத் தனியாக உட்கார வைத்துவிட்டு நான் நீண்ட நேரம் தூங்கியதற்காக வருந்துகிறேன். காலம் கழிகிறது. உன்னிடம் இருந்து விடைபெற வேண்டும்'

என்று கூறினான். இவ்வாறு சொல்லிக் கொண்டே அந்தப் பெண்ணினையும், பெரிய தட்டினைத் தவிர எஞ்சிய பாத்திரங்களையும் விழுங்கிவிட்டான். இரண்டடி குறுக்களவு கொண்ட அந்தப் பெரிய தட்டினை யென்னுக்குப் பரிசாகத் தந்து,

"நம் சந்திப்பின் நினைவுச் சின்னமாக இதனைத் தவிர உனக்குக் கொடுப்பதற்கு என்னிடம் எதுவும் இல்லை"

என்று கூறினான்.

தை யூவன் காலத்தில் (T'ai Yuan கி.பி.376-396), யென் (Yen) அரசாங்க ஆவணக் காப்பகராக இருந்தவர். சங்கு சன் (Chang San) என்னும் அரசுச் செயலருக்குத் தின்பண்டங்கள் பரிமாறுவதற்கு அந்தப் பெரிய தட்டினைப் பயன்படுத்தியவர். இந்தத் தட்டு ஹன் மரபின் யூங் பீங்கு (Yung P'ing கி.பி.60) அரசேற்ற மூன்றாம் ஆண்டில் செய்யப்பட்டது என்று ஒரு கல்வெட்டு உறுதி செய்கிறது.

இது ஒரு கற்பனைக் கதை. இக்கதையில் புத்தர் சாதகக் கதையின் தாக்கம் இருப்பதாகச் சீனவியலார் (Sinologists) கருதுகின்றனர். கதை நிகழ்ச்சியுடன் வரலாற்றுக் குறிப்புக்களையும் கலந்துவிடுதலை இக்கதையில் காணலாம்.

இத்தகைய கதைகள் அமைப்பில் பண்படாமல் இருப்பதுடன் தற்செயல் நிகழ்வுகள் கூடியனவாய், அதீதக் கற்பனை உடையனவாக உள்ளன. இவற்றில் கதைக்கரு (Plot) சிறப்புடையதாக இல்லை. பாத்திரப் படைப்பு (Characterization) காணப்படவில்லை. நிகழ்ச்சிக் குறிப்புக்கள் இலக்கியத் தரம் வாய்ந்ததாக இல்லை. இவ்வாறுதான் சீனக் கதைகள் தொடக்க நிலையில் இருந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவை அபூர்வக் கதைகள் அல்லது அற்புதக் கதைகள் என்ற அளவில் எண்ணத் தக்கவை.[4]

கதை சொல்லுதல்

கதை சொல்லுதல் (Story telling) என்பது ஒரு தொழிலாகவே இருந்து வந்துள்ளது. நாட்டார்

இலக்கியத்தின் (Folk Literature) ஒரு வகையாகக் கதை சொல்லும் கலை வளர்ந்துள்ளது. சந்தை கூடும் இடங்களில் கதை சொல்லும் தொழிலினர் கூடிவிடுதல் வழக்கமாக இருந்துள்ளது. அவ்விடங்களில் அவர்கள் சொல்லும் கதைகளை எழுத்துருவம் தந்து பேணிக்காத்தனர். பழைய கதைகளைப் பார்த்துப் புதிய கதைகள் தோன்றின.

கதை சொல்லுவோரின் கையெழுத்துப் படிகள் (Scripts) மூன்று வகையாகப் பாகுபடுத்தப்பட்டன: அவையாவன, 1. சிறு பேச்சு (Small Talk) - இது புனைகதையினைச் (Fiction) சுட்டியது. 2.வரலாற்றிலிருந்து உருவாக்கப்பட்ட கதைகள், 3. பௌத்த நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட கதைகள் என்பனவாகும்.[5]

ஆவணங்களின்படி 115 கதை சொல்லுவோரின் கையெழுத்துப் படிகள் இருந்தன என்று அறியப்படுகிறது. அவற்றுள் 20-30 படிகள் மட்டுமே காலம் கடந்து நிலைபெற்றவை.[6]

நகரச் சமுதாயத்தின் அடித்தள மக்களின் வாழ்வினை இக்கதைகள் விவரிக்கின்றன; மக்களின் நம்பிக்கைகளைப் பிரதி பலிக்கின்றன; நிலமானிய நீதியைத் தாக்குவன. இக்கதைகள் பல்வகைக் கதைக்கருக்களை உடையவை; நடப்பியலுடன் நெருங்கிய எடுத்துரையாக இருப்பவை (Realistic Narrative). மக்களுக்குப் புரியக் கூடிய மொழிநடையில் இவை புனையப்பெற்றவை. நகைச்சுவையுடன் எளிமையும் விரவியவை.[7]

தங்கு அரச மரபின் (T'ang Dynasty) காலத்தில் சீனப் புனைகதை அதன் வளர்ச்சியில் சிறிது முன்னேற்றம் கண்டது. கதை சொல்லும் மரபினைத் தொடர்ந்து கொண்டே இலக்கிய நடையில் அதிசயக் கதைகளை தங்கு எழுத்தாளர்கள் எழுதி வந்தனர். உரைநடை

வடிவத்தில் புதுச்செவ்வியல் இயக்கத்தின் தாக்கத்தால் எடுத்துரைக்கு (Narration) ஏற்ற ஊடகம் கிடைத்தது. பொதுத் தேர்வுகளை எழுதும் தேர்வாளர்கள் இலக்கியத் தரம் மிக்க கதைகளையும் பயின்று, அவற்றின் மாதிரிகளைப் பொதுத் தேர்வுகளில் எழுதும் பழக்கம் ஏற்பட்டது. நகர வாழ்வின் நிறைகுறைகள் கதை புனைவோர்க்கு வேண்டிய கருப்பொருளைத் தந்தன. கி.பி.எட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையும் இலக்கியத்தரம் மிக்க கதைகள் (Literary Tales) தழைத்துள்ளன. இக்காலப் பகுதியில் கதைத் தொகுப்புக்கள் பற்பல வெளிவந்தன.[8]

கதையில் நீதி போதனை

தங்கு காலத்துக் கதை எழுத்தாளர்கள் பெரும்பான்மையும் இலக்கியப் புலமை பெற்றவர்கள். இலக்கியப் புகழுக்கும் அரசியல் வாய்ப்புக்கும் உகந்த வாய்ப்புக்களை நாடிச் சங்கன் (Ch'ang - an) நகரில் கூடி இருந்தவர்கள். அவருள் ஒரு சாரார் உயர் பதவிகளைப் பெற்றனர். மற்றொரு சாரார் இலக்கிய வட்டங்களில் மேம்பாடு அடைந்தனர். அவர்கள் கலையுள்ளம் கொண்டவர்கள். ஆதலால், கவிதை அலங்காரங்களும் இடைச்செருகல்களும் இல்லாத எளிமையும் ஆற்றலும் மிக்க உரைநடையில் ஆர்வத்தையும் மன நெகிழ்ச்சியையும் உண்டாக்கக் கூடிய கதைகளைப் படைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அவர்கள் கதைகளில் இயற்கை கடந்த கூறுகள் நிரம்பியிருப்பினும் கூட, நகரியச் சமுதாயத்தின் வாழ்வியலைப் பிரதிபலிக்கக் கூடிய யதார்த்த மனிதப் பொருண்மையினை அறிமுகப்படுத்துவதில் ஆர்வம் கொண்டிருந்தனர். தங்கு காலத்து நகர வாசிகள் ஆகிய வாணிகர், கைவினைஞர், விலைமாதர், நடலை மாக்கள், பிச்சையேற்போர் ஆகியோரின் எண்ணற்ற

செயற்பாடுகளை தங்கள் கதைகளில் விரிவாகப் புனைந்தனர். ஏனைய சீன இலக்கிய வகைகளைப் போலவே இந்தக் கதைகளும் நீதி போதனை (Moral Lesson) புரிகின்றன. இந்தப் போதனை எள்ளற் குறிப்பிலும் (Satirical note), அறிவுறுத்தல் முறையிலும் கதையின் இறுதியில் இடம் பெறுதல் இயல்பு.[9]

கதையின் அடிக்கருத்து

தங்கு காலத்து இலக்கியத்தரக் கதையாளர்கள் 1. இயற்கை கடந்த நிலை, 2. காதல், 3. பெண்களைக் காக்கும் வீரப்பண்பு (Chivalry) ஆகிய மூன்று முதன்மைப் பொருளை அடிக்கருத்தாகக் கொண்டு கதை புனைந்துள்ளனர்.[10] அவர்கள் கற்பனையின் எல்லையினை நன்கு வரையறுத்துக் கூறுதல் அரிது. மனிதனுக்கும் ஆவிக்கும் அல்லது பூதத்துக்கும் இடையே உண்டான காதலைக் கூட அவர்கள் கதையில் காணலாம். காதலர்களை இணைத்து வைப்பதில் வாள்வீரன் முக்கியப் பங்காற்றுவதாக அமைத்தலும் உண்டு. நடப்பியல் வாழ்வினை எடுத்துரைப்பதாகவும் அல்லது இகழ்ந்துரைப்பதாகவும் அபூதக் கதைகள் (Supernatural tales) புனையப் பெறுதல் உண்டு. கதை எழுதுவோரில் ஒருவர் கூட எந்தவொரு கதை வகையிலும் சிறப்புத் தன்மை வாய்ந்தவரல்லர்.

பழைய கண்ணாடி

தங்கு (T'ang) ஆட்சியின் முற்காலத்துக் கதைகளில் பழைய கண்ணாடி (The Ancient Mirror) என்ற கதை, ஆறு அரச மரபுகளின் (Six Dynasties) அபூதக் கதைகளின் முற்றிய வடிவமாகக் கருதப்படுகிறது. இந்தக் கதைக்கு மையமாக அமைவது ஒரு பழைய கண்ணாடி ஆகும். இக்கதையின் ஆசிரியர் வாங்கு தூ (Wang Tu) ஆவர். இவர் கி.பி.7ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். நரி, பாம்பு, ஆமை, குரங்கு, சேவல், எலி என்ற ஆறின் வியத்தகு

கிளைக் கதைகளின் வரிசையினை ஒருங்கிணைத்துப் பழைய கண்ணாடி என்ற கதையினைப் புனைந்துள்ளார்.[11] இவையனைத்தும் மாந்திரிகக் கண்ணாடியினால் மனித உருவம் கொள்ளுகின்றன. ஆனாலும், கதைப்போக்கில் அதே கண்ணாடியினால் அவற்றின் சுய உருவம் வெளிப்படுத்தப்பட்டுப் பழைய உருவத்தையே அடைந்து விடுகின்றன என்பதுதான் கதை. இந்தக் கதையில் கண்ணாடியின் ஒளிவீச்சு, அதன் அடையாளங்கள், அதிலிருந்து வெளிவருவன, புண்ணை ஆற்றும் அதன் இயல்புகள் ஆகியவற்றைப் பற்றிய வருணனைகளும் இடம்பெற்றுள்ளன. அற்புத நிகழ்வுகளுக்கெல்லாம் மூலமாக இருக்கும் கண்ணாடியின் பயன்பாட்டினால் கதை ஒருமை (Unity of Story) கிடைக்கப் பெறினும், எந்தவித நோக்கமோ கதைக்கருவோ (Plot) இல்லாது நிகழ்வுகளின் அணிவகுப்பாகவே இந்தக் கதை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கதையின் ஒரு சிறு பகுதியை மட்டும் வாசகர்களின் ஆர்வத்துக்கு மொழியாக்கம் செய்து இங்குத் தருகிறோம்.

> "... அழகுள்ள அடிமைக் கன்னிப் பெண் ஒருத்தியைக் கண்டேன். அவள் பெயர் கிளி. என்னைப் பார்ப்பதற்காகவும் உடைகளைச் சரிப்படுத்திக் கொள்ளுவதற்காகவும் என் கண்ணாடியை எடுத்த பொழுது, நான் அந்தக் கிளியினால் கவனிக்கப்பட்டேன். உடனடியாக அந்தக் கிளிப்பெண் தன் முழங்கால்களில் விழுந்து, தன் தலையினை இரத்தம் வரும் வரை தரையில் முட்டி மோதிக் கொண்டது. இடையில், 'என்னைத் தப்பவிடு, நான் வெளியே போய்விடுவேன்' என்று அழுதது. என் விருந்தளிப்போரை (Host) அழைத்து அந்தக்

கிளிக்கன்னியின் விந்தைச் செயல் பற்றி விளக்கிச் சொல்லும்படி கேட்டேன். அவர்,

"இரண்டு மாதங்களுக்கு முன் இந்தக் கன்னியுடன் ஒருவன் வந்தான். அவள் மிகவும் நோயுற்றிருந்ததால் அவன் அவளை இங்கேயே விட்டுவிட்டுப் பின்னர் அவளுக்காக வருவேன் என்று சொல்லிச் சென்றான். அவன் மீண்டும் இதுவரை வரவில்லை. இவளைப் பற்றி இவ்வளவுதான் எனக்குத் தெரியும்"

என்று விவரித்தார்.

அவள் ஏதோ ஒருவகை விலங்கின் ஆவி என்று ஐயுற்ற யான் திறந்த கண்ணாடியுடன் அவளை அணுகினேன். என்னைக் கண்டதும்,

'என்னை விட்டு விடுங்கள். என் சுய உருவத்தை நான் எடுத்துக் கொள்ளுவேன்'

என்று அவள் கூறினாள்.

'உன் சுய உருவத்தை எடுத்துக் கொள்ளுவதற்கு முன்பு நீ எவ்வாறு இருந்தாய் என்பதை எனக்குச் சொல்; உன்னைவிட்டு விடுகிறேன்'.

என்று கண்ணாடியை மூடியபடி நான் கேட்டேன். தரையினைத் தலையால் தொட்டு மரியாதை உணர்வுடன் அந்தப் பெண் பேசினாள்:

"நான் ஆயிரம் ஆண்டு முதிர்ந்த ஒரு நரி. ஹவா குன்றின் காவற் கடவுளின் கோயிலுக்கு முன்பு உள்ள முதிர்ந்த பைன் மரத்தின் அடியில் வாழும் வழக்கம் உடையேன். அடிக்கடி உருமாற்றங்களைப் பெற்றதன் காரணமாக மரண தண்டனை பெற்றேன். ஹூவாஷன் கடவுளால் பிடிக்கப்பட்டேன். ஆனால் அவர் பிடியினின்றும் தப்பிக் கொண்டு ஹோ (Ho) வேய் (Wei) என்பனவற்றின் இடைப்பட்ட

நிலப்பகுதிக்கு ஓடிவிட்டேன். அங்கு சென் சூ கூங்கு (Chen Ssu-kung) என்பவன் தன்மகளாக என்னை ஏற்றுக்கொண்டு, வாஞ்சையுடன் வளர்த்து வந்தான். அதே பகுதியைச் சேர்ந்த சய் ஹுவா (Chai Hua) என்பவனுக்கு நான் மணம் முடிக்கப்பட்டேன். அவனுடன் ஒத்துப்போக என்னால் முடியாமையினால், அவனை விட்டு நான் ஓடிப்போய்க் கிழக்கு நோக்கிச் சென்றேன். ஹான் செங்கு (Han Cheng) மாவட்டம் அடைந்தேன். அங்கு யான் லீ வூ-அவ் (Li Wu -ao) என்பவனால் பிடிக்கப்பட்டேன். அவுன் பயங்கரமானவன், கொடியவன். பல ஆண்டு காலம் தன்னுடன் பயணிக்கும்படி வற்புறுத்தப்பட்டேன். கடைசியாக இங்கு என்னை விட்டுச் சென்றான்."

இந்தச் சுய சரிதத்தினைக் கேட்ட யான் நரியை நோக்கி,

"நீ ஒரு முதுநரியாக இருப்பதால், மனித வடிவம் பெற்று மக்களைத் துன்புறுத்துதல் வேண்டும் என்பது உன்னுடைய விருப்பமாக இருக்கவில்லையா?"

என்று வினவினேன். அந்த(நரிப்) பெண்,

"நான் மானிட வடிவம் கொண்டதே மக்களுக்குத் தொண்டு செய்தல் வேண்டும் என்பதற்காகவே, அவர்களுக்குத் தீங்கு செய்வதற்காக அன்று."

என்று கூறினாள். மேலும்,

"மனித உருவம் எடுத்துக் கொண்டதன் வாயிலாக விலங்குகளுக்குரிய தெய்வங்களுக்கு நான் குற்றம் செய்துவிட்டேன்; எனவே, மரண தண்டனை உறுதியாக எனக்கு வந்தே தீரும்."

என்றும் சொன்னாள். அவளைப் பார்த்து,

'என்னால் முடியும் எனில், உன்னைக் காப்பாற்ற விரும்புகிறேன்'

என்று நான் கூறினேன். அவள்,

"உங்கள் அன்பிற்கு நன்றி. ஆயினும் கண்ணாடியின் அனைத்தையும் வெளிப்படுத்தும் கதிர்களை ஒருமுறை சந்தித்துவிட்டேன் என்றால், நான் எடுத்துக் கொண்ட உருவத்தில் தொடர்ந்திருத்தல் என்பது எனக்குச் சாத்தியமானது அன்று. மனித உருவத்தில் நெடுங்காலம் இருந்து வரும் யான், மீண்டும் பழைய உருவத்துக்குப் போவது என்பது தாங்க ஒண்ணாத அவமானமும் இழிவுமாக அமைந்துவிடும். உங்களை நான் வேண்டுவது இதுதான்: நீங்கள் கண்ணாடியை அதன் பெட்டிக்குள் மீண்டும் வைத்துவிடுங்கள். எனவேதான், நான் இறப்பதற்கு முன்பு கடைசி முறையாக மதுபானம் செய்து மகிழ்ச்சியாக இருக்க முடியும்."

என்று வேண்டிக் கொண்டாள். அவளைப் பார்த்து,

"கண்ணாடியை அதன் பெட்டிக்குள் போட்டுவிட்டால், நீ தப்பித்துக் கொண்டு போக மாட்டாயா?"

என்று கேட்டேன். அவளோ சிரித்துக் கொண்டு,

"என்னைக் காப்பாற்றும் பொருட்டு நீங்கள் வாய்ப்பு வழங்க வில்லையா? அப்படியிருக்கும் பொழுது, நீங்கள் கண்ணாடியை மூடிவைத்த பிறகு, நான் மறைந்து போதல் என்பது நன்றி கெட்ட செயலாகும். மேலும், உருமாற்றிக் கொள்ளும் என் ஆற்றலை அந்தக் கண்ணாடி என்னிடம் இருந்து நீக்கிவிட்டது. இறப்பு என்னை ஆட்கொள்ளுவதற்கு முன்னால், கணப்பொழுதாவது களிப்புடன் இருத்தலையே நான் விரும்புகிறேன்."

என்று கூறினாள்.

அதன் பிறகு, கண்ணாடியை அதன் உறைக்குள் இட்டேன். அந்தப் பெண்ணிற்காகவே மது வரவழைத்தேன். எனக்கு விருந்தளிப்போரையும் (Hosts) அவருடைய அண்டையிலுள்ளோரையும் மது விருந்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைத்திருந்தேன். அந்த (நரிப்)பெண் மதுவருந்தி மயங்கிய நிலையில் எழுந்து நின்றாள், ஆடினாள், பாடினாள். அப்பாட்டு வருமாறு:

"மாயக் கண்ணாடியே! மாயக் கண்ணாடியே!
அந்தோ என்வாழ்வு, அந்தோ என்வாழ்வு!
என்சுய உருவத்தை உதறிய நாள்முதல்
எத்துணை அரசுகள் எழுந்தன, விழுந்தன!
வாழ்வு உண்மையில் இனிப்பது எனினும்
இறப்புக்கு அழுதல் வருந்துதல் பயனற்றது.
எனவே இவ்வுலகை மட்டுமே ஏன் சிந்தை செய்கிறாய்?
இந்த வாழ்வில் மட்டுமே ஏன் ஒட்டிக் கொள்கிறாய்?"

இவ்வாறு நரி - கிளி - மனிதன் கதை முடிகிறது. இது ஒரு கதைதான். பல அரிய வாழ்வியல் உண்மைகள், குறிக்கோள்கள் முதலியனவற்றை உணர்த்தும் இத்தகைய கதைகளின் தொடர்ச்சியே பழைய கண்ணாடி (The Ancient Mirror) என்ற தலைப்பில் படைக்கப்பட்டுள்ளது. இத்தகைய கற்பனைக் கதைகளில் வரும் மாந்தரிடம் மற்றவர்க்காக வாழும் போதிசத்துவப் பண்புகள் படிந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வெண்குரங்கின் கதை

வெள்ளைக் குரங்கு (The White Monkey) என்பது மற்றொரு கதை. கி.பி.ஏழாம் நூற்றாண்டுக்குரிய இக்கதையின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. இக்கதை இயற்கை கடந்த எல்லையிற் செல்லினும், நல்ல

வருணனையும் தளர்ச்சியில்லாத எடுத்துரையும் (Narrative) கொண்டு உண்மையான மனித முக்கியத்துவமும் வாய்ந்த முதல் சீனச் சிறுகதையாகக் கருதப்படுகிறது.[12] தென்மேற்குப் பகுதியில் உள்ள மலைப்பிரதேசங்களுக்கு படைத்தலைவனின் அழகிய மனைவியைக் கடத்திச் செல்லுதல், மீட்டு வருதல் என்பனவற்றைத் தொடர்புறுத்திய ஒரு கதையாக இஃது உள்ளது. அவளைச் சிறைபிடித்தவன் வேறு யாரும் இல்லை, ஆற்றல் மிக்க ஒரு வெள்ளைக்குரங்கு. நூறு மனிதர்கள் திரண்டாலும் அந்தக் குரங்கினை அடக்குதல் இயலாது. மழையில் நனைந்து போன சரிகை வேலைப்பாடமைந்த காலணி புதர்களின் இடையே கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் காலணிதான் தளபதியைக் குரங்கின் மலைக்குகைக்கு இட்டுச் சென்றது. அங்கு, செதுக்கப்பட்ட கல் கூடத்தில் பாய்விரிக்கப்பட்டு அடர்ந்த மெத்தைகள் போடப்பட்டிருந்த கல் கட்டிலில் அவன் மனைவி நோயுற்றுக் கிடந்தாள். இந்தக் கூடத்தில் பெண் கைதிகள் பற்பலர் இருந்தனர். இவர்களின் கணவர் அந்த வெண்குரங்கினைக் கொல்லுவது எப்படி என்று சதித்திட்டம் தீட்டினர். அவர்களுக்கும் தளபதிக்கும் ஓர் உடன்படிக்கை உண்டாயிற்று. அதன்படி, தளபதியும் அவர் ஆள்களும் நல்ல மதுவும், கொழுத்த நாய்களும், சணல் கயிறுகள் பலவும் முதலில் மலைக்குக் கொண்டுவருதல் வேண்டும். பார்வைக்குப் படாமல் அவர்கள் மறைந்திருக்கும் பொழுது, வெண்குரங்கிற்குச் சிறைப்பெண்கள் மதுவும் மாமிசமும் விருந்து வைக்கவேண்டும்; அக்குரங்கு (கடுவன்) போதை ஏற்படும் அளவுக்கு மதுவருந்தியபின் அதனைப் படுக்கைக் கட்டிலில் இறுகக் கட்டிவிட வேண்டும் என்பதுதான் அவர்கள் தீட்டிய திட்டம். திட்டம் வெற்றிகரமாக நிறைவேறிற்று.

தன் இராணுவ வீரர்களுடன் படைத்தளபதி பெண்கள் சிறை வைக்கப்பட்டிருந்த கூடத்திற்குச்

சென்றபொழுது, மிகப் பெரிய வெண்குரங்கு (-கடுவன்) தன் நான்கு கால்களுடன் கட்டிலில் இறுகக் கட்டப்பட்டிருந்ததைக் கண்டான். மனிதர்களைக் கண்ட குரங்கு மீண்டும் சுற்றிக் கொண்டு, விடுபடப் போராடியது. அதனுடைய விழிகள் மின்னலைப்போல் அனல் வீசியது. வீரர்கள் தங்கள் ஆயுதங்களால் அந்தக் குரங்கினை அடிப்பதற்கு ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டனர். ஆனால், அவர்கள் கொடுத்த ஆயுத அடிகள் யாவும் இரும்பின் மேலும் கல்லின் மேலும் விழுவது போல் ஆயின. சளைக்காத வீரர்கள் அந்தக் குரங்கின் கொப்பூழின்கீழ் அடிவயிற்றில் நீண்ட கத்தியால் குத்திய பொழுதுதான், அதன் உடம்பினின்றும் நீரோடை வீழ்தல் போல் இரத்தம் பீறிட்டு வழிந்தது.

முன்பாகவே, தளபதியின் மனைவி குரங்கின் கூட்டுறவால் கருவுற்றிருந்தாள். இந்த விந்தையான உறவினால் பிறந்த மகன் அவன் காலத்தில் வாழ்ந்த புகழ் வாய்ந்த எழுத்தாளர்களில் ஒருவனாக வளர்ச்சி பெற்றான்.

தளபதியும் தன்மகனும் தத்தம் துறைகளில் முதன்மை பெற்றுத் திகழ்ந்தனர். அவன் மகன் குரங்கு முகம் கொண்டிருந்தான். இவ்வாறு கதை முடிந்தது. இக்கதையினை யார் எழுதி இருக்கக் கூடும் என்பது பற்றிச் சீனவியல் அறிஞர் கூறும் கருத்தினையும் இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். பெயர் அறியப்படாத எழுத்தாளர் இதனை எழுதியிருப்பதால், ஊகத்தின் அடிப்படையில் அவர் யார்? என்ற சிந்தனை எழுந்தது. தளபதியின் குடும்பத்தினைத் தாக்கிய ஒரு பகைவனின் வேலையாகத்தான் இந்தக் கற்பனைக்கதை இருத்தல் வேண்டும் என்பதே அவர்தம் முடிபாகும்.

ஒருசாரார், இந்திய இதிகாசம் ஆகிய இராமாயணத்தில் சுக்கிரீவனின் அழகிய மனைவியைக் கடத்திச் சென்று வாழ்வு நடத்திய வாலியின் கதையினைப்

படித்த ஒருவர் இந்தச் சீனக் கதையினைப் புனைந்திருத்தல் வேண்டும் என்று கருதினர். வாலி - வெண்குரங்கு (வால் - வெண்மை).

இக்கதையின் தோற்றம், மூலம் எதுவாக இருந்தாலும், முன்பு வந்த கதைகளில் காணப்படாத புதிய உத்திகளுடன் புனையப் பெற்று, தங்கு மரபின் (Tang dynasty) முற்காலத்திற்குரிய இக்கதை புதுமை வகைச் சிறு கதையின் வரவுக்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது என்று சீனவியலார் எண்ணுகின்றனர். விலங்கின் கதைக்குக் குரங்கின் கதை சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

தென்மாநிலத்தின் ஆளுநர்

திறை செலுத்தும் தென்மாநிலத்தின் ஆளுநர் (Governor of the Southern Tributary State) என்ற கதை எள்ளற் குறிப்பும் நீதி போதனையும் பொருந்திய ஒரு படைப்பு.[13] இதிலும் இயற்கை கடந்த மாந்தர்கள், நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. இக்கதையின் ஆசிரியர் இதன் முடிவில்,

"முற்றிலும் மெய்யானது என்று நம்பிக்கொண்டு, ஆர்வம் கொண்டவர்களுக்காக இக்கதையினைத் தொகுத்துள்ளேன். வியத்தகு இயற்கை கடந்த பொருள்களைப் பற்றியும் பழமைக்குப் புறம்பானவை பற்றியும் இக்கதை குறித்தாலும் பேராசை பிடித்தவர்களுக்கு ஓர் அறிவுரைக்கதையாகவே இது விளங்க வேண்டும் என்பதற்காகவே எழுதப்பட்டது.

எதிர்பாராத ஒருங்கு நிகழ்வுகளின் (Coincidences) கோவையாக மட்டும் வருங்கால வாசகர்கள் இக்கதையினை எளிதாக எண்ணாதிருப்பார்களாக.

> உலகப் புகழிலும் தரவரிசையிலும் பெருமிதம் கொள்ளுவதில் அவர்கள் கவனமாக இருப்பார்களாக"

என்று குறித்துள்ளார். இந்தக்கதை பின்வரும் நான்கடிப் பாடலுடன் (Quatrain) முடிகிறது:

"அவன் அலுவலகப் பதவியும் நிலையும் விழுமியது,
வரம்பற்றது தலைநகரில் அவனது அதிகாரம்,
இருந்த போதிலும் அறிவார்ந்தோர் பார்வையில்,
புற்றில் வாழும் எறும்புகளைவிட மிகவும்
வேறுபடவில்லை அவன்"

இந்தக் கதையின் முதன்மை மாந்தன் (Protagonist - Chief Character) ஏமாற்றம் அடைந்த புலமையாளனாகவும் படை மறவனாகவும் இருக்கிறான். இவன் கண்ட கனவுதான் இக்கதை. அதிகாரம், ஆடம்பரம் ஆகிய பொருண்மையினை இக்கதை உள்ளடக்கமாகக் கொண்டது. ஒருநாள் அவன் குடித்து மதிமயங்கிய நிலையில் கிடக்கிறான். அப்பொழுது ஊதா நிறத்து ஆடை உடுத்திய தூதுவர் இருவரால் அவன் தூக்கிச் செல்லப்படுகிறான். ஆஷன்டன் இராச்சியத்திற்கு (Kingdom of Ashendon) வருகிறார்கள். அந்த நாட்டு அரசனின் அழகிய மகள் அவனை மணக்கிறாள். மணந்ததும் திறை செலுத்தும் தென்மாநிலத்தின் ஆளுநராக அவன் நியமிக்கப் பெறுகிறான். அந்த நாட்டின் அரசு அதிகாரிகள், பிட்சுக்கள், பூசாரிகள், முதியோர்கள், பாடகர்கள், ஊர்தி ஓட்டுநர்கள், காவலர்கள் எல்லோரும் வெளியில் வந்தனர். அவனைக் காண்பதற்காகப் பொதுமக்கள் திரண்டனர். ஆரவாரம் எங்கும். பல கல் தொலைவுக்கு மணியோசையும் முரசு ஓசையும் கேட்டது.

அந்தப் பெருநகரின் வாயிலுக்குள் அவன் நுழையும் பொழுது மணிக்கோபுரங்கள், விளையாடும்

இடங்கள் வரிசை வரிசையாக இருப்பதைக் கண்டான். மேலும் கோயில்களும் பௌத்தப் பள்ளிகளும் விழாக்கோலம் பூண்டு விளங்குவதைப் பார்த்தான். அந்தப் பெருநகரின் வாயிலுக்கு மேலே, திறை செலுத்தும் தென்மாநிலம் என்று பெரும் பொன்னெழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டான்.

அந்த நாட்டின் ஆளுநராக இருபதாண்டுகள் ஆட்சி புரிந்தான். அவனை மக்கள் அனைவரும் விரும்பினர். அவனுடைய பெருந்தகவுகளைப் போற்றும் பொருட்டு நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டன; அவனுடைய வாழும் ஆவிக்குப் பலிதரும் பொருட்டுக் கோயில்கள் கட்டப்பட்டன. அவனுடைய பொதுவாழ்வில் புகழும் வெற்றியும் முடிமணியாகத் திகழ்ந்தன. அவனுக்குப் புதல்வர் ஐவர், பெண்மக்கள் இருவர். நாட்டில் அனைவரும் அவனை வாழ்த்தியது போலவே, வீட்டில் அவனை அவன் பிள்ளைகள் எல்லாம் வாழ்த்தினர்.

ஆயினும், அவன் அரசுப் பணியின் உச்சத்தில், துயர்களும் இடர்களும் தொடர்ந்து தலைகாட்டத் தொடங்கின. அண்டை நாட்டுப் படையிடம் தன் படை அடைந்த தோல்வி அவனைத் துன்புறுத்தியது. தன் மனைவியையும் இழந்து ஆற்றொணாத துயருற்றான். தன் பகைவரின் போலிக் குற்றச்சாட்டுக்கள் அவனை வருத்தின. பணியாளர்கள் அவனைவிட்டு அகன்றனர். நண்பர்கள் பிரிந்து போயினர். வீட்டிற்குள்ளேயே அவன் கட்டுப்பட்டுக் கிடக்க நேர்ந்தான். ஆழ்ந்த துயரத்தில் அமிழ்ந்தான்.

ஒருநாள், அவன் சொந்த இடத்திற்கே திரும்பி அனுப்பப்பட்டான். வந்த அதே வழியே திரும்பி வரும் பொழுது அதே ஊதாநிற அங்கி உடுத்திய தூதுவர்கள் அவன்பின் தொடர்ந்தனர். அவனை வரவேற்கும்

பொருட்டு முன்பு வந்த பலதிறப்பட்ட மக்கள் கூட்டம் இப்பொழுது வரவில்லை. மிகவும் அருவருக்கத்தக்க ஊர்தியில் அவன் பயணம் செய்ய நேரிட்டது. தன் வீடு வந்து சேர்ந்ததும், கிழக்குத் தாழ்வாரத்தில், தன்னுடைய மாற்று உயிர் படுத்திருப்பதைப் பார்த்தான். திடீரெனப் பயந்துபோனான். தன் கனவிலிருந்து விழித்தெழுந்தான்.

பின்னர், தான் கண்ட கனவினை நண்பர்களிடம் கூறினான். சாம்பல் மரத்தின் கீழே உள்ள துவாரப் பகுதியை அவர்கள் தேடிப் பார்த்தார்கள். ஆழ்ந்து ஆழ்ந்து தோண்டித் துப்புரவு செய்து பார்த்ததில் ஒருபெரும் துவாரம் இருந்தது. அது தெளிவாகவும் ஒளி ஏற்றப்பட்டதாகவும் ஒரு கட்டில் போடும் அளவிற்குப் பெரியதாகவும் இருந்தது. அதற்குமேலே நகரச் சுவர்கள், கோபுரங்கள், அரண்மனைகள் வடிவத்தில் புற்றுமண் மேடுகள் இருந்தன. அவற்றில் எறும்புகளின் கூட்டங்கள் இருந்தன. ஒரு புற்றுமேட்டில் செந்நிறம் கொண்ட சிறு கோபுரம் இருந்தது. அதனுள் இருபெரும் எறும்புகள் வாழ்ந்தன. அவை ஒவ்வொன்றும் மூன்று அங்குலம் நீளமானவை; வெள்ளை இறகுகள், செந்தலைகள் கொண்டவை. இரு புறமும் பெரும் எறும்புகளின் அணிவகுப்பு. அதனால், அவற்றை அணுகுவதற்கு அனைவர்க்கும் அச்சம்! இந்தப் பெரிய எறும்புகள் இரண்டும் அரசனும் அரசியும் ஆவர். இதுதான் (புற்றுமேடு) ஆஷண்டனின் (Ashendon) தலைநகர்.

இந்தப் புற்றுமேட்டிற்குத் தென்பக்கம் சிறு கோபுரங்களுடன் கூடிய இன்னொரு புற்றுமேடு இருந்தது. இதனைத்தான் திறை செலுத்தும் தென்மாநிலம் என்று அவன் அடையாளம் கண்டான். இதற்கு நன்கோ கனவு (Dream of Nan-ko) என்பது பெயர்.

அதே இரவில் கடும்புயல் வீசியது. காலையில் புற்றுத் துவாரங்களை அவன் பார்த்த பொழுது, எறும்புகள்

எல்லாம் எங்கேயோ போய்விட்டன. இந்தக் கதை மக்களிடையே பிரபலம் பெற்றது. அதனால் உலகாயத வாழ்வின் வெறுமைக்கும், நிலையாமைக்கும் ஒரு குறியீடாக நன்கோ கனவு என்ற பெயர் அமைந்துவிட்டது. இதுவே இக்கதையில் நீதிபோதனை (Moral Lesson) ஆகும். இத்தகைய கதைகளில் பௌத்தச் சிந்தனையின் பதிவினைப் பார்க்கிறோம்.

விசித்திரக் கதைகள்

தங்கு (Tang) காலத்துக் காதற் கதைகள் பற்பல. அவற்றில் இருவேறு வகைமைகள் காணப்படுகின்றன. ஒருவகைக் கதைகளில் ஆண், பெண் இருவர்க்கும் உண்டாகும் காதலை வருணித்தல் இடம்பெறும். மற்றொரு வகைக் கதைகளில் மனிதர், விலங்கின் ஆவிகள் அல்லது பேய்களுடன் கொள்ளும் காதல் இடம்பெறும். தங்கு காலத்து ஆவி உலகக் கதைகளில் பெண் பேய்கள், பெண் நரிகள், டிராகன் (Dragon) அரசனின் மகள் ஆகியோருடன் மனிதர் கொண்டிருந்த அதிசயத் திருமண உறவுகள் இடம்பெற்றன. இங்குக் குறிக்கப்பெற்ற எல்லா வகைக் கதைகளிலும் இயற்கை கடந்த நிகழ்வுகள் மனித நீதிக் குறிப்புடன் புனைந்துரைக்கப் பெற்றிருக்கும்.[14]

நோயுற்ற பெண்ணின் உடலின் நீங்கிய உயிரினைத் தன் காதலனுடன் சேர்ந்து ஐந்தாண்டுகள் வாழவும் இரண்டு புதல்வரை ஈன்றெடுக்கவும் உண்மையான காதல் தூண்டுகிறது. இந்தச் செயல்கள் நிறைவேறியதும் மீண்டும் உயிர் தனக்குரிய உடலுடன் இணைக்கப்பட்டுவிடும். இணையும் நிலையில் அந்த உடல் நோயினின்றும் நீங்கி நலம் பெற்றதாக இருக்கும்.

அரிய அழகும் நம்புதற்குரிய தகவும் (Value) உடைய ஒரு பெண் நரியின் ஆவி, ஓர் ஏழை மனிதனின் வாழ்வில் மகிழ்ச்சியும் வெற்றியும் மலரச் செய்து, பின் வேட்டை நாய்களினால் கொல்லப்படுவதாக ஒரு கதை

உள்ளது. 'மனிதரைப் போலவே இயற்கை கடந்த உயிரும் (Being) உணர்வுகள் கொண்டிருத்தல் எவ்வளவு விந்தையாக உள்ளது' என்று இக்கதை ஆசிரியர் கருத்துரைக்கிறார். "பலாத்காரத்தின் கொடுமைக்கு முன் தன் கற்பினைக் காத்துக் கொள்ளும் திறத்திலும், இறக்கும் வரை தன் கணவனிடத்தில் நம்பிக்கையுடன் இருத்தலிலும் அந்தப் பெண்(நரி)க்கு இணையாக இக்காலத்துப் பெண்களில் மிகமிகச் சிலரே உள்ளனர்" என்றும் விமர்சனக் கருத்தினைக் கதையாசிரியர் எழுதியுள்ளார்.

டிராகன் (Dragon) என்பது இயற்கை கடந்த ஒரு விலங்கு. இந்த விலங்கில் பறவை, பாம்பு, முதலை ஆகியவற்றின் தோற்றம் கலந்திருக்கும் என்று சீனப் புராணம் சொல்லுகிறது. பெண்ணினத்தின் காவலராகவும் இதனைச் சீனர் நம்புகின்றனர். வேதாளம் என்றும் சொல்லப்படுகிறது. அரசனாகவுள்ள டிராகனின் மகள் இளைய புலமையாளர் ஒருவரை மணக்கும் பொருட்டு மனித உருவம் எடுக்கிறாள். மேலும், அவள் தன் தந்தையிடம் ஒரு கடிதத்தினை ஒப்படைத்து, தன் முன்னாள் டிராகன் கணவனின் கொடுமைகளிலிருந்து தன்னை விடுவித்ததற்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டாகவும் இந்த மனிதப் பிறவியை எடுத்திருப்பதாகத் தெரிவித்தாள். பின்னர், அவளும் அவரும் என்றும் இன்புற்று வாழ்ந்ததுடன் சாவா மூவா நிலையினையும் பெற்றனர்.

பண்டைய சீனர்கள் உயிர் வருக்கத்தினை ஐந்து வகையாகப் பாகுபடுத்தினர். அவையாவன: 1. சிறகுடையவை (பறவைகள்), 2. குறு, வன் மயிருடையவை (விலங்குகள்), 3. ஓடுடையவை (ஆமை வகை), 4. செதிள் உடையவை (மீன் வகை), 5. மயிரற்றவை (மனிதன்). டிராகன் என்பது செதிள் உயிர்வகைகளில் தலைமை சான்றது என்பது சீனர்களின் நம்பிக்கை.

மேலே சுட்டப்பெற்ற கதையின் நீதி,

"ஐந்து வகை உயிரினங்களில் நனி சிறந்தவை என்று கருதப்படுவன எப்பொழுதும் அற்புத சத்திகளைப் பெற்றிருப்பவை. மனிதன் அம்மணமான விலங்கு, மயிரற்றவன். தனக்குரிய தகவுகளைச் செதிள் உயிர்களுக்கு ஒப்படைத்துவிட்டான்"

என்று கூறப்படுகிறது. (தொல்காப்பியர் ஆறு வகையாக உயிர்களைப் பாகுபாடு செய்துள்ளார் என்பது இயைபு கருதி இங்குக் குறிப்பிடத்தக்கது).

புனைவியற் காதல்

தங்கு காலத்துப் பலதிறப்பட்ட சமுதாயத்தின் அனுபவங்களாக விளங்கும் இன்பியல், துன்பியல் காதல் உறவுகளை அடிக்கருத்தாகக் கொண்டு புனையப்பெற்ற கதைகள் குறிப்பிடத்தக்கவை. துன்பியல் கதைகளே எண்ணிக்கையில் மிகுதியாக உள்ளன. உயரதிகாரி ஒருவரின் வைப்பாட்டி இளம் மாணவன் ஒருவனை விரும்பிய புனைவியற் காதலை (Romantic Love) மையமாகக் கொண்ட கதை சுட்டத்தக்கது. இந்தக் காதலினால் வைப்பாட்டி தன் முதல் தலைவனாகிய உயரதிகாரியால் கசையடி கொடுக்கப் பெற்றுக் கொல்லப்படுகிறாள்.[15]

இன்னொரு காதல் கதை பரத்தையாக இருந்து படைத்தலைவன் ஒருவனுக்கு வைப்பாட்டியாக மாறியவளின் துன்பமயமான விதியின் விளையாட்டினை அடிக்கருத்தாகக் கொண்டது. அவனுக்கு ஐயுறவும் அடங்காப்பிடாரித் தனமும் கொண்ட மனைவியும் இருந்தாள். தன்னைக் காதலிப்பதாகச் சொல்லி இளம்கவிஞன் ஒருவனால் கைவிடப்பட்ட முன்னாள் இளவரசி ஒருத்தியின் அவல முடிவு மற்றொரு கதையின் மையக் கருத்தாகப் புனையப்பெற்றது.[16]

பரத்தையர் கதைகள்

மேலே சொல்லப்பெற்ற காதல்களில் இடம்பெறும் முதன்மை மாந்தர் (அல்லது பாத்திரம்- Character) வைப்பாட்டியாகவோ, பரத்தையாகவோ இருந்தனர். இவர்கள் சீனச் சமுதாயத்தில் நல்லூழில்லாத, மிதிக்கப்பட்ட பெண்மைக்கு எடுத்துக்காட்டுக்களாகச் சொல்லத்தக்கவர்கள் ஆவர்.[17]

புனைகதைகளில் அரசப் பரத்தை அல்லது பாடல்மகள் ஏனைய சாதாரண விலைமகளிரினின்றும் வேறுபட்டவளாகப் படைக்கப்படுகிறாள். அவள் தன் திறமை, அறிவு, அழகு, கவர்ச்சி அனைத்தையும் விற்பவளாகிறாள். ஆனால், நடப்பியல் வாழ்வில், நாகரிகமும் செல்வமும் கொழிக்கும் வளமார்ந்த சமுதாயத்தின் உற்பத்திப் பொருளாகப் பரத்தை விளங்குகிறாள். தன்னைப் புரக்கும் கலைக் காவலர்களை மிடற்றுப் பாடல், கருவிப்பாடல், ஆடல் என்பனவற்றால் மகிழச் செய்கிறாள். இக்கலை நிகழ்ச்சிகள் எல்லாம் பொழுது போக்குக் களியாட்டங்களாகவே அமைவன. அத்தகைய பரத்தை நன்கு கற்றவளாகவும், கவிதையில் தேர்ச்சி பெற்றவளாகவும் இருந்து, இறகு முளைக்கும் இளங்கவிஞர்களுக்கும் இளம் புலமையாளர்க்கும் ஏற்ற தோழமை பூண்டவளாகவும் விளங்குவாள்.

தங்கு ஆட்சிக் காலத்தில் தலைநகராகிய சங்கன் (Ch'ang-an), பல்வேறு மாகாணங்களிலிருந்து வரும் மேலே சுட்டப்பட்ட ஆர்வம் மிக்க இளைஞர்களின் தீனி கொள்ளும் இடமாகத் (Haunt) திகழ்ந்தது. இந்தத் தலைநகர் வாழ்க்கை கவர்ச்சியும் கிறுகிறுப்பும் தனிமையும் வாய்ந்ததாக இருந்தது. தனிமையினைத் தவிர்ப்பதற்காக இவர்கள், வனப்பும் கலைவளமும் கொடுத்து வைத்த குணமும் பொருந்திய பரத்தைப் பெண்களின் கூட்டுறவினை நாடினர். இலக்கியத்தரக் கதைகள்

உட்பட எல்லா வகை இலக்கியத்திற்கும் வேண்டிய கருப்பொருள்கள் இத்தகைய இளைஞர்-பரத்தையர் காதல் உறவினின்றும் படைப்பாளர்க்குக் கிடைத்தன.

லீ வா வின் கதை

தங்கு காலத்து எழுதப்பட்ட மிகச்சிறந்த கதைகளில், லீ வா (Li Wa) என்னும் பரத்தையின் கதை குறிப்பிடத்தக்கது.[18] இவளை லீ யஹ்சீயென் (Li Yahsien) என்றும் கூறுவர். இதனை எழுதியவர் போ ஹிசிங்-சீயென் (Po Hsing-Chien) என்பவர். இவர் கி.பி.826இல் இறந்தார் என்பதும், போ சூ -ஈ (Po Chu-i) என்னும் கவிஞரின் இளவல் என்பதும் சுட்டுவதற்கு உரியன. இந்தக் கதை எடுத்துரைக் கவர்ச்சியும் உயிரோட்டம் மிக்க பாத்திரப் புனைவும் பெற்றுச் சிறப்பிடம் பெறுகிறது. இந்தக் கதையின் அறிமுகப் பத்தி வருமாறு:

> "சீயென் - கூவோ (Chien-kuo) என்ற நகர்க்குரிய பெருமாட்டி லீ வா (Li Wa) என்பவள். இவள் ஒருகாலத்தில் சங்கன் (Ch'ang-an) நகரின் பரத்தையாக இருந்தவள். ஆனால், அவள் நடத்தை வியக்கத்தக்கது, இணையற்றது, பாராட்டத்தக்கது. போ ஹிசிங்-சீயென் (Po Hsing-Chien) ஆகிய யான் குற்றங்குறைகளைக் கண்காணிக்கும் பணியில் உள்ளவன். அவள் சரிதத்தினைப் பதிவு செய்து வரும் தலைமுறைகளுக்கும் ஒப்படைப்பு செய்கிறேன்."

கதையாசிரியரின் இந்தக் குறிப்பினால் சிலப்பதிகாரத்தின் மாதவியும், மிருச்ச கடிகத்தின் வசந்தசேனையும் சீன நாட்டிலும் வேறுவேறு பெயர்களில் சிறப்புற்று விளங்கியவர்கள் என்பதை எண்ணிப் பார்க்கும் பொழுது, இத்தகைய மங்கையர் ஒரு குறிப்பிட்ட நாட்டில் மட்டுமன்றி உலகெங்கும் தோன்றி ஒளி வீசுபவர்கள் என்ற உண்மை புலனாகிறது.

இந்தக் கதையின் நாயகன் ஓர் இளம் மாணாக்கன்; பெரும் பண்பும் செல்வ வளமும் படைத்த குடும்பத்தினைச் சேர்ந்தவன். எல்லா இளைஞர்களையும் போலவே அவனும் அரசுத் தேர்வுக்குப் பயிற்சி பெறும் பொருட்டுத் தலைநகர் சங்கனுக்கு (Ch'ang-an) அவன் தந்தையால் அனுப்பி வைக்கப்பெற்றான். போதிய பணம், நல்ல ஆடைகள், பணியாளர்கள், வாகனம், குதிரைகள் என்பனவற்றுடன் தலைநகர்க்கு வந்தான். ஒருநாள் குதிரைகள் பூட்டிய தன் ஊர்தியில் அமர்ந்து நகரைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது நெஞ்சினைக் கொள்ளை கொள்ளும் வஞ்சி ஒருத்தியைக் கண்டான். அவளைப் போன்ற அழகுருவான அணங்கு அதுவரை உலகமே கண்டிராதவள் என்று கற்பனை செய்தான். அவள் செவிலியின்பால் சாய்ந்தபடி வீட்டின் கதவோரம் நின்றாள். அவளை விட்டுவிட்டு அப்பால் அகல முடியாத அவன் சாட்டையினைப் பணிமகனிடம் தந்தபடி அவளை இமை கொட்டாமல் ஓசிந்து நோக்கினான். அவன் பார்வைக்கு ஏற்பளிக்கும் பாங்கில் அவளும் காதல் பார்வைகளை வழங்கினாள். ஆனால், ஒரு சொல் கூட அவளிடம் பேசும் துணிவு இன்றிப் போய்விட்டான். சங்கனில் இருந்த தன் பழைய நண்பன் வாயிலாக அந்தப்பெண் பரத்தையருள் நற்குடிப் பிறந்த நங்கை என்பதைத் தெரிந்து கொண்டான். பணமும் பதவியும் படைத்தவர்களால் பெரிதும் அவள் விரும்பப்பட்டவள் என்பதையும் தெரிந்துகொண்டான். பத்து லட்சம் பணம் இல்லாமல் அவளை அசைக்க முடியாது என்பதையும் கேள்வியுற்றான். இந்தப் பொருள் விடயம் அவன் காதல் வேட்கையினைத் தடுப்பதாக இல்லை. மறுநாள் அவள் வீட்டிற்குச் சென்றான். பேச விரும்பினான். வாடகைக்கு இடம் கேட்பவன் போல நடித்தான். மூத்து நரைத்து முதுகு வளைந்த கிழவி ஒருத்தி அவனை வரவேற்று வீட்டின் உள்ளே விருந்தினர் கூடத்திற்கு அழைத்துப் போனாள்.

பழங்கிழவி, "எனக்கு ஒருமகள். இளமையும் தளிர்ப்பும் வாய்ந்தவள். சமூக வாழ்வில் நிறைவுதரும் வித்தகம் ஒன்றும் அவளுக்கு இல்லை. பார்வையாளர்களின் நட்புறவில் அவள் எப்பொழுதும் மகிழ்கிறவள். உன்முன் அவளைக் கொண்டுவர விரும்புகிறேன்" என்று பேசினாள்.

பின்னர், தன்மகளை வெளியே வரும்படி அழைத்தாள். அந்தப் பெண் சுடர்விடும் விழிகளும் வெண்மை நிற முன் கைகளும் கொண்டிருந்தாள். அவள் அசைந்து வருவது அழகு தேவதை வருவதுபோல் அவனுக்குத் தோன்றியது. குழம்பிய நிலையில் அந்த மாணவன் திடீரென எழுந்தான். அவளைப் பார்ப்பதற்குத் தன் விழிகளை உயர்த்தும் தைரியம் வரவில்லை. இருவரும் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். பருவநிலை (Weather) பற்றிய குறிப்புக்கள் சிலவற்றைப் பேசினர். அவள் கவர்ச்சியும் கவினும் உண்மையில் அவன் முன்பு எவளிடமும் கண்டதில்லை. மீண்டும் அமர்ந்தான். தேநீர் வழங்கப்பட்டது. தொடர்ந்து மதுவும் பரிமாறப்பட்டது. இருந்தும் கூட பாத்திரங்கள் எல்லாம் மறுவற்ற தூய்மையுடன் இருந்தன.

நீண்ட நேரத்திற்குப்பின் எங்கும் இருண்டது. எல்லாத் திசைகளிலும் ஊரடங்கு முரசுகள் ஒலித்தன. அந்த முதுகிழவி மாணவனை நோக்கி, 'நீ செல்ல வேண்டிய இடம் எவ்வளவு தூரத்தில் உள்ளது?' என்று கேட்டாள். அவன் யென்-பிங்கு (Yen - P'ing) வாயிலுக்கு அப்பால் பல லீ (=சீன மைல்) தூரம் போகவேண்டும் என்று பொய் கூறினான். தன்னை வீட்டில் தங்கச் சொல்வார்கள் என்ற எதிர்பார்ப்புடன் இவ்வாறு கூறினான். முதுமகள், 'ஊரடங்கு முரசு ஒலிக்கிறது. நீ போய் விடுவது நல்லது. இல்லையெனில், ஊரடங்கு விதியை மீறி விடுவாய்' என்று கூறினாள்.

'உங்களுடன் உரையாடி இதுவரையும் இன்புற்றேன். இவ்வளவு நேரம் ஆகியிருக்கும் என்பதை நான் உணரவில்லை. பாதை நீண்டது, தூரத்தில் செல்லவேண்டும். இந்த நகரில் உறவினர் ஒருவரும் எனக்கு இல்லை. நான் என்ன செய்யலாம்?' என்று மாணவன் வினவினான்.

அப்பொழுது இளம்பெண்,

> "எங்கள் வீடு அருவருப்பாகவும் அலங்கோலமாகவும் உள்ளது என்று நீங்கள் கருதவில்லையெனில், இங்கிருக்க வேண்டும் என்றும் விருப்பப்படுவதால், இந்த இரவு இங்குத் தங்குவதால் என்ன தீங்கு நேர்ந்து விடும்?"

என்று கேட்டாள்.

பலமுறைகள் பழங்கிழவியை அந்த மாணவன் நோட்டம் பார்த்தான். முடிவாக அவள், 'நல்லது, அது அழகிது' என்று சொல்லினாள். பின்னர், தன் பணிமகனை அழைத்தான். இரண்டு பட்டுச் சுருள்களை மாலை உணவிற்காக வழங்கினான்.

அந்தப்பெண் நகைத்தாள். தடுத்தபடியே,

> "விருந்தினர், விருந்தளிப்போர் ஆகியோரிடையே இப்படி நடப்பது பொருத்தமன்று. எங்களிடம் உள்ள எளிய உணவினை உங்களுக்கு வழங்குவதற்கு ஏழையேம் ஆகிய எங்களை அனுமதிக்க வேண்டும். பிறகு ஒரு சமயம் எங்களுக்கு நீங்கள் விருந்தளிக்கப் பொறுத்திருக்க வேண்டும்"

என்று கூறினாள். மாணவன் தான் கொடுப்பதில் பிடிவாதமாக இருந்தாலும், அவள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாள்.

வீட்டின் மேற்குப் பகுதியில் இருந்த கூடத்தில் அமரும் பொருட்டு அவர்கள் உள்ளே சென்றனர்.

திரைச்சீலைகள், மஞ்சங்கள் தங்களின் ஒளிவீச்சினால் கண்களைப் பறித்தன. ஒப்பனைப் பேழைகள், சிறு மெத்தைகள், தலையணைகள் யாவும் அற்புதமாகவும் அழகாகவும் திகழ்ந்தன. மெழுகு விளக்குகள் ஏற்றப்பட்டன. இரவு உணவு பரிமாறப்பட்டது. உணவு செழுமையும் சுவையும் பொருந்தியது. உண் கலன்கள் அகற்றப்பட்டபின் முதியகிழவி உள்வாங்கிக் கொண்டாள். மாணவனும் மங்கையும் நெருக்கமாகப் பேசத் தொடங்கினர். விளையாடிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் பல்வகைக் கேளிக்கைகளில் ஈடுபட்டனர்.

> 'நான் உன் வீட்டினைக் கடந்து சென்ற அந்த நாளில், கதவின் அருகே நீ நின்று கொண்டிருக்க நேரிட்டது. அதன் பிறகு உன்னைப் பற்றிய எண்ணமே எந்நேரமும் என் நெஞ்சத்தில் நிறைந்திருந்தது. உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும் கூட உன்னை மறக்க முடியவில்லை'

என்று கூறினான் அந்த மாணவன். அந்த நங்கையும் தன் பங்கிற்கு, "என் நெஞ்சமும் அங்ஙனமே பாதிக்கப்பட்டது' என்று கூறினாள். 'இன்று நான் இங்கு வந்தேன், தங்குவதற்கு இடம்பார்ப்பதற்காக மட்டும் அன்று. வாழ்நாள் விருப்பங்களை நீ வழங்குவாய் என்பதற்காகத்தான். நான் எவ்வளவு அதிட்டசாலி என்று வியக்கிறேன்' என்றான் மாணவன். அவன் பேச்சினை முடிப்பதற்குள் கிழவி திரும்பி வந்தாள். அவ்விருவரும் எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள் என்பதைக் கேட்டாள். இருவரும் சொல்லியதைக் கேட்டுக் கிழவி வாய்விட்டுச் சிரித்தாள். அவள்,

> "ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே பெரும் விருப்பம் இருக்கிறது. காதல் இருக்குமெனில், பெற்றோர்கள் கூட தடுக்க முடியாது. ஆனால், என்மகளோ எளிய குடும்பத்தில் பிறந்தவள்.

உங்களுடைய பாயினையும் தலையணையினையும்
பகிர்ந்து கொள்ளும் தகுதி அவளுக்கு எப்படி
சாத்தியப்படும்?'

என்று கேட்டாள். அதன்பிறகு அந்த மாணவன் கூடத்தின் படிக்கட்டுகளைத் தாண்டிப்போய்த் தலை வணங்கி, அவளுக்கு நன்றி சொல்லித் தன்னை ஓர் அடிமையாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினான். முதுமகள் அவனைத்தன் மருமகனாகவே மதித்தாள். போதுமான அளவு மது பருகும் வரை அவர்கள் பிரியவில்லை.

மறுநாள் காலையில் லீயின் வீட்டிற்குத் தன்பொருள்களை எல்லாம் கொண்டுவந்து அதனைத் தன் வீடாக அமைத்துக்கொண்டான்.

அது முதல் அந்த இளைஞன் தன் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் இடமிருந்து தன்னை ஒதுக்கிக் கொண்டான். இன்பப் பெண்களின் மகிழ்ச்சியிலும் கேளிக்கைக்காரர்களின் தொடர்பிலும் தன் காலத்தையெல்லாம் கழித்தான். இவ்வாறு சிற்றின்பத்தில் ஈடுபட்டுத் தன் பொருளையும் உடைமைகளையும் முழுவதுமாகச் செலவழித்தான். கையில் ஒரு காசு கூட இல்லாத நிலை ஏற்பட்டதும் கிழவியும் மகளும் இருவரும் சதி செய்து அவனை வீட்டைவிட்டு வெளியேறச் செய்தனர். வறியவனாகவும் பிணியாளனாகவும் அவன் வீதியில் கிடப்பதைப் பார்த்த அவனுடைய முன்னைய வீட்டுக்குரியவர், அவன் இறக்கும் தறுவாயில் இருப்பதாக நினைத்துக்கொண்டு ஈமச்சடங்கு இல்லத்திற்கு எடுத்துச் சென்றார். அங்குள்ள மக்கள் அவனிடம் இரக்கம் கொண்டனர். அவன் சுயமாக நடந்து ஒரு வேலை தேடிக் கொள்ளும் காலம் வரை அவனுக்கு உணவு கொடுத்துப் பேணி வந்தனர். அங்கு அவன் ஈமச் சடங்குப் பாடல்களை நன்றாகப் பாடுவதற்குக் கற்றுக் கொண்டான். நகரிலேயே நனி சிறந்த புலம்புவோனாக அவன் வளர்ச்சி பெற்றான்.

ஒருநாள் வேறொரு ஈமச் சடங்கு இல்லத்தில் புலம்புவோர் போட்டியில் கலந்து கொண்டு பாடினான். அவன் குரலோசை தெளிவுடையதாக இருந்தது. அந்த கிறீச் சென்னும் ஓசை காட்டில் இருந்த மரங்களை யெல்லாம் உலுக்கியது. அந்த நிகழ்ச்சிக்குத் தன் தந்தையுடன் வந்திருந்த தன் செவிலியின் கணவன் அவ்வாறு பாடியவன் இன்னான் என்பதைக் கண்டு கொண்டான். மற்ற மாகாணங்களின் பிரபலங்களுடன் அவன் தந்தையும் நகரில் நடைபெறும் ஒரு மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு வந்திருந்தான். புலம்வுவோனின் அடையாளத்தைக் கேள்விப்பட்டு, அவன் தந்தை சீற்றம் உற்றார். அவனைக் கொண்டுவரச் சொல்லி மயங்கி விழும்வரை கசையடி கொடுக்கச் செய்தார். அவன் இறந்து போகட்டும் என்று சொல்லித் தந்தை போய் விட்டார். என்றாலும், சுய உணர்வு அவனுக்குத் திரும்பியது. சக புலம்புவோரால் அவன் காப்பாற்றப்பட்டான்.

ஒரு மாதத்திற்குமேல் கைகளையும் கால்களையும் அவனுக்கு உயர்த்த முடியவில்லை. அடிபட்டதால் உண்டான காயங்களிலிருந்து கடுமையான முடைநாற்றம் வீசியது. அருவருப்பாக இருந்த அந்த இளைஞனை அவனுடைய நண்பர்கள் ஓர் இரவில் தூக்கிக் கொண்டுபோய் சாலையின் ஓரத்தில் விட்டெறிந்தனர். வழிப்போக்கர்கள் அவனிடம் இரக்கம் காட்டினர். பலர் தம்மிடம் இருந்த உணவின் எச்சங்களை அவன் வயிறு நிரம்பும் வரை விட்டெறிந்தனர்.

மூன்று மாதங்கள் சென்றன. கோலூன்றி இளைஞன் நடக்கத் தொடங்கினான். அவன் உடுத்தியிருந்த மேல் அங்கியில் நூறு ஒட்டுக்கள்; காடையின் வால் அசைதல்போல அவன் தள்ளாடி நடந்தான்; அவன் கையில் உடைந்த பிச்சைப்பாத்திரம். அக்கம் பக்கத்துத் தெருக்களுக்குப் போய்ப் பிச்சை

ஏற்பதை ஒரு தொழிலாகவே மேற்கொண்டிருந்தான். இலையுதிர் பருவத்திலிருந்து குளிர்ப்பருவம் வரை இரவுகளை எல்லாம் சாணக் குன்றுகளின் மேலும், குகைகளிலும் செலவழித்தான். பகல் பொழுதுகளை எல்லாம் சந்தை கூடும் இடங்களில் கழித்தான்.

இந்தச் சீரழிந்த நிலையில், அவனைக் கைவிட்டிருந்த லீ பெண் அவனைக் காப்பாற்றும் பெருநோக்குடன் தன்னைத் திருத்திக் கொண்டவளாக முன் வந்தாள். ஒருநாள் பசி பொறுக்க முடியாமையினால் பனிப்புயல் என்றும் பாராமல் பிச்சை எடுக்கப் புறப்பட்டான். அந்தப் பெண்ணின் வீடு என்று அறியாமல் பிச்சை கேட்டு உரத்த குரலில் அலறினான். அவன் குரலைக் கொண்டு இன்னான் என்று அறிந்து கொண்ட அந்தப் பெண் வெளியே வந்து அவனது அவல நிலையினைக் கண்டு உள்ளம் உருகிவிட்டாள். தன் தாய் தடுப்பதையும் பொருட்படுத்தாமல், அவனை உள்ளே எடுத்து வந்தாள்; அவனுடன் வாழ்ந்தாள்; பரிவுடன் செவிலிப்பணி புரிந்தாள். மீண்டும் அவன் பழைய நிலைக்கு வந்தான். தன் சொந்தச் சேமிப்புகளிலிருந்து அவனுக்கென்று அலமாரி வாங்கி வந்தாள். அவன் படிப்பதற்குத் தேவையான புத்தகங்களையும் வாங்கி வந்தாள். அவனை வற்புறுத்தியும் ஊக்கப்படுத்தியும் பகலும் இரவும் உழைத்துப் படிக்கச் செய்தாள். அவனுடன் எப்பொழுதும் தோழமை பூண்டவளாக இருந்தாள். பல்லாண்டுகளாக ஆழ்ந்து படித்ததன் பயனாகத் தேர்வுகளில் தனிச்சிறப்பு நிலையில் வெற்றி பெற்றான். உயரிய அரசு அலுவலகப் பணிகள் அவனைத் தேடி வந்தன.

தந்தை மகன் இருவரும் சமாதானம் அடைந்தனர். மாணவனுக்கும் பரத்தை மங்கைக்கும் திருமணம் நடந்தது. அர்ப்பணித்துக் கொண்ட மனைவியாகவும், புதல்வர் நால்வர்க்குத் தாயாகவும் லீ விளங்கினாள்.

பிள்ளைகள் நால்வரும் வளர்ந்து உயர் அலுவலராகப் பணியேற்றனர். சீயென் - கூவோ (Chien -kuo) என்ற நகரின் பெருமாட்டி என்று அவள் மேம்படுத்தப்பட்டாள். அவள் கதையினைக் கேட்போர் அனைவரின் பாராட்டினையும் புகழுரையினையும் அவள் ஈட்டினாள்.

இவ்வாறு கதை சுப முடிவு பெறுகிறது.

இந்தக் கதை கி.பி.795 அளவில் எழுதப்பட்டது. உலகில் வழங்கும் நனி சிறந்த புராதன உரைநடைக் கதையின் ஒரு மாதிரி (Speciman)யாக இந்தக் கதை கருதப்படுகிறது. உண்மைக் காதலைக் கருப்பொருளாகக் கொண்டு புனையப் பெற்ற இந்தக் கதையில் உயரிய இலக்கியப் பண்புகள் பொருந்தியுள்ளன. சிக்கலான கதைப்பின்னலாக இருப்பினும் படிப்பவர்க்குச் சலிப்பு உண்டாக்காமல் புனையப்பட்டு உள்ளது. நெஞ்சினை நெகிழ்விக்கும் எடுத்துரை (Narrative) நாகரிகச் சமுதாயத்தின் நம்பகமான சொல்லோவியம். வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளினால் நாடகப்பாங்கும் இந்தக் கதையில் காணலாம். இந்தக் கதையினைப் படிக்கும் பொழுது கோவலன், சாதுவன் ஆகிய தமிழ்க் காப்பியக் கதைமாந்தர்களின் அனுபவங்கள் நம் நினைவுக்குக் கட்டாயம் வரத்தான் செய்யும்.

வீர, தீர, சாகசக் கதைகள் (Chivalric Tales)

பேராற்றலும் தீரமும் மிக்க வாள் வீரர்களும், வாள் வீராங்கனைகளும் முதன்மை மாந்தராக இடம்பெறும் கதைகளைச் சாகசக் கதைகள் என்று கூறினர்.[19] தங்கள் தலைவர்களிடம் இத்தகைய கதைமாந்தர்களுக்கு விசுவாசம்உண்டு. தாங்கள் ஆற்றும் செயல்களில் இவர்களின் துணிச்சல் வெளிப்படும். அருஞ்செயல்களுக்கு இவர்கள் பெயர் பெற்றவர்கள். இவர்களில் பலர் அபூர்வ சக்திகள் பெற்றவர்கள்; வான்வழி பறந்து செல்லுபவர்; மேகங்களில் ஏறி சவாரி செய்பவர்கள்;

மாந்திரிகப் படைக்கருவிகளைச் சுழற்றுபவர்கள்; வேண்டிய உருவம் எடுத்துக் கொள்ளுபவர்கள்; பராக்கிரமம், நேர்மை, படைக் கருவிகளைப் பிரயோகிப்பதில் நுண்ணறிவு முதலிய பண்புகளை இவர்களிடம் பார்க்கலாம். ஐரோப்பாவில் இடைக்காலத்தில் தோன்றிய மடந்தையரின் துயர்துடைக்கும் மாவீரர்களுக்கு முன்னோடிகளாகப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே சீன நாட்டில் தோன்றிய இவர்கள் கருதப்படுகின்றனர். சீன வாள் வீரர்கள் சாதாரண எளிய, பாமரக் குடும்பத்திலிருந்து தோன்றியவர்கள். ஐரோப்பிய மாவீரர்க்குரிய (Chivalrous Heroes) பெருங்குடிப் பிறப்பு இவர்களுக்கு அமையவில்லை.

ஏனைய கதைகளைப் போல சாகசக் கதைகள் நன்கு புனையப்படவில்லை. இவற்றில் கதைக்கரு நிறைவளிப்பதாக இல்லை. நடையும் இடக்கரடக்காக உள்ளது.

கூன்லூன் அடிமைக்கதை (Tale of The Kun-lun Slave)

இந்தக் கதையினைப் புனைந்தவர் பேய் ஹிசிங்கு (P'ei Hsing) என்பவர். இவர் கி.பி.9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். தென்கடல் வழியாக மலாய் நாட்டிலிருந்து சீனத்திற்குக் கொண்டுவரப்பட்ட அடிமைகளைப் பற்றிய கதை இது. இக்கதையின் தலைவன் குடும்பப் பணிமகன் ஆவன். இவன் தன் இளைய எசமானனை, அமைச்சர் ஒருவரின் அழகிய பணிப்பெண்ணுடன் இணைத்து வைத்தவன். அற்புத சத்தியும் ஆற்றலும் படைத்த இவன் தன் இளைய எசமானனைச் சுமந்து கொண்டு, அலுவலரின் காவல் மிக்க மதிலுக்குள் சென்று குறியிடத்திற்குப் பணிப்பெண்ணுடன் சென்றவன். பிறகு இருவரையும் தன் முதுகில் சுமந்து கொண்டு பத்துக்கும் மேற்பட்ட சுவர்களைத் தாண்டி எவ்வாறு வந்தானோ அவ்வாறே

திரும்பிச் சென்றவன். தன்னைச் சிறைப்பிடிக்க வந்த ஆயுதம் ஏந்திய இராணுவ வீரர்களால் முற்றுகை இடப்பட்ட பொழுது சுவர்களைத் தாண்டிப் பருந்து பறப்பதுபோல் பறந்து சென்றவன். அவன்மீது வீரர்கள் அம்புமாரி பொழியினும் வீணாயிற்று.[20]

இந்தக் கதையில் தாந்திரிக பௌத்தத்தின் தாக்கம் காணப்படுகிறது.

சுருள்தாடி மனிதன் (Man with a curly beard)

இவன் கதைக்கு நாயகன். இக்கதையில் பல்வேறு முதன்மை மாந்தர்களும் உள்ளனர். அவர்களில் தங்கு மரபின் (Tang Dynasty) வருங்காலப் பேரரசரும், அவருடைய அமைச்சர் லீ சிங் (Li Ching) என்பவரும் அடங்குவர். மேலும், உயரதிகாரி ஒருவரின் வீட்டிலிருந்து ஓடிப்போய் லீ சிங்கினை மணக்க இருந்த சிவப்புத் துடைப்பம் உடைய ஒரு பெண்ணும் குறிப்பிடத்தக்க கதைமாந்தர் ஆவள். கதைக்கரு பின்வருமாறு:

சூயி மரபின் (Sui dynasty) ஆட்சிக் கால இறுதியில், நாட்டின் வருங்கால ஆட்சியாளராக வரவேண்டும் என்ற பேராசையும் பேராற்றலும் கொண்ட மாந்தர் வாய்ப்புக்காகக் காத்துக் கிடந்தனர். அவர்களுள் ஒருவன்தான் சுருள்தாடி மனிதன். தன் ஆசையினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டுப் பெரும் பொருள் திரட்டியிருந்தான். ஆனால், லீ ஷீ -மின் (Li shih - min) என்பவனைக் கண்டவுடன், அவனே ஆண்டவனால் நியமிக்கப்பெற்ற உண்மையான பேரரசன் என்றும், அவனுக்குப் போட்டியாக ஒருவரும் இருக்க முடியாது என்றும் எண்ணினான். தான் சேர்த்த சொத்துக்களை எல்லாம் லீ சிங்கிடம் (Li Ching) தந்து, லீ ஷீ - மின், சாம்ராச்சியத்தினை வெல்லுவதற்கு அந்தப் பொருள் உதவ வேண்டும் என்று கூறிவிட்டுத் தான் கடல் கடந்து போய்த்

தீவு அரசினை (Island Kingdom) நிறுவச் சென்றான். இதுவே கதை.[21]

இந்தக்கதை வரலாற்று ஆர்வத்தினைத் தூண்டினும், கட்டுமானத்தில் நெகிழ்ச்சியுடையதாகவும், பாத்திரப் படைப்பில் மரபு வழிப்பட்டதாகவும் அமைந்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. என்றாலும், தங்கு காலத்துத் தீரக்கதைகள், பல நூறாண்டுகளுக்குப் பின் புனையப்பெற்ற முழு நீளப் புதினங்களின் முன்னோடிகளாகக் கருதப்படுகின்றன.

பேய் தங்குமிடத்துக்கு ஒரு பயணம்
(A Visit to the Fairy Lodge)

இக்கதையின் ஆசிரியர் சங்கு துசு (Chang Tsu) என்பவர். இவர் கி.பி.ஏழாம், எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவர். இவருடைய எழுத்துக்கள் சீன நாட்டினைக் கடந்து அயல் தேசத்தவரால் பெரிதும் போற்றப்படுகிறது. தங்கு பேரரசிற்குத் தூதுவர்களாக வந்த கொரிய மற்றும் சப்பான் நாட்டு இராச தந்திரிகள் பொன்னும் மணிகளும் கொடுத்து இவரது படைப்புக்களை வாங்கிச் சென்றனர் என்பது சுட்டத்தக்கது.

பேய் தங்குமிடத்துக்கு ஒரு பயணம் என்ற கதை ஒரு தனி இலக்கிய வகையாகச் சீனவியலாரால் கருதப்படுகிறது. பெருமித நடை, மக்கள் வழக்கு என்பன இரண்டும் கலந்து இந்தக் கதை எழுதப்பட்டுள்ளது. தன்மை (First Person) வாசகமாகக் கதை சொல்லப்பட்டிருக்கிறது. இக்கதையாசிரியர் பேய் தங்கும் இடத்திற்குப் பயணம் போகிறார். அங்கு அழகிய பெண்கள் இருவரைக் காண்கிறார். அவர்களுடன் குடிக்கிறார்; இசைக்கருவிகளை இயக்கிப் பாடி இன்புறுகிறார்; ஆடி மகிழ்கிறார். இவ்வாறு அனுபவித்தபின், ஒரு பெண்ணுடன் இரவு முழுதும்

தங்குகிறார். காதற் காட்சிகளை வருணிக்கும் பகுதி இடக்கரடக்காக உள்ளது. இக்கதையில் வசனமும் பாடலும் விரவி வந்துள்ளன.[22]

இந்தக் கதை பின்வந்த கதைகளில் தாக்கம் ஏற்படுத்தாவிட்டாலும், சப்பானிய எழுத்தாளர்களால் மதித்துப் பாராட்டப்பட்டது.

பௌத்தக் கதைகள்

விமலகீர்த்தியின் சூத்திரப் பொருளை விளக்கும் பொருட்டு எழுதப்பட்ட கதைதான் பௌத்தக் கதைகளில் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இக்கதை காவியப் பாங்குடையது. எனினும் பல துணுக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. அவை நூறாயிரம் சொற்களில் எழுதப்பட்டவை. இந்தத் துணுக்குகளில் மாரனைப் புத்தர்பிரான் வென்ற கதை பிரபலமானது.[23] மாரன் என்பது காமம் உள்ளிட்ட ஆசைகளைத் தூண்டும் தீய சக்தி. மாரனின் படையினையும்; காமம், வெகுளி, மயக்கம் என்னும் அவன் புதல்வியர் மூவரையும் புத்தர்பிரான் வாகை சூடிய சிறப்பினையும் இக்கதைத் துணுக்கு கூறுகிறது. இக்கதைக்கு மூலம் அசுவகோஷர் (கி.பி.100) பாடிய புத்தசரிதம் ஆகும். தமிழ்ப் பௌத்தக் காப்பியம் ஆகிய மணிமேகலையிலும் (கி.பி.500) புத்தரை, *'மாரனை வெல்லும் வீரன்' (11.61)* என்றும், *'மாரனை வென்று வீரனாகி' (30.11)* என்றும் தண்டமிழாசான் சாத்தனார் போற்றியுள்ளார். போதிசத்துவக் கதைகளின் தாக்கமும் சில கதைகளில் காணப்படுகின்றன.

சுங்கு அரச மரபின் காலம்

கி.பி.960-1279 என்ற காலப் பகுதியில் சீன நாட்டினை சுங்கு மரபினர் (Sung dynasty) ஆண்டனர். சோங்கு (Song) என்றும் இவர்களைச் சரித்திர ஆசிரியர் சிலர் குறித்துள்ளனர். இக்காலத்தில் கதை சொல்லுதல் (Story-telling) முறையான ஒரு தொழிலாகவே வளர்ச்சி

பெற்றது. இத்துறையின் வல்லுநர் ஒவ்வொருவரும் பல்வகைக் கதைகளில் ஏதாவது ஒன்றில் தேர்ச்சி பெற்றிருந்தனர். அவையாவன:[24]

1. நடப்பியல் சார்ந்த காதல் கதைகள்.
2. பெண் பேய்களைப் பற்றிய இயற்கை கடந்த கதைகள்
3. கொலைகள், வழக்குகள், வாள்போர்கள், கதை ஆயுதப்போர் போட்டிகள், பெரும்போர்கள் பற்றிய கதைகள்.
4. சமயச் சார்புடைய கதைகள். இவை பெரும்பாலும் பௌத்தச் சார்புடையவை.
5. வரலாற்றுச் சார்புடைய கதைகள்

இவற்றுள் பெரும்பான்மைக் கதைகளைக் கதை சொல்லுவோர் அறிமுகம் செய்யும் பொழுது, வெள்ளி எழுத்துப் பொறித்த குழலிசைகள் (Yin - tzu-erh) ஒலிக்கப்படும். முதல் மூன்று வகைக் கதைகளே மிகவும் பிரபலமானவை. இவ்வகைக் கதைகள் நம்மூர்க் கதாகாலச்சேபம் போன்றவை ஆகலாம்.

தென்சுங்கு ஆட்சியின் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில், ஹாங் சௌ (Hang chow) என்ற நகரில் கதை சொல்லும் கலைஞர்கள் எழுபத்தைவர் இருந்தனர். இவருள், வரலாற்றுப் புனைகதைகளைச் சொல்லுவதில் தேர்ச்சி பெற்றவர் இருபத்துமூவர்; பௌத்தக் கதைகளைச் சொல்லுவதில் வல்லவர் பதினெழுவர். எஞ்சியோர் எஞ்சியவகைக் கதைகளைச் சொல்லுவதில் தேர்ந்தவர்கள்.

இங்ஙனம் கதை சொல்லுவோர்கள் சங்கங்களை அமைத்துக் கொண்டு செயற்பட்டனர். இவற்றுள் ஒரு சங்கம் சொல்வன்மைச் சங்கம் (Society for Eloquency) எனப் பெயர் பெற்றிருந்தது. நகரத்தின் கேளிக்கை மையங்களில்

நாடக நடிகர்கள், பிற கலைஞர்கள் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடங்களுக்குப் பக்கத்திலேயே கதை சொல்லுவோர்க்கு மேடைகள் எழுப்பப்பட்டிருந்தன.

இதுகாறும் சுங் - யூவன் (Sung Yuan) காலத்தைச் சேர்ந்த நாற்பதுக்கு மேற்பட்ட கதைகள் கிடைத்துள்ளன. இவற்றில் பல நடுத்தர வகுப்பினரின் இலக்கிய எழுச்சிக்கு விடிவெள்ளியாக விளங்கியவை. சுங்கு (Sung) காலத்து மக்களின் சமுதாயச் செயற்பாடுகளைப் பிரதிபலிக்கும் கதைகளும் இவற்றுள் அடங்குவன. வரலாற்றுக் கதைகளிலும் இயற்கை கடந்த மாந்தரைப் பற்றிய கதைகளிலும் படைப்பாசிரியர்களின் கற்பனைத் திறனும் படைப்பாற்றலும் பளிச்சிடப் பார்க்கலாம்.

தங்கு (T'ang) காலத்து இலக்கியக் கதைகள் பெரும்பாலும் புலமை பெற்ற அலுவலர்களால் புனையப் பெற்றவை.[25] இதே காலத்துக்குரிய பௌத்தக் கதைகள் போதகர்களாகிய பௌத்தப் பிட்சுக்களின் படைப்புக்கள். சுங்கு (Sung) காலத்துக் கதைகள் பேச்சு நடையில் அமைந்தவை. இவை நடுத்தர வகுப்பினைச் சார்ந்த எழுத்தாளர்களின் படைப்பாக்க முயற்சிகளைப் பிரதிபலிப்பன. பல தலைமுறைகளாக வழங்கி வந்த வாய்மொழி மரபு (Oral tradition), கதை சொல்லும் உத்திக்கு ஒரு புதிய உயர்ச்சியைக் கொண்டு வந்தது.

முற்காலத்துக்குரிய கதைத் தொகுதிகள் பலவும் சுங்கு - யூவன் (Sung - Yuan) காலத்தில் வேர் கொண்டவை எனலாம். இவற்றுள் மிகவும் முதன்மை வாய்ந்தது, புகழ்பெற்ற கதைகளின் முதன்மை வடிவம் (Capital Version of Popular Stories) என்ற கதைத் தொகுதியாகும். இந்தத் தொகுப்பில் எட்டு முழுக் கதைகளும், ஒரு கதையின் துணுக்கும் கிடைத்துள்ளன. அவையாவன[26]:

1. ஜூர்ச்சென் (Jurchen) அரசரின் ஊதாரித்தனம் பற்றிய அரை வரலாற்றுக் கதை.

2. வைராக்கிய அமைச்சர் வாங்கு ஆன்-ஷீ (Wang An-shih) பற்றிய கதை. இவர் எடுத்த சீர்திருத்த நடவடிக்கைகள் மக்களிடையே நல்ல விளைவினை வழங்கவில்லை.

3. ஏழையான பள்ளி ஆசிரியர் ஒருவரின் மந்தமான வாழ்வினைச் சில பேய்கள் புரட்டிவிட்டமை பற்றிய கதை.

4. தான் சிறைப்பிடித்த அதிகாரியின் மகளைப் புரட்சித் தலைவன் ஒருவன் மணத்தலும், பிரிதலும், மீண்டும் மகிழ்ச்சியுடன் இணைதலும் பற்றிய துன்பியலும் இன்பியலும் மயங்கிய புனைகதை.

5. பௌத்தப்பிட்சுப் பற்றிய கதை - இந்தக் கதையில் பிட்சு ஒரு கவிஞருமாக இருக்கிறார். இவர் பரத்தைத் தொடர்புடையவராகப் பொய்க் குற்றச்சாட்டு கூறப்பட்டது. பின்னர் தன்மீது சுமத்தப்பட்ட அவதூறுகளினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டு, பௌத்த நிர்வாணப் பேற்றிற்கு உயர்ந்து செல்லுதலை இக்கதை கூறுகிறது.

6. தன் எசமானனின் மனைவி உயிருடன் இருந்த பொழுதும், இறந்த பின் பேயுருக் கொண்ட பொழுதும் மனதார விரும்பியதை மறுத்துவிட்ட நேர்மைமிக்க எழுத்தர் (Honest Clerk) ஒருவரின் கதை. இக்கதையின் தலைப்பு, நேர்மைமிக்க எழுத்தர் சங்கு (Chang, the Honest Clerk).

7. எண்ணற்ற அப்பாவி மக்களை ஈடுபடுத்தும் கொலைக்குற்ற வழக்குப் பற்றிய கதை. உண்மையான குற்றவாளிக்குக் காலம் கடந்தாவது தண்டனையும் பதினைந்து காசுமாலை அபராதமும் விதிக்கப்பட்ட நிகழ்வினை இக்கதை

மையம் கொண்டது. இக்கதைக்குப் பதினைந்து காசுமாலை (Fifteen Strings of Cash) என்பது பெயர்.

8. மரகதமணிக் கைவினைஞன் ஓர் இளவரசனின் பணிப்பெண்ணினைக் கடத்திச் சென்று, இருவருமே அழிந்ததைப் பற்றிய கதை. இந்தக் கதை 'மரகதப் போதிசத்துவர்' (The Jade Boddhisattva) என்ற பெயர் பெற்றது.

மேலே சுட்டப்பட்ட எட்டுக் கதைகளிலும் இறுதியில் உள்ள மூன்றும் மிகவும் சிறந்தவை என்று சீன இலக்கிய அறிஞர்கள் கருத்துரைக்கின்றனர். இவற்றுள், இடச்சுருக்கம் கருதி மரகதப் போதிசத்துவர் கதையினை மட்டும் இங்கே காண்போம்.

மரகதப் போதிசத்துவர்

இந்தக் கதை நீண்ட அறிமுகத்துடன் தொடங்குகிறது.[27] அறிமுகப் பகுதியில் வசந்த காலத்தினை வருணிக்கும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த அறிமுகப் பகுதி, ஹாங் சௌ (Hang Chow) நகரில் மேதகு சுங்கு இளவரசரின் குதிரை இவர்தலுக்கு (சவாரிக்கு) பாயிரமாக அமைகிறது. வழியில் இளவரசன் ஏழை கைவினைஞனின் இளைய மகளைப் பார்க்கிறான். பின்னர், தன் அரண்மனைக்குப் பணிப்பெண்ணாகக் கொண்டு செல்கிறான். அவள் பெயர் ஹிசியூ - ஹிசியூ (Hsiu - Hsiu) ஆகும். ஒரு நாள் இளவரசனின் அரண்மனை தீப்பிடித்துக் கொண்டது. ஹிசியூ - ஹிசியூ தன் வசம் இருந்த தங்கத்தையும் முத்துக்களையும் மற்றும் இளவரசனின் வீட்டுப் பொருள்களையும் எடுத்துக் கொண்டு இளம் மரகதமணிக் கைவினைஞனின் இடம் செல்கிறாள். அவன் பெயர் தூசூயி நிங்கு (Ts'ui Ning) ஆகும்.

"திருவாளர் தூசூயி (Ts'ui) அவர்களே! நான் வெளியே புறப்பட்டு மெதுவாக வரவேண்டியது

ஆயிற்று. அரண்மனையின் மற்ற பணிப்பெண்கள் அனைவரும் தம் போக்கில் ஒவ்வொரு திசைநோக்கி ஓடிப்போயினர். நான் மட்டுமே தனியளாய், விடுபட்டவளாய் ஆனேன். இப்பொழுது உன்னைத் தவிர வேறு வழி எனக்கு இல்லை. பாதுகாப்பான இடத்திற்கு என்னை இட்டுச் செல்லுவீர்"

என்று கூறினாள் ஹிசியூ - ஹிசியூ.

உடனடியாகத் தூசூயி நிங்கும் ஹிசி-ஹிசியும் அரண்மனை வாயிலைவிட்டு ஆற்றங்கரை ஓரமாகவே நடந்து சென்றனர். கடைசியாகச் சுண்ணாம்புப் பாலத்தை (The Lime Bridge) அடைந்தனர். "திருவாளர் தூசூயி அவர்களே! என் கால் புண்ணாயிற்று, மேலே நடப்பது இயலாது" என்றாள்.

"சில அடிகள் மட்டும் நட". தூசூயி சொன்னான். "அதோபார், வலப்புறம் என்வீடு உள்ளது. உள்ளே வந்து ஓய்வு கொள். எல்லாம் சரியாய்ப் போகும்" என்றான்.

பின்னர் இருவரும் வீட்டுக்குப் போயினர். அமர்ந்தனர். ஹிசியூ - ஹிசியூ, "எனக்குப் பசியாக உள்ளது. வெளியே சென்று உண்பதற்காக ஏதாவது வாங்கி வருதல் முடியுமா? இந்த அச்சம் ஒருபுறம் கிடக்கட்டும். ஒரு சில கிண்ணங்கள் மது எனக்கு எவ்வளவோ நலம் செய்யும்" என்று பேசினாள்.

உடனே, தூசூயி நிங்கு இரண்டு அல்லது மூன்று கிண்ணங்கள் மதுக் கொண்டுவந்தான். இந்த நிலையினைக் கவிஞர் பாடுகிறார்.

"மூன்று கிண்ண மூங்கில் இலைகள் நெஞ்சுக்குள்
நுழைந்தன.
இரண்டு பீச் (Peach) மலர்கள் கன்னத்தில்
தோன்றுகின்றன"

*"இளவேனில் (-வசந்தம்) மலர்களை ஊட்டி
வளர்ப்பவன்; மது காதலின் தூதுவன்"*

என்று சொன்னால் அது மிகையாகாது.

ஹிசியூ - ஹிசியூ,

"உங்களுக்கு நினைவிருக்கலாம். அரண்மனையின் மேல் தளத்தில் அமர்ந்தபடி அந்த இரவில் இளவரசர் நிலாவின் அழகினையும் ஒளியையும் ரசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது, உங்களை நான் மணப்பதற்கு உறுதி செய்திருந்தார். அப்பொழுது நீங்கள் பவ்வியமாகத் தலை தாழ்த்தி அவருக்கு நன்றி தெரிவித்தீர்கள். இந்த நிகழ்ச்சி உங்களுக்கு நினைவில் இருக்கிறதா? இல்லையா?"

என்று தூசூயியைக் கேட்டாள்.

மரியாதை உணர்வுடன் தன் கைகளைக் கூப்பியபடி உடன்பாட்டில்தான் தூசூயி விடையிறுக்க முடிந்தது.

ஹிசியூ - ஹிசியூ தன் பேச்சினைத் தொடர்ந்தாள்:

"அந்த நாளில் எல்லோரும் கைதட்டி உங்களைப் பாராட்டினர். 'என்ன அரிய இணையர்' என்று கூறினர். அதனை உங்களால் மறக்க முடியுமா?"

என்றாள். மீண்டும் தூசூயி உடன்பாட்டில்தான் விடையிறுக்க முடிந்தது.

"இதுபோல் காத்திருக்காமல், நாம் ஏன் கணவனும் மனைவியுமாக இந்த இரவில் ஆக முடியாது? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

என்றாள்.

"எனக்குத் துணிச்சல் இல்லை" என்றான் தூசூயி நிங்கு.

"நீங்க மறுப்பீரேல், உதவி நாடி உரக்கக் கூவுவேன். நீங்கள் பாதிக்கப்படுவீர்கள். எப்படியாவது போகட்டும். உங்கள் வீட்டிற்கு எப்படி என்னைக் கொண்டு வந்தீர்கள்? நாளைக்கு அரண்மனையில் அவற்றையெல்லாம் சொல்லப் போகிறேன்"

என்று ஹிசியூ - ஹிசியூ கூறினாள்.

"இளம் பெருமாட்டியே! தயவு செய்து அப்படி ஒன்றும் செய்துவிடாதே",

என்றான் தூசூயி நிங்கு.

"என் மனைவியாக நீ அமைவது பற்றி எனக்கு எல்லாம் சரிதான். ஆனால் ஒரு நிபந்தனை. இனிமேல் இங்கு நாம் இருவரும் தங்கக்கூடாது. அரண்மனையில் நடந்த தீப்பற்றிய நிகழ்ச்சியையும் அதனால் ஏற்பட்ட குழப்பத்தையும் நமக்குச் சாதகமாகக் கொண்டு இந்த இரவே நழுவி விடுதலே ஒரே வழியாக நமக்கு உள்ளது"

என்றான்.

"நான் உங்கள் மனைவியாக இருக்கப் போவதால், நீங்கள் விரும்பிய வண்ணமே செய்யுங்கள்"

என்றாள் ஹிசியூ - ஹிசியூ.

அதே இரவில் தங்கள் பணத்துடனும் உடைமைகளுடனும் இருவரும் நெடுந்தொலைவில் உள்ள ஒரு நகருக்குப் போய்ச் சேர்ந்தனர். அங்கு, தூசூயி நிங்கு மரகதமணிக் கைவினைத் தொழிலை மீண்டும் தொடங்கினான்.

ஓராண்டு சென்றது. இளவரசரின் அரண்மனைக் காவலர்களின் தலைவன் கடமை காரணமாக அந்த நகர்க்கு வர நேரிட்டது. அங்கு தூசூயி நிங்கும் ஹிசியூ-ஹிசியூவும் தங்கள் புதிய குடியிருப்பில் இருப்பதைக்

கண்டான். இந்தச் செய்தியை நகர்க்குத் திரும்பியதும் இளவரசரிடம் தெரிவித்தான். இளவரசர், இணையர் இருவரையும் சிறைப்படுத்தி நகர்க்குக் கொண்டுவரச் செய்தார். இளவரசர் டார்டார் (Tartar) மக்களுடன் போர் புரியும் பொழுது, 1. சிறுபச்சைவாள் (The Little Green Sword), 2. பெரும்பச்சை வாள் (The Big Green Sword) என்ற இரண்டு வாள்களினால் அம்மக்களை வெட்டி வீழ்த்தினார். இப்பொழுது அந்த வாள்கள் இரண்டும் உறையில் செருகப்பெற்று அரண்மனைக் கூடத்தின் சுவரில் தொங்கின. இணையர் இருவரும் அரண்மனைக்கு அழைத்து வரப்பட்டனர். இளவரசர் கூடத்திற்கு வந்தார். அவர்களைக் கண்டார். அவர் கண்கள் சினத் தீயைக் கக்கின. இடக்கரத்தில் சிறுபச்சை வாளையும், வலக்கரத்தில் பெரும்பச்சை வாளையும் எடுத்துக் கொண்டார். டார்ட்டாரைக் கொன்ற கண்களினால் முறைத்துப் பார்த்தார். பற்களை நறநற எனக் கடித்தார். தன் மனைவியின் பரிவினால் அவர்களைக் கொல்வதினின்றும் நீங்கினார். அதற்கு மாறாக, தூசூயி நிங்கைப் பணிமனை இல்லத்திற்கு அனுப்பினார். ஹிசியூ - ஹிசியூவை அரண்மனையின் பின்பக்கத்துத் தோட்டத்தில் வைத்திருந்தார். தூசூயி நிங்கு குற்றவாளி என்று கண்டு பிடிக்கப்பட்டுக் கசையடி கொடுக்கப்பெற்று, நாடு கடத்தப்பட்டார். நகர வாயிலைக் கடக்கும் வேளையில், திடீரென ஒரு தூக்கு நாற்காலி (Sedan Chair) அவனிடம் வந்தது. அதனைவிட்டு வெளியேறி வந்தவள் வேறு யாரும் இல்லை, அவன் மனைவி ஹிசியூ -ஹிசியூவே தான்! இருவரும் இணைந்து, நாடு கடத்தப்பட்ட இடத்திற்குச் சென்றனர். மீண்டும் தூசூயி நிங்கு அங்கு மரகதமணிக் கைவினைத் தொழிலினைத் தொடங்கினான்.

மரகதகக்கல்லில் உருவாக்கப்பட்ட போதுசத்துவ வடிவத்தினை (Jade Boddhisattva) பேரரசர்க்கு (Emperor)

இளவரசர் ஒருநாள் வழங்கினார். ஆயினும், அதிலிருந்து ஒருமணி வெளிவந்துவிட்டது. இதனை உருவாக்கியவன் தூசூயி நிங்கு என்பதைத் தெரிந்துகொண்ட பேரரசர், அவனை மன்னித்துவிட்டார். அந்த மணியை மீண்டும் போதிசத்துவச் சிலையில் பொருத்திக் கொடுக்கும்படி அரண்மனைக்கு அவன் வரவழைக்கப்பட்டான். எனவே, அவன் தலைநகர்க்கு மீண்டும் வந்தான், பழுது பார்த்துச் சிலையினை மாமன்னரிடம் கொடுத்தான். தன் பழைய கடை இருந்த இடத்திலிருந்து அருகாமையில் ஓரிடத்தில் மீண்டும் தன் பணிமனையினைத் தொடங்கினான். ஒருநாள் அந்தக் கடை வழியாகச் சென்ற அரண்மனைக் காவலர்தலைவன் தூசூயியைக் கண்டு உரையாடினான். அப்பொழுது அவனது கல்லாவுக்குப் (Counter) பின்பக்கம் ஒரு பெண்ணை மறைத்து வைத்திருப்பதைக் கண்டான். அவளைப் பார்த்தவுடன் திடுக்கிட்டான், பயந்து போனான். உடனே விரைந்து திரும்பிவந்து இளவரசரிடம் தான்கண்ட அனுபவத்தைச் சொல்லத் தொடங்கினான்.

> "தெளிந்த ஏரிக்கரை (Clear Lake River) ஓரமாக நடந்து கொண்டு போகும் பொழுது தூசூயிக்குரிய மரகதக்கல் கைவினைக் கடைக்குச் சென்றேன். கல்லாவுக்குப் பின்னால் ஒரு பெண் மறைந்திருப்பதைப் பார்த்தேன். அவள் வேறு யாரும் இல்லை. அரண்மனைப் பணிப்பெண் ஹிசியூ-ஹிசியூவே தான்!"

என்று கூறினான். உக்கிரமாக இளவரசர்,

> "அபத்தம்! அவள் செத்துப் போகும்படி நான் கசையடி கொடுத்து, பின்தோட்டத்தில் புதைத்துவிட்டேன். இவற்றையெல்லாம் நீ பார்த்துக் கொண்டிருந்தாய். அவள் எப்படி

மீண்டும் உயிருடன் இருக்க முடியும்? என்னை வேடிக்கை செய்கிறாயா?"

என்று பேசினார்.

காவலர் தலைவன் தன் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தான். ஆணையிட்டால் ஹிசியூ ஹிசியூவை இளவரசர் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்த முடியும் என்றான். 'போய் அவளைக் கொண்டுவா' என்று இளவரசர் ஆணை வழங்கினார். "அவள் உண்மையில் உயிருடன் இருந்தால் அவள் கழுத்தினை என் வாளினால் வெட்டிவிடுவேன். அவள் அங்கு இல்லை எனில், அவளுக்குப் பதிலாக இந்த வாளுக்கு நீ பலியாக வேண்டும்" என்று உரத்துக் கூறினான்.

தூசூயி வீட்டிற்கு உடனே விரைந்தான் தலைமைக் காவலன். தூக்கு நாற்காலியில் ஹிசியூ-ஹிசியூவை உட்கார வைத்துத் தன் முதுகில் தூக்கிக் கொண்டு அரண்மனைக்கு வந்தான். முன்பே காத்திருந்தார் இளவரசர். அவன் உள்ளே நுழைந்ததும், தலைமைக் காவலன் பவ்வியமாகத் தலை வணங்கி,

"ஹிசியூ ஹிசியூவை இங்குக் கொண்டு வந்துள்ளேன்"

என்று கூறினான். வெளியே வந்து, 'இளம் பெருமாட்டியே! இளவரசர் உள்ளே வரச் சொல்கிறார்' என்றான். ஆனால், தூக்கு நாற்காலியைத் திறந்ததும் ஒருவாளி தண்ணீர் அவன் மேல் பொழியத் தொடங்கியது போல் உணர்ந்தான். அவன் ஆச்சரியத்தால் வாய்பிளந்து நின்றான். உள்ளே எங்கும் அவள் காணப்படவில்லை.

முடிவில், தலைமைக் காவலர் உயிர் விட்டு வைக்கப்பட்டது. ஆனாலும், கடுமையாகக் கசையடி கொடுக்கப் பெற்றான். மறுபக்கம் தூசூயி நிங்கு தன் மனைவியின் ஆவியால் (Ghost) இழுத்துச்

செல்லப்பட்டான். அவளைத் தொடர்ந்து அவன் கீழுலகம் சென்றான்.

இவ்வாறு இக்கதை முடிகிறது.

இத்தகைய கதைகளில் அறிவு நுட்பமான கதைக்கரு (Plot), நடப்பியல் (realism), விரைந்து கதை நடத்தல், பற்பல விந்தைகள், காத்திருந்து பார்க்கும் நிலை (Suspense), உயிரோட்டமுள்ள கதைமாந்தர் படைப்பு, எளிய மக்கள் சொற்களில் அமைந்த உரையாடல்கள் என்பன சிறப்புக் கூறுகளாக அமைந்துள்ளன.[28] பிற்காலத்தில் புனையப்பெற்ற நெடும் புதினங்களின் அமைப்புக்கு இத்தகைய கதைகளின் பின்னல் தேவைப்பட்டது.

மேற்கோள் குறிப்புக்கள்

1. Liu Wu-Chi, *An Introduction to Chinese Literature*, p.141.
2. Ibid, pp.141-142.
3. Chi - Chen Wang, (Td.) *Traditional Chinese Tales*, Greenwood Press Publishers, New York, 1968, pp.1-2.
4. *An Introduction to Chinese Literture*, p.142.
5. *Literature and The Arts*, Complied by the China Handbook Editorial Committee, Beijing, 1983, p.27.
6. Ibid.
7. Ibid, p.28.
8. *An Introduction to Chinese Literature*, p.142.
9. Ibid, pp.142-143.
10. Ibid, p.143.
11. *Traditional Chinese Tales*, pp.3-11.
12. i. *An Introduction to Chinese Literature*, pp.143-144.
    ii. *Traditional Chinese Tales*, pp.12-16.
13. *An Introduction to Chinese Literature*, pp.144-145.
14. Ibid, pp.145-146.

15. Ibid, p.146.
16. Ibid.
17. Ibid.
18. i. *Traditional Chinese Tales*, pp.60-74.
    ii. *An Introduction to Chinese Literature*, pp.146-149.
19. *An Introduction To Chinese Literature*, pp.149-150.
20. i. *Traditional Chinese Tales*, pp.93-97.
    ii. *An Introduction to Chinese Literature*, p.150.
21. *An Introduction to Chinese Literature*, p.150.
22. Ibid, pp.150-151.
23. Ibid, pp.152-153.
24. Ibid, p.154.
25. Ibid.
26. Ibid, p.155.
27. Ibid, pp.155-157.
28. Ibid, p.158.

16. நாடக இலக்கியம்

(கி.பி.500 முதல்)

சீன மக்களின் நாடக அரங்கச் செயற்பாடுகள் அவர்களின் வரலாற்றின் தொடக்க காலத்துடன் தொடர்புடையது. கோயில் பலியிடு விழாக்கள், சபை கூடும் இடங்கள், அரண்மனைக் கேளிக்கை நிகழ்வுகள், குறளர், விதூடகர் ஆகியோர் புரியும் கோமாளிக் கூத்துக்கள் ஆகியவற்றுடன் புராதன காலம் முதலாகவே ஏதோ ஒரு வகையில் நாடகம் நடைபெற்று வந்துள்ளது. மாறுவேடம் தாங்கி நடிப்பவர்கள் அரண்மனைக் கேளிக்கைக்காகவே நியமிக்கப்பட்டிருந்தனர். இறந்துபோன ஓர் அமைச்சரின் அலுவலக உடையுடனும் தலையில் தொப்பியுடனும் விதூடகர் அந்த அமைச்சரைப்போலவே அவர் குரலில் பேசியும் அவர்தம் பழக்க வழக்கங்கள் மற்றும் அங்க அசைவுகள் ஆகியவற்றைச் செய்து காட்டியும், அவையோரை மகிழச் செய்தார். அப்பொழுது இறந்துபோன அமைச்சரே மீண்டும் உயிர்பெற்று வந்துவிட்டாரோ என்றும் அவையோர் சொல்லும் அளவுக்கு அவர் நடிப்பு இருந்தது.[1]

கி.மு.2ஆம் நூற்றாண்டின் இறுதியில் மத்திய ஆசிய நாடுகளிலிருந்து கழைக்கூத்தாடிகள் (Acrobatics) சீன நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டனர். குத்துச்சண்டை, மற்போர், வாள்போர் ஆகியவற்றிலும் இவர்கள் தேர்ச்சி பெற்றவர்கள். இவர்கள்தாம் முதன்முதலாகச் சீனத்திற்கு வரவழைக்கப்பட்டவர்கள். கரணம் போடுதல், குட்டிக்

கரணம் போடுதல், கயிற்றின்மேல் நடத்தல், கம்பத்தில் ஏறுதல், முக்காலி தூக்குதல், வாள் விழுங்குதல், நெருப்பினைக் கக்குதல் உள்ளிட்ட நூறு வகைப் பொழுது போக்கு வித்தைகளில் இவர்கள் வல்லவர்கள். சில வேளைகளில் இவர்கள் சிறுத்தை,கரடி, புலி, டிராகன் (Dragon), பேய்கள், அணங்குகள் வேடம் பூண்டு மிதக்கும் மேகங்கள் மற்றும் பனித்துளிகளின் நடுவே அமர்ந்து பாடுதலும் உண்டு. பிற்காலங்களில் இவர்களின் புகழ் பரவுதற்கு இவர்கள் நடித்த கதைகளின் அறிமுகம் ஓர் காரணம் ஆயிற்று.

பாடுதலும் ஆடுதலும் கதை வடிவுக்குள் அமைந்து, இருவகை நாடகங்களின் எழுச்சிக்குக் கவர்ச்சி தந்தன. இருவகை நாடகங்களில் ஒருவகை பெருமுகம் (Big Face) அல்லது பொய்முகம் (Flase Face) அல்லது முகமூடி (Mask) என்று கூறப்பட்டது. இன்னொரு வகை நாடகம் ஊஞ்சலாடும் மனைவி என்று பெயர் பெற்றது. இவையிரண்டும் கி.பி.6, 7ஆம் நூற்றாண்டுகளில் தோன்றின. வடசீ அரச மரபுக்குரிய (Northern Ch'i dynasty) லான் லிங்கு (Lan Ling) என்னும் இளவரசனின் கதையிலிருந்து பெருமுகம் (Big Face) என்னும் நாடக வகை வளர்ந்தது. போர் வீரனாகிய இந்த இளவரசன் தன் அழகிய பெண்மை முகத்தினைப் பயங்கர மூடியால் மறைத்துக் கொண்டு போர்க்களம் போன பொழுது பகைவர்கள் அஞ்சி நடுங்கினர்.[2] இந்தக் குறிப்பிடத்தக்க வீரச்செயல், இளவரசன் லான்லிங்கு (Prince Lan Ling) என்னும் போர் நாடகம் புனைவதற்கு வித்திட்டது. இந்த நாடகத்தில் நடிப்பவர் இளவரசரின் ஊதாநிற உடையினை உடுத்திக் கொண்டு நடனம் ஆடினார், பாடினார். நகர மதிலின் கீழிருந்து தன் படைகளுக்குத் தலைமையேற்றுப் படைவீரர்களுக்குக் கட்டளைகளை உரத்த குரலில் வழங்கியபடி, தன் படைக்கலன்களை எதிரிகளை நோக்கி வீசும் பொழுது அணிந்திருந்த அச்சுறுத்தும் முகமூடியை அவர் அணிந்திருந்தார்.

ஊஞ்சலாடும் மனைவி என்னும் இரண்டாம் வகை நாடகம் பற்றிச் சிறிது கூறுதல் வேண்டும். இந்த நாடகம் துயருறும் ஒரு பெண்ணைப் பற்றியது. குடித்துவிட்டுப் போதையில் தன்னைக் கண்டபடி அடித்துத் துன்புறுத்தும் தன் கணவனின் கொடுமையினைப் பக்கத்து வீட்டாரிடம் குறை பேசும் அவலப் பெண்ணின் கதைதான் இவ்வகை நாடகத்தில் இடம்பெறுவது. இந்தப் பாத்திரத்தினை ஏற்று நடிக்கும் நடிகர் அழுது கொண்டும் தேம்பிக் கொண்டும் தன் உடலை அங்குமிங்கும் ஊசலாடவிடுவார். ஊசலாடிக் கொண்டே தன் துயரத்தினைப் பாடல்களாக வெளிப்படுத்துவார். அவரோடு பார்வையாளரும் சேர்ந்து பாடுதல் வழக்கம்.[3]

இந்த நாடகத்தில் ஒருவர் குடிகாரக் கணவனாக நடிப்பார். மனைவியாக நடிப்பவரை வம்புக்கு இழுப்பார். முதலில் சண்டையிடுபவரும் அவரே. பிற்காலத்தில் எழுந்த இவ்வகை நாடகங்களில் கடன்தண்டல் செய்யவரும் பாத்திரம் ஏற்று நடிப்பவர் ஒரு அடகுக் கடையிலிருந்து வருவார். கணவன் மனைவி இருவருக்கும் இடையே நிகழும் சச்சரவில் இருவரையுமே எள்ளி நகையாடுவார். இந்தப் பாத்திரம் மூலக்கதையுடன் தொடர்பு சிறிதும் இல்லாமல் கீழ்த்தர நையாண்டியில் ஈடுபடுதல் பொருத்தம் அற்றதுதான். இத்தகைய நாடகங்களில் பாடலும் ஆடலும் நிரம்ப இடம்பெறும்; நடிப்பும், உரையாடலும் குறைவாகவே இருக்கும்.[4]

தங்கு மரபின் (Tang dynasty கி.பி.600-916) காலத்தில் இராணுவ ஆலோசகர் (The Military Counselor) எனப் பெயர் கொண்ட புதுவகை நாடகமும் எழுந்தது. இவ்வகை நாடகம் பேச்சு நடையில் எழுதப்பட்டது. இதில் கதைக்கரு (Plot), உரையாடல் (Dialogue) இடம்பெறும். இந்த இராணுவ ஆலோசகர் இலஞ்சம் வாங்கிய குற்றத்துக்காகத் தண்டனை பெற்றவர். அரசாங்கத்திற்குக் களஞ்சியத்திலிருந்து நூற்றுக் கணக்கான பட்டுக்

கட்டுக்களைத் தன் சொந்தப் பயன்பாட்டிற்காக எடுத்துக்கொண்ட குற்றத்திற்காகப் பேரரசரால் தண்டனை வழங்கப்பட்டார். அரசு விருந்து நிகழ்வுகளில் அவர் விநோதம் காட்டி மகிழ்விப்போர் (Entertainer) வேடத்தில் நடிக்க வேண்டும் என்பதுதான் அந்தத் தண்டனை. அவன் களவாடிய பட்டாடையினை உடுத்திக் கொண்டு வருவான். விருந்தினர்களின் முன்னிலையில் அரசாங்கக் கோமாளியால் அவன் பரிகசிக்கப்படுவான். பொதுமக்கள் யாவரும் காணும்படி அவன் அவமானப்படுத்தப்படுவான். இத்தகைய நாடகங்களிலும் ஆடலும் பாடலும் இடம்பெறுதல் உண்டு.

பிற்காலங்களில் எழுதப்பட்ட இவ்வகை நாடகங்களில் நகைத்துணுக்கும், கேலிக்கூத்தும், அரசியல் எள்ளலும் இடம்பெற்றன. இங்ஙனம் இராணுவ ஆலோசகர் (The Military Counselor) என்ற நாடக வகை அரங்கில் ஒரு கோமாளிக் கூத்தாக நடிக்கப்பட்டது.[5]

பேரரசர்கள் வழங்கும் விருந்து உபசரிப்புக்களில் பாடலும் ஆடலுமே முதன்மைப்பங்கு ஆற்றின. சங்கன் (Ch'ang-an) தலைநகரில் நடிகர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. இந்த நகரில் பியர் தோட்டம் (Pear Garden) அருகில் இவர்கள் பயிற்சி பெற்றனர். இவர்களுக்கு அரசாங்கம் மாத ஊதியம் வழங்கியது. வைகறைப் பொழுதில் பயிற்சி மையங்களில் பாடுவோரின் இசையொலியும் முழவின் ஓசையும் குழலோசையும் எதிரொலித்தன. எளிய குடும்பங்களைச் சேர்ந்த அழகும் திறமையும் பெற்ற பெண்களைத் தேர்ந்தெடுத்து அரண்மனைக்குள் ஓரிடத்தில் இருக்கச் செய்து, அவர்களுக்கு ஆடற்கலையிலும் மிடற்றிசையிலும் கருவியிசையிலும் பயிற்சி கொடுக்கப்பெற்றது. அவர்கள் தங்கிய மாளிகைக்கு இளவேனில் மாளிகை என்பது பெயர். இத்தகைய நிகழ்வுகள் தங்கு (T'ang) அரச மரபின் ஆட்சிக் காலத்தில் சிறப்புற்றிருந்தன.[6]

சுங்கு (Sung) காலத்துப் பேரரசர்களில் பலர் நாடகம், இசை, ஆடம்பரம் ஆகியவற்றின் வாயிலாக இன்பம் பெற்றனர். இவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டத்தின் பொழுதும் இளவேனிற் காலம், இலையுதிர் காலம் ஆகியவற்றிலும் நடிப்புக்கலை, இசைக்கலை வல்லுநர்க்குப் பெருவிருந்து கொடுக்கப்பட்டது. சுங்கு ஆட்சிக் காலத்தில் (Sung என்ற சொல்லினை Song என்றும் சிலர் குறித்துள்ளனர்), பாடகர், இசைவாணர், ஆடற்கலைஞர், கதைசொல்லுவோர், நடிகர், செப்பிடு வித்தைக்காரரர், கழைக்கூத்தாடிகள் ஆகியோரின் கலை வெளிப்பாட்டினைச் செல்வர்களே யன்றிச் சாமானியரும் கண்டு களித்தனர். தேர்ச்சி மிக்க கலைஞர்கள் பேரரசர்க்குப் பொழுது போக்கு நிகழ்ச்சிகளின் வாயிலாக இன்பம் எய்தச் செய்தனர்.[7]

ஐவர் முதல் எழுவர் வரை ஒரு குழுவினராக அமைந்து தொழில்முறைக் கலைஞர்கள் செயற்பட்டனர். அவர்கள் பெரும்பான்மையும் ஒரு குடும்பத்தினைச் சேர்ந்தவராகவே இருந்தனர். இதனால், தேவையில்லாத பழிப்பேச்சுக்கு இடமில்லாமல் போயிற்று. இவருள் பலரும் புனைபெயர் கொண்டிருந்தனர். நகர அரங்குகளிலன்றி ஊர்ப்புறங்களில் உள்ள மேடைகளிலும் இவர்கள் தம் நடிப்புத் திறனால் ஊதியம் பெற்றனர்.

புத்தகக்குழு (Book Guild) நாடக எழுத்துருவினைத் தணிக்கை செய்து இறுதி வடிவம் தந்தது. செல்வக் குடும்பத்தைச் சேர்ந்த பொழுது போக்குக் கலைஞர்கள் நாடகம், ஆடல், பாடல் ஆகிய துறைகளில் ஈடுபட்டிருந்தனர். பெண் பாடகர் தனிக்குழுவாகச் செயற்பட்டனர். சுங்கு நாடகம் முறையாக நாடக அரங்கிலும், குறிப்பிட்ட விழாவுக்காக அமைக்கப்பட்ட தற்காலிக அரங்கிலும் நடிக்கப்பட்டது. சீன முதலாண்டின் பதினைந்தாம் நாளில் விளக்குவிழா (Lantern Festival) நடைபெறும் பொழுது

நாடக அரங்கேற்றமும் இடம் பெற்றது. பார்வையாளர் பெருந்திரளாக வருதல் உண்டு.[8]

சுங்கு (Sung) காலத்தில் பொம்மலாட்டங்களும் நிழற்கூத்துகளும் நிரம்ப நிகழ்த்தப் பெற்றன. இவை பெரும்பான்மையும் விருந்து நிகழச்சிகளிலும் விழாக்களிலும் நடைபெற்றன. தங்கு (Tang) காலத்தில் நாட்டுப்புறத்தில் மட்டுமன்றி நகர்ப்புறத்திலும் பொம்மலாட்டங்கள் பிரசித்தம் பெற்றன. இத்தகைய நிகழ்வுகளில் பாடலும் ஆடலும் தாளமும் இணைந்து காணப்பட்டன.[9] பெரும்பாலான நாடகங்கள் மக்களின் வாழ்வியலை மையம் கொண்டவை. இவற்றில் முதியவர்கள்தாம் முதன்மைப் பாத்திரங்கள். பொம்மலாட்டம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு முதலாக நிகழ்த்தப்பட்டு வருகிறது என்று சீன இலக்கிய வரலாற்றாசிரியர் குறித்துள்ளார்.[10] சுங்கு காலத்தில் நிழற் கூத்து (Shadow Play) முதன் முதல் தோன்றியிருப்பினும் கி.பி.11ஆம் நூற்றாண்டிற்குப்பின்தான் பிரபலம் பெற்றது. திரைச் சீலையில் புத்தரின் உருவத்தினை வரைந்து காட்டி, அவருடைய போதனைகளை விளக்கும் வகையில் பிட்சுக்கள் மாலை நேரப் பேருரைகளைச் சிறப்பாக ஆற்றி வந்தனர். பொம்மலாட்டத்திலிருந்தும் நிழற்கூத்தில் இருந்தும்தான் சீன நாடகம் வளர்ச்சி பெற்றுள்ளது.[11]

சீன நாடகங்களைக் கதம்ப நாடகம் (Variety Play) என்றும், தென்னக நாடகம் (Southern Drama) என்றும் இருவகையாகப் பாகுபாடு செய்தல் மரபு. சுங்கு மரபு ஆட்சிக் காலத்தில் கதம்ப நாடகம் பிரபலமாக நடிக்கப்பட்டது என்பது வரலாறு. ஆனாலும் இத்தகைய நாடகங்கள் கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. (-இதே நிலைதான் பண்டைய தமிழ் நாடகங்களுக்கும் ஏற்பட்டுள்ளது). எனினும், 280 நாடகங்களின் தலைப்புகள் அறியப்பட்டுள்ளன. இந்தத் தலைப்புக்களை வைத்துக் கொண்டு சீன இலக்கிய

வரலாற்றாசிரியர்கள் சில ஊகங்களை வெளிப்படுத்தியுள்ளனர். இவை அளவினாற் சிறியவை. இவை அரச விருந்துபசரிப்பு விழாக்களில் நடிக்கப்பட்டவை. இத்தகைய விழாக்களில் பாடலும் ஆடலும் சால வித்தைகளும் இடம்பெற்றிருந்தன. நாடக இலக்கியத்தில் செய்யுளும் விரவி வந்துள்ளமை உய்த்துணரப்படுகிறது. நாடகத்தின் அடிப்பொருள் பெரும்பான்மையும் வரலாறு, இலக்கியம், நீதி, பௌராணிகம் பற்றிய நிகழ்வுகளைக் கொண்டிருந்தது. நடப்பியலுக்குப் பொருந்தி வரும் கதைகள் கூட நாடகமாக்கப்பட்டு நடிக்கப்பட்டன. ஒரு சில நாடகங்கள் எள்ளற் குறிப்புடையன. எனவேதான், இத்தகைய நாடகங்கள் கதம்ப நாடகங்கள் (Variety Plays) என்று அழைக்கப்பட்டன.[12]

சுங்கு காலத்துக் கதம்ப நாடகங்களில் மூன்று பகுதிகள் முதன்மை பெற்றிருந்தன. 1. ஒவ்வொரு நாடகத்திற்கும் பாயிரப்பகுதி அல்லது அறிமுகப்பகுதி (Prelude) உண்டு, 2. ஓரிரு காட்சிகளில் நாடகம் (Main Play) நிறைவுபெறும், 3. இறுதியாக, இசையுடன் கூடிய நிறைவுரை (Epilogue) இடம்பெறும். பாயிரப்பகுதி என்பது பொதுவாக நகைச்சுவை பொருந்தியதாக இருக்கும். நாடகம் என்ற இரண்டாம் பகுதி பெரும்பாலும் ஒரு பாட்டிலக்கியத்தினின்றும் எடுக்கப்பட்ட கிளைக் கதையினை மையப்படுத்தியிருக்கும். இதில் ஆடலும் பாடலும் பொருந்தி வரும். கதைக்கரு (Plot) பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை. பேச்சு உருவத்தில் அமைந்த உரையாடல் (Dialogue) இருந்ததா என்பதும் தெரியவில்லை.[13]

கதம்ப நாடகத்தின் பிற்கால வளர்ச்சியாக யூவன் - பென் (Yuan -pen) என்ற நாடக வகை எழுந்தது. யூவன் - பென் என்ற சீனச் சொல்லினை Professional Script என்று ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்துள்ளனர். தொழில் ரீதியான நாடகத்தை இச்சொல் குறிக்கிறது. கி.பி.12ஆம்

நூற்றாண்டில் இவ்வகை நாடகமே சீன நாட்டில் வளர்ச்சி பெற்றது. இத்தகைய 600 நாடகங்களின் பெயர்கள் கூட கால வெள்ளத்தினின்றும் தப்ப முடியவில்லையென்று லீயு வூ - சீ (Liu Wu-Chi) கருதுகின்றார்.[14]

கதம்ப நாடகங்களுடன் தென்னக நாடகங்கள் (nan-hsi-Southern Dramas) தோன்றியுள்ளன. பிற நாடகங்களைப் போலவே இவையும் பாமர எழுத்தாளர்களின் (Folk Writers) படைப்பாகும். கதம்ப நாடகம் அரசவையுடன் தொடர்பு கொண்டிருந்தமை போலவே, தென்னக நாடகம் பொதுமக்களிடையே பிரபலம் அடைந்திருந்தது. பழைய தமிழ் நாடகங்கள் 1. வேத்தியல், 2. பொதுவியல் என்று இருவகையாகப் பாகுபடுத்தப்பெற்றவை என்பது இங்கு எண்ணுதற்கு உரியது.

தென்னக நாடகத்தின் தோற்றத்திலிருந்துதான், முறையான சீன நாடகத்தின் வரலாறு நமக்குக் கிடைத்துள்ளது. சுங்கு (Sung - Song), யூவன் (Yuan) காலத்தில் எழுதப்பட்ட மூன்று முழுமையான நாடகங்களும் பல பாடல்களும் கால வெள்ளத்தில் அமிழ்ந்து போகாமல் காப்பாற்றப்பட்டுள்ளன.

உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தென்னக நாடகம் சுங்கு காலத்தின் மேடை நாடகங்கள் யாவற்றையும் விட வளர்ச்சி பெற்றிருந்தது என்பதை ஐயத்திற்கு இடமின்றிக் கூறலாம். இது முழுமையான நாடகம். இந்த நாடகத்தில் தொடர்ந்து வரும் கதை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவை பாடல்களாகவும் உரையாடலாகவும் அமைந்தன. இத்தகைய நாடகத்தின் நடிப்பினை உரையாடல் (Dialogue) உயர்த்துகிறது. கோவைபடத் தொடர்ந்து வரும் பாடல்கள் (Songs) கதைமாந்தர்களின் உணர்வுகளைத் தெளிந்த சொற்களில் வெளிப்படுத்திக் காட்டுகின்றன. பாடல்கள் பலவும்

மக்கள் பேசும் கொச்சை மொழியில் எழுதப்பட்டவை. எனவே, இலக்கிய எழுத்தாளர்களின் செயற்கையான, அழகுபடுத்தப்பட்ட செய்யுள்களை விட, இந்தப் பாடல்கள் கருத்துக்களை மிகவும் தெளிவாகவும் நேராகவும் வெளிப்படுத்திக் காட்ட வல்லனவாக இருந்தன.[15] நாடக ஆசிரியன் (உணர்வின்) உச்ச நிலையில் உள்ள பொழுது அவன் புனையும் பாடல்கள் இயல்புத் தன்மையிலும் (Naturalness), உணர்ச்சித் தொடர்ச்சியிலும் (Spontaneity of feeling), இன்னிசைகளிலும் (Melodies) உயர்ந்து விளங்குகின்றன. தெரு மூலைகளிலும், சந்தை கூடும் இடங்களிலும் பாடப்படும் பாமரர் சந்தங்களினின்றும் இந்த இன்னிசைகள் தோன்றி செழுமை பெற்றன.

சுங்கு, யூவன் காலத்துத் தென்னக நாடகங்களில் மூன்று பேணப்பட்டு வந்துள்ளன. அவற்றை நிரலாகக் காண்போம். இவை மூன்றும் தொழில் ரீதியான நாடக ஆசிரியர்களால் எழுதப்பட்டவை. மக்களிடையே பரவியிருந்த நாட்டுப்புறக் கதைகளை இவை மையப்படுத்தின. 1. எளிய கசாப்புக்காரனின் குடும்பக் கதை; 2. ஏழை மாணவனின் ஆசைகளும் போராட்டங்களும் முதுமுனைவர் (Doctor of Letters) பட்டப் பேற்றிற்கு உதவியமை, அவனுடைய நம்பிக்கையும் நாணயமும் அற்ற காதல்; 3. நடமாடும் நாடகக்குழுவில் இடம்பெற்ற மண்டரின் மகனின் (Mandarin's son) புனைவியல் காதல் வாழ்வு - என்பன இந்த நாடகங்களின் கருப்பொருளாக அமைந்தன. இந்த நாடகங்கள் பேச்சு மொழி நடையில் எழுதப்பட்டவை. இப்பொழுது புரிந்து கொள்ள இயலாத பல வட்டார வழக்குகளும் இவற்றில் இடம்பெற்றுள்ளன. பிற்காலத்தில் தோன்றிய இலக்கிய நாடகங்களில் காணப்படாத மண்வாசனையும் எளிமையும் தென்னக நாடகங்களின் தனிப்பண்புகளாக மதிப்பிடப் பெற்றுள்ளன.[16]

மேலே சுட்டப்பட்ட மூன்று நாடகங்களில் சங்கு ஹிசியே (Chang Hsieh) - முதுமுனைவர் (The Doctor of Letters) - என்ற நாடகம் மிக நீண்டதாகவும் மிகவும் முதன்மை வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது. இந்த நாடகத்தில் இரு பகுதிகள் உள்ளன: 1. நாடகத்தினைச் சுருக்கமாகக் கூறும் பாயிரப்பகுதி முதற் கூறாகும். இது செய்யுள் நடையில் உள்ளது. 2. நாடகத்தின் கதை இரண்டாம் பகுதி ஆகும். இது உரையாடல் உருவத்திலும் பாட்டு வடிவத்திலும் புனையப்பட்டுள்ளது. இந்த வகையில், தென்னக நாடகம் மேலே பார்த்த கதம்ப நாடகத்துடன் கொண்டுள்ள தொடர்பு தெளிவாகப் புலப்படுகிறது.[17] சங்கு ஹிசியே - முதுமுனைவர் என்ற நாடகமே இப்போது கிடைத்துள்ள சீன நாடகங்களில் தொன்மைமிக்கது. இதன் காலம் கி.பி.13ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று சீன இலக்கிய வரலாற்றாசிரியர் கருதுகின்றனர். சுங்கு-யூவன் அரச மரபுக் காலங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் எஞ்சிய இரு நாடகங்களாகிய இளஞ்சூரியன் - கசாப்புக்காரன் (Little Sun, the Butcher), ஓர் அதிகாரியின் மகன் (An Official's Son) என்பன எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பதும் அவர்தம் கருத்தாகும். சீன இலக்கிய வரலாற்றில் கி.பி.13ஆம் நூற்றாண்டு முதலாகவே நாடக இலக்கிய வகை வளர்ந்து வந்துள்ளது.[18]

சீன அரசு மரபுகளில் ஒன்றான சின் மரபு (Chin Dynasty, கி.பி.1115-1234) ஆட்சிக் காலத்திற்குப் பின் யூவன் மரபு (Yuan Dynasty, கி.பி.1260-1368) ஆட்சிக் காலத்தில்தான் நாடக இலக்கியம் புதிய பரிமாணங்களைப் பெற்றது. இத்தகைய நாடகங்கள் மக்களின் வாழ்வியலையும் அரசியல் நிலையினையும் சமய நம்பிக்கைகளையும் பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கு ஏற்ற மூலப்பொருளாகவும் உள்ளன.

யூவன் மரபு ஆட்சிபுரிந்த காலத்தில்தான் மங்கோலியர் படையெடுப்பு நிகழ்ந்தது. செங்கிஸ்கான் (Genghiz Khan), குப்லேகான் (Kublai Khan) ஆகியோரின் ஆட்சி தொடங்கியது. தொடக்கத்தில் நாடோடிகளாகவும் நாகரிகப் பண்பாடுகளை அறியாதவராகவும் இருந்த மங்கோலியர்களின் வருகையினால் சீனமக்களின் வாழ்வியலும், பண்பாடும் பெரிதும் பாதிப்புற்றன. சீன வரலாற்றில் மங்கோலியராட்சி புரிந்த காலம் இருண்ட காலம் என்று எண்ணப்படுகிறது. ஆயினும் அவர்கள் காலத்தில்தான் சீன நாடகம் வளர்ச்சி பெற்றது என்று இலக்கிய வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். பழைய கன்பூசியக் கல்விமுறையினை மங்கோலியர் ஒதுக்கிவிட்டனர். ஆனாலும், நாடக வளர்ச்சிக்கும் இசைமேம்பாட்டிற்கும் அவர்கள் ஊக்கமும் ஆக்கமும் வழங்கினர். பீகிங்கு (Peking), ஹாங்குசௌ (Hangchow) ஆகிய கேந்திர நகர்களில் விரிவான சீன நாடக அரங்குகள் இயங்குவதற்கு ஆதரவும் கிடைத்தது.[19]

தங்கு, சுங்கு அரச மரபுகளின் காலத்து நாடகங்களின் தொடர் வளர்ச்சியாகவே இக்காலத்து எழுதப்பட்ட நாடகங்கள் மதிப்பீடு செய்யப்பெற்றன. ஒவ்வொரு நாடகமும் ஒரு சிறு முழுக் கதையினை மையமாகக் கொண்டது. ஒவ்வொன்றும் நான்கு அங்கங்கள் (Four Acts) கொண்டது. சில வேளைகளில் இவை பாடல் தொடர்ச்சிகளாகவும் புனையப்பட்டிருந்தன. ஒவ்வொரு பாடலும் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுப் பாடப்பட்டது. இப்பாடல்கள் யாவும் பிரதான நடிகரால் மட்டுமே பாடப்பட்டவை. அவர் ஆணாகவோ, பெண்ணாகவோ இருக்கலாம். பாடலுடன், உரையாடல் (Dialogue), மேடை நடிப்பு, ஆடல் என்பதையும் விரவிவந்தன.[20] கருவியிசை பின்புலமாக இசைக்கப் பட்டது. வடசீனத்தில் வழங்கிய நாட்டார் வழக்காற்று நாடகங்களையே அடிப்படையாகக் கொண்டு

படைக்கப்பட்ட இப்புதிய நாடகங்கள் யாவும் நடிகர்கள், பாடகர்கள், நாடக ஆசிரியர்கள் முதலியோரின் கூட்டு முயற்சியாக விளங்கின. யூவன் சமுதாயத்தின் பலதரப்பட்ட மக்களின் வாழ்வியலைத் தொடுவதாக நாடகங்கள் புனையப்பட்டன. இந்த நாடகங்களில் கால ஒருமைப்பாடு (Unity of time), இட ஒருமைப்பாடு (Unity of place) பற்றிய வரன்முறை ஒன்றும் இல்லை. ஒவ்வொரு நாடகமும் பல மாதங்கள் நடிக்கப்பட்டது.[21]

யூவன் காலத்து எழுதப்பட்ட நாடகங்களில் 116 மட்டுமே கால ஓட்டத்தில் பிழைத்தவை. நாடக ஆசிரியர்களில் நனி சிறந்தவர்கள் என்று போற்றப்படுபவர்களில் 1. கூவன் ஹன்சிங்கு (Kuan Han - Ch'ing), 2. மா சீ - யூவன் (Ma Chih - yuan), 3. வாங்கு ஷீ-ஃபூ (Wang Shih - fu) என்ற மூவரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் கி.பி.13ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவர்கள்.[22] இவர்தம் தனி வாழ்வு பற்றி அறியப்படவில்லை. என்றாலும், அரசு அலுவலர் பணியில் சிறந்து நில்லாதவர்கள் என்றும் எழுத்துத் துறையில் மேம்பட்டு நின்றவர்கள் என்றும் அறியப்படுகிறது.

சீன நாடகங்களை ஆறு வகையாகப் பிரித்துள்ளனர். அவையாவன:[23] 1. காதலும் கள்ளத்தொடர்பும், 2. சமயமும் இயற்கை கடந்த சத்தியும், 3. வரலாறும் வரலாற்றுப் போலியும், 4. குடும்பமும் சமுதாயமும், 5. கொலையும் வழக்கும், 6. கொள்ளைக்காரத் தலைவன்.

1. கூவன் ஹன்சிங்கு

இவர் பெயரினைக் கூவன் ஹன்கிங்கு (Guan Han Quing) என்றும் ஒலிக்கின்றனர்.[24] ச - க ஒலி மாற்றம் பல மொழிகளில் காணப்படுகிறது. சிங்கு -> கிங்கு என்றாகியது போல, பெய்ஜிங்கு -> பெய்கிங் (Peking) என்று ஒலிக்கப்பட்டும் எழுதப்பட்டும் வருதல் இங்குச்

சுட்டுதற்கு உரியது. திராவிட மொழிகளிலும் க -> ச, ச -> க என்ற ஒலிமாற்றம் காணப்படுதல் வேறிடத்தும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

கூவன் ஹன்சிங்கு இன்பியல் நாடகம், வழக்கவை நாடகம், வரலாற்று நாடகம் என்பனவும் வரைந்துள்ளார். அவர் படைத்துள்ள கதைமாந்தர்கள் பலதரப்பட்டவர்; உயிர்ப்பும் உணர்வும் மிக்கவர்கள்; சமுதாய முரண்பாடுகளைப் பிரதிபலிப்பவர்கள். அவருடைய எழுத்துநடை புதியதாகவும் உயிர்ப்புடையதாகவும் திகழ்ந்தது.

சீன அரசு வெளியீட்டு நூலில் குறித்துள்ளபடி கூவன் ஹன் சிங்கு என்னும் நாடக ஆசிரியர் (கி.பி.1213 - 1297) 67 நாடகங்கள் எழுதியுள்ளார் என்றும், அவற்றுள் 18 மட்டுமே பிழைத்துள்ளன என்றும் அறிகிறோம். இவற்றிலும் கூட ஐந்து நாடகங்களே முழுமையாகக் கிடைத்துள்ளன. அவையாவன:[25]

1. நடுவேனிலில் பனி (Snow in Midsummer) அல்லது பணிப்பெண் தௌவுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் (The Wrongs of Maid Tou)
2. பசப்புக்காரியால் மீட்கப்பட்டது (Rescured by a Coquette)
3. மரகதக் கண்ணாடி நிலை (The Jade Mirror - stand)
4. மனைவியை வலிந்து பற்றுவோன் (The Wife-Snatcher)
5. கூவன் பிரபு விருந்துக்குப் போகிறார் (Lord Quan Goes to the Feast)

இவற்றுள் நடுவேனிலிற்பனி அல்லது பணிப்பெண் தௌவுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் என்பது ஒரு துன்பியல் நாடகம். எளிய குடும்பத்தில் இருந்து வரும்

பண்புடைய இளம் நங்கை ஒருத்தி தான் செய்யாத குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுதலை இந்நாடகம் கதைப்பொருளாகக் கொண்டுள்ளது. அவளுடைய தற்காப்பு ஆவி தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைத் துடைக்கும் வரை விண்ணையும் மண்ணையும் உலுக்கக் கூடிய அபூர்வசக்தி வய்ந்ததை நாடக ஆசிரியர் அற்புதமாகப் படைத்துக் காட்டியுள்ளார். இந்த நாடகம் சீன அவலநாடகங்களில் ஒப்பற்ற படைப்பாக மதிப்பிடப்படுகிறது. இந்த நாடகத்தின் கதைப் பின்னலைச் சற்று விரிவாகக் காண்போம்.

பணிப்பெண் தௌவுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் (The Wrongs of Maid Tou) என்பது மிகவும் புகழ்பெற்ற குடும்ப நாடகமாக மதிக்கப்படுகிறது. இக்கதையின் அமைப்பினைக் காண்போம்.

ஒரு புலமையாளர், ஏழு வயதுடைய தன் ஒரே மகள் தௌவைக் கடும்வட்டி வாங்குபவன் ஆகியதமே திசை (Dame Ts'ai) என்பவனுக்குப் பணிப்பெண்ணாக விற்றுவிடுகிறார். இதற்கு விலைப்பணமாகச் சில வெள்ளிக் காசுகளே பெறுகிறார். தலைநகரில் நடைபெறும் அரசுத் தேர்வினை எழுதுவதற்குப் பயணச் செலவாக இந்தப் பணம் பயன்படுகிறது.

- இவ்வாறு கதை தொடங்குகிறது.[26] 13 ஆண்டுகளுக்குப் பின் பணிப்பெண் தௌ (Maid Tou) ஐயத்துக்கு இடமின்றி அனுபவமும் இளமையும் வாய்ந்த நங்கையாக விளங்குகிறாள். இந்த நீண்ட இடைவெளியில் தமே திசையின் (Dame Ts'ai) மகனுக்கு அவள் மணம் செய்து வைக்கப்படுகிறாள். கணவனாக வந்தவன் இறந்து போகிறான்; இறப்புக்குத் துயர் கூர்கிறாள் தௌ; இருபது வயதளவில் ஒரு இளம் கைம்பெண்ணாக இருக்கிறாள். சீன மகளிரின் மாதிரி எடுத்துக்காட்டுப் பெண்ணைப் போலவே, தன் துயரினைத் தாங்கிக்

கொண்டு, மாமியாரின் வீட்டில் கடமைகளை ஒழுங்காகப் புரிந்து வருகிறாள். அமைதியைக் குலைக்கும் வகையில் முதுசங்கும் (Elder Chang), அவன் மகன் கழுதைச் சங்கும் (Chang the Ass) பணிப்பெண் தௌவை அடையும் பொருட்டுக் குறுக்கிடுகின்றனர். எப்பொழுதோ இவ்விருவரும், பொல்லாத மருத்துவன் ஒருவனால் குரல்வளை நெரிக்கப்பட்ட பொழுது தமே திசையினை (Dame Ts'ai) விடுவித்துக் காப்பாற்றியவர்கள். அதற்குப் பரிசாக இவ்வளவு நாள் கழித்து இந்தக் கைம்பெண்ணை மணக்கக் கோருகின்றனர். அவளுடைய மறுமணத்துக்கு இசைவளிப்பதுபோல் தமே திசை காணப்படினும், இறந்த தன் கணவனின் நினைவில் ஆழ்ந்திருந்த அவள் மறுக்கிறாள். தன் ஆசையினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டுக் கழுதைச்சங்கு (Chang, the Ass) என்பவன் தமே திசையினை ஒழித்துக்கட்டிவிட்டுத் தனியளாக இருக்கும் கைம்பெண்ணினைக் கவர்ந்து கொள்ளலாம் என்று சதித் திட்டமிடுகிறான். ஒருநாள் தமே திசையின் புலால் சாறு நிரப்பிய கிண்ணத்தில், முன்பே அந்தப் பொல்லா மருத்துவனிடம் வாங்கி வைத்திருந்த நஞ்சினைக் கழுதைச்சங்கு கலந்து விடுகிறான். தவறுதலாக முது சங்கு (Elder Chang) அதனைப் பருகிவிட்டான். அதனால் தமே திசைக்கு மாறாக முது சங்கு இறந்து போனான்.

தன் தந்தையின் சாவுக்குப் பணிப்பெண் தௌதான் காரணம் என்று கழுதைச்சங்கு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தான். ஊழலுக்கும் அறியாமைக்கும் பேர்போன நடுவர் வழக்கினை விசாரித்தார். பணிப்பெண் கூண்டில் ஏற்றப்பட்டுக் குற்றத்தினை ஒத்துக் கொள்ளும்படி கசையடி கொடுக்கப்பட்டாள். மாமன்னர் தமே திசைக்கும் கசையடி கொடுக்கப் போவதாக நடுவர் அச்சுறுத்தினார். தன் மாமிக்குத் தீங்கு வரக்கூடாது என்ற கடமையுணர்வினால் செய்யாத பிழைக்கு மரண தண்டனை விதிக்கப்பெற்றாள். தூக்கிடப்போகும்

நடுவேனிற் பொழுதில் தான் நிரபராதி என்பதை நிரூபிக்கும் பொருட்டு விண்ணகத்தை நோக்கி மூன்று அசாதாரண வேண்டுகோள்களை விண்ணப்பம் செய்தனள். அவையாவன:[27]

1. தன்னைத் தூக்கிலிடும் பொழுது நடுவேனிலே ஆயினும் எங்கும் பனிபொழிதல் வேண்டும்.
2. தூக்கிடும் தளத்தில் தொங்கவிடப்பட்டுள்ள வெள்ளைப் பட்டுக் கயிற்றினை நனைக்கும்படி குருதி கொப்புளிக்கப்படுதல் வேண்டும்.
3. தனக்கு அநீதி இழைத்த அந்தத் தேசத்தில் மூன்றாண்டுகள் கடும் பஞ்சம் ஏற்படுதல் வேண்டும்.

அவள் இறப்பிற்குப் பின் வியக்கத்தக்க வகையில் இவை மூன்றும் நிறைவேறின. கொடுமையான அநீதியால் உலுக்கப்பட்ட விண்ணகம் (Heaven God) மக்களுக்கு அபாய அறிவிப்பாகப் பேரிடரை உண்டாக்கியது. கொடும் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிடும் அதிகாரியாகப் பணிப்பெண் தௌவின் தந்தை வருகிறார். இப்பொழுது அவர் அரசின் உயர்பதவியில் உள்ளவர். இரவில், தன் மகளின் வழக்கு விசாரணை ஆவணங்களைப் பரிசீலித்துக் கொண்டிருக்கும் வேளையில் (பணிப்பெண்) தௌவின் ஆவி, அசைந்தாடிக் கொண்டிருந்த மெழுகு விளக்கின் ஒளியில் தந்தையின் முன் தோன்றிக் குறைதீர்வு (Redress) கேட்டது. முடிவில், வழக்கு மீண்டும் ஆராயப்பட்டு, தௌ நிரபராதி என்றும் குற்றம் அற்றவள் என்றும் இறப்புக்குப் பின் தீர்ப்பு வழங்கப்பட்டது.[28] கற்புக்கரசி கண்ணகிக்கு இழைக்கப்பட்ட அநீதியின் விளைவாக மதுரை மாநகரில் அனல்மழை பொழிந்து தீயோரை அழித்ததும், கொடிய பஞ்சம் ஏற்பட்டதும் இங்கு இயைபு கருதி எண்ணிப் பார்த்தற்கு உரியது.

கொலையும் வழக்கும் குறித்த உள்ளூர்க் கதையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அவல நாடகம் யூவன் காலத்து மக்களிடையே பரவலாக நடிக்கப்பட்டது. பணிப்பெண் தௌவின் பாத்திரம் அவலம், இரக்கம் ஆகிய தளத்தின்மேல் துயரத்திற்கு நடுவே பெருமிதத்துடன் சுடர்விடக் காண்கிறோம். அவளுடைய அப்பாவித்தனமும், துயரங்களும், வீர உணர்வும், பெருந்தகவும் விண்ணகத்தையும் மண்ணகத்தையும் மட்டும் அசையச் செய்யவில்லை; மனித நெஞ்சங்களையும் அசைத்துவிட்டது. அவளுடைய கற்புடைமை, கைம்மை, தந்தை நிலையினர்க்குக் காட்டிய பேரன்பு என்ற தகவுகளின்மேல் அவள் ஒழுக்கத்தின் வலிமை பதிந்துள்ளது. சீன மக்களின் மரபு சார்ந்த அளவையின்படி, பெண்மையின் அனைத்து நற்கூறுகளின் கருவூலமாகத் தௌ திகழ்கிறாள்.

அஞ்சாமலும், வளைந்து கொடுக்காமலும் இறுதிவரை உறுதியாக இருந்து தன்னைக் காத்து, தன்னைக் கொண்டானின் தந்தையினைக் காத்து, குடியின் பெருமையினைக் காத்து ஒப்பற்ற இலட்சியச் சீன மங்கையாகத் தௌ படைக்கப்பட்டிருக்கிறாள்.[29]

தௌவின் கதையில் காவிய நீதியைக் (Poetic Justice) சீன இலக்கியத் திறனாய்வாளர் காண்கின்றனர். அவள் வாழ்வு நன்மைக்கும் தீமைக்கும் ஏற்பட்ட போராட்டம். தீமை தலைதூக்கும் பொழுது அவலம் முடிவாகிறது. அவலம் முடிவாக அமையினும் நீதியே வெற்றி பெறுகிறது.[30] ‘அறம் வெல்லும் பாவம் தோற்கும்’ என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடியுள்ள காவிய நீதியை இங்கு இயைபு கருதி எண்ணி மகிழலாம்.

கூவன் ஹன் சிங் எழுதிய நாடகங்களில் பட்டுப் பூச்சியின் கனவு (Hu - tieh - meng - Butterfly Dream) என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நாடகத்தின் பிரதான

பாத்திரமாகச் சூவங்கு சூ (Chuang - tzu) என்பவரும் அவர்தம் நம்பிக்கையற்ற மனைவியும் படைக்கப்பட்டுள்ளனர்.[31] இலக்கிய வரலாற்றுக்கு இவர் வழங்கியுள்ள முனைப்பான கொடைகளைக் கருத்தில் கொண்டு, 1958இல் உலகெங்கிலும் விழா எடுத்துப் பாராட்டப்பட்ட உலகப் பண்பாட்டுப் பிரமராட்சதர்களில் ஒருவராக கூவன் ஹன் கிங்கு ஒளி வீசுகிறார்.[32]

2. மா சீ யூவன்
(Ma Chih - yuan or Ma Zhiyuan, கி.பி.1250-1324)

புகழ்பெற்ற இந்த நாடக ஆசிரியர் பீகிங்கில் (Peking) வாழ்ந்தவர். அரசுப் பணியிலும் சில காலம் இருந்தவர்.[33] இவர் எழுதிய நாடகங்கள் பதின்மூன்று ஆகும். இவற்றுள் ஏழு மட்டுமே கிடைத்துள்ளன. இவர் புனைந்துள்ள, மஞ்சள் தினையின் கனவு (The Dream of the Yellow Millet) சிறந்த நாடகமாகக் கருதப்படுகிறது. லூ துங்பின் (Lu Tung-pin) என்பவர் தாவு நெறிக்கு மதமாற்றம் செய்யப்பட்ட கதையினை இந்நாடகம் மையமாகக் கொண்டது. தாவு மார்க்கத்தின் தலைமைப் போதகர் சூங்-லீ சூவன் (Chung-li Chuan) என்பவர்தான் இந்த மதமாற்றத்தைச் செய்தவர்.

லூ தொடக்கத்தில் கன்பூசிய மார்க்கத்து அறிஞராக இருந்தவர். அரசுத்தேர்வு எழுதும் பொருட்டு அவர் தலைநகர் நோக்கிப் புறப்பட்டுப் போகிறார். வழியில் ஹன்தன் (Han-tan) சாலை ஓரமாகவுள்ள தமே வங்கின் (Dame Wang) விடுதியில் உணவு கொள்ள வருகிறார். அங்குச் சூங்-லீசூவன் அவரை வரவேற்று உபசரிக்கிறார்; தாவு மார்க்கத்தினைச் சாரும்படி இணங்க வைக்கிறார். அவர் உரைக்குச் செவி சாய்க்காத லூ, தினை உணவுக்காகக் காத்திருந்தவர் உறங்குகிறார். தான் உறங்கும்போது ஒரு கனவு காண்கிறார். அந்தக் கனவில் தான் படைத்தளபதியாகப் பதவி உயர்வு பெறுவதாகவும்,

பொருளிலும் புகழிலும் புரளுவதாகவும் மகிழ்ச்சிமிக்க குடும்ப வாழ்க்கையில் திளைப்பவராகவும் தன்னைக் காண்கிறார். ஆனாலும், இடர்கள் பல அவரைத் தொடர்ந்தன. கலகக்காரர் ஆகிய ஒரு தளபதியிடம் கையூட்டுப் பெற்றதாகக் குற்றம் சாற்றப்படுகிறார்; நம்பிக்கையில்லாததன் மனைவியால் மணவிலக்குப் பெறுகிறார்; இளம்புதல்வர்கள் இருவருடன் நாடு கடத்தப்படுகிறார். அவர்கள் பயணிக்கும் பொழுது காடுகளிலும் கடும் காற்றிலும் அகப்பட்டு இறப்பின் எல்லைக்குப் போய்விடுகின்றனர். அவர்களைத் துரத்தி வந்த பல்சாலி ஒருவன், புதல்வர் இருவரையும் மலைப்பிளவில் வீசி எறிகிறான்; கத்தியை நீட்டி லூவைக் கொல்லுவதாக அச்சுறுத்துகிறான். விழித்துப் பார்த்ததும் லூ துங்பின் (Lu tung-pin) எல்லாம் கனவுதான் என்பதைக் கண்டுகொண்டான்! இதற்கு இடையே விடுதியின் மூலையில் தமே வங் (Dame Wang) தினை உணவினை நன்கு வேகவைத்தற்காக மற்றுமொரு வைக்கோற் தட்டினை நெருப்பில் இடுவதற்காக இருந்தார். தன் கனவில் வாழ்க்கையில் படமுடியாத துயரங்களை எல்லாம் அனுபவித்த லூ துங்பின் மெய்ஞ்ஞானம் பெற்றுத் தாவு ஞானிகளின் கூட்டத்தில் சேர்கிறார்.[34]

இந்தக் கதை தாவு நெறியின் சிறப்பினைக் கூறுவதாகப் புனையப்பட்டது. நாடக ஆசிரியர் மா சீ யூவன் (Ma Chih - yuan) தோல்வி மனப்பான்மையும் சோர்வுக் கருத்தும் உடையவர் (Pessimist). செல்வம், பதவி,குடும்பபந்தம் என்ற மாயையிலிருந்து விடுபட்டவர். வாழ்வின் மாயத் தோற்றத்தாலும், நிலையாமை உணர்வாலும் பெரும் ஏமாற்றம் அடைந்தவர். தாவு மார்க்கத்தின்படி வாழ்க்கையின் முதன்மை எதிரிகள் ஆகிய அளவு கடந்த மதுபானம், பாலுறவு,செல்வம், சினம் என்பனவற்றை வெறுத்தனர். புகழையும் பாராட்டினையும் ஒதுக்கினார். எனவே, அவர் புனைந்துள்ள நாடகங்களில்

தாவு மார்க்கத்திற்குரிய கருத்துக்கள் கதைமாந்தர்களின் வழியே பரப்பப்பட்டுள்ளன என்பது தெளிவு.[35]

இவருடைய ஹன் அரண்மனையில் இலையுதிர் காலம் (Autumn in the Han Palace) என்ற நாடகம் சிறந்த படைப்பு.[36] ஹன் பேரரசர் ஆகிய யூவன்-தி (Yuan-ti)யின் பேரன்புக்குரிய வைப்பாட்டி வாங்கு ஜியாங்கு (Wang Jiang) என்பவள். இவள் அரண்மனையில் பணிப்பெண்ணாக இருந்தவள். இவள் வட மாவட்டத்தின் இளவரசன் ஹி சியுங்-நூ (Hsiung-nu) என்பவனுடன் சேர்ந்து வாழ்வதற்குப் பிரிந்து போய்விட்டதால், பேரரசர் யூவன்-திக்கு ஏற்பட்ட மன உளைச்சலை விவரிப்பதாக இந்த நாடகம் படைக்கப்பட்டது.[37]

3. வாங்கு ஷீஃபூ

இவர் எழுதிய நாடகங்கள் பதினான்கு ஆகும். இவற்றுள் மூன்று நாடகங்கள் மட்டுமே முழு வடிவில் கிடைத்துள்ளன.[38] யூவன் காலத்துப் புனைவியல் நாடகங்களில் நனிசிறந்ததாக இவர் எழுதியுள்ள மேற்குக் கூடம் (The Western Chamber) விளங்குகிறது. இது வழக்கத்திற்கு மாறாக மிகவும் நீண்ட நாடகம் ஆகும். இதனுள் ஐந்து அங்கங்களும் ஒவ்வொரு அங்கத்திலும் நான்கு காட்சிகளும் உள்ளன. மரபுவழிக் குறிப்பின்படி இந்நாடகத்தின் முதல் நான்கு காட்சிகள் மட்டுமே வாங்கு ஷீஃபூ எழுதினார் என்றும், கடைசிக் காட்சியைக் கூவன் ஹன் கிங்கு எழுதினார் என்றும் அறியப்படுகிறது. இக்கருத்துப் பொதுவாக ஒத்துக் கொள்ளப்படவில்லை. நாடகம் முழுதுமே வாங்கு ஷீஃபூவே எழுதினார் என்பதுதான் பலரின் கருத்தாகும்.[39]

வாங்கு ஷீஃபூ பீகிங்கு நகரக் குடிமகன். இவர்தம் மேற்குக் கூடம் நாடகத்தின் கதைக்குரிய மூலம் தங்கு காலத்துக் கவிஞர் யூவன் சென் (Yuan Chen) என்பார் எழுதிய புனைவியல் இலக்கியக் கதையினின்றும்

எடுக்கப்பட்டது. இக்கதை காலந்தோறும் மாற்றங்கள் பெற்று வாங்கு ஷீஃபூவின் கைவண்ணத்தினால் ஒப்பற்ற படைப்பாக வளர்ச்சி பெற்றது.

இந்த நாடகம் கட்டமைப்பு, பாத்திரப் படைப்பு, கவிதை என்ற கூறுகளின் சிறப்பினால் தலைசிறந்த படைப்பாகச் (Masterpiece) சீனவியல் அறிஞர்களால் மதிப்பிடப்பட்டுள்ளது. கதையின் புனைவியற் சூழல் காதலர்களின் பெருமூச்சுக்களாலும் கண்ணீர்த் துளிகளாலும், சித்தார் (-கித்தார்) இசைக்கருவியின் ஒலிக்குறிப்புக்களாலும், புகையின் நறுமணத்தாலும், நிலா ஒளியுடன் கூடிய தென்றலாலும், மலர் நிழல்களாலும் அனைத்துக்கும் மேலாகக் காதல் வெற்றி பெறவேண்டும் என்ற ஆர்வத்தாலும் ஆனந்த பரவசத்தாலும் நிரப்பப் பெற்றுள்ளது.[40]

இந்நாடகத்தின் கதைத்தலைவன் ஒரு மாணவன். அவன் பெயர் சங் (Chang. Zhang என்றும் சிலர் எழுதியுள்ளனர்). கதைத்தலைவி யிங்யிங் (Ying Ying). படைத்தளபதி ஒருவன் அவளைத் தன் மனைவியாக்கக் கூக்குரல் எழுப்புகிறான். அவன் தொல்லை தாங்காமல் யிங்யிங் தன் உயிரைத் துறப்பதாக அச்சுறுத்துகிறாள். இந்நிலையில் மாணவன் சங் கரவோசை எழுப்பியபடி அங்கு வருகிறான். தளபதியையும் உடன் வந்த படைவீரர்களையும் விரட்டியடிக்கத் தயாராகிறான். இந்த நிகழ்ச்சி ஒரு பௌத்தப்பள்ளியின் மன்றத்தில் நடைபெறுகிறது. இறந்துபோன தன் தந்தையின் ஆவி அமைதி அடையும் பொருட்டு நறும்புகை யூட்ட யிங்யிங் வந்திருக்கிறாள். அவள் நிலையைக் கண்ட பௌத்தப் பிட்சுக்களும் இளம் துறவிகளும் தத்தம் கடமைகளை மறந்து குழம்புகின்றனர். உயரிய ஆசனத்தில் அமர்ந்துள்ள மேலான பிட்சு, பொய்யான நன்முகத்துடன் யிங்யிங்கை உறுத்துப் பார்க்கிறார்; தலைமைப் பிட்சு இளந்துறவியின்

வழுக்கைத் தலையில் இசையொலி எழும்படி தட்டுகிறார்; பணியாளர் மெழுகுவிளக்குகளை ஏற்ற மறந்துவிடுகிறார்; மற்றொருவர் நறும்புகை எரிக்க மறக்கிறார். முடிவாக விளக்குகளும் இல்லை, நறும்புகையும் இல்லை. இவற்றுக்கு எல்லாம் மூலகாரணம் யிங்யிங்கின் சுண்டியிழுக்கும் பேரழகுதான். துறவிகள்கூட இந்நங்கையின் அழகுக்கு அடிமையாகித் தத்தம் கடமைகளைத் துறக்கின்றனர்!

யிங்யிங் வனப்பு வாய்ந்த கன்னி. சங் அறிவுக் கூர்மை வாய்ந்த மாணவன். இருவரும் இலட்சியக் காதலர்கள். மாணவன் சங் தீர்க்க முடியாத காதல் நோயினால் பாதிப்புற்றுக் கவிதைகள் புனையத் தொடங்கிவிட்டான். யிங்யிங்கின் காதலுக்கு ஏக்கற்று நிற்பவர் எண்ணிலர். அடக்கமும் பண்பும் மென்மையும் தோற்றப் பொலிவும் கொண்டு யிங்யிங் திகழ்கிறாள். இவளைக் காட்டிலும் கவர்ச்சிமிக்க கன்னியாக ஹூங் நீயங் (Hung Niang) விளங்குகிறாள். இவள் யிங்யிங்கின் செவிலியும் தோழியும் ஆவள். சோடி சேர்க்கும் கலையில் இவள் வல்லவள். இவள் இந்த நாடகத்தில் மிகவும் நேர்த்தியான, மறக்க முடியாத பாத்திரம். காதல் தந்திரங்களுக்குத் தேவைப்படும் கேலிப் பேச்சிலும், தீங்கு பயவாப் பொய் பேசுதலிலும், உடன்படச் செய்தலிலும், ஆறுதல் கூறுதலிலும் இவள் கைதேர்ந்தவள்.

யிங்யிங் தன் காதலனுடன் தப்பியோடியதைப் பற்றி அவள் தாய் மேடம் துசுநீ (Madame Ts'ni) வெளிப்படப் பேசும்படி வற்புறுத்திக்கேட்ட பொழுது ஹூங்கு நீயங் (Hung Niang) தன் தோழியாகிய யிங்யிங் சார்பில் துணிச்சலோடு வாதாடியவள். சட்ட முறைப்படி காதலர் இருவரையும் இணைத்து வைக்கத் தவறியதாய் குற்றத்திற்கு உரியவள் என்று கூறினாள். தன் வாதத்திற்கு வலிமை சேர்க்கும் வகையில்,

"ஒரு பெண் வயதுக்கு வந்துவிட்டால், அவளை
நீண்ட காலம் வீட்டில் பூட்டி வைத்திருத்தல்
அறிவீனமானது"

என்ற சீனப்பழமொழியினைத் தாய்க்கு எடுத்துரைத்தவள். அவள் சொற்கள் மேடம்துசுநீயை உடன்பட வைத்தன. திருமணத்திற்குத் தன் இசைவினைப் புலப்படுத்துகிறாள்.[41]

இந்த நாடகத்தில் வாங்கு ஷீஃபூ அரிய கற்பனைக் காட்சிகளைக் கவினுறப் படைத்துள்ளார். மஞ்சள் நதியைப் பற்றி மாணவன் சங் வருணிப்பதாக அமைந்துள்ள பாடற்பகுதி குறிப்பிடத்தக்கது. அவன் முதன்முதல் யிங்யிங்கைக் கண்ட காட்சியை எடுத்துரைக்கும் பகுதியை இங்கே காண்போம்.

"மலர்களுக்கு அப்பால் காஞ்சனப் பறவை எழுப்பும்
ஓசையை ஒத்தது அவள் குரல்ஒலி.
அவள் பயிலும் நடை ஒவ்வொன்றும்
உள்ளத்தில் காதலைக் கிளர்ந்தெழச் செய்கிறது.
ஆடல் புரியும் இடை எவ்வளவு மென்மையும்
தொய்வும் குழைவும் உடையது!
மாலைத் தென்றலின் முன்பு அசைந்தாடுகின்ற
வில்லோ மரத்தினைப் போலக் கவர்ச்சிக் கவினும்
இனிமைப் பண்பும் மயக்கும் ஆற்றலும்
அவளிடம் கணக்கில் அடங்கா!
மலரின் இதழ்கள் வீழ்ந்து மணம்கமழும் பாதையில்
எவ்வளவு மென்மையாக அவள் நடைபயில்கிறாள்!
அவள் பாதச் சுவடுகள் இலேசாகப் பட்ட தூசுகூட
கமகம என்று மணம் கமழ்கிறது!
மெதுவாகவும் தயக்கமாகவும் அவள்பயிலும் நடை
அவள் நெஞ்சத்தின் அசைவுகளை வெளிப்படுத்திக்
காட்டும்!
சிறுவாயிலின் அருகில் அவள் நெருங்குகிறாள்,
அடுத்து ஒரு அடிதான் நகர்ந்திருப்பாள்,

அவள் சுழன்று திரும்பிப் பார்த்த பார்வை
என்னைக் களிப்பூட்டியது, சுண்டி யிழுத்தது
கவர்ச்சியால் என்னைக் கட்டுப் படுத்தியது!
தனக்குப் பின்னால் மூடுபனிக்குள் வில்லோ
மரங்களை
விட்டுவிட்டு விண்ணக மாளிகைக்குள்
அந்தத் தேவதை திரும்பிச் சென்றுள்ளது!
சிட்டுக் குருவிகள் வெறுமனே ஒலிப்பன.[42]

(அங்கம் 1, காட்சி 1, பாடல்கள் 9-10)

சீன இளைஞனின் காதல் வயப்பட்ட கற்பனைக்கு இஃது அரிய எடுத்துக்காட்டாகும்.

தன்னைப் பிரிந்து செல்லும் காதலன் ஆகிய மாணவன் சங்கிற்குப் பிரியாவிடை கொடுக்கும் யிங்யிங் கின் மென்மையும் பிரியமும் விரவிய நெஞ்சார்ந்த சொற்களை இங்கே காண்போம்:

"என் கையினை மறைக்கும் சட்டைப் பகுதிகள்
நான் வடிக்கும் காதல் கண்ணீர்த்துளிகளால்
மிகுதியும் நனைகின்றன,
உன்னுடைய நீல அங்கி நனைந்திருப்பதைவிட;
காஞ்சனப் பறவை கிழக்கு நோக்கிப் பறக்கிறது,
சிட்டுக் குருவியோ மேற்கு நோக்கிப் போகிறது.
நீ புறப்படுவதற்கு முன்னால் முதலில் நான்
கேட்பது
நீ திரும்பி வரும் நாளினை.
என் கண்களின் முன் நீ இப்பொழுது நிற்பினும்,
ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருப்பதுபோல்
தோன்றும்.
உன்பொருட்டு ஒரு கிண்ணம் மது பருகுவேன்,
நான் பருகும்முன், என்மனமோ மதுவேறிப்
போயுள்ளது.
என் கண்களோ குருதிக் கண்ணீர் வடிக்கிறது,

என் நெஞ்சமோ சாம்பல்போல் குளிர்கிறது.
தலைநகர்க்கு நீ சென்ற பின்பு
பருவ மாற்றம் பற்றிக் கவனமாக இருப்பாய்!
போகும் வழியில் அளவாக உண், பருகு.
ஒவ்வொரு பருவத்திலும் விலைமதிப்பற்ற
உன்னைப் பேணிக் காப்பாய்.
மழை, பனிப் பருவங்களில் தனிமை மிக்க
சிற்றூர்களில்
இருக்கும் பொழுது முன் கூட்டியே ஓய்வு
கொள்வாய்.
காற்றும் உறைபனியும் கலந்துள்ள காலங்களில்
பயணிகள் தங்கும் ஊர்ப்புறத்து விடுதிகளில்
படுக்கையில் நெடிது ஓய்வு கொள்வாய்.
இலையுதிர் காலத்துக் காற்றடிக்கும் பொழுது
நீ உன் குதிரையில் சவாரி செய்யும் பொழுது
உன்னைப் பார்த்துக் கொள்ளுதற்கு ஒருவரும்
இல்லை என்பதால்
உன் உடல் நலத்தினை நன்றாகப் பேணிக்
காப்பாய்."[43]
(அங்கம் 4, காட்சி 3, பாடல்கள் 13-14)

இங்ஙனம் காதலி யிங்யிங் விடை கொடுத்தனள். காதலன் சங் சேய்மையில் உள்ள குன்றுகளிடையே மெல்ல மறைகிறான். அவளோ தன்பாடலைத் தொடர்கிறாள், தன் ஊர்தியில் ஏறுகிறாள்:

"எம்மருங்கும் குன்றுகளே இருந்தன.
மறையும் கதிரவன் ஒளியில் தனித்த
சாட்டையினை
அவன் உயர்த்துகிறான்.
இந்த உலகத்தின் அனைத்துத் துயரங்களும்
என் நெஞ்சத்தினை நிரப்பி உள்ளன -
இந்த எளிய அளவுள்ள ஊர்தி எப்படி
என் மனச் சுமையினைத் தாங்கும்?"[44]

(அங்கம் 4, காட்சி 3, பாடல் 19)

இங்ஙனம் காதல் நெஞ்சங்களின் உணர்வுகளைக் கற்பவர் மனங்கள் நெகிழும்படி புனைவியலும் நடப்பியலும் விரவி வரப் படைத்துக் காட்டியுள்ள நாடக ஆசிரியர் வாங்கு ஷீஃபூ அனைவரின் பாராட்டுக்கும் உரியவர் ஆகிறார்.

4. லீ சீயென்ஃபூ (Li Ch'ien - fu)

மேலே சுட்டப்பெற்ற நாடக ஆசிரியர்கள் மூவருடனும் வைத்து மதிக்கத் தக்க வேறு சிலரும் உள்ளனர். அவர்களில் லீ சீயென்ஃபூ என்பவரும் ஒருவர். இவரை லீ ஹிசிங் தாவோ (Li Hsing Tao) என்றும் கூறுவர். சுண்ணாம்புப் பேனாவின் கதை (The Story of the Lime Pen) என்பது சிக்கலான கதைக்கருவுடைய ஒரு நாடகமாக இவரால் புனையப்பட்டது.[45] இதன் கதைப் போக்கினைக் காண்போம்.

அறிவுக் கூர்மையும் மதி நுட்பமும் உடைய புகழ்பெற்ற நீதியரசர் பிரபு பவோ (Lord Pao) என்பவர் முன்பாக ஒரு வழக்கு விசாரணைக்கு வருகிறது. இந்த வழக்கில் கணவனைக் கொன்றுவிட்டதாக ஒருவரின் மனைவியும் வைப்பாட்டியும் ஒருவருக்கொருவர் குற்றம் சுமத்துகின்றனர். அந்தக் குடும்பத்தின் வாரிசாக உள்ள குழந்தை தத்தமக்கே உரியது என்றும் உரிமை கோருகின்றனர். வழக்கு முடிவாக விசாரிக்கப்படும் பொழுது நீதியரசர் நீதிமன்றத்தின் முன்பாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் சுண்ணாம்பினால் ஒரு வேலி அடைப்பினைக் கீறச் சொல்லுகிறார். அதற்குள் அந்தப் பையன் இருத்தப்படுகிறான். அவனுடைய ஒருபுறத்திலிருந்து ஒருத்தியும் மறுபுறத்திலிருந்து இன்னொருத்தியும் அவனைத் தத்தம் பக்கம் நோக்கி இழுக்கும்படி ஆணையிடுகிறார். அடைப்பு வேலிக் கோட்டினின்றும் அவனை யார் தம் பக்கம் வெளியே

இழுத்து வருகிறாரோ அவருக்கே அவன் உரியவன் என்றும் நீதியரசர் அறிவிப்பு விடுக்கிறார். இருமுறை அவனை இருவரும் இழுத்தனர். இரு முறையும் மனைவிதான் சுண்ணாம்புக் கோட்டின் வெளியே அவனை இழுத்து வந்தவள். வைப்பாட்டியோ மகனுக்கு ஊறு நேரிடும் என்று வலிந்து இழுக்காமல், இழுப்பதுபோல் பாவனை புரிந்தனள். உற்று நோக்கிய நீதியரசர் வைப்பாட்டிதான் அந்தப் பையனின் உண்மைத்தாய் என்றும் அவனும் அவனுக்குரிய சொத்தும் அவளுக்கே என்றும் தீர்ப்புக் கூறினார். மனைவியும் அவளுக்கு உடந்தையானவரும் தம் குற்றத்தினை ஒப்புக் கொண்டனர். சட்டப்படி நோக்கினால், தீர்வு முறை வன்மைவாய்ந்ததுதான்;ஆனால், பார்வையாளர்க்கு அது பெரும் முறையீடாக அமைந்திருந்தது. குருதித்தொடர்பிற்கு முதன்மை கொடுக்கும் சீன மக்களுக்கு இத்தகைய புனைவுகள் வேண்டப்படுவனவாக விளங்கின.[46] (தமிழிலும் இத்தகைய கதைகள் உண்டு).

இதே நாடகத்தில் உள்ளூர்க் குற்றவியல் நடுவர் (Local Magistrate) கடமையினைப் புறக்கணித்தவராகவும் முட்டாள்தனம் உடையவராகவும் காட்டப்படுகிறார். வழக்கினை ஒப்ப வைக்கும் பொருட்டு உண்மையான தாயினைக் கொடுமையாக அடித்து வற்புறுத்தும் நடுவராக இவர் படைக்கப்பட்டுள்ளார். அலுவலகங்களில் கையூட்டும் ஒடுக்கு முறையும் நிலவியதையும் நாடக ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார்.[47]

சில நாடகங்களில் கொள்ளையர் தலைவர் (Bandit- Heroes)

கி.பி.12ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நியாயத்திற்காக விதியை மீறிச் சென்றவர்கள் அரசினை எதிர்த்துப் புரட்சி செய்தனர். இவர்கள் மலைப்பகுதியில் மறைந்து உறைந்தவர்கள். இவர்கள் பணம் படைத்தவர் களையும் தீயவர்களையும் தாக்கிக் கொள்ளையடிப்பவர்கள். கொள்ளையடித்த பணத்தினை ஏழையர்க்கும்

ஒடுக்கப்பட்டவர்க்கும் வழங்குபவர்கள். இவர்கள் ஆற்றும் செயல்கள் யாவும் கடவுளின் பெயராலும் நீதியின் பெயராலும் நிகழ்த்தப் பெறுவன ஆகும். யூவன் காலத்து நாடக ஆசிரியர்கள், தீமைகளையும் தீயோர்களையும் ஒழித்து நல்லோரையும் நன்மையினையும் காக்கும் பொருட்டுக் கொள்ளையர் தலைவர்களைக் கதைத்தலைவராகப் படைத்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.[48] இத்தகைய கொள்ளையர் தலைவர்கள் 108 பேர்கள் ஆவர். இவருள் 36 பேர் பெரிய குறுநிலத் தலைவர்கள்; 72 பேர் அவரினும் அடுத்த நிலையில் இருந்த சிறு தலைவர்கள் ஆவர். இவர்களை மையப்படுத்திய நாடகங்களில், கரும்சுழற்காற்று (The Black Whirlwing) என்ற நாடகம் சுட்டத்தக்கது. இதனை எழுதியவர் காவோ வென்-ஹி சியூ (Kao Wen-hsiu).[49]

சீன நாடகங்களின் சிறப்புக் கூறுகள்

யூவன் காலத்துச் சீன நாடகங்கள் பலவும் நடப்பியல் சார்ந்தவை; புனைவியல் சார்ந்தவையும் உள்ளன. இவை சீன மக்களின் அகன்ற பரப்பளவினை மையப்படுத்தியவை. பல வகை, பல இனக் கதைமாந்தர்கள் இடம்பெறினும் நகரில் வாழும் நடுத்தர இனத்தாரையே பெரிதும் பிரதிபலிப்பவராக அவர்கள் புனையப்பட்டனர்.[50] நீதியே நிலைநாட்டப்படும் என்ற கருத்தினை உறுதிப்படுத்துவனவாகப் பல நாடகங்களும் விளங்கின. நாடகத்தின் உள்பகுதி எங்கும் அறத்தின் குரலே கேட்கும். குடும்ப, சமுதாயத் தகவுகளை எடுத்துரைப்பவர்களாக நாடக ஆசிரியர்கள் திகழ்ந்தனர். பெற்றோர்க்குப் பிள்ளைகள் செலுத்தும் அன்பு, பிள்ளைகளுக்குப் பெற்றோர் காட்டும் பாசம், நட்புறவு, நேர்மை, விசுவாசம், நடுநிலைமை, கடமையில் நாட்டம், உழைப்பின் உயர்வு உள்ளிட்ட உயரிய தகவுகளை இந்த நாடகங்களின் வழியே எழுத்தாளர்கள் பரப்பியுள்ளனர் எனலாம்.[51]

மேற்கோள் குறிப்புக்கள்

1. Liu Wu-Chi, *An Introduction to Chinese Literature*, London, p.159.
2. Ibid.
3. Ibid, p.160.
4. Ibid.
5. Ibid.
6. Ibid.
7. Ibid, p.161.
8. Ibid, p.162.
9. Ibid, p.163.
10. Ibid, p.164.
11. Ibid, p.165.
12. Ibid.
13. Ibid.
14. Ibid, p.166.
15. Ibid.
16. Ibid, p.167.
17. Ibid.
18. Ibid, p.168.
19. *An Introduction to Chinese Literature*, p.169.
20. *Literature and The Arts*, p.28.
21. *An Introduction to Chinese Literature*, p.170.
22. *The Ageless Chinese A History*, p.266.
23. *An Introduction to Chinese Literature*, p.171.
24. *Literature and The Arts*, pp.28-29.
25. Ibod, p.29.
26. *An Introduction to Chinese Literature*, p.178.
27. Ibid, p.179.
28. Ibid.
29. Ibid.
30. Ibid, p.180.

31. *The Ageless Chinese A History, p.266.*
32. *Literature and The Arts, p.29.*
33. *i. An Introduction to Chinese Literature, p.175.*
    ii. Literature and The Arts, p.30.
34. *An Introduction to Chinese Literature, pp.175-176.*
35. Ibid, p.176.
36. *Literature and The Arts, p.30.*
37. *The Ageless Chinese A History, p.266.*
38. *Literature and The Arts, pp.29-30.*
39. *An Introduction to Chinese LIterature, pp.171-172.*
40. Ibid, p.172.
41. Ibid, p.173.
42. Ibid, p.174.
43. Ibid, pp.174-175.
44. Ibid, p.175.
45. Ibid, p.180.
46. Ibid, p.181.
47. Ibid.
48. Ibid, pp.181-182.
49. Ibid, p.182.
50. Ibid, p.183.
51. Ibid, pp.183-184.

பின்னிணைப்பு 1

Select Bibliography

1. Anukul Chandra Banerjee, Buddhism in India and Abroad, Calcutta, 1973.

2. Bapat, P.V. (Ed.), 2500 Years of Buddhism, Publications Division, Ministry of Information and Broad Casting, Government of India, Delhi, 1959.

3. Beal, S.Rev., Buddhism in China, Asian Educational Services, New Delhi, 1996.

4. Birch, Cyril, Ed. Anthology of Chinese Literature, (From Early times to the 14th Century), New York, 1965.

5. Boltz, William, G., The Origin and Early Development of the Chinese Writing System, New Haven : American Oriental Society, 1994.

6. Byrant, Daniel, Lyric Poets of the Southern Tang, Cancour, University of British Columbia Press, 1982.

7. Chai ch'u and Winberg Chai, A Treasury of Chinese LIterature, New York, 1965.

8. Chang, Kang-i Sun, Six Dynasties Poetry, Princeton, NJ: Princeton University Press, 1986.

9. Chi-Chen Wang (Tr.), Traditional Chinese Tales, New York, 1944.

10. Chinese Literature, An Anthology From the Earliest Times to the Present Day, Edited by William Mcnaughton, Tokyo, Japan, 1974.

11. Clement F. Allen, The Book of Chinese Poetry, London, 1891.

12. Cooper, J.C., Taoism : The Way of the Mystic, Thetford, Norfolk, Sixth Impression, 1984.

13. Faxian, The Travels of Fa-hsien (399-414 A.D.) or, Record of the Buddhist Kingdoms, Trans. W.A. Giles, Combridge : Combridge University Press, 1923.

14. Frodsham, J.D., The Murmuring Stream : The LIfe and Works of Hich Ling - yun, Kuala Lumpur; University of Malaya Press, 1967.

15. Giles, Herbert. A., A History of Chinese Literature, New York,Grove Press, 1958.

16. Holzman, Donald. Chinese Literature in Transition from Antiquity to the Middle Ages, Singapore, Ashgate, 1998.

17. I-Ching, Chinese Monks in India, Translated by Lathika Lahiri, Motilal Banarsidass, Delhi, Reprint, 1995.

18. i. Kandaswamy, S.N., i. Puratci-k-kāppiyam, Abhirami Pathippagam, Annamalainagar, 1972.

ii. Tirukkuṟaḷ kūṟum Uṟuti-p-poruḷ, Manivasagar Pathippagam, Chidambaram, 1977.

iii. Intiya-t-tattuva-k-kaḷañciyam, Three Volumes, Meyyappan Pathippagam, Chennai, 2003.

iv. Buddhism As Expounded in Maṇimēkalai, Annamalai University Publication, Annamalainagar, 1978.

v. Tamil Ilakkiyattil Pauttam, Madras University Publication, Chennai, 1977.

vi. Tamiḻum Tattuvamum, Manivasagar Pathippagam, Chennai, 1976.

19. Kao, Karl S.Y., ed. and trans. Classical Chinese Tales of the Supernatural and Fantastic : Selections from the Third to the Tenth Century, Bloomington, Indiana University Press, 1985.

20. Karlgren, Bernhard, The Book of Odes, Stockholm: Museum of Far Eastern Antiquities, 1950.

21. Knechtges, David, R., Court Culture and Literature in Early China, Aldershot : Ashgate, 2002.

21. Lai Ming, A History of Chinese Literature, New York, John Day, 1964.

23. Legge, James, The Chinese Classics, Five Volumes, Hong Kong : Hong Kong University Press, 1960.

24. Loewe, Michel, ed. Early Chinese Texts : A Bibliographical Guide, Berkeley : The Society for the Study of Early China and Institute of East Asian Studies, University of California, 1993.

25. Li, Dun Jen, The Ageless Chiness, A History, Charles Scribners Sons, New York, Reprint, 1978.

26. Literature and The Arts, Compiled by the China Hand book Editorial Committee, Translated by Bonnie S. Mc Dougall and Hu Liuyu, Beijing, 1983.

27. Liu Wu-Chi, An Introduction to Chinese Literature, Bloomington, Indiana.

28. Lynch Botta, A.C., Encyclopaedia of Universal Literature, Volume I, Srishti Book Distributors, New Delhi, 2010.

29. Marcel Granet, Festivals and Songs of Ancient China, London, 1932.

30. Mo Tzu, The Ethical and Political Works of Motse, Tr. by Y.P. Mei, London, 1929.

31. Nagapattinam to Suvarnadwipa, ISEAS Publishing, Singapore, 2009.

32. Nannūl, with Mayilainathar Commentary, U.V.S. Edition, Chennai, 1946.

33. Nariman, J.K., Literary History of Sanskrit Buddhism, Motilal Banarsidass, Delhi, Reprint, 1972.

34. Nilakanta Sastri, K.A., Foreign Notices of South India, University of Madras, Chennai, 1939.

35. Nilakanta Sastri, K.A., The Colas, University of Madras, Chennai, Reprint, 1984.

36. Nylan, Michael. The Five Confucian Classics, New Haven, Yale University Press, 2001.

37. Owen, Stephen. The Great Age of Chinese Poetry : The High Tang, New Haven : Yale University Press, 1980.

38. Shih Ching, The Book of Songs, Tr. by Arthur Waley, London, Allen & Unwin, 1937.

39. Shih Ching, The Book of Odes, Tr. by Bernard Karlgren, Stockholm, Museum of Far Eastern Antiquities, 1950.

40. Surendranath Sen, India Through Chinese Texts, University of Madras, Chennai, 1956.

41. Suzuki, D.T., The Zen Doctrine of No-Mind, Rider and Company, London, 1949.

42. The Cambridge History of China in 3 Volumes, London, 1979.

43. The Cambridge History of Chinese Literature Volume I, 2010.

44. The Sacred Books of China in Six Volumes (3,16, 27, 28, 39 and 40).

45. The Texts of Confucianism, Translated by James Legge, Motilal Banarsidass, Delhi, Reprint, 1970.

46. The Sacred Books & Early Literatures of the East, Volume XI, Ancient China, With an Historical Survey and Descriptions by Prof. Charles F. Horne, Mittal Publications, Delhi, Reprint, 1987.

47. The Sacred Books & Early Litertures of the East, Volume XII, Medieval China, With an Historical Survey and Descriptions by Prof. Charles F. Horne, Mittal Publications,Delhi, Reprint, 1987.

48. The Wisdom of Confucius, Edited and translated with notes by Lin Yutang, The Modern Library, New York, 1938.

49. Victor H. Mair, The Shorter Columbia Anthology of Traditional Chinese Literature, Columbia University Press, Columbia, 2000.

50. Waley, Arthur. The Book of Songs : The Ancient Chinese Classics of Poetry, Ed. Joseph R. Allen, New York, 1996.

51. Watson, Burton. Early Chinese Literature, New York, Columbia University Press, 1962.

52. William Edward Soothil, A Dictionary of Chinese Buddhist Terms, Motilal Banarsidass, Delhi, Reprint, 1977.

பின்னிணைப்பு 2

கன்பூசியசின் மாணவர்களும் நெருங்கிய வட்டமும்

1. யென் ஹுயெய் (Yen Huei)

இவர் கன்பூசியசின் பேரன்புக்குரிய மாணவர். இவரை யென் யூவன் (Yen Yuan) என்றும் வழங்குவர். இவரைக் கன்பூசியசு பெரிதும் பாராட்டியுள்ளார். இவர் காலம் கி.மு.*521-490.*

2. லீ (Li,Lee)

உயர் பண்புகள் அனைத்துக்கும் ஒரு பெயராக லீ என்ற சொல்லினைக் கன்பூசியசு பயின்றுள்ளார். தன் மகனுக்கும் லீ என்றே பெயரிட்டுள்ளார். லீ இவரின் ஒரே மகன். இவரைப் போயூ (Poyu) என்றும் வழங்கினர். தந்தை அளவிற்கு இவர் வியாபகம் அடையாதவர். இவர் காலம் கி.மு.*532-483.*

3. செலு (Tselu)

இவர் கன்பூசியசின் மாணவர்களில் ஆண்டில் முதிர்ந்தவர். இவர் கி.மு.*542*இல் பிறந்தார். கன்பூசியசுக்கு எதிராகச் செயல்படும் போக்கினர். பலராலும் குறை கூறப்பட்டவர். நற்குடியாளர் அணிந்து கொள்ளும் தொப்பியைப் போலத் தன் தொப்பியின் தொங்கல் குஞ்சத்தினைச் சரி செய்வது தொடர்பாக ஏற்பட்ட பூசலில் புண்பட்டு இறந்தவர்.

4. சேகுங் (Tsekung)

இவர் கி.மு.*520*இல் பிறந்தவர். கன்பூசியசிடம் கூடுதலான பக்தி செலுத்தியவர். அரசியல் சாதுரியம் மிக்கவர்.

5. சேசியா (Tse Hsia அல்லது Tse shia)

இவர் கி.மு.507இல் பிறந்தவர். பெரும்புலமை படைத்தவர். கன்பூசியசின் இறப்பிற்குப்பின் பேராசிரியராகப் பணி புரிந்தவர்.

6. சேயு (Tseyu)

இவர் கி.மு.506இல் பிறந்தவர். கன்பூசியசின் நெருங்கிய சீடருள் இவர் குறிப்பிடத்தக்கவர். அரசியல் தந்திரம் வாய்ந்தவர்.

7. செங் சே (Tseng Tse)

இவரைச் செங் சான் (Tseng Ts'an) என்றும் வழங்கினர். கன்பூசியசின் சீடர்களில் மிகவும் இளையவர். எனினும், இவர் தத்துவஞானத்தில் மேம்பட்டவர். கன்பூசியசின் பேரனுக்கு இவர் ஆசிரியராக விளங்கியவர்.

8. ஜான் சீயு (Jan Ch'iu)

இவர் கி.மு.522இல் பிறந்தவர். இவரை ஜன் யூ (Jan Yu) என்றும் வழங்கினர். நடைமுறைக்கு ஒத்த திறமை சான்ற சீடர். கங் சீ (K'ang Chi) என்னும் குறுநிலக் கோமகனின் (Baron) செயலராகப் பணிபுரிந்தவர். மக்களைக் கொடுமைப்படுத்திய இக்கோமகனுக்கு உதவிபுரிந்ததால், இச்சீடர் கன்பூசியசினால் விலக்கப்பட்டவர்.

9. குறுநிலக் கோமான்கள்

லூ (Lu) என்னும் மாநிலத்தின் கோமகன் ஐ (Ai), மற்றும் கங் சீ, சீ (Ch'i) என்னும் மாநிலத்தின் கோமகன் சிங் (Ching) வேய் (Wei) என்னும் மாநிலத்தின் கோமகன் லிங் (Ling) ஆகியோருடன் கன்பூசியசு அடிக்கடி உரையாடல்களை நிகழத்தியுள்ளார்.

10. யங் ஹோ (Yang Ho)

லூவில் வாழ்ந்தவர். ஊழலுக்குப் பேர்போன அதிகாரி. செல்வாக்கு மிக்கவர். கன்பூசியசின் வெறுப்புக்கு ஆளானவர்.

பின்னிணைப்பு 3

கன்பூசியசின் சிந்தனைப் பள்ளி
(Confucian School of Thought)

1. கன்பூசியசு (Confucius)

சீனப் பெருஞானிகளில் முதலில் வைத்து மதிக்கப் பெற்றவர். இவர் காலம் கி.மு.551-479. பழைய செவ்வியல் இலக்கியங்களைத் தொகுத்த சிறப்புக்குரியவர். இவர் பொன்மொழிகள் அனலெக்ட்சு (Analects) என்ற தொகைப் பனுவலில் பொதிந்துள்ளன. சிறந்த நல்லாசிரியர், அறவோர். மரபினைப் பேணிய மாண்பினர்.

2. செஸ்ஸே (Tsesze)

இவர் கன்பூசியசின் பேரர். மைய ஒத்திசைவு (Central Hormony) என்ற நூலினை எழுதியவர். லீகீ (Liki) என்ற நூலின் சில இயல்களை இவர் எழுதியுள்ளார். இவரைக் குங்சீ (K'ung Ch'i) என்றும் அழைத்தனர். இவர் காலம் கி.மு.492-431.

3. மென்சியசு (Mencius)

இவர் பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் படைத்தவர். சொற்போர் புரிவதில் வல்லவர். சீன அறவியல் வரலாற்றில் கன்பூசியசுக்கு அடுத்த நிலையில் மதிக்கப்பெற்றவர். இவர் எழுதிய நூலினை The Book of Mencius என்று வழங்கினர். நான்கு பனுவல்கள் (The Four Books) என்ற வரிசையில் இந்நூலும் இடம்பெற்றுள்ளது. மென்சியசு கன்பூசியசின் அறவியல் சார்ந்த கருத்தியலை (Confucian Moral Idealism) தெளிவாக விளக்கியவர்.

4. சுன்சே (Hsuntse)

இவர் காலம் கி.மு.*315-236*. இவரை சுன்சிங்கு (Hsun Ch'ing) என்றும் சுங்குவாங்கு (Hsun Huang) என்றும் அழைத்தனர். புலமைத்துவம், சடங்கியல் ஆகியவற்றுக்கு முதன்மை வழங்கிய கன்பூசியசின் சிந்தனைப் பள்ளியின் முதன்மைப் பிரதிநிதியாக மதிக்கப் பெற்றவர். இவர் கருத்துக்கள் லீகி (Liki) என்ற நூலில் பேணி வைக்கப் பெற்றுள்ளன.

5. சீமா சீயென் (Szema Ch'ien)

சிகி (Shiki) என்ற பெயர் கொண்ட பெரும் வரலாற்று நூலின் ஆசிரியர் இவர். சீன உரைநடையாசிரியர்களில் இவரை முதலில் வைத்துப் போற்றுவர். இவர் காலம் கி.மு.*145-85(?)*.

6. செங் சுவான் (Cheng Hsuan)

இவர் காலம் கி.பி.*127-200*. இவரைச் செங் கங் செங் (Cheng K'ang Ch'eng) என்றும் வழங்குவர். ஹன் அரச மரபின் (Han Dynasty) முதன்மை வாய்ந்த விளக்கவுரையாளர் (Commentator) என்று போற்றப்படுகிறார்.

7. சூ சீ (Chu Hsi)

இவர் கி.பி.*1130-1200* என்ற காலப் பகுதியில் வாழ்ந்தவர். இவர் சுங்கு அரச மரபின் (Sung Dynasty) முதன்மை வாய்ந்த விளக்கவுரையாளர் (Commentator). நான்கு பனுவல்கள் (The Collection of Four Books) என்னும் நூல்கள் சீன நாட்டின் தொடக்கப் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வந்தமைக்கு இவரே மூல காரணர் என்பர். இவருடைய விளக்கவுரை நூல் பொதுத் தேர்வுகளுக்குரிய ஒரே நூலாக மதிக்கப்பட்டிருந்தது.

பின்னிணைப்பு 4

சீன வரலாற்றில் அரச மரபுகளும் சில குறிப்புக்களும்

1. ஹிசியா மரபு (Hsia Dynasty) கி.மு.2205 - கி.மு.1766

இம்மரபின் முதல்வர் யூ (Yu); இறுதி அரசர் சீயே (Chieh). விலங்குகளைப் பழக்குதலும் வளர்த்தலும் - கோதுமை, தினை முதலியவை பயிரிடுதல் - பட்டுப்பூச்சி வளர்த்தல் - கருமட்பாண்டத் தொழில் - இயற்கை வழிபாடு (animism).

2. சங்கு மரபு (Shang Dynasty) கி.மு.1766 - கி.மு.1122

இம்மரபின் ஆட்சியை நிறுவியவர் தங்கு (Tang). தலைநகர் அடிக்கடி மாற்றம் - கி.மு.1401இல் யின் (Yin) தலைநகரம். வாணிகம் - கடற்சோழிகள் பண்ட மாற்றுப் பயன்பாடு - வெள்ளை மண்கலத் தொழில் - வெண்கலப் பாத்திரங்கள் - படைக்கருவிகள் - தந்தம், மணி வேலைப்பாடு - எழுத்தின் வரிவடிவம் - மூதாதையர் வழிபாடு - தேவவாக்கு எலும்புகள் (Oracle Bones).

3. சௌ மரபு (Shou dynasty) கி.மு.1122 - கி.மு.249

கி.மு.1122இல் நிலமானியத் தோற்றம் - அரசர் வென் (Wen), அரசர் வூ (Wu), கோமகன் சௌ (Chou). கி.மு.771இல் உட்போர்கள் - நிலமானியத்தின் வீழ்வு - போரிட்ட ஏழு மாநிலங்கள் : 1. சின் (Ch'in). 2. சீ (Ch'i), 3. சூ (Ch'u), 4. சாவோ (Chao), 5. ஹன் (Han), 6. வேய் (Wei), 7. யென் (Yen) - வேளாண்மை - வணிக மரபின் எழுச்சி - கி.மு.800க்குப் பின் நகரங்களின் வளர்ச்சி - இரும்பு கால நாகரிகம் - உலோக நாணயங்கள் -

செவ்வியல் நூல்களைக் கன்பூசியசு தொகுத்தல் - மென்சியசு - கணிதம் வளர்ச்சி பெறுதல் - மோவியம்.

4. சின் மரபு (Ch'in Dynasty) கி.மு.221 - கி.மு.207

கி.மு.221இல் சீனம் ஒருங்கிணைப்பு - சட்டவியம் (Legalism) தேசிய சமயம் - பழைய பனுவல்கள் எரிப்பு - மையக் கட்டுப்பாட்டின் கீழ் அடுக்கு அதிகார அரசு எழுச்சி - எடை, அளவை முதலியவை தரப்படுத்தப்படுதல் - பாசனத் திட்டங்கள் - பொதுப்பணிகள் - சிற்றெழுத்து (Small Script) அறிமுகம் ஆதல் - மீண்டும் பழைய பனுவல்கள் கண்டெடுக்கப்படுதல்.

5. ஹன் மரபு (Han Dynasty) கி.மு.202 - கி.பி.220

கொரியாவை வெல்லுதல் - ஆட்சியை அலிகள் பற்றுதல் - கி.பி.189இல் அலிகள் படுகொலை - வாணிகர் துன்புறுத்தப்படுதல் - வேளாண் இனம் மீட்சி பெறுதல் - கன்பூசியம் தேசிய தத்துவம் ஆதல் - இரசவாதம் (Alchemy), திசையறி கருவி, தாள் என்பன கண்டுபிடிக்கப்படுதல் - பௌத்தம் அறிமுகம் ஆதல். தமிழகத்துடன் தொடர்பு.

6. மூன்று அரசுகள் (Three Kingdoms) கி.பி.220 - கி.பி.280

1. வேய் *(Wei) கி.பி.220-265), 2.* ஷு *(Shu) கி.பி.221-265, 3.* வூ *(Wu) கி.பி.222-280.* கன்பூசியத்தின் ஒடுக்கம் - தாவு மார்க்கமும் பௌத்தமும் மேலோங்குதல்.

7. திசின் மரபு (Tsin Dynasty) கி.பி.265 - கி.பி.420

1. மேற்குத் திசின் *கி.பி.265-கி.பி.317, 2.* கிழக்குத் திசின் *கி.பி.317-கி.பி.420.* காட்டு மிராண்டிகளின் படையெடுப்பு - யாங்குத்சே சமவெளியில் மக்கள் குடியேற்றம் - இந்தியாவிற்குப் புனிதப் பயணம் - பாஹியான், மூங்கிற் சோலை முனிவர் எழுவர்.

8. தென் அரச மரபும் வடஅரச மரபும் (Southern & Northern Dynasties) கி.பி.420-கி.பி.581

அ. தென்மரபு: *லீயு சுங்கு (Liu Sung) கி.பி.420-கி.பி.479; சீ (Ch'i) கி.பி.479-கி.பி.502;* லியாங்கு

(Liang) கி.பி.502-கி.பி.557; சேன் (Ch'en) கி.பி.557-கி.பி.589;

ஆ. வடமரபு : வேய் (Wei) கி.பி.386-கி.பி.535; கிழக்கு வேய் (East Wei) கி.பி.534-கி.பி.550; மேற்கு வேய் (West Wei) கி.பி.535-கி.பி.556; வடக்குச் சீ (North Ch'i) கி.பி.550-கி.பி.557; வடக்குச் சௌ (North Chou) கி.பி.557-கி.பி.581.

சீனா பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன - படையெடுப்பாளர் சீனராதல் - நிலச் சீர்திருத்தம் - பௌத்தத்தின் பொற்காலம்.

9. சூயி மரபு (Sui Dynasty) கி.பி.590 - கி.பி.618

பொதுப்பணித் தேர்வு அறிமுகம் - தயார் நிலையில் நெற்களஞ்சியங்கள் - கட்டை அச்சு (Block - printing) கண்டு பிடிப்பு.

10. தங்கு மரபு (T'ang Dynasty) கி.பி.618 - கி.பி.906

சீன இலக்கியத்தின் பொற்காலம் - மத்திய ஆசியாவையும் கொரியாவையும் பிடித்தல் - முச்செயலக அமைப்பு -நிலப்பங்கீடு - அரபு, பாரசீக வணிகர் தொடர்பு - யுவான் சுவாங்கு - பௌத்தம் பரவுதல் - காஞ்சிப் பல்லவர் தொடர்பு - தியான (சான்) பௌத்தம் - பண்பாட்டு விரிவாக்கம் - கவிதை, ஓவியம், ஆடல், பாடல் கலைகள் வளம் பெறுதல்.

11. ஐந்து அரச மரபுகள் (Five Dynasties) கி.பி.907 - கி.பி.960

1. பின் லியாங்கு அரச மரபு
(Later Liang Dynasty) கி.பி.907 - கி.பி.923.

2. பின் தங்கு அரச மரபு
(Later T'ang Dynasty) கி.பி.923 - கி.பி.936.

3. பின் திசின் அரச மரபு
(Later Tsin Dynasty) கி.பி.936 - கி.பி.947.

4. பின் ஹன் அரச மரபு
(Later Han Dynasty) கி.பி.*947* - கி.பி.*950*.

5. பின் சௌ அரச மரபு
(Later Chou Dynasty) கி.பி.*951* - கி.பி.*960*.

போர் பிரபுத்துவம் (War Lordism) - கன்பூசியசின் செவ்வியல் பனுவல் தொகுப்புக்கள் அச்சிடப் பெறுதல்.

12. சுங்கு அரச மரபு (Sung Dynasty) கி.பி.960 - கி.பி.1279

1. வடசுங்கு (North Sung) கி.பி.*960* - கி.பி.*1126*.
2. தென்சுங்கு (South Sung) கி.பி.*1127* - கி.பி.*1279*.
3. லியவோ (Liao) கி.பி.*907* - கி.பி.*1125*.
4. மேற்கு ஹிசியா (West Hsia) கி.பி.*990* - கி.பி.*1227*.
5. சின் (Chin) கி.பி.*1115*- கி.பி.*1234*.

1. பிற்காலச் சோழர்களுடன் நல்லுறவு - *2.* மங்கோலியரின் எழுச்சி, *3.* மகளிர் நிலை குலைவு, *4.* நான்கு கல்லூரிகள் தோற்றம், *5.* பிராந்தியக் கதைகள், வண்ணக் கலை, கவிதை, கட்டுரை, தத்துவம் வளர்ச்சி.

13. யூவன் அரச மரபு (Yuan Dynasty) கி.பி.1260 - கி.பி.1368

மங்கோலியர் ஆகிய செங்கிஸ்கான், குப்ளேகான் ஆட்சி - சாதி அமைப்பு - சாலை அமைப்பு - கால்வாய் அமைப்பு - நாடக வளர்ச்சி.

14. மிங்கு அரச மரபு (Ming Dynasty)கி.பி.1368 - கி.பி.1644

மேலைக்கடலுக்கு ஏழு பயணம் - கப்பம் செலுத்தும் முறை - வாணிக வளம் - வேளாண்மை குறைதல் - யங்குலோ கலைக்களஞ்சியம் - பள்ளிக்கல்வி அமைப்பு - ஏசு திருச்சபையார் (Jesuits) வருகை.

15. சிங்கு அரச மரபு (Ch'ing Dynasty) கி.பி.1644 - கி.பி.1912

அபினி வாணிகம் - தைப்பிங்குப்புரட்சி - சீனச் சப்பான் போர் - மக்கள் தொகைப் பெருக்கம் - மேலைநாட்டுப் பண்பாடு அறிமுகம் ஆதல் - கிறித்தவம் பரவுதல்.

16. குடியரசு (Republic) கி.பி.1912 - கி.பி.1949

சன்யாட் சென் (Sun Yat - sen), சியாங்கை சேக்கு (Chiang Kai - shek), சீனச் சப்பான் போர் - பொதுவுடைமை கட்சி (Communist Party) மேம்படுதல் - தைவானில் தேசிய அரசு - பெண் விடுதலை - மரபு வழிச் சமுதாயம் மெல்ல மெல்லப் புறக்கணிக்கப்படுதல் - நவீனப் பள்ளிக் கூடங்கள் - அறிவியல் வளர்ச்சி - குடியரசு தோற்றம்.

17. மக்கள் குடியரசு (People's Republic) கி.பி.1949 முதல்

சீனப் பொதுவுடைமைக் கட்சியின் ஆட்சி - மாசே துங்கு (Mao Tse - Tung) செல்வாக்குப் பெருகுதல் - புதுக்குடியரசு - சர்வாதிகாரம் - சோவியத்துச் சீனம் உடன்படிக்கை - சப்பானிய, கொரியா, இந்தோனேசியப் போர் - நிலப்பங்கீடு (1950இல்) - கூட்டுறவுச் சங்கங்கள் (1954 - 58) -பொருளாதாரத் தன்னிறைவு - கன்பூசியக் குடும்ப அமைப்பு முறைக்குலைவு - மாவோயியச் சமுதாயம் எழுச்சி - வேளாண்மை, தொழில்கள், தொழில்நுட்பம், அறிவியல், பொறியியல் மேம்படுதல் - தேசியப் பாதுகாப்பு - மார்க்சிய லெனினிய, மாவோயியம் - மாவோ வழிபாடு - உலகம் வியந்த ஒலிம்பிக்கு விளையாட்டுச் சாதனைகள் (2008) - உலக அரங்கில் முன்னிலை பெறுதல்.

பின்னிணைப்பு 5

பொருளடைவு

அகநானூற்றுப் பாடல் 25
அச்சுப் பண்பாடு 607
அதிபர் விலாடிமிர் புதின் 27
அதிவீரராம பாண்டியர் 605
அரச குடும்பத்தைச் சேர்ந்த கவிஞர் மூவர் 451
அரசன் நெறிமுறை இலட்சியம் 310
அருணகிரிநாதர் 401
அற இலக்கியம் 43
அறமும் சட்டமும் 374
அறவியலும் அரசியலும் 202, 246
அறிவுசார்ந்த சர்வதேசியம் 149
அறிவுரைகள் 213
அனலெக்ட்சு 106, 146, 276, 287
ஆட்சிக்கலை 174
ஆரஞ்சுக்கு ஒரு பாசுரம் 433
ஆவணப் பனுவல் 35, 39
ஆறுகளின் இலக்கியம் 602
ஆறுவகைச் சீன நாடகங்கள் 669
ஆன்மாவைப் பற்றிச் சுவாங்கு துசு 585
இசைத்துறைப் பாடல்கள் 443
இசையின் தோற்றமும் செயற்பாடும் 232
இட் சிங்கு 392
இந்தியவியல் அறிஞர் ஜி.துசி 33
இயற்கைக் கவிஞர் ஹிசியேலிங்-யூன் 474
இரண்டாம் குலோத்துங்கனுக்குக்

கப்பம் கட்டிய சீனர் *13*
இரவு எப்படிப் போகிறது(பாடல்) *71*
இராசசிம்ம பல்லவன் *18*
இராசாதிராசன் *25*
இராணுவத்தில் கட்டாயச் சேவை *78*
இலக்கிய அடக்குமுறைக் கொள்கை *442*
இலட்சிய ஆசிரியர் *228*
இலட்சியப் பேரரசரின் செயற்பாடுகள் *166*
இலவோசியசு *157, 325*
இளங்கோ அடிகள் *484*
இளவரசன் லான்லிங்கு *659*
இளவேனிற்காலமும்
இலையுதிர்காலமும் (நூல்) *104, 165*
ஈராயிரத்து முந்நூறு சீனக் கவிஞர்கள் *492*
உயர் மனிதன் வெறுப்பன *308*
உயர் மனிதனும் தாழ்மனிதனும் *302*
உரோம சாம்ராச்சியம் *442*
உரைநடை ஆசிரியர் யூலீயங்கு *598*
உரைநடையாளர் லீயூ சொங்குயூவன் *604, 606*
உரைநடையில் புனைவியல் *606*
உழவரின் நாள்காட்டி (பாடல்) *80*
ஊஞ்சலாடும் மனைவி என்னும்
நாடக வகை *659, 660*
எங்கும் நீதியின் நியதி *196*
எழுத்துப்பொறிப்புக்கள் *591, 592*
ஐந்து சொற்பாடல் *443*
ஐம்பதாயிரம் பாடல்கள் *492*
ஐம்பெரும் செவ்வியல் பனுவல்கள் *60*
ஒரு காதலருள் பல காதலர் *610-614*
ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருதல்
72, 82, 84, 86, 87, 88, 92, 93, 96, 98

ஒழுங்குபடுத்தப்பட்ட யாப்பு 494
ஒழுங்குறுத்தப்பெற்ற பாடல் 529
ஒளிப்பேரரசர் 538, 545, 547
ஓரடிக்கு ஐந்து சொற்கள் அமைந்த
பாடல்கள் 449, 451
ஓரடிக்கு நான்கு சொற்கள் அமைந்த
பாடல்கள் 447
ஔவைப்பிராட்டி 4, 509
கங்கைகொண்ட சோழபுரத்தில்
சீனப் பீங்கான் 14
கட்டுப்பாட்டு வாரியம் 5
கடித இலக்கியம் 602, 603
கடுமையான வரி விதிப்பு 541
கதம்ப நாடகம் 663, 664, 665
கதை இலக்கியம் 488
கதைகளின் தொகுப்பாசிரியர் வூ சூன் 610
கதை சொல்லுதல் 614
கதை சொல்லுவோரின்
கையெழுத்துப்படிகள் 615
கதைப்பாடல்கள் 68
கதையாசிரியர் போஹிசிங் சீயென் 633
கதையாசிரியர் வாங்குதூ 617
கதையில் நீதிபோதனை 616
கதையின் அடிக்கருத்து 617
கபிலர் 509
கம்பர் கண்ட இலட்சிய உலகு 179
கம்பராமாயணத்தில் சீனர் 13
கரஷிமா கருத்து 14, 15
கல்வி, சடங்கு,கவிதை 314
கல்வியின் அடிப்படைக் கூறுகள் 227
கல்வியும் சட்டமும் 373

கலித்தொகை ... தாழிசைகள் 72, 82
கலித்தொகையில் ஈரடித்தாழிசை 95
கவிஞர் சாவோசீ 471
கவிஞர் தூஃபூ 47, 513, 518, 519, 522, 527, 528
கவிஞர் போ சூ-ஈ 534, 535, 538, 541, 543, 544, 554
கவிஞர் மெங்கு ஹவோரன் 494
கவிஞர் யூவன்சென் 677
கவிஞர் லீ போ 47, 502, 508, 509, 510, 512, 513
கவிஞர் லீஷங்-யின் 554, 555, 556
கவிஞர் லீ ஹோ 548, 549, 550, 552, 553
கவிஞர் வாங்குவேய் 495, 499, 501
கவிஞர் வேய் சூவங்கு 560, 561
கவிஞர் ஹன்யூ 528
கழைக்கூத்தாடிகள் 658
கற்கும் முறை 230
கன்பூசிய அமைதி விருது 27
கன்பூசியச் சிந்தனை 42
கன்பூசியச் செவ்வியல் பனுவல்கள் 41, 43
கன்பூசியசின் கல்விக் கொள்கை 221
கன்பூசியசின் ... கலையியல் வாழ்வு 280
கன்பூசியசின் கற்பனை உலகு 179
கன்பூசியசின் கூரறிவும் மதிநலமும் 283
கன்பூசியசின் சீடர்கள் 141, 142, 180, 470
கன்பூசியத்தின் அடிப்படைக் கொள்கைகள் 150
கன்பூசியசு 57, 89, 111, 112, 126, 131, 133, 144, 145, 368
கன்பூசியசு கடிந்து கொண்டவர் 307
கன்பூசியசு காலம் முதல்
சீன இலக்கிய வரலாறு 53

கன்பூசியசு பற்றிய மதிப்பீடு 153
கன்பூசியசு போதனையின் விரிவாக்கம் 207
கன்பூசியசும் திருவள்ளுவரும் 157
காசிப மதங்கரும் தரும ரட்சரும் 380
காஞ்சிப் பல்லவரும் சீனத் தொடர்பும் 18
காஞ்சிபுரம் 20
காஞ்சிமாநகரில் பதினெட்டு மொழிகள் 12
காஞ்சி வேந்தர்க்குச் சீன வேந்தர்களின்
பரிசுப் பொருள்கள் 16, 17
காட்டுமிராண்டி இனத்தவர் 473
காட்டுமிராண்டித்தனமான நிகழ்வு 10
காரல்மார்க்சு 146
காவிய நீதிக்கொள்கை 43, 44
கிரேக்கஞானி புரோடோகோரசு 296
கிளேடுஸ்டோன் 26
கீழை ஹன் மரபு 32, 35, 594
குங்-கன்பூசியசின் மூலப்பெயர் 55
குமாரசீவர் 382
குவான் சுங்கு 372
குவான் சூ 372
குவின் அரச மரபு 35
குறிக்கோள் சமுதாயம் 376
குறியியல் 353
குறுந்தொகை 87
கூவன் ஹன் சிங்கு
-நாடக ஆசிரியர் 669, 670, 674, 675
கூன்லூன் அடிமைக்கதை 642
கையெழுத்துப் பண்பாடு 607
கோபி பாலைவனம் 11
கோமகன் ஐ - கன்பூசியசு உரையாடல் 171
கோமகன் சியென் சாவோ 125

கோமகன் பிங் 115
கோமகன் மூ 116
சங்க அகப்பாடல்கள் 89, 483
சங்க இலக்கியம் 11
சங்ககாலக் கவிஞர்கள் 500, 509
சங்கன் தலைநகர் 661
சங்ஜி என்ற சீன அகராதி 36
சட்டவியம் 367
சடங்குகளும் இசையும் 237
சமனிலைக் கோட்பாட்டு நூல் 107
சமுதாய ஒழுங்கின் பரிணாமம் 184
சமுதாயத்தின் இருவேறு அமைப்புக்கள் 181
சர்வாதிபத்திய ஆட்சி 10
சன்யாட்சன் 25
சாத்தனார் 12
சாவோ சீ - சிறந்த கவிஞர் 453
சித்தர்கள் சொல்லும் சூனியம் 452
சியாங்கே சேக்கு 25
சில கலைச்சொற்களின் பொருள் 193
சிலப்பதிகாரக் காப்பியத் தலைவி 484
சிறுவிழாப் பாடல்கள் 68
சின் பெருமாட்டியின் புலம்பல் 561, 562, 563
சின் மரபின் ஆட்சிக்காலம் 7, 10
சின் மரபு 442, 669
சீவகசிந்தாமணி 12
சீன அகராதி 7
சீன அச்சுருவாக்கம் 8
சீன இலக்கியங்களில் பெரும்பகுதி
கன்பூசிய இலக்கியம் 42
சீன இலக்கியத்தின் பொற்காலம் 491
சீன இலக்கிய வகைமை 44

சீன இலக்கிய வரலாறு 31
சீன உரைநடை 568
சீன எழுத்துக் கண்டுபிடிப்பு 38
சீன எழுத்து முறை 6, 7
சீனக்கதை இலக்கியம் 609
சீனக்கதைகள் 610
சீனக் கருமான் 8
சீனக் கவிஞரின் வித்தகம் 48
சீனக் குறிப்பில் சோழர் நீதிமுறை 25
சீனக் குறிப்பும் சோழன் மெய்க்கீர்த்தியும் 23
சீனச் சமுதாய அமைப்பு 2
சீனச் சுங்க அதிகாரி
சௌஜு-குவா குறிப்புக்கள் 15, 17, 22, 24
சீனச் செய்யுளின் தந்தை 426, 428
சீன ஞானி கன்பூசியசு 3, 4
சீனத்தில் அச்சுக்கலை 30
சீனத்தில் பல மொழிகள் 5
சீனத்தில் பௌத்தப் பனுவல்கள் 387, 391
சீனத்தில் பௌத்தப் பிரிவுகள் 393
சீனத்தின் புனித இலக்கியம் 59
சீன நாட்டிற்கு ஏற்றுமதிப்பொருட்கள் 15
சீன நாட்டின் அமைப்பியல் 1
சீன நாட்டுப் பொருள்கள் 14, 15
சீன நாடகங்களின் சிறப்புக் கூறுகள் 685
சீன நூலகம் 43
சீனப் பண்பாடு 39, 40
சீனப் பண்பாடு - கன்பூசியத்தின் ஆளுகை 41
சீனப் பண்பாடு - பௌத்தத்தின் ஆளுகை 40
சீனப் பயணிகளில் குறிப்பிடத்தக்கவர்கள் 387
சீனப் பழமொழி 680
சீனப் பாடலின் சிறப்புக் கூறுகள் 46

சீனப் பெருஞ்சுவர் 9, 40
சீனப் பேரரசு 4
சீனம் தமிழகம் - வாணிகத் தொடர்பு 13
சீனம் புறச்செல்வாக்குகளால் உருமாற்றம் 31
சீன மக்கள் குடியரசு 1, 7, 36
சீனமும் தமிழகமும் 11
சீனமும் பௌத்தமும் 380
சீனமொழி - கால அடிப்படையில் 7, 8
சீனமொழியில் இராசராசன் 13
சீனமொழியில் இராசேந்திரன் 13
சீனமொழியில் இலக்கியத்
திறனாய்வு நூல்கள் 488, 489
சீனமொழியில் காஞ்சி 13, 16
சீனமொழியில் சோழன் 13
சீனமொழியில் நரசிம்மவர்ம போத்தரையன் 13
சீனமொழியில் பௌத்தச் சொற்கள் 415
சீனமொழியின் அமைப்பு 6
சீனமொழியும் எழுத்து முறையும் 34
சீன வரலாற்றறிஞர் பான் கௌ
வழங்கும் குறிப்புக்கள் 16, 17
சீன வரலாற்றாசிரியர் சுசுமா சீயென் 466
சீன வரலாற்றில் இருண்டகாலம் 468
சீன வழக்கு இலக்கியம் 609
சீனவியலார் 6
சுங்கு அரச மரபு 40
சுங்கு அரசரும் சோழப் பெருவேந்தரும் 22
சுங்கு மரபு 662, 663, 668
சுங்குயூ 427
சுசுமா ஹிசியாங்-ஜூ 460
சுண்ணாம்புப் பேனாவின் கதை 683, 684
சுயமாக இருத்தல் 211

சுருக்கப்படுத்தப்பட்ட யாப்பு *494*
சுருள்தாடி மனிதன் கதை *643*
சூ பாடல்கள் *427*
சூ யூவன் *427, 428, 430, 434, 437, 440*
செவ்வியல் இசையும் நவீன இசையும் *241*
செவ்வியல் சீனத்தத்துவத்தின் காலம் *40*
சை யென் என்ற பெண்கவிஞர் *450, 451*
சொல்லாடல் உரைநடை *595*
சோங்கு சீ அன்பு கூர்ந்துகேள் (பாடல்) *73*
சௌ அரச மரபு *39, 66, 76*
சௌ கோமகன் *39*
டார்ட்டார் மரபுகள் *444, 449*
டிராகன் *354, 355, 360*
தங்கு அரச மரபின் ஆட்சிக் காலம் *491*
தங்கு அரச மரபு *40, 468, 609, 615, 660, 661*
தங்கு - பிற்காலக் கவிஞர்கள் *534*
தத்துவக் கவிஞர் சுசுகுந்தூ *558*
தத்துவ ஞானி மோ-தி *367*
தமிழ் ஞானி திருவள்ளுவர் *69*
தமிழகத்திலிருந்து சீனத்திற்கு
நீர் நில வழிகள் *17*
தமிழகத்திற்கும் ஹன் காலத்துச்
சீனத்திற்கும் நட்புறவு *16*
தர்ம கீர்த்தி *33*
தருக்க மேதை மோத்து சு
தன்னுணர்வுப் பாடல்கள் *481*
தாவுக் கவிதை *352*
தாவு - கலைநிலை *349*
தாவு ஞானியும் தமிழ்நாட்டுச் சித்தரும் *470*
தாவு நெறிக்கவிஞர் *471*
தாவு நெறியாளர் சுவாங்குசூ *345*

தாவு மார்க்கத்தில் முப்பொருள் உண்மை *346*
தாவு மார்க்கம் *325*
தாவு மார்க்க முனிவர் *343*
தாவு - வழியும் முடிவும் *364*
தாவோ அல்லது தாவு பொருண்மை *326*
தாவோ பனுவல் *574*
தாவோ சீயென் *475*
தாவோ யூவன் மங் *475*
தாவோ யூவன் மிங்கு *599*
திக் (க) நாகர் *33, 415*
திடும் என முடியும் பாடல் *529*
தியானப் பிரிவு *394*
தியானப் பௌத்தம் *19*
திராவிடம் *20*
திவாகர நிகண்டில் சீனம் *12*
திருக்குறள் *146,266, 291, 292, 484*
திருச்சிற்றம்பலக்கோவையார் *47*
திருத்தக்கதேவர் *12*
திருமந்திரம் *12*
திருமூலர் *12*
திருவள்ளுவர் *199, 217, 274, 290, 299*
தென்சீனத் தன்னுணர்வுப் பாடல்கள் *486*
தென்சீன நாட்டார் பாடல்கள் *482*
தென்மாநிலத்தின் ஆளுநர் (கதை) *625*
தென்னக நாடகம் *663, 666*
தே உணர்த்தும் பொருள் *334*
தே என்னும் கொள்கை *333*
தேவ வேர்ச் சொற்கள் *51*
தொல்காப்பியம் *3*
தொல்காப்பியர் *103*
தோட்டம் மற்றும் வயல் கவிஞர் *475*

நச்சினார்க்கினியர் உரையில் சீனர் 14
நல்லாட்சியின் கூறுபாடுகள் 313
நவசீனத்தின் தோற்றம் 25
நவீன சீனவியலார் 33
நற்றிணை 534
நன்னூல் பொதுப்பாயிரம் 137, 277
நாட்டார் காதற்பாடல்கள் 98
நாட்டார் பாடல்கள் 478
நாடக அரங்கச் செயற்பாடுகள் 658
நாடக ஆசிரியர் லீ சீயென்ஃபூ 683
நாடக ஆசிரியர் வாங்கு ஷீஃபூ 677
நாடகங்களில் கொள்ளையர் தலைவர் 684
நால்வகை நாதங்கள் 477
நாலந்தாப் பல்கலைக்கழகம் 19
நாற்பெரும் பனுவல்கள் 105
நான்கு நாத அட்டவணை 477
நான்கு நெறிகள் 378
நிகழ்வுக் குறிப்புக்கள் 606
நியாயப் பிரவேசம் 33
நிலப்பிரபுத்துவ அமைப்பு 39
நிலமானிய நீதிமன்றம் 54
நிலா ஒளி இரவு - கவிதை 515
நிழற்கூத்துக்கள் 663
நீதிமானின் இயல்பு 220
நீதியும் அறிவுரையும் 266
நெடுநல்வாடை 87
நையாண்டி அங்கதங்கள் 600
பத்திப் பாடல்களும் புகழ்ப் பாடல்களும் 68
பட்டுப்புழு - வசன கவிதை 589, 590
பண்டைய கல்வித்திட்டம் 222

பண்டைய சீனர்களின் ஐவகை
உயிர்ப்பாகுபாடு 630, 631
பதின்மூன்று செவ்வியல் பனுவல்கள் 36
பரத்தையர் கதைகள் 632
பரமார்த்தர் 33, 384
பவணந்தி முனிவர் 12
பழைய கண்ணாடி சீனக்கதை 617
பழைய சீன இலக்கியம் 59
பாகியான் 387, 388
பாடத்திட்டம் சாராப் படிப்புக்கள் 225
பாடல் இலக்கியம் - பொற்களஞ்சியம் 492
பாடற்பனுவல் 8, 35, 38, 39, 62, 72, 77, 79,
80, 96, 197, 258, 317, 426, 427, 444
பாடற்பனுவல்-தொகுப்புமுறை 66
பாடற்பனுவலின் சிறப்பு இயல்புகள் 63
பாமர எழுத்தாளர்கள் 665
பாவேந்தர் பாரதிதாசன் 27, 485
பிரபஞ்ச நேயம் 368, 369
பிரமாண சமுச்சயம் 33
பிரிவாற்றாமை 97
பிளேட்டோவின் குடியரசு 179
புத்தக எரிப்பும் மீட்டுருவாக்கமும் 8
புத்தகக்குழு 662
புத்தர்பிரானைக் குறிக்கும் சொற்கள் 416
புத்தரின் பத்துச் சீடர்கள் 416
புதிய இசைத்துறைப் பாடல்கள் 482
புதிய சனநாயகம் 26
புதுக்கன்பூசியம் 41
புறநானூறு 78, 447
புனித விலங்குகள் 360
புனைவியல் கவிஞர்கள் 537

புனைவியற் காதல் 631
ஃபூ என்னும் சீன இலக்கியம் 46
ஃபூ என்னும் வசன கவிதை 600
பெண் எழுத்தாளர் சன் கியோங்கு 599
பெண் எழுத்தாளர் சென் சென் 599
பெருங்கல்விப் பனுவல் 107
பெரும்பாணாற்றுப்படை 18
பெருமகன் கங் 126
பெருமகன் சீ 113
பெருமகன் லீமெங் 112
பெருமுக நாடகம் 659
பெருவிழாப் பாடல்கள் 68
பே தீ -பௌத்த இளம்ஞானி 498
பேரரசர்க்குரிய நூலகம் 30
பேரரசர் வங்குமங்கு 17
பொதுவியல் 665
பொம்மலாட்டம் 663
பொற்சாதனம் 195
போகரும் சீனமும் 21
போதிசத்துவருள் சிலர் 417
போதிசேனர் 19
போதிதருமர் 19, 394
போதிருசி 386
போர்க்காலத்துப் பாடல்கள் 516
போர்ப்பாடல்கள் 487
போர்மனப்பான்மை இன்மை 370
பௌத்த ஆசிரியர்கள் 418
பௌத்த ஈடுபாடுகள் 496
பௌத்தக்கதைகள் 645
பௌத்தச் சீனம் 32
பௌத்த ஞானி போதி தருமர் 32

பௌத்தத் தத்துவக் கலைச்சொற்கள் 421
பௌத்தத் தருக்கக் கலைச்சொற்கள் 421
பௌத்தத் தலங்கள் 420
பௌத்த நூல்கள் 419
பௌத்தப் பிரிவுகள் 390
மகாகவி பாரதியார் 27
மகாயான பௌத்த நூல்கள் 387, 397
மங்கோலிய மன்னன் குப்லேகான் 16
மஞ்சள் ஆறு 2, 442
மஞ்சள் சக்கரவர்த்தி 50
மஞ்சள் நதி நாகரிகம் 426
மஞ்சள் நதி வருணனை 680
மண்டரின் மொழி 6
மணிமேகலை 12, 553
மந்திரப்பனுவல் 101
மயிலைநாதர் உரையில் சீனம் 12, 13
மரகதப் போதிசத்துவர் 649
மரபு வழிப்பட்ட சீன நிருவாகம் 5
மலைபடுகடாம் 218
மனித நேயத்தரம் 198
மனிதநேயமும் உண்மை மனிதப் பண்பும் 294
மாங்குடி மருதனார் 509
மாசீழுவன் - நாடக ஆசிரியர் 675, 676
மாசேதுங்கு 26
மாமியாரின் கொடுமை கூறும் பாடல் 454
மாவோ சம்பிரதாயம் 74
மாற்றப் பனுவல் 35, 101
முதலமைச்சர் லீ சூ 8, 10
முதலாம் இராசேந்திரன் 14, 15, 23
முழு ஞானியின் இயல்பு 220
முற்காலத் தங்கு மரபு 32

முனிவர் லீயு லிங் 471
மூங்கில் தோப்பின் முனிவர் எழுவர் 469
மூதாதையர் வழிபாடு 58, 108
மூலன் கதைப்பாடல் 479
மென்சியசின் போதனைகள் 106
மென்சியசு 3, 577
மென்சியசு சாவோ உரையாடல் 581, 582
மென்சியசு ஹ்சு உரையாடல் 578-581
மைய ஒத்திசைவு 194
மோவியம் 367
மோவியமும் கன்பூசியமும் 371
யாங்குச்சே ஆறு 2, 40, 442
யாங்குச்சே நதிநாகரிகம் 426
யாப்பியல் கவிஞர் ஷென் யோ 476
யின் அரச மரபு 51
யின் - யங்கு - மெய்ப்பொருள் 337, 341
யுவான் சுவாங்கு 20, 389
யூவன் பென் - நாடக வகை 664
யூவன் மரபு 667, 668
யோகப் பயிற்சி விற்பன்னர்
கிருட்டிணமாச்சாரி (சீன நாட்டில்) 27
ரூசோ 26
லீ என்னும் கோட்பாடு 161
லீபோவின் கவிதைகளில் புனைவியல் 505, 510
லீயை வளர்த்துக் கொள்ளும் முறை 191
லீவாவின் கதை 633
லூ மாநிலம் 111
லூஜியின் பாவியல் நூல் 38
வச்சிரபோதி 19
வசன கவிதை ஃபூ 457, 458, 460, 463
வசனகவிதைக் கவிஞர் 460

வசன கவிதையின் பாடுபொருள் 458, 459
வடசீனர்களின் ஆற்றல் 487
வரலாற்றாசிரியர் சங்சியே 50
வரலாற்றுக்கவிஞர் ஒட்டக்கூத்தர் 477
வரலாற்றுப் பதிவுகள் 465, 466
வரலாற்றுப்பனுவல் 8, 60, 61
வரலாற்று வசனம் 464
வரலாறு மற்றும் இலக்கிய அவையம் 5
வலிமை மிக்க அரசு 375
வாணிகச் சாத்து 442
வாலியின் கதை 624
விசித்திரக் கதைகள் 629
விநோதரச வசனம் 600
வில்லியம் மக்நாட்டன் 530
விளக்கு விழா 662
வீரதீர சாகசக் கதைகள் 641
வூ-வேய் என்னும் கோட்பாடு 342, 344
வெண்குரங்கின் கதை 622
வெள்ளிவீதியாரின் பாடல் 87
வேத்தியல் 665
ஜிங்கு --> கிங்கு 35
ஜென் என்னும் இலக்கிய வகை 593
ஷி ஹுவாங்கு-தி 8, 9
ஹன் அரச மரபு 7, 40

CONFUCIUS SAYS

· Be not ashamed of mistakes and thus make them crimes ·

· Before you embark on a journey of revenge, dig two graves ·

· Everything has its beauty but not everyone sees it ·

· Forget injuries, never forget kindnesses ·

· He who will not economize will have to agonize ·

· I hear and I forget. I see and I remember. I do and I understand ·

· Ignorance is the night of the mind, but a night without moon and star ·

· It does not matter how slowly you go so long as you do not stop ·

· Men's natures are alike, it is their habits that carry them far apart ·

· Our greatest glory is not in never falling, but in getting up every time we do ·

· Respect yourself and others will respect you ·

· To see what is right and not to do it is want of courage ·

· To be able under all circumstances to practice five things constitutes perfect virtue; these five things are gravity, generosity of soul, sincerity, earnestness and kindness ·

· What the superior man seeks is in himself; what the small man seeks is in others ·

· When anger rises, think of the consequences ·

· If a man takes no thought about what is distant, he will find sorrow near at hand ·

· Learning without thought is labour lost; thought without learning is perilous ·

· The people may be made to follow a path of action, but they may not be made to understand it ·

· The superior man...does not set his mind either for anything, or against anything; what is right he will follow ·

· To go beyond is as wrong as to fall short ·

· Virtue is more to man than either water or fire. I have seen men die from treading on · water and fire, but I have never seen a man die from treading the course of virtue ·

· What you do not want done to yourself, do not do to others ·

· When you have faults, do not fear to abandon them ·

· When you know a thing, to hold that you know it; and when you do not · know a thing, to allow that you do not know it – this is knowledge ·

· The superior man acts before he speaks, and afterwards speaks according to his actions ·